ARIAT LIBRARY

Council Debates:- 1 N:

Index S.No No. Date 10

Index No

1.5

மாறாமல்

போட்டுக்

வெளியீடு—7-12-1978]

[Issued—7-12-1978

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

பணித்துறை வெளியீடு OFFICIAL REPORT

வியாழக்கிழமை 1978 ஆகஸ்ட் 31-தொகுதி XIX-எண் 1

Thursday 31st August 1978—Volume XIX—No. 1 -5

1, 2, 7, 8 Sep. 78

தமிழ் நாடு அரசு — GOVERNMENT OF TAMIL NADU
1978

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009
Legislative Assembly Department, Fort, St. George, Madras-600 009

விலை 1-50 காசுகள்]

Price 1-50 Paise

பக்கங்கள்

(ஆ) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, நாடக நிகழ்ச்சிகள் (திருத்த) சட்ட முன் வடிவு. 123

(இ) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, வேளாண்மை, விளைபொருள் விற்பனை (திருத்தம், தனிவிதித் துறைகள்) சட்ட முன்வடிவு .. .. .. 123

8. அறிக்கை அளித்தல்—

உரிமைக் குழுவின் அறிக்கைகளை அளித்தல் .. 124

9. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—

திரு. ஆர். மணிமாறன் .. .. .. 124—137

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி .. 132, 147, 154, 163, 164

திரு. மு. செல்வராஜ் .. .. .. .. 137—144

டாக்டர். கே. சமரசம் .. .. .. 144—148

திரு. நா. சுந்தரராஜ் .. .. .. .. 148—158

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் .. 153, 155, 158, 198, 199

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் .. .. 158—167

திரு. அ. சுவாமிதாஸ் .. .. .. .. 167—172

திரு. என். வரதராஜன் .. .. .. 172—182

திரு. பெ. சு. திருவேங்கடம் .. .. .. 185—191

திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம் .. .. 191—194

திரு. ஓ. சோ. வேலுச்சாமி .. .. .. 194—197, 200—202

10. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள். .. 202—220

இணைப்பு—ஆளுநர் உரை .. .. .. .. 220—242


உள்ளடக்கம்.

1—9—1978.


பக்கங்கள்.

1. வினாக்கள் — விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. .. 317—354

2. தகவல் கோரல்—

சேரன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர் மரணச் சம்பவம் குறித்து 355—363

3. ஒழுங்குப் பிரச்னைகள்—

(அ) உடுக்குறி வினாக்களுக்கான விடைகள் அச்சிடப் பெற்று பேரவை முன் வைக்கப்பெற்றுள்ளது குறித்து .. .. .. .. .. 361—368

(ஆ) உறுப்பினர் திரு. மு. ஆறுமுகம் எதிர்க்கட்சித் தலைவர்கள் வரிசையில் அமர்ந்திருப்பது குறித்து .. .. .. .. 369—370

(இ) பிறிதொரு மாநில சட்டத்தைப் பற்றி உறுப்பினர்கள் பேசுவது குறித்து .. 381—382

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்—

(அ) 1978 ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு .. 370—373

(ஆ) 1978 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு .. .. .. .. .. 373

5. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்

திரு. க. சுப்பு .. 374—384

திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி .. 376

திரு. கி. மனோகரன் 380

திரு. எம். ஜி. இராமச்சந்திரன் .. 384—389, 392—393, 415—418, 456—457

D
Y211,31 N78
N79.19

## உள்ளடக்கம்.

| | | பக்கங்கள் |
|---|---|---|
| (i) | தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும், அமைச்சர்களின் பேரவைச் செயலர்களும் .. .. .. | i—v.i |
| (ii) | தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. | ix |
| (iii) | தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப் பெற்ற பெயர்ப் பட்டியல் (தொகுதிகள் உட்பட) .. .. .. .. | xi—x'x |
| 1. | இரங்கல் குறிப்புகள்— | |
| | முன்னாள் உறுப்பினர்களின் மறைவு குறித்து. | 1—2 |
| 2. | ஒழுங்குப் பிரச்னைகள்— | |
| | (அ) படகு விபத்தில் உயிர் நீத்த மாணவர்களுக்கு இரங்கல் குறித்து .. .. | 2—3 |
| | (ஆ) உறுப்பினர் தன் உரையை எழுதி வைத்துப் படிப்பது குறித்து .. .. | 145—146 |
| 3. | தகவல் கோரல்— | |
| | தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறப்பது குறித்து .. .. .. .. | 3 |
| 4. | வினாக்கள்—விடைகள் | |
| | (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 3—36 |
| | (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. .. | 36—121 |
| 5 | உரிமைப் பிரச்னை— | |
| | எழுப்ப அனுமதி கோரல் .. .. | 121 |
| 6 | அறிவிப்புகள்— | |
| | (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல் .. .. | 121 |
| | (ஆ) பேரவை அலுவல்கள் .. .. | 122 |
| | (இ) நடைமுறை விதிக் குழு உறுப்பினர்கள் நியமனம் .. .. .. | 122 |
| 7. | அரசினர் சட்ட முன்வடிவுகள்— | |
| | (அ) தமிழ்நாடு, 1978-ம் ஆண்டு தனியார் காடுகள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு .. .. .. | 123 |

5. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| திரு. ரா. கு. பெருமாள் | .. | 394–396 |
| திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டைமான் | .. | 396–399 |
| திரு. சி. கோவிந்தராசன் | .. | 399–409 |
| திரு. கே. கந்தசாமி | .. | 409–414 |
| திரு. ச. இராமச்சந்திரன் | .. | 410–414 |
| திரு. க. உரொ. எட்மண்ட் | .. | 411 |
| திரு. பொ. காளியப்பன் | .. | 419–424 |
| திரு. கா அப்புனு கவுண்டர் | .. | 424–431 |
| திரு. யா. சை. மு. யூசுப் | .. | 431–436 |
| திரு. பொ. உத்திராதிபதி | .. | 436–445 |
| திரு. கே. ஜே. சுப்பிரமணியம் | .. | 445–447 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் | .. | 448–458 |
| திரு. குழந்தைவேலு | .. | 458–459 |
| திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் | .. | 459–464 |

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 465–466


## உள்ளடக்கம்.


| 2-9-'78 | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 467—504 |
| 2. அறிவிப்புகள்— | |
| (அ) பேரவைத் தலைவரைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தனித் தீர்மானம் குறித்து அறிக்கை. | 505 |
| (ஆ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு. | 537 |
| 3. ஒழுங்குப் பிரச்சினை— | |
| உரிமைமீறல் பிரச்சினைகளை உடன் எடுத்துக் கொள்ளவேண்டும் என்பது குறித்து. | 505—520 |
| 4. கவன ஈர்ப்புகள்— | |
| (அ) கல்லணைக் கால்வாய் மூலம் சில பகுதிகள் பாசனம் பெறாதது குறித்து. | 521—522 |
| (ஆ) சேரன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர் மரண சம்பவம் குறித்து | 522—536 |
| 5. அரசினர் சட்ட முன்வடிவு— | |
| தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு | 537 |
| 6. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்-விவாதம்—(தொடர்ச்சி) | |
| திரு. சோ. அழகர்சாமி | 538 |
| திரு. என். கிட்டப்பா | 539—548 |
| மாண்புமிகு திரு. ,, குழந்தைவேலு | 541, 542 |
| திரு. ரா. க. சு. தண்டபாணி | 548—554 |
| திரு. துரை முத்துசாமி | 556—569 |

| | பக்கம் |
| --- | --- |
| மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு | 707 |
| மாண்புமிகு கே. ஏ. கிருஷ்ணசாமி | 708 |
| திரு. மு, அம்பிகாபதி | 709—715 |
| திரு. ர. ஜெபமணி | 715—725 |
| மாண்புமிகு க. உரொ. எட்மண்ட் | 721, 723—724 |

7. அறிவிப்பு—

| | |
| --- | --- |
| பிரெஞ்ச் நாஷனல் அசெம்பிளி உறுப்பினர்கள் நிகழ்ச்சிகளைக் கண்ணுறுதல் | 655 |

| | |
| --- | --- |
| 8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 725 |


## உள்ளடக்கம்

### 1978, செப்டம்பர், 8


| | பக்கங்கள் |
| --- | --- |
| 1. வினாக்கள்—விடைகள்— | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 727—763 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் | 764 – 807 |
| 2. தகவல் கோரல்— | |
| அவசரச் சட்டம் நிராகரிக்கப்பட வேண்டுமென்ற தனித் தீர்மானம் குறித்து. | 808—809 |
| 3. அமைச்சரின் அறிக்கை— | |
| விதி 82-ன் கீழ் கல்வியமைச்சரின் அறிக்கை | 809—812 |
| 4. ஒழுங்குப் பிரச்னைகள்— | |
| (அ) விதி 82-ன் கீழ் கல்வியமைச்சர் அறிக்கை அளித்த பிறகு அதே பொருள் குறித்து விதி 41, 42-ன் கீழ் அறிவிப்புக் கொடுத்திருந்தவர்களின் பெயர்களைக் குறிப்பிட வேண்டுமென்பது குறித்து. | 813—824 |
| (ஆ) பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசப்பெற்றது குறித்து. | 834 |
| 5. அரசினர் தீர்மானங்கள்— | |
| (அ) விதி 41 (3)-ஐத் தளர்த்தல். | 824 |
| (ஆ) பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசியது குறித்து நடவடிக்கை | 842 |
| 6. கவன ஈர்ப்புகள்— | |
| (அ) மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் வழங்காமல் இருப்பது குறித்து. | 824—829 |
| (ஆ) தஞ்சை மாவட்டம் குத்தாலம் தொகுதியில் பாடப் புத்தகங்கள் கிடைக்காமை குறித்து. | 829—830 |
| (இ) குளத்துப்பாளையம் ஊராட்சி ஒன்றிய பள்ளிக் கட்டடம் இடிந்து விழுந்தது குறித்து. | 830—834 |

| | பக்கங்கள். |
|---|---|
| மாண்புமிகு எம். ஜி. இராமசந்திரன் | 562—564, 583—584, 587—588. |
| திரு. த. ராமசாமி | 566,568—574 |
| திரு. ரா. உமாநாத் | 574—587 |
| திரு. அ. க. அரங்கநாதன் | 588—594 |
| திரு. பொ. விஜயராகவன் | 594—598 |
| திரு. செ. சிவசாமி | 598—602 |
| மாண்புமிகு க. உரோ. எட்மண்ட் | 601—602 |
| திரு. எஸ். நடராசன் | 602—605 |
| 7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 605—606 |


## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. | 609—636 |
| 2. தகவல் கோரல்— | |
| உறுப்பினர்களுக்கு ரெயில்வே பாஸ் வழங்குவது குறித்து .. | 637—638 |
| 3. உரிமைப் பிரச்னைகள்— | |
| (அ) முதல் அமைச்சர் அவர்கள் மீது | 638—643 |
| (ஆ) கல்வித் துறை அமைச்சர் மீது .. | 643—647 |
| 4. கவன ஈர்ப்புகள்— | |
| (அ) சிவகங்கை மன்னர் கல்லூரி மாணவர் குத்தப்பட்டது குறித்து .. | 647—648 |
| (ஆ) மாணவர்கள் படகு விபத்திற்குள்ளானது குறித்து . | 648—651 |
| 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்— | |
| (அ) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு | 651 |
| (ஆ) 1978 ஆம் ஆண்டு, மதுரைப் பல்கலைக் கழக (திருத்த-சிறப்பு விதிக்துறைகள்) சட்ட முன்வடிவு . | 652—653 |
| 6. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி) | |
| திரு. அ. ரகுமான்கான் | 653,662,700 |
| திரு. வீ. கருப்பசாமி பாண்டியன் | 662—667 |
| திரு. என். இராமச்சந்திர ரெட்டி | 668—669 |
| திரு. வி. கொ. சின்னசாமி | 670—671 |
| திரு. என். சங்கரய்யா | 67[illegible]—685 |
| மாண்புமிகு திரு. கா. காளிமுத்து | 685,699,703 |
| திரு. எம். ஏ. லத்தீப் | 688—699 |
| மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் | 685,690 693—694 |
| மாண்புமிகு திரு. கி. மனோகரன் | 692,694 695,696,701—708 |
| மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | 698 |
| திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா | 700—708 |

| | பக்கங்கள் |
|---|---|
| 7. அறிக்கை அளித்தல்—<br>பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை. | 835 |
| 8. அரசினர் சட்ட முன்வடிவுகள்— | |
| (அ) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்த சட்ட முன்வடிவு. | 835 |
| (ஆ) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு. | 835—836 |
| 9. அறிவிப்பு— | |
| தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு. | 835 |
| 10. 1978-79-ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதி அறிக்கை அளித்தல். | 836—837 |
| 11. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்— | |
| விவாதம் (தொடர்ச்சி) | |
| திரு. கே. உச்சி. | 838—841 |
| திரு. க. மருதாசலம். | 842—846 |
| திரு. ஏ. ஆர். மாரிமுத்து. | 846—864 |
| மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் | 854, 857—858 |
| திரு. தி. அன்பழகன். | 864—867 |
| திரு. ரா. மார்க்கபந்து. | 867—869, 875—880 |
| மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் | 869—874, 875—879 |
| திரு. த. வேணுகோபால். | 880—884 |
| 12. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள். | 885—886 |


## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும், அமைச்சர்களின் பேரவைச் செயலர்களும்.

**தமிழ்நாடு ஆளுநர்: மேதகுதிரு. பிரபுதாஸ் பட்வாரி.**

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்:

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், பயண இசைவுச் சீட்டு, மதுவிலக்கு, இலஞ்ச ஒழிப்பு, பெருந் தொழில்கள் சுரங்கம்-கனிவளம்.

2. மாண்புமிகு திரு. கி. மனோகரன் (நிதி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— நிதி, திட்டம், சட்டமன்றம், பொதுப் பணி (கட்டடங்கள்) மற்றும் பொதுப் பணித்துறை (நிறுவனம்) சம்பந்தப்பட்ட அலுவல்கள்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— மின்சாரம், இரும்பு-எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்கு பொறுப்பு வகிப்பார்:— கூட்டுறவும் ஆவணப் பதிவுத் துறையும்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்கு பொறுப்பு வகிப்பார்:— வருவாய், வணிக வரிகள், ஆயத்துறை.

6. மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் (உணவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— உணவு, மீன் வளம், இளைஞர் அணி, பிற்பட்ட வகுப்பினர், தேர்தல்கள், முன்னாள் இராணுவத்தினர், விலைவாசிக் கட்டுப்பாடு.

7. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் (செய்தி அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, சிங்கோனா உள்பட வனங்கள்.

## அமைச்சர்களின் பேரவைச் செயலர்கள்.

1. திரு. எம். வின்செண்ட்: நிதி அமைச்சரின் பேரவைச் செயலர்.

2. திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: கூட்டுறவுத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

3. திரு. பி. முசிறிபுத்தன்: வருவாய்த் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

4. திரு. ஐசரிவேலன்: செய்தி, அறநிலையத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

5. திரு. எம். ஏ. ஜெயவேலு: சட்ட அமைச்சரின் பேரவைச் செயலர்.

6. திரு. ஆ. வெள்ளைச்சாமி: கல்வி அமைச்சரின் பேரவைச் செயலர்.

7. திரு. ப. கோ. கிட்டு: போக்குவரத்துத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

8. திரு. இரா. அருணாசலம்: மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU

Thiru PRABHUDAS PATWARI.

*Members of the Council of Ministers.*

1. The Hon. Thiru M.G. RAMACHANDRAN (Chief Minister):—Public, General Administration, Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Passport, Prohibition, Prevention of Corruption, Large-scale Industries, Mines and Minerals.

2. The Hon. Thiru K. MANOHARAN (Minister for Finance):—Finance, Planning, Legislature and Public Works (Buildings).

3. The Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Electricity.) Electricity, Iron and Steel Control.

4. The Hon. Thiru K. A. KRISHNASWAMI (Minister for Co-operation):— Co-operation Registration.

5. The Hon. Thiru S. D. SOMASUNDARAM (Minister for Revenue):— Revenue, Commercial Taxes and Excise.

6. The Hon. Thiru G. R. EDMUND (Minister for Food):—Food, Fisheries, Youth Service Corps, Backward Classes, Elections, Ex-Servicemen and Price Control.

7. The Hon. Thiru R. M. VEERAPPAN (Minister for Information and Hindu Religious Endowments):— Information and Publicity, Film Technology, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests and Cinchona.

8. The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIAR (Minister for Law):— Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation on Chits and Registration of Companies.

9. The Hon. Thiru C. ARANGANAYAGAM (Minister for Education):— Education including Technical Education, Official Language and Employment and Training.

10. The Hon. Thiru K. KALIMUTHU (Minister for Local Administration):—Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions, Rural Indebtedness and Bhoodan and Gramdan.

8. மாண்புமிகு திரு கே. நாராயணசாமி முதலியார் (சட்ட அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், கடன் கொடுத்தல் பற்றி சட்டம் இயற்றல், சீட்டு நிதிபற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு.

9. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி, வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

10. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம், பூமிதானம், கிராம தானம்,

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு, இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—அரிசன நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பீடித் தொழிலாளர்.

13. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

14. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு, அக்ரோ பொறியியல் பிரிவு, வேளாண்மை பணிக் கூட்டுறவு சங்கங்கள், பாசனத் திட்டங்கள் (சிறு பாசனம் உள்ளிட்டது) வேளாண்மை பொறியியல்.

15. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—கிராம, குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால் பால் பெருக்குத்திட்டம், வக்பு.



16. திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார்:— மக்கள் நல்வாழ்வுத் துறை.

17. மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால் நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப் பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

18. திருமதி சுப்புலட்சுமி செகதீசன் (கைத்தறி நெசவுத் துறை அமைச்சர் (கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—கைத்தறி, கதர், நெசவாலைகள், நூல்.

## அமைச்சர்களின் பேரவைச் செயலர்கள்.

1. திரு. எம். வின்சென்ட்: நிதி அமைச்சரின் பேரவைச் செயலர்.

2. திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: கூட்டுறவுத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

3. திரு. பி. முசிறிபுத்தன்: வருவாய்த் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

4. திரு. ஐசரிவேலன்: செய்தி, அறநிலையத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

5. திரு. எம். ஏ. ஜெயவேலு: சட்ட அமைச்சரின் பேரவைச் செயலர்.

6. திரு. ஆ. வெள்ளைச்சாமி: கல்வி அமைச்சரின் பேரவைச் செயலர்.

7. திரு. ப. கோ. கிட்டு: போக்குவரத்துத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

8. திரு. இரா. அருணாசலம்: மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU

Thiru PRABHUDAS PATWARI.

*Members of the Council of Ministers.*

1. The Hon. Thiru M.G. RAMACHANDRAN (Chief Minister):—Public, General Administration, Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Passport, Prohibition, Prevention of Corruption, Large-scale Industries, Mines and Minerals.

2. The Hon. Thiru K. MANOHARAN (Minister for Finance):—Finance, Planning, Legislature and Public Works (Buildings).

3. The Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Electricity.) Electricity, Iron and Steel Control.

4. The Hon. Thiru K. A. KRISHNASWAMI (Minister for Co-operation):— Co-operation Registration.

5. The Hon. Thiru S. D. SOMASUNDARAM (Minister for Revenue):— Revenue, Commercial Taxes and Excise.

6. The Hon. Thiru G. R. EDMUND (Minister for Food):—Food, Fisheries, Youth Service Corps, Backward Classes, Elections, Ex-Servicemen and Price Control.

7. The Hon. Thiru R. M. VEERAPPAN (Minister for Information and Hindu Religious Endowments):— Information and Publicity, Film Technology, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests and Cinchona.

8. The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIAR (Minister for Law):— Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation on Chits and Registration of Companies.

9. The Hon. Thiru C. ARANGANAYAGAM (Minister for Education):— Education including Technical Education, Official Language and Employment and Training.

10. The Hon. Thiru K. KALIMUTHU (Minister for Local Administration):—Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions, Rural Indebtedness and Bhoodan and Gramdan.

11. The Hon. Thiru S. RAGAVANANDAM (Minister for Labour):—Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water-Supply and Drainage Board, Town Planning, Accommodation Control.

12. The Hon. Thiru P. SOUNDARAPANDIAN (Minister for Harijan Welfare):—Harijan Welfare, Stationery and printing Government Press, Newsprint Control, Hill Tribes and Bonded Labour.

13. The Hon. Thiru C. PONNAIYAN (Minister for Transport):—Transport, Motor Vehicles Act, Highways and Ports.

14. The Hon. Thiru P. KOLANDAIVELU (Minister for Agriculture and Irrigation):—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Service, Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Agro-Engineering.

15. The Hon. Thiru K. RAJA MOHAMMED (Minister for Rural Industries):—Rural Industries including Village, cottage and small Industries, Milk and dairy development and waqfs.

16. The Hon. Thiru THIRUCHI R. SOUNDARARAJAN, (Minister for Health):—Health.

17. The Hon. Selvi P. T. SARASWATHI (Minister for Social Welfare):—Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggar Home's, Orphanages, Indians, Overseas, Refugees, and Evacuees, Correctional Administration.

18. The Hon. THIRUMATHI SUBBULAKSHMI JAGADEESAN, (Minister for Handlooms):—Handlooms, Khadi, Textiles and Yarn.



## PARLIAMENTARY SECRETARIES TO THE CABINET MINISTERS.

1. THIRU M. VINCENT : Parliamentary Secretary to Minister for Finance.
2. THIRU ANNOOR JAGADEESAN : Parliamentary Secretary to Minister for Co-operation.
3. THIRU P. MUSIRIPUTHAN : Parliamentary Secretary to Minister for Revenue.
4. THIRU ISARI VELAN : Parliamentary Secretary to Minister for Information and Hindu Religious Endowments.
5. THIRU M. A. JAYAVELU : Parliamentary Secretary to Minister for Law.
6. THIRU A. VELLAISAMY : Parliamentary Secretary to Minister for Education.
7. THIRU P. G. KITTU : Parliamentary Secretary to Minister for Transport.
8. THIRU R. ARUNACHALAM : Parliamentary Secretary to Minister for Health.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்.

மாண்புமிகு திரு. முனு ஆதி

### பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு, பி.ஏ., பி.எல்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.*

1. திரு. பி. எச். பாண்டியன்,
2. திரு. சு. முத்துச்சாமி,
3. திரு. மு. செல்வராஜ்,
4. திரு. துரை முத்துச்சாமி,
5. திரு. ரா. மார்க்கபந்து.

### சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி. எல்.

### துணைச் செயலாளர்.

திரு. த. இராதாகிருஷ்ணன்

### குழு அலுவலர்.

திரு. ச. பாஷ்யம், பி. ஏ. (ஹானர்ஸ்)

### சார்புச் செயலாளர்கள்.

திரு. வி. சீதாராமன், பி. காம்.,
திரு. பி. எம். பத்மனபன் நம்பியார், பி.ஏ.,
திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி.ஏ., பி.எல்.,
திரு. செ. சு. ஜானகிராமன், பி. ஏ. பி. எல்.,
திரு. பெ. ச. கனகசபாபதி, பி. ஏ. பி. எல்.,
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி. காம்.,

### விவாதப் பதிப்பாளர்.

திரு. கே. சுந்தரராசன்.

### தலைமை நிருபர்.

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி. லிட்.

### எஸ்டேட் அதிகாரி.

திரு. கே. பாலகுரு, பி.ஏ.

---

*31—8—1978-ம் தேதி அன்று அமைக்கப்பெற்றது.

8. மாண்புமிகு திரு கே. நாராயணசாமி முதலியார் (சட்ட அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், கடன் கொடுத்தல் பற்றி சட்டம் இயற்றல், சீட்டு நிதிப்பற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு.

9. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி, வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

10. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம், பூமிதானம், கிராம தானம்,

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு, இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—அரிசன நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர்.

13. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்தண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

14. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு, அக்ரோ பொறியியல் பிரிவு, வேளாண்மை பணிக் கூட்டுறவு சங்கங்கள், பாசனத் திட்டங்கள் (சிறு பாசனம் உள்ளிட்டது) வேளாண்மை பொறியியல்.

15. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—கிராம, குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால் பால் பெருக்குத்திட்டம், வக்பு.



16. திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார்:—மக்கள் நல்வாழ்வுத் துறை.

17. மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால் நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப் பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

18. திருமதி சுப்புலட்சுமி செகதீசன் (கைத்தறி நெசவுத் துறை அமைச்சர் (கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—கைத்தறி, கதர், நெசவாலைகள், நூல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 85 சண்முகம், திரு. ப. உ. .. | திருவண்ணுமலை |
| 86 சண்முகம், திரு. ஆர். .. | திருத்தணி |
| 87 சண்முகம், திரு. கூத்தக்குடி ச. | திருப்பத்தூர் |
| 88 சதாசிவம், திரு. செ. .. | அரவக்குறிச்சி |
| 89 சந்திரசேகரன், திரு. ஆர். .. | கம்பம் |
| 90 சந்திரன், திரு. ப. .. | பெரணமல்லூர் |
| 91 சந்திரன் ஜெயபால், திரு. இரா. எ. | தியாகராய நகர், சென்னை. |
| 92 சமரசம், டாக்டர், கே. .. | காவேரிப்பட்டிணம் |
| 93 சரஸ்வதி, மாண்புமிகு செல்வி பி. டி. (அமைச்சர்) | திருமங்கலம் |
| 94 சவுந்திரராஜன், திரு. ரெ. வீ... | பாபநாசம். |
| 95 சாதிக்பாட்சா, திரு. எஸ். ஜே. | ஆயிரம்விளக்கு, சென்னை |
| 96 சாது செல்வராஜ், திரு. கோ. | ஸ்ரீவைகுண்டம். |
| 97 சாமிக்கண்ணு, திரு. தா. .. | செங்கம் (செ. வ.) |
| 98 சிகாமணி, திரு. பொ. .. | திருவொற்றியூர் |
| 99 சிவசாமி, திரு. செ. .. .. | இளையாங்குடி |
| 100 சிவபெருமாள், திரு. மு. .. | ஓமலூர் |
| 101 சின்னசாமி, திரு. வ. .. | சேந்தமங்கலம் (ஆ. வா.) |
| 102 சின்னசாமி, திரு. வி. கொ. | பவானிசாகர், |
| 103 சின்னய்யா, திரு. வீ. .. | குளத்தூர் (செ.வ.) |
| 104 சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி. |
| 105 சீனிவாச ரெட்டியார், திரு. போ. எ. | குளித்தலை. |
| 106 சுந்தரம், திரு. ப. .. .. | திருப்பத்தூர். |
| 107 சுந்தரம், திரு. மு. .. .. | ரிஷிவந்தியம். |
| 108 சுந்தரராஜன், திரு. மு. .. | விருதுநகர். |
| 109 சுந்தரராஜ், திரு. நா. .. | திருமயம். |
| 110 சுப்பராயன், திரு. என். .. | பனைமரத்துப்பட்டி. |
| 111 சுப்பிரமணியம், பாக்கூர், திரு. சு. | உத்திரமேரூர். |
| 112 சுப்பிரமணியம், திரு. கே. ஜே. | போளூர். |
| 113 சுப்பிரமணியம், திரு. ஆர். சி. | கடலாடி. |
| 114 சுப்பிரமணியம், திரு. டி. .. | ஆண்டிமடம். |
| 115 சுப்பிரமணியன், திரு. ஓ. .. | சிவகங்கை. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 116 சுப்பிரமணியன், திரு. சின்னசேலம் மா., | சின்னசேலம். |
| 117 சுப்பிரமணியன், திரு. வ. மு. | மானுமதுரை (செ.வ.) |
| 118 சுப்பிரவேலு, திரு. கா. .. | சீர்காழி (செ.வ.) |
| 119 சுப்பு, திரு. க. .. .. | வில்லிவாக்கம் |
| 120 சுப்புலட்சுமி, திருமதி .. | மொடக்குறிச்சி |
| 121 சுப்பையா, திரு. ச. .. .. | சங்கரநயினர் கோவில் (செ.வ.) |
| 122 சுவாமிதாஸ், திரு. அ. .. | பத்மநாபபுரம் |
| 123 செங்கோடன், திரு. கா. .. | கபிலமலை |
| 124 செங்கோட்டையன், திரு.கு.அ. | சத்தியமங்கலம் |
| 125 செல்லப்பா, திரு. அ. .. | வலங்கைமான் (செ.வ.) |
| 126 செல்வராசன், திரு. அ. .. | துறைமுகம், சென்னை |
| 127 செல்வராஜ், திரு. சீனி. .. | சமயநல்லூர் (செ.வ.) |
| 128 செல்வராஜ், திரு. மு. .. | குறிஞ்சிப்பாடி |
| 129 சொக்கலிங்கம், திரு. கெ. .. | திருப்போரூர் (செ.வ.) |
| 130 சோமசுந்தரம், திரு. ஓ. ப. .. | பொள்ளாச்சி |
| 131 சௌந்தரபாண்டியன், மாண்புமிகு திரு. பெ. (அமைச்சர்). | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 132 சௌந்திரராசன், திரு. கே. .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 133 சௌந்திரராஜன், திரு. மு. ரா. | பவானி |
| 134 சௌந்திரராஜன், மாண்புமிகு திரு. ஆர். அமைச்சர் | ஸ்ரீரங்கம் |
| 135 ஞானசிகாமணி, திரு. தே. .. | விளவங்கோடு |
| 136 தங்கவேலு கவுண்டர், திரு. பொ. | மேலமலையனூர் |
| 137 தங்கவேல், திரு. ர.ச. .. | வால்பாறை (செ.வ.) |
| 138 தண்டபாணி, திரு. ரா.க.சு. | காங்கேயம் |
| 139 தமிழரசன், திரு. இ. .. | பேரணும்பட்டு (செ.வ.) |
| 140 தனசேகரன், திரு. ந. .. | தூத்துக்குடி |
| 141 தனபால், திரு. ப. .. .. | சங்கரி (செ.வ.) |
| 142 தனுஷ்கோடி, திரு. கோ. .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 143 தாமரைக்கனி, திரு. இரா. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 144 திருநாவுக்கரசு, மாண்புமிகு திரு. எஸ். (பேரவைத் துணைத் தலைவர்). | அறந்தாங்கி |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 145 திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம் |
| 146 துரை கோவிந்தராசன், திரு (அரசாங்கத் தலைமைக் கொறடா). | திருவோணம் |
| 147 துரைசாமி, திரு. ப. .. .. | ராசிபுரம் |
| 148 துரை முத்துசாமி, திரு. .. | சங்கரபுரம் |
| 149 துரை முருகன், திரு. .. | இராணிப்பேட்டை |
| 150 துரைராஜ், திரு. சு. ம. .. | பொன்னேரி (செ.வ.) |
| 151 துலுக்காணம், திரு. வ. .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 152 தைலப்பன், திரு. டி. எம். .. | ஒரத்தநாடு |
| 153 நடராசன், திரு. ஆ. .. | பேரூர் |
| 154 நடராசன், திரு. எஸ். .. | தஞ்சாவூர் |
| 155 நல்லதம்பி, திரு. தீ. சு. .. | பார்க்டவுன், சென்னை |
| 156 நாச்சிமுத்து, திரு. க. .. | பொங்கலூர் |
| 157 நாச்சிமுத்து கவுண்டர், திரு. கே. பி. | மேட்டூர் |
| 158 நாராயணன், திரு. ரா. .. | தாரமங்கலம் |
| 159 பட்டாபிராமன், திரு. செ. .. | திருவள்ளூர் |
| 160 பண்ணை சேதுராம், திரு. கே. | பெரியகுளம் |
| 161 பரமசிவன், திரு. ஏ. எம். .. | மேலூர் |
| 162 பரமசிவம், திரு. மொ. .. | வானூர் (செ.வ.) |
| 163 பழனிச்சாமி, திரு. சு. .. | மேட்டுப்பாளையம் |
| 164 பழனிச்சாமி, திரு. சொ. ந. | அவினாசி (செ.வ.) |
| 165 பழனிமுத்து, திரு. சி. .. | ஆத்தூர் |
| 166 பழனியப்பன், திரு. அ. ப. .. | ஒட்டன்சத்திரம் |
| 167 பழனிவேல், திரு. என். .. | பழனி (செ.வ.) |
| 168 பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 169 பாலகிருஷ்ணன், திரு. சோ. .. | முதுகுளத்தூர் |
| 170 பாலகுரு திரு. வெ. | சோழவந்தான் |
| 171 பாலன், திரு. சு. .. .. | பெரம்பூர் (செ.வ.) |
| 172 பாலாஜி, திரு. க. .. | காஞ்சீபுரம் |
| 173 பாலுச்சாமி, திரு. அ. .. | நிலக்கோட்டை (செ.வ. |
| 174 புருஷோத்தமன், திரு. து. .. | சைதாப்பேட்டை, சென்னை |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 175 புஷ்பராஜு, திரு. த. .. | ஆலங்குடி |
| 176 பெரியசாமி, திரு. மொ. .. | மங்களூர் (செ.வ.) |
| 177 பெரியசாமி, திரு. ரா. .. | உப்பிலியாபுரம் |
| 178 பெரியசாமி, திரு. டி.பி.மு. .. | மதுரை மேற்கு |
| 179 பெருமாள், திரு. என். .. | வரகூர் (செ.வ.) |
| 180 பெருமாள், திரு. ரா.கு. .. | விளாத்திகுளம் |
| 181 பொன்னுசாமி, டாக்டர் ஏ. | பெருந்துறை |
| 182 பொன்னுரங்கம், திரு. ப. .. | இராயபுரம் |
| 183 பொன்னையன், மாண்புமிகு திரு. சி. (அமைச்சர்). | திருச்செங்கோடு |
| 184 மணிமாறன், திரு. மா. .. | நன்னிலம் (செ.வ.) |
| 185 மணிமாறன், திரு. ஆர். .. | திருப்பூர் |
| 186 மணிமுடி, திரு. எஸ். .. | எழும்பூர், சென்னை (செ.வ) |
| 187 மருதாசலம், திரு. க. .. | தொண்டாமுத்தூர் |
| 188 மனோகரன், மாண்புமிகு திரு. கி. (அமைச்சர்). | பாளையங்கோட்டை |
| 189 மாணிக்கம், திரு. சி. .. | திருச்சிராப்பள்ளி-1 |
| 190 மார்க்கபந்து, திரு. ரா. .. | அணைக்கட்டு |
| 191 மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ் | (நியமன உறுப்பினர்) |
| 192 மாரிமுத்து, திரு. ஏ. ஆர். .. | பட்டுக்கோட்டை |
| 193 மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம் |
| 194 முத்துசாமி, திரு. பா. க. சி. | தர்மபுரி |
| 195 முத்துசாமி, திரு. சு. .. | ஈரோடு |
| 196 முத்துசாமி கரையாளர், திரு.சு. | தென்காசி |
| 197 முத்தையா, திரு. இரா. .. | சேடப்பட்டி |
| 198 முருகேசன், திரு. கூ. ச. .. | திருவரம்பூர் |
| 199 முனுசாமி, திரு. பொ. .. | வந்தவாசி (செ.வ.) |
| 200 முனிரத்தினம், திரு. இரா. ச. | கும்மிடிபூண்டி |
| 201 மூனு ஆதி, திரு. மாண்புமிகு (பேரவைத் தலைவர்). | தாம்பரம், சென்னை |
| 202 மூக்கையா தேவர், திரு.பி.கே. | உசிலம்பட்டி |
| 203 யூசுப், திரு. யா.சை.மு. .. | ராதாபுரம் |
| 204 ரகுமான்கான், திரு. அ. .. | சேப்பாக்கம், சென்னை |
| 205 ரகுராமன், திரு. வி. .. | புவனகிரி |
| 206 ரகோத்தமன், திரு. கோ. .. | முகையூர் |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| 28 இராமசாமி, திரு. கே.என்.கே. | கோபிசெட்டிப்பாளையம் |
| 29 இராமசாமி, திரு. எஸ். ஜே. | சோளிங்கர் |
| 30 இராமசாமி, திரு. எஸ். வி. | பெரம்பலூர் (செ.வ.) |
| 31 இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம் |
| 32 இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 33 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. எம். ஜி. (முதலமைச்சர்) | அருப்புக்கோட்டை |
| 34 இராமச்சந்திரன், திரு. ந. | செஞ்சி |
| 35 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்) | பண்ருட்டி |
| 36 இராமச்சந்திர ரெட்டி, திரு. என். | ஹோசூர் |
| 37 இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர் |
| 38 இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி |
| 39 இளங்கோவன், திரு. கோ. | திருவையாறு |
| 40 ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் திரு. பி. | அம்பாசமுத்திரம் |
| 41 உக்கிரபாண்டியன், திரு. க. | பரமக்குடி (செ. வ.) |
| 42 உச்சி, திரு. கே. | கூடலூர் |
| 43 உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 44 உமாநாத், திரு. ரா. | நாகப்பட்டிணம் |
| 45 உய்யக்கொண்டான், திரு. கே.ஜே. | ஆற்காடு |
| 46 எட்மண்ட், மாண்புமிகு திரு. க. உரொ. (அமைச்சர்) | திருநெல்வேலி |
| 47 எத்திராஜ், திரு. கி. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 48 ஏகாம்பர ரெட்டி, திரு. | பள்ளிப்பேட் |
| 49 ஐசரி வேலன், திரு. (அமைச்சரின் பேரவைச் செயலர்) | டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர். |
| 50 கணேசன், திரு. இ. | எடப்பாடி |
| 51 கணேசன், திரு. எஸ். | பூம்புகார் |
| 52 கண்ணன், திரு. ம. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 53 கந்தசாமி, திரு. கே. | ஆண்டிப்பட்டி |
| 45 கந்தசாமி, திரு. கா. வே. | கிணத்துக்கடவு |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 55 கபாலி, திரு. டி. கே. | மயிலாப்பூர் |
| 56 கரியமாணிக்கம் அம்பலம், திரு. கரு. ராம. | திருவாடானை |
| 57 முத்தையா, திரு. கே. கே. | மருங்காபுரி |
| 58 கருணாநிதி, திரு. மு. | அண்ணாநகர், சென்னை |
| 59 கருணாநிதி, திரு. தாழை. மு. | திருவாரூர் (செ.வ.) |
| 60 கருணாமூர்த்தி, திரு. வெ. | ஜெயங்கொண்டான் |
| 61 கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. | ஆலங்குளம் |
| 62 கலியமூர்த்தி, திரு. துரை | சிதம்பரம் |
| 63 காத்தமுத்து, திரு. கி. பெ. | தொட்டியம் |
| 64 காளிமுத்து, மாண்புமிகு திரு. கா. (அமைச்சர்) | திருப்பரங்குன்றம் |
| 65 காளியப்பன், திரு. பெ. | காரைக்குடி |
| 66 காளியப்பன், திரு. இரா. | ஏற்காடு (ஆ. வா.) |
| 67 கிட்டப்பா, திரு. என். | மாயூரம் |
| 68 கிட்டு, திரு. ப. கோ. (அமைச்சரின் பேரவைச் செயலர்) | பல்லடம் |
| 69 கிருஷ்ணன், திரு. பி. எம். | பாலக்கோடு |
| 70 கிருஷ்ணன், திரு. செ. | கன்னியாகுமரி |
| 71 கிருஷ்ணன், திரு. நா. | ஸ்ரீ பெரும்புதூர் (செ.வ. |
| 72 கிருஷ்ணன், திரு. பி. | விழுப்புரம் |
| 73 கிருஷ்ணன், திரு. ரா. | வாசுதேவ நல்லூர் (செ.வ.) |
| 74 குப்புசாமி, திரு. என். | மொரப்பூர் |
| 75 குருசாமி, திரு. ப. | ஆண்டியூர் (செ.வ.) |
| 76 குழந்தைவேலு, மாண்புமிகு திரு. ப. (அமைச்சர்) | உடுமலைப்பேட்டை |
| 77 கோதண்டராமன், திரு. வி. கே. | குடியாத்தம் |
| 78 முசிறிபுத்தன், திரு. பி. (அமைச்சரின் பேரவைச் செயலர்) | முசிறி |
| 79 கோபாலன், திரு. போ. | உதகமண்டலம் |
| 80 கோவிந்தராசன், திரு. சி. | நெல்லிக்குப்பம் |
| 81 கோவிந்தன், புலவர் கா. | செய்யாறு |
| 82 கோவேந்தன், திரு. மு. ரெ. | பேராவூரணி |
| 83 சங்கரய்யா, திரு. என். | மதுரை கிழக்கு |
| 84 சண்முகம், திரு. கா. ந. | லால்குடி |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர் |
|---|---|
| (1) | (2) |
| 207 ரமணி, திரு. கு. .. .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 208 ரசாக், திரு. எம். எம். ஏ. .. | கடையநல்லூர் |
| 209 ராமசாமி, திரு. கோ. .. | சிவகாசி |
| 210 ராமசாமி, திரு. து. .. | வெள்ளக்கோயில் |
| 211 ராமதாஸ், திரு. பி. .. | போடிநாயக்கனூர் |
| 212 ராமநாதன், திரு. சி. .. | விருத்தாசலம் |
| 213 ராமலிங்கம், திரு. ஏ. .. | காட்டுமன்னார் கோவில் (செ. வ.) |
| 214 ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை |
| 215 ராஜு, திரு. செ. மெ. .. | தலைவாசல் (செ.வ.) |
| 216 ராஜு, திரு. வி. கே. .. | அரக்கோணம் (செ.வ.) |
| 217 லட்சுமிநாராயணன், திரு. என். | மதுரை மத்திய தொகுதி |
| 218 லத்தீப், திரு. எம். ஏ. .. | வாணியம்பாடி |
| 219 வடிவேல், திரு. கு. .. | கரூர் |
| 220 வரதராஜன், திரு. என். .. | திண்டுக்கல் |
| 221 வரதராஜன், திரு.சௌ.வே. | சேலம்-1 |
| 222 வாசன், திரு. சீ. மு. .. | வேடசந்தூர் |
| 223 வின்செண்ட், திரு. எம். .. [அமைச்சரின் செயலர்.] | நாகர்கோவில் |
| 224 விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர் |
| 225 வேங்கா கவுண்டர், திரு. பி. | வீரபாண்டி |
| 226 வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, திரு. ரா. | சிங்காநல்லூர் |
| 227 வெள்ளைச்சாமி, திரு. ஆ. .. [அமைச்சரின் செயலர்.] | ஆத்தூர் |
| 228 வேணுகோபால், திரு. த. .. | தண்டராம்பட்டு |
| 229 வேலுச்சாமி, திரு. ஓ. சோ. | ஓட்டப்பிடாரம் (செ.வ.) |
| 230 ஜகதீசன், திரு. ஆனூர் பு. கோ. [அமைச்சரின் செயலர்.] | செங்கல்பட்டு |
| 231 ஜான் வின்செண்ட், திரு. மு. | நாங்குனேரி |
| 232 ஜெபமணி, திரு. ர. .. .. | சாத்தான்குளம் |
| 233 ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| 234 ஜெயவேலு, திரு. எம். ஏ. [அமைச்சரின் செயலர்.] | காட்பாடி |
| 235 ஜேம்ஸ், திரு. ஜே. .. .. | திருவட்டாறு |



## பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

| | |
|---|---|
| 1 மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார். .. | அமைச்சர். |
| 2 மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி .. | அமைச்சர் |
| 3 மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் .. | அமைச்சர். |
| 4 மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். .. | அமைச்சர். |
| 5 மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம். .. | அமைச்சர். |
| 6 மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது. .. | அமைச்சர். |
| 7 திரு. வி. பி. இராமன் .. | தலைமை வழக்கறிஞர். |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பெயர்ப் பட்டியல் (தொகுதிகள் உட்பட)

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 1 | அண்ணாமலை, திரு. எம். | ஹரூர் (செ.வ.) |
| 2 | அப்துல் ரசாக், திரு. கே.எம். | ஆலந்தூர் |
| 3 | அப்துல் லத்தீப், திரு. கி. | கடலூர் |
| 4 | அப்புனு கவுண்டர், திரு. கா. | பெண்ணாகரம் |
| 5 | அமிர்தராஜ், திரு. இரா. | திருச்செந்தூர் |
| 6 | அம்பிகாபதி, திரு. மு. | மன்னார்குடி |
| 7 | அய்யாச்சாமி, திரு. ரா. | தாராபுரம் (செ. வ.) |
| 8 | அரங்கசாமி, திரு. க. | குன்னூர் (செ. வ.) |
| 9 | அரங்கநாதன், திரு. அ. க. | வேலூர் |
| 10 | அரங்கநாதன், திரு. மு. | திருவல்லிக்கேணி |
| 11 | அரங்கநாயகம், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்) | கோயம்புத்தூர் (மேற்கு) |
| 12 | அருணாசலம், திரு. இரா. (அமைச்சரின் பேரவைச் செயலர்.) | நாமக்கல் (செ. வ.) |
| 13 | அர்ச்சுனன், திரு. வீ. | ஆரணி |
| 14 | அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி |
| 15 | அன்பழகன், திரு. க. | புரசைவாக்கம் |
| 16 | அன்பழகன், திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 17 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 18 | ஆதிசுவாமி, திரு. இரா. | குளச்சல் |
| 19 | ஆறுமுகம், திரு. சி. | மதுராந்தகம் |
| 20 | ஆறுமுகம், திரு. எச். ஜி. | பர்கூர் |
| 21 | ஆறுமுகம், திரு. இல. | திருநாவலூர் |
| 22 | ஆறுமுகம், திரு. மு. | சேலம்-2 |
| 23 | ஆறுமுகம், திரு. த. | அரியலூர் |
| 24 | இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம் |
| 25 | இராஜாராம் ரெட்டி, திரு. டி. ஆர். | திண்டிவனம் |
| 26 | இராசரத்தினம், திரு. து. | பூந்தமல்லி |
| 27 | இராதா, திரு. எஸ். ஆர். | கும்பகோணம் |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

## வியாழக்கிழமை, 1978 ஆகஸ்ட் 31.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. இரங்கல் குறிப்புகள்.

#### முன்னாள் உறுப்பினர்களின் மறைவு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. துரைராஜ் பாண்டியன் அவர்கள் 20—4—1978-ஆம் தேதியன்றும், திரு. தோட்டா ராமசாமி அவர்கள் 17—5—1978-ஆம் தேதியன்றும், திரு. எம்.ஏ. ஈஸ்வரன் அவர்கள் 22—5—1978-ஆம் தேதியன்றும் திரு. எஸ். கந்தசாமி கவுண்டர் அவர்கள் 21—6—1978-ஆம் தேதியன்றும், திரு. எஸ். நாகராஜ மணியகார் அவர்கள் 21—7—1978-ஆம் தேதியன்றும், திரு. கா. ஆ. சண்முக முதலியார் அவர்கள் 17—7—1978-ஆம் தேதியன்றும் மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரைராஜ் பாண்டியன் 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரை திருநெல்வேலி பொது ஊரகத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, அன்றைய ஒருங்கிணைந்த சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராக நல்லமுறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. தோட்டா இராமசாமி அவர்கள் ஆந்திரா மாநிலத்தில் அமைச்சர் ஆகவும், 1972 ஆம் ஆண்டிலிருந்து 1974 ஆம் ஆண்டு வரை ஆந்திரா மாநில் மேலவைத் தலைவராகவும் பணியாற்றினார்கள். 1952 ஆம் ஆண்டிலிருந்து 1953 ஆம் ஆண்டு வரை பெத்தாபுரம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அன்றைய ஒருங்கிணைந்த சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராக இருந்து சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. எம். ஏ. ஈஸ்வரன் அவர்கள், 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரை ஈரோடு பொது ஊரகத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அன்றைய ஒருங்கிணைந்த சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராக சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

[பேரவைத் தலைவர்] [1978 ஆகஸ்ட் 31

திரு. எஸ். கந்தசாமி கவுண்டர், 1967 ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம் ஆண்டு வரை அரவக்குறிச்சி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அன்றைய ஒருங்கிணைந்த சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராக சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. எஸ். நாகராஜ மணியகார், 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரை ஹொசூர் பொது கிராமப்புறத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அன்றைய ஒருங்கிணைந்த சட்டமன்றப் பேரவையிலும் 1957 ஆம் ஆண்டிலிருந்து 1962 ஆம் ஆண்டு வரை கிருஷ்ணகிரி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. கா. ஆ. சண்முக முதலியார், 1937 ஆம் ஆண்டிலிருந்து 1939 ஆம் ஆண்டுவரை வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பத்தூர் பொது கிராமப்புறத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அன்றைய ஒருங்கிணைந்த சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராக பணியாற்றியுள்ளார்கள்.

அன்னார்களின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த வருத்தத்தையும் அனுதாபத்தையும் இரங்கலையும் இப் பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கை எய்தியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிட நேரம் மௌனமாக எழுந்து நின்றனர்.)

## 2. ஒழுங்குப் பிரச்சினைகள்.

### அ. படகு விபத்தில் உயிர்நீத்த மாணவர்களுக்கு இரங்கல குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் வினா எண் 1.

திரு. துரை முத்துசாமி: தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். சமீபத்தில் படகு விபத்தில் உயிர் நீத்த......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரை முத்துசாமி அவர்களுக்கு சட்டமன்ற விதிகள் நன்கு தெரியும். கேள்வி நேரத்தின்போது ஒழுங்குப் பிரச்னை எழுப்புவது நியாயம் இல்லை. தயவுசெய்து கேள்வி நேரம் முடிந்த பிறகு......



1978 ஆகஸ்ட் 31]

திரு. துரை முத்துசாமி: ஒரு இரங்கற் தீர்மானம் கொண்டு வரலாமே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை எழுத்து மூலமாகக் கொடுத்திருக்கலாம், ஒழுங்குப் பிரச்னையாக கிளப்பக் கூடாது. எழுத்து மூலம் உறுப்பினர்களால் தரப்பட்டு அதை நான் பரிசிலனை செய்யவில்லையென்றால் இங்கு ஒழுங்குப் பிரச்சினையாக கொண்டுவரலாம். உறுப்பினர் அவர்களால் விதி 42, விதி 41-ன் கீழ் தரப்பட்டதை ஆலோசனைக்கு வைத்திருக்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். அப்படியிருக்க இப்போது ஒழுங்குப் பிரச்னை எழுப்புவது என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல.

## (3) தகவல் கோரல்.

### தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறப்பது குறித்து.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, இன்றைய தினம் கோட்டையில் இருக்கக்கூடிய கொடிக்கம்பத்தில் கொடி அரைக்கம்பத்தில் பறக்கிறது. காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்திற்கு முன்னால் அவசரப்பட்டு கேட்பது என்றால் என்ன செய்வது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: கென்யா நாட்டு அதிபர் கென்யாட்டா அவர்கள் மறைவுக்கு இரங்கல் தெரிவிப்பது குறித்து, நம்முடைய நாட்டைப் பொறுத்த வரையில் அனுதாபம் தெரிவிக்கிற வகையில் தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறந்து கொண்டிருக்கிறது. வேறு ஒன்றும் காரணம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. வினாக்கள்—விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

### பைகாரா அணைக்கட்டில் மின்சார உற்பத்தி.

*வினா 1— திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நீலகிரி மாவட்டத்தில் உள்ள பைகாரா அணைக்கட்டில் இருந்து வெளிவரும் தண்ணீரைக் கொண்டு மின்சார உற்பத்தி செய்ய திட்டம் ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படத் தொடங்கும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :—(அ) ஆம்.

(ஆ) இத் திட்டம் ஆய்வில் உள்ளது.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை விரைவாக செயல்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு மதிப்பீட்டை விரைவுபடுத்த வேண்டும் என்று வாரியத்திற்கு கூறப்பட்டுள்ளது. அநேகமாக 1978 டிசம்பர் மாதத்திற்குள் இந்தத் திட்ட அறிக்கை முடிக்கப்பெறும் என்று நம்புகிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன : தலைவர் அவர்களே, மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. சுமார் 15 கோடி ரூபாய் அளவில் இருக்கும்.

## பசுமலை மின்வாரிய கிடங்கில் உள்ள செப்பு கண்டக்டர்கள்.

*வினா 2.— திரு. சி. கோவிந்தராசன் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை பசுமலையிலுள்ள மின்வாரிய ஸ்டோரில் செப்பு கண்டக்டர்கள் உபயோகப்படுத்தப்படாமல் இருப்பில் இருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், அவை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) உபயோகத்திலிருந்து விடுவிக்கப்பட்ட செப்பு மின் கடத்திகள் இருப்பில் உள்ளன.

(ஆ) 28–7–1978 தேதி நிலவரப்படி 52.3 மெட்ரிக் டன்கள்.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, 14—3—78 வரை அங்கே இருப்பில் இருக்கக்கூடிய "காப்பர் வயர்" பத்து லட்சத்து 66 ஆயிரம் ரூபாய் அளவுக்கு இருப்பு இருக்கிறது. அது இதுவரையிலும் உபயோகப்படுத்தப்படவில்லை. இன்னும் அதே ஸ்டோரில் மூன்று டிரான்ஸ்பார்மர்கள் ரிப்பேரில் இருக்கின்றன. ஒவ்வொரு டிரான்ஸ்பார்மரிலும் இரண்டரை





டன் காப்பர் வயர் இருக்கிறது. இதையெல்லாம் சேர்த்துப் பார்த்தால் சுமார் 10 லட்சத்து 66 ஆயிரம் ரூபாய்க்கு மின்சார வாரியத்தின் பணம் முடங்கிக் கிடக்கிறது. இதை உடனடியாக செலவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ? பல இடங்களிலும் காப்பர் வயர் இல்லை என்ற காரணத்திற்காக மின்சார இணைப்புக் கொடுப்பதில்லை என்ற புகாரும் இருந்து கொண்டு இருக்கிறது. அதே நேரத்தில் மின்சார வாரியத்தின் பணம் லட்சக்கணக்கான அளவில் ஒரே இடத்தில் தேங்கிக் கிடக்கிறது. ஆகவே இதை ரிலீவ் செய்வதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய வினாக்களில் இரண்டு பிரச்னைகள் அடங்கியிருக்கின்றன. ஒன்று, செப்புக் கம்பிகளைப் பயன்படுத்தலாமா என்பது. இப்போது நடைமுறையில் செப்புக் கம்பிகளைப் பயன்படுத்தி மின்சாரத் தொடர்பு கொடுப்பது நிறுத்தப்பட்டு விட்டது. செப்புக் கம்பிகளை வழங்குவதை இப்போது நாம் நிறுத்திவிட்டோம். உண்மையைச் சொல்லப் போனால் இப்போதுள்ள மின்சாரக் கம்பங்களிலுள்ள செப்புக் கம்பிகளை எடுத்து அவற்றை ஸ்டோரில் வைத்து, ஆக்‌ஷன் போட்டு வெளியில் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

இரண்டாவதாக, நிறைய ஸ்டாக்குகளைத் தேக்கி வைத்திருக்கிறோம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இவற்றை நாம் டெண்டர்கள் வரவழைத்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம். 17—7—1978-ல் 20 டன்னைக் கொடுத்து விட்டோம். மேலும் 25 டன்னை இந்த மாதம் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் செப்புக் கம்பிகளை பகிரங்கமாக ஏலம் போட்டு விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ? சமயநல்லூரில் நடைபெற்றதைப் போல் நடைபெறாமல் அரசு தன்னை இதில் பாதுகாத்துக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பகிரங்கமான முறையில் ஏலம் விடப்படுகிறது. பத்திரிகைகளில் எல்லாம் விளம்பரம் செய்து விடப்படுகிறது. அப்படிப்பட்ட விளம்பரத்தின் அடிப்படையில் யார் வேண்டுமானாலும் அவற்றைப் பயன்படுத்தி டெண்டர்கள் போட்டுக் கொள்ளலாம். சமயநல்லூரைப் போன்று நடந்து விடாமல் இருக்க வேண்டும் என்பதில் இந்த அரசுக்கு மிகுந்த அக்கறை உண்டு.

திரு. சி. கோவிந்தராசன் : பழுதடைந்த டிரான்ஸ்பார்மர்கள் ஒன்று 11 ஆண்டுகளாகவும், இன்னொன்று 7 ஆண்டுகளாகவும் அந்த இடத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. அதில் ஒவ்வொரு டிரான்ஸ்பார்மரிலும் இரண்டரை டன் எடையுள்ள

காப்பர் இருக்கிறது. இவற்றை இவ்வளவு நாட்கள் எதற்காக காத்து வைத்துக் கொண்டிருக்க வேண்டும்? அரசிலிருந்து உடனடியாக இதை விற்பனை செய்யக் கூடாதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: டிரான்ஸ்பார்மர்கள் பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. செப்பு கன்டன்ஸர்கள் அதாவது கடத்திகள் பற்றிய விவரம் தான் கேள்வி, அதற்கான பதிலும் சொல்லப்பட்டிருக்கிறது. மற்றபடி இருக்கின்ற டிரான்ஸ்பார்மர்கள் 'ஸிக்'காக இருக்கிறதா அல்லது பயன்படுத்தப்பட்டு வருகிறதா என்கின்ற விவரங்களை ஆராய்ந்து தான் முடிவு எடுக்க வேண்டும்.

## நிலவள வங்கிகள்.

*வினா 3.—திரு. கே. செளந்தரராசன்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்: கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செந்துறை, ஆண்டிமடம், அரியலூர் ஆகிய இடங்களில் தனித் தனியே மூன்று நிலவள வங்கிகள அமைக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: இல்லை.

திரு. கே. செளந்தரராசன்: தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் உடையார்பாளையம் ஒன்றியம் ஒன்றாக இருந்த நேரத்தில் நான்கு ஒன்றியங்களைச் சேர்த்து ஒரே இடத்தில் நிலவள வங்கி அமைக்கப்பட்டு இருந்தது. இப்போது ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் தனித் தனியாக ஏற்பட்டிருப்பதால், அந்தந்த ஒன்றிய வங்கியில் தான் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அதே நேரத்தில் முன்பு இருந்த வங்கியில் ஏதாவது தவணைக் கடன் பாக்கியிருந்தால் இப்போது கடன் பெற முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே நிலவள வங்கிகள் செயல்படுகின்ற நேரத்தில் விவசாயிகள் நல்ல முறையில் பயன்பெறுகின்ற முறையில் நிலவள வங்கிகள் அமைக்கப்படுமா, அதற்காக உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-10]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலவள வங்கி அமைப்பதிலே இந்திய ரிசர்வ் வங்கியின் சில வரையறைகளை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படுகிறது. அந்த வகையிலே இந்த அரியலூர் வட்டத்திலும், ஆண்டிமடம், செந்துறை வட்டங்கள்,





ஆக இந்த மூன்று வட்டங்களிலும் தற்போது ஏறத்தாழ 47 லட்சம் ரூபாய்களைக் கொண்ட வரவு செலவு செய்கின்ற நிலைமை இருக்கின்றது. அந்த வகையில் பார்க்கின்றபோது, தனித்து ஒரு நிலவள வங்கியை ஆண்டிமடம், செந்துறை ஆகிய பகுதிகளுக்கு உருவாக்குவதற்கு வாய்ப்புகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வி செந்துறை, ஆண்டிமடம், அரியலூர் பற்றிய கேள்வி. துணைக் கேள்வியை அதை ஒட்டிக் கேட்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: இந்த செந்துறை, ஆண்டிமடம் போன்ற பகுதிகளில் ஒரு சில விவசாயிகள் இந்த நில வள வங்கியிலே கடன் வாங்கி இருக்கிறார்கள். கடன் வாங்காத உறுப்பினர்களும் உண்டு. கடன் வாங்கியவர்கள் முறையாக திரும்பச் செலுத்தவில்லை என்பதற்காக, கடன் வாங்காதவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதற்கு நிவாரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் மீண்டும் இந்தக் கேள்வியை தயவு செய்து சொல்லுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: இந்த செந்துறை, ஆண்டிமடம் பகுதியிலே உள்ள விவசாயிகள் ஒரு சிலர் மட்டும் இந்த வங்கியிலே கடன் வாங்கியிருக்கிறார்கள். சிலர் கடன் வாங்காத நிலைமையிலும் இருக்கின்றார்கள். கடன் வாங்கியவர்கள் திருப்பிச் செலுத்தவில்லை என்பதற்காக, வாங்காதவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இவர்களுக்கு என்ன நிவாரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிலவள வங்கியிலே ஒரு குறிப்பிட்ட நிலுவை இருந்தால், மற்றவர்களுக்குக் கடன் கொடுக்கக் கூடாது என்ற ஒரு விதி இருகின்ற காரணத்தினால், கடன் வாங்காத மற்ற உறுப்பினர்களுக்கும் இந்த வாய்ப்பு மறுத்தளிக்கப்படுகின்றது.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, இந்த வங்கிகளிலே வரவு செலவு பார்க்கின்ற ஜெனரல் பாடி கூட்டங்களிலே டிபன் வாங்கிக் கொடுத்து, கணக்கு எழுதும் பழக்கம் இருக்கின்றது. அந்தப் பழக்கம் நிறுத்தப்படுமா? அப்படி டிபன் வாங்கிக் கொடுத்தவர்களின் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடுமாறு உறுப்பினர் அவர்களை விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நான் ஏற்கனவே திரு. சிவசாமி அவர்களுக்குச் சொல்லிவிட்டுத்தான் குரல் கொடுத்தேன். பொதுவாக கேள்விகள் கேட்காமல், இந்த மூன்று இடங்களிலே உள்ள வங்கியைப் பற்றிய கேள்விகள் கேட்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. கே. சௌந்தரராசன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பகுதியிலே 47 லட்சம் ரூபாய் நிலவள வங்கி மூலமாகக் கடன் திருப்பிக் கொடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். ஆனால், இந்த நிலவள வங்கி அரியலூரில் இருக்கின்ற காரணத்தினால், அரியலூர் ஒன்றியத்திலே ஏற்கனவே தலைவர்கள் இருந்த காரணத்தினால், அங்கிருந்தவர்களுக்கு மட்டும் கடன் கொடுக்கப்பட்டு, அதைத் திருப்பிச் செலுத்த முடியாத சூழ்நிலையில், இன்றைய தினம் மற்றப் பகுதிகளிலே அதாவது ஆண்டிமடம், செந்துறையிலுள்ள விவசாயிகள் கடன் பெற முடியாத நிலைமை உருவாகியிருக்கிறது. அந்த விவசாயிகளும் கடன் பெறக் கூடிய வகையில், கடனைப் பெற்றவர்கள் திருப்பிக் கொடுத்தால்தான் கடன் கொடுக்க முடியும் என்ற நிலைமை இல்லாமல், ஒரு தனிப்பட்ட நிலவள வங்கி அங்கு செயல்பட முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்திய ரிசர்வ் வங்கியின் விதிப்படி 35 லட்சம் கடன் நிலுவை இருந்தால்தான் ஒரு சங்கம் என்ற அடிப்படையில்தான் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல், ஆண்டிமடத்தில் 10,50,000 ரூபாயும், செந்துறையில் 13,82,000 ரூபாயும் நிலுவை இருக்கின்ற காரணத்தினால், இந்த விதி முறை சரியாக வராத காரணத்தினால், இந்த அரியலூர் வட்டத்திலே இணைக்கப்பட்டு, இந்தக் காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. சோ. அழகர்சாமி :</u> அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது ஒரு வங்கியில் குறிப்பிட்ட அளவு பாக்கி இருந்தால் அந்த வங்கிக்குத் திரும்பக் கடன் கொடுக்க முடியாது என்று சொன்னார்கள். இப்போது அவ்வாறு குறிப்பிட்ட அளவு பாக்கி இருக்கக் காரணம் 20 ஆண்டு 15 ஆண்டு தவணையை ஏழு ஆண்டு தவணை என்று சொல்லியதன் காரணமாகக் கடன் வாங்கியவன் கட்ட முடியாத அளவுக்கு தவணை பாக்கிகள் அதிகமாக ஏற்பட்டதன் காரணமாக ஒழுங்காக எல்லா வங்கிகளும் கட்ட முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நீண்டகாலக் கடனாக 15 ஆண்டுகள், 20 ஆண்டுகள் என்று தவணைகளை மாற்றியமைத்தால் கடனைத் திருப்பிக் கட்டுவது சுலபமாக இருக்கும், கடன் கொடுப்பது எளிதாக இருக்கும். இது பற்றி அரசு ஆலோசித்து தகுந்த நடவடிக்கை எடுக்குமா ?





<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :</u> மாண்புமிகு உறுப்பினர் சொன்ன நல்ல யோசனைகளைப் பரிசிலனை செய்து அரசு ஆவன உடனடியாகச் செய்யும்.

<u>திரு. பெ. சு. திருவேங்கடம் :</u> ஏற்கனவே நிலவள வங்கிகள் தாலுகாவுக்கு ஒன்று வீதம் செயல்பட்டு வந்தன. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது ஊராட்சி ஒன்றிய அளவில் ஒரு நிலவள வங்கி ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஏற்படுத்த வேண்டுமென்று திட்டமிடப்பட்டு அந்த அடிப்படையில் இன்னும் பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களில் நிலவள வங்கிகள் ஏற்படுத்தப்படாமல் இருக்கின்றன. அந்த அடிப்படையில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு நிலவள வங்கியை ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :</u> நான் ஏற்கனவே தெளிவாகச் சொன்னேன். இன்றைக்குச் சில விதிமுறைகள் இருக்கின்றன. குறிப்பாக இரண்டு விதி முறைகள் இருக்கின்றன. மத்திய அரசு, மாநில அரசு, விவசாய மறு நிதி அபிவிருத்திக் கழகம் உலக வங்கியுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின்படி மாநிலத்தின் எந்த ஒரு பகுதியிலும் விவசாய அபிவிருத்திக் கழகத்தின் முன் அனுமதியின்றி புதிய வங்கிகளை ஏற்படுத்தக் கூடாது. இதன்படி தற்போதைய நிலையில் புதிய வங்கிகளை ஏற்படுத்த வேண்டுமானால் இந்தப் புதிய விதிமுறையைக் கடைப் பிடித்தாக வேண்டும். இரண்டாவது, தற்போது நிலவள வங்கிகளைத் தனித்து இயங்கும் துறையின் அடிப்படையில் மாற்றியமைக்க அரசு உத்தேசித்திருக்கும் காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோசனை பரிசீலிக்கப்படும்.

## <u>இராமநாதபுரம் மாவட்டத்தில் நில அளவை.</u>

*வினா 4— <u>திரு. செ. சிவசாமி</u> :— மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) முகவை மாவட்டத்தில் 1975–76-ல் புதிய சர்வே நடத்தப்போவதாக ஸ்தலம் ஒன்றுக்கு ரூ. 12 வீதம் வசூல் செய்யப்பட்டது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், வசூலான தொகை விபரம் என்ன ?

(இ) இத் திட்டம் அமுல் நடத்தப் படாததற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(ஆ) மொத்தம் வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 8,97,574.

(இ) இத்திட்டத்தை இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் அமுல் செய்து நிறுத்தி விடக்கூடாது என்பதாலும், தமிழ்நாடு மாநிலம் முழுவதும் இத்தகைய திட்டத்தை அமுல் செய்வதானால் பெருந்தொகையை அரசு செலவு செய்ய நேரிடும் என்ற காரணத்தாலும் நிலப்பதிவு சம்பந்தமாக அரசின் பரிசீலனையில் ஒரு மாற்றுத் திட்டம் உள்ளதாலும் இத்திட்டம் நிறைவேற்றப்படவில்லை.

திரு. செ. சிவசாமி : எட்டு லட்சத்து சொச்சம் ரூபாய் வசூல் செய்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் அது சம்பந்தமாக இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அது சம்பந்தமாக ஒன்று நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டும். அதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அரசு ஆணை எண் 1034 சி. டி., தேதி 22-7-1976-ல் திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ரா. மார்க்கபந்து : நில அளவு பற்றி தமிழகம் பூராவும் அரசாங்கமே முயற்சி எடுத்து எல்லா நிலங்களையும் சப்டிவிஷன்களாகச் செய்ய முன்வருமா ? 'மினிமம் ஸ்மால் ஹோல்டிங்ஸ்' என்பதை அடிப்படையாக வைத்து சர்வே செய்ய அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தமிழகத்தைப் பொறுத்தவரை சிறு நிலச்சுவான்தார்கள்தான் ஆயிரக்கணக்கில் லட்சக்கணக்கில் இருக்கிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட பட்டாதாரர்கள் இருக்கிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் பணியை அரசு செய்ய வேண்டுமென்றால் 56 லட்சம் ரூபாய் அதிகமாகிறது. மாநிலம் பூராவும் அரசே செய்ய வேண்டுமென்றால் அதிகமாகச் செலவு செய்ய வேண்டியிருக்கும். இருப்பினும் பட்டாக்களை கூட்டுப் பட்டாவில் இருந்து மாற்றி தனிப் பட்டாவாக ஆக்க வேண்டுமென்ற இந்தத் திட்டத்தைச் செய்ய அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஒ. சுப்பிரமணியன் : மாநிலம் பூராவும் இது அமல்படுத்தப்பட வேண்டும், ஆகையால் தற்போது இராமநாதபுரத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் பரிட்சார்த்தமாகச் செய்து பார்த்து



அதன் மூலம் கிடைக்கக்கூடிய அனுபவத்தை மாநிலம் முழுவதும் விஸ்தரிக்கலாமே. ஆகவே, வசூலித்த தொகையைத் திருப்பிக் கொடுக்கும் யோசனையைக் கைவிட்டு உடனடியாக இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்த வேலையைத் துவங்குவார்களா ?

(முற்பகல் 9-20.)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் மட்டுமல்ல, மற்ற மாவட்டத்துக்காரர்கள் எங்களுக்கு ஏன் செய்யவில்லை என்று கேட்பார்கள் என்ற காரணத்தால் முந்தைய அரசு இந்தத் திட்டத்தை கைவிட்டிருக்கிறது என்று கருதுகிறேன். இப்போது எல்லா இடங்களிலும் செய்யலாமா என்ற முறையிலே சில திட்டங்களைப் பற்றி அரசு ஆலோசித்துக் கொண்டு இருக்கிறது.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, நம்முடைய அரசு சிறிய விவசாயிகளுக்கு ஏராளமான வசதிகளைச் செய்யப் போவதாக அறிவித்திருக்கிறது. ஆனால் சிறிய விவசாயிகள் என்ற பட்டியலில் பல குளறுபடிகள் ஏற்பட்டிருக்கின்றன. சிறிய விவசாயிகளின்மீது தனி அக்கறை செலுத்தி இந்த அரசு அவர்களுக்கு எல்லாம் உண்மையான பட்டா புத்தகத்தை வழங்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

## ராணிப்பேட்டை வட்டத்திலுள்ள 'ப்ரி ஹோல்ட்' கிராமங்கள்.

* வினா 5— திரு. துரை முருகன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) வடாற்காடு மாவட்டம், ராணிப்பேட்டை வட்டம், அவரைக்கரை, புளியங்கண், நவ்லாக் ஆகிய கிராமங்கள் ப்ரி ஹோல்ட் கிராமமாக உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அவற்றை ரெவின்யூ கிராமங்களாக மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) வடாற்காடு மாவட்டம், ராணிப்பேட்டை வட்டம், அவரைக்கரை, புளியங்கண் உள்ளிட்ட நவ்லாக் கிராமம் ப்ரி.ஹோல்ட் கிராமமாக உள்ளது.

(ஆ) அதனை ரயத்துவாரியாக மாற்றுவதற்கு அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. துரை முருகன்: தலைவர் அவர்களே, அவைகளையெல்லாம் ரெவின்யூ கிராமங்களாக மாற்றவேண்டுமென்று நீண்ட நெடுங் காலமாக அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் கேட்டு கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே அவர்கள் குடியிருக்கிறார்கள். அரசாங்கத்திடமிருந்து அவர்கள் எந்தவிதக் கடனும் பெறமுடியாது. சர்க்காருக்கு அவர்கள் எந்தவிதமான வட்டியும் கட்டுவது கிடையாது. ஆனால் தலைமுறை தலைமுறையாக அவர்கள் அங்கே இருந்து வருகிறார்கள். அந்தக் கிராமங்களை ரெவின்யூ கிராமங்களாக மாற்ற வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கிற தருணத்திலேதான் ஆட்சி கலைக்கப்பட்டது. இப்போது இந்த அரசு அதைச் செய்வதிலே ஆட்சேபணையில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். ஆனால் எப்போது தரப்படும்? அந்தத் தேதியை அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட நீண்ட நெடுங் காலம் என்பதைக் குறித்துச் சொல்ல வேண்டியதில்லை, அது எவ்வளவு காலம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களே அறிவார்கள். இந்தியத் துணைக் கண்டம் விடுதலைப் பெற்ற பிறகு ஒரு ஆட்சி இருந்தது. அதற்குப் பிறகு ஒரு ஆட்சி இருந்தது, அதற்குப் பிறகு 6 ஆண்டுக்காலம் ஒரு ஆட்சி இருந்தது, அப்போது காத்திருந்தார்கள். அந்த 6 ஆண்டுக்கால ஆட்சியிலும் காத்திருந்தார்கள், இப்போது 6 ஆண்டுக்காலம் காத்திருக்க வேண்டாம், சிறிது காலம் காத்திருந்தால் போதும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## சாத்தனூர் அணைப்பகுதியில் நெல் கொள்முதல்.

* வினா 6—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) திருவண்ணாமலை ஒன்றியத்தைச் சேர்ந்த சாத்தனூர் அணை நீர்ப்பாசன பகுதிகளில் முதல் ரக விதைகள் பெற்ற விவசாயிகளிடமிருந்து மட்டுமே நெல் கொள்முதல் செய்யப்படுவதால் அரசு நிர்ணயித்துள்ள விலை விவசாயிக்கு கிடைப்பதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: (அ) வேளாண்மைத் துறையிலிருந்து, விதைநெல் பெற்ற விவசாயிகளிடமிருந்து, விதைக்காக நெல் அந்தத் துறையால் வாங்கப்படுகிறது. வெளிச் சந்தையில் நிலவும் விலைகளுக்கு மேலாக 10 முதல் 15 சதவிகிதம், சுத்தம் செய்தல், காயவைத்தல் முதலிய செலவுகளை ஈடு செய்ய, கூடுதலாகக் கொடுக்கப்படுகிறது.



தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் எந்த விவ
சாயி நெல் அளித்தாலும் அதை மோட்டா ரகத்திற்கு குவின்
டால் ரூ. 90 விலையிலும் நடுத்தரம் ரூ. 95-க்கும் 1-2-1978
முதல், நேரடிக் கொள்முதல் நிலையங்களில் வாங்கி வந்தது.
15-7-1978 முதல் நெல்வரத்து நின்று விட்டதால் நிலையங்கள்
மூடப்பட்டன. முதல் ரக நெல் விதைகள் பெற்ற விவசாயி
களிடம் மட்டும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நெல்
வாங்கியது என்பது சரியல்ல.

விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, 1-6-1978 முதல் வட ஆற்காடு மாவட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட விற்பனைக் கூடங்களில் நெல் வாங்கப்படுகிறது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. த. வேணுகோபால்: பேரவைத் தலைவர் அவர்களே, தரமான விதை நெல் வைத்திருக்கும் எல்லா விவசாயிகளிடமிருந்தும் நெல்லை வாங்குவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட உத்தேசம் எதுவும் இப்போது அரசிடம் இல்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது குறுவை அறுவடை துவங்கப்பட்டு எல்லா இடங்களிலும் நடந்து வருகிறது. இந்த நேரத்தில் விவசாயிகளிடமிருந்து நியாய விலையில் நெல் கொள்முதல் செய்வதற்கு நுகர்வோர் வாணிபக் கழகத்தின் மூலமாக கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, அரசுக்குத் தெரிந்த வரையில் இன்னும் குறுவை அறுவடை ஆரம்பமாகவில்லை.

## கோவை புதூரில் முன்னாள் இராணுவத்தினர்களுக்குக் கட்டப்பட்ட வீடுகள்.

* வினா 7—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) கோவை மாவட்ட முன்னாள் இராணுவத்தினர் நன்
நலச் சங்கம் (பதிவு எண் 55/67) 25-1-1978 அன்று கோவை
புதூரில் உள்ள முன்னாள் இராணுவத்தினர் புனர்வாழ்வு புன
ரமைப்பு சிறப்பு நிதியிலிருந்து கட்டப்பட்ட வீடுகளுக்கு வசூ
லிக்கும் வட்டியை ரத்து செய்யக் கோரி மனு அனுப்பினார்களா?

(ஆ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்த முடிவு யாது?

[1978 ஆகஸ்ட் 31

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: (அ) ஆம்.

(ஆ) முன்னாள் படை வீரர்களின் தொகுப்பு நிதியிலிருந்து வீட்டு வசதி வாரியம் ரூபாய் ஐந்தரை லட்சம் கடன் பெற்று வாடகை மற்றும் சொந்த குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 66 வீடுகள் கட்டி முன்னாள் இராணுவத்தினருக்கு குறைந்த வட்டி விகிதத்தில் ஒதுக்கப்பட்டது.

வீட்டு வசதி வாரியம் இந்தத் தொகுப்பு நிதிக்கு 5 சத விகிதம் வட்டி கொடுப்பதாலும், வீடு குடியிருப்பாளரிடமிருந்து வசூலிக்கப்படும் வட்டி 6 சதவிகிதம் தான் என்பதாலும், இந்த சங்கத்தின் கோரிக்கையை தொகுப்பு நிதியின் துணை நிலைக்குழு (Standing Sub-Committee) ஏற்றுக் கொள்ளவில்லை.

திரு. ஆ. நடராசன்: தலைவரவர்களே, முன்னாள் இராணுவத்தினர் தங்களுக்கு வேலையில்லாத காரணத்தினால், வருவாய் இல்லாமல் இருக்கிறார்கள். அந்தத் தொகையைக் கட்டுவதற்கு அவர்களுக்கு காலதாமதம் ஏற்பட்டால் அதற்கு அரசாங்கம் 9 சதவீதம் தண்டல் வரி, அதாவது பீனல் இண்டரஸ்ட் என்று வசூல் செய்கிறது. அந்த பீனல் இண்டரஸ்டையாவது அரசாங்கம் தள்ளி வைக்க முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, அப்படிப்பட்ட எண்ணம் எதுவும் இப்பொழுது அரசிடம் இல்லை. காரணம், இவற்றையெல்லாம் முடிவு செய்வது ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டிருக்கிற ஸ்டாண்டிங் சப்-கமிட்டி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, முன்னாள் இராணுவத்தினருக்கு அரசாங்கம் பல புதிய சலுகைகளைக் கொடுத்து அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்து வருகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் அரசு பணம் போட்டிருக்கிறது என்பதால் அவர்களிடத்திலிருந்து வீட்டிற்கு வாடகை வசூலிக்கப்பட்டதற்குப் பிறகு வட்டியையும் வசூலிப்பது அவசியம்தானா என்பதை அரசு பரிசீலிக்குமா? அவர்கள் முன்னாள் இராணுவத்தினர் என்கின்ற முறையில், அனுதாபத்தோடு பரிசீலித்து அந்த வட்டி வசூலிக்கப்படுவது நிறுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, வட்டியைக் குறைப்பதற்கோ அல்லது வட்டியில்லாமலே விதிவிலக்கு அளிப்பதற்கோ இப்பொழுது சாத்தியக் கூறுகள் இல்லை.



1978 ஆகஸ்ட் 31]

அருள்மிகு தாயுமானவர் மலைக் கோவிலுக்கு மின் இழுவை

* வினா 8.— திரு. கூ. ச. முருகேசன்: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுற்றுலாத்துறை வளர்ச்சி கருதி அருள்மிகு தாயுமானவர் மலைக் கோவிலுக்கு மின் இழுவை (Lift) போடும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வேலை துவங்கும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) அண்டு (ஆ) மின் இழுவை ரயில் போட இயலுமா, அதனால் பலன் ஏற்படுமா, என்பது பரிசீலனையில் உள்ளது.

திரு. கூ. ச. முருகேசன்: மாண்புமிகு தலைவரவர்களே. மாண்புமிகு அமைச்சரவர்கள் இது பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். அந்த மலைக்கோட்டை, திருச்சியின் மத்தியிலே இருப்பதால், வெளி மாநிலங்களிலிருந்து அங்கே சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருவதாலும், அங்கே மேலே ஏறுவதற்கு உடல் நலம் குன்றியவர் உடல் ஊனமுற்றவர்கள், அதே போல உடல் நலம் குன்றியவர்கள் ஆகியவர்களால் முடியாமல் இருப்பதால் அதற்கு உடனடியாக மின் இழுவை பொருத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, உடல் ஊனமுற்றவர்கள் அல்லது உடல் நலம் குன்றியவர்கள் சுற்றுலாப் பயணிகளாக வர மாட்டார்கள். உடல் நலத்துடன், இருப்பவர்கள்தான் அநேகமாக வருவார்கள். இருந்தாலும் அதற்குப் பெரிய அளவிலே செலவாகும் என்று கருதப்படுவதால் அது பலன் அளிக்குமா அல்லது இலாபம் அளிக்குமா என்பது பரிசீலிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, இந்த இழுவை இரயில் போடுவது பற்றி யோசிக்கப்படுகிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இதைப் போடுவதா, வேண்டாமா என்பதை எதன் அடிப்படையில் நிர்ணயிக்கிறார்கள்? அப்படிப் பார்க்கிற பொழுது, வடாற்காடு மாவட்டத்தில் சோளிங்கரில் நரசிம்மஸ்வாமி கோயில் இருக்கிறது. அது உயரமான மலை. அதற்கும் இழுவை இரயில் போட வேண்டுமென்ற திட்டம் இருக்கிறதா? ஆகவே, அப்படி நிர்ணயிக்கிறபொழுது இந்த சோளிங்கர் மலையும் வருகிறதா? அதற்கும் திட்டம் போடப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, கேள்வி திருச்சி மலைக் கோவிலைப் பற்றியது. தமிழகத்திலே மலைகளின் மேல் கோயில்கள் ஏராளமாக இருக்கின்றன. ஆகவே, தனிக் கேள்வி போட்டால் அதற்கான பதிலை அளிக்கலாம்.

திரு. துரை முருகன் : என்னுடைய கேள்வியில் முதல் பகுதியில் எதன் அடிப்டையில் இதைப்போடுவதா வேண்டாமா என்று யோசிக்கப்படுகிறது என்று கேட்டேன். அதைத் தொடர்ந்து நான் கேட்டது போனஸ் மாதிரி.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே அதோடு நிறுத்தியிருந்தால் பதில் தரவும் சாதகமாக இருந்திருக்கும். அடிப்படை என்பது, அதற்கான செலவு, அந்தச் செலவைச் செய்வதன் மூலம் என்ன இலாபம் அல்லது பலன் என்ற அடிப்படையிலேதான் யோசிக்கப்படுகிறது. முதலிலே போட்ட திட்டத்தில், சுமார், 5,88,500 ரூபாய் வேண்டுமென்று கணக்கிட்டிருக்கிறார்கள். இதற்குப் பிறகு விஞ்ச் அல்லது லிப்ட் போட முடியாது என்ற கருத்து பரிசீலிக்கப்பட்டு, "ரோப் வே" போடுவது என்றால் 12 இலட்சம் ரூபாய்க்கு மேல் செலவாகும் என்று மதிப்பிடப்படுகிறது. இவ்வளவு செலவிடப்பட்டால் இதனால் பலன் ஏற்படுமா என்பதுதான் பரிசீலனைக்கு அடிப்படை.

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவர் அவர்களே, இலாபத்தை மட்டும் மனதில் கொள்ளாமல் திட்டத்தின் அவசியம் கருதி அதை இந்த அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, முதலில் சொன்ன பதிலிலேயே தெரிவித்திருக்கின்றேன். இலாபம் மாத்திரம் அல்ல, பலனும் கருத்தில் எடுத்துக் கொள்ளப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இ. தமிழரசன் : தலைவரவர்களே, அரசு இலாப நஷ்டக் கண்ணோட்டத்தோடு பார்ப்பதால், தனியார் துறையில் யாராவது இதற்கு முன்வந்தால் அவர்கள் இதை நடத்துவதற்கு முன் வருவார்களேயானால் அரசு அதற்கான அனுமதியை வழங்குமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரிந்த தனியார் யாராவது அப்படி முன் வருகிறார்களா என்று அரசுக்குத் தெரிவிப்பார்களேயானால் அதை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



காசி விசுவநாதர் கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள்.

* வினா 9— திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, மேற்கு மாம்பலம் பகுதியிலுள்ள காசிவிசுவநாதர் கோயிலுக்குச் சொந்தமான சுமார் 3 கிரவுண்டு நிலத்தை சில தனி நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து உள்ளது அரசுக்குத் தெரியுமா —

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

(முற்பகல் 9-30.)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) புறம்போக்கு நிலம் எனக் கருதி ஆக்கிரமித்தனர். பிறகு ஆலய நிலம் என அறிந்த பின் அவர்களே இடத்தைக் காலி செய்து விட்டதால் மேல் நடவடிக்கை மேற்கொள்ள இடம் இல்லை.

திரு. து. புருஷோத்தமன் : தலைவரவர்களே, * * *

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, கேள்வி நேரங்களில் குற்றச்சாட்டு அல்லது இம்புட்டேஷன்ஸ் அல்லது இன்ஃபரன்ஸ் கூடாது என்பது நம்முடைய விதிகளில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய துணைக் கேள்வியை உற்றுக் கவனித்தால் அதில் சொல்லக் கூடாத வார்த்தைகளையெல்லாம் சேர்த்துச் சொல்லியிருக்கிறார். இந்தக் கேள்வி நேரம் தகவலை அறியவும் அரசாங்கத்தின் விளக்கங்களை அறியவும் பயன்படுத்தப்பட்டால் நல்லது என்று சொல்ல விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : பாயின்ட் ஆப் ஆர்டர்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் புருஷோத்தமனைப் பற்றி சொன்ன பொழுது திரு. ரகுமான்கானுக்கு இடமே இல்லை. தயவு செய்து அமருங்கள். அமைச்சர் பேசியது திரு. புருஷோத்தமனைப்பற்றி. தாங்கள் எழுந்திருக்க வேண்டிய அவசியமேயில்லை.

THIRU A. RAHMAN KHAN : The contention is wrong. That is why I am raising a point of order.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்குச் சம்பந்தமானது அல்ல. திரு. ரகுமான்கான், பற்றி இங்கே பிரச்னையே இல்லை.

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1978 ஆகஸ்ட் 31

மாண்புமிகு உறுப்பினர் திரு. புருஷோத்தமன் துணைக் கேள்வி போடும்போது இன்னும் காலி செய்யவில்லை, காலிசெய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதுதான் கேள்வியாக இருக்க வேண்டுமே தவிர, அதிலே பெரிய உரை நிகழ்த்தி, குற்றச்சாட்டுக்களைப் புகுத்துவது கேள்வி நேரத்திற்கு உகந்ததல்ல.

திரு. ப. பொன்னுரங்கம் : பாயின்ட் ஆப் ஆர்டர்.

MR. SPEAKER : There is no point of order during question hour. The hon. Member will please resume his seat.

அமைச்சர் எழுப்பியதற்கு நான் பதில் சொல்வதற்கு முன்னுலே தாங்கள் பேச எழுந்திருந்தால் எப்படி? தாங்கள் * * * என்றெல்லாம் பேசினீர்கள். திரு. புருஷோத்தமனை நான் நேரடியாக ஒன்றும் சொல்லவில்லை. எப்படிப் பேசவேண்டும், துணைக் கேள்விகள் எப்படி எழுப்ப வேண்டுமென்று சொல்வதும் உறுப்பினர்கள் தவறுகள் செய்தால் அதைச் சுட்டிக்காட்டுவதும் என்னுடைய கடமை. நீங்கள் எதையும் பேசிவிடலாம் என்றால், அதை அனுமதிக்க நான் இங்கே உட்கார்ந்திருக்கவில்லை. குறிப்பிட்டு, குற்றம் சாட்டுவது போல், * * * என்ற வார்த்தையை உபயோகிப்பது சரியல்ல. அவர் அவ்வாறு கேட்டதையெல்லாம் நீக்கவேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

திரு. து. புருஷோத்தமன் : *** இருப்பதை ...... (கூச்சல் குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து, உறுப்பினர் என்னிடம், நான் எப்படித் தீர்ப்பு கொடுக்க வேண்டுமென்று கூறுவது மரபல்ல. நான் சொல்வதை ஏற்றுக் கொண்டு அதற்கேற்றவாறு துணைக் கேள்வி போடுவது தான் மரபு.

திரு. துரை முத்துசாமி : பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் எழுப்பியதற்கு அந்த உறுப்பினர்தான் பதில் சொல்ல வேண்டும். நீங்கள் சொல்லக் கூடாது.

திரு. துரை முத்துசாமி : நான் அதைப்பற்றிக் கேட்கவில்லை. உறுப்பினர் சொன்னதற்கும், அமைச்சர் சொன்னதற்கும் நீங்கள் கொடுத்த ரூலிங்குக்கும் ஒரு பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் கேட்கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள், இங்கே, இல்லாத ஒன்றைச் சொல்லக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1978 ஆகஸ்ட் 31]

அமைச்சர் சொன்னதற்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதற்கும் மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன. இதிலே எது உண்மை என்று அறிவதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் தீர்ப்பளிக்க வேண்டும். அமைச்சர் இல்லையென்கிறார், உறுப்பினர் இருக்கிறது என்கிறார். ஆகவே எது உண்மை? உறுப்பினர் சொல்வதா? அமைச்சர் சொல்வதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக் கேள்விகள் மறுபடியும் அமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற பதிலைப் பொறுத்தது. அவருக்குக் கிடைத்திருக்கிற தகவல்படி இருக்கிறது அல்லது இல்லை என்பதைப் பொறுத்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்கின்ற கடமை இருக்கிறதே தவிர, இங்கேயே பிரச்சினையை முடிவெடுத்து உறுப்பினர்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. உறுப்பினர் பேசிய வார்த்தைகளைப் பயன்படுத்துவது எப்படி என்பதை நான் சொல்லுகின்றேனே தவிர, இந்தப் பிரச்சினையின் மீது முடிவெடுத்து இங்கேயே அவைக்குத் தெரிவிக்கவேண்டும் என்று அவசரப்பட்டு எடுக்கின்ற விஷயம் அல்ல. அது அவர்களின் நிலைமையைப் பொறுத்தது. சொல்வது அவர், கேட்பது இவர், இதற்கிடையிலே நடவடிக்கை எடுத்து அரசு அதைப் பற்றி ஆராயவோ, உள்ளே நுழையவோ, அவசியம் இல்லை. அவர் பேசிய வார்த்தைகள் சரியில்லை. புருஷோத்தமன் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் : ரூலிங் மீது ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த மன்றத்தின் மரபுப்படி ரூலிங் மீது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் புருஷோத்தமன் போட்ட துணைக் கேள்வியை நீங்கள் முழுவதும் நீக்க வேண்டும் என்று போட்ட உத்தரவை ஆட்சேபிக்க முன் வரவில்லை. உத்தரவை மறுபரிசீலனை செய்து, தாங்கள் சொல்வது போல குற்றச்சாட்டுள்ள பகுதியை மாத்திரம் நீக்கிவிட்டு துணைக் கேள்வியை அனுமதிக்கக் கேட்டுக் கொள்கிறேன். அல்லது அவருக்கு இன்னொரு வாய்ப்பு கொடுத்து துணைக்கேள்வியை கேட்க அனுமதிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் நான் சொல்கிறேன். மறுபடியும் துணைக் கேள்வி கேட்கலாம் என்று சொல்லியிருக்கிறேன். சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

[1978 ஆகஸ்ட் 31

திரு. து. புருஷோத்தமன் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது, அது அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலம் என்று கருதி ஆளுங்கட்சியினர் ஆக்கிரமித்தார்கள் என்று ஒத்துக் கொண்டார்கள்; அதற்காக நன்றி. ஆனால் அந்த நிலம் ஒரு கோவிலுக்குச் சொந்தமான— புராதனமான கோவிலுக்குச் சொந்தமான நிலம் என்று ஊருக்கெல்லாம் தெரியும்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் காலிசெய்தாகி விட்டது என்று சொன்னார். நீங்கள் அதை இல்லை என்று மறுக்கிறீர்களா ? அது கோவில் நிலம் என்ற வரலாறு எல்லாம் தேவையில்லை. துணைக்கேள்வியைச் சுருக்கமாகப் போடுங்கள்.

திரு. து. புருஷோத்தமன் : அமைச்சர் சொன்னதற்கு நன்றி தெரிவிக்கவேண்டாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நன்றி சொல்லிவிட்டீர்கள். உட்காருங்கள்.

## Amplifiers in temples

* Q. 10—Thiru S. M. VASAN : Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to State :

(a) Whether the Government are aware that amplifiers fixed at temples are a source of disturbance to worshippers, and

so, the action taken thereon ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) திருக்கோயில் நிர்வாகத்தினர் பக்தர்களுக்கு இடையூறு ஏற்படா வண்ணம் ஒலியைக் குறைவாக வைத்து ஒலிபெருக்கியை பயன்படுத்துகிறார்கள். பொது மக்களிடம் இருந்தோ அல்லது பக்கதர்களிடமிருந்தோ புகார்கள் ஏதும் அறநிலையத் துறைக்கு வரவில்லை.

(ஆ) எனவே இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சீ. மு. வாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். பழனி முருகன் கோவிலில், ஐயப்பசுவாமி, வெங்கடாசலபதி போன்ற கடவுளர்களின் பாடல்களைப் போடுகிறார்கள். இதனால் அங்கு வருகின்ற பக்தர்கள் இந்தக் கோவிலுக்கு வருவதைவிட அந்தக் கோவில்களுக்குப் போயிருக்கக் கூடாதா என்ற சபலத்திற்கு ஆளாகின்றார்கள். அதே சமயத்தில் அந்தந்த ஆலயங்களில் உள்ள சமயத்தைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா ?



1978 ஆகஸ்ட் 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து கோவில்களில் பொருத்தப்பட்டுள்ள ஒலி பெருக்கிகள் வழிபட வருவோர்க்கு இடையூறாக இருப்பது என்பதை அரசு அறியுமா என்பது கேள்வி : அதைவிட்டு எந்தெந்தப் பாடல்களைப் போட வேண்டும், எந்தெந்தப் பாசுரங்களைப் போடுவது என்றப் பிரச்சினைக்கு இடம் இல்லை. இந்த ஒலிபெருக்கிகள் பொதுமக்களுக்கு இடையூறாக இருக்கின்றதா என்பதை ஒட்டிக் கேளுங்கள். எந்தப் பாசுரங்களைப் போடுவது என்பதெல்லாம் தேவையில்லை.

திரு. சி. மு. வாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி முருகன் கோவிலுக்கு வருகிற பக்தர்களின் மனதில் ஐயப்பன் பாடல்களும், வெங்கடாசலபதி பாடல்களும் பாடும்போது அவர்களுடைய பக்தியின் தன்மைக்கு மாறான கருத்துக் கொண்டு வருகிறது. எனவே அந்தந்தக் கோவில்களில் அந்தந்தச் சாமிகளின் பாடல்களைப் பாடவேண்டும் என்று அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு கே. கந்தசாமி : இதை எப்படி நீங்கள் அனுமதிக்கிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கந்தசாமி தயவுசெய்து உட்காருங்கள். நான் சொல்வதைக் கேளுங்கள். அவர் பேசும்போது எந்த ஒரு மதத்தையாவது அல்லது மதத்தினரின் மனதைப் புண்படும்படியாகப் பேசினார் என்பதைச் சுட்டிக்காட்டினால் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன். அவர் யாரையேனும் குறிப்பிட்டுக் களங்கப்படுத்திப் பேசினார் என்பதை குறிப்பிட்டுச் சொன்னால் நடவடிக்கை எடுக்கத்தயாராக இருக்கிறேன். அவர் எந்தெந்தக் கோவில்களில் எந்தெந்தப் பாசுரங்களை போட வேண்டும் என்று அறிவுரை சொல்லிக் கொண்டிருக்கிறார். அவர் யாரையும் இழித்துச் சொல்லவில்லை. (திரு கே. கந்தசாமி நின்று கொண்டேயிருந்தார்). நீங்கள் தயவுசெய்து அமருங்கள். இப்படி அவசரப்பட்டால் என்ன பண்ணுவது ? அவர் அந்தக் கோவிலுக்குச் சம்பந்தமில்லாத மற்ற பாசுரங்கள் அந்தக் கோவிலில் தேவையில்லை என்று சொல்லுகிறார். இது எப்படி யார் மனதைப் புண்படுத்தும் ?

(முற்பகல் 9—40)

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவரவர்களே, இந்து அறநிலைய பாதுகாப்புத் துறை பக்தர்கள் மகிழும் வகையில் பாடல்களைப் போட்டு வருகிறது. பழனி கோவிலுக்கு வந்து ஐயப்பன் பாட்டு போடக் கூடாது என்று சொல்வது, அது முருக பக்தர்களின் மனதை திசை திருப்பும் என்று சொல்வது, பக்தர்களின் பக்தியைக் குறைத்துப் பேசுவது போலவும், கிண்டல் செய்வது போலவும் இருக்கிறது. இதை அனுமதிக்கக் கூடாது.

[1978 ஆகஸ்ட் 31

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கந்தசாமி அவர்களைப் போல் திரு. வாசன் அவர்களும் இந்து மதத்தைச் சேர்ந்தவர் தான். அவர்கள் அந்த மதத்தில் அக்கறை கொண்டு தான் இந்தக் கேள்வியைக் கேட்கிறார்கள். பழனி கோவிலில் முருகன் பாட்டுக்களை மட்டும் போடக்கூடாதா என்று தான் கேட்கிறார்கள். நீங்கள் நினைப்பது போல் இல்லை. உட்காருங்கள்.

திரு கே. கந்தசாமி : அவருக்கு இருக்கும் அக்கறையைப் பாராட்டுகிறேன். அவர் இந்துக்களை பழிப்பது, கேலிசெய்வது கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த அளவிற்கு இல்லை. திரு. வாசன், நீங்கள் கேள்வி கேளுங்கள்.

திரு சி. மு. வாசன் : தலைவரவர்களே, நான் முருகன் கோவிலில் முருகன் பாட்டுக்களைப் போட வேண்டும் என்று தான் கேட்டேன். உறுப்பினர் திரு. கந்தசாமி, சொல்வது போல், கருப்பண்ணசாமி கோவிலில் கடா வெட்டி பொங்கல் இடுகின்றனர், அதையே வந்து முருகன் கோவிலில் செய்யவேண்டும் என்று நான் சொல்லவில்லை. அந்தந்தக் கோவில்களில் அந்தந்த கடவுள் குறித்த பக்திப் பாடல்கள் ஒலிபெருக்க வேண்டும் என்று தான் கேட்டேன். பக்தர்களின் பக்தியைக் குறைக்கும் விதத்தில் நான் கேட்கவில்லை என்பதைக் கூற விரும்புகிறேன். (திரு கே. கந்தசாமி எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கந்தசாமி, உட்காருங்கள். அமைச்சர் கூறுகிற பதிலைக் கேட்டுவிட்டு பின்னர் பேசுங்கள்.

திரு கே. கந்தசாமி : என்னுடைய கேள்வியைக் கேட்டுவிட்டு அமைச்சர் பதில் சொன்னால் நலம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய கேள்வியே இல்லை இது. நீங்கள் குறுக்கிட்டுப் பேசினீர்கள். கேள்வி போடவில்லை.

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, கேள்வி எழுப்பிய மாண்புமிகு உறுப்பினர் வாசன் அவர்களின் கேள்விக்கும், அதைத் தொடர்ந்து எழுப்பப்பட இருக்கும் கேள்விகளுக்கும் ஒரே பதில், இந்து சமய அறநிலையத் துறை இந்து சமயத்தைச் சேர்ந்த பக்தர்களின் மனம் புண்படாதவாறு அவர்களுடைய மனம் ஏற்றுக்கொள்கிறவாறு, அவர்களுடைய உள்ளார்ந்த பக்திக்கு உகந்தவாறு இவ்விஷயத்தில் மிகுந்த கவனமாக நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.



1978 ஆகஸ்ட் 31]

திரு ரா. உமாநாத் : தலைவரவர்களே, அரசியல் சட்ட திட்டத்தில ''ஈக்குவாலிடி பிஃபோர் லா'— எல்லா பிரஜைகளையும் சமமாக பாவிக்க வேண்டும் என்று இருக்கிறபோது, இத்தனை மணி வரையில் தான் ஒலிபெருக்கிகள் வைத்துக்கொள்ளலாம் என்று பிரஜைகளுக்கு மட்டும் கட்டுப்பாடு வைத்திருக்கிறபோது, இந்தக் கோவில்களுக்கு மட்டும் இந்தக் கட்டுப்பாடு கிடையாதா? நான் சீரியஸ்ஸாகக் கேட்கிறேன். இரவு 2½ மணிக்கு 3 மணிக்கு ஒலிபெருக்கி போட ஆரம்பிக்கிறார்கள். அது ஆயிரக்கணக்கான பிரஜைகளின் தூக்கத்தைக் கெடுக்கிறது. ஆகவே, நான் உண்மையிலேயே சீரியஸ்ஸாகச் சொல்கிறேன், எனக்கு பிரஜை என்ற முறையில் மறுக்கப்படுகிற உரிமை சாமிக்கு மட்டும் கொடுக்கப்படுகிறதே, அது ஏன்? நம்முடைய அரசியல் சட்டத்தில் ''டிகிளாஸஸ் ஆப் சிடிஸன்'' என்ற நோக்கம் சொல்லப்படவில்லை. ஆகவே, இந்தப் பாகுபாட்டை ரத்து செய்வதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஆர்.எம். வீரப்பன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உமாநாத் அவர்களின் கேள்விக்கு அறநிலையத் துறை முன்பே அதற்கான விதிமுறைகளை வகுத்து வைத்து இருக்கிறது. பொதுமக்களுக்கு எந்த அளவிற்கு அனுமதி அளிக்கப்படுகிறதோ அதே அளவிற்குத்தான் பக்தர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. காலை 9 மணி முதல் இரவு 10–30 மணி வரை ஒலி பரப்பலாம். ஒரே நேரத்தில் சேர்ந்தாற்போல் 3 மணி நேரத்திற்கு மேல் பயன்படுத்தக்கூடாது. ஏதாவது சிறப்பு நாட்களில் சிறப்பு அனுமதி பெற்றால் ஒழிய இந்த ஒலி பரப்புகள் விதிக்கப்பட்டுள்ள நேரத்திற்கு அப்பால் அனுமதிக்கப் படுவது இல்லை. ஆகவே இந்திய சட்டத்திற்கு முன்னால் பக்தர்களும் ஒன்று தான், பக்தி இல்லாதவர்களின் நிலையும் ஒன்று தான் என்பதை இந்த அரசின் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## திருச்சி மத்திய சிறைச்சாலையிலுள்ள நூலகம்.

*வினா 11— திரு என். கிட்டப்பா : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

திருச்சி மத்திய சிறைச்சாலையிலுள்ள நூலகம் தற்போது செயல்படவில்லை என்பது உண்மையா?

THE HON. THIRU. K. NARAYANASWAMY MUDALIYAR : It is not true to say that the library in the Central Prison, Thiruchirappalli is not functioning at present.

[1978 ஆகஸ்ட் 31

திரு என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் வேலை செய்யவில்லை என்று சொல்கிறார்களா! (சிரிப்பு). தலைவரவர்களே, திருச்சி மத்திய சிறைச்சாலைக்கு அமைச்சரவர்கள் சமீபத்தில் சென்றிருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். அங்கே செயல்பட்டு வந்த நூலகம் தற்போது செயல்படவில்லை என்பது உண்மை. எனவே திருச்சி மத்திய சிறைச்சாலையிலே உள்ள நூலகத்தை இனிமேலாவது சிறப்பாக இயங்கச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. THIRU. K. NARAYANASWAMY MUDALIYAR : Already the Library has been functioning very well. Books are being issued to prisoners and the relevant registers are being maintained and, as such, there is no need for fresh functioning of this Library.

கோத்தகிரியில் சப் கோர்ட் அமைத்தல்.

*வினா 12.— திரு கே. உச்சி : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில் சப்கோர்ட் ஒன்று நிறுவும் திட்டம் ஏதும் உண்டா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது நிறுவப்படும் ?

THE HON. THIRU. K. NARAYANASWAMY MUDALIYAR :

(a) No, Sir,.

(b) Does not arise.

திரு கே. உச்சி : தலைவரவர்களே, கோத்தகிரி பகுதியிலுள்ள மக்கள் சுமார் 30 மைல் தூரம் வந்து—பெரும்பகுதி நடக்க வேண்டியிருக்கிறது— குன்னூர் சப்கோர்ட்டுக்கு வரவேண்டியிருக்கிறது. அங்கே ஏராளமான கிராமங்கள் இருப்பதால் கோத்தகிரியில் ஒரு சப்கோர்ட் அமைக்க முக்கியத்துவம் கொடுத்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

THE HON. THIRU. K. NARAYANASWAMY MUDALIYAR : This Government have all sympathies for the difficulties enunciated by the hon. Member, but there is, what is called, the Committee on Jurisdiction of Courts which had gone into the question of realignment of jurisdiction of various civil and criminal courts. This Committee of the High Court has not made any recommendation for the constitution of a Sub-Court at Kotagiri. The hon. Member is requested to make representations to the High Court.



1978 ஆகஸ்ட் 31]

மாயூரம் நகரில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம்.

*வினா 13.— திரு என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாயூரம் நகரில் பாதாள சாக்கடை அமைத்திடும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : மாயவரம் நகராட்சி புதை சாக்கடை திட்டத்தின் ஆய்வு களப்பணிகள் முடிவடைந்து, திட்ட உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

திரு என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாயூரம் நகராட்சியில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டத்திற்கு மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு? அதோடு, பாதாள சாக்கடைத் திட்டம் எப்போது செயல்படுத்தப்பட இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மதிப்பீட்டுத் தொகை ரூ. 235.57 இலட்சம். அரசின் ஆய்வு முடிந்த பிறகு வேலை தொடங்கப்படும்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த மதிப்பீட்டுத் தொகையில் மாயூரம் நகராட்சியிடம் பங்கு தொகை ஏதாவது கேட்கப்பட்டிருக்கிறதா? அப்படி இருந்தால் மாயூரம் நகராட்சி என்ன பதில் கொடுத்துள்ளது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இதுமாதிரியான திட்டங்களுக்கு எல். ஐ. சி. யிலிருந்து இரண்டு பங்கும் அரசிடமிருந்து ஒரு பங்கும் பணம் கொடுக்கப்படுகிறது. அந்தப் பணத்தை 30 ஆண்டுக் காலத்தில் திருப்பித் தரவேண்டுமென்று சொல்லி, அதை அந்த நகராட்சி ஏற்றுக் கொண்ட பிறகு தான் திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன; அரசும் அனுமதி தரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேட்டவலம் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கல்.

* வினா 14— திரு. கோ. ரகோத்தமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் வேட்டவலம் பேரூராட்சிக்கு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குடிநீர் வழங்க திட்டம் வகுத்து இன்னும் முடிவடையாமல் உள்ளதா?

(ஆ) மணம்பூண்டி, தேவனூர், நாயனூர், வீரப்பாண்டி, ஒட்டம்பட்டு, அருணாபுரம், ஆதிச்சனூர், வைப்பூர் ஆகிய இடைப்பட்ட பஞ்சாயத்துக்களுக்கும் இதனை விஸ்தரிக்கும் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) ஆம்.
(ஆ) தற்சமயம் திட்டம் எதுவுமில்லை.

திரு. கோ. ரகோத்தமன் : தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டம், வேட்டவலம் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கல் வடிகால் வாரியத்தின் மூலம் பல இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் வழங்க திட்டம் தீட்டப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும் இன்னும் திட்டம் முடிவுறாமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா? அது எப்போது முடிவடையும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, டிசம்பர் 1978-க்குள் இத் திட்டம் முடியும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

(முற்பகல் 9-50)

திரு. கோ. ரகோத்தமன் : பேரவைத் தலைவரவர்களே, வேட்டவலம் பேரூராட்சிக்குச் செல்லும் வழியில் மணம்பூண்டி. தேவனூர், நாயனூர், வீரப்பாண்டி, ஒட்டம்பட்டு, அருணாபுரம், ஆதிச்சனூர், வைப்பூர் ஆகிய இடைப்பட்ட பஞ்சாயத்துக்கள் இருப்பதால் அந்தப் பஞ்சாயத்துக்களுக்கும் இந்தத் திட்டத்தை விஸ்தரிக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, வேட்டவலம் குடிநீர் திட்டத்தில் மணம்பூண்டி, தேவனூர் நாயனூர், வீரப்பாண்டி, வைப்பூர் ஆகிய ஊர்களுக்கு குடிநீர் வழங்க வழிவகை செய்கின்ற வகையில் திட்டம் எதுவும் அமலில் இல்லை. ஒட்டம்பட்டு, அருணாபுரம், ஆதிச்சனூர் ஆகிய பஞ்சாயத்துக்களுக்கு குடிநீர் அமைக்க வழிவகை எதுவும் செய்யப் படவில்லை.

## மண்ணான் வகுப்பினர்.

* வினா 15.—திரு. க. அரங்கசாமி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) 20—9—1976-ல் மத்திய அரசின் சட்டம், நீதித் துறை "மண்ணான்" என்ற பிரிவினரை மலைசாதியினர் பட்டியலில் அறிவித்துள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் இந்த அறிவிப்பு மாநிலத்திற்கு வரும் கல்வி ஆண்டிலிருந்து அமுல்படுத்தப்படுமா ?



மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) "மண்ணான்" என்ற பிரிவினரை மலைசாதியினர் பட்டியலில் மத்திய அரசு அறிவித்துள்ளதை அரசு அறியும்.

(ஆ) 20—9—76 அன்று இந்திய அரசின் சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்ட 1976-ம் ஆண்டின் தாழ்த்தப் பட்டோர் பழங்குடியினர் ஆணைச் (திருத்தம்) சட்டம் 27—7—1977 முதல் செயல் முறைக்கு வந்துள்ளது.

## திருச்சியில் அரிசனங்களுக்கு வீடுகள்

* வினா 16—திரு. சி. மாணிக்கம் : மாண்புமிகு அரிசனநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சியில் அதிகமாக வசிக்கும் அரிசன மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அந்தத் திட்டம் எப்போது முடியும் ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) அரிசனங்களுக்குப் பொதுவாக கிராமப்புறங்களில் குறிப்பாக ஏற்கனவே நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு வீட்டு மனைகள் உடனடியாகக் கிடைக்கும் இடங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. திருச்சியில் அரிசனங்களுக்கு வீடுகள் கட்ட திட்டம் தற்போதைக்கு ஏதுமில்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. சி. மாணிக்கம் : தலைவரவர்களே, திருச்சியில் பல்வேறு தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் வீட்டுவசதியின்றி அவ்வப்போது பல தொல்லைகளுக்கு ஆட்படுகிறார்கள். இது ஒரு நீண்டகாலப் பிரச்சனையாக உள்ளது. ஆகவே அரசு விரைந்து கவனித்து இதற்கொரு பரிகாரம் காணுமா என்பதை அரிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்தத் துறை கிராமப்புறங்களிலுள்ள மக்களுக்குந்தான் வீடுகட்டித் தரும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. நகர்ப் புற பகுதியில் உள்ளவர்களுக்கு குடிசைமாற்று வாரியம் மற்றும் வீட்டு வசதி வாரியம் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டங்களை செயல் படுத்தி வருகின்றன.

திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவரவர்களே, அரிசனங்களுக்கு வீடுகட்டிக் கொடுக்கின்ற திட்டம் அரிசன நல வீட்டுவசதி வாரியத்தின் சார்பிலே கட்டித் தரப்படும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். திருச்சியைப் பற்றி

நண்பர் திரு. மாணிக்கம் அவர்கள் கேட்டார்கள். பொதுவாகவே இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு இதுவரை எத்தனை வீடுகள் அரிசனங்களுக்கென்று கட்டித் தரப்பட்டுள்ளது என்ற விவரத்தை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

<u>மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :</u> தலைவரவர்களே, இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு முதல் கட்டமாக 5 ஆயிரம் வீடுகள் கட்ட ஆணையிட்டு இதுவரை கிட்டதட்ட 2 ஆயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. மீதி வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

<u>திரு. ரா. உமாநாத் :</u> தலைவரவர்களே, நகரில் வீடுகள் கட்டிக் கொடுப்பது வேறு துறை என்று அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். வீடு கட்டிக் கொடுப்பது எந்தத் துறையாக இருந்தாலும் பிரச்சினையை நான் நோக்கும் போது அரிசனங்கள் வீட்டு வசதி இல்லாமல் அவதிப்படுகிருர்கள். இவர்கள் காவிரி ஆற்றின் கரையோரங்களில் வசிக்கிருர்கள். அங்கே நோய்வாய்ப்பட்டு பெரும் அவதிக்கு ஆளாகிருர்கள். ஒவ்வொரு வருஷமும் மழை பெய்யும்போது காவிரியில் வெள்ளம் ஏற்படும் போது அவர்கள் வேறு வேறு இடங்களுக்கு மாற வேண்டிய நிலை இருக்கிறது. இப்படி அவர்கள் மிகுந்த அவதிக்குள்ளாகிருர்கள். ஆகவே இந்தப் பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையில் அவர்கள் எல்லோருக்கும் வீடுகளைக் கட்டிக் கொடுக்கின்ற வகையில் ஒரு க்ராஷ் ப்ரோகிராமுக்கு ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :</u> பரிசீலனை செய்யலாம்.

<u>திரு. ரா. மார்க்கபந்து :</u> வீடுகள் கட்டுவதற்கான சில இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஏற்கெனவே அதற்குண்டான டெண்டர்கள் எல்லாம் கோரப்பட்டு, கடைக்கால்கள் எல்லாம் தோண்டிவிட்டார்கள். பின்னல் அதை விட்டுவிட்டோம், இப்போது அவற்றை எடுத்துக்கொள்ள முடியாது என்று அரசாங்கத்திலிருந்து தெரிவித்திருக்கிருர்கள். எனது தொகுதியில்கூட ராமநாயன்குப்பம் என்ற இடத்தில் கடைக்கால் எல்லாம் போட்டுவிட்டார்கள். இப்போது அந்த ஊர் திட்டத்தில் சேரவில்லை என்று சொல்கிருர்கள். ஆகவே நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, ஏற்கனவே தெரிவித்து இன்னின்ன ஊர்களில் வீடுகள் கட்டப்படும் என்று சொல்லிவிட்டு இப்போது விடுபட்டிருக்கிற அந்த இடங்களுக்கு முன் உரிமை அளித்து வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுமா ?

<u>மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :</u> ஏற்கனவே இருந்த அரசு இதுபோன்ற நடவடிக்கைகள் எடுத்திருந்தாலும் அது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால் அரசு பரிசீலிக்கும்.



<u>திரு. எம். ஏ. லத்தீப் :</u> இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு ஐயாயிரம் வீடுகள் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்றும் அவற்றில் இரண்டாயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டதாகவும் அமைச்சர் அவர்கள் பதிலளித்தார்கள். இந்த ஐயாயிரம் வீடுகள் எங்கெங்கு கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது ? இப்போது கட்டப்பட்டிருக்கிற இரண்டாயிரம் வீடுகள் எங்கெங்கு கட்டப்பட்டிருக்கின்றன என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் தெரிபார்களா ? இன்னின்ன இடங்களில் என்று குறிக்கும்போது என்னென்ன அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

<u>மாண்புமிகு திரு. பெ. சௌந்திரபாண்டியன்:</u> தற்போது மாவட்டவாரியாக என்னிடத்தில் பட்டியல் இருக்கிறது. ஊர் வாரியாக தேவை என்ருல் தனிக் கேள்வி போட்டால் தர விரும்புகிறேன். என்ன அடிப்படை என்று கேட்டார்கள். என் பதிலிலேயே கூறியிருக்கிறேன். ஏற்கனவே நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு ஆளுக்கு மூன்று சென்ட் வழங்கப்பட்ட இடங்களுக்கு முன் உரிமை தருகிருேம். புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமிப்பு செய்திருந்து அதை பட்டாவாக மாற்றி கொடுக்கப்பட்ட அவர்களுக்கு அடுத்த உரிமை தருகிருேம். இதைத்தான் அரசு இப்போது கணக்கில் எடுத்துக் கொண்டிருக்கிறது. மாவட்ட வாரியாகக் கேட்கிருர்கள். அது நீண்ட பட்டியல். தலைவர் அவர்களே, தனியாக உறுப்பினர் அவர்களிடம் நான் கொடுத்துவிடுகிறேன்.

<u>திரு. துரை முத்துசாமி :</u> தனியாகக் கொடுக்கிறேன் என்று சொல்லிவிட்டால் போதாது. எங்களுக்கும் தெரிய வேண்டும் . . . . . . . . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> என் அனுமதி இல்லாமல் கேட்கக் கூடாது. நான் அனுமதிக்க முடியாது. அமருங்கள். இந்தப் பிரச்னையில் அமைச்சர் அவர்கள் இஷ்டப்பட்டால் சொல்லலாம் அவர்களை வற்புறுத்தக் கூடாது.

<u>திரு. துரை முத்துசாமி :</u> பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன் கேட்க உரிமை இருக்கிறது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நீங்கள் கேள்வி நேரத்தை நீட்டிக்க விரும்புகிறீர்களா அல்லது நேரத்தைப் பாதுகாக்க விரும்புகிறீர்களா ? பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன், பாயிண்ட் ஆப் க்ளாரிபிக்கேஷன், பாயிண்ட் ஆப் ஆர்டர் இவற்றை உறுப்பினர்கள் எப்போதும் எழுப்பலாம் என்றநிலை வந்துவிட்டால்

[1978 ஆகஸ்ட் 31

அவை என்ன நிலைக்காவது? அமைச்சர் அவர்கள் இஷ்டப் பட்டால் சொல்லலாம், அவர்கள் விருப்பம் இல்லாவிட்டால சொல்லமாட்டார்கள்.

(திரு. நா. சுந்தரராஜ் எழுந்தார்.)

உட்காருங்கள். 'ஐ ஆம் ஸாரி.' உட்காருங்கள்.

'டான்சி' நிறுவனத்திடமிருந்து பொருட்கள் வாங்கல்.

*வினா 17—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு நிறுவனங்களும் தங்கள் தேவைகளுக்கு டான்சி நிறுவனத்திலேயே பொருள் களை வாங்க வேண்டுமென அரசு உத்தரவிடுமா?

(ஆ) அரசு நிறுவனமான டான்சியில் தேவையானவற்றை வாங்காமல் சில அதிகாரிகள் தனியார் நிறுவனங்களிடம் வாங்க முனைவதை தடுத்து நிறுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:

(அ) அரசுத் துறைகளுக்குத் தேவையான மரச் சாமான்கள் போன்ற பொருட்களை ஒன்பது நிறுவனங்களிடமிருந்துதான் வாங்க வேண்டுமென அரசு ஏற்கனவே உத்ததிரவிட்டுள்ளது. இந்த ஒன்பது நிறுவனங்களில் ''டான்சி'' மூன்றாவது இடத்தை வகிக்கிறது.

(ஆ) அரசின் கவனத்திற்கு ஆதாரத்துடன் கொண்டுவந்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மு. அம்பிகாபதி: சில அரசுத் துறையைச் சார்ந்த நிறுவனங்கள் 'டான்சி' போன்ற நிறுவனங்களில் வாங்காமல் தனியார்களிடம் வாங்குவதாக என்னிடம் தகவல்கள் உள்ளன. அதை வேண்டுமென்றால் அமைச்சர் அவர்களிடம் தரத் தயாராயிருக்கிறேன். அவற்றின் மீது நடவடிக்கைகள் எடுக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: நான் விடையிலேயே சொல்லியிருக்கிறேன். அரசின் கவனத்திற்கு ஆதாரத்துடன் கொண்டுவந்தால் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. கே. பண்ணை சேதுராம்: ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி போன்ற மன்றங்களில் பீரோக்கள், மேஜைகள் போன்ற பொருட்களை வாங்க வேண்டுமென்றால் தனியார்களிடம் ஒப்பந்தம் செய்துகொள்கிறார்கள். டான்சி



1978 ஆகஸ்ட் 31]

போன்ற நிறுவனங்களிடம் வாங்க ஒப்பந்தம் செய்யும்போது தவணை முறையில் பொருட்களைக் கொடுத்தால் மேலும் அவற்றை அங்கிருந்து வாங்குவதற்கு வழி ஏற்படும். எனவே தவணை முறையில் பொருட்களைக் கொடுக்க அரசு ஆணையிடுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: அரசுத் துறைகளுக்குத் தேவையான மரச்சாமான்கள் என்று குறிப்பிடும் போது மாநகராட்சிகள், பஞ்சாயத்து யூனியன்கள் எல்லாம் அதில் அடங்குகின்றன. அரசு, ஒன்பது நிறுவனங்களிடம் வாங்க வேண்டுமென்று ஏற்கனவே உத்தரவிட்டிருக்கிறது. இந்த ஒன்பது நிறுவனங்கள் தவிர வேறு தனியார் நிறுவனங்களிடம் வாங்க வழி இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 10-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தை இன்னும் சற்று நேரத்திற்கு நீட்டிக்கிறேன்.

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நிறுவனங்களுக்குத் தேவையான சாமான்களைத் தனியார் துறையிலிருந்தும் வாங்கலாம் என்று சொல்லும்போது, பொதுத் துறை 3-வது இடமாகத்தான் வைக்கப்பட்டு சாமான்கள் வாங்கப்பட்டு வருவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்தத் தனியார் நிறுவனங்கள் எது எது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னுடைய விடையைத் தவறாக புரிந்து இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அரசின் ஆதரவோடு நடைபெறுகின்ற நிறுவனங்களிலிருந்துதான் சாமான்கள் வாங்க வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. தகவலுக்காகச் சொல்லுகிறேன், இதில் சேர்க்கப்பட்டிருக்கின்ற நிறுவனங்கள், சிறைச்சாலையில் செய்யப்படுகின்ற பொருட்களை விற்பனை செய்யும் நிலையங்கள், பாஸ்டல் பள்ளி நிறுவனங்கள், நவீனப் பயிற்சி உற்பத்திசாலை, தொழில் நுணுக்கப்பள்ளி, தொழில் நுணுக்கப்பயிற்சி நிலையங்கள், ஊனமுற்றோர் பயிற்சி பெறும் நிறுவனங்கள், தொழில் வணிக இயக்குநரின் அனுமதியோடு நடைபெறும் தொழில் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனங்கள், கிராமத் தொழில் வளர்ச்சி நிலையத்தைச் சேர்ந்த நிறுவனங்கள், சிறைக் கைதிகளாக இருந்து விடுதலை பெற்றவர்கள் அமைத்திருக்கும் நிறுவனங்கள், என்று சொல்லப்படுகின்ற இப்படிப்பட்ட நிறுவனங்களிடமிருந்துதான் சாமான்கள் வாங்க வேண்டும் என்று அரசு உத்தரவிட்டு இருக்கிறது. தனியார் நிறுவனங்களிடமிருந்து எதையும் நாம் வாங்குவதில்லை.

[1978 ஆகஸ்ட் 31

திரு. துரை முத்துசாமி : டான்சி நிறுவனம் லாபத்தில் நடைபெறுகிறதா ? நஷ்டத்தில் நடைபெறுகிறதா ? இந் நிறுவனம் மிகுந்த நஷ்டத்தில் நடைபெற்றுவருவதாகவும், இதி லுள்ள பொருட்களின் விலை மிக அதிகமாக இருப்பதாகவும் சொல்லப்படுவது உண்மையா ?

மாண்புமிகு கே. திரு. இராஜா முகமது : மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் தகுந்த விளக்கம் தரப்படும்.

திரு. கே. பண்ணை சேதுராம் : நான் கேட்ட கேள்வி, தவணை முறையில் பொருட்களைக் கொடுப்பதற்கு உத்தரவிடப் படுமா என்பது. அதற்கான பதிலை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இதன் மூலக்கேள்வி அரசு நிறுவனங்கள் டான்சியிலிருந்து பொருட்கள் வாங்குவது பற்றி. தவணை முறையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேள்வி போட்டால் பதில் தரலாம்.

திரு. ரா. க. சு. தண்டபாணி : தலைவர் அவர்களே, டான்சியில் தயாராகும் மரச் சாமான்கள் பற்றித்தான் இங்கு சொல்லப்பட்டது. இதைத் தவிர மற்ற சாமான்கள் ஏதாவது இருக்கின்றனவா ? அதைப்பற்றிய விவரம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : டான்சியில் 58 நிறுவனங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு நிறுவனமும் பயிற்சிப் பணி மையமாகவும் பணி மையமாகவும் உற்பத்தியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. இது குறித்து விளக்கமான அறிக்கை தர வேண்டும் என்றால், அல்லது குறிப்பிட்ட இன்ன பொருளைப்பற்றி விவரம் வேண்டும் என்று தனிக் கேள்விப் போட் டால் அதற்கான பதிலைத் தருகிறேன்.

சென்னை அயன்புரம் பால்வள நிறுவனம்.

*வினா 18—திரு. ஆர். சண்முகம் : மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை, அயன்புரம் பால்வள நிறுவனத்தை அரசே ஏற்று நடத்த உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :

(அ) அரசு நேரிடையாக ஏற்று நடத்த உத்தேசமில்லை. ஆனால் அரசுக்குச் சொந்தமான பால்வள நிறுவனம், அயனாவரம் கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றியத்திற்குச் சொந்தமான கட்டடங்



1978 ஆகஸ்ட் 31] [திரு. கே. இராஜா முகமது]

களையும் குளிர் பதன சாதனங்களையும் ஏற்றுக்கொண்டு அயனா வரம் கூட்டுறவு பால் வழங்கு சங்கத்தின் சென்னையில் உள்ள வியாபார நடவடிக்கைகளை 1976 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1-ந் தேதி முதல் மேற்கொண்டு வருகிறது. பால் சேகரிப்பு வேலையை அயன்புரம் பால்வள நிறுவனமே தொடர்ந்து செய்து வருகிறது.

(ஆ) சென்னை நகரவாசிகளுக்கு நல்ல பதப்படுத்திய பாலை முறையாக வழங்குவதை ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்கள் செய்யாமல் ஒரே நிறுவனமே செய்வதுதான் பொருத்தமானது என்ற கருத்தின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டது. தமிழ்நாடு பால்வள நிறுவனத்திற்கு நவீன வசதிகள் இருப்பதால் அதுவே இந்தத் தொழிலைச் செய்யப் பொருத்தமானது என்று கருதப்பட்டு இத் தொழில் அதனிடம் ஒப்படைக்கப்பட்டது.

திரு. ஆர். சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பகுதியிலுள்ள கூட்டுறவு சங்கங்களுடைய அனுமதி இல்லாமலேயே அரசாங்கம் எடுத்துக்கொள்கின்றது என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, அயன்புரம் பால் வழங்கும் ஒன்றியத்தை இன்னும் குறுகிய காலத்தில் உற்பத்தியாளர் பால் ஒன்றியமாக மாற்று வதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. இதுவரை பால் வழங்கு சங்கங்களாக இருந்தவை எல்லாம் இனிமேல் உற்பத்தி யாளர் சங்கங்களாகமாற இருக்கிற காரணத்தால், அப்படிப்பட்ட மாறுதல் ஏற்படுகின்ற நேரத்தில் அந்தந்தச் சங்கங்களினுடைய அனுமதியைப் பெற்று அரசு செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பூலத்தூரில் ஆரம்ப சுகாதார நிலையம்.

* வினா 19—திரு. கே. பண்ணை சேதுராம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கொடைக்கானல் மலைப்பகுதியான பூலத்தூர் கிராமத் தில் ஊராட்சி ஒன்றிய Primary Health Centre இரண்டு ஆண்டுகளுக்கு முன் துவக்கப்பட்டு திடீரென்று மூடப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை மறுபடியும் திறப்பதற்கு அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : (அ) பூலத்தூர் கிராமத்தில் இதுவரை ஆரம்பச் சுகாதார நிலையம் எதுவும் நிறுவப்படவில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

[1978 ஆகஸ்ட் 31

<u>திரு. கே. பண்ணை சேதுராம் :</u> ஆரம்பத்திலே ஆரம்பிக்கப் பட்ட அடிப்படையிலே, பின்பு தனியாக நிறுவப்பட்டது என்று கூறுகிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் பதில் வேறு விதமாக இருக்கின்ற காரணத்தினால், தற்சமயம் நடமாடும் ஆஸ்பத்திரிகள் கொடுப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் :</u> தலைவர் அவர்களே, ஆரம்பத்திலே ஆரம்பிக்கப்பட்டது ஆரம்பச் சுகாதார நிலையம் அல்ல. ஆரம்பச் சுகாதார நிலையத்தோடு, துணையாக நிறுவப்பட்டது குடும்ப நல நிலையம் ஆகும். அங்கே நடமாடும் மருத்துவ மனைகள் ஏற்படுத்துவது குறித்து அரசு பரிசீலனை செய்யும்.

<u>இயங்கும் மருத்துவ மனைகள்</u>

*வினா 20— <u>திரு. வி. கே. கோதண்டராமன் :</u> மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இயங்கும் மருத்துவ மனைகள் தமிழ்நாட்டில் எத்தனை உள்ளன?

(ஆ) அதனால் ஏற்பட்ட பலன்கள் யாவை?

<u>மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் :</u> (அ) இயங்கும் மருத்துவமனைகள் தமிழ்நாட்டில் 11 இடங்களில் உள்ளன.

(ஆ) இந்த இயங்கும் மருத்துவ மனைகளினால் தொலை தூரங்களில் இருக்கும் மிகச் சிறிய கிராமங்களில் இருக்கும் மக்கள் உடனடி மருத்துவ உதவி பெறுகின்றனர். அவசரமான, ஆபத்தான நிலையில் உள்ள நோயாளிகளை உடனடியாக மருத்துவமனையில் சேர்த்ததின் மூலம் பல நோயாளிகளின் உயிர் காக்கப்பட்டிருக்கிறது.

<u>திரு. வி. கே. கோதண்டராமன் :</u> சார், 11 மருத்துவ மனைகள் இயங்கினாலும், மாவட்டத்திற்கு ஒன்றுகூட கிடையாது. 35 லட்சம் ஜனத்தொகை கொண்ட மாவட்டமும் உண்டு; 20, 25 லட்சம் பேர்களைக் கொண்ட ஜனத்தொகை உள்ள மாவட்டங்களும் உண்டு. மூலை முடுக்குகளிலும், மலை அடிவாரங்களிலும் உள்ள மக்களை எப்படிக் கொண்டு வரமுடியும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றைக்கு உணருகிறார்களா? ஆகவே, அதிகப்படியான நடமாடும் மருத்துவ மனைகளை அமைத்து மக்களுக்குப் பலன் ஏற்படும் வகையில், நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா?



1978 ஆகஸ்ட் 31]

<u>மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் :</u> இந்த நடமாடும் மருத்துவ மனைகளைப் பொறுத்தவரையில் இரண்டு வகையான நிலையங்கள் இருக்கின்றன. ஒன்று, நடமாடும் மருத்துவ மனைகள் மாவட்ட மருத்துவ அதிகாரியோடு இணைக்கப்பட்டு 11 இடங்களில் இருக்கின்றன. மற்றொன்று, உறுப்பினர் அவர்கள் கேட்பதுபோல் நடமாடும் முறையில் மருத்துவ மனை கேட்கின்றார்கள். இதைக் குறித்து தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

<u>கண்ணொளி வழங்கு திட்டம்</u>

<u>வினா 1— திரு. என். கிட்டப்பா :</u> மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக அரசின் கண்ணொளி வழங்கும் திட்டத்தின்கீழ் 1975–76ஆம் ஆண்டில் பயன் பெற்றோர் எத்தனை பேர்?

<u>விடை</u> — 1,98,970 பேர்கள்.

<u>கோட்டூர்புரத்தில் ஏற்பட்ட வெள்ளச் சேதங்கள்.</u>

<u>வினா 2— திரு. என். கிட்டப்பா :</u> மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1976ஆம் ஆண்டு சென்னை கோட்டூர்புரத்தில் ஏற்பட்ட வெள்ளத்தின் விளைவாக ஏற்பட்ட உயிர்ச் சேதம், பொருட் சேதம் என்ன?

<u>விடை</u> : 1976ஆம் ஆண்டு சென்னை கோட்டூர்புரத்தில் ஏற்பட்ட வெள்ளத்தின் விளைவாக ஏற்பட்ட உயிர்ச்சேதம் நான்கு. பொருட்சேதம் 20 லட்சத்து 19 ஆயிரம் ரூபாய் என்று மதிப்பிடப்படுகிறது. இதில் குடிசை மாற்று வாரியத்தின் நட்டம் ரூ. 3.65 லட்சமும் வீட்டு வசதி வாரியத்தின் நட்டம் ரூ. 16.54 லட்சமும் ஆகும்.

<u>தமிழகத்தில் உள்ள இனாம் கிராமங்கள்.</u>

<u>வினா 3— திரு. எஸ். இராமலிங்கம் :</u> மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் இன்னும் ரயத்துவாரியாக மாற்றப்படாத இனாம் கிராமங்கள் எத்தனை?

(ஆ) அதற்கான காரணங்கள் யாது?

<u>விடை</u> — (அ) 49.

(ஆ) சம்பந்தப்பட்ட நீதி மன்றங்களினால் செட்மெண்ட் பணி தடை செய்யப்பட்டுள்ளது.

[1978 ஆகஸ்ட் 31

## பள்ளிகளில் உடற் பயிற்சி ஆசிரியர் பதவிகள்.

வினா 4—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர் நியமிக்கப்படுவதற்கான அரசின் விதிகளின்படி அனைத்துப் பள்ளிகளிலும் நியமிக்கப்பட்டு உள்ளதா ?

(ஆ) இல்லை என்றால், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—(அ) & (ஆ): நிதிநிலை இடம் தருவதற்கேற்ப அரசு ஆண்டுதோறும் சில நூறு உடற் பயிற்சி ஆசிரியர்களைக் கூடுதலாக ஏற்படுத்தி வருகிறது. அந்த எண்ணிக்கைக்குட்பட்டுத்தான் உயர்நிலைப் பள்ளிகளிலும், உயர் தொடக்கப் பள்ளிகளிலும் புதிய உடற் பயிற்சி ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இத்தனை மாணவர்கள் எண்ணிக்கைக்கு இத்தனை உடற் பயிற்சி ஆசிரியர்கள் நியமிக்கலாம் என்றுள்ள விதிமுறைப்படி ஏற்படுத்தத்தக்க உடற்பயிற்சி ஆசிரியர் பதவிகள் அனைத்தையும் உடனடியாக ஏற்படுத்திட அரசு நிதி நிலை இடம் தராது. 1978–79ஆம் ஆண்டு புதிதாக 200 உடற் பயிற்சி ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## கருங்கல் கிராம அரிசனக் குடியிருப்புக்குச் சாலை.

வினா 5—திரு. ஏ. பி. பழனியப்பன் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை மாவட்டம், திண்டுக்கல் கோட்டம், கருங்கல் கிராமம், தண்ணீர் பந்தல் என்ற இடத்தில் இருந்து சின்னத் தம்பிபட்டி வழியாக அரிசனக் காலனிக்கு ஒரு சாலை அமைக்கும் திட்டம் இன்னும் எடுத்துக் கொள்ளாமல் இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அரசு அதன் பேரில் எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—சாலை அமைக்கும் பணியில் ஒரு பகுதி முடிவடைந்து விட்டது. மீதி வேலை தேவையான நிலம் கையகப் படுத்தப்பட்ட பிறகு முடிக்கப்படும். இதற்கான துரிதமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.



1978 ஆகஸ்ட் 31]

## சிதம்பரம், திருமுட்டம் காவலர்களுக்கு குடியிருப்பு.

வினா 6—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டம், திருமுட்டம் என்னுமிடத்தில் காவலர்களுக்குக் குடியிருப்பு கட்டுவதற்கு அரசு செயல் திட்டம் வைத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைபெறும் ?

விடை—(அ) திருமுட்டம் காவல் நிலையத்தில் உள்ள காவலர்களுக்காக 1.6 ஏக்கர் நிலத்தில் வீடு கட்டுவதற்கான திட்டமானது தீவிர ஆலோசனையில் உள்ளது. ஆனால், காவலர் குடியிருப்பு திட்டத்தின்கீழ் போதிய நிதி ஒதுக்கீடு கடந்த மூன்று ஆண்டுகளாக செய்யாமல் இருப்பதனால், இத்திட்டமானது இதுவரை நிறைவேற்றப்படாமல் இருக்கிறது.

(ஆ) காவலர் குடியிருப்பு திட்டத்தின்கீழ் குறிப்பிட்ட தொகையை ஒதுக்கீடு செய்த பின் இத்திட்டம் நிறைவேற ஏதுவாகும்.

## முடிகண்டநல்லூர் அரிசனக் குடியிருப்பில் வீடுகள் கட்டுதல்.

வினா 7—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் வட்டம், முடிகண்டநல்லூர் அரிசன காலனியில் 100 வீடுகள் கட்டுவதற்கான திட்டத்தின்கீழ் மீதி உள்ள 33 வீடுகள் எப்போது கட்டப்படும்?

விடை — 1974–76 ஆம் ஆண்டுகளில் சிதம்பரம் வட்டம் முடிகண்டநல்லூர் அரிசன காலனியில் 100 வீடுகள் கட்டுவதென முதலில் முடிவு செய்யப்பட்டு 67 வீடுகள் கட்டும் வேலை துவங்கப்பட்டது. பின்னர் அவ்வாண்டுகளில் அம்மாவட்டத்தில் கட்டப்படவிருந்த வீடுகளின் மொத்த எண்ணிக்கை குறைக்கப்படவே முடிகண்டநல்லூரில் 67 வீடுகள் மட்டுமே கட்டி முடிக்கப்பட்டன. மேலும் 33 வீடுகள் கட்டுவது குறித்து அடுத்துவரும் ஆண்டுகளில் செய்யப்படும் நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்து முடிவு செய்யப்படும்.

## கள்ளநோட்டு வழக்குகள்.

வினு 8 — திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1957 முதல் 1976 வரை கள்ள நோட்டு வழக்குகள் எத்தனை போடப்பட்டது?

(ஆ) அவை குறித்த விவரம் யாது?

விடை — (அ) 1190.

(ஆ) வழக்குகளின் விவரம் :—

| | |
|---|---|
| (1) தண்டனையில் முடிந்த வழக்குகள் | 70 |
| (2) விடுவிக்கப்பட்ட வழக்குகள் .. | 23 |
| (3) கண்டுபிடிக்கப்படாமல் உள்ளவை. | 295 |
| (4) உண்மைக்குப் புறம்பான தகவல் .. | 12 |
| (5) மாநில குற்றப்புலனுய்வுத் துறைக்கு மாற்றப் பட்டவை. | 727 |
| (6) புலனுய்விலுள்ள வழக்குகள் .. | 2 |
| (7) மேல் நடவடிக்கை தள்ளுபடி செய்யப்பட்டவை. | 24 |
| (8) நீதி மன்றத்தில் விசாரணையிலுள்ளவை. | 15 |
| | 1,190 |

## மாநில குற்றப்புலனுய்வுத் துறைக்கு மாற்றப்பட்ட வழக்குகள் பற்றிய விவரங்கள்.

திருச்சி கண்டோன்மென்ட் காவல் நிலைய குற்ற எண் 914/34— 37 வழக்குகள் கண்டுபிடிக்கப்படாதவை.

பட்டுக்கோட்டை காவல் நிலைய குற்ற எண் 36/65 52 வழக்குகள் தண்டனையில் முடிந்தவை.

கிருஷ்ணகிரி காவல் நிலைய குற்ற எண் 161/66.103 வழக்குகள் தண்டனையில் முடிந்தவை.

புதுக்கோட்டை காவல் நிலைய குற்ற எண் 207/66. 143 வழக்குகள் தண்டனையில் முடிந்தவை.

கோடம்பாக்கம் காவல் நிலைய குற்ற எண் 2013/66. 22 வழக்குகள் தண்டனையில் முடிந்தவை.

சிந்தாதிரிப் பேட்டை காவல் நிலைய குற்ற எண் 2992/69. 5 வழக்குகள் தண்டனையில் முடிந்தவை.



அன்னதானப்பதி காவல் நிலைய குற்ற எண் 35/70. 15 வழக்குகள் தண்டனையில் முடிந்தவை.

கோயம்புத்தூர் ஆர். எஸ். புரம் காவல் நிலைய குற்ற எண் 1221/70.301 வழக்குகள் தண்டனையில் முடிந்தவை.

திருவண்ணுமலை காவல் நிலைய குற்ற எண். 1545/71. 34 வழக்குகள் தண்டனையில் முடிந்தவை.

இ-2 ராயப்பேட்டை காவல் நிலைய குற்ற எண் 1356/71. 15 வழக்குகள் விசாரணையிலுள்ளவை.

மொத்த வழக்குகள் : 727.

## திருச்செந்தூர் தேவஸ்தான நிதியிலிருந்து பெண்கள் கலைக்கல்லூரி அமைத்தல்.

வினு 9 —திரு. ஆர். அமிர்தராஜ் : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

திருச்செந்தூர் சுப்பிரமணியசாமி தேவஸ்தான நிதியிலிருந்து பெண்கள் கலைக் கல்லூரி அமைக்கும் உத்தேசம் உண்டா?

விடை : இல்லை.

## போக்குவரத்துக் கழகப் பேருந்துகள்.

வினு 10 — திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78-ம் ஆண்டில் போக்குவரத்துக் கழகங்கள் புதிதாக வாங்கிய பஸ்கள் எண்ணிக்கை என்ன?

(ஆ) பஸ் விபத்துகளில் ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை என்ன?

(இ) உயிரிழந்தவர்கள் குடும்பங்களுக்குப் போக்குவரத்துக் கழகங்கள் கொடுத்த நஷ்ட ஈடு தொகை எவ்வளவு?

விடை — (அ) 1977–78ஆம் ஆண்டில் போக்குவரத்துக் கழகங்கள் புதிதாக வாங்கிய பஸ்களின் எண்ணிக்கை 681 ஆகும்.

(ஆ) பஸ் விபத்துக்களில் 1977ஆம் ஆண்டு ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை முறையே 21,25 ஆகும்.

[1978 ஆகஸ்ட் 31

(இ) இவற்றில் 5 குடும்பங்களுக்குப் போக்குவரத்துக் கழகங்கள் கொடுத்த நஷ்ட ஈட்டுத்தொகை ரூ. 16,700. 32 குடும்பங்களிலிருந்து நஷ்ட ஈட்டுத்தொகைக்குக் கோரிக்கை மனு வரவில்லை. மீதி 8 குடும்பங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய நஷ்ட ஈட்டுத்தொகைகள் அதற்கான டிரிபியூனல் நிர்ணயம் செய்து தரவேண்டும். ஒரு குடும்பத்தின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

## நீதிமன்றப் பணியாளர்கள் குடும்பப் பாதுகாப்புத் திட்டம்.

வினா 11— திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1976–77, 1977–78 ஆண்டுகளில் நீதிமன்றங்களில் பணியாற்றி இறந்து போனவர்களின் எத்தனை குடும்பங்களுக்கு குடும்ப பாதுகாப்புத் திட்டப்படி ரூ. 10,000 கொடுக்கப்பட்டிருக்கிறது ?

(ஆ) மேற்படி குடும்பப் பாதுகாப்புத் திட்டப்படி ரூ. 10,000 கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது என்று அரசுக்கு புகார் வந்துள்ளதா ?

விடை : (அ) 1976–77-ல் 29 குடும்பங்களுக்கும் 1977-78-ல் (அக்டோபர் முடிய) 13 குடும்பங்களுக்கும் குடும்ப பாதுகாப்புத் திட்டத்தின்படி ரூபாய் 10,000 கொடுக்கப் பட்டுள்ளது.

(ஆ) காலஞ்சென்ற திரு. போஸ், இளநிலை உதவியாளர், மாவட்ட முனிசிப்கோர்ட், புதுக்கோட்டை, அன்னாரின் மனைவி திருமதி பி.அஞ்சம்மாள், குடும்ப பாதுகாப்புத் திட்டத்தின்படி ரூ. 10,000 வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டதாக அரசுக்குப் புகார் அனுப்பியிருந்தார். திருமதி பி. அஞ்சம்மாளுக்கு குடும்ப பாதுகாப்பு நிதி வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டது.

## தமிழ்நாட்டில் பதிவுசெய்துள்ள வக்கீல் குமாஸ்தாக்கள்.

வினா 12— திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் இதுவரை பதிவு செய்துள்ள வக்கீல் குமாஸ்தாக்கள் எத்தனை பேர் ?

விடை : 28—1—1978-ம் நாள் நிலவரப்படி, 1,675 குமாஸ்தாக்கள் பதிவு செய்துள்ளார்கள்.



1978 ஆகஸ்டு 31]

## தாராசுரம், சோழபுரம் பேரூராட்சி ஊழியர்கள்.

வினா 13—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் தாராசுரம் பேரூராட்சி நிர்வாக அதிகாரி நகர சுத்தி தொழிலாளர்கட்கு சம்பளம் வழங்காமல் அவமானகரமாக திட்டுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) சோழபுரம் பேரூராட்சியில் கடந்த 2 மாத காலமாக ஊதியம் வழங்காதது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை : (அ) இம்மாதிரி எதுவும் இந்தப் பேரூராட்சியில் நிகழவில்லை.

(ஆ) இந்தப் பேரூராட்சியில் நிதிப் பற்றுக்குறை காரணத்தால் 1977 டிசம்பர் மாத முதல் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க இயலவில்லை. விரைவில் நிதிநிலைமை சீராகி விடுமென்றும் அலுவலர்க்கு விரைவில் ஊதியப்பட்டுவாடா செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியுள்ளார்.

## தென்னாற்காடு மாவட்டத்தில் நில மறு அளவை.

வினா 14 : திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் ரீ சர்வே எப்போது செய்யப்பட்டது?

(ஆ) சிதம்பரம் வட்டத்தில் எப்போது செய்யப்பட்டது ?

விடை : (அ) தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள வெவ்வேறு தாலூக்காக்களில் வெவ்வேறு ஆண்டுகளில் கீழ்க்கண்டவாறு ரீசர்வே செய்யப்பட்டுள்ளது.

| தாலூக்கா. | ஆண்டு ரயத்வாரி ரீசர்வே. | எஸ்டேட் நிலங்கள் ஒழிப்பு சட்டத்தின் கீழ் எடுக்கப் பட்ட நிலங்களின் ரீசர்வே. | மெட்ரிக் முறைப்படி ரீசர்வே |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| செஞ்சி | 1917—1919 | | |
| கள்ளக்குறிச்சி .. | 1918—1920 | | |
| திருக்கோவிலூர் | 1917—1920 | 1935 | |
| விழுப்புரம் .. | 1915—1916 | | |
| விருத்தாசலம் .. | 1919—1921 | | |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| உளுந்தூர்பேட்டை | 1917—1920 | 1957 சப்ளி மெண்டல் சர்வே. | 1963 |
| பண்ருட்டி .. | 1914—1916 | | |
| கடலூர் . | 1914—1916 | | |
| சிதம்பரம் .. | 1920—1921 | 1957 | |
| திண்டிவனம் .. | 1916—1917 | 1955 சப்ளி மெண்டல் சர்வே. | 1963 |

## போக்குவரத்து தொழிலாளர் வேலை நிறுத்தத்தின் போது ஏற்பட்ட சேதம்.

வினு 15 :—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) இந்த ஆண்டு (1977) ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற போக்குவரத்து ஊழியர்கள், தொழிலாளர்கள் வேலை நிறுத் தத்தின்போது அரசாங்க பஸ்கள் தீ வைக்கப்பட்டது, தாக்கப் பட்டது, சேதம் விளைவிக்கப்பட்டவை எத்தனை?

(ஆ) இதனுல் தாக்கப்பட்ட தொழிலாளர்கள், ஊழிய யர்கள் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டோர் எத்தனை பேர்கள் ?

(இ) போக்குவரத்து விரைவு வண்டி மற்ற புறநகர் வண்டிகளின் சேதத்தினுல் ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு?

விடை : (அ) நெருப்பு வைத்தல் மூலமாக எந்தப் பேருந்தும் சேதமடையவில்லை. கல்லெறிதல் போனறவை மூலமாக சேதமடைந்த பேருந்துகள் மொத்தம் 45 (நாற்பத் தைந்து).

(ஆ) இதனுல் தாக்கப்பட்ட தொழிலாளர் ஊழியர்கள் 26 (இருபத்து ஆறு) பேர்கள். இவர்களில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டோர் 3 பேர்கள். சிறு காயமடைந்த பொதுமக்கள் 77 பேர்கள்.

(இ) ரூ. 1,35,100 (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்தைந் தாயிரத்து நூறு மட்டும்).

## ஊத்தங்கரையில் அரிசன மாணவர் விடுதி.

வினு 16 :—திரு. எம். அண்ணுமலை : மாண்புமிகு அரி சன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தர்மபுரி மாவட்டம், ஊத்தங்கரையில் 1971-ல் அரசினர் உணவு விடுதி கட்டுவதற்கான மனை ஒதுக்கப்பட்டு அடித் தளம் தோண்டப்பட்டு பின்னர் வேலை நிறுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை :—(அ) ஆம்.



(ஆ) 1974-ம் ஆண்டு ஜூலைத் திங்களில் 100 அரிசன மாணவ விடுதிகளுக்குக் கட்டடம் கட்ட அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது. தர்மபுரி மாவட்டம் ஊத்தங்கரையில் உள்ள அரிசன மாணவர் விடுதியும் இதில் ஒன்ருகும். அதன்படி 1974-75-ல் இவ்விடுதிக் காக ஒதுக்கப்பட்ட மனையில் அடித்தளம் தோண்டப்பட்டு பின்னர் நிதி நிலை காரணமாக இவ்விடுதிக்குக் கட்டடம் கட்டும் வேலை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்விடுதிகள் படிப்படி யாகச் செயல்படுத்தும் திட்டத்தின் கீழ் (Phased programme) கட்டுவதென முடிவெடுக்கப்பட்டு 1976ஆம் ஆண்டு மே திங் களில் 41 விடுதிகளும் 1977ஆம் ஆண்டு மார்ச் திங்களில் 27 விடுதிகளும் கட்டுவதற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது. இவ்விடுதி கள் எல்லாம் கட்டி முடிக்கப்பட்ட பின்னரே, நிதிநிலைக்கேற்ப ஊத்தங்கரை அரிசன மாணவர் விடுதி கட்டுவது பற்றி பரிசீலிக்கப் படும்.

## கோட்டைப்பட்டினம் மீனவர் பகுதி.

வினு 17.—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு முதல் அமைச் சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினம் பகுதியில் 22-9-1977 நடந்த சம்பவம் என்ன ?

(ஆ) மீனவர்கள் எவ்வளவு பேர் கைதுசெய்யப்பட்டார்கள்?

(இ) அறந்தாங்கி கிளைச் சிறைச்சாலையில் வைக்கப்பட்டவர் கள் எத்தனை பேர் ?

(ஈ) காயம் பட்டதற்காக மருத்துவ வசதி எத்தனை பேருக்கு அளிக்கப்பட்டது ?

விடை : (அ) கோட்டைப்பட்டினத்தில் இயந்திரப் படகுக் காரர்களின் குடியிருப்புகளுக்கு முன்பாக நாட்டுப் படகுக்காரர்கள் 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22-ந் தேதி அன்று போராட்டம் நடத்தப் போவதாக அறந்தாங்கி செய்தி கிடைத்தது. 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22-ந் தேதி அன்று அறந்தாங்கி ஆர்.டி.ஓ.-வும், டி.எஸ்.பி.-யும், சில போலீசாருடன் அங்கு விரைந்தனர். 12-15 மணிக்கு அவர்கள் கோட்டைப்பட்டினத்தை அடைந்தபோது அன்று அதிகாலை 3-00 மணிக்கு அங்கு ஏற்பட்ட ஒரு தீ விபத்தைப்பற்றி யும், அதனை உள்ளூர்வாசிகள் அணைத்து விட்டதைப்பற்றியும் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. பிறகு, 2-15 மணியள வில், புதுக்குடியிலிருந்து சுமார் 30 நாட்டுப்படகுகள் தங்களை நோக்கி வருவதை ஆர்.டி.ஓ.-வும், டி.எஸ்.பி.-யும் கண் டனர். அந்தப் படகுகள் கரையை அடைந்ததும் ஒவ்வொரு படகிலிருந்துப் சுமார் 10 பேர்கள் பயங்கர ஆயுதங்களுடனும், நாட்டு வெடிகுண்டுகளுடனும் வந்து போலீசாரை மீது,

அங்கிருந்த சுமார் 75 கொட்டகைகளுக்கும், அங்கிருந்த நைலான் வலைகள், எஞ்சின்கள், டீசல் டின்கள், உதிரிப் பாகங்கள் முதலியவற்றிற்கும் தீ வைத்தனர். உடனே, கோட்டைப்பட்டினத்தைச் சேர்ந்த சுமார் 200 பேர்கள் தலையிட ஆரம்பித்தபொழுது, ஆர்.டி.ஓ.-வும், டி.எஸ்.பி.-யும் அவர்களை அமைதிப்படுத்தாமல் இருந்திருந்தால் நிலைமை மேலும் மோசமாகியிருக்கும். இந்த சமயத்தில்தான் அதிகாரிகள் உடனே ஆயுதம் தாங்கிய போலீசாரின் உதவியை நாடினர். புதுக்கோட்டையிலிருந்து ஆயுதம் தாங்கிய போலீசார் வருவதைக் கண்டவுடன் நாட்டுப் படகுக்காரர்கள் பின்வாங்க ஆரம்பித்தனர். இந்தச் சமயத்தில் போலீசார் அவர்களில் ஒருவரைப் பிடித்துவிட்டனர்.

கோட்டைப்பட்டினத்தில் இவ்வாறு நடந்து கொண்டிருக்கையில் அங்கிருந்து சுமார் நான்கிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தூரத்திலிருக்கும் ஜெகதாப்பட்டினம் என்ற ஊரில், இராமநாதபுரம் மாவட்டம் நம்புதலையிலிருந்தும், புதுக்கோட்டை மாவட்டம் கோபாலப்பட்டினத்திலிருந்தும் நாட்டுப் படகுக்காரர்கள் ஒரு கூட்டமாகச் சென்று கோட்டைப்பட்டினத்தில் தீவைத்ததைப் போல ஒரு தாக்குதலை நடத்தியிருக்கின்றனர். இதனை அறிந்தவுடன் ஆர்,டி.ஓ.-வும், டி.எஸ்.பி.-யும் உடனே அங்கு விரைந்து சென்று, இவர்களைக் கண்டவுடன் ஓடிக்கொண்டிருந்த சுமார் 20 பேர்களைக் கைது செய்தனர். ஆனால் அதற்குள் சேதம் விளைவிக்கப்பட்டுவிட்டது. கோட்டைப்பட்டினத்திலும், ஜெகதாப்பட்டினத்திலும் சேர்ந்து மொத்தம் 281 குடிசைகள் தீக்கிரையாகின. உயிர் சேதம் ஏதுமில்லை. சேதமடைந்த பொருள்களின் மொத்த மதிப்பு சுமார் ரூ. 4,68,700 என்று ஆர்.டி.ஓ.-ஆல் மதிப்பிடப்பட்டுள்ளது..

(ஆ) இருநூற்றி ஐம்பத்தெட்டு பேர்கள் கைது செய்யப்பட்டனர்.

(இ) இருபத்தொன்பது பேர்கள் அறந்தாங்கி கிளைச் சிறைச்சாலையில் வைக்கப்பட்டனர்.

(ஈ) பதினைந்து பேர்களுக்கு மருத்துவ வசதி அளிக்கப்பட்டது.

## பாடியில் மத்திய அரசின் பாதுகாப்புப் படை.

வினா 18—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசின் பாதுகாப்புப் படை (C.R.P.) பாடியில் வந்ததின் காரணம் என்ன?

(ஆ) மாநில அரசு அழைத்து வந்தார்களா?



விடை—(அ) சட்டம் ஒழுங்கு பராமரிப்பில் உதவி செய்யும் பொருட்டு மத்தியப் பாதுகாப்புப் போலீசின் சேவை பயன்படுத்தப்பட்டது.

(ஆ) ஆம்.

## நிலவரி வசூலுக்கு 'கேட்பு அறிவிப்பு'.

வினா 19—திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலவரி வசூலுக்கு முன் விவசாயிகளுக்கு Demand notice கொடுக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் என்றால், விபரம் என்ன?

விடை—(அ) உத்தேசம் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடம் இல்லை.

## இராமநாதபுரம் மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்பட்ட புத்தகங்கள்.

வினா 20—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1977 அக்டோபர் மாதம் தொடக்கத்தில் முதல்வர் இராமநாதபுரம் மாவட்டச் சுற்றுப்பயணத்தின் போது எத்தனை தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு புத்தகம் வழங்கப்பட்டது?

விடை—11–10–1977 தேதியன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் முதல்வர் அவர்கள் தமது சுற்றுப்பயணத்தின் போது திருப்புவனத்தில் அரிசன வகுப்பைச் சேர்ந்த 4 சிறுவர்களுக்கும் 4 சிறுமியருக்கும் பாடப் புத்தகங்களை வழங்கினார். மற்றும் 429 அரிசன மாணவர்களுக்கு வழங்குவதற்கான பாடப் புத்தகங்கள் பள்ளித் தலைமையாசிரியர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. ஆக, சுற்றுப்பயணத்தின்போது மொத்தம் 437 அரிசன மாணவர்களுக்குப் பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டன.

2. திருப்புவனத்தில் முதல்வர் வீடில்லாத அரிசனங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குதல், கலப்புத் திருமணத் தம்பதிகளுக்குத் தங்கப்பதக்கம் வழங்குதல் மற்றும் குடும்பநல நிதி

திட்டத்தின் கீழ் பணம் வழங்குதல் ஆகிய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, புதிய படிப்புதவித் தொகைத் திட்டத்தின்கீழ் பள்ளி மாணவர்களுக்கு பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

## வெள்ளாளன்விளை ஊராட்சியில் குடிநீர் தேக்கத் தொட்டி.

வினா 21—திரு. ர. ஜெபமணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், திருச்செந்தூர் வட்டத்தில் வெள்ளாளன்விளை ஊராட்சி எல்லைக்குள் குடிநீர் தேக்கத் தொட்டி கட்டி (9–3–1974ல்) முடிக்கப்பட்ட பின்பும் இதுவரை பொது மக்கள் நன்மைக்குப் பயன் படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இதனைத் திறக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

விடை— (அ) & (ஆ) வெள்ளாளன்விளை ஊராட்சி எல்லைக்குள் தண்டபத்து என்னுமிடத்தில் முதலில் தோண்டப்பட்ட நீரூற்று வற்றிப்போன காரணத்தால் குடிநீர் திட்டம் நடந்த மூன்று வருடங்களாகச் செயல்படவில்லை. இப்பொழுது வெள்ளாளன்விளையில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய நீரூற்றிலிருந்து 259 மி.மி. விட்டம் கொண்ட ஒரு ஆழ்குழாய் கிணறு மூலம் தண்ணீர் கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது. எனினும் அப்பகுதி மக்கள் விருப்பத்திற்கிணங்க மற்றுமொரு மேல்நிலைத் தொட்டி தற்போது கட்டப்பட்டு விட்டது. இது விரைவில் செயல்படத் துவங்கும்.

## இருமொழித் திட்டத்தினால் வேலையிழந்த இந்தி ஆசிரியர்கள்.

வினா 22— திரு. தே. ஞானசிகாமணி: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1968ல் அமுல்படுத்தப்பட்ட இருமொழித்திட்டத்தின் கீழ் வேலை இழந்த இந்தி ஆசிரியர்கள் குமரி மாவட்டத்தில இன்னும் எத்தனை பேர் உள்ளனர்?

(ஆ) அவர்களுக்கு மாற்றுவேலை கொடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை :—(அ) இருமொழித் திட்டம் அமுலானதின் காரணமாக அரசாணை எண் 477, கல்வி, நாள் 6–4–68ன் படி தகுதிபெற்ற இந்தி மற்றும் இதர மொழி ஆசிரியர்கள் அனைவருக்கும் மாற்று வேலை வழங்கப்பட்டது. தகுதி பெறாத தற்காலிகமான ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டனர். இவ்வாறு



பணி நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் 27 பேர் இருந்தனர். அவர்கள் 1968 ம் ஆண்டிலேயே பணியிலிருந்து விடுவிக்கப்பட்டுவிட்டதால், அவர்களில் எத்தனை பேருக்கு வேறு பணி கிடைத்துள்ளது என்பது பற்றியும் எத்தனை பேர் இன்னமும் பணியின்றி உள்ளனர் என்பது பற்றியும் தகவல் இல்லை.

(ஆ) அரசாணை எண் 706, கல்வி, நாள் 25—5—72ல் இருமொழித் திட்டம் காரணமாக பணி நீக்கம் செய்யப்பட்ட தகுதியில்லாத மற்றும் பகுதி நேர மொழி ஆசிரியர்கள் அனைவரும் வேலை தேடித் தரும் அலுவலகத்தில் பதிவு செய்துகொள்ளுமாறும் அவர்களுக்கு அவர்களுடைய பொதுக் கல்வித் தகுதிக்கு தகுந்தவாறு உயர்நிலைப் பள்ளி மற்றும் இதர அலுவலகங்களில் வேலையில் அமர்த்த முன்னுரிமை அளிக்கப்படும் என்றும், மேலும் அவர்கள் இந்தி மற்றும் மொழியாசிரியர்களாக பணியாற்றிய கால வரம்பிற்கேற்ப குறிப்பிட்ட வயது வரம்பிற்கு விலக்களிக்கப்படுகின்றதென்றும் உத்திரவிடப்பட்டுள்ளது.

## கோவை வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து கொண்டுள்ள ஆசிரியர்கள்.

வினா 23— திரு. கு. ரமணி : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் உள்ள வேலை தேடித்தரும் அலுவலகத்தில் பதிவு செய்து கொண்டு 6 முதல் 8 வருடங்களாக வேலைவாய்ப்பின்றி உள்ள செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களில் ஒரு தரம் கூட பேட்டிக்கு அனுப்பப்படாதவர்கள் எத்தனை பேர்? பேட்டிக்கு அனுப்பியும் வேலை கிடைக்காதவர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களுக்கு வேலை கிடைக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை — (அ) 31— 1— 1978 அன்றைய நிலவரப்படி 792 பேர்கள்.

(ஆ) 3 பேர்கள் ; பேட்டிக்கு அனுப்பியும் வேலை கிடைக்காமல் உள்ளவர்கள் 789 பேர்கள்.

(இ) இனிவரும் ஆண்டுகளில் அரசு நிதிநிலை இடம்தரும் அளவுக்கு கூடுதலாக ஆசிரியர் பதவிகளை ஏற்படுத்துவதன் மூலமும் ஆசிரியர் பயிற்சிக்குச் சேரும் மாணவர் எண்ணிக்கையைத் தக்கவாறு கட்டுப்படுத்துவதன் மூலமும், பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வேலைவாய்ப்பின்மைப் பிரச்சினையை படிப்படியாகத் தீர்க்க அரசு முயற்சி எடுக்கும்.

[1978 ஆகஸ்டு 31

## கரும்பு உற்பத்தி நிதி.

வினா 24—திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு வேளாண்மை-பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளிலிருந்து விவசாயிகளிடம் வசூலிக்கும் கரும்பு உற்பத்தி நிதி (Sugarcane Cess Fund) பணம் 1976–77-ல் எவ்வளவு ரூபாய்?

(ஆ) அந்த நிதி எதற்கு பயன்படுத்தப்படுகின்றன?

(இ) அதன் விபரம் என்ன?

விடை—(அ) 1976–77ல் ரூ. 121.27 இலட்சம் கரும்பு மேல் வரி (Sugarcane cess) வசூலிக்கப்பட்டது.

(ஆ) கரும்பு அபிவிருத்தித் திட்டங்கள், புது கரும்பு ரகங்கள் கண்டுபிடிப்பது, சர்க்கரை ஆலைப் பகுதிகளில் புதிதாகச் சாலைகள் போடுவது, பழைய சாலைகளைப் பராமரிப்பது, பாலங்கள் சிறு பாலங்கள் அமைப்பது ஆகியவைகளுக்கு இந்த நிதி பயன்படுத்தப்படுகிறது.

(இ) 1976–77ல் சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ரூ. 75 இலட்சமும் அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 45.41 இலட்சமும் செலவு செய்யப்பட்டன.

## தொண்டமானூர் கிராமத்தில் மின் இணைப்பு

வினா 25—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கம் வட்டம், தொண்டமானூர் கிராமத்தில் கடந்த நவம்பர் மாதம் ஏற்பட்ட புயல் வெள்ளம் காரணமாக துண்டிக்கப்பட்ட மின் இணைப்புகள் இன்றுவரை மீண்டும் மின் இணைப்பு கிடைக்க வசதி செய்து தராமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

விடை—1978-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9-ஆம் நாள் அன்று மீண்டும் மின் இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது.



1978 ஆகஸ்டு 31]

## கலசபாக்கம் தொகுதியில் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள்

வினா 26—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசபாக்கம் தொகுதியில் (1) ஆதமங்கலம் (2) கலசப்பாக்கம் ஆகிய கிராமங்களில் ஆடு வளர்க்கும் கூட்டுறவுச் சங்கம் அமைக்கக் கோரி அரசுக்கு பொதுமக்கள் விண்ணப்பித்துக் கொண்டுள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—(அ) & (ஆ): கலசப்பாக்கத்தில் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கம் அமைக்கக் கோரி பொதுமக்களிடமிருந்து எந்தவித விண்ணப்பமும் வரவில்லை.

ஆதமங்கலத்தில் ஓர் ஆடு வளர்ப்புக் கூட்டுறவு சங்கம் ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு திருவண்ணாமலை கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநரின் ஆய்விலுள்ளது. அதனை பதிவு செய்ய கால்நடை பராமரிப்பு இயக்குநர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

## இருளங்குப்பம் கிராமத்தில் புயல் நிவாரணப் பணிகள்.

வினா 27—திரு. சி. கோவிந்தராசன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டம், கிள்ளைக்கு அருகிலுள்ள இருளங்குப்பம் என்ற இடத்திலுள்ள மக்களின் குடிசைகள் அண்மையில் வந்த வெள்ளம் புயலினால் பாழாகியிருந்தும் அவர்களுக்கு நிவாரணம் கொடுக்கப்படுவதற்குப் பதிலாக அந்த இடத்தைக் காலி செய்வதற்கான நோட்டீஸ் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளதா?

விடை—இருளங்குப்பத்திலுள்ளவர்களுக்கு காலி செய்ய நோட்டீஸ் கொடுத்தது உண்மை. ஏனெனில், அக்குடிசைகள் மீது பனைமரங்கள் விழுந்துவிடும் போன்ற அபாய நிலை இருப்பதால் அவ்வாறு நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. ஆனால் இப்பொழுது அதற்குப் பதிலாக வேறு மாற்று வீட்டுமனை கிள்ளை என்ற கிராமத்தில் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆறு குடும்பங்கள் மட்டுமே புயல்-வெள்ளத்தால் பாதிக்கப்பட்டனர். ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 200 வீதம் நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

[1978 ஆகஸ்டு 31

### சமூக நல வாரியத் தலைவர் நியமனம்

வினா 28—திரு. தீ. சு. நல்லதம்பி: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமூக நல வாரியத்திற்குத் தலைவர் யார்?

(ஆ) அப்படி ஒரு தலைவர் இல்லையென்றால் அந்த இடத்திற்கு இன்னும் ஏன் நியமிக்கப்படவில்லை?

(இ) இத் தாமதத்திற்கு என்ன காரணம்?

விடை—(அ), (ஆ) மற்றும் (இ) திருமதி சிந்து நந்தகோபால் தற்போது தலைவியாக நியமிக்கப்பட்டுள்ளதால் இக் கேள்விகளுக்கு இடமில்லை.

### வரதமா நதி அணையிலிருந்து புதிய வாய்க்கால்கள்

வினா 29—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு வேளாண்மை-பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி வட்டத்தில் உள்ள வரதமா நதி அணையிலிருந்து கிழக்கு முகமாக 8 கிலோ மீட்டர் வரை புதிய வாய்க்கால் வெட்டித் தரக் கோரி அப்பகுதி மக்கள் அவசர நிலை அமுலில் இருந்தபோது ஆளுநரிடம் மனுக்கள் கொடுத்திருந்தது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆமெனில் அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—(அ) ஆம்.

(ஆ) புதிய வாய்க்கால் வெட்டித்தர திட்டத்தில் இடமில்லை. மேலும், வரதமா நதி அணையின் கொள்ளளவு தற்போதுள்ள பாசன நிலங்களுக்கு மட்டும் போதுமானதாய் உள்ளது. ஆகவே, இக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

### சிவகிரியில் 'துணைக் கருவூலகம்'

வினா 30—திரு. ஆர். கிருஷ்ணன்: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம் சிவகிரியில் "சப் டிரசரி" அலுவலகம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—இல்லை.



1978 ஆகஸ்டு 31]

### முதன்மைக் கல்வி அலுவலர்களால் பணிக்கமர்த்தப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள்

வினா 31—திரு. கோ. இளங்கோவன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1970-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதிக்குப் பின் 1973-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3-ஆம் தேதிக்குள் முதன்மைக் கல்வி அலுவலர்களால் பணிக்கமர்த்தப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களுள் T.N.P.S.C மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டோர் எத்தனை பேர்?

விடை—(அ) 2,732.

(ஆ) 2,184.

### சின்கோனா துறை தொழிலாளர்களது வருங்கால வைப்பு நிதி பணிக்கொடை

வினா 32—திரு. கு. ரமணி: மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், அரசு சின்கோனா துறை தொழிலாளர்களிடமிருந்து பிடிக்கப்பட்டுள்ள பிராவிடென்ட் பண்டு தொகைக்கு ரசீது கொடுக்கப்படவில்லையா?

(ஆ) இல்லையெனில், எப்பொழுது ரசீது கொடுக்கப்படும், எவ்வளவு பேர்களுக்கு ரசீது கொடுக்கப்படவேண்டியுள்ளது?

விடை—(அ) தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதிக் கட்டணங்கள் தொழிலாளர்களின் சம்பளப் பட்டியலிலேயே கழிக்கப்படுவதால், தனிப்பட்ட ரசீதுகள் கொடுக்கும் அவசியம் ஏற்படுவதில்லை. அவ்வாறு கழிக்கப்பட்ட மொத்தத் தொகையுடன் வேலை கொடுப்பவரின் (அரசு) பங்குத் தொகையையும் சேர்த்து, சென்னையிலிருக்கும் தமிழ்நாடு தொழிற் துறை தொழிலாளர்கள் வருங்கால வைப்புநிதி முதுநிலை கணக்கு அலுவலருக்கு டிமாண்ட் டிராப்ட் மூலமாக அனுப்பப்படுகிறது. மேற்கண்ட அலுவலருக்கு பணம் பிடிக்கப்பட்ட விவரங்களும் அனுப்பப்படுகின்றன. தமிழ்நாடு தொழிற் துறை தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதிக் கணக்குகள், இந்த முதுநிலைக் கணக்கு அலுவலரால் பேணப்படுகின்றன. இந்த முதுநிலைக் கணக்கு அலுவலரால், ஆண்டுதோறும் கணக்குப் பட்டியல்கள் ஒவ்வொரு தொழிலாளருக்கும் இத் துறையில், அலுவலர்களின் மூலமாக அனுப்பப்படுகின்றன.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

[1978 ஆகஸ்டு 31

**வினா 33**—திரு. கு. ரமணி: மாண்புமிகு செய்தி-அற நிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் அரசு சின்கோனா துறையில் உள்ள தொழிலாளர்களுக்கு வேலையிலிருந்து நீங்கும் காலத்தில் பணிக்கொடை கொடுக்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், என்ன விகிதாசாரத்தில் கொடுக்கப் படுகிறது ?

**விடை**—(அ) ஆம்.

(ஆ) "பணிக்கொடை வழங்குதல் சட்டம், 1972"-ன்படி ஓய்வு பெறும் அரசு சின்கோனாத் தோட்டத் தொழிலாளர்களுக்கு பணி புரிந்த ஒவ்வொரு வருட சேவைக்கும் 15 நாட்களின் ஊதியமும், ஆறு மாதத்திற்கு மேற்பட்ட சேவையை ஒரு வருடமாகக் கணக்கிட்டு, 20 மாத ஊதியத்திற்கு அதிகமாகாமல், பணிக் கொடை வழங்கப்படுகிறது.

## மேலூர் பஞ்சாயத்தில் செகண்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் நீதி மன்றம்

**வினா 34**—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், நத்தம் தொகுதி, மேலூர் பஞ்சாயத்தில் செகண்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசாங்கத்தின் ஆலோசனையில் இருக்கிறதா ?

(ஆ) ஆம் என்றால், எப்போது ஆரம்பிக்க இருக்கிறது?

**விடை**—(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1978 ஆகஸ்டு 31]

## தருமபுரி மாவட்டத்திற்கு சிறப்பு நிதி ஒதுக்கீடு.

**வினா 35**—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பின்தங்கிய மாவட்டமான தருமபுரி மாவட்டத்திற்கு தமிழக அரசு சிறப்பு நிதி இந்த ஆண்டு (1977–78) ஒதுக்கியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை ஒதுக்கியுள்ளது ?

(இ) எந்தப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது ?

(ஈ) மத்திய அரசு சிறப்பு வளர்ச்சி நிதி ஒதுக்கியுள்ளதா ?

(உ) எவ்வளவு தொகை ஒதுக்கியுள்ளது ?

**விடை**—(அ) ஆம்.

(ஆ) 2,43,801 ரூபாய் தமிழக அரசு சிறப்பு நிதியாக ஒதுக்கியுள்ளது.

(இ) ஊராட்சி ஒன்றிய சாலைகளைப் பராமரிக்கும் பணிக்காக இச்சிறப்பு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஈ) ஆம்.

(உ) ஒதுக்கியுள்ள தொகையின் விவரம் கீழ்வருமாறு:—

| | | ரூபாய். |
|---|---|---|
| 1 | சூளகிரி வட்டாரத்தில் கலவை உர அபிவிருத்திக்காக .. .. .. | 44,200 |
| 2 | மீன்பிடிப்போர் வளர்ச்சி நிறுவனத்திற்காக— மானியம் .. .. | 6,88,000 |
| | கடன் .. .. .. .. | 1,20,000 |
| 3 | வறட்சி மீட்புப் பணித் திட்டத்திற்காக .. .. .. | 1,90,00,000* |
| 4 | பாம்பார் அணைத் திட்டத்திற்காக .. | 60,00,000 |
| 5 | ஒருங்கிணைந்த கிராமப்புற அபிவிருத்தித் திட்டம் (மானிய உதவித் தொகை).. | 69,66,500 |

* இதில் 50 சதவீதம் மாநில அரசின் பங்காகும்.

[1978 ஆகஸ்டு 31

### அரூர் பஸ் நிலையத்திற்கு அண்மையில் உள்ள பாலத்தைப் புதுப்பித்தல்.

**வினா 36— திரு. எம். அண்ணாமலை :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரூர் பஸ் நிலையத்திற்கு அண்மையில் சேலம்—திருப்பத்தூர் நெடுஞ்சாலையில் உள்ள பாலத்தைப் புதுப்பிக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**விடை :** இல்லை.

### களக்காடு சரணாலயப் பகுதியில் கால்நடைகள் மேய்ச்சலுக்கு அனுமதி.

**வினா 37— திரு. எம். ஜான் வின்சென்ட் :** மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், களக்காடு பகுதியில் ஆடு, மாடுகள் மேய்ச்சலுக்கு அனுமதி ஏதும் தரப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு பரப்பளவில் ?

**விடை :** (அ) ஆம்.

(ஆ) பொது மக்களுடைய கோரிக்கைக்குச் செவி சாய்த்து சரணாலயத்தின் ஒரு சில இடங்களில்மட்டும் கால்நடைகளை மேய்ப்பதற்கு அனுமதி 1977–78-ல் கொடுக்கப்பட்டுள்ளது. அனுமதிக்கப்பட்ட பரப்பளவு சுமார் 3,200 ஹெக்டேர்.

### களக்காடு பகுதியில் பன்றிகளால் பயிர்களுக்குச் சேதம்.

**வினா 38— திரு. எம். ஜான் வின்சென்ட் :** மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம், களக்காடு சரணாலயங்கள் பகுதியில் பன்றிகள் பயிரை அழிப்பதைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?



1978 ஆகஸ்டு 31]

**விடை**—நெல்லை மாவட்டம் களக்காடு சரணாலயத்தின் பரப்பு 22,388 ஹெக்டேர் ஆகும். சரணாலயத்திற்கு வெளியே வந்து விவசாயப் பூமிகளில் பயிரை அழிக்கும் காட்டுப் பன்றிகளை சுட்டுக்கொல்ல குறிப்பிட்டவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

### மானாமதுரைத் தொகுதியிலுள்ள பெரிய கண்மாய்களை ஆழப்படுத்துதல்.

**வினா 39— திரு. வ. மு. சுப்பிரமணியன் :** மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மானாமதுரைத் தொகுதியிலுள்ள கொந்தகை, கானூர், மாரநாடு முதலிய பெரிய கண்மாய்களை தூர் எடுத்து ஆழப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

**விடை**— இல்லை.

### ஆதமங்கலம் கிராமத்தில் கால்நடை துணை மருத்துவமனை

**வினா 40— திரு. பெ. சு. திருவேங்கடம் :** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசபாக்கம் ஒன்றியம் ஆதமங்கலம் கிராமத்திற்கு புதியதாக துணை கால்நடை மருத்துவ மனை அமைக்கும் திட்டம் அரசிடம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(இ) எப்போது திறக்கப்படும் ?

**விடை**—(அ), (ஆ) மற்றும் (இ) கலசப்பாக்கம் ஒன்றியம் ஆதமங்கலம் கிராமத்தில் 1978–79 ஆம் ஆண்டில் கால்நடை மருந்தகம் துவங்கப்படும்.

### உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்கள்

**வினா 41— திரு. பெ. சு. திருவேங்கடம் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியில் உள்ள நார்த்தாம்பூண்டி அரசினர் உயர்நிலைப்பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டும் குறிப்பு அரசினிடம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(இ) எப்பொழுது கட்டிட வேலை ஆரம்பிக்கப்படும்?

விடை—(அ) மற்றும் (ஆ) ரூ. 55,000 மதிப்பில் மூன்று வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் கட்டுவதற்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

(இ) கட்டிடத்தின் கொத்து வேலைகள் முடிந்து, கதவு சன்னல்கள் பொருத்தும் வேலை நடந்து கொண்டிருக்கிறது.

வினா 42—திரு. டி. புஷ்பராசு: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் வடகாடு பஞ்சாயத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன?

விடை—(அ) ஆம்.

(ஆ) அப்பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கு ரூ. 28,000 அனுமதிக்கப்பட்டு கட்டிடம் கட்டும் பணி தற்போது அஸ்திவாரச் சுவர் நிலைவரை வந்துள்ளது.

வினா 43—திரு. எஸ். பழனிசாமி: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறுமுகை உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்களை பழுது பார்க்கும் செயற் குறிப்புகள் அரசிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—(அ) மற்றும் (ஆ) 1977-78-ம் ஆண்டு நிதி பற்றாக்குறை காரணமாக, இப்பள்ளிக் கட்டிடங்களை பழுது பார்ப்பதற்கான செயற் குறிப்புகள் 1978-79-ம் ஆண்டில் புதுப்பிக்கும்படி பள்ளிக் கல்வி இயக்குநரால், கோவை முதன்மைக் கல்வி அலுவலருக்கு திருப்பி அனுப்பப்பட்டது. இவ்வாண்டு அச் செயற் குறிப்பு பள்ளிக் கல்வி இயக்குநரால் மீண்டும் ஆய்வு செய்யப்படும்.





## கோவில்பட்டி வட்டத்தில் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு.

வினா 44—திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

கோவில்பட்டித் தாலுக்காவில் பம்பு செட்டுக்கு மின் இணைப்புக் கோரி இதுவரை மனுச் செய்து எத்தனை பேர்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படாமல் உள்ளது?

விடை—1978-ம் ஆண்டு மார்ச் திங்கள் 1-ம் தேதி வரை 888 மனுக்கள் நிலுவையில் உள்ளன.

## கைலாசபுரம் அணைக்கரைகளை பலப்படுத்தல்.

வினா 45—திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் தாலுகா கைலாச புரம் அணைக்கட்டுப் பகுதியில் கரையை பலப்படுத்தவும் சிமிட் மெண்ட் கட்டவும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—ஆம்.

## அரிசனங்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கல்.

வினா 46—திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

கோவில்பட்டி தாலுகாவில் 1972-ம் ஆண்டு முதல் இன்று வரை எந்தெந்த கிராமங்களில் அரிசனங்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன?

விடை—கோவில்பட்டி தாலுகாவில் 1972-ம் ஆண்டு முதல் இன்றுவரை, அவல்நாதம், காட்டுநாயக்கர்பட்டி, வானரமுட்டி, கயத்தார், எட்டயபுரம், கழுகுமலை, சிவந்திபட்டி, செட்டிக்குறிச்சி, துறையூர், நாவலக்கம்பட்டி, கல்லூரணி, (வானரமுட்டி), ராஜாபுதுக்குடி, நல்லதின்புதூர் ஆகிய 13 கிராமங்களைச் சேர்ந்த அரிசனங்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. பட்டா பெற்றவர்களின் மொத்த எண் ணிக்கை 321.

1978 ஆகஸ்டு 31

வினா 47—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கோவை மாவட்டம், மதுக்கரை ஒன்றியம், கந்தேகவுண்டன் சாவடியில் தெற்காலூர் அரிசன மக்கள் வீட்டுமனை கேட்டு விண்ணப்பித்துள்ளனரா ?

(ஆ) அம்மக்கள் தற்போது குடியிருக்கும் இடம் புறம்போக்கு நிலமா ? அல்லது தனியார் நிலமா ?

விடை—(அ) கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை ஒன்றியம் கந்தேகவுண்டன் சாவடி தெற்காலூர் என்பது எட்டிமடை கிராமத்தில் ஒரு பகுதியே (மஜரா) ஆகும். கந்தேகவுண்டன் சாவடி என்று தனியாக ரெவின்யூ கிராமம் எதுவும் இல்லை. மேற்படி கிராமத்திலுள்ள அரிசன மக்களிடமிருந்து வீட்டுமனை வேண்டி விண்ணப்பம் எதுவும் கிடைக்கப் பெறவில்லை.

(ஆ) அரிசன மக்கள் தற்போது குடியிருக்கும் இடம் எட்டிமடை கிராமத்திலுள்ள சர்வே நெ. 605 ஆகும். இந் நிலம் தனியார் நிலமாகும்.

வினா 48—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தென்னாற்காடு மாவட்டம், அரிசனங்களுக்கு வட்ட வாரியாக எத்தனை பேர்களுக்கு அரிசன நலத்துறை மூலமாக 1975-76, 1976-77, 1977-78-ம் ஆண்டுகளில் நில ஆர்ஜிதம் செய்து வழங்கப்பட்டது?

விடை—தென்னாற்காடு மாவட்டத்தில் வட்ட வாரியாக 1975-76, 1976-77 மற்றும் 1977-78-ம் ஆண்டுகளில் அரிசனங்களுக்கு வீட்டுமனை வழங்கப்பட்டுள்ளன, விவரம் :—

| வட்டங்களின் பெயர். | 1975-76. | 1976-77. | 1977-78. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 விருத்தாச்சலம் .. | 771 | 811 | 319 |
| 2 கல்லக்குறிச்சி .. | 416 | 540 | 354 |
| 3 திண்டிவனம் .. | .. | 207 | 57[illegible] |
| 4 செஞ்சி .. .. | .. | 170 | 403 |
| 5 சிதம்பரம் .. .. | 390 | 809 | 690 |
| 6 கடலூர் .. .. | 404 | 850 | ... |
| 7 பண்ருட்டி .. .. | 450 | 719 | 163 |
| 8 விழுப்புரம் .. | 265 | 616 | 831 |
| 9 உளுந்தூர்பேட்டை. | 100 | 407 | 1,059 |
| 10 திருக்கோயிலூர் .. | 332 | 283 | 417 |
| மொத்தம் .. | 3,128 | 5,412 | 4,814 |



1978 ஆகஸ்ட் 31]

வினா 49—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தஞ்சை மாவட்டத்தில் மனை இல்லா அரிசனக் குடும்பங்களுக்கு 1975-76, 1976-77, 1977-78 ஆண்டுகளில் எத்தனை மனைகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன ?

விடை—

| ஆண்டுகள். | இலவசமாக வீட்டு மனை வழங்கப்பட்ட எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1975-76 .. .. .. .. | 402 |
| 1976-77 .. .. .. .. | 906 |
| 1977-78 .. .. .. .. | 1,474 |

## இடையர்பாளையம் கிராமத்திற்குக் குடிநீர் வழங்கல்.

வினா 50—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பேரூர் ஒன்றியம், குனியமுத்தூர் பேரூராட்சியில் சுகுணாபுரம் குழாய்க் கிணற்றில் இருந்து இடையர்பாளையம் கிராமத்திற்குக் குடிநீர் வழங்கும் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு ?

(ஆ) இத்திட்டம் நிறைவேறுவதில் தாமதப்பட என்ன காரணம் ?

(இ) அத்திட்டத்தில் நரசிம்மபுரம் சேர்க்கப்பட்டுள்ளதா ?

விடை—(அ) அதுபோன்ற திட்டமே பரிசீலனையில் இல்லை. ஆனால், சுகுணாபுரம், இடையர்பாளையம் ஆகிய இரு கிராமங்களிலும் 1977-78 ஆம் ஆண்டு வறட்சி நிவாரணப் பணியின் கீழ் தனித்தனியே குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு, அவற்றிற்கு கைப் பம்பும் பொருத்தப்பட்டு, குடிநீர் நல்ல முறையில் வழங்கப்பட்டு வருகிறது. இக்குழாய்க் கிணறுகள் அமைக்க முறையே ரூ. 25,000-ம், ரூ. 32,300-ம், செலவாயது.

(ஆ) மேற்கூறிய நிலையில் இக்கேள்விக்கு இடமில்லை.

(இ) நரசிம்மபுரத்திலும், ரூ. 32,300 செலவில் ஒரு குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு, அதற்கு கைப்பம்பும் பொருத்தப்பட்டு, குடிநீர் நல்ல முறையில் வழங்கப்பட்டு வருகிறது.

[1978 ஆகஸ்ட் 31

வினா 51—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தென்னார்காடு மாவட்டம், செஞ்சி, வல்லம், மேல் மலையனூர், ஒலக்கூர் ஒன்றியங்களில் 1977–78, 1978–79-ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் எடுத்துக்கொள்ளப்பட இருக்கும் திட்டங்கள் எத்தனை?

விடை:— விவரங்கள் பின்வருமாறு :—

| வரிசை எண். | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர். | 1977–78-ம் ஆண்டில் குடிநீர்த் திட்டங்கள் அமைக்க எடுத்துக்கொள்ளப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை. | 1978–79-ம் ஆண்டில் குடிநீர்த் திட்டங்கள் அமைக்க எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் கிராமங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | செஞ்சி .. | 13 | 3 |
| 2 | வல்லம் .. | 6 | 15 |
| 3 | மேல்மலையனூர் | 11 | 3 |
| 4 | ஒலக்கூர் | 7 | 3 |
| | | 37 | 24 |

## மதுக்கரை ஒன்றியத்தில் 'அம்பர் சர்க்கா' நிலையம் அமைத்தல்.

வினா 52 :— திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கோவை மாவட்டம், மதுக்கரை ஒன்றியம், எட்டிமடை கிராம மக்கள், 'அம்பர் சர்க்கா' நிலையம் துவங்க விண்ணப்பித்துள்ளனரா?

(ஆ) ஆம் எனில் அதன்மீது உத்திரவு ஏதும் இட்டுள்ளதா?

விடை —(அ) கிராமிய நூற்பு நிலையம் (அம்பர் சர்க்கா நிலையம்) துவங்குவது குறித்து எட்டிமடை கிராம மக்களிடமிருந்து எவ்வித விண்ணப்பமும் பெறப்படவில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.



1978 ஆகஸ்ட் 31]

## சீரபாளையம் கிராம அரிசனக் குடியிருப்புக்கு "சுடுகாடு நிலம்" வழங்கல்.

வினா 53— திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், மதுக்கரை ஒன்றியம், சீரபாளையம் கிராமத்தில் அரிசன மக்கள் சுடுகாடு நிலம் கேட்டு விண்ணப்பித்துள்ளார்களா?

(ஆ) அதன்மீது மேற்கொண்ட நடவடிக்கை யாது?

விடை— (அ) கோவை மாவட்டம், மதுக்கரை ஒன்றியம், சீரபாளையம் கிராமத்தில் அரிசன மக்கள் "சுடுகாடு நிலம்" கேட்டு இதுவரை விண்ணப்பம் ஏதும் கிடைக்கப் பெறவில்லை.

(ஆ) விண்ணப்பம் பெறப்படாதபோதிலும், மாவட்ட ஆட்சியாளர் கோயம்புத்தூர் அரிசன நலத்துறை தனித் தாசில்தாரை அங்குள்ள அரிசன மக்களோடு தொடர்பு கொண்டு சுடுகாட்டிற்கு நிலம் தேவைப்படுமானால் உடனே நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப் பணித்துள்ளார்.

## வேடப்பட்டி அரிசனக் குடியிருப்புக்குத் தடுப்புச்சுவர் அமைத்தல்.

வினா 54 —திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா :—

(அ) பேரூர் ஒன்றியம் வேடப்பட்டி அரிசன காலனியில் வாய்க்கால் நீர் உள்ளே வராமல் தடுக்க, தடுப்பு சுவர் ஒன்று கட்டும் செயற்குறிப்பு உண்டா?

(ஆ) எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—(அ) & (ஆ) : பேரூர் ஒன்றியம் வேடப்பட்டி அரிசன காலனிக்கு வாய்க்கால் நீர் உள்ளே வராமல் தடுக்க தடுப்புச் சுவர் ஒன்று 19—3—1978-ல் கட்டி முடிக்கப்பட்டது.

## தென்னாற்காடு மாவட்டத்தில் அரிசனநலப் பணிகள்.

வினா 55—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தென்னாற்காடு மாவட்டத்தில் அரிசன நலத்துறை மூலமாக ஒவ்வொரு கோட்டத்திற்கும் எவ்வளவு தொகை கடந்த 1977–78-ல் ஒதுக்கப்பட்டது?

[1978 ஆகஸ்ட் 31

விடை—தென்னாற்காடு மாவட்டத்தில் அரிசன நலத் துறை மூலமாக ஒவ்வொரு கோட்டத்திற்கும் 1977–78-ல் கீழேகண்டுள்ளவாறு தொகை ஒதுக்கப்பட்டது:—

| கோட்டம். | தொகை. (ரூபாய்.) |
|---|---|
| சிதம்பரம் .. .. .. .. | 16,97,100 |
| திண்டிவனம் .. .. .. | 7,98,800 |
| திருக்கோயிலூர் .. .. .. | 12,18,900 |
| விருத்தாசலம் .. .. .. | 8,75,400 |

தவிர ரூ. 4,97,500 மாவட்டத்திற்கு மொத்தமாகவும் அரசு ஒதுக்கியுள்ளது.

## கல்லாற்றின் குறுக்கே அணை.

வினா 56— திரு. சின்னசேலம் மா. சுப்பிர்மணியன்: மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

திருச்சி மாவட்டம், பெரம்பலூர் வட்டத்திலுள்ள மலையாளப்பட்டி கிராமத்திற்கு மேற்கே முட்டுளு என்ற இடத்தில் கல்லாற்றின் குறுக்கே அணைக்கட்டுவது சம்பந்தமாக அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—. இத்திட்டம் ஆய்வு செய்யப்பட்டு பிறகு கைவிடப்பட்டது.

## பொன்பரப்பிப் பகுதிக்குக் குழாய்க் கிணறுகள்.

வினா 57— திரு. ஆர். மார்க்கபந்து: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

திருச்சி மாவட்டம் பொன்பரப்பி பகுதிகளில் குடிநீர் ■ற்றுக்குறையைப் போக்க (Bore well system) அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உண்டா?

விடை—இல்லை.

## மதுரா ரேணுகோபாலபுரம் கிராமத்தில் தெரு விளக்குகள் அமைத்தல்.

வினா 58—திரு. ந. வேணுகோபால்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஏந்தல் ஊராட்சியின் மதுரா ரேணுகோபாலபுரம் கிராமத்தில் தெரு விளக்குகள் அமைக்கக் கோரி பொதுமக்களால் அனுப்பப் பட்டுள்ள விண்ணப்பத்தின்மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?



1978 ஆகஸ்ட் 31]

விடை—ரேணுகோபாலபுரத்திற்கு இரண்டு விளக்குகள் அமைக்க ஏந்தல் ஊராட்சித் தலைவர் கோரியிருந்தார். ஆனால் மின்வாரியத்தினர் குறைந்தது 4 அல்லது 5 விளக்குகள் அமைக்கும் திட்டத்தைத்தான் மேற்கொள்ள இயலுமென ஊராட்சித் தலைவரிடம் தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது. தேவையான இரு விளக்குகளை மட்டும் அமைக்கக் கேட்டு ஊராட்சித் தலைவர் மீண்டும் மின்வாரியத்தினரைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

## அவிநாசி வட்டத்தில் கால்நடை மருத்துவமனை.

வினா 59— திரு. எஸ். என். பழனிசாமி: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

(அ) அவிநாசி வட்டத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எவ்விடத்தில் ஆரம்பிக்கப்படும்?

விடை—(அ) & (ஆ) கால்நடை மருந்தகம் ஒன்று அவிநாசியில் செயல்படுகின்றது. தற்போது, அவிநாசி வட்டத்தில் மற்றொரு கால்நடை மருந்தகம் அமைக்கும் உத்தேசம் இல்லை.

## தலைமை ஆசிரியர்களுக்குத் தேர்வு நிலைப் பதவி.

வினா 60— திரு. கோ. இளங்கோவன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்குத் தேர்வு நிலைப் பதவிகள் வழங்குவதற்கு அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனின், அதன் விபரம் என்ன?

விடை—(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## கல்வராயன் மலைப்பகுதியில் பிணைத் தொழிலாளர் முறை.

வினா 61— திரு. சி. கோவிந்தராசன்: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்வராயன் மலைப்பிரதேசத்தில் பிணைத் தொழிலாளர் முறை உள்ளதா என்பதை ஆராய நிதி அமைச்சகம் மூலம் ஓர் குழு அனுப்பி வைக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அந்தக் குழுவின் ஆராய்ச்சி முடிவு என்ன?

[1978 ஆகஸ்ட் 31

விடை—(அ) கல்வராயன் மலைப்பிரதேசத்தில் பிணைத் தொழிலாளர் முறை உள்ளதா என்பதை ஆராய நிதி அமைச்சகம் மூலம் குழு எதுவும் அனுப்பி வைக்கப்படவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

## சாத்தூரிலுள்ள ஆட்டுப்பண்ணை.

விஞ 62— திரு. எஸ். சிவசாமி: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) முகவை மாவட்டம் சாத்தூரிலுள்ள அரசினர் ஆட்டுப் பண்ணை நீண்ட நாட்களாகச் செயல்பட்டும் தரமான ஆடுகள் உற்பத்தி செய்யப்படாததன் காரணம் என்ன?

(ஆ) மேலும் அபிவிருத்தி செய்யப்படுமா?

விடை—(அ) & (ஆ) இப்பண்ணையில் தரமான ஆடுகள் வளர்க்கப்படுகின்றன. இது நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. மேலும் ஆடுகள் வாங்கி அபிவிருத்தி செய்யவும், நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்பண்ணையில், துவக்கத்தில் கீழ்க் கரிசல், இராமநாதபுரம் வெள்ளை இனம், மேச்சேரி மற்றும் கலப்பினங்கள் பராமரிக்கப்பட்டு வந்தன. இப்பண்ணையை நன்கு ஆய்வு செய்த பிறகு தற்போது இராமநாதபுரம் வெள்ளை இனம் மற்றும் வேம்பூர் இனம் மட்டும் வளர்க்கத் தகுந்த இடமெனக் கருதி இவ்வினங்கள் தற்போது பராமரிக்கப்பட்டு வருகின்றன. 1978 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ந் தேதி அன்று இவ்வாட்டுப் பண்ணையில் 1,425 இராமநாதபுரம் வெள்ளை இன ஆடுகளும்/ஆட்டுக் குட்டிக்களும், 108 வேம்பூர் ஆடுகளும்/ ஆட்டுக் குட்டிகளும் இருக்கின்றன. 1974—75 ஆம் ஆண்டில்/ 194 ஆடுகளும், 1975—76 ஆம் ஆண்டில் 525 ஆடுகளும், 1976—77 ஆம் ஆண்டில் 209 ஆடுகளும் நல்ல விலைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

## ஸ்ப்ரேயர்கள் பழுதுபார்க்கும் பட்டறைகள்.

வினா 63— திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் ஸ்ப்ரேயர்களை பழுதுபார்க்கும் பட்டறைகள் அமைக்கும், உத்தேசம் அரசிடம் உள்ளதா—

(ஆ) தற்போது எந்தெந்த மாவட்டங்களில் இது போன்ற பட்டறைகள் இயங்கி வருகின்றன?



1978 ஆகஸ்ட் 31]

விடை—(அ) & (ஆ) தமிழகத்தில் சென்னை, வேலூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருவாரூர், கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் வேளாண்மை இயந்திரங்களைப் பழுது பார்க்க வேளாண்மை பொறியியற் பணிக் கூடங்கள் உள்ளன. அவைகளில் தெளிப்பான்களும் பழுதுபார்க்கப்படுகின்றன. நந்தனம், கடலூர், புதுக்கோட்டை, சிவகங்கை, தருமபுரி, சேலம் ஆகிய இடங்களில் சிறிய பணிக்கூடங்கள் உள்ளன. இக்கூடங்களும் பயிர் பாதுகாப்புக் கருவிகளைப் பழுதுபார்க்கும் பணியினை மேற்கொள்கின்றன. பயிர் பாதுகாப்புக் கருவிகளை மட்டுமே பழுது பார்க்க திருநெல்வேலி, கோயம்புத்தூர், சேலம், சென்னை, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் ஒவ்வொரு பிரிவும் தஞ்சாவூர் மாவட்டத்தில் இரண்டு பிரிவுகளும் ஆகமொத்தம் ஏழு நடமாடும் பழுது பார்க்கும் பிரிவுகள் இயங்கி வருகின்றன. புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கியிலும், ஆவுடையார் கோவிலிலும் தஞ்சை மாவட்டத்தில் 34 வட்டார வளர்ச்சி அலுவலகங்களிலும் மொத்தம் 36 பொருத்துநர்-மற்றும்-இயந்திரக் கம்மியர் பயிர் பாதுகாப்பு கருவிகளைப் பழுதுபார்க்க நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையக்கத்தின் கீழ் இயங்கும் வேளாண்மைப் பணி மையங்களும் தனியார் பணிக்கூடங்களும் பயிர்பாதுகாப்புக் கருவிகளைப் பழுதுபார்க்கும் பணியை மேற்கொண்டு வருகின்றன.

கடந்த மூன்றாண்டுகளில் பழுது பார்க்கப்பட்ட தெளிப்பான்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| | | | | |
|---|---|---|---|---|
| 1974-75 | .. | .. | .. | 5,016 |
| 1975-76 | .. | .. | .. | 7,007 |
| 1976-77 | .. | .. | .. | 6,810 |

## பாக்குப் பண்ணைகள்.

வினா 64—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பாக்குப் பண்ணைகள் அமைக்க உத்தேசம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது?

விடை—(அ) தமிழ்நாட்டில் பாக்குப் பண்ணைகள் அமைக்க அரசிடம உத்தேசம் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[1978 ஆகஸ்ட் 31

## வெளி மாநிலங்களுக்கு அரிசி கடத்தல்.

**வினா 65—திரு. எஸ். கணேசன்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) 1977-78 ஆம் நிதி ஆண்டில் டிசம்பர் முடிய நெல் அல்லது அரிசி வெளி மாநிலங்களுக்குக் கடத்த முற்பட்டு கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை என்ன?

(ஆ) எத்தனை பேர்களுக்குத் தண்டனை கொடுக்கப்பட்டது?

**விடை**—(அ) 105 (ஒரு நூற்றைந்து).

(ஆ) கைது செய்யப்பட்ட 105 பேர்களின் மீது எடுக்கப் பட்ட நடவடிக்கை கீழே குறிக்கப்பட்டுள்ளது—

| | |
|---|---|
| தண்டனை வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை .. .. .. | 67 |
| விடுவிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை .. | 6 |
| நீதிமன்றங்களில் வழக்கு தொடரப்பட்டு விசாரணை முடியாமல் இருப்பவர்களின் எண்ணிக்கை .. .. | 17 |
| நடவடிக்கை கைவிடப்பட்ட நபர்களின் எண்ணிக்கை .. .. | 15 |

## அரியலூரில் 2-ம் வகுப்பு நீதி மன்றம்.

**வினா 66—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரியலூரில் 2-ம் வகுப்பு நீதிமன்றம் ஏற்படுத்தும் உத்தேசம் அரசிடம் உண்டா?

**விடை**—இல்லை.

## திருச்சி-சென்னை விரைவுப் பேருந்து.

**வினா 67—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிக்கும் சென்னைக்கும் இடையே லால்குடி, அரியலூர், கோவில்பாளையம், வயலப்பாடி, தொழுதூர் வழியாக விரைவுப் பேருந்து விடக் கோரும் பொதுமக்கள் கோரிக்கை மீது அரசு எடுத்த முடிவு என்ன?



1978 ஆகஸ்ட் 31]

**விடை**—திருச்சிக்கும், சென்னைக்கும் இடையே லால்குடி, அரியலூர், கோவில்பாளையம், வயலப்பாடி தொழுதூர் வழியாக விரைவுப் பேருந்து விடக் கோரும் பொதுமக்கள் கோரிக்கை ஏதும் பல்லவன் போக்குவரத்துக்கழகத் (விரைவு)திற்கு வர வில்லை. மேலும், சென்னையிலிருந்து திருச்சிக்கு தினசரி 8 துரித பேருந்துகளும், சென்னையிலிருந்து திருச்சி வழியாக மதுரை, தூத்துக்குடி, நாகர்கோவில் போன்ற இடங்களுக்கு 44 துரித பேருந்துகளும் இயங்குவதால் அதிகப்படியான பேருந்து மேலே குறிப்பிட்ட வழித்தடத்தில் தேவையில்லை.

## தஞ்சை மாவட்டத்தில் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம்.

**வினா 68—திரு. டி. எம். தைலப்பன்:** மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உள்ள 50 கிளை நிலையங்களை 100 கிளை நிலையங்களாக விஸ்தரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதா?

**விடை**—இல்லை.

## சிவகாசி-விருதுநகர் நெடுஞ்சாலை விஸ்தரிப்புத் திட்டம்.

**வினா 69—திரு. கே. இராமசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சிவகாசி-விருதுநகர் நெடுஞ்சாலை விஸ்தரிப்புத் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) இந்த சாலையை தேசிய நெடுஞ்சாலையில் சேர்க்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(இ) இந்த சாலையில் அர்சுனா நதியின் குறுக்கே ஒரு பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை**—(அ) இல்லை.

(ஆ) இல்லை.

(இ) இல்லை.

## திருத்துறைப்பூண்டி பேரூராட்சியில் இனாம் நிலங்கள்.

**வினா 70—திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மைனர் இனாம் ஒழிப்புச் சட்ட பிரகாரம் திருத்துறைப் பூண்டி பேரூராட்சியில் குடியிருந்து வருபவர்களுக்குப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை**—இல்லை.

[1978 ஆகஸ்ட் 31

## 'ஓதுவார்' பயிற்சிப் பள்ளிகள்.

வினா 71—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்து அறநிலையத் துறை நமது மாநிலத்தில் எத்தனை 'ஓதுவார்' பயிற்சிப் பள்ளிகளை நடத்தி வருகின்றது?

(ஆ) ஆண்டுதோறும் எத்தனை மாணவர்கள் பயிற்சி பெறுகின்றனர்?

விடை—(அ) இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் பார்வையிலுள்ள கோயில்களின் சார்பில் ஏழு ஓதுவார் பயிற்சிப் பள்ளிகள் நடந்து வருகின்றன.

(ஆ) ஆண்டுதோறும் மொத்தம் 197 மாணவர்கள் ஓதுவார்களாகப் பயிற்சி பெறுகின்றனர்.

## வலங்கைமான் தொகுதி அரிசன மக்களுக்கு வீடுகள்.

வினா 72—திரு. ஏ. செல்லப்பா: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம் வலங்கைமான் தொகுதியில் அரிசன மக்களுக்காக வீடுகட்டும் திட்டம் போடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனின்-எந்தெந்த கிராமங்களில் வீடுகள் கட்டித் தரப்படும்?

விடை—(அ) தஞ்சாவூர் மாவட்டம் வலங்கைமான் தொகுதியில் அரிசன மக்களுக்காக வீடு கட்டும் திட்டம் தற்போது இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

## மதுக்கரை ஒன்றியத்தில் நூல் நிலையம்.

வினா 73—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி மதுக்கரை ஒன்றியம் செட்டிப்பாளையத்தில் 5-11-1977-ல் நூல் நிலையம் ஏற்படுத்த மனுநீதி அதிகாரிகளிடம் பொதுமக்கள் மனு கொடுத்தனரா?

(ஆ) ஆம் எனில் அதன் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?



1978 ஆகஸ்ட் 31]

விடை—(அ) ஆம்.

(ஆ) பொதுமக்கள் சார்பில் ஐந்து விண்ணப்பங்கள் கிளை நூலகம் ஒன்று திறக்கக்கோரி கிடைக்கப்பெற்றன. நடப்பு ஆண்டில் நிதி பற்றுக்குறை காரணத்தால் புதிய நூலகம் ஏற்படுத்துவது தற்போதைக்குச் சாத்தியமில்லை. ஆயினும் 1978-79 ஆம் ஆண்டுக்கான இரண்டாம் பகுதித் திட்டமாக புதிய நூலகங்கள் அமைப்பது பற்றிய கருத்து இயக்குநரால் கொண்டுவரப்பட உள்ளது. அச்சமயம் இது போன்ற கோரிக்கைகள் கவனிக்கப்படும்.

## கோட்ட வளர்ச்சி அதிகாரிகளுக்கு ஜீப் வழங்கல்

வினா 74—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள கோட்ட வளர்ச்சி அதிகாரி—(D.D.O.)க்களுக்கு ஜீப் வழங்கும் திட்டம் அரசு பரிசீலிக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது நிறைவேறும்?

விடை—(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

## திருத்தணி கோயிலில் படப்பிடிப்பு.

வினா 75—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தேவஸ்தான கோயிலினுள் அல்லது வெளியில் படப்பிடிப்பு ஏதேனும் 1977-78-ம் ஆண்டு எடுக்கப்பட்டதா?

(ஆ) ஆம். எனில், அதற்கு அரசாங்கம் அனுமதி பெறப்பட்டதா?

(இ) அதற்கான கட்டணம் எவ்வளவு பெறப்பட்டது?

விடை—(அ) ஆம், செங்கற்பட்டு மாவட்டம் திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் 26—12—77 முதல் 28—12—77 முடிய சென்னை ''சுப்பு புரொடக்‌ஷன்'' என்ற சினிமா படப்பிடிப்பு நிறுவனத்தார் தங்களது படமான ''வருவான் வடிவேலன்'' என்ற படத்திற்குப் படப்பிடிப்பு நடத்தினர்.

(ஆ) இதற்கு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையரால் அனுமதி வழங்கப்பட்டது.

(இ) படப்பிடிப்பு நடைபெற்ற மூன்று நாட்களுக்கும் நாள் ஒன்றுக்கு ரூ. 250 வீதம் மொத்தம் ரூ. 750-ஐ திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி ஆலயம் கட்டணமாக வசூலித்துள்ளது.

[1978 ஆகஸ்ட் 31

## பழனி தாலூகாவில் பேருந்து விபத்துக்கள்.

வினா 76—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தாலூகாவில் 1977 ஜூன் மாதத்தில் இருந்து இதுவரை எத்தனை பஸ் விபத்துக்கள் ஏற்பட்டு உள்ளன?

(ஆ) அதில் எத்தனை பேர் மரணம் அடைந்துள்ளனர்?

(இ) மரணம் அடைந்தவர்களின் குடும்பத்திற்கு அரசு ஏதாவது உதவி செய்துள்ளதா?

விடை—(அ) பழனி தாலூகாவில் 1977 ஜூன் மாதத்திலிருந்து 1978 ஏப்ரல் வரை பத்து பேருந்து விபத்துக்கள் நடந்துள்ளன.

(ஆ) அதில் மொத்தம் 4 பேர் மரணமடைந்துள்ளனர்.

(இ) மேற்குறிப்பிட்ட விபத்துக்களைப் பொறுத்தமட்டில் எவருக்கும் நஷ்ட ஈடு வழங்கப்படவில்லை.

## உருளைக் கிழங்கு வத்தல் தயாரிப்பு

வினா 77—திரு. பேர். கோபாலன், திரு. கே. உச்சி:— மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உதகமண்டலத்தில் கூட்டுறவு முறையில் உருளைக்கிழங்கு வத்தல் தொழிற்சாலை தொடங்கப்பட உள்ளதா?

விடை—ஆம், நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கம் உருளைக் கிழங்கு வத்தல் தொழிற்சாலை ஒன்று அமைக்க மைசூரிலுள்ள மத்திய உணவு தொழில் நுட்ப ஆராய்ச்சி நிலையத்தைக் கொண்டு ஒரு திட்ட அறிக்கை தயாரித்துள்ளது. இத்தொழிற்சாலை அச்சங்கத்தின் சொந்த நிதியைக் கொண்டு 7.30 இலட்ச ரூபாய் மூலதன ஒதுக்கீட்டுடன் மேட்டுப்பாளையத்தில் அமைக்கப்படவிருக்கிறது.

## பெரியகுளம், கொடைக்கானல் வட்டங்களில் கால்நடை மருத்துவ மனைகள்.

வினா 78—திரு. கே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் வட்டம் ஜி. கல்லுப்பட்டியில் கால்நடைகள் அதிக அளவில் இருந்தும், அவைகளுக்கு மருத்துவ வசதி இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?



1978 ஆகஸ்ட் 31]

விடை—(அ) & (ஆ) மதுரை மாவட்டம், பெரியகுளம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஜி. கல்லுப்பட்டி விவசாயப் பெருமக்கள் கிராமத்திலிருந்து 2 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள தெங்குவார் பட்டி கிளை நிலையத்திலும், 3 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள தும்மலைப்பட்டி கிளை நிலையத்திலும் கால்நடைகளுக்கு வைத்திய வசதிகள் பெற்றுக்கொள்ள வசதிகள் உள்ளன.

வினா 79—திரு. கே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் தாலூகாவிலுள்ள மன்னவனூர், பூம்பாறை, கவுஞ்சி, போளூர், பூண்டி, வில்பட்டி, கூக்கால், அடுக்கம் ஆகிய பகுதியில் கால்நடை ஆஸ்பத்திரி வசதியில்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றி அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

விடை—(அ) & (ஆ) மன்னவனூர் கிராமத்தில் செயற்பட்டு வந்த ஒரு கால்நடை மருந்தகம் பொது மக்களின் ஆதரவு இன்மையால் மூடப்பட்டு விட்டது. கொடைக்கானல் வட்டத்திலுள்ள கிராமங்களுக்குக் கீழ்க்கண்ட இடங்களில் செயற்பட்டு வரும் கால்நடை நிலையங்கள் மூலம் கால்நடைகளுக்கு மருத்துவ வசதி கிடைத்து வருகிறது.

1. கால்நடை மருத்துவ மனை, கொடைக்கானல்.
2. கால்நடை மருந்தகம், பண்ணைக்காடு.
3. கிளை நிலையம், நாயுடுபுரம்.
4. கிளை நிலையம், வில்பட்டி,
5. கிளை நிலையம், தாண்டிக்குடி.
6. கிளை நிலையம், கும்பரையூர்.
7. கிளை நிலையம், மங்களம் கோம்பு.

மேலும், கொடைக்கானலிலுள்ள பொலிகாளை நிலையத்தைச் சார்ந்த அலுவலர் குறிப்பிட்ட தடங்களில் ஒவ்வொரு வாரமும் செவ்வாய், வியாழன், சனிக்கிழமைகளில் மருத்துவ உதவியும் செயற்கை முறை இனவிருத்தி வசதியும் அளித்து வருகின்றனர். கால்நடை மருத்துவ உதவியும், செயற்கை முறை இனவிருத்திக்குத் தேவையான வசதிகளும், விவசாயிகள் தனிப்பட்ட மாடு வளர்ப்போர் ஆகியோர்களுக்கு அவர்களது வீட்டு வாயிலிலேயே ரூ. 10 கட்டணமாகப் பெற்றுக் கொண்டு அளிக்கப்படுகிறது.

[1978 ஆகஸ்ட் 31

## மோட்டார் வண்டிகள் மீதான வரிகள்.

வினா 80—திரு. கே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மோட்டார் வண்டிகள் மீதான வரிகள் 31—3—1973 முதல் 1—4—1975 வரை பல லட்ச ரூபாய்களுக்கு மேலாக, வசூலிக்கப்படாமல் இருந்து வருவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு லட்சங்கள் வசூல் செய்யப்படவில்லை? ஆண்டு வாரியாக?

விடை—(அ) ஆம்.

| | | ரூபாய் |
|---|---|---|
| (ஆ) 1973-74 | .. | 46,44,687 |
| 1974-75 | .. | 1,82,05,552 |
| மொத்த வரி பாக்கி | .. | 2,28,50,239 |

இத்தொகை 1—4—1978 நாளில் ரூ. 3,64,030 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

## சென்னையில் பன்றிகள் வளர்ப்பதைத் தடுத்தல்

வினா 81—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகருக்குள் பன்றிகள் வளர்ப்பதைத் தடுக்கச் சட்ட விதிகள் உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், பன்றிகள் நடமாட்டத்தை தடுக்க இப்போது என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன?

விடை—(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## மாயூரத்தில் வேதநாயகம் பிள்ளைக்கு நினைவுச் சின்னம் அமைத்தல், அஞ்சல் தலை வெளியிடல்.

வினா 82—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

"மாயூரம் வேதநாயகம் பிள்ளை நினைவாக மாயூரத்தில் ஒரு நினைவுச் சின்னம் ஏற்படுத்த வேண்டும் என்று அரசுக்கு வேண்டுகோள் வந்துள்ளதா?"

விடை.—இல்லை.



1978 ஆகஸ்ட் 31]

வினா 83—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் வேதநாயகம் பிள்ளை நினைவாக அஞ்சல் தலை வெளியிட வேண்டும் என்று இந்த அரசு மத்திய அரசைக் கேட்டுள்ளதா?

விடை.—இல்லை.

## ஆடு வளர்ப்புப் பண்ணைகள்.

வினா 84—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்சமயம் தமிழகத்தில் உள்ள அரசு ஆடு வளர்ப்புப் பண்ணைகள் எத்தனை?

(ஆ) இந்த ஆடு வளர்ப்புப் பண்ணைகள் இலாபத்தில் நடக்கின்றனவா?

விடை—(அ) தமிழ்நாட்டில் தென் ஆற்காடு மாவட்டத்தில் சின்ன சேலத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் சாத்தூரிலும் ஆக இரண்டு ஆட்டுப் பண்ணைகள் உள்ளன.

(ஆ) இப்பண்ணைகள் உயர் ரக ஆடுகளை உற்பத்தி செய்வதற்காக நிறுவப்பட்டவையாகும். ஆதலின் பொருளாதார ரீதியில் இவை இயங்குவதில்லை.

## திருவண்ணாமலையில் மணிலா எண்ணெய் ஆலை

வினா 85—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலையில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் சார்பில் மணிலா எண்ணெய் பிழியும் ஆலை நிறுவப்பட்டு வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் மொத்த மதிப்பீட்டு தொகை எவ்வளவு?

(இ) எப்போது செயல்படத் துவங்கும்?

விடை—(அ) ஆம். தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் திருவண்ணாமலையில் ஒரு மணிலா எண்ணெய் பிழியும் ஆலை நிறுவிக் கொண்டிருக்கிறது.

(ஆ) மொத்த மதிப்பீட்டுச் செலவு 83.54 இலட்ச ரூபாய் ஆகும்.

(இ) 1978ஆம் ஆண்டு, அக்டோபர் திங்களில் இவ்வாலையைத் தொடங்க தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் திட்டமிட்டுள்ளது.

[1978 ஆகஸ்ட் 31

## கால்நடைக் கிளை நிலையங்கள்.

வினா 86—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமங்களில் செயல்பட்டு வரும் கால்நடைக் கிளை நிலையங்கள் கால்நடைத் துறை உதவி இயக்குநர்களின் நிர்வாகத்தில் செயல்பட்டு வருகிறதா?

(ஆ) ஆம் எனில், ஒன்றிய நிர்வாகத்தின்கீழ் கொண்டு வரும் திட்டம் அரசிடம் உண்டா?

விடை—(அ) ஆம்.

(ஆ) இல்லை.

## கள்ளக்குறிச்சி மருத்துவமனையில் இரத்த சேமிப்பு நிலையம்.

வினா 87—திரு. துரைமுத்துசாமி: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சியில் உள்ள அரசு மருத்துவமனையில் இரத்த சேமிப்பு நிலையம் அமைக்க உத்தேசம் உண்டா?

விடை—இல்லை.

## செங்கல்பட்டு மாவட்டத்தில் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம்.

வினா 88 —திரு. ஜீ. சொக்கலிங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறு விவசாயிகள் மேம்பாட்டு திட்டம் செங்கல்பட்டு மாவட்டத்தில் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த ஒன்றியங்களில் உள்ளன?

விடை— (அ) ஆம்.

(ஆ) (1) காஞ்சீபுரம்.
(2) ஸ்ரீபெரும்புதூர்.
(3) திருவள்ளூர் (ஈக்காட்டில்).
(4) வாலாஜாபாத்.
(5) பூந்தமல்லி.
(6) கடப்பத்தூர்.
(7) உத்திரமேரூர்.



1978 ஆகஸ்ட் 31]

(8) குன்றத்தூர்.
(9) காட்டான்குளத்தூர்.
(10) திருக்கழுக்குன்றம்.
(11) மதுராந்தகம்.
(12) அச்சரபாக்கம்.

ஆகிய வட்டாரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

## போத்தனூர் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட வழக்குகள்.

வினா 89—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டப், போத்தனூர் காவல் நிலையத்தில் திருட்டுக் குற்றம் குறித்த வழக்குகள் சென்ற (1977) ஆண்டு எத்தனை கொடுக்கப்பட்டது?

(ஆ) அவற்றுள் கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகள் எத்தனை?

விடை—(அ) 136 வழக்குகள்.

(ஆ) 49 வழக்குகள்.

## பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் திரட்டப்பட்ட நிதி

வினா 90—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு நிதிக்காகத் தமிழகத்தில் திரட்டப்பட்ட நிதி எவ்வளவு?

(ஆ) அதில் எவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டது?

(இ) மீதி ஏதேனும் உள்ளதா?

(ஈ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—(அ) திரட்டப்பட்ட மொத்த நிதி ரூ. 1,11,45,296.56 (இதில் தனி லாட்டரி குலுக்கல் மூலமாக வந்த ரூ. 43,27,200- அடங்கும்.)

(ஆ) திரட்டப்பட்ட மொத்த நிதியான ரூ. 1,11,45,296.56-ம் செலவு செய்யப்பட்டு விட்டது.

(இ) மீதி ஏதும் இல்லை.

(ஈ) இந்த வினா எழவில்லை.

[1978 ஆகஸ்ட் 31

## வேளாண்மைத் தொழில் கழகத்தின் மூலம் டிராக்டர்கள் வழங்கல்.

வினா 91—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977-78-ல் வேளாண்மைத் தொழில் கழகத்திடம் டிராக்டர்கள் கோரி எத்தனை பேர் பதிவு செய்துள்ளார்கள்?

(ஆ) அவர்களுள் எத்தனை பேருக்கு டிராக்டர் கொடுக்கப்பட்டுள்ளது?

விடை—(அ) 55 (ஐம்பத்தைந்து).

(ஆ) அவர்கள் அனைவருக்கும் டிராக்டர்கள் வழங்கப்பட்டுவிட்டன. நிலுவையில் ஒருவருமில்லை.

## குடும்ப நலத் துறையினரால் வெளியிடப்பட்ட திரைப்படங்கள்.

வினா 92—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

குடும்ப நலத் துறையினரால் இதுவரை ஏதேனும் திரைப்படம் வெளியிடப்பட்டுள்ளதா ?

விடை—ஆம். கீழ்க்கண்ட 35mm திரைப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

(1) நாம் இருவர் நாம் பெறுவதும் இருவர்.

(2) போதும் அய்யா (நிறம்).

(3) வெற்றிகள் குவிந்தாலும்.

(4) வள்ளுவர் வாக்கு.

(5) அன்னையர் இருவர்.

(6) வாழ்க்கை வளம்பெற.

(7) கண் கெட்ட பிறகு.

(8) மனம் ஒரு குரங்கு

(9) எந்த நாளும் காப்போம்.

(10) சொன்னாத்தான் புரியுது.



1978 ஆகஸ்டு 31]

## திரைப்படங்களுக்குக் கேளிக்கை வரிச்சலுகை கோரி பெறப்பட்ட விண்ணப்பங்கள்.

வினா 93—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977-78 ஆம் ஆண்டில் கேளிக்கை வரிச்சலுகை கோரி பெறப்பட்ட மொழிவாரி திரைப்பட விண்ணப்பங்கள் எத்தனை?

(ஆ) அவற்றில் எத்தனை படங்களுக்கு வரிச்சலுகைகள் அளிக்கப்பட்டன?

| | | | |
|---|---|---|---|
| விடை—(ஆ) தமிழ்த் திரைப்படங்கள் | | | 15 |
| இந்தித் திரைப்படங்கள் | .. | .. | 13 |
| ஆங்கிலத் திரைப்படம் | .. | | 1 |
| மலையாளத் திரைப்படம் | .. | .. | 1 |
| (ஆ) தமிழ்த் திரைப்படம் | .. | .. | 1 |
| ஆங்கிலத் திரைப்படம் | .. | .. | 1 |

## பத்திரப்பதிவு அலுவலகக் கட்டடங்கள்.

வினா 94—திரு. கே. பன்னை சேதுராம்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள பத்திரப்பதிவு அலுவலகங்கள் Sub-Registrars and Registrars office ஏதேனும் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றனவா?

(ஆ) ஆம் எனில் எத்தனை கட்டடங்கள்?

விடை—(அ) ஆம்.

(ஆ) 22 மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களும், 142 சார்ப்பதிவாளர் அலுவலகங்களும் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

## திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தில் கோழிப்பண்ணை.

வினா 95—திரு. க. வேணுகோபால்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தில் அரசாங்கத்தால் கோழிப்பண்ணை அமைக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

விடை—இல்லை.

## சின்னசேலத்திலுள்ள ஆட்டுப் பண்ணை.

வினா 96—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள சின்னசேலம் ஆட்டுப் பண்ணை அபிவிருத்திக்கு உலக வங்கி கடன் தர முன் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

விடை—(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

## மையச் சமையற் கூடங்கள்.

வினா 97—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளிகளில் நண்பகல் உணவுத் திட்டத்தின் கீழ் மையச் சமையற் கூடங்கள் நமது மாநிலத்தில் எந்தெந்த மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது?

(ஆ) அதனை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

விடை—(அ) செங்கல்பட்டு, வடஆர்க்காடு, தென்ஆர்க்காடு மாவட்டங்களில்.

(ஆ) இல்லை.

## சீர்காழியில் தீவிர கால்நடை வளர்ச்சித் திட்டம்.

வினா 98—திரு. கா. சுப்ரவேலு: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

தஞ்சை மாவட்டத்திலுள்ள சீர்காழியை "Intensive Cattle Development Scheme"-ல் இணைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

விடை—இல்லை.

## பணகுடி பத்திரப் பதிவு அலுவலகம்.

வினா 99—திரு. ஒய். எஸ். எம். யூசப்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் தொகுதியில் உள்ள பணகுடி பத்திரப் பதிவு அலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதற்குரிய காரணங்கள் யாவை?



விடை—(அ) இது குறித்து செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

## கிராம அதிகாரிகள்.

வினா 100—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கிராம உத்தியோகஸ்தர்களின் மொத்த எண்ணிக்கை என்ன?

(ஆ) அதில் தாழ்த்தப்பட்டவர்கள் எவ்வளவு?

விடை—தமிழ்நாட்டில் மொத்த கிராம அதிகாரிகளின் எண்ணிக்கை 22.452. அவர்களில், தாழ்த்தப்பட்டவர்கள் கிராம அதிகாரிகளாக 176 பேர் வேலை செய்கிறார்கள். அவர்களின் விவரம் கீழ்வருமாறு—

| | கிராம முன்சீப் | கர்ணம். |
|---|---|---|
| அரிசனங்கள் .. .. | 66 | 44 |
| பழங்குடி மக்கள் (மலைஜாதியினர்) | 31 | 35 |
| மொத்தம் .. | 97 | 79 |

## மதுவிலக்கு வழக்குகள்.

வினா 101—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1976 பிப்ரவரி முதல் 1977 மார்ச் மாதம் வரை தமிழ் நாட்டில் எத்தனை மதுவிலக்கு வழக்குகள் தொடரப் பட்டன?

(ஆ) அவற்றுள், கள்ளச் சாராயம் காய்ச்சியது காரணமாகத் தொடரப்பட்ட வழக்குகள் எத்தனை?

விடை—

(அ) 496,244 வழக்குகள்;

(ஆ) 69,239 வழக்குகள்.

வினா 102—திரு. ஏ. சுவாமிதாஸ்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் முறையே 1975—76, 1976-77-ல் பதிவு செய்யப்பட்ட மதுவிலக்கு வழக்குகள் எத்தனை?

விடை—

கன்னியாகுமரி மாவட்டத்தில் முறையே 1975—76, 1976-77ல் பதிவு செய்யப்பட்ட மதுவிலக்கு வழக்குகள் கீழ் வருமாறு :—

| 1975–76 | 1976-77 |
|---|---|
| 9,885 | 12,278 |

வினா 103—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) மாயூரம் தாலூகா திருச்சிற்றம்பலம் பகுதியில் கள்ளச் சாராயம் காய்ச்சும் தொழில் நடைபெற்று வருவது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், அது பற்றி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) திருச்சிற்றம்பலம் கிராமத்தில் கள்ளச் சாராயம் காய்ச்சுவதாக எவரும் கண்டு பிடிக்கப்படவில்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

வினா 104—திரு. ஆர். உமாநாத் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை திருச்சிராப்பள்ளி எல்லையிலுள்ள சோலகம்பட்டி, புதுக்குடி, திருவெறும்பூர், துவாக்குடி மற்றும் சுற்றுப்புறங்களிலும் குழந்தைகளையும், கால்நடைகளையும் தூக்கிச் சென்று விற்பதும், கள் மற்றும் கள்ளச் சாராயம் வியாபாரம் செய்வதிலும் சமூக விரோதக் கும்பல்கள் ஈடுபட்டுக் கொண்டிருப்பது குறித்து அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்தச் சமூக விரோதக் கும்பலை ஒழிக்க அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) சமூக விரோதிகள், தஞ்சை, திருச்சி எல்லையோரப் பகுதிகளில் குழந்தைகளையும் கால்நடைகளையும் தூக்கிச் சென்று விற்பது குறித்து கடந்த சமீபகால அளவில் அரசின் கவனத்திற்கு எந்த விதமான தகவலும் எட்டவில்லை. கள்ளத்தனமாக சாராயம், கள் போன்றவைகளை விற்பதில் ஈடுபட்டதாக திரு. வெறும்பூர் பகுதியில் 1976-ம் ஆண்டு 1,072 சம்பவங்களும் 1977ம்ஆண்டு 1,393 சம்பவங்களும், துவக்குடி பகுதியில் 1976ம் ஆண்டு 246 சம்பவங்களும், 1977ம் ஆண்டு 330 சம்பவங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.





(ஆ) வழக்கமாக இம்மாதிரி சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டவர்களைத் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டுள்ளார்கள். கள்ளச்சாராயம் காய்ச்சுவதற்கோ விற்பதற்கோ வகை செய்யாவண்ணம் மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை தீவிரமாக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவுகள் சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## சட்டமன்றத் தேர்தலின் போது ஏற்பட்ட தாக்குதல்கள்.

வினா 105—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977, ஜூன் மாதத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலின் போது ஒருவருக்கொருவர் தாக்கிக் கொண்டார்களா?

(இ) ஆம் எனில், அது குறித்து எத்தனை பேர் கைது செய்யப்பட்டார்கள்?

(உ) யார் யார் எந்தக் கட்சியினர் மீது வழக்குகள் தொடரப்பட்டுள்ளது?

விடை—

(அ) ஆம்.

(இ) பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 891 பேர்கள் கைது செய்யப்பட்டனர்.

(உ) அவர்கள் எல்லோர் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## முன்னாள் தலைமை அமைச்சர் வருகையின் போது ஏற்பட்ட செலவுகள்.

வினா 106—திரு. என். கிட்டப்பா, திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்திற்காகத் தமிழ்நாட்டிற்கு வருகை தந்த முன்னாள் தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்திக்காக தமிழ்நாடு அரசு செலவழித்த தொகை எவ்வளவு?

(இ) அதில் எவ்வளவு தொகையைத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி ஏற்றுக்கொண்டுள்ளது?

(உ) அத்தொகையைத் தமிழ்நாடு காங்கிரஸ் அரசுக்குச் செலுத்தி விட்டதா?

விடை—

(அ) ரூ. 13,14,166—68 (ரூபாய் பதின்மூன்று லட்சத்து பதினான்கு ஆயிரத்து நூற்றி அறுபத்தி ஆறும், அறுபத்தெட்டு காசுகளும்).

(இ) ரூ. 69,091 (ரூபாய் அறுபத்து ஒன்பதாயிரத்து தொன்னூற்றொன்று மட்டும்).

(உ) இல்லை.

## 'மிசா' சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டவர்கள்

வினா 107—திரு. என். கிட்டப்பா, திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

1976-ம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ந் தேதிக்குப் பிறகு தமிழ் நாட்டில் 'மிசா' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர் மாவட்டவாரியாக?

விடை

1976-ம் ஆண்டு ஜனவரி மாதம் 31ம் தேதிக்குப் பிறகு தமிழ் நாட்டில் 'மிசா' சட்டத்தின் கீழ் மொத்தம் 768 பேர் கைது செய்யப்பட்டனர். மாவட்ட வாரியான விவரம் கீழ்வருமாறு—

| | |
|---|---|
| சென்னை | 98 |
| செங்கல்பட்டு | 107 |
| வடஆற்காடு | 58 |
| தென்னாற்காடு | 34 |
| தர்மபுரி | 8 |
| நீலகிரி | 7 |
| கோயம்புத்தூர் | 56 |
| தஞ்சாவூர் | 73 |
| திருச்சிராப்பள்ளி | 47 |
| புதுக்கோட்டை | 12 |
| மதுரை | 58 |
| ராமநாதபுரம் | 73 |
| சேலம் | 32 |
| திருநெல்வேலி | 76 |
| கன்னியாகுமரி | 35 |
| மொத்தம்.. | 768 |



வினா 108—திரு துரைமுருகன். திரு ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : மாண்புமிகு முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியரசுத் தலைவர் ஆட்சியில் 'மிசா' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டவர்கள் மொத்தம் எத்தனை பேர் ?

(இ) அதில் கட்சி வாரியாகக் கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

விடை—

(அ) 768 பேர்.

(இ) அவை முன்னர் ஓர் *அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

வினா 109—திரு என். கிட்டப்பா, திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொர்ணம், திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1976-ம் ஆண்டிலிருந்து தமிழகச் சிறைச்சாலைகளில் மிசாக் கைதிகளாக இருந்தவர்களில் எத்தனை பேர்களது குடும்பங்களுக்கு அரசு உதவித் தொகை அளிக்கப்பட்டுள்ளது ?

(இ) அவர்கள் யார் ? யார் ?

விடை—

(அ) 159.

(இ) * விவரங்கள் அவை முன் வைக்கப்பட்டுள்ளன.

வினா 110—திரு. துரைமுருகன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியரசுத் தலைவர் ஆட்சி தமிழகத்தில் நடைபெற்ற போது - மிசா' சட்டத்தின்கீழ் அரசு அதிகாரிகள் யாரேனும் கைது செய்து காவலில் வைக்கப்பட்டனரா ?

(இ) ஆம் எனில்; எத்தனை பேர் ?

விடை—

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

---

* 242 ஆம் பக்கத்தில்ல் இணைப்பு III ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

*243 ஆம் பக்கத்தில்ல் இணைப்பு IV ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

[1978 ஆகஸ்டு 31

வினா 111—திரு. துரைமுருகன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குடியரசுத் தலைவர் ஆட்சி தமிழகத்தில் நடைபெற்றபோது 'மிசா' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு காவலில் இருந்தவர்களில் தமிழகத்தில் இறந்தவர்கள் மொத்தம் எத்தனை பேர்கள் ?

விடை—

இருவர்.

வினா 112—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களில் இன்னும் எத்தனை பேர் நமது மாநிலத்தில் விடுதலையாகாமல் இருந்து வருகிறார்கள் ?

விடை—

ஒருவருமில்லை.

வினா 113—திரு. க. அரங்கசாமி, திரு என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவசர கால நிலையின்போது மிசா கைதிகளாக 6 மாத காலத்திற்கு மேல் சிறையிலிருந்தவர்களுக்குத் தொழில் நடத்த கடன் வழங்கப்பட மத்திய அரசு மாநில அரசுக்குத் தாக்கீது அனுப்பியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

விடை 113 (அ) மற்றும் (ஆ) அவசர நிலைக் காலத்தில் மிசா சட்டத்தின்கீழ் 6 மாதங்களுக்கு மேல் பாதுகாவலிலிருந்தவர்கள். அதனால் பாதிக்கப்பட்ட தங்கள் தொழிலைப்புதுப் பிக்கவும் அல்லது புதியதொழில் தொடங்கவும் உதவி கோரி விண்ணப்பிக்கும் பட்சத்தில் மாநில அரசின் கீழுள்ள சிறு தொழில் முன்னேற்றம், கறவைமாடுகள் வாங்குதல், விவசாயத்திற்குத் தேவையான பொருட்கள் வாங்குதல் போன்ற திட்டங்களின்கீழ் மற்ற வழக்கமான நிபந்தனைகளின் படி அவர்கள் தகுதி பெற்றிருப்பார்களானால் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கலாம் என்று மத்திய அரசு கருத்து தெரிவித்தனர். மாநில அரசு அக்கருத்தினை ஏற்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கியுள்ளனர். மேற்படி சலுகை உணவுப் பொருட்களைக் கடத்தல். பதுக்கல் போன்றவற்றில் ஈடுபட்டவர்களுக்கும் மதுவிலக்குக் குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டவர்களுக்கும், சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கும் பொருந்தாது.



1978 ஆகஸ்டு 31]

## தமிழகச் சிறைகளில் உள்ள அரசியல் கைதிகள்.

வினா 114—திரு. க. சுப்பு : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகச் சிறைகளில் இன்னும் விடுதலை ஆகாமல் இருந்து வரும் அரசியல் கைதிகளின் எண்ணிக்கை என்ன ?

(இ) அவர்களில் தண்டனைக் கைதிகள், விசாரணைக் கைதிகள், மிசா கைதிகள் ஆகியவர்கள் முறையே எத்தனை பேர் ?

விடை—

(அ) மொத்தம் 56 பேர்கள்.

(இ) தண்டனைக் கைதிகள் 44 பேர்கள்.

[அ.இ.அ.தி.மு.க. 23]

கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) 21.

விசாரணைக் கைதிகள் 12.

'மிசா' கைதிகள் இல்லை.

## காவலில் இருந்தபோது இறந்த நக்ஸலைட்டுகள்.

வினா 115—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

''1970-ஆம் ஆண்டு முதல் இன்று வரையில் நக்ஸலைட்டுகள் எத்தனை பேர்கள் போலீஸ் காவலில் இருந்த போது இறந்திருக்கிறார்கள் ? அவர்கள் யாவர்? மாவட்ட வாரியாக?''.

விடை—

பேரவை முன் விவர * அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

வினா 116—திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) சீராளன் மரணம் சம்பந்தமான, வருவாய்த் துறை வாரிய உறுப்பினர் திரு. சீனிவாசனின் அறிக்கை அரசுக்குக் கிடைத்துவிட்டதா ?

(ஆ) ஆமெனில், அதன் விபரமென்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) சீராளன் மரணம் சம்பந்தமாக விசாரணை அதிகாரி திரு. எஸ்.பி. சீனிவாசன், தனது அறிக்கையை அரசுக்குச் சமர்ப்பித்தார். அந்த அறிக்கையின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரிகள் மீது, இந்தியன் பீனல் கோடின்

---

*248 ம் பக்கத்தில் இணைப்பு V ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

பல்வேறு பிரிவுகளின்படி நீதி மன்றத்தில் வழக்கிடப்பட்டுள்ளது. இலாக்கா பூர்வ நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. அவ்வழக்குகளின் விசாரணையின் தன்மைகளைப் பாதிக்கும் வகையில், தற்பொழுது அவ்வறிக்கையைப் பற்றி ஒன்றும் கூறுவதற்கில்லை.

## தஞ்சை சர்க்கரை ஆலை

வினா 117—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரால் இயங்கி வந்த சர்க்கரை ஆலையின் பெயர் மாற்றி அமைக்கப்பட்டுவிட்டதா?

விடை—

பெயரை மாற்றவில்லை.

## சென்னை ஐஸ் ஹவுஸ் பகுதியில் தீ விபத்துக்கள்.

வினா 118—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் முற்பகுதியில் சென்னை மாநகர் ஐஸ் ஹவுஸ் பகுதியிலும் 96-வது வட்டம் பிள்ளையார் கோயில் தோட்டம் பகுதியிலும் திடீர் தீ விபத்துக்கள் ஏற்பட்டனவா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் கண்டறியப்பட்டதா?

விடை—

(அ) 1977-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 7-ம் தேதியன்று சென்னை மாநகர் ஐஸ் ஹவுஸ் பகுதியில் டாக்டர் நடேசன் ரோடில் ஒரு தீ விபத்து நிகழ்ந்தது. 96-வது வட்டம் பிள்ளையார் கோவில் பகுதியில் தீ விபத்து ஒன்றும் நிகழவில்லை.

(ஆ) குடிசை ஒன்றிலிருந்த அடுப்பின் அணைக்கப்படாத நெருப்பினால் இவ்விபத்து ஏற்பட்டதென்று தெரிகிறது.

## கன்னியாகுமரியில் திருவள்ளுவருக்குச் சிலை.

வினா 119—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை வைக்கும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

விடை—

இது பற்றிய செயற்குறிப்பு அரசிடம் ஏதும் இல்லை.





## காவல் துறையில் கம்ப்யூட்டர் பிரிவு.

வினா 120—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் காவல் துறையில் கம்ப்யூட்டர் பிரிவு எப்போது ஏற்படுத்தப்பட்டது?

(ஆ) அதற்கு ஆண்டொன்றிற்கு ஆகும் செலவு எவ்வளவு?

விடை—(அ) 1971-ஆம் ஆண்டு நவம்பர் மாதம்.

| | | | | | ரூ. பை. |
|---|---|---|---|---|---|
| (ஆ) | (1) 1972–73 | .. | .. | .. | 5,36,618-85 |
| | (2) 1973–74 | .. | .. | .. | 10,21,120-43 |
| | (3) 1974–75 | .. | .. | .. | 12,04,071-68 |
| | (4) 1975–76 | .. | .. | .. | 6,20,270-24 |
| | (5) 1976-77 | .. | .. | .. | 7,21,082-05 |
| | (6) 1977–78 (ஜூன்வரை) | | | .. | 4,91,942-08 |

## நகைக்கடை உரிமையாளர் முறையீடு

வினா 121—திரு. தி. சு. நல்லதம்பி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 5—7—1977-ம் தேதியன்று சென்னையில் உள்ள நகைக்கடை உரிமையாளர்கள் முதல் அமைச்சரைச் சந்தித்து போலீசாரால் ஏற்படும் தொல்லைகள் குறித்த ஓர் மனு கொடுத்தார்களா?

(ஆ) ஆம் எனில், அதன் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

விடை—(அ) ஆம்.

(ஆ) சென்னையில் அசோக் நகர், மாம்பலம், நுங்கம்பாக்கம், கீழ்ப்பாக்கம் ஆகிய இடங்களிலுள்ள வீடுகளில் திருடியதற்காகவும் திருடப்பட்ட பொருள்களை நகை வியாபாரிகளிடம் விற்றதற்காகவும் இரு நபர்கள் கைது செய்யப்பட்டனர். திருட்டுப் பொருள்களை வாங்கிய குற்றத்திற்காகவும், ஒப்படைக்காத குற்றத்திற்காகவும் ஒரு வியாபாரியின்மீது வழக்கு தொடரப்பட்டு வழக்கு நீதிமன்றத்தில் விசாரணையிலுள்ளது.

[1978 ஆகஸ்டு 31

## வெளி மாநிலங்களிலிருந்து வந்துள்ள உயர் நீதி மன்ற நீதிபதிகள்.

வினா 122—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

அண்டை மாநிலங்களிலிருந்து நமது மாநிலத்திற்கு மாற்றப்பட்டு வந்துள்ள உயர் நீதிமன்ற நீதிபதிகள் யார் யார்?

விடை—1970-க்குப்பிறகு அண்டை மாநிலங்களிலிருந்து நமது மாநிலத்துக்கு மாற்றப்பட்டு வந்துள்ள உயர் நீதிமன்ற நீதிபதி, நீதிபதி திரு. ஆனந்த தேவ் கோஷல் அவர்கள் ஆவார்கள். இவர் பஞ்சாப்-அரியானா உயர் நீதி மன்றத்திலிருந்து நமது மாநில உயர் நீதி மன்றத்துக்கு 1976-ம் வருடம் ஜூலை மாதம் நீதிபதியாக மாற்றப்பட்டார்.

## நெருக்கடி நிலையின்போது நடந்த அத்துமீறல்கள் குறித்த தகவல்கள்.

வினா 123—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெருக்கடி நிலை அமுலிலிருந்தபோது நடந்த அத்துமீறல்கள் குறித்த தகவல்களைச் சேகரிக்க தமிழக அரசுக்கு மத்திய அரசு தாக்கீது ஏதேனும் அனுப்பியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—(அ) ஆம்.

(ஆ) அதன் விவரங்கள் ஷா கமிஷனின் விசாரணைக்கு உள்ளாவதால் அவற்றை விசாரணைக்குமுன் வெளியிடுவதற்கில்லை.

## ஜீயபுரம் காவல் நிலையம் குறித்த முறையீடு.

வினா 124—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜீயபுரம் காவல் நிலையத்தில் 28—4—1977 அன்றும் 29—4—1977 அன்றும் இருவர் தாக்கப்பட்டது சம்பந்தமாகக் கொடுக்கப்பட்ட முறையீட்டின்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—தீவிர விசாரணையின் மூலம் காவல் துறையினர் மீது சாட்டப் பெற்ற குற்றச்சாட்டுகள் உண்மை அல்ல என அறியப்பட்டுள்ளது.



1978 ஆகஸ்டு 31]

## சென்னை-பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் காவல் துறை கண்காணிப்பு.

வினா 125—திரு. துரைமுருகன் : மாண்புமிகு முதல்அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்கு விடையளிப்பாரா:—

சென்னை-பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் சுங்குவார் சத்திரம்-காஞ்சிபுரம் அருகில் உள்ள வெள்ளை கேட், ராணிப்பேட்டையில் லாரி, பஸ்களால் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க இரவு நேரங்களில் தனியாக காவல் துறை கண்காணிப்பு ஏற்படுத்தும் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா?

விடை: இல்லை.

## பாபநாசம் நகர காவல் நிலையம்.

வினா—126 திரு. ஆர். வி. சௌந்தரராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பாபநாசம் நகர காவல் நிலையத்தை தற்போதுள்ள இடத்திலிருந்து கடைத் தெருவிற்கு மாற்றும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயற்படுத்தப்படும்?

விடை: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை

## கோவில் சிலைகள் திருட்டு.

வினா 127—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) 1976-77 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் எத்தனை இடங்களில் கோயில் சிலைகள் களவு போயின ?

(ஆ) அந்த ஆண்டில் சிலை திருடியதாக எத்தனை பேர் பிடிபட்டனர் ?

விடை :

(அ) 108

(ஆ) 109.

[1978 ஆகஸ்ட் 31

## கள்ளநோட்டு வழக்குகள்.

வினு 128—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா:—

(அ) கள்ள நோட்டு அச்சடிக்கப்பட்டதாக சென்ற ஆண் டில் எத்தனை பேர் கைது செய்யப்பட்டனர் ?

(ஆ) இது தொடர்பாக எத்தனை வழக்குகள் தற்போது விசாரணையில் உள்ளன ?

விடை. (அ) கள்ளநோட்டு அச்சடிக்கப்பட்டதாக 1976 ஆம் ஆண்டில் முப்பது பேர்கள் கைது செய்யப்பட்டனர்.

(ஆ) இது தொடர்பாக இருபத்தேழு வழக்குகள் தற்போது விசாரணையில் உள்ளன.

## கிரீன்வேஸ் சாலையில் உள்ள விருந்தினர் மாளிகை.

வினு 129—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கிரீன்வேஸ் சாலையிலுள்ள அரசுக்கு சொந்தமான கட்டிடம் ஒன்று விருந்தினர் மாளிகையாக மாற்றப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ? எவ்வளவு செலவில் செய்யப்பட்டது?

(இ) அதற்கான அவசியமென்ன ?

விடை : (அ) ஆம்.

(ஆ) 1976 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் ரூ. 1,44,911 செலவில்.

(இ) ஆளுநரின் முன்னுள் ஆலோசகர் திரு. பி.கே. தவே அவர்கள் சேப்பாக்கத்தில் உள்ள அரசு விருந்தினர் மாளிகையில் உள்ள இரண்டு '' தங்கும் அறைகளை '' பயன்படுத்திக் கொண்ட தாலும், சென்னை வருகை புரியும் முக்கிய விருந்தினர்கள் தங்கு வதற்கு போதிய எண்ணிக்கையில் அறைகள் இல்லை என்பதாலும், இம்முடிவு மேற்கொள்ளப்பட்டது.



978 ஆகஸ்ட் 31]

## கள்ளத் துப்பாக்கித் தயாரிப்பு வழக்கு.

வினு 130—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா;—

(அ) 1976-வது ஆண்டில் செங்கல்பட்டு மாவட்டத்தில், கள்ளத்தனமாக துப்பாக்கி தயாரித்தார்கள் என்பதற்காக எத்தனை பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். ?

(ஆ) அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

விடை :(அ) 6.

(ஆ) வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## பெண் போலீசார் பிரிவு துவக்கப்படாத மாவட்டங்கள்.

வினு 131—திரு. ஆ. நடராசன், திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பெண் போலீசார் பிரிவு துவக்கப்படாத மாவட்டங் கள் எவை எவை ?

(ஆ) இப்பிரிவுகளைத் துவங்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை : (அ) சென்னை மாநகர், மதுரை (தெற்கு), திருச்சி ராப்பள்ளி, கோயம்புத்தூர் (நகரம்) ஆகிய மாவட்டங்கள் நீங்க லாக, ஏனைய மாவட்டங்களில் பெண் போலீசார் பிரிவு துவக்கப் படவில்லை.

(ஆ) மேற்கூறிய மாவட்டங்களில் பெண் போலீசார் பிரிவு சோதனை நடவடிக்கையாக துவங்கப்பட்டுள்ளது. மற்ற மாவட் டங்களில் பெண் போலீசார் பிரிவு ஏற்படுத்தும் உத்தேசம் தற் சமயம் ஏதுமில்லை.

## அரசு அலுவலகங்களில் பேரறிஞர் அண்ணு, திருவள்ளுவர் படங்கள்.

வினு 132—திரு. அ. செல்வராசன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா:—

(அ) பேரறிஞர் அண்ணு, திருவள்ளுவர் ஆகியோரது படங் கள் அரசு அலுவலகங்களிலிருந்து அகற்றப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

(இ) மீண்டும் எல்லா அரசு அலுவலகங்களிலும் பேரறிஞர் அண்ணு, திருவள்ளுவர் ஆகியோரது படங்கள் வைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

[1978 ஆகஸ்ட் 31

விடை : (அ) இல்லை.

(ஆ) இல்லை.

(இ) இல்லை.

## காவல் துறையில் நிர்வாகக் குறைபாடுகள்.

வினா 133—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா— :

(அ) தமிழகக் காவல் துறையில் நிர்வாக ஊழல் காரணமாக சென்ற ஆண்டில் யாரேனும் கைது செய்யப்பட்டார்களா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை : (அ) ஆம்.

(ஆ) தலைமைக் காவலர் ஒருவர், ஒரு துணைக் கண்காணிப்பாளருக்கு லஞ்சம் கொடுக்க முயற்சி செய்ததாக, கைது செய்யப்பட்டார்.

## தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு பட்டம் பெற்றோர்.

வினா 134—திரு. என். கிட்டப்பா, திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு பட்டம் பெற்றவர்களுக்கு அரசுப் பணிகளில் சேர முன்னுரிமை கொடுக்கப்பட்டு வருகிறதா ?

விடை : இல்லை.

## ஆளுநரின் ஆலோசகர்கள் சுற்றுப் பயணப்படி.

வினா 135—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குடியரசுத் தலைவர் ஆட்சி காலத்தில் ஆளுநரின் ஆலோசகர்கள் சுற்றுப்பயணப்படியாகப் பெற்ற மொத்த தொகை எவ்வளவு ?

விடை : குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் ஆளுநரின் ஆலோசகர்கள் சுற்றுப்பயணப்படியாகப் பெற்ற மொத்த தொகை ரூ. 90,964·50 ஆகும்.



1978 ஆகஸ்ட் 31]

## கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை கரும்பு உற்பத்தியாளர்கள் சங்கம்.

வினா 136—திரு. துரைமுத்துசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தென்னாற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு உற்பத்தியாளர்கள் சங்கம் உண்டா ?

(ஆ) அது அரசு அங்கீகாரம் பெற்றுள்ளதா ?

விடை—(அ) ஆம்.

(ஆ) இல்லை. கரும்பு உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்கு ஆலையோ அல்லது அரசோ அங்கீகாரம் அளிக்கும் வழக்கம் நடைமுறையில் இல்லை.

## சத்தியமங்கலம் பகுதியில் திருட்டுக் குற்றங்கள்.

வினா 137—திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

சத்தியமங்கலம் வட்டத்தில் 1977 ஜூலை மாதம் கடைசி வாரத்திலும், ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்திலும் திருட்டுக் குற்றங்கள் அதிகரித்திருப்பதாகவும், இரவு நேரங்களில் அடையாளம் தெரிந்துகொள்ள முடியாத சிலரால் குடியிருப்பு வீடுகளின் மீது சரமாரியாக கற்கள் போடப்படுவதாகவும் அதன் காரணமாக அந்தப் பகுதி மக்கள் பீதி அடைந்திருக்கிறார்கள் என்பது உண்மையா ?

விடை—22-7-1977 அன்று வீடு புகுந்து திருடியதாக இரண்டு குற்றங்கள் சத்தியமங்கலம் காவல் நிலையத்தில் பதிவாயின. இந்த இரண்டு சம்பவங்களின் காரணமாக பாதுகாக்கப்பட்ட வனப்புறங்களை அடுத்துள்ள கிராமங்களிலுள்ள மக்கள் பீதி அடைந்திருந்தார்கள். அந்த மாதிரிக் குற்றவாளிகளைப் பிடிக்க வேண்டி, தீவிர போலீஸ் ரோந்து படைகள் மூலமாக கண்காணிப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டதன் விளைவாக அம்மக்களிடையே ஏற்பட்ட பீதி நீங்கிவிட்டது. மேற்குறித்த இரண்டு சம்பவங்களிலும் கருமாத்தாம்பட்டி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வனையாபாளையம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த வலையர்களின் கோஷ்டிதான் ஈடுபட்டிருக்க வேண்டுமென சந்தேகமேற்படுகிறது. அவை கண்டுபிடிக்கப்பட்டு, குற்றங்கள் விசாரணை செய்யப்படும்.

குடியிருப்பு வீடுகளின் மீது கல் எறிவது சம்பந்தமாக குறிப்பாக எந்தக் குற்றமும் இழைத்ததுபற்றி சத்தியமங்கலம் காவல் நிலையத்திற்குப் புகார்கள் வரவில்லை. நிலைமை அமைதியாகவே உள்ளது.

[1978 ஆகஸ்ட் 31

சேலம் நகரில் திருட்டுக் குற்றங்கள்.

வினா 138—திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்குத் விடையளிப்பாரா—

(அ) சேலம் நகரில் புதிதாக ஏற்பட்டுள்ள குடியிருப்புகளான ராஜாராம் நகர், எல்.ஐ.சி. காலனி, ஸ்டேட் பாங்க் காலனி முதலிய பகுதிகளில் ஏராளமான திருட்டுப் போவது அரசு கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

விடை—(அ) சேலம் ராஜாராம் நகர், எல். ஐ. சி. காலனி, ஸ்டேட் பாங்க் காலனி ஆகிய இடங்களில் 1974-ம் ஆண்டில் 2 திருட்டுக்களும் 1975-ம் ஆண்டில் ஒரு திருட்டும், 1976-ம் ஆண்டில் 3 திருட்டுகளும் 1977-ம் ஆண்டில் 10 திருட்டுகளும் காவல் துறையினரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

(ஆ) திருட்டுக்கள் காவல் துறையினரின் கவனத்துக்குக் கொண்டு வரப்படும்போது வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, புலனாய்வு செய்து, நீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்படுகிறது. தவிர, திருட்டுக்களைத் தடுப்பதற்காகக் காவல் துறையினரின் கண் காணிப்பும், ரோந்தும் அந்தப் பகுதிகளில் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன.

தீயணைப்பு நிலையங்கள்.

வினா 139—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா:—

ஒவ்வொரு தாலுக்கா தலைநகரிலும் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்த அரசு எண்ணியுள்ளதா ?

விடை—இல்லை.

வினா 140—திரு. வ. துலுக்காணம் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உளுந்தூர்ப்பேட்டை நகரத்தில் ஒரு தீ அணைப்பு நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது அமுல் படுத்தப்படும்?

விடை—(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.



1978 ஆகஸ்ட் 31]

வினா 141—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தாலுக்கா மணல்மேடு, குத்தாலம் பேரூராட்சிப் பகுதிகளில் தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஆய்வில் உள்ளதா ?

விடை—இல்லை.

ஆனந்தகுடி பர்மா அகதிகள் குடியிருப்பு.

வினா 142—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஒன்றியம், மகாராஜபுரம் பஞ்சாயத்தில் ஆனந்தகுடி பகுதியில் 25-12-1976-ல் பர்மா அகதி இராமதாஸ் என்பவருடைய வீடு கொளுத்தப்பட்டது பற்றி அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா ?

விடை—25-12-1977 அன்று மாயூரம் ஒன்றியம் மகாராஜபுரம் பஞ்சாயத்தில் ஆனந்தகுடி பகுதியில் இராமதாஸ் என்பவருடைய குடிசை சிதைக்கப்பட்டது. ஆனால் கொளுத்தப்படவில்லை. அவ்வாறு செய்த குற்றவாளிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு பின்பு நீதிமன்றத்தில் புகார் செய்தவருக்கும் குற்றவாளிக்கும் சமரசம் ஏற்பட்டதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

Loans to B & C Mills:

Q: 143: Thiru S. J. SADIQ PASHA :—

Will the Hon'ble Chief Minister be pleased to state:

(a) Wheather the State Government have advanced loans to B & C Mills; and

(b) If so, what is the loan amount and conditions imposed?

A:

(a) No.

(b) Does not arise.

[1978 ஆகஸ்ட் 31

## Allowances drawn by former Minister.

Q: 144 Thru K. KANDASWAMY: Will the Honourble Chief Minister be pleased to state:

(a) The expenses incurred towards Travelling Allowance and Daily Allowance by the then Ministers during 1975: and

(b) The Electrical and Water charges incurred by them during 1975.

A: (a) & (b):

* A statement is placed on the table of the House.

## தண்டராம்பட்டு, வாணாபுரம் காவல் நிலையக் கட்டடங்கள்.

வினா 145—திரு. தா. வேணுகோபால்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு, வாணாபுரம் ஆகிய ஊராட்சிகளில், காவல் துறைக்காகவும், காவல் துறையினர் குடியிருப்பு இல்லங்களுக்காகவும் வாங்கப்பட்டுள்ள இடங்களில் கட்டிடம் எப்போது கட்டப்பட உள்ளது?

விடை—தண்டராம்பட்டு கிராமத்தில் காவலர் இல்லங்கள் கட்டுவதற்காக 78 செண்ட் நிலம் அரசு ஆணை எண் 2859, உள் துறை, நாள் 18-11-1976-ன்படி ஆர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது. அரசின் சிக்கனச் செலவு குறித்து அறிக்கை அனுப்பப்பட்டுள்ளதின்பேரில், இதன் மீது இதுவரை வீடு கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசுக்கு அனுப்பப்படவில்லை.

வாணாபுரம் கிராமத்தில் காவல் துறைக்காக நில மாற்றம் செய்வதற்கான செயற்குறிப்பு வேலூர் மாவட்ட வருவாய்த் துறை அதிகாரியுடன் கடிதத் தொடர்பில் உள்ளது.

## உயிர் பலித். தடை சட்டம்.

வினா 146—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்களில் உயிர்பலியைத் தடை செய்யும் சட்டம் இப்பொழுது நடைமுறையில் இருந்துவருகிறதா?

*249-25ம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிட பெற்றுள்ளது.



1978 ஆகஸ்ட் 31]

(ஆ) ஆம் எனில், இச்சட்டத்தை மீறியதாகக் கடந்த இரண்டாண்டுக்காலத்தில் யாரேனும் கைது செய்யப்பட்டார்களா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இச்சட்டத்தை மீறியதாகக் கடந்த இரண்டாண்டுக் காலத்தில் எவரும் கைது செய்யப்படவில்லை.

## கேளிக்கை வரி மீது கூடுதல் மேல்வரி.

வினா 147—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) 1—1—1972 முதல் பங்களாதேஷ் நெருக்கடியை ஒட்டி வருவாயை அதிகரிக்கும் நோக்கத்துடன் கேளிக்கை வரியின் மீது கூடுதல் மேல் வரி போடப்பட்டதா?

(ஆ) 1972 முதல் 1976 வரை அதனால் எவ்வளவு வருவாய் கிடைத்தது மாவட்டவாரியாக?

விடை—

(அ) 1—1—72 முதல் அரசின் வருவாயை அதிகப்படுத்தும் பொருட்டு, கேளிக்கை வரி மீது கூடுதல் மேல் வரி போடப்பட்டது.

(ஆ) இதன்மூலம் 1971-72 முதல் 1976-77 வரை வணிக வரி மாவட்ட வாரியாக கிடைக்கப்பெற்ற வருவாய் விவர * அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

## புதுமனைக்குப்பத்தில் தீ விபத்து.

வினா 148—திரு வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) ராயபுரம் காசிமேட்டிலுள்ள புதுமனைக்குப்பத்தில் அண்மையில் தீ விபத்தினால் 400 குடிசைகள் பாதிக்கப்பட்டது உண்மையா?

(ஆ) அது விஷயமாக என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது?

*252-255-ம் பக்கங்களில் இணைப்பு VII ஆக அச்சிடப்பெற்றுள்ளது

[1978 ஆகஸ்ட் 31

விடை—

(அ) ஆம், 475 குடிசைகள் முற்றிலுமாகவும், 96 குடிசைகள் ஓரளவும் பாதிக்கப்பட்டன.

(ஆ) இத்தீவிபத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணமாகவும் உணவும் தற்காலிகமாக உறைவிடமும் அளிக்கப்பட்டது. பின்பு இத்தீவிபத்தில் முழுவதுமாக வீடு சேதமுற்ற 475 வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு தலா 100 ரூபாய் வீதம் ஓரளவு சேதமுற்ற 96 வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு தலா ரூ.50 வீதமும், உடைமைகளை இழந்த 94 குடித்தனக்காரர்களுக்கு தலா 35 ரூபாயும் வீதமுமாக மொத்தம் 55,590 ரூபாய் அரசு நிவாரணம் அளித்துள்ளது.

## வடாற்காடு மாவட்ட வாசகசாலைகளில் வைக்கப்படும் பத்திரிகைகள்.

வினா 149—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?—

வடாற்காடு மாவட்டத்திலுள்ள வாசகசாலைகளில் தற்போது என்னென்ன பத்திரிகைகள் போடப்பட்டு வருகின்றன ?

விடை—

* சபை முன் ஒரு விவர அறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது.

## மகாபலிபுரத்தை கடற்கரை வாசஸ்தலமாக மாற்றுதல்.

வினா 150—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?—

(அ) மகாபலிபுரத்தை கடற்கரை வாசஸ்தலமாக ஆக்கிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) இதற்கான நிதி உதவியினை மத்திய அரசிடம் மாநில அரசு கோரியுள்ளதா ?

---

*256-258-ம் பக்கங்களில் இணைப்பு VIII ஆக அச்சிடப்பற்றுள்ளது



1978 ஆகஸ்ட் 31]

விடை—

(அ) ஆம்.

(ஆ) மாமல்லபுரத்தை மேம்படுத்த குறிப்பிட்ட சில திட்டங்களைத் தயாரிக்கும்படி திருவாளர்கள் பரத் அண்டு அசோசியேட்ஸ் என்னும் தனியார் கட்டிடக்கலை நிபுணர்களை மாநில அரசு நியமித்துள்ளது. அவர்களின் அறிக்கை பெறப்பட்டதும் பரிசீலிக்கப்பட்டு, மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படும்.

## இராமேஸ்வரம் குருசடைத் தீவு.

வினா 151—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேஸ்வரம் அருகே உள்ள குருசடைத் தீவை சுற்றுலா ஸ்தலமாக அபிவிருத்தி செய்திடும் செய்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

விடை—

(அ) & (ஆ) ஆம்;

குருசடைத் தீவு இராமேஸ்வரம் ஆகிய இடங்களுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக மண்டபத்தில் ஒரு படகுத் துறையும், ஓய்வு எடுத்துக்கொள்வதற்காகத் தங்குமிடம் ஒன்றும் அமைத்துத் தருவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

## கும்பகோணம் புகைவண்டி நிலையத்திலுள்ள புத்தகக்கடை.

வினா 152—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 30—10—1977 அன்று கும்பகோணம் புகைவண்டி நிலையத்தில் திரு. பாலசுப்பிரமணியம் என்பவரது புத்தகக் கடை தாக்கப்பட்டு சுமார் 5,000 ரூபாய் பெறுமான பொருள்களும் புத்தகங்களும் சூறையாடப்பட்டது பற்றி அரசிடம் புகார் வந்துள்ளதா ?

(இ) இதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

[1978 ஆகஸ்ட் 31

விடை—

(அ) அவ்வாறு புகார் வந்துள்ளது.

(இ) இது சம்பந்தமாக வழக்குகள் பதிவு செய்யப்பட்டு ரயில்வே போலீசாரால் புலன் விசாரணை செய்யப்பட்டு வருகிறது.

## சூணாம்பேடு காவல் நிலையம்.

வினா 153—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தாலுகா சூணாம்பேடு காவல் நிலையத்தில் காவலில் வைக்கப்பட்டிருக்கும்போது நாகராசன் என்பவர் மரணமடைந்தாரா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம். காவலில் வைக்கப்பட்டிருந்த நாகராசன் என்பவர் 7—10—1977 அன்று தற்கொலை செய்துகொண்டு மரணமடைந்தார்.

(ஆ) இந்தச் சம்பவம் சம்பந்தமாக, கவனக் குறைவாக இருந்த காவல் நிலைய அதிகாரிகள் மீது இலாகா பூர்வ நடவடிவடிக்கை எடுக்கும்படி பணிக்கப்பட்டுள்ளது.

## பாராவின்போது இறந்த காவலர் குடும்பத்திற்கு அரசு மான்யம்.

வினா 154—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1976-ம் ஆண்டில் வட ஆற்காடு மாவட்டம் இரத்தினகிரி மலையில் உள்ள பாலமுருகன் கோவிலில் பாராவிலிருந்த பொழுது கொலை செய்யப்பட்ட போலீஸ் கான்ஸ்டேபிள் குடும்பத்திற்கு அரசு மான்யம் ஏதேனும் வழங்கப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு வழங்கப்பட்டது ?

விடை

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1978 ஆகஸ்ட் 31]

## காசிமேடு பகுதியில் துப்பாக்கிச் சூடு.

வினா 155—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் 25—11—1977 அன்று திருவொற்றியூர் காசிமேடு பகுதிகளில் துப்பாக்கிச்சூடு நடந்தது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) துப்பாக்கிச் சூடு நடக்கக் காரணம் என்ன ?

விடை—

(அ) சென்னை காசிமேடு பகுதியில் 24—11—1977 அன்று துப்பாக்கிச் சூடு நடந்தது.

(ஆ) கட்டுமர மீனவர்களுக்கும், விசைப்படகு உபயோகிப்பவர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் உயிர்ச்சேதம் ஏற்பட்டுவிடாமலும், மற்றும் சொத்துக்கள் நாசம் செய்யப்படுவதைத் தவிர்க்கவும் காவல் துறையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

## வல்லம் அருகே நீர்த்தேக்கம்.

வினா 156—திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் வல்லத்திற்குப் பக்கத்தில் முதலம்பட்டி வாரியில் அணைக்கட்டு கட்டும் திட்டம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது இத்திட்டம் மேற்கொள்ளப்படும் ?

விடை—

(அ) தஞ்சாவூர், வல்லம் அருகே முதலமுத்து வாரியின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைப்பதற்கான திட்டம் ஆய்வில் உள்ளது.

(ஆ) திட்டம் பற்றிய விவரங்கள் முடிவு செய்யப்பட்டபின், இத்திட்டம் மேற்கொள்வதைப் பற்றிய முடிவு எடுக்கப்படும்.

## நத்தம் பகுதியில் புதிய நீர்த்தேக்கம்.

வினா 157—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

[1978 ஆகஸ்ட் 31

(அ) மதுரை மாவட்டத்தில் நத்தம் பகுதியில் திருமணி முற்றூர் அணைக்கட்டுத் திட்டம் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) எப்பொழுது திட்டம் பூர்த்தி ஆகும்?

(இ) திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

விடை—

(அ) இல்லை, இத்திட்டம் முதல்நிலை ஆய்வில் உள்ளது.

(ஆ) இத்திட்டம் முடிவுபெறும் காலத்தைத் தற்போது நிர்ணயிக்க இயலாது.

(இ) இத்திட்டத்தின் முதல் நிலை மதிப்பீட்டுத் தொகை ரூ. 192 இலட்சங்கள் (1975–76 ஆம் ஆண்டின் விலைப்பட்டியல் படி).

### முந்திரி உற்பத்தி.

வினா 158—திரு. டி. ஞானசிகமணி: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :—

(அ) முந்திரி உற்பத்தி அதிகரிக்கச் செய்ய தமிழக அரசு மத்திய அரசிடமிருந்து நிதி உதவி பெற்றுள்ளதா?

(ஆ) ஆம் என்றால், எப்படிப்பட்ட திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன?

விடை—

(அ) & (ஆ) விவர அறிக்கை* அவையின் முன்னர் வைக்கப்பட்டுள்ளது.

### அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்குச் சொந்தக் கட்டிடங்கள்.

வினா 159—திரு. கு. ச. முருகேசன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு தயவுசெய்து விடையளிப்பாரா—

(அ) மாநிலத்தில் சொந்த இடம் இல்லாமல் வாடகை இடங்களில் நடைபெறும் அரசு உயர்நிலைப் பள்ளிகள் எவ்வளவு?

(ஆ) அதுபோன்ற பள்ளிகளுக்கு அவ்விடங்களை வாங்கித் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

* 259-262ம் பக்கங்களில் இணைப்பு IX ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



1978 ஆகஸ்ட் 31]

விடை—

(அ) 54 அரசு (கழக) உயர்நிலைப்பள்ளிகளும், 37 அரசு உயர்நிலைப் பள்ளிகளும் வாடகை இடங்களில் நடைபெற்று வருகின்றன.

(ஆ) பொதுவான திட்டம் எதுவும் இல்லை. ஆனால் தனிப்பட்ட அளவில் திருச்சி மாவட்டத்திலுள்ள அம்பிகாபுரம் அரசினர் உயர்நிலைப் பள்ளியும் மற்றும் சென்னையிலுள்ள தியாகராயநகர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியும் நடந்து வரும் தனியார் கட்டிடங்களை நிர்வாகக் காரணத்தினால் ஆர்ஜிதம் செய்வது குறித்து பரிசீலிக்கப்படுகிறது.

### கோழிப் பண்ணைகள்.

வினா 160—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் உள்ள மொத்த கோழிப் பண்ணைகள் எத்தனை?

(ஆ) அவைகளுள் முறையே செயல்படுபவை, செயல்படாமல் உள்ளவை எத்தனை?

(இ) இன்னும் பரவலாக விஸ்தரிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

விடை—

அவையின் முன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

### நாய் வளர்ப்புப் பண்ணை.

வினா 161—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் துப்பறியும் நாய் வளர்ப்புப்பண்ணை ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 10 பெண், 2 ஆண் அல்சேஷன் நாய்களும் மற்றும் 10 பெண், 2 ஆண் இராஜபாளையம் நாய்களும் கொண்ட ஒரு பண்ணை துவக்குவதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்விலுள்ளது.

* 262-265ம் பக்கங்களில் இணைப்பு X ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[1978 ஆகஸ்ட் 31

## சிவந்திபுரம் பகுதியில் குடிநீர் வழங்குதல்.

வினா 162—திரு. ஈஸ்வரமூர்த்தி என்ற பி. சொரணம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள சிவந்திபுரம் ஊராட்சிக்கு உட்பட்ட கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டத்தை அமைத்துக் கொடுக்குமாறு சிவந்திபுரம் ஊராட்சி மன்றம் அரசிடம் கோரிக்கை சமர்ப்பித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அத்திட்ட வேலை எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சிவந்திபுரம் ஊராட்சிக்குக் குடிநீர் வழங்குவதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ரூ. 11,43,000 மதிப்பீட்டில் தயாரித்த திட்டத்திற்கு ஆகும் ஆண்டுச் செலவை ஏற்கும் நிலையில் ஊராட்சி இல்லை என்று ஊரக வளர்ச்சி இயக்குநர் கருத்துத் தெரிவித்ததன் பேரில் அத்திட்டம் செயல்படுத்தப்படவில்லை. பிறகு சிவந்திபுரம் ஊராட்சி மன்றத்தின் வேண்டுகோளுக்கிணங்க விக்ரமசிங்கபுரம் பேரூராட்சியில் அமுலில் இருக்கும் குடிநீர்த் திட்டத்திலிருந்து குடிநீர் அளிக்க ரூ. 8,93,000 செலவில் மாற்றுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது. ஆயின், விக்ரமசிங்கபுரம் பேரூராட்சி இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கவில்லை. எனவே, சிவந்திபுரம் ஊராட்சிக்குக் குடிநீர் அளிக்கும் திட்டம் குடிநீர் வடிகால் வாரியத்தின் மறு பரிசீலனையில் தற்போது உள்ளது.

## செட்டிபாளையத்தில் தெரு விளக்குகள்.

வினா 163.—திரு. அ. நடராசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மதுக்கரை ஒன்றியம் செட்டிபாளையத்தில் வீதி விளக்குகள் பெரும்பான்மையாக எரிவதில்லை என்று மாவட்ட ஆட்சியாளர் அவர்களுக்கு மக்கள் மனுக் கொடுத்தனரா ?

(ஆ) அங்குள்ள மக்கள் 25—2—1978-ல் இருந்து தெரு விளக்குகள் எரியும் வரை வரி கொடா இயக்கம் நடத்த மனுக் கொடுத்ததை அரசு அறியுமா ?

(இ) அதைச் சீர்செய்ய மேற்கொண்ட முயற்சிகள் என்ன ?



1978 ஆகஸ்ட் 31]

விடை—

(அ) மற்றும் (ஆ) இது தொடர்பாக மக்களிடமிருந்து மனு எதுவும் வரவில்லை என மாவட்ட ஆட்சியாளர் தெரிவித்துள்ளார். அரசுக்கு ஒன்றும் தகவல் இல்லை.

(இ) பழுதுபடும் விளக்குகளைப் புதுப்பிக்க உடனுக்குடன் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. 9—9—1971-ல் இப்பேரூராட்சிக்குத் தெரு விளக்குகள் ஒப்படைக்கப்பட்டபின்பு 19—12—1977-லும் 3—3—1978-லும் பழுதுபட்ட விளக்குகள் புதுப்பிக்கப்பட்டன. இப்பொது அனைத்து விளக்குகளும் எரிகின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## நீர்த்தேக்கத் தொட்டிகள்.

வினா 164—திரு எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977-ம் ஆண்டில் சோளிங்கபுரம் பஞ்சாயத்து ஒன்றியத்தைச் சேர்ந்த ஒழுகூரில் உள்ள கோயில் கிணற்று குடிதண்ணீருக்காக மேல்நிலை நீர்த்தொட்டி அமைக்க அனுமதி கோரி விண்ணப்பம் செய்யப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான அனுமதி இன்னும் கொடுக்காமல் இருக்கக் காரணம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மேற்படி கிணற்று நீரைப் பயன்படுத்த அறநிலையப் பாதுகாப்புத் துறையினரால் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளை ஊராட்சி ஏற்றுக்கொள்ள விரும்பாததால் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டிடம் கட்ட இயலவில்லை.

வினா 165—திரு. ப. சந்திரன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆற்காடு மாவட்டத்தில் தேசூர் நகரத்தில் மேல் நீர்த்தேக்கத் தொட்டி இருந்தும் அங்கு குடிநீர்ப் பற்றாக்குறை உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் என்றால் அதைப் போக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தேசூர் பேரூராட்சியில் மேல் நீர்த் தேக்கத் தொட்டி நன்கு இயங்கி வருகிறது. 47 குழாய்கள் பொருத்தப்பட்டு எல்லா தெருக்களுக்கும் தாராளமாகக் குடிநீர் வழங்கப்படுகிறது. இத்தோடு 17 பொதுக் கிணறுகளும் 1 கைவிசைப் பம்பும் உள்ளன. எந்தக் காலத்திலும் இங்கு குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்படுவதில்லையென்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

வினா 166—திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தாலூகாவில் வரும் நிதியாண்டில் எத்தனை புதிய மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும், புதிதாக ஆழ் குழாய்க் கிணறுகளும் எந்தெந்த ஊர்களில் அமைக்கப்பட்டுள்ளன ?

விடை—

* அறிக்கை ஒன்று அவையின் முன்னர் வைக்கப்படுகின்றது.

## திருப்பூவனத்தில் அரிசன மகளிர் விடுதி.

வினா 167—திரு வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம் திருப்பூவனத்தில் அரிசன மகளிர் விடுதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இராமநாதபுரம் மாவட்டம் திருப்பூவனத்தில் அரிசன மகளிர் விடுதி ஏற்படுத்தும் செயற் குறிப்பு ஏதும் இல்லை. இது குறித்துப் பரிசீலனை செய்யப்படும்.

## திருவண்ணாமலை ஒன்றியத்தில் அரிசனக் குடியிருப்புகளில் குடிநீர்க் கிணறுகள்.

வினா 168—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

*266-268ம் பக்கங்களில் இணைப்பு XI ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



(அ) திருவண்ணாமலை ஒன்றியத்தில் உள்ள அரிசன காலனிகளில் உள்ள குடிநீர்க் கிணறுகளுள் பிளாட்பாரமும் கைப்பிடிச் சுவரும் இல்லாமல் சுகாதாரக் குறைவாக இருக்கும் கிணறுகளின் எண்ணிக்கை என்ன ?

(ஆ) அவைகளைப் பராமரிப்பு செய்ய எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள எல்லா அரிசன காலனிகளிலும் உள்ள கிணறுகளுக்கும் கைப்பிடிச் சுவர்கள் உள்ளன. எல்லா கிணறுகளும் சரியாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மலப்பாம்பாடி வள்ளுவர் காலனி கிணறும், நாச்சானந்தல் அரிசன காலனி கிணறும் பிளாட்பாரம் இல்லாமல் உள்ளன.

(ஆ) மேற்படி இரண்டு கிணறுகளுக்கும் பிளாட்பாரம் கட்டுவதற்கு முறையே ரூ. 1,300, ரூ. 1.200-க்கு மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டு, வேலையை எடுத்துக்கொள்ள திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றிய ஆணையாளரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தவிரவும், சம்பந்தப்பட்ட ஊராட்சிகளே அக்கிணறுகளை நல்ல முறையில் பராமரித்து வருகின்றன.

## மதுரா வாழவச்சனூர் கிராமத்தில் தெரு விளக்குகள்.

வினா 169—திரு த. வேணுகோபால் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கம் வட்டம், தண்டராம்பட்டு ஒன்றியத்தைச் சேர்ந்த சொட்டையூர் ஊராட்சியின் மதுரா வாழவச்சனூர் கிராமத்தில் தெரு விளக்குகள் அமைக்கக்கோரி அனுப்பப்பட்டுள்ள விண்ணப்பத்தின் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை விவரம் என்ன ?

விடை—

இந்த ஊரில் கூடுதலாக 48 சாதாரண விளக்குகளும், 19 குழல் விளக்குகளும் அமைப்பதற்கான திட்டங்கள் மின் வாரியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. இது குறித்து நிதிநிலை தகுதி சான்று தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றிய ஆணையர் வழங்கியுள்ளார். மின் வாரியத்தினரால் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

விதைப் பண்ணைகளில் தயாரிக்கப்பட்ட
நெல் விதைகள்.

வினா 170—திரு எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு வேளாண்மை-பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அரசுக்குச் சொந்தமான விதைப்பண்ணைகளிலிருந்து 1970 ஏப்ரல் முதல் 1977 மார்ச் வரை எத்தனை ஏக்கரில் எவ்வளவு நெல் விதைகள் ரகவாரியாகத் தயாரிக்கப்பட்டன? பண்ணை வாரியாக?

(ஆ) இப்பண்ணைகளுள், 1970 முதல் இன்றுவரை லாபத்தில், நஷ்டத்தில் வேலை செய்து வருபவை எவையெவை?

விடை—

(அ) நெல் விதைகள் பயிரிடப்பட்ட பரப்பளவும் அதில் உற்பத்தி செய்யப்பட்ட அளவு விவரங்களும், பண்ணை வாரியாக பிற்சேர்க்கை 1-லும், பயிரிடப்பட்ட நெல் விதைகளின் வகைகள் பிற்சேர்க்கை 2-லும் கொடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) 1970 முதல் இன்றுவரை லாபத்தில் நஷ்டத்தில் வேலை செய்து வரும் பண்ணைகளின் விவரங்கள் * பிற்சேர்க்கை 3-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

குடிநீர் வடிகால் வாரியத்திடம் உள்ள
"போரிங் செட்டுகள்".

வினா 171—திரு எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) குடிநீர் வடிகால் வாரியம் சொந்தத்தில் எத்தனை பவர் போரிங் செட், கை போரிங் செட் வைத்து உள்ளது?

(ஆ) இவை எந்தெந்த ஆண்டுகளில் எவ்வளவு தொகைக்கு வாங்கப்பட்டன?

(இ) தற்போது வேலை செய்யும் போரிங் செட்டுகள், ரிப்பேரில் உள்ள போரிங் செட்டுகள் எத்தனை?

(ஈ) தனியார்கள் மூலமாகப் போடப்பட்டுள்ள செட்டுகளுக்குக் கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு? வருட வாரியாக?

*269-296ம் பக்கங்களில் இணைப்பு XIIஆக அச்சிடப்பெற்றுள்ளது.



விடை—

(அ), (ஆ), (இ), (ஈ): * அறிக்கை ஒன்று அவையின் முன்னர் வைக்கப்படுகின்றது.

(a) (b) (c) & (d): A statement is placed on the table of the House.

ஆயுட்கால கைதிகளுக்கு பரோல் வழங்கல்.

வினா 172—திரு என். கிட்டப்பா: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்மையில் புயல் வெள்ளத்தால் தமிழகத்தின் சில பகுதிகள் பாதிக்கப்பட்டதற்காக ஆயுட் கால சிறைக் கைதிகளுக்கு பரோல் வழங்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேருக்கு?

(இ) எந்தெந்த சிறைச்சாலைகளில்?

விடை: (அ) ஆம்.

(ஆ) 87.

| | | |
|---|---|---|
| (இ) | மத்திய சிறைச்சாலை, திருச்சிராப்பள்ளி .. | 52 |
| | மத்திய சிறைச்சாலை, மதுரை .. .. | 20 |
| | மத்திய சிறைச்சாலை, பாளையங்கோட்டை | 6 |
| | மத்திய சிறைச்சாலை, வேலூர் .. .. | 6 |
| | மத்திய சிறைச்சாலை, சென்னை .. | 3 |
| | மொத்தம் | 87 |

அகரமாங்குடி—அய்யம்பேட்டை சாலை.

வினா 173—திரு. அ. செல்லப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) தஞ்சை மாவட்டம் அம்மாப்பேட்டை ஒன்றியத்தைச் சேர்ந்த அகரமாங்குடியிலிருந்து பொரசக்குடி வழியாக அய்யம் பேட்டைக்குச் செல்லும் சாலையைச் சீர்படுத்தும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை: இது பற்றிய திட்டம் ஏதும் இப்போது பரிசீலனையில் இல்லை. ஆயினும் 1978-79-ல் இவ்வேலையை ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து செய்வது பற்றிப் பரிசீலிக்கப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

*296-297ம் பக்கங்களில் XIII ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

### முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்ட உதவி.

வினா 174—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

நமது மாநில முதல் அமைச்சர் நிதியிலிருந்து 1977-78 நிதி ஆண்டில் டிசம்பர் முடிய எந்தெந்தக் காரணங்களுக்காக எவ்வளவு நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது ?

விடை : பொதுமக்கள் துயர் தணிப்புக்காக முதலமைச்சர் பொது நிவாரண நிதியில் இருந்து 1-4-1977 முதல் 31-12-1977 வரை வழங்கப்பட்ட மானியங்கள் குறித்த விவரங்கள் * அவை முன்வைக்கப்பட்டுள்ளது.

### ஸ்கூட்டர் தயாரிப்புத் திட்டம்.

வினா 175—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் தனியார்துறை ஒன்றின் ஒத்துழைப்புடன் ஸ்கூட்டர் தயாரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

### அரியலூரில் சிறப்பு அங்காடி.

வினா 176—திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

வட்டத் தலைநகரில் சிறப்பு அங்காடி அமைக்கும் திட்டத்தின் கீழ் அரியலூரில் " சிறப்பு அங்காடி " எப்போது ஆரம்பிக்கப்படும் ?

* 297-315ம் பக்கங்களில் இணைப்பு XIV ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



விடை : பொதுவாகச் சிறப்புச் சிற்றங்காடி ஆரம்பிப்பதற்கு நிலப்பரப்பளவு 1,000 சதுர அடி இருத்தல் வேண்டும். எதிர்பார்க்கும் தினசரி விற்பனை ஒரு நாளைக்கு ரூபாய் 2,000 ஆக இருக்க வேண்டும். அரியலூர் பொது மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்க அங்கு ஒரு கிளைச் சங்கத்தை ஆரம்பிக்குமாறு திருச்சி வட்டார இணைப் பதிவாளர், திருச்சி மாவட்டக் கூட்டுறவு விநியோக விற்பனை சங்க தனி அலுவலருக்கு அறிவுரை வழங்கியுள்ளார். அக்கிளையைத் திறந்த பிறகு அதைச் சிறப்புச் சிற்றங்காடியாக மாற்ற முடியுமா என்பது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

### சென்னை வியாசர்பாடி பகுதி.

வினா 177—திரு. சு. பாலன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

சென்னை, வியாசர்பாடியில் பர்மா தமிழர்கள் வாழும் தாழ்வான பகுதியை மணல் நிரப்பி உயர்த்த அரசு ஏதாகிலும் திட்டம் தீட்டியுள்ளதா ?

விடை : ஆம்.

### பள்ளிகளுக்குச் செய்தித்தாள்கள் வழங்குதல்.

வினா 178—திரு. க. அரங்கசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகளுக்குச் செய்தித் தாள்கள் வழங்கப்படுகின்றனவா ?

(ஆ) ஆம் எனில், அவை யாவை ?

விடை : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கிடமில்லை.

### "Grow More Trees" Programare.

வினா 179. Thiru K. KANDASWAMY: Will the Honourable Minister for Information and Religious Endowments be pleased to state:—

(a) Whether the Government are aware of the fact that five trees should be grown in each house as per the conditions of the Town Planning Authorities in Mysore State: and

(b) Whether the Government will issue instructions like that so as to effectively help the "Grow More Trees" Plan?

[1978 ஆகஸ்ட் 31

விடை I

(a) It is understood that the Karnataka Government have enacted a legislation to prevent in discriminate cutting of trees and to grow more trees in urban areas and hilly regions of the Western Ghats. However there is no specific legislation to compel every house owner in cities and towns to plant a minimum of five trees in each house compound.

(b) In order to preserve the existing trees and also to provide for the planting of new trees in the urban areas in Tamil Nadu, the question of undertaking a special legislation called "The Tamil Nadu (Urban Areas) Preservation of Trees Act" is under the active consideration of the Government.

கொடைக்கானல், பெரியகுளம் பகுதிகளில் பல / தொழிற் பயிற்சிப் பள்ளிகள்.

வினா 180—திரு. கே. பண்ணை சேதுராமன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

கொடைக்கானல், பெரியகுளம் நகரங்களில் பல்தொழிற் பயிற்சிப் பள்ளிகள் நிறுவும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

விடை—இல்லை.

செமி-பர்மனெண்ட் திரைப்படக் கொட்டகைகள்.

வினா 181—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம் : மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

தமிழகத்தில் செமி-பர்மனெண்ட் தியேட்டர்கள் எத்தனை உள்ளன ?

விடை—1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் நிலவரப்படி தமிழகத்தில் மொத்தம் 79 செமி-பெர்மனெண்ட் தியேட்டர்கள் உள்ளன.

There are 79 semi-permanent theatres in the State as on 31st March 1978.



1978 ஆகஸ்ட் 31]

சமூகக் கல்வித் திட்டம்.

வினா 182—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமூகக் கல்வித் திட்டத்தின்கீழ் ஒன்றிய அளவில் விவசாயிகள் சுற்றுலா நடைபெற்று வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

விடை—(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

ஊராட்சி ஒன்றியங்களில் துணை விவசாயக் கிடங்குகள்.

வினா 183—திரு பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வேளாண்மை—பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஊராட்சி ஒன்றியங்களில் எத்தனை துணை விவசாயக் கிடங்குகள் உள்ளன ?

(ஆ) அவைகளில் ஒன்றியப் பொது நிதியிலிருந்து செயல்படுத்தப்பட்டு வரும் இடங்கள் எத்தனை ?

(இ) வேளாண்மைத் துறையினால் நடத்தப்படும் கிடங்குகள் எத்தனை ?

விடை—(அ) 380 வேளாண்மைக் கிடங்குகளும், 410 துணை விவசாயக் கிடங்குகளும் உள்ளன.

(ஆ) 78 இடங்கள்.

(இ) 712 வேளாண்மைக் கிடங்குகளும், துணைக் கிடங்குகளும் அரசு நிதியிலிருந்து நடத்தப்படுகின்றன.

சங்கரன்பாளையம் கிராமத்தில் துவக்கப்பள்ளி.

வினா 184—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துரிஞ்சாபுரம் ஒன்றியம் சங்கரன்பாளையம் கிராமத்தில் துவக்கப்பள்ளி திறக்க அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வரும் கல்வி ஆண்டில் பள்ளி திறக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

விடை—(அ) & (ஆ) இந்தக் கிராமத்தில் துவக்கப்பள்ளி 1—6—1978 முதல் திறக்கப்பட்டுவிட்டது.

## புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட கிணறுகள்.

வினா 185—திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி, திருமயம், அரிமழம் ஆகிய ஒன்றியங்களில் 1975-ம் ஆண்டு பஞ்ச நிவாரணத் திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட கிணறுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டனவா ?

(ஆ) இல்லையெனில், அதற்கான காரணம் யாது ?

விடை—(அ) பொன்னமராவதி ஒன்றியத்தில் 28 கிணறு வேலைகளும், அரிமழம் ஒன்றியத்தில் 13 புதிய கிணறு வேலைகளும் 42 கிணறுகள் ஆழப்படுத்தும் வேலைகளும், திருமயம் ஒன்றியத்தில் 14 கிணறு வேலைகளும் அனுமதிக்கப்பட்டவை. இவை யாவும் முடிக்கப்பட்டுவிட்டன.

(ஆ) பொன்னமராவதி, திருமயம் ஒன்றியங்களில் ஒதுக்கப்பட்ட நிதி போதாமையினால் கிணறுகளுக்குக் கைப்பிடிச்சுவர் பிளாட்பாரம் ஆகியவை மட்டும் கட்டப்படவில்லை. ஒன்றிய நிதியிலிருந்தோ அல்லது பொது மக்களின் நன்கொடை மூலமோ இவ்வேலைகளை முடிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## தருமபுரி மாவட்டத்தில் ஆடு வளர்ப்புச் சங்கங்கள்.

வினா 186—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஆடு வளர்ப்போர் சங்கங்கள் எத்தனை ?

(ஆ) அதனை மேலும் விரிவாக்க அரசு ஏதேனும் செயல் திட்டம் வகுத்துள்ளதா ?

விடை—(அ) வேளாண்மை மறு நிதி மற்றும் வளர்ச்சி திட்டத்தின்கீழ் 1 ஆம் வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் 8-ம்; ஒருங்கிணைந்த கிராம மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 5-ம், ஆக மொத்தம் 14 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன.

(ஆ) 1978-79ஆம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் 4-ம், ஒருங்கிணைந்த கிராம மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 3-ம் ஆக மொத்தம் ஏழு ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் துவக்கப்படும்.



## பையூர் வேளாண்மை நிறுவனம்.

வினா 187—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு வேளாண்மை-பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டத்தில் உள்ள பையூர் வேளாண்மை நிறுவனத்தை விஸ்தரிக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—இல்லை.

## விதைக் கலப்பைகள்.

வினா 188—திரு. சின்ன சேலம் மா. சுப்பிரமணியம்: மாண்புமிகு வேளாண்மை-பாசனத் துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சிறிய வயல்களில் உபயோகிக்கத்தக்க விதைக் கலப்பைகள் தமிழகத்தில் தயாரிக்கப்படுகின்றனவா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரமென்ன ?

விடை—(அ) & (ஆ) விவர அறிக்கை *அவையின் முன்னர் வைக்கப்பட்டுள்ளது.

## உள்ளாட்சித் துறை ஊழியர்களுக்கு மருத்துவ உதவி.

வினா 189—திரு. மு. அரங்கநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உள்ளாட்சித் துறையில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் மருத்துவ உதவி அளிக்கப்படுகிறதா ?

(ஆ) இல்லை எனில், அதற்கான காரணம் என்ன ?

விடை—(அ) ஆம். அரசு அலுவலர்கள் பெறும் எல்லா வித மருத்துவச் சலுகைகளையும் அனைத்து உள்ளாட்சித் துறை அலுவலர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

---

* 315ம் பக்கத்தில் இணைப்பு XV ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

[1978 ஆகஸ்ட் 31

## மன்னார்குடி வட்டத்தில் அரிசனங்களுக்கு நிலப்பட்டாக்கள் வழங்கல்.

வினா 190—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மன்னார்குடி தாலூகாவில் 1967 முதல் 1977 வரை அரிசன மக்களில் எத்தனை பேருக்கு பட்டா வழங்கப்பட்டது ?

(ஆ) வழங்கப்பட்ட மொத்த பரப்பளவு என்ன ?

விடை—(அ) மன்னார்குடி வட்டத்தில் 1967 முதல் 1977 வரை அரிசன மக்களில் 555 பேர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) வழங்கப்பட்ட வீட்டு மனைகளின் மொத்த பரப்பளவு 33·42 ஏக்கர்.

## கோதுமை ரகம்.

வினா 191—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம் : மாண்புமிகு வேளாண்மைப் பாசனத் துறை அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பயிரிடுவதற்கேற்ற கோதுமை ரகம் எவையேனும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—(அ) மற்றும் (ஆ) ஒரு விவரஅறிக்கை* அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

## கால்நடை மருத்துவ மனைகள்.

வினா 192—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1968 முதல் 1977 ஆம் ஆண்டு வரை ஆண்டுதோறும் திறக்கப்பட்ட கால்நடை மருத்துவ மனைகள் எத்தனை?

(ஆ) 1978-ஆம் ஆண்டு திறக்கப்படவிருக்கும் கால்நடை மருந்தகங்கள் எத்தனை ?

*316ம் பக்கத்தில் இணைப்பு XVI ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



1978 ஆகஸ்ட் 31]

விடை— (அ) 1968-69 முதல் 1977-78 வரை கீழ்க்கண்டவாறு 234 கால்நடை மருந்தகங்கள் துவக்கப்பட்டன :—

| ஆண்டு. | எண்ணிக்கை. |
|---|---|
| 1968-69 .. .. .. .. .. | 50 |
| 1969-70 .. .. .. .. .. | 44 |
| 1970-71 .. .. .. .. .. | 21 |
| 1971-72 .. .. .. .. .. | 2 |
| 1972-73 .. .. .. .. .. | 10 |
| 1973-74 .. .. .. .. .. | 25 |
| 1974-75 .. .. .. .. .. | 25 |
| 1975-76 .. .. .. .. .. | 22 |
| 1976-77 .. .. .. .. .. | 25 |
| 1977-78 .. .. .. .. .. | 10 |
| மொத்தம் .. | 234 |

(ஆ) 1978-79 ஆம் ஆண்டு 10 கால்நடை மருந்தகங்கள் துவக்குவதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டது.

வினா 193—திரு. கா. சுப்ரவேலு : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

1977-78-ல் எத்தனை கிராமங்களில் கால்நடை மருத்துவ மனைகள் அமைக்கப்பட்டன ?

விடை —1977-78 ஆம் ஆண்டில் 10 கால்நடை மருந்தகங்கள் துவக்கப்பட்டன.

வினா 194—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் வட்டம், புதுப்பாளையம் கால்நடை மருந்தகத்திற்குக் கட்டிட வசதி இல்லாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

[1978 ஆகஸ்ட் 31

விடை— (அ) செங்கம் வட்டம் புதுப்பாளையம் ஒன்றியத்தி லுள்ள கால்நடை மருந்தகம் வாடகையில்லாத தனியார் கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

(ஆ) இதற்கு முன்னரே இக்கோட்டத்தில் துவங்கப்பட்ட வேறு மருந்தகங்களும் நிரந்தரக் கட்டிடங்கள் இல்லாது உள்ளன. மாவட்ட ஆட்சியாளர் அவர்கள் வரிசைக் கிரமாக (priority basis)- ஒவ்வொரு ஆண்டும் வேளாண்மை நிதி (Agricultural grant) யிலிருந்து பெறப்படும் தொகையை ஒன்று கூட்டி தேவைப்படும் இடங்களுக்குப் பகிர்ந்து வழங்குகின்றார்.

விஞ 195—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க் கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி மங்கலம் கிராம கால்நடை மருந்தகம் கட்டிட வசதி இல்லாமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் நடப்பாண்டில் கட்டிடம் கட்ட அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை— (அ) கலசப்பாக்கம் தொகுதி துரிஞ்சாபுரம் ஒன்றியத்தில் 28—2—1976 அன்று துவக்கப்பட்ட கால்நடை மருந்தகம் தற்சமயம் வாடகையில்லாத தனியார் கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

(ஆ) ஒவ்வோரு ஆண்டும் ஊராட்சி ஒன்றியத்திற்கு (Panchayat Union) ஒதுக்கீடு செய்யப்பட்ட வேளாண்மை, நிதி மாவட்ட ஆட்சியாளரால் ஒன்று சேர்க்கப்பட்டு மிகவும் அத்தியாவசியம் எனக் கருதப்படும் மருந்தகத்திற்குக் கட்டிடம் கட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றது.

## தீவிர பருத்தி அபிவிருத்தித் திட்டம்.

விஞ 196—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசின் உதவியுடன் தீவிர பருத்தி அபிவிருத்தித் திட்டம் ஏதேனும் நமது மாநிலத்தில் அமுல் செய்யப்பட்டு வருகின்றதா?

(ஆ) ஆமெனில் எங்கெங்கு அமுல் செய்யப்படுகின்றது?

(இ) புதிய திட்டம் ஏதேனும் துவங்கப்பட இருக்கின்றதா?



1978 ஆகஸ்ட் 31]

விடை— (அ) ஆம்.

(ஆ) தீவிர மாவட்ட பருத்தி அபிவிருத்தித் திட்டம், கோயம்புத்தூர் மாவட்டத்தில் பாசனப் பயிராக கோயம்புத்தூர், ஈரோடு, பொள்ளாச்சி ஆகிய பகுதிகளிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் மானாவாரிப் பயிராக கோவில்பட்டி, கயத்தார், தூத்துக்குடி ஆகிய இடங்களிலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் மானாவாரிப் பயிராக அருப்புக்கோட்டைப் பகுதியிலும் அமுல் செய்யப்பட்டு வருகிறது.

(இ) இல்லை.

## சிதம்பரம் பால் வழங்கு யூனியன் கணக்குகள்.

விஞ 197— திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் பால் வழங்கும் யூனியன் கணக்குகள் துணைப் பதிவாளரால் தணிக்கை செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கடைசியாக செய்யப்பட்டது?

விடை—(அ) பொதுவாகக் கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகள் துணைப் பதிவாளரால் தணிக்கை செய்யப்படுவதில்லை. ஆய்வு மட்டுமே செய்யப்படுகிறது. தணிக்கையினை துணைப் பதிவாளர் அந்தஸ்தில் உள்ள மாவட்டக் கூட்டுறவு தணிக்கை அதிகாரி செய்வார். சிதம்பரம் கூட்டுறவு பால் விநியோக ஒன்றியத்தின் 1976-77 ஆம் ஆண்டிற்கான தணிக்கை மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர் அவர்களால் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

(ஆ) சிதம்பரம் பால் வழங்கும் ஒன்றியத்தின் கணக்குகளின் தணிக்கை 1976-77 ஆம் ஆண்டிற்கு 22—7—77-ல், மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அதிகாரி அவர்களால் முடிக்கப் பட்டுள்ளது. 1977-78 ஆம் ஆண்டிற்குத் தணிக்கை தற்போது நடைபெற்று வருகிறது.

## சிதம்பரம் வட்டத்தில் புதிய கூட்டுறவுப் பால் வழங்கு சங்கங்கள்.

விஞ 198—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977-78-ல் சிதம்பரம் வட்டத்தில் எத்தனை ஊர்களில் கூட்டுறவுப் பால் வழங்கும் சங்கம் பதிவு செய்யக் கோரி மனுக்கள் கொடுக்கப்பட்டன?

(ஆ) எத்தனை ஊர்களில் சங்கங்கள் நிறுவப்பட்டன ?

(இ) எத்தனை மனுக்கள் நிலுவையில் உள்ளன ?

(ஈ) காரணங்கள் யாது ?

விடை —(அ) 1977-78-ல் சிதம்பரம் வட்டத்தில் 78 ஊர்களில் கூட்டுறவுப் பால் வழங்கும் சங்கங்கள் பதிவு செய்யக் கோரி மனுக்கள் வரப்பெற்றன.

(ஆ) 16 ஊர்களில் சங்கங்கள் நிறுவப்பட்டன.

(இ) மீதி உள்ள 62 ஊர்களில் 7 ஊர்கள் அருகிலுள்ள கூட்டுறவுப் பால் வழங்கும் சங்க விவகார எல்லையில் சேர்ந்துள்ளதால் அதில் சேர்ந்து பயனடையும்படி கோரப்பட்டுள்ளது.

(ஈ) மீதமுள்ள 55 ஊர்களில் சங்கங்கள் அமைப்பதற்கு வாய்ப்புகள் பற்றியும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிடம் கடனுதவி பெற வாய்ப்புகள் உள்ளனவா என்றும் தென்னாற்காடு மாவட்டக் கூட்டுறவு துணைப் பதிவாளர் (பால்பதம்) அவர்களால் ஆராயப்பட்டு வருகிறது. ஆய்வு முடிவடையாததால் இந்த விண்ணப்பங்கள் நிலுவையிலுள்ளன.

வினா 199—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

(அ) சிதம்பரம் வட்டம் பு. ஆதிவராக நல்லூரிலிருந்த கூட்டுறவு பால் வழங்கும் சங்கம் பதிவு செய்யக் கோரி மனு அரசுக்கு கொடுக்கப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

விடை—(அ) சிதம்பரம் பு. ஆதிவராக நல்லூர் கிராமத்திலிருந்து ஒரு கூட்டுறவுப் பால் வழங்கும் சங்கம் பதிவு செய்யக் கோரி திரு. டி. பத்மநாபன் அவர்களிடமிருந்து ஒரு மனு 31—10—1977 அன்று துணைப் பதிவாளர் (பால்பதம்), கடலூர் அலுவலகத்திற்கு வரப்பெற்றது.

(ஆ) அந்த மனுவினை முதுநிலை ஆய்வாளர் (பால்பதம்), சிதம்பரம் அவர்களுக்கு அனுப்பி குறிப்புரை கேட்டதில் மேற்படி அலுவலர் தன்னுடைய அறிக்கையில் பு. ஆதிவராகநல்லூர் கிராமம், மஞ்சக்குழி கூட்டுறவுப் பால்வழங்கும் சங்க விவகார எல்லையில் சேர்ந்துள்ளதாகத் தெரிவித்ததன் பேரில் மேற்படி விண்ணப்பதாரருக்கு மற்ற பொது மக்களுடன் மஞ்சக்குழி கூட்டுறவு பால் வழங்கும் சங்கத்தில் சேர்ந்து பயனடையுமாறு 24—1—1978-ந் தேதியன்று கடலூர் துணைப் பதிவாளர் (பால்பதம்) அவர்களால் தெரிவிக்கப்பட்டது.





காது கேளாதவர்களுக்குக் கேட்புதவிக் கருவிகள்.

வினா 200—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1975-76-ல் காது கேட்காதவர்களுக்குக் கேட்புதவிக் (Hearing aid) கருவி எத்தனை பேருக்கு வழங்கப்பட்டது ?

(ஆ) 1977-78-ல் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டது ?

விடை —(அ) 1975-76-ல் 447 பள்ளி செல்லும் காது கேளாத சிறார்களுக்குக் கேட்கும் கருவிகள் இலவசமாக வழங்கப்பட்டன.

(ஆ) 1977-78-ல் 176 பள்ளி செல்லும் காது கேளாத சிறார்களுக்குக் கேட்கும் கருவிகள் இலவசமாக வழங்கப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(5) உரிமைப் பிரச்சினை எழுப்ப அனுமதி கோரல்.

திரு. து. புருஷோத்தமன் : உரிமைப் பிரச்சினை எழுப்ப விரும்புகிறேன். மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொல்கின்றபோது, உண்மைக்கு மாறாக, தவறான....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதில் உரிமைப் பிரச்சினை இருக்குமானால், எழுத்து மூலமாகத் தாருங்கள். உரிமைப் பிரச்சினை என்று சொல்லிவிட்டு, பேசக் கூடாது.

(6) அறிவிப்புகள்.

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 6(1)-வது விதியின்கீழ், கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் மூன்றாவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (Pannel of Chairmen) நான் நியமிக்கின்றேன்.

1. திரு. பி. எச். பாண்டியன்,
2. திரு. சு. முத்துசாமி,
3. திரு. எம். செல்வராஜ்,
4. திரு. துரை முத்துசாமி,
5. திரு. ரா. மார்க்கப்பந்து.

## (ஆ) பேரவை அலுவல்கள்

1978ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30ஆம் தேதி நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழு எடுத்த முடிவின்படி சட்டமன்றப் பேரவையின் நடப்புக் கூட்டத் தொடரின் நிகழ்ச்சி உறுப்பினர்களுக்கு ஏற்கனவே அச்சிட்டு அனுப்பியுள்ளவாறு நடைபெறும். ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குத் திருத்தங்கள் கொடுத்திருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் அவற்றை 1978ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2ஆம் தேதி யன்று முன்மொழிய வேண்டும். திருத்தங்கள் 1978ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1ஆம் தேதி அன்று பிற்பகல் 3 மணிக்குள் கொடுக்கவேண்டும்.

## (இ) நடைமுறை விதிக் குழு உறுப்பினர்கள் நியமனம்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 229(1)-வது விதியின்கீழ் 1978–79 ஆம் ஆண்டுக்கு, பின்வரும் உறுப்பினர்களை நடைமுறை விதிக் குழுவின் (Rules Committee) உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்.

1. மாண்புமிகு முதலமைச்சர்
2. மாண்புமிகு பேரவை முன்னவர்
3. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்,
4. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
5. திரு துரை கோவிந்தராசன்
6. திரு. மு. அம்பிகாபதி
7. திரு மெ. ஆண்டி அம்பலம்
8. திரு. கோ. இளங்கோவன்
9. திரு. ரா. உமாநாத்
10. திரு. செ. கிருஷ்ணன்
11. புலவர் கா. கோவிந்தன்
12. திரு. ஆ. நடராசன்
13. திரு பி. எச். பாண்டியன்
14. டாக்டர் ஏ. பொன்னுச்சாமி
15. திரு. ஆர். வெள்ளைச்சாமி
16. திரு. ர. ஜெபமணி.

பேரவையின் 229(1)-வது விதியின்கீழ் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவர் ஆவர்.



[முற்பகல் 10–10]

## (7) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) தமிழ்நாடு, 1978ஆம் ஆண்டு தனியார் காடுகள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1978-ஆம ஆண்டு, தனியார் காடுகள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மேற்படி சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

### (ஆ) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, நாடக நிகழ்ச்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1978ஆம் ஆண்டு நாடக நிகழ்ச்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மேற்படி சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

### (இ) தமிழ்நாடு, 1978-ஆம் ஆண்டு, வேளாண்மை விளை பொருள் விற்பனை (திருத்தம், தனி விதித் துறைகள்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, வேளாண்மை விளை பொருள் விற்பனை (திருத்தம், தனி விதித் துறைகள்) சட்ட முன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மேற்படி சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

## (8) அறிக்கை அளித்தல்.

### உரிமைக் குழுவின் அறிக்கைகளை அளித்தல்

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் அவை உரிமைக் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்—

(1) '' சிகப்பு நாடா '' பத்திரிகை மீதான உரிமை மீறல் குறித்த வழக்கு.

(2) '' அலை ஓசை '' பத்திரிகை மீதான உரிமை மீறல் குறித்த வழக்கு.

## (9) ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்

திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் நேற்று ஆற்றிய உரைக்கு கீழ்க்கண்ட நன்றி கூறும் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :

> ''1978 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள் 30 ஆம் தேதியன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு * தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை. உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்''.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழ் நாடு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்'' என்ற தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர் திருப்பூர் மணிமாறன் அவர்கள் முன்னுரைத்ததை நான் முழு மனதுடன் வழிமொழிகிறேன்.

திரு. ஆர். மணிமாறன் : சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவித்து முன் மொழிந்த தீர்மானத்தின் மீது சில உணர்வுகளை நான் இந்த அவையில் வைக்க கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

பொதுவாக, ஆளும் கட்சி ஆளுநர் உரைக்கு வக்காலத்து வாங்கி ஆதரித்து மொழிவதும், எதிர்க்கட்சிகள் இது சரியில்லை, குறைகள் இருக்கின்றன என்று சொல்லுவதும் ஒரு சடங்காக, சம்பிரதாயமாக காலம் காலமாகக் கடைப் பிடித்து வருகிற

* 220-229ம் பக்கங்களில் ஆளுநர் உரை இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது. அதன் தமிழாக்கம் 229-241ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.





ஒரு காரியமாகும். ஆனாலும் கூட, பாரம்பரியம் மிக்க, இந்தக் கண்ணியம் மிக்க திருச்சபையில் எந்தச் சடங்குக்கும் அப்பாற்பட்ட ஒரு எல்லைக்கோட்டில் நின்று சம்பிரதாயத்திற்கும் மாறுபட்டிருக்கின்ற ஒரு கோணத்தில் நின்றுகொண்டு இந்த ஆளுநர் உரையை நான் வாழ்த்தி, வரவேற்றுப் பேசக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

திரு. க. சுப்பு : விளக்கத்திற்காகக் கேட்கிறேன். இந்தப் பேரவையை ''பேரவை'' என்று தான் சொல்ல வேண்டும். இந்தப் பேரவையை திருச்சபை என்று சொல்லலாமா ? சாமியார் மடத்தைத்தான் திருச்சபை என்று சொல்வார்கள்.

திரு. ஆர். மணிமாறன் : திருச்சபை என்றால் சாமியார் சபை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். சாமியார் சபைக்கும் அவருக்கும் ரொம்பச் சம்பந்தம் இருக்கிறதோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. ''திரு'' என்றால் ''அழகு'' என்று பொருள். இதை ''அழகு'' என்ற அளவில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதிலே ஏழைகளை வாழவைக்கிற திட்டங்கள் இல்லை, அரசின் வருடாந்திர அறிக்கைபோல் இருக்கிறது. சமுதாய முன்னேற்றத்திற்கு ஆன அறிவிப்பு எதுவும் இதில் இல்லை. வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க எதுவும் இதிலே கூறப்படவில்லை என்ற குறைபாடுகளைச் சொல்லி ஆங்காங்கே குற்றங்கள் இருப்பதாகக் கருதிக்கொண்டு பலபேர்கள் எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தாலும்கூட, ஒரு சகோதர வாஞ்சையோடு ஒரு சமத்துவ விமரிசனத்தை அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள் என்ற நிலையிலே அதை நான் எடுத்துக் கொண்டு என்னுடைய உரையைத் துவக்க முன்வருகிறேன்.

பொதுவாக, இந்த ஆளுநர் உரையை போற்றுதற்குரிய பொக்கிஷமாக நான் கருதுகிறேன். பொக்கிஷம் என்றால் என்ன என்று உறுப்பினர் கேட்டுவிடக் கூடாது. ஆளுநர் உரை என்பது வெறும் வார்த்தைகளால் மட்டும் நிரப்பப்படவில்லை. வைர மணித்துளிகள் ஆங்காங்கே ஒளி வீசிக்கொண்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். வைரமணித்துளிகளால் வார்த்து எடுத்திருக்கிற உரையாகவே இதனை நான் கருதுகிறேன். எழுத்துக்களால் மட்டும் அலங்கரிக்கப்பட்டிருக்கிற உரையல்ல. ஏற்றமிகு சமுதாயத்தை உருவாக்கும் எண்ண மலர்களாக காலங்களைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக மின்னி மிளிர்ந்து கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்ற ஒரு ஆண்டுக் காலத்திலே விவசாய உற்பத்தியிலே வேகத்தைக் காட்டி அயராது பாடுபட்டு உழைத்து உற்பத்தியை உயர்த்திய இந்த அரசை மனமார நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். வேளாண்மை விளைபொருட்களுக்காக

விற்பனையை ஊக்குவிக்க தனி இயக்குநரகம் அமைக்க இருப்பது போற்றுதற்குரிய காரியம் ஆகும். கடந்த காலத்திலே இல்லாத நிலைமையை ஏற்படுத்தியதற்காக, நான் இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில், ஒழுங்கை உதாசீனப் படுத்தும் தன்மை கடந்த காலத்திலே வாடிக்கையாக இருந்தது ஒரு மாபெரும் உண்மை. பொதுச் சொத்துக்கள் தனிச் சொத்துக்களாக்கப்படும் விந்தைகள் வேதனையை வெளிப்படுத்தும் செய்திகள். வட ஆற்காடு மாவட்டத்திலே நிலமே இல்லாத ஒருவர் விற்பனைக் கூடத்தின் தலைவரானார். சொந்த நிலமே இல்லாத ஒருவர், விற்பனைக் கூடத்தின் தலைவராவதும், நிலம் உள்ளவர்தான் தலைவராக முடியும் என்ற ஞானம், தலைவரான பின் வந்ததும், ஞானம் முளைவிட ஆரம்பித்ததும் நிலம் நாணமில்லாமல் அவர் பெயருக்கு வந்தடைந்ததும், நடந்த கதை. அலுவலக வாகனத்தை தனது சொந்தக் காரியத்திற்குப் பயன்படுத்தியதும், தனது புதல்வியின் திருமணத்திற்கு ஆன மின்சாரக் கட்டணத்தை மார்க்கட்டு கமிட்டிக் கட்டணமாக்கி எழுத வைத்த கதை முடிந்த கதை. அலுவலக அறையைக் கூட தனது அந்தப்புர அறையாக்கிய கதை, நிர்வாக இயந்திரத்தை தனது உபயோகத்திற்காக ஆட்படுத்திக்கொண்ட கதை, பயணப்படிகள் பயணம் போகாமலே பாக்கெட்டில் வந்து விழுந்து நிரம்பிய கதை, தென்னாற்காடு மாவட்டம், வண்டிபாளையத்தில் மட்டுமல்ல, வட ஆற்காடு மாவட்டத்தில் மட்டுமல்ல, திருப்பூரிலும், செங்கற்பட்டிலும் அது தொடர்கதையாக்கப்பட்டது. அதனை உணர்ந்த அரசு அந்தக் குழுக்களைக் கலைத்தது, வரவேற்கத் தகுந்த காரியமாகும்.

முறைகேடுகளுக்கு ஓர் முற்றுப்புள்ளி வைத்தது பாராட்டுக்குரிய காரியமாகும். ஒட்டுமொத்தமாக தமிழகத்தில் உள்ள நிலைமை, பஞ்சம் இல்லை. பசியில்லை. உணவுப் பொருட்கள் தாராளமாகக் கிடைக்கின்றன என்பதுதான். வாட்டம் இல்லை, வறுமையை சிறைப்படுத்தி பஞ்சத்திற்கு பஞ்சத்தைப் பரிசளித்த நிலை வேறு எந்தக் காலத்திலும் இல்லை. கடலை எண்ணைக்கு கால்கை முளைத்து அது ஓட்டப்பந்தயம் விட்ட காலம் உண்டு. சர்க்கரைக்கு சிறகுகள் முளைத்து அது பறந்துபோன நேரங்களும் உண்டு. ஆனால் வெளிச் சந்தையில் சர்க்கரை விலை குறைந்து வாங்கும் சக்தி விரிவடைந்துள்ளது என்றால் அரசின் அக்கறை இந்தச் சர்க்கரையில் இருப்பது புரியும். பலபேர்கள் வெளியிலே கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 10-20)

"16,000 நியாய விலைக்கடைகளை இந்த அரசாங்கம் திறப்பதாகச் சொன்னதே, சென்ற ஆளுநர் உரையிலே குறிப்பிட்டதே, ஆனால் கடைகள் திறந்ததா, வரலாறு உண்டா, அந்தக் கடைகள் திறக்கப்பட்டிருக்கிறதா, ஏன் திறக்கப்படவில்லை, அப்பொழுதே





தெரியும், முடியாது என்று தெரியும், இது நடக்காது என்று தெரியும்'' என்கின்ற பிரச்சாரங்கள் மேடைகளிலே மட்டுமல்ல. கதைகளிலேயும், கட்டுரைகளின் வாயிலாகவும், கவிதைகளிலேயும் நடமாடிக் கொண்டிருக்கின்ற நிலைமைகள்தான் இன்றைய தினம் மலர்ந்து கொண்டிருக்கின்ற பாங்கையும் நான் புரிந்து வைத்திருக்கிறேன். ஆனால் மதுரை மாவட்டத்திலேயும், முகவை மாவட்டத்திலேயும், நெல்லை மாவட்டத்திலேயும் அந்த நியாய விலைக் கடைகளைத் திறப்பதற்கு உண்டான கால்கோள் விழாக்கள், கனிவுடன் நடைபெற்று முடிந்திருக்கின்றன. அதையும் வெள்ளிடை மலையென இந்த ஆளுநர் உரை காட்டிக் கொண்டிருக்கிறது. சிறுகச் சிறுக அந்தப் பணி பெருகுவதற்கான சாத்தியக் கூறுகள் சத்தியப் பிரமாணமாக இன்றைக்குத் துரித கதியில் இயங்கத் தயாராக இருக்கிறது என்பதை இந்த ஆளுநர் உரை துல்லியமாக வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொண்டிருக்கிறது. உடனடியாக ஏன் துவக்கப்படவில்லை, ஏன் இவ்வளவு காலதாமதம் என்பது கேள்வி. இது மாயா பஜார் காலமும் அல்ல, மந்திரிகளின் கையில் மந்திரக் கோலும் இல்லை, பட்டணத்தில் பூதங்கள் இங்கே பிரவேசிக்கவும் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். Our steps are measured என்று அண்ணா அவர்கள் இதே அவையிலே குறிப்பிட்டுச் சொன்னார்கள். அப்படி இந்த நாட்டில் முதல்வரவர்கள் அளந்து பார்த்து, மற்றவர்களை அளந்து நோக்கி, தன் அடிகளை அளந்து எடுத்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, கொஞ்சம் கொஞ்சமாக இந்த நியாய விலைக்கடைகள் திறக்கப்படுவதற்கான காரியங்கள் நடைபெற்று வருகின்றன.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. மாணிக்கபந்து) தலைமை)

அடுத்து 'வேலைவாய்ப்பு பெருகுவதற்கான திட்டங்கள் ஏதாவது இருக்கிறதா? அதற்கான திட்டங்கள் இல்லை, என்ற கருத்தை பலபேர் சொன்னார்கள் பத்திரிகைகளின் வாயிலாக. பால் பெருக்குத் திட்டத்தின் அடிப்படையில் செயல்படவிருக்கும் மொத்தம் பத்து இலட்சம் உறுப்பினர்கள் கொண்ட 4,600 பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கங்கள் வேலைவாய்ப்பைத் தராதா? இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதன் மூலம் பால் சேகரிக்கும் அளவு மூன்று மடங்காக விரிவடையும் என்ற கருத்து அதிக வேலை வாய்ப்பை எதிர்காலத்தில் உருவாக்கித் தராதா?

மூன்று கோடி ரூபாய் செலவில் காடுகள் வளர்ப்பதற்கான புதிய திட்டம் வேலைகளை உருவாக்குவதற்கா அல்லது வேலைகளை வீழ்த்துவதற்கா?

கிராமத் தொழில்களைப் பலப்படுத்துவதும், கிராம மக்களுக்கு அதை உபயோகத்திற்களாகும்படி செய்வதும், கிராமத் தொழில் வாரியம் 30,000 பேருக்குக் கூடுதல் வேலைவாய்ப்புக் கொடு என்பது சரியானதில்லையா? இது வேலைகளைக் கொடுக்குமா அல்லது கொடுக்காதா?

பட்டு உற்பத்தித் தொழிலைச் சீராக்கப் பெருமுயற்சிகளை அரசு உருவாக்கியதும், ஓராண்டில் மாத்திரம் அரசு எடுத்த முயற்சிகளின் பலனாக 20,000 பேருக்குக் கூடுதல் வேலைவாய்ப்பு வசதிகள் ஏற்பட்டுள்ளதும் தவறான காரியமா?

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் 900 சிறு தொழிற்கூடங்களை அமைக்க வழி செய்வது, அதன்மூலம், ஒரு இலட்சம் பேருக்குக் கூடுதல் வேலை வாய்ப்பு உருவாக்கப்படும் என்பதும், மூன்று மாதங்களில் எடுக்கப்பட்ட முயற்சிகளின் பலனாக 25,000 பேர்களுக்குக் கூடுதல் வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது என்பது நல்ல காரியமாகத் தெரியவில்லையா?

ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனே நம்முடைய தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், ஒரு சூளுரையைச் செய்தார்கள். 30, 31 ஆண்டுக் காலமாக நாம் சுதந்திரம் மனிதர்களாகப் பூமியிலே விளங்கி வந்தும், நம்முடைய அடிப்படைப் பிரச்சனையான குடிநீர்ப் பிரச்னை தீர்க்கப்படவில்லை, சென்ற கால கட்டத்தில் அல்லது பிரிட்டிஷார் ஆட்சிக் காலத்தில் இருந்து இந்தக் குடிதண்ணீர்ப் பிரச்னையைச் செப்பனிட்டுத் தர முடியவில்லை, இதைப் போக்கும் காரியமாக இந்த நாட்டு மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீரை நாம் கண்டிப்பாகக் கொடுத்தே தீருவோம் என்ற சத்தியப் பிரமாணத்தைச் சங்கற்பமாக, சபதமாக ஏற்று தமிழக முதல்வரவர்கள் அன்றைக்கு அறைகூவல் விடுத்தார்கள். அதன் பின்னணியில் சென்னைக்குக் கிருஷ்ணா நீர் வருவது, வீராணம் கதையாக இல்லாமல், அது வீரக்கதையாகும். அந்த வகையில் அண்டை மாநிலங்களுடன் தொடர்பு கொண்டு பேச்சு வார்த்தைகள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளைக் கிழக்கே திருப்பும் யோசனை பற்றியும் அந்த மாநில முதல்வருடன் நம்முடைய முதல்வரவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்ற பாங்கையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

கிராமப் பகுதிகளில் உள்ள மக்கள் நோயால் பாதிக்கப்பட்டு மருத்துவ வசதியற்று வாழ்கிறார்கள் என்ற நிலைமை தமிழகத்திலே பரவலாக இருந்து கொண்டிருக்கிறது. இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் கிராமங்கள் சிறு நகரங்களாக மாற்றப்பட வேண்டும், கிராமங்கள் என்ற பெயரே இருக்கக் கூடாது, அவைகள் சிறு நகரங்களாக மின்னி மிளிர வேண்டுமென்ற அடிப்படைச் சித்தாந்தத்தின் அடிப்படையிலே இந்த ஓராண்டுக் காலத்தில் போதித்துக் கொண்டு வருகின்ற இந்த அரசு கிராமங்களில் நலிந்து வாழ்கிற, துயரத்தில் மிதந்து கொண்டிருக்கின்ற, அந்த ஏழை மக்களைக் காக்க பல்வேறு வகைகளில் மருத்துவ வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதை இந்த ஆளுநரின் உரை தெள்ளத் தெளிவாகக் காட்டிக் கொண்டிருக்கிறது. கண்ணொளி காக்கும் திட்டங்கள் புதிய முனைப்போடு, புது வேகத்தோடு செயல்படும் என்பது வரவேற்கத் தக்கதாகும். புதிய வரலாற்று நிலைமையை நிலைநாட்ட வேண்டுமென்று மருத்துவத்துறையின் சார்பாக என்ன





என்ன அலுவல்கள் செய்யப்பட்டு வருகின்றன என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆதலே, கிட்டப் பார்வைக்கு ஒரு கண்ணாடியைப் போட்டு, எட்டப் பார்வைக்கும் அதே கண்ணாடியைப் போட்டு, அரைகுறை கண்களைக் கெடுக்கின்ற நிலைமைகள் இனிமேலும் வரக்கூடாது; அப்படி ஒரு சூழ்நிலை வரக் கூடாது, அதிலே அரசாங்கம் நேரடியாகக் கவனித்து ஈடுபட வேண்டுமென்றும் இந்த நேரத்திலே ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் போது சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிறப்பாக, இரண்டு மருத்துவக் குழுக்கள் இந்த அரசாங்கத்தால் அமைக்கப்பட்டிருப்பது சென்ற எந்த அரசாங்கத்திலும் இல்லாத புதுமையான காரியமாகும். அதனையும் சுட்டிக்காட்டி, பாராட்டவும், வரவேற்கவும் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

நமது அன்னைத் தமிழைக் காக்கின்ற பாங்குடன் இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு எவ்வளவு சீரோடு, சிறப்போடு செயல்பட்டு வருகின்றது என்பதை எடுத்துக்காட்டுகின்ற வகையில் நான் தென் மாநில முதல்வர்கள் மாநாட்டைத் தமிழகத்திலே கூட்டி, இந்தத் தாய்த் தமிழை அழிக்க எந்த மொழி திணிக்கப்பட்டாலும் இவ்வரசு ஏற்காது என்ற சங்கநாதத்தை முழங்கினார். ஆண்டாண்டு காலமாக எந்த அமைச்சரவைக்கும் இந்தக் கருத்துத் தோன்றவில்லை. புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். ஒருவருக்குக்குத்தான், இந்தத் தமிழக முதல்வருக்குத்தான் இந்தச் செயலாக்கம் இருக்கிறது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

செந்தமிழைக் காக்க, தங்கள் செந்தேக்குத் தேகத்தைச் செந்தீயில் சிக்க வைத்து செத்து மடிந்த தியாக ரோஜாக்களை நினைத்து, தமிழகத்தின் இளைய ராஜாக்களை நினைத்து, எப்பக்கம் வந்தாலும், அது எத்தனை பட்டாளங்கள் கூட்டி வந்தாலும் பார்ப்போம் ஒரு கை, கேட்டு திணிக்கின்ற சூழ்நிலை வரும் என்று சொன்னால், திணிக்கின்ற சூழ்நிலை நிச்சயமாக இந்த நாட்டில் ஏற்படும் என்று சொன்னால், அதை எதிர்த்து, பகிரங்கமாகத் துரந்தி அடிக்கின்ற சங்கநாத நோக்கோடுதான் இந்த அரசாங்கம், ஆளுநர் உரையிலே தெளிவுபடுத்திக் காட்டியிருக்கிறது என்பதை என்னால் சுட்டிக்காட்டாமலிருக்க முடியவில்லை. எங்கே சொல்லியிருக்கிறார் என்பதை மாமன்ற உறுப்பினர்கள் தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும். சந்து முனையில் சிந்து பாடவில்லை. அல்லது தெருவோரத்திலே ஆவேசமாக, வேண்டாமென்று சொல்லவில்லை. மாநில முதல்வர்களைக் கூட்டி, அந்தத் தீர்மானத்தைப் போட்ட சரித்திர பெருமை இந்த ஆட்சிக்கு உண்டு, அரசுக்கு உண்டு, அமைச்சரவைக்கு உண்டு என்பதை நான் தெளிவுபடுத்திச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதிலே வரும் வரிகளிலுள்ள சொற்களைக் காண வேண்டும். பிரதமரின் வாக்குறுதிகளை மறுதளிக்கும் வகையில் மைய அரசின் சில அமைச்சரகங்கள், தொடர்ந்து இந்தியைத் திணிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளுவது

வன்மையாகக் கண்டிக்கத்தக்கது— வன்மையாகக் கண்டிக்கத்தக்கது என்று ஆளுநர் உரையில் அந்த வீர வரிகள் மின்னிக் கொண்டிருக்கின்றன என்பதை உறுப்பினர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஆனால், வெளியே இருந்து கொண்டு தமிழைக் காப்பது நாங்கள்தான், தற்போதுள்ள முதல்வர் தமிழைக் காப்பதில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிச் சொல்லுகின்றவர்களைப் பார்த்துச் சொல்கிறேன். தமிழக முதல்வர், ஆளுநர் உரை மூலம் வன்மையாக மத்திய அரசைக் கண்டிக்கிறோம் என்று சட்டமன்றத்திலேயே சொல்லியிருக்கிறார். தெருவோரத்திலே சொல்லவில்லை. ஆனால் வெளியே சிலர் சொல்கிறார்கள், இந்த நாட்டு முதலமைச்சருக்கு ஆண்மை இல்லை. தைரியம் கிடையாது, சந்தர்ப்பவாத அரசியலை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று மேடையிலே முழங்கிக் கொண்டிருக்கிற வரட்டுப் பிரசங்கங்கள் இன்றைக்கு எக்காளமிட்டுக் கொண்டிருப்பதை நாம் அறிவோம்.

இந்த அரசு இருமொழிக் கொள்கையைச் செயல்படுத்துவதில் நம்பிக்கை கொண்டுள்ளது. முதல்வர் இதே அவையில் கூறவில்லையா ? திராவிட முன்னேற்றக் கழகமும், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் இரட்டைக் குழல் துப்பாக்கியாக இருக்கும் என்று சொல்லவில்லையா ? அவர் இங்கே சொன்ன அந்த வாசகங்களை ஞாபகமூட்ட விரும்புகிற நேரத்தில் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வெளி பிரச்சாரங்கள் எப்படி இருக்கின்றன என்று இங்கே நான் சுட்டிக் காட்டாமலிருக்க முடியாது. எம். ஜி. ஆர். துப்பாக்கியிலே தோட்டாக்கள் இருக்கின்றன. ஆனால், அவை, தொய்வுற்று, நமத்துப் போயிருக்கின்றன, நலிந்து போயிருக்கின்றன என்ற வார்த்தைகள்தான் வெளியே சங்கநாதம் இட்டுக் கொண்டிருக்கின்றன. அதை வெற்றுத் துப்பாக்கியென்று சொன்னவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். எம்.ஜி.ஆருடைய அந்த வெற்றுத் துப்பாக்கியில்தான், பாரதப் பிரதமரின் வாக்குறுதிகளை மறுதளிக்கும் வகையில் மைய அரசின் சில அமைச்சரகங்கள், தொடர்ந்து இந்தியைத் திணிக்கும் முயற்சிகள் மேற்கொள்வது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது என்று சொல்லியிருக்கிறார். யாரைச் சொல்கிறார்களோ, அந்தத் துப்பாக்கியிலிருந்துதான் இன்றைக்கு வன்மைக் குரல்கள், கண்டனக் குரல்கள் எழும்பியிருக்கின்றன. அது ஆளுநர் உரையில் தெளிவு படுத்திக் காட்டப்பட்டிருக்கிறது என்பதை என்னால் எடுத்துக் காட்டாமலிருக்க முடியவில்லை.

(முற்பகல் 10—30.)

ஆகவே தமிழக அரசு இரு மொழிக் கொள்கைகளை செயல்படுத்துவதில் நம்பிக்கைக் கொண்டிருக்கிறது. இருமொழிக் கொள்கையைத் தான் ஏற்றுக் கொள்வோம். வேறு எந்தத் திட்டத்தையும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை என்பதை பகிரங்கமாக அறிவித்த அரசு இந்த அனைத்திந்திய அண்ணா





திராவிட முன்னேற்றக் கழக அரசுதான். அதைத் தெளிவு படுத்திக் காட்டுவதுதான் இந்த ஆளுநர் உரை. வேறு எங்கும் அல்ல. இந்த மன்றத்திலேயே முதல்வர் அவர்கள் தெரிவித் திருக்கிறார்கள். அதை மீண்டும் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். தெள்ளத் தெளிவாக, துல்லியமாக, பளிச் சென்று பட்டவர்த்தனமாக தெளிவு படுத்தியிருக்கிறார்கள். இந்தத் தென் மாநில முதல்வர்கள் மாநாடு சென்ற காலகட்டங் களில் நடந்திருக்கக் கூடாதா ? கடந்த காலத்தில் இருந்தவர் களுக்கு இந்த ஞானோதயம் பரிணமித்திருக்கக் கூடாதா ? இது வேறு யாருக்காவது வந்ததா என்றால், இல்லை. புரட்சித் தலைவர் ஒருவருக்குத்தான் இந்த யோசனை வந்தது என்பதை சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன கேட்கலாமா ? தென் மாநில முதல்வர்களை எல்லாம் கூட்டி, இந்தியை எதிர்த்து நாங்கள் தீர்மானம் போட்டோம் என்று நண்பர் மணிமாறன் அவர்கள் சொன்னார்கள். தென் மாநில முதல்வர்கள் எல்லாம் இங்கே வந்தார்கள். வந்த பிறகு அவர்கள் இந்தியை ஏற்றுக் கொண்டார்களா என்பதை அறிய விரும்புகிறேன். காரணம் அந்த மாநில முதல்வர்கள் மாநாட்டிற்கு வந்தபோது

Mr. Urs s id th t Karnatak h d agreed that Hindi should be the natio al l ngu ge, in th sens that a language was needed for th country as a whole. என்று சொன்னார்கள்.

இந்தியை அவர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தியைப் படிப்பதிலே எங்களுக்கு வெறுப்பு கிடையாது என்று அந்தோணி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மும்மொழி திட்டத்தை ஏற்றுக் கொள்ளுகிறோம் என்று சென்னா ரெட்டி அவர்கள் சொல்லுகிறார்கள். நீங்கள் கூப்பிட்டீர்களே என்று அவர்கள் வந்தார்கள். ஒரு தீர்மானத்தைப் போட்டு விட் டோம் என்று கவர்னர் உரையிலே சொல்லியிருக்கிறீர்கள். ஆகவே நீங்கள் அழைத்த அந்த முதல்வர்கள் இந்தியை ஒத்துக் கொண்டவர்கள். அதை ஒரு பெரிய காரியம் செய்து விட்டோம் என்று பெருமைப் படுத்திக் கொள்வதில் அர்த்தம் இல்லை என்பதை மென்மையாகச் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. ஆர். மணிமாறன் : இந்தியை அவர்கள் ஒத்துக் கொண்டவர்கள் என்பதில் ஆட்சேபனை இல்லை. கருத்து மாறுபாடுகளும் இல்லை. ஆனால் இந்தியைத் திணிப்பதில் வன்மையாகக் கண்டிக்கிறோம் என்ற அந்த அடிப்படை உணர்வை அவர்கள் கொண்டிருக்கிறார்கள் என்பதை உறுப்பினர் அவர்களுக்குச் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். 1938—39 ஆம் ஆண்டிலேயிருந்து இந்தி எதிர்ப்புக் கோஷங்கள் தமிழகத்தின் எல்லை ஓரங்களிலேதான் இருந்து கொண்டிருந்தது.

[திரு. ஆர். மணிமாறன்] [1978 ஆகஸ்ட் 31

தந்தை பெரியாருக்குப் பின்னால், பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பின்னால், புரட்சித் தலைவர் ஆட்சியிலேதான் நாடு தழுவிய நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, ஒன்றை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்தியை எதிர்ப்பதிலே ஒன்றுபட்டிருக்கிறார்கள் என்று நண்பர் மணிமாறன் சொல்லுகிறார்கள். ஆனால் அவர்கள் இந்தியை ஒத்துக் கொண்டவர்கள். அவர்கள் இந்தியை எதிர்க்கிறார்கள் என்று சொல்வதிலே எந்தவிதமான பொருளும் இல்லை என்பதை நண்பர் மணிமாறன் ஒத்துக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். மேலும் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் கூட பிரதமர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அதற்குப் பிரதமர் அவர்கள், ஜூன் 3 ஆம் தேதி என்று கருதுகிறேன்.

'The Prime M n ster Mr. Morarji Desai has sa d the use of Hindi for offici.l purpos.s of the Government of Ind a is bound to increase in the years to co ne.'

என்று சொல்லியிருக்கிறார்கள். "is bound to increase' பாரதப் பிரதமர் நிதி அமைச்சர் அவர்கள் கடிதத்திற்கு, தெளிவுபட "is bound to increas.". என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே நான் சொல்வதெல்லாம் நீங்கள் எதற்கு வெற்றுக் கோஷம் போட்டு நாட்டு மக்களை ஏமாற்றுகிறீர்கள் என்பதுதான்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்திப் பிரச்னை என்பது தொடர்ந்து இருந்து வரும் பிரச்னை ; ஆட்சி மொழி என்பதும் தொடர்ந்து வரும் பிரச்னை. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மாண்புமிகு பிரதம அமைச்சருக்கு கடிதம் எழுதினார்கள். அதற்கு மாண்புமிகு பிரதம அமைச்சர் பதில் சொன்னார்கள். இந்தப் பிரச்னை இன்று நேற்று தோன்றிய பிரச்னை அல்ல. 40 ஆண்டு காலமாக இருக்கும் பிரச்னை. நீங்கள் நினைப்பது போல் இந்தப் பிரச்னை முடிந்துவிட்ட பிரச்னை அல்ல. தொடர்ந்து விவாதத்தில் இருந்து வருகிற பிரச்னை. அதன் பேரில் விவாதம் நடந்து கொண்டு இருக்கிறது. அந்த விவாதத்தில் எங்கள் நிலையைச் சொல்கிறோம். அந்தக் கோணத்தில் அதை அணுக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவரவர்களே. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள்.



1978 ஆகஸ்ட் 31]

திரு. அ. ரகுமான்கான் : என்னைக் கொஞ்சம் அனுமதிக்கக் கூடாதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். அனுமதிப்பதும், அனுமதிக்காததும் என்னுடைய விருப்பம் ; அதை நீங்கள் கேட்க நியாயம் இல்லை. ஆகவே, அதை எதிர்த்து நீங்கள் கேள்வி கேட்கக் கூடாது. திரு. மணிமாறன், நீங்கள் பேசுங்கள்.

திரு. ஆர். மணிமாறன் : வெற்றுக் கோஷங்கள் என்று மாண்புமிகு துரை முருகன் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அவர்கள் ஆளுநர் உரையின் அந்த 20-வது ஷரத்தைக் கண்டிப்பாகப் படித்து இருப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அப்படி அவர்கள் படிக்காவிட்டால் மீண்டும் அவர்கள் அதைப் படிக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். அவர்கள் மறுதளித்து விட்டார்கள் என்று உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து சொல்லிக் கொண்டு வருகிறார்கள். இந்தி திணிப்பிற்குக் கண்டனம் என்பது பேரறிஞர் அண்ணா அவர்களின் தலையாய கொள்கையாகும். ஆகவே, இந்தியை விரும்பிக் கற்றுக் கொள்பவர்கள் கற்றுக் கொண்டு போகட்டும் என்பது இங்கே இருக்கும் நிலை ; அங்கேயுள்ள அவர்களுக்கு அது பண்பட்ட தன்மையாகும். ஆகவே, நான் திரும்பத் திரும்ப சொல்ல விரும்புகிறேன், அந்த 20-வது ஷரத்தை தயவு செய்து படிக்க வேண்டும்.

முதலமைச்சர்கள் மாநாடு இங்கே கூட்டப்பட இருக்கிறது என்ற கடிதப் போக்குவரத்து நடைபெறுகிற நேரத்தில் கூட பல பேர் பத்திரிகைகளில் சொன்னார்கள். அவர்கள் இங்கே வரமாட்டார்கள். ஆந்திர முதல்வர் வர மறுத்து விட்டார். கருநாடக முதல்வர் வரமாட்டார். கேரள முதலமைச்சர் வேண்டாம் என்று சொல்லி விட்டார். அங்கேயிருந்து காஷ்மீர் ஷேக் அப்துல்லா அவர்கள் தந்தி கொடுத்துவிட்டார்கள், ஜோதிபாசு அவர்கள் கூட மறுத்து விட்டார்கள் என்று எல்லாம் கூட கட்டவிழ்த்து விடப்பட்டு, அவைகள் அணிவகுப்பை நடத்தின. அவைகளையெல்லாம் நான் இங்கே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். காரணம், இத்தனையும் மீறி, தென் மாநில முதல்வர்கள் மாநாடு இங்கே நடந்து இருக்கிறது என்பதை நான் தெளிவு படுத்திக் காட்ட விரும்புகிறேன். அதை தயவு செய்து மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள், எதிர்க்கட்சி நண்பர்கள் தயவு செய்து பாராட்டக் கூடாதா என்பது என்னுடைய பணிவான கேள்வியாகும்.

நல்லவைகளைப் பாராட்டுகிற நேரத்தில் பாராட்டுவது என்பது நம்முடைய தமிழக முதல்வர் அவர்களுக்கு கை வந்த கலையாக இருந்து வருகிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

[திரு. ஆர். மணிமாறன்] [1978 ஆகஸ்ட் 31

சென்ற ஆண்டு தேசியக் கொடியை இங்கே ஏற்றி வைத்த நேரத்தில், நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் தெள்ளத் தெளிவாகச் சொன்னார்கள். இன்றைக்கு இந்த சுதந்திரக் கொடியை நான் ஏற்றுகிறேன் என்றால், அதற்குக் காரண கர்த்தா எதிர்க்கட்சித் தலைவர் என் எதிரில் உட்கார்ந்து இருக்கிற கலைஞர் அவர்கள் தான் என்று குறிப்பிட்டார்கள். நான் அதைத் தான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே, தென் மாநில முதலமைச்சர் மாநாடு கூட்டப்பட்டது பாராட்டுவதற்குரிய அம்சம் இல்லையா என்பதை பணிவோடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். தெரு ஓரத்துப் புலம்பல்கள், வெற்றுக் கோஷங்கள் என்ற வார்த்தைகளைச் சொன்னார்கள். இவை வெற்றுக் கோஷங்களா என்பதை தயவு செய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

**தற்போது இந்தி** எதிர்ப்பு மாநாடு என்ற **பெயரால் எம். ஜி. ஆர்.** எதிர்ப்பு மாநாடுகள் நடத்தும் **விபரீதப்** போக்குகள் தலைதூக்கி நர்த்தனமாடிக்கொண்டு இருக்கின்றன என்பதை நாம் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். அதற்கு மாறாக, நல்ல நோக்கத்தில் ஆளுநர் உரையில் மிகத் தைரியமாக, மிகச் சுருக்கமாக, ஆணித்தரமாக தமிழக அரசின் மொழிக்கொள்கை, இரு மொழித்திட்டம் தான் என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கும் மக்களின் வாழ்க்கையைப் பேணிக் காப்பதில் இவ்வரசு முன் ஜாக்கிரதையோடு செயல்பட்டு வருகிறது என்பதை அடுத்த வாரத்தில் தெளிவு படுத்த இருக்கிறார்கள் என்பதை நான் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். ஜாதி ஒழிய வேண்டும், மேட்டுக்குடி கீழ்க் குடி இருக்கக்கூடாது, உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்று ஜாதியைச் சொல்லிக்கொண்டு இருக்கிற யாராக இருந்தாலும் இந்தத் தமிழ் நாட்டில் இருந்து ஓட்டப்படவேண்டும் என்று சொல்லி, சாதியை எதிர்த்து காடு மேடுகளில் எல்லாம், பட்டி தொட்டிகளில் எல்லாம் சுயமரியாதைக் கருத்துக்களைப் பரப்பிய தலைவர் தந்தை பெரியார் அவர்களின் வழியில் வந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியதுபோல், ஜாதி துவேஷங்கள் இருக்கக்கூடாது என்று அந்தக் கருத்தைப் பின்பற்றித்தான், ஜாதி அழிய வேண்டும், ஜாதி வேறுபாடுகள் இருக்கக் கூடாது என்பதிலே கண்ணும் கருத்துமாக இந்த அரசு இருந்து வருகிறது. ஆனாலும் ஜாதி பேதங்கள் ஆங்காங்கு தலை தூக்கி வருகின்ற சூழ்நிலைகளையும் இந்த அரசு கவனித்து வருகிறது, கவனிக்கத் தவறவில்லை என்பதைச் சுட்டிக் காட்டும் வகையில்தான் விழுப்புரம் சம்பவம் குறித்து ஆளுநர் உரையில் தெளிவுபடுத்தி இருக்கிறார்கள். **ஜாதிச் சண்டைகள், ஜாதி துவேஷங்கள் நீக்கப்பட மன்ற உறுப்பினர்கள்**



1978 ஆகஸ்ட் 31] [திரு. ஆர். மணிமாறன்]

பாடுபடவேண்டும் என்பதை ஆளுநர் உரையில் தெளிவு படுத்திக் காட்டி இருக்கிறார்கள். ஜாதிகள் இல்லையடி பாப்பா, என்று பாரதியார் அவர்கள் கூறியதைத் தொடர்ந்துதான், பெரியார் அவர்களும், அறிஞர் அண்ணா அவர்களும் கூறி வந்தார்கள். **ஆனால்** இந்தக் கலவரங்களைப் பயன்படுத்திக்கொள்**வதன்** மூலமாக யாராவது அரசியல் வளர்க்க முடியும் என்று நினைத்து அதைப் பயன்படுத்தி, அதை மூலதனமாக வைத்து அரசியல் ஆதாயம் தேட முயற்சி செய்தால், அதை இந்த அரசாங்கம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

(முற்பகல் 10–40)

அரசியல் அநாகரிகத்திற்கு அகராதி படைக்கும் இந்த அற்பக் காரியங்கள் மீண்டும் இந்தத் தமிழ்நாட்டில் தலைதூக்கா வண்ணம் இந்த அரசு பார்த்துக்கொள்ள வேண்டும்.

ஜாதி துவேஷக் குரல்கள் கர்ணகடூரமாக எழுகின்றபோது அதனோடு கோரஸ் பாட சில முரட்டுக் குரல்கள் எழுகின்றன. அந்தக் குரல்கள் ஆங்காரமாக எதிரொலிக்கும்போது திருக்குறள் தெருமுனையில் திருதிருவென விழித்துக் கொண்டிருக்கிறது; தலை குனிந்துகொள்கிறது. குறளோவியம் இன்றையதினம் குறட்டைவிட்டு தூங்க ஆரம்பித்துவிடுகிறது. சத்தியம் தூக்குக் கயிறு எங்கே இருக்கிறது என்று விண்ணப்பம் போட்டுக் கொண்டிருக்கிறது. இந்தக் கதைகள் தொடர் கதைகளாக இருக்கக் கூடாது; முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். மேலும் இத்தகைய காரியங்கள் தலைதூக்கா வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு இந்த அரசினுடையது.

ஜாதி கலவரத்தை யார் தூண்டினாலும், அதை ஒரு தொடர் கதையாக்க யார் முயற்சித்தாலும், எந்த வகையிலே தூபமிட்டாலும் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். ஜாதி கலவரத்தை யார் தூண்டினாலும் அவர்களை விடக்கூடாது. ஜாதி கலவரத்திற்கு யார் காரணமானாலும், அவர்கள் எப்பேர்ப்பட்ட மனிதர்களாக இருந்தாலும் அவர்களை சட்டத்திற்கு முன்னால் கொண்டுவந்து நிறுத்தி, தக்க தண்டனை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைத்தான் இந்த ஆளுநர் உரையிலே தெள்ளத் தெளிவாகச் சுட்டிக்காட்டி, வெளியிட்டிருக்கிறார்கள். அதற்காக ஆளுநர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். எத்தகைய தலைசிறந்த மனிதர்களாக இருந்தாலும் அவர்கள் ஜாதி துவேஷத்தை வளர்ப்பவர்களாக இருந்தால் அவர்களுக்கு நிச்சயமாகத் தண்டனை உண்டு. அவர்கள் உயர்ந்த பதவிகளில் இருந்தாலும் சரி; எப்படிப்பட்ட வசதியும் செல்வாக்கும் பெற்றவர்களாக இருந்தாலும் சரி, சமூக விரோதத் தீமைகளில் ஈடுபடுவார்

களானால் தயவு தாட்சண்யமின்றி, அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்; இந்த அரசு எக் காரணத்தைக் கொண்டும் அவர்களை மன்னிக்காது என்ற வரிகள் என் உள்ளத்தைத் தொடுகின்றன. யார் அத்தகைய தீயச் செயல்களைத் தூண்டினாலும் இந்த அரசு அவர்களைக் கண்காணித்து, கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சுயநலக் கோட்டைக்கு செல்ல பாதை போடத் தெரிந்தவர்களால் பரந்த வெளியில் பறக்க அவர்களுக்கு சிறகுகள் இல்லை. அவர்கள் குறுகிய எல்லைக் கோட்டின் நிரந்தரப் பிரதிநிதிகள். சமுதாயத்திற்கு ஊறு தேடும் விஷக் கொள்கைகளுக்கு உருவம் சமைக்கும் நவீன சிற்பிகள். அவர்கள் யாராக இருந்தாலும் இந்த அரசு அவர்களை அடையாளம் கண்டுகொள்ள முடியும்; அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். அவர்கள் எல்லாம் அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிக்கும் மகாபுத்திசாலிகள்; வெறும் வாயை மென்றுகொண்டே அவல் இருப்பதாக நினைத்து கற்பனையில் சுகம் கண்டு கொட்டாவி விடும் புதுயுக கும்பகர்ணர்கள். அவர்களை அடையாளம் காட்ட இந்த அரசு தயங்கக் கூடாது என்பதை சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என்பதை நான் உணர்கிறேன். பொதுவாக இந்த ஆளுநர் உரை ஒரு எழுச்சிமிக்க எதிர்காலத்தை உருவாக்கும் வகையில் அமைந்திருக்கிறது. அதற்காக மீண்டும் என்னுடைய வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த ஆளுநர் உரை சந்தனக்காட்டை தென்றல் தொட்டு விளையாடியதுபோல், சர்க்கரைப் பந்தலில் அமுதமழை முத்தமிட்டதைப்போல், இருண்ட மனங்களில் ஏற்றிவைத்த குத்து விளக்குகள் போல், இனிய ராகங்களை இழையோட வைத்து புதிய சரித்திரத்தைப் படைத்துள்ளது. அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே இருக்கின்ற எதிர்க்கட்சிக்காரர்களுக்கு அரசைப் பாராட்ட மனம் வரவில்லை ஓராண்டு காலத்தில் எத்தனையோ சங்கடங்கள் வந்த போதிலும், புயல் வெள்ளத்தால் 100 கோடி ரூபாய்க்குமேல் நஷ்டம் ஏற்பட்ட போதிலும், மதுவிலக்குத் திட்டத்தைச் செயல்படுத்துவதினால் 150 கோடி ரூபாய்க்குமேல் இழப்பு ஏற்பட்ட போதிலும் தினம் தினம் மக்களுக்குத் தேவைப்படும் நற்பணிகளை அவ்வப்போது ஆங்காங்கே செய்து கொண்டிருக்கிறது இந்த அரசு. எத்தனை துன்பங்கள், துயரங்கள் வந்தாலும் தொல்லைகளை யார் கொடுத்தாலும், சண்டைகள் வந்தாலும் சச்சரவுகள் வந்தாலும் அவற்றை எல்லாம் சிறந்த முறையிலே சமாளித்து, புடம் போட்ட தங்கம்போல் காரியங்கள் ஆற்றிக் கொண்டிருக்கிற இந்த அரசை நீங்கள் பாராட்டக் கூடாதா என்று இந்த நன்றி தெரிவிக்கும் உரையின்போது கேட்க நான் ஆசைப்படுகிறேன்.



எப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்பட்ட போதிலும் சிறந்த முறையிலே ஆட்சியை நடத்திச் செல்கின்ற இந்த அரசை பாராட்ட மனமில்லை என்று சொன்னால் இனி எந்த காலத்திலும் பாராட்டும் நிலைமை வராது; பாராட்டுகின்ற பக்குவம் வராது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. சென்ற ஓராண்டுக் காலத்திலே இந்தத் தமிழகத்தின் முதலமைச்சர் எப்படிக் காரியங்கள் ஆற்றியிருக்கிறார் என்பதற்கு நிகழ்ச்சிகளே சாட்சியம் கூறுகின்றன; அடையாளம் காட்டுகின்றன; ஒரு பச்சை விளக்கைக் காட்டிக் கொண்டிருக்கிறது. அதையெல்லாம் எண்ணிப்பார்த்து சம்பிரதாயத்திற்காக அல்ல; சரித்திரம் கூறும் சான்றுகளுக்காக பிரதான எதிர்க்கட்சிக் காரர்களும் மற்றுள்ள எதிர்க்கட்சிக்காரர்களும் இந்த ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிப்பார்கள் என்ற எண்ணத்தோடு இந்த ஆளுநர் உரைக்கு என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்து, இந்த நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. மு. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய ஆளுநர் அவர்கள் ஆற்றி இருக்கின்ற உரையின்மீது நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். எனக்கு முன்பாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் மணிமாறன் அவர்கள், மிக ஏக்கத்தோடு அவர்கள் பேசிய பேச்சுக்களில் இந்த அரசைப் பாராட்ட வேண்டும் என்ற எண்ணத்தோடு அவர்கள் அந்தக் கருத்தை எடுத்துச் சொன்னார்கள். பொதுவாக திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் யார் எந்தக் காரியம் செய்தாலும் அது பாராட்டுக்குரிய காரியமாக இருந்தால் நிச்சயமாக எந்த நேரத்திலும் நாங்கள் பாராட்டுவதை நிறுத்தியதில்லை என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஏறத்தாழ ஓர் ஆண்டுக்குப் பிறகு ஆளுநர் அவர்கள் உரையாற்றுவதன் மூலம் இங்கே நம்மைச் சந்தித்து இருக்கிறார்கள். அவர்கள் ஆற்றிய உரையிலே ஏதேனும் புதிய விஷயங்கள் குறித்துச் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தோம் ஆனால் அப்படி எதுவும் சொல்லாமல் புதிய விஷயங்களை எதிர்பார்த்தவர்களுக்கு ஏமாற்றத்தைதான் அவர்களுடைய உரை ஏற்படுத்தி இருக்கிறது. இதிலே ஒட்டுமொத்தமாக எல்லோருமே ஏமாற்றத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. பொதுவாக அரசாங்கத்தின் திட்டங்களையும், கொள்கைகளையும் பற்றித்தான் கவர்னர் உரை என்று சொன்னாலும், இந்த உரையில் நாம் எதிர்பார்த்த அளவு இல்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அவர்கள் ஒரு சில இடங்களை மட்டும் கோடிட்டுக்

காட்டிவிட்டு நிறைய விஷயங்களைச் சொல்லாமல் விட்டு விட்டார்கள். என்ன என்ன திட்டங்களைச் செய்திருக்கிறோம் என்று அவர்கள் சொல்வார்கள் என்று நாம் எதிர்பார்த்தோம். ஆனால் அவர்கள் இந்த இந்த திட்டங்களைச் செய்யப் போகிறோம் என்று மட்டும் சொல்லி இருக்கிறார்கள்.

கடந்த ஓராண்டுக் காலத்திலே நாட்டிலே பெரிய அமளிகள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. பெரிய கலவரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஒரு பக்கம் தொழிலாளர்களுடைய போராட்டங்கள், ஒரு பக்கம் மாணவர்களுடைய போராட்டங்கள், இன்னொரு பக்கம் விவசாயிகளுடைய போராட்டங்கள். இப்படி பல போராட்டங்களைப் பார்த்தோம். இந்த போராட்டங்களுக்கெல்லாம் யார் காரணம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் நன்கு எண்ணிப் பார்க்க வேண்டும். பொதுவாக இந்த அரசாங்கம் எடுத்த அணுகுமுறைகள் சரியான அளவிலே இல்லை. தொழிலாளர்கள் போராடுவதைத் தடுக்கின்ற வகையில் தொழிலாளர்களுக்கெதிராக கறுப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. திடீரென்று சட்ட மன்றம் கூடப்போகிறது என்றதும் அந்தக் கறுப்புச் சட்டம் திடீரென்று வாபஸ் வாங்கப்பட்டது. இப்படிப் பல்வேறு நிலைகளில் அரசின் அணுகுமுறை சிறப்புடையதாக இல்லை. விவசாயிகள் போராட்டத்தை எடுத்துக் கொண்டாலும் பல விவசாயிகளை எல்லாம் உள்ளே தள்ளினார்கள். இந்த மாதிரி விஷயங்களுக்கெல்லாம் ஆளுநர் உரையில் விளக்கமும் பதிலும் தரப்பட்டிருக்கும் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். அப்படி எதிர்பார்த்த நாங்கள் பெருத்த ஏமாற்றத்தை அடைந்தோம்.

அடுத்து சென்னைக்கருகே படகு விபத்திலே மாணவர்கள் இறந்தார்கள். அது குறித்து எதுவுமே அவர்களது உரையில் சொல்லப்படவில்லை. அவர்களுக்கு இந்தச் சட்டமன்றத்திலே ஒரு அனுதாபச் செய்தி கூடச் சொல்லப்படவில்லை.

படிப்படியாக 16,000 ரெவின்யூ கிராமங்களில் நியாயவிலைக் கடைகள் திறக்கப்படும் என்று சொன்னார்கள். 9,300 கடைகள் ஏற்கனவே திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியிலேயே திறக்கப் பட்டிருக்கின்றன. 1,500 கடைகள் நாங்கள் திறந்திருக்கிறோம் என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது.

அடுத்து கூட்டுறவுத்துறை மூலமாகத் தரப்படுகின்ற கடன்களை திருப்பிச் செலுத்த விவசாயிகளால் முடியவில்லை என்ற காரணத்தால் அவர்களுக்குக் கடன் கிடைப்பதில்லை. அவர்கள் முன் பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்தவில்லை என்று ஏதோ காரணத்தையும் மற்றும் சட்டத்தையும் காட்டி அங்கே அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து அதாவது ஜப்தி நடவடிக்கை போன்றவற்றை எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். மேலும் விவசாயிகளுக்கு வேறு எந்த வங்கியிலேயும் கடன் தர முடியாத நிலை



இருக்கின்றது. கூட்டுறவுத் துறையிலே புதியதாகச் சட்டத்தை எல்லாம் கொண்டு வந்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக தஞ்சை மாவட்டம், தென்னாற்காடு மாவட்டம் போன்ற இடங்களிலே இன்றையதினம் புதிய முறைகளின் படி விவசாயிகளுக்குக் கடன் கிடைப்பது தடுக்கப்படும் நிலை இருக்கின்றது.

[முற்பகல் 10-50]

கூட்டுறவுத் துறையில் ஏற்கனவே இருந்த இடைக்கால அரசு நடவடிக்கை எடுத்தார்கள். அதன் தொடர்ச்சி என்ன? கடந்த ஒரு ஆண்டுக் காலமாக தனி அதிகாரிகள், ஏற்கனவே கூட்டுறவுத் துறையில் அதிகாரப் பற்றற்றவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்களோ—அவர்கள் ஊழல் செய்தார்கள் என்று சொல்கிறது அரசாங்கம்—நெருக்கடி காலத்தில் போடப்பட்ட தனி அதிகாரிகள் கடந்த ஓராண்டில் என்னென்ன செய்திருக்கிறார்கள், எந்தெந்த வங்கிகள் எப்படி எப்படி இருந்தன, இப்போது எப்படி இருக்கிறது என்பதையெல்லாம் அறிய ஒரு தனி கமிஷன் போட்டு விசாரித்தால் நன்கு தெரியும். அந்த அளவிற்கு அக்கிரமங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஏற்கனவே 'ஏ' கிளாஸ் வங்கிகளாக இருந்தவை இன்று 'பி' கிளாஸ் வங்கிகளாக மாறியிருக்கின்றன. இவையெல்லாம் சீர்கேடுகள் என்று நினைக்கவில்லையா நண்பர் மணிமாறன்? விவசாயப் போராட்டம் என்றால், கட்டை வண்டிகளை உடைப்போம், மாடுகளை ஏலத்தில் போடுவோம் என்று பொறுப்புள்ள முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நண்பர் திரு. மணிமாறன் அவர்கள் சொன்னார்கள், "முதல் அமைச்சர் அவர்களுக்கு ரொம்ப இதயம் உண்டு" என்று. அவர்களுக்கு எப்படி இப்படி இதயம் மாறிற்று என்று தெரியவில்லை. இன்று காலையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கப்பட்டது. விவசாயிகளின் விளைபொருள்களுக்கு சரியானபடி விலை கிடைக்கவில்லை என்பதை மனதார ஆளும்கட்சி உறுப்பினர்கள் நிச்சயமாக ஏற்றுக்கொள்வார்கள். வேண்டுமானால் ஆளும்கட்சி உறுப்பினர்கள் என்ற முறையில் அதைச் சொல்ல முடியாமலிருக்கலாம். விவசாயிகள் விளைவிக்கக்கூடிய விளைபொருள்களுக்கு நல்ல விலை கிடைக்க என்ன வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன? உணவுத் துறை அமைச்சர் அவர்கள் இன்று காலையில் ஒரு வினாவிற்கு விடையளிக்கும்போது தஞ்சையில் குறுவை நெல் அறுவடை செய்யவில்லை, ஆகவே யாரும் வாங்கவில்லை என்று சொன்னார்கள். தஞ்சை மாவட்ட உறுப்பினர்களுக்குத் தெரியும். அவர்கள் சொல்கிறார்கள் குறுவை அறுவடை செய்யப்பட்டிருக்கிறது என்று அறுவடை செய்யப்பட்டிருக்கிறது, ஆனால் அரசாங்கம் கடைகள் திறக்கவில்லை என்று சொல்கிறார்கள். இப்படித் தவறான தகவல்களை அரசு தந்து கொண்டிருக்கிறது. சென்ற ஆண்டு ஆளுநர் அவர்களின் உரையில் வறுமை நிலை 1974ம் ஆண்டு வரை 59 சதவீதம் தமிழ்நாட்டில் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆண்டு எந்தளவிற்கு அது உயர்ந்திருக்கிறது என்ற கணக்கை ஆளுநர் அவர்கள் தெரிவிக்கவில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் மறைந்துவிட்டது என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஒரு லட்சம் பேர்களுக்கு வேலை கொடுக்கப் போகிறோம் என்று சொல்கிறார்கள். இப்போது ஒரு 25,000 பேர்களுக்கு வேலை கிடைத்திருப்பதாகச் சொல்கிறார்கள், பட்டுப்பூச்சி வளர்ப்பு காரணமாக. எந்த மாவட்டத்தில் அந்தளவிற்கு வாய்ப்பு இருக்கிறது, மற்ற மாவட்டங்களில் என்ன வாய்ப்பிருக்கிறது? நிச்சயமாக இன்றையதினம் படித்தவர்கள் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள். படிக்காதவர்கள், விவசாயத்தில் ஈடுபட முடியாமல் இருக்கிறார்கள். ஆக, இவற்றையெல்லாம் கண்காணித்துப் பார்த்து நடவடிக்கை எடுக்க அரசு தவறியிருக்கிறது என்று குற்றஞ்சாட்ட விரும்புகிறேன்.

அடுத்து மத்திய மாநில உறவு பற்றிப் பேசப்பட்டது. மத்திய அரசு மின்சாரத்திற்குத் தீர்வை விதிக்க இருக்கிறார்கள். அதற்காக நாம் சட்டம் கொண்டுவரயிருக்கிறோம். மின்சாரத் தீர்வையை உயர்த்தப் போகிறார்கள். அப்படி உயர்த்தும்போது சிறு விவசாயிகளுக்கு என்ன உத்தரவாதம் கொடுக்கப் போகிறீர்கள்? சிறு தொழில்கள் நடத்துகிறவர்களுக்கு என்ன உத்தரவாதம் கொடுக்கப்போகிறீர்கள்? நல்ல லாபகரமாக தொழில் நடத்துபவர்களுக்கு உயர்த்தினால் அவர்கள் கொடுக்க முடியும். ஆனால் சிறு விவசாயிகளுக்கு, சிறு தொழில் நடத்துபவர்களுக்கு விதிவிலக்கு கொடுக்க வேண்டும். எனக்கு முன் பேசிய திரு. மணிமாறன் அவர்கள் இந்திக்காக வக்காலத்து வாங்கிப் பேசினார்கள். முதல் அமைச்சர்கள் மாநாடு கூட்டிய பிறகு அரசு சார்பில் அதற்கான தொடர்ச்சி வேலைகள் என்ன செய்யப்பட்டது? 'பாலோ அப் ஆக்ஷன்' என்ன எடுக்கப்பட்டது? அதைத்தான் திரு. துரைமுருகன் அவர்கள் திருப்பித் திருப்பிக் கேட்டார்கள். இரு மொழிக் கொள்கையை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது: அதில் உறுதியாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதை நாங்கள் நம்புகிறோம். அதே நேரத்தில் இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசின் கொள்கை இருமொழிக்கொள்கைதான், அண்ணாவின் கொள்கைதான் எங்கள் கொள்கை என்றால் உடனடியாக இந்தச் சட்டமன்றம் முடிவதற்குள்ளாக எல்லா எதிர் கட்சியினரும் கலந்து பேசி உடனடியாக மத்திய அரசு இரு மொழிக் கொள்கையை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும்கூட இந்தி பேசாதவர்கள் விரும்புகிறவரையில் எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்தியைப் புகுத்த மாட்டோம் என்ற முறையில், சட்ட நுணுக்கப் பிரகாரம், அரசியல் சட்டத்தைத் திருத்த இந்த அரசு தீர்மானம் ஒன்று கொண்டுவரும் என்று எதிர்பார்க்கிறேன், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களிடமிருந்து அதை நான் எதிர்பார்க்கிறேன். அரசியல் சட்டத்தைத் திருத்தி இந்தி பேசாதவர்கள் விரும்புகிறவரை ஆங்கிலம் நீடிக்கவேண்டும் என்பது அரசியல் சட்டத்தில் இணைக்கப்பட வேண்டும். தி. க. சார்பாககூட்டப்பட்ட இந்தி எதிர்ப்பு மாநாட்டில் அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். நம்முடையபயம் நாளுக்குநாள் வளர்ந்து கொண்டேயிருக்கிறது. அந்தளவிற்கு இந்தி தமிழகத்தில் புகுந்து



விட்டது. அதேநேரத்தில் இங்கு தமிழ்மொழிக்கு எந்த அளவிற்கு அந்தஸ்து கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்தில் மன்னார்குடி தாலுகாவில் ஒரு வழக்கு நடந்திருக்கிறது. வேர்ஹௌசிங் கார்ப்பரேஷனில் வேலை செய்து கொண்டிருக்கிற பாலசுப்பிரமணியம் என்பவர் மீது—பாமணி கிளையில் அமர்த்தப்பட்டிருக்கிறார். ஒரு வழக்கு வந்திருக்கிறது. - வழக்கு வருவதற்கு முன்பாக அவரை வேலையிலிருந்து நீக்கியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு, நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள், மன்னார்குடி கோர்ட்டில் நடைபெற்றது, முடிவு சொன்ன நடுவர் அவர்கள் தமிழில் தனது தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். அதில் வேலை நீக்கம் செய்யப்பட்டவரை திரும்ப எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தீர்ப்பில் சொல்லப்பட்டிருந்ததால் தமிழில் கொடுக்கப்பட்ட அந்தத் தீர்ப்பை கோர்ட்டு முத்திரையோடு தனது மேலதிகாரிகளிடத்தில் சொல்லி தன்னை வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்த அதிகாரி, இந்தி தெரிந்தவர், ஆகவே இதை அதாவது இந்தத் தீர்ப்பை தமிழில் உள்ளதை ஆங்கிலத்தில் டிரான்ஸ்லேஷன் செய்து தர வேண்டும், கோர்ட்டு முத்திரையும் இருக்க வேண்டும் என்று சொல்லிவிட்டார். இப்படிச் சொல்லிவிட்டால், அவருடைய வேலைக்கு யார் உத்தரவாதம் கொடுப்பது! இந்த முறையில் இன்றைக்கு அரசாங்கத்திலிருக்கின்ற சில அதிகாரிகள் தமிழுக்கு எதிர்ப்பாக இருக்கிறார்கள். வெளி மாநிலத்திலிருந்து இங்கு வந்து பணிபுரிகின்ற அதிகாரிகள் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்பதை நாம் சற்றுப் புரிந்து கொள்ளவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். எங்கள் கட்சி மொழிக்கொள்கையில் மிகத் தீவிரமாக இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படியானால் நாம் முன்னால் சொன்னது மாதிரி ஒரு தீர்மானத்தை இப்போதே கொண்டுவருவார்களா என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, விழுப்புரத்தைப்பற்றி சொன்னார்கள். அங்கு நடந்த சம்பவத்தைப்பற்றி விசாரிப்பதற்கு ஒரு கமிஷன் இருந்தாலும் கூட, கவர்னர் அவர்கள் இதைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எங்கள் கட்சியின் சார்பில், சதாசிவம் கமிஷனிடத்தில் கொடுக்கப்பட்ட அறிக்கையில், நாங்கள் கொடுக்கின்ற ரெஃபரன்ஸ்களின் அடிப்படையில் விசாரணை நடைபெறவேண்டும். அதற்காக 23-ம் தேதி வரை நேரம் வேண்டும் என்று கேட்கப்பட்டிருக்கிறது. இதன் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கு நடைபெற்றது ஜாதி கலவரம் அல்ல, அங்கு நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள்..........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> இதுபற்றி விசாரணை இருந்து வருவதால், அதிகமாக இதைப்பற்றி பேசாமல் இருப்பது நல்லது. அங்கு நடைபெற்றது இப்படிப்பட்ட கலவரம், இதனால் தான்

இன்னின்ன காரணத்தால் தான் இது நடைபெற்றது என்று கருத்தினை சொல்லக் கூடாது. காரணம் இது பற்றிய விவரங்கள் நீதி விசாரணையில் இருப்பதால்..........

திரு. மு. செல்வராஜ் : ஆளுநர் அவர்கள் உரையிலே சொல்லியிருக்கிறார்கள்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருந்தாலும் இன்னின்ன காரணத்தால் தான் இந்தச் சம்பவம் ஏற்பட்டது என்று சொல்வது கூடாது என்று தான் நான் சொல்லுகிறேன்.

திரு. மு. செல்வராஜ் : இதை அதோடு விட்டுவிடுகிறேன். பொதுவாக ஜாதி கலவரத்தை யார் தூண்டிவிட்டாலும் அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, மதுவிலக்குபற்றி சொல்லப்பட்டிருக்கிறது. நமது முதலமைச்சர் அவர்கள் கூட அடிக்கடி பேசி வருகிறார். மது அரக்கனை ழித்துக் கட்டிவிடுவேன், என்று ஓராண்டு காலமாக சொல்லிக்கொண்டேயிருக்கிறார்கள். சென்னையில் நடைபெற்ற சம்பவங்களையும், வெளி மாவட்டங்களில் நடைபெறுகின்ற அமளிகளையும் கலவரங்களையும் பார்க்கின்ற போது உள்ளபடியே இதில் ஆளும் கட்சியினர் அதிகமாக ஈடுபட்டிருக்கின்றார்கள் என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். முதலமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். இதில் சம்பந்தப்பட்டவர்கள் யார் யார் என்பதையெல்லாம் இன்னும் மூன்று மாதத்தில் நான் அறிவிக்கப் போகின்றேன் என்று சொல்லியிருக்கின்றார். நான் கேட்க விரும்புவது, இந்த அறிவிப்பை வெளியிட வேண்டாம் என்று தடுத்து நிறுத்துவது யார்? தங்களிடத்தில் வருகின்ற போலீஸ் அதிகாரிகளிடத்திலோ அல்லது துப்பறியும் போலீசாரிடத்திலோ இதைப்பற்றிக் கேட்டால் அவர்கள் தெளிவாக இதைச் சொல்வார்கள். யாராக இருந்தாலும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எல்லாக் கட்சியினரும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்கும் போது இதை வெளியிடாமல் ஏன் தடுத்து நிறுத்தவேண்டும். மூன்று மாதங்களுக்குள் அறிவிப்பேன் என்று சொல்லிவிட்டு இதுவரை அறிவிக்காமல் இருப்பதற்கு என்ன காரணம், இதைத் தடுத்து நிறுத்துகின்றவர்கள் யார் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இந்த மது அரக்கனை ஒழிக்கின்றோம், ஒழிக்கின்றோம் என்று ஓராண்டுக் காலமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர என்ன நாட்டில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது? எங்கு பார்த்தாலும் கள்ளச்சாராயம் கடலாக ஓடிக்கொண்டிருக்கின்ற நிலைமையைத்தான் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இது ஆளும் கட்சியிலிருப்பவர்களும் சரி, அமைச்சர் பொறுப்பில் இருக்கின்றவர்களும் சரி அவர்கள் காவல் துறையினரோடு பேசினால் நன்றாகத் தெரியும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.





இஸ்மாயில் கமிஷன் அறிக்கையின் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? சில அதிகாரிகள் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவ்வளவு தான். இந்த அறிக்கை கொடுத்து ஆறு மாதத்திற்குப் பின் தான் இந்த அவையில் வைக்கப்பட்டது. இங்கு விவாதத்திற்கு வந்த பிறகு ஆறு மாதத்திற்குப் பிறகு மூன்று நான்கு அதிகாரிகள் மீது மட்டும் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். மீதமுள்ளவர்கள் மீதுள்ள நடவடிக்கை என்னவாயிற்று? ஏன் இந்தக் காலதாமதம்? உடனடியாக ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது? இஸ்மாயில் கமிஷன் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது ஏன் கிரிமினல் வழக்கு போடக் கூடாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து என்.ஜி.ஓ.க்களுடைய பே-கமிஷன் அறிக்கையைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. 4,000 பக்கங்கள் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். எவ்வளவு பக்கங்கள் இருந்தாலும், கடைசியில் ஒரு பக்கம் அல்லது இரண்டு பக்கங்களில் 'கன்க்ளூஷன் (Conclucion) இருக்கும். மற்றபடி 4,000 பக்கத்திலும் அங்கு சொல்லப்பட்ட சாட்சியங்களுடைய விவரங்கள் எல்லாம் இருக்கும். இதையெல்லாம் சேர்த்துத்தான் 1,000 பக்கங்கள்.

(முற்பகல் 11-00)

ஆங்கிலத்தில் உள்ள இந்த 4,000 பக்கங்களையும் மொழி பெயர்க்க வேண்டுமென்று சொன்னால், ஏறத்தாழ அது 8,000 பக்கங்களுக்கு வந்துவிடும். அவ்வளவையும் பார்த்த பிறகு என்று சொன்னால், அடுத்த பட்ஜெட்டுக்குப் பிறகாவது இந்த ரிப்போர்ட் வருமா என்பதும் சந்தேகம்தான். பொதுவாக, கன்குலுஷனைப் பார்த்துவிட்டுத்தான் ஏற்கனவே இருந்த அரசாங்கம் முடிவெடுத்தது. நிதித்துறை செயலாளர், மற்றவர்களை அழைத்துப் பேசி முடிவை அறிவிப்பார்கள். எனவே, இந்தக் காலதாமதத்திற்கான அவசியம் என்ன? பக்கங்களைப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன் என்று சொல்வது சரியல்ல என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மின்சாரத் துறையைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். 1975--76-ல் அதாவது அவசரகால ஆட்சிக் காலத்தில் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் மின்சார வாரியத்தின் தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்கக் கூடாது என்று சொல்லிவிட்டார்கள். ஆனால், நான் கேள்விப்படுகிறேன். அண்டை மாநிலங்களான கேரளம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களிலே இன்றையத்தினம் 1975–76 ஆண்டிற்கான போனஸ் வழங்கியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த தமிழ்நாடு மின்சார வாரியத் தொழிலாளர்களுக்கும் போனஸ் வழங்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இந்தத் தொழிலாளர்களிடத்திலே, அவர்கள் மீதுள்ள வழக்குகளை யெல்லாம் வாபஸ் பெறுவதாக வாக்களித்திருக்கிறார்கள். அப்படி வழக்குகள் வாபஸ் பெறப் பட்டதா என்றால், வாபஸ் பெறவில்லை என்ற கோரிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. எனவே, அந்த வழக்குகளை யெல்லாம் வாபஸ் பெற வேண்டுமென்று நான் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களை பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன.

பொதுவாக இந்த ஆட்சியிலே ஊழல் இல்லை என்று சொல்லப் படுவதைப் பார்க்கிறோம். ஆனால், இன்றையத் தினம் மருத்துவக் கல்லூரிகள், என்ஜீனியரிங் கல்லூரிகளுக்கு அட்மிஷன் பட்டியல் வெளியிட்டதைக் குறித்து வழக்கு மன்றங்களுக்குப் போகின்றார்கள். இப்படியெல்லாம் 20, 25 ஆண்டுகளாக காங்கிரஸ், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலங்களிலே நடைபெற்றது கிடையாது. ஆனால் இதற்கு என்ன காரணம்? யார் குறுக் கிட்டுச் சொல்கிறார்கள்?

ஓராண்டுக் காலமாக இந்திரா நகரிலே ஏற்பட்ட கொலையில் துப்பு கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டுகள் எல்லாம் இருக்கின்றபோது, இப்படி இன்னும் பல குறைகள் இருக் கின்றபோது, எப்படிப் பாராட்ட முடியும் என்பதை திரு மணிமாறன் அவர்களுக்குச் சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் இந்த மாமன்றத்திலே ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களை நான் பேரவையிலே சொல்ல முன்வருகிறேன். நாட்டின் நலங் காக்கும் நல்லோர்களே, ஆகஸ்டு முப்பதில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை, அரசியல் தத்துவ விளக்கங்களை அனைவரும் தெரிந்துகொள்ள அடியெடுத்துக் கொடுக்கிறது என்பதையும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு கடந்த ஓராண்டில் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் ஆற்றிய பணிகளை விளக்குகின்ற வகையிலும் அமைந்திருக்கின்றது என்பதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

விவசாய உற்பத்தி, அதனால் விலைக் கட்டுப்பாடு ஏற்பட்டு, விளைச்சலும் பெருகும். விலையும் உயரும் என்ற கருணையிலாக் கொள்கைகளைப் போக்கி, நாட்டிலே, உற்பத்திப் பெருகினால் உயர்விலை குறையும் என்ற உன்னதக் கருத்துக்களை உலகுக்கு எடுத்துக்காட்டி உள்ளது மேதகு ஆளுநர் அவர்களுடைய அரிய உரை என்பேன். நியாய விலைக் கடைகள் நாளும் பெருகும் வகையிலும், பல பொருள் அங்காடிகள் புதிது புதிதாக துவக்கும் முறையிலும் உருவாகும் திட்டங்கள் உள்ளத்தை மகிழ வைக்





கிறது. பால்வளப் பெருக்கம், அதனால் பல லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும். மேலும், பால் பவுடர், வெண்ணை தயாரிப்பு போன்ற திட்டங்கள் பாங்கான தமிழக அரசின் சிறப்புத் திட்டங்களாகும். மழை வளம் காண, மன வளம் சிறக்க, வன வளம் பெருக மூன்று கோடி ரூபாயில் கடலோரப் பகுதிகளில் காடு வளர்ப்புத் திட்டம், கன்னித் தமிழகத்தின் பாதுகாப்புத் திட்டம் ஆகும்.

வேலை வாய்ப்பு நாட்டிலே பெருக, கிராமங்கள் நகரங்கள் என்ற நிலை மாற கதர், கிராமத் கைத்தொழில்களை இரண்டாகப் பிரித்து, அதற்கு இதமான கொள்கையமைத்து தனியாக அமைப்பது தர்மத்தைப் போற்றும் தமிழகத்தின் வெற்றியாகும். பட்டுத் தொழில் பெருக, சிறு தொழில் வளர சீரான திட்டங்கள் பலவும் உண்டு. . . . .

## ஒழுங்கு பிரச்சினைகள்—தொடர்ச்சி

### (ஆ) உறுப்பினர் தம் உரையை எழுதிவைத்து படிப்பது குறித்து.

திரு. மு. அரங்கநாதன்: தலைவரவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்சினை; உறுப்பினர் அவர்கள் எழுதிவைத்துப் படிக் கின்றார். அது அனுமதிக்கப்படுகின்றதா?

டாக்டர் கே. சமரசம்: இது யாரோ சொல்லி, எழுதி வைத்துப் படிப்பதல்ல. நானே குறிப்பு எழுதி, படிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் தானே எழுதி வைத்துப் படித்தாலும அனுமதி பெற்றுத்தான் படிக்கவேண்டும். அனுமதி தருகிறேன். படியுங்கள்.

(திரு. என். கிட்டப்பா பேச முற்படுதல்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே பிரச்னை ஏதாவது இருக்குமானால் நான் தலையிடுகிறேன். இது நமது மரபுக்குப் புறம்பானதாக இருக்குமானால், படிக்கக் கூடாதுதான்.

திரு என். கிட்டப்பா: நான் ஒரு விளக்கம் கேட்க விரும்பு கிறேன். எனக்கும இது பொருந்துமா? எல்லோருக்கு பொருந்துமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் என்ன சொல் கிறேன் என்றால், பத்திரிகைக் குறிப்பை ஆதாரமாக வைத்துப் பேசுகிறபோது, அனுமதியில்லாமல் படிக்கக் கூடாது. பொது வாக எதையுமே பார்த்துப் படிக்கக் கூடாதுதான். ஆனால், இதிலே பாதியைப் படித்துவிட்டு பிறகு, பிரச்னை கிளப்பப்படு

கிறது. உறுப்பினர் இந்தப் பிரச்னையை எழுப்பிய பிறகுதான், எனக்கே இது தெரிய வருகிறது. அதை நான் பார்த்தேன். ஆகவே, இதிலே ஏதாவது பிரச்னை இருந்தால் நான் தலையிடு கிறேன்.

<u>திரு. மு. கருணாநிதி :</u> அவைத் தலைவர் அவர்கள் மிகுந்த எச்சரிக்கையோடு ஒரு விளக்கத்தை அளித்திருக்கிறார்கள். பாதி படித்த பிறகு அனுமதிக்கலாம், பிரச்சினை வந்தால் அனுமதிக்க மாட்டேன், என்று கூறியிருக்கிறார்கள். அதைப் போல் எதிர்க் கட்சி வரிசையிலிருந்து படிக்கும் போது உடனே பிரச்சினை வந்து விட்டால் அனுமதிக்காமல் இருந்து விடக் கூடாது. எல்லோரும் படிக்கலாம் என்ற பொதுவான நியாயத்தை வழங்க வேண்டும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> தாங்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரும்போது உறுப்பினர் அவர்கள் பாதி வரை படித்து விட்டார்கள். என்னுடைய அனுமதி பெற்றுத்தான் அவர் படித்திருக்க வேண்டும். பாதி படித்த பிறகு தான் உறுப்பினர்களின் கவனமே அவர் பால் சென்றது. இப்போதும் அவரை குறிப்புகளை வைத்துப் பேசச் சொல்லுகிறேன். ஆனால் இந்த அவைக்கோ, அவையின் மரபுக்கோ புறம்பான வார்த்தைகள், தவறான வாசகங்கள் வருமானால் தலையிட்டு நீக்கத் தயாராக இருக்கிறேன். ஆயினும் அவர் அனுமதி பெற்றுத்தான் படித்திருக்கவேண்டும்.

<u>திரு. மு. கருணாநிதி :</u> வார்த்தைகள் தவறாக வந்துவிட கூடாது என்பதற்காகத்தான் எழுதி வைத்துக் கொண்டு படிக்கிறார். அதைப் போல் எல்லோரும் படிக்க அனுமதி அளிக்கப் படுமா ?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பொதுவாக, உறுப்பினர்கள் எழுதிப் படிக்கக் கூடாது. அவ்வாறு உறுப்பினர் அவர்கள் எழுதிப் படித்திருந்தால் இனி எழுதி வைத்துக் கொண்டு படிக்கக் கூடாது என்று தீர்ப்பளிக்கிறேன். குறிப்புகள் இருந்தால் அதை வைத்துக் கொண்டு பேசலாமே தவிர, எழுதி வைத்துக் கொண்டு படிக்கக் கூடாது.

(9) ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி).

<u>டாக்டர் கே. சமரசம் :</u> இல்லாத ஒன்றை இது வரை விவாதப் பொருளாக ஆக்கியதற்காக உண்மையிலேயே வெட்கப் படுகிறேன். நான் பேசுகின்ற வார்த்தைகள் முழுமையாக எழுதி வைக்கப்படவில்லை. நான் பேசுகின்ற பேச்சு முழுவதும் அப்படியே இதில் இல்லை. குறிப்பை வைத்துக் கொண்டுதான் பேசுகிறேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எதிர்கட்சித் தலைவர்களுக்கும் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.



<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :</u> உறுப்பினர் அவர்கள் இதனை ஏற்கனவே சொல்லியிருந்தால் இவ்வளவு விவாதங்களை கிளம்பி இருக்கத் தேவையில்லை.

<u>டாக்டர் கே. சமரசம் :</u> விவாதத்திற்குப் பிறகுதான் நியாயம் கிடைக்கும என்பதற்கு இது எடுத்துக்காட்டாக விளங்கும் எனக் கருதுகிறேன்.

அடுத்து, இன்றைய தினம் மின் இணைப்புப் பெறக்கூடிய வகையில் விண்ணப்பத்தின் அடிப்படையில் மின் இணைப்புத் தரக் கூடிய திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அது உண்மையிலேயே வரவேற்கத்தக்க காரியமாகும். பசுமைப் புரட்சியைப் பாரினில் கொண்டாட நல்லதொரு திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். மக்கள் நல் வாழ்வு பெற, கிராமச் சுகாதாரம் பெருக கிராமச் சுகாதார நிலையங்களில் நடமாடும் குழு 100; புதிய மருத்துவர்கள் 230; மேலும் புதிய சுகாதார நிலையங்கள் 50, கண்ணொளி காக்கும் திட்டம்; பெரிய மருத்துவமனைகள் இயங்குவதிலுள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து களைவதற்கு அறிவுரைகள் வழங்குவதற்கு மருத்துவக் குழுக்கள்—இப்படி அரசின் அடிப்படைக் கடமைகளைப்பற்றி யெல்லாம் ஆளுநர் அவர்கள் கூறியிருப்பதைப் பாராட்டுகிறேன்.

அடுத்தபடியாக, 'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்ற தமிழ் நெறிக்கேற்ப அதன் அடிப்படையில், அந்தக் கருத்தை எதிரொலிக்கும் வகையில் உலக அரங்கில் வேலை வாய்ப்புப்பெறக் கூடிய வகையில் சர்க்கார் அமைக்கும் தனி அமைப்பு சாகாவரம் பெற்ற சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த செயல் திட்டங்களாகும்.

கல்வி வளம் பெருக அன்று அரசு அறிவித்த அறிவிப்புகள் 400; இன்றைய தினம் நடைமுறையில் அளிக்கப்பட்டதோ 916. அது மட்டுமல்லாமல் கிராமக் கல்லூரிகள் பெருகின. காந்தி-அண்ணா கண்ட ராஜ்யத்தைக் காணும் வாய்ப்பினைப் பெறுகிறோம். கல்வித் தரம் மேம்பாடு பெற்றிருக்கிறது என்பதை ஆளுநர் அவர்கள் உரையில் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

தமிழர்களின் பண்பாடு, கலாசாரம், இலக்கியம் ஆகியவற்றை வளர்க்கும் வகையில், அறிந்து கொள்ளும் வகையில் இந்தியப் பல்கலைக் கழகங்களால் தமிழ் இடம் பெறக்கூடிய வகையில் வழி வகுத்திருப்பது பாரதி கண்ட கனவு நனவாக, மாதவம் செய்தவர்கள் பெற்ற வரமாக ஆகிறது என்று கருதுகிறேன்.

அரசியல் தலைவர்கள் ஆக்கமும் ஊக்கமும் பெறும் வகையில் மறைந்த மாமேதைகளுக்கு மரியாதை அளிக்கும் வகையில் காமராஜ், அண்ணா பல்கலைக் கழகங்கள், பெரியார் தபால் வில்லைகள் பறைசாற்றி நிற்கின்றன.

[டாக்டர் கே. சமரசம்] [1978 ஆகஸ்ட் 31

இந்த மாநிலத்தில் மதுவிலக்கைத் தீவிரப்படுத்த சில ஆலோசனைகள் சொல்ல முன்வருகிறேன். மதுவைக் காய்ச்சுபவர்களாக இருந்தாலும், குடிப்பவர்களாக இருந்தாலும், விற்பவர்களாக இருந்தாலும் அவர்கள்மீது சில காலத்திற்கு வழக்குப் போடாமல் எங்கெங்கு அந்தப் பொருள் உற்பத்தி செய்யப்படுகிறதோ அங்கே அதை அழித்துவிடுகிற நிலை ஏற்பட்டால் இந்தக் குற்றங்கள் வளராது தடுக்க முடியும். அவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்ற நிலையிலேயே அழித்துவிட்டால் நல்ல முறையில் மதுவிலக்கைச் செயல்படுத்த முடியும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-10)

அடுத்தபடியாக, இன்றைய தினம் தேசிய வளர்ச்சிக் குழுவில், மாநிலங்களின் நிதி ஆதாரங்களைப் பெருக்க, மண்டலக் குழுக்கள் கூட்டப்படாத நிலையில் தென் மாநில முதல்வர்கள் மாநாடு கூட்டி, இரு மொழித் திட்ட முறையீடு, நதி நீர்ப் பங்கீடு, கல்வி மேம்பாடு, நிதி ஆதாரப் பெருக்கம் இவைகளைப் பற்றியெல்லாம் விவாதித்து விளக்கம் தந்திருப்பது பெரிதும் பாராட்டுவதற்கு உரியதாகும். கட்டுண்டு வாழ்வோம், பிரிவினை நாடோம், சமநிலையில் இணைவோம் என்னும் அண்ணாயிசக் கொள்கையை உள்ளடக்கி ஆற்றிய அருஞ்செயல் திட்டமாகும் இது.

அரசு அலுவலர் மனம் மகிழ அரசமைத்துள்ள தனிக்குழு, சம்பள ஆணைக்குழுவின் பரிந்துரை மீது நடவடிக்கை, இஸ்மாயில் கமிஷன் அறிக்கை மீது உடனடி நடவடிக்கை, இவை யாவும் உள்ளத்திற்கு இதமளிக்கும் உயர்ந்த திட்டங்களே. பொதுவாக எல்லோரும் எல்லாமும் பெற எல்லாம் உள்ள இந்த ஆளுநர் உரை வரவேற்கக் கூடியது, வாழ்த்தக் கூடியதே என்று கூறி உரையை முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே மேதகு ஆளுநர் அவர்கள் நேற்றைய தினம் ஆற்றிய உரையின் மீது என்னுடைய காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த அறிக்கையிலே நமது மாநிலத்திலே உணவு நிலைமை மிகவும் திருப்திகரமாக இருக்கிறது என்று கூறப்பட்டுள்ளது. அந்த உணவுப் பொருளை உற்பத்தி செய்யக் கூடிய விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் சூன்யமாகவும் இருக்கிறது. அவர்களுடைய எதிர்காலம் திருப்திகரமாகவும் அமையவில்லை என்ற நிலைமையை நாட்டு மக்களும் அரசும் உணர்ந்திருக்கிறார்கள். ஆனால் அன்றைய அரசு இந்தப் பிரச்சினையை எப்படி அணுகியதோ அதேபோல்தான் இன்றைய அரசும் அணுகக் கூடிய நிலைமை இருக்கிறது. அன்றைய ஆட்சியின்போது 9 பேர்கள் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள், இன்றைய ஆட்சியில் 8 பேர்கள் துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்திருக்கிறார்கள் என்பதுதான் நிலைமையே தவிர



1978 ஆகஸ்ட் 31] [திரு. நா. சுந்தர்ராஜ்]

அவர்களை வாழ வைக்கக்கூடிய நிலைமை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அன்றைய தினம் பல ஆயிரக் கணக்கான வழக்குகள் நடைபெற்றன. அதைப் போலவே இன்றைய தினமும் விவசாயிகள் மீது வழக்குகள் போடப்பட்டு—முதலமைச்சர் அவர்கள் வாபஸ் பெறப்படும் என்று சொல்லியிருந்தாலும் எந்த வழக்கும் வாபஸ் பெறப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்கள் ஒன்றைப் பேசியிருக்கிறார்கள், அவர்கள் அப்படிப் பேசியதாகத் தெரியவில்லை. அப்படிப் பேசியிருந்தால் அது மிகவும் வருந்தத்தக்கதாகும். ''கட்டை வண்டிகளை உடைப்பேன், மாடுகளை ஏலம் விடுவேன்'' என்று பேசியதாகச் செய்தி வந்தது. அப்படிப் பேசியிருந்தால் அது வருந்தத்தக்கது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சிறிய விவசாயிகளுடைய கடன்களை ரத்து செய்யாமல் இந்த அரசு விவசாயிகளை ஒதுக்கிவருகிறது. அதேபோன்று அவர்கள் விளைவிக்கின்ற பொருட்களுக்கு விலை உயர்த்தப்படவில்லை, கங்கை-காவிரி திட்டத்தின் சாத்தியகூறு பற்றி இதிலே சொல்லப்படவில்லை. இராமநாதபுரம் போன்ற மழையை நம்பியிருக்கக்கூடிய பகுதிகளில் விவசாயிகள் வேதனைப்படுகிறார்கள், அவர்களுடைய கடன்களை ரத்து செய்து விட்டு, அவர்களுக்குப் பின்னாலே ஒரு நிரந்தரமான நிதி ஆதாரம் கிடைத்த பிறகு அதைப் பற்றி யோசிக்க வேண்டும். இல்லாவிட்டால் விவசாயிகள் அழியக் கூடிய நிலைமைக்குப் போகிறது. எங்களுடைய அருமைத் தலைவி இந்திரா காந்தி அவர்கள் ஆட்சியில் இருந்தபோது விவசாயிகளுக்குக் குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்யப்பட்டது. அது தீவிரமாக அமல் நடத்தப்பட்டது. இன்றைய தினம் அந்த நிலைமை இல்லை, விவசாயக் கூலிகளை நிரந்தரமான அடிமைகள் என்று கருதக்கூடிய நிலைமை இருக்கிறது. குறைந்தபட்சக் கூலியை சரியாக அமல் நடத்த வேண்டும். விவசாயிகளுக்கு நிரந்தரமான வருவாயைத் தேடிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். விவசாயத் தொழிலாளா இறந்து போனால் அவருடைய குடும்பத்திற்கு உதவி கிடையாது, எதிர் காலத்திலே அந்தக் குடும்பம் நிர்க்கதியாக நிற்கக் கூடிய நிலைமை இருக்கிறது. அரசு ஊழியர்களுக்கு எப்படி உதவிப் பணம் கொடுக்கிறோமோ அதைப்போல அவர்களுக்கு ஏதாவது ஒரு வகையிலே சிறு தொகை கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்களுடைய வாழ்க்கை எதிர்காலத்திலே நல்லமுறையில் உருவாக முடியும். இன்றைக்கு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது என்பதைப் போல, மத்திய அரசு சொல்கிறது என்பதற்காக தமிழக அரசும் அதற்கு ஆமாம் சாமி போடும் நிலைமை இருக்கக் கூடாது. கப்பம் கட்டக்கூடிய நிலையில் இருக்கக் கூடாது. மத்திய அரசு ஆயத் தீர்வை என்று, மின்சார, உற்பத்திக்காக என்று செஸ் வரி போடுவதைக் கண்டிக்க வேண்டும். அதை அனுமதித்தால் தமிழக அரசு மத்திய அரசுக்கு கப்பம் கட்டக் கூடிய நிலைமைகளாகத்

[திரு. நா. சுந்தரராஜ்] [1978 ஆகஸ்ட் 31

தான் இருக்கும். எனவே நாம் சுயாட்சித் தன்மையை, சுதந்திரத் தன்மையைக் காப்பாற்ற முடியாது என்பது என்னுடைய கருத்து.

படித்த பட்டதாரி இளைஞர்களின் எதிர்கால வாழ்க்கை எப்படி அமையப் போகிறது என்று தெரியவில்லை. அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 75 கொடுக்க முன்வர வேண்டும். அதோடு மட்டும் பிரச்சினை தீர்ந்துவிடப்போவதில்லை, அவர்களுக்கு எதிர்காலத்திலே வேலை வாய்ப்பு கொடுக்கின்ற சூழ்நிலையை ஏற்படுத்துவதன் அடிப்படையிலே, அதன்மூலம் புதிய சமுதாயத்தை உருவாக்க இந்த அரசு கடமைப்பட்டிருக்கிறது.

இந்த மாதம் 9-ஆம் தேதி அகில இந்தியா முழுவதும் இந்தியாவைக் காப்போம் என்ற போராட்டத்தை எங்கள் அருமைத் தலைவி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் நடத்தினார்கள். தமிழகத்திலே சட்டம் ஒழுங்கு இல்லை என்று கவர்னரிடத்திலே மனு கொடுத்த நேரத்தில், அதுபற்றி தமிழக முதலமைச்சரவர்கள் கருத்துத் தெரிவித்த நேரத்தில், வேண்டுமானால் சட்டசபையிலே பேசச் சொல்லுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். சட்டம் ஒழுங்கு எப்படியிருக்கிறது என்று நான் பேசுவதைவிட அன்றைக்கு தினசரிப் பத்திரிகைகளிலே வந்த செய்திகளைப் பார்த்தாலே தெரியும். அதிலிருந்தே எவ்வளவு விவேகம் அற்ற முறையில், தீர்மானம் இல்லாத முறையில் இந்தப் பிரச்சினைகளை அணுகுகிறது என்று தெரியவரும். சட்டம் ஒழுங்கு, எவ்வளவு மோசமாக தமிழகத்தில் இருக்கிறது என்பதற்கு ஒரு சில உதாரணங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

விழுப்புரம் சம்பவத்தைப்பற்றி நான் அதிகமாகப் பேசவில்லை. ஆனால், அது தமிழகத்திற்கு ஒரு கரும்புள்ளியாக விழுந்திருக்கிறது. அன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், கீழ் வெண்மணியில் நடந்த சம்பவத்தின் மறுபதிப்பாக விழுப்புரம் சம்பவம் அமைந்திருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பழனி சம்பவத்தை எடுத்துக் கொண்டால், சாதாரணமாக, கந்தசாமி கவுண்டர் என்பவரின் கொலை பற்றி விசாரணை செய்ய அதன் மூலம் இன்னொருவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அதன் காரணமாக அந்தப் பகுதி மக்கள் வெகுண்டெழுந்து அந்தப் பிரச்னையில் தங்கள் நிலையைச் சொல்லி அரசுக்கு பல்வேறு கோரிக்கைகளை வைத்தும் அதற்குச் செவி சாய்க்கவில்லை, அதற்கு பதில் தரப்படவில்லை. கந்தசாமி கவுண்டர் எப்படி இறந்தார் என்று விசாரிக்கப்பட வேண்டும். இப்ராகிம் எப்படி இறந்தார் என்பது விசாரிக்கப்பட வேண்டும்.

பேரணும்பட்டு என்ற ஊரிலே முதலில் ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. அதற்குப் பிறகு அமைதி ஏற்பட்டு இருக்கிறது. பிறகு முஸ்லீம் பெண்மணி ஒருவர் இறந்திருக்கிறார். அதன் காரணமாகப் பல குடிசைகளுக்குத் தீ வைக்கப்பட்டது. இராணிப் பேட்டையில் 60 அரிசன மக்களின் குடிசைகள் தீக்கிரையாகி விட்டது.



1978 ஆகஸ்ட் 31] [திரு. நா. சுந்தரராஜ்]

இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமநாதபுரம் நகரில் கலவரம் நடந்த இடத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் சென்ற நேரத்தில் அவரே தாக்கப்பட்டிருக்கிறார், அவரும் காயமடைந்திருக்கிறார்.

புதுக்கோட்டையில் நடைபெற்ற சம்பவங்கள் வேதனையடையத் தக்கவையாகும். ஒரே ஒரு நபர் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவரின் மகன் அவர் வெளியேற்றப்பட்ட பிறகு, அங்கே கலவரம் நடக்கும் முன்பே, அந்தப் பையனை, அந்த மாணவனை வெளியேற்றிய பிறகு, போலீசார் தாக்குதலை ஆரம்பித்திருக்கிறார்கள். மண்டையிலே அடிபட்டு பலபேர் சிறுக்கு பிடித்த நிலைமையிலே இருக்கிறார்கள். இந்த விஷயங்களெல்லாம் சட்டம் ஒழுங்குப் பிரச்னையிலே வருகிறது.

அடுத்து, சாராயத்தை ஒழிப்போம் என்று முதலமைச்சரவர்கள் சொல்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். அதற்காக எந்தத் தண்டனையையும் ஏற்றுக் கொள்ளத் தயார் என்று சொல்லியிருப்பதை நான் பாராட்டுகிறேன். ஆனால், சென்னை மாநகரத்தில் ஓட்டேரியிலும், ஆவடியிலும், பாதவரத்திலும் நடைபெற்ற சம்பவங்களைப் பார்த்தால் சாராய சாம்ராஜ்யம் நடக்கிறதா என்று சந்தேகப்பட வேண்டிய நிலைமை இருக்கிறது. அரசாங்கம் என்று இருக்கிறதா, தமிழகத்திலே சட்டம் ஒழுங்கு இருக்கிறதா என்று நினைக்கத் தோன்றுகிறது. போலீஸ் சட்டங்களை மீறியவர்கள் யாராக இருந்தாலும், வியாபாரிகளாக இருந்தாலும், உற்பத்தியாளர்களாக இருந்தாலும், குடிப்பவர்களாக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து சட்டம் ஒழுங்கு எப்படிக் காப்பாற்றப்படப் போகிறது என்பது எங்களுக்குக் கேள்விக்குறியாக இருக்கிறது.

அதுமட்டுமல்ல, திருச்சி டால்மியாபுரத்தில் சாதாரணத் தொழிலாளர்கள், ஐ.என்.டி.யூ.சி. யைச் சேர்ந்தவர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். போலீசார் வேனில் வந்து மறிக்கிறார்கள். போலீஸார் தாக்கும் நேரத்தில் அவர்கள் ஓடி ஒளிகிறார்கள். மாடியிலே இருந்து அடிக்குப் பயந்து கீழே வருகிறார்கள். அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடக்கிறது. காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் பழனியாண்டி தாக்கப்பட்டிருக்கிறார். சாதாரண உண்ணாவிரதம் இருந்தவர்களுக்கே இந்த நிலைமை யென்றால், ஊர்வலம் வந்தால் அவர்கள் நிலைமை என்னவாகும்? இதையெல்லாம் நாம் பார்த்தாக வேண்டும். போலீசாரைப் பாராட்டுகின்ற ஆளுநரின் உரையைப் பார்க்கும்பொழுது, போலீஸாரின் நடவடிக்கை வருந்தத்தக்கதாக இருக்கிறது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 11-20.]

அதோடு மட்டுமல்லாமல், இலஞ்ச லாவண்யத்தை ஒழிப்பேன் என்று சொல்கிறார், பாராட்டுகிறேன். ஆனால், புதுக்கோட்டையைப் பொறுத்தவரையில், தோல்வியடைந்த சட்ட

மன்ற வேட்பாளர் ஒருவர், உச்ச நீதிமன்றம் செல்வதற்காக நிதி வசூல் செய்கின்றார். அவருக்கு ஆயிரக்கணக்கான ரூபாய் கிடைக்கிறது? எப்படி? எந்த வேலை வேண்டுமென்றாலும் அவரிடம் ரூ. 500 கொடுத்து, ரசீது வாங்கிய பிறகு, ஏ. டி., அல்லது டி. டி., வேலையை ஒப்படைப்பார் என்ற நிலைமை இருக்கிறது. நிர்வாகத்தில் தவறு நடப்பது மட்டுமல்ல, தவறுக்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்பதுதான் இதற்குப் பொருள். இந்த நிலைமை நடக்கக் கூடாது.

புயலால் பாதிக்கப்பட்ட குளங்கள், கண்மாய்கள் எல்லாம் பொதுப்பணித் துறை மூலமாக பல இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டும், சரிசெய்யப்படவில்லை. ஒருசில கண்மாய்கள் அடைக்கப்பட்டும் கூட, அந்த ஆயக்கட்டுக்காரர்களுக்குப் பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை. பல இலட்சம் ரூபாய் இன்னும் தேங்கியிருக்கிறது. சாதாரண மழை பெய்தால் கூட, அந்தக் கண்மாய்கள், குளங்கள் எல்லாம் மீண்டும் உடைந்து பல இலட்சம் ரூபாய் செலவு செய்ய வேண்டிய நிலைமைதான் இருக்கிறதே தவிர, அது முடிந்ததாகக் கூற முடியாது.

எங்கள் மாவட்டம் சிறிய மாவட்டம். அது துவங்கி 4 ஆண்டுகள்தான் ஆகிறது. அதற்குள் 4 மாவட்ட ஆட்சியாளர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். இன்றையதினம் மாவட்ட ஆட்சித் தலைவராக இருப்பவர் இலக்கியவாதி. ஆனால், காரியத்திற்கு, நிர்வாகத்திற்கு, இலாயக்கில்லாதவர், திறமையில்லாதவர். நல்ல சிந்தனையாளர். ஆனால், நிர்வாகத்திற்குத் தேவையான சிந்தனையில்லை. கற்பனை உலகத்திலே மிதக்கிறாரே தவிர, மக்களுடைய பிரச்னைகளைத் தீர்க்கின்ற முயற்சியிலே ஈடுபடுவதில்லையென்று சொல்ல விரும்புகிறேன். பிரச்னைகளைத் தீர்க்க வேண்டி வந்தால், சாதாரண கிராமங்களுக்கு அவர் போவதில்லை. இதற்கு முன்னால் இருந்த ஆட்சித் தலைவர், அம்மாதிரி பகுதிகளுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டால், நடந்து சென்று பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சி செய்தார். இப்பொழுதுள்ளவரோ காரைத் தவிர வேறு எதிலும் செல்வதில்லை. ஜீப்பிலே கூடச் செல்வதில்லை, எங்கே நடந்து செல்லப் போகிறார்? அன்றாட நிர்வாகம் புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே ஸ்தம்பித்துதான் இருக்கிறது.

ஒரே ஒரு சம்பவத்தை மட்டும் கூற விரும்புகிறேன். எவ்வளவு குறுகிய எண்ணத்தில் அவர் இருக்கிறார் என்பதற்காக இதைச் சொல்ல விரும்புகிறேன். அவரைப் பார்க்க நான் சென்றிருந்தேன். ஆட்சித் தலைவரைப் பார்த்து விட்டு வெளியே வந்து கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு விவசாயி, அரிமயத்தைச் சேர்ந்த முத்துக் கருப்பண்ணன் என்பவர் தன்னுடைய வீட்டை ரெவின்யூ இன்ஸ்பெக்டர் பிரித்து விட்டார்கள் என்று முறையிட, மாவட்ட ஆட்சியாளரைச் சந்திக்கிறார். அவரிடம் நேரடியாக மனுவைக் கொடுக்காமல், அவர் காலில் விழுகிறார். மனைவி மக்களோடு சேர்ந்து மாவட்ட ஆட்சியாளரின்



காலில் விழுந்து கும்பிடுகிறார். என்ன என்று ஆட்சியாளர் கேட்கிறார். இவர் சொல்கிறார். சிறிதுநேரம் விவாதம் நடக்கிறது. ஆர். டி. ஓ. இருக்கிறார், சம்பந்தப்பட்ட ஆர். ஐ. இருக்கிறார். கடைசியாக என்ன சொன்னார் தெரியுமா? நான் வெளியே இருந்து கேட்கிறேன்,

* * * என்ற தகாத வார்த்தைகளை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியாளர் சொன்னார். இவ்வாறு சொல்கிற நிலையில் மாவட்ட ஆட்சியாளர் இருக்கிறார் என்று சொன்னால் எப்படி நிர்வாகத்திற்கு நல்ல பெயர் ஏற்படும் என்று சிந்தித்து பாருங்கள். ஆட்சியாளரைப் பார்க்கச் சென்றவன் * பட்டம் பெற்றுக்கொண்டு வெளியே வரவேண்டுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுவாக இருக்கிற குறைபாடுகளைப் பற்றி பேசி வந்தார்கள். ஆனால் அதே நேரத்தில் ஒரு குறிப்பிட்ட மாவட்ட ஆட்சித் தலைவரைப் பற்றி, அவர் சொன்னதாக சில வாசகங்களை இங்கே சொன்னார்கள். நம்முடைய விதிமுறைகளின்படி அந்த அதிகாரியினுடைய அபிசியல் கான்டக்ட், அவருடைய பொது நடவடிக்கைகளைக் குறித்து, விமர்சனம் செய்யலாம். ஆனால், அதே நேரத்தில் அவர்கள் இங்கே இல்லாத பொழுது அதை ஒரு குற்றச்சாட்டாகக் கொண்டு வருவோமானால் அதற்குப் பதில் சொல்கின்ற வாய்ப்பு அத்தகையவருக்கு இல்லை, ஆகவே, குறிப்பிட்ட வாசகங்களை அவர் சொன்னார் என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: நான் தான்- சட்டமன்ற உறுப்பினர் தான் சாட்சி, இதைவிட வேறு என்ன வேண்டும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் பொறுப்பேற்றுக் கொள்கிறாரா?

திரு. நா. சுந்தரராஜ்: நான் கேட்டேன். நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். இன்றைய தினம் பொதுவாக இந்த அறிக்கையிலே..........

*திரு. க. அன்பழகன்: இதிலே, அமைச்சர் எதை நினைத்துக் கொண்டு அந்தக் கருத்தைச் சொன்னாரோ, அது இந்த அவையிலே அவராலே சரியாகச் சொல்லப்படவில்லை. உறுப்பினர் அவர்கள் சொல்கிற அந்தக் குறை, அவராலே சொல்லப்படுகிற பிரச்னை அரசாங்கத்தாலே விசாரிக்கப்படும் என்று தெரிவித்து விட்டு, அவைக் குறிப்பிலே அது இடம் பெற வேண்டாம் என்று கேட்கிற கருத்தாகத்தான் அவருடைய கருத்து இருக்கும் என்று

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

நான் நினைக்கிறேன். சர்ச்சைக்குரிய அந்த விஷயத்தை இடம் பெறச் செய்வது அவையினுடைய பெருமைக்கு அவ்வளவு ஏற்றதாக இராது. எனவே, அரசாங்கச் சார்பில் அந்த உறுதி சொல்வார்களானால், இதைச் சட்டப்பேரவைக் குறிப்பேட்டிலிருந்து நீக்கிவிடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சுந்தரராஜ் அவர்கள் அதை திரும்பப் பெற்றுக்கொள்வது நல்லது.

திரு. நா. சுந்தரராஜ் : நான், என்னைப் பற்றி அவ்வாறு சொன்னார் என்று பேசவில்லை. இன்னொருவரைப்பற்றி பேசினார் என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்தெந்த வார்த்தைகள் மாவட்ட ஆட்சித் தலைவரால் பயன்படுத்தப்பட்டது என்பது குறிப்பேட்டில் இருக்கக் கூடாது.

திரு. நா. சுந்தரராஜ்: குறிப்பேட்டில் இருந்தால்தான் நல்லது.

திரு. க. அன்பழகன் : நிலைமைகளைத் தெரிவிப்பது உறுப்பினர்கள் கடமை. இப்போது உறுப்பினர் அவர்கள் தெரிவித்தது பற்றி அரசாங்கம் விசாரிப்பதாக உறுதி மொழி கொடுத்தால் அது குறிப்பேட்டில் இருக்கத் தேவையில்லை. அரசாங்கம் மௌனமாக இருந்தால் குறிப்பேட்டில் இருப்பதுதான் நல்லது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல அரசு நிச்சயமாக அத்து மீறிய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கும். அது அரசின் தார்மீகக் கடமை. அதை உறுதி மொழி சொல்லித்தான் (குறுக்கீடு) பொறுப்பு மிக்க உறுப்பினர்கள் சொல்கிறார்கள். இது வார்த்தைகளைப் பற்றித்தான் பிரச்சினையே ஒழிய, மற்றபடி அரசாங்கத்திற்கு இதில் தார்மீக கடமை என்றுமே இருக்கிறது.

திரு. க. சுப்பு : மாண்புமிகு அமைச்சர் இராமச்சந்திரன் அவர்கள் பேசுகிறபோது, அபிசியல் காண்டக்ட் பற்றிச் சொன்னார்கள். அந்தக் குற்றச்சாட்டை மறுப்பதற்கு அந்த அதிகாரி இந்த அவையில் அங்கத்தினராக இல்லை என்று சொன்னார்கள். எந்த அதிகாரியும் இந்த அவையிலே அங்கத்தினராக இருக்க முடியாது. அதிகாரிகள் சார்பில் அமைச்சர்தான் மறுக்கவேண்டுமே தவிர, அதிகாரிகளே அங்கத்தினராவது பற்றி விதி முறையில் இடம் இல்லை. ஒரு உறுப்பினர் இன்னொரு உறுப்பினரைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசக்கூடாது என்று விதி முறை இருக்கிறது. ஆகவே, அவர், மாண்புமிகு உறுப்பினர், மாவட்ட ஆட்சித்



தலைவரைப் பற்றித்தான் பேசினார். தனிப்பட்ட முறையில் அல்ல. எனவே அவர் பேசியது அப்படியே இருக்கலாம். நாமே நம்மை விளக்கம் கேட்டுக் கெள்ள வேண்டுமென்று சொல்வது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேராசிரியர் சொன்னதும் அதுதான். அதற்காக நீங்கள் வேறு நேரம் எடுத்துக் கொள்ள வேண்டுமா ?

திரு. க. சுப்பு : பேராசிரியர் சொன்னது வேறு, இது வேறு.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இதில் இரண்டு பிரச்சினைகள் அடங்கி இருக்கின்றன. ஒன்று அந்த அதிகாரி இப்படிப் பேசியதைச் சொல்லலாமா என்பது. மாண்புமிகு பேராசிரியர் சொன்னதைப் போல அந்த வார்த்தைகள் இடம் பெறலாமா என்பது, மற்றொன்று. மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் விதி முறைகளில் இடம் இல்லை என்று சொன்னார்கள். விதி 68 (3) (iii)—

'It shall not refer to the conduct or character of a person except in his official or public capacity..'

திரு. க. சுப்பு : 'Except official capacity' என்று சொல்லியிருக்கிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஒரு தவறு செய்த அதிகாரியைக் காப்பாற்ற வேண்டும் என்று நிச்சயமாக நாங்கள் கருதவில்லை. அதற்காக வாதாடவும் இல்லை. அவர் அப்படித் தவறு செய்திருக்கிறார்கள் என்று தெரிந்தால், அரசாங்கத்தின் சார்பாக நிச்சயமாக தக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால், அதே நேரத்தில் அத்தகைய காரியங்கள் நடைபெற்றன என்பதைக் குறித்து அவரை விசாரிக்கிறபோது, அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் இல்லை என்று மறுப்பாரானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்வார்களா என்பதுதான். மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல அந்த வாசகம் குறிப்பேட்டில் இருக்கவேண்டுமா வேண்டாமா என்பதைப் பற்றி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தீர்மானிக்கலாம்.

(முற்பகல் 11-30)

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, பேராசிரியர் அவர்கள் நல்ல எண்ணத்தோடு சொல்லியிருக்கிறார்கள், அந்தப் பாயின்ட்டை.. அதிலே நமக்கு சில சிக்கல்கள் வரும். அதிகாரிகள் மீது ஆக்ஷன் எடுக்கிறோம் என்று சொன்னால், அப்போது அது ரிக்கார்டில் இருந்தால்தான் முடியும். ரிக்கார்ட்டில் இருந்து எடுத்து விட்டால் அவர் மீது ஆக்ஷன் எடுக்க முடியாது. ரிக்கார்ட்டில் இருந்தால்தான் நான் நாளைக்கு பிரிவிலேஜ் மோஷன் கொண்டு வருவதற்கு இயலும். அதோடு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தாலும் அப்போது அது வசதியாக இருக்கும்.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கம், துணைத் தலைவர் பேராசிரியர் அவர்கள் அளித்த விளக்கம், நண்பர் உமாநாத் அவர்கள் அளித்த விளக்கம் ஆகியவற்றை ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் கூறிய அந்தச் சொற்களை அப்படியே வேண்டுமானால் நடவடிக்கைக் குறிப்பில் ஏற்றாமல், மாவட்ட ஆட்சித் தலைவர் 'தகாத வார்த்தைகளை' பயன்படுத்தினார் என்று குறிப்பேட்டில் இருந்தால் நல்லது. அது அரசு நடவடிக்கை எடுக்கிறபோதும் உதவிகரமாக இருக்கும். அந்த அளவிற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்கள் பேசுகிறபோது ...... நீங்கள் விளக்கம் அளிக்க விரும்புகிறீர்களா ?

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, நான் பேசுகிற நேரத்தில் கூறிய வார்த்தைகளுக்குப் பதிலாக 'தகாத வார்த்தைகள்' என்று போட்டுக் கொள்ளலாம் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் என்ன வார்த்தை சொன்னார் என்று பின்னாலே என்னைக் கேட்கிறபோது நான் அதை மாற்றிச் சொல்லிவிடக் கூடிய நிலை ஏற்படலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொன்ன அந்த இரண்டு வார்த்தைகளுக்குப் பதிலாக, 'தகாத வார்த்தைகள்' என்று சொன்னால் அதில் அடங்கி விடும்.

திரு. நா. சுந்தரராஜ் : அப்படிப் போடப்பட்டால், அதை அதிகாரிகள் சாதகமாக ஆக்கிக் கொள்ளலாம். எதிர் காலத்தில் அரசு அதிகாரிகள் பொதுமக்களோடு பேசுகிறபோது அப்படிப் பட்ட வார்த்தைகளைப் பேசாமல் இருப்பதற்கு இது உதவிகரமாக இருக்கும். ஆகவே, அது இருப்பது நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, இதன் மீது அரசு நடவடிக்கை எடுக்கிறபோது மாவட்ட ஆட்சித் தலைவர் பொறுப்பில் இருப்பாரா, அல்லது பொறுப்பிலே இல்லாமல் இருப்பாரா. இதன் மீது நடவடிக்கை, விசாரணை நடைபெறுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றுள்ள நிலையில் அவர் பொறுப்பிலே இருக்கிறார். நாளைக்கு பொறுப்பிலே இருப்பாரா இல்லையா என்பது தெரியாது. நடவடிக்கை எடுக்கிற நேரத்தில் அவர் எந்த நிலையில் இருப்பார் என்பதை நான் சொல்ல முடியாது. அதெல்லாம் அரசாங்கத் தரப்பில் முடிவு செய்யப்பட வேண்டும். என்னுடைய முடிவு, திரு. சுந்தரராஜ் சொன்னதுபோல் அந்த





வார்த்தைகள் இல்லாமல், அதற்குப் பதிலாக 'தகாத வார்த்தைகள் பயன்படுத்தினார்' என்ற சொல்லை ஏற்று அவர் சொன்ன மற்ற வார்த்தைகளை நீக்க வேண்டும் என்று உத்தரவிடுகிறேன். நீங்கள் மேலே பேசலாம். நேரம் இல்லை.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, சுருக்கெழுத்தாளர்களிடம் சொல்லி அந்த வார்த்தைகளை தனியாகவாவது எழுதி வைத்துக்கொள்ளச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி. 25 நிமிடம் ஆகி விட்டது. உங்கள் நேரத்தை நீங்களே வீணாக்கிக் கொண்டு விட்டீர்கள்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, சர்க்காரியா கமிஷன் பற்றி இந்த ஆளுநர் அறிக்கையில் ஒன்றும் குறிப்பிடப்பட வில்லை. எங்களுடைய கோரிக்கை எல்லாம், எதிர்க்கட்சித் தலைவர் கருணாநிதி அவர்கள் வழக்கு மன்றத்திற்கு வரவேண்டும் என்று கோரிக்கை வருகிறபோது, ஆளும் கட்சி, அரசு தயக்கம் காட்டுகிறது. குற்றம் சுமத்தப்பட்டவர்கள் கோர்ட்டுக்கு வர வேண்டும், குற்றம் நிரூபிக்கப்படுகிறதா என்பதுபற்றி கவலை இல்லை. வழக்குமன்றத்தில் வழக்கு பதிவு செய்து உடனடியாக வழக்குத் தொடர வேண்டும் என்று கோரிக்கை வைக்க விரும்புகிறேன். அதோடு மட்டும் அல்லாமல் இந்த அறிக்கையில் 12 மாணவர்கள் கடலில் இறந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கப் படவில்லை. விவசாயிகள் பலர் இறந்ததற்கு அனுதாபம் தெரிவிக்கப்படவில்லை. அவற்றையெல்லாம் தெரிவித்து இருக்க வேண்டும். இவ்வளவு சிரமப்பட்டு, இந்த *** ஆளுநர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கலாம் ; ஆனால் அவர்களுடைய உரைக்கு நன்றி அல்ல என்று கூறி, முடித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, கவர்னர் பற்றி குறிப்பிடுவது நல்லதல்ல. * * *
என்று குறிப்பிட்டார்கள்.

திரு. மு. ஆறுமுகம் : தலைவரவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரையைப் பற்றிக் கூறும்போது * * * * * என்பதைப்போல குறிப்பிட்டதை இந்த சபையின் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அது கண்ணியமிக்க வார்த்தைகளாகத் தோன்றவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுந்தரராஜ், நீங்கள் * * * என்று கூறினீர்கள் !

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, திரு. சுந்தரராஜ் அவர்கள் குறிப்பிட்டதை * * * என்று பொருள் கொள்ளக்கூடாது, * * * என்று பொருள்கொள்வது சரியாக இருக்கும்.

---

* * * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. மு. ஆறுமுகம் : * * * என்ற வார்த்தைகூட அதிருப்தி தரும் வார்த்தையாக இருக்கிறது. ஆகையால் அந்த வகையிலும் இருக்கக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * * * என்பதை சபைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

திரு. மு. கருணாநிதி : அவருடைய பேச்சின் முடிவில் இருக்கிற சுருக்கமான பகுதி, '' வந்து உரையாற்றியதற்காக பாராட்டு கிறேன், உரையைப் பாராட்ட முடியாது'' என்பது. ஆகவே, * * * என்று இருக்கலாம் ; மற்றவைகளை எடுத்துவிட லாம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, எதிர்க் கட்சித் தலைவரவர்கள் முதலிலே சொன்னது நன்றாக இருந்தது. ஆளுநர் அவர்கள் சபைக்கு வந்ததைப் பாராட்டுகிறேன். உரையைப் பாராட்டவில்லை என்றிருந்தால் நல்லது.

திரு. நா. சுந்தரராஜ் : சிரமப்பட்டு வந்ததற்கு நன்றி. ஆனால் ஆற்றிய உரைககு நன்றி இல்லை என்று இருக்கட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * * * என்ற வாச கத்தை நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

திரு. ர. ஜெபமணி : சிரமப்பட்டு வந்தார் என்றால் யார் தோளில் கையைப் போட்டுக்கொண்டு வந்தார் ? அவர் வயோதிகராக இருந்தாலும் ஒரு இளைஞரைப் போல வந்து உற் சாகமாக உரையாற்றினார். வயோதிகராக இருந்தால் இங்கே வரக் கூடாதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதனால்தான் அந்த வார்த்தைகளை நீக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறேன்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : தலைவரவர்களே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஆளுநர் உரை சம்பந்தமாக என்னுடைய கருத்தை சுருக்கமாகக் கூற விரும்புகிறேன்.

ஆளுநர் உரை கடந்த காலத்தில் பட்ஜெட்டுக்கு முன்னால் நடப்பது வழக்கமாக இருந்தது. இப்போதுமாத்திரம் காலம் தாழ்த்தி, தேர்தல் வந்ததாலோ என்னவோ—ஏதோ புதிய முறையைக் கையாள்வதாக ஒரு சர்ச்சை இருக்கிறது—என்ன இருந்தாலும் ஆளுநர் உரை அரசாங்கத்தின் ஒரு காலத்தைப் பற்றிய முன் உரையாக இருக்க வேண்டும் என்பது மரபு. ஆளுநர் உரையாற்றினாலும் அந்த உரையை ஆளுநரே தயார்

* * * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





செய்வதில்லை என்பது நமக்குத் தெரியும். அரசாங்கம் சொல்லு கிற குறிப்புகளையும் விளக்கங்களையும் வைத்துதான் ஆளுநர் உரை தயார் செய்யப்படுகிறது என்பது உங்களுக்கும் தெரியும், எங்களுக்கும் தெரியும். ஆகவே என்ன சர்ச்சை இருந்தாலும் ஆளுநர் உரை ஓராண்டு காலத்திற்கு இந்த அரசு தமிழ் மக்களுக்கு என்னென்ன காரியங்களை அடிப்படையிலே செய்ய வேண்டுமோ அந்த அளவுக்கு இல்லை என்பதை வருத்தத் தோடு சுட்டிக்காட்ட வேண்டிய அவசியத்திற்கு ஆளாக்கப் பட்டிருக்கிறேன்.

உங்களுக்குத் தெரியும். போன ஆண்டு ஆளுநர் உரையில் உள்ள பல அம்சங்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. அந்த ஆளுநர் உரையில் சில குறிப்பிட்ட அம்சங்கள் சொல்லப்பட் டிருந்தாலும் நிறைவேற்றப்படவில்லை. அதைப் பற்றி இந்த உரையில் எதுவும் சொல்லப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[முற்பகல் 11-40]

உங்களுக்கெல்லாம் தெரியும். நண்பர் திரு. பணிமாறன் அவர்கள் பேசுகிறபோது ஆளுநர் உரையை ஆளும் கட்சிக்காரர் கள் பாராட்டுவதும் எதிர்க்கட்சிக்காரர்கள் குறை சொல்வதும் மரபாக, வழக்கமாக இருந்து வந்திருக்கிறது என்று குறிப் பிட்டார்கள். ஆனால் எங்களைப் பொறுத்தமட்டில் ஆளுநர் உரையை சம்பிரதாயத்திற்காக ஆதரிப்பதோ அல்லது சம்பிர தாயத்துக்காக பாராட்டுவதோ அல்லாமல் உண்மையிலேயே அதில் இருக்கக்கூடிய ஒன்றிரண்டு அம்சங்களைப் பற்றி, அதிலே இருக்கக்கூடிய குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, இந்த அரசாங்கம் தமிழக மக்களுக்கு ஆற்றவேண்டிய கடமைகளுக்கு உதவியாக எங்களது உரை இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். நான் ஏன் இதை முதலிலேயே சொல்கிறேன் என்றால் பாராட்டுவதற்கு ஆளும் கட்சியில் அதிகமாக உறுப்பினர்கள் இருக்கிறார்கள். எங்களைப் பொறுத்தமட்டில் தமிழ் மக்களுடைய உணர்வுகளையும், கடந்த ஓர் ஆண்டு காலத்திலே தமிழ் நாட்டிலே ஏற்பட்டிருக்கின்ற சங்கடங்களையும் சொல்லி அந்த சங்கடங்களை மாற்றுவதற்கு இந்த அரசாங்கம் என்ன செய்ய வேண்டியது அவசியம் என்பதை அவசியம் சொல்லியாக வேண் டும். அப்படிக் கூறுகிறபோது முக்கியமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். முதலமைச்சர்களுடைய மாநாட்டைக்கூட்டி இந்தியை எதிர்க்கின்ற வகையிலே அதிலே தீர்மானம் செய்து ஆக இந்தியை எதிர்ப்பதில் அதிக அக்கறை எடுத்துக்கொண்டு- அதிலே இந்த அரசாங்கத்தினுடைய பாத்திரத்தை இந்த அறிக்கை யிலே கொண்டு வந்திருக்கிறார்கள். இது வரவேற்கக் கூடியது என்றாலும், பொதுவாக எல்லாக் கட்சிகளும் இதனை ஆதரிக் கின்றன என்றாலும், இப்படி இந்தியை எதிர்த்துக்கொண்டு இருப் பதால் மட்டும் நாம் நிறைவேற்ற வேண்டிய எல்லாக் காரியங் களையும் நிறைவேற்றிவிட்டதாகக் சொள்ள முடியாது என்பதை, மிக்க வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தியை மத்தியிலே கட்டாயமாக்கும் போக்கை நாம்

எதிர்க்கிறோம். இந்தியை எதிர்ப்பதில் எல்லாக் கட்சிக்காரர்களும் ஒன்றுபட்டிருக்கிறோம். அதற்கென அனைத்துக்கட்சிகளையும் கூட்டி ஒரு தீர்மானத்தைப் போடுவது சுலபம். காவிரி நீர்ப்பிரச்சினையில் எப்படி அனைத்துக் கட்சிகளும் கூடி, தங்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்து அதன் பின்னர் ஒரு முடிவு எடுக்கின்றோமோ அந்த முறையிலே எல்லாக் கட்சிகளும் சேர்ந்து இதிலே ஒரு முடிவினை எடுப்பதற்கு ஆவன செய்வது நல்லது.

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ராமநாதபுரம் மாவட்டத்திலே ஒரு நீதிபதி தமிழில் தீர்ப்பளித்து இருக்கிறார். ஆனால் உயர்நீதி மன்றம் அந்தத் தீர்ப்பு செல்லாது என்று தீர்ப்பு அளிக்கிறது. இப்படி தமிழ்நாட்டிலே தமிழிலே தீர்ப்புச் சொன்னது செல்லாது என்று சொல்லுகின்ற அளவுக்கு இருக்கும் நிலையை எண்ணினால் மிகவும் வருத்தமாக இருக்கிறது. நாம் எல்லோரும் இந்தியை எதிர்க்கிறோம். அப்படி எதிர்ப்பது ஆங்கிலத்தை வாழ வைப்பதற்காக அல்ல. நாம் தமிழை வாழ வைக்க வேண்டும். தமிழிலே தீர்ப்பளிக்கப்பட்டது செல்லாது என்று தமிழ்நாட்டிலே உள்ள உயர்நீதி மன்றம் தீர்ப்பளிக்கின்ற அளவுக்கு இருக்கிறதென்றால் சட்டத்திலே ஓட்டை இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். ஆகவே இவற்றையெல்லாம் போக்குவதற்கு நமக்கு அக்கறை இல்லை! திரு. மணிமாறன் அவர்கள் பேசும்போது கூடச் சொன்னார்கள். அதாவது அவர்கள் இரட்டைக்குழல் துப்பாக்கி என்று சொன்னார்கள். தமிழ்நாட்டில் இந்தியை எதிர்ப்பது இரண்டு கட்சிகள் மட்டுமல்ல. எல்லாத் தரப்பினரும் எதிர்க்கிறார்கள். தமிழக மக்களே இந்தியை எதிர்க்கிறார்கள். ஆகவே இந்தியை எதிர்க்கும் நாம் சகல துறைகளிலும் தமிழைக் கொண்டுவந்தால்தான் நல்ல நிலை ஏற்படும் என்றும் ஆகவே அப்படிப்பட்ட நிலையை அரசு உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இப்போது தமிழிலே பல காரியங்கள் செய்யப்படுகின்றன. இது போதாது. இன்னும் அதிக அளவில் பல இடங்களிலும் தமிழைக் கொண்டு வர ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அடுத்து மற்றொரு முக்கியமான அம்சத்தைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். காவிரி நீர்ப்பிரச்சினை. இந்தப் பிரச்சினையில் எல்லோருடைய கருத்துக்களையும் கேட்டு காரியங்கள் செய்ய இருப்பது ஒரு நல்ல ஆரம்பம். அது தொடர வேண்டும். இது போல் எந்த ஒரு பிரச்சினையானாலும் அவற்றை கட்சி நோக்கோடு பார்க்காமல் காரியங்களை ஆற்ற வேண்டும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

வேறு முக்கியமான அம்சங்களிலே ஒன்று. இந்த அரசாங்கத்தின் நிர்வாகம் சம்பந்தப்பட்ட பிரச்சினை. அதிலே பொதுவாக அரசாங்கத்தில் இருக்கின்ற அமைச்சர்களும், ஆளும் கட்சியின





ரும் என்ன நினைக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. வேகமாகவும், துரிதமாகவும் காரியங்கள் நடைபெறவில்லை என்ற பொதுவான கருத்து இன்று பரவலாக இருக்கிறது. நான் ஒன்றிரண்டு இலாக்காக்களை குறிப்பிட்டுச் சொல்லும்போது அந்த இலாக்காக்கள் அளவிலேதான் நான் சொல்கிறேன் என்று யாரும் தவறாகக் கருதிக்கொள்ளக் கூடாது. உதாரணமாக மின்சார இலாக்கா, போக்குவரத்து இலாக்கா போன்றவற்றில் எல்லாம் அதிகமாக குறைபாடுகள் வருகின்றன.

பொதுவாக வேகமாக, துரிதமாக காரியங்களை பைசல் செய்வதில் கவனம் செலுத்தப்படுவதில்லை என்ற கருத்தோட்டம் இருக்கிறது. அதற்குக் காரணம் என்ன? காரணம் என்னவென்றால், ஒரு காரணம், ஜனநாயக முறையில் அதிகாரிகள் அதை மதித்து நடக்கவில்லை. நடப்பதற்கான முறையில் உத்தரவுகள் போடப்படவில்லையென்ற பொதுவான ஒரு கருத்து நிலவுகிறது. காரணம், யாருமே தலையிட மாட்டார்கள். அதிகாரிகள் சுயேச்சையாக காரியங்களில் ஈடுபடலாம் என்ற முதல் அமைச்சர் அவர்களின் அறிக்கைதான் காரணம் என்று நான் கருதுகிறேன். ஜனநாயக மரபுகளின்படி தலையிடுவது என்பது வேறு, எடுத்துச்சொல்வது வேறு. தலையிட்டு இதைச் செய்ய வேண்டும் என்று சொல்வது தவறு. தலையிட்டு இதைச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்துவது தவறு. ஆனால் அதே நேரத்தில் 'ரெப்ரசென்ட்' செய்வது, எடுத்துச்சொல்வது அல்லது எடுத்துக் காட்டுவது என்பது வேறு. ஆக, முதல் அமைச்சர் அவர்களின் அறிக்கை அதற்கு ஊறு விளைவிக்கிறது என்ற கருத்தோட்டம் எனக்கும் இருக்கிறது. தமிழகத்தில் உள்ள எல்லாக் கட்சிகளுக்கும் இருக்கிறது. அப்படி ஒரு அறிக்கை முதல் அமைச்சரவர்களிடமிருந்து வருகிறபோது அதிகாரிகள் என்ன நினைக்கிறார்கள் என்றால் ஒருவரும் நம்மை அணுகமுடியாது, நாம் நினைத்ததைச் செய்யலாம், நம்மிடம் பேச முடியாது என்று நினைக்கிறார்கள். ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அனுபவம் இருக்கலாம். இது தொடர்ச்சியாக நடக்கிறது. அதிகாரிகள் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதற்கு ஒரு சிறிய உதாரணம் தருகிறேன். சீமை கருவேல மரம் ஏலத்திற்கு விடப்படுகிறது. ஏலம் நடக்கிறது. ஒரு மாதத்தில் அதை 'கன்பேர்ம்' செய்து உத்தரவு போடப்படுகிறது. இரண்டரை மாதங்கள் சென்று அந்த உத்தரவு நீக்கப்பட்டு வேறு ஒரு உத்தரவு வருகிறது. மறுநாள் நீக்கவில்லை என்ற உத்தரவு வருகிறது. ஐந்து நாட்கள் கழித்து நீக்கப்படவேண்டும் என்று மற்றொரு உத்தரவு வருகிறது. விவரங்கள் வைத்திருக்கிறேன். வேடிக்கையாக இருக்கிறது. இது தலையீடு இல்லாமல் நடக்க முடியுமா என்ற சந்தேகம் எழுகிறது. யார் தலையீடு? எப்படித் தலையீடு? இது காரைக்குடி தாலூகாவில் உள்ள பொய்யலூர் என்ற ஊரில் நடந்திருக்கிறது. இப்படி காரியங்கள் நடைபெறுமானால் அது எவ்வளவு சங்கடத்திற்குரியது என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். 11-4-1978-ல் ஏலம் போடப்படுகிறது.

30-5-1978-ல் அது ஊர்ஜிதமாகிறது. 7-7-1978-ல் நிறுத்தி வைக்கப்படுகிறது. 8-7-1978-ல் வெட்டலாம் என்று உத்தரவு வருகிறது. 14-7-1978-ல் மறுபடியும் அதை நிறுத்தி வைக்க உத்தரவு வருகிறது. 21-7-1978-ல் பூராவையும் கான்ஸல் செய்ய உத்தரவு வருகிறது. இது வேடிக்கையாக இருக்கிறது. இதை ஒரு உதாரணத்திற்காக எடுத்துச் சொன்னேன். பல உதாரணங்கள் சொல்லமுடியும். அரசு இயந்திரம் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிறபோது அதிகாரிகளை மட்டும் சொல்லி விட்டால் போதாது. அதைக் கட்டுப்படுத்துகிற, ஒழுங்குப்படுத்துகிற பொறுப்பு அரசைச் சேர்ந்தது. ஆகவே, அரசாங்கம் ஆளாக்கப்படுகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் நான் இன்னொன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். அரசு ஜப்தி சம்பந்தமாக, முதல் அமைச்சர் அவர்கள் விவசாயிகள் போராட்டம் நடந்துகொண்டிருக்கிறபோது ஜப்தி செய்யவேண்டாம் என்றும் நிறுத்தி வைத்திருக்கிறோம் இரண்டு மாதங்களுக்கு என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதே தேதியில், அதே காலத்தில் கொரட்டி கிராமத்தில் ஜப்தி நடக்கிறது. முதல் அமைச்சர் அவர்கள் ஜப்தி செய்யக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்களே என்று விவசாயி கேட்கிறான். அவன்மீது வழக்கு போடப்பட்டிருக்கிறது. அது நீதிமன்றத்தில் இருக்கிறது. பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டு, ஜப்தி நடவடிக்கைகள் எடுக்கக்கூடாது என்ற இடைக்கால உத்தரவு விளம்பரப்படுத்தப்பட்டும் இப்படிச் செய்தார்கள். மாவட்ட கலெக்டர் வரை முறையிட்டும் அதைத் திரும்பப்பெறவில்லை என்றால் இதில் இரட்டை அம்சம் இருக்கிறதா என்ற சந்தேகம் எழுகிறது. அரசாங்க இயந்திரத்தின் மேல் தவறு இருந்தாலும் அதைக் கண்டிக்காவிட்டால் அந்த அதிருப்தி அரசாங்கத்தின் மேல்தான் வரும். அது இன்றைய தினம் வந்திருக்கிறது. சிறு விவசாயிகள் மேல் ஜப்தி நடந்தது பற்றிய புள்ளி விவரங்கள் வைத்திருக்கிறேன். நான் ஒரு மனுவைத் தருகிறேன் அமைச்சர் அவர்களிடம். சூரக்குடி, திருப்பந்துரர் தாலுகாவில் இருக்கிறது. அது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிராமம். அங்கு படகு போய் கவிழ்ந்து இருந்தது. அங்கு பித்தளை சாமான்கள், அண்டா இவற்றை ஜப்தி செய்திருக்கிறார்கள். அவர்கள் மனு செய்திருக்கிறார்கள். இதுபோன்று பல நடக்கின்றன. இப்போது கூட ஒரு தந்தி வந்திருக்கிறது. வீட்டிற்குள் சென்று சாமான்களை எடுக்கிறார்கள். தயவுசெய்து வேறுவிதமாக கருத வேண்டாம், இதை நான் சொல்கிறபோது. ஆவணி மாதம் விதைகளைக் கொண்டு போய் நடவேண்டிய காலத்தில் இப்படிப்பட்ட உத்தரவு வந்தால் அது எந்தளவிற்கு அரசாங்கத்தைப் பாதிக்கும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

[முற்பகல் 11-50]

இதுபோல் விவசாயிகளுடைய கோபத்திற்கு ஆளாகிறீர்கள். சில பேர்கள் நினைக்கக்கூடும். இது பரவலாக நடைபெறக்கூடிய ஜப்தியாக இருக்கலாம் என்று நினைக்கக்கூடும். ஒரு சிறிய





சம்பவமாக இருந்தாலும், அந்தச் சம்பவம் அந்த வட்டாரத்திற்கு முழுவதுமே பிரதிபலிப்பாக இருக்கும். இப்படிப்பட்ட சம்பவங்களுக்கு காரணமாக இருக்கின்ற அதிகாரிகள்மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அல்லது நாங்கள்தான் இப்படி நடவடிக்கை எடுக்கச் சொல்கிறோம் என்கின்ற பொறுப்பை ஏற்றுக் கொள்ளவேண்டும். இப்படிப்பட்ட சம்பவங்களை நான் வரிசையாகச் சொல்லிக்கொண்டிருக்க முடியும் ஜப்தி என்பதை இலக்காக வைத்துக்கொண்டு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் ...............

<u>மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கீடு செய்வதற்காக மன்னிக்க வேண்டுகிறேன், மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் ஒரு விவரத்தை தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஜப்தி என்கின்ற பிரச்னையில் சிறு விவசாயிகளிடம் செய்யக்கூடாது என்று சொல்லுகிறாரா அல்லது பெரிய விவசாயிகளிடம் செய்யக்கூடாது என்று சொல்லுகிறாரா ? இது பற்றிய தனது உணர்வு என்ன என்பதைச் சொன்னால் எங்களுக்கு அதைத் தெரிந்து கொள்வதற்கு உதவிகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. கூத்தக்குடி ச. சண்முகம்:</u> ஜப்தி யாரிடத்தில் என்கின்ற விஷயத்தில், காசு வைத்திருக்கின்றவர்களிடம் ஜப்தி செய்வதில் எங்களுக்கு ஆட்சேபணையில்லை. அப்படியில்லாமல் இதில் சிறிது பெரிது என்று எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் யாரைப்பற்றிச் சொல்வது என்பது சற்று கஷ்டமாக இருக்கும். வசதி உள்ளவர்கள், கையில் காசு வைத்திருப்பவர்கள், வருமான வரி கொடுக்காமல் அரசாங்கத்தை ஏமாற்றிக்கொண்டிருக்கிறவர்களிடத்தில் ஜப்தி நடவடிக்கை எடுப்பதைப் பற்றி எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் நடைபெறுவது என்ன ? ஒன்றுமில்லாத விவசாயிகளிடம் போய் ஜப்தி செய்கிறார்கள். அவனிடம் என்ன இருக்கிறது ? சதை இருந்தால் அல்லவா கத்தி ஆடும், இங்கே என்ன இருக்கிறது ? இவனிடத்தில் எலும்புக்கூடுதான் இருக்கிறது. இப்படிப்பட்டவர்களிடம் ஜப்தி என்பது கூடாது என்பதைத்தான் நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். ஆனால். இந்தச் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டேயிருக்கின்றன.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :</u> பேரவைத் தலைவர் அவர்களே, முடிந்த அளவுக்கு தமிழக அரசின் மேலான பார்வைக்கு இப்படிப்பட்ட விவரங்களைத் தெரிவித்தால், இப்படிப்பட்ட அத்துமீறிய செயல்கள் நடந்தால் அதன்மீது நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம். இப்போதும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உரிய ஆதாரத்துடன் தகவல்களைச் சொன்னால் உடனடியாக தமிழக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை உறுதியாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம்: சொல்வதற்கு என்னிடம் ஏராளம் இருக்கிறது. கையில் இருக்கின்ற அத்தனையும் தந்து விடுகிறேன்.....

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: நிச்சயமாக தமிழக அரசு அவற்றைக் கவனிக்கும்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம்: அடுத்ததாக குடிநீர்ப் பிரச்னை. இந்தக் குடிநீர்ப் பிரச்னை இப்போது நகரங்களுக்கு இருக்கிறதா கிராமங்களுக்கு அதிகமாக இருக்கிறதா என்பதல்ல. கிராமங்களுக்குத்தான் அதிக கவனம் செலுத்தப் போகிறோம் என்று கடந்த ஆண்டில் சொல்லப்பட்டது. அப்படியானால் எத்தனை கிராமங்களுக்கு குடிதண்ணீர் புதிதாக வழங்கப்பட்டது? இதனுடைய சாதனை என்ன? கொஞ்சம் விவரம் தேவை; எவ்வளவு தூரம் எந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறோம், கொஞ்சம் விவரம் தேவை. கிராமங்களுக்கு குடிதண்ணீர் வழங்க வேண்டும் என்பதற்காக கடந்த ஆண்டு 24 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இதில் ராமநாதபுரம் மாவட்டத்திற்கு மட்டும் 6 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் இந்த ஆறு கோடி ரூபாயும் ஐந்து திட்டங்களில் அடங்கிவிட்டது. இந்தத் திட்டங்களின் மூலமாக குடிதண்ணீர் வசதிக்காக என்ன வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறார்கள் அதிகாரிகள். அதிகாரிகள் இதற்காக எல்லோரும் கூடி திட்டம் போடுவதாகச் சொன்னார்கள். ஆனால் திட்டம் போட்டுவிட்டு அதை அமல் நடத்தும்போது கூட்டத்தைப் போடுகிறார்கள். அப்போது அங்கீகாரம் செய்யவேண்டும் என்பதற்காக டெவலப்மெண்ட் கௌன்சில் கூட்டத்தைக் கூட்டுவித்து, அதில் முன்கூட்டியே போட்டு வைத்த திட்டத்தைப்பற்றி சொல்கிறார்கள். இதன்படி பார்த்தால் எல்லாக் கிராமங்களிலும் பரவலாக குடிதண்ணீர் திட்டத்தை எப்போது அமல்படுத்துவது? ஏதோ நான்கு திட்டங்களை போட்டு வைத்துவிட்டு பின்னால் அமல் நடத்தும்போது மட்டும் எங்களை கூட்டுவித்து கேட்டுக்கொண்டிருந்தால் என்ன பலன்? ஒன்றை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். குடிதண்ணீர் பிரச்னை பற்றி தொடர்ந்தாற்போல் சட்டமன்றக் கூட்டங்களில் எல்லாம் பேசிக்கொண்டு வருகிறேன். தண்ணீர் கூட குடிக்காமல் பேசிக்கொண்டு இருக்கிறேன். குடிக்கத் தண்ணீர் இல்லாத நிலைமை இன்னும் கிராமங்களில் தொடர்ந்து இருந்து கொண்டு இருக்கவேண்டுமா? கிணறுபட்டு என்ற கிராமத்தில் இன்னும் குடிக்கத் தண்ணீர் கிடையாது. இன்னும் சொல்லப்போனால் பாப்பாரப்பட்டு என்ற ஊரில் ஊர்க்காரர்கள் போட்டிருந்த பம்ப்பை தூக்கி எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள். இந்த நிலைமையை மாற்றுவதற்கு ஏதாவது ஒரு தனி அமைப்பை ஏற்படுத்தி இந்த நிலைமையை மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சாப்பாடு இல்லாமல் வேண்டுமானால் 40 நாட்கள் கூட இருக்கலாம், ஆனால் குடிக்கத்



தண்ணீர் இல்லாமல் ஒரு நாள் கூட இருக்க முடியாது. இதற்கு யார் இடையூறாக இருக்கிறார்கள் என்பதை நாம் கண்டறிய வேண்டும். இதில் யார் தவறுகிறார்கள். யார் தவறு செய்கிறார்கள் என்பதைக் கண்டறிந்து இதற்குப் பொறுப்பானவர்களை ஐந்து நாட்கள் ஒரு அறையில் போட்டு பூட்டி வைக்கவேண்டும். நாவறட்சி ஏற்பட்டு சாகட்டும் என்று கூட நான் கடுமையாகப் பேசியிருக்கிறேன். இப்போதுள்ள நிலைமையைப் பார்த்தால் குடிதண்ணீர் பிரச்னையில் கிராமங்களை விட்டுவிட்டார்களோ என்ற அச்சம் ஏற்படுகிறது. எனவே இந்தப் பிரச்னையை முக்கியமாகக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சாராயத்தைப் பற்றி. இதில் நமது அரசுக்கு வெற்றியா தோல்வியா என்பது பிரச்சினையல்ல. இருக்கின்ற நிலைமையைக் கொஞ்சம் பரிசீலனை செய்ய வேண்டும். எல்லா இடங்களிலும் இருக்கின்ற நிலைமைகளை எல்லாம் பார்த்து விட்டு புனிதம் பேசுவது சுலபம்.

ஆனால் இது எந்த அளவுக்கு வெற்றி பெற்றிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். நான் முதல் அமைச்சர் அவர்களின் நிலையைப் பாராட்டுகிறேன். அவர் குடிக்கக் கூடாது என்று சொல்வதைப் பாராட்டுகிறேன். சாதாரணப் பெண் மக்கள் படும் துன்பத்தைச் சகிக்காமல் அவர்கள் பேசுகிறார்கள். ஆனால் நிலைமை என்ன? உள்ள நிலைமையைப் பார்க்கும்போது தாங்கமுடியவில்லை. கள்ளச் சாராயம் விற்கப்படுகிறது. போலீஸ்காரர்கள் அதற்கு மாமூல் வாங்குகிறார்கள். சாராய சாம்ராஜ்ய மன்னர்கள் இருக்கிறார்கள். கள்ளச்சாராயம் காய்ச்சுகிறார்கள்; மதுவிலக்கு மாநாட்டிற்கு பணமும் கொடுக்கிறார்கள். மதுவிலக்கு மாநாட்டிற்கு பணம் கொடுத்தால்தானே இந்த சாம்ராஜ்ய மன்னர் சாராயம் காய்ச்ச முடியும்? அதனால் அவர்கள் இதற்குப் பணம் கொடுக்கிறார்கள். நான் இப்படிச் சொல்லும்போது, ஊர் பெயரையும், போலீஸ்காரர்களின் நம்பரையும் சொல்ல முடியும். நான் போலீஸ்காரர்கள் வாடிக்கை வாங்குகிறார்கள் என்று சொல்லும்போது எல்லா அதிகாரிகளையும் சொல்லவில்லை. ஒரு சில அதிகாரிகள், போலீஸ்காரர்கள் ஆகியவர்களைக் கேட்டால், 200 ரூபாய்தான் சம்பளம், அதற்கு மேல் அதிகம் வாங்க முடியவில்லை. ஏற்கனவே சைக்கிளில் 2 பேர்கள் சென்றால் ஏதாவது பணம் கிடைக்கும். இப்போது அதுவும் இல்லை என்று பகிரங்கமாக எங்களைப் போன்றவர்களிடமே சொல்கிறார்கள். என்னைப் பொறுத்த வரையில், எங்கள் கட்சியைப் பொறுத்த வரையில், இந்த மதுவிலக்குத் திட்டம் எந்த அளவுக்கு வெற்றிபெறும் என்பது தெரியவில்லை.

இதில் கொஞ்சம் பரிசீலனை தேவை. இதை ஒழுங்காக அமுல் நடத்த வேண்டுமென்றால் எல்லோரையும் கூப்பிட்டுப் பேசுங்கள். இப்போது அண்டை மாநிலமான பாண்டிச்சேரிக்கு

ஆந்திராவிலிருந்து செல்லும் சரக்குகளை இங்கேயே இறக்கி, அதை வாங்கி விற்கக்கூடிய பெரிய கும்பலே இருக்கிறது. அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கக்கூடிய ஒரு துரதிருஷ்டவசமான நிலை இருக்கிறது. எல்லாக் கட்சிகளிலும் குடிக்கக்கூடிய பெரியவர்கள் இன்றைக்கு இருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் இதை எப்படி வெற்றிகரமாகச் செய்யமுடியும்? என்பதை சற்று யோசிக்க வேண்டும். இதை வெற்றிகரமாகச் செய்ய முடியுமா என்பதையும் நாம் பார்க்க வேண்டும்.

நான் மேலும் ஒன்றைச் சொல்லி முடித்து விடுகிறேன். விவசாயிகள் மீது போடப்பட்டுள்ள வழக்குகள் இன்னும் முடியவில்லை. துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது. துப்பாக்கியின் மூலம் சுட வேண்டும் என்று யாரும் சொல்லவில்லை. இந்த அரசாங்கமோ, அமைச்சர்களோ சொல்லவில்லை. ஆனால் துப்பாக்கிச் சூடு நடந்திருக்கிறது. எம். ஜி. ஆர். அவர்களும் சுட வேண்டும் என்று சொல்லவில்லை. ஆனால் துப்பாக்கிச்சூடு நடந்திருப்பதற்கு இந்த அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டியிருக்கிறது. நான் தமாஷாகப் பேசவில்லை. கிருஷ்ணபரமாத்மா அர்ச்சுனனைப் பார்த்து 'சும்மா சுடு, சுடுவதினாலே ஆத்மா சாகவில்லை, தேகம்தான் போகிறது' என்று உபதேசம் செய்தார். அந்தமாதிரிதான் இந்தச் சூடு நடந்திருக்கிறதா என்பது புரியவில்லை. சுடுவது என்பது யாரைப் பார்த்துச் சுட்டாலும் தவறுதான். அப்படிச் சுடக்கூடிய அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். துப்பாக்கிச்சூடு என்பது சகிக்கமுடியாத ஒன்றாகும். அதுவும் மக்களைப் பார்த்துச் சுடுவது என்பது சரியல்ல. அதிகாரிகள் பொதுவாக வேண்டுமென்றே செய்கின்றார்கள் என்ற ஒரு கருத்தோட்டம் வந்திருக்கிறது. கறாராக நான் சொல்லுகிறேன். இப்படி மக்கள் மீது சுட்டவர்கள் மீது உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போதுதான் மக்களுக்கு நம்பிக்கை வர முடியும். அவர்கள்மீது உள்ள வழக்குகளையெல்லாம் உடனடியாக வாபஸ் வாங்க வேண்டும். இதுவரை சில வழக்குகள் வாபஸ் பெற்றதற்கு மகிழ்ச்சி; அதற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே சமயத்தில் இன்னும் மிச்சம் வைக்க வேண்டியதில்லை.

அதேபோல் மாணவர்களுக்கு அறிவுரை வழங்க வேண்டும். அவர்கள் என்மீது கோபித்துக் கொண்டாலும் பரவாயில்லை. அவர்களது குறைகளையும் போக்க வேண்டும். இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியிலே அவர்கள்மீதுள்ள வழக்குகளை வாபஸ் வாங்கவில்லையா? அவர்கள் பலாத்காரத்திலே ஈடுபடும்போது இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு ஆளாக்கப்படுகின்றார்கள். இப்போதும் கூட அவர்கள் பேரிலே போடப்பட்ட வழக்குகள் சில வாபஸ் வாங்கப்பட்டு, இன்னும் மிச்சம் கொஞ்சம் இருக்கிறது. அந்த வழக்குகளையும் வாபஸ் வாங்க வேண்டும். அவர்களுக்கு உதவி செய்ய முன்வர வேண்டும்; அதற்கான வழிவகைகளை





வகுக்க வேண்டும். ஏற்கனவே இந்த அரசாங்கம் இந்த மாதிரி எல்லா இடங்களுக்கும் செல்லுவதற்கான அனுமதியைக் கொடுத்தது சரியல்ல என்பது என் கருத்து. அப்படி சலுகைகள் கொடுத்துவிட்டு, அதை வாபஸ் பெறும்போது அதனால் ஏற்படும் விளைவுகளையும் அனுபவிக்க வேண்டும். மறுபடியும் இந்தப் பிரச்சினைக்கு யோசனை செய்து தீர்வு காணவேண்டும். மீண்டும் இந்தப் பிரச்சினை வந்திருக்கிறது. இதிலே எந்த அளவுக்கு அவர்களுக்கு உதவி செய்ய முடியுமோ அந்த அளவுக்குச் செய்ய வேண்டும். அவர்கள் மீதுள்ள வழக்குகளை வாபஸ் பெற வேண்டும். அவர்கள் பலாத்காரத்தில் ஈடுபடும்போது உணர்ச்சி வசப்பட்டு சில தவறுகள் நடந்து விடுகின்றன. அரசியல் ரீதியாக இதிலே ஈடுபடுகின்றவர்களின் மீது வழக்குகள் போட்டால்கூட பரவாயில்லை. மாணவர்கள்மீது போடப்பட்டுள்ள அனைத்து வழக்குகளையும் வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு, இப்பிரச்சினையில் புதிய முறையில் தீர்வு காண்பதற்கு தோழமைக் கட்சிகளாக இருந்தாலும், எதிர்க் கட்சிகளாயிருந்தாலும், அனைத்தையும் கூட்டி வைத்துக் கொண்டு, தமிழ்நாட்டில் இந்த ஒரு அமைப்பின் மூலம் நல்ல காரியங்கள் செய்வதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(நண்பகல் 12—00)

எங்களைப் பொறுத்தவரை அடிப்படை மாறுத வரையில் நிவாரணம் கிடைக்கும் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள்; உற்பத்திக் கருவிகள் தனி மனிதன் கையில் இருக்கும் வரை வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியாது, விலைவாசி குறைய சாத்தியமில்லை என்ற அழுத்தமான கருத்துடையவர்கள். ஆயினும் இந்த அமைப்புக்குள் நீங்கள் செய்கிற நல்ல காரியங்களை ஆதரிக்கும் அதே சமயத்தில் வரவேற்கின்ற அதே நேரத்தில் சில தவறுகளை, சில குறைகளைச் சுட்டிக்காட்டி அவற்றை இந்த அரசு சரி செய்து மேலும் முன்னேற வழிவகுக்கும் என்ற வகையில் எடுத்துக் காட்டுகிறோம். ஆளுநர் உரை சப்பென்றிருக்கிறது. விளையாட்டாகச் சொல்லவில்லை. ஆளுநரே வேண்டாமென்ற கருத்துடையவர்கள்— அதனால்தான் மறைமுகமாக இப்படிப்பட்ட சாதாரண அறிக்கையைப் படிக்கச் சொல்லியிருக்கிறார்கள் - அதற்காக நன்றி சொல்லி அமைகிறேன்.

<u>திரு. அ. சுவாமிதாஸ்</u> : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்கள் உரையின்மீது நடைபெறுகிற இந்த விவாதத்தில் ஜனதா கட்சியின் சார்பில் ஒருசில கருத்துக்களைக் கூற முற்படுகிறேன். ஆளுநர் அவர்கள் இந்த அரசின் பல கொள்கைகளை தமது உரையின் வாயிலாக இந்த மன்றத்திற்கு வழங்கியிருக்கிறார்கள். அதிலே நல்ல பல கொள்கைகள் இருக்கின்றன. மதுவிலக்குக் கொள்கையை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். அதேபோல் விவசாயிகள் பற்றிய பல கொள்கை விளக்கங்களைக் கூறியிருக்கிறார்கள். இந்த நல்ல பல கொள்கை

களை நடைமுறைப்படுத்தும்போது அரசுக்கு ஏற்படுகிற சிக்கல்களையும், பொதுமக்கள் இவற்றினுலே எந்த அளவுக்கு நன்மைகள் பெற்றிருக்கிருர்கள், அதனுல் என்ன விளைவுகள் நாட்டு மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கின்றன என்பதைப் பற்றி நான் இந்த மன்றத்தில் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த விவாதத்தில் கலந்து கொள்கிற உறுப்பினர்கள் பலரும் ஆளும் கட்சி வரிசையிலுள்ளவர்கள் இந்த உரையில் சொல்லப்பட்டுள்ளவற்றைக் குறித்து மிகைப்படுத்திப் பேசுவதும் எதிர்க்கட்சி வரிசையில் இருப்பவர்கள் மக்கள் மத்தியில் இருக்கும் குறைபாடுகளை சுட்டிக்காட்டிப் பேசுவதும் மரபு.

அந்த அடிப்படையில் இங்கே சொல்லப்பட்டிருக்கிற மதுவிலக்குக் கொள்கையைப் பற்றி நான் முதலாவதாக எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இது எல்லோரும் வரவேற்கிற கொள்கை, ஆனல் அரசு, இதை அமுல்படுத்தும்போது ஏற்படுகிற சிக்கல்களை மட்டும் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். போலீஸ் தரப்புப் பட்டியலைப்பார்த்தால் மதுவிலக்குக் குற்றங்களின் பேரில் போடப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை வருஷாவருஷம் கூடிக் கொண்டே இருக்கிறது. மதுவிலக்கை அமுல்படுத்த வேண்டுமென்று திட்டமிட்டுச் செய்யும்போது ஏன் இந்த எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டிருக்கிறது என்பதை அரசு உன்னிப்பாக கவனித்துப் பார்க்க வேண்டும். வழக்குகளின் எண்ணிக்கை குறைந்தால்தான் மதுவிலக்குக் கொள்கை வெற்றி பெறுகிறது என்று அர்த்தம். வழக்குகள் அதிகமாகிக் கொண்டிருக்கிற நிலையில் மதுவிலக்குக் கொள்கை பலகீனப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

கிராமப் பகுதிகளில் மதுவிலக்குக் கொள்கையைத் தீவிரப்படுத்த வேண்டுமென்று சொல்லும்போது போலீசார் வழக்குகளை அவ்வப்போது போடும்போது பல நிரபராதிகள் மாட்டிக் கொள்கிருர்கள். எங்கள் பகுதியில் பனையேற்றுத் தொழிலாளர்கள் அதிகம். அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களின் உடம்பின்மேல் மது நெடி எப்போதும் இருந்து கொண்டிருக்கும். பனையேறுகின்ற அந்தத் தொழிலாளர்கள் எவ்வளவுதான் சோப்பு போட்டுக் கழுவினுலும் மதுநெடி போகாது. போலீசார் மதுவிலக்குக் குற்றத்திற்காக வழக்குப் போட வேண்டுமென்று விரும்பினல் பனையேற்றுத் தொழிலாளர்கள் நான்கு பேரைப் பிடித்து வழக்குப் போட்டு விடுகிருர்கள். இதனுல் பனையேறும் ஏழைத் தொழில்ாளர்கள் மிகுதியாகப் பாதிக்கப்பட்டிருக்கிருர்கள். எங்களுக்கு இதிலிருந்து நிவாரணம் வேண்டுமென்று அந்த ஏழைத் தொழிலாளர்கள் கேட்கிருர்கள். அரசு அவர்கள் நிலையைக் கூர்ந்து பார்த்து ஏதாவது நன்மை செய்ய விரும்பினுல் அவர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்க தேவையான சட்டத்தைக் கொண்டுவர ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.





அதோடுகூட பனையேற்றுத் தொழிலாளர்கள் தங்கள் தொழிலில் ஈடுபட்டு இருக்கிறபோது உயிர் இழப்பு ஏற்பட்டு விடுகிறபோது அவர்களுடைய குடும்பத்திற்கு அரசு மனமுவந்து 5 ஆயிரம் ரூபாய் மானியம் அளிப்பதாக போன நிதியாண்டு அறிவித்தார்கள். ஆனல் இன்னும் அது நடைமுறைக்கு வரவில்லை. அதற்காக பல பேர்கள் மனுப் போட்டார்கள், இன்னும் அவர்களுக்கு மானியங்கள் கிடைக்கவில்லை, இதிலேயும் அரசு ஊன்றிக் கவனம் செலுத்த வேண்டும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்திரு. பி. எச். பாண்டியன்— தலைமை

மீனவர்கள் தங்கள் தொழிலிலே உயிர் இழக்கின்றபோது 5 ஆயிரம் ரூபாய் மானியமும், 5 ஆயிரம் ரூபாய் கடனும் அவர்களுடைய குடும்பங்களுக்குக் கொடுக்கப்படுகிறது, ஆனல் பனையேற்றுத் தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் மானியம் மட்டும்தான் தரப்படுகிறது. அவர்களுக்கும் 5 ஆயிரம் ரூபாய் கடனும் கொடுக்கப்படவேண்டும்.

பனையேற்று ஏழைத் தொழிலாளர்கள் வசிக்கின்ற இடங்கள், ஓலைக் குடிசைகள். அவர்கள் வீடுகள் கட்டிக் கொள்வதற்கான வருவாய் இல்லாதவர்கள். அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தைக் கொண்டு வர வேண்டும். அந்தத் தொழிலிலே இருக்கிறவர்கள் இன்றைக்கு மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிருர்கள்.

காரணம் அவர்கள் உற்பத்தி செய்கிற கருப்புக்கட்டிக்கு விலை நியாயமாகக் கிடைக்கவில்லை, அவர்களுக்கு நியாயமான விலை கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும், அது மட்டுமல்ல, கருப்புக் கட்டி அவர்கள் காய்ச்சுவதற்காக விறகு தேவைப்படுகிறது. குறைந்த விலையில் விறகு கொடுப்பதாகச் சொல்லப்பட்டது. இன்றைக்கு விறகு குறைந்த விலையில் கிடைக்காத நிலைமை இருக்கிறது, அது குறைந்த விலையில் அவர்களுக்கு கிடைக்கச் செய்யவேண்டும்.

என்னுடைய தொகுதியிலே தக்கலையிலே தாலுக்கா தலைமையிடத்திலே ஒரு மருத்துவமனை இருக்கிறது. அந்த மருத்துவமனைக்கட்டடம் திருவிதாங்கூர் மன்னர் காலத்திலே கட்டப்பட்டது; அதை விரிவுபடுத்த வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் பல ஆண்டுக்காலமாகக் கூறிக்கொண்டு இருக்கிருேம். தற்போது மருத்துவமனை முன்னல் சத்தியாக்கிரகத்தைத் தொடங்கியிருக்கிருர்கள், ஏனென்ருல் அங்கே தண்ணீர் வசதிகூட இல்லை, கிணறு இருக்கிறது, ஆனல், மேல்நிலை நீர் தொட்டியை அமைக்கவில்லை. நோயாளிகள், டாக்டர்கள், தாதியர்களுக்கு கழிப்பறைகள்கூட இல்லை, கட்டிட வசதிகள் இல்லை, பிரசவத்திற்காக வருகிறதாய்மார்கள் வராண்டாவிலே இடம் பெறக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. இது நீண்டகாலப் பிரச்சினை, அந்தக் கட்டடத்

[திரு. அ. சுவாமிதாஸ்] [1978 ஆகஸ்ட் 31

ஊதை விரிவுபடுத்தவேண்டும். அதற்காக அதிகாரிகள் பிளான், எஸ்டிமேட்ஸ் எல்லாம் போட்டு அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். அரசாங்கம் அதற்கு ஒப்புதல் அளித்தாக வேண்டும்.

நெருக்கடி கால நிலையிலே நெருக்கடி நிலை பிரகடனப்படுத்திய பிறகு கன்னியாகுமரி மாவட்டத்தில் பத்து ரூபாய் நிலவரி செலுத்திக்கொண்டிருந்தவர்கள் 100 ரூபாய் கட்ட வேண்டிய நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். எதனால் என்றால் ஊராட்சி ஒன்றிய வரிகள் 250 சதவீதம் கூட்டப்பட்டிருக்கிறது. ஒரு ஏக்கர் நஞ்சைக்கு 100 ரூபாய் வரி செலுத்த வேண்டிய நிலைமை இருக்கிறது. இதை ஒழுங்குபடுத்துவதற்கும் அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

வீட்டு வரிகளை பஞ்சாயத்து மன்றங்கள் கூட்டுவதற்கு ஏற்பாடு செய்யாத நிலைமை இருக்கிறது, ஆனால் தனி அதிகாரிகள் போடப்பட்டு அவர்கள் மனம்போன போக்கிலே வரியை கூட்டி விடுகிறார்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான் வரியை வேண்டுமானால் கூட்டலாம் என்ற நிலைமை இருக்க வேண்டுமே தவிர நியமிக்கப்படுகிற தனி அதிகாரிகள் வரியைக் கூட்டக் கூடிய நிலைமை இருக்கக் கூடாது.

பஞ்சாயத்துக்களிலே விளக்குகளை மாற்றக்கூடிய முன்பிருந்த ஒழுங்குகளை தற்போது மின்சார இலாக்கா மாற்றிவிட்டது. இதன் காரணத்தினால் பல்பு எரியாவிட்டால் அவர்கள் வேறு பல்பு போடுவதில்லை. பஞ்சாயத்துக்கள்தான் போட வேண்டும். ஆனால் அவர்கள் தாமே பல்புகளைப் போட முடியாது. மின்சார ஊழியர்களின் துணையுடன்தான் போட முடியும். இதன் காரணமாக கிராமங்களில் இருள் சூழ்ந்துவிட்டது. நாங்கள் கிராமங்களுக்குப் போகிறபோது இந்த அரசாங்கம் வந்தபிறகுதான் கிராமங்களுக்கு வெளிச்சம் இல்லை என்று குறை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே முன்பிருந்த முறைதான் இருக்க வேண்டும். பஞ்சாயத்துக்களுக்கு அந்தப் பொறுப்பைக் கொடுக்க கூடாது. அவர்கள் அந்தக் கம்பத்தைத் தொட முடியாது. மின்சார இலாக்கா ஊழியர்களைக் கொண்டுவந்துதான் செய்ய முடியும். மின்சார இலாக்கா ஊழியர்கள் குறிப்பிட்ட நேரத்தில் வர மாட்டார்கள். எனவே இப்படிப் பல சிக்கல்கள் அதில் இருக்கின்றன. இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-10]

மின்சார தெரு விளக்கு போடுவதற்கு பஞ்சாயத்துக்கள் நான்கைந்து வருடங்களுக்கு முன்னாலேயே மின்சார இலாக்காவிற்கு பணத்தைக் கட்டியிருக்கிறார்கள். ஆனால், அவைகளுக்கு தெரு விளக்குகள் போட்டுக் கொடுக்கப்படவில்லை. பணத்தைப் பெற்றுக் கொண்டு அதை மின்சார இலாக்கா ஐந்தாறு வருஷங்களாக வைத்துக் கொண்டிருக்கிறது. தேவையானவர்களுக்கு மின்சார விளக்குகள் பொருத்திக் கொடுக்கப்படவில்லை. இதை மின்சார இலாக்கா கவனிக்க வேண்டும்.





அடுத்து, நீர்ப்பாசனத்தை எடுத்துக் கொண்டால், கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே நீர்ப்பாசனம் ஒழுங்காகச் செயல்படவில்லை. கால்வாய்க்கள் தூர்ந்து இருக்கின்றன. இதைப்பற்றி பத்து வருட காலமாக நாங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறோம். இதையும் கவனிக்க வேண்டும்.

பழைய குளங்கள் தூர்ந்து போயிருக்கின்றன. அதைப் பலரும் ஆக்கிரமித்துக் கொண்டு இருக்கிறார்கள். அத்தகைய ஆக்கிரமிப்பாளர்களைக் குளத்திலிருந்து அப்புறப்படுத்தி தூர்ந்து போன குளங்களைச் செப்பனிட்டால் காலாகாலத்திற்கு விவசாயத்திற்குப் பயனுடையதாக இருக்கும். அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கட்டிடம் இல்லாமல் பல பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. என்னுடைய தொகுதியில் நெய்க்கட்டான்விளை, பெருஞ்சிலம்பு போன்ற இடங்களில் கூரையே இல்லாமல் பள்ளிகள் இருக்கின்றன.

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திலே மிகுதியாக இலாபம் வருகிறது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்பவர்கள் மந்தைபோல அடைக்கப்படுகிறார்கள். 63 பேர்கள் பயணம் செய்வதற்கு பர்மிட் உண்டு என்றால் 100 பேர்கள், 120 பேர்களுக்கு மேற்பட்ட பயணிகளை ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள். நான் சொல்வது என்னவென்றால், ஜர்னி, (Journey Bill) பாருங்கள், ஒவ்வொரு நாளும் எவ்வளவு பயணிகளை ஏற்றுகிறார்கள் என்று பாருங்கள். வண்டிகளைக் குறைத்துவிட்டு, பத்து வண்டிகள் ஓடிய இடத்தில் ஐந்து வண்டிகளைக் குறைத்து விட்டு, ஐந்து வண்டிகளை வைத்துக் கொண்டு ஓட்டுகிறார்கள். (மணியடிக்கப்பட்டது) எனக்கு இன்னும் சிறிது நேரம் கொடுங்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. பி. எச். பாண்டியன்) ஏற்கனவே நான்கு நிமிடங்கள் அதிகமாகிவிட்டன. 12-18-க்கு முடித்திருக்க வேண்டும், இப்பொழுது 12-22 ஆகிவிட்டது.

திரு. அ. சுவாமிதாஸ்: சட்டசபையை அதிகமாகக் கூட்டுவதும் இல்லை. கூட்டும்பொழுது மக்கள் குறைகளை பேசலாம் என்றால் நேரமும் கிடைப்பதில்லை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. பி. எச். பாண்டியன்) அடுத்த தடவை பேசலாம். அடுத்து திரு. வரதராஜன்.

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, நேற்றையதினம் இந்த மாமன்றத்தில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின்மீது..

திரு. அ. சாமிதாஸ்: ஒரு கருத்தை நான் சொல்லிக் விடு கிறேன். பெரிய சிக்கல் அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது. பார்லிமெண்டரி செக்ரட்டரி என்று போட்டிருக்கிறார்கள். நாட்டு மக்கள் பத்திரிகையிலே......

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. பி. எச். பாண்டியன்) இப்பொழுது அது வேணடாம. அது வேறு பிரச்சனை. இப் பொழுது நீங்கள் பேசி முடித்தாகி விட்டது. திரு. வரதராஜன் பேசட்டும்.

திரு. என். வரதராஜன்: தலைவரர்வர்களே, ஆளுநர் ஆற்றிய உரையின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன். இந்த நாட்டில் இன்றையதினம் ஜனநாயகச் சக்திகளுக்கு முன்னால் இருக்கும் மிக முக்கியமான பிரச்சனைகள் கிளப்பப்பட்டிருக்கின்றன. ஒன்று, மாநிலங்களுக்கு நிதி ஆதாரங்களைப் பெருக்க வேண்டுமென்பதை இந்த அறிக்கை சுட்டிக் காட்டுகிறது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அதை வரவேற்கிறது. இரண்டாவதாக, இந்தியாவின் பல மாநிலங் களுக்கு உள்ள அச்சத்தைப் போக்க வேண்டுமென்பது, இந்தி மொழித் திணிப்பை இந்த மாநில அரசு தொடர்ச்சியாக எதிர்த்து நிற்கும் என்று கண்டனத்தை மத்திய அரசுக்குத் தெரிவிக்கும் அறிவிப்பை மகிழ்ச்சியோடு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வர வேற்கிறது.

அதே போல் சமீப காலத்தில் ஏற்பட்ட சில பல வழக்குகளை முழுவதும் இந்த மாநில அரசு, மாணவர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் மீது இருக்கும் வழக்குகளை வாபஸ் பெறுவோம் என்பதையும் ஆதரித்து, மாநிலத்திலே நாம் வருத்தப்படத் தகுந்த ஒரு கறுப்புச் சட்டம் என்ற முறையில் இருந்த வேலை நிறுத்தத் தடைச் சட்டம் என்ற சட்டந்தை நாங்கள் பின்வலித்துக் கொள்கிறோம் என்று மாநில அரசு இருப்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது.

சில விதமான விவரங்களை இந்த அரசுக்கு முன் சமர்ப்பிக்க விரும்புகிறேன். கடந்த சட்டமன்றக் கூட்டம் நடைபெற்று இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெறும் இந்த இடைப் பட்ட காலம் சுமார் 6 மாத காலமாகும். இந்த இடைப்பட்ட நேரத்தில் பல்வேறு பிரச்சனைகள் மாநிலத்தில் ஏற்பட்டிருக் கின்றன. அப்படிப்பட்ட நிலையில் இந்தச் சட்டமன்றத்திற்குரிய பங்கு என்பது கேள்விக்குரிய விஷயமாகவும், கேலிக்குரிய விஷய மாகவும் மாற்றப் படக்கூடாது என்பதை அழுத்தத்திருத்தமாகக் கூறவிரும்புகிறேன். 3 மாதங்களுக்கொரு முறை சட்டமன்றப்





கூடி, நாட்டினுடைய, தமிழ்நாட்டினுடைய பிரச்சனைகளைப் பற்றி விவாதிகக வேண்டும். அந்தப் பிரச்சனைகளிலே அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று வலியுறுத்தித் கூறவிரும்புகிறேன்.

வேலையில்லா பூதம் இந்தியாவிலே இருப்பதுபோல், தமிழ்நாட் டிலேயும் இருக்கிறது. இதில், ஏனோதானோ போக்குகளை அனுஷ் டிக்கலாகாது, மிகக் கவலையோடு கவனிக்க வேண்டுமென்று கூற விரும்புகிறேன். இந்த மாநிலத்தில் இருக்கக்கூடிய சோஷலிஸ்ட் வாலிப முன்னணியினர் தங்கள் கண்டனத்தைத் தெரிவிக்க குமரி யிலேயிருந்தும், கோயம்புத்தூரிலிருந்தும் இந்த மாதம் 16-ந் தேதி நிதியமைச்சரைச் சந்தித்து தங்கள் கோரிக்கைகளைத் தெரி வித்திருக்கிறார்கள். வேலையில்லாமல் இருக்கும் படித்தவர் களுக்கு ஏதாவது நிவாரணம் கொடுக்க வேண்டுமென்று வற் புறுத்தி இருக்கிறார்கள். ஏற்கெனவே, மேற்கு வங்க அரசு தொடங்கி வைத்து, வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு ரூ. 50 மாதம் ஒன்றுக்கு வழங்க வேண்டுமென்று அமுல்படுத்தப்படுகிறது. அது கேரளத்தில் தொடர்ந்து, கர்நாடகத்தில் தொடர்ந்து, ஆந் திரத்தில் தொடர்ந்து இன்னும், பல மாநில அரசுகள் செய்கின்ற நிலையிருக்கிறது. நம்முடைய மாநில அரசு இது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பது இந்தக் கொள்கை அறிக்கையிலே இல்லாதது வருந்தத்தக்கது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

ஆறு மாத காலமாக விவசாயிகள் கிளர்ச்சி என்ற பெயரிலே தமிழ் நாட்டிலே ஒரு கிளர்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. அது பற்றி கண்திறந்து பார்க்காத பார்வையிருப்பது வருந்தத்தக்கது. அரசினுடைய கொள்கை என்ன? விவசாயக் கிளர்ச்சியிலே ஈடுபட்டிருப்பவர்கள் யார்? விவசாயிகளுடைய கஷ்டநஷ்டங்கள் என்ன என்பதையாவது தெளிவுபடுத்த வேண்டாமா? உண்மை யான நிலைமை என்ன?

கடன் நிவாரணம் வற்புறுத்தப்படுகிறது. மார்க்சிஸ்ட் கம் யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில், ஊசலாட்டம் இல்லாமல் உண்மையைச் சொல்ல வேண்டும் என்று வற்புறுத்துகிறது. கூட் டுறவுக் கடன்களாக இருந்தால் ரூ. 500, ரூ. 1,000 உள்ளவர் களுக்கு, நிவாரணம் அளித்துவிட்டு, அப்படிப்பட்ட விவசாயிகளை அரசாங்கம் தன் பின்னால் வைத்துக் கொண்டு, பல்லாயிரக் கணக் கான ரூபாய்களை, இலட்சக்கணக்கான ரூபாய்களைக் கடன் வாங்கி ஏப்பம் விட்டு வந்திருக்கிற நிலப்பிரபுத்துவத்தை எதிர்க்க, சரி யான பாதையை வகுக்க, அரசு தயக்கம் காட்டுகிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

இன்று விளைபொருள்களுக்கு நியாய விலை வேண்டுமென்ற குரல் நாடு தழுவி இருக்கிறது. ஒரு குவிண்டாலுக்கு ரூ. 100 ஆவது வேண்டுமென்ற குரல் இருக்கிறது. சாதாரண விவசாயிகள் கடனுக்கு நிவாரணம் கொடுத்து, ஜப்தி போன்ற நிலைமை

களைத் தடுத்து நிறுத்தி, சிறு விவசாயிகளைத் தன் பக்கம் நிறுத்தி, நிலச் சுவான்தார்கள் அக்கிரமமான முறையில் ஏமாற்றுவதைத் தடுத்து நிறுத்த துப்பாக்கிப் பிரயோகத்தைத் தடுத்து வலு வூட்டக் கூடிய பாதையை இந்த அரசு மேற்கொள்ளாவிட்டால், நிலைமை மோசமாகும், பல துப்பாக்கிப் பிரயோகங்களையும் உருவாக்கும். உயிர் பறிபோகக்கூடிய இத்தகைய துப்பாக்கிப் பிரயோகங்கள் இனிமேல் தமிழகத்தில் ஏற்படலாகாது என்பதை வலியுறுத்தித் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்றைக்கிருக்கிற சமூக நிலையிலே, பொருளாதார துறை யிலே, நிலப் பிரபுத்துவம் கோலோச்சுகிறது, அன்னிய முதலீடு உயர்ந்து கொண்டிருக்கிறது. அப்படியிருக்கிற நிலையிலே, என்ன மாறுதல்கள் நிகழுமோ, அவைகள்தான் நிகழ்ந்து கொண்டிருக் கின்றன. எனவே, ஒன்றை வற்புறுத்துவது எனது கடமை யெனத் தெரிவித்துக் கொள்கிறேன். கிராமப்புற மக்களுக்கு நன்மை விளைவிக்கவேண்டுமென்று சொன்னால், என்ன செய்ய வேண்டுமென்று கூட, கோடிட்டுக் காட்டப்படவில்லையே என் பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்று, கிராமப்புறங்களில் சிறு தொழில்களை வளர்க்கிறோம் என்று சொல்கிறோம். 80 ஆண்டுகளாக வளராமல் போன ஆபத்தான நிலைமை ஏன் வந்தது? சிறு தொழில்களை வளர்க்க வேண்டுமென்று சொன்னால் கிராமப் புறத்தினுடைய வேலையில்லாத்திண்டாட்டத்தைத் தீர்க்க வேண்டு மென்று சொன்னால், கிராமப்புற மக்களது வாங்கும் சக்தியை உயர்த்த வழி என்ன என்பதைத் கண்டிப்பாக சிந்திக்க வேண்டியவர் களாக இருக்கிறோம். அரசு இதிலே தகுந்த கவனம் செலுத்த வேண்டுமென்று வற்புறுத்துகிறோம்.

முதலமைச்சர் வெளியிலே சொல்கிறார், இன்றைக்குத் தமிழ் நாட்டிலே பினாமியாக பல இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நிலங்களை ஏமாற்றி வைத்திருக்கிறார்கள் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால், கொள்கை வடிவிலே அது இல்லை. வெளியிலே சொல்கிற கொள்கை அறிவிப்பு இந்த ஆளுநர் உரையிலே இல்லை. அந்த நிலங்களை அரசு கையகப்படுத்தினால், பல இலட்சக்கணக்கான நிலங்களை உழைக்கும் மக்களுக்கும் கொடுக்க முடியும், தாழ்த்தப் பட்ட மக்களுக்கும் கொடுக்க முடியும். மந்திரத்தினாலே ஜாதி மத பேதங்களை ஒழிக்க முடியாது. ஒரு ஏக்கர் ஒவ்வொரு தாழ்த்தப் பட்ட மகனுக்கும் என்று கொடுத்தால், அவர்களை சமுதாயத்தில், பொருளாதாரத் துறையில் உயர்த்த முடியும். 10 இலட்சம் ஏக்கர் மறைக்கப்பட்டிருக்கிறது, பினாமியாக இருக்கிறது. அதை கைப்பற்ற அரசு முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து உச்சவரம்பில் ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருக்கிற அனாவசியமான விதிமுறைகள் ரத்து செய்யப்பட வேண்டும். அந்த நிலங்கள் எடுக்கப்பட்டு சாதாரண குடிமகனுக்குக் கொடுக்கப் படவேண்டும். வேலை இல்லாமல் இருக்கும் இந்த நாட்டு விவ சாயிகளுக்கு வேலை கொடுக்க வேண்டும். வருடத்திற்கு மூன்று





மாதங்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். இப்போது ஆடி, ஆவணி மாதங்களில் வேலை கிடையாது. புஞ்சைப் பிரதேசங் களில் மழையில்லை வேலையற்ற பட்டாளம் நிரம்ப இருக்கிறது.

(பிற்பகல் 12—20)

நிதி அமைச்சர் அவர்கள் வரவு செலவுத் திட்டத்தில் குறிப் பிட்டார்கள். லாண்டு ஆர்மி ஒன்றை அமைத்து வேலை இல்லாத விவசாயிகளுக்கு வேலை கொடுக்கப்போவதாக. விவசாயம் அற்ற நேரங்களில் அவர்களுக்கு கிராமப் புற அபிவிருத்தி வேலைகளை செய்ய உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். மேற்கு வங்கத்திலே விவசாயிகளுக்கு ஒரு நாளைக்கு 2 கிலோ கோதுமையும் ஒரு ரூபாயும் கொடுத்து வறுமையை தீர்க்கின்ற முறையிலே சிறிய முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. அதைப்போன்று நாமும் மத்திய அரசாங்கத்தின் உதவியைப் பெற்று நம்முடைய மாநிலத்தில் உள்ளவர்களுக்கு ஒரு படி அரிசி 2 படி அரிசி போன்றும், ஒரு ரூபாயும் கையிலே கொடுத்து, வேலையற்றோருக்கு உதவி செய்ய வேண்டும்.

அடுத்து வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், கீழத் தஞ்சை யிலே பேசும்போது, விவசாயக் கூலிகளுக்கு 50 பைசா இடைக் காலத்தில் கூட்டிக் கொடுப்பதற்கான முயற்சி செய்கிறோம் என்று சொன்னார்கள். அதை நான் பாராட்டுகிறேன். ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். எவனெல்லாம் கிளர்ச்சி செய்கிறானோ, அவனுக்குத்தான் சலுகை கிடைக்கும் என்று சொன்னால் அது சரியல்ல. தமிழ் நாட்டிலே உள்ள விவசாயிகளுக்கு, விவசாயக் கூலிகளுக்கு 8 ரூபாய் என்று அறிவிக்கவேண்டும். தமிழன் தமிழன் என்று பெருமை பேசுகிறோம். அந்தத் தமிழனுக்குக் கூலி உயர்வு கொடுத்தால்தான் நிச்சயமாக பெருமை பெற முடியும். சிறு தொழில் வளரும். அந்தக் கூலிதான் இதை எல்லாம் வாங்கு வான், இல்லை என்றால் தொந்தி படைத்தவர்களா வாங்குவார்கள்? இதனை சர்க்கார் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது காடு வளர்ப்புத் திட்டம் என்ற பெயரில் 5 வருடம் 10 வருடம் முன்னால் நிலங்களைப்பெற்று சீராக்கி வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் விவசாயிகளிடம் இருந்து அந்த நிலங்களைப் பறித்துக் கொண்டிருக்கிறார்கள். எனது தொகுதியில் கன்னிவாடி, பழனி மலையிலே இப்படிப்பட்ட நிகழ்ச்சி கள் நடந்திருக்கின்றன. இவை எல்லாம் புதிதாகப் பட்டா போட்டுக்கொண்ட நிலங்கள் அல்ல. 5, 10 ஆண்டுக்கு முன்னாலே போடப்பட்டவை. எனவே அந்த நிலங்களை எல்லாம் அவர் களுக்கு முறையாகப் பட்டாபோட்டு அவர்கள் அதிலே விவசாயம் செய்ய அனுமதிக்க வேண்டும்.

இன்றைக்கு அறநிலையம் இருக்கிறது. கடவுள் மற்றும் சர்ச் சைகளுக்குள்ளே நுழைய விரும்பவில்லை. அறநிலையங்களுக்குச் சொந்தமான நிலங்களை பட்டாபோட்டு அந்த நிலத்தை ஆண்டு

[திரு. என். வரதராஜன்] [1978 ஆகஸ்ட் 31

கொண்டிருப்பவர்களே அதை அனுபவிக்க வழி செய்யவேண்டும். பக்தர்களில் ஆண்டான் அடிமை என்றெல்லாம் தற்போது இல்லை. இன்றைக்கு நிலத்திலே உழுது விவசாயம் செய்பவன்தான் உண்மையான கடவுளாக காட்சி அளிக்கிறான். சிறு விவசாயிகள் அறநிலைய நிலங்களை வைத்திருந்தால் அவர்கள் அதை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆனால் வசதி படைத்த கூட்டம் லட்சக் கணக்கான நிலங்களை வைத்துக் கொண்டிருக்கிறது என்பதை மறுக்க முடியாது. அந்த நிலங்களை அந்த விவசாயிகளுக்கே பட்டா போட்டுக் கொடுத்து ஒரு முற்போக்கான தன்மையை உருவாக்கவேண்டும். அப்படி செய்யவில்லை என்றால் விவசாயிகள் கிளர்ந்தெழக்கூடிய ஒரு பேராபத்தான கட்டம் உருவாகி, மிகவும் சங்கடமான நிலையில் கொண்டு போய் விடும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து நான் சொல்ல விரும்புவது, பழனியில் ஏற்பட்டு இருக்கும்......

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆப் ஆர்டர், விவசாய சங்கத்தைப் பற்றி சொன்னார்கள். பாக்கெட்டில் 1,000 ரூபாயை வைத்துக்கொண்டு இருக்கும் சங்கம் என்றால், கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் இரண்டு பேரும் சங்கம் வைத்து இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகமும் சங்கம் வைத்து இருக்கிறது. எம்.ஜி.ஆர். விவசாய சங்கமும் இருக்கிறது, ஆகவே, ஆயிரம் ரூபாயை வைத்துக்கொண்டு இருப்பவர்கள் நடத்தும் விவசாய சங்கம் என்றால் அது எந்த விவசாயச் சங்கம் என்று சொல்லட்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) : அவர் குறிப்பிட்டு யாரையும் சொல்லவில்லை, அதனால் விட்டு விடுங்கள்.

திரு. என். வரதராசன் : நண்பர் சுப்பு அவர்களுக்கு விளக்கம் அவசியம் என்று நினைக்கிறேன். அவர்களுக்குக் கோபம் வந்தது நல்லது என்று நினைக்கிறேன். அப்படிப்பட்ட விவசாய சங்கம் நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. அவர் தெரிந்து கொள்ள விரும்புவதும் அதைத்தான். எங்களுக்கு எதையும் மறைக்க வேண்டிய அவசியம் இல்லை. மார்க்கிச கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்த வரையில் தெளிவாகச் சொல்லிக் கொண்டு இருக்கிறோம். நாராயணசாமி விவசாய சங்கம்தான் அவ்வாறு செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது என்பதை இந்த மன்றத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. க. சுப்பு : அந்த நாராயணசாமி விவசாயச் சங்கத்தோடு சேர்ந்துதான் கம்யூனிஸ்ட் கட்சி போராட்டம் நடத்தி இருக்கிறது.

திரு. ரா. உமாநாத் : இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.



1978 ஆகஸ்ட் 31]

திரு. என். வரதராசன் : திரு. சுப்பு இந்த உலகத்தில் இல்லை.

திரு. க. சுப்பு : கம்யூனிஸ்ட் கட்சி அவரோடு சேர்ந்து போராட்டம் நடத்தியதை ஒப்புக்கொள்கிறீர்களா ?

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவரவர்களே, நாராயணசாமி அவர்களோடு சேர்ந்து மார்க்சிச கம்யூனிஸ்ட் கட்சி விவசாய சங்கம் என்றைக்குப் போராட்டம் நடத்தியது என்பதை மாண்புமிகு சுப்பு அவர்கள் தெரிவிப்பார்களா ?

திரு. க. சுப்பு : மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு விவசாய சங்கம் இல்லை என்பது தெரியும். நாராயணசாமி விவசாயச் சங்கம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை எதிர்த்துப் போராட்டம் நடத்திய நேரத்தில் அன்று ஆளும் கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகம் இருந்த நேரத்தில் கம்யூனிஸ்ட் கட்சி, கவுண்டர் கட்சியோடு சேர்ந்து போராட்டம் நடத்தியது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) : இப்போது ஆளுநர் உரை மீது விவாதம் நடந்து கொண்டு இருக்கிறது. அதைப் பற்றி பேசுங்கள்.

திரு. என். சங்கரய்யா : விவசாய சங்கமே கிடையாது என்று குறிப்பிட்டார்கள்...

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்): இதைப் பிரச்னையாக்காதீர்கள்.

திரு. என். சங்கரய்யா : போராட்டம் பற்றிக் குறிப்பிட்டார்கள். நான் கேட்டவுடனே மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு விவசாயச் சங்கம் கிடையாது என்று சொல்லிவிட்டார்கள், ஒன்று, நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லும்போது, திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்த்துப் பேராடியது என்று சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்த்து, மார்க்ஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தனியாக தன்னுடைய கொள்கைகளை வலியுறுத்தி 1972-ம் ஆண்டில் பேராட்டம் நடத்தியது என்பதை திரு. சுப்பு அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. க. சுப்பு : உங்கள் கட்சி நடத்தியிருக்கலாம். உங்கள் கட்சிக்கு விவசாயச் சங்கம் கிடையாது.

திரு. என். சங்கரய்யா : தே[illegible]ர் ஏ. கே. கோபாலன் அவர்கள் தலைமையில் 22,000 விவசாயிகளை ஒன்று திரட்டி ஒரு பேரணி அகில இந்திய அளவில் நடத்தி இருக்கிறோம்.

A 84—23

[1978 ஆகஸ்ட் 31

திரு. க. சுப்பு : அது இரண்டு கட்சியும் ஒன்றாக இருந்த போது, பிரிந்ததற்குப் பிறகு, விவசாயிகள் அவர்கள் பக்கம் போய்விட்டார்கள், தனியார் உங்கள் பக்கம் இருக்கிறார்கள்.

திரு. என். சங்கரய்யா : திரு. வீரய்யா தலைமையில் அகில இந்திய அளவிலும், தோழர் ராமராஜ் தலைமையில் தமிழ் நாட்டிலும் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளைக் கொண்டு சங்கம் செயல்பட்டு வருகிறது. அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கமிட்டிகளிலும் அந்தச் சங்கம் இடம் பெற்றிருக்கிறது என்பதை நண்பர் சுப்பு அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : மாதர் சங்கத்திற்கு, தோழர் ராமமூர்த்தி தலைவர் என்பதைப்போல் இருக்கிறது இது.

திரு. என். வரதராஜன் : நண்பர் சுப்பு எந்தக் கட்சியில் இருக்கிறாரோ அந்தந்தக் கட்சியில் தான் விவசாயிகள் இருக்கிறார்கள் என்று நினைத்தால் அது தவறு.

திரு. க. சுப்பு : மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி யார் யார் ஆட்சியில் இருக்கிறார்களோ அவர்களோடு சேர்ந்து கொள்ளும். அப்படி நாங்கள் இல்லை. நாங்கள் கொள்கைப் பிடிப்போடு நிற்கிறோம்.

திரு. ரா. உமாநாத் : ஒரு நாளைக்கு ஒரு கட்சியோடு திராவிட முன்னேற்றக் கழகம்தான் சேர்ந்துகொள்கிறது. இந்திரா காந்தியோடு திராவிட முன்னேற்றக் கழகம் சேர்ந்து இருப்பது போல் நாங்கள் சேர மாட்டோம்.

திரு. க. சுப்பு : திரு. மொரார்ஜியோடும் பட்டேலோடும் சேருவதைவிட இது தவறு இல்லை.

திரு. என். சங்கரய்யா : தோழர் சிட்டிபாபுவைக் கொன்ற இந்திரா காந்தி என்று சொல்லி கறுப்புக் கொடி காட்டிவிட்டு, இன்றைக்கு நீங்கள்தான் அந்தர் பல்டி அடித்து இருக்கிறீர்கள்.

திரு. க. சுப்பு : திரு சிட்டிபாபு கொலை செய்யக் காரணமாக இருந்தவர்கள்மீது நடவடிக்கை எடுங்கள் என்று நாங்கள் கேட்கிறோம். அரசாங்கம்தான் நடவடிக்கை எடுக்கவில்லை.

திரு. என். சங்கரய்யா : சாத்தூர் பாலகிருஷ்ணன் கொலை செய்யப்பட காரணமாக இருந்த காங்கிரஸ் கட்சியோடு சேர்ந்து இருப்பது என்ன நியாயம்?



1978 ஆகஸ்ட் 31]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்): தயவு செய்து இதைப் பெரிய பிரச்னையாக ஆக்காதீர்கள். உட்காருங்கள். திரு. என். வரதராசன் தொடர்ந்து பேசுவார்.

திரு. என் வரதராஜன் : நான் பழனியில் 13-ம் தேதி நடைபெற்ற சம்பவத்தைச் சொல்ல விரும்புகிறேன். அன்று இப்ராஹிம் என்பவர் போலீஸ் ஸ்டேஷனில் அடித்துச் கொல்லப்பட்ட சம்பவம் மிகவும் முக்கியமானது. பழனியில் 13-ம் தேதி மாலை 5 மணிக்கு இப்ராஹிம் மயங்கிய நிலையில் மருத்துவ மனையில் சேர்க்கப்படுகிறார். ஆனால் அவர் சில மணிநேரங்களில் இறந்து விடுகிறார். போலீஸ் ஸ்டேஷனில் தாக்கப்பட்டவர். எப்படி மருத்துவ மனையில் சிலரால் கொண்டு வந்து சேர்க்கப்பட்டு இருக்கிறார் என்பது கவனிக்க வேண்டிய விஷயமாக இருக்கிறது.

(பிற்பகல் 12—30)

**அதைப்போல,** ஏற்கெனவே நம்முடைய முதலமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மாலை 6 மணிக்குமேல் எந்த பெண்ணையும் போலீஸ் ஸ்டேஷனில் வைத்திருக்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி யிருந்தும் இப்ராகிம் மனைவி ஜமத் உன்னிஷாவை 3 நாள் காவலில் பழனி ஸ்டேஷனில் வைத்திருக்கிறார்கள். இதற்கு யார் காரணம்? அதிகார வர்க்கம், போலீஸ்காரர்களின் அடக்குமுறைதான். அந்த நிலைமை இன்னும் நீடித்துக் கொண்டுதான் இருக்கிறது. அதிலே அரசாங்கம் உஷாராக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் சாதாரண மக்களின் உயிர் பறி போய்க் கொண்டே இருக்கும்.

ஜமத் உன்னிஷாவை போலீஸ் ஸ்டேஷனில் 3 நாள் அடைத்து வைத்ததற்குக் காரணம் அங்கே உள்ள போலீஸ்காரர்கள்தான். இதிலே ஜாதி துவேஷம் எதுவும் கிடையாது. அதிகார வர்க்கத்தின் போக்கு தான் அதற்குக் காரணம். அவர்களுடைய அடக்குமுறையால் இப்ராஹிம் உயிர் போய்விட்டது. அதனால் அதற்கு ஆர்.டி.ஓ. அல்லது மாவட்ட ஆட்சித் தலைவரின் விசாரணை போதாது; அது தேவையில்லை. அதற்கு ஒரு நீதி விசாரணை வைக்க வேண்டும். போலீஸ்காரர்களின் அட்டூழியங்கள் தடுக்கப்பட்டாலன்றி இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்துகொண்டே தான் இருக்கும்.

இந்த மாதம் 25-ம் தேதி கம்பம் போலீஸ் ஸ்டேஷனில் மணி என்பவர் தாக்கப்பட்டு, கை கால்கள் ஊனமுற்ற நிலையில் மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார். அதற்கு ஆங்கிருக்கிற சப் இன்ஸ்பெக்டர்தான் காரணம். முதலமைச்சர் 25-ந் தேதி அங்கு வந்து அந்தச் சம்பவத்திற்கு நீதி விசாரணை நடத்தப்படும் என்று வாக்குறுதி கொடுத்ததின்பேரில் நிலைமை ஓரளவு அமைதியாக இருக்கிறது. இப்படிப்பட்ட கொடுமைகள் தமிழ்நாட்டில் எந்தப் பகுதியிலும் நடைபெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அரசாங்கத்தின பொறுப்பு.

அடுத்து, எந்த ஒரு காரியத்தைச் செய்தாலும் அரசாங்கம் காலம் தாழ்த்தியே செய்கிறது என்பதை வருத்தத்தோடு தெரிவிக்க விரும்புகிறேன். இந்த மாதம் 16-ந் தேதி கீழ் தஞ்சை விவசாயிகளுக்கு 50 பைசா கூலி உயர்வு எனறு அறிவித்தீர்கள். எந்த நேரத்தில் இதை அறிவித்தார்கள்? விவசாயிகள் இரண்டு மாதங்களுக்கு முன்னால் வேண்டுகோள் விடுத்தார்கள். அங்கே இருக்கிற வலது கம்யூனிஸ்ட் சங்கம், இடது கம்யூனிஸ்ட் சங்கம் எல்லாம் வேண்டுகோள் விடுத்தார்கள். வேலை நிறுத்த அறிவிப்பு கொடுத்தார்கள். பிறகு 5. லட்சம் பேர் வேலை நிறுத்தத்தில் பங்கு கொண்ட பிறகு வருவாய்த் துறை அமைச்சரின் அறிவிப்பு வெளி வருகிறது. அந்த அறிவிப்பு 15 நாட்களுக்கு முன்னால் வந்திருந்தால் எல்லோருக்கும் மகிழ்ச்சியாக இருந்திருக்கும்.

அதைபோல தமிழ்நாட்டில் பல்வேறு வழக்குகளை வாபஸ் பெற்றிருக்கிறார்கள். பல திசைகளிலிருந்தும் நிர்ப்பந்தம் வந்த பின்னால் வாபஸ் பெற்றிருக்கிறீர்கள். வாபஸ் பெற்றது நல்ல ஜனநாயக மரபு. அதை ஏன் முன் கூட்டியே செய்திருக்கக் கூடாது? காலம் தாழ்த்தி, காலம் தாழ்த்தியே காரியங்களைச் செய்வதினால் ஜனநாயகத்திற்கு நீங்கள் மதிப்பளிக்கவில்லை என்ற எண்ணம் ஏற்படுகிறது. இந்த நிலைமை போக்கப்பட வேண்டும்.

அடுத்து மதுவிலக்கு. இதில் ஒரு தெளிவு இருக்க வேண்டும். இன்று மாநில சர்க்காரின் கொள்கை என்ன? மேலும் தீவிரமாக்கும் சட்டம், மேலும் தீவிரமாக்கும் சட்டம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சட்டத்தைப் போட்டு, அடக்கு முறையைக் கையாண்டு மதுவிலக்குத் திட்டத்தை வெற்றிபெறச் செய்ய முடியுமா உங்களால்? முடியும் என்று நீங்கள் எண்ணுவதாக இருந்தால், நிச்சயமாக அது ஒரு துயர சம்பவத்தில் கொண்டு போய் விட்டுவிடும். இன்று நாட்டிலே என்ன நிலைமை இருக்கிறது? அண்டை மாநிலங்களிலே மதுவிலக்கு இல்லை. மத்திய அரசாலும் அதைச் செயல்படுத்த முடியவில்லை. தமிழ்நாடு ஒரு தீவு மாதிரி இருக்கிறது. அதனால் நாம் எப்படி முயற்சி செய்தாலும் ஓரளவுக்குத்தான் முடியும். மத்திய அரசாங்கத்தினாலும் முடியவில்லை; அண்டை மாநில அரசாங்கங்களினாலும் முடியவில்லை என்று சொல்லும்போது நாம் மட்டும் எப்படி மதுவிலக்கை சரியாகச் செயல்படுத்த முடியும்? கடுமையான சட்டம் வேண்டும், கடுமையான சட்டம் வேண்டும் எனறு சொல்லி, சட்டத்தினால் மதுவிலக்கை செயல்படுத்த முடியுமா என்றால் நிசசயமாக முடியாது. மக்களுடைய அன்பும் ஆதரவும் அதற்கு இருந்தால் தான் முடியும். மது அருந்தக் கூடாது என்பதற்கு மக்கள் தங்களுக்குத் தாங்களே தடை விதித்துக்கொள்ள வேண்டுமே தவிர மற்ற எந்த வகையிலும் தடை விதிக்க முடியாது. அரசாங்கம் தடை போடுவதால் என்ன நடக்கிறது? இன்னொரு கூட்டம் பணம் சம்பாதிக்கிறது. போலீஸ்காரர்கள் துணை இருககிறார்கள். அவர்களை எல்லாம் சட்டம் தடுக்கவில்லையே. கடுமையான சட்டம் வேண்டும் என்கிறார்கள். அந்தக் கடுமையான சட்டம் யார்மீது பாய்கிறது?





சாதாரண ஏழை மக்கள் மீதுதான் சட்டம் பாய்கிறது. ஆனால் லட்சக்கணக்கான ரூபாய் சம்பாதிக்கின்றவர்கள், பெரிய மனிதர்கள், அதிகார வர்க்கத்தின்மீது அந்தச் சட்டம் பாயவில்லை.

அந்தத் தரப்பிலே இருக்கக்கூடிய ஆளும் கட்சியைச் சேர்ந்த முக்கியமான உறுப்பினர், மதுரை மாவட்டத்தில் முக்கியமான சட்டமன்ற உறுப்பினர் திரு. பாலகுரு ரெட்டியார் அவர்கள் மதுரை மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்தில் பேசும்போது ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். அங்கே போலீஸ் ஸ்டேஷனில் சாராயம் காய்ச்சுகிறார்கள். விற்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுங்கள். சாதாரண மக்கள்மீது தான் நடவடிக்கை எடுப்போம் என்பீர்களானால் உண்மையிலேயே மதுவிலக்கு வெற்றிபெற முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மதுரை மாநகராட்சித் தேர்தல்..........

திரு. வெ. பாலகுரு : தலைவரவர்களே, உறுப்பினர் கூறுவதுபோல் போலீஸ் நிலையத்தில் சாராயம் காய்ச்சப்படுவதாக நான் சொல்லவில்லை. போலீஸ் நிலையத்தைச் சுற்றியுள்ள பல இடங்களில்தான் காய்ச்சப்படுகிறது என்று சொல்லி இருக்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கொடுத்த விளக்கத்திற்கு நன்றி. அடுத்ததாக நான் சொல்ல வந்தது மதுரை தேர்தல் பற்றி. மதுரை தேர்தல் நடந்திருக்கிறது. இந்தத் தேர்தலின்போது எல்லாக் கட்சிகளும் தங்கள் சக்தி அனைத்தையும் பயன்படுத்தின. யாரும் மிச்சம் வைக்கவில்லை. ஆனால் அமைதியான முறையில் இந்தத் தேர்தல் நடந்திருப்பது நாம் எல்லாம் மகிழ்ச்சி அடையக்கூடிய ஒன்றாகும். நம்முடைய தமிழ்நாட்டில் இன்னும் இதர நகராட்சிகள், ஊராட்சி மன்றங்கள், மற்றும் சென்னை மாநகராட்சி ஆகியவற்றுக்கான தேர்தல்களை நடத்துவதற்கும் விரைவான ஏற்பாடுகளைச் செய்வதில் அரசு அக்கறை காட்ட வேண்டும். நடந்து முடிந்த தேர்தலிலே ஜனநாயக அணி வகுப்பில் ஆளும் கட்சியோடு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இணைந்து நின்றது. அதை எண்ணும் போது நாம் பெருமை அடைய முடிகிறது. சர்வாதிகார பிற்போக்கு சக்திகள் தலை எடுக்கக் கூடாது என்ற நிலையிலே தான் அந்தத் தேர்தலிலே உடன்படிக்கை ஏற்பட்டிருந்தது. இதைக் கண்டு திராவிட முன்னேற்றக் கழகம் பயமோ வருத்தமோ கொண்டு இந்திரா காங்கிரஸ் கட்சியோடு செல்லலாகாது என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : ஒரு வருத்தமும் கிடையாது. அவர்கள் அதிலேயாவது நிலையாக இருந்தால் போதும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்ற போது காங்கிரஸ் கட்சியோடு கூட்டு என்று சொன்னார்கள். அந்த மாதிரி எதுவும் கிடையாது. இன்றைக்கு தமிழகத்திலே இருக்கின்ற அரசியல் சூழ்நிலையிலே ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்துக்களைக் கொண்டிருக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆனால் காங்கிரஸ் கட்சிக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் கூட்டு எதுவும் கிடையாது என்ற எங்கள் நிலையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, காங்கிரஸ் கட்சியின் தலைவர் நண்பர் திரு மாரிமுத்து அவர்கள் சொன்னதுபோல் ஏதோ நம்முடைய மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர் அங்கலாய்த்துக் கொள்கின்ற அளவுக்கோ அல்லது அதிர்ச்சி அடைகின்ற அளவுக்கோ எந்த உடன்பாடுகளும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இந்திரா காங்கிரசுக்கும் ஏற்பட்டுவிடவில்லை என்பதையும் அதற்கான அரும்பு நிலை பருவம் கூட ஏற்படவில்லை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் நாடாளுமன்றத் தேர்தலின் போது மார்க்சிஸ்ட் கட்சியினர் எங்களோடு சேர்ந்து ஒரே மேடையில் என்னென்ன பேசினார்கள் என்பது பசுமையாக நினைவில் இருக்கின்றது. முதலமைச்சர் திரு. எம்.ஜி. ஆர். அணிமணிகள் அவர்களைப் பற்றி, அவர்களைப் பற்றி என்பதைவிட, அவர்கள் அணிந்திருக்கின்ற ஆடை முதலியவற்றைப் பற்றிக் கூட விமரிசித்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் இன்றைக்கு அவர்களோடு தோளோடு தோள் நின்று குலாவுகின்ற காட்சியையும் நாட்டு மக்கள் பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களுக்கு ஒரு விளக்கத்தை நான் சொல்லியாகவேண்டும். ஏனென்றால் அவர்கள் பேசும்போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை சம்பந்தப்படுத்தி இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம், இந்திரா காந்தியோடு சேர்வது பற்றி நாங்கள் அங்கலாய்க்கவில்லை. அவர்கள் அவ்வாறு சேர்வது பற்றி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தழும்பு படிந்த உறுப்பினர்கள்தான் அங்கலாய்ப்பார்கள் என்பதை நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. என். வரதராஜன் : நாடாளுமன்றத் தேர்தலைப் பொறுத்த அளவில் சர்வாதிகாரத்தை எதிர்க்கின்ற கட்சிகள் அனைத்துமாக ஒன்று சேர்ந்து போராடினோம் என்பதை சென்ற முறை இங்கே நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்தபோது கூடத் தெரிவித்திருக்கிறோம். ஆனால் சட்டமன்றத் தேர்தலைப் பொறுத்த வரையில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர், மக்களின் நம்பிக்கையை இழந்தவர்களாக இருக்கிறார்கள் என்ற காரணத்தால் நாங்கள் அவர்களை ஆதரிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, எங்களுடைய
கட்சியைப் பொறுத்தமட்டிலே அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகம், இந்திரா காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த
மட்டில் எந்த நிலையில் இருக்கிறது என்பதைப் பொறுத்துதான்
அவர்களுடன் கூட்டு வைத்துக்கொள்கின்ற நிலையினை முடிவெடுத்
தது. இந்த நாட்டிலே சர்வாதிகார ஆட்சியைக் கொண்டு
வந்ததாக நாங்கள் கருதுகிற ஒரு கட்சியைப் பொறுத்த அள
வில் எதிர்க்கட்சிகள் என்ன நிலையில் இருக்கின்றன என்பதைப்
பொறுத்துத்தான் அவர்களுடன் கூட்டு வைத்துக்கொள்வது பற்றி
முடிவெடுக்கப்படுகிறது. ஆகவே இதில் சந்தர்ப்ப வாதம் எது
வும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12—40]

திரு. மு. கருணாநிதி : திராவிட முன்னேற்றக் கழகத்தில்
உள்ள இலட்சக்கணக்கான தொண்டர்கள் அங்கலாய்க்கிறார்கள்
என்று மார்க்சிஸ்ட் கட்சி கவலைப்படுவது ஏதோ ஆடு நனைகிறதே
என்று ஓநாய் கவலைப்படுவதைப் போல் இருக்கிறது. திராவிட
முன்னேற்றக் கழகத்தில் இருக்கிற எந்தத் தொண்டரும் நண்
பர் சங்கரய்யா அவர்கள் சொன்னதைப் போல் யாரும் அங்க
லாய்த்துக் கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
இன்னொன்று சொன்னார்கள். விபரீதமான வியாக்கியானம்,
நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் நாட்டு மக்களின் அன்பைப்
பெறாத, நம்பிக்கையை இழந்த திராவிட முன்னேற்றக் கழகம்
டெல்லிக்குப் போய் உட்காருவதில் ஒத்துழைப்பார்களாம் ; ஆனால்
தமிழ் நாட்டில் உட்கார ஒத்துழைக்க மாட்டார்களாம். நாடாளு
மன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் அதிக இடங்கள்
பெறவில்லை என்பதால் நீங்கள் இடம் கருதி அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகம் பக்கம் போனீர்களே தவிர கொள்கையை
நாடியல்ல என்பதை நாடு உணர்ந்திருக்கிறது.

திரு. என். சங்கரய்யா : நாடாளுமன்றத்தில் திராவிட
முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் அமர்வது என்ற
பேச்சேயில்லை. தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் திராவிட
முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றால் கடந்த காலத்தில் மக்
களின் நம்பிக்கையை இழந்த ஒரு கட்சியின் ஆட்சி ஏற்படுமே
என்ற காரணத்தால் அந்நிலைக்குப் போகவில்லை. மற்றொன்று
சட்டமன்றத் தேர்தலில் இந்திரா காங்கிரசோடு அண்ணா திரா
விட முன்னேற்றக் கழகம் தன் உறவை முறித்துக் கொண்டிருக்கும்
போது மார்க்சிஸ்ட் கட்சி அவர்களோடு உறவு கொண்டிருக்
கிறது. அரசியல் நிலைமையில்தான் அந்த உறவுகளை பார்த்திருக்
கிறோம் என்று நான் மீண்டும் சொல்லிக் கொள்ள விரும்பு
கிறேன்.

திரு. மு. கருணாநிதி : மார்க்சிஸ்ட் கட்சித் தோழர் ஒரு
தவறான கணக்கைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள்
ஆதரித்ததால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு

வந்துவிட்டது போலவும் இவர்கள் ஆதரித்த காரணத்தினால் தான் எம்.ஜி.ஆர். அவர்கள் முதல் அமைச்சராக ஆகிவிட்டது போலவும் ஒரு தவறான கணக்கைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தனி சக்தி உண்டு. நீங்கள் ஆதரிக்காமலே ஆட்சிக்கு வர அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தனி வலிவு உண்டு. உங்கள் கருணையால் தான் அவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள் என்ற தவறான கணக்கைப் போடாதீர்கள்.

திரு. என். சங்கரய்யா : நாங்கள் ஒன்றும் எங்கள் கருணையால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தது என்று சொல்லவில்லை. இப்போதாவது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்பற்றி சற்று கருணையோடு திரு. கருணாநிதி அவர்கள் பேசுவது கேட்டு நான் சந்தோஷப்படுகிறேன். ஏற்கனவே நடந்து கொண்டிருப்பது கொள்கைப் போராட்டம்தான். எங்களைப் பிரித்துவிட நினைக்காதீர்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இந்திரா காங்கிரஸ் கட்சியோடு சேராமல் ஒரு ஜனநாயகப் பாதையில் போகக் கூடிய அளவிற்கு நாங்கள் அந்தக் கட்சி எடுக்கக்கூடிய முற்போக்கு நடவடிக்கைகளை ஆதரிப்போம். பிற்போக்கான நடவடிக்கைகள் இருந்தால் அதை விமர்சனம் செய்வோம். உங்களைப் பிற்போக்கான கட்சி என்று கூறவில்லை. அப்படிச் கூறியிருந்தால் எங்கள் கட்சி இடதுசாரி முன்னணியில் சேர்ந்திராது...........

திரு. மு. கருணாநிதி : மீண்டும் தவறாகப் புரிந்து கொள்கிறார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரித்துப் பேசியிருப்பதாகச் சொல்கிறார்கள். நான் சொல்வதெல்லாம் காக்காய் உட்கார பனம்பழம் விழுந்தது, ஒருவேளை உட்காராமலே கூட அந்தப் பனம்பழம் விழுந்திருக்கும் என்பதைத்தான் சொல்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : காக்காய் உட்கார பனம்பழம் விழுந்தது என்று சொல்லவில்லை. எங்கள் கட்சியின் சக்தி அளவு இன்று என்ன என்று எங்களுக்குத் தெரியும். நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மலையாளி, தமிழன் என்ற பிரச்சினையைக் கிளப்பினார்கள். மதுரை மாநகராட்சித் தேர்தலில் தமிழர்களாக இருந்தால் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத்தான் வோட்டு அளிக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் மதுரை மக்கள் அவர்களுக்கு வோட்டு அளிக்கவில்லை. ஆகவே மதுரை மக்கள் தமிழர்கள் அல்ல என்று அவர்கள் கூறினால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை. மதுரை மாநகர மக்கள் உங்களை நிராகரித்துவிட்டார்கள் என்பதால் அவர்கள் உண்மையில் தமிழர்கள் அல்ல என்று கடைசியாகப் பேசினார்கள். உங்கள் கருத்துக்களை சொல்லும்போது சற்று அடக்கத்தோடு





பேசுங்கள், அடக்கத்தோடு இருந்தால்தான் பெரிய கட்சி என்று சொல்லும் ஒரு கட்சிக்கு வருங்காலத்தில் பயன் அளிக்கும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. பி. எச். பாண்டியன்): இக்காடன் இப்பிரச்சினையை விட்டுவிட்டு திரு. திருவேங்கடம் [illegible] பேச கேட்டுக்கொள்கிறேன்.

[illegible]. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, [illegible] அவர்கள் உரையின்மீது நன்றி தெரிவிக்கிற இந்தத் [illegible]தில் எங்கள் கட்சி சார்பில் நானும் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். ஆளுநர் அவர்கள் உரையில் நம் மாநிலத்தில் உணவு நிலை திருப்திகரமாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் உணவு நிலை திருப்திகரமாக இருப்பதற்கு இந்த ஒரு ஆண்டுக் காலத்தில் இந்த அரசு என்ன செய்தார்கள் என்பது அதில் குறிப்பிடப்படவில்லை. காரணம், வேளாண்மைத்துறை வளர்ச்சி, அல்லது விவ[illegible]யிகள் மீது அக்கறை எடுத்துக்கொண்டு இந்த ஆட்சியினர் [illegible]ராண்டுக் காலத்தில் அவர்களுக்கு எதுவும் செய்யவில்லை என்[illegible]தை மெத்தப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் உணவு நிலைமை திருப்திகரமாக இருக்கிறது [illegible]ன்று சொன்னால், ஏற்கனவே இருந்த ஆட்சி எடுத்த நடவடிக்கையின் காரணமாக, அவர்கள் போட்ட திட்டங்களின் காரணமாக உணவு நிலைமை திருப்திகரமாக இருக்கிறதே தவிர இன்றைய தினம் இப்போதுள்ள அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளினால் அல்ல என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கடந்த ஓராண்டுக் காலத்தில் இந்த அரசு வேளாண்மைத் துறையில் என்ன சாதித்திருக்கிறது என்பதைத் தேடிப் பார்க்கிற நேரத்தில் வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் அஞ்சுகம் என்ற பச்சைப் பயறின் பெயரையும், கருணா என்றிருந்த நெல் விதையின் பெயரையும் மாற்றினாரே தவிர க்டந்த ஓராண்டுக் காலத்தில் வேளாண்மைத்துறையில் எந்தவிதமான சாதனையையும் செய்யவில்லை என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்தில் விவசாயிகள் போராட்டத்தைப்பற்றிப் பல்வேறு கருத்துக்கள் இங்கே சொல்லப்பட்டன. விவசாயிகளைப் பொறுத்தவரையில் இந்தப் போராட்டத்தில் நாராயணசாமி நாயுடாக இருந்தாலும் சரி, வேறு யாராக இருந்தாலும் சரி, தண்ணீரில் விழுந்து தத்தளித்துக் கொண்டிருந்த நேரத்தில் சிறு துரும்பு கிடைத்தாலும் அதைப் பிடித்துக் கொண்டு கரை ஏறுவான் என்பதுதான் இயற்கை. விவசாயிகளைப் பொறுத்தமட்டில் அவர்களுக்கு இருக்கின்ற கஷ்டங்களுக்கிடையில், அவர்கள் அல்லல் பட்டுக்கொண்டிருந்த நேரத்தில் நாராயணசாமி நாயுடு அவர்களுடைய போராட்டத்தோடு, எல்லா அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும் அங்கங்கே இருக்கிற விவசாயிகள், விவசாயிகள் சங்கத்தில் அங்கத்தினர்களாக இருக்கின்ற நிலைமை

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1978 ஆகஸ்ட் 31

இருப்பதால் அனைவரும் அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். ஆனால் அந்த நேரத்தில் போராட்டத்தின் போது இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது? ஏதோ விவசாயிகள் இந்த நாட்டுக்குத் தேவையில்லாதவர்கள் என்ற நினைப்பில் அவர்கள் மீது என்னென்ன அடக்குமுறைகள் கையாளப்பட்டன என்பதை இன்றையதினம் ஆட்சியில் இருக்கின்றவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பல இடங்களிலும் ராணுவத்தை உலாவ விட்டார்கள். இப்படிப்பட்ட கொடுமைகளை எல்லாம் விவசாயிகள் தாங்கிக் கொண்டிருந்தார்கள். வன்முறைச் செய... கள் சிற்சில இடங்களில் தலை தூக்கி இருந்தன என்றாலும் ... இடங்களிலும் ஆளும் கட்சிக்காரர்கள் கலவரத்தை ஏ... கொண்டிருந்தார்கள். விவசாயிகள் ஊர்வலம் நடத்... என்று சொன்னால் அந்த இடத்தில் டிராக்டர்களில் அவர்கள் வருகிறார்கள் என்றால், டிராக்டர்களை எல்லாம் அழித்திருக்கிறார்கள். வண்டிகளை அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். இப்படி எல்லாம் இருந்தும், போலீசார் விவசாயிகள் மீது வழக்குகளைத் தொடர்ந்திருக்கிறார்கள். அடித்து நொறுக்கியவர்கள் மீது எந்தவிதமான வழக்கையும் போடவில்லை என்பதை இந்த நேரத்தில் மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனக்கு முன்னால் பேசிய கம்யூனிஸ்டு கட்சி நண்பர்கள் சொன்னார்கள். இந்த மாமன்றத்திலும் ஒருநாள் சொல்லப்பட்டது. ஏற்கனவே கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள், கடன் வசூலில் மனிதாபிமானத்தோடு நடந்து கொள்வோம் என்று சொன்னார்கள். அப்போது எங்கள் கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் மனிதாபிமானத்தோடு எப்படி வசூல் செய்யப் போகிறீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு முதலமைச்சர் அவர்கள் பெரியதொரு விளக்கத்தையே தந்தார்கள். அந்த விளக்கத்தை அப்போது என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் நடைமுறையில் என்ன நடைபெறுகிறது என்றால், எங்கள் பகுதியில் கதிர் வந்து பக்குவமடைந்து ஒன்றிரண்டு நாட்களில் அறுவடையாகின்ற பக்குவத்தில் இருந்த நேரத்தில் திடீரென்று கல்மழை பெய்ததின் காரணமாக நெல்மணிகள் எல்லாம் உதிர்ந்து விழுந்து விட்டன. இந்த நிலைமையைப் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் போய் எடுத்துச் சொன்னோம். அப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சொன்னது நெல் எல்லாம் சாவியாகப் போனால் தான வரி வஜா செய்ய முடியும், கடனைத் தள்ளி வைக்க முடியும் என்று கூறினார். இயற்கையின் விளைவால் கல்மழை பெய்ததின் காரணமாக நெல் மணிகள் எல்லாம் உதிர்ந்துவிட்டன என்பதை நாங்கள் எடுத்துச் சொனனோம். எத்தனை லட்சம் ரூபாய் அளவுக்கு நஷ்டம் இருக்கும் என்பதைக் கணக்கெடுத்துச் சொல்வதற்காக வேளாண்மைத் துறை அதிகாரிகள் கிராமங்களில் வந்து பார்த்தார்கள். கலசப்பாக்கம் தொகுதியின் பல பகுதிகளில் இந்த நிலைமை ஏற்பட்டு இருந்தது என்றாலும் குறிப்பாக நாயுடுமங்கலம், வடபுழுதியூர்,



1978 ஆகஸ்ட் 31] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

நார்த்தாம்பூண்டி போன்ற பகுதிகளில் மட்டும் மூன்று இலட்சம் அளவுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை வேளாண்மைத் துறை அதிகாரிகள் மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் அந்தப் பகுதிகளில் என்ன நடைபெற்றது தெரியுமா? இவ்வளவு கஷ்டங்கள் ஏற்பட்டிருந்தும், ஈவு இரக்கமில்லாமல் ஒரு இல்லத்திற்கு ஜப்தி செய்வதற்காக வந்து இருக்கிறார்கள். எங்களிடம் நெல் எதுவுமில்லை, மணிலா விதை இருக்கிறது, பண்ட பாத்திரங்கள் இருக்கின்றன. இவைகளை எல் ...வேண்டுமானால் ஜப்தி செய்யுங்கள் என்று விவசாயி சொல்லி ...ர், ஆனால் ஜப்தி செய்ய வந்திருந்தவர்கள் வீட்டின் ...பார்க்கிறார்கள். அந்த இல்லத்தில் "கோத்ரெஜ்", ...ன்று இருந்திருக்கிறது. கடனைக் கொடுக்க முடியாத ...அதற்கு கோத்ரெஜ் பீரோ என்று கூறிக்கொண்டு, அந்த பீரோவை ஜப்தி செய்து கொண்டுபோய் இன்னும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையைத்தான் இன்றும் நாம் நாட்டில் பார்த்துக் கொண்டிருக்கிறோம். விவசாயிகளிடமிருந்து மனிதாபிமானத்தோடு வசூல் செய்து கொள்வோம் என்று சொன்னதும், அதற்கு முதலமைச்சர் அவர்கள் அளித்த பெரிய விளக்கத்தையும் இது போன்ற நிகழ்ச்சிகளிலிருந்து எங்களைப் போன்றவர்கள் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பாக இருந்தது என்பதை இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 12-50].

திடீரென விவசாயிகளுக்கு இப்படிப் பெரிய நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது. அதற்கு எந்தவிதமான உதவியும் இந்த ஆட்சியில் செய்யவில்லை. அப்படிப் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நீங்கள் உதவி செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே பேரவைத் தலைவராகிய உங்கள் மூலம் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போன்று இன்றைய தினம் ஆளுநர் அவர்கள் தன் உரையிலே சொல்லி இருக்கிறார்கள். உலக வங்கியிடம் 147 கோடி ரூபாய் கடனைப் பெற்று, 75 லட்சம் மக்கள் பயன் பெறுகின்ற அளவிற்கு குடிநீர்த் திட்டத்தைத் தமிழ்நாட்டிலே செயல்படுத்தப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். கிராமங்களிலே சொல்லுவார்கள், 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது' என்று. அதே போல் ஏற்கனவே நீங்கள் போட்ட திட்டங்கள் ஒவ்வொன்றும் ஏட்டுச் சுரைக்காயாக நாட்டிலே இருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.]

வட ஆற்காடு மாவட்டத்து மக்கள் மீது இந்த அரசாங்கத்திற்கு என்ன கோபம் என்று தெரியவில்லை. இன்றைய தினம் வட ஆற்காடு மாவட்டத்தில் பருவ மழை தவறி விட்டது. கிராமங்களிலே குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. நீங்கள் ஒன்று கேட்கலாம், 30 ஆண்டு ஆட்சிக் காலத்திலே ஏன் நடவடிக்கை

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1978 ஆகஸ்ட் 31

எடுக்கவில்லை, நாங்கள் வந்து ஓராண்டுக் காலம் தானே ஆயிற்று
என்று கேட்கலாம். ஏற்கனவே ஆட்சியிலே இருந்தவர்கள் பல்
வேறு வகையான திட்டங்களை நிறைவேற்றினார்கள்; கிணறுகளை
எல்லாம் வெட்டினார்கள் எங்களுடைய தானைத் தலைவர்
டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே
தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்தை ஏற்படுத்தினார்கள்.
பெரிய திட்டங்களைப் போட்டு, அவைகளை இந்த வடிகால் வாரி
யத்தின் மூலமும், சிறிய சிறிய திட்டங்களை ஊராட்சி ஒன்றியங்
களின் மூலமும் நிறைவேற்றி வந்தார்கள் கிணறுகளை ஆழப்
படுத்துவது என்றால், ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்தும்
வழித்து வந்தார்கள். ஆனால் இப்போது திடீரென்று ...
நிலைமை மாற்றப்பட்டு, வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள
அனைத்து கிணறுகளையும் வடிகால் வாரியம் மேற்கொண்டதால்,
இன்றையத் தினம் சாதாரண மக்கள் கிராமங்களிலே உள்ள
கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். இதனால்
அங்குள்ள மேநிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் தண்ணீர் இல்லை
என்றால், இதைப்பற்றி வடிகால் வாரியத்திற்கு ரிப்போர்ட் செய்யுங்
கள் என்கின்ற நிலைமை இருக்கின்றது. அங்குள்ள கிணறுகளை ஆழப்
படுத்தவில்லை என்றால், குடிப்பதற்கு குடிநீர் இல்லை. ஒரு
கெஜம் அல்லது இரண்டு கெஜம் கிணற்றை ஆழப்படுத்த வேண்டு
மென்று ஆணையாளரிடம் கேட்டால், மாவட்ட ஆட்சியாளரைப்
பார்க்க வேண்டுமென்று சொல்கிறார். இப்படிப்பட்ட நிலைமை
தான் இன்றைக்கு வட ஆற்காடு மாவட்டத்திலே இருக்கின்றது.
அதனால் குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருக்கின்றது என்பதைத் தெரி
வித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, ஆட்சி
யாளர்கள் இதற்கான நிதி ஒதுக்கி, வட ஆற்காடு மாவட்டத்தில்
உள்ள கிணறுகளை எல்லாம் ஆழப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். அதே போல். கிணறுகளை ரிப்பேர் செய்வதற்கும்
மேநிலை நீர்த்தேக்க தொட்டிகளை பழுது பார்ப்பதற்கும் ஊராட்சி
நிதியிலிருந்து செலவழிக்க உடனடியாக அனுமதி வழங்குவதற்கு
வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு ஆணையிட
வேண்டுமென்று மெத்த பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களுக்குச் செல்கின்றபோது, அங்கிருக்கின்ற தாய்
மார்கள் கூட்டம் கூட்டமாக வந்து இன்றையதினம் அங்குள்ள
குடிநீர்ப் பிரச்னைக்காகக் கண்ணீர் வடிக்கின்ற காட்சியைப் பார்க்க
வேண்டியிருக்கின்றது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.
ஏதோ நான் மட்டும் இதைச் சொல்கிறேன் என்று நீங்கள் கருத
வேண்டாம். வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே எதிர்க் கட்சியிலே
இருக்கின்ற நாங்கள் சொன்னோம். மாவட்ட ஆட்சியாளர்
ஆளும் கட்சியிலே உள்ள சட்டமன்ற உறுப்பினர்களைக் கேட்டார்
கள். அந்த ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும் வளர்ச்சி
மன்றக் கூட்டத்திலே இதை ஒத்துக் கொண்டார்கள்.
தங்களுடைய தொகுதியிலேயும் இதே நிலைமை தான் இருக்கின்
றது என்று ஒப்புக் கொண்டார்கள். இன்னும் பல்வேறு தொகுதி
களிலே இப்படிப்பட்ட பயங்கரமான சூழ்நிலை இன்றைக்கு இருக்



1979 ஆகஸ்ட் 31] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

கிறது. எனவே, இதற்கு இந்த ஆட்சியாளர்கள் உடனடியாக
தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்
திலே மெத்த பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மின் இணைப்பைப் பற்றிச் சொன்னார்கள். அப்
படிச் சொல்கின்றபோது, 10 சதவிகித லாபத்தை எதிர்நோக்கிச்
செய்யமாட்டோம், வரிசைக்கிரமமாக மின் இணைப்புத் தரப்
படுகின்றது என்று சொன்னார்கள். ஒன்றை மட்டும் நான்
இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்
கிறேன். ஏற்கனவே, நீங்கள் இந்த மாமன்றத்திலே 50,000
பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப் போகிறோம்
என்று அறிவித்தீர்கள். ஆனால், இதுவரையிலே எங்கள் பகுதி
யிலே ஒரு விவசாயி கூட மின் இணைப்புப் பெற்றதாகத் தெரிய
வில்லை. ஆனால் நீங்கள் சொல்லிக் கொண்டே இருக்கிறீர்கள்.
"சொல்வதைச் செய்யுங்கள்; செய்வதைச் சொல்லுங்கள்"
என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன். உடனடியாக விவசாயிகளுக்கு மின்
இணைப்புத் தரவேண்டும். அதே நேரத்திலே, இந்த அரசாங்கம்
எடுத்த புதிய நடவடிக்கையின் காரணமாக இன்றையதினம்
எங்கள் மாவட்டத்திலே உள்ள பல்வேறு கிராமங்கள் இருளிலே
மூழ்கி இருக்கின்றன.

நாங்கள் ஆட்சியில் இருந்தபோது கிராமங்களில் எல்லாம்
பட்டிதொட்டிகளில் எல்லாம் மின் விளக்குகளைப் போட்டோம்.
அன்றைய தினம் எதிர்க்கட்சியினர் சொன்னார்கள்— 'வெளிச்சம்
போட்டுக் காட்டிவிட்டால் போதுமா?' என்று கேட்டார்கள்.
இன்றைய தினம் எல்லாக் கிராமங்களும் இருண்ட சூழ்நிலையில்
காட்சியளிக்கின்றன. நீங்கள் எடுக்கிற நடவடிக்கைகளை சரியாகச்
செயல்படுத்த முடியுமா என்று சிந்தித்துப் பார்த்து எடுக்க
வேண்டும். ஊராட்சி ஒன்றியங்கள், மன்றங்களால் பல்புகள்
வாங்கிப் போட முடியவில்லை. அதன் காரணமாக கிராமங்களில்
விளக்குகள் எரிவதில்லை. உடனடியாக நடவடிக்கை எடுத்து
நல்ல முறையில் விளக்குகள் எரிவதற்கு ஏற்பாட்டைச்
செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்கள் உரையில் மின்சாரத்திற்கு ஏதோ புதிய
வரி வருகிறது என்ற விதத்தில் சொல்லியிருக்கிறார்கள். அருள்
கூர்ந்து இந்த அரசாங்கத்தைப் பணிவன்போடு கேட்டுக் கொள்
கிறேன்—விவசாயிகள் மிகவும் நலிந்திருக்கிறார்கள், கிராமங்
களில் இருக்கும் குடும்பங்கள் வாழ்வதா, சாவதா என்ற சூழ்
நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள். அப்படி ஏதேனும் வரி விதிப்ப
தாக இருந்தால் தயவு செய்து விவசாயிகள் மீது விதிக்காதீர்கள்,
அவர்கள் தாங்கமாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன்.

ஏற்கெனவே, கிராமங்களில் இருக்கும் ஆரம்ப சுகாதார
நிலையங்களில் மூன்றாவது டாக்டரை நியமிப்பதாகச் சொல்லி
யிருக்கிறார்கள். ஓராண்டுக் காலத்திற்கு முன்பு என்னுடைய

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1978 ஆகஸ்ட் 31

தொகுதியில் மருத்துவ அதிகாரி இல்லையென்று முதலமைச்சர் அவர்களிடமே மனுக் கொடுத்தேன். இன்றைய தேதிவரை அந்த மருத்துவ மனையில் டாக்டர்கள் போடப்படவில்லை. இது நிர்வாகச் சீர்கேடு அல்லவா என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கிராமங்களில் காடு வளர்க்கும் திட்டத்தைச் செயல் படுத்துகிறார்கள். ஏரிகளில் காடுகளை வளர்க்கிறார்கள். அதே நேரத்தில் கிராமங்களில் இருக்கிற ஆடு, மாடுகள் மேய்வதற்கு உரிய இடம் இல்லாமல் போய்விட்டது. கிராமங்களிலுள்ள ஏரிகளைக் காடு வளர்க்க எடுத்துக் கொண்ட காரணத்தால் கிராமத்திலிருக்கும் விவசாயிகள் ஆடு, மாடு போன்றவற்றை மேய்க்க இடம் இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. தவறி ஆட்டையோ மாட்டையோ விட்டு விட்டால் உடனே அந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கிற சூழ்நிலை இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஆளும் கட்சியினர் நிர்வாகத்திலே ரொம்பத் தலையிடுகிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் புதிய விவசாயக் கடன் சங்கத்தை ஒரு சங்கத்திலிருந்து பிரிக்கிறார்; அமைப்பாளர் வருகிறார்; பெரிய கட்டடம் சாங்ஷன் ஆகிவிட்டது என்று சொல்லி அழைப்பிதழ்—அவருடைய தலைமையில் கால்கோள் விழா: உணவு அமைச்சர் என்ன காரணத்தாலோ அன்று வரவில்லை. சாங்ஷன் ஆகாத கட்டடத்திற்கு சாங்ஷன் ஆகிவிட்டதாக அழைப்பிதழ். அவர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகிய என்னையும் விட்டு விட்டார்; ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரையும் விட்டு விட்டார். அவ்வாறு விட்டு விட்டு இப்படிப்பட்ட நிகழ்ச்சியை நடத்துகிறார்.

நீங்கள் காந்தி-அண்ணா வழியில் நடப்பதாகச் சொல்லுகிறீர்கள். நான் சந்தேகிக்கவில்லை. ஆனால் நீங்கள் சொல்லுவது நாட்டில் நடைபெறவில்லை. இன்றையதினம் நிர்வாகம் ஸ்தம்பித்து விட்டது. கிராமங்களில் பரவலாகத் திருட்டுகள் அதிகமாகிவிட்டன. ஊழல்கள் மலிந்து விட்டன. லஞ்சத்தை ஒழிப்போம் என்று சொன்னீர்கள். உங்கள் ஆட்சியில் லஞ்சத்தின் பர்சன்டேஜ் உயர்ந்திருக்கிறது என்பதை மறுக்கவும் முடியாது, மறைக்கவும் முடியாது என்பதை இந்த நேரத்தில் மெத்த பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கள்ளச் சாராயம் எல்லோரும் சொல்லுகிறபடி ஆறாக ஓடுகிறது. நடவடிக்கை இல்லை. கிராமங்களில் சிறு சிறு கோவில்களில் உள்ள அறங்காவலர்களை எல்லாம் நீக்கி மணியகாரரை அறங்காவலர்களாக நியமித்தீர்கள். சிறு சிறு கோயில்களில் ஓராண்டுக் காலமாக விளக்கு கூட வைக்கப்படுவதில்லை. இவை எல்லாம் உங்கள் ஆட்சியில் நடைபெறு



1978 ஆகஸ்ட் 31] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

கின்றன என்று சொல்லி இவற்றைக் களைய நடவடிக்கை எடுங்கள் என்று கேட்டு சந்தர்ப்பம் அளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

[பிற்பகல் 1-00]

திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுவதற்கு வாய்ப்பினை நல்கியமைக்கு முதற்கண் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய சமூகப் பொருளாதார வளர்ச்சியில் வேகத்தின் அடிப்படையிலே அது கிராம மக்களுக்குச் செல்வதாக, வாழ்க்கையின் அடித்தளத்திலே இருக்கும் மக்களுக்குச் செல்ல வேண்டுமென்ற அடிப்படைக் கொள்கையை இந்த அரசு மையமாக வைத்திருக்கிறது என்பதை இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருப்பது சாலப் பொருத்தமாக இருக்கிறது. பொருளாதார சுதந்திரத்தை ஒவ்வொருவரும் பெற, சுவைக்க, பல்வேறு முயற்சிகளில் தமிழக அரசு ஈடுபட்டு, திட்டங்கள் பலவற்றை, அதிலும் குறிப்பாக சமுதாயத்தில் பிற்பட்டோர் கிராமப் பகுதிகளில் வாழ் மக்கள் ஆகியோர்களுக்குப் பயனளிக்கும் வகையில் செயல்படுத்தி வருவதுபற்றிக் குறிப்பிட்டிருப்பது வரவேற்கத் தகுந்த ஒன்றாகும்.

சென்ற ஆண்டு விவசாய விளைபொருள் உற்பத்தியில், நெல், சிறு தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், கரும்பு போன்ற பல்வேறு விளைபொருள்களிலும் உயர்ந்த உற்பத்திச் சாதனைகளை நமது மாநிலம் எய்தியுள்ளது பாராட்டுவதற்கு உரிய ஒன்றாகும். விவசாய விளைபொருட்களை நன்கு உற்பத்தி செய்வதற்கு ஏற்றவண்ணம் அவைகளுக்கு நியாயமான விலை கொடுப்பதன் அவசியத்தை அரசு உணரத் தவறவில்லை என்றும் முக்கியமாக நெல் விளைப்போருக்கு நியாயமான அடிப்படையில் கொள்முதல்விலை கிடைக்கவில்லை என்று வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிற நேரத்திலே நியாயமான விலை நிர்ணயிக்கப்பட வேண்டும் என்பதை இந்த அரசு மத்திய அரசுடன் பலமுறை தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது என்று குறிப்பிட்டிருப்பதற்காக நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நியாய விலைக் கடைகளைக் கிராமங்கள் தோறும் திறக்க வேண்டும் என்ற அடிப்படையிலே நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகவும் கூட்டுறவின் மூலமாகவும் நியாய விலைக் கடைகளைத் திறந்து மக்களுக்கு அத்தியாவசியப் பண்டங்களை வழங்குவது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

விவசாயத் தொழிலாளர்களுக்கு விவசாயம் இல்லாத காலங்களில் அவர்களுடைய வாழ்வில் வளம் கொழிக்கச் செய்ய வேண்டுமென்ற முறையிலே புதிய முறையிலே பால்

பெருக்குத் திட்டம் உண்டாக்கி பால் சேகரிக்கும் முறையில் இப்போதுள்ள அளவு மூன்று மடங்காக அதிகரிக்கும் என்று குறிப்பிட்டுள்ளது வரவேற்கத்தகுந்த ஒன்றாகும்.

மூலப் பொருட்களை மட்டும் உற்பத்தி செய்யும் இடங்களாக கிராமங்களும், அவற்றிலிருந்து மற்றப் பொருட்களை உற்பத்தி செய்யும் இடங்களாக நகரங்களும் இருக்கும் நிலையை மாற்றி கிராமங்களும் வளர்ச்சி அடைய இந்த அரசு வகுத்துள்ள முழுக் கொள்கையையும் வேலை வாய்ப்புக்கள் பெருமளவில் பெருகுவதற்கும் வேலையில்லாத ஆயிரமாயிரம் மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கும் இந்த உரையிலே முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பது எல்லோராலும் பாராட்டப்படக் கூடியதாகும்.

குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் கிராம மக்களுக்கு நல்ல குடிநீர், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படவேண்டுமென்ற முறையிலே இந்த அரசு நல்ல முயற்சிகளை மேற்கொண்டிருக்கிற இந்த நேரத்தில் நகரத்தை இந்த அரசு புறக்கணிக்கிறது என்று புறங்கூறித் திரிந்த புல்லர்களுக்கும், பொய்யையே நிரந்தர வாழ்க்கையாக்கிக் கொண்டிருக்கின்றவர்களுக்கும், சூடு கொடுக்கின்ற வகையிலே ஆந்திர மாநிலத்தின் கிருஷ்ணா ஆற்றிலிருந்து 5 ஆயிரம் கன அடி தண்ணீரைக் கொண்டுவருவதற்கு அனுமதித்த ஆந்திர முதலமைச்சரைப் பாராட்டியிருப்பதும் எல்லோரும் வரவேற்க வேண்டிய ஒன்றாகும்.

அதேபோன்று இந்த நாட்டிற்கு உழைத்த திரு காமராசர் அவர்களின் நினைவாக மதுரையில் உள்ள பல்கலைக் கழகத்திற்கு அவரது பெயரிடப்பட்டு இருப்பதும், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் நினைவாக பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் திறக்கப்பட இருக்கிறது என்பதும், அது மட்டுமல்ல, வைக்கம் வீரர், வெண்தாடி வேந்தர், தந்தை பெரியார் அவர்களின் நினைவாக மத்திய அரசு தபால் தலைகள் வெளியிட ஏற்பாடு செய்திருப்பதும் தமிழக வரலாற்றிலே சரியான திருப்பத்தை ஏற்படுத்துகின்ற நல்ல நிகழ்ச்சிகளாகும்.

காந்தியடிகள் கனவு கண்டதற்கேற்பவும், அறிஞர் அண்ணா அவர்கள் விழைந்ததற்கொப்பவும், நமது மாநிலத்தை இலஞ்ச ஊழலற்ற மாநிலமாக உருவாக்க அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அதனுடைய ஒப்பற்ற தானைத் தலைவர் தமிழக முதல்வர், புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் ஊழல்களைக் களைவதற்காக எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சிகள் பாராட்டுக்குரியனவாகும். எவ்வளவு துரிதமாகச் செயல்பட வேண்டுமோ அவ்வளவு துரிதமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இங்கே பேசிய உறுப்பினர் இப்போது ஊழலின்





பர்சன்டேஜ் கூடியிருக்கிறது என்று சொன்னார். அது எந்த அளவிற்குப் பொருத்தம் என்று தெரியவில்லை. கடந்த காலத்திலே மருத்துவக் கல்லூரி தேர்விலே எத்தனை ஊழல்கள் நடந்திருக்கின்றன என்பதையும் இப்போது மருத்துவக் கல்லூரி தேர்வின் முடிவுகளைப் பார்க்கிறபோது பர்சன்டேஜ் கூடியிருக்கிறதா குறைந்திருக்கிறதா என்பதைக் கண்கூடாகப் பார்க்க வேண்டும்.

இதற்கு ஓர் உதாரணத்தைச் சொல்வது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி பீடத்தில் அமர்வதற்காகத் தன்னுடைய தேக்குமரத் தேகத்தை ஈந்து உயிர் நீத்த பூலாவாரி சுகுமாரன் அவர்களுடைய சகோதரி ஒருசில மார்க்குகள் குறைந்திருந்ததன் காரணமாகத் தனக்கு இடம் கிடைக்காத காரணத்தால் கண்ணீரும் கம்பலையுமாக நின்று கொண்டிருந்த காட்சியையும் என் மனக்கண் முன் கொண்டு வந்து பார்க்கிறேன். அப்படி தன்னுடைய கட்சிக்காரர்களாக இருந்தாலும்கூட, தன்னுடைய கட்சியிலே எந்தவொரு உயர்ந்த பதவியை வகித்துக் கொண்டிருந்தாலும்கூட அரசு பாரபட்சமற்ற முறையில் நடந்து கொள்கிறது. அடிமட்டத் தொண்டனுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று எவ்வளவோ உரிமையோடு அந்தக் குடும்பத்திற்கு உதவி செய்திருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யவில்லை. ஆனால் கடந்த கால வரலாற்றிலே இப்படியெல்லாம் நடந்ததா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எவ்வளவு ஆயிரமாயிரம் ரூபாய்களை அள்ளித் தர வேண்டும்? ஒரு மருத்துவக் கல்லூரி இடத்திற்காக எத்தனை ஆயிரம் ரூபாய் செலவிடப்பட வேண்டியிருந்தது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். கட்சியின் வளர்ச்சியைக் கருதி அரசாங்கம் கட்சிக்காரர்களுக்கு உதவி செய்து விடலாம் என்று இந்த அரசு நடந்து கொள்ளவில்லை. நியாயமான அடிப்படையில், நல்லதொரு அடிப்படையிலே, நேர்மையான ஆட்சியைத் தமிழகத்திலே கண்டு கொண்டிருக்கிறார்கள் மக்கள்.

அதைப்போல மத்திய அரசாங்கத்திடமிருந்து மாநிலங்களுக்கு வர வேண்டிய மானியத்தை அதிகமாக உயர்த்தித் தர வேண்டுமென்ற கோரிக்கையை கவர்னர் உரையிலே காண்பித்திருப்பது சாலச் சிறந்ததாகும். மதுவிலக்குத் திட்டத்தினால் ஏற்பட்டிருக்கின்ற நஷ்டயீட்டைப் பெறுகின்ற வகையில், பாதித்தொகை மட்டுமல்ல, முழுத் தொகையாகப் பெறுவதற்கு எல்லாக் கட்சிகளின் உறுதுணையும் இருக்கும் என்ற நம்பிக்கையை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுடைய இலட்சியத்திற்கொப்ப ஏழைகளினுடைய வாழ்விலே மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் வகையிலே பல்வேறு கைத்தொழிற்கூடங்களை நிறுவி அதன் மூலம் வேலைவாய்ப்பைத் தருவது, தாழ்த்தப்பட்ட சமு

தாய மக்கள் மற்ற சமூகத்தினரின் மத்தியிலே நல்ல முறையில் தலை நிமிர்ந்து வாழ்கின்ற வகையிலே வழி செய்வது ஆகிய செயல்களின் மூலம் இந்த அரசு பீடுநடை போட்டுக்கொண்டிருக்கிறது.

மொத்தத்தில் ஆளுநர் அவர்களின் உரையானது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு செய்த, செய்யக்கூடிய பிரச்னைகளின் ஆக்கபூர்வமான பிரதிபலிப்பேயாகும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

இன்றைக்கு விவசாயப் போராட்டம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பிரச்னையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே அவர்களுடைய கருத்துக்களைப் பல்வேறு கோணங்களிலேயிருந்து எடுத்துச் சொன்னார்கள். இன்றைக்கு விவசாயத்திற்காகப் பாடுபடுகிறவர்கள் எல்லாம் விவசாயப் போராட்டத்தை நடத்துகிறார்களா என்றால் இல்லை. கிராமங்களிலே சென்று பார்த்தால், கிராமத்திலே உள்ள சாதாரண நடுத்தர விவசாயிகள் இந்தப் போராட்டத்தில் ஈடுபடவில்லை. இலட்சக்கணக்கிலே வங்கிகளிலும், கூட்டுறவு வங்கிகளிலும் கடன் வைத்திருப்பவர்கள் அரசை ஸ்தம்பிக்க வைக்கும் வகையிலே இந்த முயற்சியிலே ஈடுபட்டு விவசாயப் போராட்டம் என்று சொல்லி நடத்தியிருக்கிறார்களே தவிர உண்மையான விவசாயிகள் இதை நடத்தவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இந்த ஆளுநர் உரை, தமிழகத்தினுடைய ஏழை எளியவர்களும், கிராம மக்களும் அன்பும், பாசமும் கொண்ட தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டுவதற்குரிய ஒன்றாக இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

இந்த ஆளுநர் உரையின்மேல், பல்வேறு கட்சியைச் சேர்ந்தவர்களும் பல்வேறு கருத்துக்களை இங்கே தெரிவித்திருந்தாலும் இறுதியாக நான் சொல்லிக்கொள்வது, இந்த ஓராண்டுக்கால ஆட்சியிலே தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் சரித்திரத்தின் பக்கங்களுக்கு சாகாத வரத்தைத் தேடித் தந்திருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. ஆகவே, தொடர்ந்து இந்த நல்லாட்சி நடைபெற அன்புள்ளம் கொண்ட எதிர்கட்சிகள் எல்லோரும் ஒத்துழைப்பார்கள் என்று எதிர்பார்த்து வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன்.

[பிற்பகல் 1-10]

திரு. ஓ. சோ. வேலுச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நேற்று, இந்த மாமன்றத்தில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின்மேல் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.





பொதுவாக, இந்த ஆளுநரின் உரையை, நாம் கூர்ந்து படித்துப் பார்த்தால், வள்ளுவர் சொன்னதுதான் ஞாபகத்திற்கு வருகிறது.

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்

என்பதற்கொப்ப நல்ல அம்சங்களைவிட, குறைபாடுகள்தான் இதிலே அதிகமாக உள்ளது. ஆகவே, இந்த ஆளுநர் உரையை எடுத்துக்கொண்டால் இன்று தமிழகத்தினுடைய முக்கிய பிரச்னையாக இருப்பது விவசாயிகளுடைய பிரச்னை. இந்த விவசாயிகளுடைய பிரச்னைக்கு எப்படித் தீர்வு காண்பது அல்லது இந்த விவசாயிகளுடைய பிரச்னையை எப்படி அணுகுவது என்பதற்கொப்ப ஒரு நல்ல விளக்கம் ஆளுநர் உரையில் கிடைக்கும் என்று எதிர்பார்த்தோம், ஏமாந்தோம்.

மானாவாரி விவசாயிகளைப் பொருத்தமட்டிலே தென்மாவட்டங்களிலே மானாவாரி விவசாயிகள்தான் அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கு நியாய விலை கிடைக்கவில்லை. உதாரணமாக, பருத்தியைப் பெரும்பான்மையான விவசாயிகள் உற்பத்தி செய்கிறார்கள். ஒரு குவிண்டால் பருத்தி, குறிப்பாக, லட்சுமி காட்டன் பருத்தி, ரூ. 200 அல்லது ரூ. 250-க்குத்தான் போகிறது. ஆகவே, விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள், நஷ்டம் அடைகிறார்கள். இந்தக் குறைபாட்டை எப்படி நீக்குவது ? மத்திய அரசாங்கம்தான் நீக்க வேண்டும். மத்திய அரசாங்கத்தை மாநில அரசு எந்த அளவு தட்டிக் கேட்கிறது என்பதைத்தான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன். இந்த லட்சுமி காட்டன் கருங்கண்ணியைப் பொறுத்தவரையில், காங்கிரஸ் கட்சி மத்தியிலே ஆட்சியிலேயிருந்த காலத்திலே, அந்தப் பருத்தியின் மூலமாக நூற்கக்கூடிய 20-ஆம் நெம்பர் நூலை ஒவ்வொரு மில் முதலாளியும் கணிசமான அளவு நூற்க வேண்டுமென்று வற்புறுத்தி வந்தார்கள். ஆனால், இப்பொழுது வற்புறுத்தவில்லை. ஆகவே, அதற்குக் கிராக்கி இல்லாமல் போய்விட்டது. இப்பொழுது நூற்காததாலே கைத்தறி உற்பத்தி செய்கிற கருங்கண்ணி லட்சுமி காட்டனுக்கு வேலையில்லாமல் போய்விட்டது.

பஞ்சு விலை, 1977 ஜூலையிலே ஒரு கண்டி ரூ. 4,700-க்கு விற்றது. 1978 ஜூலையிலே ரூ. 3,700. ஆகவே, மில் முதலாளிகளுக்கு ஒரு கண்டியின் பேரிலே ரூ. 1,000 இலாபம் கிடைக்கிறது. ஆனால், பருத்தியை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்கு இலாபம் எதுவும் கிடைக்கவில்லை. ஆகவே, விவசாயிகளுக்கு விரோதமாகவும் பஞ்சாலை முதலாளிகளுக்குச் சாதகமாகவும் இருக்கக்கூடிய மத்திய அரசைத் தமிழக அரசு தட்டிக் கேட்காமல் இருக்கிறது. ஆனால், இங்கே ஆளுநர் உரையிலே, நாங்கள் மத்திய அரசை வலியுறுத்தி வருகிறோம் என்று சொல்கிறார்கள். அதனைப் பார்க்கின்றபொழுது எந்த அளவிலே வலியுறுத்தி வருகிறார்கள். கிராமத்திலே ஒரு பழ

மொழி சொல்வார்கள், 'பாப்பாத்தி அம்மா உங்களுடைய தோட்டத்திலே மாடு மேய்கிறது' என்று சொல்வது போல் தான், தமிழக அரசு நிலைமையிருக்கிறதே தவிர, உண்மையிலே வலியுறுத்தியிருந்தால், கொள்கையை மாற்றியிருப்பார்கள். மில் முதலாளிகளுக்கு அனுசரணையாக இருக்கிற கொள்கையை மாற்றியிருப்பார்கள். விவசாயிகளுக்கு விரோதமாக இருக்கிற கொள்கையை மாற்றியிருப்பார்கள். ஆனால், தமிழக அரசு அதைப் பிரகடனப்படுத்தவில்லை, ஆளுநர் உரையிலும் அதைப்பற்றிச் சொல்லவில்லை.

விவசாயிகளைப் பொறுத்தவரையில், மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. வரதராஜன் அவர்கள், ஏதோ எங்களுடைய கட்சி, காங்கிரஸ் கட்சி, சர்வாதிகாரக் கட்சி என்றும், மார்க்சிஸ்ட் கட்சி ஜனநாயகக் கட்சி என்றும், நாராயணசாமி போராட்டத்துக்கும் தங்களுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லையென்றும் சொன்னார்கள். ஆனால், சுப்பு அவர்கள், தொடர்பு இருக்கிறது என்று சொன்னார்கள். நான் குறிப்பாகச் சொல்ல முடியும். நெல்லை மாவட்டத்திலே, ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் சென்னப்ப ரெட்டியார் தலைமையிலே விவசாயப் போராட்டம் நடந்தது. அதிலே, மார்சிஸ்ட் கட்சிக்காரர்களும் கலந்து கொண்டார்கள்; எங்களை சர்வாதிகாரக் கட்சி என்று சொல்கிறார்கள், நாங்களும் பங்கு கொண்டோம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் பங்கு கொண்டது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தவிர, எல்லாக் கட்சிக்காரர்களும் கலந்து கொண்டார்கள். அரசின் அணுகு முறை சரியல்ல என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் சொன்னார்கள்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் மாண்புமிகு சங்கரய்யா அவர்கள், இந்திரா காந்தி ஆட்சி, சர்வாதிகார ஆட்சி என்று சொல்கிறார். சர்வாதிகாரத்தைப் பொறுத்தவரையில் அங்கே, ஃபண்டமன்டல் ரைட்ஸ் இருக்கக் கூடாது. கான்ஸ்டிடுயூஷனல் ரைட் இருக்கக் கூடாது. தேர்தல் நடத்தக் கூடாது. ஒரு கட்சிக்கு மேல் இன்னொரு கட்சி இருக்கக்கூடாது. உலக சரித்திரத்தைப் படித்துப் பார்த்தால், கம்யூனிஸ்ட் கட்சி சித்தாந்தம் கடைப்பிடிக்கப்படுகிற நாடுகளில், அவர்களுடைய அரசியல் சட்டத்திலே ஃபண்டமென்டல் ரைட்ஸ் கிடையாது, அங்கே ஜனநாயக முறையிலே பல்வேறு கட்சிகள் செயல்பட உரிமையும் கிடையாது, தேர்தலும் கிடையாது.

ஆகவே இந்த நிலைமைகளை வைத்துப் பார்த்தால் காங்கிரஸ் கட்சி சர்வாதிகாரி அல்ல. ஆனால் உங்களுடைய கட்சி சர்வாதிகார கட்சியா அல்லது ஜனநாயக கட்சியா என்பதை நீங்களே முடிவு செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.





கூட்டுறவுத் துறையை எடுத்துக் கொண்டால், அது வளர வேண்டும் என்று அதிகமான நியாய விலைக் கடைகளை ஏற்படுத்த வேண்டுமென்று விரும்புகிறோம் என்று சொல்லுகிறார்கள். கூட்டுறவுத் துறையிலேயும் கூட்டுறவுப் பண்டகசாலை அமைப்பதற்கு அரசு உத்தரவு ஒன்று இருக்கிறது. 2 லட்சம் ரூபாய்க்கு மேல் வியாபாரம் நடந்தால்தான் அந்த இடத்தில் கூட்டுறவுப் பண்டகசாலை அமைப்பதற்கு உத்தரவு கொடுக்கப்படும் என்று அரசு உத்தரவு இருப்பதாகச் சொல்லுகிறார்கள். இப்படி ஒரு உத்தரவிருந்தால் எப்படி இந்தப் பண்டகசாலைகளைக் கிராமப்புறங்களில் ஏற்படுத்த முடியும் என்பதைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து விழுப்புரம் கலவரம் விஷயமாக ஆளுநர் குறிப்பிட்டிருக்கிறார். தமிழகத்தில் இந்த விழுப்புரம் சம்பவம் நம்முடைய நாகரீகத்தையே பாதிக்கக்கூடியதாக இருக்கிறது. அதைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்றால் அது நீதி விசாரணையில் இருப்பதாகச் சொல்வார்கள். எனவே நீதி மன்ற விசாரணையில் இருக்கும் விவரத்தைப் பற்றிப் பேசாமல், இது நிகழக் காரணமாக இருந்த அட்மினிஸ்ட்ரேடிவ் லாப்ஸ் பற்றிச்சொல்லித்தான் ஆக வேண்டும். ஜூலை 24, 25, 26 தேதிக்கு முன்பு நீண்ட காலமாகவே சிறு சிறு சச்சரவுகள் விழுப்புரத்திலே நடந்து கொண்டிருந்தன. நீங்கள் பிரிவென்டிவ் ஆக்ஷன் எடுக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீதி விசாரணை இருக்கிறபோது அதிகாரிகள் யார், எந்தக் கட்சி அல்லது தனிப்பட்டவர்கள்யார் என்றெல்லாம் சொல்வது நடக்கின்ற நீதி விசாரணைக்குப் பாதகம் ஏற்படுத்லாம்.

*திரு. க. அன்பழகன் : நீதி விசாரணை நடைபெறுகிற இந்த விஷயத்தைப் பற்றிய செய்திகள் பத்திரிகைகளிலேயும், ஏராளமான அளவில் வந்திருக்கின்றன. நாட்டிலேயும் பரவலாகப் பேசப்பட்டுள்ளன. அந்தச் செய்திகளை இந்த அவையிலே பேசுவதனால் நீதி விசாரணைக்கு எந்தவிதமான குறையும் உண்டாகாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொல்வது அதிகாரிகளால் அந்த நிகழ்ச்சி ஏற்பட்டது. அதிகாரிகளின் கவனக் குறைவால் ஏற்பட்டது என்று சொல்லுகிறபோது விசாரணைக்குக் குந்தகம் நிச்சயமாக ஏற்படும்.

திரு. மு. கருணாநிதி : நீதி விசாரணை நடக்கிறபோது அதைப் பற்றிப் பேசினால் விசாரணைக்குக் குந்தகம் விளையும் என்று சொல்கிறவர்கள், சில அதிகாரிகளைக் குறை சொல்கின்ற வகையிலே தெரிவிக்கப்படுகின்ற கருத்தைச் சொன்னாலும் விசாரணைக்குக் குந்தகம் விளையும் என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட பொது

வான கருத்தைக் கூறுவதில் தவறு இருப்பதாகச் சொல்ல முடியாது. நீதி விசாரணை நடைபெறும்போதுதான் எங்கள் மீது கிரிமினல் வழக்கு போடப்பட்டது என்பதையும் மறந்து விடக் கூடாது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : நீதி விசாரணை நடந்து கொண்டிருந்தாலும் கூட, இன்ன காரணத்திற்காகத்தான் இந்த நீதி விசாரணை நடந்து கொண்டிருக்கிறது என்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. குறிப்பிட்டாலும் உள்ளே புகுந்து இன்ன அதிகாரிகள்தான் என்று குறிப்பிட்டுச் சொல்லக் கூடாது. அதிகாரிகள் சரியாக நடக்கவில்லை, நடவடிக்கை எடுக்க வில்லை என்று நம்முடைய சட்டசபையிலே பேசக்கூடாது என்று சொல்ல முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறிப்பிடுவது தவறு தான். அதனால் நீதி விசாரணைக்குக் குந்தகம் விளையும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : அதிகாரிகள் என்று பொதுவாகச் சொல்லலாம்; குறிப்பிட்ட அதிகாரிகள் என்று சொல்லக்கூடாது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, என்னைப் பொறுத்தவரையில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இதுபோன்ற சம்பவங்களிலே அந்த 'பாக்ட்ஸ்' உண்மைகள் சொல்லப்படலாம். அதை மறுக்கப்போவதில்லை. ஆனால் அவைகளுக்கு யார் காரணம் என்று போகிற இடத்திலேதான் தகராறு வருகிறது. யார் காரணம் என்றுதான் நீதிபதி விசாரித்துக் கொண்டிருக்கிறார். ஆகவே தான் facts of the case can be brought about காரணங்கள் சொல்லுகிறபோது நீதிமன்ற விசாரணைக்குக் குந்தகம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

[பிற்பகல் 1-20]

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, நீதி விசாரணை 25-ம் தேதிக்குப் பிறகு என்ன நடந்தது என்பதை பற்றித்தான் போடப்பட்டு இருக்கிறது. நாங்கள்கூட எங்கள் கட்சியின் சார்பில் ஆளுநருக்கும், முதலமைச்சருக்கும், அரசாங்கத்திற்கும் தந்தி அனுப்பியிருக்கிறோம். 23—24ம் தேதிகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டு இருக்கிறோம். ஆனால் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. எனவேதான் 23—24ம் தேதி நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேசினால்அது விசாரணையைப் பாதிக்காது என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நான்கூட அந்த ஜி.ஓ. வைப் பார்த்தேன். ஆனால் இப்போது அது என்னிடத்தில் இல்லை. நடந்த சம்பவங்கள், அதோடு 'லீடிங் டு' என்று இருக்கிறது. ஆகவே, அந்த இரண்டு தேதிகளும் அதில் வரும். அதற்கு முந்திய சம்பவங்களை விசாரிக்கக்





கூடாது என்று இல்லை. அந்த ஜி.ஓ. வில் உள்ள டர்ம்ஸ் ஆப் ரெபரென்ஸ் படித்துப்பார்த்தால் அந்தத் தேதிகளும் அதோடு இணைந்து இருக்கிறது என்று தெரியும். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் சொன்னது போல், எதிர்க்கட்சிப் பத்திரிகையில் அந்தத் தேதிகள் விடுபட்டுப் போய் இருக்கிறது என்று போடப் பட்டு இருப்பதைப் பார்த்த உடனே, அந்த ஜி.ஓ. வை வாங்கிப் பார்த்தேன். அந்த ஜி.ஓ. விலே "லீடிங் டு தோஸ் இன்சிடென்ஸ்" என்று வாசகம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : பின்னர் ஏன் அரசாங்கத்திற்கு 22-ம் தேதி என்று குறிப்பிட்டுப் போட குந்தகம் இருக்கிறது என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை முன்னுள்ள பிரச்சினை அல்ல அது. உட்காருங்கள்.

திரு. துரை முருகன் : என்ன கஷ்டம் அப்படிப் போடுவதில் என்று கேட்டேன். அவ்வளவுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது உங்கள் யோசனை. இப்போதுள்ள பிரச்சினை அவர் பேசியதை அனுமதிக்கலாமா, வேண்டாமா என்பது தான்.

திரு. க. சுப்பு : அது குறித்து ஆளுநர் உரையில் குறிப்பிடப் பட்டு இருக்கிறது. "இப்படிப்பட்ட நிலைமைகளை உருவாக்கு கின்றவர்கள் எப்படிப்பட்ட உயர்ந்த பதவிகளில் இருந்தாலும் சரி, எப்படிப்பட்ட வசதியும் செல்வாக்கும் பெற்றவர்களாக இருந்தாலும் சரி, சமூக விரோதத் தீமைகளில் ஈடுபடுவார்களானால், தயவு தாட்சண்யம் இன்றி அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்" என்று ஆளுநர் அவர்களே தன்னுடைய உரையில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆகவே, அந்தச் சம்பவம் குறித்துப் பேசவில்லையென்றால் ஆளுநர் அவர்களுக்கு எப்படி நன்றி தெரிவித்ததாக ஆக முடியும். ஆகவே, அப்படிப்பட்ட விவரங்களைச் சொல்லாமல் அது குறித்து எப்படிப் பேச முடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுப்படையாக ஆளுநர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். இங்கே அவர்கள் பேசுகிற நேரத்தில் அதிகாரிகள் சரியான கவனம் செலுத்தவில்லை, சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்று விளக்கம் சொல்லுகிற போது, அதிலே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் யார் என்பதை நாம் ஊகித்துக்கொள்கிறோம். அந்த நிலை வரும். அமைச்சர் அவர்கள்

சொன்னது போல் 25-ம் தேதி, அதை ஒட்டி நிகழ்ச்சிகள் என்கிறபோது 23-24-ம் தேதியும் அதில் வரும். ஆகவே, அதிகாரிகளைப் பற்றியோ அவர்களுடைய நடவடிக்கைகளைப் பற்றியோ இங்கே சொல்ல வேண்டாம். அது நீதி விசாரணைக்குக் குந்தகமாக இருக்கும் என்பதால் அது குறித்துச் சொல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: சென்னையில் கிண்டியில் நடைபெற்ற கறுப்புக்கொடி போராட்டம் பற்றி போடப்பட்ட நீதிவிசாரணையில் துப்பாக்கிப் பிரயோகத்தைப் பற்றி மாத்திரம் விசாரிக்கப்படும் என்று போடப்பட்டது. அமைச்சர் சொன்னதுபோல், அதை ஒட்டிய நிகழ்ச்சிகள் என்று போடப்படவில்லை. ஆனால், இப்போது 25-ம் தேதி என்று சொல்லிவிட்டு, அதை ஒட்டிய நிகழ்ச்சிகள் என்றும் போடப்பட்டு இருப்பதால், 23-24-ம் தேதி நிகழ்ச்சிகளும் சேரும் என்று அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்தார்கள். எதிர்க்கட்சிகளைச் சார்ந்த ஆயிரக்கணக்கான தோழர்கள் அறிக்கை, தந்தி கொடுத்தும் கூட இந்த விளக்கத்தை இந்த அரசாங்கம் அளிக்காதது வருந்தத்தக்கது. அப்படி அளித்து இருந்தால் சாட்சியங்களாகச் சென்றவர்கள் அந்த தேதிகளில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றிச் சொல்வதற்கு வசதியாக இருந்து இருக்கும்.

திரு. என். சங்கரய்யா: இந்த பிரச்சனையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு யார் பொறுப்பு என்று தனிப்பட்ட முறையில் குறிப்பிடாமல், இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்து இருக்கின்றன என்பதைக் குறித்துப் பேசுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும். ஆகவே, அதற்கான முறையில் வாய்ப்புக் கொடுத்தால் மீண்டும் அம்மாதிரியான நிகழ்ச்சிகள் தமிழ் நாட்டில் நடக்காமல் இருப்பதற்கு அரசுக்கு வழிமுறைகள் சொல்வதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, அப்பிரச்சனை குறித்து பேசுவதற்கு உரிமை இருந்தால்தான் நல்லது என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படி உரிமை கொடுக்கப்பட்டால் ஒரு உறுப்பினர் அதிகாரிகளைக் குறை கூறிப் பேசுவார், இன்னொரு உறுப்பினர் ஒரு கட்சியைக் குறிப்பிட்டுச் சொல்வார். இப்படி விளைவுகள் சென்று கொண்டே இருக்கும். ஆகையால், விசாரணைக்குக் குந்தகம் வரும் சூழ்நிலை உருவாகும். ஆகவே, தான், அது குறித்துப் பேச வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஒ. சோ. வேலுச்சாமி: இந்த விழுப்புரம் சம்பவத்தைப் பற்றிச் சொல்கிறபோது, ஜூலை மாதத்திற்கு முன்பே முன்ஜாக்கிரதையாக சில நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுத்திருந்தால் வந்து



இருக்காது என்பதைத்தான் தெரிவித்தேன். ஜூலை மாதத்திற்கு முன்பே, அரிசன மக்களுக்கும் அரிசனங்கள் அல்லாதவர்களுக்கும் ஆங்காங்கு சிறு சிறு சம்பவங்கள் நடந்து இருக்கின்றன என்று எல்லோரும் சொல்கிறார்கள். அப்படி நிகழ்ச்சிகள் நடந்து இருக்கின்றன என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். அப்படி சிறு சிறு சம்பவங்கள் நடந்தபோது காவல் துறை பாதிக்கப்பட்டவர்களுக்குப் பாதுகாப்பு கொடுத்தார்களா, சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட நடவடிக்கை எடுத்தார்களா என்பதுதான் என்னுடைய கேள்வி. "கிரிமினல் பிரோசீஜர் கோட்" குற்றவியல் நடைமுறைச் சட்டம் 107 பிரிவின்படி சமூக விரோத சக்திகள்மீது வழக்குப் போட்டார்களா, ஜாமீன் வழக்கு தொடர்ந்தார்களா, 110-வது பிரிவின்படி கூட சமூக விரோதிகளின் மீது ஜாமீன் வழக்குப் போட்டு இருக்கலாம். அப்படி ஒரு மாதத்திற்கு முன்பே நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்குமானால் நிச்சயம் இந்தச் சம்பவம் வந்து இருக்காது. ஆகவே, சட்டம் ஒழுங்கு விழுப்புரத்தில் காப்பாற்றப்படவில்லை என்று சொல்லிக் கொள்கிறேன். அதனால்தான் இந்தக் கலவரம் ஏற்பட்டு இக்ருகிறது என்றும் சொல்கிறேன்.

டாக்டர் அம்பேத்கார் அவர்கள் 1928-ல் முதல் வட்டமேஜை மாநாட்டில் பேசும்பொழுது ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஆங்கிலேயர்களைப் பார்த்து, "நூற்று ஐம்பது ஆண்டுகளாக நீங்கள் ஆட்சி செய்கிறீர்களே, எங்களைப் பொறுத்தமட்டில் நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்; அரிசனங்களைப் பொறுத்த வரையில் நீங்கள் ஒன்றுமே செய்யாமல் பாராமுகமாக இருந்து விட்டீர்களே" என்று சொன்னார்கள். அப்படிச் சொல்லும் போது, "It was not merely a case of indifference but it was sheer incomptence." என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்போல் தமிழக அரசைப் பொறுத்த வரையில் "இன்டிஃப்ரன்ஸ்,, மட்டுமல்ல; "இன்காம்பிடன்ஸ்" என்று சொல்ல விரும்புகிறேன்.

நெல்லை மாவட்டத்திலே அண்ணா தி.மு.க அமைப்பாளர் பொய் வழக்குகள் போடுகிறார். அண்ணா தி. மு. க. வினரின் நிர்பந்தத்தினால் பல வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. அதற்கு ஒரு உதாரணத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். உவரி காவல் நிலையத்தில் ஒரு கேஸ் 203/78 பதிவு செய்திருக்கிறார்கள். அந்தக் கேஸ் யார் மீது என்றால காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர்—இராதாபுரம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. கருப்பையா அவர்கள் மீதும் மற்றும் 16 பேர்கள்மீதும் போட்டிருக்கிறார்கள். எஃப். ஐ. ஆர். போட்டதில அந்தச் சம்பவம் நடைபெற்ற இடத்திலே

[திரு. ஓ. சோ. வேலுச்சாமி] [1978 ஆகஸ்ட் 31

திரு. கருப்பையா இருந்ததாக இல்லை; அவர் யாரையும் தூண்டி விட்டதாகவும் இல்லை. ஆனல் அந்த காங்கிரஸ் தலைவ மீது வழக்குப் போட்டிருக்கிருர்கள். இத்தகைய பொய் வழ கலை மேலும் போடாமல் இருக்க பார்த்துக்கொள்ள வே க்கு ண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஆளுநர் உரையிலே,

"We should all keep in mind the fact that the freedom of speech and expression should be enjoyed without affecting the rights of others and witout affecting the public peace."

என்று சொல்லியிருக்கிருர்கள். இது முக்கியமான கருத்து. ஏனென்ருல் தமிழ்நாட்டில் மேடைப் பேச்சுக்களைப் பார்த்தால் மக்கள் கேட்கக்கூடிய வகையில் இல்லை. அந்த அளவுக்குத் தமிழ் நாடு முழுவதும் மேடைப் பேச்சு மோசமாக இருக்கிறது.

அண்மையில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுதிய ஒரு கட்டுரையை நான் படித்தேன். ''மேடையில் வீசிய புழுதிக் காற்று'' என்பது அந்தக் கட்டுரை. நாடெங்கும் இந்தப் புழுதிக் காற்று வீசுகிறது. சில ஊர்களில் பெண்கள் எல்லாம் நாணம் அடையக்கூடிய வகையில் மேடைப் பேச்சு நடக்கிறது. அந்த அளவுக்கு ''அப்சீன் லாங்வேஜ்'' பயன்படுத்து கிருர்கள். அப்படி தூஷணமாகப் பேசக்கூடியவர்களின்மீது சட்டப்படி வழக்குப் போடலாம். ஆனல் இதுவரையில் யார்மீதும் நடவடிக்கை எடுக்கவில்லை. இனிமேலாவது கண்ணியமான முறையில் மேடைப்பேச்சு இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லி, நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி இந்த ஆளுநர் உரையிலே குணத்தைவிட குறைபாடுகள்தான் அதிகமாக இருக்கின்றன என்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9–00 மணிக்கு பேர [illegible] மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-29 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

ரப்பினர்

பினர். ஒரு

சென்று

(10) பேரதகம் முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

ப் பே

அ. சட்ட [illegible] ான விதிகளும் ஆணைகளும்.

*1. சென்னை சி[illegible] [illegible]ழில்கள், குடிசைத் தொழில்கள், கடன்கள், உதவித் தொ[illegible]ள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது தொடர்பான [illegible]ழில் துறையின் 1976 ஆம் ஆண்டு



1978 ஆகஸ்ட் 31]

ஜூலை மாதம் 30 ஆம் தேதியிடப்பெற்ற 999 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1922 ஆம் ஆண்டு தொழில்களுக்கான மாநில உதவிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் எண் 5/1923) 19(d) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

* 2. தமிழ்நாடு பொறியியல் சார்நிலைப் பணியிலுள்ள நிலநீர் பிரிவில் புவியியல் உதவியாளர், புவிசார்ந்த இயற்பியல் உதவி யாளர் பதவிகளை தேர்வாணைக் கழகத்தின் வரம்பெல்லைக்குள் சேர்ப்பதற்காகத் தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணி யாளர் தேர்வாணைக் கழக ஒழுங்கு முறை விதிகளில் திருத்த மொன்று செய்வது குறித்து, பணியாளரமைப்பு-நிர்வாகச் சீர் திருத்தத் (பணியாளரமைப்பு-M) துறையின், 1978 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10 ஆம் தேதியிடப்பெற்ற 152 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

* 3. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்டம் அமுலுக்கு வரும் தேதி தொடர்பான ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 1978 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் தேதியிடப்பெற்ற 448 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சி கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

* 4. தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (உபரி நிலத்திற்கான இழப்பீட்டுத் தொகை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது தொடர்பான வருவாய்த்துறையின் 1978 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம தேதியிடப்பெற்ற 186 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நிலங்களின்மீது உச்சவரம்பு கட்டுதல்) சட்டத் தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

* 5. தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் கட்டிட விதிகளில், அதன்கீழ் உள்ள சில விதிகளைப் பொறுத்த வரையில் விலக்களிக்கப்பதற்கு 19 ஆவது விதியின்கீழ் அரசிற்கு அளிக்கப்பெற்றுள்ள அதிகாரங்களைச் செலுத்துவதற்கு நகர்ப்புற -நாட்டுப்புற அமைப்புத் திட்ட இயக்குநருக்கு அதிகாரம் அளித்து ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14 ஆம் தேதியிடப்பெற்ற 1996 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(d) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

*6. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு ஓட்டல் நிறுவன விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து 1977 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் தேதியிடப்பெற்ற தொழிலாளர், வேலை வாய்ப்புத் துறையின் 372 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஓட்டல் நிறுவன சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1958) 29(4) பிரிவின்கீழ் பேரவை முன் வைககப்பெற்றது).

* 7 தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 36-வது பிரிவின் 2, 3 வது விதிகளிலிருந்து எல்லா சமய அறக் கட்டளைகளுக்கும் விலக்களித்தல், உபரி நிதியினை கருணை இல்லத் திற்குத் திருப்புதல் ஆகியவை குறித்து 1978ஆம் ஆண்டு மார்ச மாதம் 11 ஆம் தேதியிடப் பெற்ற வணிக வரிகை—அறக் கட்டளைகள் துறையின் 310 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக் கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

*8. தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரி விதிகளில் சில மாற்றங்கள் செய்வது குறித்து 1978 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் தேதியிடப்பெற்ற வணிக வரிகள் அறக்கட்டளை கள் துறையின் 323 ஆம் எண் அரசாணையில் வெளியான அறி விப்பு [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16(4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

*9. பழைய அணிகலன்கள், தங்கம் அல்லது வெள்ளியினால் செய்யப்பெற்ற ஏனைய அணிகலன்கள் வாங்குதல் மீதான வரி வீதத்தைக் குறைப்பது குறித்த 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம தேதியிடப்பெற்ற வணிக வரிகள், அறக்கட்டளைகள் துறையின் 407 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

*10. திரு. சி. ராம்தாஸ், ஐ. ஏ. எஸ். அவர்களை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் தலைவராக நியமிப்பது குறித்த 1978 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15 ஆம் தேதியிடப்பெற்ற வீட்டு வசதித்துறையின் 338 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

*11. சென்னையிலுள்ள சோவியத் ரஷ்ய ஐக்கிய நாடுகளின் வர்த்தக பிரதிநிதித்துவத்திற்குச் சொந்தமான TMW 516, TMW 6496, TMW 9968 வண்டிகளுக்கு வரிச் செலுத்துவதி லிருந்து விலக்களிப்பது குறித்த உள்துறையின் (போக்குவரத்து-1



1978 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் தேதியிடப் பெற்ற 588-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1931 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப் புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1931) 11(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

*12. வட ஆற்காடு மாவட்டம், கரிகிரியிலுள்ள ஸ்கிப்லிங் தொழுநோய் ஆராய்ச்சி பயிற்சி நிலையத்திற்குச் சொந்தமான சில குறிப்பிட்ட வண்டிகளுக்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப் பது குறித்த உள்துறையின் (போக்குவரத்து-I) 1978 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் தேதியிடப்பெற்ற 681 ஆம் எண் அரசாணை யில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1931 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1931) 11(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

*13. முன்னாள் இராணுவத்தினர் நல இணை இயக்குநர் பதவியை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழகத்தின் வரம்பெல்லையிலிருந்து நீக்குவதற்காகத் தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்றை செய்வது குறித்து, பணியாள ரமைப்பு-நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 1978 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27 ஆம் தேதியிடப்பெற்ற 203 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [இந்திய அரசியலமைப் புச் சட்டத்தின் 320(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற் றது].

*14. தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்த (உபரி நிலங்களுக்கு ஈட்டுத்தொகை) விதிகளில் சில திருத்தங்கள் செய் வது குறித்த வருவாய்த் துறையின் 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 2ஆம் தேதியிடப்பெற்ற 17036/L.Ref./I (2)/78 ஆம் குறிப்பாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தச் (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

*15. தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவணச் சட்டத்தில் திருத்தமொன்று செய் வது குறித்து, வருவாய்த்துறையின் 1978 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 25 ஆம் தேதியிடப்பெற்ற 454 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவணச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 10/1969) 18(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக் கப்பெற்றது].

*16. தமிழ்நாடு மாநிலத்தில் வைத்து வரப்பெறுகிற அல்லது பயன்படுத்தப் பெறுகிற பயணிப் பேருந்துகளைப் பொறுத்த வரையில் 1978 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் தேதியோடு முடிவடையும் காலாண்டிற்கு வரி செலுத்துவதற்கான கால அளவை நீட்டிப்பது குறித்த உள்துறையின் (போக்குவரத்து-I), 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 13 ஆம் தேதியிடப்பெற்ற 819 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

*17. தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து கூட்டுறவுத்துறையின் 1978 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 9 ஆம் தேதியிடப்பெற்ற 85 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 53/1961) 119(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

*18. தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்திற்கு விதிகள் செய்வது தொடர்பாக, ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித்துறையின் 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12 ஆம் தேதியிடப்பெற்ற 571 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

*19. மதுரைப் பல்கலைக் கழக நகர் என்ற புதிய நகருக்கான இடத்தை அறிவிப்பது குறித்த ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 1978 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 25 ஆம் தேதியிடப்பெற்ற 286 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-கிராம அமைப்புத் திட்ட சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

*20. தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு கடன் நிவாரண விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து கூட்டுறவுத் துறையின் 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17 ஆம் தேதியிடப்பெற்ற 254 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 38/72) 28/(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

**21. ஹோசூர் ஒழுங்குமுறை அங்காடி மாற்றம் செய்து 1971 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 17 ஆம் தேதியிடப்பற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் II-ன் பிரிவு I-ல் 1179 முதல் 1181 பக்கங்கள் வரையில் (ஆங்கிலத்தில்) வெளியான வேளாண்





மைத் துறையின் 1971ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 28 ஆம் தேதியிடப்பெற்ற குறிப்பாணை எண் II-1 எண் 5113/1971-ல் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத்துறையின் 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 11 ஆம் தேதியிடப்பெற்ற குறிப்பாணை எண் 106150/A.M.-I, 77-5-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

**22. நிலக்கடலை, எள், மஞ்சள், எல்லா வடிவங்களிலுமான வெல்லம், பருத்தி ஆகியவற்றைப் பொறுத்த வரையில் கீழமங்கலம் அங்காடியை அறிவிக்கப்பெற்ற அங்காடிப்பகுதியாக அறிவிப்பது குறித்த வேளாண்மைத் துறையின் 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 21 ஆம் தேதியிடப்பெற்ற 472 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

**23. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்திற்கான விதிகளை வரைதல், திருத்தம் செய்தல் குறித்த 1977 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 17 ஆம் தேதியிடப்பெற்ற உள்துறையின் 3365 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

**24. தர்மபுரி மாவட்டப் பகுதிகளில் மஞ்சள், எள், எல்லா வடிவங்களிலுமான கரும்பு, வெல்லம் ஆகியவற்றின் வணிகத்தை முறைப்படுத்துவது தொடர்பாக, வேளாண்மைத்துறையின் 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 21 ஆம் தேதியிடப்பெற்ற 470 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

**25. அருப்புக்கோட்டை ஒழுங்குமுறை அங்காடியின் முகவரியை மாற்றுவது தொடர்பாக 1964 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 17 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் II-ன் பிரிவு I-ல் 288-289 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியான முன்னுள் உணவு-வேளாண்மைத்துறையின் 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 21 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பு எண். II-I, 727/1964-ல் திருத்தமொன்று செய்வது குறித்த வேளாண்மைத்துறையின் 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 21

ஆம் தேதியிடப்பெற்ற குறிப்பாணை எண். 978/AMI/78-4 வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை, விளைபொருள் அங்காடிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

**26. தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்ச வரம்பு, முறைப்படுத்துதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்த வருவாய்த்துறையின் 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் தேதியிடப்பெற்ற அரசாணை எண். 761-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்ச வரம்பு, முறைப்படுத்துதல்) சட்டத்தின் (குடியரசுத் தலைவரின் சட்டம் 34/1976) 45(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

**27. தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு நகராட்சி பொறியியல் நீர் வழங்கு பணி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்த ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித்துறையின் 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 8 ஆம் தேதியிடப்பெற்ற 345 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(d) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

**28. 1973 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 31 ஆம் தேதியிடப் பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் III-ல் பக்கம் 67-ல் (ஆங்கிலத்தில்) வெளியான வருவாய்த்துறையின் 1973 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 4 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பு எண். III, 379/1973-ஐ ரத்து செய்வது குறித்து வணிக வரிகள், அறக்கட்டளைகள் துறையின் 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22 ஆம் தேதியிடப்பெற்ற குறிப்பாணை எண். 61925/II (2)/77-2-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

**29. தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியம் விற்பனை செய்கிற கைவினை கோப்புகளின் விற்பனையின்மீது வரிவிலக்களிப்பது குறித்து, 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18 ஆம் தேதியிடப்பெற்ற வணிகவரிகள்-அறக்கட்டளைகள் துறையின் 31911, II-127/75-8 ஆம் எண் குறிப்பாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

**30. தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு (மதுபானம், அனுமதிச் சீட்டு) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 26 ஆம் தேதியிடப்பெற்ற உள்துறையின் அரசாணை எண். 916-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].





**31. தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர்ப்புற-நாட்டுப்புற அமைப்புத் திட்டத்தின் 10(1) (c) பிரிவின்கீழ் ஓசூர் புதிய நகருக்கான இடத்தினை புதிய நகர் வளர்ச்சி அதிகார மன்றம் அறிவிப்பது குறித்த, ஊர்வளர்ச்சி-உள்ளாட்சித்துறையின் 1978 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 22 ஆம் தேதியிடப்பெற்ற 257 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர்ப்புற நாட்டுப்புற அமைப்புத் திட்ட சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

*32. திருச்சிராப்பள்ளி அங்காடிக் குழுவின் அறிவிக்கப்பெற்ற பகுதியிலிருந்து குளத்தூர், ஆலங்குடி, திருமயம் வட்டங்களின் சில பகுதிகளை நீக்குவது குறித்தும், தஞ்சாவூர் அங்காடிக் குழுவின் அறிவிக்கப்பெற்ற பகுதியிலிருந்து அறந்தாங்கி, புதுக்கோட்டை, ஒரத்தநாடு வட்டங்களின் சில பகுதிகளை நீக்குவது குறித்தும் வேளாண்மைத் துறையின் 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15 ஆம் தேதியிடப்பெற்ற 421 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

**33. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு ஓட்டல் நிறுவன விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்த தொழிலாளர்-வேலைவாய்ப்புத்துறையின் 1977 ஆம் ஆண்டு மே திங்கள் 25 ஆம் தேதியிடப்பெற்ற 412 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஓட்டல்கள் நிறுவனங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1958) 29(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

**34. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இயல்பு மாற்றப்பெற்ற சாராவி, மெதில் ஆல்ஹகால், வார்னிஷ் (பிரெஞ்சு பாலிஷ்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்த உள்துறையின் 1978 ஆம் ஆண்டு மே திங்கள் 3 ஆம் தேதியிடப்பெற்ற 958 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

**35. பருத்தி, நிலக்கடலை, மஞ்சள், சோளம், எல்லா வடிவங்களிலுமான கரும்பு, வெல்லம் ஆகியவற்றைப் பொருத்தமட்டில் தாளவாடி ஒழுங்குமுறை அங்காடியை அறிவிக்கப்பெற்ற பகுதியாக அறிவிப்பது குறித்த வேளாண்மைத்துறையின் 1978 ஆம் ஆண்டு மே திங்கள் 15 ஆம் தேதியிடப்பெற்ற 955 ஆம் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை-விளைபொருள் அங்காடிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

[1978 ஆகஸ்ட் 31

**36. சென்னை, கிண்டியிலுள்ள பொறியியல் கல்லூரியின் இளநிலை தொழில்நுட்ப உதவியாளர் (ஸ்டக்சுரல் டைனமிக் ஆய்வுக்கூடம்) பதவியினை தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைக் கழகத்தின் வரம்பெல்லைக்குள் சேர்ப்பதற்காக, தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப்பணியாளர் தேர்வாணைக்கழக ஒழுங்குமுறைகளில் திருத்தமொன்று செய்வது குறித்த பணியாளரமைப்பு-நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் (பணியாளரமைப்பு-M) 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 16 ஆம் தேதியிடப்பெற்ற 279 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

**37. தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கைவரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்த வணிகவரிகள்-அறக்கட்டளைகள் துறையின் 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28 ஆம் தேதியிடப்பெற்ற 537 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

**38. மத்திய விற்பனை 'வரியின் கீழ் விதிக்கப்பெறும் விற்பனை வரி வீதத்திற்குச் சமமாக வரிவீதத்தைக் குறைத்து 1977 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 5 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் II, பிரிவு 1-ல் 128-ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியான வணிகவரிகள்-அறக்கட்டளைகள் துறையின் 1977ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 6 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பு எண். II (1)/வ.வ.அ.க./203/77-ல் சில மாற்றங்கள் செய்வது குறித்த வணிகவரிகள்-அறக்கட்டளைகள் துறையின் 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27 ஆம் தேதியிடப்பெற்ற குறிப்பாணை எண். 57035, II (2)/77-3-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

***39. கோயம்புத்தூர் மேட்டுப்பாளையம் சாலையிலுள்ள உடலூனமுற்ற குழந்தைகள் உதவிச் சங்கத்திற்கு விற்கப் பெறும் இயந்திரங்கள், மருத்துவமனைச் சாதனங்கள், உபகரணங்கள், கருவிகள் ஆகியவற்றின்மீது யாதொரு விற்பனையாளரும் விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பதை 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31 ஆம் தேதிவரையில் தொடர்ந்து அளிப்பது குறித்த வணிகவரிகள் அறக்கட்டளைகள் துறையின் 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25 ஆம் தேதியிடப்பெற்ற குறிப்பாணை எண். 9285. II (2)/77-10-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தி (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை வைக்கப்பெற்றது].



1978 ஆகஸ்ட் 31]

***40. நிரந்தரமாகத்தங்கி வசிப்பவர்களுக்கு மருத்துவ அடிப்படையில் மதுபான அனுமதி வழங்கும் நடைமுறையை மாற்றுவது தொடர்பான தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு மதுபான (உரிமம்-அனுமதிச் சீட்டு) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்த உள்துறையின் 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 13 ஆம் தேதியிடப்பெற்ற 814 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

***41. கோயம்புத்தூர் உள்ளூர் திட்டப்பகுதியில் உள்ளூர்ப் பகுதிகளைச் சேர்ப்பது குறித்த ஊர்வளர்ச்சி-உள்ளாட்சித்துறையின் 1978 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 22 ஆம் தேதியிடப்பெற்ற 256 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர்ப்புற-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

***42. எண்ணெய்-இயற்கை எரிவாயு குழுவிற்குச் சொந்தமான T N O 9439 ஆம் எண் டிரக்கினை போக்குவரத்து வண்டி என்பதிலிருந்து போக்குவரத்துக்கு அல்லாத வண்டி என்பதாக மறு வகைப்படுத்துவது குறித்த, உள்துறையின் (போக்குவரத்து -1) 1978 ஆம் ஆண்டு மே திங்கள் 18 ஆம் தேதியிடப்பெற்ற 1111 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

***43. தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டம் செயல்முறைக்கு வரும் தேதிகுறித்த, தொழில்துறையின் 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22 ஆம் தேதியிடப்பெற்ற 388 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிப்பு [தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1975) 58(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

***44. சென்னை நகர உரிமையியல் நீதி மன்றத்தின் பதிவாளர் பதவியினை அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழகத்தின் வரம்பெல்லைக்குள் கொண்டுவரும் பொருட்டு தமிழ்நாடு 1954-ம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழகத்தின் ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்த, பணியாளரமைப்பு-நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் (பணியாளரைமப்பு–M) 1978-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 3-ம் தேதியிடப்பெற்ற 384-ம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்) 320 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

***45. நிலக்கடலை, எல்லா வடிவங்களிலுமான கரும்பு, வெல்லம் ஆகியவற்றைப் பொறுத்த மட்டில், கிருஷ்ணகிரி, ஒழுங்குமுறை அங்காடியைச் சேர்ந்த 23 கிராமங்களை நீக்கி அவற்றை காவேரிப்பட்டினம் ஒழுங்குமுறை அங்காடியுடன் சேர்ப்பது குறித்த வேளாண்மைத் துறையின் 1978-ம் ஆண்டு ஜூன் திங்கள் 1-ம் தேதியிடப் பெற்ற 959-ம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959-ம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

***46. புள்ளியியல் துறையிலுள்ள நூலகர் பதவியை அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழகத்தின் வரம்பெல்லைக்குள் கொண்டு வரும் பொருட்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழகத்தின் ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்த, பணியாளர்-நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 1978-ம் ஆண்டு மே திங்கள் 8-ம் தேதியிடப் பெற்ற 543 -ம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

***47. சென்னையிலுள்ள பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவல் கத்தின் நூலகர் பதவியினை அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழகத்தின் வரம்பெல்லைக்குள் கொண்டு வரும்பொருட்டு, தமிழ் நாடு 1954-ம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழகத்தின் ஒழுங்கு முறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்த பணியாளர் அமைப்பு-நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் (பணி யாளரமைப்பு-M) 1978-ம் ஆண்டு ஜூன் திங்கள் 8-ம் தேதி யிடப்பெற்ற 672-ம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

***48. 1978-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 26-ம் தேதியிலிருந்து ஓராண்டு காலத்திற்கு, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற் கான அலுவல் சார்பற்ற தலைவரையும், உறுப்பினர்களையும் நியமிப்பது குறித்த வீட்டு வசதித்துறையின் 1978-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 26-ம் தேதியிடப்பெற்ற 653-ம் எண் அரசாணை யில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971-ம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல், அகற்றுதல்) சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 11/1971) 72 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

***49. 1978-ம் ஆண்டு திட்டமிடல் அதிகார மன்ற (வரவு-செலவுத் திட்ட) விதிகளை வகுப்பது குறித்த ஊர் வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 1978-ம் ஆண்டு மார்ச் திங்கள் 25-ம் தேதியிடப் பெற்ற 454-ம் எண் அரசாணையில் வெளியான அறி விப்பு [தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நகர்ப்புற-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].





*** 50. தமிழ்நாடு குடிசை மாற்றுவாரியத்திற்கு அலுவல் முறையில் உறுப்பினர்களை நியமிப்பது குறித்த வீட்டுவசதித் துறையின் 1978-ம் ஆண்டு ஜூன் திங்கள் 20-ம் தேதியிடப் பெற்ற 1023-ம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ் நாடு 1971-ம் ஆண்டு குடிசைப் பகுதிகள் மேம்படுத்துதல்—அகற்றுதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

***51. தமிழ்நாடு 1978-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டம் செயல்முறைக்கு வரும் தேதி குறித்த 1978-ம் ஆண்டு ஜூலை திங்கள் 1-ம் தேதியிடப்பெற்ற ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 1034-ம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (D) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

***52. சென்னை மாநகரில் உள்ள போக்குவரத்திற்கு பயன படுத்தப் பெறாத வண்டிகளைப் பொறுத்த வரையில் உரிமங்கள் வழங்கும் அதிகாரியை நியமிப்பது குறித்த உள்துறையின் (போக்குவரத்து-I) 1978-ம் ஆண்டு ஜூன் திங்கள் 21-ம் தேதி யிடப்பெற்ற 1415-ம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1931-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1931) 11 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

***53. தமிழ்நாடு 1955-ம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர் கள் பாதுகாப்பு விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்த வருவாய்த் துறையின் 1978-ம் ஆண்டு மே திங்கள் 4-ம் [illegible] யிடப்பெற்ற 1084-ம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1955-ம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் பாது காப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1955) 7 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

*** 54. தமிழ்நாடு 1978-ம் ஆண்டு ஊராட்சி ஒன்றிய மன் றங்கள் (துணைத் தலைவர் தேர்தல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்த ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 1978-ம் ஆண்டு மே திங்கள் 23-ம் தேதியிடப்பெற்ற 51445/ME 78—4-ம் எண் குறிப்பாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958-ம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

55. 1972—73-ம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் ஆண்டுக் கணக்குகள் [1971-ம் ஆண்டு தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

56. 1972–73-ம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை [1971-ம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

57. 1973–74-ம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் ஆண்டுக் கணக்குகள் [1971-ம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் [தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

58. 1973-74-ம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை [1971-ம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

%59. 1977-ம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31-ம் தேதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு சிமெண்டு கழகம் ஆகியவற்றைப்பற்றிய ஆண்டு அறிக்கையும், அதன் மீதான அரசின் மதிப்புரையும் [1956-ம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956- 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

%60. 1976–77-ம் ஆண்டிற்கான தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் 5-வது ஆண்டு அறிக்கை [1956-ம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

%61. 1977-ம் ஆண்டிற்கான பூம்புகார் கப்பற் போக்குவரத்துக் கழகத்தின் 3-வது ஆண்டு அறிக்கை [1956-ம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

%62. 1977-ம் ஆண்டிற்கான சோழன் போக்குவரத்துக் கழகத்தின் 6-வது ஆண்டறிக்கை [1956-ம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

%63. 1977-ம் ஆண்டிற்கான அண்ணா பொறியியல் கழகத்தின் 3-வது ஆண்டறிக்கை [1956-ம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

%64. 1977-ம் ஆண்டிற்கான சோழன் பொறியியல் கழகத்தின் 3-வது ஆண்டு அறிக்கை [1956-ம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ், பேரவை முன் வைக்கப்பெற்றது].





%65. 1976-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31-ம் தேதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் முதல் ஆண்டறிக்கை [1956-ம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1955) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

%66. 1976–77-ம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மை தொழில் கழகத்தின் 11-வது ஆண்டு அறிக்கை [1956-ம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

%67. 1977-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31-ம் தேதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநிலத் தொழில் அபிவிருத்திக் கழகத்தின் (வரையறுக்கப்பெற்றது) ஆறுவது ஆண்டறிக்கையும், அதன் மீதான அரசின் ஆய்வுரையும்.

68. 1973–74-ம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் பணி குறித்த ஆண்டறிக்கை [தமிழ்நாடு 1972-ம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 35-வது பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

69. தமிழ்நாடு 1978-ம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு கட்டுதல்-முறைப்படுத்துதல்) விதிகளை வரைவது சம்பந்தமாக, வருவாய்த்துறையின் 1978-ம் ஆண்டு மே திங்கள் 17-ம் தேதியிடப்பெற்ற 1200-ம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1978-ம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு கட்டுதல்-முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1978) 47 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

70. திருச்சிராப்பள்ளியிலுள்ள பாரத் கனரக மின்சாரத் தொழிலாளர் கூட்டுறவு வங்கிக்கு (வரையறுக்கப் பெற்றது), தமிழ்நாடு 1961-ம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின் 3-வது பிரிவு நீங்கலாக ஏனைய விதித்துறைகள் அனைத்திலிருந்தும் விலக்களிப்பது குறித்த, வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 1978-ம் ஆண்டு ஜூலை திங்கள் 10-ம் தேதியிடப்பெற்ற 941-ம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1961-ம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1961) 63 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

71. தமிழ்நாடு 1960-ம் ஆண்டு மதுபான (உரிமம்-அனுமதிச் சீட்டு) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்த உள்துறையின் 1978-ம் ஆண்டு ஜூலை திங்கள் 4-ம் தேதியிடப்பெற்ற 1450-ம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937-ம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 54/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

[1978 ஆகஸ்ட் 31

72. தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தில் சில திருத்தங்கள் செய்வது குறித்த, வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 1978-ம் ஆண்டு ஜூன் திங்கள் 29-ம் தேதியிடப்பெற்ற 855-ம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

73. சென்னையிலுள்ள பால மந்திருக்கு (அனாதைக் குழந்தைகள் மருத்துவமனை) ஆதரவற்ற அனாதைக் குழந்தைகளின் பயனுக்காக ஸ்டாண்டர்டு டீசல் சிறிய பேருந்து ஒன்றை வாங்குவதன் மீதான விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்த, வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 1978-ம் ஆண்டு ஜூலை திங்கள் 10-ம் தேதியிடப் பெற்ற 88/-ம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

74. தமிழ்நாடு 1921-ம் ஆண்டு மதுரை மாநகராட்சிக் கழகச் சட்டத்தில் திருத்தமொன்று செய்வது குறித்த, ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 1978-ம் ஆண்டு ஜூலை திங்கள் 24-ம் தேதியிடப்பெற்ற 1186-ம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1921-ம் ஆண்டு மதுரை மாநகராட்சிக் கழக சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432 (2) பிரிவின்கீழ் பேரவையின் முன் வைக்கப்பெற்றது].

75. மேலூர் நகராட்சி மன்றத்தில் அரிசன வகுப்பைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு இரண்டு இடங்களையும், மகளிர்க்கு ஒரு இடத்தையும் ஒதுக்குதல், மேலூர் நகராட்சியை இருபது வார்டுகளாகப் பிரித்தல் ஆகியவை சம்பந்தமாக, ஊர்-வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 1978-ம் ஆண்டு ஜூலை திங்கள் 5-ம் தேதியிடப் பெற்ற 1086-ம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (d) பிரிவின் கீழ் பேரவையின் முன் வைக்கப்பெற்றது].

76. தமிழ்நாடு 1978-ம் ஆண்டு நகராட்சி மன்ற விதிகளைச் செய்வது குறித்த, ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித்துறையின் 1978-ம் ஆண்டு ஜூன் திங்கள் 19-ம் தேதியிடப்பெற்ற 913-ம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (d) பிரிவின்கீழ் பேரவையின் முன் வைக்கப்பெற்றது].

77. தமிழ்நாடு நகராட்சிகளில், நகராட்சி மன்றங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை நிர்ணயிப்பது குறித்த, ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 1978-ம் ஆண்டு ஜூலை திங்கள் 15-ம் தேதியிடப்பெற்ற 1146-ம் எண் அரசாணையில்



1978 ஆகஸ்ட் 31]

வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (d) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

78. தமிழ்நாடு 1978-ம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு கட்டுதல்-முறைப்படுத்துதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்த, வருவாய்த் துறையின் 1978-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 9-ம் தேதியிடப் பெற்ற 1856-ம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1978-ம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு கட்டுதல்-முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1978) 47 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

79. தமிழ்நாட்டின் முன்னாள் முதல் அமைச்சர் மீதும் ஏனைய முன்னாள் அமைச்சர்கள் மீதும் கூறப்பெற்ற குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை செய்வதற்காக நியமிக்கப் பெற்ற மாண்புமிகு நீதிபதி திரு. ஆர். எஸ். சர்க்காரியா விசாரணைக் கமிஷனின் முதல் அறிக்கை (ஒரு தொகுப்பு) மற்றும் இறுதி அறிக்கை (4 தொகுப்புகள்) தமிழாக்கம் செய்யப் பெற்றது) [1952-ம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் (மத்தியச் சடடம் 60/1952) 3 (4)-வது பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

%%1. 1978 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (இரண்டாவது திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 1/1978).

%%%2. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு அத்தியாவசியப் பணிகள் பராமரிப்பு அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசர ச்சட்டம் 2/1978)

@3. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு அத்தியாவசியப் பணிகள் பராமரிப்பு அவசரச் சட்டத்தில் வெளியான அச்சுப்பிழைத் தொகுப்பு (தமிழ்நாடு அவசரச் சட்டம் 2/1978).

@@4. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 3/1978).

@@@5. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு வேளாண்மை விளை பொருள் அங்காடி (திருத்தம் மற்றும் சிறப்பு அம்சங்களும்) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 4/1978).

£6. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 5/1978).

[1978 ஆகஸ்ட் 31

££7. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றுவதிலிருந்து பாதுகாப்பளித்தல்) இரண்டாவது திருத்த (தமிழ்நாடு அவசரச் சட்டம் 6/1978) அவசரச் சட்டம்.

£££8. 1978 ஆம் ஆண்டு மதுரைப் பல்கலைக் கழக (திருத்தம் மற்றும் சிறப்பு அம்சங்கள்) தமிழ்நாடு அவசரச் சட்டம் 7/1978) அவசரச் சட்டம்.

&9. 1978 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (மூன்றாவது திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 8/1978).

10. 1975-76 ஆம் ஆண்டிற்கான சென்னை, புதுக்கோட்டையிலுள்ள அரசு அருங்காட்சியகங்கள், சென்னையிலுள்ள தேசீய கலைக்கூடம், கன்னிமாரா பொது நூலகம் ஆகியவற்றின் நிர்வாக அறிக்கை.

&&11. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 10/1978).

&&&12. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு தனியார் மருத்துவமனைப் பணியாளர் பாதுகாப்பு சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவையின் சட்டமுன்வடிவு எண். 7/1978).

$13. தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்ச வரம்பு கட்டுதல், முறைப்படுத்துதல்) ரத்துச் சட்ட முன்வடிவு (தமிழ்நாடு சட்டப்பேரவையின் சட்ட முன்வடிவு எண். 8/1978).

$$14. 1978-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 30 ஆம் தேதியன்று சட்டமன்றத்தில் ஆளுநர் ஆற்றிய உரை (ஆங்கிலமும், தமிழும்).

$$$15. 1978-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி மற்றும் மதுரை மாநகராட்சி (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 9/1978).

16. 1969-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 27 ஆம் தேதியன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றிய தீர்மானத்திற்கிணங்க, 1977-ம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதியன்றுள்ளவாறு கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களது சொத்திருப்பு பற்றிய விவரக் கணக்குகள் பேரவை முன் வைக்கப்பெற்றன :—

(1) திரு. டி. புஷ்பராஜ், எம். எல். ஏ.
(2) மாண்புமிகு திரு. S. திருநாவுக்கரசு.



1978 ஆகஸ்ட் 31]

17. 1969ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 27 ஆம் தேதியன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றிய தீர்மானத்திற்கிணங்க, 1978-ம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் தேதியன்றுள்ளவாறு கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களது சொத்திருப்பு பற்றிய விவரக் கணக்குகள் பேரவை முன் வைக்கப்பெற்றன :—

(1) திரு. பி. முனுசாமி, எம். எல். ஏ.
(2) திரு. ஏ. ஆர். மாரிமுத்து, எம். எல். ஏ.
(3) திரு. பி. ஈ. ஸ்ரீனிவாச ரெட்டியார், எம். எல். ஏ.
(4) திரு. என். சங்கரய்யா, எம் எல். ஏ.
(5) திரு. டி. ஆர். ராஜாராம் நாயுடு, எம். எல். ஏ.
(6) திரு. கு. ரமணி, எம். எல். ஏ.
(7) மாண்புமிகு திரு. S. திருநாவுக்கரசு.

18. உடுக்குறியிடாத வினா பட்டியல் (1 முதல் 200 வரை).

* 5-6-1978 அன்று உறுப்பினர்களுக்கு அஞ்சல் மூலம் அனுப்பப்பெற்றது.

** 1-7-1978 அன்று உறுப்பினர்களுக்கு அஞ்சல் மூலம் அனுப்பப்பெற்றது.

*** 22-8-1978 அன்று உறுப்பினர்களுக்கு அஞ்சல் மூலம் அனுப்பப்பெற்றது.

%% 3-5-1978 அன்று உறுப்பினர்களுக்கு அஞ்சல் மூலம் அனுப்பப்பெற்றது.

%%% 16-5-1978 அன்று உறுப்பினர்களுக்கு அஞ்சல் மூலம் அனுப்பப்பெற்றது.

@ 20-5-1978 அன்று உறுப்பினர்களுக்கு அஞ்சல் மூலம் அனுப்பப்பெற்றது.

@@ 8-5-1978 அன்று உறுப்பினர்களுக்கு அஞ்சல் மூலம் அனுப்பப்பெற்றது.

£ 19-7-1978 அன்று உறுப்பினர்களுக்கு அஞ்சல் மூலம் அனுப்பப்பெற்றது.

££ 19-7-1978 அன்று உறுப்பினர்களுக்கு அஞ்சல் மூலம் அனுப்பப்பெற்றது.

£££ 25-7-1978 அன்று உறுப்பினர்களுக்கு அஞ்சல் மூலம் அனுப்பப்பெற்றது.

& 25-7-1978 அன்று உறுப்பினர்களுக்கு அஞ்சல் மூலம் அனுப்பப்பெற்றது.

&& 17-8-1978 அன்று உறுப்பினர்களுக்கு அஞ்சல் மூலம் அனுப்பப்பெற்றது.

&&& 28-4 1978 அன்று உறுப்பினர்களுக்கு அஞ்சல் மூலம் அனுப்பப்பெற்றது.

$$ 30-8-1978 அன்று உறுப்பினர்களுக்கு அவையில் வழங்கப்பெற்றது.

$$$ 31-7-1978 அன்று உறுப்பினர்களுக்கு அஞ்சல மூலம் அனுப்பப்பெற்றது.

$ 28-4-1978 அன்று உறுப்பினர்களுக்கு அஞ்சல் மூலம் அனுப்பப்பெற்றது.

@@@ 8-5-1978 அன்று உறுப்பினர்களுக்கு அஞ்சல் மூலம் அனுப்பப்பெற்றது.

% தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 21 (5) விதியில் கண்ட வரம்பு நிபந்தனையை ஒட்டி சட்டமன்ற நூலகத்தில் வைக்கப்பெற்றுள்ளன.

## இணைப்பு I

124-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.

## GOVERNOR'S ADDRESS.

Honourable Members of the Legislature,

I have great pleasure in welcoming all of you to this joint session of the Tamil Nadu Legislature.

2. It is our cardinal credo that the pace of economic development should be speeded up, with greater benefits of such development flowing largely to the weaker sections of the society, resulting in the eradication of poverty and reduction of inequalities. We want to achieve this without detriment to the basic freedoms enjoyed by all sections of the society. We should all keep in mind the fact that the freedom of speech and expression should be enjoyed without affecting the rights of others and without affecting the public peace. Only by such mutual assistance and harmonious living, it would be possible for us to achieve and enjoy economic freedom. This Government is taking various efforts towards achieving this goal, with special emphasis in assisting the weaker sections and rural people. It is essential to maintain law and order and observe self-discipline in order to achieve this goal.





3. During the last year, our State had set up new records in the production of agricultural commodities like paddy, millets, pulses, oil seeds and sugarcane. The Government will continue its efforts in this direction and is taking steps to achieve greater production in agriculture, through timely supply of inputs, better utilisation of available water resources and more effective extension services. A separate directorate for marketing of Agricultural produce was established during the last year. Members of various District Agricultural Regulated Marketing Committees, who were elected many years ago, continued to hold their office even after the completion of their terms, since fresh elections have not been held. In view of the irrgularities in the administration of market committees and since the members did not take sufficient interest in the administration of the Committees, Government has issued an Ordinance dissolving these Committees without waiting for enacting comprehensive amendments to the Agricultural Produce Markets Act. A Bill is proposed to be introduced during this session to replace this Ordinance.

4. The food situation in our State is very comfortable. Foodgrains are freely available, at reasonable rates, in the open market and the coming Kuruvai crop is expected to be good. The Government is also holding adequate stocks of rice to meet the demand under the public distribution system for the next one year. It can confidently be said that at no time in the last few years has the food situation been so comfortable as it is today. Thanks to the vigilant action taken by the Government, the prices of essential commodities are generally under control. The price of groundnut oil which soared high during the last year, is now well under control. During the last few months, the price of gingelly oil has also come down. The price of sugar in the open market has also come down, compared to the recent past.

5. This Government has always been aware of the necessity to ensure fair prices for the agricultural produce in order to ensure greater production. In particular, this Government is continuously emphasising before the Central Government, the need to fix reasonable procurement prices for paddy growers. The recent Chief Minister's Conference of Southern States also reiterated the need to fix fair prices for paddy. In tune with these efforts and by way of giving encouragement to paddy producers, the Government has removed the restrictions on the movement of paddy. It is the policy of the Government that this relaxation should continue during the coming kuruvai season also. In addition, for the first time, the Tamil Nadu Civil Supplies Corporation is directly procuring paddy from the agriculturists at various regulated market yards. The Government hopes that as a result of these measures, the producers will get fair prices.

6. In my previous address, I had indicated that the number of fair price shops would be increased from the then existing level of 9,300 shops in order to ensure the establishment of a fair price shop in each of the 16,000 revenue villages. Under this scheme, more than 4,000 of the existing shops have been converted into multi-purpose shops, selling various provisions in addition to the commodities under controlled distribution. One thousand five hundred shops have been newly opened thorugh the Co-operatives and the Tamil Nadu Civil Supplies Corporation in Tirunelveli, Ramanathapuram and Madurai districts. As a result, shops supplying all the daily necessities for the people, have started functioning in all the revenue villages in these three districts. More than 2,000 shops in the co-operative sector in the districts of Salem, Dharmapuri, Coimbatore and Thanjavur will now get converted into multipurpose shops. Action is also being taken to open more than 2.500 new shops in these four districts.

7. The Tamil Nadu Government has formulated the Operation Flood II Programme in collaboration with the Indian Dairy Coporation. After the completion of this Plan, which will run for five years, 4,600 milk producers co-operatives with a membership of 10 lakhs will be functioning ; the milk collection at the end of this period will reach thrice the present collection level. This scheme will generate additional employment opportunities in the rural areas, so that villagers, especially poor agriculturists and landless labourers will get increased income. Under this programme, production of butter, milk powder and other milk products will also be undertaken.

8. Forests, besides ensuring good rains, provide various raw materials necessary for economic development. The Government is therefore, keen to take steps to protect and expand the State's forest wealth. A scheme at a total cost of Rs. 3 crores has been sanctioned for raising shelter belts along the coastal areas. During this year afforestation work will be done in 1,500 hectares at a cost of Rs. 26 lakhs.

9. It will neither be possible for villages to develop nor adequate employment opportunities get created, unless there is a change from the situation of villagers supplying only the raw materails and the urban treas being centres of processing and production. Efforts should therefore, be undertaken to establish village industries with the aim of creating employment opportunities. Encouragement should also be given for investments in rural area. Steps have been recently taken to encourage rural industries to produce articles necessary for Government use and also requiring Government departments and public sector organisations to purchase such articles Towards achieving this objective, the Khadi and Village Industries Board is enthusiastically



implementing several schemes. As a result of these efforts, is expected that additional employment opportunities for 30,000 persons will be created during this year. In order to devote special attention to the development of village industries, the Tamil Nadu Government has decided to bifurcate the State Khadi and Village Industries Board, with one section looking after khadi development and the other covering the development of village industries. Action is being taken to implement this decision with the concurrence of the Khadi and Village Industries Commission.

10. The silk industry in Tamil Nadu is an ancient one. We are getting raw silk mostly from other States. Recent studies have shown that silk worms can be reared successfully not only in the hilly areas but also in the plains. Therefore, the Government is taking special efforts for the development of sericulture in the plains. As a result of the efforts taken during the last one year, it is estimated that additional employment opportunities have been created for 20,000 people.

11. The Tamil Nadu Small Industries Development Corporation is taking steps to set up 900 industrial sheds during this year in towns with not more than 50,000 population, for tiny units with an investment not exceeding Rs. one lakh on plant and machinery. These sheds will be sold on hire purchase basis to entrepreneurs running such tiny industries. It is expected that one lakhs additional employment opportunities would be created within this year as a result of the efforts to promote village, small-scale tiny industries and sericulture. During the first three months of this financial year, it is estimated that employment for about 25,000 persons has been generated.

12. Till the last year, interest-free sales tax loan was sanctioned only for large scale industries in backward areas. This scheme has been modified now covering small scale industries also. Under the revised scheme, loans will be sanctioned to small scale units, set up in towns with a population of less than one lakh and outside the urban agglomerations. The Government considers that by this measure, people will be enthused to start small-scale industries in villages and small towns. While special efforts are taken to encourage village and small-scale industries Government would continue to encourage the establishment of basic large scale industries like cement, chemical industries.

13. The Tamil Nadu Electricity Board has been so far following a policy of supply of energy to irrigation wells on the basis of a net-return of 10 per cent. It has been brought to the notice of the Government that there are certain practical difficulties in computing accurately the net return on such services. Therefore, it has now been decided that future connections will be given in the order of seniority of the date

of applications. Recently, the Central Government has, for the first time, levied an excise duty on generation of powers. Our Government has repeatedly stressed the need to drop this levy on the ground that the Electricity Boards are not earning any profits in generation and distribution of power. Other State Governments have also made similar representations. However, the Central Government has not changed its decision. Therefore, a draft legislation will be introduced in this session, to levy a special charge, so as to enable the Board to pay the new excise duty to the Central Government.

14. A scheme costing Rs. 147 crores for providing protected water-supply and sewerage to municipalities and town panchayats in the State has been drawn up to be implemented with assistance from the World Bank. Under this scheme 75 lakhs of people in municipalities and town panchayats will get protected drinking water; 12 lakhs of persons will get the benefit of underground sewerage. I would like to take this opportunity to express my appreciation to the Government of Andhra Pradesh and its Chief Minister for their decision to take up technical investigation works to give early their share of 5 TMC, out of the 15 TMC water which the Government of Maharashtra, Karnataka and Andhra have with a sense of awareness and urgency come forward to supply to Madras. Investigation work will commence in Andhra Pradesh and Tamil Nadu areas for bringing waters from Krishna river to Madras. Following the discussions held during the President's Rule and by the previous elected Government, negotiations on the sharing of Cauvery water are being pursued vigorously by this Government. These talks are being held with a view to achieve a solution which will not be deterimental to the interests of any State and without in any way affecting the existing ayacuts under Cauvery in Tamil Nadu. Further, friendly talks are being held with the neighbouring States for obtaining at least a share of the surplus waters of the West-flowing rivers for irrigating the drought-prone areas of Ramanathapuram, Tirunelveli and Coimbatore districts.

15. In order to expand the medical facilities available in rural areas so far 230 doctors have been appointed as third medical officers in the Primary Health Centres. During this year, 100 mobile teams have also been newly formed, Government has also permitted the opening of 50 mini health centres, with the assistance of service minded private organisations. A special scheme for prevention of blindness will be implemented in 5 major hospitals and 45 primary health centres in Ramanathapuram, Pudukkottai and Madurai districts with Madurai as local point. Under this scheme various steps will be taken to detect and remedy eye defects and diseases, thereby preventing the further incidence of blindness. The Government has taken new measures to curb the misuse of life-saving drugs and ensure their ready availability to needy



persons. It is also noteworthy that two Special Committees have been set up, one for suggesting improvements to the practice of Indigeneouf medicine and another for suggesting improvements in the working os the major hospitals in Madras City.

16. In order to facilitate the people of this State to utilise the employment opportunities available in West Asian countries, Government has decided to establish an Overseas Employment Corporation. This organisation will gather and furnish data on employment opportunities abroad and help in solving the difficulties faced by job-seekers at present. It will also help them in remitting their earnings to their relatives and ensuring the proper investment of the same in Tamil Nadu.

17. The Government has initiated the process of conducting elections for local bodies by making a beginning with the Madurai municipal Corporation. Elections will be held soon for the Panchayat Unions, Municipalities and the Madras Municipal Corporation.

18. Government had announced in the budget that 400 High Schools will be upgraded as higher schools to provided for the plus two stage secondary education. It is a matter of pride that this Government, which has been taking special interest in the welfare of the rural population, has raised the number of upgraded schools from 400 to 916, thereby taking higher education to rural areas. All of us can be proud of the fact that the Central Government has appreciated the lead taken by Tamil Nadu Government in implementing this new scheme, dispelling the initial doubts of the parents and educationists.

19. In my previous address, I had mentioned the steps proposed to be taken by the Government for propagation of the Tamil language, literature and culture. This task is being enthusiatically under-taken by various measures like the pension scheme for indigent Tamil scholars, grants for teaching Tamil in the Universities of Banaras, Viswabarathi, Gujarat and Agra, collection of rare manuscripts and the appointment of a Tamil poet as the Poet Laureate of the State. Government is also taking special steps for translating foreign and other Indian classics into Tamil and Tamil classics into various other languages. The term of the Official Language (Legislative) Commission has been also extended in order to complete translation into Tamil of various enactments. The framers of our Constitution, after deep thinking and detailed discussions, decided that Education should be under the State List. This position however, was changed a few years, back. It is the firm conviction of this Government that 'Education' should be brought within the State List once again. I would like to congratulate the Central Government for undertaking efforts in this direction.

20. Language is emotionally intertwined with the life of the people. It is therefore, necessary that the language policy is evolved with due care and caution. I would like to emphatically state that this Government will not tolerate imposition of any language on Tamil Nadu, in whichever form or manner it may be. It is also my duty to point out that any such imposition will lead to serious consequences. The Tamil Nadu Chief Minister deserves congratulations for convening the Southern States' Chief Ministers' Conference to discuss various problems including the language issue. In this conference all the Chief Ministers pointed out instances of Hindi imposition by certain Central Ministries against the Prime Ministers' assurances and unanimously requested the Prime Minister to put an end to this. Following this, our Prime Minister has informed the Parliament that there will be no language imposition on anybody and that the language policy will be implemented in such a way as to honour the assurances earlier made. The action of certain Ministries of the Government of India, which continue to impose Hindi, flouting the Prime Minister's assurances, deserves strong condemnation. As mentioned by me in the last address, the Tamil Nadu Government remains strongly committed to the Two Language formula. Recently when the Education policy was discussed at the All-India level, our Government has reiterated adherence to this policy.

21. Thiru Kamaraj by his sacrifies and his total identity with the freedom struggle, has earned our respect and regard, as a shining example of patriotism. I have no doubt that all the Members will unanimously welcome the Government's decision to name the Madurai University after him. I am also happy to inform you that the President of India will be inaugurating the new Technological University at Madras which is being named after beloved Anna, who strove hard to propagate the ideals of socialism and create a casteless, creedless society and on whom the people of Tamil Nadu have showered their unbounded love and affection. I have no doubt that this University, which integrates various technical colleges and institutions, will raise the standards of technical education and will be of great assistance in the intellectual development and industrial advancement of the State and thereby promote economic growth. This Government has been stressing the need for the establishment of new Universities at Coimbatore and Tiruchirappalli. The concurrence of the University Grants Commission on these are expected shortly.

22. This Government is determined to protect and promote the welfare of the weaker sections of the society, Scheduled Castes, Scheduled Tribes and Backward Classes. The Government, which is wedded to this philosophy, requested the Union Government to release a postal stamp in memory of the "morning star of reformation", the great



rationalist leader Periyar E. V. R., who, by demolishing their superstitions, brought forth renaissance particularly in the lives of the downtrodden people, steeped in ignorance and poverty. I congratulate the Union Government who have signified their concurrence to this request. There is no gain-saying that the generally peaceful and harmonious atmosphere in this part of the country, without any bickerings on account of caste or religion, has been, in not a small measure, due to Periyar's earnest endeavours in this direction. In spite of this, certain anti-social elements incite people in the name of caste and create confusion, cause damage to properties and danger to lives. This Government strongly condemns such activities. I sincerely hope that all the Honourable Members will make their best efforts to assist the Government in its endeavours to prevent anti-social elements from creating such conditions. The recent tragic incidents at Villupuram have shocked all of us. On behalf of the Honourable Members and myself, I express my sorrow for the persons, who were brutally killed during these unexpected and undesirable riots and convey our deep sympathies for the bereaved families. This Government is determined to take stringent action without fear or favour against any person responsible for such anti-social activities, however high and mighty he may be or whatever office he may hold or whatever position he may enjoy. The Government will not excuse such a person on any ground. The Government expresses its gratitude and appreciation to the Prime Minister and all those who have rendered financial assistance and to all the persons who have given help to the affected people.

23. This Government is determined to see that our State is a corruption-free State as dreamt by Mahatma Gandhi and visualised by Anna. It is trying its best to root out corruption at all levels and taking effective steps to crub this evil.

24. I would like to thank all the parties for helping the Government in its Prohibition Policy. I also thank for their co-operation in the conduct of the Prohibition conference, recently at Thanjavur. I seek the co-operation of all, for efforts to convene such conferences in other places also. The Government has decided that D. L. licences should be restricted to public sector undertakings, co-operatives and persons authorised by the Director of Industries and Commerce and the Director-General of Technical Development. In this juncture, I request everyone to undertake this best efforts for the proper and effective implementation of the Prohibition policy including publicity and propaganda work, so that we can bring cheer to the lives of the poor and the needy. I would like to congratulate the Police Officers, who are discharging their duties in implementing Government's cherished policy of Prohibition, with a

sense of great social responsibility, unmindful of dangers even to their lives. We have been continuously pleading with the Union Government, to take special steps to make good the huge loss due to Prohibition which has been implemented for the benefit of the poor. Tamil Nadu and Gujarat, which showed interest and enthusiasm in implementing this Constitutional directive have suffered great financial losses. This State Government has asked for special assistance from the Union Government so that development activities and other necessary expenditure do not get affected. We expect that the Union Government will come forward with substantial financial aid, taking note of the Government's faith in this basic policy which has eroded our resource base. Let us hope that the Union Government will not refuse this reasonable request.

25. It is commendable that this Government has held discussions, at various levels, in a spirit of friendhip and understanding with ths neighbouring States on various problems. This procedure has led not only to solutions on inter-State problems but also to the evolution of consensus on various national issues. I hope that the Southern States' Chief Ministers' Conference held recently for the first time and the other future conferences in which many other Chief Ministers are likley to participate, will set an example for evolving practical solutions on various problems strengthening the national unity and promoting the economic development. At a time when the Zonal Councils are not meeting regularly, such meetings of Chief Ministers have great relevance.

26. Eradication of poverty and removal of unemploment are the main objectives of the new Five-Year Plan. Though both the Union and State Governments are equal partners entrusted with this responsibility, the State Governments have to bear a greater burden in this task. With this background, our Government, during the recent meeting of the Committee of the National Development Council, pointed out the need for enlarging the resource base of the States. It was emphasised at this meeting that the statutory grants from the Central Government to the States should be enhanced. As pleaded by our beloved Anna in 1968 itself, reduction was suggested in the number of cerntrally-sponsored schemes in the sectors under the direct responsibility of the State Governments like agriculture, helath, etc. All States pointed out the need for the Union Government exercising powers of taxation available with it, in areas which will yield revenues to the States. I request the Union Government to take steps immediately to enhance the financial resources of the States, through statutory and non-statutory means. Only if the States have a strong financial infrastructure, national integration can be fostered and the Union Government can get stronger.





27. This Government is taking various steps for streamling the administrative machinery so as to speedily cater to the needs of the people. Further, in order to enable Government servants to represent their grievances, Joint Councils have been ordered to be formed at the levels of Secretaries to Government and Heads of Departments. A separate Commission has been established for the examination and necessary modification of the service rules of the Government servants. The Government is also examining sympathetically and speedily the recommendations of the Third Pay Commission received recently. Government's decisions on these recommendations will be announced shortly. I am also happy to inform the Honourable Members that the District Legal Aid Cells for the poor which was referred to in my previous speech, have started functioning satisfactorily. Suitable steps are being taken on the report of Justice Thiru Ismail. This Government, wedded to justice and fair play, will not fail to take proper follow up action.

28. This Session will be a short one. Important legislative measures are being placed before you. The Tamil Nadu Legislature has got its own individuality and is noted for its sound traditions. I look forward to your co-operation and constructive suggestions during the forth coming proceedings. I offer my best wishes to you all for gaining success in the task of making the people of our State happy and healthy.

## இணைப்பு II.

[124-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க].

### ஆளுநர் உரை.

மேன்மைதங்கிய சட்டமன்ற உறுப்பினர்களே,

சட்டமன்றத்தின் இணைந்த கூட்டத்திற்கு வந்துள்ள உங்கள் அனைவரையும் வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

2. நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகத்தினை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதும், ஏற்படும் பொருளாதார வளர்ச்சி சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கும் மக்களுக்கு மற்றவர்களைவிட அதிக மாக போய் சேர்ந்து அதன் விளைவாக வறுமை ஒழிப்பும், ஏற்றத் தாழ்வுகளின் குறைப்பும் ஏற்பட வேண்டும் என்பதும், இத்தகைய முயற்சிகள் மக்கள் அனைவரின் அடிப்படைச் சுதந்திரங்கள் குன்றாத வகையில் அமைய வேண்டுமென்பதும் நமது அடிப்படை இலட்சியமாகும். எழுத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் நாட்டு மக்கள் அனைவருக்கும் கிட்டி யுள்ளது. இவற்றை அனுபவிக்கும்போது பிறருக்கு ஊறு

[1978 ஆகஸ்ட் 31

நேராவண்ணம், பொது அமைதிக்கு பங்கம் ஏற்படாத வகையில், ஒவ்வொருவரும் செயல்பட வேண்டுமென்பதை நாம் அனைவரும் மறந்து விடலாகாது. அவ்வாறு ஒருவருக் கொருவர் இணைந்து வாழும் முறையிலேயே, ஒருவருக் கொருவர் உதவும் வழியிலேயேதான் பொருளாதார சுதந் திரத்தை அடைவதற்கு நம்மால் முடியும். பொருளாதார சுதந்திரத்தை ஒவ்வொருவரும்பெற, சுவைக்க, பல்வேறு முயற்சிகளில் தமிழக அரசு ஈடுபட்டு, திட்டங்கள் பல வற்றை, அதிலும் குறிப்பாக சமுதாயத்தில் பிற்பட்டோர், கிராமப் பகுதி வாழ் மக்கள் ஆகியோர்களுக்கு பயனளிக்கும் வகையில் செயல்படுத்தி வருகின்றது. இத்தகைய பணிகளை நிறைவேற்றுவதற்கு சமுதாய வாழ்வில் ஒழுங்கும், கட்டுப் பாடும், அமைதிச் சூழலும் உருவாக்க அனைவரும் பாடுபடுவது இன்றியமையாததாகும்.

3. சென்ற ஆண்டு விவசாய விளைபொருள் உற்பத்தி யில், நெல், சிறு தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், கரும்பு போன்ற பல்வேறு விளை பொருள்களிலும் உயர்ந்த உற்பத்திச் சாதனைகளை நமது மாநிலம் எய்தியுள்ளது. விவசாய இடு பொருள்களைத் தக்க தருணத்தில் அளிப்பதன் மூலமும், நம்மிடம் உள்ள நீர் ஆதாரங்களை நன்கு பயன் படுத்துவதன் மூலமும், விரிவாக்கப் பணிகளைச் செம்மையாக நடத்துவதன் மூலமும், இந்த ஆண்டு இம்முயற்சியில் தொடர்ந்து இன்னும் அதிக உற்பத்தி அளவுகளை அடைவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. சென்ற ஆண்டு வேளாண்மை விளைபொருள்கள் விற்பனைக்கான தனி இயக்குநரகம் ஒன்று உருவாக்கப்பட்டது. மாவட்டங்களிலுள்ள பல்வேறு வேளாண்மை ஒழுங்கு முறை விற்பனை கூடங்களின் உறுப்பினர் கள் பல ஆண்டுகளுக்கு முன்பு தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் பதவிக்காலம் முடிவுற்றபோதும் மறு தேர்தல்கள் நடத்தப் படாததால், தொடர்ந்து பதவி வகித்து வந்தார்கள். விற்பனைக் குழுக்களின் நிர்வாகத்தில் முறைகேடுகள் நடந் துள்ளதாலும், உறுப்பினர்கள் போதுமான அளவு அக்கறை எடுத்துக் கொள்ளாததாலும், வேளாண்மை விளைபொருள் விற்பனைச் சட்டத்தை விரிவாகத் திருத்தும் வரை காத்திராமல் குழுக்களைக் கலைத்துவிட்டு அவசரச் சட்டமொன்று பிறப்பிக்கப் பட்டது. அதற்குப் பதிலாக சட்ட வரைவு இக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும்.

4. நமது மாநிலத்தில் உணவு நிலைமை மிகவும் திருப்தி கரமாக இருந்து வருகிறது. உணவுப் பொருட்கள் வெளிச் சந்தையில் நியாயமான விலையில் எளிதாகக் கிடைக்கின்றன வரும் குறுவைப் பயிரும் நன்கு அமையுமென்று எதிர்பார்க்கப் படுகிறது. மேலும் அடுத்த ஓர் ஆண்டில் பொது விநியோகத் திற்குத் தேவைப்படும் அளவு அரிசியை அரசு கையிருப்பாக



1978 ஆகஸ்ட் 31]

வும் வைத்திருக்கிறது. கடந்த சில ஆண்டுகளில் இந்த
அளவு திருப்திகரமான உணவு நிலைமை இருந்ததில்லை என்று
கூறுவது மிகையாகாது. அரசு எடுத்து வந்துள்ள விழிப்பான
நடவடிக்கைகளின் விளைவாகத் தேவையான பண்டங்களின்
விலைகள் பொதுவாக கட்டுக்குள்ளேயே இருந்து வருகின்றன.
ஒரு ஆண்டுக்கு முன் கடலை எண்ணெய் விலை பெரிதும்
உயர்ந்திருந்தது; அது தற்போது கட்டுக்குள் இருந்து
வருகிறது. நல்லெண்ணை விலை கடந்த சில மாதங்களாக
வெகுவாக குறைந்துள்ளது. கடந்த சில ஆண்டுகளைவிட
இந்த ஆண்டில் வெளிச் சந்தையில் சர்க்கரையின் விலையும்
குறைந்துள்ளது.

5. விவசாய விளைபொருட்களை நன்கு உற்பத்தி செய்
வதற்கு ஏற்றவண்ணம், அவைகளுக்கு நியாயமான விலை
கொடுப்பதின் அவசியத்தை அரசு உணரத் தவறவில்லை.
முக்கியமாக, நெல் விளைவிப்போருக்கு நியாயமான அடிப்படை
யில் கொள்முதல் விலை நிர்ணயிக்கப்படவேண்டும் என்பதை
இந்த அரசு மத்திய அரசுடன் பலமுறை தொடர்ந்து
வலியுறுத்தி வந்துள்ளது. அண்மையில் கூட்டப்பட்ட தென்
மாநில முதலமைச்சர்களின் மாநாட்டிலும் நெல்லுக்கு
நியாமான விலை கொடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்
பட்டது. அரசு, இதனடிப்படையில் நெல் உற்பத்தியாளர்
களுக்கு ஊக்கம் அளிக்கும் வண்ணம், நெல் நடமாட்டத்தின்
மீதான கட்டுப்பாடுகளை நீக்கி விட்டது. வரும் குறுவைப்
பருவத்திலும் இது தொடர வேண்டும் என்பதே இந்த
அரசின் கொள்கையாகும். மேலும், முதன் முறையாக,
ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் நேரடியாக விவசாயி
களிடமிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்
நெல்லை விலைக்கு வாங்கி வருகின்றது. இதன் விளைவாக
உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை கிட்டுமென்று அரசு
நம்புகின்றது.

6. சென்ற எனது உரையின் போது, தமிழ் நாட்டில்
அப்போது ஏறக்குறைய 9,300 நியாயவிலைக் கடைகள்
இருந்தன என்றும், அந்த வசதியை மேலும் விரிவாக்கி
தமிழ் நாட்டின் 16,000 ரெவின்யூ கிராமங்கள் ஒவ்
வொன்றிலும் நியாயவிலைக் கடைகள் அமைக்க முயற்சிகள்
மேற்கொள்ளப்படும் எனவும் அறிவித்திருந்தேன். ஒன்பது
ஆயிரத்துக்கு மேற்பட்ட நியாய விலைக் கடைகளில் இதுவரை
நான்கு ஆயிரத்துக்கு மேற்பட்ட கடைகள், பல பொருள்
களையும் விற்கும் கடைகளாக இத்திட்டத்தின் அடிப்படையில்
மாற்றப்பட்டுள்ளன. மேலும் சுமார் 1,500 புதிய கடைகள்
கூட்டுறவுகளின் மூலமும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப
கழகத்தின் மூலமும் திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை
ஆகிய மாவட்டங்களில் திறக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்
கைகளின் வாயிலாக திருநெல்வேலி, இராமநாதபுரம்,

மதுரை மாவட்டங்களில் எல்லா ரெவின்யூ கிராமங்களிலும் மக்களின் அத்தியாவசிய தேவைகளை நிறைவு செய்யும் வண்ணம் பல பொருள்களையும் விற்கும் நியாயவிலைக் கடைகள் செயல்படத் துவங்கி விட்டன. அடுத்த கட்டமாக சேலம், தர்மபுரி, கோவை, தஞ்சை ஆகிய மாவட்டங்களில் 2,000க்கு மேற்பட்ட கூட்டுறவுக் கடைகள் பல்பொருள் விற்பனை நியாயவிலைக் கடைகளாக மாற்றப்படுவதோடு, 2,500-க்கு மேற்பட்ட புதிய கடைகளை திறப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

7. இந்திய பால் வள நிறுவனத்தின் ஒத்துழைப்புடன், இரண்டாவது பால் பெருக்கத் திட்டம் ஒன்றை தமிழக அரசு உருவாக்கி வருகின்றது. இந்த ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேறிய பின், மொத்தம் பத்து இலட்சம் உறுப்பினர்கள் கொண்ட 4,600 பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படும். இப்போதுள்ள பால் சேகரிக்கும் அளவு, இத்திட்டம் நிறைவேற்றப்பட்ட பின் மூன்று மடங்காக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் விளைவாக கிராமப் புறங்களில் கூடுதல் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு, தொடர்ந்து கிராம மக்களுக்கு, அதிலும் குறிப்பாக ஏழை விவசாயிகளுக்கும் நிலமற்ற விவசாயிகளுக்கும் அதிக வருமானம் அதன்மூலம் கிடைக்கும். பால் உற்பத்தியுடன் இணைந்த பொருள்களான பால் பொடி, வெண்ணை போன்ற பிற பொருள்கள் உற்பத்தி செய்வதற்கும் இதன்கீழ் வழி செய்யப்படும்.

8. மழைவளம் காப்பதற்கும், பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையான பல மூலப்பொருட்களை அளிப்பதற்கும் காடுகள் ஆதாரமாக விளங்குகின்றன. எனவே, காட்டுவளத்தைப் பெருக்குவதிலும், அதனைப் பாதுகாப்பதிலும், அரசு பல நடவடிக்கைகளை முனைப்பாக மேற்கொண்டுள்ளது. கடலோரப் பகுதிகளில் காற்றுத் தடுப்பாக, காடுகள் வளர்ப்பதற்கான புதிய திட்டம் ஒன்று மொத்தம் மூன்று கோடி ரூபாய்ச் செலவில் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் இவ்வாண்டு 26 இலட்சம் ரூபாய் செலவில், 1,500 ஹெக்டேரில் காடுகள் வளர்க்கப்படும்.

9. மூலப்பொருட்களை மட்டும் உற்பத்தி செய்யும் இடங்களாக கிராமங்களும், அவற்றிலிருந்து மற்ற பொருட்களை உற்பத்தி செய்யும் இடங்களாக நகரங்களும் இருக்கும் நிலை மாறினலொழிய கிராமங்கள் வளர்ச்சியடைய வழியில்லை; வேலை வாய்ப்புகள் பெருமளவில் பெருகுவதற்கும் வாய்ப்பு இல்லாமல் போய்விடும். எனவே, வேலை வாய்ப்புகள் பெருகுவதற்கேற்ற வண்ணம், கிராமத் தொழில்களை உருவாக்க முயற்சிகள் செய்ய வேண்டும். அதற்கேற்ற முதலீடுகள் கிராமப் பகுதிகளில் நடைபெற ஊக்குவிப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். அரசு பயன்படுத்தும் பொருட்களை கிராமத் தொழில்



கள் செய்ய ஊக்குவிப்பதுடன், அரசும், அரசு நிறுவனங்களும் அவற்றை வாங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நோக்கத்திற்கு உதவும் வகையில், சிறப்பான திட்டங்கள் பலவற்றை கதர் கிராமத் தொழில் வாரியம் ஆர்வமுடன் செயல்படுத்தி வருகின்றது. இம்முயற்சிகளின் விளைவாக இந்த ஆண்டில் 30,000 பேர்களுக்குக் கூடுதல் வேலை வாய்ப்புகள் உருவாகுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், கிராமத் தொழில் வளர்ச்சியில் தனிக் கவனம் செலுத்துவதற்கு வகை செய்யும்பொருட்டு, கதர்-கிராமத் தொழில் வாரியத்தை இரண்டாக விரிவாக்கி, கதர் உற்பத்தியை கவனிப்பதற்கு ஒரு அமைப்பும், கிராமத் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கு மற்றொரு அமைப்பும் உருவாக்க தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. மத்திய கதர்-கிராம ஆணைக்குழுவின் அனுமதி பெற்று, இந்தப் புதிய அமைப்புகளைச் செயல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

10. தமிழ் நாட்டில் பட்டு நெசவுத் தொழில் மிகவும் தொன்மையானது. இதற்கு வேண்டிய பட்டு நூலை வெளி மாநிலங்களிலிருந்தே பெரும்பாலும் நாம் பெற்று வருகின்றோம். அண்மைக் காலத்தில் மேற்கொண்ட ஆய்வுகளின் விளைவாக, மலைப்பாங்கான பகுதிகள் மட்டுமன்றி, சமவெளிகளிலும் பட்டுப்புழு வளர்ப்பதை நல்ல முறையில் நடத்த முடியும் என்று கண்டறிந்துள்ளோம். இதனடிப்படையில், பட்டுப்புழு வளர்ப்பதற்கும், பட்டு நூல் நூற்பதற்குமான சிறப்பான முயற்சிகளை அரசு எடுத்து வருகிறது. கடந்த ஓராண்டில் எடுக்கப்பட்ட முயற்சிகளின் விளைவாக, சுமார் 20,000 பேர்களுக்குக் கூடுதல் வேலை வாய்ப்பு வசதிகள் ஏற்பட்டுள்ளனவென்று கணக்கிடப்படுகிறது.

11. 50,000 மக்கள் தொகைக்கு மேற்படாத ஊர்களில், கருவிகள், இயந்திரங்கள் இவற்றின்மீது ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேற்படாத முதலீடு உடைய சின்னஞ் சிறு தொழில்களுக்கு உதவும் பொருட்டு, தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் இந்த நிதி ஆண்டு முடிவுக்குள் மொத்தம் 900 சிறு தொழிற் கூடங்களை அமைப்பதென்று முடிவு செய்து நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. இந்தத் தொழிற் கூடங்கள் சிறு தொழில்கள் நடத்துபவர்களுக்கு தவணைக் கொள்முதல் முறையில் விற்கப்படும். இவ்வாறு கிராமக் கைத்தொழில்கள், பட்டுத் தொழில், சிறு தொழில்கள், சின்னஞ் சிறு தொழில்கள் ஆகிய துறைகளில் எடுக்கப்படும் பரவலான முயற்சிகளின் விளைவாக ஓராண்டு காலத்தில் மொத்தம் ஒரு இலட்சம் பேர்களுக்குக் கூடுதல் வேலை வாய்ப்பு உருவாக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. நிதி ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் எடுக்கப்பட்ட முயற்சிகளின் பலனாக சுமார் 25,000 பேர்களுக்கு கூடுதல் வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

12. மேலும், சென்ற ஆண்டு வரை தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளில், பெரிய தொழில்களுக்கு மட்டுமே வட்டியில்லாக் கடனாக, விற்பனை வரி, சில விதிகளுக்கு உட்பட்டு திருப்பித் தரப்பட்டு வந்தது. இத்திட்டம், இப்போது சிறு தொழில்களும் பயனடையும் வண்ணம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இதன்படி, மாநிலம் முழுவதிலும், பெருநகர வளர்ச்சிப் பகுதிகள் நீங்கலாக, ஒரு இலட்சம் மக்கள் தொகைக்குக் குறைவாகவுள்ள பகுதிகளில் சிறு தொழில்களை அமைப்பவர்களுக்கு, விற்பனைவரிக் கடன்கள் வழங்கப்படும். இதன் மூலம் சிற்றூர்களிலும், கிராமங்களிலும், சிறு தொழில்களைத் தொடங்க பலருக்கும் ஊக்கம் பிறக்கும் என்று அரசு கருதுகிறது. கிராமத் தொழில், சிறு தொழில் வளர்ச்சிக்கு சிறப்புக் கவனம் செலுத்தும் அதே நேரத்தில், சிமிண்டு, இரசாயனப் பொருட்கள் போன்ற அடிப்படையான பெருந்தொழில்களை நிறுவுவதிலும் அரசு தொடர்ந்து நாட்டம் செலுத்திவரும்.

13. கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதில், பத்து சதவீதம் நிகர வருவாய் வரும் லாபகரமான மின் இணைப்புகளையே கொடுப்பது என்ற கொள்கையின் அடிப்படையில், மின் வாரியம் செயல்பட்டு வந்துள்ளது. இதன் அடிப்படையில் செயல்படும்போது, ஒரு குறிப்பிட்ட மின் இணைப்பு கொடுப்பது, லாபகரமானதென்றோ அவ்வாறு இல்லையென்றோ முடிவெடுப்பதில் சிரமங்கள் இருப்பது அரசுக்குத் தெரிய வந்தது. எனவே, இனிமேல் இதை விட்டு விட்டு, மின் இணைப்பு கொடுப்பதற்கு விண்ணப்பம் கொடுத்த தேதியை அடிப்படையாகக் கொண்டு, முதலில் விண்ணப்பம் கொடுத்தவருக்கு முன்னதாகவும், பின்னால் விண்ணப்பம் கொடுத்தவருக்கு அதன் பின்னதாகவும், வரிசைக் கிரமப்படி மின் இணைப்பு வழங்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசு, அண்மையில், மின் உற்பத்தி மீது முதல் முறையாக ஆயத் தீர்வை விதித்துள்ளது. மின்சாரம் உற்பத்தி செய்து வழங்குவதில் மின் வாரியங்கள் லாபம் காட்டுவதில்லை என்பதை எடுத்துக் காட்டி, இந்த ஆயத் தீர்வை விதிப்பதைக் கைவிட வேண்டுமென்று நமது அரசு பலமுறை வலியுறுத்தியது. பிற மாநில அரசுகளும் இவ்வாறே வலியுறுத்தின. எனினும் மத்திய அரசு, ஆயத் தீர்வை விதிக்கும் முடிவினை மாற்றாது, உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் மீது ஆயத் தீர்வை விதித்துள்ளது. இதனை மத்திய அரசுக்கு செலுத்தும் வகையில், சிறப்புக் கட்டணம் ஒன்றை விதிப்பதற்கான சட்ட வரைவு ஒன்று, அவையின் ஒப்புதலுக்காக இக்கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும்.

14. உலக வங்கி ஒத்துழைப்புடன், 147 கோடி ரூபாய்ச் செலவில், தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளும், பேரூராட்சிகளும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் பெறுவதற்கும், கழிவுநீரகற்று வசதிகள் பெறுவதற்குமான திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் வாழும் 75 இலட்சம் பேர், பாதுகாக்கப்பட்ட நல்ல குடிநீர்



பெற்று பயனடைவார்கள்; 12 இலட்சம் பேர், புதை சாக்கடைத் திட்டத்தின் மூலம் கழிவு நீரகற்றும் வசதி பெறுவர். மராட்டிய, கர்நாடக, ஆந்திர மாநிலங்கள் மனமுவந்து சென்னைக்குத் தர இருக்கும் 15,000 மில்லியன் கன அடி நீரில், முன்னதாக விரைந்து தனது பங்கான 5,000 மில்லியன் கன அடி நீரை கொடுப்பதன் பொருட்டு, தொழில் நுட்ப ஆய்வு செய்ய ஒப்புக்கொண்டதற்கு ஆந்திர மாநில அரசையும், ஆந்திர முதல் அமைச்சரையும் பாராட்டுவது எனது கடமையாகும். கிருஷ்ணா ஆற்றிலிருந்து சென்னைக்கு தண்ணீர் கொண்டு வருவதற்கான ஆய்வு வேலைகள், விரைவாக, ஆந்திர மாநில பகுதியிலும் தமிழ்நாட்டின் பகுதியிலும் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. குடியரசுத் தலைவர் ஆட்சியின் போதும், அதற்கு முன் மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைக்கப்பட்ட அரசும் நடத்திய பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து, காவிரி நீர் பங்கீடு பற்றி இந்த அரசும் முனைப்பாக பேச்சு வார்த்தைகள் நடத்தி வருகின்றது. அண்டை மாநிலங்களுடன் நடந்து வரும் இப்பேச்சு வார்த்தைகளின் போது, பொது நன்மையை அடிப்படையாகக் கொண்டும், எந்த மாநிலத்திற்கும் பாதகம் ஏற்படாத வகையில் நல்ல திர்வு காண வேண்டுமென்றும், தமிழ்நாட்டில் காவிரியின்கீழ் பயிரிடப்படும் பரப்பளவு எந்த வகையிலும் பாதிக்கப்படாத வகையில் முடிவுகள் இருக்க வேண்டுமென்ற எண்ணத்திலும், பேச்சு வார்த்தைகள் நடந்து வருகின்றன. மேலும், மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளில், தேவைக்கு மேல் உபரியான தண்ணீரில் ஒரு பகுதியையேனும் தமிழகத்திற்குப் பெற்று இராமநாதபுரம், நெல்லை, கோவை மாவட்ட வறட்சிப் பகுதிகளுக்கு நீர் கிடைக்கச் செய்ய, அண்டை மாநிலங்களுடன் பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

15. கிராமப் பகுதிகளில் மருத்துவ வசதிகளை பெருக்கும் வகையில், ஆரம்ப சுகாதார நிலையம் ஒவ்வொன்றிலும், தற்போதுள்ள இரண்டு மருத்துவர்களுடன் மேலும் ஒரு மருத்துவரை நியமிக்கும் திட்டத்தின்கீழ் மொத்தம் 230 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். 100 நடமாடும் குழுக்களும் இவ்வாண்டு புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. சேவை மனப்பான்மையுடன் செயல்பட்டு வரும் தனி நிறுவனங்களின் உதவியுடன் நடத்தப்படும் சிறு சுகாதார நிலையங்கள், புதிதாக 50 திறப்பதற்கும் அரசு இவ்வாண்டு அனுமதி அளித்துள்ளது. கண்ணொளி காக்கும் திட்டம் ஒன்று, மதுரையை மையமாகக் கொண்டு, இராமநாதபுரம், மதுரை, புதுக்கோட்டை மாவட்டங்களில் ஐந்து பெரிய மருத்துவமனைகளிலும் 45 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், விரைவில் செயல்படுத்தப்படும். இதன் மூலம், இந்த மாவட்டங்களிலுள்ள மக்களின் கண்ணொளி பழுதுபடாமல் பாதுகாக்கப்படுவதற்கான நடவடிக்கைகள், சிறப்பாக மேற்கொள்ளப்படும். உயிர் காக்கும் மருந்துகள், தலையானவர்களுக்கு முறையாகச் சென்று அடைவதற்கும், அவை தவறான வழியில் வீணாகாமல் தடுப்பதற்கும், புதுமையான பல நடவடிக்கைகளை அரசு மேற்

கொண்டுள்ளது. மேலும் நாட்டு மருத்துவ முறையை மேம்படச் செய்யவும், சென்னை நகரிலுள்ள பெரிய மருத்துவ மனைகள் இயங்குவதிலுள்ள குறைபாடுகளை கண்டறிந்து களைவதற்கான அறிவுரைகள் வழங்குவதற்கும், இரண்டு சிறப்பான மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

16. வெளிநாடுகளிலே, அதிலும் குறிப்பாக மேற்கு ஆசிய நாடுகளிலே புதிதாக ஏற்பட்டுவரும் வேலை வாய்ப்புகளை, தமிழ் நாட்டில் உள்ளவர்கள் முறையாக பயன்படுத்தி பலனடைவதற்கு வழி செய்யும் வகையில், அயல் நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம் (Overseas Employment Corporation) ஒன்றை அமைப்பதென்று தமிழக அரசு முடிவு செய்துள்ளது. வேலை வாய்ப்பு பற்றிய சரியான விவரங்கள் தரப்பட்டு, வெளி நாடுகளில் சென்று வேலை செய்ய விரும்புவோரின் சிரமங்கள் குறையும் வகையிலும், அவர்கள் ஈட்டும் பணம் தமிழகத்தில் செம்மையாக முதலீடு செய்வதற்கு வழிவகைகள் செய்யவும் இந்த நிறுவனம் பாடுபடும்.

17. உள்ளாட்சி நிறுவனங்களுக்கு தேர்தல் நடத்தும் பணியினை, மதுரை மாநகராட்சித் தேர்தல் நடத்தியதின் மூலம், அரசு துவங்கியுள்ளது. ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி மன்றங்கள், சென்னை மாநகராட்சி ஆகியவற்றிற்கான தேர்தல்களும் விரைவில் நடத்தி முடிக்கப்படும்.

18. வரவு-செலவுத் திட்டத்தின்போது, 400 உயர் நிலைப் பள்ளிகள் இரண்டு ஆண்டு மேற்படிப்புக்கான மேல் நிலைப் பள்ளிகளாக மாற்றப்படும் என்று அரசு அறிவித்திருந்தது. கிராமப்புற மக்களின் நலனில் பெரும் நாட்டம் கொண்டுள்ள இந்த அரசு, இத்தகைய மேல்நிலைப் பள்ளிகளை 400-லிருந்து 916 ஆக உயர்த்தி, மேற்படிப்புக்கான வசதிகளை மாநிலம் முழுவதிலும் பரவலாக்கியுள்ளது பெருமைக்குரியதாகும். ஆண்டுத் துவக்கத்தில், பெற்றோர்களுக்கும் கல்வித் துறையைச் சார்ந்த விற்பன்னர்களுக்கும் இருந்த ஐயப்பாடுகள் நீங்கி, இன்று உயர்நிலைக் கல்விக்கு மேற்பட்ட இரண்டு ஆண்டுக்குரிய படிப்பை செயல்படுத்துவதில், தமிழக அரசு மற்ற எல்லா மாநிலங்களுக்கும் வழி காட்டியாக விளங்குகிறது என மைய அரசு பாராட்டியுள்ளது, நாம் அனைவரும் பெருமைப்படத்தக்க ஒன்றாகும்.

19. சென்ற எனது உரையின் போது, தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாடு, தமிழ் இலக்கியம் இவற்றை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்று குறிப்பிட்டு இருந்தேன். வறுமையில் வாடும் தமிழ் அறிஞர்களுக்கு ஓய்வூதியம் கொடுப்பது, காசி பல்கலைக் கழகம், விஸ்வபாரதி பல்கலைக் கழகம், குஜராத்திலுள்ள சர்தார் படேல் பல்கலைக் கழகம்,





ஆக்ரா பல்கலைக் கழகம் முதலிய பல பல்கலைக் கழகங்களுக்கு தமிழ் பயிற்றுவிப்பதற்கான மானிய உதவிகள் தருவதன் மூலமும், கிடைத்தற்கரிய சுவடிகளைத் திரட்டுவதன் மூலமும், தமிழ்க் கவிஞர் ஒருவரை அரசவைக் கவிஞராக நியமிப்பதன் வாயிலாகவும் இந்த அரசு தமிழ் மொழி வளர்க்கும் பணிகளிலும் ஆர்வமுடன் ஈடுபட்டு வருகின்றது. மேலும், பிற நாட்டு நல்லறிஞர் எழுதிய நூல்களைத் தமிழில் மொழி பெயர்க்கவும், அவ்வாறே தமிழ் இலக்கியங்களை மற்ற மொழிகளில் மொழி பெயர்க்கவும் அரசு சிறப்பு முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. சட்ட மொழி பெயர்ப்புக் குழுவின் காலத்தை நீட்டித்து, சட்டங்களை மொழி பெயர்க்கும் பணியும் சிறப்பாக நடைபெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நமது அரசியல் சட்டத்தை உருவாக்கிய அறிஞர்கள், ஆழ்ந்து சிந்தித்து, பல நாள் விவாதித்து ஒருமனதாக, மாநில அரசுகளின் பொறுப்பின்கீழ் கல்வி இருக்கும் வண்ணம், அரசியல் சட்டத்தை இயற்றினார்கள். அந்நிலை இடையிலே மாற்றப்பட்டது. மீண்டும் 'கல்வி' மாநிலங்களின் பொறுப்பில் வரவேண்டுமென்ற இந்த அரசின் உறுதியான கருத்தைச் செயல்படுத்துவதற்கான முயற்சிகளை, மத்திய அரசு மேற்கொண்டுள்ளதைப் பாராட்ட விரும்புகிறேன்.

20. மொழி, மக்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்துள்ள அடிப்படை உணர்வாகும். எனவே மொழிக் கொள்கை மிகவும் கவனத்துடன் அணுக வேண்டிய ஒன்றாகும். தமிழகத்தின் மீது மொழித் திணிப்பு எந்த வகையில், உருவில், வழியில் வந்தாலும் சரி, அதனை இந்த அரசு ஏற்றுக்கொள்ளாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அது விபரீத விளைவுகளை ஏற்படுத்துமென்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழக முதல்வர், தென் மாநில முதலமைச்சர்களின் மாநாட்டைக் கூட்டி, தொடர்புடைய, முக்கியமான பிரச்சினைகளைப் பற்றி விவாதித்திருப்பது வரவேற்பிற்கும் பாராட்டிற்கும் உரிய ஒன்றாகும். இந்த மாநாட்டில் முதலமைச்சர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து, சில மத்திய அமைச்சரகங்கள் பிரதமரது உறுதி மொழிக்கு மாறாக, இந்தியைத் திணிப்பதை எடுத்துக் காட்டி, பிரதமர் இதனைத் தடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர். அதன் பின்னர், நமது பிரதமர், நாடாளுமன்றத்தில் யார் மீதும் மொழித் திணிப்பு இருக்காதென்றும், மொழி பற்றிய கொள்கையினைச் செயல்படுத்தும் போது, வழங்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு ஊறு ஏதும் நேரிடாத வகையில் செயல்படுவோம் என்றும் அண்மையில் கூறியுள்ளதை இந்த அவைக்கு குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். எனினும், பிரதமரின் வாக்குறுதிகளை மறுதலிக்கும் வகையில், மைய அரசின் சில அமைச்சரகங்கள் தொடர்ந்து இந்தியைத் திணிக்கும் முயற்சிகள் மேற்கொள்வது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. சென்ற ஆண்டில் நான் குறிப்பிட்டது போல், தமிழக அரசு இரு மொழிக் கொள்கையை செயல்படுத்துவதில் தொடர்ந்து உறுதியான

கொண்டுள்ளது. மேலும் நாட்டு மருத்துவ முறையை மேம்படச் செய்யவும், சென்னை நகரிலுள்ள பெரிய மருத்துவ மனைகள் இயங்குவதிலுள்ள குறைபாடுகளை கண்டறிந்து களைவதற்கான அறிவுரைகள் வழங்குவதற்கும், இரண்டு சிறப்பான மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

16. வெளிநாடுகளிலே, அதிலும் குறிப்பாக மேற்கு ஆசிய நாடுகளிலே புதிதாக ஏற்பட்டுவரும் வேலை வாய்ப்புகளை, தமிழ் நாட்டில் உள்ளவர்கள் முறையாக பயன்படுத்தி பலனடைவதற்கு வழி செய்யும் வகையில், அயல் நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம் (Overseas Employment Corporation) ஒன்றை அமைப்பதென்று தமிழக அரசு முடிவு செய்துள்ளது. வேலை வாய்ப்பு பற்றிய சரியான விவரங்கள் தரப்பட்டு, வெளி நாடுகளில் சென்று வேலை செய்ய விரும்புவோரின் சிரமங்கள் குறையும் வகையிலும், அவர்கள் ஈட்டும் பணம் தமிழகத்தில் செம்மையாக முதலீடு செய்வதற்கு வழிவகைகள் செய்யவும் இந்த நிறுவனம் பாடுபடும்.

17. உள்ளாட்சி நிறுவனங்களுக்கு தேர்தல் நடத்தும் பணியினை, மதுரை மாநகராட்சித் தேர்தல் நடத்தியதின் மூலம், அரசு துவங்கியுள்ளது. ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி மன்றங்கள், சென்னை மாநகராட்சி ஆகியவற்றிற்கான தேர்தல்களும் விரைவில் நடத்தி முடிக்கப்படும்.

18. வரவு-செலவுத் திட்டத்தின்போது, ' 400 உயர் நிலைப் பள்ளிகள் இரண்டு ஆண்டு மேற்படிப்புக்கான மேல் நிலைப் பள்ளிகளாக மாற்றப்படும் என்று அரசு அறிவித்திருந்தது. கிராமப்புற மக்களின் நலனில் பெரும் நாட்டம் கொண்டுள்ள இந்த அரசு, இத்தகைய மேல்நிலைப் பள்ளிகளை 400-லிருந்து 916 ஆக உயர்த்தி, மேற்படிப்புக்கான வசதிகளை மாநிலம் முழுவதிலும் பரவலாக்கியுள்ளது பெருமைக்குரியதாகும். ஆண்டுத் துவக்கத்தில், பெற்றோர்களுக்கும் கல்வித் துறையைச் சார்ந்த விற்பன்னர்களுக்கும் இருந்த ஐயப்பாடுகள் நீங்கி, இன்று உயர்நிலைக் கல்விக்கு மேற்பட்ட இரண்டு ஆண்டுக்குரிய படிப்பை செயல்படுத்துவதில், தமிழக அரசு மற்ற எல்லா மாநிலங்களுக்கும் வழி காட்டியாக விளங்குகிறது என மைய அரசு பாராட்டியுள்ளது, நாம் அனைவரும் பெருமைப்படத்தக்க ஒன்றாகும்.

19. சென்ற எனது உரையின் போது, தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாடு, தமிழ் இலக்கியம் இவற்றை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்று குறிப்பிட்டு இருந்தேன். வறுமையில் வாடும் தமிழ் அறிஞர்களுக்கு ஓய்வூதியம் கொடுப்பது, காசி பல்கலைக் கழகம், விஸ்வபாரதி பல்கலைக் கழகம், குஜராத்திலுள்ள சர்தார் படேல் பல்கலைக் கழகம்,



ஆக்ரா பல்கலைக் கழகம் முதலிய பல பல்கலைக் கழகங்களுக்கு தமிழ் பயிற்றுவிப்பதற்கான மானிய உதவிகள் தருவதன் மூலமும், கிடைத்தற்கரிய சுவடிகளைத் திரட்டுவதன் மூலமும், தமிழ்க் கவிஞர் ஒருவரை அரசவைக் கவிஞராக நியமிப்பதன் வாயிலாகவும் இந்த அரசு தமிழ் மொழி வளர்க்கும் பணிகளிலும் ஆர்வமுடன் ஈடுபட்டு வருகின்றது. மேலும், பிற நாட்டு நல்லறிஞர் எழுதிய நூல்களைத் தமிழில் மொழி பெயர்க்கவும், அவ்வாறே தமிழ் இலக்கியங்களை மற்ற மொழிகளில் மொழி பெயர்க்கவும் அரசு சிறப்பு முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. சட்ட மொழி பெயர்ப்புக் குழுவின் காலத்தை நீட்டித்து, சட்டங்களை மொழி பெயர்க்கும் பணியும் சிறப்பாக நடைபெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நமது அரசியல் சட்டத்தை உருவாக்கிய அறிஞர்கள், ஆழ்ந்து சிந்தித்து, பல நாள் விவாதித்து ஒருமனதாக, மாநில அரசுகளின் பொறுப்பின்கீழ் கல்வி இருக்கும் வண்ணம், அரசியல் சட்டத்தை இயற்றினார்கள். அந்நிலை இடையிலே மாற்றப்பட்டது. மீண்டும் 'கல்வி' மாநிலங்களின் பொறுப்பில் வரவேண்டுமென்ற இந்த அரசின் உறுதியான கருத்தைச் செயல்படுத்துவதற்கான முயற்சிகளை, மத்திய அரசு மேற்கொண்டுள்ளதைப் பாராட்ட விரும்புகிறேன்.

20. மொழி, மக்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்துள்ள அடிப்படை உணர்வாகும். எனவே மொழிக் கொள்கை மிகவும் கவனத்துடன் அணுக வேண்டிய ஒன்றாகும். தமிழகத்தின் மீது மொழித் திணிப்பு எந்த வகையில், உருவில், வழியில் வந்தாலும் சரி, அதனை இந்த அரசு ஏற்றுக்கொள்ளாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அது விபரீத விளைவுகளை ஏற்படுத்துமென்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழக முதல்வர், தென் மாநில முதலமைச்சர்களின் மாநாட்டைக் கூட்டி, தொடர்புடைய, முக்கியமான பிரச்சினைகளைப் பற்றி விவாதித்திருப்பது வரவேற்பிற்கும் பாராட்டிற்கும் உரிய ஒன்றாகும். இந்த மாநாட்டில் முதலமைச்சர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து, சில மத்திய அமைச்சரகங்கள் பிரதமரது உறுதிமொழிக்கு மாறாக, இந்தியைத் திணிப்பதை எடுத்துக் காட்டி, பிரதமர் இதனைத் தடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர். அதன் பின்னர், நமது பிரதமர், நாடாளுமன்றத்தில் யார் மீதும் மொழித் திணிப்பு இருக்காதென்றும், மொழி பற்றிய கொள்கையினைச் செயல்படுத்தும் போது, வழங்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு ஊறு ஏதும் நேரிடாத வகையில் செயல்படுவோம் என்றும் அண்மையில் கூறியுள்ளதை இந்த அவைக்கு குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். எனினும், பிரதமரின் வாக்குறுதிகளை மறுதலிக்கும் வகையில், மைய அரசின் சில அமைச்சரகங்கள் தொடர்ந்து இந்தியைத் திணிக்கும் முயற்சிகள் மேற்கொள்வது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. சென்ற ஆண்டில் நான் குறிப்பிட்டது போல், தமிழக அரசு இரு மொழிக் கொள்கையை செயல்படுத்துவதில் தொடர்ந்து உறுதியான

நம்பிக்கை கொண்டுள்ளது. அண்மையில், நாட்டின் கல்விக் கொள்கைப் பற்றி பல்வேறு மாநிலங்களின் கருத்தை ஆராயும் நேரத்தில், இருமொழிக் கொள்கையின்பால் நமக்குள்ள உறுதிப்பாட்டை அரசு மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

21. நமது அனைவரின் மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய, விடுதலைப் போராட்டத்தில் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்தி, தியாகத்தின், நாட்டுப்பற்றின் இலக்கணமாகத் திகழ்ந்த, மறைந்த தலைவர் காமராசர் அவர்களின் நினைவாக, மதுரையில் உள்ள பல்கலைக் கழகத்திற்கு அவரது பெயரிடப்பட்டு இருப்பதை மன்ற உறுப்பினர்கள் அனைவரும் வரவேற்பார்கள் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை. சாதி, சமய வேறுபாடற்ற சமுதாயத்தை உருவாக்கிட, சமதர்மக் கோட்பாடுகள் மக்களிடையே மலர்ந்து மணம் பரப்பிட கடுமையாகப் பணியாற்றி, தமிழ்நாட்டு மக்களின் அன்புக்கும், நம்பிக்கைக்கும் உரியவராக வாழ்ந்த பேரறிஞர் அண்ணாவின் பெயர் தாங்கி உருவாக இருக்கும் "பேரறிஞர் அண்ணா தொழில் நுட்ப பல்கலைக் கழகம்" நமது நாட்டின் குடியரசுத் தலைவரால் அடுத்த வாரம் திறக்கப்பட இருக்கிறது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். பல்வேறு தொழில் நுட்பக் கல்லூரிகளையும், நிறுவனங்களையும் இணைத்து உருவாக்கப்பட்டிருக்கும் இந்த பல்கலைக் கழகம், தொழில் நுட்பக் கல்வியின் தரத்தை உயர்த்துவதோடு, நமது மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும், அதன் விளைவாக பொருளாதார வளர்ச்சிக்கும் பெருந்துணையாக இயங்கும் என்பதில் ஐயமில்லை. கோவையிலும், திருச்சியிலும் பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்துவதற்கு அரசு வலியுறுத்தி வருகின்றது. இதற்கான ஒப்புதலை பல்கலைக் கழக ஆணைக்குழு விரைவில் வழங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

22. சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கின்ற மக்களின் நலன்களையும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்டவர்களின் உரிமைகளையும் பாதுகாத்து வளர்ப்பதில் நாட்டம் கொண்டுள்ள இந்த அரசு, மூட நம்பிக்கைகளைச் சுட்டெரித்து, அறியாமைச் சேற்றில் நெளி புழுக்களாக வாழ்ந்திட்ட மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி, சமுதாய சீர்திருத்தத்தின் "விடிவெள்ளி" எனும் சிறப்பினைப்பெற்று, தனது இறுதி மூச்சிருந்தவரை தொடர்ந்து பணி மேற்கொண்ட பெரியார் ஈ. வே. ரா. அவர்களின் நினைவாக, மத்திய அரசு சிறப்பு அஞ்சல் தலை வெளியிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டது. இதற்கு மத்திய அரசு தனது ஒப்புதலைத் தந்து இருப்பதை மகிழ்ச்சியுடன் பாராட்டுகிறேன். அவரது சிறந்த பணியின் காரணமாக, நாட்டின் இந்தப் பகுதியில் சாதி சமயச் சழக்குகளின்றி, அறிவார்ந்த முறையிலே அனைவரும் ஒன்றுபட்டு வாழ்வதற்கான அமைதி சூழ்நிலை உருவாயிற்று என்றால் அது மிகையாகாது. ஆனால், சில சமூக விரோதிகள் ஆங்காங்கே சாதி வேறுபாடுகளைத் தூண்டிவிட்டு, ஒன்றுபட்டு





வாழும் மக்களிடையே குழப்பத்தையும், உடைமைகளுக்குச் சேதத்தையும், உயிர்களுக்கு ஆபத்தையும் ஏற்படுத்த முயல்வதை எனது அரசு, நடு நிலை நின்று, உறுதியாகக் கண்டிக்கிறது. சமூக விரோதிகள் இவ்வாறு குழப்பம் விளைவிப்பதைத் தடுக்க அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பையும் மன்ற உறுப்பினர்களனைவரும் தருவீர்கள் என்று நான் உளமார நம்புகிறேன். விழுப்புரத்தில் நடந்த துயரச் சம்பவம், நம் அனைவரையும் நடுங்க வைக்கின்ற ஒன்றாகும். அந்த எதிர்பாராத, விரும்பத்தகாத கலவரத்தின் மூலம் படுகொலைக்கு ஆளாகியவர்களுக்காக வருத்தத்தையும், அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு நம் அனைவரின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இப்படிப்பட்ட நிலைமைகளை உருவாக்குகின்றவர்கள் எப்படிப்பட்ட உயர்ந்த பதவிகளில் இருந்தாலும் சரி, எப்படிப்பட்ட வசதியும் செல்வாக்கும் பெற்றவர்களாக இருந்தாலும் சரி, சமூக விரோதத் தீமைகளில் ஈடுபடுவார்களானால், தயவு தாட்சண்யமின்றி, அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இந்த அரசு எக் காரணத்தைக் கொண்டும் அவர்களை மன்னிக்காது. இந்த துயர நிகழ்ச்சிகளை ஒட்டி துயர் துடைக்கும் முயற்சிகளுக்காக நிதி உதவி தந்த பிரதமர் அவர்களுக்கும், மற்றவர்களுக்கும், தங்களாலான மற்ற உதவி செய்தவர்களுக்கும் இந்த அரசு நன்றி தெரிவித்துப் பாராட்டுகின்றது.

23. காந்தியடிகள் கனவு கண்டதற்கேற்பவும், அண்ணா அவர்கள் விழைந்ததற்கொப்பவும், நமது மாநிலத்தை இலஞ்ச ஊழலற்ற மாநிலமாக உருவாக்க அரசு உறுதி பூண்டுள்ளது. நிர்வாகத்தின் எல்லா மட்டங்களிலும் இத்தீமையைக் களைந்தெறிய அரசு முனைப்பாக நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.

24. அரசின் மதுவிலக்குக் கொள்கையைச் செயல் படுத்த எல்லாக் கட்சிகளும் ஒத்துழைப்பதற்காக நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். தஞ்சையில் அண்மையில் நடைபெற்ற மதுவிலக்கு மாநாட்டில் அவர்கள் அனைவரும் ஒத்துழைத்ததற்கு நன்றி கூற விரும்புகிறேன். மற்ற இடங்களில் அத்தகைய மாநாடுகள் நடத்த எடுக்கும் முயற்சிகளுக்கு, எல்லோரும் துணை நிற்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன். இது அன்றி, சாராவி (denatured spirit) வைத்திருந்து விற்பதற்கான உரிமங்கள், அரசு பொது நிறுவனங்கள், கூட்டுறவுகள், தொழில் வணிக இயக்குநர், மத்திய தொழில் வளர்ச்சி தலைமை இயக்குநர் ஆகியோரிடம் பதிவு செய்திருப்பவர்களைத் தவிர, மற்ற தனிப்பட்டவர்களுக்கு வழங்குவதைத் தடை செய்ய அரசு முடிவு செய்துள்ளது. நாட்டிலுள்ள நல்லோர் அனைவரும், ஏழை எளிய மக்களின் வாழ்வுக்கு வளம் கூட்டும் மதுவிலக்கினை நன் முறையில் செயல்படுத்த, மதுவிலக்கு பிரசாரம்

உட்பட தங்களாலான எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன். அரசின் உயிர்க் கொள்கையான மதுவிலக்கை நிறைவேற்றுவதில், அண்மைக் காலமாக, உண்மையான பொறுப்புணர்வுடன் தங்கள் உயிரையும் துச்சமென மதித்து, கடமையாற்றி வருகின்ற காவல் துறை அதிகாரிகளை இந்த நேரத்தில் பாராட்ட விரும்புகிறேன். ஏழை மக்கள் நலம் பயக்கும் மதுவிலக்கு திட்டத்தை நிறைவேற்றும் போது, மாநில அரசுக்கு ஏற்படுகின்ற மிகப் பெரிய நிதியிழப்பை ஈடுகட்டுவதற்கான சிறப்பான வழிமுறைகளைக் காண வேண்டும் என்று மத்திய அரசை நாம் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளோம். அரசியலமைப்புச் சட்டத்தின் நெறி முறைகளை செயல் படுத்துவதில் ஆர்வமும், அக்கறையும் காட்டிய காரணத்தினால், தமிழகமும், குஜராத் மாநிலமும் பெருத்த வருவாயை இழக்க நேரிட்டுள்ளது. எனவே இந்த இழப்பின் விளைவாக, வளர்ச்சிப் பணிகளும், நியாயமான செலவினங்களும் குன்றிவிடாதபடி, மத்திய அரசு சிறப்பு நிதி உதவிக்கு வழிவகை செய்ய வேண்டுமென்று இந்த அரசு கேட்டுக் கொண்டுள்ளது. மத்திய அரசு, நமது மாநிலத்தின் பற்றாக்குறை நிதி ஆதாரங்களையும், கொள்கைப் பிடிப்பினையும் கருத்தில் கொண்டு, கணிசமான அளவுக்கு நிச்சயமாக நிதி உதவி வழங்கும் என்று நம்புகிறேன்; மறுக்கப்படும் நிலை ஏற்படாதென்று எதிர்பார்ப்போம்!

25. அண்டை மாநிலங்களுடன் தொடர்புள்ள பல பிரச்னைகளைப் பற்றி, நட்பு உணர்வோடும், ஒருவரையொருவர் புரிந்து கொள்ளும் வகையிலும், அரசு, பல்வேறு கட்டங்களில் பேச்சு வார்த்தை நடத்தி வந்திருப்பது, பாராட்டுதற்குரியதாகும். இதன் மூலம் மாநிலங்களிடையே உள்ள பிரச்னைகள் மட்டுமின்றி, நாட்டின் பொதுவான நன்மைக்குரிய பல்வேறு பிரச்னைகளிலும் பொதுக் கருத்துக்களை உருவாக்கி செயல்படவும் வழிவகை செய்யப் பட்டு இருக்கிறது. அண்மையில், சென்னையில் முதன் முறையாக நடைபெற்ற தென் மாநில முதலமைச்சர்கள் மாநாடும், அதைத் தொடர்ந்து வேறு பல மாநில முதல்வர்கள் கலந்து கொள்ள இருக்கும் முதலமைச்சர்கள் மாநாடும், நாட்டிற்கே வழிகாட்டியாக அமைந்து, நாட்டின் ஒற்றுமைக்கும், மேம்பாட்டிற்கும், ஏற்ற பல கருத்துக்களையும் செயல் முறைகளையும் உருவாக்கும் என நம்புகிறேன். மண்டலக் குழுக்கள் (Z n l C unc l) கூட்டப்படாமல் இருந்துவரும் நிலையில், இவ்வாறு முதலமைச்சர்கள் கூடிப் பேசுவது சாலப் பொருத்தமானதாகும்.

26. புதிய ஐந்தாண்டுத் திட்டத்தில், வறுமையை ஒழிப்பதும், வேலையில்லாத் திண்டாட்டத்தை அகற்றுவதும் முக்கிய குறிக்கோள்களாக அமைந்துள்ளன. இவற்றை நிறைவேற்றும் பொறுப்பில், மாநில அரசுகளும், மத்திய அரசும் சம பங்காளிகளாகச் செயல் படுகின்றனவென்றாலும், இப்பணியில் மாநிலங்களின் பொறுப்பே மிகுதியானது. இந்தப் பின்னணியில், மாநிலங்



களுக்கு நிதி ஆதாரங்களை கூடுதலாகத் தரும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று, அண்மையில் நடந்த தேசிய வளர்ச்சி மன்றக் குழுவின் கூட்டத்தில் நமது அரசு எடுத்துரைத்துள்ளது. சட்டப்படி மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்கு வருகின்ற மானியங்களை உயர்த்த வேண்டும் என்றும் இக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. மேலும், மாநில அரசுகளின் பொறுப்பில் உள்ள வேளாண்மை, மருத்துவம் போன்ற பல்வேறு துறைகளின் கீழ், மத்திய அரசு நாடு முழுமைக்குமாக சிறப்புத் திட்டங்கள் பலவற்றை தீட்டி, மாநிலங்கள் அவற்றை செயல்படுத்தும் நிலை மாறி, இந்த துறைகளில் மத்திய அரசு தீட்டும் திட்டங்கள் மிகக் குறைவாக இருக்க வேண்டுமென்று 1968-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் வலியுறுத்திய கருத்து, மீண்டும் தமிழக அரசின் சார்பில் வலியுறுத்திக் கூறப்பட்டது. மாநிலங்களுக்கு வருவாய் தரக்கூடிய முறையில், மத்திய அரசு வரி விதிக்கக்கூடிய, நிதி தரக்கூடிய பல்வேறு இனங்களின் கீழும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும் எல்லா மாநிலங்களும் எடுத்துக் காட்டியுள்ளன. இவற்றின் விளைவாக, மாநில அரசுகளுக்கு சட்ட ரீதியான முறையிலும், மற்ற வழிகளிலும் கூடுதல் நிதி ஆதாரங்கள் கிடைப்பதற்கு மத்திய அரசு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாநிலங்கள் வளமான நிதி ஆதாரத்துடன் செயல் படுவதே, நாட்டின் ஒற்றுமையை உறுதிப்படுத்தும்; மத்திய அரசையும் மேலும் வலிமையுள்ளதாக அமைக்க உதவும்.

27. நிர்வாக இயந்திரத்தைச் செம்மைப்படுத்தி, மக்களின் தேவைகளுக்கேற்ற வண்ணம் விரைந்து செயல்படுத்துவதற்கேற்ற வகையில், பல்வேறு நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து எடுத்து வருகின்றது. மேலும், அரசு அலுவலர்கள், தங்கள் குறைகளை தக்க முறையில் எடுத்துரைக்க வாய்ப்புக்கள் தரும் வகையில், அரசுச் செயலாளர்கள் மட்டத்திலும், அந்தந்த துறைத் தலைவர்கள் மட்டத்திலும், அலுவலர்கள், அதிகாரிகள் அடங்கிய கூட்டுக் குழுக்களை அமைக்க அரசு முடிவெடுத்து, அண்மையில் ஆணைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன. மேலும் அரசு அலுவலர்கள் பணி புரிவது பற்றிய பல்வேறு விதிகளை ஆராய்ந்து, சீரமைப்பதற்காக தனிக் குழு ஒன்றையும் அரசு நியமித்துள்ளது. அண்மையில் அளிக்கப்பட்டுள்ள சம்பள ஆணைக்குழுவின் பரிந்துரைகளை, அவசர, அனுதாப உணர்வுடன், இந்த அரசு ஆராய்ந்து வருகிறது. விரைவில் இப்பரிந்துரைகளின் மீதான அரசின் முடிவுகள் வெளியிடப்படும். சென்ற எனது உரையில் குறிப்பிட்டது போல, ஏழை எளியவர்களுக்கு சட்ட சம்பந்தமான உதவிகள் செய்வதற்காக, மாவட்டங்கள் அனைத்திலும் சட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டு அவை நன்கு பணியாற்றத் துவங்கியுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் கூற விரும்புகிறேன். நீதிபதி திரு. இஸ்மாயில் அவர்களின் அறிக்கையை ஒட்டி, தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. நீதிக்கும் நியாயத்திற்கும் கட்டுப் பட்டுள்ள இந்த அரசு, நிச்சயம் முறையான முடிவுகளை எடுக்கத் தவறாது.

[1978 ஆகஸ்ட் 31

28. சில நாட்களே, இந்தச் சட்டமன்றக் கூட்டம் நடைபெறவிருக்கின்றது. விவாதத்திற்கு முக்கியமான சட்டப் பணிகள் முன் வைக்கப்பட்டுள்ளன. தனக்கெனத் தனித் தன்மையையும், மரபையும், மங்காப் புகழையும் பெற்றிருக்கின்ற தமிழகச் சட்ட மன்ற உறுப்பினர்கள், அவையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பையும், ஆக்க பூர்வமான ஆலோசனைகளையும் வழங்குவார்கள் என நான் எதிர்பார்க்கின்றேன். நமது மாநில மக்கள் வளம் பெருகி, மகிழ்வுடன் வாழ்வதற்காக நீங்கள் அனைவரும் மேற்கொள்ளவிருக்கும் முயற்சிகள் வெற்றி பெற உங்களனைவருக்கும் எனது நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

வணக்கம்.

## இணைப்பு III.

[83..ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 108-க்கான விடையைக் காண்க].

தமிழ் நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்தவர்களின் அரசியல் கட்சிச் சார்புகள் பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| I. | உள்நாட்டு அவசர நிலைக் காலத்தில் தடை விதிக்கப்பட்ட இயக்கங்கள் :— | |
| | 1. ஆர்.எஸ்.எஸ்.எஸ். .. .. .. | 36 |
| | 2. கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்டு-லெனினிஸ்டு) .. | 51 |
| | 3. ஆனந்த மார்க் .. .. .. .. | 6 |
| II. | அரசியல் கட்சிகள் :— | |
| | 1. தி.மு.க. .. .. .. .. .. | 419 |
| | 2. காங்கிரஸ் (ஸ்தாபனம்) .. .. | 24 |
| | 3. ஜனசங்கம் .. .. .. .. | 1 |
| | 4. சோஷலிஸ்டுக் கட்சி .. .. .. | 3 |
| | 5. கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்டு) .. .. | 70 |
| | 6. அ.தி.மு.க. .. .. .. .. | 5 |
| | 7. பார்வார்டு பிளாக் .. .. .. | 1 |
| | 8. தி.க. .. .. .. .. | 35 |
| | 9. தமிழரசுக் கட்சி .. .. .. .. | 1 |
| III. | அரிசி மற்றும் உணவுப் பொருட்களைச் சட்ட விரோதமாகக் கடத்தியவர்கள் .. .. | 37 |
| IV. | சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டவர்கள் .. | 47 |
| V. | மதுவிலக்குக் குற்றவாளிகள் .. .. | 22 |
| | மொத்தம் .. | 768 |



1978 ஆகஸ்ட் 31]

## இணைப்பு IV.

[83..ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 109-க்கான விடையைக் காண்க.]

தமிழ் நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் ''மிசா'' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்தவர்களின் குடும்பப் படி அளிக்கப்பட்டவர்களின் பெயர் விவரம் பின்வருமாறு :—

| வரிசை எண்ணும் பெயரும். (1) | மாவட்டம். (2) |
|---|---|
| 1. டி.ஆர். ராஜாராம் .. .. | ராமநாதபுரம். |
| 2. பி.உன்னி கிருஷ்ணன் .. .. | தஞ்சாவூர். |
| 3. எஸ்.கே. நம்பியார் .. .. | திருச்சிராப்பள்ளி. |
| 4. வி. பரமேஸ்வரன் .. .. | ,, |
| 5. எஸ். அல்லாபிச்சை .. .. | ,, |
| 6. எஸ். பாலவிநாயகம் .. .. | திருநெல்வேலி. |
| 7. எஸ். எம்.காசி என்கிற கலைமணி காசி. | ,, |
| 8. ஆர்.கே. ரத்தினசாமி .. .. | ,, |
| 9. என். பெரியசாமி .. .. .. | திருநெல்வேலி. |
| 10. நடராசன் என்கிற கேப்டன் நடராஜன். | ,, |
| 11. ஜி. கிருஷ்ணமூர்த்தி .. .. .. | மதுரை. |
| 12. சீனி என்கிற நெல்பேட்டை சீனி .. | ,, |
| 13. கே. கிருஷ்ணமூர்த்தி .. .. .. | மதுரை. |
| 14. வி. பழனிமுத்து .. .. .. | தென்னாற்காடு. |
| 15. பி.சிங்காரம் .. .. .. .. | ,, |
| 16. ஆர். கணேசன் .. .. .. .. | சென்னை. |
| 17. ஆர். சௌந்தரராஜன் .. .. .. | ,, |
| 18. கே.ஈ. காதர்மீரான் .. .. .. | ,, |
| 19. கே.எஸ். பார்த்தசாரதி .. .. | செங்கற்பட்டு. |
| 20. எம்.பி. வேதாசலம் .. .. .. | ,, |
| 21. டி. சீனிவாசன் .. .. .. .. | ,, |
| 22. எஸ். சேதுராமன் .. .. .. | ராமநாதபுரம். |
| 23. எஸ்.எஸ். கருப்பையா .. .. .. | ,, |
| 24. அ. பாலுசாமி .. .. .. .. | ,, |
| 25. ம. நடராஜன் .. .. .. .. | ,, |
| 26. ஷேக் சுல்தான் .. .. .. | ,, |
| 27. எஸ். ராஜாங்கம் .. .. | ,, |

| வரிசை எண்ணும் பெயரும். | மாவட்டம். |
|---|---|
| (1) | (2) |
| 28. பொன்னுசாமி | ராமநாதபுரம். |
| 29. தங்கவேலு பண்டாரம் | ,, |
| 30. குருசாமி என்கிற கம்யூனிஸ்டு குருசாமி. | ,, |
| 31. ம. வெங்கட்ராமன் | தஞ்சாவூர் |
| 32. பாரதிமோகன் | ,, |
| 33. பி.எஸ். தனுஷ்கோடி | ,, |
| 34. என். தங்கராசு | ,, |
| 35. எஸ். முருகையன் | ,, |
| 36. கே. ராமரத்தினம் | ,, |
| 37. அ. முருகேசன் | ,, |
| 38. ஜி.ஆர். புண்ணியமூர்த்தி | ,, |
| 39. ஓ. பி. ராமமூர்த்தி | ,, |
| 40. ஏ. எஸ். மோகன் | ,, |
| 41. எம். எஸ். ராமலிங்கம் | ,, |
| 42. ஏன். என். சுந்தரராமன் | ,, |
| 43. எம். பி. வீரன் | செங்கற்பட்டு. |
| 44. எ. குணசீலன் | ,, |
| 45. நூர்முகமது | கன்யாகுமரி. |
| 46. ஐ. ஜீவானந்தம் | திருநெல்வேலி. |
| 47. என். தேவன் | ,, |
| 48. ஆர். எஸ். மூப்பிடாதி | ,, |
| 49. ஆர். பிரமநாயகம் | ,, |
| 50. சி. எம். பெருமாள் | கன்யாகுமரி. |
| 51. கே. பார்த்தசாரதி | செங்கற்பட்டு. |
| 52. என். பி. தாசப்பன் | ,, |
| 53. எம். குப்புசாமி | ,, |
| 54. பி. ஏ, சலீம் | கோயம்புத்தூர். |
| 55. கொடுமுடி கிருஷ்ணன் | ,, |
| 56. கோவை மணியன் | ,, |
| 57. என். ரத்தினஜோதி | கன்யாகுமரி. |
| 58. நரசய்யா | செங்கற்பட்டு. |
| 59. பி. ஆறுமுகம் | ,, |
| 60. பொட்டி முனுசாமி | ,, |





| வரிசை எண்ணும் பெயரும். | மாவட்டம் |
|---|---|
| (1) | (2) |
| 61. கே. முனுசாமி | செங்கற்பட்டு. |
| 62. எம். மாரிமுத்து | சேலம். |
| 63. பி. வி. கிருஷ்ணன் | மதுரை. |
| 64. ஈ. எஸ். எம். வீரய்யா | ,, |
| 65. கே. எம். எம். மேத்தா | ,, |
| 66. கே. ஜி. அந்தோணி | மதுரை. |
| 67. குணசேகரன் என்கிற இரும்பொறை. | ,, |
| 68. ஜி. அர்ஜுனன் | கடலூர். |
| 69. எம். ஆர். சங்கரன் | மதுரை. |
| 70. ஏ. மாரியப்பன் | ,, |
| 71. வெடி கிருஷ்ணன் | மதுரை |
| 72. ஈ. ம்பி | திருநெல்வேலி |
| 73. ஏ. என். பாளையம் | செங்கற்பட்டு. |
| 74. பி. மாப்பிள்ளைசாமி | திருநெல்வேலி. |
| 75. டி. கே. சுவாமித ஸ் | ,, |
| 76. ஜெயபால் நாடார் | செங்கற்பட்டு. |
| 71. கே. பெருமாள் | ராமநாதபுரம். |
| 78. எஸ். பத்மனுபன் | கன்யாகுமரி. |
| 79. பி. வேலாயுதம். | ,, |
| 80. ஏ. ஆறுமுகம் பிள்ண் | ,, |
| 81. ஆர். பெர்னுட் | ,, |
| 82. ஜி. ரஸ்ஸல்ராஜ் | ,, |
| 83. எம். சங்கர் | வட ஆற்காடு. |
| 84. ஏ. தோப்பசாமி | ,, |
| 85. அரங்கபாஸ்கரன் | தஞசாவூர். |
| 86. பி. கணபதி | ,, |
| 87. எஸ். சோமசுந்தரம் | ,, |
| 88. ஜி. தங்கராசு | ,, |
| 89. ஈ. ராமதாஸ் ராஜு | ,, |
| 90. எஸ். நாராயணன் | ,, |
| 91. மச்சக்கண்டன் என்கிற மணி | செஙகற்பட்டு. |
| 62. ஏ. கோபால் | ,, |
| 93. ஆர். மாணிக்கம் | தஞ்சாவூர். |

[1978 ஆகஸ்ட் 31

| வரிசை எண்ணும் பெயரும். (1) | மாவட்டம். (2) |
|---|---|
| 94. ஆர். துரை | தஞ்சாவூர். |
| 95. ஏ. அப்துல் சமத் | ,, |
| 96. டி. ஏ. மணி | வடஆற்காடு. |
| 97. ஏ. ராஜேந்திரன் | ,, |
| 98. என். பி. வெங்கட்ராமன் | ,, |
| 99. என். நரசிம்மன் | ,, |
| 100. டி. எம். சேகரன் | ,, |
| 101. பி. சந்திரசேகரன் | ,, |
| 102. வி. கண்ணன் | வட ஆற்காடு |
| 103. கே. ஆறுமுகம் | ,, |
| 104. வி. பி. சுப்பிரமணி | ,, |
| 105. டி. பத்மநாபன் | ,, |
| 106. நெல்லை புஹாரி | திருநெல்வேலி. |
| 107. வி. டி. தேவராஜ் | வட ஆற்காடு |
| 108. வி. சேகர் | ,, |
| 109 டி. மணி | ,, |
| 110. டி. சந்திரன் | ,, |
| 111. ஆர். சுப்ரமணியன் | ,, |
| 112. பி. வி. சீனிவாசன் | ,, |
| 113. பி. ராமச்சந்திரன் | மதுரை. |
| 114. புதுவீடு கே. ராமச்சந்திரன் | ராமநாதபுரம். |
| 115. வி. ராதாகிருஷ்ணன் | ,, |
| 116. பி. திவாகரன் | ,, |
| 117. என். அச்சுதன் | ,, |
| 118. என். மணியன் | தஞ்சாவூர். |
| 119. எம். ராமசாமி | ,, |
| 120. ஆர். ஏ. டேவிட் | சென்னை. |
| 121. ஜி. பெரியசாமி | சேலம். |
| 122. கண்ணுசாமி | மதுரை. |
| 123. மாயி என்கிற மாயாண்டி | ,, |
| 124. கே. ஆறுமுகம். | ,, |
| 125. ஈ. வீரராகவன் | செங்கற்பட்டு. |
| 126. எம். பக்கில் நாடார் | ,, |



1978 ஆகஸ்ட் 31]

| வரிசை எண்ணும் பெயரும். | மாவட்டம். (2) |
|---|---|
| 127. ஆர். ஏ. கண்ணன் | வட ஆற்காடு. |
| 128. வி. சி. தங்கவேலு | ,, |
| 129. எஸ். ராஜி | ,, |
| 130. வி. துரைக்கண்ணு | தென்னாற்காடு |
| 131. ராஜகோபால் என்கிற ராஜு | ,, |
| 132. ராஜு என்கிற பிரான்சிஸ் | ,, |
| 133. வேலன் என்கிற வேலாண்டி நாடார் | தென் ஆற்காடு. |
| 134. டி. ஆர். சுந்தரம் | ,, |
| 135. ஆர். கனகசபாபதி | ,, |
| 136. வி. செல்லப்பன் | கன்யாகுமரி. |
| 137. எஸ். நடராஜன் | தென்னாற்காடு |
| 138. சி. குப்புசாமி | ,, |
| 139. ஆறுமுகம் என்கிற தீப்பொறி ஆறுமுகம் | மதுரை. |
| 140. எம். கே. என். ஜான் என்கிற நவாப்ஜான். | தஞ்சாவூர். |
| 141. சத்தியா என்கிற மாரியப்பன் என்கிற துரைசாமி. | சேலம். |
| 142. வி. ஜகதீசன் | சென்னை. |
| 143. கிருஷ்ணப் பிள்ளை | கன்யாகுமரி. |
| 144. திருவேங்கடம் என்கிற கோபால் | தென் ஆற்காடு |
| 145. ஏ. எம். கோதண்டராமன் | வட ஆற்காடு. |
| 146. முத்து சுப்ரமணியம் | மதுரை. |
| 147. பி. சுந்தரேசன் | செங்கற்பட்டு. |
| 148. பி. தாஸ் என்கிற ஆசான் | கன்யாகுமரி. |
| 149. எம். ஸ்ரீரங்கன் | சேலம். |
| 150. எம். சச்சிதானந்தம் | தென்னாற்காடு |
| 151. என். கருப்பையா தேவர் | ராமநாதபுரம். |
| 152. பி. வெங்கடாசலம் | தஞ்சாவூர். |
| 153. மன்னர் மன்னன் | ,, |
| 154. அங்கப்பன் | சேலம். |
| 155. ஆர். கணேசன் | செங்கற்பட்டு. |
| 156. கே. சீனிவாசன் | தென்னாற்காடு. |
| 157. பெரியதம்பி | சேலம். |
| 158. மரியதாஸ் | தஞ்சாவூர். |
| 159. மாதவன் | ராமநாதபுரம். |

## இணைப்பு—V.

[85ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 115-க்கான விடையைக் காண்க.]

1970-ஆம் ஆண்டு முதல் இன்று வரையில் ஒரு நக்ஸலைட்டும் போலீஸ் காவலில் இறக்கவில்லை.

இருந்தபோதிலும் 11-1-1977 ஆம் தேதியன்று சீராளன் என்ற நக்ஸலைட்டு சில காவலர்களால் நட்ராம்பள்ளி காவல் நிலைய எல்லைக்குள் கொல்லப்பட்டதாக புகார் வந்தது. அப்புகாரின் பேரில் வருவாய்த்துறை வாரிய உறுப்பினர் திரு. எஸ். பி. சீனிவாசன் விசாரணை நடத்தினர், அவ்விசாரணையின் பரிந்துரையின்படி குற்றவாளிகள் என்று கருதப்பட்ட காவல்துறை அதிகாரிகள் மீது நீதிமன்றத்தில் வழக்கு இடும்படி உத்திரவிடப்பட்டுள்ளது. வழக்கு நடந்து வருகிறது.



## இணைப்பு VI.

]103 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 144-க்கான விடையைக் காண்க.]

அவையின் முன் வைக்கப்படும் விவர அறிக்கை.

1. 1975 ஆம் ஆண்டு முன்னாள் அமைச்சர்கள் பெற்ற பயணப்படி மற்றும் தினப்படி ஆகியவற்றைக் காட்டும் விவர அறிக்கை : மற்றும்

2. 1975-ம் ஆண்டு அவர்கள் வசித்து வந்த வீடுகளுக்கு மின் கட்டணத்திற்கான செலவு.

| வரிசை எண்ணும், முன்னாள் அமைச்சர்களின் பெயரும். | பயணப்படி. | தினப்படி. | மொத்தம். | மின் கட்டணத்திற்கான செலவு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 1 திரு. மு. கருணாநிதி, முதல்வர். | 20,947·00 | .. | 20,947·00 | .. |
| 2 திரு. இரா. நெடுஞ்செழியன், கல்வி மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர். | 22,169·96 | 1,249·50 | 23,419·46 | 10,377·00 |
| 3 திரு. க. அன்பழகன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். | 15,806·56 | 205·00 | 16,011·56 | 8,111·00 |

| வரிசை எண்ணும், முன்னாள் அமைச்சர்களின் பெயரும். | பயணப்படி. | தினப்படி. | மொத்தம். | மின் கட்டணத்திற்கான செலவு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 4 திரு. என்.வி. நடராசன், பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர். | .. | .. | .. | 3,607·00 |
| 5 திரு. ப. உ. சண்முகம், வருவாய்த் துறை அமைச்சர். | 14,744·93 | 681·50 | 15,426·43 | 9,769·00 |
| 6 திரு. செ. மாதவன், உணவுத்துறை அமைச்சர். | 25,754·05 | 917·50 | 26,671·55 | 5,009·00 |
| 7 திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா, தொழில் மற்றும் மின்துறை அமைச்சர். | 23,244·68 | 2,052·00 | 25,296·68 | 4,986·00 |
| 8 திரு. சி. பா. ஆதித்தனார், விவசாயத்துறை அமைச்சர். | 23,307·72 | 182·50 | 23,490·22 | .. |
| 9 திரு. எ.பி. தர்மலிங்கம், உள்ளாட்சித் துறை அமைச்சர். | 11,167·13 | 1,486·10 | 12,653·23 | 10,067·00 |
| 10 திரு. மன்னை நாராயணசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர். | 13,901·50 | 1,841·45 | 15,742·95 | 3,573·00 |
| 11 திரு. க. ராசாராம், தொழிலாளர் நல அமைச்சர். | 36,360·10 | 1,367·00 | 37,727·10 | 6,053·00 |
| 12 திரு. சி. வி. எம். அண்ணாமலை, பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர். | 13,854·44 | 600·00 | 14,454·44 | 2,569·30 |
| 13 திரு. ஒ. பி. இராமன், வணிக வரித் துறை அமைச்சர். | 19,860·70 | 235·00 | 20,095·70 | 5,554·00 |
| 14 திரு. எஸ். இராமச்சந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர். | 17,377·46 | 1,137·50 | 18,514·96 | 1,092·00 |
| 15 திரு. மு. கண்ணப்பன், அறக்கட்டளைத் துறை அமைச்சர். | 33,995·53 | 1,435·00 | 35,430·53 | 5,386·00 |
| 16 திரு.என். இராசாங்கம், அரிசன நலத்துறை அமைச்சர். | 21,675·98 | 630·00 | 22,305·98 | 5,089·00 |
| | 3,14,167·74 | 14,020·05 | 3,28,187·79 | 81,242·30 |

## இணைப்பு VII.

[97-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 147-க்கான விடையைக் காண்க.]

1972-73 முதல் 1976-77 வரையிலான கேளிக்கை வரி மீது கூடுதல் மேல் வரி பற்றிய விவர அறிக்கை.

வணிகவரி மாவட்டவாரியாக.

| மாவட்டம். | 1971-72. | 1972-73. | 1973-74. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| சென்னை நகரம் :— | | | |
| பிராந்தியம் 1 .. .. .. | 1,12,694·60 | 4,01,060·91 | 9,02,573·54 |
| பிராந்தியம் 2 .. .. .. | 5,575·65 | 24,017·95 | 42,212.30 |
| பிராந்தியம் 3 .. .. .. | 37,915·10 | 1,54,737·23 | 3,15,262·83 |
| பிராந்தியம் 4 .. .. .. | 1,77,054·79 | 6,66,991·33 | 13,96,139·99 |
| பிராந்தியம் 5 .. .. .. | 1,91,559·90 | 8,43,307·46 | 17,07,349·62 |
| பிராந்தியம் 6 .. .. .. | 45,828·30 | 2,26,918·87 | 4,14,625·42 |
| பிராந்தியம் 7 .. .. .. | 4,25,656·06 | 11,01,239·88 | 19,45,972·20 |
| செங்கல்பட்டு .. .. .. | 1,98,807·00 | 7,15,631·15 | 11,68,572·20 |
| திருச்சி (நகரம்) .. .. .. | 2,06,568·33 | 7,98,583·40 | 14,12,820·83 |
| திருச்சி (கிராமப் புறம்) .. .. | 2,20,405·63 | 7,59,966·82 | 12,09,379·30 |
| புதுக்கோட்டை .. .. .. | .. | .. | 5,36,320·77 |
| தஞ்சாவூர் .. .. .. | 2,64,470·71 | 9,40,142·72 | 19,22,083·11 |
| கும்பகோணம் .. .. .. | 2,29,781·85 | 7,74,842·81 | 15,21,900·56 |



| | 1974-75. | 1975-76. | 1976-77. |
|---|---|---|---|
| | (5) | (6) | (7) |
| சென்னை நகரம்— | | | |
| பிராந்தியம் 1 .. .. .. | 16,89,918·85 | 18,56,153·75 | 21,18,837·31 |
| பிராந்தியம் 2 .. .. .. | 61,186·40 | 65,561·15 | 1,03,181·40 |
| பிராந்தியம் 3 .. .. .. | 4,27,249·10 | 5,52,336·45 | 6,69,585·69 |
| பிராந்தியம் 4 .. .. .. | 22,90,994·51 | 29,64,591·38 | 36,25,238·10 |
| பிராந்தியம் 5 .. .. .. | 28,01,421·06 | 34,78,793·50 | 39,41,001·16 |
| பிராந்தியம் 6 .. .. .. | 9,81,378·35 | 14,87,190·22 | 18,98,960·15 |
| பிராந்தியம் 7 .. .. .. | 28,78,475·31 | 33,25,977·49 | 44,32,509·89 |
| செங்கல்பட்டு .. .. .. | 15,67,062·38 | 19,96,737·71 | 24,70,891·56 |
| திருச்சி (நகரம்) .. .. .. | 20,54,409·49 | 27,37,689·54 | 31,63,993·61 |
| திருச்சி (கிராமப் புறம்) .. .. | 12,03,065·46 | 16,91,058·31 | 19,48,128·55 |
| புதுக்கோட்டை .. .. .. | 7,08,401·65 | 8,97,324·49 | 11,49,380·46 |
| தஞ்சாவூர் .. .. .. | 20,57,140·69 | 29,13,715·44 | 32,64,174·98 |
| கும்பக்கோணம் .. .. .. | 21,86,124·67 | 30,14,502·11 | 30,78,643·71 |

| மாவட்டம் (1) | 1971-72 (2) | 1972-73 (3) | 1973-74 (4) |
|---|---|---|---|
| தென்னாற்காடு | 3,48,075·26 | 12,61,550·93 | 20,90,590·65 |
| வட ஆற்காடு | 3,66,924·42 | 13,48,148·27 | 23,25,642·32 |
| மதுரை | 2,53,774·31 | 9,97,242·04 | 18,94,495·88 |
| திண்டுக்கல் | 2,73,421·17 | 10,57,082·61 | 18,47,827·96 |
| இராமநாதபுரம் | 2,72,901·84 | 10,73,123·02 | 18,07,224·80 |
| திருநெல்வேலி | 2,10,503·20 | 8,12,888·38 | 13,99,915·46 |
| தூத்துக்குடி | 1,57,069·05 | 6,02,343·40 | 10,08,980·66 |
| கோயம்புத்தூர் | 2,24,122·79 | 9,11,052·54 | 16,93,436·66 |
| பொள்ளாச்சி | 1,86,835·70 | 7,42,656·65 | 13,56,834·02 |
| ஈரோடு | 2,12,754·43 | 7,19,807·56 | 14,86,093·90 |
| நீலகிரி | 49,584·90 | 2,16,286·37 | 3,39,294·41 |
| சேலம் | 4,25,689·59 | 16,43,129·56 | 29,85,239·79 |
| தர்மபுரி | 1,20,801·86 | 4,20,388·21 | 6,72,757·12 |
| மொத்தம் | 52,18,776·44 | 1,92,13,140·07 | 3,54,03,546·30 |



| மாவட்டம். | 1974-75 (5) | 1975-76 (6) | 1976-77 (7) |
|---|---|---|---|
| தென்னாற்காடு | 30,19,730·55 | 32,79,788·56 | 42,16,311·34 |
| வட ஆற்காடு | 30,74,195·06 | 40,56,904·90 | 50,65,972 53 |
| மதுரை | 29,23,780·71 | 37,84,936·88 | 41,29,661·05 |
| திண்டுக்கல் | 24,51,667·80 | 30,79,233·32 | 35,62,749·87 |
| இராமநாதபுரம் | 23,79,947·84 | 29,67,999.54 | 33,75,543·92 |
| திருநெல்வேலி | 21,34,787·73 | 28,35,219·16 | 28,67,344·81 |
| தூத்துக்குடி | 14,16,560·74 | 17,48,543·39 | 19,72,281·19 |
| கோயம்புத்தூர் | 28,22,641·79 | 36,56,801·71 | 41,74,299·77 |
| பொள்ளாச்சி | 20,02,678·37 | 26,12,886·45 | 30,35,349·11 |
| ஈரோடு | 20,72,154·44 | 28,44,767·50 | 33,71,666·11 |
| நீலகிரி | 5,20,026·44 | 7,11,432·54 | 8,72,047·90 |
| சேலம் | 39,28,458·51 | 48,74,720·92 | 58,63,369·16 |
| தர்மபுரி | 6,38,498·21 | 10,39,830·43 | 14,91,380·69 |
| மொத்தம் | 5,02,91,906·11 | 6,44,74,696·84 | 7,58,62,504·02 |

[1978 ஆகஸ்ட் 31

## இணைப்பு VIII.

[98ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினு எண். 149-க்கான விடையைக் காண்க].

விவர அறிக்கை.

விடை :

வடாற்காடு மாவட்ட நூலக ஆணைக்குழுவின் கீழ் இயங்கும் கிளை நூலகங்களில் வாங்குவதற்கு என்று தயாரிக்கப்பட்ட பத்திரிக்கைகளின் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது :—

(அ) நாள் தாள்கள் :

1. ஹிந்து (ஆங்கிலம்).
2. இந்தியன் எக்ஸ்பிரஸ் (ஆங்கிலம்).
3. மெயில் (ஆங்கிலம்).
4. சுதேசிமித்திரன் (தமிழ்).
5. தினம ணி (தமிழ்).
6. தினமலர் (தமிழ்).
7. வேலூர் மாலே முரசு (தமிழ்).

(ஆ) வார இதழ்கள் :

1. பிளிட்ஸ் (ஆங்கிலம்).
2. காமர்ஸ் (ஆங்கிலம்).
3. கரண்ட் (ஆங்கிலம்).
4. எம்பிளாய்மெண்ட் நியூஸ் (ஆங்கிலம்).
5. இந்தியன் அண்ட் பாரின் ரெவ்யூ (ஆங்கிலம்).
6. இந்திரஜால காமிக்ஸ் (ஆங்கிலம்).
7. இல்லஸ்ட்ரேடட் வீக்லி (ஆங்கிலம்).
8. இண்டஸ்ட்ரியல் டைம்ஸ் (ஆங்கிலம்).
9. லின்ங்க் (ஆங்கிலம்).
10. சைனிக் சமாச்சார் (ஆங்கிலம்).
11. சோவியத் லாண்ட் (ஆங்கிலம்).
12. ஸ்போர்ட்ஸ் வீக் (ஆங்கிலம்).
13. ஸ்வராஜ்யா (ஆங்கிலம்).
14. சண்டே (ஆங்கிலம்).
15. தமிழ்நாடு கைட் (ஆங்கிலம்).
16. டைம் (ஆங்கிலம்).
17. யோசனு (ஆங்கிலம்).



1978 ஆகஸ்ட் 31]

18. யூத் டைம்ஸ் (ஆங்கிலம்).
19. ஆனந்த விகடன் (தமிழ்).
20. கல்கண்டு (தமிழ்).
21. கல்கி (தமிழ்).
22. குமுதம் (தமிழ்).
23. தினமணிக் கதிர் (தமிழ்).

(இ) பிறை இதழ்கள் :

1. பவன்ஸ் ஜர்னல் (ஆங்கிலம்).
2. காரவான் (ஆங்கிலம்).
3. இண்டஸ்ட்ரியல் எகனுமிக்ஸ்ட் (ஆங்கிலம்).
4. கோகுலம் (தமிழ்).
5. தமிழரசு (தமிழ்).
6. திட்டம் (தமிழ்).
7. துக்ளக் (தமிழ்).

(ஈ) மாத இதழ்கள் :

1. அஸ்ட்ராலஜிக்கல் மாகஸைன் (ஆங்கிலம்).
2. கேரியர்ஸ் டைஜஸ்ட் (ஆங்கிலம்).
3. எலிமெண்டரி எலக்ட்ரானிக்ஸ் (ஆங்கிலம்).
4. சில்ட்ரன்ஸ் வோர்ல்ட் (ஆங்கிலம்).
5. ஹியர் இஸ் எல்த் (ஆங்கிலம்).
6. ஹெரால்ட் ஆப் ஹெல்த் (ஆங்கிலம்).
7. ஹம்டி டம்ப்டி (ஆங்கிலம்).
8. இம்பிரிண்ட் (ஆங்கிலம்).
9. மெடிகல் டைஜஸ்ட் (ஆங்கிலம்).
10. மிரர் (ஆங்கிலம்).
11. நேஷனல் ஜியாகர்பிக்கல் மாகஸைன் (ஆங்கிலம்).
12. பாப்புலர் ஸையன்ஸ் (ஆங்கிலம்).
13. பிஜியாலாஜிஸ்ட் (ஆங்கிலம்).
14. ரீடர்ஸ் டைஜஸ்ட் (ஆங்கிலம்).
15. ஸையன்ஸ் டுடே (ஆங்கிலம்).
16. ஸையன்ஸ் ரிப்போர்ட்டர் (ஆங்கிலம).
17. சோசியல் வெல்ஃபேர் (ஆங்கிலம்).
18. ஸ்போர்ட் சினி (ஆங்கிலம்).

19. யுவபாரதி (ஆங்கிலம்).
20. அமுதசுரபி (தமிழ்).
21. அம்புலிமாமா (தமிழ்).
22. கலைக்கதிர் (தமிழ்).
23. கலைமகள் (தமிழ்).
24. சூரியர் (தமிழ்).
25. சமய ஜோதி (தமிழ்).
26. செந்தமிழ் செல்வி (தமிழ்).
27. தர்ம சக்கரம் (தமிழ்).
28. திருக்கோயில் (தமிழ்).
29. தீபம் (தமிழ்).
30. நல்வழி (தமிழ்).
31. மஞ்சரி (தமிழ்).
32. மாத ஜோதிடம் (தமிழ்).
33. மூலிகை மணி (தமிழ்).
34. ஷமா (உருது).
35. அர்பன் லைப் (ஆங்கிலம்).

(உ) பிற இதழ்கள் :

(1) காலாண்டு இதழ்கள் :

1. பாகீரத் (ஆங்கிலம்).
2. பிரம்மாவதின் (ஆங்கிலம்).
3. ஜர்னல் ஆப் எஜிகேஷனல் ரிசர்ச் விண்ட் டென்சன் (ஆங்கிலம்).
4. ஜர்னல் ஆப் தமிழ் ஸ்டடிஸ் (ஆங்கிலம்).
5. தமிழியல் (தமிழ்).
6. வளரும் வேளாண்மை (தமிழ்).

(2) அரையாண்டு இதழ் :

விவேகானந்தா கேந்திரா (ஆங்கிலம்).

(3) ஆண்டு இதழ் :

டைம்ஸ் ஆப் இந்தியா (ஆங்கிலம்).



1978 ஆகஸ்ட் 31]

இப்பட்டியலில் உள்ள எல்லா பத்திரிகைகளையும் கிளை நூலகங்களுக்காக வாங்கப்படுவதில்லை. நூலக நிதி வசதிக்கு ஏற்பவும் அந்தந்த கிளை நூலக தேவைக்கு ஏற்பவும் மேற்கண்ட பட்டியலிலிருந்து வேண்டிய பத்திரிகைகள் மட்டும் ஒவ்வொரு கிளை நூலகத்திற்கும் வாங்கப்படுகின்றன.

## இணைப்பு IX

[102ம் பக்கத்தில் உடுக்குறியிடாத வினா எண். 158க்கான விடையைக் காண்க].

விடை.

(அ) ஆம்.

(ஆ) 1. முந்திரி உற்பத்தியை அதிகரிக்க மத்திய அரசின் நிதி உதவியுடன் வேளாண்மைத் துறையின் கீழ் வேளாண்மை இயக்குனராலும் வனத் துறையின் கீழ் வனத்துறைப் பாதுகாவலராலும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

2. வேளாண்மைத் துறையின்கீழ் வேளாண்மை இயக்குனரால் மத்திய அரசின் நிதி உதவியுடன் கீழ்க்கண்ட முறைகளில் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன—

(1) விவசாயிகளின் நிலங்களில் செயல் விளக்கப் பாத்திகள் அமைத்தல்.

(2) பயிர் பகுதியாக இனப்பெருக்கம்.

(3) பாரம்பரிய தோட்டங்கள் அமைத்தல்.

செயல் விளக்கப் பாத்திகள் அமைத்தல் :

சீர் மிகு சாகுபடி முறைகளைக் கடைப்பிடிப்பதனால் ஏற்படும் நன்மைகளை கண்கூடாக விளக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். எல்லா புதிய பயிர் சாகுபடி முறைகள், முக்கியமாக உரமிடுதல் மற்றும் பயிர் பாதுகாப்பு முறைகளை விவசாயிகளின் தோட்டங்களில் செயல் விளக்கமாக காண்பிக்கவே செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கப்படுகின்றன. ஒவ்வொரு செயல் விளக்க வயலும் மூன்று ஆண்டுகளுக்குத் தொடர்ந்து நடத்தப்படும். ஒவ்வொரு செயல் விளக்கப் பாத்திக்கும் ஆண்டொன்றுக்கு 450 ரூபாய் சாகுபடிக்கு தேவையான பொருட்களுக்காக மானியமாக வழங்கப்படும்.

பயிர் பாக இனப்பெருக்கம்:

பக்க ஒட்டு, வினியர் ஒட்டு மற்றும் மொட்டு மூலம் ஒட்டு சேர்த்தல் முதலியவை மூலம் முந்திரியை இனப் பெருக்கம் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஒன்று முதல் இரண்டு ஆண்டு

[1978 ஆகஸ்ட் 31

வயதுடைய செடியை கவனத்துடன் வளர்த்து அதை நல்ல நாய் மரத்தின் தன்மைக்கு மாற்றப்படுகிறது. 1977-78 ஆம் ஆண்டு பயிர் பாக இனப்பெருக்கம் 300 ஹெக்டேரில் செயல்படுத்தப் படும்.

பாரம்பரிய தோட்டங்கள் அமைத்தல் :

எதிர்காலத்தில் பயிர் பாக இனப் பெருக்கத்திற்கு சிறந்த ஒட்டுக்கொம்புகள் கிடைக்கச்செய்ய மூன்று பாரம்பரிய தோட்டங்கள் அமைத்தலே இத்திட்டத்தின் நோக்கமாகும். இப்பாரம்பரிய தோட்டங்கள் தேவகோட்டை, நாட்டுமங்கலம் மற்றும் பிச்சுவாக்கம் என்னும் இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

3. வனத் துறையின்கீழ் வனத்துறை பாதுகாவலரால் மத்திய அரசின் நிதி உதவியுடன் கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன :—

(1) தீவிர முந்திரி வளர்ப்புத் திட்டம்:

இத்திட்டத்தின் நோக்கம் முந்திரி உற்பத்தியை பெருக்குவதற்காக முட்புதர்களை அகற்றுதல், மண் திட்டு அமைத்தல் உரமிடுதல், மண் வளப் பாதுகாப்பு, பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தெளித்தல் மற்றும் பயிர் பாதுகாப்பு வேலைகளை மேற்கொள்ளுதல் ஆகும். இத்திட்டம் 1967-68 மற்றும் 1968-69 ஆகிய இரண்டு வருடங்களில் செங்கற்பட்டு, திருச்சி, தென்னாற்காடு முதலிய மாவட்டங்களில் 1,000 ஹெக்டேர் பரப்பளவில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட சாதனையின் (நிதி மற்றும் செயல்முறை) விபரம் வருமாறு—

| ஆண்டு. | சாதனை. | |
|---|---|---|
| | நிதி. | செயல்முறை. |
| (1) | (2) | (3) |
| | ரூபாய். | (ஹெக்டேர்). |
| 1967-68 .. .. .. | 96,139 | 1,000 |
| 1968-69 .. .. .. | 2,31,687 | 1,000 |



1978 ஆகஸ்ட் 31]

(2) பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் :

இது ஒரு மத்திய அரசு ஆதரவு பெறும் திட்டமாகும். பயிர் பாதுகாப்பு, பயிர் நோய் தடுப்புப் பணிகளை மேற்கொள்வதன் மூலம் முந்திரி விளைச்சலைப் பெருக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் ஏற்படுத்திய சாதனை (நிதி மற்றும் செயல்முறை) விபரம் பின்வருமாறு :—

| ஆண்டு. | சாதனை. | |
|---|---|---|
| | நிதி. | செயல்முறை. |
| (1) | (2) | (3) |
| | (ரூபாய்.) | (ஹெக்டேர்.) |
| 1969-70 .. .. .. | 1,08,354 | 1,328 |
| 1970-71 .. .. .. | 2,32,856 | 3,600 |
| 1971-72 .. .. .. | 1,37,727 | 2,158 |
| 1972-73 .. .. .. | 1,87,602 | 3,000 |
| 1973-74 .. .. .. | 89,000 | 1,427 |

(3) தனி தீவிர முந்திரி வளர்ப்புத் திட்டம்:

இது ஒரு மத்திய அரசு ஆதரவு பெறும் திட்டம். இத்திட்டத்தின் நோக்கம் முந்திரி உற்பத்தியை பெருக்குவதற்காக தேவையற்ற முட்புதர்களை அகற்றுதல், மண் திட்டு அமைத்தல், உரமிடுதல், பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தெளித்தல் மற்றும் பயிர் பாதுகாப்பு வேலைகளை மேற்கொள்ளுதல் ஆகும். இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக மத்திய அரசு 1971-72 முதல் 1973-74 வரை உதவியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சாதனை (செயல்முறை மற்றும் நிதி) பற்றிய விவரம் பின்வருமாறு :—

| ஆண்டு. | சாதனை. | |
|---|---|---|
| | நிதி. | செயல்முறை. |
| (1) | (2) | (3) |
| | (ரூபாய்.) | (ஹெக்டேர்.) |
| 1971-72 .. .. .. | 3,92,135 | 1,310 |
| 1972-73 .. .. .. | 3,45,195 | 1,310 |
| 1973-74 .. .. .. | 2,52,000 | 1,310 |

[1978 ஆகஸ்ட் 31

**(4) முந்திரி தோட்டப் பரப்பை விரிவுபடுத்தும் திட்டம் :**

இது ஒரு மத்திய அரசு ஆதரவு பெறும் திட்டம். முந்திரி தோட்டங்களை விரிவு படுத்துதலே இதன் நோக்கமாகும். இத் திட்டம் செயல்படுவதற்காக 1971-72 முதல் 1973-74 வரை மத்திய அரசு உதவி செய்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஏற்படுத்திய சாதனை (நிதி மற்றும் செயல்முறை) பற்றிய விபரம் பின்வருமாறு :

| ஆண்டு. | சாதனை. | |
|---|---|---|
| | நிதி. | செயல்முறை. |
| (1) | (2) | (3) |
| | (ரூபாய்) | (ஹெக்டேர்.) |
| 1971-72 .. .. .. | 56,000 | 485 |
| 1972-73 .. .. .. | 2,98,000 | 618 |
| 1973-74 .. .. .. | 1,05,000 | 1,103 |

**(5) புதிய முறை மூலம் முந்திரி அபிவிருத்தி :**

இது ஒரு மத்திய அரசு ஆதரவு பெறும் திட்டமாகும். தற்போதுள்ள குறைவான விளைச்சலை அளிக்கும் முந்திரி மரங்களை உயர் ரக இனத்தைச் சேர்ந்த முந்திரி மரங்களின் வெட்டுப் பகுதிகளை புதிய முறை மூலம் ஒட்டி விளைச்சலைப் பெருக்குவதற்கு இத்திட்டம் வழி செய்கிறது.

இத்திட்டத்தின் கீழ் புரிந்த சாதனை (நிதி மற்றும் செயல் முறை) வருமாறு :

| ஆண்டு. | சாதனை. | |
|---|---|---|
| | நிதி. | செயல்முறை. |
| (1) | (2) | (3) |
| | (ரூபாய்.) | (ஹெக்டேர்.) |
| 1976-77 .. .. .. | 29,000 | கருவிகள் வாங்கப்பட்டன. |
| 1977-78 .. .. .. | 75,000 | வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. |

இத்திட்டத்திற்காக 1978-79 ஆம் ஆண்டில் ரூ. 0.91 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



1978 ஆகஸ்ட் 31]

## இணைப்பு X

[103-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத எண் 160-க்கான விடையைக் காண்க.]

விடை.

(அ) அன்டு (ஆ)—I கால்நடைப் பாராமரிப்புத் துறையின்கீழ் தற்போது இயங்கிவரும் கோழி வளர்ப்பு நிலையங்கள் கீழ்க்கண்டவாறாகும்—

| கோழி வளர்ப்பு நிலையங்களின் பெயர்கள். | மாவட்டங்களின் பெயர்கள். |
|---|---|
| (i) குஞ்சு பொரிக்கும் நிலையங்கள்— | |
| (அ) காட்டுப்பாக்கம் .. .. | செங்கற்பட்டு. |
| (ஆ) ஹோசூர் .. .. .. | தர்மபுரி. |
| (ii) கோழி வளர்ப்பு மற்றும் விரிவாக்க நிலையங்கள்— | |
| 1 சைதாப்பேட்டை .. .. | சென்னை |
| 2 போலிவாக்கம் .. .. | செங்கற்பட்டு |
| 3 எஸ்.வி. நகரம் .. .. | வடாற்காடு |
| 4 கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டம். | தர்மபுரி |
| 5 செங்கபல்லி .. .. | கோயம்புத்தூர் |
| 6 புலவகாளிபாளையம் .. | கோயம்புத்தூர் |
| 7 பவானிசாகர் .. .. | கோயம்புத்தூர் |
| 8 தேக்குபாளையம் .. .. | கோயம்புத்தூர் |
| 9 மசினிகுடி .. .. .. | நீலகிரி |
| 10 வேப்பந்தட்டை .. .. | திருச்சிராப்பள்ளி |
| 11 சின்னசேலம் .. .. | தென் ஆற்காடு |
| 12 புவனகிரி .. .. .. | தென் ஆற்காடு |
| 13 ஒரத்தநாடு .. .. | தஞ்சாவூர் |
| 14 பட்டுக்கோட்டை .. | தஞ்சாவூர் |
| 15 புதுக்கோட்டை .. .. | புதுக்கோட்டை |
| 16 திருவரங்குளம் .. .. | புதுக்கோட்டை |
| 17 காந்திகிராமம் .. .. | மதுரை |
| 18 வைகை அணை .. .. | மதுரை |
| 19 கொடைக்கானல் .. .. | மதுரை |
| 20 கருத்தபுளியம்பட்டி .. | மதுரை |

| | | |
|---|---|---|
| 21 | அமராவதிபுதூர் .. .. | இராமநாதபுரம் |
| 22 | பாளையம்பட்டி .. .. | இராமநாதபுரம் |
| 23 | அனுப்பங்குளம் .. .. | இராமநாதபுரம் |
| 24 | செட்டிநாடு .. .. | இராமநாதபுரம் |
| 25 | சாத்தூர் .. .. .. | இராமநாதபுரம் |
| 26 | கோவில்பட்டி .. .. | திருநெல்வேலி |
| 27 | கொண்டநகரம் .. .. | திருநெல்வேலி |
| 28 | அபிஷேகப்பட்டி .. .. | திருநெல்வேலி |
| 29 | கொட்டாரம் .. .. | கன்னியாகுமரி |

II. தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் கீழ் தற்போது இயங்கி வரும் கோழி வளர்ப்பு நிலையங்கள் கீழ்க்கண்டவை யாகும்—

(i) குஞ்சு பொரிப்பு நிலையங்கள்—

1. வீரிய இனக் கோழிக் குஞ்சு பொரிப்பு நிலையம்—அரசூர், கோயம்புத்தூர் மாவட்டம்.

2. கோழிக் குஞ்சு பொரிப்பு நிலையம்—கப்பலூர், மதுரை மாவட்டம்.

(ii) இளம் கோழி வளர்ப்பு மற்றும் விரிவாக்க நிலையங்கள்—

| | | மாவட்டம். |
|---|---|---|
| 1 | இளம் கோழிப் பண்ணை (Grower Farm) அடையாறு .. .. | சென்னை |
| 2 | இளம் கோழிப் பண்ணை, கொட்டப்பட்டு .. .. | திருச்சிராப்பள்ளி |
| 3 | இளம் கோழிப் பண்ணை, டி. கல்லுப்பட்டி .. .. | மதுரை |
| 4 | இளம் கோழிப் பண்ணை, பெருந்துறை .. .. .. | கோயம்புத்தூர் |
| 5 | இளம் கோழிப் பண்ணை, சேஷஞ்சாவடி .. .. | சேலம் |
| 6 | இளம் கோழிப் பண்ணை, செங்கற்பட்டு .. .. | செங்கற்பட்டு. |



III. கால்நடை பராமரிப்பு இயக்குநரின் கீழ் முன்பு இயங்கி வந்த கீழ்க்கண்ட கோழி விரிவாக்க நிலையங்கள் தற்போது இயங்கவில்லை.

| | நிலையங்களின் பெயர் | மாவட்டத்தின் பெயர் |
|---|---|---|
| 1 | அடையாறு .. .. .. | சென்னை |
| 2 | அச்சரப்பாக்கம் .. .. | செங்கற்பட்டு |
| 3 | பூவிருந்தவல்லி .. .. | செங்கற்பட்டு |
| 4 | அலமாதி .. .. .. | செங்கற்பட்டு |
| 5 | பொன்னலூர் .. .. .. | செங்கற்பட்டு |
| 6 | சாரம் .. .. .. | தென் ஆற்காடு |
| 7 | செம்பிமாதேவி .. .. | தென் ஆற்காடு |
| 8 | பார்வதிபுரம் .. .. .. | தென் ஆற்காடு |
| 9 | விருத்தாசலம் .. .. | தென் ஆற்காடு |
| 10 | தருநாவலூர் .. .. | தென் ஆற்காடு |
| 11 | இராணிப்பேட்டை .. .. | வட ஆற்காடு |
| 12 | பரிபந்தாங்கல் .. .. | வட ஆற்காடு |
| 13 | திருவியாபுரம் .. .. | வட ஆற்காடு |
| 14 | ஹோசூர் .. .. .. | தர்மபுரி |
| 15 | மத்தியகிரி .. .. .. | தர்மபுரி |
| 16 | ஊத்தகரை .. .. .. | தர்மபுரி |
| 17 | கூட்டல்லி .. .. .. | சேலம் |
| 18 | ஆனந்தகிருஷ்ணராயசமுத்திரம். | சேலம் |
| 19 | பளையகோட்டை .. .. | கோயம்புத்தூர் |
| 20 | செங்கதுறை .. .. | கோயம்புத்தூர் |
| 21 | அரசூர் .. .. .. | கோயம்புத்தூர் |
| 22 | வேட்டைக்காரன்புதூர் .. | கோயம்புத்தூர் |
| 23 | புதுமண்டு .. .. .. | நீலகிரி |
| 24 | உதகமண்டலம், ஆட்டுப்பண்ணை. | நீலகிரி. |
| 25 | விராலிமலை .. .. .. | திருச்சிராப்பள்ளி |
| 26 | ராயர்குநாதசமுத்திரம் .. | திருச்சிராப்பள்ளி |
| 27 | தஞ்சாவூர் .. .. .. | தஞ்சாவூர் |
| 28 | செங்கிபட்டி .. .. .. | தஞ்சாவூர் |
| 29 | கொத்தங்குடி .. .. .. | தஞ்சாவூர் |
| 30 | ஆலத்தம்பாடி .. .. | தஞ்சாவூர் |
| 31 | ஆக்கூர் .. .. .. | தஞ்சாவூர் |
| 32 | திருவிடைமருதூர் (அம்மா சத்திரம்). | தஞ்சாவூர் |

[1978 ஆகஸ்ட் 31

| (1) | (2) |
|---|---|
| 33 பல்லப்பட்டி .. .. .. | மதுரை |
| 34 கள்ளிமந்தயம் .. .. | மதுரை |
| 35 சூரகுளம் .. .. .. | இராமநாதபுரம் |
| 36 பெறையூர் .. .. .. | இராமநாதபுரம் |
| 37 மணிமுத்தாறு .. .. | திருநெல்வேலி |
| 28 ராதாபுரம் .. .. .. | திருநெல்வேலி |
| 39 பத்மனுபமங்கலம் .. .. | திருநெல்வேலி |
| 40 முக்குபீர் .. .. .. | திருநெல்வேலி |

(இ) நிலையங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் நோக்கம் தற்பொழுது இல்லை. எனினும் தனியார் கோழிப்பண்ணைகளை அதிகமாக்கவும், அவைகளுக்குத் தேவையான தரமான கோழிக் குஞ்சுகள் மற்றும் சரிவிகித கோழித் தீவனம் போன்ற எல்லாப் பொருள்களும் வழங்கவும் தமிழ் நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் திட்டம் வகுத்துள்ளது. மேலும் இவற்றில் உற்பத்தியாகும் முட்டை, கோழிகளை கொள்முதல் செய்யவும் இந்நிறுவனமே ஏற்பாடு செய்துள்ளது.

## இணைப்பு XI

[106-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 166-க்கான விடையைக் காண்க.]

### அறிக்கை.

திருமயம் தாலுகாவில் 1978-79ம் ஆண்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கையிறைப்பான் மற்றும் மின் இறைப்பான் (மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி) குடிநீர் திட்டங்கள் விபரம்.

அரிமளம் ஊராட்சி ஒன்றியம்.

| வட்ட எண் மற்றும் ஊராட்சியின் பெயர். | குடியிருப்பின் பெயர். |
|---|---|
| 1 கடையக்குடி .. .. | நல்லாணிப்பட்டி |
| 2 கீழபனையூர் .. .. .. | வெட்டிக்காடு |
| 3 பெருங்குடி .. .. .. | விளங்காட்டான்பட்டி |
| 4 பிள்ளையார்வயல் .. .. | பின்னன்குடி |
| 5 வாளரமாணிக்கம் .. .. | இடையன்வயல் |
| 6 கைகுவயல் .. .. .. | கறையாபட்டி |
| 7 கீழபனையூர் .. .. .. | ஒத்தபுளிகுடியிருப்பு |
| 8 மிரட்டுநிலை .. .. .. | வாலப்பொன்னம்பட்டி |
| 9 மிரட்டுநிலை .. .. .. | வரிக்காபள்ளம் |



1978 ஆகஸ்ட் 31]

அரிமளம் ஊராட்சி ஒன்றியம்—(தொடர்ச்சி).

| வரிசை எண் மற்றும் ஊராட்சியின் பெயர். (1) | குடியிருப்பின் பெயர். (2) |
|---|---|
| 10 முனசந்தை .. .. | முனசந்தை (எச்.சி.) |
| 11 முனசந்தை .. .. | முனசந்தை |
| 12 ஓணுன்குடி .. .. .. | மரமடக்கி |
| 13 தேக்காட்டூர் .. .. .. | பூவம்பட்டி |
| 14 தேக்காட்டூர் .. .. .. | கரையாம்பட்டி |
| 15 தேக்காட்டூர் .. .. .. | சத்திக்கரைபட்டி |
| 16 துறையூர் .. .. .. | கீரணிப்பட்டி |
| 17 ஓணுங்குடி .. .. .. | மரமடக்கி |
| 18 கடையக்குடி .. .. | கோவிஞ்சம்பட்டி |

பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம்.

| | |
|---|---|
| 1 ஆலவயல் .. .. .. | ஈசிகுடம்வண்டு |
| 2 ஆவம்பட்டி .. .. .. | கரையம்பட்டி |
| 3 ஏனுதி .. .. .. | ஹரிஜன குடியிருப்பு |
| 4 நல்லூர் .. .. .. | கொள்ளுப் புஞ்சை |
| 5 மேலத்தானியம் .. .. | மேலத்தானியம் |
| 6 நல்லூர் .... .. .. | தைக்கிக்காடு |
| 7 வார்ப்பட்டு .. .. .. | வி. நல்லூர் (மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி) |
| 8 அவியமங்கலம் .. .. | அவியமங்கலம் |
| 9 ஆலம்பட்டி .. .. .. | கரையாம்பட்டி |
| 10 நல்லூர் .. .. .. | கீரக்குடிப்பட்டி |
| 11 நல்லூர் .. .. .. | இலலனிப்பட்டி |
| 12 முள்ளிப்பட்டி .. .. .. | வத்தம்பட்டி |

திருமயம் ஊராட்சி ஒன்றியம்.

| | |
|---|---|
| 1 ஆதலூர் .. .. .. | வண்டவாசி |
| 2 ஆதலூர் .. .. .. | ஒடுகம்பட்டி |
| 3 ஆதலூர் .. .. .. | புதுகுடியிருப்பு |
| 4 மேலப்பனையூர் .. .. | வடகாடு |
| 5 மேலப்பனையூர் .. .. | நாடார் குடியிருப்பு |
| 6 மேலப்பனையூர் .. .. | பிட்டான்பட்டி |

[1978 ஆகஸ்ட் 31

திருமயம் ஊராட்சி ஒன்றியம்—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| 7 | சேதுராப்பட்டி .. .. | பிராமணப்பட்டி |
| 8 | தாலானூர் .. .. .. | செட்டியூர் |
| 9 | உறையூர் .. .. .. | மேட்டுப்பட்டி அம்பண காரக் குடியிருப்பு. |
| 10 | ஊனையூர் .. .. .. | சாத்தக்குடிப்பட்டி |
| 11 | கோட்டூர் .. .. .. | நல்லம்பட்டி |
| 12 | லெம்பலக்குடி .. .. | பன்னிப்பாளையம் |
| 13 | இராதாபுரம் .. .. .. | இராதாபுரம் |
| 14 | லம்பலக்குடி .. .. .. | பாம்பாம்பட்டி |
| 15 | அரசம்பட்டி .. .. .. | ஆனைப்பட்டி. |

சுருக்கம்.

திருமயம் தாலுகாவில் 1978-79 நிதியாண்டில் புதிதாக அமைக்கப் படவுள்ள கையிறைப்பான், மின் இறைப்பான் விபரங்கள்.

| வரிசை எண் மற்றும் ஊராட்சி ஒன்றியத்தின் பெயர். | கையிறைப் பான். | மின் இறைப்பான். | கூடுதல் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 அரிமளம் .. .. | 18 | .. | 18 |
| 2 பொன்னமராவதி .. | 11 | 1 | 12 |
| 3 திருமயம் .. .. | 15 | .. | 15 |
| கூடுதல் .. | 44 | 1 | 45 |



1978 ஆகஸ்ட் 31]

## இணைப்பு XII

[108-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 170-க்கான விடையைக் காண்க.]

பிற்சேர்க்கை 1.

நெல் விதைகள் பயிர் செய்யப்பட்ட பரப்பளவும் அதில் உற்பத்தி செய்யப்பட்ட அளவு விவரங்களும்.

பரப்பளவு : ஏக்கரில்.

உற்பத்தி : டன்களில்.

| பண்ணையின் பெயர். | 1970–71 | | 1971–72 | | 1972–73 | |
|---|---|---|---|---|---|---|
| | பரப்பளவு. | உற்பத்தி. | பரப்பளவு. | உற்பத்தி. | பரப்பளவு. | உற்பத்தி. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 காக்குப்பம் .. | 41.49 | 30.973 | 56.34 | 60.044 | 57.19 | 72.020 |
| 2 இருவேல்பேட்டை | 29.41 | 17.944 | 82.84 | 55.582 | 80.47 | 40.000 |
| 3 வானூர் .. | 64.03 | 57.542 | 71.72 | 82.521 | 62.65 | 78.960 |
| 4 வெள்ளப்பாக்கம். | 68.53 | 53.290 | 91.46 | 82.500 | 85.88 | 23.639 |
| 5 வண்டராயன் பேட்டை. | 58.84 | 60.000 | 68.70 | 49.180 | 71.04 | 57.725 |

| பண்ணையின் பெயர். | 1973–74 பரப்பளவு. (8) | 1973–74 உற்பத்தி. (9) | 1974–75 பரப்பளவு. (10) | 1974–75 உற்பத்தி. (11) |
|---|---|---|---|---|
| 1 காக்குப்பம் .. | 62.91 | 85.022 | 44.60 | 64.223 |
| 2 இருவேல்பேட்டை. | 59.82 | 97.831 | 46.86 | 63.260 |
| 3 வானூர் .. | 66.42 | 88.970 | 53.47 | 49.248 |
| 4 வெள்ளப்பாக்கம். | 49.66 | 65.821 | 76.54 | 50.871 |
| 5 வண்டராயன் பேட்டை. .. | 71.04 | 69.505 | 67.36 | 50.420 |

| பண்ணையின் பெயர். | 1975-76 பரப்பளவு. (12) | 1975-76 உற்பத்தி. (13) | 1976-77 பரப்பளவு. (14) | 1976-77 உற்பத்தி. (15) |
|---|---|---|---|---|
| 1 காக்குப்பம் .. | 35.59 | 39.470 | 34.20 | 39.197 |
| 2 இருவேல்பேட்டை. | 42.14<br>9.81 | 62.373 | 64.62 | 54.801 |
| 3 வானூர் .. | 60.47 | 74.450 | 69.09 | 82.032 |
| 4 வெள்ளப்பாக்கம். | 92.28 | 78.228 | 89.29 | 67.396 |
| 5 வண்டராயன் பேட்டை .. | 58.05 | 62.854 | 48.34 | 53.020 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 6 மிரளூர் .. | 50.63 | 27.092 | 61.93 | 49.259 | 44.25 | 19.148 |
| 7 வடக்கானந்தல் .. | 63.01 | 61.924 | 67.54 | 60.812 | 75.57 | 98.390 |
| 8 இனுங்கர் .. | .. | .. | 1.07 | 1.832 | 9.66 | 18.728 |
| 9 நெய்குப்பைபுதூர். | .. | .. | .. | .. | .. | .. |
| 10 புதூர்பாளையம் | 60.80 | 60.702 | 59.35 | 79.174 | 60.60 | 97.650 |
| 11 திருவரன்குளம் | 43.09 | 13.872 | 35.20 | 6.254 | மூடப்பட்டு விட்டது. | |
| 12 தெக்கத்தூர் .. | 1.92 | 0.606 | 5.88 | 0.653 | மூடப்பட்டு விட்டது. | |
| 13 நாகமங்கலம் .. | 109.69 | 112.541 | 108.78 | 174.011 | 109.90 | 179.511 |
| 14 திருக்காடையூர். | 75.20 | 77.742 | 70.12 | 105.444 | 75.16 | 104.029 |
| 15 சாக்கோட்டை. | 37.80 | 61.572 | 41.85 | 87.936 | 136.90 | 231.684 |
| 16 மருதநல்லூர் .. | 79.58 | 102.703 | 96.51 | 147.486 | சாக்கோட்டை அரசு விதைப்பண்ணையுடன் இணைக்கப்பட்டு விட்டது. | |
| 17 காட்டுத்தோட்டம். | 83.72 | 106.572 | 84.15 | 131.929 | நீர் மேலாண்மை ஆராய்ச்சிக்கு ஒப்படைக்கப்பட்டு விட்டது. | |

| | (8) | (9) | (10) | (11) |
|---|---|---|---|---|
| 6 மிரளூர் | 62.99 | 39.186 | 35.82 | 25.200 |
| 7 வடக்கானந்தல் .. | 60.18 | 97.367 | 58.33 | 67.362 |
| 8 இனுங்கர் .. | 1.00 | 1.414 | 10.10 | 15.392 |
| 9 நெய்குப்பைபுதூர். | 9.43 | 17.276 | 21.06 | 40.368 |
| 10 புதூர்பாளையம் | 65.05 | 95.294 | 63.95 | 98.590 |
| 11 திருவரன்குளம். | | மூடப்பட்டு விட்டது. | | |
| 12 தெக்கத்தூர் .. | | மூடப்பட்டு விட்டது. | | |
| 13 நாகமங்கலம் .. | 112.90 | 115.672 | 109.32 | 156.762 |
| 14 திருக்காடையூர் | 71.85 | 116.611 | 63.81 | 91.684 |
| 15 சாக்கோட்டை | 143.65 | 210.460 | 136.21 | 190.967 |
| 16 மருதநல்லூர் .. | சாக்கோட்டை அரசு விதைப்பண்ணையுடன் இணைக்கப்பட்டு விட்டது. | | | |
| 17 காட்டுத்தோட்டம். | நீர்மேலாண்மை ஆராய்ச்சிக்கு ஒப்படைக்கப்பட்டு விட்டது. | | | |



| | (12) | (13) | (14) | (15) |
|---|---|---|---|---|
| 6 மிரளூர் .. | 69.87 | 74.000 | 42.79 | 48.208 |
| 7 வடக்கானந்தல் .. | 52.52 | 65.759 | 44.52 | 60.399 |
| 8 இனுங்கர் .. | 49.02 | 51.277 | 54.45 | 48.331 |
| 9 நெய்குப்பைபுதூர் | 30.41 | 54.097 | 22.32 | 39.745 |
| 10 புதூர்பாளையம் | 68.20 | 74.725 | 14.25 | 9.124 |
| 11 திருவரன்குளம் | | | | |
| 12 தெக்கத்தூர் .. | | | | |
| 13 நாகமங்கலம் .. | 110.74 | 181.128 | 77.18 | 159.251 |
| 14 திருக்காடையூர் | 74.96 | 119.196 | 56.02 | 47.408 |
| 15 சாக்கோட்டை | 137.46 | 179.660 | 97.37 | 118.527 |
| 16 மருதநல்லூர் .. | ... | .. | .. | .. |
| 17 காட்டுத்தோட்டம் | .. | .. | .. | .. |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 18 ஓரத்தூர் .. | 91.81 | 90.810 | 91.82 | 121.175 | 104.83 | 128.665 |
| 19 காஞ்சிக்குடிக்காடு. | 91.62 | 66.183 | 81.69 | 90.654 | 85.48 | 90.200 |
| 20 நெடும்பாலம் .. | 105.37 | 92.718 | 94.10 | 121.043 | 114.82 | 167.397 |
| 21 கீரந்தி .. | 87.20 | 148.778 | 94.88 | 80.346 | 96.43 | 155.300 |
| 22 தேவாம்பாள் பட்டிணம் .. | 124.27 | 111.840 | 122.53 | 124.562 | 123.62 | 119.623 |
| 23 சிக்கில் .. .. | 73.39 | 99.852 | 88.03 | 126.873 | 53.11 | 108.232 |
| 24 மூங்கில்குடி .. | 80.33 | 83.209 | 67.97 | 90.894 | 67.53 | 71.651 |
| 25 பட்டுக்கோட்டை. | 32.46 | 34.673 | 32.34 | 57.978 | மூடப்பட்டு விட்டது. | |
| 26 நாட்டுமங்கலம். | | .. | .. | .. | மூடப்பட்டு விட்டது. | |
| 27 விஜயகபுரம் .. | 38.14 | 63.933 | 38.14 | 49.800 | 38.14 | 59.540 |
| 28 வைகை அணை 1. | .. | .. | .. | .. | 0.70 | 1.298 |
| 29 வைகை அணை 2. | .. | .. | | .. | .. | .. |
| 30 கிழகூட ஊர் .. | 79.50 | 127.048 | 81.50 | 111.907 | 81.25 | 127.76 |
| 31 ரைபிள்ரேஞ்சு .. | .. | .. | .. | .. | .. | .. |



| (1) | (8) | (9) | (10) | (11) |
|---|---|---|---|---|
| 18 ஓரத்தூர் .. | 95.07 | 125.982 | 99.42 | 128.680 |
| 19 காஞ்சிக்குடிக்காடு. | 82.56 | 94.556 | 79.07 | 101.076 |
| 20 நெடும்பாலம் .. | 114.29 | 166.207 | 94.27 | 128.306 |
| 21 கீரந்தி .. | 96.18 | 176.332 | 80.36 | 122.302 |
| 22 தேவாம்பாள் பட்டிணம் .. | 124.24 | 123.253 | 110.22 | 142.521 |
| 23 சிக்கில் .. .. | 78.83 | 110.875 | 81.73 | 131.357 |
| 24 மூங்கில்குடி .. | 65.06 | 98.279 | 65.06 | 93.731 |
| 25 பட்டுக்கோட்டை. | | — மூடப்பட்டு விட்டது. | | |
| 26 நாட்டுமங்கலம் | | மூடப்பட்டு விட்டது. | | |
| 27 விஜயகபுரம் .. | 38.14 | 62.360 | 38.14 | 65.522 |
| 28 வைகை அணை 1. | 3.70 | 6.600 | 4.50 | 9.030 |
| 29 வைகை அணை 2. | .. | .. | .. | .. |
| 30 கிழகூட ஊர் .. | 81.25 | 96.270 | 81.25 | 125.000 |
| 31 ரைபிள்ரேஞ்சு | .. | . | .. | .. |

| | (12) | (13) | (14) | (15) |
|---|---|---|---|---|
| 18 ஒரத்தூர் .. | 91.08 | 110.093 | 75.52 | 81.367 |
| 19 காஞ்சிக்குடிக்காடு | 76.83 | 91.301 | 43.70 | 20.264 |
| 20 நெடும்பாலம் | 110.24 | 113.933 | 63.82 | 92.432 |
| 21 கிரந்தி .. | 92.50 | 168.405 | 49.00 | 67.385 |
| 22 தேவாம்பாள் பட்டிணம் .. | 113.60 | 136.316 | 108.41 | 104.462 |
| 23 சிக்கில் .. .. | 83.68 | 114.904 | 52.90 | 45.518 |
| 24 மூங்கில்குடி .. | 65.06 | 103.667 | 52.88 | 75.256 |
| 25 பட்டுக்கோட்டை. | .. | .. | .. | .. |
| 26 நாட்டுமங்கலம். | .. | .. | .. | .. |
| 27 விஜயபுரம் .. | 37.54 | 62.441 | 4.30 | 54.27 |
| 28 வைகை அணை 1 | .. | .. | .. | .. |
| 29 வைகை அணை 2 | .. | .. | .. | .. |
| 30 கிழ்கூடலூர் .. | 81.25 | 142.715 | 78.25 | 155.602 |
| 31 ரைபிள்ரேஞ்சு | .. | .. | .. | .. |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 32 வில்பட்டி .. | .. | .. | .. | .. | .. | .. |
| 33 பரமக்குடி .. | 14.38 | 22.274 | 18.79 | 25.130 | 16.60 | 26.781 |
| 34 தேவதானம் .. | 50.92 | 72.064 | 51.11 | 64.500 | .. | .. |
| 35 தேவக்கோட்டை. | .. | .. | 4.75 | 4.965 | 29.50 | 29.301 |
| 36 மேலகரம் .. | 35.20 | 46.140 | 33.08 | 49.529 | 47.63 | 83.776 |
| 37 மணிமுத்தார் .. | 13.70 | 26.318 | 30.35 | 23.369 | 29.54 | 14.281 |
| 38 திருப்பதிசாரம்.. | 112.74 | 151.762 | 113.70 | 132.352 | 115.27 | 142.193 |
| 39 காரையிருப்பு | 155.31 | 195.033 | 198.60 | 192.998 | 157.66 | 132.426 |
| 40 கிள்ளிக்குளம் .. | 70.68 | 95.516 | 171.75 | 143.453 | 141.44 | 159.206 |
| 41 கண்ணம்பாளையம். | .. | .. | .. | .. | .. | .. |
| 42 பொங்கலூர் .. | .. | .. | | .. | .. | .. |
| 43 பாப்பான்குளம்.. | 37.81 | 62.923 | 37.81 | 38.845 | 41.30 | 52.950 |
| 44 முள்ளுவாடி .. | 1.50 | 1.629 | .. | 8.728 | 13.75 | 10.229 |
| 45 மேட்டூர் அணை. | 71.46 | 85.000 | 64.84 | 90.370 | 67.70 | 98.922 |
| 46 டாலிஷ்பேட்டை. | 63.51 | 50.583 | 68.91 | 73.010 | 68.47 | 82.170 |

| | (8) | (9) | (10) | (11) |
|---|---|---|---|---|
| 32 வில்பட்டி .. | .. | .. | .. | .. |
| 33 பரமக்குடி .. | 13.34 | 20.552 | 3.57 | 5.182 |
| 34 தேவதானம் .. | 51.11 | 88.393 | 26.60 | 35.106 |
| 35 தேவக்கோட்டை. | 37.85 | 37.938 | 37.00 | 45.402 |
| 36 மேலகரம் .. | 40.10 | 67.668 | 19.76 | 26.790 |
| 37 மணிமுத்தார் | 30.09 | 26.780 | 18.89 | 12.282 |
| 38 திருப்பதிசாரம். | 115.70 | 163.635 | 115.76 | 172.562 |
| 39 காரையிருப்பு | 159.14 | 211.397 | 160.32 | 247.631 |
| 40 கிள்ளிக்குளம் .. | 184.44 | 186.827 | 201.95 | 278.988 |
| 41 கண்ணம்பாளையம். | .. | .. | .. | .. |
| 42 பொங்கலூர் .. | .. | .. | .. | .. |
| 43 பாப்பான்குளம். | 41.60 | 48.532 | 22.48 | 24.747 |
| 44 முள்ளுவாடி .. | 5.00 | 9.496 | .. | .. |
| 45 மேட்டூர் அணை. | 66.85 | 137.016 | 72.60 | 135.268 |
| 46 டானிஷ்பேட்டை. | 54.13 | 54.812 | 55.57 | 59.997 |



| | (12) | (13) | (14) | (15) |
|---|---|---|---|---|
| 32 வில்பட்டி .. | .. | .. | .. | .. |
| 33 பரமக்குடி .. | 7.90 | 9.182 | 11.56 | 5.026 |
| 34 தேவதானம் .. | 6.79 | 3.169 | 50.00 | 69.361 |
| 35 தேவக்கோட்டை. | .. | .. | .. | .. |
| 36 மேலகரம் .. | 44.33 | 48.963 | 35.30 | 44.655 |
| 37 மணிமுத்தார் .. | .. | .. | .. | .. |
| 38 திருப்பதிசாரம் | 108.48 | 177.218 | 77.74 | 82.803 |
| 39 காரையிருப்பு | 160.16 | 277.156 | 81.20 | 130.465 |
| 40 கிள்ளிக்குளம் .. | 188.36 | 308.977 | 108.40 | 205.684 |
| 41 கண்ணம்பாளையம். | .. | .. | 2.50 | .. |
| 42 பொங்கலூர் .. | .. | .. | .. | .. |
| 43 பாப்பான்குளம். . | 30.60 | 53.402 | .. | .. |
| 44 முள்ளுவாடி .. | .. | .. | .. | .. |
| 45 மேட்டூர் அணை. | 74.73 | 110.904 | 39.64 | 46.467 |
| 46 டானிஷ்பேட்டை | 78.62 | 112.279 | 39.27 | 24.392 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 47 பாப்பாரப்பட்டி. | 13.40 | 22.898 | 8.25 | 8.008 | 4.75 | 8.364 |
| 48 பவானிசாகர் .. | 41.75 | 49.584 | 80.81 | 125.100 | 79.25 | 119.537 |
| 49 சத்தியமங்கலம்.. | 37.99 | 45.705 | 2.56 | 5.100 | 27.15 | 44.631 |
| 50 பவானி .. | 89.60 | 111.408 | 76.10 | 121.009 | 75.00 | 95.064 |
| 51 அண்ணு பண்ணை. | 18.00 | 18.440 | 20.90 | 29.645 | 23.50 | 24.263 |
| 52 நல்லாக் .. | 64.16 | 90.261 | 39.83 | 44.430 | 42.20 | 72.203 |
| 53 ஆதியந்தால் .. | 47.98 | 58.890 | 51.87 | 81.587 | 55.49 | 68.610 |
| 54 வளவச்சனூர் .. | 35.66 | 71.692 | 50.00 | 51.020 | 98.84 | 154.865 |
| 55 காஞ்சீபுரம் .. | 63.75 | 58.307 | 79.81 | 107.042 | 69.19 | 69.000 |
| 56 சிறுகாவேரிப் பாக்கம் .. | 10.15 | 7.413 | .. | .. | .. | .. |
| 57 பிச்சிவாக்கம் | .. | .. | .. | .. | .. | .. |
| 58 ஊத்துக்கோட்டை. | 22.89 | 19.642 | 26.05 | 25.145 | 12.86 | 7.600 |
| 59 கோலத்தனூர் .. | 50.91 | 33.169 | 48.90 | 17.919 | 61.35 | 68.761 |
| 60 புட்டூர் .. | 42.60 | 70.586 | 28.50 | 24.621 | 24.85 | 27.017 |
| மொத்தம் .. | 2,837.88 | 3,231.356 | 3,103.08 | 3,628.724 | 2,938.47 | 3,642·019 |



| | | | (10) | (11) |
|---|---|---|---|---|
| 47 பாப்பாரப்பட்டி. | 4.75 | 6.524 | .. | .. |
| 48 பவானிசாகர் .. | 82.68 | 87.964 | 84.00 | 153.149 |
| 49 சத்தியமங்கலம்.. | 1.00 | 1.748 | 12.41 | 24.108 |
| 50 பவானி .. | 71.68 | 121.868 | 72.50 | 92.337 |
| 51 அண்ணு பண்ணை | 22.50 | 27.226 | 21.38 | 22.230 |
| 52 நல்லாக் .. | 91.70 | 109.886 | 121.25 | 114.164 |
| 53 ஆதியந்நால் .. | 35.05 | 49.466 | 13.19 | 16.463 |
| 54 வளவச்சனூர் .. | 45.38 | 68.885 | 63.21 | 107.462 |
| 55 காஞ்சீபுரம் .. | 51.61 | 55.955 | 42.83 | 54.363 |
| 56 சிறுகாவேரிப் பாக்கம் .. | .. | .. | 2.94 | 4.800 |
| 57 பிச்சிவாக்கம் | .. | .. | 1.00 | 1.370 |
| 58 ஊத்துக்கோட்டை. | 21.23 | 19.685 | .. | .. |
| 59 கோலத்தனூர் | 50.94 | 60.987 | 39.48 | 26.540 |
| 60 புட்டூர் .. | 18.10 | 25.933 | 4.20 | 1.136 |
| மொத்தம் .. | 2,912.19 | 3,850.136 | 2,734.30 | 3.673,979 |

| | (12) | (13) | (14) | (15) |
|---|---|---|---|---|
| 47 பாப்பாரப்பட்டி. | 1.75 | 3.524 | 2.60 | 3.750 |
| 48 பவானிசாகர் .. | 85.11 | 124.145 | 85.90 | 53.938 |
| 49 சத்தியமங்கலம்.. | 7.02 | 9.599 | .. | .. |
| 50 பவானி .. | 84.75 | 139.605 | 25.25 | 22.345 |
| 51 அண்ணு பண்ணை. | 25.00 | 44.880 | 26.50 | 41.350 |
| 52 நல்லாக் .. | 74.28 | 64.037 | 91.10 | 109.856 |
| 53 ஆதியந்தால் .. | 11.86 | 14.088 | 5.08 | 6.985 |
| 54 வளவச்சனூர் .. | 62.81 | 124.620 | 24.03 | 23.230 |
| 55 காஞ்சீபுரம் .. | 47.39 | 70.693 | 29.33 | 47.847 |
| 56 சிறுகாவேரிப் பாக்கம் .. | 0.60 | 0.575 | .. | .. |
| 57 பிச்சிவாக்கம் | .. | .. | .. | .. |
| 58 ஊத்துக்கோட்டை | .. | .. | .. | .. |
| 59 கொலந்தனூர் | 111.53 | 62.515 | 75.67 | 92.741 |
| 60 புட்லூர் .. | 11.80 | 11.441 | 36.00 | 36.746 |
| மொத்தம் .. | 2,867.17 | 3,931.964 | 2,090.29 | 2,522.803 |



## பிற்சேர்க்கை 2

அரசு விதைப் பண்ணைகளில் பயிரிடப்பட்ட நெல்லின் வகைகள்.

| தொடர் எண். | 1970–71 | 1971–72 | 1972–73 | 1973–74 |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | அன்னபூர்ணு | அன்னபூர்ணு | அன்னபூர்ணு | ரோகிணி |
| 2 | ஏ.டி.டி. 27 | ஏ.டி.டி. 27 கல்யாணி | கல்யாணி | அன்னபூர்ணு |
| 3 | ஜெயா | காவேரி | ஏ.டி.டி. 27 | கல்யாணி |
| 4 | ஐ.ஆர். 20 | திருவேணி | காவேரி | காவேரி |
| 5 | ஐ.ஆர். 8 | சி.ஓ. 33 | சி.ஓ. 33 | சி.ஓ. 33 |
| 6 | ஐ.ஆர். 22 | சி.ஓ. 29 | திருவேணி | திருவேணி |
| 7 | சி.ஓ. 29 | .. | காஞ்சி | காஞ்சி |
| 8 | சி.ஓ. 32 | ஜெயா | ரத்னு | ரத்னு |
| 9 | சி.ஓ. 31 | ஐ.ஆர். 20 | சி.ஓ. 29 | வைகை |
| 10 | டி.கே.எம். 6 | ஐ.ஆர். 8 | கரிகாலன் | ஐ.ஆர். 24 |
| 11 | பன்காஞ் | ஐ.ஆர். 22 | ஜெயா | ஜெயா |

| | 1974–75 | 1975–76 | 1976–77 | 1977–78 |
|---|---|---|---|---|
| | (6) | (7) | (8) | (9) |
| 1 | அன்னபூர்ணு | அன்னபூர்ணு | அன்னபூர்ணு | அன்னபூர்ணு |
| 2 | எ.டி.டி. 31 | எ.டி.டி. 31 | எ.டி.டி. 31 | எ.டி.டி. 31 |
| 3 | எ.டி.டி. 30 | எ.டி.டி. 30 | கண்ணகி | கண்ணகி<br>சி.ஓ. 33 |
| 4 | கண்ணகி | கண்ணகி | திருவேணி | திருவேணி |
| 5 | ஜமுனு | காவேரி | ஐ.இ.டி. 1722 | ஐ.இ.டி. 1722 |
| 6 | காவேரி | பூசா 33 | காஞ்சி | காஞ்சி |
| 7 | சி.ஓ. 33 | திருவேணி | வைகை | வைகை |
| 8 | பூசா 33 | ஐ.இ.டி. 1722 | கரிகாலன் | ஐ.ஆர். 20 |
| 9 | திருவேணி | காஞ்சி | ஐ.ஆர். 20 | ஐ.ஆர். 8 |
| 10 | ஐ.இ.டி. 1722 | வைகை | ஐ.ஆர். 8 | பொன்னி |
| 11 | காஞ்சி | கரிகாலன் | பொன்னி | பவானி |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 12 | ஐ.ஆர். 5 | சி.ஒ. 36 | ஐ.ஆர். 20 | கரிகாலன் |
| 13 | ஜி.இ.பி. 24 | சி.ஒ. 29 | விஜயா | ஐ.ஆர். 20 |
| 14 | பி.வி.ஆர். ஐ. | சி.ஒ. 31 | ஐ.ஆர். 8 | ஐ.ஆர். 8 |
| 15 | ஏ.எஸ்.டி. 5 | பொன்னி | ஐ.ஆர். 24 | சி.ஒ. 29 |
| 16 | ஏ.எஸ்.டி. 14 | பன்கஞ் | சி.ஒ. 29 | பொன்னி |
| 17 | சி.ஓ. 19 | ஜி.இ.பி. 24 | பொன்னி | பவானி |
| 18 | சி.ஓ. 25 | பி.வி.ஆர். ஐ. | பி.வி.ஆர்.ஐ. | பி.வி.ஆர்.ஐ. |
| 19 | பி.சி.பி. 1 | ஏ.எஸ்.டி. 5 | ஐ.ஆர். 5 | சி.ஒ. 25 |
| 20 | பி.எ.எம். 3 | சி.ஓ. 25<br>பி.எ.எம். 3<br>ஐ.ஆர். 26<br>ஐ.இ.டி. 1991 | சி.ஓ. 25<br>ஐ.சி.டி. 1991<br>பி.ஐ.இ.டி. 14466 | .. |

| (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|
| 12 வைகை | ஐ.ஆர். 20 | பவானி பி.வி.ஆர். ஐ. | டி.கே.எம். 8 |
| 13 கரிகாலன் | ஐ.ஆர். 8 | சி.ஓ. 25 | ஐ.இ.டி. 4786 |
| 14 ஐ.ஆர். 26 | சி.ஓ. 36 | டி.கே.எம். 8 | ஐ.இ.டி. 1444 |
| 15 ஐ.ஆர். 20 | பொன்னி | சி.ஓ. 40 | சி.ஓ. 40 |
| 16 ஐ.ஆர். 8 | பவானி | .. | சி.ஓ. 25 |
| 17 சி.ஓ. 36 | சி.ஓ. 25 | .. | என்.ஆர்.ஆர்.சி. 1672 |
| 18 பொன்னி | பி.இ.பி.எம். 1 | .. | .. |
| 19 பவானி | .. | .. | .. |
| 20 பி.வி.ஆர்.ஐ. சி.ஓ. 25 டி.என்.ஆர். 1 ருக்லேவகை | .. | .. | .. |



## பிற்சேர்க்கை 3.

அரசு விதைப் பண்ணைகளின் லாப நஷ்ட விவரங்கள்?

| தொடர் எண்ணும், அரசு விதைப் பண்ணையின் பெயரும். (1) | 1970-71 (2) | 1971-72 (3) | 1972-73 (4) |
|---|---|---|---|
| | | (ரூபாயில்.) | |
| 1 நல்லூர் .. .. | 60.596.02 | 58,623.06 | 65.281.00 |
| 2 ஆடியாண்டல் .. | 20,463.51 | 4,038.36 | (—)2,651.47 |
| 3 வளவச்சனூர் .. .. | 23,462.0 | (—)5,063.00 | 42,846.00 |
| 4 காஞ்சிபுரம் .. .. | (—)4,467.00 | 14,820.00 | 34,327.00 |
| 5 சிறுகாவேரிப்பாக்கம் .. | 753.00 | (—)12,448.00 | (—)11,691.00 |
| 6 பிச்சுவாக்கம் .. .. | (—)8,474.00 | (—) 5,884.00 | (—)20,655.00 |
| 7 ஊத்துக்கோட்டை .. | (—)2,761.00 | 19,232.00 | (—)24,371.00 |
| 8 கொலந்தலூர் .. | (—)1,870.00 | 2,721.00 | 2.417.00 |
| 9 புட்லூர் .. .. | 13,294.00 | (—)7,215.00 | (—)9.350.00 |
| 10 காக்குப்பம் .. .. | 6,853.00 | 14,824.00 | 14,724.00 |

| தொடர் எண்ணும், அரசு விதைப் பண்ணையின் பெயரும். | 1973-74 | 1974-75 | 1975-76 | 1976-77 |
|---|---|---|---|---|
| (1)—தொடர்ச்சி | (5) | (6) | (7) | (8) |
| | | (ரூபாயில்.) | | |
| 1 நல்லூர் .. .. | 66,000.00 | 97,619.00 | 31,580.00 | (—)10,942.00 |
| 2 ஆதியாண்டல் .. .. | 5,802.33 | (—)22,281.00 | (—)11,065.00 | .. |
| 3 வள்ளச்சனூர் .. | 45,698.00 | 7,000.00 | 41,949.00 | .. |
| 4 காஞ்சிபுரம் .. .. | 10,466.00 | 48,389.00 | 2,198.00 | 3,726.00 |
| 5 சிறுகாவேரிப்பாக்கம் .. | (—)10,657.00 | (—)24,707.00 | (—)34,644.00 | மூடப்பட்டது. |
| 6 பீச்சுவாக்கம் .. | (—)22,334.00 | (—)30,520.00 | .. | மூடப்பட்டது. |
| 7 உவத்துக்கோட்டை .. | (—)2,347.00 | (—)2,472.00 | .. | மூடப்பட்டது. |
| 8 கொலந்தலூர் .. .. | 18,174.00 | 10,879.00 | 16,959.00 | 19,938.00 |
| 9 புட்லூர் .. .. | (—)5,818.90 | (—)4,699.00 | 48,358.00 | .. |
| 10 காக்குப்பம் .. .. | 26,767.00 | 14,618.00 | (—)16,058.00 | 2,637.00 |



| (1) | (2) | | (4) | (5) |
|---|---|---|---|---|
| 11 | இருவேல்பேட்டை .. | (—)14,680.00 | (—)4,300.00 | (—)7,021.00 |
| 12 | வானூர் .. .. | (—)10,953.00 | 3,427.00 | 18,269.00 |
| 13 | வாண்டராயன்பேட்டை | 4,800.00 | 4,645.00 | (—)7,493.00 |
| 14 | மிரலூர் .. .. | (—)12,275.00 | (—)26,717.00 | (—)11,908.00 |
| 15 | வடக்கந்தல் .. | (—)15,112.00 | (—)21,639.00 | 22,326.00 |
| 16 | இறுங்கூர் .. .. | 11,661.00 | (—)430.00 | (—) 2,238.00 |
| 17 | நெய்குப்பைப்புதூர் .. | (—)1,435.00 | (—)20,420.00 | (—)3,127.00 |
| 18 | புதூர்பாளையம் .. | 1,873.00 | 25,708.00 | 32,519.00 |
| 19 | திருவரன்குளம் .. | .. | .. | மூடப்பட்டது. |
| 20 | தெக்கத்தூர் .. .. | .. | .. | மூடப்பட்டது. |
| 21 | நாகமங்கலம் .. .. | 9,194.00 | 50,125.00 | 15,971.00 |
| 22 | திருக்கடையூர் .. | (—)2,551.00 | (—)12,116.00 | (—)3,455.00 |
| 23 | சாக்கோட்டை .. | 20.309 | 1,06.258 | 77,053 |
| 24 | மருதநல்லூர் .. .. | 30,340 | சாக்கோட்டை அரசு விதைப் பண்ணையுடன் இணைக்கப்பட்டது. | .. |

| (5) | (6) | (7) | | (8) |
|---|---|---|---|---|
| 11 இருக்கைப்பேட்டை .. | 27,248.00 | 60,700.00 | 1,62,207.00 | 3,992.00 |
| 12 ஊரர் .. | 16,347.00 | 60,700.00 | 2,260.00 | 25,045.00 |
| 13 வாண்டராயன்பேட்டை | 14,200.00 | 56,609.00 | (—)6,255.00 | 37,949.00 |
| 14 மிரஊர் .. | 9,128.00 | 4,737.00 | 7,294.00 | 7,711.00 |
| 15 வடக்கநந்தல் .. | 36,528.00 | 73,058.00 | 13,194.00 | 32,320.00 |
| 16 இனுங்கூர் .. | (—)16,397.00 | 1,06,003.00 | (—)16,371.00 | .. |
| 17 நெய்குப்பைப்புதூர் .. | 15,729.00 | 70,278.00 | 70,000.00 | 10,195.00 |
| 18 புதூர்பாளையம் .. | 69,053.00 | 1,69,740.00 | 67,000.00 | (—)41,389.00 |
| 19 திருவரன்குளம் .. | .. | .. | .. | .. |
| 20 தெக்கத்தூர் .. | .. | .. | .. | .. |
| 21 நாகமங்கலம் .. | 83,668.00 | 1,14,173.00 | 1,17,057.00 | 1,18,394.00 |
| 22 திருக்கடையூர் .. | 15,532.00 | 63,734.00 | 26,289.00 | .. |
| 23 சாக்கோட்டை .. | 1,10.396 | 1,15,571 | 85,887 | 21,771 |
| 24 மருதநலூரர் .. | .. | .. | .. | .. |



| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 25 காட்டுத் தோட்டம் .. | நீர் மேலாண்மை ஆராய்ச்சிக்கு கொடுக்கப் பட்டது. | | |
| 26 ஒரத்தூர் .. .. | 6,287 | 39,565 | 43,164 |
| 27 காஞ்சிக்குடிக்காடு .. | (—)16,812.00 | 14,09800 | 7,446.00 |
| 28 நெடும்பாலம் .. | 10,389.00 | 57,032.00 | 49,836.00 |
| 29 கீரந்தி .. .. .. | 35,387.00 | 40,703.00 | 1,08,252.00 |
| 30 தேவாம்பாள்பட்டிணம் .. | (—)8,603.00 | 46,099.00 | 28,677.00 |
| 31 சிக்கல் .. .. .. | 11,571.00 | 37,040.00 | 34,499.00 |
| 32 மூங்கில்குடி .. .. | 6,501.00 | 19,963.00 | 10,746.00 |
| 33 பட்டுக்கோட்டை .. | .— | .. | மூடப்பட்டது. |
| 34 நாட்டுமங்கலம் .. | 7,932.00 | ... | மூடப்பட்டது. |
| 35 விஜயபுரம் ... .. | 10,383.00 | 26,915.00 | 21.038.00 |
| 36 வைகை அணை 1 .. | 50,784.00 | 32,066.00 | 62,678.00 |
| 37 வைகை அணை 2 ... | (—)2,654.00 | (—)8,175.00 | (—)52.00 |
| 38 கிழக்கூடலூர் .. .. | 21,352.00 | 17,586.00 | 33,939 |
| 39 ரைபில்ரேஞ்சு ... ... | (—)26,354.00 | (—)46,773.00 | (—)6,562.00 |

| (1) | | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|---|
| 25 காட்டுத்தோட்டம் | .. | | | | |
| 26 ஒரத்தூர் .. | .. | 33,025.00 | 52,630.00 | 29,853.00 | (—)4,727.00 |
| 27 காஞ்சிக்குடிக்காடு | .. | 12,215.00 | 14,861.00 | 36,217.00 | (—)42,726.0 |
| 28 நெடும்பாலம் .. | .. | 47,616.00 | 62,019.00 | 15,912.00 | .. |
| 29 கிரந்தி .. | .. | 55,147.00 | 80,147.00 | 99,070.00 | (—)28,246.00 |
| 30 தேவாம்பாள்பட்டிணம் | .. | 24,940.00 | 70,155.00 | 60,190.00 | (—)43,089.00 |
| 31 சிக்கில் .. .. | .. | 24,102.00 | 1,00,172.00 | 1.00.913.00 | 15,257.00 |
| 32 மூங்கில்குடி .. | .. | 29,963.00 | 49,752.00 | 62,599.00 | 27,620.00 |
| 33 பட்டுக்கோட்டை | .. | .. | .. | .. | .. |
| 34 நாட்டுமங்கலம் | .. | .. | .. | .. | .. |
| 35 விஜயகபுரம் .. | .. | 41,832.00 | 1,21,564.00 | 22,55.00 | (—)20,282.00 |
| 36 வைகை அணை 1 | .. | 98,414.00 | .. | 73,929.00 | 24,628.00 |
| 37 வைகை அணை 2 | .. | (—)5,344.00 | (—)6,642.00 | (—)1,438.00 | (—)1,509.00 |
| 38 கீழக்கூடலூர் .. | .. | 90,214.00 | 2,33,759.00 | 1.02,938.00 | 9,000.00 |
| 39 ரைபில்ரேஞ்சு .. | .. | (—)3,480.00 | 9,220.00 | 1,03,000.00 | (—)48,687.00 |



| (1) | | (2) | (3) | (4) |
|---|---|---|---|---|
| 40 வில்லுப்பட்டி | .. | (—)38,748.00 | (—)70,090.00 | (—)30,513.00 |
| 41 பரமக்குடி .. | .. | 6,754.00 | 18,474.00 | 18,652.00 |
| 42 தேவதானம் .. | .. | 41,558.00 | 27,263.00 | 51,101.00 |
| 43 தேவக்கோட்டை | .. | (—)15,937.00 | (—)25,373.00 | (—)2,534.00 |
| 44 மேலகரம் .. | .. | 10,154.00 | 24,763.00 | 21,560.00 |
| 45 மணிமுத்தார் | .. | 1,548.00 | (—)2,085.00 | (—)13,352.00 |
| 46 திருப்பதிசாரம் | .. | 17,875.00 | 28,210.00 | 62,479.00 |
| 47 காரையிருப்பு | .. | 69,546.00 | 69,636.00 | 39,409.00 |
| 48 சிள்ளிக்குளம் .. | .. | 37,566.00 | 40,496.00 | 70,351.00 |
| 49 கண்ணம்பாளையம் | .. | 31,766.00 | 19,690.00 | 14,199.00 |
| 50 பொங்கலூர் .. | .. | 31.892.00 | 46,570.00 | 40.575.00 |
| 51 பாப்பான்குளம் .. | .. | 16,297.00 | (—)13,678.00 | 4,464·00 |
| 52 முன்னூவாடி .. | .. | (—)5,478.00 | 9,331.00 | 8,356.00 |
| 53 மேட்டூர் அணை | .. | 40,369.00 | 43,134.00 | 77,445.00 |
| 54 டானிஷ்பேட்டை | .. | (—)22,398.00 | 2,440.00 | 18,744.00 |

| | | (5) | (6) | (7) | (8) |
|---|---|---|---|---|---|
| 40 | வில்லுப்பட்டி .. .. | 8,768.00 | 3,044.00 | (—)1,03,087.00 | (—)1,20,107.00 |
| 41 | பரமக்குடி .. .. | 29,069.00 | 17,539.00 | 10,229.00 | 11,242.00 |
| 42 | தேவதானம் .. .. | 88,634.00 | 20,596.00 | 4,156.00 | 30,726.00 |
| 43 | தேவக்கோட்டை .. | 7,220.00 | 42,224.00 | மூடப்பட்டது. | |
| 44 | மேலகரம் .. .. | 77,731.00 | 18,718.00 | 22,775.00 | 22,622.00 |
| 45 | மணிமுத்தார் .. .. | 17,822.00 | (—)4,175.00 | மூடப்பட்டது. | |
| 46 | திருப்பதிசாரம் .. | 1,54,670.00 | 2,36,171.00 | 1,09,655.00 | 1,699.00 |
| 47 | காரையிருப்பு .. | 1,61,204.00 | 3,27,344.00 | 3,30,790.00 | 97,305.00 |
| 48 | தின்னிக்குளம் .. .. | 1,87,604.00 | 5,55,237.00 | 3,09,424.00 | 1,89,999.00 |
| 49 | கண்ணம்பாளையம் .. | 49,724.00 | (—)42,547.00 | 43,065.00 | 63,678.00 |
| 50 | பொங்கலூர் .. .. | 58,954.00 | 2,20,634.00 | 1,60,000.00 | 12,000.00 |
| 51 | பாப்பான்குளம் .. | (—)2,591.00 | 2,562.00 | 1,415.00 | 7,369.00 |
| 52 | முள்ளுவாடி .. .. | 12,891.00 | 17,283.00 | 10,684.00 | 12,843.00 |
| 53 | மேட்டூர் அணை .. | 1,24,603.00 | 3,04,939.00 | 1,14,253.00 | 34,285.00 |
| 54 | டாவிஷ்பேட்டை .. | 21,482.00 | 1,82,966.00 | 47,954.00 | 21,912.00 |



| | (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|---|
| 55 | பாப்பாரப்பட்டி .. | 22,000.00 | 27,361.00 | 24,067.00 |
| 56 | பவானிசாகர் .. .. | 9,921.00 | 56,691.00 | 42,269.00 |
| 57 | சத்தியமங்கலம் .. .. | (—)21,296.00 | 20,938.00 | 24,163.00 |
| 58 | பவானி .. .. | 540.00 | 52,572.00 | 55,901.00 |
| 59 | [illegible] .. | 6,560.00 | 78,610.00 | 1,39,607.00 |
| 60 | வெள்ளப்பாக்கம் .. | (—)19,282.00 | (—)3,486.00 | (—)45,022.00 |

| | | (5) | (6) | (7) | (8) |
|---|---|---|---|---|---|
| 55 | பாப்பாரப்பட்டி .. | 52,852.00 | 56,329.00 | 69,488.00 | 15,252.00 |
| 56 | பவானிசாகர் .. .. | 87,192.00 | 1,74,299.00 | 1,50,786.00 | 1,32,568.00 |
| 57 | சத்தியமங்கலம் .. .. | 39,901.00 | 1,38,183.00 | 1,97,602.00 | 10,372.00 |
| 58 | பவானி .. .. | 77,200.00 | 1,80,022.00 | 1,00,396.00 | 3,596.00 |
| 59 | [illegible] .. .. | 2,29,720.00 | 7,18,761.00 | 3,49,137.00 | 3,09,072.00 |
| 60 | வெள்ளப்பாக்கம் .. | (—)14,893.00 | (—)10,000.00 | (—)6,076.00 | . |

(—) நஷ்டம்.

978 ஆகஸ்ட் 31]

## இணைப்பு XIII.

[109ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 171-க்கான விடையைக் காண்க.]

அறிக்கை.

(அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் 56 பவர் போரிங் செட்டுகளும், 6 கை போரிங் செட்டுகளும் உள்ளன.

(ஆ) போரிங் செட்டுகள் எந்தெந்த ஆண்டுகளிப் எவ்வளவு விலைக்கு வாங்கப்பட்டன என்கின்ற விவரங்கள் பின்வருமாறு:—

| வரிசை எண்ணும் வாங்கப்பட்ட போரிங் செட்டுகளும். (1) | எண்ணிக்கை. (2) | விலை (ரூ. இலட்சத்தில்.) (3) | வருடம். (4) | குறிப்புரை. (5) |
|---|---|---|---|---|
| 1. பவர் போரிங் செட் | 3 | 13.50 | 1969–70 | |
| 2. | 4 | 17.27 | 1970–71 (இரண்டாந்தர விலையில்.) | |
| 3. ,, ,, | 5 | 19.33 | 1972–73 | |
| 4. ,, ,, | 20 | 86.13 | 1974–75 | |
| 5. ,, ,, | 4 | 33.57 | 1975–76 | |
| 6. ,, ,, | 13 | 101.92 | 1976–77 | |
| 7. ,, ,, | 16 | (இலவசமாக யுனிசெப்) | 1971–72 | 2 |
| | | | 1972–73 | 7 |
| | | | 1973–74 | 3 |
| | | | 1974–75 | 3 |
| | | | 1975–76 | 1 |
| | | | மொத்தம் ... | 16 |
| 8. கைபோரிங் செட் | 3 | 25,500 ரூ. | 1970–71 | |
| | 3 | 25,500 ரூ. | 1972–73 | |
| | 6 | | | |



1978 ஆகஸ்ட் 31]

(இ) தற்சமயம் 50 பவர் போரிங் செட்டுகளும் 5 கை போரிங் செட்டுகளும் வேலை செய்யும் நிலைகளில் உள்ளன. 15 பவர் போரிங் செட்டுகளும், ஒரு கை போரிங் செட்டும் பழுதடைந்த நிலையில் உள்ளன.

(ஈ) தனியார்கள் மூலமாக போடப்பட்டுள்ள செட்டுகளுக்கு ஆண்டுதோறும் கொடுக்கப்பட்ட தொகையினை பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

| | ஆண்டு. | தொகை. |
|---|---|---|
| | | ரூ. |
| 1. .. .. .. | 1971–72 | 878.00 |
| 2. .. .. .. | 1972–73 | 87,158.00 |
| 3. .. .. .. | 1973–74 | 2,41,238.00 |
| 4. .. .. .. | 1974–75 | 4,27,090.00 |
| 5. .. .. .. | 1975–76 | 36,46,232.00 |
| 6. .. .. .. | 1976–77 | 2,10,85,604.00 |
| 7. .. .. .. | 1977–78 | 72,01,366.00 |
| | மொத்தம் .. | 3,26,89,566.00 |

## இணைப்பு XIV.

[110ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 174-க்கான விடையைக் காண்க]

முதலமைச்சர் பொது நிவாரண நிதி:

1—4—1977 முதல் 31—12—1977 வரை.

77-78 நிதி ஆண்டில் 1—4—1977 முதல் 31—12—1977 வரை எந்தெந்தக் காரணங்களுக்காக எவ்வளவு நிதி அளிக்கப்பட்டுள்ளது என்பது பற்றிய விவரங்கள்.

| தேதி. | | ரூ. பை. |
|---|---|---|
| 8–4–1977 | தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், தோப்பாம்பட்டி ஊரில் இருந்த திரு. சின்னசாமி, அரூர்-மொரப்பூர் சாலையருகேயுள்ள இருப்புப்பாதை சந்தருகே நேர்ந்த விபத்தில் மாண்டார். அதனால் அவரது மனைவியான திருமதி இராசாம்பாளுக்கு | 1,000.00 |

[1978 ஆகஸ்ட் 31

| | | ரூ. பை |
|---|---|---|
| 7-4-1977 | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் வேலூர் வீட்டு வசதி யூனிட்டைச் சேர்ந்த நிரந்தர அடிப்படை ஊதிய விகித மற்ற திரு. மாணிக்கம் வேலையின்போது ஏற்பட்ட விபத்தால் கால்களை இழந்தார். அவருக்கு செயற்கைக் கால்களைப் பொருத்த | 1,000.00 |
| 15-4-1977 | சென்னை நகரில் கே. எம். கார்டன் 6-வது தெருவிலிருந்த திரு. முனிசாமி, வெள்ளத்தால் இறந்தமைக்காக அவரது மனைவியான திருமதி மலையம்மாளுக்கு | 1,000.00 |
| 18-4-1977 | மதுரை மாவட்டம்: பெரியகுளம் வட்டம், மயிலாடும்பாறை ஊரைச் சேர்ந்த குமணன் தொழு என்ற சிற்றூரில் கோடாங்கிமுத்து தேவர் என்பவர் மகள், செல்வி தேவமணி சிறு ஆறு என்ற நதியை கடக்கும்போது மாண்டாள். அதனால் அவரது தந்தைக்கு | 1,000.00 |
| 18-4-1977 | நவம்பர் 1976-ல் சென்னை அதன் சுற்றுப்புறங்களில் ஏற்பட்ட வெள்ளத்தால் பொருளீட்டுவோரை இழந்த கீழ்க்காணும் எட்டு குடும்பங்களுக்கு தலா ரூ. 1,000 விதம். | |

| மாண்டவர் பெயர். (1) | பயனடைந்தவர் பெயர். (2) |
|---|---|
| 1 திரு. சண்முகம் | திருமதி கண்ணம்மாள் (தாயார்). |
| 2 திரு. சீனுவாசன் | திருமதி பத்மாவதியம்மாள் (தாயார்) |
| 3 திரு. செல்வராசு | திருமதி யசோதா (மனைவி) |
| 4 திரு. கலைச்செல்வன் | திருமதி ரூபவதி அம்மாள் (தாயார்) |
| 5 திரு. மாணிக்க நாயக்கர் | திருமதி அமிர்தம்மாள் (மனைவி) |
| 6 செல்வி கல்யாணி செல்வன், ராமு. | திரு. மதுரை நாயக்கர் (தந்தை) |
| 7 திருமதி சோட்டிபாய் | திரு. அகமது உசேன் (கணவர்) |
| 8 திரு. முனிசாமி என்கிற தாந்தோணி | திருமதி பத்மாவதியம்மாள் (மனைவி) |

8,000.00



1978 ஆகஸ்ட் 31]

| தேதி. | | ரூ. பை. |
|---|---|---|
| 19-4-1977 | திருச்சிராப்பள்ளி மாவட்டம் துறையூர் வட்டம் உப்பிலியாபுரம் ஊரில் 6-2-1977 அன்று கிணறு ஆழப்படுத்தும் வேலையிலீடுபட்டிருந்த திரு. ஆறுமுகம் என்பவர் இறந்தமைக்காக அவரது மனைவியாருக்கு (செல்லபாப்பா). | 1,000.00 |
| 20-4-1976 | 1976-ஆம் ஆண்டு ஜூலை மாதம் கள்ளச் சாராயத்தை குடித்ததால் மாண்டுபோன திரு. இராதாகிருஷ்ணன் என்பவர் மனைவியான திருமதி வரலட்சுமிக்கு | 1,000.00 |
| [illegible]-4-1977 | கோவில்பட்டி அருகே யானைக்கல் [illegible] என்னுமிடத்தில் 24-10-1974 அன்று மாநில அரசுப் போக்குவரத்து விரைவு வண்டியால் ஏற்பட்ட விபத்தில் காயமுற்று மாண்டவரின் மனைவி திருமதி மூக்காயிக்கு | 1,000.00 |
| [illegible]-4-1977 | செங்கல்பட்டு மாவட்டம் சைதாப்பேட்டை வட்டம் கொரட்டூர் ஊரில் நாத்தான் குப்பம் என்ற சிற்றூரில் வெள்ளத்தால் உயிரிழந்த இராசேந்திரன் என்பவர் மனைவியான திருமதி புவனேஸ்வரிக்கு | 1,000.00 |
| 29-4-1977 | சென்னை 30-ல் செனாய் நகரில் நெ. 3/1, கந்தப்பிள்ளை தெருவில் உள்ள செல்வி காந்திமதிக்கு தையல் இயந்திரம் வாங்க நிதியுதவி | 638.30 |

[1978 ஆகஸ்ட் 31

| தேதி. | | ரூ. பை. |
|---|---|---|
| 4–5–1977 | செங்கல்பட்டு மாவட்டம் திருவள்ளூர் வட்டம், புளப்பாக்கம் ஊரில் திரு. சியாளன் என்கின்ற ஆறுமுகம் மின்னல் தாக்கி மாண்டதால் அவரது மனைவியான திருமதி தன்னுர் மாலைக்கு | 1,000.00 |
| 4–5–1977 | தென்னார்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி வட்டம் அம்மாகுளத்தூரிலும் சிறுவாத்தூர் என்ற ஊரிலும் மின்னல் தாக்குண்டு மாண்ட திரு. மாச்சா கவுண்டர் மனைவியான திருமதி சின்னப்பொண்ணுக்கும், திரு. அர்ச்சுன கவுண்டர் மனைவியான திருமதி தனபாக்கியத்துக்கும் தலா ரூ. 1,000 விதம் | 2,000.00 |
| 4–5–1977 | திருச்சிராப்பள்ளி மாவட்டம் துறையூர் வட்டம் உப்பிலியாபுரம் ஊரில் 2–3–1977 அன்று கிணறு ஆழப்படுத்தும் வேலையில் ஈடுபட்டிருந்தபோது நிலச்சரிவு ஏற்பட்டு அதனால் சிக்குண்டு மாண்டுபோன திரு. ராமராசு என்பவர் மனைவியான திருமதி கோவிந்தம்மாளுக்கு. | 1,000.00 |
| 17–5–1977 | 1976 நவம்பரில் சென்னை அதன் சுற்றுப்புறங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கியமைக்காக சென்னை மாநகராட்சிக்கு. | 3,85,850.00 |



1978 ஆகஸ்ட் 31]

| தேதி. | | ரூ. பை. |
|---|---|---|
| 21–5–1977 | 1976 அக்டோபரில், கோவை புதுக்கோட்டை இராமநாதபுரம் மாவட்டங்களில் துணி ஆலைகள் மூடப்பட்டிருந்ததால் அவதியுற்ற மில் தொழிலாளர்களுக்கு உதவி வழங்க இந்திய ஸ்டேட் வங்கியின் மிகைப் பற்று பெற்றமைக்காக வங்கியின் வட்டி. | 434.52 |
| 23–5–1977 | இராமநாதபுரம் மாவட்டம் விருதுநகர் உள்வட்டம், இன்சார் ஊரில் 7–1–1977 அன்று விபத்தால் உயிரிழந்த திரு. சுப்பையா தேவர் மனைவி திருமதி சுப்புத்தாய்க்கு. | 1,000.00 |
| 27–5–1977 | மங்களூரிலிருந்து, குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த வீரவேல் என்னும் இடத்திற்குச் சென்று கொண்டிருந்த C. I. R. 15 (கிருஷ்ணா சாகர்) என்னும் கப்பல் கடலில் காணாமற் போனதையடுத்து தூத்துக்குடியைச் சேர்ந்த பணியாளர்களின் குடும்பங்களுக்கு கொடுக்கப்பட்ட தொகை தலா ரூ. 1,000 விதம். | 8,000.00 |

| | காணாமற்போன நபர். (1) | பயனுக்குரியோரின் பெயர். (2) |
|---|---|---|
| 1 | திரு. சிலுவை பெர்னாண்டோ | பிச்சம்மாள் (மனைவி) |
| 2 | திரு. ஆல்பர்ட் .. .. | பிரான்சிஸ் அம்மாள் (மனைவி) |
| 3 | திரு. சிலுவைபெர்னாண்டோ | செந்தியாம்மாள் (மனைவி) |
| 4 | திரு. அந்தோணிசாமி .. | பாதிமா (மனைவி) |
| 5 | திரு. நாசரின் பெர்னாண்டோ | லேனம்மாள் (மனைவி) |
| 6 | திரு. மார்செல் பெர்னாண்டோ | பிலிஸ் அம்மாள் (மனைவி) |
| 7 | திரு. நாசரின் வில்வராயன் | மெல்சின் தோமாஸ் (மனைவி) |
| 8. | திரு. மிலிகன் பெர்னாண்டோ | அந்தோணியம்மாள் (தாயார்) |

| தேதி | | ரூ. பை. |
|---|---|---|
| 1-6-1977 | சென்னை-12, நெ. 40, புளியந் தோப்பு நெடுஞ்சாலை வீட்டின் சுவர் இடிந்து விழ்ந்ததால் மாண்ட திரு. சம்பத் என்பவர் மனைவி திருமதி கஸ்தூரிக்கு. | 1,000.00 |
| 1-6-1977 | இராமநாதபுரம் மாவட்டம் மதுரை விருதுநகர் சாலையில் கல்லக்குடி என்னுமிடத்துக்கருகில் பேருந்து விபத்தில் மாண்ட திரு. லட்சுமணன் என்பவர் மகன் (இளவர்)செல்வனுக்கு | 1,000.00 |
| 3-6-1977 | நிதி நெருக்கடி காரணமாகச் செயல்படாத இராமநாதபுரம் முத்தனேந்தல் சோமசுந்தரம் சூப்பர் நூற்பாலையைச் சேர்ந்த 199 பேருக்கு கொடுக்கப்பட்ட தொகை தலா ரூ. 200 வீதம். | 39,800.00 |
| 8-6-1977 | இராமநாதபுரம் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம் பாளையாம்பட்டி ஊரில் 23—4—1977 அன்று மின்னல் தாக்கி மாண்ட திரு. சித்ரா மூப்பர் என்பவர் மனைவி திருமதி ராமாயிக்கு. | 1,000.00 |
| 13-6-1977 | கோயம்புத்தூர் மாவட்டம் லோடஸ் மற்றும் பத்மா மில் தொழிலாளர்களுக்கு தலா ரூ. 200 வீதம் 934 தொழிலாளர்களுக்கு. | 1,86,800.00 |
| 17-6-1977 | இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், பெருங்கரை ஊரின் எல்லையிலுள்ள பாப்பானந்தாளில் 24-4-1977 அன்று மின்னல் தாக்கி மாண்ட திருமதி சுலைகால் பீபி என்பவர் கணவர் திரு. அப்துல் | 1,000.00 |





| தேதி | | ரூ. பை. |
|---|---|---|
| | அமீது என்பவருக்கு. திரு. அப்துல் அமீதும் இறந்ததால் அவர்களுடைய பிள்ளைகளுக்கு பிற்பாடு கொடுக்கப்பட்டது. | |
| 24-6-1977 | தஞ்சாவூர் மாவட்டம், பூண்டியிலுள்ள ஆர். கி. சின்னராணி உயர்நிலைப் பள்ளி கட்டடம் தீ விபத்தால் பாதிக்கப்பட்டதால் அப்பள்ளியின் கட்டடங்கள் பழுதுபார்த்து கட்ட. | 10,000.00 |
| 27-6-1977 | சென்னை அதன் சுற்றுப்புறங்களில் சென்ற 1976 ஆம் ஆண்டு நவம்பரில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கைத்தறி துணிகள் வழங்கியமைக்காக கோ. ஆப்டெக்ஸ் நிறுவனத்துக்கு. | 3,11,565.00 |
| 30-6-1977 | இராமநாதபுரம் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம் கம்பிகுடி ஊரில் 29-5-76 அன்று லாரி விபத்தில் உயிரிழந்த திரு. முனுசாமி சேர்வைக்காக அவரது மனைவியான திருமதி சண்முகவடிவுக்கு. | 1,000.00 |
| 30-6-1977 | பணிக்குச் செல்லும் வழியில் மின்சாரத்தால் தாக்குண்டு உயிரிழந்த உதவி சப் இன்ஸ்பெக்டர் எஸ். அய்யாருவின் குடும்பத்துக்கு கொடுக்கப்பட்ட தொகை. | 5,000.00 |
| 5-7-1977 | இராமநாதபுரம் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், முடியனூர் ஊரில் 24-5-77 அன்று மின்னல் தாக்கி மாண்ட திரு. சிவமயம் என்பவருக்காக அவரது மனைவி திருமதி முத்தாத்தாளுக்கு. | 1,000.00 |

[1978 ஆகஸ்ட் 31

| தேதி | | ரூ. பை. |
|---|---|---|
| 5-7-1977 | இராமநாதபுரம் மாவட்டம், சாத்தூர் வட்டம், படந்தால் ஊரில் 2-5-1977 அன்று மின்னல் தாக்கி மாண்ட திரு. ராமகோனர் அவர்களுக்காக அவரது மனைவியான திருமதி தவம் மாளுக்கு. | 1,000.00 |
| 5-7-1977 | கோயம்புத்தூர் தனதாபாத் டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலையிலுள்ள பார்வை இழந்த திரு. பி. எஸ். விஸ்வநாதன் தன் தந்தையாரின் சொத்தில் பங்குபெற வழக்காட நிதியுதவி. | 1,000.00 |
| 11-7-1977 | 9-7-77 அன்று மாயூரத்திற்கு அருகே ஏற்பட்ட சோழன் போக்கு வரத்துக் கழக பேருந்து விபத்தில் பலியான நால்வரை சார்ந்தோருக்கு கொடுக்கப்பட்ட தொகை தலா ரூ. 1,000. | 4,000.00 |
| 14-7-1977 | செங்கல்பட்டு மாவட்டத்தை சேர்ந்த தனி வருவாய் ஆய்வாளர் திரு. தேசிகன் என்பவர் 8-3-76 அன்று பயங்கரமாகத் தாக்கப்பட்டார். அரிசி கடத்தலில் ஈடுபட்டோர் செய்திருக்கக்கூடிய வேலையென ஊகித்து அவரது தாயான திருமதி புஷ்பவல்லி அம்மாளுக்கு. | 2,000.00 |
| 21-7-1977 | ஜூலை 1976-ல் கள்ளச் சாராயம் குடித்ததால் மாண்ட சென்னை அயனவரத்தை சேர்ந்த திரு. கண்ணனுக்காக அவரது மனைவியான திருமதி சகதீஸ்வரிக்கு. | 1,000.00 |



[1978 ஆகஸ்ட் 31

| தேதி | | ரூ. பை. |
|---|---|---|
| [illegible]-7-1977 | இராமநாதபுரம் மாவட்டம், விருதுநகர் உள் வட்டம், எட்டி நாயக்கன் பட்டி ஊரில் 24-2-1977 அன்று லாரிவிபத்தில் உயிரிழந்த திரு. கோபால்சாமி நாயக்கருக்காக அவரது மனைவியான திருமதி பெருமானக்காளுக்கு. | 1,000.00 |
| 25-7-1977 | மதுரை மாவட்டம் பெரியகுளம் வட்டம் உப்புக் கோட்டை ஊரில் பேருந்து விபத்தால் உயிரிழந்த திரு. மாயாண்டி தேவர் (ஓய்வு பெற்ற தலைமை கான்ஸ்டேபிள்) அவருக்காக அவரது மனைவியாருக்கு ரூ. 500 ஜக்கம்மா நாயக்கர் மனைவியாருக்கு ரூ. 1,000. | 1,500.00 |
| [illegible]-19[illegible] | 16-2-76 அன்று லாரி விபத்தில் உயிரிழந்த நால்வர் குடும்பங்களுக்கும் தலா ரூ. 1,000 வீதம். | 4,000.00 |

| மாண்டவர் பெயர். | பயனடைந்தவர் பெயர். |
|---|---|
| [illegible]. கணேசன் | திரு. பெரிய சாமி |
| [illegible]. முருகேசன் | திரு. அப்புலி சேர்வை |
| திரு. தங்கராசு | திரு. நல்லபிச்சை சேர்வை |
| திரு. குணசேகரன் | திருமதி அருக்காணி அம்மாள். |

ரூ. 4,000.00

| | | |
|---|---|---|
| 26-7-1977 | இராமநாதபுரம் மாவட்டம், இளையான்குடி உள் வட்டம், மெமெனசவான் ஊரில் 14-1-77 அன்று வெடி விபத்தால் மாண்ட திரு. இராமசாமி அய்யர் அவர்களுக்காக அவரது மனைவியான திருமதி மகா லட்சுமிக்கு. | 1,000.00 |

1978 ஆகஸ்ட் 31]

| தேதி | | ரூ. பை. |
|---|---|---|
| 4-8-1977 | தென்னாற்காடு மாவட்டம் கடலூர் வட்டம் தோப்புக் கொல்லை ஊரில் 6-6-1977 அன்று மின்னல் தாக்குண்டு மாண்ட திரு. இராமமூர்த்திக்காக அவரது மனைவியான திருமதி கஸ்தூரிக்கு. | |
| 12-8-1977 | 22-2-77 அன்று மதுரை அருகே பறவை என்னும் ஊரருகே ஏற்பட்ட பேருந்து விபத்தில் மாண்ட இருளப்பனுக்காக அவரது சட்ட வாரிசான மகளுக்கு (சரோஜா) | 1,000.00 |
| 12-8-1977 | 1976 நவம்பரில் சென்னை அதன் சுற்றுப் புறங்களில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கைத்தறித் துணிகள் வழங்கியமைக்காக கோ ஆப்டெக்ஸ் நிறுவனத்துக்கு. | 68,550.00 |
| 12-8-1977 | ஸ்டேட் வங்கியில் காசோலைகளை மாற்றுவதற்காக கமிஷன் செலவு. | 112.50 |
| 13-8-1977 | நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டம் படந்தொரை ஊரில் அப்துல் கரீம் என்பவர் மனைவி சைனப் காட்டு யானையால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டார். உடல் ஊனமுற்ற அவர் கணவனுக்கு. | 200.00 |
| 18-8-1977 | 15-8-1977 அன்று இராமநாதபுரம் மாவட்டம் வத்திராயிருப்பு அருகே வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட யாத்ரீகர்கள் 35 குடும்பங்களுக்கு தலா ரூ. 2,000 வீதம். | 70,000.00 |



[1978 ஆகஸ்ட் 31

| தேதி | | ரூ. பை. |
|---|---|---|
| 19-8-1977 | இராமநாதபுரம் மாவட்டம் திருபுவனம் நகரைச்சேர்ந்த திரு. பாஸ்கரன் என்பவர் 20-7-76 அன்று ரயிலிலிருந்து தவறி விழுந்ததால் மாண்டார். அதனால் அவர் மனைவி திருமதி நாகரத்தினத்திற்கு. | 500.00 |
| 19-8-1977 | இராமநாதபுரம் மாவட்டம் சாத்தூர் வட்டம், சாத்தூர், விருதுநகர் சாலையில் நடுவப்பட்டி ஊரருகே 18-5-77 அன்று ஏற்பட்ட லாரி விபத்தில் மாண்ட மூன்று பேர் குடும்பத்தினருக்கு தலா ரூ. 1,000 வீதம். | 3,000.00 |
| 24-8-1977 | மதுரை மாவட்டம் கம்பம் நகரருகே டிராக்டர் ஒன்றினால் விபத்தில் உயிரிழந்த திரு ஆறுமுகம் என்பவர் மனைவிக்கு. | 1,000.00 |
| 6-9-1977 | தென்னாற்காடு மாவட்டத்தில் விருத்தாசலம் வட்டம் சேதமங்கலம் ஊரைச் சேர்ந்த மூவர் 6-7-77 அன்று மாவிதனதால் என்ற ஊரில் கிணறு வெட்டும் போது மாண்டார்கள். அவர்கள் குடும்பத்துக்கு தலா ரூ. 1,000 வீதம். | 3,000.00 |
| 31-8-1977 | செங்கல்பட்டு மாவட்டத்தில் 1976 நவம்பர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கைத்தறி துணிகள் வழங்கியமைக்காக தமிழ்நாடு கைத்தறி நிதி உதவி வாணிகக் கழகத்துக்கு கொடுக்கப்பட்ட தொகை. | 9,12,500.00 |

| தேதி | | ரூ. பை. |
|---|---|---|
| 12-9-1977 | பெருத்த இழப்பு காரணமாக 10-12-76 முதல் இயங்காமலிருந்த சேலம் சௌத் இந்தியா கிளாஸ் அண்டு எனாமல் ஒர்க்ஸ் லிமிடெட்டை சேர்ந்த தொழிலாளர்களும் பணியாளர்களுக்கும் 330 நிரந்தரம் வேலையாட்களுக்கு கொடுக்கப்பட்டது தலா ரூ. 100. | 33,000.00 |
| 23-9-1977 | மதுரை மாவட்டம், உத்தமபாளையம் வட்டம் பட்டிபுரம் ஊரை சேர்ந்த எறமநாயக்கன் பட்டி சிற்றூரில் 28-5-77 அன்று கல்சுவர் கட்டும் போது இறந்த திரு. பொன்னுராசு என்பவருக்காக அவரது மனைவியான திருமதி கருப்பாயிக்கு. | 1,000.00 |
| 24-9-1977 | வட ஆற்காடு மாவட்டம், திருவண்ணாமலை வட்டம், நெய்வநாதன் ஊரில் 4-6-77 அன்று இடி தாக்குண்டு மாண்ட திரு. காசிவேல் மேஸ்திரிக்காக அவரது மனைவி திருமதி வனமயிலுக்கு. | 1,000.00 |
| 24-9-1977 | தென்னாற்காடு மாவட்டம், விழுப்புரம் வட்டம், செகுலப்பாக்கம் ஊரில் 8-6-1977 அன்று மின்னல் தாக்கி மாண்ட திரு. சுப்பராய மேஸ்திரிக்காக அவர் மனைவி திருமதி ரங்கநாயகிக்கு. | 1,000.00 |
| 26-9-1977 | நீலகிரி மாவட்டம், கூனூர் வட்டம், ஜகதலா ஊரில் 3-5-1977 அன்று வெள்ளத்தால் மாண்ட செல்வி லட்சுமி மற்றும் செல்வி ராணி என்பவர்களுக்காக அவர்கள் | 200.00 |





| தேதி | | ரூ. பை. |
|---|---|---|
| | தந்தையரான திருவாளர்கள் நடேச கௌண்டர் மற்றும் ரூசை அவர்களுக்கு தலா ரூ. 100. | |
| 26-9-1977 | இராமநாதபுரம் மாவட்டம், சிவகங்கை வட்டம், நாட்டரசன் கோட்டையைச் சேர்ந்த திரு. பழனி என்பவர் 9-8-1977 அன்று மின்னல் தாக்கி மாண்டமைக்காக அவரது மனைவியான திருமதி பூர்ணத்திற்கு. | 1,000·00 |
| [illegible]-9-1977 | மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், கள்ளிகுடி அருகே 29-11-1976 அன்று நிகழ்ந்த பேருந்து விபத்தில் மாண்ட இருவரின் குடும்பத்துக்கு கொடுக்கப்பட்ட தொகை தலா ரூ. 1,000. | 2,000·00 |
| [illegible]-9-1977 | மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், செல்லப்ப நாயகன்பட்டி ஊரில் மூங்கில் பட்டி சிற்றூரில் 25-4-1977 அன்று மின்சாரம் தாக்கியதால் உயிரிழந்த திரு. எஸ். ஆறுமுகம் அவர்களுக்காக அவர் மனைவியான திருமதி தனத்துக்கு. | 1,000·00 |
| 30-9-1977 | மதுரை மாவட்டம், திண்டுக்கல் வட்டம், கே. புதுக்கோட்டை ஊரில் 15-5-1977 அன்று வெடி விபத்தால் மாண்ட திரு. இலட்சுமணனுக்காக அவரது மனைவியான திருமதி மாரியம்மாளுக்கு. | 1,000·00 |

1978 ஆகஸ்ட் 31]

| தேதி | | ரூ. பை. |
|---|---|---|
| 30-9-1977 | இராமநாதபுரம் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டம், புதுப்பட்டி ஊரில் 27-6-1977 அன்று விபத்தால் உயிரிழந்த திரு. ஊர்து என்பவருக்காக அவரது மனைவி திருமதி பாப்பாவுக்கு. | 1,000·00 |
| 7-10-1977 | தஞ்சாவூரைச் சேர்ந்த திரு. பஞ்சநாத பாத்தர் மகள் செல்வி மீனாட்சி ஜலமண்டலியால் துரத்தப்பட்டு இருப்புப்பாதையோடு ஓடும்போது தவறி விழ அவள் மீது மின்சார வண்டி ஏறியது. செல்வி மீனாட்சிக்காக அவளது தந்தைக்கு. | 1,000·00 |
| 17-10-1977 | தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், கடத்தூர் ஊரில் 15-4-1976 அன்று வெடி விபத்தால் ஊனமடைந்த திருமதி கோவிந்தம்மாளுக்காக அவள் கணவர் திரு. கன்னு போயனுக்கு. | 500·00 |
| 17-10-1977 | வட ஆற்காடு மாவட்டம், வாணியம்பாடி வட்டம், பெரியான்குப்பம் ஊரில் 17-8-1977 அன்று சுவர் இடிந்ததால் மாண்ட திரு. பாலாஜிக்காக அவரது மனைவி திருமதி ராசாம்மாளுக்கு. | 1,000·00 |
| 19-10-1977 | மங்களூரிலிருந்து குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த வீரவேல் என்னும் இடத்துக்கு சென்று கொண்டிருந்த CLR 15 (கிருஷ்ணசாகர்) என்னும் கப்பல் கடலில் காணமற் போனதையடுத்து அதில் சென்ற மேலும் ஒரு தூத்துக்குடியைச் சேர்ந்த பணியாளர் குடும்பத்துக்கு. | 1,000·00 |



[1978 ஆகஸ்ட் 31

| தேதி | | ரூ. பை. |
|---|---|---|
| 19-10-1977 | ஜூலை 1976-ல் கள்ள சாராயத்தைக் குடித்து மாண்ட மேலும் ஒருவரான சென்னை அயனாவரத்தைச் சேர்ந்த திரு. முத்தன் என்பவருக்காக அவரது மனைவியான திருமதி கோவிந்தம்மாளுக்கு. | 1,000·00 |
| 26-10-1977 | சென்னையை அடுத்த வேளச்சேரிக்கு அருகே செங்குன்னியம்மன் கோவில் தெருவில் உள்ள புதை சாக்கடை குழியில் இறங்கி பணியாற்றிய தொழிலாளர்களைக் காப்பாற்றுவதற்காக முயற்சி செய்து இறக்க நேரிட்ட வழிப்போக்கர் திரு. நந்தனின் குடும்பத்தாருக்கு கொடுக்கப்பட்ட தொகை. | 5,000·00 |
| 26-10-1977 | இராமநாதபுரம் மாவட்டம், சாத்தூர் வட்டம், நென்மேனி ஊரில் கிணறு செப்பனிடும் வேலையில் ஈடுபட்டிருந்தபோது மாண்ட நால்வர் குடும்பத்துக்கு தலா ரூ. 1,000 வீதம். | 4,000·00 |
| 26-10-1977 | தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், பெரியபட்டி ஊரில் உள்ள திரு. ராமகௌண்டர் 8-8-1977 அன்று பேருந்து விபத்தில் காலமானதையடுத்து அவர் மனைவிக்கு. | 1,000·00 |
| 2-11-1977<br>8-11-1977 | சென்னை, கிண்டிக்கு அருகே 30-10-1977 அன்று வன்முறை கும்பல் மீது காவலர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இறந்த இரு நபர்களின் சட்டப்படிக்கான வாரிசுகளுக்கு தலா ரூ. 5,000 வீதம். | 10,000·00 |

1978 ஆகஸ்ட் 31]

| தேதி | | ரூ. பை. |
|---|---|---|
| 4-11-1977 | தருமபுரி மாவட்டம், கிருஷ்ண கிரி வட்டம், வடமலம்பட்டி ஊரைச் சேர்ந்த செஞ்சி நாயக்கன்பட்டி சிற்றூரில் 11-8-1977 அன்று கிணறு ஆழப்படுத்தும்போது மாண்ட திரு. பொண்ணனுக் காக அவர் மனைவியான திருமதி மாரிக்கு. | 1,000·00 |
| 4-11-1977 | செங்கல்பட்டு மாவட்டம், சைதாப்பேட்டை வட்டம், நங்கநல்லூரில் 7-8-1977 அன்று மின்சாரம் தாக்கி மாண்ட திரு. அழகப்பனுக் காக அவரது மனைவியான திருமதி வள்ளிக்கு. | 1,000·00 |
| 19-11-1977 | பாண்டிச்சேரி மாநிலத்திற்கு சென்று புயல் நிவாரணத் துக்காக மத்திய சர்க்கார் அமைச்சர் திரு. பஹுகுணு கேட்டுக் கொண்டபடி. | 1,00,000·00 |
| 22-11-1977 | தஞ்சை மாவட்டத்தில் புய லாலும், வெள்ளத்தாலும் பொருளீட்டுவோரை இழந்த 39 குடும்பங்களுக்கு தலா ரூ. 1,000 வீதம். | 39,000·00 |
| 26-11-1977 | செங்கல்பட்டு மாவட்டம், எண்ணூர் அருகே பலகை தோட்டத்தைச் சேர்ந்த அம்பலவாணன் மீனவர் களுக்குள் ஏற்பட்ட சச்சர வினல் போலீசார் சுட நேர்ந்ததால் மரணமடைந் தார். அவருடைய சட்டப் படியான வாரிசுக்கு. | 5,000·00 |
| 28-11-1977 | திருச்சிராப்பள்ளி மாவட்டத் தில் புயலாலும் வெள்ளத் தாலும் பொருளீட்டுவோரை இழந்த குடும்பங்களுக்கு தலா ரூ. 1,000 வீதம். | 17,000·00 |



[1978 ஆகஸ்ட் 31

| தேதி | | ரூ. பை. |
|---|---|---|
| 1-12-1977 | புதுக்கோட்டை மாவட்டத் தில் புயலாலும் வெள்ளத் தாலும் பொருளீட்டு வோரை இழந்த 5 குடும்பங் களுக்கு ரூ. 1,000 வீதம். | 5,000.00 |
| 1-12-1977 | புயலாலும் வெள்ளத்தாலும், கடலில் சென்று மீன் பிடிக்க முடியாததால் வாங்கும் சக்தியை இழந்த மீனவர் குடும்பங்களுக்கு ஒவ்வொன் றிற்கும் தலா 5 கிலோ அரிசி வழங்க. | 5,00,000.00 |
| 2-12-1977 | இராமநாதபுரம் மாவட்டம், ராஜபாளையம் வட்டம், மலை யாண்டிபட்டி ஊரில் 24-8-1977 அன்று தீ விபத் தால் மாண்ட திரு. சந் தோசமணி நாடாருக்காக அவரது மனைவியான திருமதி இரத்தினம்மாளுக்கு. | 1,000.00 |
| 2-12-1977 | தென்னுற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டம், வான மாதேவி ஊரில் 18-1-1977 அன்று மின்னல் தாக்குண்டு மாண்ட திரு. முருகேசன் அவர்களுக்காக அவரது மனைவி திருமதி குளஞ்சிக்கு. | 1,000.00 |
| 2-12-1977 | சென்னையில் கதிட்ரல் சாலை யில் சன்ஷேட் விழ்ந்து மாண்ட திரு. ஜான் என்ப வருக்காக அவரது மனைவி யான திருமதி கிருஷ்ண வேணிக்கு. | 1,000.00 |
| 3-12-1977 | தென்னுற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டம், ஐய்யங் குடி ஊரில் 5-10-1977 அன்று மின்னல் தாக்கி மாண்ட திரு. இராமலிங்கத் துக்காக அவரது மனைவியான திருமதி தமயந்திக்கு. | 1,000.00 |

1978 ஆகஸ்ட் 31]

| தேதி | | ரூ. பை. |
|---|---|---|
| 3–12–1977 | தருமபுரி மாவட்டத்தில் புயலாலும், வெள்ளத்தாலும், பொருளீட்டுவோரை இழந்த ஒரு குடும்பத்துக்கு. | 1,000.00 |
| 3–12–1977 | இராமநாதபுரம் மாவட்டத்தில் புயலாலும் வெள்ளத்தாலும் பொருளீட்டுவோரை இழந்த 3 குடும்பங்களுக்கு தலா ரூ. 1,000 விதம். | 3,000.00 |
| 9–12–1977 | தஞ்சாவூரில் 31–8–1977 அன்று நடந்த மாணவர்—பேருந்து ஊழியர் கைகலப்பில் காயமேற்பட்ட நடத்துநர் திரு. கண்ணனுக்கு. | 1,000.00 |
| 14–12–1977 | தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டம், இராசேந்திர சோழகம் ஊரில் 5–10–1977 அன்று மின்னல் தாக்குண்டு மாண்ட திரு. இராமலிங்கத்துக்காக அவரது மனைவியான திருமதி ராணிக்கு. | 1,000.00 |
| 16–12–1977 | தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை ஆகிய மாவட்டங்களில் கேர் நிறுவனத்தின் உதவியோடு குடிசைகள் கட்ட. | 19,17,500.00 |
| 20–12–1977 | தென்னாற்காடு மாவட்டம், பண்ருட்டி வட்டம், கீழிருப்பு ஊரில் 26–5–1977 அன்று மின்னல் தாக்கி மாண்ட திரு. சாமி துரைக்காக அவரது மனைவியான திருமதி கனகாயலுக்கு. | 1,000.00 |
| 20–12–1977 | தென்னாற்காடு மாவட்டம், கடலூர் வட்டம், இரங்கநாதபுரம் ஊரில் 16–10–1977 அன்று மின்னல் தாக்குண்டு மாண்ட திரு. மாணிக்கத்துக்காக அவரது மனைவி திருமதி யசோதாபாய்க்கு. | 1,000.00 |



[1978 ஆகஸ்ட் 31

| தேதி | | ரூ. பை. |
|---|---|---|
| 20–12–1977 | வடாற்காடு மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட புயலாலும், வெள்ளத்தாலும், பொருளீட்டுவோரை இழந்த இரண்டு குடும்பங்களுக்கு தலா ரூ. 1,000 விதம். | 2,000·00 |
| 20–12–1977 | கோயம்புத்தூர் மாவட்டத்தில் அண்மையில் புயலாலும், வெள்ளத்தாலும், பொருளீட்டுவோரை இழந்த 4 குடும்பங்களுக்கு தலா ரூ. 1,000 விதம். | 4,000·00 |
| 29–12–1977 | தென்னாற்காடு மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட புயலாலும், வெள்ளத்தாலும், பொருளீட்டுவோரை இழந்த 5 குடும்பங்களுக்கு தலா ரூ. 1,000 விதம். | 5,000·00 |

## இணைப்பு XV.

[115-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 188-க்கான விடையைக் காண்க.]

அரசின் வேளாண்மைத் துறையினரால் விசைக் கலப்பைகள் தயாரிக்கப்படவில்லை. சென்னை அருகே அம்பத்தூரில் திருவாளர்கள் நேஷனல் இஞ்சினியரிங் கம்பெனி "லம்பார்தினி" (Lambard ni) டீசல் இஞ்சினால் இயங்கும் விசைக் கலப்பையைத் தயாரித்து நடப்பு ஆண்டு முதல் விற்பனை செய்கின்றனர். இந்த நிறுவனம் மாதம் ஒன்றுக்கு 200 கலப்பைகள் தயாரிக்கும் திறன் கொண்டது. ஆனால் தற்சமயம் மாதம் ஒன்றுக்கு 25 கலப்பைகள்தான் தயாரிக்கின்றனர். இதன் உபயோகம் அதிகரித்த பின்னரே இதில் உள்ள நல்ல அம்சங்களும், குறைபாடுகளும் தெரியவரும்.

தமிழக வேளாண் தொழில் கழகம் மற்ற மாநிலங்களில் உற்பத்தி செய்யப்படும் விசைக் கலப்பைகளை விற்பனை செய்து வருகிறது.

1978 ஆகஸ்ட் 31]

## இணைப்பு XVI.

[116-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 191-க்கான விடையைக் காண்க.]

விடை :—(அ) மற்றும் (ஆ) :—நீலகிரி மாவட்டம் வெலிங்டனில் உள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் கண்டு பிடித்த ஹெச்டி 2135 என்னும் ரகம் நீலகிரி மற்றும் கொடைக்கானல் மலைப் பகுதிகளில் பயிரிடுவதற்கேற்றது. இவ்வகை கோதுமையை அதிக அளவில் பயிரிடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. சமவெளிகளில் பயிரிடுவதற்கேற்ற ஹெச். டபிள்யூ 657 என்னும் கோதுமை ரகம் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. சோதனைக்குப் பின் தமிழகமெங்கும் இவ்வகை ரகங்கள் பயிரிடுவதற்கு வெளியிடப்படும்.

2. இவை தவிர, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் உழவியல் துறையில் கடந்த இரண்டாண்டுகளாக கோதுமைப் பயிரில் நடத்திய சோதனைகளில், கோதுமை ரகங்களான எச்.டி. 2189, "கல்யாண்சோனா" தமிழ்நாட்டுக்கு உகந்ததாகவும், நல்ல மகசூலை இறவைப் பயிரில் கொடுக்கக் கூடியதாகவும் தெரிய வருகிறது. இந்த ரகங்கள் ஒரு ஹெக்டேருக்கு 25 முதல் 30 குவிண்டால் வரை மகசூல் கொடுத்திருக்கிறது.

3. தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்தில் பெருமளவிலும், மதுரை, சேலம், கோவை மாவட்டங்களிலும் 1,650 டன் தானியம் விளைவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

வெள்ளிக்கிழமை, 1978 செப்டம்பர் 1.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### மீனவர்களுக்கு விசைப் படகுகள் ஒதுக்கீடு.

*வினா 21—திரு. மு. அரங்கநாதன் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மீனவ சமுதாயத்தினருக்கு வழங்கப்படும் விசைப் படகுகள் தனி நபருக்கு வழங்கப்படுகிறதா அல்லது கூட்டு முறையில் வழங்கப்படுகிறதா?

(ஆ) தனி நபருக்கோ அல்லது கூட்டு முறையிலோ வழங்கப்பட்ட விசைப் படகுகள் அவர்கள் விருப்பப்படி மற்றவர்களுக்கு விற்பனை செய்ய உரிமை உண்டா?

(இ) இல்லை எனில் இந்த விதியினை மீறியவர்கள் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : (அ) மூன்று அல்லது அதற்கு மேலும் மீனவ சமுதாயத்தைச் சார்ந்த அங்கத்தினரைக் கொண்ட குழுவிற்கும் மீனவ கூட்டுறவு சம்மேளனம் மற்றும் மீனவ விற்பனை சங்கத்தினருக்கும் வழங்கப்படுகிறது.

(ஆ) இல்லை.

(இ) மீன்பிடி படகுகள் விதிகளை மீறி தவணைதாரர்கள் விற்பனை செய்தது அரசுக்குத் தெரிய வந்தால், ஒப்பந்த விதிப்படி வழங்கப்பட்ட படகுகள் பறிமுதல் செய்யப்படும்.

[1978 செப்டம்பர் 1

திரு. ப. பொன்னுரங்கம்: பேரவைத் தலைவரவர்களே, மீனவர்களுக்குப் படகு வழங்கப்படுவது கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேயும் சரி, அதற்கு முந்தைய காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் சரி, ஆண்டுக்காண்டு 100, 150 படகுகள் என்று வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைந்து ஓர் ஆண்டுக் காலம் ஆகி இருக்கிறதே. இதுவரை மீனவர்களுக்கு எத்தனை படகுகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் அறிய இயலுமா?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: பேரவைத் தலைவர்களே, கேள்வி மீனவர்களுக்கு மீன் பிடி படகுகள் வழங்குவதற்கான விதிமுறைகள் பற்றியதாகும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால் எத்தனைப் படகுகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்று கேட்கிறார். அதைப் பற்றிய விவரம் என்னிடம் தற்போது இல்லை. ஆகவே, தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தருகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், மீனவ சமுதாயத்தைச் சேராத மீன் பிடிப்பதில் அனுபவம் இல்லாதவர்களுக்கு இது போன்று படகுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அப்படியானால் யார் யாருக்கு வழங்கப் பட்டிருக்கின்றன என்கின்ற விவரங்களைத் தர இயலுமா?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: பேரவைத் தலைவர்களே, மீனவ சமுதாயத்தைச் சாராதவர்களுக்கு இப்படிப் பட்ட படகுகள் யார் யாருக்கு வழங்கப்பட்டிருக்கின்றன என விவரங்களைப் பற்றிய கேள்வியினை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பி இருக்கிறார்கள். இதற்கு முன்னால் படகுகள் வழங்கப்படுகின்ற நோக்கில் மீனவ சமுதாயத்தைச் சாராதவர்களுக்கும் அந்தத் தொழிலிலே உண்மையிலேயே ஈடுபடாதவர்களுக்கும் படகுகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பது உண்மை. ஆனால், யார் யாருக்கு வழங்கப்பட்டிருக்கின்றன என்கின்ற



1978 செப்டம்பர் 1]

விவரங்கள் தற்போது என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் சேகரித்துத் தருகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அரங்கநாதன்: பேரவைத் தலைவரவர்களே, இந்த விசைப் படகுகள் தனியாருக்கும் வழங்கப்படுகின்றன, கூட்டுறவு முறையிலும் வழங்கப்படுகின்றன. ஆகவே, எந்த விதி முறைகளின் கீழ் இந்த விசைப் படகுகள் வழங்கப்படுகின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: பேரவைத் தலைவர்களே, கூட்டுறவுத் துறையின் மூலம் மீனவர் அல்லாதவர்களுக்குப் படகுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. முன்பு அது எந்த விதிமுறைகளின் கீழ் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை என்னாலே இன்னும் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால், இப்போது அரசு இதற்கென ஒரு புதிய விதிமுறையை வகுத்துக் கொண்டு இருக்கின்றது. யார் யார் கடலிலே சென்று மீன் பிடிக்கின்ற தொழிலில் ஈடுபடுகிறார்களோ அவர்கள் எந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களுக்குத் தான் முதன் முதலில் விசைப்படகுகள் வழங்கப்பட வேண்டும் என்கின்ற முடிவினை இந்த அரசு எடுத்திருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவரவர்களே, கட்டுமரம் உடையவர்கள் மீன் பிடிக்க வேண்டிய இடங்களிலே எல்லாம் இந்த விசைப்படகுக்காரர்கள் சென்று மீன் பிடிக்கிறார்களே, ஆகவே, இதனைக் கட்டுப்படுத்த அரசு சட்டம் கொண்டு வருமா? கடலிலே இதனால் அமைதியில்லாத நிலைமை இருந்து வருகிறதே. ஆகவே, இந்த விசைப் படகுக்காரர்களைக் கட்டுப்படுத்தி நடவடிக்கை எடுப்பதற்கு அரசு சட்டம் ஏதேனும் கொண்டு வர ஆய்வு ஏதேனும் செய்திருக்கிறதா? அப்படிக் கொண்டு வருவது பற்றி அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: பேரவைத் தலைவர்களே, நீண்ட நெடுங்காலமாக தமிழகத்திலே விசைப்படகு கொண்டு மீன்பிடித் தொழிலிலே ஈடுபட்டுள்ளவர்களுக்கும்,

[1978 செப்டம்பர் 1

கட்டுமரம் கொண்டு மீன்பிடித் தொழிலிலே ஈடுபட்டுள்ளவர்களுக்கும் சச்சரவுகள் இருந்து வருகின்றன. இந்தச் சச்சரவுகளை நிரந்தரமாகத் தவிர்க்கின்ற வகையில் அதற்கான விதி முறைகளை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது. அதற்கான சட்டம் கொண்டு வருவது பற்றி அரசின் ஆலோசனையில் இருக்கின்றது. அந்தச் சட்டம் பரிசீலிக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்ட பின் சட்டமன்றத்திலே கொண்டு வரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மு. அரங்கநாதன்:** பேரவைத் தலைவரவர்களே, கூட்டுறவுத் துறையிலே தவணை முறையில் இந்த விசைப்படகுகள் வழங்கப்படுகின்றன. அந்தத் தவணை முழுவதும் தீர்வதற்கு முன்னால் படகுகளை விற்கின்ற உரிமை அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றதா? இல்லையெனில் அப்படி விற்றவர்கள் மீது இதுவரை இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** தவணைமுறை முழுவதும் செலுத்தப்படுகிற காலவரம்பிற்குள் படகுகள் வாங்கியவர்கள் விற்கக் கூடாது என்ற விதிமுறைகள் இருக்கின்றன. அப்படி யாராவது விற்பனை செய்திருந்தால் அது துறையினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால் அல்லது துறைக்கு நேரடியாகத் தெரிந்தால் உடனடியாக அந்தப் படகுகள் பறிமுதல் செய்யப்படும்.

**திரு. நா. சுந்தரராஜ்:** இந்த ஆண்டு எவ்வளவு மீனவர்களுக்கு இதுபோன்ற நவீனப் படகுகளை வழங்க அரசு உத்தேசித்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** எவ்வளவு படகுகள் மீனவர்களுக்கு வழங்குவதற்கு உத்தேசித்திருக்கிறது என்பது கேள்வி. அந்தப் புள்ளிவிவரங்கள் இப்போது என்னிடம் இல்லை. ஆனால், கூடியவிரைவில் மீனவர்களுக்கு படகுகள் வழங்குவதற்கு இந்தத் துறை ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது.



1978 செப்டம்பர் 1]

**திரு. செ. சிவசாமி:** தொண்டி, நம்புதாளை, திருப்பாலைக்குடி போன்ற இடங்களில் நாட்டுப் படகுக்காரர்களை விசைப்படகுக்காரர்கள் தொந்தரவு செய்து பல கேஸ்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அவைகள் எல்லாம் வாபஸ் செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

**திரு. மு. அரங்கநாதன்:** கடந்த பேரவைக் கூட்டத்தில் கூட்டுறவு முறையில் தவணை முறையில் வழங்கப்படுகிற விசைப் படகுகள் தவணைமுறை தீருவதற்கு முன்னால் விற்பனை செய்யப்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படுமா என்ற இதே கேள்வியைக் கேட்டபோது, அப்படி நடவடிக்கை எடுக்க உரிமை இல்லை என்று இதே அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். அது குறிப்பிலேயும் வந்திருக்கிறது. எனக்கும் வந்திருக்கிறது. அதை வேண்டுமானால் நான் காண்பிப்பதற்குத் தயாராயிருக்கிறேன். ஆனால், இப்போது தவணைமுறை தீருவதற்கு முன்னால் விற்றால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். இதில் நான் எதை ஏற்றுக்கொள்வது, எதை விடுவது என்பதில் ஐயம் எழுகிறது. நடவடிக்கை எடுக்கப்படும் என்றால் விவரங்கள் தர நான் தயார், அப்படித் தந்தால் நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** முரண்பாடு என்ற முறையில், இந்த அவையில் எந்த நேரத்திலும் எந்தப் பதிலையும் நான் சொன்னதில்லை.

**தூத்துக்குடி துறைமுகப் பகுதியில் மீன் விற்பனை.**

* வினா 22—திரு. ந. தனசேகரன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்தில் மீன்களை வாங்கி தலை சுமை மூலம் விற்கும் ஏழை மீனவர்களிடமிருந்து வரி வசூலிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதனை நீக்கும் உத்தேசம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

[1978 செப்டம்பர் 1

**திரு. ந. தனசேகரன்:** அங்கு வரக்கூடிய மீனவர்களிடம் அப்படிக் கட்டணங்கள் வசூலிக்கப்படுகிறது என்ற புகார் வருகிறது. அப்படி வசூலிக்கிற அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா? அப்படிக் கட்டணம் வசூலிப்பதை நிறுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்:** தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்தில் மீன்களை வாங்கி தலைச்சுமையாக எடுத்துச் செல்கிற ஏழை மீனவர்களிடம் வரி வசூலிக்கப்படுகிறதா என்பது மூலக் கேள்வி. வாங்கி விற்கிற மீனவர்களிடமிருந்து எந்தவிதமான வரியும் வசூலிக்கப்படவில்லையென்று மூலக்கேள்விக்குப் பதில் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் மீன்களைக் கரையேற்ற சில கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இறால் மீனாக இருந்தால் ஒரு கிலோவிற்கு பத்து பைசா என்றும், இறால் தவிர பிற மீன்களுக்கு ஒரு கிலோவிற்கு 2½ பைசா விதம் கரையேற்றப்படுகிற மீன்களுக்குக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அதே போல் படகுகளில் தங்குவதற்கு கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஐம்பது அடி வரையில் உள்ள படகுகளுக்கு நாள் ஒன்றுக்கு ரூபாய் ஒன்று அல்லது மாதத்திற்கு ரூ. 20, ஐம்பது அடிகளுக்கு மேற்பட்ட படகுகளுக்கு நாள் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் அல்லது மாதம் ரூ. 135 என்ற விகிதத்தில் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இதன் மூலம் வருகிற வருமானத்தைக் கொண்டு இந்த மீன்பிடித் துறைமுகத்தைப் பராமரிப்பதற்கான செலவுகள் செய்ய இந்தக் கட்டணம் வசூலிக்கப்படுகிறதே தவிர, மீனவர்களிடம் வாங்கி விற்பனை செய்யக் கொண்டுபோகிற வியாபாரிகளிடமிருந்து எந்த விதமான கட்டணமும் வசூலிக்கப்படவில்லை. அப்படி வசூலிக்கப்படுமானால், உறுப்பினர் அவர்கள் தக்க ஆதாரங்களோடு அதை என் கவனத்திற்குக் கொண்டுவந்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. சி. ராமநாதன்:** கடலோரப் பகுதிகளில் பிடிக்கப்படும் இந்த மீன்களை கிராமப்புறங்களில் விற்க ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா?



1978 செப்டம்பர் 1]

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்:** கடலோரப் பகுதிகளில் கிடைக்கிற பெருமளவு மீன்களை மீன்கள் கிடைக்காத உள்நாட்டுப் பகுதிகளில் விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு நாட்டின் பல்வேறு பகுதிகளில் மீன் விற்பனைக் கடைகள் ஏற்படுத்துகிற திட்டம் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. கூடிய விரைவில் அது செயல்படுத்தப்படும்.

**திரு. ந. தனசேகரன்:** ஏழை மீனவர்களிடமிருந்து வசூலிக்கிற இந்தப் பணம் துறைமுகப் பராமரிப்புச் செலவிற்காகச் செலவு செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். இச்சிறிய தொகை மூலம் பராமரிப்பதை விடுத்து, அப்படிக் கட்டணம் வசூலிப்பதை அறவே நிறுத்த முயற்சி எடுத்து, அந்த ஏழை மீனவர்கள் காப்பாற்றப்படுவார்களா?

(முற்பகல் 9-10)

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்:** பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட கட்டணத்தின் மூலமாக வருகின்ற மொத்தத் தொகையிலிருந்து மீன்பிடி துறைமுகத்திற்கு ஆகின்ற மொத்த செலவில் ஓரளவு சரிக்கட்டுவதற்குப் பயன்படுத்தப்படுகிறதே தவிர, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல் அதிகமான தொகை இந்த மீன் பிடிப்பவர்களிடமிருந்து வசூலிக்கப்படவில்லை. இறால் மீன் வகையில் ஒரு கிலோவுக்கு 10 பைசா வசூலிக்கப்படுகிறது. ஒரு கிலோ இறால் மீனின் விலை 50 ரூபாய் முதல் 60 ரூபாய் வரை இருக்கிறது. ஆகவே, இந்தப் பத்து பைசா என்பது பெரிய தொகை அல்ல. அதேபோல் ஒரு விசைப் படகுக்கு—சிறிய படகுகளுக்கு ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் அல்லது மாதத்திற்கு 20 ரூபாய், பெரிய படகாக இருந்தால் ஒரு நாளைக்கு ஐந்து ரூபாய் அல்லது மாதம் ஒன்றுக்கு 135 ரூபாய் என்ற அளவில் மட்டுமே வசூலிக்கப்படுகிறது. இது அவ்வளவு பெரிய தொகை அல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் ஒத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

[1978 செப்டம்பர் 1

## இரத்தினகிரி முருகன் கோயில்

* வினா 23—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் இரத்தினகிரி முருகன் கோயில் இந்து அறநிலையத் துறையின் நிர்வாகத்திற்குள் கொண்டு வரப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அந்தக் கோவிலின் சொத்து மதிப்பு என்ன ?

(இ) ஆண்டு வருமானம் இப்பொழுது என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) ரூ. 36,95,096; 1386 ஆம் பசலி ஆண்டின் வருமானம் ரூ. 1,21,485.

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற வேறு கோவில்களும், அதாவது அதிக வருமானம் வரக்கூடிய கோவில்களும் நாட்டில் இருக்கின்றன என்பது அரசுக்குத் தெரியுமா ? உதாரணமாக, மாங்காடு காமாட்சி அம்மன் கோவிலில் அதிகமான வருமானம் வந்து கொண்டிருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இரத்தினகிரி கோவிலைப் பற்றித்தான் கேள்வி. அதற்குத் தொடர்பான விவரங்கள் இங்கே இருக்கின்றன. வேறு கோவில்களைப் பற்றி விவரங்கள் தெரிய வேண்டுமென்றால், தனியாகக் கேள்வி போட்டால் அதற்கான தகவல்களைத் தருவதற்கு வசதியாக இருக்கும்.

திரு. துரை முருகன் : இந்தக் கோவில் அறநிலையத் துறையின் கீழ் வருவதற்கு முன்னால் பாலமுருகன் அடிமை என்கின்ற சாமியார் அவர்கள் அங்கு இருந்ததின் காரணமாக அவருடைய பக்தர்கள் மூலமாகத்தான் வருமானம் சேர்க்கப்பட்டிருக்கிறது.



1978 செப்டம்பர் 1]

இப்போது இந்தக் கோவில் அறநிலையத் துறையின் கீழ் வந்ததற்குப் பின்னால் அந்தச் சாமியாருக்கு ஏதாவது கோவிலில் பொறுப்பு இருக்கிறதா அல்லது பொறுப்பு எதுவும் இல்லாமல் இருக்கிறார்களா ? இந்தச் சாமியாரிடம் பொறுப்பு எதுவும் தராமல் இருந்தால்—அங்கே சாமியார் இல்லாவிட்டால் மீண்டும் வருமானம் இல்லாமல் போய்விடும் என்பதை அரசு உணருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : 1968 மார்ச் திங்கள் இந்தச் சாமியார் அவர்கள் இந்தக் கோயிலில் வந்து தங்கிய பிறகு காணிக்கைகள் மூலமாகவும், அர்ச்சனைக் கட்டணம் என்ற பெயரிலும் பெரிய வருமானம் கிடைத்திருக்கிறது. ஆனால், 1976 மார்ச் இறுதியில் இந்தக் கோவில் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் வந்திருக்கிறது. ஆனால், இப்போது அங்கு நடைபெறுகின்ற திருப்பணி போன்ற வேலைகளுக்கு சாமியார் தலைமையின் கீழ் குழு அமைக்கப்பட்டு, அவருடைய பொறுப்பில்தான் காரியங்கள் நடைபெற்று வருகின்றன. ஆகவே, இந்தக் கோவிலின் நிர்வாகப் பொறுப்பு அறநிலையத் துறையின் கீழ் வந்ததின் காரணத்தால், இப்போது நடைபெற்று வருகின்ற நிர்வாகத்திற்கு எந்தவிதமான குந்தகமும் ஏற்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## யானைகள் சரணாலயம்

* வினா 24—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) யானைகளுக்கு என்று தனியாக உய்விடம் ஏதாவது இம்மாநிலத்தில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்வி எழவில்லை.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம் : தமிழ்நாட்டில் ஒசூர், முதுமலை போன்ற இடங்களில் யானைகள் அதிகமாக இருந்தும், அவைகளுக்குத் தனியாக உய்விடங்கள் எதுவும் இல்லாமல்

இருக்கின்றது. ஆகவே அங்கெல்லாம் சரணாலயம் அமைக்க, அரசு முன்வருமா? அதோடு மேலும் காடுகளில் யானைகளை பெருக்குவதற்கு அரசிடம் திட்டங்கள் ஏதேனும் உண்டா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவர் அவர்களே, வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம் (1972 ஆம் ஆண்டு) ஒன்றாம் ஷெட்யூலில் கண்டுள்ளபடி யானைகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. யானைகள் எந்தப் பகுதியில் இருந்தாலும் பாதுகாப்புக்கு உட்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. உச்சி:** தலைவர் அவர்களே, யானைகளுக்கு இப்போது சரணாலயம் எதுவும் இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? மேலும் இப்படிப்பட்ட சரணாலயத்தின் எல்லைகளுக்கு உட்படாத இடங்களிலுள்ள யானைகள் பக்கத்திலுள்ள கிராமங்களில் சென்று அட்டகாசங்கள் செய்து வருவதால், விவசாயிகளுடைய விவசாயம் பாதிக்கப்பட்டு வருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா? ஆகவே, இப்படிப்பட்ட யானைகளை கட்டுப்படுத்த அரசு ஏதாவது திட்டமிட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** இங்குள்ள கேள்வி யானைகளுக்குச் சரணாலயம் அமைத்து யானைகளைப் பாதுகாக்க வேண்டும் என்பது. ஆனால், யானைகளினால் ஏற்படுகின்ற தொல்லைகளைப் பற்றி இங்கு சொல்லுகிறார்கள். ஆகவே, தொல்லைகள் எந்த மிருகங்களால் ஏற்பட்டாலும் மக்களுடைய சொத்துக்களையும் உடைமைகளையும் பாதுகாப்பதற்கு அரசு முயன்று இயன்ற அளவுக்கு நடவடிக்கை எடுக்கும் என்பதில், சந்தேகம் இல்லை.

## பணி நிரந்தரமாக்கப்படாமல் உள்ள ஆசிரியர்கள்

*வினா 25—**திரு. மு. அம்பிகாபதி:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1—4—1970-க்குப் பின் வேலையில் அமர்ந்த பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் ஏனைய ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்படாமல் உள்ளவர்கள் எத்தனை பேர்?



(ஆ) இவர்களுக்கு P. F. பிடிக்கப்பட்டு வருகிறதா?

(இ) இவர்கள் அனைவரையும் நிரந்தரமாக்க அரசு செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:**

(அ) பட்டதாரி ஆசிரியர்கள் 796
தமிழாசிரியர்கள் 135

(ஆ) ஆம்.

(இ) மேற்கூறிய ஆசிரியர்களின் பணியினை வரன்முறைப் படுத்த தனியாக ஒரு போட்டி நியமனத் தேர்வு நடத்துமாறு 30—12—1977 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 2683-இல் தமிழ்நாடு தேர்வாணைக் குழு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**திரு. மு. அம்பிகாபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1—4—1970-ல் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் 796 பேர்கள் என்றும், தமிழ் ஆசிரியர்கள் 136 பேர்கள் என்றும் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு பிராவிடண்ட் பண்ட் பிடிக்கப்படுவதாகவும் சொல்லப்படுகிறது. இப்படியிருக்கும், எதற்காக அவர்களுக்குத் தேர்வு முறையை அமுலாக்க வேண்டும்? அரசுத் துறையிலே நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் 210 நாளைக்கு மேல் பணியாற்றினால், நிரந்தரமாக்கப்படுக கொள்கை இருக்குமானால், தனியார்களை நாம் எப்படிக் கட்டுப்படுத்த முடியுமென்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, அரசுத் துறைக்கு ஆட்களை நியமிக்கின்ற அதிகாரத்தை நாம் தேர்வு ஆணைக் குழுவிற்கு அரசியல் சட்ட ரீதியாகக் கொடுத்திருக்கிறோம். அதை நாம் நிறைவேற்றக் கடமைப் பட்டவர்களாக இருக்கிறோம்.

**திரு. ரா. உமாநாத்:** தலைவர் அவர்களே, நிரந்தர வேகன்சி இருப்பதை கணக்கில் காட்டி, அதற்கான கிராண்டுகளை திருச்சியிலுள்ள ஹோலி கிராஸ் காலேஜ் வாங்கிக் கொண்டு, அந்த

நிரந்தரமான வேகன்சிகளைப் பூர்த்தி செய்வதில்லை. அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் 30—3—1977 தேதியிட்ட ஆணையில் அந்தத் தேதியில் வேலையில் இருக்கக்கூடியவர்கள் கல்லூரியிலிருந்து நீக்கப்படக் கூடாது என்றும், புதிதாக ஆசிரியர்களை நியமிக்கக் கூடாது என்றும் உத்தரவிட்டதால், தனியார் கல்லூரிகளிலே இருந்து 200-க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் வெளியேற்றப்பட்டது உண்மையா? அப்படியானால், அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, ஆசிரியர்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற உத்தரவைப் போட்டதே, இந்த அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அந்த உறுதியின்படி அந்த ஆணையை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** சார் 1—10—1970-க்குப் பிறகு வேலையில் அமர்த்தப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்படாமல் உள்ளதைப் பற்றி அமைச்சர் அவர்கள் பதிலில் கூறினார்கள். அதேபோன்று அதிகாரிகள் உத்தரவிட்டதற்குப் பிறகும்கூட, இதுவரையில் எடுத்துக் கொள்ளப்படாமல் இருக்கக்கூடிய ஆசிரியர்களைப் பற்றி கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அவர்களை உடனடியாக வேலையில் திருப்பி எடுத்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அதற்கான பதிலைத் தான் நான் இப்போது சொன்னேன். அரசாங்கம் அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும்.

**திரு. கூத்தகுடி ச. சண்முகம்:** தலைவர் அவர்களே. தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டப் பிறகும் 5, 6 ஆண்டுகளாக வேலையில்லாமல் இருக்கும் ஆசிரியர்களுக்கு சீக்கிரம் வேலை கொடுப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, தேர்வாணைக் குழுவால் வேலை அளிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு, வேலை தருகின்ற நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது.

**திரு. மு. அம்பிகாபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 8 ஆண்டு 5 மாத காலம் பணியாற்றியவர்களை மீண்டும் சர்வீஸ் கமிஷன் மூலம் தேர்வு செய்ய வேண்டுமென்ற நிலை இருக்குமானால், அவர்களுக்கு நியாயமாக வேலை கிடைக்காது, சர்வீஸ் கன்டினியூட்டியும் கிடைக்காது. எனவே, இந்த 1—4—1970-லிருந்து இவர்களுக்கு ஊதிய உயர்வு, சர்வீஸ் தொடர்ச்சி உண்டாவதற்கான உத்தரவினை இந்த அரசு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, அரசினுடைய அதிகாரத்திற்கும் சில கட்டுப்பாடுகள் இருக்கின்றன. அந்தக் கட்டுப்பாட்டுக்குள் அதிகமாக எந்த அளவுக்கு அந்த ஆசிரியர்களுக்கு உதவியைச் செய்ய முடியுமோ அந்த உதவியைச் செய்ய இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு நடவடிக்கையை எடுத்திருக்கிறோம்.

**திரு. அ. செல்லப்பா:** தனியார் பள்ளியில் அமர்த்தப்பட்டு வேலை செய்யும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு, தஞ்சை மாவட்டத்தில் பெரும்பாலான ஆசிரியர்களுக்கு ‘அடாட’ பணம் வழங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அதனை உடனடியாக வழங்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அதற்குத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. கந்தசாமி:** ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களில் செகண்டரி கிரேடு படித்தவர்கள் ஆயிரக்கணக்கில் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். ஆனால் பல பள்ளிகளில் ஆசிரியர்களை நியமிப்பதற்கான இடங்கள் இருந்தும் அவற்றிலே ஆசிரியர்கள் நியமிக்கப்படாமலே வைத்திருக்கிறார்கள். இருக்கிற இடங்களில்

ஏன் ஆசிரியர்களைப் போடவில்லை என்று சி.இ.ஓ. போன்ற அதிகாரிகளிடம் டெவலப்மென்ட் கவுன்சில் கூட்டத்தில் கேட்டபோது அரசின் கொள்கை அப்படி இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆகவே, காலியான இடங்கள் இருந்தால் அங்கே பயிற்சி பெற்ற ஆசிரியர்களை உடனடியாகப் போட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வேலை இல்லாமல் இருக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் அவர்களைப் போடுவதற்கு உரிய இடங்கள் காலியாக இருக்கின்றன என்பது அவ்வளவு சரியல்ல. ஆனால் ஆசிரியர்—மாணவர் விகிதாசாரத்திற்கேற்ப ஆயிரக் கணக்கான இடங்களை ஏற்படுத்த வேண்டிய நிலைமை நாட்டில் இருக்கிறது. நிதி ஆதாரங்களைப் பொறுத்து ஆண்டுக்காண்டு புதிய இடங்களை ஏற்படுத்தி வருகிறோம். அதிலே அந்த ஆசிரியர்களைப் போட்டு வருகிறோம்.

### நெல்லை மாவட்டத்தில் ஆசிரியர் பதவிகள்

* **வினா 26—திரு. ரா. கிருஷ்ணன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்தில் இப்பள்ளியாண்டில் புதிதாக எத்தனை ஆசிரியர்கள் நியமனம் செய்ய அனுமதிக்கப் பட்டுள்ளனர்?

(ஆ) அவர்களில் எத்தனை பேர் தனியார் பள்ளிகளில் நியமிக்க அனுமதிக்கப்பட்டனர்?

(இ) ஊராட்சி ஒன்றியங்கள் நகராட்சி போன்ற பள்ளிகளில் எத்தனை ஆசிரியர்கள் தேவை என்று கணக்கிடப்பட்டது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) & (ஆ) 1977—78 ஆம் கல்வியாண்டு முதல் திருநெல்வேலி மாவட்டத்தில் புதிதாக ஏற்படுத்திய கூடுதல் ஆசிரியர் பதவிகள் 114-ல் 88 பதவிகள் தனியார் பள்ளிகளுக்கு அளிக்கப்பட்டன.



(இ) ஆம். அனைத்து வகை (அரசு, தனியார், உள்ளாட்சி மன்ற) நிருவாகப் பள்ளிகளின் தேவைகளும் கணக்கிடப்பட்டு அதன் பின்னரே இப்பதவிகள் பங்கீடு செய்யப்பட்டன. ஆசிரியர், மாணவர் விகித அடிப்படையில் தனியார் பள்ளிகளுக்கே மிகுந்த எண்ணிக்கையில் கூடுதல் ஆசிரியர் பதவிகள் தேவைப்பட்டதால் அவற்றுக்குப் பெரும்பான்மையான பதவிகளை அளிப்பது தவிர்க்க முடியாததாக இருந்தது.

**திரு. ரா. கிருஷ்ணன்:** இந்தக் கேள்வியைச் சென்ற கல்வியாண்டில் கேட்டேன். எட்டு மாதங்களுக்குப் பிறகு பதில் வந்திருக்கிறது. மிக்க மகிழ்ச்சி.

மொத்தம் 114 இடங்கள் ஒதுக்கப்பட்டு 88 இடங்கள்தான் தனியாருக்குக் கொடுப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கடந்த ஆண்டு குறிப்பாக கோவில்பட்டி டிவிஷனில் எந்த ஒரு இடமும் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒதுக்கப்படவில்லை. தனியார் பள்ளிகளுக்கு இடம் ஒதுக்கப் படுவதால் அங்கே பல லஞ்ச ஊழல்கள் அதிகமாகத் தாண்டவமாடுகின்றன. இதற்காகவே தனியாருக்கு ஒதுக்கீடு செய்கிறார்கள். இதைக் கண்காணிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** என்னிடத்தில் தரப்பட்ட விவரப்படி புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் உபரியாக இருந்த 52 இடங்கள் ஆசிரியர்களுடன் கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது என்பதாகும்.

**திரு. சோ. அழகர்சாமி:** இந்தப் புதிய ஆசிரியர்களை நியமிப்பதற்கான இடங்கள் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு இரண்டொன்றுதான் ஒதுக்கப்படுகிறது. பயிற்சி பெற்று வேலை இல்லாமல் பல ஆண்டுகளாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்கும்போது சீனியாரிடி முறையில் அதாவது 1970-ல் பயிற்சி பெற்று வந்தவர்களுக்கு வேலை கொடுத்துவிட்டுத்தான் 1971-ல் படித்து விட்டு வந்தவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று அந்த வரிசைப்படி போட வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவு பிறப்பித்தால் லஞ்சம் ஊழல் இருக்காது. அதற்குத் தகுந்த நடவடிக்கையை அரசு எடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து அவர்களை அனுப்புவதற்கு சில விதி முறைகளை வைத்திருக்கிறோம். அதன்படி அனுப்பப்படுகிறவர்களில் யாரையாவது சிறந்தவர்களாகக் கருதுவார்களானால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய உரிமையைப் பெறுகிறார்கள். அவ்வாறுதான் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

**திரு. ரா. மார்க்கபந்து:** பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளுக்கு அரசாங்கம் கிராண்ட் கொடுக்கிறது. அதிலே வேலை செய்யக்கூடிய ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்ற நியதி இருக்கிறது. ஆனால் மேனேஜ்மெண்டார்கள் கிராண்டை வாங்கிக்கொண்டு ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்காமல், அதற்காக கோர்ட்டுகளுக்குச் சென்று வழக்காடி சம்பளத்தை வாங்கக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே அரசாங்கம் கொடுக்கக்கூடிய கிராண்டை ஆசிரியர்களுக்குச் சம்பளமாக நேரடியாக கொடுத்துவிட்டு, அதில் மீதம் ஏதாவது இருந்தால் மேனேஜ்மெண்டுகளுக்குக் கொடுக்கும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படுகிற சம்பளம் அவர்களுக்கு ஒழுங்காகப் போய்ச் சேரவேண்டுமென்பதிலே அரசுக்கு நல்ல அக்கறை இருந்து கொண்டிருக்கிறது. அதை நிறைவேற்றுவதற்கு பல நடவடிக்கைகளைப்பற்றி ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம்.

*Salary Savings Scheme for Union Employees in Mayuram.*

* 27 Q.—THIRU K. SUPPU: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether it is a fact that the Salary Savings Scheme of the L.I.C. for the teachers, etc., in Mayuram block is not in vogue since April 1976 in spite of the Collector's instructions;

(b) if so, the reasons therefor; and

(c) the action taken thereon by the Government to revive the scheme?



**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** (அ) இல்லை. ஆயுள் காப்பீட்டுக் கழக ஊதிய சேமிப்புத் திட்டம் மாயூரம் ஊராட்சி ஒன்றியத்தில் 1971 லிருந்து செயல்படுத்தப்படுகிறது.

(ஆ) & (இ) இந்த வினாக்களுக்கு இடமில்லை.

**திரு. க. சுப்பு:** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குப் பதிலாக குறிப்பிட்ட அலுவலகத்தில் பணியாற்றக் கூடிய ஒருவருடைய தலையீட்டின் காரணமாக ஆசிரியர்களுக்கு அந்தப் பலன்கள் கிடைக்கவில்லை என்ற புகார் எழுப்பப்பட்டிருக்கிறது. அந்தப் புகாரின் அடிப்படையிலே தான் இந்த வினா போடப்பட்டு இருக்கிறது, ஆனால் நீங்கள் அவர்கள் பலன்களை அனுபவித்து வருகிறார்கள் என்று பதில் சொல்கிறீர்கள். அது உண்மைக்கு மாறாக இருக்கிறதே? அதைப்பற்றி என்ன தகவல் கொடுத்து இருக்கிறீர்கள்?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** அந்தப் புகார் தவறானது. மாயூரம் ஊராட்சி ஒன்றியத்தில் 1971 ஆம் ஆண்டிலிருந்து ஆசிரியர் உட்பட 78 நபர்கள் இத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இவ்வாண்டு பிப்ரவரி திங்களில் மேலும் 19 நபர்கள் இத் திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, அந்த மாயூரம் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கட்டளையிட்டதற்குப் பிறகும் இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். 1978 ஆம் ஆண்டிலிருந்து என்று குறிப்பிட்டார்கள். ஆனால் திரு. சுப்பு அவர்கள் கேட்டபோது 1976 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து அதை நடைமுறைப் படுத்தவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை மறுபரிசீலனை செய்து அந்தத் திட்டம் தொடர்ந்து செயல்பட ஆவன செய்வார்களா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** அது தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது என்ற தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்திருக்கிறார். அதனைத்தான் நான் இங்கே குறிப்பிட்டேன்.

## ஊட்டச் சத்துணவுத் திட்டம்

*வினா 28—திரு. க. அரங்கசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊட்டச் சத்துணவுத் திட்டத்தை, ஒவ்வொரு ஐந்தாண்டுகளுக்கும், ஒவ்வொரு வட்டாரத்திற்கு மாற்றுவதை நிறுத்தி எல்லா வட்டாரத்திற்கும் எப்பொழுதும் செயல்பட மறு பரிசீலனை செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** (அ) & (ஆ) இந்தத் திட்டம் மத்திய அரசு, "யூனிசெப்" எனும் "பன்னாட்டு குழந்தைகள் அவசர நல நிதி" நிறுவனம், மாநில அரசு ஆகியவை இணைந்து செயல்படுத்தும் தனித் திட்டமாகும். இதை எல்லா ஒன்றியங்களிலும் எப்பொழுதும் நிரந்தரமாகச் செயல்படுத்த இயலாது. அத்தகு 'கருத்துரு' ஏதும் இல்லை.

**திரு. க. அரங்கசாமி:** தலைவர் அவர்களே, இப்போது ஒவ்வொரு 5 ஆண்டுக்கும் வெவ்வேறு பகுதிக்கும் அது மாற்றப்படுவதால் ஏழைச் சிறார்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள், ஆகவே இதை மீண்டும் மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப்போல் தனியாக மாநில அரசு மட்டும் நடத்துகிற திட்டம் அல்ல. யூனிசெப் நிறுவனம், மத்திய அரசு ஆகியவற்றின் துணையோடு சேர்ந்து நடத்தப்படுகிற திட்டம். ஆகவே அவர்கள் குறிப்பிட்ட அளவிற்கு உதவி செய்வார்கள். 5 ஆண்டுகளுக்குப் பிறகு அந்தத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்தும் பொறுப்பை ஒன்றியங்கள்தான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**திரு. நா. சுந்தரராஜ்:** தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஒரு ஆண்டுக் காலத்திற்குத் தான் ஒன்றியத்திலே நடத்தப்படுகிறது, தொடர்ந்து யூனிசெப் நிறுவனமும், மத்திய அரசும் எவ்வளவு காலத்திற்கு இதைச் செய்யும் என்பதை அறிவிப்பார்களா?





**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** ஒரு ஆண்டுக்கு அல்ல, 5 ஆண்டுகளுக்கு ஒன்றியங்களிலே தொடர்ந்து நடத்தப்படுகிற திட்டம்.

## திருவான்மியூரில் போடப்பட்ட குழாய்க் கிணறுகள்.

*வினா 29—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசு உதவியால் திருவான்மியூர் போன்ற இடங்களில் குடி தண்ணீருக்காக எத்தனை குழாய்க் கிணறுகள் போடப்பட்டுள்ளன?

(ஆ) அதன் மூலம் சென்னைக்குக் குடி தண்ணீர் எப்போது கிடைக்கும்?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** (அ) மத்திய அரசு உதவியால் திருவான்மியூரில் குழாய்க் கிணறுகள் ஏதும் போடப்படவில்லை.

(ஆ) இக் கேள்வி எழவில்லை.

**திரு. துரை கலியமூர்த்தி:** திருவான்மியூர் வரையிலே மத்திய அரசால் 8 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டதாகவும் அதை இப்போது மத்திய அரசு காலி செய்து போய்விட்டதாகவும் கூறுகிறார்கள். அங்கே 'டெஸ்ட்' கூட செய்யப்படவில்லை என்று கூறுகிறார்கள். அது எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

(முற்பகல் 9-30)

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொன்னதைப்போல மத்திய அரசு உதவியால் திருவான்மியூரில் குழாய்க் கிணறுகள் ஏதும் போடப்படவில்லை. ஆனால் மாநில அரசின் உதவியால் 15 குழாய்க் கிணறுகள் போடப்பட்டுள்ளன.

## வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன்கள்

* வினா 30—**திரு. சோ. அழகர்சாமி** : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு புதிதாகக் கடன் மனுக்களை வாங்க வேண்டாமென்று மாநில வீட்டு வசதி அலுவலகத்திலிருந்து தகவல் அனுப்பி உள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** பேரவைத் தலைவரவர்களே, 1—7—1975 முதல், புதிய கடனுதவி விண்ணப்பங்களைப் பெறலாகாது என்று தடை விதிக்கப்பட்டு இருந்தது. இந்தத் தடை 5—1—1978 முதல் நீக்கப்பட்டு விட்டது.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவரவர்களே, தடை நீக்கப்பட்டு விட்டது. ஆனால் இன்று ஆங்காங்கு அனுப்பப்படும் மனுக்களை சேங்ஷன் செய்வதில் காலதாமதம் ஏற்படுகிறது, அதிகமான பணியாளர்கள் இல்லை என்ற காரணத்தால் மாநில வீட்டு வசதி சங்கத்தில் துரிதமாகப் பைசல் செய்யப்படவில்லை. அதேநேரத்தில் எல்.ஐ.சி. யிலிருந்து பணத்தை வாங்கி அதிக வட்டி கொடுத்து நஷ்டத்திலே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைத் துரிதமாகப் பைசல் செய்ய, அதிகமான மனுக்களுக்குக் காலாகாலத்தில் கடன் கிடைக்கும் வகையிலும், அதிகப் பணத்தைக் கொடுக்கும் வகையிலும் செய்ய உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பேரவைத் தலைவரவர்களே, 50 ரூரல் ஹவுசிங் சொசைட்டிகள் என்று ஆரம்பித்து அதன் மூலமாகக் கடன் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 28,000 அப்ளிகேஷன்ஸ் வந்துள்ளன. அதில் 6,000-க்கு சேங்ஷன் செய்திருக்கிறோம், 2.9 கோடி ரூபாய் சாங்ஷன் செய்யப்பட்டுள்ளது, அதில் 40 இலட்சம் கொடுக்கப்பட்டு வருகிறது, 4 தவணைகளில் அது கொடுக்கப்படுவது. தொடர்ந்து கொடுத்துக் கொண்டு வருகிறோம். ஒரு



மாதத்திற்குள் கொடுக்க வேண்டியதைக் கொடுக்க முடியாமல் இருந்தாலுங்கூட அதைத் தொடர்ந்து கொடுத்துக் கொண்டு வருவோம். இனி காலதாமதம் இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவரவர்களே, வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக கிராமப் பகுதிகளில் வீடு கட்டுகின்ற தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படும் பணத்திற்கு வட்டி கிடையாது. நகரத்திலே இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்கள் வீடு கட்டுவதற்கு அதேபோன்று வட்டியில்லாமல் கொடுக்க ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** பேரவைத் தலைவரவர்களே, ரூரல் ஹவுசிங் ஸ்கீம் என்று சொல்லி கிராமப்புற வீடு கட்டுவதற்குக் கொடுக்கப்படுவதில் அரிசனங்களுக்கு வட்டி இல்லை, அரிசனங்கள் அல்லாதவர்களுக்கு வட்டியுடன் கூடிய தொகை கொடுக்கப்படுகிறது, 5,000 ரூபாய். அது முடிந்த பிறகு நகர்ப்புறத்தில் இருப்பதைப் பற்றி நிதி ஆதாரங்களை மனத்திற்கொண்டு பரிசீலனை செய்யலாம்.

**திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்:** பேரவைத் தலைவரவர்களே, கிராமப்புறக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் வீடு கட்டக் கடன் கொடுக்கும் ரூபாய் 5,000 என்று இருக்கிறது, அதை 10,000 ரூபாயாக உயர்த்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** பேரவைத் தலைவரவர்களே, 5,000 ரூபாய் மூலமாகக் கொடுக்கப்படுவதெல்லாம் சிறப்பாக முடிந்த பிறகு, நிதி ஆதாரம் நிரம்ப இருக்குமானால் பத்தாயிரம் என்ன, அதற்கு மேல் பதினைந்தாயிரம் கொடுப்பதைப் பற்றிக் கூட இந்த அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. எஸ். ஜே. இராமசாமி:** தலைவரவர்களே, 28,000 அப்ளிகேஷன்கள் வந்திருக்கின்றன என்றும், ஆனால் 6,000 அப்ளிகேஷன்களுக்கு மட்டும்தான் கடன் வழங்கப்பட்டது என்றும் அமைச்சரவர்கள் சொன்னார்கள். மீதமுள்ள அப்ளிகேஷன்களெல்லாம் ரிஜெக்ட் செய்யப்பட்டதா அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** பேரவைத் தலைவரவர்களே, எதுவும் ரிஜெக்ஷன் செய்யப்படாது, பணம் இருக்க இருக்கக் கொடுக்கப்படுவதுதான். நான் ஏற்கனவே சொன்னதைப்போல, 50 கிராமப்புறக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதில் காலதாமதம் ஆயிற்று. அது முடிந்துவிட்ட காரணத்தால் இனி விரைவாகக் காரியங்கள் நடைபெறும்.

**டாக்டர் கே. சமரசம்:** பேரவைத் தலைவரவர்களே, வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் புதிதாகக் கடன் கொடுக்க என்னென்ன விதிமுறைகளை வகுத்திருக்கிறது? இந்த ஆண்டு மட்டும் எவ்வளவு தொகை வழங்கியிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** பேரவைத் தலைவரவர்களே, எவ்வளவு விநியோகிக்கப்பட்டிருக்கிறது என்று நான் தகவல் கொடுத்திருக்கிறேன். விதிமுறைகள் என்பது, 'எகனாமிக்கலி வீக்கர் செக்ஷன்ஸ்' என்று சொல்லக் கூடியவர்களுக்குத் தருகிறோம். அதைப் பற்றி மேலும் விரிவான தகவல் வேண்டுமென்று சொன்னால் தனிக் கேள்வி போட வேண்டுகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவரவர்களே, இப்பொழுது கிராம வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக, அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் முறை இப்பொழுது குறைந்திருக்கிறது. கடன் கொடுக்கும் முறையிலே 50 சதவிகிதத்தைக் கடனாகவும், மீதி 50 சதவிகிதத்தை மானியமாகவும் கொடுத்தால் அவர்களுக்கு வசதியாக இருக்கும். இப்பொழுது அவர்கள் மாதம் 20 ரூபாய் கட்ட வேண்டியிருக்கிறது. இதனால் சாதாரண ஏழை எளிய மக்கள் மனுச் செய்யத் தயாராக இல்லாமல் இருக்கிறார்கள். எனவே, 50 சதவிகிதத்தை மானியமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** பேரவைத் தலைவரவர்களே, ஒரு சலுகையுமே பெறாமல் இருந்தவர்களுக்கு இந்த அரசு புதிய சலுகையைச் செயல்படுத்தியுள்ளது. இது எந்த முறையிலே நடைமுறையிலே வெற்றி பெறுகிறது என்று



பார்ப்போம். வருகிற திட்ட நிலை அறிக்கையில் மேலும் விரிவாக்குவதைப்பற்றி இந்த அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** பேரவைத் தலைவரவர்களே, 50 ரூரல் கூட்டுறவுச் சங்கங்கள் என்று அமைச்சர் அறிவித்தார். எந்த எந்த மாவட்டத்தில், எத்தனை எத்தனை சங்கங்கள் அமைத்தார்கள் என்பதை அமைச்சரவர்கள் அறிவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழகம் பூராவும் உள்ள எல்லா 'ஏரியா'வையுமே 'கவர்' செய்துவிடும். ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் இணைக்கவில்லையென்றால், அதோடு இணைத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, தமிழகம் பூராவும் இது 'கவர்' செய்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## பொன்னையாற்றின் குறுக்கே மேம்பாலம்

*வினா 31—**திரு. துரை முருகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், வாலாஜா வட்டம், பொன்னையாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டும் வேலை முடிந்து விட்டதா?

(ஆ) இல்லை எனில், காலதாமதத்திற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** (அ) இல்லை.

(ஆ) இவ்வேலையைச் செய்து முடிக்க ஒப்புக்கொண்ட ஒப்பந்தக்காரர் வேலையைச் செய்து முடிப்பதில் காலதாமதம் செய்ததால் அவரது ஒப்பந்தம் முடிக்கப்பட்டது. மீதமுள்ள வேலையை 1978 செப்டம்பர் மாதம் 15 ஆம் தேதிக்குள் முடிக்கும் வகையில் நெடுஞ்சாலைத்துறை இலாகாவே பல சிறு ஒப்பந்தக்காரர்கள் மூலம் வேலையைச் செய்து வருகிறது.

**திரு. துரை முருகன் :** தலைவர் அவர்களே, 1974 ஆம் ஆண்டு இந்தத் திட்டத்திற்குக் கலைஞர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். இப்பொழுது 1978 நடக்கிறது. 1974 ஆம் ஆண்டினுடைய மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு? இப்பொழுது உயர்ந்திருக்க வேண்டும். எவ்வளவு உயர்ந்திருக்கிறது? ஒப்பந்தக்காரர் காலதாமதத்தால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட விரயம் எவ்வளவு?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, 20—11—1974-ல் பாலம் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால், 20—2—1976-க்குள் அந்தப் பணி முடிக்கப்பட்டிருக்க வேண்டும். பல குறிப்பாணைகள் அனுப்பியும் ஒப்பந்தக்காரர் குறிப்பிட்ட காலத்தில் முடிக்காததால், 22—5—1976-ல் ஒப்பந்தம் முடிக்கப்பட்டு, நெடுஞ்சாலைத் துறையே அந்தப் பணியை மேற்கொண்டிருக்கிறது. இதனால் ஒப்பந்தத் தொகை மிகையாகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பழனிவேல், இது பொன்னையாற்றின் குறுக்கே பாலம் கட்டுகிற விவகாரம்.

**திரு. என். பழனிவேல்:** இந்த அரசாங்க வேலைகள் காண்ட்ராக்ட் விடுவதன் மூலம், அவர்களால் காலதாமதம் ஏற்பட்டு, இன்று பல வேலைகள், தமிழ்நாடு பூராவும் செயலாகாமல் நிறுத்தப் பட்டிருக்கின்றன. அதனால், காண்ட்ராக்ட் முறையை அறவே ஒழித்துவிட்டு அரசாங்கமே நேரடியாகச் செய்தால், வேலைகள் ஒழுங்காக நடக்கும். இந்தக் காலதாமதம் ஏற்படாது. ஆகவே, காண்ட்ராக்ட் முறையை ஒழிப்பதற்கு இந்த அரசு உடனடியாக முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** காண்ட்ராக்டர்களின் குறைபாடுகளின் காரணமாக, எந்த எந்த வேலைகள் நின்றிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கூறுவார்களானால் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும். காண்ட்ராக்ட் முறையை அறவே ஒழிக்கின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. 'கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷன்' என்ற அமைப்பு ஒன்றை நிறுவி, அதன் மூலம் பெரிய காண்ட்ராக்ட்களை அரசே எடுத்து நடத்த ஒரு செயற்குறிப்பு இருக்கிறது.





## கல்லாற்றின் குறுக்கே பாலம்

* வினா 32—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அருநர் வட்டம், நரிப்பள்ளி கல்லாற்றின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** இல்லை.

**திரு. எம். அண்ணாமலை:** தலைவர் அவர்களே, அருநரிலிருந்து திருவண்ணாமலை வரையில் ஒரு நீண்ட பஸ் போக்குவரத்தும், சுமார் 40-க்கு மேற்பட்ட விவசாயிகளுடைய கிராமங்களைக் கொண்ட பெரும் போக்குவரத்தும் உள்ள பகுதி. அந்தப் பகுதியிலே நரிப்பள்ளி கல்லாறு என்ற இடத்திலே திடீரென்று அடிக்கடி பெரு வெள்ளம் ஏற்படுவதாலே போக்குவரத்து பெரும் அளவு பாதிக்கப்பட்டிருக்கிறது. இது நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கிறது. இனியாவது அரசு பரிசீலித்து, அந்தப் பாலத்தைக் கட்ட முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அவ் வேலையை முடிப்பதற்குக் குறைந்தது ரூ. 16 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டு அதை எடுப்பதுபற்றி அரசு யோசித்து வருகிறது.

## *Bridge across Thiruvettar.*

* 33 Q.—THIRU J. JAMES : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether there is any proposal to construct a bridge at Moovathungam across Thiruvettar river connecting Thottanaram and Parathapalli in Kanyakumari district; and

(b) if so, the details thereof ?

[1978 செப்டம்பர் 1

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) ஆம்.

(ஆ) திருவட்டார்—மூவாத்துமுகம் சாலையை மேம்படுத்தும் பணியையும், மூவாத்துமுகம் என்னுமிடத்தில் பாலம் கட்டும் பணியையும் ரூ. 15.00 இலட்சம் மதிப்பீட்டில் 17—2—1978 முதல் எடுத்து செயலாற்றப்பட்டு வருகிறது.

(துணை வினா இல்லை)

**செங்கமடுகு அணைத் திட்டம்**

*வினா 34—திரு. க. இரா. சின்னராசு : மாண்புமிகு வேளாண்மை—பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம் வேப்பனப்பள்ளி ஒன்றியத்தைச் சேர்ந்த செங்கமடுகு (சிங்காரப்பள்ளி) அணை கட்டுவதற்கான மதிப்பீடு போடப்பட்டதா?

(ஆ) அப்படியானால் அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) நடப்பாண்டில் இத் திட்டத்தை அரசு நிறைவேற்ற உத்தேசித்துள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) ஆம்.

(ஆ) இத் திட்டத்திற்கான மதிப்பீடு ரூ. 202 இலட்சங்களாகும்.

(இ) இத் திட்டம் புலனாய்வு தலைமைப் பொறியாளரால் பரிசீலிக்கப்படுகிறது. அவரது அறிக்கை கிடைத்த பின் நிறைவேற்ற இவ்வரசு முடிவெடுக்கும்.

(முற்பகல் 9-40)

**திரு. க. இரா. சின்னராசு:** பேரவைத் தலைவர் அவர்களே இந்தத் திட்டம் உடனடியாக செயல்படுத்துவதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பகுதி மிகவும் வறட்சியான பகுதியாகும். குறிப்பாக வேப்பனப் பள்ளிப் பகுதி மிகவும் வறட்சியான பகுதியாகும். ஆகவே இந்தத் திட்டத்தை விரைவில் செயல் முறைக்குக் கொண்டு வர முயற்சி செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1978 செப்டம்பர் 1]

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே பொறியாளர் அறிக்கை வந்தவுடன் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**நெய்வேலியில் நிலத்தடி நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்தல்.**

*வினா 35—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மை—பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெய்வேலியில் இரண்டாவது நிலக்கரிச் சுரங்கம் தோண்டுவதால் சேதமாகும் நிலத்தடி நீரைச் சாகுபடிக்குப் பயன்படுத்துவது குறித்து அரசு ஆராய்ந்து வருகின்றதா?

(ஆ) ஆம் எனில், விபரம் யாது?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) ஆம்.

(ஆ) நெய்வேலி இரண்டாவது சுரங்கம் வெட்டப்படுவதால் கிடைக்கும் மொத்த நில நீர் இருப்பு பற்றி ஆய்வதற்கும், அதன் பின் அப்பகுதியில் பாசனம் மற்றும் சென்னை நகர குடிநீர் தேவை இவற்றைக் கருத்திற்கொண்டு மேற்கண்ட மிகுதி நில நீரைச் சரிவரப் பயன்படுத்தும் முறையைக் கண்டு, 6 மாத காலத்திற்குள் பரிந்துரையை அனுப்பவும், தமிழக அரசு மார்ச்சு திங்களில் ஒரு தனிக்குழு அமைத்திருக்கிறது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, இந்த இரண்டாவது சுரங்கம் தோண்டுவதன் அடிப்படையில் அங்கே கிடைக்கின்ற நீரை சென்னைக்குக் குடிநீராக உபயோகப்படுத்துவதற்கான திட்டத்தில் அரசு ஈடுபட்டிருக்கிறது. அவ்வாறு திட்டமிடப் பட்டிருப்பது எந்த வகையில் நிறைவேற்றப்படவிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். அந்தத் தண்ணீரை வேளாண்மைக்குப் பயன்படுத்தப்போவதாகவும் சொல்லியிருக் கிறார்கள். அப்படி வேளாண்மைக்குப் பயன்படுத்துவதாக இருந்தால் எவ்வளவு ஏக்கர் நிலத்திற்கு அதன் மூலம் பாசன வசதி கிடைக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

[1978 செப்டம்பர் 1

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே என்னுடைய விடையிலேயே எடுத்துச் சொன்னேன். கடந்த 28—3—1978 லேயே இதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவின் பரிந்துரை இன்னும் வந்து சேரவில்லை. அந்தப் பரிந்துரையை 6 மாதத்திற்குள் கொடுக்கும்படி ஆணையிடப்பட்டிருக்கிறது. 28—9—1978-க்குள் எதிர்பார்க்கப்படுகிறது. அப்படி வருமானால் எவ்வளவு நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும் என்பதைப் பற்றியும், எவ்வளவு நீரைத் தேக்கி அதன் மூலம் சென்னைக்குக் குடிநீர் வசதி செய்து கொடுக்க முடியும் என்பதைப் பற்றியும் விளக்கமாக எடுத்துச் சொல்ல முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. துரை முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி இரண்டாவது நிலக்கரிச் சுரங்கம் தோண்டுவதன் விளைவாகப் பாதிக்கப்படுகின்ற கிராமங்கள் எவ்வளவு? அதற்கு மாற்றுத் திட்டம் ஏதாவது இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே பாதிப்பைப் பற்றி இதுவரையிலும் எந்த விதமான அறிக்கையும் வரவில்லை. அப்படி பாதிப்பு ஏற்படாத அளவுக்கு இந்த அரசு கவனம் செலுத்தி பாதுகாத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மு. செல்வராஜ்:** தலைவர் அவர்களே, நெய்வேலியில் ஏற்கனவே ஒரு நிலக்கரிச் சுரங்கம் இருக்கிறது. அதன் காரணமாக ஏறத்தாழ 50, 60 கிராமங்களில் தண்ணீர் எடுக்கப்பட்டு பாதிக்கப்பட்டிருக்கின்றன. நீர் ஊற்று குறைந்திருக்கிறது. அப்படி இருக்கும்போது, இரண்டாவது சுரங்கம் வெட்டுவதன் மூலமாக விளைநிலங்கள் கிராமங்களில் பாதிக்கப்படும் நிலைமை இருக்கிறது. அமைச்சர் அவர்கள் ஒரு கமிட்டியை நியமித்திருக்கிறோம் என்று சொன்னார்கள். அந்தக் கமிட்டி பரிசீலனை செய்யும்போது ஏற்கனவே பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு விவசாயத்திற்கு வேண்டிய தண்ணீர் கிடைக்கின்ற அளவுக்கும், தற்சமயம் எடுப்பதால் பாதிக்கப்படும் கிராமங்களுக்குத் தண்ணீர் சப்ளை செய்கிற அளவுக்கும்



1978 செப்டம்பர் 1]

'ரெபரன்சை' அந்தக் கமிட்டிக்கு அரசாங்கம் அனுப்பியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். காரணம் ஏறத்தாழ 50, 60 கிராமங்கள் நம் நாட்டுக்கு கருப்புத் தங்கம் மின்சாரம் தர இருக்கிறார்கள். அந்தத் தியாகத்தை காட்டிய பிறகு சென்னைக்குக் குடிநீர் தருவதைப் பற்றி அரசாங்கம் கவனிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முத்துசாமி கேட்ட கேள்விக்கு விடை சொல்லியிருக்கிறேன். முதல் பாதிப்பு எவ்வளவு என்பதைப் பற்றி அரசாங்கம் கவனித்திருக்கிறது. அதன் பேரில் நடவடிக்கை எடுத்திருக்கிறது. இரண்டாவது பாதிப்பு எவ்வளவு கிராமங்கள் என்பதைப் பற்றி அந்தத் தணிக்கைக் குழு பரிந்துரை அளித்ததும் அரசு அதன் பேரில் தக்க நடவடிக்கை எடுக்க இருக்கிறது. மேலும் பாசன வசதிகளைப் பெருக்க வேண்டும் என்ற உன்னிப்பான நோக்கத்தோடு தான் இந்த அரசு செயல்பட்டு வருகிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், குடிநீரை மையமாக வைத்துக் கிடைக்கின்ற நீரை சென்னை நகர மக்களுக்கு கொண்டு வரவேண்டும் என்பதை மையக் கருத்தாக வைத்து அரசு பாடுபட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நெய்வேலியில் வெட்டப்படும் இரண்டாவது சுரங்கத்தினால் சுற்றுப்புறத்தில் உள்ள கிராமங்கள் கிட்டத்தட்ட 40 கிராமங்கள் நிலத்தடி நீர் கூட இல்லாமல் பாதிக்கப்படும் நிலை இருக்கிறது. இந்நிலையிலே சென்னைக்குக் குடி நீர் கொண்டு வரும் திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலமாக அது மேலும் பாதிப்பு ஏற்படுத்தும். ஆகவே, அங்கேயுள்ள விவசாயிகளுக்கு அந்த நீரைப் பயன்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்ன பதிலில் இருந்து மாண்புமிகு உறுப்பினர் கேள்விக்குத் தேவையான பதில் இருக்கிறது. ஆனாலும், பாசன வசதியையும், குடி நீர்

வசதியையும் மையமாக வைத்துத்தான் இரண்டாவது நிலக்கரிச் சுரங்கத்தினால் கிடைக்கப் பெறும் நீரைப் பயன்படுத்த இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. ஆறுமுகம் :** பேரவைத் தலைவரவர்களே, நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டப்படுவதால் 50-க்கும் மேற்பட்ட கிராமங்களின் பாசன வசதி பாதிக்கப்படும் என்கிற காரணத்தால், அங்கேயுள்ள நிலத்தடி நீரைப் பாதுகாக்கும்பொருட்டு அருகாமையில் ஒரு செயற்கை ஏரியை அமைக்கும் திட்டம் உண்டா? நெய்வேலியில் கிடைக்கும் நிலத்தடி நீரை சென்னைக்குக் கொண்டு வர அருகாமையில் இருக்கும் வடக்குத்து நீரேற்று நிலையம்—வீராணம் திட்டத்துடன் அதை இணைத்துச் செயல்படுத்த அரசுக்கு திட்டம் உண்டா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** பேரவைத் தலைவரவர்களே, இதற்கு மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால் விளக்கமாகப் பதில் சொல்லலாம்.

**திரு. கூத்தகுடி ச. சண்முகம் :** தலைவரவர்களே. சென்னைக்கு கிருஷ்ணா நதி நீர் வருவதாகவும், அது சம்பந்தமாக ஆந்திர அரசுக்கு நன்றி தெரிவித்தும் ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அப்படி கிருஷ்ணா நீர் சென்னைக்குக் கொண்டு வரப்படுமானால், அது போதும் என்று நிலைமை இருக்குமானால், இப்படி ஒரு திட்டத்தை சர்வே செய்ய வேண்டிய அவசியம் என்ன? இது பற்றி அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். கிருஷ்ணா நீர் வருகிற காரணத்தால், சென்னைக்கு குடி நீர் நெய்வேலியில் இருந்து கொண்டு வருவதை விட்டு விட்டு அதை விவசாயத்திற்குப் பயன்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** பேரவைத் தலைவரவர்களே, கிருஷ்ணா நதி நீரைப் பொறுத்தவரையில் இப்போதுதான் புலன் ஆய்வு தொடங்கப்பட்டு இருக்கிறது. அது முடிவடைவதற்குப் பல ஆண்டுகள் ஆகலாம். ஆனாலும் அதற்கு முன்னுடி கிடைக்கிற நீரை சென்னையின் குடி நீர் வசதிக்குக் கொண்டு வரவேண்டும் என்பதற்காக இந்த



நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் கூத்தகுடி சண்முகம் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். இருக்கிற நிலைமைகளை அனுசரித்துத்தான் அரசு இந்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**திரு. ப. சந்திரன் :** தலைவரவர்களே, தமிழ்நாடு அரசு நிலத்தடி நீரைக் கட்டுப்படுத்த சட்டம் கொண்டு வர இருக்கிறது. அந்தச் சட்டத்தின் விளைவாக இந்தத் திட்டம் நிறைவேறாமல் போய்விடும் சூழ்நிலை ஏற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** பேரவைத் தலைவரவர்களே, நிலத்தடி நீர் பிரச்சனை குறித்து அமைக்கப்பட்ட அந்தக் குழு இன்னும் அதனைப் பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறது. ஆகவே, தனிக் கேள்வி போட்டால் விவரமாகப் பதில் சொல்கிறேன்.

## செவிலிய உதவியாளர்கள்.

*வினா 36—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பயிற்சி பெற்ற செவிலிய உதவியாளர்கள் (F.N.A. & M.N.A.) இருந்தும்போது பயிற்சி பெறாதவர்களை அவ்வேலைக்கு நியமித்திருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த இடங்களில் பயிற்சி பெற்றவர்களை அரசு நியமிக்குமா?

**மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :** தலைவரவர்களே, (அ) & (ஆ) : 1930 ஆம் ஆண்டு முதல் செவிலிய உதவியாளர் பணியில் நியமனம் பெற்ற பிறகு பயிற்சி பெற்றால் போதுமென்ற நிலைமை இருந்து வந்தது. 1976-க்குப் பிறகு பயிற்சி பெறாதவர்கள் நியமிக்கப்படக் கூடாது என்கிற நிலைமை உருவானது. எனவே அதற்குப் பிறகு பயிற்சி பெறாதவர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1978 செப்டம்பர் 1

* வினா 37—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்-பெண் செவிலிய உதவியாளர்கள் (M.N.A.& F.N.A.) பயிற்சியை மீண்டும் துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : இல்லை.

திரு. ஆ. நடராசன் : தலைவரவர்களே, ஏற்கனவே பயிற்சி பெறாதவர்கள் இன்னும் அதிகமாக இருப்பதால் அவர்களுக்குப் பயிற்சி அளிக்க வாய்ப்பு ஏற்படுத்தப்படுமா ? மேலும் இப்படிப் பயிற்சி பெறாதவர்கள் எவ்வளவு பேர் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள் என்ற தகவலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : 1958 ஆம் ஆண்டு வரை அரசு செவிலிய உதவியாளர்களாக நியமிக்கப்பட்டு இருந்தவர்கள் இப்பயிற்சியைப் பெறுவதற்குத் தகுதி பெற்றவர்களாக இருந்தார்கள். அவர்கள் அத்தனை பேரும் பயிற்சி பெற்று விட்டார்கள் என்று தெரிய வருகிறது.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவரவர்களே, இந்த செவிலிய உதவியாளர்கள் நியமிப்பது எந்த ஆண்டு, யாரால் துவங்கப்பட்டது என்கிற விவரம் தெரிவிக்க இயலுமா ? அந்தப் பணியாளர்களின் வேலை முறை என்ன என்பதை விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, 1927 ஆம் ஆண்டு வரை அவர்களுக்கு உரிய கல்வித் தகுதி, பயிற்சி ஆகியவை இல்லாமல் இருந்தது. 1927-ல் டாக்டர் பி. எப். மத்தியாஸ் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டு, அக்குழு செவிலியர் பணி பற்றி முடிவு செய்து அறிக்கை அளித்தது. அப்படி செவிலிய உதவியாளர்களாக நியமனம் செய்யத் தகுதி—கல்வித் தகுதி 5 ஆம் வகுப்பு வரை படித்து இருக்க வேண்டும். அவர்களுக்குண்டான பணிகள்—



1978 செப்டம்பர் 1]

மருத்துவப் பகுதிகளைச் சுத்தம் செய்தல், புண்களுக்கு கட்டுப் போடுதல், நோயாளிகளுக்கு உணவு வழங்குதல், வார்டுகளில் தரை துடைத்தல் போன்றவை ஆகும்.

(முற்பகல் 9-50)

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலிலிருந்து இந்தப் பணிகளைச் செய்யக்கூடிய செவிலியர்களை நியமிப்பதற்குப் பதில் ஏற்கெனவே பயிற்சி பெற்று வேலை இல்லாமல் இருக்கக்கூடிய ஏராளமான பேர்கள் விண்ணப்பம் போட்டும் கிடைக்காமல் இருக்கும்போது புதிய ஆட்களை நியமித்தது உண்டா ? அதை எதிர்த்து பல இடங்களில் ஆஸ்பத்திரிகளிலே நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படியானால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, பயிற்சிப் பெறாதவர்கள் யாரும் எங்கும் நியமிக்கப்படவில்லை. அப்படி எங்காவது நியமிக்கப்பட்டதாக எந்தவிதமான குற்றச்சாட்டும் இதுவரையில் அரசுக் வரவில்லை. எங்காவது தவறு நடந்திருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். பெருமாள் : தலைவரவர்களே, கணவனை இழந்து வேலையில்லாத செவிலியர்கள் இருக்கிறார்கள். அவர்களின் வயது வரம்பைத் தளர்த்தி அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். சௌந்திரராஜன் : உறுப்பினரின் யோசனையை அரசு பரிசீலிக்கும்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, 'மேல் நர்சிங் அசிஸ்ட்டெண்ட்' 'பீமேல் நர்சிங் அசிஸ்ட்டெண்ட்'—இவர்கள் சங்கத்தின் சார்பில் தரையை துடைத்து சுத்தம் செய்யும் பணியில் எங்களை ஈடுபடுத்தக் கூடாது, புண்ணை சுத்தம் செய்தல், பெட்டை சுத்தம் செய்தல் போன்ற பணிகளைத்தான்

[1978 செப்டம்பர் 1

செய்வோம் என்ற கோரிக்கை அரசுக்கு வந்திருக்கிறதா? 1927 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைதான் இதுவரை இருக்கிற காரணத்தால் அதை மறுபரிசீலனை செய்து அவர்கள் வேலைகளைப் பற்றி வரைமுறை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :** செவிலியர் உதவியாளர்கள் இன்னின்ன பணிகளைச் செய்ய வேண்டுமென்று ஒரு வரன்முறை ஏற்கெனவே வைத்திருக்கிறார்கள். அதன்படி பாத்திரங்களைச் சுத்தம் செய்தல், நோயாளிகளுக்குப் படுக்கை விரித்தல், அறுவை சிகிச்சைக்கு முன் நோயாளிகளைச் சுத்தம் செய்தல், காயங்களைச் சுத்தம் செய்தல், எனிமா கொடுத்தல், பண்டகசாலையிலிருந்து அறுவை சிகிச்சைக்குத் தேவையான பொருள்களை எடுத்து வருதல், பண்டகசாலையிலிருந்து இரத்தம் நிறைக்கப்பட்ட பாட்டில்களை அறுவை சிகிச்சை கூடத்திற்கு எடுத்து வருதல், அங்கிருந்து காலி பாட்டில்களை பண்டகசாலைக்கு எடுத்துச் செல்லுதல், மருத்துவர்களுக்கு கைகளைச் சுத்தம் செய்ய தண்ணீர் கொடுத்தல், அறுவை சிகிச்சைக்குப் பயன்படுத்தும் கத்தி போன்ற பொருட்களை சுத்தம் செய்தல், பண்டகசாலையிலிருந்து தேவையான மருந்து, மாத்திரைகள், ஊசிமருந்துகளைத் தேவைக்கு ஏற்றபடி வாங்கி வருதல், நோயாளிகளின் புண்ணைச் சுத்தம் செய்து கட்டுப் போடுதல் போன்ற பணிகள் என்று வரன்முறை செய்யப் பட்டிருக்கிறது. இதிலே மாற்றம் வேண்டுமென்று பொதுவாக அவர்களுடைய சங்கத்திலிருந்து தரப்பட்ட மனுக்கள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன.

### அனாதை இல்லங்களுக்கான உதவித் தொகை.

* வினா 38—**திரு. எஸ். கணேசன் :** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் அனாதை இல்லங்களில் பயிலும் குழந்தைகளுக்கு அரசாங்கத்தில் இருந்து கொடுக்கப்படும் உதவித் தொகை எவ்வளவு?

(ஆ) அதை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?



1978 செப்டம்பர் 1]

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** (அ) தமிழ் நாட்டில் அனாதை இல்லங்களில் பயிலும் குழந்தைகளுக்கு அரசு உணவு மானிய உதவித் தொகையாக கீழ்க்கண்டவாறு வழங்கப் படுகிறது :—

(i) சென்னை, மதுரை, தஞ்சை, திருச்சி, கோவை, சேலம் ஆகிய ஆறு பெரிய நகரங்களில் உள்ள இல்லங்கள் :

நபர் ஒன்றுக்கு மாதம் ரூ. 14 விதம்.

(ii) தமிழ்நாட்டின் மலைப் பகுதியில் அமைந்துள்ள இல்லங்கள் :

நபர் ஒன்றுக்கு மாதம் ரூ. 18 விதம்.

(iii) மற்ற இடங்களில் :—
நபர் ஒன்றுக்கு ரூ. 13 விதம்.

(ஆ) அனைத்து இல்லங்களில் பயிலும் அனாதை/ஆதரவற்ற குழந்தைகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை உயர்த்துவது குறித்து அண்மையில் ஆய்வு செய்யப்பட்டது. எனினும், தற்போதைய நிதி நிலைமையைக் கருதி அரசு இதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

**திரு. எஸ். கணேசன் :** தலைவரவர்களே, இந்த உதவித் தொகை நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் அனாதைக் குழந்தைகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தது. வளர்ந்து வருகின்ற நாகரீகச் சமுதாயத்தில் அனாதை குழந்தைகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது; குழந்தைகளைப் பெற்று அனாதைகளாக விட்டுவிடுகிறார்கள். நினைத்துக்கூடப் பார்க்க முடியாத புரட்சிகளைச் செய்து வரும் இந்த அரசு இந்த உதவித் தொகையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** அதைபற்றி இன்னும் பரிசீலனை செய்ய வேண்டிய நிலையில்தான் இருக்கிறது. ஏனென்றால் இந்த உதவித் தொகையை அதிகரிக்க நிதிநிலை சாத்தியமாக இல்லை என்று ஏற்கெனவே பதில் சொல்லி இருக்கிறேன்.

[1978 செப்டம்பர் 1

### பஞ்சப்பள்ளியில் சிறுவர் சீர்திருத்தப் பள்ளி.

* வினா 39—டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் பஞ்சப்பள்ளியில் சிறுவர் (குற்றவியல்) சீர்திருத்தப் பள்ளி ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில் எப்போது ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : (அ) & (ஆ) தருமபுரி மாவட்டங்களில் உள்ள பஞ்சப்பள்ளியில் புதிதாக சிறுவர் (குற்றவியல்) சீர்திருத்தப் பள்ளி திறக்கும் உத்தேசம் இல்லை.

எனினும் கடலூரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் அரசு இளநிலை சீர்திருத்தப் பள்ளியை பஞ்சப்பள்ளியில் உள்ள வசதியுடன் கூடிய அரசாங்கக் கட்டடத்திற்கு மாற்றும் திட்டம் இருந்தது. அதன்படி 13—10—76-ல் உத்திரவிடப்பட்டது. பொதுப்பணித் துறை இக் கட்டடத்தை காலி செய்து கொடுக்காததால் மேற்குறித்த இடமாற்றம் இன்னும் செய்யப்படவில்லை.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களின் பதிலிலிருந்து அங்கே சிறுவர் சீர்திருத்தப் பள்ளி ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பு இருப்பதாக அறிகிறேன். பொதுப்பணித் துறை இடைஞ்சலாக இருப்பதால் உடனடியாக அதனை நிவர்த்தி செய்து அந்தப் பள்ளியை விரைவில் அங்கே ஏற்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பேரவைத் தலைவரவர்களே, பஞ்சப்பள்ளி கிராமத்தில் சீர்திருத்தப் பள்ளி துவக்கலாம் என்று உத்தேசிக்கப்பட்டிருக்கின்ற கட்டடத்தில் தற்போது பொதுப்பணித் துறை அலுவலகம் நடைபெறுவதால் அந்தக் கட்டடத்தை சீர்திருத்தப் பள்ளிக்கு ஒப்படைக்க முடியாது என்று அங்குள்ள நிர்வாகப் பொறியாளர் தெரிவித்துள்ள விவரம் தலைமைப் பொறியாளர் மூலமாக இந்தத் துறைக்குத் தெரியப்படுத்தி இருப்பதால் தற்போது சீர்திருத்தப் பள்ளியை மாற்றும் திட்டம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1978 செப்டம்பர் 1]

### பரமக்குடி பகுதியில் கைத்தறித் துணிகள் தேக்கம்.

* வினா 40—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிழக்கு ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சுமார் 40 லட்ச ரூபாய் பெறுமான கைத்தறித் துணி தேக்கம் காரணமாக ஏற்பட்டுள்ள வேலை இழப்பு காரணமாக கைத்தறி நெசவாளர்கள் மத்தியில் கொந்தளிப்பான நிலை எழுந்துள்ளது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : கிழக்கு இராமநாதபுரம் பரமக்குடி கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் கைத்தறித் துணித் தேக்கம் காரணமாக வேலையிழப்பு இல்லை.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, நான் கடந்த 30 ஆம் தேதி பரமக்குடி சென்றிருந்தேன். அங்கேயுள்ள கூட்டுறவுச் சங்கங்களிலே சுமார் 40 இலட்ச ரூபாய் அளவுக்கு துணி தேங்கி இருக்கின்றது. இதன் விளைவாக அந்த சங்கத்தினுடைய உறுப்பினர்களுக்கு வேலை கொடுக்கக்கூட முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. அதுமட்டுமல்ல. அங்கே கொள்முதல் செய்யப்பட்ட துணிகள் பாதி அளவுக்குக் கூட விற்காத நிலையில் பணம் இல்லை என்று சொல்லப்படுகிறது. எனவே அந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்கள் பலர் வேலை இழந்திருக்கிறார்களே, ஆகவே, இதை அமைச்சரவர்கள் கவனித்து தாிக நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவரவர்களே, 31—7—78 ஆம் தேதிய நிலவரப்படி மேற்கண்ட 35 கூட்டுறவுச் சங்கங்களிடம் ரூ. 38.88 இலட்சம் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் இருப்பு இருந்தன. 1—8—78 முதல் 7—8—78 வரையிலான 20 சதவிகிதம் சிறப்பு தள்ளுபடி காரணமாக மேற்படி சங்கங்கள் ரூபாய் 15.32 இலட்சம் மதிப்புடைய துணிகளை விற்க முடிந்தது. எனவே 8—8—78 ஆம் தேதியன்று ரூபாய் 27.36 இலட்சம் மதிப்புடைய துணிகள் இருப்பு இருந்தது. இதில் ரூபாய்

20 இலட்சம் மதிப்புடைய துணிகள் (Bumper Sarees) 'பம்பர்' சேலை வகையைச் சேர்ந்தவை. வழக்கமாக இந்த ரகச் சேலைகள் தீபாவளியின்போது விற்பனையாவது உண்டு. இந்த 35 சங்கங்களின் மாதாந்திர சராசரி உற்பத்தி ரூபாய் 8.27 இலட்சம் ஆகும். எனவே மேற்கண்ட இருப்பானது மூன்று மாத உற்பத்திக்குச் சமமாகும். எனவே இந்த இருப்பானது சாதாரணமானது என்றே கூறலாம். மேலும், வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கையிருப்பிலுள்ள எல்லாத் துணிகளுமே விற்றுத் தீர்ந்துவிடும். எனவே துணி தேக்கம் அதிகம் இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ரா. உமாநாத்:** தலைவரவர்களே, இந்த ஆண்டு துணி தேக்கம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இருக்கின்றது என்று கனம் அங்கத்தினர் அவர்கள் மீண்டும் வற்புறுத்திச் சொல்கிறார். தீபாவளிக்கு தள்ளுபடி அதாவது ரிபேட் கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள். நான் கேட்டுக் கொள்ள விரும்புவது என்னவென்றால் தீபாவளி வரைக்கும் காத்திராமல் அண்ணா பிறந்த நாள் வருகிறதே அதை முன்னிட்டோ அல்லது பெரியார் நூற்றாண்டு விழா வருகிறதே அதை முன்னிட்டோ அந்த ரிபேட்டை அனவுன்ஸ் பண்ணுவது பற்றி அரசாங்கம் பரிசீலிக்குமா என்பதுதான்.

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்:** தலைவரவர்களே, இப்போது சங்கத்தில் சுமார் 24 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள துணிகள்தான் தேங்கி இருக்கின்றன. அது சாதாரணமான தேக்கம்தான். இராமநாதபுரம் கூட்டுறவு மத்திய வங்கியிலிருந்து சுமார் 61 இலட்ச ரூபாய் காசு கடன் வழங்கப்பட்டிருக்கிறது. துணித் தேக்கத்தைப் பொறுத்தவரையில் இது சாதாரணமானது தான். மேலும் உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற 20 சதவிகிதம் தள்ளுபடி பற்றிய யோசனையை அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]



(முற்பகல் 10.00)

## 2. தகவல் கோரல்.

### சேரன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர் மரணச் சம்பவம் குறித்து.

**திரு. ரா உமாநாத்:** ஒரு முக்கியமான பதட்ட நிலையை நான் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இன்று காலை 5 மணி முதல் 7 மணி வரை நகரத்தில் உள்ள ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்கள் இரண்டு மணி நேரம் ஓடவில்லை என்று கேள்விப்பட்டேன். மதியம் 3 மணியிலிருந்து 5 மணி வரையில் கோவை மாவட்டம் பூராவும் உள்ள வண்டிகள் நிறுத்தப்படும் என்று கேள்விப்பட்டேன். உடுமலைப்பேட்டையில் ஏற்கனவே 'கம்ப்ளீட் பந்த்' ஏற்பட்டிருக்கிறது. சேரன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர் ஒருவர் உயிரோடு எரிக்கப்பட்டதன் விளைவாக பதட்ட நிலை தொடர்ந்து இருந்து வருகிறது. அந்நிலையில் நான் ஒரு அட்ஜோர்ன்மென்ட் மோஷன் கொடுத்துள்ளதைப் பற்றி உங்களிடம் சேம்பரில் வந்து பேசியாகி விட்டது. அட்ஜோர்ன்மென்ட் மோஷன் ரிஜெக்ட் செய்யப்பட்டால் உங்கள் சேம்பருக்கு வருகிறேன். இல்லையென்றால் இங்கு பாயின்ட் ஆப் ஆர்டர் ரெய்ஸ் செய்கிறேன். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னிடம் கொடுத்ததைப் பற்றி நீங்கள் கேட்கிறீர்களா? அல்லது பாயின்ட் ஆப் ஆர்டர் ரெய்ஸ் செய்கிறீர்களா?

**திரு. ரா. உமாநாத்:** இல்லாத பாயின்ட் ஆப் ஆர்டர் பற்றி நான் சொல்லவில்லை. பாயின்ட் ஆப் ஆர்டர் இருந்தால்தான் சொல்வேன். அட்ஜோர்ன்மென்ட் மோஷனை நீங்கள் நிராகரித்திருக்கிறீர்கள். நிராகரித்திருப்பது கன்வன்ஷன் என்ற முறையில் கவர்னர் உரை மீதான விவாதம் இருப்பதால்.

நாம் ரூல்ஸையே சில சமயங்களில் தளர்த்துகிறோம். 'அன்போர்ஸீன் சர்கம்ஸ்டன்ஸஸ்' வரும்போது அப்படிச் செய்கிறோம்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* அதை பேரவைத் தலைவர் தள்ளிவிட்டதைப் பற்றி தாங்கள் ஒழுங்குப் பிரச்சினை எழுப்புகிறீர்களா அல்லது ஏற்பட்டிருக்கிற பதட்ட நிலை பற்றி ஒழுங்கு பிரச்சினை எழுப்புகிறீர்களா ?

*திரு. ரா. உமாநாத் :* அடுத்த சப்ஜக்ட்டுக்குப் போவதற்குள் இந்தப் பதட்ட நிலை பற்றிக் கூற விரும்புகிறேன். தாங்கள் அனுமதி தர மறுத்திருப்பதைத் தாங்கள் தயவுசெய்து மறுபரிசீலனை செய்ய வேண்டும். 'Nero was fiddling when Rome was in fire.' என்று ஆங்கிலத்தில் சொல்வது மாதிரி நாட்டிலுள்ள தொழிலாளர்கள் பூராவும் மற்றவர்களும் நினைப்பார்கள். ஆகவே தயவுசெய்து இந்த அட்ஜேர்ன்மென்ட் மோஷனை தாங்கள் அனுமதிக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

(சில உறுப்பினர்கள் எழுந்தனர்.)

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* இப்பிரச்சினையையொட்டி பேசுகிற ஒழுங்குப் பிரச்சினையாக இருந்தால் எழுந்து சொல்லலாம்.

*திரு. க. சுப்பு :* திரு. உமாநாத் அவர்கள் சொன்னதுபோல்—பெட்ரோலை ஊற்றிக் கொண்டு இறந்தாரா அல்லது பெட்ரோலை ஊற்றி அவர் சாகடிக்கப்பட்டாரா என்று தெரியாத நிலை இருக்கிறது. இதைப் பற்றி நேற்றுகூட பாராளுமன்ற உறுப்பினர் டெல்லியில் திருமதி நூர்ஜகான் ரஸாக் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இது ஒரு ஸீரியஸான மாட்டர் என்று.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* இதைப் பற்றிப் பேசுங்கள். அமைதியாக நடக்கும் அவையில் தாங்கள் எங்கெங்கேயோ சுற்றி திசை திரும்பிப் போக வேண்டாம். என் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டியது போக்குவரத்துக் கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி பற்றியது.





*திரு. க. சுப்பு :* நான் அட்ஜேர்ன்மென்ட் மோஷன் கொடுத்திருக்கிறேன். எல்லாவற்றையும் எழுதி வைத்துக் கொண்டு, டிக் செய்து, எந்தெந்த விதிகளின்கீழ் தள்ளலாம் என்று டைப் செய்து வைத்திருக்கிறீர்கள்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* தாங்கள் எனக்கு அறிவுரை சொல்ல வேண்டாம். எனக்குத் தெரியும். தாங்கள் என்ன பிரச்சினையை எழுப்ப விரும்புகிறீர்கள் ?

*திரு. க. சுப்பு :* ஒத்திவைப்புத் தீர்மானங்களை நிராகரிப்பது எப்படி என்ற அடிப்படையில் பல விதிமுறைகளை வைத்துக் கொண்டு டிக் செய்து தள்ளுகிறீர்கள். அப்படித் தள்ளுவது என்றால் எந்தவிதமான ஒத்திவைப்புத் தீர்மானத்தையும் அனுமதிக்க முடியாது. நான் வேண்டுமானால் 'சாலெஞ்' செய்கிறேன், எந்தத் தீர்மானத்தையும் அனுமதிக்க முடியாது. இப்படியிருந்தால் பெட்ரோல் ஊற்றிக் கொண்டு சாகிறவன் சாகட்டும், பெட்ரோல் ஊற்றி கொளுத்தி சாகிறவன் சாகட்டும் என்ற நிலைதான் இருக்கும். ஆகவே, இப்படி நிலைமைகள் ஏற்படாதிருக்க இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. மு. அம்பிகாபதி :* தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் ஒரு கொந்தளிப்பான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தூண்டிவிட்டு பெட்ரோல் ஊற்றி தொழிலாளர்களைக் கொளுத்துவது என்றால், it is a most important matter; so அவையை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டும். . .

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* திரு. உமாநாத் அவர்கள் சொன்னதை வழிமொழிகிறேன் என்று சொன்னாலே போதும்; நேரத்தை வீணாக்க வேண்டியதில்லை. நான் தள்ளிவிடவில்லை. உங்களுக்கு ஒரு அறிவிப்புத் தர தயாராயிருக்கிறேன். உடுமலைப்பேட்டையில் நடந்த நிகழ்ச்சியைப் பற்றி 42-வது விதியின் கீழ் தாங்கள் அனுமதி கேட்டீர்கள். நானும், இப்போது பொது விவாதம் இருக்கிறபோது தேவை இல்லை என்று கவன ஈர்ப்புத் தீர்மானமாக 41-வது விதியின்கீழ் அனுமதி தந்திருக்கிறேன். உடனடியாக நான் அமைச்சர் அவர்களோடு

தொடர்பு கொண்டேன். இப்போது, நீங்கள் எழுப்பியுள்ள பிரச்னைமீது மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைப் பாருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சேரன் போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரிகின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த விசுவநாதன் அவர்கள் மீது பெட்ரோல் விடப்பட்டு அல்லது அவரே விட்டுக் கொண்டு மாண்டு போயிருக்கிறார் என்ற இரு கருத்துக்கள் கூறப்படுகின்றன. இதுபற்றி நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. நாளைய தினம் இதுபற்றிய விரிவான அறிக்கை ஒன்றை அவைக்கு கொடுக்கிறேன்.

**திரு. க. சுப்பு:** அமைச்சர் அவர்கள் சொல்லுகின்றபோது, A point arising out of Hon. Minister's reply.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், இரண்டுவிதமான கருத்துக்கள் சொல்லப்படுகின்றன, இவற்றைப்பற்றி விசாரித்து நாளைக்கு ஒரு அறிக்கையை சமர்ப்பிக்கிறேன் என்று சொல்கின்றார்கள். நாளைக்கு அவர் அறிக்கை தந்த பின்னால் உங்கள் சந்தேகத்தைக் கேட்கலாம்.

**திரு. க. சுப்பு:** பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கனம் சுப்பு அவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள் என்பது எனக்குத் தெரியும், அதாவது அமைச்சர் அவர்கள் இப்போது சொல்லுவது, போலீஸ் தரப்பிலிருந்து தரப்படுகின்ற தகவல்களிலிருந்து சொல்லுகிறாரா அல்லது பத்திரிகை வாயிலாகத் தெரிந்ததைச் சொல்லுகிறாரா என்று கேட்க விரும்புகிறார். நாளைக்கு அமைச்சர் அவர்கள் அறிக்கை தந்ததற்குப் பின்னால் இந்த விவரங்களைக் கேட்டு எழுப்புவது பொருத்தமாக இருக்கும். ஆகவே, இப்போது பாயின்ட் ஆப் ஆர்டர் எதுவும் எழுப்ப வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.



**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அவருக்கு இலாகாபூர்வமாக வந்த தகவலைக் கொடுத்திருக்கிறார்களா அல்லது பத்திரிகையில் வந்ததை வைத்துக்கொண்டு சொல்லுகிறாரா? பத்திரிகையில் இதுபற்றிய விசாரணை நடந்து கொண்டிருக்கிறது என்று தகவல் வந்திருக்கிறது. அப்படியிருக்கும்போது, அமைச்சர் அவர்கள் இப்போது கருத்துக்களைச் சொல்வது, அவர் மீது பெட்ரோலைப் போட்டார்களா அல்லது அவரே போட்டுக் கொண்டாரா என்றெல்லாம் தகவல்களைக் கொடுப்பது அங்கு நடைபெறுகின்ற விசாரணைக்கு பாதகமாக அமையும். ஆகவே அமைச்சர் அவர்கள் எதை வைத்துக் கொண்டு இந்தத் தகவல்களை தருகிறார் என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** சில தகவல், இவ்வாறெல்லாம் கூறப்படுகின்றன என்றுதான் நான் குறிப்பிட்டேன். தொழிற்சங்கத் தலைவர்களும் சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். நாளைய தினம் இவற்றைப் பற்றி முழுமையாக விசாரித்துவிட்டு தகவல் தருகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. உமாநாத் அவர்களும் திரு. சுப்பு அவர்களும், இந்த விஷயம் விசாரணையில் இருக்கும்போது இங்கு எழுப்பியிருக்கவே வேண்டாம். விசாரணை இருக்கும்போது இங்கு கருத்துக்களைக் கூறுவது விசாரணைக்குக் குந்தகம் ஏற்படும் என்று எண்ணம் கூட எனக்கு ஏற்படலாம். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எழுந்து நிற்கிறார்கள். அவர்கள் முதலில் பேசட்டும்.

* **திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னை பற்றி ஒரு விசாரணை நடைபெறுவது அரசாங்கத்திற்குக் கருத்துக்களைத் தெரிவிப்பதற்காக நடைபெறுகின்ற விசாரணையே தவிர, இப்போது நடைபெறுகின்ற விசாரணை பொதுமக்களுடைய உணர்ச்சிக்கோ அல்லது தொழிலாளர்களின் உணர்ச்சிக்கோ அல்லது ஏற்பட்டுள்ள கொந்தளிப்புக்கோ சமாதானம் கூறுவதாக அமையாது. இப்படிப்பட்ட சம்பவங்களின்போது ஏற்படுகின்ற உணர்ச்சிகளை அவையில் எடுத்துச் சொல்வதின் மூலமாக

அரசாங்கத்தின் கருத்துக்களை, பதிலை பொதுமக்கள் பெற முடியும். அங்கேயுள்ள இலாகா விசாரணையை வைத்துக் கொண்டு, அதன் காரணமாக இங்கே விஷயங்களை எழுப்புவது சரியல்ல என்று எண்ணுவது இருக்கின்ற நிலைமையை மோசமாக்கிவிடும். அநாவசியமாக நிலைமை மோசமாகிவிடாமல் இருப்பதற்கு கூடுமானவரை இந்த அவையில் விஷயங்கள் எடுத்துச் சொல்லப்பட்டு பொதுமக்களுடைய—தொழிலாளர்களுடைய உணர்ச்சிகளை எடுத்துக்கூறுவது என்பது நியாயமானதாகும், ஏற்பட்டிருக்கின்ற நிகழ்ச்சிகளுக்கும் பரிகாரம் காண முடியும். ஆகவே, இதை அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் இதைப் பற்றி விசாரித்து நாளைக்கு அறிக்கை தருகிறேன் என்று சொன்ன பின்னால் மேலும் மேலும் இந்தப் பிரச்னையைப்பற்றி கேள்விகளை எழுப்பாமல் இருப்பதுதான் நியாயமாகவும் இருக்கும், உதவிகரமாகவும் இருக்கும் என்று நினைத்துத்தான் நான் இதை அனுமதிக்கவில்லை.

திரு. க. அன்பழகன்: அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது சொல்லுகின்ற கருத்துக்களிலிருந்துதான் சிக்கல் ஏற்படுகின்றது. உண்மையான நிகழ்ச்சி எதுவாக இருந்தாலும், இங்கு வேண்டுமென்றே பெட்ரோலை ஊற்றிக் கொண்டதாக ஒரு கருத்து ஏற்பட இடமேற்படுகிறது. இதன் காரணமாக அவையில் கூட பலர் மாறுபட்ட உணர்ச்சிகளுக்கு ஆளாகின்ற நிலைமையும் ஏற்படுகிறது. அதுவும் இந்த நிகழ்ச்சியைப் பற்றி அமைச்சர் தெரிவிக்கின்ற கருத்து இதில் பல சிக்கல்களை ஏற்படுத்தக் காரணமாக அமையக்கூடும். அந்த முறையில்தான் இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும். ஆகவே நல்ல முறையில் இந்தப் பிரச்னையை அணுகி விவாதிக்க இந்த அவையில் உறுப்பினர்கள் எழுப்பிய பிரச்னைகளை அனுமதிக்க வேண்டும் என்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

* மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வர முடியாத காரணத்தினால் இந்த மன்றத்தில் சில





கருத்துக்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. திடீரென்று இப்படிப்பட்ட பிரச்னைகளை எழுப்பும்போது, அமைச்சரவைக்கும் தரப்படுகின்ற தகவலை வைத்துக் கொண்டு இதுதான் சரியான தகவலாகும் என்று உறுதியாகச் சொல்வது என்பது கடினமாகி விடுகிறது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், இதைப்பற்றி கருத்துக்கள் எழுப்பப்பட்டதால், அதன் விளைவாக சில கருத்துக்களைக் குறிப்பிட்டார்கள்.

(முற்பகல் 10-10)

இந்தச் சம்பவங்களுக்குப் பின்னால் என்ன உண்மைகள் இருக்கின்றன என்பதைப் பற்றி தகவல் சேகரித்து நாளைக்கு இம்மன்றத்திற்கு அறிக்கை தருவதாக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்லுகின்றபோது, அவருக்குக் கிடைத்த தகவல்களை அவர் சொன்னாரே தவிர, அவருடைய கருத்தாகச் சொல்லவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே மன்ற உறுப்பினர்கள் சிலர் கூறியதற்கு பதில் சொல்ல வேண்டுமென்கின்ற அக்கறை காரணமாக அவருக்குத் தெரிந்த தகவல்களை இம்மன்றத்திற்கு எடுத்துச் சொல்லி இருக்கின்றார்களே தவிர, உடுமலைப்பேட்டையில் நடந்த சாவு குறித்து அவர் தெரிவித்த கருத்து, சொந்தக் கருத்தல்ல என்பதை வலியுறுத்தியிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னை சம்பந்தமாக நாளை அமைச்சர் அவர்கள் தரக்கூடிய அறிக்கையைப் பெற்ற பின்னர் அது சம்பந்தமான பிரச்சினையை எடுத்துக் கொள்ளலாம் என்று நான் கருதுகிறேன்.

* திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தருவதாகச் சொல்லுகின்ற அறிக்கை இந்த அவையிலே உள்ள உறுப்பினர்களுக்கு ஒரு விளக்கமாகவும், நாட்டு மக்களுக்கு ஒரு விளக்கமாகவும் அமையக் கூடும். ஆனால் இன்றைக்கு காலையில் ஏற்பட்டுள்ள சூழ்நிலை, சென்னையிலே பேருந்து போக்குவரத்துக்கள் இல்லை. அதேபோன்று மாநிலத்தின் மற்றப் பகுதிகளிலே பேருந்துத் தொழிலாளர்களிடையே கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. இவைகளை எல்லாம் அமைதிப்படுத்த அரசு

என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கின்றது என்ற உறுதியினை யாராவது ஒரு அமைச்சர்—காரணம் இந்த அவையிலே முதல்வரும் இல்லை, அவை முன்னவரும் இல்லாத காரணத்தால், வேறு யாராவது ஒரு அமைச்சர் சொன்னால், அதன் மூலம் தற்போது ஏற்பட்டுள்ள கொந்தளிப்பை அடக்கவும், மீண்டும் கொந்தளிப்பு எழாமல் தடுக்கவும் பயன்படும் என்ற வகையில், உறுதிமொழியை யாராவது ஒரு அமைச்சர் தருவாரா? அதற்கேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறியதுபோல் சென்னையில் பஸ்கள் ஓடாமல் இல்லை. காலையில் சில மணி நேரம் சில பஸ்கள் ஓடாமல் இருந்தன. இப்போது எல்லாப் பணிமனைகளிலும் பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. மாநிலத்தின் மற்றப் பகுதிகளிலும் பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(மன்றத்தில் திரு. துரை முருகன், திரு. மு. அம்பிகாபதி, திரு. கு. ரமணி, திரு. துரை முத்துசாமி போன்ற உறுப்பினர்கள் எழுந்து பேச முற்படல்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இத்துடன் தயவுசெய்து விடுங்கள். நாளைக்கு அமைச்சர் அவர்கள் கொடுக்க இருக்கின்ற அறிக்கையின் மீது பேசலாம். எல்லோரும் தயவு செய்து உட்காருங்கள்.

**திரு. துரை முருகன்:** என்னுடையது வேறு பாயின்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியானால் நீங்கள் பேசுங்கள்.

(மீண்டும் திரு. கு. ரமணி, திரு. மு. அம்பிகாபதி எழுந்திருத்தல்.)

**திரு. கு. ரமணி:** நான் முதலிலேயே எழுந்து நின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் எழுந்து நின்றால், எல்லோரையும் என்னால் பார்க்க முடியாது. தயவுசெய்து அமருங்கள்.



**திரு. கு. ரமணி:** எனக்கு ஒரு கிளாரிபிகேஷன் வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறிக்கை வந்துவிட்ட பிறகு இந்தப் பிரச்னை குறித்துப் பேசலாம். இப்போது தயவுசெய்து உட்காருங்கள்.

**திரு. துரை முத்துசாமி:** தலைவர் அவர்களே, . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களை நான் பேச அனுமதிக்கவில்லை, தயவு செய்து உட்காருங்கள். நாளைதான் இந்தப் பிரச்னையைப் பற்றிப் பேச வேண்டும். அப்போது ஒழுங்குப் பிரச்னை எழுப்புங்கள்.

**திரு. ரா. உமாநாத்:** எனக்கு ஒரு கிளாரிபிகேஷன் வேண்டும். நாளைக்கு அமைச்சர் அவர்கள் அளிக்கக்கூடிய அறிக்கை, இந்த அட்ஜர்ன்மென்ட் மோஷனுக்கு ரெஸ்பாண்ட் பண்ணக்கூடியதாக இருக்குமா அல்லது காலிங் அடென்ஷனுக்கு ரெஸ்பாண்ட் பண்ணக்கூடியதாக இருக்குமா என்பது ஒன்று. இரண்டாவது, அப்படி வருகின்றபோது, அதன்பேரிலே அட்ஜர்ன்மென்ட் மோஷன் கொடுத்தவர்கள் பேசுவதற்கு, தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு நாளைக்கு அனுமதி மறுக்கப்படக் கூடாது, சட்டத்தைக் காட்டி. அப்படியிருந்தால் சொல்லுங்கள்.

**திரு. க. சுப்பு:** ஒன் அவர் டிஸ்கஷன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது வேறு விவகாரம்.

திரு. உமாநாத் அவர்களும் மற்றவர்களும் 42-வது விதியின்கீழ் ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொடுத்து அதை கவன ஈர்ப்புத் தீர்மானமாக மாற்றி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கு எடுக்க இயலாது என்று வருத்தத்தோடு தெரிவித்து பதில் அனுப்பியிருக்கிறேன். நாளை அளிக்கப்படுகிற அறிக்கையைப் பொறுத்தவரையில் நான் அறைக்குச் சென்று பரிசீலித்து எதன் அடிப்படையில் அதை எடுத்துக் கொள்வது என்பதுபற்றி பிறகு தெரிவிக்கிறேன்.

### 3. ஒழுங்குப் பிரச்சினைகள்.

### (அ) உடுக்குறி வினாக்களுக்கான விடைகள் அச்சிடப் பெற்று பேரவைமுன் வைக்கப் பெற்றுள்ளது குறித்து.

* **திரு. துரை முருகன்:** நான் 'மிசா' வைப் பற்றி ஒரு கேள்வி கேட்டிருந்தேன். என்னைப் போல் பல அங்கத்தினர்களும் கேட்டிருந்தார்கள். அவற்றுக்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு மாண்புமிகு முதலமைச்சருடையது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தக் கேள்விக்கு மட்டுமல்லாமல் அது போன்ற பல கேள்விகளுக்கு எழுத்து மூலமாகப் பதிலளித்திருக்கிறார்கள். இதனால் துணைக் கேள்விகள் கேட்கிற வாய்ப்பு இல்லாமல் போகிறது. முதலமைச்சர் அவர்கள் இதுவரை கேள்விகளுக்குப் பதில் சொல்லாமலே இருப்பது, எழுத்து மூலமாகத் தருவது, சபைக்கு வராமலே இருப்பது என்பதெல்லாம் சட்டப்படி ஒருவேளை சரியாக இருந்தாலும் கூட இந்த அவையின் 'கஸ்டம்ஸ் அண்டு கன்வென்சன்' படி சரியா? (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவு செய்து உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டும். இந்த அவையை நல்ல முறையில் நடத்திச் செல்வதில் உங்களுக்கும் பொறுப்பு உண்டு. திரு. துரை முருகன் சொன்ன பிரச்சினையில் முதலமைச்சர் வந்துதான் பதில் சொல்ல வேண்டும்; அவர் வரவில்லை, போகவில்லை என்று சொல்லுவதிலிருந்து நான் எந்தவித முடிவும் எடுக்க உரிமை கிடையாது. நீங்கள் எழுப்புகிற பிரச்சினை எந்த விதியின்கீழ் என்று சொன்னால் நான் பரிசீலிக்கத் தயார். உடுக்குறி இடப் படாத கேள்விகள் என்ற காரணத்தால் அவற்றுக்கான பதில்கள் அச்சடிக்கப் பெற்று மேஜை மேல் வைக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, கடந்த ஓராண்டுக் காலமாக நடைபெறுகிற இந்த ஆட்சியில் ஒரே ஒரு தடவை மூன்று அல்லது நான்கு கேள்விகளுக்குத்தான் இதுவரை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலளித்திருக்கிறார்கள். அவரிடம் இருக்கக்கூடிய இலாகாக்கள் ஏராளம். பல முக்கியமான இலாகாக்கள் போலீஸ் இலாகா, தொழிற் துறை இப்படிப்பட்ட பல முக்கியமான இலாகாக்களை வைத்துக் கொண்டிருக்கும் முதலமைச்சர் அவர்கள் வந்து பதிலளிக்கிற நேரத்தில் மூலக்



கேள்விகளுக்கு அளிக்கிற பதிலையொட்டி சில துணைக் கேள்விகளை உறுப்பினர்கள் கேட்க வாய்ப்பு இருக்கும். இப்போது அமைச்சர்கள் 'பரிசீலிப்போம்' என்றும், 'நல்ல யோசனை' என்றும், 'அதற்கான முனைப்பான நடவடிக்கை எடுப்போம்' என்றும் பதில் சொல்வது உறுப்பினர்களுக்கு ஆறுதலாக இருக்கிறது. அதைப் போல் முதலமைச்சரும் இங்கே வந்து எழுப்பப்படுகிற துணை வினாக்களுக்குப் பதிலளித்தால் ஆறுதலாக இருக்கும். எடுக்கப்படுகிற நடவடிக்கைகளை அறிவித்தால் நாட்டு மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். கடந்த ஓராண்டுக் காலத்தில் முதலமைச்சர் அவர்கள், பல இலாகாக்களை கையில் வைத்துக் கொண்டு நான்கு கேள்விகளுக்குத்தான் பதிலளித்திருக்கிறார்கள். கேள்வி நேரத்தில் அவைக்கு வருவது கூடக் கிடையாது. கட்டாயப்படுத்த முடியாது. விதி இல்லை என்று சொல்வீர்களானால் எங்களுடைய விதியை நாங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

(முற்பகல் 10-20)

* **மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, கேள்விகளில் உடுக்குறியிடப்பட்ட கேள்வியா, உடுக்குறியிடப் படாத கேள்வியா என்பதை ஏதோ அமைச்சரவையிலே நாங்கள் தீர்மானித்து அதற்கேற்ப பதில் தருகிறோம் என்ற கருத்து இங்கே காணப்பட்டு இருக்கிறது. ஆனால் அப்படிப்பட்ட உரிமை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத்தான் உண்டு. அவர்கள் கேள்விகளை எழுதியனுப்புகிறபோதே உடுக்குறியிட்டு எழுதி யிருந்தால் அதற்கு நாங்கள் சட்டமன்றத்திலே நேர்முறையாகவே பதில் சொல்ல வேண்டும்.

**திரு. மு. கருணாநிதி:** உடுக்குறியிடப்பட்டு கேள்விகளை அனுப்பினாலும் கூட அதை அலுவலகத்தில் உடுக்குறியிடாதவை யாக மாற்றிவிடுகிறார்கள். அப்படிப்பட்ட ஒரு முறையை இப்போது அனுசரித்து வருகிறார்கள்.

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அதற்கும்கூட மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அதுபற்றி தகவல் தரப்பட்டு அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கருதுகிறேன். ஏனென்றால் விதி 29 இல்

'A Member who desires an oral answer to his question shall distinguish it as a starred question by an asterisk and if he does not so distinguish it by an asterisk, the question shall if admitted, be printed in the list of questions as an unstarred question for written answer.'

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே அது அமைச்சரவையிலே எடுக்கப்படுகின்ற முடிவு அல்ல. மேஜையின்மீது பதில்கள் அச்சடிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோ அல்லது வேறு அமைச்சர்களோ பதில் சொல்ல முடியாததாலோ அல்லது சொல்லக் கூடாது என்பதாலோ என்று கருத வேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. சுப்புவும், திரு. துரை முருகனும் எழுந்தார்கள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரே நேரத்திலே திரு. சுப்புவும் எழுந்திருக்கிறார், திரு. துரை முருகனும் எழுந்திருக்கிறார், நான் யாரைக் கூப்பிடுகிறேனோ அவர்கள்தான் எழுந்திருக்க வேண்டும், எழுந்தவுடனே பேச வேண்டுமென்றால் பேசிக் கொண்டே இருங்கள், நான் என்ன செய்வது? எதிர்க் கட்சித் தலைவர் எழுப்பிய பிரச்சினை பற்றியே மீண்டும் எழுப்புவதற்கு வாய்ப்பு தர முடியாது. கடந்த சட்ட மன்றக் கூட்டத்தில் நான் ஏற்கெனவே எடுத்துச் சொன்னேன். நிறைய கேள்விகள் தேங்கிக் கிடக்கின்றன. அந்தக் கேள்விகளை உடுக்குறியிடாத கேள்விகளாக மாற்றி பதில்களை அச்சடித்து மேஜையின் மீது வைக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். அது மட்டுமல்ல, அலுவல் ஆய்வுக் குழுவிலே ஒரு உறுப்பினருடைய கேள்விகள் இரண்டுக்கும் மேற்படாமல் எடுத்துக் கொள்ளலாம், அதற்கு மேற்கொண்டு இருந்தால் அவற்றை உடுக்குறியிடாத கேள்விகளாக மாற்றி மேஜையின் மீது வைக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே அதை



மாற்றியது தவறு என்று குற்றஞ்சாட்ட முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பிரச்சினை அதோடு முடிகிறது. ஆனால் மற்றப் பிரச்சினைகளை எழுப்பினால், அவைகளை எழுப்புகிறபோது எந்த விதியின் கீழ் எந்த அமைச்சர் வரவில்லை என்று குறிப்பாகச் சொல்லி விதியைக் காட்டினால் நான் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கனவே நான் அவையிலே குறிப்பிட்டது 'கேள்விகள் விடப்படுமானால் அரசாங்கம் கொடுக்கிற பதில், அச்சிட்டுத் தரப்படவேண்டுமென்று அவர் சொன்னார், அதேபோன்று நான் அச்சிட்டுத் தரத் தயாராக இருக்கிறேன்' என்பதுதான். பேராசிரியர்தான் அதைச் சொல்லியிருக்கிறார். அவர் சொன்னதை நான் ஏற்றுக் கொண்டு அந்த அடிப்படையிலேதான் செய்யப்பட்டிருக்கிறது.

திரு. க. அன்பழகன்: நான் சொன்ன யோசனையே தங்களுக்கு உதவி செய்வதற்காகத்தான். இந்த அவையிலே எடுத்துக்கொள்ளப்படாமல் தொடர் கூட்டம் முடிகின்ற வரையில் நின்றுபோன கேள்விகளை அச்சடித்து அவையிலே வைப்பதன் மூலமாக அந்தக் கேள்விகளுக்குப் பதில்களைத் தாருங்கள் என்ற வகையிலேதான் சொல்லப்பட்டதே தவிர, முக்கியமான கேள்விகளுக்கு அமைச்சர்கள் அவைக்கு வராமல் இருந்து கொண்டு, நிதியமைச்சர் அவர்களோ முதலமைச்சர் அவர்களோ வராமல் இருந்து அந்தக் கேள்விகளுக்கான பதில்கள்—சட்டமன்றம் நடந்து 10, 12 நாட்களில் கூறப்படாமல் இருக்குமானால்—அப்படிப்பட்ட கேள்விகளை சபாநாயகர் உடுக்குறியிடாத கேள்விகளாக மாற்றி பதில்களை வைக்க வேண்டுமென்று சொல்லப்படவில்லை. அப்படிப்பட்ட முறையில் 'கேள்விகளுக்குப் பதில்களை அவையில் வைப்பது என்பது பொறுப்பான பதிலாகத் தெரியவில்லை. பேரவைத் தலைவர் அவர்கள் சொல்கிறபோது எந்த விதியின்படி, எந்தச் சட்டத்தின்படி வரவில்லையென்று சொல்ல வேண்டுமென்று சொல்வது எதற்கோ எதுவோ சாட்சி என்ற மாதிரிதான் அதுவே தவிர பிரச்சினைக்கு முடிவு காண்பது ஆகாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி :** தலைவரவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தயவு செய்து நீங்கள் அமருங்கள். நான் சொல்லிவிடுகிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி :** தலைவரவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தாங்கள் அமருங்கள். நான் உங்களை அனுமதிக்கவில்லை. என்னுடைய அனுமதியில்லாமல் பேசுவது தவறு.

**திரு. க. சுப்பு :** அவர் எந்த அடிப்படையில் பேசுகிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் ;** தாங்களும் உட்காருங்கள். இப்படி நீங்கள் எழுந்தால் அவரே மேல் என்று ஆகிவிடும்.

நான் பேராசிரியர் சொன்னதற்குச் சொல்லிவிடுகிறேன். இப்பொழுது உடுக்குறியிடாத வைத்த கேள்விகள் உங்கள் அனுமதியோடுதான், அவையின் அனுமதியோடுதான் செய்யப் பட்டிருக்கிறது. நீங்கள் சொல்கிற மீதி, அறிவுரைகளை, இந்த அவைக்குச் சொன்ன அறிவுரைகளை நான் பரிசீலிக்கிறேன். ஆனால் இதுவரையில் செய்தது அவையின் அனுமதியோடு செய்ததே தவிர நான் தனியாகச் செய்யவில்லை.

**திரு. ஒ. சுப்பிரமணியன் :** நான் எழுப்பிய பாயிண்ட் ஆப் ஆர்டரைச் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒன்றரை மணி வரையில் பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பிக் கொண்டிருந்தாலும் எனக்கு ஆட்சேபணை இல்லை.

**திரு. ஒ. சுப்பிரமணியன் :** நான் ஆரம்பத்திலேயிருந்து கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்கள் கட்சியில் எல்லா வர்கள் தங்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். சரி சொல்லுங்கள்.





**(ஆ) உறுப்பினர் திரு. மு. ஆறுமுகம் எதிர்க் கட்சித் தலைவர்கள் வரிசையில் அமர்ந்திருப்பது குறித்து.**

**திரு. ஒ. சுப்பிரமணியன் :** பேரவைத் தலைவரவர்களே, நேற்றும் இன்றும் எதிர்க்கட்சித் தலைவர்கள் வரிசையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சேலம் ஆறுமுகம் அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் அனுமதியைப் பெற்று அங்கே இருக்கிறார்களா அல்லது வேறு ஏதாவது புரமோஷன் பெற்றிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. செ. சதாசிவம் :** தலைவரவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்களும் சொல்லிவிடுங்கள். நான் சேர்த்துப் பதில் சொல்கிறேன். உங்களுடைய பாயிண்ட் ஆப் ஆர்டரும் அதுதானே.

**திரு. செ. சதாசிவம் :** ஆமாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அச்சிடப்பட்டு உங்கள் கையிலே தரப்பட்டிருப்பதை தயவு செய்து பாருங்கள். அதிலே போட்டிருக்கிறது, அவர் காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவராக அந்தக் கட்சியின் தலைவரும், அவரும் எனக்கு எழுதி அனுப்பியதையொட்டி அதுபற்றிய தகவலை ஒவ்வொருவருக்கும் அனுப்பியிருக்கிறேன். அதேபோல் நடந்த நிகழ்ச்சிகள் அத்தனையும், அமைச்சுச் செயலாளர்கள் நியமிக்கப் பட்டிருப்பது பற்றிக்கூட அச்சிட்டு மேசை மீது வைக்கப் பட்டிருக்கிறது. ஆகவே, இதில் ஒழுங்குப் பிரச்னை எழுவதற்கு நியாயம் இல்லை.

**திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் :** பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இருநூற்றுமுப்பத்தைந்து பேர்களும் இப்படிக் கேட்கலாம், நான் வேண்டாமென்று சொல்லவில்லை. நான் உங்களுடைய கட்சிக்கு ஒதுக்கப் பட்டிருக்கின்ற நேரத்தைக் கண்டிப்பாகக் கடைப்பிடிப்பேன்.

[1978 செப்டம்பர் 1

திரு. செஞ்சி. ந. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் எந்த விதியின் கீழ் ஒழுங்குப் பிரச்னையைக் கொண்டு வருகிறீர்கள்? நீங்கள் உட்காருங்கள்.

திரு. செஞ்சி. ந. இராமச்சந்திரன் : ஒழுங்குப் பிரச்னை என்று . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் ஒழுங்குப் பிரச்னை எழாது. எழுத்து மூலம் அதற்கான விதியின்கீழ் கொடுக்க வேண்டும்.

## 4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) 1978 ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவரவர்களே, 1978 ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். 92 (1) விதியின் கீழ் . . . . I oppose the introduction of the Bill.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : You are opposing, that is all. நீங்கள் பேச முடியாது.

திரு. க. சுப்பு : பேசலாம், விதியைப் படிக்கிறேன். நானே வாசித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதியை நான் பார்த்து விடுகிறேன், உங்கள் வாசகத்தை நம்பி ரொம்ப நாள் ஆகிறது.

* * * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1978 செப்டம்பர் 1]

திரு. க. சுப்பு : I shall read rule 92 (1). 'If a motion for leave to introduce a Bill is opposed, the Speaker, after permitting, if he thinks fit, a brief statement from the member who moves and from a member who opposes the motion, may without further debate, put the question thereon.
அமைச்சர் ஷார்ட்டாகச் சொல்லட்டும்.

(முற்பகல் 10-30)

அதற்கடுத்தாற்போல் நான் சொல்ல வேண்டும். டிபேட் வேண்டியதில்லை. No debate but statement can be made.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொல்கிறேன், அதிலேயே போட்டிருக்கிறது. இருந்தாலும் திரு. சுப்பு, தங்களுடைய சாமார்த்தியத்தைக் காட்டி, 2 நிமிடத்திலே முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : நான் சொல்வதற்கு முன்பு அமைச்சர் ஸ்டேட்மெண்ட் கொடுக்க வேண்டும். அவர் கொடுக்கட்டும், பிறகு நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவரை ஸ்டேட்மென்ட் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்துகிற உரிமை எனக்குக் கிடையாது. தயவு செய்து திரு. சுப்பு, புதிய ஒரு மரபை அமைச்சர் சொல்வதாக இருந்தால் சொல்லட்டும், நான் வற்புறுத்த முடியாது.

திரு. க. சுப்பு : பில்லைக் கொண்டு வரும்போது, அமைச்சர் தயாராக வராமல் இருக்கமாட்டார். அவர் ப்ரீஃபாகச் சொல்லி விட்டால், நான் உடனே, என்னுடைய கருத்தைச் சொல்லி விடுகிறேன்.

THE HON'BLE THIRU S. RAMACHANDRAN : It is left to the Hon'ble Minister to make a statement or not. If the Member has any relevant point he may put forth.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் ஒரு ப்ரீஃப் ஸ்டேட்மெண்ட விடவேண்டுமென்று நான் கட்டாயப்படுத்த முடியாது. ப்ரீஃப ஸ்டேட்மெண்ட் விடுவதும், விடாததும் அவரைப் பொறுத்தது.

திரு. க. சுப்பு : கட்டாயப்படுத்த முடியாது, நீங்கள் கேட்கலாம் அல்லவா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் இதுவரையிலும் நடப்பவைகளைக் கேட்டுக் கொண்டு தானே இருக்கிறார்.

திரு. க. சுப்பு : அவர் பேச வேண்டிய நேரத்தையும் எனக்கும் கொடுத்தால் ரொம்ப நல்லது.

பேரவைத் தலைவரவர்களே, இந்த பில்லை நான் அப்போஸ் செய்யக் காரணம், சென்னை மாநகராட்சி நிர்வாகம் பற்றி ஆராய, திரு. சட்டநாதன் தலைமையில் ஒரு குழு போடப்பட்டது. அந்த சட்டநாதன் குழு கொடுத்த அறிக்கையை அடிப்படையாக வைத்து, சில முடிவுகள் எடுக்கப்பட்டதாகவும், அந்த முடிவுகளுக்குச் சட்ட வடிவம் கொடுக்க—அப்பொழுது சட்ட மன்றம் இல்லையென்பதால்—அவசரச் சட்டம் போடப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அவசரச் சட்டத்தை மாற்ற இப்பொழுது இந்த 'பில்' கொண்டு வரப்பட்டிருக்கிறது. இப்பொழுது சென்னை மாநகராட்சிக்குத் தேர்தல் வரவில்லை. அதோடு, சட்டநாதன் குழு அறிக்கை அடிப்படையில் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது. அந்தக் கமிட்டியின் அறிக்கை எங்களுக்குக் கொடுக்கப்படவில்லை. நான் நூலகத்திலே சென்று பார்த்தேன், நூலகத்திற்கும் கொடுக்கப்படவில்லை. இது எந்த அடிப்படையிலே கொண்டு வரப்படுகிறது என்று அமைச்சருக்கே தெரியாது, நான் எப்படிச் சொல்ல முடியும் ? அந்த அறிக்கையிலே என்ன அடிப்படையிலே சொல்லப்பட்டிருக்கிறது, எந்த அடிப்படையிலே இந்த மசோதா கொண்டு வரப்படுகிறது என்பதையெல்லாம் தெரிந்து கொள்ளாத நிலையில் நாமெல்லாம் இருட்டறையிலே இருப்பது போல் இருக்கிறது. அவசரச் சட்டம் வருவதற்கு முன்னாலேயே இந்த சட்டநாதன் கமிட்டி அறிக்கை வந்திருக்கிறது. வந்தவுடனே நூலகத்திலே வைத்திருக்கிறார்களா ? It is taken for granted.





பிரச்னைகளை அணுகுகிற மாதிரி, எப்படியாவது அவசரச் சட்டம் கொண்டு வருவது; தெரிந்தோ, தெரியாமலோ கொண்டு வருவது ; பிறகு அதனை மாற்ற இங்கே மசோதா கொண்டு வருவது ; எப்படியாவது அது நிறைவேறும் என்ற நிலை இருக்குமானால், அது அவசரச் சட்டத்தைப் போடுவதற்குக் கொடுத்துள்ள அதிகாரத்தை, இந்தச் சட்ட மன்றத்திற்குள்ள அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதாகும். ஆகவே, இந்த 'பில்'லை அறிமுகம் செய்வதை நான் எதிர்க்கிறேன்.

அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

### (ஆ) 1978 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

### 5 ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி)

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவரவர்களே, காலங்கடந்து கொடுக்கப்பட்டிருக்கிற இந்த ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்வந்திருக்கிறேன். ஆளுநர் உரை காலங்கடந்து கொடுக்கப்பட்டது என்பது மட்டுமல்ல, அரசு தன்னுடைய கொள்கைகளை வரையறுத்துக் கொடுப்பதற்கு இவ்வளவு காலம் எடுத்திருப்பது ஏன் என்பது நமக்குப் புரியவில்லை. கொள்கை இருந்தால்தானே? கொள்கை இருந்தால் சொல்வார்கள், கொள்கை இல்லாதவர்களை வற்புறுத்தினால் கொள்கை வருமா என்று வெளியிலே கேட்கிறார்கள். காலங்கடந்து வந்திருக்கிற இந்த ஆளுநர் உரையிலே ஏதாவது கொள்கை இருக்கிறதா என்று நான் பார்த்தேன். ஒன்றுமில்லை ஆகவே, ஓராண்டு சாதனைகளைப் பற்றி வெளியிட்டுள்ள புத்தகத்தில் ஏதாவது பார்க்கலாமா என்று அதையும் கொண்டு வந்திருக்கிறேன். கொள்கை அடிப்படையிலே அதில் என்ன சொல்லியிருக்கிறது என்று பார்த்தால், ஏமாற்றத்தைக் கொடுப்பதாகத்தானிருக்கிறது.

உணவு உற்பத்தியைப் பொறுத்த அளவில் மாநில அரசு மிகப் பெரிய அளவில் சாதனை செய்திருக்கிறது என்று போட்டிருக்கிறார்கள். இது சாதனையா, அல்லது குருட்டு வாய்ப்பா? அதிர்ஷ்டத்தைக் குருட்டு வாய்ப்பு என்றும் சொல்வார்கள். இதை நாட்டு மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.

இன்றைக்குக் கேரளாவைப் பற்றி ஒரு செய்தி வந்திருக்கிறது. நெல்லுக்குக் கொள்முதல் விலை கூட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு குவிண்டாலுக்கு 100 ரூபாய்க்கும் குறைவாகக் கொடுக்கப்பட்டிருந்ததை இப்போது 125 ரூபாயாக உடனடியாக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். இங்கே நம் மாநிலத்தில் 95 ரூபாய்தான். ஆனால் கேரளாவில் கொடுக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். உற்பத்தி விலைக்கும் குறைவாகப் பெறுகிறார்கள் என்பதால் அவர்களுக்குக் கொள்முதல் விலையைக் கூட்டிக்



கொடுத்திருக்கிறார் கேரள முதல்வர் அந்தோணி அவர்கள். அங்கேயும் விலை குறைந்திருக்கிறது. இங்கே ஏன் குறைந்திருக்கிறது என்று கேட்டால் நமது முதலமைச்சர்தான் என்று சொல்வார்கள். ஆனால் கேரளாவில் விலை குறைந்திருக்கிறதே அதற்கும் நமது முதலமைச்சர்தானா? சர்க்கரை விலையும் வீழ்ச்சி அடைந்திருக்கிறது, கடலை எண்ணெய் விலையும் வீழ்ந்து விட்டது. இதற்குக் காரணம் சர்க்கரையும், கடலை எண்ணெயும் வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி ஆகின்றன. அவைகள் எல்லாம் மத்திய அரசின் தவறான கொள்கை என்று விமர்சித்துக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசு கோதுமைக்கு 26 ரூபாய் கொடுக்கிறார்கள். ஆனால் அரிசிக்குக் கொடுக்கப்படவில்லை. அதைப் பற்றி மாநில முதல் அமைச்சர் மத்திய அரசை வலியுறுத்த வேண்டாமா? கேட்டால் வலியுறுத்திக் கொண்டு இருக்கிறோம் என்று சொல்வார்கள். பிறகு தீர்மானம் போடுகிறோம் என்று சொல்வார்கள். எதற்கு? மத்திய அரசு இல்லை என்று சொன்னதை ஆதரித்து: இதுதான் அரசாங்கத்தின் கொள்கையா? அதுமாத்திரம் அல்ல. உதைத்த காலுக்கு முத்தமிட்டவர்கள் ஒரு காலத்திலே, இப்போது உதைக்கின்ற காலைத் தொட்டு அழைக்கின்றீர்கள்! அதை நாங்கள் கேட்டால் அது தவறாக இருக்க முடியாது. மத்திய அரசு குவிண்டால் ஒன்றுக்கு 26 ரூபாய் கோதுமைக்குக் கொடுக்கிறது. ஆனால் அரிசிக்குக் கொடுக்க மறுக்கிறது என்று சொன்னால், அதை உறுதியாக மறுக்கின்ற தெம்பு இந்த அரசுக்கு இருந்திருக்க வேண்டும். அதுதான் இல்லை என்று முடிவாகிவிட்டது. அந்தோணிக்கு தெம்பு வரலாம். தென் மாநிலங்களின் முதல்வர்கள் மாநாட்டைக் கூட்டுகின்ற முதல் அமைச்சர் இதைக் கேட்க வேண்டாமா?

அடுத்து, இந்த நியாய விலைக் கடைகளைப் பற்றி நிறைய ஏமாற்று வேலை இருக்கிறது. போனார் 16.000 நியாய விலைக் கடைகளைத் திறக்கப் போவதாகச் சொன்னார்கள். இப்போது இருக்கிற 4.000 கடைகளில் 400 கடைகள் பல்பொருள் விற்கும் கடைகளாக ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் கணக்குத் தெரியாமல் போட்டிருக்கிறார்களா. இல்லையா என்பதைப் பார்த்துத்தான் சொல்ல வேண்டும். நேரம் இல்லாத காரணத்தால் இத்துடன் விடுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மிகத் தெளிவாகச் சொன்னால் பரிசீலிப்பதற்கு உதவியாக இருக்கும். ஆகவே வேகமாக, சகட்டுமேனிபோல் சொல்லிவிட்டுப் போவது அவ்வளவு உகந்ததாக இல்லை என்று நான் கருதுகிறேன். தயவுசெய்து குறிப்பிட்ட விவரங்களைச் சொல்லுமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : நேரம் இல்லை, பேரவைத் தலைவர் நல்லவர், கொஞ்சம் நேரம் கொடுப்பார் என்று கருதுகிறேன். "தமிழ்நாட்டில் அப்போது ஏறக்குறைய 9,300 நியாய விலைக் கடைகள் இருந்தன என்றும், அந்த வசதியை மேலும் விரிவாக்கி தமிழ் நாட்டின் 16,000 ரெவின்யூ கிராமங்கள் ஒவ்வொன்றிலும் நியாய விலைக் கடைகள் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனவும் அறிவித்திருந்தேன். 9,000-க்கும் மேற்பட்ட நியாய விலைக் கடைகளில் இதுவரை 4,000-க்கும் மேற்பட்ட கடைகள் பல பொருட்களையும் விற்கும் கடைகளாக இத்திட்டத்தின் அடிப்படையில் மாற்றப்பட்டுள்ளன" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழக அரசால் திறக்கப்பட்ட கடைகள், அவைகளில் பல பொருள்களை வைத்து விற்கிறோம் என்று சொல்கிறீர்கள். ஆனால் நீங்கள் சொன்னது 16,000 நியாய விலைக் கடைகளைத் திறக்கப் போகிறோம் என்று. கடைகளைத்தான் திறக்கவில்லை, வாயையாவது திறக்கக் கூடாதா? இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டும் என்று சொல்கிறேன்.

அடுத்து, கிராமக் கைத்தொழில், "கதர்-கிராமத் தொழில் வாரியத்தை இரண்டாக விரிவாக்கி, கதர் உற்பத்தியைக் கவனிப்பதற்கு ஒரு அமைப்பும் கிராமத் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கு மற்றொரு அமைப்பும் உருவாக்க தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. மத்திய கதர்-கிராம ஆணைக் குழுவின் அனுமதி பெற்று இந்தப் புதிய அமைப்புகளைச் செயல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன" என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் ஞால் இண்டஸ்டிரிக்கு ஒரு அமைச்சரையும் கதருக்கு ஒரு அமைச்சரையும் போட்டிருக்கிறீர்கள். ஆனால் அனுமதி பெறவில்லை. இப்படி





இருக்கும்போது இந்த இரண்டு பேர்களும் எப்படித் தலைமை தாங்குவார்கள். தெரியவில்லை. நீங்கள் அனுமதியை எதிர்பார்த்து செய்திருக்கிறீர்கள் என்று சொல்லுகிறீர்கள். இப்படி சபையை 'மிஸ்லீட்' செய்யக் கூடாது.

(முற்பகல் 10-40)

வேலை இல்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க முழு மூச்சாக நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொன்னார்கள். என்ன என்று பார்த்தால் பட்டுப் பூச்சி வளர்க்கிறோம் என்று சொல்கிறார்கள். அதிலே 20,000 பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுமாம். அதிலே என்ன வேலை பார்க்கப் போகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

அப்புறம். கிராமங்களில் சர்க்கா நூற்கப் போகிறோம் என்று சொல்கிறார்கள். யார் இதையெல்லாம் செய்யப் போகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இந்த அரசு அன்-எம்பிளாய்மென்ட் என்றால் என்ன என்று புரிந்து கொண்டிருக்கிறதா, அப்படி இருந்தால், அது என்ன என்பதைத் தெளிவுபடுத்தியாக வேண்டும். வேலை இல்லாத் திண்டாட்டம் இந்த அளவிற்கு இருக்கிறது, இத்தனை பேர் வேலை தேடித் தரும் நிறுவனத்தில் பதிவு செய்து கொண்டுள்ளனர், அவர்கள் எந்தெந்தத் துறையில் பயிற்சி பெற்று இருக்கின்றனர், அவர்களுக்கு எந்த முறையில் அரசு வேலை அளிக்க இருக்கிறது என்பதைத் தெளிவாகச் சொல்லி இருக்க வேண்டும். அப்படி ஒரு திட்டமும் கிடையாது. பட்டுப் பூச்சி வளர்க்கிறோம், பட்டு நூல் நூற்கிறோம் என்று சொன்னால் அது சரியான முறையில் அந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண வழி வகுக்காது. பால் கறக்க ஆட்கள் எடுக்கிறோம் என்றால், எத்தனை பேர் அதிலே வருவார்கள். கிராமங்களில் சர்க்கா நூற்கிறோம் என்று சொன்னால் அதற்கு மகாத்மா காந்தி ஒருவர் போதுமே, அதை மறுபடியும் நீங்கள் கஷ்டப்பட்டு கண்டுபிடித்துக் கொடுக்க வேண்டியது இல்லை. நீங்கள் சொல்லி இருப்பது 'மிஸ் லீடிங்' காக இருக்கிறது. அன்-எம்பிளாய்மென்ட் மேக்னிடியூடை அரசு புரிந்து கொண்டு இருக்கிறதா? நான் தனிப்பட்ட யாரையும் கேட்கவில்லை. அரசாங்கத்தைத்தான் கேட்கிறேன். இந்த

அரசாங்கம் அதைப் புரிந்து கொண்டு இருக்கிறதா? அதெல்லாம் ஒன்றும் கிடையாது. 1 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புத் தரப் போகிறோம் என்று மட்டும் சொன்னால் அது சரியல்ல என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின் உற்பத்தி ஆயத் தீர்வை மத்திய அரசு விதித்து இருக்கிறது. இதனை மத்திய அரசுக்குச் செலுத்தும் வகையில், சிறப்புக் கட்டணம் ஒன்றை விதிக்கச் சட்டம் கொண்டு வரப் போகிறோம் என்று சொல்லி இருக்கிறீர்கள். நாங்கள் எதிர்த்தோம், அப்படி இருந்தும் மத்திய அரசு அதனைப் போட்டு விட்டது என்று சொல்லியிருக்கிறீர்கள். நீங்கள் எதிர்த்தும் அவர்கள் ஏன் கொண்டு வந்தார்கள். அவர்களுக்குத் தெரியும், நாம் விதித்து விட்டால் பிறகு யாரும் எதிர்க்க மாட்டார்கள் என்று. நீங்கள் உண்மையிலேயே எதிர்க்கும் எண்ணம் கொண்டவர்களாக இருந்தால் பில் கொண்டு வருவீர்களா? மத்திய அரசு போட்டு விட்டது என்று தெரிந்த உடனே இந்தச் சர்க்கார் அனௌன்ஸ் செய்கிறது, நாங்கள் பிரதம அமைச்சரை, மத்திய அரசை இந்த வகையில் ஆதரிக்கிறோம், என்று. இங்கே வந்த இந்திரா காந்தி அவர்கள் கூடக் கேட்டார்கள், மத்திய அரசின் தவறான திட்டங்களைக் கண்டிக்கும் தைரியம் தமிழ் நாடு அரசுக்கு இருக்கிறதா என்று. அவர்கள் தைரியமாகப் பேசினார்கள். நீங்கள் உங்கள் தைரியத்தை நிரூபித்து விட்டீர்கள். கொள்முதல் விலை என்ன? அதற்கு நாமம். இப்படி ஒவ்வொன்றுக்கும் நாமம். இப்போது ஆயத் தீர்வை, அவர்கள் சொல்வதற்கு முன்னாலேயே இங்கே சட்டம் கொண்டு வருகிறீர்கள், நீங்கள் தனியாக ஒரு சர்க்கார் நடத்த வேண்டுமா? நீங்கள் தாராளமாகச் சொல்லிவிடலாமே, நாங்கள் சட்டம் போடவில்லை, நேரடியாக விவசாயிகளிடம் இருந்து வரியை வசூலித்துக் கொள்கிறோம் என்று.

உங்களுக்கு விவசாயிகளைப் பற்றி என்ன தெரியும்? பெரிய விவசாயி, சின்ன விவசாயி என்று வித்தியாசம் தெரியாது. மார்க்சிச கம்யூனிஸ்ட் கட்சியோடு நேற்று விவாதம். அவர்கள் நாராயணசாமி கட்சியோடு சேரவில்லை என்று சொன்னார்கள். ஆனால், தண்பூர் வேலுசாமி அவர்கள் மிக ஆணித்தரமாகச் சொன்னார், ஒட்டப்பிடாரம் பகுதியில் நாராயணசாமியோடு சேர்ந்து மார்க்சிச கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் கூட்டம் போட்டார்கள் என்று. திரு. சங்கரய்யா பெரிய மனிதர். அவர் இல்லை என்று சொல்கிறார். உண்மையும் சில நேரங்களில் ஊமை ஆகிவிடுமாம். எல்லா நேரங்களில் அந்த நிலை எடுத்தால் தப்பிக்க முடியாது. இங்கே விவசாயிகளுக்கு ஒரு பாதுகாப்பு உண்டா? ரோடில் கட்டை மாட்டு வண்டியை நிறுத்தி வைத்து இருந்தால் அந்த வண்டியையும் மாட்டையும் எடுத்து ஏலம் போடுகிறார்களாம், அதற்கு ஒரு மந்திரி தேவையா?





பார்லிமென்டரி செக்ரடரி என்று போட்டு இருக்கிறீர்கள். அவர்களுக்கு என்ன பெயர் கொடுப்பது என்று கூடத் தெரியவில்லை. வேலை என்ன என்றும் தெரியவில்லை. வேலையும் இல்லை, பெயரும் இல்லை. பின் ஏன் அவர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டும்?

என்.ஜி.ஓ.-க்கள் கேட்டால் இல்லை என்கிறீர்கள். அக்டோபர் 26 ஆம் தேதி என்.ஜி.ஓ. சங்கத் தேர்தல் வரப் போகிறது. அதுவரை பே கமிஷன் ரிப்போர்ட் அறிவிப்பது தள்ளி வைக்க வேண்டுமா? பல ஆயிரக்கணக்கான பக்கங்கள் அந்த அறிக்கை இருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். பக்கம் இருந்து விட்டுப் போகட்டும், அவை அத்தனையையுமா படித்துப் பார்க்கப் போகிறீர்கள்?

இஸ்மாயில் கமிஷன் ரிப்போர்ட் என்ன படித்தா பார்த்தீர்கள்? படித்துப் பார்த்து இருந்தால் நடவடிக்கை எடுத்து இருக்க மாட்டீர்களா? அதைப்போல், அவர்கள் கொடுத்த ரெகமென்டேஷன் அதை மட்டும் பார்த்து விட்டு, இவ்வளவு தான் கொடுக்க முடியும் என்று சொல்ல வேண்டியதுதானே, ஸ்ட்ரெய்ட்டாக அடியுங்கள், பே கமிஷன் ரிப்போர்ட் இவ்வளவு தான் என்று. அதன் விவரத்திற்குள் ஏன் போகிறீர்கள். நிச்சயமாக அதை முழுவதையும் நீங்கள் படித்துப் பார்க்கப் போவது இல்லை. அக்டோபர் 26 ஆம் தேதி நடக்க இருக்கும் தேர்தலில் உங்களுக்கு வேண்டியவர் தலைவராக வரவேண்டும் என்பதற்காகப் பொறுத்து இருக்க வேண்டுமா? அது அவசியமா என்று கேட்க விரும்புகிறேன்.

அதுமாதிரி, கல்வி மந்திரி என்று ஒருவர் இருக்கிறார். 400 உயர்நிலைப் பள்ளிகள் இரண்டு ஆண்டு மேற்படிப்புக்கான மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றப்படும் என்று அரசு அறிவித்து இருந்தது. இப்போது 916 என்று அதை உயர்த்தி இருக்கிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். ஹையர் செகண்டரி பள்ளியாக உயர்த்தி விட்டால் போதுமா? இன்னும் லேபரேட்டரி சயின்ஸுக்கு ஆட்கள் போடவில்லை. கெமிகல் லேபரேட்டரி ஏற்படுத்த முடிவு எடுக்கவில்லை. ஜூனியர் காலேஜ் என்று பெயர் போட்டு விட்டால் மட்டும் போதுமா? கேட்ட ஊருக்கு எல்லாம் கொடுத்து இருக்கிறீர்கள். என்ன பிரயோசனம்? அதே மாதிரி டெமான்ஸ்டிரேட்டர்ஸ், டியூட்டர்ஸ் புகார் செய்து கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** எனது அருமைத் தலைவரவர்களே, அருமை நண்பர் சுப்பு அவர்கள் வெங்கடாசலபுரம் பகுதியில் ஒரு மேல் நிலைப் பள்ளி தேவை என்று கேட்டு, அந்தப் பள்ளியின் ஆரம்ப விழாவிற்கு என்னோடு அவர் வந்து கலந்து பேசி, அந்த வாய்ப்பினை உருவாக்கித் தந்தமைக்கு எனக்குப் பாராட்டுத் தெரிவித்ததை இப்போது எண்ணி மகிழ்கிற வாய்ப்பை அவர் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து நான் கேட்டுக் கொள்கிறேன், குறுக்கீடுகளை வைத்துக் கொண்டு எனக்கு நேரம் அதிகம் ஒதுக்கவேண்டும் என்று ஜாடையாக என்னிடம் கேட்கிறீர்கள். ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது பேசுகிற போதே சொன்னேன், பொது விவாதத்திற்கு நேரம் இல்லை, சுருக்கமாக முடியுங்கள் என்று. அந்த நேரத்திலும் அதிக நேரம் எடுத்துக்கொண்டு விட்டீர்கள். இப்படி நீங்கள் செய்து கொண்டே போனால், நான் விவாதத்திற்கு ஒதுக்கியுள்ள நேரத்தைக் கடைப்பிடிக்க வேண்டிவரும். ஆகவே, நான் கேட்டுக் கொள்கிறேன். தாங்கள் என்னுடைய இக்கட்டான நிலையைக் கருதி, உங்களுக்கு ஒதுக்கியுள்ள நேரமான 15 நிமிடத்தில் முடித்துக் கொள்ள வேண்டும்.





**திரு. க. சுப்பு:** தலைவரவர்களே, இசைவு கொடுக்கிறீர்களா? வேண்டியிருக்கிறது; நேரம் இல்லை என்று சொல்கிறீர்கள். லஞ்ச ஊழலை ஒழித்து விடுவோம் என்று தீர்மானித்திருக்கிறது இந்த அரசு. எண்ணம் நல்லதுதான். ஆனால், நாட்டிலே இன்றைக்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது? லஞ்ச ஊழலை ஒழிக்க வேண்டுமென்ற முறையிலே நாங்கள் ஒரு சட்டத்தைப் போட்டிருந்தோம். 'பப்ளிக் மென் மிஸ்காண்டக்ட் பில்' இங்கே நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டத்தை அவசரம் அவசரமாக நீங்கள் ஒழித்துவிட்டீர்கள். 'அட்ஹொன்ஸ்', 'இம்பிடியா' என்று சொல்லி அதற்குப் பதிலாக நீங்கள் ஒரு சட்டத்தைக் கொணர்ந்தீர்கள். 'அட்ஹொன்ஸ்', 'இம்பிடியட்' என்பதற்கு என்ன வந்துவிட்டது? என்ன கொள்ளை போய்விட்டது? அவசரம் அவசரமாகப் பழைய சட்டத்தை ஒழித்துவிட்டு புதிய சட்டம் வரும் என்று சொன்னார்கள். இன்னும் வரவில்லை. [illegible]. தோழர்கள் எல்லாம் பழைய சட்டம் ரொம்ப மோசமானது என்று சொன்னார்கள். ஆனால், இன்றைக்குக் கேரளாவிலே அதைவிட மோசமான ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. எங்கள் சட்டத்திலே யார் வேண்டுமானாலும் புகார் கொடுக்கலாம். அதற்குக் காசு கிடையாது. தபாலிலே கொடுத்தால் போதும். ஆனால், இன்றைக்கு அவர்கள் கொண்டு வந்திருக்கிற சட்டத்தின்படி எதாவது புகார் கொடுக்க வேண்டுமென்றால் கொடுக்கிறவர் 1,000 ரூபாய் கட்ட வேண்டும். புகார் கொடுக்கிறவர் 1,000 ரூபாய் கட்ட வேண்டுமென்றால் இப்போது நீங்கள் எல்லோரும் 1,000 ரூபாய் கட்ட வேண்டும். கட்டினால்தானே புகார் கொடுக்க முடியும். கேரள பில்லிலே ரொம்ப மோசமான அம்சங்கள் எல்லாம் இருக்கின்றன.

## 3. ஒழுங்குப் பிரச்சினைகள்

### (இ) பிறிதொரு மாநில சட்டத்தைப் பற்றி உறுப்பினர்கள் பேசுவது குறித்து

**திரு. கடந்தரு ச. சண்முகம்:** தலைவரவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்சினை. உறுப்பினர் அவர்கள் கேரள சட்டத்தைப்பற்றி இங்கே சொல்கிறார்கள். இன்னொரு மாநில சட்டத்தைப்பற்றி இங்கே பேசுவது சரியா? அதை ....

**திரு. க. சுப்பு :** சார், ஐ ஆம் நாட் ஈல்டிங்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சண்முகம், நீங்கள் உட்காருங்கள். திரு. சுப்பு 'நாட் ஈல்டிங்' என்று சொல்கிறார்.

**திரு. க. சுப்பு :** கேரளா சட்டத்தை இங்கே என்ன, எங்கே வேண்டுமானாலும், யார் வேண்டுமானாலும் விமரிசனம் செய்யலாம். சட்டம் என்று வந்த பின்னால் அதில் என்ன இருக்கிறது என்பதை யார் வேண்டுமானாலும் விமரிசிக்கலாம். இங்கே விவாதிக்கலாமா என்று கேட்கிறார்கள். விவாதிக்கக் கூடாத சட்டம் அப்படி என்ன இருக்கிறது? அது ஒரு சுண்டைக்காய் சட்டம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சுத்தகுட சண்முகம் அவர்களின் ஒழுங்குப் பிரச்சனையை நான் உணருகிறேன். கூடுமான வரையில் உறுப்பினர்கள் மற்ற மாநிலங்களைப்பற்றி குற்றம் கூறி இங்கே பேசாமல் இருப்பது நல்லது. பேசக் கூடாது என்று நான் சொல்லவில்லை; குற்றம் கூறிப் பேசாமல் இருப்பது நல்லது என்று சொல்கிறேன்.

**திரு. மு. கருணாநிதி :** தலைவரவர்களே, உச்சவரம்புச் சட்டம் கொண்டுவரப்பட்டு கழக ஆட்சியில் விவாதிக்கப்பட்டபோது, இங்கே பேசிய கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் கேரள உச்சவரம்புச் சட்டத்தைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள். அதனால் இன்னொரு மாநில சட்டத்தைப்பற்றி இங்கே பேசுவது தவறு அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் தவறு என்று சொல்லவில்லை. குறைகூறிப் பேசுவதை கூடியவரை தவிர்க்கலாம் என்று சொல்கிறேன்.



அடுத்து, மொரார்ஜி தேசாய்மீது 36 குற்றச்சாட்டுகள் பார்லிமென்டில் கொண்டுவரப்பட்டன. விவாதிக்கப்பட்டபோது இங்கே லஞ்ச ஊழலை ஒழிப்போம், சட்டம் கொண்டுவருவோம் என்றவர்கள் பார்லிமென்டில் மொரார்ஜி தேசாய்க்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை எதிர்த்தார்கள். அப்படியானால் மொரார்ஜி தேசாய்க்கு ஒரு தண்டனை, இங்கே இருக்கிறவர்களுக்கு ஒரு தண்டனையா? அதற்கு என்ன அர்த்தம்?

ஊழலைப்பற்றி அதிகம் பேசுகிறார்கள். அந்த ஊழலில் தலையிடுவது என்பது ஒருவருக்கு மட்டும் சொந்தமானதல்ல. யார் குற்றம் செய்தாலும் கேட்க வேண்டியதுதான். முதலமைச்சர் செய்தாலும் சரி, பிரதம அமைச்சர் செய்தாலும் சரி, குற்றம் செய்தவர் யாராக இருந்தாலும் குற்றம், குற்றம்தான். அதிலே சந்தேகம் இல்லை. இங்கே நடைபெறுகின்ற ஊழலுக்கு ஒன்றிரண்டு உதாரணங்களை மட்டும் சொல்கிறேன்.

ஆக அவையில் இருப்பவர்கள் 3 வருஷத்திற்கு ஒருமுறை மாற்றப்படுவதாகச் சொல்கிறார்கள். அப்படி மாற்றங்கள் கூடாது என்று சொல்லவில்லை. திருச்சியிலே உள்ள எ.பி.டி.ஓ., பி.டி.ஓ. வேறு ஒரு இடத்திற்கு மாற்றப்படுகிறார்கள். அதுவும் டெபுடி-இயக்குனர் ரிப்போர்ட்டின் பேரில்—ஏதோ தவறு செய்தார்கள் என்பதற்காக—மாற்றப்படுகிறார்கள். ஒருவர் ராஜமாணிக்கம், இன்னொருவர் வில்லவதாசன். ராஜமாணிக்கம் இந்த இலாகா அமைச்சரின் சொந்தக்காரர் என்று சொல்லப்படுகிறது. மாற்றப்பட்டு, 15 நாட்களுக்குள் அவர்கள் திரும்பவும் பழைய இடத்திற்கே வந்துவிடுகிறார்கள். அவர்கள் எப்படி 15 நாட்களுக்குள் பழைய இடத்திற்கே வந்தார்கள்? யார் அதற்குக் காரணம்?

அதைப்போல கந்தசாமி என்ற ஒருவர் போர்ட் ஆஃப் ரெவின்யூவிலிருக்கிறார். அவரைப்பற்றிக் கேட்டதில் அமைச்சர் தான் போடச் சொன்னார் என்று சொல்கிறார்கள். அதற்கான ஆதாரங்கள் போர்ட் ஆஃப் ரெவின்யூவில் இருக்கின்றன. சர்க்கார் விசாரணை செய்யத் தயார் என்றால் நான் எல்லா விவரங்களையும் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். சம்பந்தப்பட்ட பைல் அங்கே இருக்கிறது. என்னைக் காட்டச் சொன்னாலும் நான் காட்டத் தயாராக இருக்கிறேன்.

அதைபோல ஒரு அதிகாரி தவறான முறையில் சொத்து சேர்த்தார் என்று புகார் இருக்கிறது. ஜெயராமன் என்கிற சி.டி.ஓ. இப்போது அவர் ரிவர்ஷனில் இருக்கிறார். ஆனால் அமைச்சர் அதில் தலையிட்டு, ரிவர்ஷன் வேண்டாம்; அதற்குப் பதில் 'சாலரி கட்' செய்தால் போதும் என்று சொல்லியிருக்கிறார். 'சாலரி கட்' என்றால் ப்ரமோஷன் பாதிக்காது. ஆக அமைச்சரின் தலையீடு இதிலே இருக்கிறது.

அதைப்போல பல ஆதாரங்களைச் சொல்ல முடியும். அருப்புக் கோட்டையில் முதலமைச்சருக்கு பிரதிநிதியாக இருந்த ஒருவர் தவறு செய்திருக்கிறார்; அவர்மீது நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை.

(முற்பகல் 10-50)

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** சட்டப் பேரவைத் தலைவரவர்களே, என்னுடைய வேண்டுகோளுக்கிணங்க மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அருப்புக்கோட்டையிலே என்னுடைய பிரதிநிதியாக இருக்கின்றவர் செய்திருப்பதாகச் சொல்லப்படுகின்ற ஊழல்களைப் பற்றிய விவரங்களை வெளியிடுவதற்கு அவகாசம் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு :** தலைவரவர்களே, இசைவு கொடுக்கிறீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள்.

**திரு. க. சுப்பு :** பேரவைத் தலைவரவர்கள் பெரிய மனது பண்ணி அனுமதி தந்ததற்கு நன்றி. நான் அருப்புக்கோட்டை பற்றி மாத்திரம் சொல்லவில்லை. சுப்புராமன் என்பவருடைய மனைவி சுப்புலட்சுமி. ஆசிரியராக வேலை பார்க்கிறார்கள். மேலும் திரு. பக்தவச்சலனார் அவர்கள் கூட ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** தயவு செய்து சட்டப் பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன் இதுபற்றி சுப்பு அவர்கள் என்ன சொல்கிறார் என்பதைத்தா[ன்]





நான் தெரிந்துக்கொள்ள விரும்புகிறேனேயொழிய தயவு செய்து அவர்கள் முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவச்சலம் அவர்களை இங்கே இழுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு :** தலைவரவர்களே, முன்னாள் ராணுவத்தினரான சுப்பாராமன் என்பவருடைய மனைவி சுப்புலட்சுமி அவர்கள் ஆசிரியையாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். அப்போது திரு. பஞ்சவர்ணம் அவர்கள் தலையிட்டு அவர்களை வேறு ஊருக்கு மாற்றுகிறார். என்னிடம் அதற்கு ஆதாரம் இருக்கிறது. அதற்குப் பின்னால் அவர்கள் அவ்வாறு ட்ரான்ஸ்ஃபர் செய்தது சரியில்லை என்று கலெக்டருக்கு மனுக் கொடுக்கிறார்கள். அதன்பின் அவர் மீண்டும் மாற்றப்படுகிறார். பின்னர் முதலமைச்சரின் அந்தப் பிரதிநிதி தலையிட்டதன் காரணமாக அந்த உத்தரவு நிறுத்தி வைக்கப்படுகிறது . . .

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** சட்டப்பேரவைத் தலைவரவர்களே, எந்தத் தேதியில் அவர் இந்தக் காரியத்தை செய்தார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்ல வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு :** தலைவரவர்களே, மாவட்டக் கலெக்டருக்கு 9—12—1977 அன்று புகார் மனு கொடுக்கப்பட்டிருக்கிறது. அடுத்து மீண்டும் அந்த ஆசிரியர் மாற்றப்படுகிறார். . . .

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, அதுவல்ல நான் கேட்பது. என்னுடைய பிரதிநிதியான திரு. பஞ்சவர்ணம் அவர்கள் எந்தத் தேதியில் இதில் தலையிட்டார் என்பதைச் சொல்ல வேண்டும் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு :** தலைவரவர்களே, தரப்பட்டிருக்கின்ற மனுவிலேயே அதற்குரிய டீடெயில்ஸ் எல்லாம் இருக்கின்றன. அதாவது 9—12—1977 அன்று கொடுக்கப்பட்ட அந்தப் புகார் மனுவிலேயே எல்லா விவரங்களும் தரப்பட்டிருக்கின்றன. பின்னர் அவருக்கு மாறுதல் வரும்போது அந்த உத்தரவு நிறுத்தப்படுவது இவருடைய தலையீட்டால். . . .

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பத்திரிகையிலே வந்த செய்தியை வைத்துக் கொண்டு பேசுகிறாரா? அல்லது வேறு ஏதேனும் ஆதாரங்களை வைத்துக் கொண்டு பேசுகிறாரா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. க. சுப்பு :** ஆதாரம் என்னிடத்தில் இருக்கிறது. முதலமைச்சருக்கும் இதுபற்றி மனுக் கொடுத்திருக்கிறார்கள். அந்த மனுவின் நகல் என்னிடம் இருக்கிறது. முன்னாள் முதல்வர் பக்தவத்சலம் அவர்களுக்கு அனுப்பிய மனுவின் நகலும் என்னிடத்தில் இருக்கின்றது. அதிலே தேதிகள் பற்றிய விவரங்கள் எல்லாம் அளிக்கப்பட்டிருக்கின்றன. ட்ரான்ஸ்ஃபர் செய்யப்பட்ட விவரங்கள் இருக்கின்றன. அதுபற்றிய அடுத்தக் கல்வியாண்டிலே பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லப்படுகிறது. கல்வியாண்டு போய்விடுகிறது. கலெக்டர்தான் மாற்றப்படுகிறாரேயொழிய அந்த ஆசிரியர் மாற்றப்படவில்லை. இதையெல்லாம் தலையீடு என்று சொல்லாமல் வேறு என்னவென்று சொல்வது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்தப் பத்திரிகையை வாசிப்பதற்கு முன்னால் என்னுடைய அனுமதியைப் பெற்றீர்களா? எந்த விதியை வைத்துப் பேசுகிறீர்கள்?

**திரு. மு. கருணாநிதி :** தலைவரவர்களே, திரு. சுப்பு அவர்கள் முதலில் மேல் எழுந்தவாரியாக இப்படி முதலமைச்சருடைய பிரதிநிதியாக இருக்கின்ற ஒருவர் இந்த மாதிரி தவறுகள் செய்து இருக்கிறார் என்று சொன்னார். முதலமைச்சர் அவர்கள்தான் எழுந்து விவரங்களைக் கேட்டார். அவ்வாறு அவர்கள் கேட்டதன் காரணமாகத்தான் விவரங்களைத் தர வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்தச் சமயத்தில் அவர் விவரங்களைத் தேதிவாரியாகச் சொல்லிக்கொண்டு வந்தார் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இந்தப் பக்கம் பார்த்துக் கொண்டு உட்கார்ந்து கொண்டு இருக்கிறார்கள். அவர் பத்திரிகையை வைத்துக் கொண்டு படிக்கிறார். அப்படிப் படிப்பதற்கு முன் என்னுடைய அனுமதியைப் பெற்றுத்தான் அந்தப் பத்திரிகையைப் படிக்கின்றாரா?





**திரு. மு. கருணாநிதி :** பேரவைத் தலைவரவர்களே, நானும் அவரைத் திரும்பிப் பார்த்தேன். எதிரிலே மாத்திரம் பார்த்துக் கொண்டிருக்கவில்லை. அந்த விவரங்களைத் தெரிவிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது முதலமைச்சர் அவர்கள் கேட்டதால்தான். அப்படி அவர்கள் கேட்ட உடன் உடனடியாக உங்கள் அறைக்கு வந்து அவைகளை எல்லாம் காட்டிவிட்டுப் பேசுவது என்பது இயலாத காரியம். எனவே அவர் விவரங்களைத் தருகின்ற வகையில் பேசினார்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** சட்டப்பேரவைத் தலைவரவர்களே, எதிர்க் கட்சித் தலைவரவர்களுடைய வாதத் திறமையை ஒத்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் பத்திரிகையை வைத்துக்கொண்டு பேசுகிறாரா அல்லது ஆதாரமான குறிப்புக்களை வைத்துக் கொண்டு பேசுகிறாரா என்பதுதான் கேள்வி.

**திரு. க. சுப்பு :** தலைவரவர்களே, பத்திரிகையை வைத்துப் படிப்பது ஒன்று. ஆதாரங்களை வைத்துப் படிப்பது மற்றொன்று. உங்களுக்குச் சிரமம் வேண்டாம் என்று நானே இரண்டையும் படித்துக் காண்பிக்கிறேன். ஆகவே இந்த விஷயத்தில் தலையீடு இருக்கிறது. நீதி விசாரணைக்கு ஏற்பாடு பண்ணினால்கூட நல்லது. பந்தாரர் இதில் தலையிட்டிருக்கிறார் என்பது உண்மை.

அடுத்து எலக்ட்ரிசிட்டி போர்ட் தெஃப்ட் சம்பந்தப்பட்ட அளவில் திரு. எஸ். எஸ். ஆர். மகன் திருமணத்தின்போது சப்ளை செய்யப்பட்ட மின்சார வகையில் ஏ.ஐ.ஏ.டி.எம்.கே. தலையிட்டிருக்கிறது. பிரிவு 329 என்ற எண்ணில் ஒரு கேஸ் கூட போடப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் எவ்வளவு செலவு என்பதும் நமக்குத் தெரியும்.

கேஸ் போடுகிற செலவு ஆயிரக்கணக்கில் ஆகிறது. [illegible] விவரங்களும் என்னிடம் இருக்கின்றன. எலெக்ட்ரிசிட்டி தெஃப்ட்' ஏ.ஐ.ஏ.டி.எம்.கே. காரர்கள் [illegible]தப்பட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மன்னிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற நேரம் முடிந்து விடுமானால் அவர்கள் நண்பர்கள் பேசும்போது அவர்களிடம் கொடுத்து மற்றவைகளைப் படிக்கச் சொல்லலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருபது நிமிடங்களாகி விட்டது.

**திரு. க. சுப்பு:** எனக்கு இன்னும் நிறைய சொல்ல வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்பு அவர்களிடம் இரண்டு மணி நேரம் பேசக்கூடியவை இருக்கலாம். திரு. பெருமாள்.

(திரு. க. சுப்பு நின்று கொண்டிருந்தார்.)

நீங்கள் உட்காருங்கள். மேலும் பேச அனுமதிக்க முடியாது. திரு. பெருமாள். (கூச்சல்-குழப்பம்.)

**திரு. மு. கருணாநிதி:** அருப்புக்கோட்டை தொகுதியில் முதல் அமைச்சர் அவர்களின் பிரதிநிதி பஞ்சவர்ணம் தவறான செயல்களில் ஈடுபடுகிறார்கள், தவறுகள் செய்கிறார்கள் என்பது குற்றச்சாட்டு. அந்தக் குற்றச்சாட்டுக்களைப் பொதுப்படையாக திரு. சுப்பு அவர்கள் சொன்னார்கள். உடனடியாக முதல் அமைச்சர் அவர்கள் தலையிட்டு விவரங்களைச் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். விவரங்களைச் சொன்னதற்குக் காரணம் முதல் அமைச்சர் அவர்களைக் குற்றஞ்சாட்ட அல்ல, அவைகளையெல்லாம் முதல் அமைச்சர் அவர்கள் விசாரித்து நடவடிக்கை எடுப்பார் என்பதற்காக அவர்கள் சொன்னார்கள். குறிப்பாக முதல் அமைச்சர் அவர்கள் 'இன்னொருவர் நேரத்தைக் குறைத்துக் கொண்டு அவர்களுக்கு அதிக நேரம் கொடுக்க வேண்டுமென்று சொல்லி திரு. சுப்பு அவர்கள் ஆதாரங்களை அடுக்கிக் கொண்டு போனால் இன்னொருவர் பேச்சைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று கூறுவது முறையில்லை.



**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, எதிர்க் கட்சி தலைவர் அவர்கள் என்னைத் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். நான் குறிப்பிட்டது, பஞ்சவர்ணத்தைப் பற்றிப் பேசப்பட்டதை. இப்போது ஆரம்பித்திருப்பது இன்னொரு பிரச்னையைப் பற்றி. அந்தப் பிரச்னைபற்றி அவர்கள் பேசும்போது நேரம் இல்லாமல் இருந்தால் மற்றவர்கள் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுங்கள் என்று சொன்னேன். அவர்கள் மூலம் கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என்றுதான் சொன்னேன். ஆனால் அந்தப் பிரச்னை முடிந்துவிட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** மாண். முதல் அமைச்சர் அவர்கள் அந்தப் பிரச்னையில் நடவடிக்கை எடுக்க, அவர்களது தொகுதி அருப்புக்கோட்டை என்பதால், விவரங்களைச் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். அதற்கு அனுமதி தரச் சொன்னார்கள், தந்தேன். ஆனால் அப்பிரச்சினையை முடித்துவிட்டு அடுத்த பிரச்சினைக்குப் போனார்கள். அப்போதே நினைத்தேன், மணி அடிக்கலாமா என்று. அடுத்த பிரச்னைக்குப் போனவுடன் திரு. சுப்பு அவர்களுக்கு மட்டும் தனியாக அதிக நேரம் கொடுத்து அவையின் நேரத்தை வீணாக்கக் கூடாது; மற்ற உறுப்பினர்களும் பல விஷயங்களை, பல பிரச்சினைகள் பற்றிப் பேச இருக்கிறார்கள் என்றுதான் மணியடிக்கலாமா என்று நினைத்தேன். திரு. சுப்பு அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் நேரம், அவருக்கு ஒதுக்கப்பட்டதை விட ஏழு நிமிடங்கள் அதிகமாக ஆகியிருக்கிறது. ஆகவே அடுத்து, திரு. பெருமாள்.

(பல உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

தயவுசெய்து யாரும் எழுந்து நின்று பேசக் கூடாது. யார் யாருக்கு எவ்வளவு நேரம் கொடுக்க வேண்டும் என்பதற்கு நேரத்தை வகுத்து அதன்படி நடக்கிறேன். ஆக, திரு. சுப்பு அவர்கள் பேசுகிற நேரம் முடிந்துவிட்டது.

**திரு. மு. கருணாநிதி:** இன்று எங்கள் கட்சி சார்பாக மூன்று பேர்கள் பேச வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. அதில் தம்பி நடராசன் அவர்கள் நேரத்தை திரு. சுப்பு அவர்களுக்கு வழங்க வேண்டும் என்று நான் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். திரு. நடராசன் அவர்களும் ஒப்புக்கொண்டுள்ளார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்றும் மூன்று நிமிடங்கள் உள்ளன. அவர்களுக்கு 15 நிமிடங்கள், இவர்களுக்கு ஆளுக்கு 10 நிமிடங்கள். ஆக மூன்று நிமிடங்கள் உள்ளன.

**திரு. மு. கருணாநிதி :** இன்னொருவர் நேரத்தையும் எடுத்துக் கொள்கிறோம், ஒரு உறுப்பினர் பேசுவதைக் குறைத்துக் கொள்கிறோம் என்று சொல்லியும் கூட நீங்கள் அனுமதி வழங்காத காரணத்தால் நாங்கள் அவையிலிருந்து வெளியேறுகிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழகக் கட்சி உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

**திரு. க. சுப்பு :**

(முற்பகல் 11-00)

**திரு. துரை முத்துசாமி :** இங்கே நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்க, திரு. சுப்பு அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளரைப் பற்றிச் சிலவற்றைச் சொன்னார்கள். அதற்கு அரசின் நிலைமை என்ன, அதற்கு அரசு என்ன சொல்ல விரும்புகிறது என்பதைத் தெரிவிக்கவில்லை. அதைத் தெரிவிப்பார்களா என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** எனக்குப் பதில் சொல்வதற்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்போது இவைகளுக்கெல்லாம் பதில் கிடைக்கும்.

* **திரு. ரா. கு. பெருமாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தினைப் பாராட்டி உரையாற்றுகின்றேன். ஆளுநர் அவர்கள் உரை இந்த அவையில் உள்ளோர் அனைவரும் போற்றிப் பாராட்டுதற்குரிய நற்கருத்துக்கள் அடங்கிய செஞ்சொற் கோர்வைகளடங்கிய சொற்களஞ்சியமாகும். சென்ற ஓர் ஆண்டில் இந்த அரசு அனைத்துத் துறைகளிலும் ஆற்றிய பணிகளை நினைவுபடுத்தியதுடன், அடுத்து வரும் ஆண்டுகளில்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





ஆற்றவிருக்கும் பணித் திட்டங்களையும் எடுத்துக்காட்டி ஆளுநர் உரையில் விளக்கியிருப்பது அனைவரும் ஆர்வத்துடன் வரவேற்கத் தக்கதாகும். "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்ற கவி பாரதியின் கனவை நனவாக்குவதற்கொப்ப விவசாய விளைபொருள் உற்பத்தியில் தன்னிறைவு கண்டு அடுத்த ஆண்டிற்கும் தேவையான உணவுப் பொருட்களைச் சேர்த்து வைத்திருப்பது எந்த ஆண்டிலும் இல்லாத அதி அற்புத நிகழ்ச்சியே என்பதும், விளைபொருள்களின் விலைகள் நியாயமான அளவில் நாட்டில் நிலவி வருவதும், ஏழை எளிய மக்கள் எளிதாக வாங்கும் சக்திக்குட்பட்டு இருப்பதும், அதனால் மக்கள் மனமகிழ்ச்சியுடன் இருப்பதும் வரவேற்கத்தக்கதே.

வேளாண்மை விளைபொருட்கள் விற்பனைக்கான தனி இயக்குநர் நிறுவியதும் வரவேற்கத்தக்கதே. உலக வங்கி ஒத்துழைப்புடன் 147 கோடி செலவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் பெறுவதற்கும், கழிவு நீரகற்று வசதிகள் பெறுவதற்குமான திட்டத்தின் பயனாக 75 லட்சம் பேர் பாதுகாக்கப்பட்ட நல்ல குடிநீர் பெற்றுப் பயனடைவார்கள். 12 லட்சம் பேர்கள் புதைசாக்கடைத் திட்டத்தின் மூலம் கழிவு நீரகற்றும் வசதி பெறுவார்கள் என்பதும் ஆந்திர மாநில அரசின் மனமுவந்த நற்கொடையின் காரணமாகக் கிருஷ்ணா ஆற்றிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்கான வேலைகள் நடப்பதும் போற்றுதற்குரிய செயல்களாகும்.

ஆரம்ப சுகாதார நிலையங்களில், மேலும் ஒரு மருத்துவரை நியமிக்கவுள்ளதும், 100 நடமாடும் குழுக்களும் உருவாக்கப் பட்ட செயல், சுகாதாரத் திட்டத்தின் வளர்ச்சியைக் குறிக்கிறது. கண்ணொளித் திட்டம் மதுரையை மையமாகக் கொண்டு மதுரை, புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களில் ஐந்து பெரிய மருத்துவ மனைகளிலும், 15 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் விரைவில் செயல்படுத்தவிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சுப்பு அவர்கள் அவையிலிருந்து வெளியேறியபோது பேரவைத் தலைவருக்கும் திரு. சுப்பு அவர்களுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுக்களை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டும் என்று உத்தரவிடுகின்றேன்.

அத்துடன் திரு. செஞ்சி இராமச்சந்திரன் அவர்கள் பேசும் போது, துண்டுப் பிரசுரத்தை வைத்துக் கொண்டு பேசினார்கள். அவைத் தலைவரின் அனுமதி பெறாமலேயே துண்டுப் பிரசுரத்தை வைத்துக் கொண்டு பேசியதால், அவர் பேசியவைகளையும் அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டும் என்று உத்தரவிடுகின்றேன்.

**திரு. கூத்தகுடி ச. சண்முகம்:** வாசகங்களை இப்படி நீக்கிக் கொண்டே போவது சரியல்ல, யார் என்னென்ன பேசினார்கள் என்பது உலகத்திற்குத் தெரிய வேண்டும். யாராவது தவறாக பேசினால் அதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படியில்லாமல் நீக்கிவிட வேண்டும் என்று உத்தரவிடுவது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** இந்த அவையில் * * என்றெல்லாம் சொற்களைப் பயன்படுத்தும்போது அதைத் தாங்கள் கண்டித்துச் சொல்லாமல் இருப்பது வருத்தத்தை அளிக்கிறது. மேலும் யாராவது அவையிலிருந்து வெளியேறுகிறார்கள் என்றால், சபாநாயகர் அவர்களைப் பார்த்து * * என்று சொல்வது சபையின் மரபுக்கு அழகல்ல.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு லத்தீப் அவர்கள் சொல்வதில் நான் மிகவும் அக்கறை காட்டுகிறேன். ஆனால் எங்கள் தரப்பிலிருந்து அப்படிப்பட்ட வார்த்தைகளை யாராவது சொல்லியிருந்தால் அதற்காக நான் வருத்தப்படுகிறேன், அதற்காக மன்னிப்பும் கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் அவையிலிருந்து வெளியே போகிறோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லிவிட்டு மட்டும் நடுவில் நின்று கொண்டு சட்டமன்ற பேரவைத் தலைவரை அவமதிக்கும் முறையில் பேசுவது முறைதானா என்பதையும் நாம் பார்க்க வேண்டும். வேறு வகையில் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். நடவடிக்கை எடுப்பது சட்டப்படி முறையாக

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



இருக்கும் என்றாலும் இதைப் பெரிதாக்கிக் கொண்டு போகாமல் எதற்காக நாம் இங்கே கூடியிருக்கிறோம் என்பதை உணர்ந்து தமிழகத்தின் நன்மைக்காக பல கருத்துக்களை பரிமாறிக் கொண்டு, அதன் மூலமாக பல சட்டங்களை உருவாக்க முயல வேண்டும். இதையெல்லாம் சுமுகமாகச் செய்ய வேண்டிய கடமை நமக்கிருப்பதால் இவற்றையெல்லாம் பத்திரிகையில் வெளியிடுவதின் மூலம் மக்கள் நம்மைப் பற்றி தவறாகக் கருதுவார்கள் என்றிருந்தாலும், இந்த நேரத்தில் இந்தப் பிரச்சினையைப் பற்றி பெரிதாக வற்புறுத்த வேண்டாமென்று தலைவர் அவர்கள் மூலமாக திரு. கூத்தகுடி சண்முகம் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் மாண்புமிகு லத்தீப் அவர்கள் பேரவைத் தலைவர், * * என்று சொல்ல வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பதைப் பார்க்க வேண்டும். வெளிநடப்புச் செய்தவர்கள், வெளியே போகிறபோது பேசாமல் இருந்து அவர்கள் அமைதியாக வெளியே சென்றிருந்தால், * * என்று சொல்லவேண்டிய அவசியம் பேரவைத் தலைவர் அவர்களுக்கு ஏற்பட்டிருக்காது. அவர்கள் வெளியே போகின்ற போது சட்டமன்றத்திற்குரிய மாண்புக்கு எதிராக, பண்பாட்டிற்கு எதிராக நின்றுகொண்டு, தர்க்கவாதம் செய்யத் தொடங்கியது எந்த உறுப்பினராக இருந்தாலும் நியாயம் இல்லை என்பதை மாண்புமிகு லத்தீப் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பொதுவாகத்தான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெளிநடப்பு செய்தபோது அவர்கள் என்னிடம் தகாத வார்த்தைகள் சொன்னது என் செவியில் விழாதது ஒன்று. அப்படி இருந்தாலும் கூட, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னதுபோல் அதைக் கவனிக்கத் தயாராக இருக்கிறேன். இரண்டாவது, தாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். பல ஆண்டுகளாகத் தாங்கள் இந்த

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மன்றத்திலே இருக்கிறீர்கள். இப்படிப்பட்ட வெளிநடப்பு தலைவருக்கு நேருக்கு நேராக நின்று கொண்டு வாதாடுவது சரியா? * * *

என்றுதான் நான் சொன்னேன். இப்படி அவைத் தலைவருக்கு மதிப்புத் தராத வகையில் தர்க்கவாதம் செய்தபோதும் கூட, நான் மிகமிக நிதானமாக, பொறுமையாக, அடக்கமாக நடந்து கொண்டேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டதுவரை அவர்கள் வெளிநடப்புச் செய்வதற்கு முடிவெடுத்து, வெளியேறிக் கொண்டிருக்கின்றபோது, கனம் சுப்பு அவர்கள் உங்களுக்கு முன்னால் வந்து நின்று கொண்டு, பேசக்கூடாத வார்த்தைகளைப் பேசிக் கொண்டிருக்கின்ற நேரத்தில், நீங்கள் மிகவும் கண்ணியமாகப் பேசினீர்கள். அவர்கள் வெளியேறுவதற்குத் தீர்மானித்த பிறகு, தாங்கள் அவர்களைப் பார்த்து * * என்றுதான் சொன்னீர்களே தவிர, * * என்று சொல்லவில்லை என்பதை கனம் லத்தீப் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ரா. கு. பெருமாள்:** தலைவர் அவர்களே, அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் அமைத்து அயல்நாட்டு வேலைவாய்ப்புகளை, தமிழ்நாட்டில் உள்ளவர்கள் முறையாகப் பயன்படுத்தி பலனடைவதற்கு வழி செய்ய, அரசு செய்யும் முயற்சிகள் சிறந்தவையாகும் எனத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஏழை எளிய கிராமத்து மக்கள் பயனடையும் வண்ணம் 916 மேல்நிலைப் பள்ளிகளை மாநிலம் முழுவதிலும் பரவலாக்கியது பெருமைக்கும், பாராட்டுக்கும் உரியதாகும்.

தொழிற்கல்விக்காக, 'பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம்' என்ற பெயருடன் உருவாகும் நிறுவனம் தொழில் வளர்ச்சிக்கு வழிகாட்டும் என்பதில் ஐயமில்லை.

மொழிக் கொள்கையில், இருமொழிக் கொள்கையை செயல்படுத்துவதில் தொடர்ந்து உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளது இந்த அரசு. இந்தியைத் திணிக்கும் முயற்சிகள் மேற்கொள்வதை

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க பெற்றது.



வன்மையாகக் கண்டிக்கிறது. அரசின் தெளிவான கொள்கையை விளக்கியிருப்பது தமிழக மக்கள் அனைவரும் பாராட்டத் தக்கதாகும். தமிழ்ச் சமுதாயத்தில், சீர்திருத்தத்தின் 'விடிவெள்ளி' எனத் திகழ்ந்த பெரியார் ஈ.வே.ரா. நூற்றாண்டு விழா நேரத்தில், அவருக்காக ஆற்றிடும் தொண்டு பாராட்டுக்குரிய நற்செயலாகும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஊழலற்ற மாநிலத்தை உருவாக்கிட அரசு உறுதி பூண்டுள்ளதால், பேரறிஞர் அண்ணா அவர்கள் விழைந்த நற்செயல், செயல் முறைக்குக் கொண்டு வரப்படுகிறது. அதேபோல், மதுவிலக்குக் கொள்கையைச் செயல்படுத்த அரசு எடுக்கும் அத்தனை முயற்சிகளுக்கும் எல்லோரும் துணைநிற்க வேண்டியது அவசியமும், அவசரமும்கூட என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிர்வாக இயந்திரத்தைச் செம்மைப்படுத்தி, நடைமுறைக் கொப்ப, பல்வேறு நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து எடுத்து வருவது பாராட்டுதற்குரிய விஷயமாகும். அதேபோல், அரசு அலுவலர்கள் பணி புரிவது பற்றிய பல்வேறு விதிகளை ஆராய்ந்து, சீரமைப்பதற்காக தனிக்குழு ஒன்றை அரசு நியமித்துள்ளதும் பாராட்டுக்குரியதே. சம்பள ஆணைக்குழுவின் பரிந்துரையினை அவசர, அனுதாப உணர்வுடன் இந்த அரசு ஆராய்ந்து வருவது பாராட்டப்பட வேண்டிய செயலாகும்.

அதே நேரத்தில், தமிழுக்கும், தமிழ் நாட்டிற்கும், தமிழ் மக்களுக்கும், மொழி, பண்பாடு, இலக்கியம் ஆகியவற்றைப் போற்றிப் பாதுகாத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவது மெத்த மகிழ்ச்சிக்குரியதாகும்; வரவேற்கத்தக்கதாகும். அதில், அரசவைக் கவிஞர் நியமனம், மற்ற பல்கலைக்கழகங்களுக்குத் தமிழ் பயிற்றுவிக்க மானிய உதவிகள் வழங்குவதன் மூலம் மொழிவளர்க்கும் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபட்டு வருவதும் வரவேற்கத்தக்கதாகும்.

அதேநேரத்தில், எனக்கு முன்பு பேசிய ஒரு உறுப்பினர் அவர்கள், தமிழகத்தில் கிராமத் தொழில், வேலை வாய்ப்பிற்கான அரசுத் திட்டங்கள் எல்லாம் பின்தங்கியிருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள்.

[திரு. ரா. கு. பெருமாள்] [1978 செப்டம்பர் 1

(முற்பகல் 11-10)

பட்டுப் பூச்சி, பால் முதலியவற்றில்தான் கிராமங்களில் வேலை வாய்ப்பு கொடுக்கப்படுகிறது, மற்ற வழிகளில் இல்லை என்று ஒரு உறுப்பினர் பேசும்போது குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்வேன்—சிறு தீப்பெட்டித் தொழிற்சாலைகள் மூலம் ஓராண்டுக் காலத்தில் 30,000 பேருக்கு மேல் கிராமங்களில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. நெல்லை, முகவை, மதுரை ஆகிய மாவட்டங்களில் ஏழை எளிய விவசாயப் பெருங்குடி மக்கள் சிறு தொழில்கள் தொடங்கி நடத்த உரிமங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, தமிழ்நாட்டில் தீப்பெட்டித் தொழிற்சாலையில் கிராம மக்களுக்கு நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன. முகவை மாவட்டத்தில் மட்டும் தீப்பெட்டித் தொழிற்சாலை மூலமாக இந்த ஆண்டு 70,000 பேர் வரை வேலை வாய்ப்பு பெறும் வண்ணம் அரசு திட்டம் தீட்டி செயல்படுத்த வேண்டும்.

சாத்தூர் தாலுகாவில் இதற்கு விற்பனை வரி அதிகமாக இருக்கிறது. அதைக் கொஞ்சம் குறைத்தால் மேலும் பலனடையும் வண்ணம் வழிவகை ஏற்படும். (மணி அடிக்கப்பட்டது) தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக இருக்கும் சிறு தீப்பெட்டி உற்பத்தியாளருக்கு மூலப் பொருள்களைக் கொள்முதல் செய்து அடக்க விலைக்குக் கொடுத்து, விற்பனை வரி விதிப்பதையும் தவிர்த்தால் ஆறு மாத காலத்திற்குள்ளாக ஒரு லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படக் கூடிய நிலைமை ஏற்படும் என்று கூறி இந்த மாமன்றத்தில் ஆளுநர் உரை மீது பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ராஜ்குமார் விஜயரகுநாத தொண்டமான் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையின்மீது காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னுடைய ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

சென்ற பட்ஜட்டை அரசாங்கம் சமர்ப்பிக்கும்போது கிராமங்களுக்கு அதிக முக்கியத்துவத்தைக் கொடுத்து கிராம அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டுமென்று கூறியிருந்தார்கள்.



1978 செப்டம்பர் 1]

[திரு. ராஜ்குமார் விஜயரகுநாத தொண்டமான்]

இது வரவேற்கத்தக்க ஒரு விஷயமாகும். 16,000 நியாய விலைக் கடைகளைத் திறப்பதாகவும் கூறியிருந்தார்கள். இன்று கவர்னர் பெருமான் உரையில் பார்க்கும்போது ஒன்பதாயிரத்துச் சில்லறை கடைகள்தான் திறந்திருக்கிறார்கள் என்று கூறி இருக்கிறார்கள். திட்டங்களை நன்றாகப் போடும்போது அதைச் சீக்கிரமாக இம்ப்ளிமெண்டேஷன் செய்வது நல்லது என்று இந்த நேரத்தில் கூறிக் கொள்கிறேன். புதுக்கோட்டை ஜில்லாவில் இருக்கக்கூடிய பின் தங்கிய கிராமங்களைப் பார்க்க வேண்டும். ஒரு கிராமத்திற்கும் மற்றொரு கிராமத்திற்கும் இடையே பல மைல்கள் இருக்கின்றன.

(திரு. தாசை முத்துசாமி தலைமை)

ஒரு விவசாயி, தொழிலாளி வேலை பார்த்துவிட்டு வீட்டுக்கு வந்துவிட்டு அவன் மறுபடியும் ஐந்தாறு மைல் நடந்து போய் வீட்டுக்கு வேண்டிய சாமான்களை வாங்கி வரவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இதை அரசு கூர்ந்து கவனித்து இதற்கு ஆவன செய்ய வேண்டும். அடுத்த பட்ஜெட் செஷனுக்குள்ளாவது மீதி 7,000 நியாய விலைக் கடைகளைத் திறந்து வைக்க வேண்டுமென்று அரசாங்கத்தை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து மின்சாரம் பற்றிப் பேசுவோம். சென்ட்ரல் கவர்ன்மெண்டிலிருந்து இப்போது புது லெவி ஒன்று போட்டிருக்கிறார்கள். அரசாங்கம்கூட ஏதோ அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இருக்கிறது. இன்றைக்கிருக்கக்கூடிய நிலையில் பின்தங்கிய பிரதேசங்களான புதுக்கோட்டை, இராமநாதபுரம் பகுதிகளிலே மின்சாரம் பம்புசெட்டுகளுக்கே கிடைக்கவில்லை. ஏதோ மறு கொடுக்கிறார்கள். கொடுத்தவுடனே பம்புசெட்டுகள் வாங்குங்கள் என்று சொல்லிவிடுகிறார்கள். அதை நம்பி அவர்கள் வாங்கியவுடனே மின்சார வாரியத்திலிருந்து சப்ளை செய்தால் கனெக்ஷன் கிடைப்பதில்லை. அதன் காரணத்தினால் அவர்கள் வாங்கிய மோட்டார்களும் பம்புசெட்டுகளும் அப்படியே கிடக்கின்றன. நிறைய இடங்களுக்கு மின்சார இணைப்புக் கிடைக்கவில்லை. அந்தப் பகுதிகளுக்கு மின்சார இணைப்புக் கிடைக்க ஆவன செய்ய வேண்டும்.

மதுவிலக்கு பற்றி பிரச்சாரங்கள் நடந்து வருகின்றன. மதுவிலக்குபற்றி நீங்கள் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளுக்கு நாங்கள் பூரண ஆதரவு கொடுப்போம் என்று நிச்சயமாக நான் சொல்லிக் கொள்கிறேன். ஆனால், அதே நேரத்திலே இந்த மதுவிலக்கிற்காக

[1978 செப்டம்பர் 1

[திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்]

ஒரு இறுக்கமான சட்டத்தைக் கொண்டுவர தீய சக்திகள் வேறு தொழில்களுக்குச் சென்றுவிடக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. டே லைட் ராபரி, ரோடிலே போகிறவர்களை அடிப்பது, திருடுவது என்ற நிலைமைகள் அதிகமாகி வருகின்றன. மதுரையிலே இரண்டொரு இடங்களிலே பார்த்து வருகிறோம். இவைகளைத் தடுப்பதற்கு போலீஸ் படையை அதிகரிக்க வேண்டும். அதுமட்டுமல்ல, அவர்களுக்கு புதிய டிரெய்னிங் கொடுக்க வேண்டும், மிலிடரி டைப் டிரெய்னிங் கொடுக்க வேண்டும். அந்த நிலை இப்போது வந்துவிட்டது. எதற்கெடுத்தாலும் இராணுவத்தைக் கூப்பிட வேண்டுமென்ற நிலை வரக்கூடாது. ஆகவே அரசாங்கம் அதை மனதிலே கொண்டு போலீஸ் படையை அதிகரித்து தீய சக்திகளைத் தடுப்பதற்கு வழிவகை காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து போலீஸ்காரர்களை வெளியூர்களுக்கு அனுப்புகிறார்கள். அவர்களுக்கு பிக்சட் பேட்டாதான் கொடுக்கிறார்கள். அதுவும் மாதத்திற்கு 12 நாட்களுக்குத்தான், ஒரு நாளைக்கு 4 ரூபாய் வீதம், மொத்தம் 48 ரூபாய் தான் அவர்கள் எத்தனை நாட்களில் வெளியூர்களுக்குச் சென்றாலும், 25 நாட்கள் சென்றாலும் சரி, 30 நாட்கள் சென்றாலும் சரி. அவர்களுக்கு 12 நாட்களுக்குத்தான் படி தரப்படுகிறது. அதை மாற்றியமைக்க வேண்டும். இன்றைக்கு விற்கக்கூடிய விலைவாசிகளுக்கு ஏற்ற வகையில் அவர்களுடைய டெய்லி பேட்டாவை மாற்றியமைத்து மற்ற ஊழியர்களுக்குக் கொடுப்பதைப் போல கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும் ப்ரொஹிபிஷன் கேஸ் பிடிப்பதற்கு மாதத்திற்கு இவ்வளவு கோட்டா என்று வைத்திருக்கிறார்கள். இதன் காரணமாக, எல்லோரையும் நான் சொல்லவில்லை, சில பேர்கள் அவ்வாறு கேஸ் இல்லாததைக் கூட கேஸ் போட்டுவிடக்கூடிய நிலைமை—அதன் காரணமாக நல்லவர்கள், இன்னொசன்ட் பீபிள் கூடப் பிடிக்கப்படுகிறார்கள். எனவே இந்த கோட்டா முறை மாற்றப்பட வேண்டும். அவர்கள் எவ்வளவு கேஸ்கள் போடுகிறார்களோ அதற்குத் தகுந்த வெகுமானம், சன்மானம் அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய நிலைமையைக் கொண்டுவர வேண்டும்.



1978 செப்டம்பர் 1]

[திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்]

(முற்பகல் 11-20)

கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு—எல்லாத் தொழிலாளர்களுக்கும் கூலி நிர்ணயம் செய்திருக்கிறோம்—கூலி நிர்ணயம் செய்யப்பட வேண்டும். இன்று சிறு தொழில்களுக்கு அரசாங்கம் நல்ல பாதுகாப்பு கொடுக்கிறது. அதுபோல் இவர்களுக்கும் பாதுகாப்பு கொடுத்து, கூலி நிர்ணயச் சட்டத்தைக் கொண்டு வந்து அவர்கள் செய்யக்கூடிய அளவிற்குக் கூலி நிர்ணயம் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, புதுக்கோட்டை மாவட்டத்தில் திருமயம் தாலுக்காவிலே சடையப்பட்டி என்ற ஊர் இருக்கிறது. அங்கே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒரு பள்ளிக்கூடம் இடிந்துபோன நிலையிலே இருக்கிறது. முன்பிருந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அதற்கு 10,000 ரூபாய் சேங்ஷன் செய்து, நீங்கள் கட்ட ஆரம்பியுங்கள் என்று பீடிபிள்யூடியிலே சொல்லிவிட்டார்கள். அதை நம்பி அந்த ஊர் மக்கள் 7,000 ரூபாய் வரையிலே செலவு செய்து அந்தக் கட்டடத்தை அரைகுறையாகக் கட்டி நிறுத்தி இருக்கிறார்கள். இன்று போய் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலே அந்த 10,000 ரூபாயைக் கேட்டால் அவர்கள் எங்களுக்குத் தெரியாது என்று சொல்லக்கூடிய நிலையிருக்கிறது. நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வதெல்லாம், ஊரிலிருந்து பொது மக்களிடமிருந்து எடுத்துப் போட்டு ஏழாயிரம் ரூபாய் செலவழித்திருக்கிறார்கள். அது திரும்ப அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய அளவிற்கு அரசாங்கம் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது)

திரு. சி. கோவிந்தராசன்: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கவர்னர் உரையின்மீது நேற்றையதினம் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினரவர்கள் இங்கே சில கருத்துக்களை எடுத்துரைத்தார்கள். மேலும் சில கருத்துக்களை நான் கூற விழைகிறேன். அந்த வகையில் சில சமூக விரோதிகள் அங்காங்கே சாதி வேறுபாடுகளைத் தூண்டிவிட்டு, ஒன்றுபட்டு வாழும் மக்களிடையே குழப்

பத்தையும், உடைமைகளுக்குச் சேதத்தையும் ஏற்படுவதைக் கண்டிக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. விழுப்புரத்தில் நடைபெற்ற சம்பவமும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இப்படிப்பட்ட சம்பவங்கள் அண்மைக் காலங்களிலே பல்வேறு மாவட்டங்களிலும் தலைதூக்க ஆரம்பித்திருக்கின்றன. ஆண்டாண்டுதோறும் அடிமைப்படுத்தப்பட்ட மக்கள் தங்களுடைய உரிமைகளுக்காகக் குரலிடும்பொழுது, அவர்கள் என்றைக்குமே அடிமைகளாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் இப்படிப்பட்ட விளைவுகள் ஏற்படுகின்றன என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். விழுப்புரத்தில் நடைபெற்ற சம்பவம் குறித்து இன்றைக்கு நீதிபதி சதாசிவம் அவர்களுடைய கமிஷன் நடைபெற்றுக்கொண்டிருப்பதால் நான் விவரங்களுக்குள் போக விரும்பவில்லை. இரு ஜாதி மக்களிடமும் கலவரம் என்று சொன்னால் உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டாலும், சொத்துச் சேதங்கள் ஏற்பட்டாலும் இரண்டு பக்கங்களிலும்தான் ஏற்படும். ஆனால் அங்கே நடந்தது ஒரு பக்கத்தில் மட்டுமே; அதிலும் அரிசனப் பகுதி. தாழ்த்தப்பட்ட பகுதியிலுள்ள அந்த மக்கள்தான் இறந்திருக்கிறார்கள். இது எந்த நிலையிலிருந்து ஏற்பட்டது என்பதை எல்லோரும் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மிருகத் தனமான இந்தப் படுகொலைகளைச் செய்தவர்களைக் கண்டுபிடித்து அவர்கள்மீது கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று கவர்னர் உரையில் கூறியிருப்பதை நாங்கள் மனமார வரவேற்கிறோம். ஆனால் அந்த நடவடிக்கை உடனடியாகத் துவங்கப்பட வேண்டும். சதாசிவம் கமிஷன் என்பது வேறு. ஆனால் இப்படிப்பட்ட உத்தரவாதத்தை ஆளுநர் அவர்களுடைய உரையிலே குறிப்பிட்டு இருப்பதால், இந்தக் கொலைகளைச் செய்தவர்களைப் பற்றி போலீஸ் தனியாக இன்வெஸ்டிகேட் செய்து அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து, குற்றவாளிகள் நிச்சயமாகத் தண்டிக்கப்பட வேண்டும். அதுதான் நியாயம் வழங்குவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை இந்தச் சபையில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட சம்பவங்கள் இராவிப்பேட்டையில் நடைபெற்றிருக்கின்றன. அரிசன மக்களுடைய வீடுகளுக்குத் தீ வைக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தீயை அணைப்பதற்காக அங்கே



ஃபயர் சர்விஸ் சென்றபொழுது அதை அணைக்கவிடாமல் கூட்டம் தடுத்திருக்கிறது. அப்படித் தடுத்த கூட்டத்தில் அங்குள்ள நகர் மன்றத்தைச் சேர்ந்த ஒரு தலைவரும் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்பது மிகவும் வருந்தத்தக்க விஷயம்.

அதைப்போல பேரணாம்பட்டில் நடந்த இந்து-முஸ்லிம் கலவரம். அதில் மைனாரிட்டி சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லப்படும் அவர்களுடைய வீடுகள் தீ வைக்கப்பட்டு ஒரு முஸ்லிம் பெண்மணியும் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்பது இந்த மன்றத்தில் ஏற்கனவே கூறப்பட்டுள்ளது.

இப்படிப்பட்ட சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறாமல் இருப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். விழுப்புரம் சம்பவம் சம்பந்தப்பட்டவரை இந்தச் சம்பவம் நடந்து அதைக் கேள்விப்பட்டவுடனே எங்கள் சார்பாக ஜனநாயக மாதர் சங்கத்தைச் சேர்ந்த திருமதி ஜோதி அவர்கள் சென்று எல்லா இடங்களையும் சுற்றிப் பார்த்துவிட்டு வந்தார்கள். மறுநாள் நான் அங்கே சென்றேன். அன்றையதினம் அறநிலையத் துறை அமைச்சரவர்களும், அரிசன நலத் துறை அமைச்சரவர்களும் இருந்தார்கள். அங்கு எப்படி உடனடியாக சகஜ நிலைமையைக் கொண்டு வருவது என்பதைப் பற்றித்தான் ஆலோசிக்கப்பட்டது. அந்தச் சமயத்திலே கூட, உடனடியாக எப்படி சகஜ நிலைமையை உருவாக்குவது என்பதில் எங்கள் கட்சியின் சார்பாக எந்த அளவு ஒத்துழைப்புக் கொடுக்க முடியுமோ அந்த அளவு கொடுத்தோம். நான் அந்தப் பெரிய காலனியைச் சுற்றி பார்த்ததோடு மட்டுமல்லாமல், சகஜ நிலையை உருவாக்குவதற்கு எனக்குத் தோன்றிய ஆலோசனைகளையெல்லாம் அமைச்சர்களிடம் கூறினேன். சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டுவது என்று ஆலோசனை செய்யப்பட்டது. அப்பொழுதுகூட நான் கூறினேன்; காலனியைத் தவிர்த்து நகரத்தில் இருக்கக்கூடிய முஸ்லிம் லீக் உட்பட அத்தனை கட்சிகளிலுள்ள மக்கள் ஒன்று சேர்ந்து சர்வ கட்சி கமிட்டி அமைக்கத் தயாராக உள்ளனர். அரிசன காலனியிலுள்ள அத்தனை கட்சியிலுள்ளவர்களும் ஒன்றாக இருக்கின்றனர். இதனால் சகஜ நிலை எப்படி ஏற்படும்? அந்தக் காலனியிலுள்ளவர்களையும் ஒன்று சேர்ப்பதன் மூலமாகத்தான் அமைதியை நிலைநாட்ட முடியும் என்று நான் அமைச்சர்

மத்தியில் கூறினேன். பிறகு, ஒரு தடவை பெரிய காலனியிலிருந்து வேறு ஜாதியினர் பிணங்கள் கண்டெடுக்கப்படுகின்றன என்ற வதந்தி கிளம்பியதும் மறுபடியும் பிரச்னை ஃப்ளேர் ஆப் ஆகுமோ என்று மீண்டும் அங்கே சென்றோம். அதற்குப் பிறகு நானும் மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களும் அந்தப் பகுதிக்குச் சென்று எப்படியாவது, துரிதமான முறையில், ஏற்கனவே ஏற்பட்டுள்ள நிலைமையை வளரவிடாமல் தடுக்க வேண்டுமென்று, சகஜ நிலைமையை ஏற்படுத்த முயன்றோம். எங்களுக்கு விளம்பரம் இல்லாவிட்டாலும் பரவாயில்லையென்று, எங்கள் கூட வந்த பத்திரிகை நிருபர்களைக் கூட நாங்கள் தடுத்து விட்டோம். ஏனென்றால், அந்தச் சமயத்தில் முதலமைச்சரவர்கள் ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தார்கள். அந்த அறிக்கையின் அடிப்படையிலே, விளம்பரத்திற்காகப் போக வேண்டிய அவசியம் எங்களுக்குக் கிடையாது, உருப்படியாக காரியங்களைச் செய்து, நல்ல நிலைமைகளை உருவாக்க வேண்டுமென்றுதான் நாங்கள், பத்திரிகை நிருபர்களை வர வேண்டாமென்று சொல்லி, செயலில் ஈடுபட்டோம். நாங்கள் என்ன கூறுகிறோம் என்றால், ஜனநாயகத்திற்கும், சோஷலிசத்திற்கும் ஆன போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்ற நேரத்தில், பொதுவாக அனைத்து மக்களுடைய ஒற்றுமை அவசியம் என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உணருகிறது.

அது மட்டுமல்லாமல், உழைக்கும் வர்க்கம் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களிடையே ஒற்றுமை மிகவும் அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது என்றும் சகஜமான நிலை இருக்க வேண்டும் என்றால் அதற்கு எங்களுடைய ஆலோசனை என்னவென்றால், நகரத்தில் மட்டுமல்ல, கிராமத்தில் மட்டுமல்ல, மாவட்ட மட்டத்திலே, மாநில மட்டத்திலே, சர்வ கட்சியினரை அழைத்துப் பேசி, இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க, தடுப்பு வழியை ஏற்படுத்தி, எல்லா மாவட்டங்களிலும் கமிட்டிகளை அமைத்து காரியங்களைச் செய்தாக வேண்டும். மாநில அரசும், முதலமைச்சரவர்களும் அதற்கான நடவடிக்கையில் இறங்க வேண்டுமென்று நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.





அடுத்து, ஆளுநர் உரையில் கூறப்பட்டிருப்பது போல், திட்டத்தினுடைய பலன்கள் அநேகமாக, சமுதாயத்தில் பலகீனமானவர்களுக்குத்தான் போய்ச் சேர வேண்டுமென்பது உண்மை. ஆனால், அண்மையில், இங்கே பக்கத்திலுள்ள 'சால்ட் கோட்டர்ஸ்' என்ற பகுதியில் மூட்டைத் தூக்கும் ஆயிரம் தொழிலாளர்கள் இரண்டு வார காலமாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். கடந்த ஆண்டு அண்ணா பிறந்த நாளில் மூட்டைத் தூக்கும் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச கூலி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதையாவது அமுல்படுத்த வேண்டுமென்று அவர்கள் கோருகிறார்கள். அந்தச் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற கூலி கூட அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. 2 வார காலமாக, அங்கே வேலை நிறுத்தம் நடைபெற்று மூட்டை தூக்கும் வேலைகள் பாதிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையில் உடனடியாக நமது அரசு தலையிட்டு, சட்டத்தில் நிர்ணயித்த கூலியாவது அவர்களுக்குக் கிடைக்க வழிவகை செய்தாக வேண்டும்.

அது மட்டுமல்லாமல், பொதுவாக ஒரு சட்டத்தைப் போட்டு அது நிறைவேற்றப்படாத நிலைமை இருந்துவிட்டால், சமுதாயத்தின் பலனுக்காகப் போடப்படுகிற சட்டம் நிறைவேற்றப்படவில்லை என்றால் நிறைவேற்ற ஏற்பாடு செய்யப்படவில்லையென்றால் அது சரியல்ல என்று இந்தச் சமயத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, கிராமப்புறத்தில், சில தொழில்களை ஏற்படுத்தி, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வழிவகை செய்வதற்காக சில திட்டங்கள் கவர்னர் உரையில் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. நான் என்ன கூறுகிறேனென்றால், ஏற்கனவே வேலையிலிருப்பவர்கள் கூட இன்றைக்கு வேலையற்று இருக்கிற சூழ்நிலை உருவாகியிருக்கிறது

[திரு. சி. கோவிந்தராசன்] [1978 செப்டம்பர் 1

(முற்பகல் 11-30)

அங்கே மின்சார வாரியத்திற்குத் தேவையான ஸ்விச்சுகள் மற்றும் சாதனங்கள் தயாரிக்கப்படுகின்றன. இரண்டு கோடி ரூபாய்க்கு இன்றைக்கும் ஆர்டர் இருக்கிறது. அப்படிப்பட்ட மிக முக்கியமான தொழிற்சாலை கடந்த 6 மாத காலமாக மூடப்பட்டு இன்னும் திறப்பதற்கு முயற்சி எடுக்கப்படாமல் இருப்பது வருந்தத் தக்கதாகும். அதில் அரசாங்க மூலதனம் 'டிக்' நிறுவனத்தின் மூலமாக 7½ லட்சம் ரூபாய் 'ஈக்குவிடி' ஷேராக இருக்கிறது. கடனாக 20 லட்சம் ரூபாய் இருக்கிறது. இந்த இரண்டையும் சேர்த்து மொத்த ஷேர் காபிடல் 60 லட்சம் ரூபாய். 2 கோடி ரூபாய்களுக்கு மேல் ஆர்டர்கள் இருக்கின்றன. இதிலே என்ன வேடிக்கை என்றால் தொழிலாளர்களுக்கும், இயக்குநர்களுக்கும் எந்தவிதமான தகராறும் இல்லை. ஆனால் இயக்குநர்களுக்கிடையிலே இருக்கக்கூடிய உட்பூசல்தான் இந்த தொழிற்சாலை மூடப்பட்டதற்குக் காரணம்.

அதேபோல மைக்ரோ டூல்ஸ். இது ஓராண்டு காலமாக மூடிக் கிடக்கிறது. அங்கே உள்ள 300 தொழிலாளர்களும், அவர்களுடைய குடும்பங்களும் மிகுந்த அவதிக்கு உள்ளாகி இருக்கின்றனர். இதிலும் அரசாங்கத்தின் நிதி இருக்கிறது, 'டிக்' நிறுவனத்தின் மூலமாக தொழிலாளர் நல அமைச்சரிடம் பல தடவை முறையிட்டும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து, இந்தத் தொழிற்சாலை திறப்பதற்கான முயற்சிகளை எடுக்கவில்லை. இந்த ஓராண்டு காலத்திற்குள் அதில் உள்ள 3 தொழிலாளர்கள் இறந்து விட்டார்கள்.

அதற்கடுத்து டி.ஐ. சைக்கிள். அது குறித்து பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருக்கிறது. 1,400 பேர்கள் வேலை செய்கிற இந்தத் தொழிற்சாலை கடந்த 9 மாத காலமாக மூடப்பட்டிருக்கிறது. கடந்த சட்டசபைக் கூட்டத்திலேகூட ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டன. சென்னையில் அனைத்து சங்கங்களைச் சேர்ந்த தொழிலாளர்களும் கடந்த ஜூலை மாதம் 18 ஆம் தேதி அன்று அந்தத் தொழிற்சாலை திறக்கப்பட வேண்டும் என்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்



1978 செப்டம்பர் 1] [திரு. சி. கோவிந்தராசன்]

களுக்கு ஒரு நாள் சம்பளத்துடன் விடுமுறை விடவேண்டும் என்று மாநில முதல்வர் அவர்கள் அறிக்கை விட்டார்கள். ஆனால் இன்று வரையில் தனியார் துறையிலே உள்ள எந்த நிறுவனமும் அந்த ஒரு நாள் விடுமுறைச் சம்பளத்தைக் கொடுக்க முன்வரவில்லை. நாம் அறிக்கை விடுகிறோம், சில சட்டங்களை இயற்றுகிறோம். ஆனால் அவைகள் நடைமுறைக்கு வராத சூழ்நிலை இன்னமும் இருந்து கொண்டிருக்கிறது. எனவே அது குறித்து உடனடியாக கறாராக நடவடிக்கை எடுத்தால்தான் தொழிலாளர்கள் மத்தியில் உள்ள அதிருப்தியைப் போக்க முடியும்.

அடுத்து, டி.வி.எஸ். தொழிற்சாலை சம்பந்தப்பட்ட வரையில் இந்த மன்றத்தில் பேசியாகிவிட்டது. முதல் அமைச்சர் அவர்கள் மிகவும் அக்கறையோடு பல்வேறு முயற்சிகளைச் செய்தார்கள். இருந்தாலும் பிரச்சினை தீரவில்லை. அங்கே 'கேட்' கூட்டம் போடுகின்ற உரிமை கூட இன்றைய தினம் இல்லாமல் இருக்கிறது.

'பிரேக்ஸ் இண்டியா' லாக்கவுட் செய்திருந்தார்கள். குறைந்த பட்சம் அந்த லாக் அவுட் செய்ததன் விஷயமாக கோர்ட்டுக்கு போவதற்குக் கூட, தொழிலாளர் நல இலாகா அனுமதி மறுத்து வருகிறது என்பதைக் கவனிக்க வேண்டும். இது மிகவும் வருத்தமாக இருக்கிறது. 50 கோடி மூலதனமாக இருந்த இந்தத் தொழிற்சாலை 1. 5 ஆண்டுகளில் இதனுடைய மூலதனம் 102 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. அண்மையில் கெசட் மூலமாக ஒரு அறிக்கை வெளிவந்தது. இந்த நிறுவனத்தைப் பொறுத்தவரையில் அவர்களுடைய பிராவிடண்டு ஃபண்டு நிதித் திட்டத்தை அவர்களே பார்த்துக் கொள்ளலாம் என்று பிராவிடெண்ட் ஃபண்டு சட்டத்திலிருந்து அவர்களுக்கு விலக்குக் கொடுத்து அரசு உத்தரவிட்டிருக்கிறது. தொழிலாளர்கள் தாங்கள் விரும்பும் சங்கத்தை வைத்துக் கொள்ள முடியாத அப்படிப்பட்ட நிலைமையில் அந்த பிராவிடெண்ட் ஃபண்டு பணத்தில் அவர்கள் யாரை மிரட்டுவார்கள், அவர்களுக்கு வேண்டியவர்களை நியமிப்பார்கள் என்பதை அரசு யோசிக்கப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எனவே இந்த விதிவிலக்கை [illegible]விட வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மின்சார வாரியம் சம்பந்தப்பட்ட வரை நான் சொல்ல விரும்புவது, வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்கள் மீது வழக்குகள் போடப்பட்டு இருந்தது. ஒழுங்கு நடவடிக்கைகளும் எடுக்கப்படும் நிலை இருந்தது. முதலமைச்சர் அவர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு இருந்தவர்கள் மீது போடப்பட்ட வழக்குகள் வாபஸ் பெறப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இப்போதும் ஈரோட்டில் 20 பேர் மீது வழக்கு தொடரப்பட்டு, அதன் மீது விசாரணை நடைபெற்று, தண்டனையும் அளிக்கப்பட்டு இருக்கிறது. அதனால் சம்பந்தப்பட்டவர்களின் வேலை பாதிக்கப்பட்டு இருக்கிறது. அதை நீக்க வேண்டும். அதேபோல் தூத்துக்குடியிலும் 6 பேர் மீது வழக்கு தொடரப்பட்டு, அது நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. அவர்கள் தண்டிக்கப்படுவார்களா, விடுவிக்கப்படுவார்களா என்று தெரியவில்லை. ஆகவே, அதையும் கவனத்தில் வைத்துக் கொண்டு, முதலமைச்சரின் அறிவிப்புக்கிணங்க அவர்கள் பேரில் உள்ள வழக்குகளை வாபஸ் பெற்று, அவர்களுக்குச் சரியான பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நடவடிக்கையை மேற்கொள்வதன் மூலமாக அவர்களுக்கு ஒரு திருப்தியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். முதலமைச்சரின் அறிக்கையும் அப்பொழுதுதான் நிறைவேற்றப்பட்டதாக ஆகும்.

அடுத்து, சேரன் போக்குவரத்துக் கழகம். அதன் உள்விவகாரங்களில் நான் போக விரும்பவில்லை. அது ஒரு தனி கார்ப்பரேஷனாக அமைக்கப்பட்டு இருப்பதால், அங்கேயுள்ள அதிகாரிகள், அரசு தலையீடு இருக்காது என்ற எண்ணத்தில் சுயேட்சையாக செயல்படுகின்றனர். தனியார் துறையில் இருந்த பேருந்துகளையெல்லாம் எடுத்துக்கொண்டபோது, இப்போது அங்கே இருந்த தொழிற் சங்கமும் அப்படியே இருக்கிறது. அப்படியிருந்தும், முன்பு தனியாரிடம் இருந்த அதே சங்கம்தான் செயல்பட்டு வருகிறது. வேறு சங்கம் வைக்க விடமாட்டேன் என்கிறார்கள். ஆளும் கட்சிக்காரர்கள் சங்கம் வைப்பது என்றால் கூட முடியாது. நிர்வாகத்திற்கு ஒத்த வகையில் சங்கம் இருக்க வேண்டும் என்று அங்குள்ள அதிகாரிகள் விரும்புகிறார்கள். அந்த வகையில் காரியங்களைச் செய்து வருகிறார்கள். சி.ஐ.டி.யு. ஒரு தொழிற் சங்கம் துவங்க நடவடிக்கை எடுத்தது. அதனால் 16 தொழிலாளர்கள் வேலை இழந்தனர், 30 பேர் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளனர். தனி கார்ப்பரேஷனாக இருப்பதால் அங்கேயுள்ள அதிகாரிகள் தங்கள் இஷ்டம்போல் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்ற ஆணவத்தில் செயல்பட்டு வருகிறார்கள். நேற்றையதினம் ஏற்பட்டு இருக்கும் சம்பவம் இந்த நிலையின் காரணமாகத்தான் ஏற்பட்டது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.





அடுத்து, வேலை நிறுத்தத் தடை சட்டம்—டிரான்ஸ்போர்ட் ஊழியர்களின் வேலை நிறுத்தம் நடைபெற இருந்தபோது அதைத் தடை செய்யும் வகையில் கொண்டு வரப்பட்டது. அந்தச் சட்டம் தானாகவே காலாவதி ஆவதற்கான சூழ்நிலையை அரசு ஏற்பாடு செய்து இருக்கிறது. அது வரவேற்கத் தக்கதொன்றாகும். இருப்பினும், ஒரு சட்டம் தானாகவே காலாவதி ஆகவேண்டும் என்று சொன்னால் அதற்கு 6 மாதம் ஆக வேண்டும். இப்போது 3 மாதம் தான் ஆகியிருக்கிறது. இன்னும் 3 மாத காலம் காத்து இருக்க வேண்டுமா? அதுவரை அந்தச் சட்டம் செயல்பட்டுக் கொண்டிருக்க வேண்டுமா? அந்தச் சட்டம் தேவையில்லை என்றால், அப்படி முடிவு செய்து விட்ட பிறகு, அதை ரத்து செய்ய அறிவிப்பு கொடுக்க வேண்டாமா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு) முதலமைச்சர் அவர்கள் அந்தச் சட்டத்தை ரிப்பீல் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டிருக்கிறபோதே, அந்தச் சட்டம் ரத்து செய்ய ஆணை ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டு விட்டது என்று சொன்னதற்கு மிக்க மகிழ்ச்சி. நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள ஒரு பிரச்னை. அறநிலையத் துறையைச் சேர்ந்தது. நெல்லிக்குப்பம் அருகே எய்தனூர் வேதபுரீஸ்வரர் ஆலயம் இருக்கிறது. அதற்கு பாரம்பரியமாக ஒரு டிரஸ்டி இருந்து வருகிறார். அந்தக் கோவிலுக்குச் சொந்தமான 20—21 ஏக்கர் நிலத்தை அவர் பரிபாலித்து வருகிறார். அந்தக் கோவில் பாழடைந்து போயிருக்கிறது. அதை புனரமைக்க எந்தவிதமான செலவும் செய்யப்படவில்லை. கோவிலுக்கு இருக்கும் பூசாரிக்கு மட்டும் மாதம் 2 மூட்டை

[திரு. சி. கோவிந்தராசன்] [1978 செப்டம்பர் 1

நெல் கொடுக்கப்படுகிறது. வருமானம் அதிகம் இருக்கிறது. ஆனால், அந்தக் கோவில் சரிவர நிர்வகிக்கப்படவில்லை. நான் இது சம்பந்தமாகக் கேள்வி எழுதிக் கொடுத்து இருக்கிறேன். அதன் பிறகு அது சம்பந்தமாக விசாரணை நடைபெற்று அவர்களிடமிருந்து அந்த நிலம் எடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் நிலை என்ன என்று சொன்னால், இந்த நிலங்கள் பூராவையும் குத்தகைக்கு விடவேண்டும் என்று சொன்னால், அங்கேயுள்ள எக்சிகியூடிவ் ஆபீசர் அதனை ஏலத்தில் தான் விடவேண்டும் என்று சொல்கிறார். அது தான் இன்றைக்குள்ள சட்டம் என்று சொல்கிறார். அப்படிச் சட்டம் இருந்தால் அதனை மாற்ற வேண்டும், திருத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏலத்தில் எடுக்க விரும்புகிறவர்கள் 100 ரூபாய் கட்ட வேண்டும். குத்தகை எடுத்த உடனே ஒரு ஆண்டு குத்தகையை உடனே கட்ட வேண்டும் என்று நிபந்தனை போடுகிறார்கள். இதனால் ஏழை அரிசனங்கள், ஏற்கனவே குத்தகை எடுத்து இருப்பவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இந்த நிலைமைகளின் காரணமாக, பெரிய நிலச்சுவான்தார்கள்தான் பணம் கொடுத்து தங்களுக்கு வேண்டிய ஆட்களை விட்டு ஏலத்தில் எடுக்கச் சொல்லி, அதனை அனுபவித்து வருகிறார்கள். ஆகவே, இந்த நிலையை மாற்றி, நியாயமான முறையில் விவசாயிகளுக்கு உதவி செய்யும் வகையில் அரசு நடவடிக்கை எடுத்து, அதைச் சீர்திருத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிப்பட்ட நிலைமைகள் மாற்றப்பட

(முற்பகல் 11-40)

வேண்டும். நிலச்சுவான்தாரே, அதாவது ஏற்கனவே அந்த நிலத்தை வைத்துக் கொண்டிருக்கிறவரே தொடர்ந்து அந்த நிலத்தை அனுபோகத்தில் வைத்துக் கொள்ள ஏதுவாக இருப்பது சரியல்ல. சட்டத்தில் அப்படிப்பட்ட நிலைமை இருக்குமானால் அதைச் சரிசெய்ய முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வகுப்புக் கலவரம் மீண்டும் தலைதூக்கக் கூடாது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அது பற்றி சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி, அதில் தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கான



1978 செப்டம்பர் 1] [திரு. சி. கோவிந்தராசன்]

ஆலோசனைகளை கேட்டறிந்து, மீண்டும் வகுப்புக் கலவரங்கள் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. கே. கந்தசாமி: தலைவரவர்களே, இந்த அவை முன்பு வைக்கப்பட்டிருக்கிற ஆளுநர் அவர்களுடைய உரையின்மீது இந்திய தேசிய பார்வேர்டு ப்ளாக் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களை இங்கே கூற வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியையும் மகிழ்ச்சியையும் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டு மக்களுக்கு இன்றைய முதலமைச்சர் அவர்கள் தேர்தல் காலத்திலே அளித்த வாக்குறுதிகள் செயலாக்கப்படும் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால், இன்று நடைமுறையில் பார்த்தால் அந்த வாக்குறுதிகள் எதுவும் நடைமுறைக்கு வரவில்லை என்பதை இங்கே கூறிக்கொள்ள மெத்த வருத்தப்படுகிறேன்.

நான் அப்படிக் கூறும்போது இதற்கு முந்திய சட்டமன்றக் கூட்டத்தில் பேசியதற்கு மாறுபட்ட கருத்தைக் கூறுகிறேனே என்று எனது அருமை ஆளும் கட்சி சகோதரர்களும் தோழமைக் கட்சிக்காரர்களும் ஆச்சரியப்படலாம். ஆனால் என்னைப் போன்றவர்கள் சட்ட மன்றத்திற்கு வருவது, நாட்டிலே நடக்கின்ற நடைமுறைகளை எடுத்துச் சொல்லி பரிகாரம் தேடுவதற்கே தவிர மனசாட்சிக்கு விரோதமாக இருந்து, குறைகளை எடுத்துச் சொல்லாமல் பொழுது போக்கிற்காக அல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணர்வார்கள்.

மதுவிலக்கைப் பொறுத்தமட்டில் அதை ஒழித்தே தீருவோம் என்றார்கள். காந்தியடிகளும் சொன்னார்கள்; மற்றும் தேசத் தலைவர்கள் எல்லாம் கூடச் சொன்னார்கள். ஏழை எளிய மக்களுக்கு பெருத்த பாதகம் விளைவிப்பது இந்த மதுதான்; அதை ஒழித்தால்தான் அவர்கள் வாழ முடியும் என்றார்கள். தீண்டாமையை ஒழிப்பதைப் போல இதையும் ஒரு சமுதாயச் சீர்திருத்தமாகக் கருதி, அதை இந்த நாட்டை விட்டே போக்க வேண்டும் என்றார்கள். அதை காங்கிரஸ் கட்சி செய்யத் தவறியிருந்தாலும், நாங்கள் செய்துகாட்டுவோம் என்று விரசபதம் ஏற்றுக்கொள்வதாக நம்முடைய முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். நான் சென்ற கூட்டத்திலேயே அதைப் பற்றிக் குறிப்பிட்டேன். முதலமைச்சருடைய நல்ல உள்ளத்தைப் பாராட்டுகிறேன்; நீங்கள் நல்ல எண்ணத்தோடு அறிவித்திருக்கிறீர்கள்; ஆனால் இன்றைய அரசியல் பிரச்சனையில் நீங்கள் கூறிய கருத்து, நீங்கள் வைத்திருக்கிற கோரிக்கை நிறைவேறுமா? மக்களுடைய ஒத்துழைப்பு இருக்குமா என்று கேட்டு, அவர்கள் முயற்சிக்கு ஆண்டவன் தான் அருள வேண்டுமென்று வேதனையோடு சொன்னேன். அதையேதான் இப்போதும் கூற வேண்டியிருக்கிறது.

எங்கு பார்த்தாலும் போலீஸ் நிலையத்திலே போலீஸ் அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் கள்ளச் சாராயம் காய்ச்சுவதும் குடிப்பதும் நடக்கிறது என்பதை மதுரை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் பேசும்போது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்—அவர் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்—திரு. பாலகுரு அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். அதைப்போல சமயநல்லூர் உறுப்பினர் அவர்களும் குறிப்பிட்டார்கள். அப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் குறுக்கிட்டு, அந்த போலீஸ் அதிகாரி யார் என்று கேட்டு, அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அப்போது அதற்குப் பொறுப்பு யார் யார் என்று விளக்கமாகச் சொல்லப் பட்டது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, காவல் நிலையத்தில் என்று அவர்கள் குறிப்பிட்டார்களா? அல்லது வேறு இடமா?



திரு. கே. கந்தசாமி: காவல் நிலைய சரகத்தில், காவல் நிலையத்தைச் சுற்றி அந்தத் தவறு நடக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். டிஸ்டிரிக்ட் டெவெலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்திலே அதைச் சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, நம்முடைய சட்ட மன்றத்தினுடைய சம்பிரதாயத்தின்படி ஏதாவது ஒரு குற்றச்சாட்டு ஒரு உறுப்பினர் மீது சொல்லப்பட்டு, அந்த உறுப்பினர் மறுத்துப் பேசினால், மறுபடியும் அதை உறுப்பினர் குறிப்பிடக் கூடாது என்ற நடைமுறையை ஏற்கெனவே நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆகவே, அந்தப் பகுதி குறிப்பில் இடம் பெறக்கூடாது; அந்த குறிப்பிட்டப் பகுதியை எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. கே. கந்தசாமி: அப்படி அவர்கள் சொன்னது இல்லை என்று மறுத்து இருப்பார்களானாலும் அது மதுரை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தின் ரிக்கார்டிலே இருக்கிறது. அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்று சொன்னேனே தவிர வேறல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, அந்த அளவுக்கு ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களைப் பற்றிச் சுட்டிக்காட்டுவதற்குக் காரணம் குறை கூறுவதற்காக அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். It has become more prevalent now-a-days.

அந்த அளவுக்கு அதிகாரிகள் இந்த மாதிரி காரியங்களுக்கு உறுதுணையாக இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. நம்முடைய மக்கள் இதனை ஒரு காட்டேஜ் இண்டஸ்ட்ரீஸ் போன்று கிராமப்புறங்களிலே நடத்துவதை நினைக்கும்போது மிகவும் வேதனைக்குரிய ஒன்றாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த தேர்தல் காலத்தில் அரசு தரப்பின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அளித்த வாக்குறுதியினை நிறைவேற்றுகின்ற வழியில் இவையெல்லாம் இடையூறாக இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, விவசாயிகள் பிரச்சினை. இந்த விவசாயிகள் பிரச்சினையை எடுத்துக் கொண்டால் சில முதலாளிகள் மூலகாரணமாக இருந்து தூண்டிவிடுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஒரு சில பெரு விவசாயிகளும் இருக்கலாம். நான் அதை மறுக்கவில்லை. ஆனால் இந்தப் போராட்டத்திலே வைக்கப்பட்டிருக்கின்ற 9 அம்ச கோரிக்கைகளை பரிசீலித்துப் பார்த்தால் அதிலே ஏழைகளுக்கு ஆதரவான கோரிக்கை எதுவுமே இல்லை என்பதைச் சொல்ல முடியுமா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அங்கே 24 மணி நேரமும் மிகுந்த கஷ்டப்பட்டு உழைத்துக் கொண்டிருக்கும் விவசாயிக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது? விவசாயிகளுக்கு அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கான சரியான விலை கிடைப்பதில்லை. நிலங்களிலே வேலை பார்க்கின்ற தொழிலாளர்களுக்கெல்லாம் நாம் அவர்களுடைய சம்பளத்தை 5 ரூபாய் 9 ரூபாய் என்று உயர்த்திக் கொண்டு போகிறோம். இப்படி அவர்களுக்கெல்லாம் பாதுகாப்பு இருக்கின்றது. ஆனால், விவசாயிகளுக்கு என்ன பாதுகாப்பு இருக்கின்றது? இன்னும் பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தைக் கூட நாம் கொண்டு வரக்கூடிய நிலையில் இல்லை. நம்மால் முடியவில்லை. விவசாயிகள் ரொம்பவும் முக்கியமானவர்கள்.

The backbone of the Indian economy is agriculture. Most of the agriculturists remain in villages.

ஆகவே, விவசாயிகளின் போராட்டத்தையும் அவர்களுடைய பிரச்சினைகளையும் நியாயமான முறையில் நாம் அணுக வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று மதுரையிலே ஹைகோர்ட் பெஞ்ச் அமைக்க வேண்டும் என்பது ஒரு நீண்ட கால கோரிக்கையாக இருந்து வருகின்றது. அதற்கு அமைச்சரவர்கள் கூட சிபாரிசு செய்திருப்பதாக அறிகிறேன். அங்கே இந்தக் கோர்ட்டை அமைக்க வேண்டும் என்று வக்கீல்கள் உண்ணாவிரதம் இருக்கப் போகிறோம் என்று சொல்கின்ற சூழ்நிலை கூட இருக்கிறது. ஆனால் இந்தக் கோர்ட் அமைக்கும் விஷயத்தில் ஹைக்கோர்ட் நீதிபதி தான் குறுக்கே நிற்பதாகத் தெரிகிறது. வருகின்ற 9 ஆம் தேதி



அவர்கள் உண்ணாவிரதம் இருக்கப் போகிறோம் என்று அறிவித்திருக்கிறார்கள். நான் கூட வேண்டாம், அவசரப் படாதீர்கள் என்று சொல்லி சமாதானம் சொல்லி இருக்கிறேன், என்றாலும், அவர்கள் கேட்பதாக இல்லை.

அடுத்தபடியாக, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இங்கே ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கின்ற அடிப்படையில் யாருடைய குறைகளாக இருந்தாலும் உரிய நேரத்தில் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படுமேயானால் அந்தக் குறைகள் தீர்க்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். நான் அதை வரவேற்கிறேன். ஆனால் துரதிர்ஷ்டவசமாக, மதுரைப் பல்கலைக் கழகத்திற்குச் செய்யப்பட்ட பெயர் மாற்றம் குறித்து முதலமைச்சருக்குக் கறுப்புக் கொடி காட்டுகின்ற சூழ்நிலை மக்களிடத்திலே ஏற்பட்டிருக்கிறது. என்னுடைய கட்சியின் சார்பாகக் கூட கறுப்புக் கொடி காட்ட வேண்டும் என்று பலர் கூறினார்கள். ஆனால், அதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று தீர்மானம் கூட போட்டிருக்கிறோம். ஆனால், மாணவர்கள் சார்பாகவும், விவசாயிகள் சார்பாகவும் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சுருளியாறு மின் திட்டத்தைத் திறந்து வைப்பதற்காக வந்த சமயத்தில் அவருக்குக் கறுப்புக் கொடி காட்டப்பட்டது. பல கிராமங்களிலே இவ்வாறு காட்டப் பட்டிருக்கிறது.

மற்றவர்களைக் கைது செய்ததோடு எங்களையும் கைது செய்திருக்கலாம் ஏதோ நாங்கள் நல்லவர்கள் போலவும், எங்களோடு இருப்பவர்கள் தவறு செய்தவர்கள் போலவும் அவர்களைக் கைது செய்து இருக்கிறார்கள். கறுப்புக் கொடி காட்ட முயன்ற சிலரை போலீஸார் தாக்கியிருக்கிறார்கள். தாய்மார்கள் உட்பட பலர் காயமடைந்திருக்கிறார்கள். ரிக்கார்ட் பர்பஸ்க்காக, அபிஷியலாக 79 பேர்கள் என்று காண்பித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** உறுப்பினர் அவர்கள் கறுப்புக் கொடி நிகழ்ச்சி பற்றி குறிப்பிட்டு சிலர் காயமுற்றிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்படி காயமுற்றவர்கள் எவரேனும் மருத்துவமனையில் சேர்ந்தனரா, என்பதைப் பற்றிய விவரங்களைத் தெரிவிக்க முடியுமா ?

**திரு. கே. கந்தசாமி :** நிறையப் பேர்கள் இருக்கிறார்கள். பெயர்களை, அவர்களது விலாசங்களை வேண்டுமானாலும் நான் அமைச்சர் அவர்களிடம் தருகிறேன். அரசாங்க மருத்துவ மனையில் போலீஸ் ரீதியாக அனுப்பப்படவில்லை. க்ரைம் ப்ராஞ்சோடு நான் 3 மணி வரை இரவோடு இரவாக இருந்தேன். உப்புமா கூட அவர்கள் வாங்கித் தந்தார்கள். போலீஸ் அதிகாரிகள் அன்போடு இருந்தார்கள். ஆனால், அடிபட்டவர்களுக்கு ட்ரீட்மென்ட் கொடுக்கப்படவில்லை. அவர்கள் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்படவில்லை. ப்ரைவேட் ட்ரீட்மென்ட்க்கும் செல்ல அனுமதிக்கவில்லை. இதுதான் உண்மை நிலை.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துக் கட்சிகள் அல்லது பொதுமக்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். தயவுசெய்து அவர்கள் சிறிது விளக்கமாகச் சொன்னால் பரவாயில்லை. எதற்காகக் கறுப்புக் கொடி காட்ட விரும்பினார்கள் என்பதை அவர்கள் சொன்னால் நல்லது.

**திரு. கே. கந்தசாமி :** அது, மதுரை பல்கலைக் கழகம் பெயர் மாற்றம் குறித்து. காமராஜ் அவர்களின் பெயரை வைக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் மதுரை மாநகராட்சித் தேர்தல் நடக்க நான்கு நாட்கள் இருக்கும்போது மதுரையில் வந்து அறிவிப்புக் கொடுத்தார்கள்.





**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவுசெய்து தேதிகளையும் நாட்களையும் மனதில் கொண்டு சொன்னால் நல்லது. காமராஜ் அவர்களுடைய பிறந்த நாள் நடந்தபோது சென்னையில் அது தெளிவாக வெளியிடப்பட்டது. அதற்குப் பிறகுதான் நான் மதுரைக்கே வந்தேன்.

**திரு. கே. கந்தசாமி :** தேர்தல் வருகிறதை வைத்து அறிவித்ததாக மக்கள் கருதுகிறார்கள்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, பின்னால் நான் பதில் சொல்ல முடியும் என்றாலும், நீண்ட பேச்சாக வந்துவிடக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். அப்படி நாம் வைப்பது சரி என்பதை மதுரை மக்கள் ஒத்துக் கொண்டார்கள் என்பதைத்தான் தேர்தல் முடிவு காட்டுகிறது.

**திரு. கே. கந்தசாமி :** தேர்தல்களைப் பற்றிய விவரங்களுக்கு வருகிறேன். காமராஜ் அவர்களின் பெயரால் பெயர் மாற்றம் செய்யப்பட்டது முறையா அல்லது அவசியந்தானா என்பது குறித்து, அதை எதிர்த்து தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அப்போது என் வாதப் பிரதிவாதங்களை அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கறுப்புக் கொடி காட்டுவது மரபு என்று தாங்களே சொல்லியிருக்கிறீர்கள். தங்கள் தலைமையிலேயே கறுப்புக் கொடி காட்டப்படவில்லையா ? மாண்புமிகு அமைச்சர் திரு. சௌந்தரராஜன் அவர்கள் காயமடைந்தனர். தி.மு.க.வினர் எந்த அளவிற்கு வேதனைக்குள்ளானார்கள் என்பதை நாங்கள் அறிவோம். அந்த அளவிற்கு கறுப்புக் கொடி காட்டி தாங்கள் தலைமை தாங்கி, நடத்திக் காட்டி, அது ஜனநாயக மரபு என்று சொல்லி, மற்றவர்களுக்கு வழிகாட்டிவிட்டு, மற்றவர்களுக்குக் கறுப்புக் கொடி காட்டுவது என்று வரும்போது அதை பொறுமையோடு ஏற்றிருக்கலாம். அப்படியானால் முன்பே பிரிவென்டிவ் டிட்டென்ஷன் ஆக்ட் படி இல்லீகல் அன்ட் அன்வாரன்டெட் என்ற முறையில் கைது செய்தீர்கள். உணர்ச்சி வயப்பட்டு கறுப்புக் கொடி காட்ட வருகிறபோது அவர்களை அடித்துக் கைது செய்வது என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

அதற்குப் பின்னால் அவர்கள் சுருளியாற்று விழா முடிந்து, கம்பத்தில் பேசுகிறபோது ஏதோ ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தூண்டிவிட்டதுபோல கருத்து வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. கறுப்புக் கொடி காட்டி அவர்கள் எந்தப் பெரிய காரியத்தையும் சாதித்துவிடப் போவதில்லை. ஏதோ தங்கள் எதிர்ப்பை—தங்கள் உணர்வை தெரிவிப்பதற்காகத் தான் கறுப்புக் கொடி காட்ட வேண்டும் என்று தீர்மானித்தார்கள். வயலன்ஸ் ஏற்படும் என்று தெரிந்தால் முன்கூட்டியே அவர்களைக் கைது செய்திருக்கலாம். ஆனால், இதைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் பேசியதிலிருந்து மக்களிடையே தவறான கருத்து பரவியிருக்கிறது. ஏதோ சில சமுதாயத்தினர் தான் இதைத் தூண்டிவிட்டிருக்கிறார்கள். இதற்கும் அந்தச் சமுதாயத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. எங்கள் கட்சிக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. அகில இந்திய தேசிய பார்வேர்டு பிளாக் உசிலம்பட்டி கிளைதான் இந்த முடிவை எடுத்திருக்கிறது. எங்கள் கட்சியின் மேலிடத்திலிருந்து நாங்கள் அனுமதி கொடுக்கவில்லை.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உறுப்பினர் மரியாதைக்குரிய கந்தசாமி அவர்கள் என் சார்பாகப் பேசுவதற்கு "நன்றி" செலுத்துகின்றேன். தலைமைக்கு கட்டுப்படாதவர்கள் எப்படியிருப்பார்கள் என்பதை எல்லோரும் எண்ணிப் பார்த்துக் கொள்ளலாம்.

**திரு. கே. கந்தசாமி:** கட்சியின் சார்பாக அப்படி எதாவது நடந்திருந்தால் அவர்களைக் கைது செய்வதைப் பற்றி எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் பொது மக்கள் சார்பில் கறுப்புக் கொடி காட்டியதற்காக கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். கருப்பையா நாடார் என்பவர், நாடார் சமுதாயத்தைச் சேர்ந்தவர், அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். ஆண்டிப்பட்டியில், மதிவாண நாயுடு என்பவரை அவர் என்னோடும், பெருமாள் அவர்களோடும் பேசிக் கொண்டிருந்த போது, ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றார்கள். இடையப் பட்டியில் கோனார் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள்.



**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, பணிவோடு ஒரு விஷயத்தைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். காமராஜ் அவர்களுடைய பெயர் வைப்பது தவறு என்று கருதுகிறார்களா என்பதைத் தெளிவாகச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கே. கந்தசாமி:** மதுரை என்றிருந்ததை எடுத்துவிட்டு இப்படி மாற்ற வேண்டியது அவசியம் தானா என்பது தான் கேள்வி. நாட்டில் அவர்களுக்கு எத்தனையோ நினைவுச் சின்னங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. பல இடங்களில் காமராஜ் அவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. பல சாலைகளுக்கு அவர்களுடைய பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு என்றைக்கும் மரியாதை தெரிவிப்பவர்கள் தான் நாங்கள், அவர்களுடைய தியாகத்தை ஏற்றுக்கொள்ளாத கூட்டம் அல்ல நாங்கள். ஆனால், மதுரை என்பது மனித வர்க்கத்திற்கே தமிழைத் தந்த பெருமை வாய்ந்த, புகழ் வாய்ந்த இடம், உலக நாகரிகத்தில், ரோமானிய நாகரிகம் தோன்றுவதற்கு முன்பிருந்தே தமிழ் நாகரிகம் தோன்றிய இடம் மதுரை—இதற்கு பல சரித்திரச் சான்றுகள் இருக்கின்றன. ஏற்கனவே நேரு அவர்களுடைய பெயரை வைக்க வேண்டும் என்று தீர்மானித்த நேரத்தில் முன்னாள் முதல்வர் திரு. பக்தவத்சலம் அவர்களால் தனிப்பட்டவர்களின் பெயரை மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு வைக்கக் கூடாது என்று நிறுத்தி வைக்கப்பட்டது. திரு. சிட்டிபாபு வைஸ் சான்சிலராக இருந்தபோது செனட் சபையில் இதற்கான தீர்மானம் கொண்டு வந்தபோது, அப்போது தனிப்பட்டவர்களின் பெயர் வைக்க வேண்டிய அவசியமில்லை என்று தீர்மானிக்கப்பட்டது. காசிப் பல்கலைக் கழகம் பெயர் மாற்றப்படாமல் எப்படி இருக்கிறதோ அதே போல் மதுரை பல்கலைக் கழகமும் இருக்க வேண்டும் என்பது தான் மக்களுடைய விருப்பமாகும். காமராஜ் அவர்களைப் பற்றிச் சொல்லும்போது, அவர்களுடைய தியாகத்தை நாம் எப்போதும் புகழ்ந்து கொண்டிருக்கிறோம், அவர்களுடைய தியாகத்தை நாம் பாராட்டுகிறோம். ஆனால், அதே நேரத்தில் மதுரை என்கின்ற பெயரை எடுத்துவிட வேண்டியது அவசியம் தானா என்பது தான் இப்போதுள்ள கேள்வி. . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மதுரை என்ற பெயர் சேர்க்கப்படவில்லை என்பது தான் குறை என்று தெரிகிறது. அப்படியானால் மதுரை என்பது சேர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: மதுரைப் பல்கலைக் கழகம் என்று இருக்கும் என்று தெரிவிக்கப்படுமானால் அதை நான் வரவேற்பேன். . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் தெரிவிக்க விரும்புகிறேன். மதுரை என்ற பெயர் இருக்கும், அத்துடன் மரியாதைக்குரிய காமராஜ் அவர்களின் பெயரும் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெருந்தன்மையோடு மதுரைப் பல்கலைக் கழகத்தின் பெயர் முன்பிருந்தவாறே 'as it were before' இருக்க மறுபரிசீலனை செய்ய வேண்டும். * *
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து இப்போது உறுப்பினர் அவர்கள் சொன்ன வார்த்தைகளை பதிவேட்டுக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில் * * *
என்ற ஒரு கருத்து வந்துவிடக் கூடாது என்பதற்காக, அவர் கூறிய அந்த வார்த்தைகளை குறிப்பேட்டிலிருந்து நீக்க உத்தரவிடுமாறு தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

---

* * * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் பேசிய கருத்து வேறுவிதமாகப் போகும் என்ற காரணத்தினால், நான் அந்த வார்த்தைகளை எல்லாம் குறிப்பேட்டிலிருந்து நீக்கி விடுவதற்கு உத்தரவிடுகிறேன்.

திரு. கே. கந்தசாமி: நீக்கியதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இதை நான் உள்நோக்கத்தோடு சொல்லவில்லை. மதுரைப் பல்கலைக் கழகம் என்று as it were before ஏற்படுத்துவதற்கு தாங்கள் மீண்டும் இதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: (மணியடிக்கப்பட்டது) ஏற்கனவே 20 நிமிடங்கள் ஆகிவிட்டன. சீக்கிரம் முடியுங்கள்.

திரு. கே. கந்தசாமி: முடித்து விடுகிறேன். அடுத்தபடியாக, விழுப்புரம் சம்பவத்தைப் பொறுத்தவரையில். இந்த அரசு இன்னும் விரைவாகச் செயல்பட்டிருக்குமானால். இந்த அரிசன மக்கள் கொலை செய்யப்பட்டிருக்க மாட்டார்கள். இப்படிப்பட்ட ஒரு கருத்து இரு சாரார்களிடையேயும் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விசாரணையில் இருப்பதால், தாங்கள் இது குறித்துப் பேச வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். தவிர, நேரமாகி விட்டது. அமருங்கள்.

திரு. பொ. காளியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் உரையின்மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றி சொல்லிப் பேச விழைகிறேன். கிராமங்களிலே தொழில் வளம் ஏராளமாகப் பெருகுவதற்கும், தமிழகத்தில் ஏறத்தாழ 1,500 நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளதாகவும், மழைவளம் காப்பதற்கும், இப்படி இந்த நாட்டு மக்கள் நன்மை அடையக்கூடிய பல திட்டங்களை ஆளுநர் அவர்கள் தம் உரையிலே கூறியிருக்கிறார்கள்.

குறிப்பாக, இந்த அரசு பொறுப்பேற்ற ஓராண்டு காலத்தில் விலை உயர்வு கட்டுப்படுத்தப்பட்டு வந்துள்ளது என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். குறிப்பாக, தை மாதத்திலிருந்து ஆடி மாதம் வரை நெல் விலை ஒரே வரையறையில் இருந்தது. எனக்குத் தெரிந்தவரையில் எந்த அரசு காலத்திலும் இப்படி இல்லை என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். 58 கிலோ உள்ள ஒரு மூட்டை தை மாதத்தில் 55 ரூபாயாக இருந்தது; சித்திரை மாதத்திலும் அதே விலைதான் இருந்தது; பின்னர் ஆடி மாதமும் அதே விலையில் இருந்தது; இந்தப் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே தவிர, வேறு எந்த ஆட்சியிலும் இல்லை என்பதை நான் மிகமிகப் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஏழை எளிய மக்கள், சாதாரண மக்கள் நாளொன்றுக்கு 5 ரூபாய் கூலி வேலை செய்து, படி அரிசி 2½ ரூபாய், 3 ரூபாய்க்கு வாங்கி, தங்கள் வாழ்க்கையை நல்ல முறையில் நடத்துவதற்கு வசதியாக இந்த விலைக் கட்டுப்பாடு இருந்ததற்கு அவர்கள் இந்த அரசை மனதாரப் பாராட்டுகிறார்கள். நானும் மனதாரப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். நியாய விலைக் கடைகள் கிராமங்களில் மிகவும் நல்ல முறையில் நடந்து கொண்டிருக்கின்றது. மக்கள் எல்லாம் தங்களுக்கு வேண்டிய எல்லாச் சாமான்களையும் இந்த நியாய விலைக் கடைகளிலேதான் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். மற்ற தனியார் கடைகளில் இதனால் வியாபாரம் குறைந்திருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், இந்த அரசு இராமநாதபுரம் மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவும், திருநெல்வேலி மாவட்டத்தில் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாகவும் இந்த நியாய விலைக் கடைகளை நடத்திக் கொண்டு வருகிறது. கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும், உணவுத் துறை அமைச்சர் அவர்களும் இந்த நியாய விலைக் கடைகள் இன்னும் நல்ல முறையில் நடப்பதற்கான உத்திரவினைப் போடுமாறு கேட்டுக் கொள்கிறேன். மக்களும் இந்தக் கிராமங்களிலே நடக்கக்கூடிய நியாய விலைக் கடைகளை நல்ல முறையிலே வரவேற்கிறார்கள் என்பதை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.





அதேபோல, சீனி, கடலெண்ணெய் ஆகியவைகளின் விலையும் மக்களுக்கு எளிதாகக் கிடைக்கக்கூடிய வகையில் விலைவாசி குறைந்து கொண்டே வருவதைக் கண்டு மக்கள் இந்த அரசைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மழை வளம் காப்பதிலே, இதற்கு முன்னே இருந்த அரசெல்லாம் காடுகளைத் தனியாருக்கு அசைன்மெண்டு கொடுத்ததன் காரணமாக, அவர்கள் அங்கே உள்ள மரங்களை எல்லாம் வெட்டி வீழ்த்தியதன் காரணமாக, நமது நாட்டிலே மழை வளம் குன்றி விட்டது. அதன் காரணமாக, இப்போது 3 கோடி ரூபாய்ச் செலவில் திட்டமிடப்பட்டு, அத்திட்டத்தின் கீழ் இவ்வாண்டு கிட்டத்தட்ட 26 இலட்சம் ரூபாய் செலவில், 1500 ஹெக்டேரில் காடுகள் வளர்ப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக ஆளுநர் அவர்கள் உரையிலே கூறப்பட்டுள்ளது. இப்படிக் காடுகள் வளர்ப்பதால், மரங்கள் கிடைக்கும். இதுவும் ஒரு நல்லதொரு காரியமாகும். அப்படிக் காடுகள் வளர்ப்பதோடு மட்டுமல்லாமல், ரெவின்யூ கண்மாய்களிலே கருவேல மரங்களையும் வளர்ப்பதற்கு இந்த அரசு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் கூத்தக்குடி சண்முகம் அவர்கள் பேசும்போது பாறைக்குழியில் பெய்யளூர் கிராமத்தில் கருவேல மர ஏலத்தில் தலையிட்டதால் தகராறு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். யாரோ அவர்களுக்குத் தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். 150 ரூபாய் பணத்தைக் கட்டிவிட்டு பத்தாயிரம் ரூபாய் பெறுமான மரத்தை வெட்டியிருக்கிறார்கள். அதுபற்றி கலெக்டருக்கும், சப் கலெக்டருக்கும் எழுத்து மூலம் தெரியப்படுத்தப்பட்டதன் பேரில் அது நிறுத்தப்பட்டது. வேண்டியவர்களுக்கு ஒன்றும் கொடுக்கப்படவில்லை.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம்: நான் சொன்னது தவறாக இருந்தால் என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக்கொள்ளத் தயார். விவரங்களைத்தான் சொன்னேன். ஒரு மாதத்திற்குள்ளாக மாற்றி மாற்றி எட்டு தடவை உத்தரவு

[திரு. கூத்தகுடி ச. சண்முகம்] [1978 செப்டம்பர் 1

போடப்பட்டிருக்கிறது. அந்த முறை தவறு என்றுதான் சொன்னேனே தவிர வேண்டியவர்களுக்குக் கொடுக்கப்பட்டது என்று சொல்லவில்லை. முதலிலே ஒரு உத்தரவு, மறுபடியும் வேறு உத்தரவு என்ற முறை சரியல்ல. ஆர்டர் காப்பிகள் எல்லாம் சமர்ப்பித்திருக்கிறேன். அதைப் படித்துப் பார்த்து விட்டு அதற்குப் பிறகு பேச வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பொ. காளியப்பன்: 150 ரூபாய்க்கு 10,000 ரூபாய் மதிப்புள்ள மரத்தை அங்குள்ள முக்கியஸ்தர் ஏலம் எடுத்தார். அதுபற்றி சப் கலெக்டருக்குத் தெரியப்படுத்தப்பட்டதால் அவர் எடுத்தது மறுக்கப்பட்டது. கிராம முன்சீப், அதிகாரி தவறு செய்தது தெரிய வந்தால் டி.ஆர்.ஓ. விடம் முறையிட்டு. டி.ஆர்.ஓ. கலெக்டரிடம் தெரிவித்து, அதை ரத்து செய்திருக்கிறார்கள். நேற்றுக்கூட அங்கிருந்து எனக்குத் தந்தி கொடுத்துள்ளார்கள். அங்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளரைக் கட்டி வைத்து அடித்துள்ளார்கள். அவர் சீரியசாக இருப்பதாகவும், ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருப்பதாகவும் தந்தி வந்திருக்கிறது. இதைப் பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இந்த அரசு மதுவிலக்கை ஒழிப்பதில் கடுமையாக இருப்பதாக கவர்னர் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மதுவிலக்கை ஒழிப்பதில் இந்த அரசு கடுமையாக இருப்பதாகச் சொல்லுகிறார். அது உண்மைதானா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. பொ. காளியப்பன்: மதுவை என்று திருத்திக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

கிராமங்களிலும் சிறு நகரங்களிலும் இருக்கும் பெரிய பணக்காரர்கள் சாதாரண மக்களை விலைக்கு வாங்கி அவர்கள் மூலமாக சாராய விற்பனையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மேல் எல்லாம் அரசு கடுமையான நடவடிக்கைகளை



1978 செப்டம்பர் 1] [திரு. பொ. காளியப்பன்]

எடுத்துக் கொண்டு வருகிறது. இன்னும் ஓராண்டு காலத்திற்குள் தமிழகத்தில் மதுவை அறவே ஒழித்துவிடுவார்கள் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கவர்னர் உரையில் பட்டுத் தொழிலைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் பட்டு உற்பத்திக்காக நல்ல முறையில் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒவ்வொரு கிராமமாகச் சென்று ஒரு ஏக்கர் வைத்திருப்பவர்களுக் கெல்லாம் பட்டு உற்பத்தி செய்ய வாய்ப்பாக, தேசியமயமாக்கப் பட்ட வங்கிகளின் மூலமாகக் கடன் கொடுக்கச் செய்து, அந்தத் தொழிலை நடத்த வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தந்து கொண்டிருக்கிறார்கள். இதனால் 20,000 பேருக்கு கூடுதல் வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது.

கிருஷ்ணை நதியிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் கொண்டு வரும் திட்டம் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சுதந்திரம் பெற்று 30 ஆண்டுகளாகியும் சென்னை நகர குடிநீர்த் தேவை பூர்த்தி செய்யப்படாமல் இப்போது அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வந்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றியிருப்பது கண்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மொழிப் பிரச்சினையில் அண்ணா விட்டு சென்ற இரு மொழிக் கொள்கையைக் கண்டிப்பாக இந்த அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது என்று ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருப்பது வரவேற்கத்தக்கது. போற்றத்தக்கது ஆகும்.

10 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலத்தை அந்த படித்த இளைஞர்களிடம் கொடுத்து, சிறிய சிறிய கண்மாய்களை வெட்டுவதன் மூலமாக அல்லது ஆழ்கிணறுகளை அமைத்துத் தருவதன் மூலமாக பாசன வசதியைச் செய்து கொடுத்தால்—படித்த இளைஞர்களுக்கு நிலத்தை அசைன்மெண்ட் செய்து கொடுத்து, பி.ஏ., பி.எஸ்ஸி., படித்த பட்டதாரிகள் வேலையில்லாமல் இருக்கிறார்கள், அவர்களுக்குக் கொடுத்து ஒரு காலனியைப் போன்று அமைத்துக் கொடுத்தால்—உற்பத்தியும் பெருகும், அதே நேரத்திலே வேலையில்லாத் திண்டாட்டமும் குறையும். படித்தவர்களுக்கு எல்லோருக்குமே தொழிற்சாலைகளிலேயும் அரசாங்கத்திலேயும் வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க இயலாத காரணத்தால் தரிசு நிலங்களைக் கொடுத்து பாசன வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. கா. அப்புனு கவுண்டர் :** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கவர்னர் உரையின் மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நான் சார்ந்திருக்கும் ஜனதா கட்சியின் சார்பிலே பேச வாய்ப்பு அளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற ஆண்டு கவர்னர் உரையில் இருந்த வேகம்கூட இந்த ஆண்டு கவர்னர் உரையிலே காணப்படவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு சிலர் சொல்வதைப் போல, இந்த அரசு செயல்படுவதிலே எந்தவிதமான விறுவிறுப்பும் இல்லை, வேகமும் இல்லை, மந்தம் தான் இருக்கிறது. மக்கள் மத்தியிலேயும் இந்த அரசினால் நன்மையும் இல்லை, தீமையும் இல்லை, மந்தமாக இருக்கிறது என்ற கருத்து பேசப்படுவதைப் போலத்தான் இந்த ஆளுநர் உரையும் இருக்கிறது.

உணவுப் பொருட்கள் நிலைமை பற்றியும், விலைவாசிகள் பற்றியும் இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. உண்மை தான். விலைவாசிகள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், அதே நேரத்திலே அந்த உணவுப்





பொருட்களை உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்குமா என்று இந்த அரசு பார்க்கவில்லை. அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவில்லை. விவசாயிகள் உற்பத்திக்காகச் செய்த செலவுக்குரிய வகையிலே விலை கிடைத்ததா, விவசாயிகள் நன்மை அடைந்தார்களா, அதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்களா என்றால் இல்லவே இல்லை. நெல்லுக்கு இப்போது கொடுக்கப்படுகிற விலை கட்டுபடியாகக் கூடியதா என்பதைக் கவனிக்கவே இல்லை. கேரள மாநிலம் எப்படி விவசாயிகளுக்கு நல்ல விலையும் அதே நேரத்திலே உணவுப் பொருட்களின் விலைகளையும் கட்டுப்படுத்தி, இரண்டையும் செய்ததோ அதைப்போன்று செய்யாமல், விவசாயிகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்காமல் செயல்படுகிறது இந்த அரசு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நியாய விலைக் கடைகள் திறக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. ஒரு ரெவின்யூ வில்லேஜிலே ஒரு கடை என்று போடப்பட்டிருக்கிறது. எங்கள் மாவட்டமாகிய தர்மபுரி மாவட்டத்திலே ஒரு சில மாதங்களிலே திறக்கப்படுவதற்கான ஏற்பாடுகள், வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. 2 கடைகளுக்கு ஒரு நபர் விதம், ஊதியம் 100 ரூபாய் என்ற அளவிலேயும், [illegible] ஆயிரம் ரூபாய் கேஷ் செக்யூரிட்டியும், 5 ஆயிரம் ரூபாய் டிபாசிட்டும் செய்ய வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். அதுவும் எஸ். எஸ். எல். சி. படித்த மாணவர்களே வேண்டுமென்று இண்டர்வியூவெல்லாம் அனுப்பப்பட்டு நடந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில் இரண்டு கடைகளை ஒருவர் பார்க்க வேண்டுமென்ற [illegible]நிலையும், குறைவான ஊதியம்தான் கொடுக்கப்படும் என்ற நிலையும் இருந்தால், கட்டாயம் இது வெற்றி பெறுமா என்பது சந்தேகம்தான். ஏனென்றால் 100 ரூபாய் கொடுத்தால், அதுவும் மாதத்திற்கு 6 நாட்கள் வேலை செய்ய வேண்டுமென்றால், அதிலும் இரண்டு கடைகளைக் கவனித்துக் கொள்ள வேண்டும். என்றால் [illegible]கமான சந்தர்ப்பங்களில் ஊழல் செய்யவும், தவறுகள் [illegible]க்கவும் வாய்ப்புகள் ஏற்பட்டுவிடும், அப்படி ஏற்பட்டு [illegible]மேயானால் நல்ல முறையில் அவைகள் நடக்குமா என்பது சந்தேகம். இதைத் தவிர்ப்பதற்கு அவர்களுக்குச் சம்பளத்தை [illegible]ம் கூட்டிக் கொடுக்க வேண்டும் என்று உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கா. அப்புனு கவுண்டர்] [1978 செப்டம்பர் 1

அடுத்து, பால் வள நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் பால் வளத்தைப் பெருக்குவதைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. எங்கள் மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் நிறைய ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. நிறைய பால் உற்பத்தி செய்யப்பட, கறவை மாடுகளும், எருமை மாடுகளும் வாங்குவதற்குக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. தர்மபுரி மாவட்டத்தில் பால் பவுடர் உற்பத்தி செய்யும் ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்த வாய்ப்பிருப்பதாகவும், அதற்கான திட்டங்களைத் தீட்டி அனுப்பப்பட்டிருப்பதாகவும் சொல்லப் படுகிறது. இது ஒரு பெரிய திட்டம் என்று சொன்னாலும், மாநில அரசு மத்திய அரசைக் கேட்டு, அங்கே பெரிய பால் பவுடர் தொழிற்சாலையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி பற்றிச் சொல்லப் பட்டிருக்கிறது. பட்டு உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டிருக்கிறது. எங்கள் மாவட்டத்தில் வறட்சித் திட்டத்தின் கீழ் 10,000 ரூபாய் முதல் 16,000 ரூபாய் வரையில் ஏக்கருக்கு பட்டு உற்பத்தி செய்வதற்குக் கடன் வழங்கப்படுகிறது. ஆனால், உண்மை நிலைமை என்னவென்றால், பட்டு உற்பத்தி செய்யப்படுகிறதே தவிர, அந்தப் பட்டை உற்பத்தி செய்பவர்களுக்குத் தகுந்த விலை கிடைக்கிறதா என்றால் கிடைக்கவில்லை. அதற்கான வாய்ப்பை அரசு நமது மாநிலத்திலே ஏற்படுத்தவில்லை. எனவே, இங்கு உற்பத்தி செய்யக்கூடிய பட்டை கர்நாடக மாநிலத்திற்குக் கொண்டு சென்று ராமாபுரம் என்ற இடத்தில் விற்பனை செய்ய வேண்டியிருக்கிறது அந்தப் பட்டை அங்கே வாங்குகின்றவர்கள் என்ன விலை வைக்கிறார்களோ அந்த விலைக்குத்தான் விற்க வேண்டியிருக்கிறது. எனவே, போட்டியில் அங்கே அவர்கள் பட்டு வாங்கத் தயாராக இல்லை. இப்படிப்பட்ட நிலையில் எவ்வளவுதான் அதிகமாகப் பட்டு உற்பத்தி செய்வதற்கு ஊக்கமும், ஆக்கமும் கொடுத்தாலும் பட்டுக்குத் தகுந்த விலை கிடைக்கவில்லை என்றால், பட்டு உற்பத்தித் தடைபட்டு விடும். அந்த நிலைமை மாற அரசு முன்வந்து தானே பட்டை வாங்குவதற்கான வாய்ப்புகளை அதிகப்படுத்தினால் தான் பட்டு உற்பத்தி பெருகும், வேலை வாய்ப்பும் பெருகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1978 செப்டம்பர் 1] [திரு. கா. அப்புனு கவுண்டர்]

அடுத்து, மின்சாரத்தைப் பொறுத்தவரையில், முன்னுரிமை கொடுத்து எல்லோருக்கும் பம்பு செட்டுகளுக்கு இணைப்பு கொடுக்க வேண்டுமென்று கூறி, அதன்படி செயல்பட வேண்டும் என்று கூறுவது நல்லதுதான், அதற்காக நான் அரசைப் பாராட்டுகிறேன். மின்சாரம் பெறுவதில் மக்கள் படும் அவதியை அரசு முன்வந்து நீக்க வேண்டும். மின்சாரத் துறை வேகமாகச் செயல்பட்டு விவசாயத்திற்கு முன்னுரிமை கொடுத்து உதவுவதற்கு அரசு அறிவுறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பஞ்சாயத்துத் தேர்தல்களைப் பற்றியும், நகராட்சித் தேர்தல்களைப் பற்றியும் அரசு குறிப்பிட்டிருக்கிறது. 1970-ஆம் ஆண்டிலே நடந்தது பஞ்சாயத்துத் தேர்தல். அதற்கு முன்பு நடந்தது நகராட்சித் தேர்தல். முந்தைய அரசு அதாவது இதற்கு முன்பு இருந்த அரசு, தாங்கள் தோற்றுவிடுவோமோ என்ற காரணத்தினாலோ என்னவோ அந்தத் தேர்தல்களைக் காலங்கடத்தித் தள்ளிப் போட்டுக் கொண்டு வந்தது. இன்றைக்கெல்லாம் நாங்கள் சீர் செய்வோம் என்று சொல்லி வந்த இந்த ஆட்சியினர் ஓராண்டுக்கு மேல் ஆகியும் ஏதோ சில காரணங்களைக் காட்டித் தேர்தல்களைத் தள்ளி வைக்க எண்ணாமல், ஜனநாயக முறையிலே அமைய வேண்டுமென்ற குறிக்கோளோடு செயல்படும் இந்த அரசு, மதுரை கார்ப்பரேஷன் தேர்தலை எவ்வாறு நடத்தியதோ அதேபோல் எவ்வளவு சீக்கிரத்தில் முடிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில், இன்னும் இரண்டு மூன்று மாதங்களுக்குள்ளாக பஞ்சாயத்துத் தேர்தல்களையும், நகராட்சித் தேர்தல்களையும் நடத்த வேண்டும். காலந்தாழ்த்துவதிலே நியாயம் இல்லை என்பதை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

உத்தரவிடப்பட்டிருந்தாலும்கூட சில பகுதிகளில் மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கான ஹாஸ்டல் வசதிகளும், ஸ்கூல்களுக்கு வேண்டிய உபகரணங்களும் கொடுக்கப்படாமல் இருக்கின்றன. எல்லாயிடங்களிலும் எல்லா சப்ஜெக்டுகளும் வைக்கப்படவில்லை, இதனால் அதிக மாணவர்கள் சேர்ந்து படிப்பதற்கு வேண்டிய வசதிகள் குறைந்திருக்கின்றன. ஹையர் செகண்டரி ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற ஒவ்வொரு இடத்திலும் மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கு அரசுத் துறையானது ஆரம்ப வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். எனவே, இப்பொழுதுள்ள அந்த நிலை மாற உடனடியாகக் கவனம் செலுத்தி எங்கெங்கு ஹையர் செகண்டரி ஸ்கூல்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவோ அங்கெல்லாம் ஹாஸ்டல் வசதி செய்து மாணவர்களுக்கு அதிக வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

அடுத்தது, பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் பெயரை மதுரைப் பல்கலைக் கழகத்திற்குச் சூட்டி, காமராஜ் பல்கலைக் கழகம் என்று பெயர் வைத்திருப்பதற்கு எனது கட்சியின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், அண்ணாதுரை அவர்களின் பெயரில், தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் என்று பெயரிட்டு, அந்தத் தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் தனித்துச் செயல்பட வேண்டும் என்றும், நல்ல முறையில் செயல்பட வேண்டுமென்றும் அந்த நோக்கத்தோடு இதனைத் துவங்கி இருப்பதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மதுவிலக்கு பற்றி, இந்த மாமன்றத்திலே பல தடவை பேசப்பட்டிருக்கிறது. இருந்தும் கூட போன ஆண்டிலிருந்து இந்த ஆண்டு வரை, அரசு, கொள்கையைத் தீவிரமாக அமுல்படுத்தி வந்திருக்கிறதா என்றால், முந்தைய ஆண்டுகளுக்கும் இந்த ஆண்டுக்கும் மதுவிலக்கை அமுல்படுத்துவதில் வித்தியாசம் ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தால், அதே நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது என்பதை அறிந்து வருத்தப்படுகிறோம். மாவட்ட வளர்ச்சி





மன்றக் கூட்டங்களிலும், பத்திரிகைகளிலும் தெரிவிக்கப்படுகிற கருத்துக்களைப் பார்த்தால், முன்பிருந்த நிலையைவிட கள்ளச் சாராயம் அதிகமாகப் பெருகிவிட்டது. போலீசாரும் அதற்கு உடந்தையாக இருக்கிறார்கள். மாமூல் வாங்கிக் கொண்டு, குற்றவாளிகளை விட்டுவிடுகிறார்கள். ஆளுங்கட்சி உறுப்பினர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும், மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலே இதுபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். நான் ஏற்கனவே கூறியதுபோல், காவல் துறையிலிருந்து, இந்தப் பிரிவைத் தனியாகப் பிரித்து செயல்படுத்தினாலொழிய இலஞ்சத்தை ஒழிக்க முடியாது, மதுவை ஒழிக்க முடியாது, போலீஸ் நிர்வாகத்தைச் சீர்படுத்த முடியாது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டம், ஒழுங்கு சரியாக இல்லாததற்கு சில சந்தர்ப்பங்களில் எல்லாக் கட்சிக்காரர்களும் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். ஏனென்றால், பேசுவது ஒன்று, செய்வது ஒன்று, என்று தான் தூண்டிவிட்டு சிலவற்றைச் செய்யக் காரணமாக இருக்கிறோம். ஆகவே, எந்தக் கட்சியாக இருந்தாலும் அரசு நிர்வாகம் ஒழுங்காக இருக்க வேண்டும் என்றால், சட்டம், ஒழுங்கு பாதுகாக்கப்பட வேண்டும் என்றால், அராஜகங்களைத் தூண்டிவிட்டோ, அரசு செயல்படுவதைச் சீர்குலைத்து, நிர்வாகத்தைக் குலைக்க வேண்டுமென்று செயல்படக் கூடாது. எல்லாக் கட்சிக்காரர்களும் ஒத்துழைத்தால் சட்டம், ஒழுங்கு பாதுகாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக, மூன்றாவது சம்பளக் கமிஷனுடைய அறிக்கையைப் பற்றி, கவர்னர் உரையிலே, 27 ஆவது பாராவிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதை உடனடியாக அரசு அமுல்படுத்த வேண்டும். 'சம்பள ஆணைக் குழுவின் பரிந்துரைகளை, அரசு, அனுதாப உணர்வுடன், இந்த அரசு ஆராய்ந்து வருகிறது. விரைவில் இப்பரிந்துரைகளின் மீதான அரசின் முடிவுகள் வெளியிடப்படும்' என்று மட்டும் சொல்லப் பட்டிருக்கிறது. அரசு உடனடியாக ஒரு முடிவிற்கு வந்து அதனை வெளியிடவில்லை என்று பலவாகக் குற்றச்சாட்டுகள் மக்கள் மத்தியில் இருக்கின்றன. இந்தச் சட்ட மன்றக் கூட்டத் தொடருக்குள்ளாவது அதை அறிவித்து விடவேண்டும், நல்ல பெயர் வாங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடிநீர், சாக்கடை திட்டங்களை, அரசு உலக வங்கியிடம், கடன் வாங்கி, ரூ. 147 கோடிக்குச் செயல்படுவதாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்புகளிலே, 1 முதல் 6 பிரிவுகளாக, கிராமப் பகுதிகளைப் பிரித்து, 1, 2 பிரிவு கிராமங்களில் முதலில் இத் திட்டங்கள் நிறைவேற்றப்படுவதாகவும், 3, 4, 5, 6 என்ற வரிசைப்படி, பின்னால் நிறைவேற்றப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது கொடுக்கப்பட்டிருப்பது, சராசரி என்று பார்த்து உள்ளது. சில பகுதிகளிலே குடி நீர் இல்லாத நிலையிருக்கிறது சென்ற ஆண்டு ஏதோ சமாளித்துக் கொண்டார்கள். இந்த ஆண்டு எப்படி என்று தெரியவில்லை.

அடுத்து, கிராமங்களைப் பற்றிக் கூறுகிறேன். அவசியம் கவனிக்க வேண்டியது கிராம மக்களைத்தான் எங்கெங்கு கிணறு ஆழப்படுத்த வேண்டுமோ, அங்கு ஆழப்படுத்தவோ, பைப்புகளை சேர்க்க வேண்டிய இடத்தில், சேர்க்கவோ இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவைகளை நீக்கி, எங்கெங்கு குறைகள் இருக்கின்றனவோ, அவற்றைக் கண்டறிந்து, ஆழப்படுத்த வேண்டிய இடத்தில் ஆழப்படுத்தி, கைப்பம்புகள் வேலை செய்யாத இடங்களில், அதிகாரிகள் பார்வையிட்டு செப்பனிட்டு, நல்ல முறையிலே இயங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கிராமச் சுகாதாரத்தைப் பற்றி சொல்லியிருப்பதிலே, பிரைமரி ஹெல்த் சென்டர்களில், இன்னொரு டாக்டர்களை நியமிக்க அறிவித்திருப்பது வரவேற்கத் தக்கதாகும். அதே நிலையில் இயங்கும் மருத்துவ மனைகள் செயல்பட வேண்டும். அதற்குரிய சூழ்நிலையும் வசதியும் அளிக்கப்பட்டாக வேண்டும். ஒரு இயங்கும் மருந்தகம் எவ்வளவு தூரம் போகும், எவ்வளவு நாட்களாகும் என்பதையெல்லாம் கணக்கெடுத்து, தேவையானால் இயங்கும் மருந்தகங்களை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த மருந்தகங்களைக் கொண்டு, எல்லா நாட்களிலும் கவனிப்பது, எங்கிருந்து கவனிப்பது, எவ்வளவு பகுதிகளைக் கவனிப்பது என்பதைக் கவனித்து, தொடர்ந்து



வசதிகளை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்து, அமர்கிறேன், வணக்கம்.

* திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையின் மேல் நன்றி தெரிவித்து என்னுடைய யோசனையை நான் வெளியிட விரும்புகிறேன். கடந்த முறை இதே உரையிலே பேசிய ஒரு சில மாற்றார்கள், கடந்த உரையிலே ஒன்றுமே இல்லை என்று சொன்னவர்கள், இந்த முறை சொல்லும்போது, கடந்த உரையிலே இருந்த பல விஷயங்களை இந்த அரசு நிறைவேற்றவில்லை என்று சொல்லி, தங்களுடைய விமர்சனத்தை ஓராண்டுக்குத் தள்ளி வைத்திருக்கிறார்கள், என்பதை இந்த மன்றத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். அடுத்து, திட்டங்களை சரியாகப் போட்டு நல்ல விதமாக இந்த அரசு பணியாற்றி வருவதைப் பாராட்டாமல், இந்த அரசு ஒன்றுமே செய்யாததைப் போலவும், புரட்சித் தலைவருக்கு ஆளத் தெரியாததைப் போலவும், ஒரு சில இடங்களில் பலர் பேசி வருவதை நீங்கள் பார்த்திருக்கின்றீர்கள். அன்று அவர்களால் போடப்பட்ட அஸ்திவாரத்தின் மேல் கலைஞரால் எழுப்பப்பட்ட கட்டடம், கீரல் விழுந்த கட்டடமாக இருந்ததை, நல்ல கட்டடமாக மாற்றி அமைக்கத்தக்க பெரும் பணியை புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். அதைத் தமிழக மக்கள் வரவேற்றதன் காரணமாகத்தான் மதுரை மக்கள் மூலமாக தங்களது உணர்வைக் காட்டி, மதுரை மாநகராட்சியை புரட்சித் தலைவரிடம் ஒப்படைத்தார்கள்.

இப்படி ஒரு சிலர் இருப்பது தமிழகத்தின் துர்ப்பாக்கியம் என்று கருதுகிறேன். இப்படிப்பட்டவர்கள் தாங்கள் ஆட்சியிலே இருந்தபோது போராட்டங்கள் நடத்தியவர்களைப் பார்த்து, "மயிலே மயிலே இறகு போடு" என்பது போல தயவு செய்து போராட்டங்களை நிறுத்துங்கள் என்று சொன்னார்கள்? அவர்கள் அந்த நேரத்தில் இரும்புக்கரத்தை கொண்டு அடக்குவேன் என்றும், மற்றும் பல கடுமையான வார்த்தைகளையும் பயன்படுத்தவில்லையா?

புயல் வெள்ளக் காலத்திலே புரட்சித் தலைவர் அரசு மேற்கொண்ட நிவாரணப் பணிகளை விட துரித நடவடிக்கை வேறு என்ன உள்ளது? சீரமைப்புப் பணிகள் செய்யும்போது போராட்டம் என்ற பெயரால் இவர்கள் எத்தனை இன்னல்களை ஏற்படுத்தினார்கள், அந்த நேரத்திலும், இந்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் இவர்களுக்கு எங்கே தெரியப் போகிறதோ, தெரியவில்லை. கலைஞரின் ஆட்சியின்போது பட்டதாரி ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டார்கள், கொடுமைப்படுத்தப்பட்டார்கள். பலர் சிறைச்சாலைகளுக்கு அனுப்பப்பட்டார்கள். அந்த நிலைமையை மாற்றி இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு அவர்களால் முன்பு எழுப்பப்பட்ட எ லிங், பி லிங் இணைப்பை நிறைவேற்றுகின்ற நிலையில் நடவடிக்கைகள் எடுத்திருப்பதை மாற்றுக் கட்சி நண்பர்கள் பாராட்டினார்களா என்றால், இல்லை. அந்தக் காலத்தில் ஆசிரியர்களால் எழுதித் தரப்பட்ட மன்னிப்புக் கடிதங்களை திரும்பப் பெற இந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லையா? இவற்றை எல்லாம் பாராட்டுவார்களா என்று கருதுகிறேன்.

அடுத்துத் தொழிலாளர் கொள்கையைப் பார்க்கின்ற நேரத்தில் டி. ஐ. சைக்கிள் கம்பெனி திறக்க வேண்டும் என்று கோரி போராட்டம் நடத்திய காலத்தில், அந்த நாளை இந்த அரசு விடுமுறை நாளாக அறிவித்து தொழிலாளர்களுடைய உணர்வுகளோடு தங்களுடைய உணர்வை இணைத்துக் கொண்டிருக்கிறது என்பதை இந்த மன்றம் அறியும்.



(பிற்பகல் 12-30)

அடுத்து, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் காவல் நிலையத்திலே குறுக்கீடு செய்கிறார்கள் என்று நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த உறுப்பினர் திரு. ஓ. எஸ். வேலுசாமி அவர்கள் எடுத்து வைத்தார்கள். இதற்கு இராதாபுரம் தொகுதியைச் சார்ந்த உதவி காவல் நிலையத்தை உதாரணத்திற்கு எடுத்து வைத்தார்கள். அப்படி அவர்கள் சொல்கிற நேரத்தில் இராதாபுரம் தொகுதியைச் சேர்ந்த இந்திரா காங்கிரஸ் கட்சியின் பிரமுகர்கள் மீது ஏதோ பொய் வழக்குப் போடப்பட்டதாகச் சொன்னார்கள். நான் தயவு செய்து அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். நாம் பார்க்க வேண்டியது. தவறு யாரால் நடத்தப்பட்டது என்பது தான், அது தான் முக்கியம். அங்கே நடந்தது என்னவென்றால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் அருமை நண்பர் பிச்சை அவர்களின் தம்பி பாதிக்கப்பட்டார்கள் என்ற காரணத்திற்காக, அவர்களுடைய தம்பி காப்பாற்றப்பட வேண்டும் என்ற காரணத்திற்காக அவர்கள் அந்த இடத்திற்குச் சென்று முதல் தகவல் அறிக்கையை, எப். ஐ. ஆர்., காவல் நிலையத்தில் கொடுத்து இருக்கிறார்கள். ஒரு அண்ணன் சென்று தம்பியைக் காப்பாற்றுவதற்காக எப்.ஐ.ஆர். கொடுப்பது தவறு, அதை அரசியல் குறுக்கீடு என்று சொன்னால், அதற்கு என்ன சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை.

வெள்ளியூரில் சாராய வழக்குகள் அத்தனையும் திராவிட முன்னேற்றக் கழகத்தினரின் தலையீடு, குறுக்கீடு காரணமாக, அந்தக் குற்றவாளிகளை ஜாமீனில் விடும் நிலை உருவாகியிருக்கிறது. எந்தக் கட்சியினர் அரசியல் குறுக்கீடு இருக்கிறது என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்களோ அவர்களே தான் அதைச் செய்து கொண்டு இருக்கிறார்கள் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதற்குக் காரணம், ஆளும் கட்சிக்கு எதிராகப் பணியாற்றும் அதிகாரிகள் இருக்கிறார்கள், அவர்கள் முன் ஆட்சி காலத்தில், அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள், பாரபட்சமான முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள், திறமை அற்ற அதிகாரிகள் என்கிற நிலையில் இருப்பதால். இந்த நிலைமை இன்றையதினம் உருவாகி இருக்கிறது.

வக்ப் வாரியத்தைப் பற்றி இங்கே சொல்ல விரும்புகிறேன். ஆளும் கட்சியில் இருக்கும் யாராவது அதில் இருக்கிறார்களா? கலைஞர் ஆட்சிக் காலத்தில் ஏற்கனவே இருந்த போர்டைக் கலைத்துவிட்டு புதிய வக்ப் போர்டு உருவாக்கிய நேரத்தில் அவர்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களை அதில் நுழைத்துவிட்டார்கள். அப்போது முஸ்லிம் நண்பர்கள் ஒன்றும் சொல்லவில்லை. நம்முடைய கழக ஆட்சியில் அப்படி ஒரு புதியதாக வக்ப் போர்டு உருவாக்கியபோது அதைப்பற்றி குறை கூறுகிறார்களே, மருந்துக்காவது ஓர் ஆளும் கட்சி உறுப்பினர் புதிதாக அமைக்கப்பட்ட வக்ப் வாரியத்தில் சேர்க்கப்பட்டார்களா என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சாராயம் காய்ச்சுபவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று கேட்கிறார்கள். நான் மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். சாராயம் காய்ச்சுபவர்களைப் பார்த்துக் கொண்டு இந்த அரசு கை கட்டி சும்மா உட்கார்ந்து கொண்டிருக்கவில்லை. உதாரணமாகச் சொல்லப் போனால், சென்னையில் ஓட்டேரியில் நடைபெற்ற சம்பவம்—இந்த ஆட்சி பொறுப்பேற்ற நேரத்தில் சாராய சாம்ராஜ்யங்கள் நடந்து கொண்டிருந்தன. அதை ஒடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கையில் ஒன்று தான் ஓட்டேரியில் சாராயம் ஓடாது செய்த, ஒரு நடவடிக்கை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுக்கு நன்றாகத் தெரிந்த ஒன்று. பவானி ஆற்றின் படுகையில், நீண்ட காலமாக பாரம்பரியமாக சாராய சாம்ராஜ்யங்கள் நடந்து வந்தன. அந்த இடத்தில் 40 லிட்டர் சாராயம் கைப்பற்றப்பட்டது. அந்தப் பகுதியில் 200-க்கும் மேற்பட்ட சாராயக் கும்பல் கைது செய்யப்பட்டது. இந்த நடவடிக்கையைப் புரட்சித் தலைவர் அரசு தான் செய்து இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தித் திணிப்பால் தமிழ் மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்று இந்த அரசு உணர்ந்த காரணத்தால், அதனை எதிர்த்து தமிழக அரசு இரு மொழிக் கொள்கையைக் கடைபிடிக்கும் என்று புரட்சித் தலைவரவர்கள் ஆளுநர் உரையில் தெரிவித்து, சிறப்பான முறையில் நடவடிக்கை எடுத்து இருப்பது



பாராட்டுதற்குரிய ஒன்றாகும். அதை எவ்வளவு ஆணித்தரமாக, தைரியமாக, திறமையாக செய்து இருக்கிறார்கள் என்று பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பட்டு நூல் அபிவிருத்தித் திட்டத்தையும், கிராமப்புற சிறு தொழில் திட்டங்களையும் ஏற்படுத்தி, கிராமப்புற படித்தவர்களுக்கு நியாயமான முறையில் வேலை கிடைக்க வேண்டும் என்ற முறையில் அவர்களுக்கு வழி வகை செய்துள்ள புரட்சித் தலைவர் அவர்களை நிச்சயம் இந்த மாமன்றம் பாராட்டும் என்று நினைக்கிறேன். காட்டு வளம் பாதுகாக்க அரசு மேற்கொண்டுள்ள உறுதியான நடவடிக்கையை நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதே சமயம் நாங்குநேரி தாலுக்காவில் உள்ள திருக்குறுங்குடி, களக்காடு போன்ற இடங்களில் உள்ள காடுகளில் இருந்து காட்டுப் பன்றிகள் வந்து விவசாயிகள் பயிரிட்டுள்ள வாழை, கிழங்கு போன்றவற்றை அழித்து விடுகிறது. இதனால் அவர்களுக்கு ஆயிரக்கணக்கான ரூபாய் பெறுமானமான பயிர் நஷ்டம் ஏற்படுகிறது. அதனைத் தடுக்க அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். பயிர்ப் பாதுகாப்புத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வீராணம் தண்ணீர் வராது என்றிருந்த நேரத்தில் கிருஷ்ணா நதி நீர் சென்னைக்கு வருகிறது என்ற அறிவிப்பு கேட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். குடிநீர்ப் பஞ்சம் தீரும் என்ற நம்பிக்கையில் சென்னை நகர மக்கள் பெருமகிழ்ச்சியடைகிறார்கள். அதற்காக அத்தகைய உரையைத் தந்த ஆளுநர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக, கோதுமை மற்றும் அரிசி பற்றிச் சொன்னார்கள். இங்கே பேசிய உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் ஏதோ கோதுமைக்குக் கொடுப்பதைப் போல அரிசிக்கும் மானியம் கொடுக்க வேண்டுமென்று தாங்கள்தான் வற்புறுத்துவதுபோலச் சொன்னார்கள். இந்திய துணைக் கண்டத்திலேயே கோதுமைக்குத் தரக்கூடிய மானியம் அரிசிக்கும் தரப்பட வேண்டுமென்று முதன் முதலில் கூறுரைத்த ஒரே தலைவர், மாபெரும் தலைவர், நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர்தான் என்று சொல்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

[திரு. பொ. உத்திராபதி] [1978 செப்டம்பர் 1

திருத்தாவிட்டால் நிலைமைகள் மிகவும் மோசமாகிவிடும். ஆகவே விவசாயிகள் பிரச்சினையைப் பார்க்கின்றபோது சர்வ கட்சிகளையும் அழைத்துப் பேசி அதைத் தீர்க்கின்ற முறையிலே இந்த அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு தொடர்ச்சியாக நியாயமான விலை கிடைக்கின்ற சூழ்நிலை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இன்றைய அரசு குவிண்டால் ஒன்றுக்கு 90 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று அறிவித்திருக்கிறது. ஆனால் இது தொடர்ச்சியாகக் கிடைக்கிறதா என்றால் இல்லை. பல வர்த்தக சூதாடிகள் விவசாயிகளிடம் இருந்து குறைந்த விலையில் நெல்லைக் கொள்முதல் செய்கின்ற நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையினைப் போக்கி சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக ஒரு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 120 என்ற அளவில் கொள்முதல் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து குறுவை அறுவடையைப் பொறுத்தவரையில் சென்ற ஆண்டு 3 இலட்சம் ஏக்கரில் குறுவை அறுவடை செய்யப்பட்டது என்றால் இந்த ஆண்டு 1½ லட்சம் ஏக்கரில்தான் அறுவடை செய்யப்படுகின்ற அளவுக்கு பாதியாகக் குறைக்கின்ற அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகள் தன்னம்பிக்கையை இழந்த நிலையில் இருக்கின்றார்கள். குறுவையை சாகுபடி செய்தால் அதற்குரிய நியாயமான விலை கிடைக்காது என்ற நம்பிக்கை இல்லாமையின் காரணமாக அவர்கள் இன்றைக்கு இந்தக் குறுவை சாகுபடியைப் பாதியாக ஆக்கக்கூடிய சூழ்நிலைக்கு உருவாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே அரசாங்கமே பூரணமாக நெல்லைக் கொள்முதல் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் கூட்டுறவு நாணயச் சங்க கடனுக்கென சென்ற ஆண்டு ரூ. 120 கோடி கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மத்திய சர்க்கார் 1977 ஆம் ஆண்டு பெரிய விவசாயிகளுக்கு ஒரு சில சிறிய விவசாயிகள்



1978 செப்டம்பர் 1] [திரு. பொ. உத்திராபதி]

உட்பட 1,033 கோடி ரூபாய் கடன் கொடுத்திருக்கிறார்கள். இதிலே பத்து ஏக்கருடைய சில சிறு விவசாயிகளுக்கு சில 100 கோடி ரூபாய்தான் பெற்றிருக்கிறார்கள். அதேபோன்று ஏகபோக முதலாளிகளுக்கு 1,111 கோடி ரூபாய் மத்திய சர்க்கார் கடன் கொடுத்திருக்கிறார்கள். 1977 ஆம் ஆண்டு இது அல்லாமல் பெரிய நடுத்தர முதலாளிகளுக்கு 5,539 கோடி ரூபாய் கடன் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் 21—2—78 வரையில் மத்திய மாநில சர்க்கார்களுக்கு வரவேண்டிய வருமான வரி பாக்கியோ ரூ. 1,010 கோடி. ஆனால் தமிழக விவசாயிகளுக்கு 1977 ஆம் ஆண்டு பெற்றுள்ள கடன் ரூ. 120 கோடி தான். இதை ஏன் தள்ளுபடி செய்யக் கூடாது. மத்திய மாநில சர்க்காரில் இருக்கக் கூடிய வருமான வரி சாதாரண விவசாயிகள் சம்பந்தப்பட்டதல்ல. பெரிய முதலாளிகள் கொடுக்க வேண்டிய வரி 1,010 கோடி ரூபாய் என்று பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழக விவசாயிகள் பெற்றிருக்கக்கூடிய கடன் ரூ. 120 கோடி தான். இந்த 120 கோடி ரூபாயை மத்திய சர்க்கார் நிச்சயமாகத் தள்ளுபடி செய்ய வேண்டும். இதனை மாநில சர்க்கார் மத்திய சர்க்காருக்குக் கட்டாயமாக வலியுறுத்தி எடுத்துச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தற்சமயம் அந்த 120 கோடி ரூபாய் கடன் முழுவதையும் தள்ளுபடி செய்ய முடியவில்லை என்றாலும் அதற்குரிய வட்டியையாவது முழுமையாகத் தள்ளுபடி செய்ய வேண்டும். மேலும் அவர்கள் பெற்றிருக்கக்கூடிய கடனை 15 ஆண்டு காலத்திற்கு நீடித்துப் போட வேண்டும்.

அடுத்து இந்த ஆண்டுக்குக் கடன் கொடுப்பது குறித்தும் அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆனால் தஞ்சாவூர் போன்ற இடங்களிலே இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு ஜாமீன் வட்டி கட்டாதவர்களுக்குக் கொடுக்கலாம் என்று அறிவித்தும் கூட தஞ்சை மத்திய வங்கிக்கு உட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கடன் கிடைக்கவில்லை. இன்று வரையில் கடன் கிடைக்கவில்லை. அதேபோன்று திருத்துறைப்பூண்டி பகுதியிலேயும் மணலி கூட்டுறவுச் சங்கத்தில் இருந்து இன்று வரை கடன் கொடுப்பதற்கு மறுத்துக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகள் மத்தியில் ஒரு தேக்க நிலை ஏற்பட்டு அவர்கள் நம்பிக்கையை இழந்த நிலையில் 30, 40 நாட்கள் ஆகியும் கூட

இன்னும் குறுவை நடவு நடாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே உடனடியாக உத்தரவிட்டு அந்த விவசாயிகளுக்குக் கடன் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் விழுப்புரம் சம்பவம் பற்றி இந்த உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நானும், தோழர்கள் அம்பிகாபதி, கே. டி. கே. தங்கமணி, ஆர். நல்லக்கண்ணு போன்றவர்கள் சென்ற மாதம் 31 ஆம் தேதி அங்கு நேரில் சென்றோம். பாதிக்கப்பட்ட வீடுகள் அத்தனையையும் நாங்கள் நேரில் சென்று பார்த்து விசாரித்தோம். நான் முழுமையாகச் சொல்ல விரும்பவில்லை. அங்கு 13 ஆண்டுக் காலமாக அந்த ஹரிஜனத் தெருவை காலி செய்ய முயற்சி செய்து வருகிறார்கள். மூன்று ஆண்டுகளுக்கு முன்பாகக்கூட ஜாதி இந்துக்களுக்கும் ஹரிஜனங்களுக்கும் இடையே கடுமையானதொரு போராட்டம் நடைபெற்றிருக்கிறது. அதன் தொடர்ச்சியாகத்தான் இந்தச் சம்பவம் உருவெடுக்கப்பட்டு வீடுகள் பலவும், பொருள்களும் நாசமாயின. 13 ஹரிஜன விவசாயத் தோழர்கள் உயிர் நீங்கும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. தமிழக முதல்வர் அவர்கள் எப்பேர்ப்பட்ட பெரிய மனிதர்களாக இருந்தாலும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். நாங்களும் கூறுகிறோம். எப்பேர்ப்பட்ட பெரிய மனிதர்களாக இருந்தாலும் சரி பெரிய தீய சக்தியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, நீதி விசாரணை முடிந்தவுடன் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, ஹரிஜன மக்களைப் படுகொலை செய்த தீய சக்திகளை உருவாக்குகிற எந்தப் பெரிய மனிதராக இருந்தாலும், அவர்களுக்குத் தண்டனை கொடுப்பதோடு, அவர்களை விலங்கிட்டு தமிழக மக்கள் முன்னால் இழுத்துச் செல்ல இந்த அரசாங்கம் தயங்கக் கூடாது. சிக்கலாம்குப்பம், தட்டுமால்பாறை போன்ற இடங்களில் தீய சக்திகள் உள்ளன. ஆகவே இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இதன் மேல், இந்த விழுப்புரம் சம்பவத்தின் மேல், என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்பதை நாங்கள் தவறாமல் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அடுத்து, மருத்துவமனைகள், சில காலமாக துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. திருத்துறைப்பூண்டி மருத்துவ மனையில் உள்ள லஞ்சலாவண்யத்தை எதிர்த்து சென்ற





ஆண்டு எங்கள் கட்சியிலிருந்து உண்ணாவிரதம் மேற்கொள்ளப் பட்டது. அதைப் பற்றி இங்கே எடுத்துக் கூறியிருக்கிறேன். தொடர்ச்சியாகச் சொல்லி வந்திருக்கிறோம். தமிழ்நாடு பூராவும் இந்நிலை இருந்து கொண்டிருக்கிறது. சில தினங்களுக்கு முன்னால் திருத்துறைப்பூண்டி மருத்துவ மனையில் உள்ள தலைமை டாக்டர் லஞ்சம் வாங்கியதற்குக் கைது செய்யப்பட்டு இன்று நீதிமன்றத்தில் விசாரணைக்கு போயிருக்கிறது. இதுமாதிரி தமிழ் நாட்டில் தொடர்ச்சியாக நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது. அதைத் தீவிரப்படுத்த வேண்டும். திருத்துறைப்பூண்டி மருத்துவ மனையில் ஏழு ஆண்டுகளாக அங்கே சிலர் ஆதிக்கம் செலுத்தி அரசு மருத்துவ மனையை அவர்களது மருத்துவ மனையாக ஆக்கியிருக்கிறார்கள். அந்த விவரங்களை நான் சுகாதார அமைச்சர் அவர்களுக்கு அனுப்பியிருக்கிறேன். இதுபோல் தமிழ்நாடு பூராவும் களையெடுக்கப்பட வேண்டும். ஏழை எளிய மக்களுக்காக வரக்கூடிய மருந்துகள் அவர்களுக்குப் பயன்படும்படி அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

அதேபோல் குடிநீர் பிரச்னையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறது. ஆனால் அதிகாரிகள் அதை நிறைவேற்றுவார்களா? இன்று மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி இருக்கிறதா அல்லது ஆட்சியால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளின் ஆட்சி இருக்கிறதா என்று இன்று மக்கள் மத்தியில் ஒரு சந்தேகக் கண்ணோட்டம் வந்திருக்கிறது. சட்டங்கள் போடப்படுகின்றன. அவற்றை அதிகாரிகள் சரிவர நிறைவேற்றுகிறார்களா? மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்ற உறுப்பினர்கள் அதிகாரிகளிடத்தில் செல்கிறபோது அவர்கள் நிச்சயமாக உறுப்பினர்களை மதிக்கத் தயாராயில்லை.

திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில், 15 லட்சம் ரூபாய் செலவில் சாலைகள், பாலங்கள் கட்ட, குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற இவற்றிற்காகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. அதைப் பற்றிக் கேட்கும்போது ஒன்றிய ஆணையர் சொல்கிறார், அந்தத் தீர்மானங்களை அனுப்பி வைத்து விட்டோம், அந்தப் பேப்பர்கள் திரும்பி வரவில்லை என்று கூறுகிறார்கள். அத் தீர்மானங்களை ஏற்று செயல்படுத்த வேண்டும்.

அடுத்தபடியாக, மது ஒழிப்பு மாநாடு தஞ்சையில் நடத்தது. நமது முதல் அமைச்சர் அவர்களும் கலந்து கொண்டார்கள். மது ஒழிக்கப்பட வேண்டும் என்பதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் அந்த மாநாடு நடந்த பிறகு தீவிரமாக இன்று கள்ளச்சாராயம் காய்ச்சப்படுகிறது. ஆனால் அந்த மாநாட்டிற்கு யார் யாரிடம் வசூல் செய்திருக்கிறார்கள் என்றால் யார் யார் கள்ளச்சாராயம் தயாரிக்கிறார்களோ அவர்களிடம் ரூ. 2,000. ரூ. 3,000 என்று மாநாட்டிற்கு நன்கொடை வாங்கியிருக்கிறார்கள். ரூ. 2,000, ரூ. 3,000 கொடுத்தவர்கள் சும்மா இருப்பார்களா? மறுபடியும் காய்ச்ச ஆரம்பிக்கிறார்கள். எங்கள் கட்சியைச் சேர்ந்த ஒருவர் இதில் ஈடுபட்டதால் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு அவரை கட்சியிலிருந்து நீக்கியிருக்கிறோம். இன்றைக்கு இது அதிகமாக இருக்கிறது. சம்பந்தப்பட்ட விபரங்களை அமைச்சர் அவர்களிடம் சொல்லத் தயார். இவற்றையெல்லாம் அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும். மதுக் கஷாயம் பெரிய விளைவைக் கொண்டது. மத்திய சர்க்கார் அனுமதி கொடுத்திருக்கிறது. திருத்துறைப்பூண்டியில் ஒரே நாளில் அதை அருந்தி இருவர் மாண்டிருக்கிறார்கள். ராமு, துரைராஜ் என்பவர்கள். முதல் அமைச்சர் அவர்களுக்குத் தகவல் அனுப்பினோம். முதல் அமைச்சர் அவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் அந்த மது கஷாயம் பறிமுதல் செய்யப்பட்டு அதை கிண்டிக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-50)

பின்னால் விற்பனை செய்கின்றவர்களும் கிண்டிக்கு வந்து பரிசோதனை செய்கின்ற அதிகாரிகளைப் பார்த்து சரி செய்து விடுகின்றார்கள். மதுக் கஷாயம் என்றால் அவ்வளவு கெடுதல் இருக்கின்றது! உடம்பு உப்புகிறது. திடீரென்று வாடுகிறது. பிறகு ஒரு நாளைக்கு இறந்து விடுகின்றான். இந்த மதுக் கஷாயத்திற்கு மத்திய சர்க்கார் லைசென்ஸ் கொடுக்கிறது. இதைத் தமிழ்நாடு அரசு தடுத்து நிறுத்துவதற்காக மத்திய அரசை வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, விலைவாசி. விலைவாசி—எந்தப் பொருளை எடுத்துக் கொண்டாலும் ஏறிக் கொண்டே போகிறது. அரிசியின் விலை ஓரளவு குறைந்திருக்கிறது என்பது உண்மைதான் என்றாலும்



புளியின் விலை என்ன என்று பார்த்தால், ஒரு கிலோ 7 ரூபாய். அரிசியின் விலை 10 காசு குறைந்திருக்கிறது, அதனால் ஓரளவு லாபம் கிடைக்கிறது என்றால், புளியின் விலை 2 ரூபாய் அதிகமாக இருக்கிறது, தேங்காய் எண்ணெயின் விலையும் அதுபோன்று தான் மிக அதிகமாக ஏறியிருக்கிறது. கடலை எண்ணெயின் விலையும், அரிசியின் விலையும் தவிர வேறு எல்லாப் பொருட்களின் விலையும் அதிகமாகி இருக்கிறது. புளி கிலோ 7 ரூபாய் என்று விற்கிறது. பத்து காசுக்கு புளி வாங்கிக் கொண்டு வரச் சொன்னால் பையன் கையில் வாங்கிக் கொண்டு அதை சூப்பிக்கொண்டே வந்து விடுகிறான். அந்த அளவுக்கு இருக்கிறது. விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டும். இதற்கு சந்தர்ப்பம் வரும்போது விலைவாசியை ஏற்றிக் கொள்ளலாம், அதன் மூலம் அதிக லாபம் பெறலாம் என்று இருக்கின்ற கள்ள மார்க்கெட்காரர்களின் மீது அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் விலைவாசிகளைக் குறைப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களது பாடல்கள் நமது நாட்டிலுள்ள ஏழை எளிய மக்களுடைய வாழ்க்கையைப் பிரதிபலிப்பதாக அமைந்து இருந்தன. அப்படிப்பட்ட பாடல்களை எல்லாம் கொண்ட படங்களில் முதல்வர் அவர்கள் அக்கறை கொண்டிருந்தார்கள். எந்த அளவுக்கு தமிழ் நாட்டில் அவையெல்லாம் பிரபலமாக இருந்தன என்று நமக்கெல்லாம் தெரியும். அப்பேர்ப்பட்ட கவிஞருடைய பெயர் இன்றைக்கு மறைக்கப்பட்டிருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அரசு பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் பெயரால் நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் குடும்ப நிலையையும் நாம் பார்க்க வேண்டும்.

அதேபோல், ஜீவா அவர்கள். 1952-ல் இதே மன்றத்தில், அரசாங்கத்தில் தமிழ் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று முழங்கியதை யாரும் மறந்துவிட முடியாது. அவர்களுடைய பெயரிலும் அரசு நிகழ்ச்சிகள் நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், ஜீவா

இவர்களின் பிறந்த நாளை விழாக்களை அரசின் சார்பில் கொண்டாட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ் நாட்டில் ஏற்படுத்தப்படுகின்ற எந்த நல்ல காரியங்களாக இருந்தாலும் அவற்றையெல்லாம் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி ஆதரிக்கும். முன்னேற்றகரமான நடவடிக்கைகளை எல்லாம் ஆதரிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக அரசு உடனடியாக தீவிரமான நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டு வரவேண்டும். பினாமி பெயரால் இருக்கும் நிலங்களை எல்லாம் பறிமுதல் செய்ய வேண்டும். விவசாயத் தொழிலாளிக்குக் குறைந்தபட்சக் கூலி என்பது எங்கும் கொண்டு வரப்பட வேண்டும். போன மாதம் 16 ஆம் தேதி எங்கள் பகுதியில் விவசாயத் தொழிலாளிகள் 7 இலட்சம் பேர் வேலை நிறுத்தம் செய்ததன் காரணமாக அன்று மாலையிலேயே 50 காசுகள் அதிகமாகக் கூலி உயர்த்தப்பட்டது. இதற்காக அரசு அமைத்திருக்கின்ற ஒரு நபர் கமிஷனிடம் கூலி உயர்வு கோரி சொல்லியிருக்கிறோம். பல இடங்களிலும் விவசாயத் தொழிலாளர்கள் அவல நிலையில் தான் பசி பட்டினியால் வாடிக் கொண்டிருக்கிறார்கள். பெரிய கோவில்கள், மடங்கள் இவைகளின் பெயரில் எல்லாம் ஏராளமான நிலங்கள் இருக்கின்றன. அவைகளை எல்லாம் தயவு தாட்சண்யம் இல்லாமல் எடுக்க வேண்டும். பினாமி நிலங்களை எல்லாம் அரசு பறிமுதல் செய்ய வேண்டும். எங்கள் பாபநாசம் பகுதியில் நட்டுவாய்க்கால்படுகை என்ற இடத்தில் [illegible] என்பவர் 700 ஏக்கர் புறம்போக்கு நிலத்தை வைத்துக் கொண்டு அனுபவித்துக் கொண்டிருக்கிறார். அங்குள்ள ஏழை அரிசனங்கள் மீது பொய் வழக்குகளை எல்லாம் போட்டு துன்புறுத்திக் கொண்டிருக்கிறார். நில உச்சவரம்புச் சட்டத்தின் படி இந்த நிலங்களை எல்லாம் அரசாங்கம் எடுத்து நிலமில்லாத ஏழை எளிய மக்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் [illegible] சீர்திருத்தம் கிடையாது. பினாமி நிலங்களை எடுப்பதற்கு நடவடிக்கை எதுவும் கிடையாது. விலைவாசி [illegible] மத்திய சர்க்காரைப் பொறுத்தவரையில் தீவிரமான நிலச் [illegible] கொள்கிறேன்.



கட்டுப்படுத்தவில்லை. பந்த்நகர், ஆக்ரா போன்ற இடங்களில் மக்கள் படுகொலைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். இவற்றையெல்லாம் கண்டிக்கும் வகையில் செப்டம்பர் 7 ஆம் தேதி இந்தியா முழுவதும் 3 லட்சம் கட்சித் தொண்டர்கள் மறியலில் ஈடுபட இருக்கிறார்கள். இதற்கு [illegible] அரசு, மத்திய சர்க்காரின் தவறான கொள்கைகளை எல்லாம் கண்டித்து வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இங்கு பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளித்த பேரவைத் தலைவருக்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. கே. ஜெ. சுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் உரையினைப் பாராட்டிப் பேச வாய்ப்பளித்த உங்களுக்கு எனது நன்றியைக் கூறி, என்னுடைய உரையைத் தொடங்குகிறேன். முதலாவதாக, இந்த ஆண்டு வட ஆற்காடு மாவட்டத்தில் பருவ மழை தவறி விட்டதால், பெரும்பாலான பயிர்கள், குறிப்பாக வேர்க்கடலைப் பயிர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. பெரும்பான்மையான விவசாயிகளும், கிராமங்களிலே குடிநீர்ப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ள இந்த நேரத்தில் அரசாங்கம் சிறு விவசாயிகளுக்கான மேம்பாட்டுத் திட்டங்களை விரிவுபடுத்தி, மேலும் அவர்களை ஊக்குவிக்க தயக்கம் காட்டக் கூடாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்திலே கிராமங்கள் இணைப்பிற்கு வேண்டிய சாலைகளைச் சேர்த்து, மினி பஸ்கள் அதிகம் விடுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. இந்த மினி பஸ்களை படித்து பட்டம் பெற்ற இளைஞர்களுக்குக் கூட்டுறவு முறையில் நடத்துவதற்கு இந்த அரசு அனுமதி தர முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், எங்கள் போளூர் பஞ்சாயத்தில் [illegible] பள்ளிகள், ஆரம்பப் பள்ளிகள், பெரும்பாலும் பழுதடைந்து உள்ளன. அந்தக் கட்டடங்களை எல்லாம் [illegible] பக்காக் கட்டடங்களாகக் கட்டித் தருவதற்கு [illegible] திட்டம் வகுத்து, அந்த பள்ளிகளுக்கு நிதி உதவி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எங்கள் [illegible] பஞ்சாயத்து யூனியனில் [illegible] மக்களின்

குழந்தைகள் படிக்கும் கல்விக்கூடங்கள் சரியாக நடக்கவில்லை. காரணம், ஆசிரியர்களுக்குத் தங்குவதற்கான வசதியில்லை. ஆகவே, ஆசிரியர்கள் அங்கேயே தங்குவதற்கு வசதிகள் செய்து கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். தற்போது அங்குள்ள அதிகாரிகளின் பராமரிப்பு சரியாக இல்லை. ஆகவே, அந்தப் பள்ளிகள் சரிவர நடப்பதற்கு அங்கேயே இருக்கும் வனத் துறையின் மேற்பார்வையில் விட அரசு பரிசிலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், எனது பகுதியில் வனத்துறை மிகவும் அதிகமாகக் காணப்படுகிறது. அரசு பரிசீலனையில் இருக்கும் சந்தனக் கட்டை தொழிற்சாலையை இந்த பின்தங்கிய போளூர் தொகுதியிலே அமைத்துத் தந்தால் மிகவும் நலமாக இருக்கும். இதை நான் இந்த அரசின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன். ஏற்கனவே, நான் சர்க்கரை ஆலை ஒன்றும் அங்கே வேண்டுமென்று கேட்டிருந்தேன். அதையும் பரிசீலனை செய்து, இந்த இரண்டு தொழிற்சாலைகளையும் என்னுடைய போளூர் தொகுதியிலே ஏற்படுத்தினால், படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கக்கூடிய வகையிலே அமையும் என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன். எனவே, இந்த அரசு அவைகளை அங்கு ஏற்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், எனது போளூர் தொகுதியிலே தீயணைப்பு நிலையம் ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சென்ற ஆண்டிலே, கட்டிப்பூண்டியிலே உள்ள அரிசன காலனியில் உள்ள 76 குடிசைகளும், போளூரில் 6 வீடுகளும் எரிந்ததற்குக் காரணம், அப்பகுதிகளில் தீ விபத்து ஏற்பட்டால், அங்கே தீயணைப்பு நிலையம் கிடையாது. திருவண்ணாமலை அல்லது ஆரணியிலிருந்துதான் தீ அணைப்பு வண்டி வரவேண்டும். அதற்குள் நிறைய சேதங்கள் உண்டாகி விடுகின்றன. ஆகவே, முன் எச்சரிக்கையாக போளூரில் ஒரு தீ அணைப்பு நிலையம் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்தால் அது நலமாகவும் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





மேலும், புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பேற்று வெளியான முதல் பட்ஜெட்டில், செண்பகத்தோப்பு அணைத் திட்டத்திற்காக ரூபாய் மூன்று கோடியே, 53 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால், இத்திட்டம் இன்னும் செயல்படவில்லை. என் தொகுதி விவசாய மக்கள் நீண்ட காலமாக எதிர்நோக்கும் இத்திட்டம் செயல்படாதது கண்டு வருத்தத்துடன் என்னிடம் வந்து முறையிடுகிறார்கள். இத்திட்டம் காலதாமதமாவதற்கு அதிகாரிகளைக் கண்டு நான் காரணம் கேட்டேன். அவர்கள் போதுமான நீர்தேக்கம் கிடைக்குமா என்று ஆலோசிக்கப் படுவதாகக் கூறுகிறார்கள். இத்திட்டம் பல ஆண்டுகளாக பரிசீலனை செய்து, பட்ஜெட்டிலும் சேர்த்துவிட்ட பிறகு, இப்போது போதுமான தண்ணீர் தேங்குமா என்று பரிசீலனை செய்வது எந்தவிதத்தில் பொருந்தும் என்பதை இந்த அரசு ஆராய்ந்து, உடனடியாக இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இத்திட்டம் நிறைவேற்றப்படுமானால், ஏராளமான நிலங்கள் பாசன வசதி பெறும். அங்கே நீர் தேங்குவதால் கிணறுகள் ஊற்றெடுத்து, குடிநீர் பற்றாக்குறை தீரும் என்பதையெல்லாம் இந்த அரசு ஆராய்ந்து, உடனடியாக இத்திட்டத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

மேலும் என்னுடைய தொகுதியில் உல்லாசப் பயணத்திற்கேற்ற ஜவ்வாதுமலையை விரிவுபடுத்தி மக்களைக் கவரும் வண்ணம் மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் பயணிகள் வந்து தங்கும் வகையில் பயணிகள் விடுதியை விரிவுபடுத்த வேண்டும். இப்போதுள்ள மிருகங்களோடு இன்னும் பலவகையான மிருகங்களை வாங்கி வைத்து பெரிய மிருகக் காட்சி சாலையாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு ஆளுநர் உரைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

* திரு. சோ. பாலகிருஷ்ணன் : பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இன்று ஆளுநர் உரையின் மீது காங்கிரஸ் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய ஒப்பற்ற தலைவர் காமராஜர் அவர்கள் பெயரில் மதுரைப் பல்கலைக் கழகத்தை காமராஜ் பல்கலைக் கழகம் என்று மாற்றியதற்காக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அந்த நேரத்தில் வெறும் காமராஜ் பல்கலைக் கழகம் என்று வைத்திருப்பது சரியல்ல. அண்ணா பல்கலைக் கழகத்தை பேரறிஞர் அண்ணா பல்கலைக் கழகம் என்று தொடங்கியிருப்பது போல் 'பெருந் தலைவர் காமராஜ் பல்கலைக் கழகம்' என்று வைக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இதற்கு ஏதோ உள்நோக்கம் எல்லாம் சொல்லுகிறார்கள். மதுரை தேர்தலுக்காகத்தான் காமராஜ் பல்கலைக் கழகம் என்று பெயர் வைத்ததாகச் சொல்லுகிறார்கள். எதுவாக இருந்தாலும் நல்ல காரியத்தைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தலைவர் காமராஜ் அவர்கள் இந்த நாட்டில், தமிழகத்தில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத வகையில் இந்த தேசத்திற்காக, இந்த நாட்டு மக்களுக்காக உழைத்தார்கள் என்ற முறையில் முதலமைச்சர் அவர்கள் உணர்ந்து இந்தப் பெயரை வைத்து இருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன். 'பெருந்தலைவர் காமராஜ் பல்கலைக் கழகம்' என்று மாற்றியமைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அது ஒன்றுதான் இந்த ஆறு மாத காலத்தில், சென்ற சட்ட-சபைக் கூட்டத்திற்குப் பிறகு ஏதாவது ஒரு நல்ல காரியம் செய்திருக்கிறார்கள் என்றால் 'காமராஜ் பல்கலைக் கழகம்' என்று மாற்றிய ஒன்றுதான். வேறு ஒன்றும் செய்யவில்லை.

கூட்டுறவுத் துறைக்கு புது அமைச்சரைப் போட்டிருக்கிறார்கள். அவரைப் பார்த்தால் பாவமாக இருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் மூடிக் கிடக்கின்றன. என்னுடைய தொகுதியில் 36 கூட்டுறவுச் சங்கங்களில் 34 மூடப்பட்டு விட்டன. செயலிழந்து விட்டன. [illegible] லோன் கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். எல். டி. பாங்கு என்ற ஒன்று இருக்கிறது. அதுவும் தமிழ்நாடு





முழுவதும் மூடிக் கிடக்கிறது. மூடிக் கிடக்கும் சங்கங்களுக்கு ஒரு அமைச்சரை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர் என்ன மாதிரி செயல்படப் போகிறார்? ரொம்ப பரிதாபமாக இருக்கிறது. அவர் ரொம்ப நல்ல அமைச்சர், வேறு இலாகா கொடுத்தால் நலமாக இருக்குமென்ற ஆலோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையில் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க முடியாது என்று மத்திய வங்கிகள் உத்தரவு போட்டிருக்கும் இந்த நேரத்தில் இந்த அரசு என்ன செய்யப் போகிறது என்று விளக்கியாக வேண்டும். முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். கிராம மக்கள், வசதியுள்ளவர்களிடமிருந்தும் இப்போது கடன் வாங்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். கடன் நிவாரணச் சட்டம் வந்த பிறகு வசதியுள்ளவர்கள் கடன் கொடுக்க மறுக்கிறார்கள். அவர்கள் கடன் பெற ஒரே வழி கூட்டுறவுச் சங்கங்கள்தான். மத்திய வங்கி, மக்களை வருத்தி தண்ட வட்டி போட்டு வசூலித்த பணத்திலிருந்து ஓரளவாவது விவசாயிகளுக்குக் கடன் கொடுத்து நிவாரணம் கொடுக்கா விட்டால் விவசாயிகள் இந்த நாட்டில் பெரிய போராட்டத்தைத் தொடங்குவார்கள் என்று எச்சரிக்க விரும்புகிறேன். இதற்கு எந்த அரசியல் கட்சியும் தேவையில்லை. அவர்கள் தானாகவே ஒன்று சேர்ந்து விவசாயச் சங்கங்களைத் தொடங்கிக் கொண்டிருக்கிறார்கள். அது அரசுக்குத் தெரியுமோ, தெரியாதோ தெரியவில்லை. காங்கிரசின் சார்பில் எங்கள் தலைவர் மூப்பனார் கூட வலுவாக விவசாயிகள் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்த வேண்டுமென்று கூறியிருக்கிறார். கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஓரளவாவது விவசாயிகளுக்கு உதவி செய்யாவிட்டால் உங்களுடைய அரசுக்குப் பேராபத்து வரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கவர்னர் உரையில் நெசவாளர் பிரச்சினை பற்றி ஒரு வார்த்தை கூடச் சொல்லப்படவில்லை. அவ்வளவு [illegible] நெசவாளர்களை எப்படி மறந்தார்கள் என்பது புரியவில்லை. அதற்குத் தனியாக அமைச்சர் வந்திருக்கிறார். நெசவாளர்கள் என்பவர்கள் இரண்டாவது பெரிய தொழிலைச் [illegible] உரையில் ஒரு வார்த்தை இருக்க வேண்டாமா?

செய்பவர்கள். தமிழகத்தில் 30 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அதிலே ஈடுபட்டிருக்கிறார்கள், 5 லட்சத்திற்கும் மேற்பட்ட தறிகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. அவர்கள் நாள்தோறும் பட்டினியாய் பஞ்சையாய் அலைந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பற்றி, நெசவாளர்களின் பிரச்சினையைப் பற்றி ஒரு வார்த்தை கூட இதில் இல்லை. அவர்கள் பிரச்சினை பற்றி, சிந்தனை பற்றி ஒரு வார்த்தை இதில் இருக்க வேண்டாமா? இல்லை. அப்படி இல்லாமல் இருப்பது ரொம்பவும் வருந்தத் தக்கது. இந்த நாட்டிலே இம்மாதிரி உரையை நான் பார்த்ததே இல்லை. பரமக்குடியிலே 20 லட்சம் ரூபாய்க்குத் துணிகள் விற்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள், வாஸ்தவம்தான். ஆனால், எப்படி வாங்கினார்கள் என்றால்—லஞ்சம் ரொம்பவும் சர்வசாதாரணமாக இருக்கிறது—ஏழைகள் வைத்திருக்கிற நெசவாளர்கள் சங்கங்களில் நீங்கள் வைத்திருக்கிற துணி, சாதாரணமானது தான், சரியில்லை என்று சொல்லிவிடுகிறார்கள். காரணம், அங்கே லஞ்சம் கொடுக்க முடியாது. ஆனால், பணக்காரர்கள் வைத்திருக்கிற சங்கங்களிலே லஞ்சம் கொடுத்து வாங்கிக் கொண்டு போய்விடுகிறார்கள். இதன் காரணமாக ஏழை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நெசவாளப் பெண்கள் நாள்தோறும் உணவுக்காக கஷ்டப்படுவதை நீங்கள் எல்லாம் பார்க்க வேண்டும்; அமைச்சர்கள் எல்லாம் நேரடியாக அவர்களுடைய கஷ்டத்தையும் துன்பத்தையும் துயரத்தையும் பார்க்க வேண்டும்.

அடுத்து, சட்டம் ஒழுங்கு உண்டா என்றால் இல்லவே இல்லை. சட்டம் ஒழுங்கு இல்லையென்றால் உறுப்பினர்களை சட்டசபையிலே வந்து பேசச் சொல்லுங்கள் என்று—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரொம்ப நல்லவர்கள்—சவால் விட்டதாகச் சொன்னார்கள். அவருக்கெல்லாம் சில செய்திகள் போகிறதோ என்னவோ தெரியவில்லை. பரமக்குடியிலே ஏழு வயது உள்ள—பச்சிளம் குழந்தை—குழந்தையைத் தூக்கிக் கொண்டு போய் அரிவாளை வைத்து மிரட்டி, கழுத்திலே காதிலே கிடக்கிற நகைகளை பறித்துக் கொண்டு அனுப்பி விடுகிறார்கள்.



இம்மாதிரி இந்த மூன்று மாத காலத்திலே மூன்று தடவை நடந்திருக்கிறது. இவையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கு வந்ததோ என்னவோ தெரியவில்லை.

இராமநாதபுரத்திலே கலெக்டர் முன்னாலேயே திவைப்பு, அடிதடிகள் எல்லாம் நடந்திருக்கின்றன. போலீஸ் என்ன செய்து கொண்டிருந்ததோ தெரியவில்லை. கலெக்டருக்கே அடி, நீ யாரய்யா இங்கே வருவதற்கு என்று சொல்லியே அடித்திருக்கிறார்கள். அதைப்போலவே, அவர் கூட வந்த 10 அதிகாரிகளுக்கும் நல்ல அடி. இப்போது அந்த அதிகாரிகள் என்ன சொல்கிறார்கள் என்றால், நாங்கள் என்ன உத்தியோகம் பார்ப்பது, என்ன செய்வது என்று சொல்கிறார்கள். ஃபையர் சர்வீஸ் இராமநாதபுரத்திலே உள்ளது மட்டுமல்ல, பரமக்குடியிலிருந்து வேறு போயிற்று. ஆனால், உள்ளே போக முடியவில்லை. கல்லைவிட்டு எறிந்து காயப்படுத்தினார்கள். அதற்குப் பிறகு தீவிர முயற்சிகள் செய்து 40, 50 பேர் மீது ஜாமீன் கேஸ்கள் போட்டிருக்கிறார்கள் அவ்வளவுதான். அதுவும் எப்போது முடியும், மறுபடியும் தீ வைப்போம் என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக இன்றைக்கு கிராமப் பகுதியைச் சேர்ந்தவர்கள் இராமநாதபுரத்திற்குச் செல்ல முடியாத நிலைமை இருக்கிறது. இராமநாதபுரத்திலே தான் ஆர்.டி.ஓ. ஆபீஸ் இருக்கிறது, மற்ற அலுவலகங்கள் இருக்கின்றன. அது மட்டுமல்ல, இராமநாதபுரத்திலே தான் மார்க்கட் இருக்கிறது. ஆனால், மக்கள் அங்கே போக முடியாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. . . .

**திரு. த. இராமசாமி:** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் பாலகிருஷ்ணன் அவர்கள் இராமநாதபுரம் கலவர நிகழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். நான் அந்த நிகழ்ச்சியை விளக்க வேண்டியவனாக இருக்கிறேன். அந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற காரணத்தாலே என்ன நடந்தது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகச் சொல்லுங்கள். அவர் சொன்னதற்கு மேல் கூடுதலாக விளக்கம் சொல்ல வேண்டியிருந்தால் சொல்லுங்கள், மற்றவைகளைத் தாங்கள் வேண்டும்போது வேண்டுமானால் சொல்லுங்கள்.

[1978 செப்டம்பர் 1

திரு. சோ. பாலகிருஷ்ணன் : எனக்கு டைம் இல்லை. நிறையப் பேச வேண்டியிருக்கிறது. அவர் பேசும்போது வேண்டுமானால் பேசட்டும். ஐ ஏம் நாட் யீல்டிங்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் யீல்ட் ஆகவில்லை என்கிறார். ஆகவே, நீங்கள் பேசும்போது வேண்டுமானால் பேசுங்கள்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : இரண்டு தடவைகள் விவசாயிகள் போராட்டங்கள் நடந்தன. முதல் தடவையாக நடந்தபோது அவர்கள் ரோடுகளிலே நின்று தடங்கல் பண்ணி வெற்றிகரமாக நடத்தினார்கள். இதனால் நமது அரசுக்குக் கோபம் வந்துவிட்டது. அதிகாரிகளை விரட்டியிருப்பார்கள்.

(பிற்பகல் 1-10)

அதனாலோ என்னவோ, இந்தத் தடவை போலீஸ் அதிகாரிகள் கிராமங்களுக்குச் சென்று பெண்களையெல்லாம் அடித்து, உதைத்திருக்கிறார்கள் என்ற வரலாறெல்லாம் பெரிய சோக வரலாறு. போலீஸ்காரர்களுக்குக் கோபம் வந்தால் என்ன செய்வார்கள்? சுருக்கமாகச் சொன்னால் போலீஸ் துறை நம் முதலமைச்சர் கையில் இல்லை, எங்கோ போய்விட்டது. போலீஸ்காரர்கள் ஒன்று சும்மா இருக்கிறார்கள், இல்லையென்றால் அடி அடி என்று அடிக்கிறார்கள்.

எங்கள் ஊர்ப் பகுதியிலே குடிதண்ணீர்ப் பிரச்னை பெரிய பிரச்னை. குடிநீர்ப் பிரச்னை மாதிரி மோசமான சூழ்நிலை நாட்டில் இல்லை. எங்கள் பகுதிக்கு முதலமைச்சர் சுற்றுப்பயணம் வந்தபொழுது ஒன்றேகால் கோடி ரூபாய்க்கான திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்கள். எங்கள் தொகுதியிலும் ஒரு திட்டம் ஒன்றேகால் கோடி ரூபாய் அளவிற்குத் தயாராக இருக்கிறது. இப்பொழுது அங்கே தண்ணீர் எடுக்கும் இடத்தில் பெரிய தகராறுகள் வருகின்றன. அதை ஒழுங்கான முறையில் செய்திருக்க வேண்டும். அப்படிச் செய்யாமல் என்ன செய்தார்கள் என்றால் 10 இலட்சம் ரூபாய் செலவில் குடிநீர்க் கிணறுகளை வெட்டி விட்டார்கள். ஒரே இரவில் அங்குள்ள விவசாயிகள் அந்த 10 இலட்சம் பெறுமானமுள்ள அத்தனை குடிநீர்த் திட்டங்களையும் நொறுக்கித் தவிடு பொடியாக்கி





விட்டார்கள். போலீஸ் பந்தோபஸ்தெல்லாம் இருந்தது. போலீஸ் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. ஒன்றும் செய்யக் கூடாது, எங்கள் முதலமைச்சர் அப்படிச் செய்ய உத்தரவு பிறப்பிக்கவில்லை என்று இருந்துவிட்டார்கள். பிறகு அங்குள்ள அதிகாரிகளெல்லாம் பத்து இலட்சம் பெறுமானமுள்ள குடிநீர்த் திட்டங்கள் போய்விட்டது, எங்கள் உயிருக்கு ஆபத்து என்று ஓடிய பிறகு போலீசுக்குக் கோபம் வந்துவிட்டது. பத்து இலட்சம் ரூபாய்க்கு இழப்பா, நாங்கள் இருபது இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சேதத்தை உண்டாக்குவோம் என்று அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளின் கிணறுகள் பூராவையும் நொறுக்கி விட்டார்கள். அதன் காரணமாக அந்தப் போலீஸ் அதிகாரிகளை 20 பேர், 30 பேர்களை சஸ்பெண்ட் செய்து விட்டார்கள். இன்ஜினியரை நான் கேட்டேன், என்றைக்குத் தண்ணீர் வரும் என்று. 'அங்கு அரிவாளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள், தலை போனால் 10,000 ரூபாய் தானே கொடுக்கப்படுகிறது. ஒரு இலட்சம் ரூபாய் கொடுத்தால் நான் வேலை செய்கிறேன்' என்று என்னிடத்தில் என்ஜினியர் சொன்னார். போலீஸ் அதிகாரிகள் அங்கே பயப்படுகிறார்கள். 30, 40 பேர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். தண்ணீர் எடுக்க வேண்டும். அரசாங்கம் முன்பு பஞ்சாயத்து யூனியன்களுக்குப் பணத்தைக் கொடுத்து, உறைக் கிணறு என்று போட்டுக் கொள்ள வசதியாக இருந்தது. ஆனால், இப்பொழுது அந்த அதிகாரத்தை வாட்டர் போர்டுக்குக் கொடுத்துவிட்டார்கள். அவர்கள் பைப்பை வாங்கி வைத்துக் கொண்டு குடிதண்ணீர் எடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையிருந்தால் கேரளாவிலேயிருந்து தண்ணீரை எப்படித் தருவீர்கள்? நம்முடைய பகுதியிலேயே அதைச் செயல்படுத்த முடியவில்லை. பைப்பை வாங்கி வைத்திருக்கிறார்கள். கிழக்கு இராமநாதபுரம் பகுதியிலே முதுகுளத்தூர், கடலாடி போன்ற இடங்களில் குடிநீர் கொடுப்பதற்கான முறையைச் செயல்படுத்த முடியாத நிலைமையிருக்கிறது.

சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று சொன்னால் முதலமைச்சருக்குக் கோபம் வருகிறது. முதலமைச்சரவர்கள் மாண்புமிகு சுப்பு பேசுவதை கவனித்திருக்க வேண்டும்.

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [1978 செப்டம்பர் 1

திரு. சுப்புவுக்கு நேரம் கொடுத்தது சட்டப்படி சரியாக இருந்தாலும், முதலமைச்சர் பெருந்தன்மையோடு இன்னும் பத்து நிமிஷம் பேசுமாறு வாய்ப்புக் கொடுத்திருக்க வேண்டும். ஏனென்றால், நாங்கள் வெளியிலிருந்து வருகிறவர்கள். அருப்புக்கோட்டை பஞ்சவர்ணம் படுத்துகிற பாடு இருக்கிறதே அது முதலமைச்சருக்கே தெரியும். அவர் முதலமைச்சராகவே அங்கே செயல்படுகிறார் என்று ஊரில் இருப்பவர்கள் பேசிக் கொள்கிறார்கள். எங்களைப் போன்ற கிராமத்தில் வாழ்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்வதைக் கவனமாகக் கேட்பதன் மூலம் இங்கே நல்லாட்சி ஏற்பட முடியும், சட்டம் ஒழுங்கு நல்ல முறையில் இருக்க வழிவகை செய்ய முடியும்.

போலீஸ் என்பது, இப்பொழுது ஒரு பக்கம் பேசாமல் பொம்மைகளாக இருக்கிறார்கள். மறுபக்கத்தில் கடோத்கஜன் மாதிரி, சிங்கம் மாதிரி கர்ஜிக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலைமை நாட்டிலே நிலவுகிறது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்லக்குடியில் 21 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். யாராவது போய் என்ன என்று கேட்டார்களா? போலீஸ் போனதா, கலெக்டர் போனாரா, அமைச்சர் போனாரா, அவர்களில் யாராவது போனார்களா? ஆனால், 21-வது நாள் சூட்டிங் நடந்திருக்கிறது. போலீசார் அப்படி சூட்டிங் இல்லை என்று சொல்லி விட்டார்கள். டாக்டர்கள் குண்டு இருக்கிறது, பக் ஷாட் என்று சொல்லியிருக்கிறார்கள். பக் ஷாட் என்றால் ஒன்றும் செய்யாதா? இதையெல்லாம் முதலமைச்சர் கவனிக்க வேண்டும்.

சாதிக் கலவரம் என்பது இருபது ஆண்டுகளுக்குப் பிறகு இப்பொழுது தலைதூக்க ஆரம்பித்திருக்கிறது. எங்கே பார்த்தாலும் ஜாதி உணர்வு ஜாஸ்தியாக இருக்கிறது. இந்து-முஸ்லீம் பிரச்னை ஒன்றிரண்டு ஊர்களில் வரத் தொடங்கி விட்டது என்றால் இதற்குக் காரணம் நாட்டிலே கட்டுப்பாடு என்பது அறவே இல்லாமற் போய்விட்டது. இதை நம்முடைய அரசு மிகக் கவனமாகப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



1978 செப்டம்பர் 1] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

பிறகு, ரொம்ப முக்கியமான ஒரு சமாசாரம். அமைச்சர்கள் கொடுக்கிற வாக்குறுதியை உடனே நிறைவேற்றியாக வேண்டும். அதிலே தடங்கல் இருக்கிறது என்று சொன்னால் அது சரியல்ல. மேல் சபையிலே, நம்முடைய திரு. இராமகிருஷ்ண தேவர் ஒரு கோரிக்கையைக் கொடுத்தார். தேவக்கோட்டையிலே ஒரு வீடு இடிந்து, கணவனுக்குக் கால் போய்விட்டது, மனைவி இறந்து விட்டாள், மகனும் இறந்து விட்டான், ஆகவே, நிவாரணம் வேண்டுமென்று கேட்டார். கலெக்டரிடம் கேட்டேன், ஒன்றும் செய்ய முடியாது என்று சொன்னார். ஆகவே, உங்களிடம் சொல்கிறேன் என்று சொன்னார். நம்முடைய நிதி அமைச்சர் திரு. மனோகரன் அவர்கள் 'சாங்க்ஷன்' செய்கிறேன் என்று சொன்னார். சாங்க்ஷன் செய்கிறேன் என்று சொல்கிறீர்கள். எப்பொழுது பணம் கிடைக்கும் என்று திரு. இராமகிருஷ்ண தேவர் கேட்டார். உடனே அமைச்சர் திரு. மனோகரன், இராமகிருஷ்ண தேவர் ஊர் போய் சேர்வதற்குள் பணம் அவர்களுக்குக் கிடைத்துவிடும் என்று சொன்னார். அது ரெக்கார்டிலே இருக்கிறது. அதைச் சொல்லி 6 மாதம் ஆயிற்று, இன்னமும் பணம் கிடைக்கவில்லை. அமைச்சர்களில், திரு. மனோகரன் ரொம்ப எஃபக்டிவ் மினிஸ்டர் என்று நினைக்கிறேன். அவர் சொன்னதே நடக்கவில்லையென்றால், மக்களுக்கு அமைச்சர்களின் வாக்குறுதியின் பேரில் எப்படி நம்பிக்கை ஏற்படும்? சட்டத்திற்குப் புறம்பாகச் சொல்லி விட்டால் கூட, அதை உடனடியாகச் செயல்படுத்த வேண்டும். கலெக்டர், குடும்பத் தலைவன் செத்தால்தான் பணம் கொடுக்க முடியும் என்று சொல்கிறார். தலைவனுக்குக் கால் போய் விட்டது, மகனும் மனைவியும் இறந்து விட்டார்கள். இன்னும் என்ன வேண்டும்? தலைவன் செத்தால்தான் கொடுக்க முடியும் என்றால், அவன் தற்கொலைதான் செய்து கொள்ள வேண்டும். ஆகவே, இதுமாதிரி நிபந்தனைகளை மாற்றியாக வேண்டும்.

பிறகு, கல்லூரி ஆசிரியர்கள் பெரிய போராட்டம் நடத்தினார்கள். அதற்குப் பிறகு அமைச்சர்கள் சந்தித்து, வேலைக்கு உத்தரவாதம் கொடுத்தார்கள். ஆனால் இப்பொழுது 120 பேராசிரியர்களைப் பல தனியார் கல்லூரிகளில் நீக்கி இருக்கிறார்கள். அரசாங்கம் சொன்னாலும் அவர்களைச் சேர்ப்பதற்கு அவர்கள் தயாராக இல்லை. ஏனெனில், தனியார் கல்லூரிகள் பேரில், அரசாங்கத்திற்கு கன்ட்ரோல் இல்லை.

நம்முடைய நாட்டில் அரசாங்க வேலை பார்ப்பவர்கள் இறந்தவுடன் ரூ. 10,000 கொடுப்பது என்பது பழைய அரசு கொண்டு வந்த சட்டம். நல்ல சட்டம். ஆனால், திரு. சந்திரன் என்பவர் சிவில் சப்ளை இலாகாவில் வேலை பார்த்தவர், இறந்து 9 மாதம் ஆயிற்று. இதுவரையில் அவருடைய குடும்பத்தாருக்குப் பணம் கிடைக்கவில்லை. அந்த இலாகா, ரீஜினல் டைரக்டர் அலுவலகத்திற்கு நேற்று கூட ஃபோன் செய்து கேட்டேன், அவர் இல்லை. அங்கு இருந்த ஒருவர், பார்க்கிறோம் என்று பதில் சொன்னார். சந்திரன் என்பவர் இறந்து விட்டார். அவரா வந்து கேட்க முடியும்? வீட்டிலே சின்னக் குழந்தைகள் இருக்கிறார்கள்? வேறு யார் வந்து பணம் கேட்க முடியும்? அரசாங்கம்தான் இதையெல்லாம் கவனிக்க வேண்டும். இது மாதிரி வாக்குறுதிகளை நிறைவேற்றுவதிலே சரியாக, நன்றாக நடந்து கொள்வதில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களுடைய பகுதியிலே, ஆட்டு 'லோன்' கொடுக்கிறேன் என்று 'செக்' வழங்கி விட்டார்கள். இன்னும் ஆடு வழங்கவில்லை. முதலமைச்சர் வந்து 9, 10 மாதம் ஆயிற்று. இதுவரையில் ஆடு வழங்கவில்லை. முதலமைச்சர் வரும்போது ஏமாற்றி 'செக்' கைக் கொடுத்து விடுவது, பிறகு ஆடு வழங்கவில்லையென்றால், இதுபோன்ற நிலையென்றால், அரசாங்கம் நடக்கிறதா என்றோ என்ன வேண்டியிருக்கிறது. இந்தத் தவறுகள் இனிமேல் நடக்கக் கூடாது என்பதையும்....

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** எப்படிப் பட்டவர்கள் என்பதையும், யார், யாருக்குக் கொடுக்கப்படவில்லையென்பதையும் தயவுசெய்து அவர்கள் ஆதாரத்தோடு கூறுவார்களானால் உதவியாக இருக்கும்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நம்முடைய முதல்வர் அவர்கள் 'செக்'கை அங்கே 'இஷ்யூ' செய்துவிட்டார்கள் 'இஷ்யூ' பண்ணின 'செக்'கைக் கொண்டு ஆடு வாங்கிக் கொடுக்கவில்லையென்பது தான் என்னுடைய 'கன்டென்ஷன்'.





**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** சட்டப் பேரவைத் தலைவரவர்களே, காசோலை கொடுக்கப்பட்டாகி விட்டது; மாற்ற முடியவில்லையா? மாற்றுவதற்கு அனுமதி கிடைக்கவில்லையா? எப்படி, எதனால் தாமதப்பட்டது என்பதைத் தயவுசெய்து சொல்ல வேண்டும்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மத்திய வங்கியிலிருந்து காசோலைகள், முதலமைச்சரவர்கள் வந்த நேரத்தில், ஒரு விவசாயிக்கு 20 ஆடுகள் வாங்க, அதாவது ரூ. 2,100 கொடுக்கப்படுகிறது. முதலமைச்சர் மூலமாக 'செக்' கொடுக்கப்படுகிறது. முதலமைச்சர் போன பிறகு, அந்த 'செக்' கைத் திருப்பி வாங்கி விட்டார்கள். ஏனென்றால், உங்கள் சொஸைட்டி ஓவர்ட்யூ, அதைக் கொடுத்த பிறகுதான், என்று சொல்கிறார்கள். பிறகு எதற்கு அதிகாரிகள் வேலை பார்க்கிறார்கள்? முதலமைச்சரை ஏமாற்றுகிறார்கள்.

இன்னொன்று, ரொம்பக் கொடுமை. டாக்சி டிரைவர்களெல்லாம், 'அண்ணா டாக்சி டிரைவர்ஸ் அசோசியேஷன்' என்று 1973-ல் ஏற்படுத்தி இருக்கிறார்கள். அசோசியேஷன் ஏற்படுத்தி, எல்லோருக்கும் டாக்சி வாங்கிக் கொடுத்தார்கள். அவர்களால், முறைப்படி திருப்பிக் கொடுக்க முடியவில்லை போல் இருக்கிறது. அந்த டாக்சிகள் ரோடில் நிற்கின்றன. நான் 'போட்டோ' எடுத்திருக்கிறேன், முதலமைச்சரிடம் கொடுக்கப் போகிறேன். 4 மாதங்களாக பரமக்குடியிலே அவ்வளவையும் பறிமுதல் செய்து 'ரோடில்' நிறுத்தி விட்டார்கள். 'சீல்' செய்தவுடன் ஏலம் விட்டிருந்தால் கூட பணம் வந்திருக்கும். இப்பொழுது, போகிறவன், வருகிறவன் எல்லாம் அவற்றைச் சேதப்படுத்தி ஒன்றுக்கும் உபயோகப்படாத நிலையிலிருக்கிறது. 4 மாதங்களாக, வெயில், மழையிலே அவை நின்று கொண்டிருக்கின்றன.

(பிற்பகல் 1-20)

அதன் மீது பிள்ளைகள் ஏறி விளையாடுகிறார்கள். அதாவது மீன்காரனுக்கு அரசு கடன் கொடுத்தது. அந்தக் கடன் திரும்ப வாராதபோது அவனுடைய மீன்களை எல்லாம் பறித்து வைத்தால் என்ன நிலைமை ஏற்படுமோ அந்த நிலைமைதான் தற்போது அந்த டாக்சிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. அவைகள் இனிமேல் எதற்கும் போக முடியாத நிலைமை. அமைச்சர் பொன்னையன்

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [1978 செப்டம்பர் 1

அவர்கள் கடந்த சட்டசபையிலே இனிமேல் இப்படிப்பட்ட கெடுபிடிகள் அதிகாரிகளால் நடக்காது என்று சொன்னார். எனவே இனிமேல் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடக்காமல் இருக்க கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த பாக்கிகளை முன்பே ஏலம் போட்டிருந்தால் அரசாங்கத்திற்காவது லாபம் வந்திருக்கும்.

இந்த லஞ்சம் இருக்கிறதே—நான் வெள்ள நிவாரணப் பணி பற்றிப் பேசும்போதே சொன்னேன்—இந்த வெள்ள நிவாரணப் பணியை கலெக்டரிடம் கொடுத்துவிடுங்கள் என்று சொன்னேன். ஆனால் பி.டபிள்யூ.டி.யிடம் கொடுத்தார்கள். மூதறிஞர் இராஜாஜியே சொல்லி இருக்கிறார், பி.டபிள்யு.டி. என் முதல் எதிரி என்று. முந்தைய ஆட்சியில் வேலை முடிந்த உடன்தான் லஞ்சம் வாங்கிக் கொண்டிருந்தார்கள். ஆனால் இப்போது வேலையைக் கொடுக்கும்போதே 4 சதவிகிதம், 5 சதவிகிதம் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். (மணியடிக்கப் பட்டது) எங்கள் ஊரில் ஒரு உதவி டிவிஷனல் இன்ஜினியர் ஒருவர் ஒரு லட்சம் ரூபாய் வரையில் சம்பாதித்து விட்டு தற்போது விடுமுறையில் சென்றுவிட்டார். இந்த விஷயத்தில் அரசு மிகவும் கண்டிப்பாகவும், கண்காணிப்பாகவும் இருக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையில் லஞ்சம் விளையாடுவதாக மாண்புமிகு உறுப்பினர் சொன்னார்கள். அது எந்தெந்த இடத்திலே விளையாடுகிறது? யார் யார், எவ்வளவு பணம் கொடுத்திருக்கிறார்கள் என்பதை விவரமாக எடுத்துச் சொன்னால், உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு அவர் ஒத்துழைப்புத் தருவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நடக்கிற காரியமா இது. லஞ்சத்தைக் கண்டுபிடிப்பதற்கு உங்களிடத்திலே ரகசிய போலீஸ் இருக்கிறது. அப்படி இல்லை என்றால் சர்க்காரியா கமிஷன். ஷா கமிஷன் எல்லாம் எதற்காக. நான் வெளியே சொன்னால் என் மீது ஒரு பெட்டிசன் போடுவான். நீங்களே ரகசியமாக விசாரிக்க வேண்டும்.



1978 செப்டம்பர் 1]

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தனியாக, பர்சனலாக ஏதாவது ஏற்பட்டிருந்தாலும் கூட தனியாகச் சொல்லலாம். உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

* **திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது நான் சார்ந்திருக்கும் காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

சாதாரணமாக எதிர்க் கட்சிகள் என்றாலே ஏதாவது குறைகளைச் சொல்லிக் கொண்டுதான் இருப்பது வழக்கம். அந்த அளவிலே இப்போது கொடுக்கப்பட்டிருக்கும் ஆளுநர் உரையிலே என்னைப் பொறுத்தவரையில் எந்தவிதமான முன்னேற்றமும் இருப்பதாகத் தெரியவில்லை. உதாரணமாக இந்தக் காலத்திலே வேலையில்லா திண்டாட்டம் பூதாகாரமாக உருவெடுத்து ஆடிக் கொண்டிருக்கிறது. ஏழையாக இருந்தாலும் அல்லது பணக்காரனாக இருந்தாலும் தங்களுடைய பிள்ளைகளை உத்தியோகத்திற்கு அனுப்புவதற்காகத்தான் படிக்க வைக்கிறார்கள். ஆனால் பி.ஏ., பி.எஸ்ஸி. படித்தவர்கள் சாதாரணமாக துணிக் கடைகளிலும் மளிகைக் கடைகளிலும் ரூ. 30, ரூ. 40 சம்பளத்திற்கு வேலை பார்க்கிறார்கள் என்பது உண்மையிலேயே வேதனைப்படக் கூடிய விஷயம்.

இந்த ஆளுநர் உரையில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் பட்டதாரிகளுக்கும், படித்தவர்களுக்கும் வேலை கொடுக்க எந்த திட்டத்தை உருவாக்கி இருக்கிறீர்கள் என்று சொல்லவில்லை. அவர்கள் இன்றைக்கு ஒரு வேலையும் கிடைக்காமல் அவதிப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். பெருந்தலைவர் காமராஜர் ஆட்சியில் இருந்த காலத்தில், இந்த வருஷம் இத்தனை மாணவர்கள் படித்து வெளியே வருகிறார்கள், அவர்களுக்கு எந்த வகையில் வேலை கொடுக்க வேண்டும் என்று அதே சிந்தனையில் இருப்பார்கள். ஆகவே, அந்த சிந்தனை தொடர்ந்து எப்போதும் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சென்னையில் பல பட்டதாரிகள் சர்வீஸ் கமிஷனில் பல முறை பரீட்சை எழுதியும் தேர்வு பெறாமல் இருக்கிறார்கள்.

அவர்களுக்கெல்லாம் சரியான வகையில் வேலை வாய்ப்பு கிடைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏழைப் புலவர்களுக்கு ரூ. 75 மாதம் உதவி வழங்குவதாக இந்த மன்றத்தில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒரு சில வாரங்களுக்கு முன்பு எங்கள் ஒன்றியத்தில் ஒரு புலவர் வேலை இருப்பதாகக் கேட்டு, ஒரு சில புலவர்கள் வந்து என்னை சிபாரிசு செய்யும்படி கேட்டார்கள். நான் அவர்களைக் கேட்டேன், உங்களுக்குத்தான் அரசு ரூ. 75 மானியம் அளிக்கிறதே, வேலை கிடைக்காவிட்டால் அதை வைத்துக் கொண்டு சமாளிக்க முடியாதா என்று கேட்டேன். அவர்கள் எல்லாம் எங்களுக்கு அப்படிப்பட்ட மானியம் எதுவும் வழங்கப்படவில்லை என்று சொன்னார்கள். மேற்கு வங்கத்திலும், கேரளாவிலும் பட்டதாரிகளுக்கு உதவிகளை அரசு செய்து வருகிறது. அதே வகையில் தமிழ் நாடு அரசும் ஏழை பட்டதாரிகளுக்கு உதவிகரமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு புதியதாக தமிழக அரசு எம்.பி.,பி.எஸ்., இன்ஜினியரிங் தேர்வுகளுக்கு மார்க்குகளை அதிகப்படுத்தி விட்டார்கள். பி.சி. வகுப்பு மாணவர்கள் கூட 90 சதவிகிதம் எடுக்க வேண்டும் என்று வைத்து விட்டார்கள். எப்படி 90 சதவிகிதம் மார்க்குகள் மாணவர்கள் வாங்குகிறார்கள் என்று தெரியவில்லை. கிராமப்புறத்தில் உள்ள மாணவர்கள் 10-15 மைல் பஸ் அல்லது ரயிலில் வந்து படிக்க வேண்டியிருக்கிறது. அவர்களால் அந்த அளவிற்கு மார்க்கு வாங்குவதற்கு முடியாது. ஆனால் நகர்புறத்தில் படிக்கின்ற வசதி படைத்தவர்கள் அந்த பேப்பர்களுக்கு பின்னாலேயே சென்று அதிக அளவிற்கு மார்க்குகளை வாங்கி வந்து விடுவதாகச் சொல்கிறார்கள். அது எந்த அளவிற்கு உண்மை என்று எனக்குத் தெரியாது. ஆகவே, கிராமப்புறங்களில் இருக்கும் மாணவர்களும், எம்.பி.,பி.எஸ். இன்ஜினீரிங் படிப்புத் தேர்வுகளில் வெற்றி பெறும் வகையில் மார்க்குகளை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





ஆசிரியர்கள் பலர் வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தனியார் பள்ளிகள், கல்லூரிகள் ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் சம்பளம் நேரடியாக அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். தனியார் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு சில இடங்களில் சம்பளம் சரிவர தரப்படுவது இல்லை. ஆகையால்தான் இந்தக் கருத்தை இங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.

பல்கலைக் கழக ஆணைக்குழு சிபாரிசு செய்த சம்பள விகிதம் தனியார் கல்லூரிகளில் வழங்கப்படவில்லை. அது அரசுக்குத் தெரியுமோ தெரியாதோ எனக்குத் தெரியாது. தனியார் துறை கல்லூரிகளிலும் உடனடியாக அந்தச் சம்பள விகிதம் தரப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்டம் ஒழுங்கைப் பற்றி பல உறுப்பினர்கள் பேசினார்கள். அது குறித்து உண்மையிலேயே சிந்திக்க வேண்டும். எல்லா இடங்களிலும் தற்போது கொலை, கொள்ளை, கற்பழிப்பு நடந்து கொண்டு இருக்கிறது. சாராய கேஸில் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்ததற்காக 400 பேர் போலீஸ் ஸ்டேஷனை முற்றுகை இட்டு விட்டார்கள். இப்படி பல இடங்களில் போலீஸ் நிலையங்கள், போலீஸ்காரர்கள் தாக்கப்படுகின்றனர். எங்கள் ஊரிலேயே கற்பழிப்பு, கொலை, கொள்ளை நடந்து இருக்கிறது. இதுவரையில் அது குறித்து நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. ஆகவே, சட்டம் ஒழுங்கைப் பற்றி சொன்னால் ஆட்சியாளர்கள் ஆத்திரப்படவோ, வருத்தப்படவோ கூடாது என்ற முறையில் பல உறுப்பினர்கள் இந்த மன்றத்தில் பேசினார்கள்.

(பிற்பகல் 1-30)

அடுத்து, சென்னையில் ஒரு வீட்டுக்குப் போயிருந்தேன். அந்த வீட்டுக்கு இரண்டு வாசல்கள் போட்டிருக்கிறார்கள். முதலிலே ஒரு வாசல், அதைத் திறந்து கொண்டு போனால் இன்னொரு வாசல் இருக்கிறது. ஏன் இப்படி வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டேன். திருடர்கள் வந்துவிடுவார்கள்; அதனால் தான் இப்படி வைத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். இரவில்

தேங்காயை திருடன் பறித்துக் கொண்டு போய் விடுகிறான்; அதைப் பார்த்தாலும் யாரும் கேட்க மாட்டார்கள்; ஏனென்றால் திருடன் வெட்டிவிடுவான், குத்திவிடுவான் என்று பயப்படுவதாகச் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியுடன் இன்னும் மூன்று நிமிடங்கள் சபையின் நேரத்தை நீட்டிக்கிறேன்.

**திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்:** அடுத்தபடியாக விவசாயிகள் பிரச்சினை பற்றி குறிப்பிட விரும்புகிறேன். ஏழை விவசாயிகள், அரிஜன விவசாயிகள் 30 ஆண்டு, 40 ஆண்டு, 50 ஆண்டு காலம் பயிர் செய்து வருகிறார்கள். அதற்கு என்ன ஆதாரம் என்று இப்போது கேட்கிறார்கள். மேல் நாடுகளில் சில வழக்குகள் சி.ஐ.டி. போட்டு கேஸ் பிடிக்கிறார்கள். அதைப்போல அவர்கள் உண்மையிலேயே அந்த நிலத்தில் 40, 50 ஆண்டு காலம் பயிர் செய்தார்களா என்று வேண்டுமென்றால் சி.ஐ.டி. போட்டு கண்டுபிடியுங்கள். அது அல்லாமல் அவர்களிடம் ஆதாரம் இல்லை என்று சொல்லி, அந்த நிலத்திலிருந்து அவர்களை வெளியேற்றக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. உத்திராபதி அவர்கள் பாபநாசம் தாலுகா பற்றி சொன்னார்கள். அதைப்போல பண்டாரவாடை கிராமத்திலும் இருக்கிறது. அங்கெல்லாம் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். நெல் விலையைப் பொறுத்தமட்டில் கேரளத்தில் 120 ரூபாய் கொடுக்கிறார்கள். அதைப்போல இங்கும் கொடுக்க வேண்டும். கரும்பு விலையையும் அதிகப்படுத்த வேண்டும்.

பஞ்சாயத்து யூனியன்களில் மக்கள் குழு என்று ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியனைக் கலைத்து விட்டால் அங்கே குழு இருக்க வேண்டியது அவசியம்தான். ஆனால் பஞ்சாயத்துக்களுக்கு எதற்கு மக்கள் குழு? அதில் சில சங்கடங்கள் இருக்கின்றன. மக்கள் நன்மைக்காக பஞ்சாயத்துக்களில் மக்கள் குழு ஏற்படுத்தியிருப்பதாக ஆட்சியாளர்கள் கூறுகிறார்கள். அது அங்கு தேவையில்லை.



பாபநாசத்தில் ஏராளமான மக்கள் இருக்கிறார்கள். அங்குள்ள மருத்துவமனையில் இரண்டு டாக்டர்கள்தான் இருக்கிறார்கள். அது போதாது. அங்கு அதிகமாக மேலும் ஒரு டாக்டரைப் போட வேண்டும்.

பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு கட்டடம் கட்ட சாங்ஷன் ஆகிவிட்டதாகச் சொன்னார்கள். உடனடியாக அதைக் கட்டி முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

போலீஸ் ஸ்டேஷன் எங்கள் ஊரிலிருந்து எட்டத்தில் இருக்கிறது. போலீஸ் ஸ்டேஷன் எட்டி இருப்பதால் கடைத் தெருவில் அடிக்கடி சண்டை சச்சரவுகள் ஏற்படுகின்றன. ஆகவே, கடைத் தெருப் பக்கத்தில் இன்னொரு போலீஸ் ஸ்டேஷன் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப் போல ஃபயர் ஸ்டேஷன் ஒன்றும் அங்கே வரவேண்டும்.

இன்னொன்று, குருங்குளம் சர்க்கரை ஆலை இருக்கிறது. எங்கள் பகுதியில் கரும்பு உற்பத்தி ஏராளமாக இருக்கிறது. அங்கே 10, 15 மாதங்கள் ஆன பிறகுதான் 'கட்டிங் ஆர்டர்' கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுத்தாலும் வெட்டி வைத்த கரும்பை உடனே லாரிகளில் கொண்டு செல்கிறார்களா என்றால் இல்லை. வெட்டி வைத்து, 4 அல்லது 5 நாட்கள் ஆன பிறகுதான் எடுத்துச் செல்கிறார்கள். அதனால் விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது; அவர்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, எங்கள் தாலுகாவிற்கு தனியாக ஒரு சர்க்கரை ஆலையை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த அளவுக்கு அங்கே கரும்பு உற்பத்தியாகிறது.

கடைசியாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஐயம்பேட்டை வேலை என்று சொல்வார்கள். அதாவது, இடது கம்யூனிஸ்ட் கட்சியினருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கும் ஏற்பட்ட மோதலில் எங்களை கொண்டு போய் வம்பில் மாட்டிவிட்டார்கள். இந்திரா காங்கிரஸ்காரர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டு சேர்ந்து விட்டார்கள் என்று குறிப்பிட்டார்கள். அது தவறு. அப்படி ஒரு முடிவு எடுக்கப்படவில்லை. அதைப் பற்றி எங்கள் கட்சித் தலைவர்கள் எந்தவிதமான முடிவும் செய்யவில்லை. தலைவர்கள்

[திரு. ரே. வி. சவுந்திரராஜன்] [1978 செப்டம்பர் 1

என்ன முடிவு எடுக்கிறீர்களோ அதன்படி நாங்கள் நடப்போம் என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.34 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.



1978 செப்டம்பர் 1]

## 6. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

80. வேலூரில் உள்ள கிருத்துவ மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மகளிர் கிருத்துவச் சங்கச் சிற்றுண்டிச் சாலைக்கு, தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஓட்டல் நிறுவனங்கள் சட்டத்தின் 10 ஆவது பிரிவின் விதித் துறைகளிலிருந்தும், தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு ஓட்டல் நிறுவன விதிகளின் 38 ஆவது விதியைச் சேர்ந்த (3) துணை விதியில் கண்டுள்ள விதித் துறைகளிலிருந்தும் விலக்களிப்பது குறித்த, தொழிலாளர் நல—வேலை வாய்ப்புத் துறையின் 28—7—1978 ஆம் தேதியிடப் பெற்ற 800 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஓட்டல் நிறுவனங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1958) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

81. தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு, மாநில வீட்டு வசதி வாரிய கணக்குகளை வைத்து வருதல் (அரசு, இந்திய ஸ்டேட் வங்கி) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்த, வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 28—7—1978 ஆம் தேதியிடப் பெற்ற 1155 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு, 1961 ஆம் ஆண்டு மாநில வீட்டு வசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125 (9) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

82. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றிய மன்ற (துணைத் தலைவர் தேர்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்த, ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 4—7—1978 ஆம் தேதியிடப் பெற்ற 1076 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

## ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

*19. "சிகப்பு நாடா" மற்றும் "அலை ஓசை" பத்திரிகைகள் மீதான உரிமைக் குழுவின் அறிக்கைகள்.

---

*31—8—1978 ஆம் தேதியன்று பேரவையில் அளிக்கப் பெற்றன.

# தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

---

**சனிக்கிழமை, 1978. செப்டம்பர் 2.**

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### நட்சத்திரக் குறியிட்ட வினாக்கள்.

### பம்பு செட்டு மீட்டர்களுக்கான வாடகை

*வினா எண் 41—திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்சார இலாகாவால் பம்பு செட்டுகளுக்கு வசூலிக்கப் படும் மீட்டர் வாடகை மாதம் எவ்வளவு?

(ஆ) தொழில் நிறுவனங்களுக்கு மீட்டர் வாடகை உண்டா? ஆம் எனில் மாதம் எவ்வளவு?

(இ) பம்பு செட்டுக்காக பொருத்தப்படும் மீட்டரின் விலை எவ்வளவு?

[1978 செப்டம்பர் 2

தொடர்ந்து வசூலிப்பதற்குப் பதிலாக அவர்களுக்கு அந்த மீட்டர் கிரைய அளவு மட்டும் வசூலித்து சொந்தமாகக்கூடிய வகையில் ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும். ஏனென்றால் விவசாயிகள் இப்படித் தொடர்ந்து கட்டிக்கொண்டே இருக்கின்றோமே என்ற சங்கடத்தில் இதனையே ஒரு பெரிய பிரச்சினையாக வைத்து அவர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே அரசு இதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, மீட்டர் வாடகை/மீட்டரினுடைய விலையை அடிப்படையாக வைத்து வசூலிக்கப்படுவதில்லை. அதிலே மீட்டருடைய பராமரிப்புச் செலவும் அடங்குகிறது. ஆகவே மீட்டர் விலையினை வைத்து மீட்டர் வாடகை நிர்ணயம் செய்யப்படுவதில்லை. அதோடு மட்டுமல்ல. 4 ரூபாய் மீட்டர் வாடகை கட்டுவதென்பது ஒரு பெரிய பிரச்சினை அல்ல, ஏனென்றால் இது தொன்றுதொட்டு இருந்து வருகிற ஒரு வழக்கம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஆறுமுகம்:** பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தில் தற்போது எவ்வளவு மீட்டர்கள் இருக்கின்றன? அதன் மூலம் எவ்வளவு ரூபாய் வாடகையாக வசூல் செய்யப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, தமிழகத்தில் மொத்தம் எத்தனை சர்வீஸ்கள் இருக்கின்றனவோ அத்தனை மீட்டர்கள் இருக்கின்றன. 30 லட்சம் சர்வீஸ்களுக்கு மேல் தமிழகத்தில் இருக்கின்றன. 30 லட்சத்திற்கு மேற்பட்ட மீட்டர்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவரவர்களே, இப்போது மீட்டர் வாடகை 4 ரூபாய் என்று இருக்கின்ற நிலையில் மாதத்திற்கு 200 ரூபாய் என்ற அளவில் கூட மின்சாரக் கட்டணம் கட்டக்கூடிய பம்ப் செட்டுக்களை உடையவர்கள் இருக்கிறார்கள். ஆனால் மாதம் 10 ரூபாய்க்கும் உள்ளாகக்கூடிய மின்சாரக் கட்டணம் கட்டும் அளவு சிறிய விவசாயிகளும் இருக்கிறார்கள். ஆகவே இந்த நான்கு ரூபாய் என்பது அவர்களது சக்திக்கு மீறியதாக



1978 செப்டம்பர் 2]

இருக்கின்றது. ஆகவேதான் அவர்களை அந்த மீட்டர்களை வாங்கக்கூடிய வகையில் அவர்களிடம் இருந்து இந்த விலையை மட்டும் வசூலித்தால் அது அந்தச் சிறிய விவசாயிகளுக்கு மிகவும் உதவி செய்ததாக இருக்கும். ஆகவே அதை அரசு உடனடியாகச் செய்வதற்கு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, மின் வாரியத்தைப் பொறுத்த வரையில், கட்டணம் விதிப்பது என்பது சட்டத்திற்கு உட்பட்ட பல வகைகளில் அமைந்திருக்கிறது. அதாவது ஒன்று மின்சார யூனிட்டுகளின் அடிப்படையில் கட்டணம் வசூலிப்பது. இரண்டாவதாக அவற்றைப் பராமரிப்பதற்கும் அவற்றைச் சரியான முறையில் வைத்துக் கொள்வதற்குமாக அதற்கென்று வசூலிக்கப்படும் கட்டணம் மற்றொன்று. ஆகவே இந்த அடிப்படையில் தான்—விவசாய சர்வீஸ்கள் மட்டுமல்ல; மின் வாரியம் யார் யாருக்கு மின்சாரத்தை வழங்கி வருகின்றதோ அவர்கள் அத்தனை பேர்களிடமிருந்தும் இந்தமாதிரி முறையில்தான் அதாவது ரூபாய் 4 என்ற நிலையில் வசூல் செய்யப்படுகிறது. ஆகவே இதிலே சிறிய விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்ற பிரச்சினைக்கே இடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைவரவர்களே, மீட்டர் பராமரிப்புச் செலவுக்கும் சேர்த்துத்தான் இவ்வாறு வாடகைக் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அந்த மீட்டர் அடிக்கடி பழுதும் அடைந்து விடுவதும் இல்லை, அதை ரிப்பேர் செய்ய பெரிய செலவு ஆகிவிடுவதும் இல்லை. சாதாரணமாக மீட்டர் எவ்வளவு ஓடியிருந்தது என்று பார்த்து அதற்கேற்ப மின்சாரக் கட்டணம் வசூல் செய்ய வேண்டியதைத் தவிர வேறல்ல. ஆகவே மீட்டர் பராமரிப்புச் செலவு என்பது பெரிதாகிவிடாது. ஆகவே இந்த வாடகையை வாங்கிக்கொண்டு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு அந்த மீட்டர் அவர்களுக்கே சொந்தமாகின்ற அளவுக்கு ஏற்பாடு செய்யலாம் அல்லவா. ஆகவே அவ்வாறு செய்வதற்கு முயற்சி செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1978 செப்டம்பர் 2

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மீட்டர்களைப் பராமரிப்பது என்று ஒன்றுண்டு. மீட்டர்கள் சரியாக ஓடுகின்றதா என்று பார்ப்பதும் அதை டெஸ்ட் பண்ணுவதும் மீட்டரில் குறைபாடு இருக்கிறதா என்று பார்த்து அவ்வப்போது சரி செய்ய வேண்டிய வேலைகள் இருக்கின்றன. என்னென்ன ரிப்பேர் ஆகிறது, அதற்கு எவ்வளவு, எவ்வளவு செலவாகிறது என்பதைத் தெரிந்து கொள்வதற்குத் தனிக்கேள்வி ஒன்று போட்டால் விவரம் தரலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, மீட்டருடைய விலையை வைத்துக் கொண்டு இந்த வாடகை நிர்ணயிப்பது இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த மீட்டரின் விலை 68 ரூபாய், சில சமயங்களில் 40 ரூபாய் கூட இருக்கும். அப்படியே அதன் விலை 68 ரூபாய் என்று வைத்துக் கொண்டாலும் அதில் ஒரு பிரச்சினை வருகிறது. 17 மாதங்களுக்குத் தொடர்ந்து 4 ரூபாய் கட்டிக்கொண்டு வந்தால் 17 மாதங்களில் அதன் விலையே முடிந்துவிடுகிறது. ஆகவே மீண்டும் மீண்டும் இதைக் கட்டிக் கொண்டு இருக்க வேண்டி இருக்கிறதே என்ற ஒரு 'ஃப்ரிக்ஷன்' (எரிச்சல்) ஏற்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே திரு. அழகர்சாமி அவர்கள் சொன்ன யோசனையின்படி அவர்களே அந்த மீட்டரை வாங்கக்கூடிய அளவில் ஏற்பாடு செய்யப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன். இதிலே சிக்கல்கள் இருக்கலாம். இருந்தாலும் இந்த ஆர்க்யுமென்ட்டுக்கு அரசு என்ன சொல்லவிருக்கிறது? They have to pay every year. Who should it be?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: விவசாயத்தைப் பொறுத்தவரை மீட்டரின் முதலீடு, ரூ. 177, த்ரீ பேஸ் மீட்டருக்கு வரும். தற்சமயம் மெயின்டனன்ஸ், டெஸ்டிங், சார்ஜ் இன்டரஸ்ட், டிப்ரிஸியேஷன், மீட்டர் விலை ஆண்டு தோறும் உயர்ந்து வருகிறது. ஆகவே, மீட்டரை மாற்றி வேறு மீட்டர் போடுகிறபோது 'ரீப்ளேஸ்மென்ட்'-ம் அதிகமாகிறது. அந்த அடிப்படையை வைத்துக்கொண்டு விவசாயத்திற்கு என்று மட்டுமல்லாது எல்லா சர்வீஸ்களுக்கும், லைட்டிங், பேன் என்றால் இவ்வளவு வாடகை என்று நிர்ணயம் செய்து வசூலிக்கப் படுகிறது. ஆனால் விவசாயிகள் கட்டுபடியாகவில்லை என்று தெரிவித்த காரணத்தால் அவர்களோடு பேசிய பேச்சுவார்த்



[1978 செப்டம்பர் 2

தைகளின் அடிப்படையில் மற்ற சர்விஸ்களுக்கு ஐந்து ரூபாய் என்றிருந்தாலும் விவசாய சர்விஸ்களைப் பொறுத்தவரையில் ஐந்திலிருந்து ஒரு ரூபாய் குறைத்து நான்கு ரூபாய் வசூலிக்கப் படுகிறது.

திரு. மா. மணிமாறன்: மீட்டர்களைப் பொறுத்தவரையில் சில பேர்களுக்கு மீட்டர் கிடைக்காத காரணத்தால் கனெக்ஷன் கிடைக்காமல் இருக்கிறது. அரசுக்கும் முதலீட்டுச் செலவு ஆகிறது. ஆகவே விருப்பப்பட்டால் தனிப்பட்டவர்கள் மீட்டர் பொருத்திக்கொள்ள முன்வந்தால் அந்த மீட்டர்களைப் பொருத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தனிப்பட்டவர்கள் வாங்குகிற மீட்டர்கள் தரமான மீட்டர்களா என்பதைப்பற்றி மீண்டும் மின்சார வாரியமே சோதிக்க வேண்டியிருக்கிறது. அது மட்டுமல்ல. அந்த மீட்டர்களைப் பராமரிக்க மீண்டும் மின்சார வாரியம்தான் அந்த மீட்டர்களை டெஸ்ட் செய்வது போன்ற காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே தனிப் பட்டவர்களுக்கு அந்த சிரமம் வேண்டாம் என்றுதான் மின்சார வாரியமே இதைச் செய்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வி மீட்டர் மாதிரி ஓடாமல் இருக்க சுருக்கமாக கேட்டால் நல்லது.

திரு. வி. கே. கோதண்டராமன்: விரிவாகக் கேட்கிறவர்கள் கேட்கிறார்கள். ஆனால் நர்மாதிரி சுருக்கமாகக் கேட்கிறவர்கள் கேட்டும்போதுதான் இப்படிச் சொல்கிறீர்கள். மீட்டரின் விலை எந்தளவிற்கு உண்டோ அந்த அளவு வரை வசூலித்துக் கொண்டு, அமைச்சர் அவர்கள் சொல்வது போல் ஏதாவது பராமரிக்கக்கூடிய கட்டணம் வசூலிப்பதாகயிருந்தால் அதைத் தனியாக வசூலிக்கக்கூடிய அளவிற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அத்தகைய உத்தேசம் தற்போது இல்லை.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்த மீட்டர் ரென்ட் பொறுத்தவரை விவசாயிகளைப் பொறுத்தவரையில் இது ஒரு பெரிய பிரச்சினையாகயிருக்கிறது. அவர்களுக்கு, நான்கு ரூபாய் என்பதைக் குறைத்து இரண்டு ரூபாய் என்று கட்டணம் வசூலிக்க சர்க்காரகம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இரண்டு ரூபாயாக இருந்ததை மாண்புமிகு சாதிக் பாட்சா அவர்கள்தான் ஐந்து ரூபாயாக ஆக்கினார்கள். 1972-ல் ரூ. 2½ என்றிருந்தது 1974-ல் ரூ. 5 ஆக ஆகியது. இப்போது ஒரு ரூபாய் குறைந்து இருக்கிறோம், அதற்கு அவர் பாராட்ட வேண்டும்.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** பிரச்னை இப்போது வந்திருப்பதால் நாங்கள் இருந்தாலும் குறைத்திருப்போம். ஆகவே இப்போது அதைக் குறைக்க முடியுமா? (பதில் இல்லை.)

### பம்பு/செட்டுகளுக்கு மின் இணைப்பு

***வினா எண் 42—திரு. வெ. கருணாமூர்த்தி:** மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

1974-75 ஆம் ஆண்டில், 60,000 விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்க தமிழக அரசிடமிருந்து மின் வாரியத்திற்கு ஏதேனும் குறிப்பாணை அனுப்பப்பட்டதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** அரசிடமிருந்து ஆணை அனுப்ப வேண்டியதில்லை.

### தமிழ்நாடு கூட்டுறவு இணையப் பணியாளர்கள்

***வினா எண் 43—திரு. மு. அம்பிகாபதி :** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தமிழ்நாடு கூட்டுறவு இணையத்திற்கும் அதன் ஊழியர் சங்கத்திற்கும் நடந்த ஒப்பந்தப்படி நிரந்தரமாக்கியதில் விடுபட்டுள்ளவர்களை 31—10—1977-க்குள் நிரந்தரமாக்கவும் 25—6—1977-லிருந்து பின் தேதியிட்டு ஊதியம் வழங்கவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கும் அதன் ஊழியர் சங்கத்திற்கும் கடந்த 17—5—1977 அன்று ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தின்படி தமிழ்நாடு கூட்டுறவு





விற்பனை இணையத்தின் ஊழியர்களுக்கு பல்வேறு நிலைகளைச் சார்ந்த 279 பேர்களுடைய பணிகள் 25—6—1977 முதல் அவர்கள் டென்யூர் முறைப்படுத்தப்பட்டிருக்கிறது. முறைப்படுத்துவதில் சில தடங்கல் உள்ள 56 பணியாளர்களுடைய நிலைகள் பரிசிலனையில் இருக்கிறது என்பதை நான் அவையின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(முற்பகல் 9-10.)

**திரு. மு. அம்பிகாபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பெயரிலேயே ஒரு சிக்கல், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் என்பது. இந்த ஒப்பந்தம் நடந்தும், தொழிலாளர்களை நிரந்தரமாக்குவதும், பின்தேதியிட்டு ஊதியம் வழங்குவதிலும், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் சரியான கவனம் செலுத்தவில்லை என்பதை கருத்திற்கொண்டு, இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுகின்ற வகையில் அனைவரையும் நிரந்தரமாக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மூலக் கேள்விக்கு நான் பதில் சொல்லுகின்ற நேரத்திலேயே நான் சுட்டிக்காட்டியது போல் 279 பணியாளர்கள் நிரந்தரமாக்கப்பட்டு முறைப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். மற்ற 56 பேர்கள் பிரச்னையில் அது நிர்வாகப் பிரச்னையாக இருக்கிறது, அவர்களுக்கு அங்கு இடம் காலியில்லாததால் நிரந்தரமாக்காமல் முறைப்படுத்தப்படாமல் இருக்கிறது. விரைவில் அதுவும் செய்து முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். பழனிவேல் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு விற்பனை கூடக் கடைகளில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்குவெறும் 50 ரூபாய், 60 ரூபாய் தான் சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. இது மிகவும் போதாத நிலையில் இருப்பதால் தாங்கள் விற்பனை செய்கின்ற பொருட்களை பிளாக் மார்க்கெட்டில் விற்று வருவதால், விலையேறக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இவர்களது சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** தலைவர் அவர்களே, 17—5—1977-ல் நடந்த ஒப்பந்தத்தைப் பற்றித்தான் மூலக்கேள்வி இருக்கிறது. எனவே அதையொட்டிய துணைக்கேள்வியாக இது இல்லையாததால், உறுப்பினர் அவர்கள் இதற்குத் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, செய்யப்பட்ட ஒப்பந்தத்தை ஊழியர்களுக்கு முறையாக அமல்படுத்தாமல் கூட்டுறவிலேயே தவறுகளும் காலதாமதமும் ஏற்படுகிறது என்பதை அமைச்சர் அவர்களது விடையிலிருந்து தெரிய வருகிறது. கூட்டுறவில் பணியாற்றுகின்ற ஊழியர்கள் சங்கங்கள் அமைத்துக் கொள்ள வேண்டுமென்றாலும் அதிலுள்ள அதிகாரிகள் எதிர்ப்பு தெரிவிக்கின்றார்கள், வேறு பல விதத்திலும் நிர்பந்தித்து வருகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? செய்யப்பட்ட ஒப்பந்தத்தை அமலாக்காமலும், சங்கங்கள் அமைப்பதற்கு இடையூறாகவும் செயல்படுகின்ற கூட்டுறவு அதிகாரிகள் மீது சரியான கண்காணிப்பு இருந்தால்தான் இப்படிப்பட்ட குறைகள் போகும் என்பதை உணர்ந்து இதன் பேரில் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தமிழக அரசு செய்யப்பட்ட ஒப்பந்தத்தை அணு அளவு கூட நிறைவேற்றுவதில் உறுதியாக இருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மு. அம்பிகாபதி:** செய்யப்பட்ட ஒப்பந்தத்தை அமலாக்குவதில் அரசுக்கு மிகுந்த அக்கறை இருப்பதற்கு மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் இந்த ஒப்பந்தங்கள் நிறைவேறக் கூடாது என்ற கருத்தோடு, கூட்டுறவுத் துறை சீரழிய வேண்டும் என்ற எண்ணத்தோடு அதிகாரிகள் செயலாற்றுவதின் விளைவாகத்தான், இதிலுள்ள தொழிலாளர் தூண்டப்பட்டு வேலை நிறுத்தம் போன்றவைகளில் ஈடுபட வேண்டியிருக்கிறது. உதாரணமாக பாமணி பேர்டிலைசரில் 16—8—1978, 17—8—1978 வேலை நிறுத்தம் நடந்து இருக்கிறது. ஆகவே நமது புதிய அமைச்சர் அவர்கள் மிகுந்த வேகத்தோடு இதை நிறைவேற்று வதற்கு நடவடிக்கை எடுப்பார்களா?





**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாமணி உர ஆலையிலுள்ள விஷயங்களைப் பற்றி கடந்த மூன்று மாதங்களாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல விபரங்களை என்னிடம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் செவிமடுத்துக் கேட்டு அதற்கான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறேன். தொடர்ந்து நடவடிக்கை எடுப்பதிலும் தமிழக அரசு உறுதியாக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கீடு) ஆம் பழைய உறுப்பினர்—நான் புதியவன்—உறுப்பினர் அவர்கள் நீண்டநாள் அனுபவம் பெற்றவர்—அவர்களுக்கு இந்த விவரத்தை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

## ஆட்சிமொழிக் குழு

* **வினா எண் 44—திரு. என் கிட்டப்பா:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் ஆட்சி மொழிக்குழு தனது பணியை எந்த அளவுக்கு முடித்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அவைமுன் ஒரு அறிக்கை * வைக்கப்பட்டுள்ளது.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, தரப்படுத்தப்பட்ட தமிழ் தட்டச்சுப் பொறியினை உருவாக்கியதோடு, அதனை உற்பத்தி செய்து அரசு அலுவலகங்களுக்கு வழங்க ஆவன செய்தது என்ற பதிலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படி தரப்படுத்தப்பட்ட தமிழ் தட்டச்சுப் பொறியினை உருவாக்கிய நேரத்தில், தந்தை பெரியார் அவர்கள் தமிழகத்திலே உருவாக்கிய எழுத்துச் சீர்திருத்தத்தை இந்தத் தட்டச்சுப் பொறியில் பயன்படுத்துவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

[1978 செப்டம்பர் 2

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவர் அவர்களே, மன்னார்குடி நீதித் துறை 2-ஆம் வகுப்பு நடுவர் திரு. ஆறுமுகம் என்பவர் ஒரு வழக்கில் தமிழில் தீர்ப்புக் கூறியிருக்கிறார். தமிழில் தீர்ப்பு கூறலாம் என்று அமுலாக்கப்பட்டுள்ளது. சிக்காடு தென்மண்டலம் முன்சீப் திரு. வி. பி. ஸ்ரீவத்சவா என்பவர் அப்பீல் செய்த போது, தமிழில் தீர்ப்பு கூறியதை ஏற்க முடியாது, ஆங்கிலத்தில் அனுப்பும்படி கேட்டிருக்கிறார். இது அரசுக்குத் தெரியுமா? என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அதைப் பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. விசாரித்து வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பிட்ட தீர்ப்பு சம்பந்தமான விவரங்கள் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால், தமிழ் ஆட்சி மொழி ஆவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டபோது, நீதித் துறையிலே தமிழை இன்ட்ரொடியூஸ் ( (ntroduce) ) பண்ணுவதற்கு வேண்டிய திட்டவட்டமான நடவடிக்கை என்ன எடுக்கப்பட இருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இப்போது கிரிமினல் கோர்ட்டுகளிலே தமிழில் தீர்ப்பு வழங்கலாம் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. சிவில் கோர்ட்டுகளிலே சட்டங்கள் இன்னும் தமிழில் மொழிப்பெயர்க்கப் படாததினால், இன்னும் அதற்கான உத்தரவு போடப்படாமல் இருக்கிறது. இதன் விளைவுதான் இப்போது இந்த 4, 5 மாதங் களுக்கு முன்புவந்துள்ள தீர்ப்பாகும்.

திரு. துரை முருகன்: தலைவர் அவர்களே, இந்த தமிழ் ஆட்சி மொழிக் குழு இதுவரையில் எத்தனை வெளியீடுகளை வெளியிட் டிருக்கிறது? அப்படி வெளியிட்டிருந்தால், அவைகளையெல்லாம் அங்கத்தினர்களுக்கு அனுப்புகிற உத்தேசம் உண்டா? ஏனென்றால் அரசாங்கம் எத்தனையோ வெளியீடுகளை வெளியிட்டு வருகின்றது. பார்லிமெண்டிலே வெளியிடுகின்ற வெளியீடுகள் எல்லாம் உடன் அங்கத்தினர்களுக்கு அனுப்பப்படுகின்றது. அதைப்போல் கொஞ்சம் செலவானாலும் இந்தத் துறையிலும்



1978 செப்டம்பர் 2]

அங்கத்தினர்களுக்கு அனுப்பிவைப்பதால், அந்தந்தத் துறையிலே அனுபவம் உள்ளவர்கள் அதிலுள்ள குறைகளைச் சுட்டிக் காட்டவும், நல்லவைகளைப் பாராட்டவும் முடியும். எனவே, இந்த ஆட்சி மொழிக் குழுவின் சார்பாக வெளியிடும் வெளியீடுகளை எல்லாம் அங்கத்தினர்களுக்கு அனுப்பும் உத்தேசம் உண்டா? இல்லையென்றால், இனிமேலாவது அனுப்புவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இதுவரையிலே இந்தப் பழகக்கத்தை யாரும் வைத்துக் கொண் டிருக்கவில்லை. அங்கத்தினர் அவர்கள் இப்போது இந்த யோசனை சொல்லியிருப்பதால், அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

## தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு பல்கலைக் கழக மானியக்குழு சம்பள விகிதங்கள்

* வினா என் 45—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா: தனியார் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு U.G.C. scales of Pay கொடுக்க வேண்டும் என்று அரசு வற்புறுத்தி, மேற்படி நிர்வாகம் எழுத்து மூலமாக சம்மதம் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டன என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மத்திய அரசினரால் குறிப்பிடப்பட்டு, மாநில அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆசிரியர் நியமன வழிமுறைகள் ஆசிரியர்களுக்கான கல்வி யோக்யதாம்சங்களை ஏற்றுக்கொள்ளும் தனியார் கல்லூரி மற்றும் ஆசிரியர்கட்கு புதிய ஊதிய விகிதம் பொருந்தும் என்று ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, சில தனியார் கல்லூரிகளிலே யூ.ஜி.சி. ஸ்கேல் இன்னும் கொடுக்கப் படவில்லை. தனியார் கல்லூரிகளுக்கு கிராண்டு கொடுக்கின்ற போது, அவர்கள் அங்குள்ள ஆசிரியர்களுக்கு இந்த யூ.ஜி.சி.

ஸ்கேலில் சம்பளம் கொடுக்கின்ருர்களா என்ற விவரத்தைப் பரிசீலித்து, இந்த கிராண்டு கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, தனியார் கல்லூரிகளிலே பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் இந்த யூ.ஜி.சி. ஸ்கேல் ஊதியம் தரவேண்டுமென்றுதான் அரசாங்கம் உத்தரவிடப்பட்டிருக்கிறது. ஆனல், இந்த யூ.ஜி.சி. ஸ்கேல் தர வேண்டுமானல், சில நிபந்தனைகளை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் இஷ்டம்போல் ஆசிரியர்களை எடுப்பதோ, நியமிப்பதோ அல்லது பதவி உயர்வு தருவதோ முடியாது. இந்தக் காரணங்களால், இவைகளை இதுவரையிலே ஏற்றுக் கொள்ளாத கல்லூரிகளில் சில சங்கடங்கள் ஏற்பட்டுள்ளன. அதுபற்றி சட்டத் துறையோடு கலந்து, பரிசீலித்து வருகிறோம்.

(முற்பகல் 9-20)

**திரு. கே. பண்ணை சேதுராம்:** தனியார் கல்லூரிகளில் தங்களுடைய விருப்பத்திற்கேற்ப ஆசிரியர்களை நியமிப்பதும் நீக்குவதுமாக வைத்துக் கொண்டிருக்கிருர்கள். கேட்டால் மைனரிடி வகுப்பினர் காலேஜ் என்று சொல்லி தப்பித்துக் கொள்ளுகிருர்கள். ஆசிரியர்களாகப் பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள் நீக்கப்பட்டால் அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலை இருக்கிறது. அந்த ஆசிரியர்களைப் பாதுகாக்க இந்த அரசு அந்தக் கல்லூரி நிர்வாகிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இப்போதிருக்கிற அதிகாரங்களைப் பயன்படுத்தி அத்தகைய நிலைமைகளைத் தவிர்க்க அரசு முயற்சிகளை எடுத்து வருகிறது. இரண்டு நாட்களுக்கு முன்னதாக பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டுள்ள மசோதா ஆஸ்பத்திரிகள், கல்லூரிகள், பள்ளிகள் ஆகியவற்றில் வேலை செய்கிறவர்களுக்குப் பாதுகாப்புத் தரும் வகையில் அமைந்திருக்கிறது. அது வருமானல் இன்னும் கொஞ்சம் அதிகப் பாதுகாப்புக் கிடைக்கும்.

**திரு. செ. சிவசாமி:** ஒரு சில கல்லூரிகளில் நிர்வாகம் சீர் குலைந்த நேரத்தில் அவற்றை அரசு எடுத்து நடத்தியதன் காரணமாக நல்ல நிலையில் நிர்வாகம் நடந்து வருகிறது.



அவ்வாறு நல்ல நிலையில் நிர்வாகம் இருந்தால் மேலும் தொடர்ந்து அரசே நிர்வாகத்தை நடத்த முன்வருமா? உதாரணமாக சிவகங்கை கல்லூரி.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அந்தக் கல்லூரி நல்ல முறையில் நடைபெறத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

**திரு. கோ. இளங்கோவன்:** தனியார் கல்லூரிகளில் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தில் அரசு எவ்வளவு மானியமாக வழங்குகிறது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** கலைக் கல்லூரிகளைப் பொறுத்தமட்டில் ஏறக்குறைய முழுமையான அளவுக்குத் தருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தருமபுரி மாவட்டத்திற்கு முதன்மைக் கல்வி அதிகாரி அலுவலகம்**

*வினா எண் 46—**திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன், திரு. கா அப்புனு கவுண்டர், திரு. எம். அண்ணமலை, டாக்டர் கே. சமரசம்:** மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தருமபுரி மாவட்டத்திற்கென இன்னும் தனியாக முதன்மைக் கல்வி அதிகாரி (C.E.O.) அலுவலகம் திறக்கப் படாமல் இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திறக்கப்படும்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) & (ஆ) ஆம். அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்:** இது பற்றி அரசு பரிசீலனையில் உள்ளது என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிருர்கள். இந்த மாவட்டம் தொடங்கி பத்தாண்டுகளுக்கு மேல் ஆகிறது. எப்போது தனியாக முதன்மைக் கல்வி அதிகாரி அலுவலகம் துவங்கப்படும்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தர்மபுரி மாவட்டம் மட்டுமல்ல. தர்மபுரி, நீலகிரி, புதுக்கோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் தனி முதன்மைக் கல்வி அதிகாரி இல்லாமல் இருக்கிறது. அது பற்றிப் பரிசீலிக்கப் பட்டு வருகிறது. பரிசீலனை முடிந்த பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கா. அப்புனு கவுண்டர்:** தர்மபுரி மாவட்டம் பின்தங்கிய மாவட்டம் என்று அறிவிக்கப்பட்டு சலுகைகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. நிர்வாகச் சீர்கேடுகளைக் களைய வேண்டுமென்ற வகையில் அந்த மாவட்டம் ஆரம்பித்து 13 ஆண்டுகள் ஆகியும் தனியாக முதன்மைக் கல்வி அதிகாரி அலுவலகம் அமைக்கப்பட வில்லை. அதனை விரைவில் அமைக்க முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அதுதான் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன்.

**திரு. எம். அண்ணாமலை:** தர்மபுரி மாவட்டத்தின் முதன்மைக் கல்வி அலுவலகம் சேலத்தில் இணைந்திருப்பதால் அதிகப்படியான போக்குவரத்துச் சிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதோடு இந்தச் சிரமங்களைக் குறித்து மாவட்ட வளர்ச்சி மன்றம் ஒரு முடிவு செய்து அறிவித்தது அரசுக்கு வந்துள்ளதா? இதன்பேரில் இனியாவது துரிதமாக நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அரசே இதுபோன்ற மாவட்டங்களுக்கு தனி முதன்மைக் கல்வி அதிகாரி போட வேண்டுமென்று முடிவெடுத்திருக்கிறது. அதிலே தர்மபுரி மட்டுமல்ல, நீலகிரி, புதுக்கோட்டை மாவட்டங்களும் அடங்கும். அது பரிசீலனை செய்யப்பட்டு, பரிசீலனை முடிந்த பிறகு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**டாக்டர் கே. சமரசம்:** நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் இது கேட்கப்பட்டு அரசியல் காரணங்களால் வேறு மாவட்டத்திற்கு அளிக்கப்பட்டது என்பது உண்மையா? விரைவில் இந்த ஆண்டு இதனை ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இதுபோன்ற காரியங்களில் இந்த அரசு அரசியல் காரணங்களை வைத்துக் கொண்டு செயல்படாது என்ற உறுதியை மட்டும் இப்போது தருகிறேன்.





### மிலட்டூர் நகரப் பஞ்சாயத்து

*வினா எண் 47—**திரு. அ. செல்லப்பா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம் அம்மாப்பேட்டை ஒன்றியத்தைச் சேர்ந்த மிலட்டூர் நகர பஞ்சாயத்தை இரண்டாக பிரிக்கும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** இல்லை.

**திரு. அ. செல்லப்பா:** அந்த நகரப் பஞ்சாயத்தை இரண்டாகப் பிரிக்கும்போது வட்டார மக்களிடமிருந்து கோரிக்கைகள் அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** அப்படிப்பட்ட கோரிக்கைகள் அரசின் கவனத்திற்கும் வரவில்லை; ஊராக வளர்ச்சி இயக்குநருக்கும் வரவில்லை; மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் வரவில்லை; கோட்ட வளர்ச்சி அலுவலருக்கும் வரவில்லை.

(மணி அடிக்கப்பட்டு கேள்வி எண் 48 எடுத்துக் கொள்ளப் பெற்றது).

### நடுவட்டம் பேரூராட்சியில் சினிமா திரை அரங்கம்

*வினா எண் 48—**திரு. கே. உச்சி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூர் தொகுதியைச் சேர்ந்த நடுவட்டம் பேரூராட்சி மன்றம் ஒரு சினிமா தியேட்டர் கட்ட அனுமதி கோரியுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** (அ) & (ஆ): ஆம். மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அனுமதி கோரியுள்ளது, அவர் அச் செயற்குறிப்பின் மேல் சில கூடுதல் விவரங்கள் கேட்டு நடுவட்டம் நிர்வாக அலுவலருக்குத் திருப்பி அனுப்பியிருக்கிறார்.

**திரு. கே. உச்சி:** தலைவர் அவர்களே, நான் நீலகிரி மாவட்ட ஆட்சி மன்றத் தலைவரை இது குறித்துக் கேட்டபொழுது அவர் அதைப்பற்றிய எல்லா விவரங்களையும் அரசுக்கு அனுப்பிவிட்டதாகவும் அது அரசினிடத்திலே தான் இருப்பதாகவும் சொல்கிறார். நடுவட்டம் பேரூராட்சியில் இப்போது ஏராளமான பணம் தேங்கிக் கிடக்கிறது. அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் வேறு எந்தவிதமான பொழுதுபோக்கும் இல்லாமல் அங்கேயிருந்து உதகை, கூடலூர் போன்ற பகுதிகளுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே அரசு இதிலே அதிக அக்கறை எடுத்துச் செய்து கொடுக்க ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் குறிப்பின்படி அங்கே திரையரங்கு கட்டினால் அதனால் அந்தப் பேரூராட்சிக்கு வருவாய் வராது, இழப்பு தான் ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**வால்பாறை தொகுதியில் தோட்டத் தொழிலாளர் குடியிருப்புகள்**

* **வினா எண் 49—திரு. ர. ச. தங்கவேல்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வால்பாறை தொகுதியில் உள்ள தோட்டத் தொழிலாளர் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வழங்கும் திட்டம் எப்போது நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்படும்?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** வால்பாறை தொகுதியில் உள்ள தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வழங்கும் திட்டம் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு இந்த ஆண்டு இறுதிக்குள் முடியுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, தோட்டக் காடுகளில் குடியிருக்கும் தோட்டத் தொழிலாளர்களில் 100-க்கு 90 சதமானம் பேர்கள் தாழ்த்தப்பட்டவர்களாக இருக்கிறார்கள், அந்தப் பகுதிகளிலேயெல்லாம் மின்சார விளக்குகள் போட்டுக்கொடுக்க அரசே முன்வந்து தகுந்த நடவடிக்கை எடுப்பது அல்லவா நியாயம். ஆனால் அந்தத் தோட்டத் தொழிலாளர்கள் பணம்



கொடுப்பார்களா என்று பார்த்துக் கொண்டு இருப்பது சரியா? தமிழகத்திலே உள்ள தொழிலாளர்களுக்கும் உடனடியாக அரசே மின்விளக்குகளைப் போட்டுக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே குறிப்பிட்டதைப்போல இந்த ஆண்டு இறுதிக்குள் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. ரா. கிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, இந்த வால்பாறை பகுதியிலே இருப்பதைப்போல் பாம்பே பர்மா டிரேடிங் கார்ப்பரேஷன் நெல்லை மாவட்டத்தில் மாஞ்சோலை எஸ்டேட்டிலே இருக்கிறது, அங்கே ஏற்கனவே இருக்கிற காலனிகள், லைன்களில் மின்சார இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த மின்கட்டணம் மின் நிர்வாகத்தின் பேருக்கு அனுப்பப்படுகிறது. எவ்வளவு பணம் கட்ட வேண்டுமென்று குடியிருக்கிறவர்களுக்குத் தெரியாது. மின்சாரம் பயன்படுத்துகின்ற ஒவ்வொருவருக்குமே தனித்தனியாக பில்லை கொடுத்தால் முறையாக இருக்கும், ஆகவே அந்த முறையில் அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தலைவர் அவர்களே, இதுபற்றித் தனியாக கேள்வி போட்டால் விவரங்களைச் சேகரித்துத் தரலாம், தக்க நடவடிக்கை எடுப்பது பற்றியும் பரிசீலனை செய்யலாம்.

**வாலாஜா நகரத்திற்குப் புதை சாக்கடை அமைத்தல்**

* **வினா எண் 50—திரு. துரை முருகன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வடாற்காடு மாவட்டம், வாலாஜா நகரத்திற்கு புதை சாக்கடை அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** (அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

திரு. துரை முருகன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலில் இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். வாலாஜா மிகப் பழமையான நகரம். தமிழ்நாட்டிலே முதன் முதலாக ஏற்படுத்தப்பட்ட நகராட்சி அது. அங்கே கொசுத் தொல்லை தமிழ்நாட்டிலே உள்ள இடங்களிலேயே மிக அதிகமாக இருக்கிறது. அதன் காரணத்தால் யானைக்கால் வியாதி போன்றவை ஏற்படுகின்றது. சற்றேறப்ப 1 லட்சத்திற்கு மக்கள் வாழ்கிற நகரம். ஆகவே, அந்த நகராட்சியிலே புதை சாக்கடைத் திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து நிறைவேற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, அந்த நகராட்சியிலேயிருந்து நிதிகொடுத்து பாதாள சாக்கடைத் திட்டத்திற்கான செலவை ஏற்றுக் கொண்டால் குடிநீர் வடிகால் வாரியம் அதைப் பரிசீலிக்கும்.

திரு. துரை முருகன்: தலைவர் அவர்களே, அது வருவாய் இல்லாத நகராட்சி. தமிழ்நாட்டிலே நம்பர் 1 முனிசிபாலிடியாக தோற்றுவிக்கப்பட்ட முதல் முனிசிபாலிட்டி அது தான். காலப்போக்கிலே அதனுடைய வருவாய் குன்றி விட்டது. நசித்து போய்விட்ட பஞ்சாலைகளை எப்படி அரசே ஏற்றுக்கொண்டு உதவி செய்ய முன்வருகிறதோ அதைப்போன்று நசித்துவிட்ட அந்த நகராட்சிக்கும் அரசே உதவி செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, இப்போது இருக்கக்கூடிய கொள்கை நகராட்சி, மேஜர் பஞ்சாயத்துக்கள் போன்றவையாக இருந்தாலும் சரி, குடிநீர் கொடுப்பது, அல்லது சாக்கடைத் திட்டம் அமைப்பது இவைகளைக் கொண்டு வருவதாக இருந்தால் அந்தச் செலவை ஏற்றுக்கொள்கிறோம் என்று அவர்கள் தீர்மானம் போட்டு நிறைவேற்றி அனுப்ப வேண்டும். அந்தச் செலவில் மூன்றில் இரண்டு பங்கை எல்.ஐ.சி.யும் மூன்றில் 1 பங்கை அரசும் கொடுத்துவிட்டு, அதற்கான ஆய்வு சார்ஜை அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டு செய்து கொடுத்து விட்டு திட்டத் தொகையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.



(முற்பகல் 9-30)

முப்பதாண்டுக் காலத்தில் நாங்கள் திரும்பக் கொடுத்து விடுகிறோம் என்று உறுதி மொழி பத்திரம் மூலமாகக் கொடுத்தால் நிச்சயமாக இந்த அரசு முடித்து விட்டு மெதுவாக முப்பதாண்டுக் காலத்தில் பெற்றுக்கொள்ளும்.

### கல்வராயன் மலைப்பகுதியிலுள்ள நிலங்கள் விற்பனை

* வினா எண் 51—திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்வராயன் மலைவாழ் மக்களிடமிருந்து வெளியார் (மலை ஜாதியார் அல்லாதார்) வாங்கிய நிலங்கள் செல்லாது என சட்டம் இயற்றும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் என்றால் அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: (அ) ஆம்.

(ஆ) மாநில அளவில், பழங்குடியினர் தம் நிலத்தை மற்றவர்களுக்கு மாற்றம் செய்வதைத் தடுக்கச் சட்டம் கொண்டு வருவது பற்றி அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கல்வராயன் மலைப் பகுதியில் அரசாங்கத்தின் மூலமாய்ப் பல ரோடுகளைப் போட்டிருக்கிறார்கள். அதன் விளைவாக அங்குள்ள விவசாயிகளுடைய நிலம் எடுக்கப்பட்டிருக்கிறது. ரோடுகள் போட்டு இரண்டாண்டுகளாகியும் அவர்களுக்கு இன்னும் நஷ்டயீடு கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு நஷ்டயீடு கொடுக்கப்படுமா, எப்பொழுது கொடுக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, கேள்வி, நில மாற்றத்தைத் தடுக்கப் புதிய சட்டம் கொண்டு வருவது பற்றியது. நஷ்டயீட்டைப் பற்றியது அல்ல. தனிக் கேள்வி போட்டால் விபரம் சொல்கிறேன்.

[1978 செப்டம்பர் 2

**திரு. எம். அண்ணாமலை:** தலைவரவர்களே, மலைவாழ் மக்களுடைய நிலங்களைத் தனியார்கள், வெளியார்கள் கைப்பற்றியதை அரசு பரிசீலிக்கும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். எந்த அடிப்படையில் அது பரிசீலிக்கப்படும்? குறிப்பாக 30 ஆண்டுக் காலமா, அல்லது 60 ஆண்டுக்காலமா அல்லது ஐந்தாண்டுக் காலமா என்று வரையறுத்துக் குறிப்பிட்டால் அதுபற்றிய விவரத்தை அறிந்து கொள்ள உதவியாக இருக்கும். அதை அமைச்சரவர்கள் கூறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, மலைவாழ் மக்கள் தாங்கள் பட்ட கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத சூழ்நிலையில் வெளியார்கள் இதுபோல நிலத்தை அபகரித்துக் கொள்கிறார்கள். ஆகவே, அவர்களின் எதிர்கால வாழ்க்கையை முன்னிட்டு அரசாங்கம் இதற்காக ஒரு சட்டத்தைக் கொண்டுவரத் தீவிரமாகப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. எத்தனை ஆண்டுக் காலம் என்று வரையறுக்க வேண்டுமென்பதற்காக இப்பொழுது நம்முடைய அலுவலாளர்களை விட்டு தெரிந்தெடுத்த மலைப் பகுதிகளில் ஆய்வு நடத்தச் சொல்லி யிருக்கிறோம். அவர்கள் அறிக்கை கொடுத்த பிறகு எத்தனை ஆண்டுகள் என்பதை இந்த அரசு நிர்ணயிக்கும்.

**திரு. நா. சுந்தரராஜ்:** தலைவரவர்களே, மலைவாசி மக்களுடைய நிலங்களை வெளியார் வாங்கியிருப்பதாகச் சொன்னார்கள். எத்தனை பேர்கள் அவ்வாறு வாங்கியிருக்கிறார்கள்? எத்தனைபேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, அதுபற்றி விரிவாகக் கண்டு பிடிக்க வேண்டுமென்பதற்காக எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்தும் அறிக்கை கேட்டு அனுப்பியிருக்கிறோம். அந்த அறிக்கை வந்த பிறகு எத்தனை பேர் என்று இறுதியாகச் சொல்ல முடியும்.



1978 செப்டம்பர் 2]

**பல்லவன் போக்குவரத்துக் கழகப் பணியாளர்கள்.**

*வினா எண் 52—**திரு. சு. முத்துசாமி கரையாளர்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்மையில் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் இளநிலை எழுத்தர் பதவிக்கு தேர்வு நடத்தப்பட்டதா?

(ஆ) ஆம் எனில் தேர்வு எழுதியவர்கள் எத்தனை பேர்?

(இ) தேர்ச்சியடைந்தவர்கள் எத்தனை பேர் ?

(ஈ) தேர்ச்சி அடையாதவர் எவரேனும் நியமிக்கப்பட்டாரா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**

(அ) ஆம்.

(ஆ) 241 பேர் தேர்வு எழுதினார்கள்.

(இ) அதில் 234 பேர் தேர்ச்சி அடைந்தார்கள்.

(ஈ) தேர்ச்சி அடையாதவர்கள் யாரும் நியமிக்கப்படவில்லை.

**திரு. சு. முத்துசாமி கரையாளர்:** தலைவரவர்களே, பல்லவன் டிரான்ஸ்போர்ட்டிலே ஜூனியர் அசிஸ்டெண்டுகளுக்கு எக்சாமினேஷன் வைத்தார்களே, அதை எழுதாதவர்கள் யாருக்கேனும் தேர்வு நடந்திருக்கிறதா? அவ்வாறு இருந்தால், எக்சாமினேஷன் என்று வைத்துவிட்டு, அதற்குப் பிறகு இன்டர்வியூ நடத்தும் பொழுது எல்லோருக்கும் நடத்துவதில் அர்த்தம் என்ன இருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் விளக்குவார்களா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர்வர்களே, எழுத்துத் தேர்வில் தேர்வு பெற்றவர்களுக்கு மட்டும்தான் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது.

**திரு. நா. சுந்தரராஜ்:** தலைவரவர்களே, இப்பொழுது தனியார் பேருந்துகளில் 'இன்வாய்ஸ் ரைட்டர்ஸ்' என்று தனியாக கண்டக்டர்களுக்கு அப்பால் ஒரு பதவி இருக்கிறது.

அதுபோன்ற நபர்களைப் புதிதாக அரசுப் பெருந்துகளில் அமர்த்தி வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவரவர்களே, உறுப்பினர் அவர்களின் புதுமையான ஆலோசனை பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரராஜ் அவர்கள் அவர்களுக்குரிய இருக்கையில் அமர்ந்து கேட்க வேண்டும்.

*** வினா எண் 53—திரு. கு. ரமணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் உள்ள பல்லவன் போக்குவரத்து ஊழியர்கள் அனைவருக்கும் வீடு கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு பேர்களுக்கு வீடு கொடுக்கப்பட்டுள்ளது?

(இ) வீடு கிடைக்காதவர்கள் யாராவது உண்டா?

(ஈ) அவர்களுக்கு எப்போது கொடுக்கப்படும்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**

(அ) & (ஆ) கோவையில் உள்ள பல்லவன் போக்குவரத்துக் கழக ஊழியர்களில் 36 பேருக்கு பல்லவன் போக்குவரத்துக் கழக குடியிருப்பில் வீடு ஒதுக்கப்பட்டுள்ளது.

(இ) உண்டு.

(ஈ) வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தி, வீடுகள் கட்டித் தரும் திட்டம் போக்குவரத்துக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தை அமுல் செய்யும் போது மற்ற தொழிலாளர்களும் வீடு கட்டிக் கொள்ள ஏதுவாகும்.

**திரு. கு. ரமணி:** தலைவரவர்களே, வீட்டு வசதி வாரியத்தின்கீழ், கோவையில் வீடுகள் நிறையக் கட்டும்படியான திட்டங்கள் உள்ளன. அவை கட்டப்பட்டும் வருகின்றன. அந்த





ஊழியர்களுக்கு கூட்டுறவுத் துறையில் வீடுகள் கட்டிக் கொடுக்கும் வரையில், பல்லவன் போக்குவரத்துத் துறையில் வீடுகள் கட்டிக் கொடுக்கிற வரையிலும் அந்த வீட்டு வசதி வாரியத்திலே கட்டப்படுகிற வீடுகளை இவர்களுக்கு நிர்ணயித்துக் கொடுக்க அமைச்சரவர்கள் முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவரவர்களே, கோவையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல், கட்டப் படுகின்ற வீடுகள், ஏற்கனவே சிலருக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், பல்லவன் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு 236 பேர்களுக்கு, ஹட்கோ மூலமாக உதவி பெற்று, வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின்கீழ், 36 பேர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள தொழிலாளர்களுக்குக் கட்டிக் கொடுக்க விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரவர்களும் அதற்கான ஏற்பாடுகளை ஆர்வமுடன் செய்து வருகிறார்கள்.

**திரு. கே. பண்ணை சேதுராம்:** பல்லவன் போக்குவரத்துக் கழக ஊழியர்களில் சிலருக்கு வீடுகள் கட்டிக் கொடுத்திருப்பதாகவும் இன்னும் பலருக்குக் கட்ட இருப்பதாகவும் அமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதைப்போல, சேரன், சோழன், பாண்டியன், கட்டபொம்மன், அண்ணா, தந்தை பெரியார் ஆகிய போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்க உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவரவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு மட்டும் தனிப் பாகுபாடு என்ற எண்ணம் இல்லை. அனைத்துப் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கும் இச்சலுகைகளை அளிக்க வேண்டுமென்ற அடிப்படையில் நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு:** தலைவரவர்களே, கோவையில், பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரியும் 36 தொழிலாளர்களுக்குத்தான் வீட்டு வசதி இருக்கிறது. பாக்கி

யிருக்கக் கூடிய தொழிலாளர்களுக்கு உடனடியாக வீடுகள் கட்டிக் கொடுக்க முயற்சிகள் செய்யப்படும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த வீடுகள் எவ்வளவு காலத்தில் கட்டிக் கொடுக்கப்பட்டு, அந்த ஊழியர்களைக் குடியமர்த்த ஏற்பாடுகள் செய்யப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவரவர்களே, காலத்தை நிர்ணயித்துக் கூறுவது அவ்வளவு சரியாக இராது. ஆனால் மிக விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. இ. தமிழரசன்:** தலைவரவர்களே, போக்குவரத்துக் கழகங்களில் வேலையிலிருப்பவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க திட்டம் இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதுபோல், தனியார் பேருந்துகளில் பணியாற்றுபவர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவரவர்களே, அப்படிப்பட்ட பரிசிலனை இல்லை. தனியார்கள் மனமுவந்து அப்பணியினை மேற்கொள்வார்களானால் அரசு வரவேற்கும்.

**திரு. மு. அம்பிகாபதி:** தலைவரவர்களே, காலத்தை நிர்ணயிக்க முடியாது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். எதற்குமே காலக் கெடு இருக்க வேண்டும். ஓராண்டில், ஈராண்டில் வீடுகள் கிடைக்கும் என்று ஊழியர்கள் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, துரிதமாகக் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இந்த வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கான நிதி தமிழக அரசிடம் இல்லை. போக்குவரத்துக் கழகங்களிடம் இல்லை. மத்திய அரசு ஹட்கோ மூலமாக, நிதி உதவி செய்கிறது. அந்த உதவியைக் கொண்டு தான் இந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் கூட பல இடங்களில் இதைப்பற்றிக் கூறியிருக்கிறார்கள். அவருடைய பெருமுயற்சி விரைவில் பலன் தரும் என்று நம்புகிறேன்.





**திரு. கு. ரமணி:** 200 பேர்களுக்கு இன்னும் வீடில்லாமல் இருக்கிறது என்பது அமைச்சர் பதிலிலிருந்து தெரிய வருகிறது. அந்த ஊழியர்கள் குறிப்பிட்ட நேரத்தில், காலை 5 மணியிலிருந்து வேலைக்கு வரவேண்டியவர்கள். ஆகவே, வீட்டு வசதி வாரியத்தின் கீழ் பல வீடுகளை, அவர்களுக்கு இறுதியாக வீடு கட்டிக் கொடுக்கும் வரையில், தற்காலிகமாக ஒதுக்கிக் கொடுத்து உதவி செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இந்தக் கேள்வியினை மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரிடம் கேட்டிருக்க வேண்டும். இருப்பினும் அந்த வீடுகளுக்கு முன்னுரிமையோடு பலர் காத்திருப்பதால், பல்லவன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கக் கூடிய சாத்தியக் கூறு இராது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

## தென்பெண்ணை ஆற்றுப் பாசனக் கால்வாய்கள்

*வினா எண் 54—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென்பெண்ணை ஆற்றின் கரை ஓரத்தில் இடது-வலது புறம் செல்லும் பாசனக் கால்வாய்களைச் சீரமைத்துத் தர அரசு ஏதேனும் செயல் திட்டம் வைத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) எப்பொழுது சீரமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) இல்லை.

(ஆ) & (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

**டாக்டர் கே. சமரசம்:** பேரவைத் தலைவரவர்களே, தென்பெண்ணையாற்றின் வெள்ள நீரைப் பயன்படுத்தி பாசனத்தை வளப்படுத்த அரசு ஏதேனும் புதிய திட்டத்தை வகுத்திருக்கிறதா? அப்படியென்றால், அதைப்பற்றி விரிவாக ஆராயுமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, தென்பெண்ணையாற்றிலிருந்து அமைக்கப்பட்டிருக்கிறுள்ள எல்லாப் பாசனக் கால்வாய்களையும் சீரமைத்துப்

பாசனத்திற்கு அதிக அளவு பயன்படும் வகையில் சீரமைக்கும் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டு ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### வைப்பாற்றின் குறுக்கே அணை

* வினா எண் 55—திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நெல்லை மாவட்டம் விளாத்திகுளம் தொகுதி வைப்பாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 9-40)

**திரு. ரா. கு. பெருமாள்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் கூறிய திட்டம் ஏற்கனவே 1 கோடியே 65 லட்சம் என்று திட்டம் இடப்பட்டு அன் எக்கனமிக்கல் என்று புறக்கணிக்கப் பட்டிருக்கிறது. நான் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு கேள்வி மூலமாகவும், தலைமைப் பொறியாளரைப் பார்த்தும் பேசியதில் இந்தத் திட்டத்தை விரைவுபடுத்தினார்கள். அது இப்போது ஆய்வு செய்யப்பட்டு 8 கோடி ரூபாய் திட்டத்தில் தலைமைப் பொறியாளருக்கு வந்திருக்கிறது. எனவே அரசும் அமைச்சரும் முயற்சி எடுத்து இந்தத் திட்டம் கொண்டுவர வாய்ப்பு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் விளாத்திகுளம் தாலுகாவிலே நென்மேனி கிராமத்தின் அருகே வைப்பாற்றில் அணை கட்டுவதற்கு ஒரு திட்டம் முன்பு ஆய்வில்





இருந்தது. அந்தத் திட்டம் அதிகமாகச் செலவாகும் என்ற காரணத்தினால் அது கைவிடப்பட்டு, இப்போது சாத்தூர் தொகுதியிலே இருக்கன்குடி கிராமத்திலே ஒரு நீர்த்தேக்கம் கட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தினால் 20 கிலோ மீட்டர் நீளத்திற்குக் கால்வாய் வெட்டி, கோவில்பட்டி, விளாத்திகுளம், சாத்தூர் போன்ற பகுதிகளுக்குப் புதிதாக பாசன வசதி அளிப்பதற்காக ஆய்வு நடத்தப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ரா. கு. பெருமாள்:** தலைவர் அவர்களே, விளாத்திகுளம் தொகுதியில் கடற்கரை ஓரமாக வைப்பார் மேம்பாலம் ஒன்று உள்ளது. அப்பாலத்திற்கு இடைவெளியில் ஒரு டைட் வாட்டர் போட்டு வைத்தால், ஏறத்தாழ ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்கள் பயன்பெறும். அந்த புஞ்சை நிலங்கள் நஞ்சை நிலங்களாக மாற வாய்ப்பிருக்கிறது. எனவே அதை நிறைவேற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரமாக பதில் சொல்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, இந்த நெல்லை மாவட்டத்தில் உள்ள இந்த வைப்பாற்றில் அணை கட்டுவது சம்பந்தமாக தொடர்ந்து ஒவ்வொரு தடவையும் இடங்களை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இந்த இடத்தில் கட்டுவதா, அந்த இடத்தில் கட்டுவதா, என்று மாறி மாறி இடங்களைத் தேர்ந்தெடுப்பதிலே தொடர்ந்து தாமதம் ஏற்பட்டு வருகிறது. அமைச்சர் அவர்கள் கோவில்பட்டி தாலுகா, விளாத்திகுளம் போன்ற பல இடங்களுக்கு இந்தப் பாசன வசதி ஏற்படும் என்று சொல்லுகிறார்கள். எந்தெந்த தன்மையில் எந்த அளவுக்கு தண்ணீர் நிரம்புவதற்கு வசதி இருக்கிறது என்பதை அறிய விரும்புவதோடு, இது நீண்ட நாளாக தொடர்ந்து இந்த வட்டார மக்களுடைய கோரிக்கையாக இருப்பதால், கடலில் விழுந்து வீணாகப் போகக்கூடிய தண்ணீரை இருபோகம் விளையக்கூடிய

வகையிலே இந்தப் பகுதி மக்களுக்குப் பயன்படும் வகையில் இந்த அணையைக் கட்ட துரிதமாக நடவடிக்கை எடுக்க வாய்ப்பிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, திட்டங்களைப் போடுகின்ற நேரத்தில் அந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்படக்கூடிய திட்டங்களா, வயபிளா அல்லது எக்கனாமிக்கலா என்பதைப் பார்த்துத்தான் திட்டங்களைப் போடவேண்டியிருக்கிறது. வைப்பாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் சரிவர நடவடிக்கை எடுக்க முடியாத நிலையிலே அதிகமாகச் செலவாகும் என்ற காரணத்தினாலேயும் கைவிடப்பட்டிருக்கிறது. அதற்கு மாறாக இன்று இருங்காட்டுப் பகுதியிலே சாத்தூர், விளாத்திகுளம், கோவில்பட்டி போன்ற பகுதிகளுக்கு பாசன வசதி கிடைக்கின்ற சூழ்நிலை இருக்கிற காரணத்தினாலே இந்தத் திட்டம் நல்ல திட்டம் என்ற முறையிலே ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எத்தனை நிலங்கள் எவ்வளவு கண்மாய்கள் என்பதெல்லாம் ஆய்வில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே, விளாத்திகுளம், சாத்தூர், கோவில்பட்டி போன்ற இடங்களுக்குப் பயன்படும் வகையில் வைப்பாற்றில் அணை கட்ட இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் இந்த அணைக்கட்டு வருவதைத் தடுப்பதற்கு சில நிலச்சுவான்தார்கள் முயற்சி எடுத்து வருகிறார்கள். அவர்களுடைய ஆட்சேபணையைத் தாக்கி எறிந்து அணை கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல திட்டத்திற்கு எப்படிப்பட்ட தடைகள் வந்தாலும் அந்தத் தடைகளை மீறி நன்மை செய்யும் அரசுதான் இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கூத்தக்குடி ச. சண்முகம்:** பேரவைத் தலைவரவர்களே, அணை கட்டுவது கைவிடப்பட்டது அதிக செலவு என்ற காரணத்தால் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்.



தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படுவதில் அதிக செலவு வந்தாலும், நஷ்டம் வந்தாலும் ஆரம்பிக்கப்படுகிறபோது, விவசாயிகளுக்கு தண்ணீர் கொடுக்கிறபோது செலவு அதிகம் என்று கைவிடுவது சரியா? அந்தக் கொள்கையை இந்த அரசும் கடைப்பிடிக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் அரசினுடைய கொள்கை எப்படிப்பட்டது என்று. அதிகம் செலவாகிறது என்பதை மாத்திரம் கணக்கில் கொண்டு நாம் திட்டங்களைத் தீட்டுவது இல்லை. அந்தத் திட்டங்களின் மூலம் எத்தனை ஏக்கர்கள் பாசன வாய்ப்புகள் பெற முடியும் என்ற அடிப்படையை மையமாக வைத்துத்தான் திட்டங்களைத் தீட்டுகிறோம். இந்த அணையைப் பொறுத்தவரையில் செலவு அதிகமானாலும் எவ்வளவு தூரம் மக்களுக்கு அந்தத் திட்டம் பயன்படும் என்ற அடிப்படையில் அந்தத் திட்டங்களைப் பரிசீலித்து வருகிறது. அந்த முறையில்தான் இந்த வைப்பாற்றின் குறுக்கே அணை கட்டுவது சரியல்ல என்ற எண்ணத்தில் கைவிட்டு விட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## ஈரோட்டில் பால் உற்பத்தி—சுத்திகரிப்பு ஆலை

*வினா எண் 56—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஈரோட்டில் பால் உற்பத்தி—சுத்திகரிப்பு ஆலை ஏற்படுத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் யாது?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. என். கிட்டப்பா:** தலைவரவர்களே, பால் உற்பத்தி மற்றும் சுத்திகரிப்பு ஆலை ஆரம்பிப்பது பற்றிய செயற்குறிப்பு இல்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால்

அத்தகைய நிலையங்களை உருவாக்க வேண்டும் என்று அங்கே உள்ளவர்கள் பெரிதும் விரும்புகிற காரணத்தால் அத்த நிலையங்களை ஏற்படுத்த அரசு இனியாகிலும் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** பேரவைத் தலைவரவர்களே, பாலே தூய்மையாக இருப்பதால் சுத்தப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்ற காரணத்தால் ‘இல்லை’ என்று பதில் சொன்னேன். அரசாணை எண் 1655, வேளாண்மைத் துறை, நாள் 29—9—1977-ல் அரசு ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் மூலமாக ஈரோட்டில் ஒரு தன்னிறைவு பால் பண்ணை, இரண்டு குளிர் பதன நிலையங்கள், மற்றும் ஒரு கால்நடை தீவனம் தயாரிப்பு நிலையமும் அமைப்பதற்காக ரூ. 3.30 கோடி செலவினத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். மணிமாறன்:** பேரவைத் தலைவரவர்களே, சுத்திகரிப்பு ஆலை ஏற்படுத்தாவிட்டாலும் பாலை பதப்படுத்த தொழிற்சாலை துவங்க இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தற்போது, ஆந்திர மாநில டெய்ரி டெவலெப்மெண்ட் கார்ப்பரேஷன் மூலமாக ‘விஜய் ஸ்ப்ரே’ என்ற குழந்தை உணவு உற்பத்தி செய்யப்பட்டு அது வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. அதே போன்று நம்முடைய அரசின் சார்பில் ஒரு குழந்தை உணவை ‘ஸ்ப்ரேயை’த் தயாரிக்க ஏதேனும் செயற்குறிப்பு உண்டா, உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** பேரவைத் தலைவரவர்களே, பால் வளம் இரண்டாவது பெருக்கத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் அமைக்கப்பட இருக்கும் தொழிற்சாலைகளில் சில தொழிற்சாலைகளில் குழந்தைகள் பால் உணவு தயாரிக்க அரசு திட்டமிட்டுள்ளது. எனவே, விரைவில் குழந்தைகள் பால் உணவு ‘ஆவின்’ என்ற பெயரிலோ அல்லது வேறு ஏதாவது ஒரு பெயரிலோ நிச்சயமாக வெளிவரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. மு. ஆறுமுகம்:** பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆண்டு தமிழ் நாட்டில் பால் பவுடர் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் உண்டா? அது எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** பேரவைத் தலைவரவர்களே, 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் பால் வளத்தை அதிகப்படுத்த வேண்டும் என்பதற்காக பல்வேறு திட்டங்கள் திட்டப்பட்டு அதில் பால் பவுடர் தொழிற்சாலை ஆரம்பிக்கவும், அதற்கான திட்டங்களைத் தீட்டி, மத்திய அரசுக்கு அனுப்பி இருக்கிறோம். அத்திட்டங்களை அவர்கள் ஒப்புக் கொண்ட பிறகு அவற்றைச் செயல்படுத்த அரசு தீவிர கவனம் செலுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். எம். ஏ. ரசாக்:** பேரவைத் தலைவரவர்களே, பால் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்தோடு தென் மாவட்டமான நெல்லை மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் பாலைப் பதப்படுத்தும் நிலையம் ஆரம்பிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** பேரவைத் தலைவரவர்களே, இரண்டாவது பால் பெருக்குத் திட்டத்தின்கீழ், ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட கால முடிவிற்குள் தமிழ் நாட்டில் 150 இடங்களில் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைக்க உத்தேசம் இருக்கிறது. அப்போது தென் மாவட்டங்களின் பிரச்சினை கவனத்தில் கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[1978 செப்டம்பர் 2

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** (அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் மாவட்ட அளவில் செயல்படும் ஒரு பால் வழங்கும் ஒன்றியமும் மற்றும் 47 கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்களும் உள்ளன.

(ஆ) ஆம். புதிதாக கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்கள் அமைக்க வந்துள்ள 15 பிரேரணைகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. த. புஷ்பராஜு:** தலைவரவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். அதை கருத்தில் கொண்டு கிராமந்தோறும் கூட்டுறவு பால் பண்ணைத் திட்டம் அமைக்கும் திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** பேரவைத் தலைவரவர்களே, இரண்டாவது பால் பெருக்கு திட்டத்தின்கீழ் கூடுதலாக 4,000-க்கும் மேற்பட்ட உற்பத்தியாளர்கள் கூட்டுறவு பால் சங்கங்கள் அமைக்க உத்தேசித்து இருப்பதாக ஆளுநர் உரையிலேயே அரசு தெளிவாகத் தெரிவித்து இருக்கிறது. அந்த அடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டத்திலும் அமைக்க கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-50)

**திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்:** தலைவர் அவர்களே, 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் பால் வளம் பாலுக்கு அதிக விலை கொடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** தலைவரவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக இருக்கின்றவர்களுக்கு கலப்புத் தீவனங்களை குறைந்த விலைக்குக் கொடுத்து பால் உற்பத்தியை அதிகரிப்பதுதான் அரசின் திட்டம். இருந்தாலும் உறுப்பினர் அவர்களின் கருத்தை அரசு பரிசீலனை செய்யும்.



1978 செப்டம்பர் 2]

## தருமபுரி மாவட்டத்தில் பால் பவுடர் தொழிற்சாலை

* **வினா எண் 58—டாக்டர் கே. சமரசம்:** மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்தில் பால் பவுடர் தொழிற்சாலை ஏற்படுத்த அரசிடம் ஏதேனும் செயல் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** ஆம்; தினமும் 10 மெட்ரிக் டன் பால் பவுடர் தயாரிக்கும் திறனுடைய பால் பவுடர் தொழிற்சாலை ஒன்றை வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டத்தின் கீழ் தருமபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரியில் அமைக்க உத்தேசிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**டாக்டர் கே. சமரசம்:** தலைவரவர்களே, நீர் வளமும் நில வளமும், பால் பெருக்கமும் அதிகமாக உள்ள மாவட்டத்தின் மையப் பகுதியில் அந்தத் தொழிற்சாலை ஏற்படுத்தப்படுமா? எந்த இடத்தில் ஏற்படுத்த திட்டமிடப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவரவர்களே, அந்தத் திட்டத்தை அமல்படுத்துகின்றபோது, அது விவசாயிகளுக்கும் ஏழை எளிய மக்களுக்கும் பயன்படும் வகையில் ஒரு நல்ல இடத்தில்தான் அமைக்கப்படும். அந்த நல்ல இடத்தைத் தேடிக் கொண்டிருக்கிறோம்.

**திரு. ரா. மார்க்கபந்து:** தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் ஜோலார்பேட்டையில் ஒரு பால் பவுடர் தொழிற்சாலை அமைக்கப்படுவதாக இருந்தது . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து அதற்குத் தனிக் கேள்வி போடவும். நீங்கள் கேட்கிற கேள்விக்கு அமைச்சரிடம் பதில் இருக்காது.

**திரு கா. அப்புறு கவுண்டர்:** தலைவரவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் அமைக்கப்படவிருக்கும் பால் பவுடர் தொழிற்சாலையின் மதிப்பீடு எவ்வளவு? அங்கே எவ்வளவு பால் பவுடர் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவரவர்களே, 10 மெட்ரிக் டன் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றே முக்கால் கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட இருக்கிறது. அந்தத் தொழிற்சாலை கட்டி முடிக்கப்பட்டால் அதனால் ஒரு லட்சம் லிட்டர் பாலை வாங்கி, பதப்படுத்தி அனுப்பி வைக்கின்ற நிலைமை உருவாகும். அதனால் 1,500 பேர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

### ஓசூர் கால்நடைப் பண்ணை

*வினா எண் 59—**டாக்டர் கே. சமரசம்:** மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம் மத்தகிரியிலிருக்கும் ஓசூர் கால்நடைப் பண்ணையை விரிவாக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:** தருமபுரி மாவட்டம் மத்தகிரியில் இருக்கும் ஓசூர் மாவட்டக் கால்நடைப் பண்ணையை விரிவாக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும் அந்த கால்நடைப் பண்ணையின் சுற்றமைப்பில் பிரிட்டிஷ் அரசு உதவியுடன் கால்நடை வளர்ப்புத் திட்டம் ஒன்று தோற்றுவிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**டாக்டர் கே. சமரசம்:** தலைவரவர்களே, இந்த ஓசூர் கால்நடைப் பண்ணையின் மொத்தப் பரப்பு என்ன? அங்கே என்னென்ன உயர் இன மாட்டினங்கள், ஆட்டினங்களை உருவாக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது? அமைச்சரவர்கள் பிரிட்டன் அரசு உதவியுடன் கால்நடை வளர்ப்புத் திட்டம் ஒன்றை அறிவித்தார்கள். அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த ஏதாவது குழு அமைக்கப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:** பேரவைத் தலைவரவர்களே. ஓசூர் கால்நடைப் பண்ணையின் பரப்பு 1946.41 ஏக்கர். அங்கே திட்டமிடப்பட்டிருக்கின்ற உயர் இன மாட்டினங்களைப் பற்றியும் ஆட்டினங்களைப் பற்றியும் கேட்டார்கள். சிந்தி, ஜெர்சி உயரினம், பிரீசியன் உயரினம், ரெட்டேன் உயரினம். கலப்பினம், கிர், உறலிகார், ஆலம்பாடி, தார்பார்கர்—இவை





மாட்டினங்கள். மாண்டியா, கோரிடேல், ஊட்டி கலப்பினம், ரஷ்யன் கலப்பினம், கோரிடேல் கலப்பினம் போன்றவை ஆட்டினங்கள்.

அடுத்தபடியாக திட்டத்தைப் பற்றிக் கேட்டார்கள். தமிழகத்தில் செயற்கைக் கருத்தரிப்புப் பணி மூலம் முறைப்படியான கலப்பின வளர்ப்பினை வலியுறுத்தும் பரிந்துரைகளை 1973 ஆகஸ்டில் தமிழ் நாட்டிற்கு வருகைபுரிந்த இரு பிரிட்டிஷ் நிபுணர்கள் வழங்கினார்கள். கலப்பற்ற ஜெர்சி இனத்தை அடிப்படையாகக் கொண்டதும், சிகப்பு சிந்தி இனத்தை ஓசூரில் பாதுகாப்பதை அடிப்படையாகக் கொண்டதுமான ஒரு கால்நடை கலப்பின வளர்ப்புக் கொள்கையை பரிந்துரை செய்தது.

பிரிட்டனைச் சேர்ந்த இரு நிபுணர்களின் அறிக்கையின் அடிப்படையில் ஓசூரில் உள்ள கால்நடைப் பண்ணையில் கால்நடை வளர்ப்பு திட்டமொன்றினை நிறுவும் நோக்கோடு ஒரு அறிக்கை தயாரிக்கப் பட்டது. மத்திய அரசாங்கத்தின் ஆலோசனைப்படி, திருத்தப் பட்ட திட்ட அறிக்கை ஒன்று தமிழ்நாடு அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்டு, மத்திய அரசாங்கத்திற்கு அவர்களுடைய ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. திருத்தி அமைக்கப் பட்ட திட்ட அறிக்கையின்படி இத் திட்டத்தின் சிறப்பு அம்சங்களாவன :—

(1) இத் திட்டம் தருமபுரி மாவட்டம், ஓசூரில் உள்ள கால்நடைப் பண்ணையில் தொடங்கப்பட்டு நடத்தப்படும்.

(2) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கால்நடை இனங்களைக் கொண்டு தேவைப்படும் காளைகளை இந்தப் பண்ணை உருவாக்கும்.

(3) ஓசூர் பண்ணையில் பிறந்த, தூய மற்றும் கலப்பின கன்றுகள் பிறப்பிலிருந்தே தனியாகப் பிரித்து, தக்க பருவம் வரை வளர்க்கப்பட்டு, விந்து எடுக்கவோ இனவிருத்திச் சோதனைகளுக்கோ பயன்படுத்தப்பெறும்.

(4) கால்நடை வளர்ப்புத் திட்டத்திற்குத் தேவையான உறை விந்து, ஓசூர் விந்து நிலையத்திலிருந்து உற்பத்தி செய்யப்படும்.

(5) கால்நடை வளர்ப்புக் கொள்கையை நெறிமுறைப் படுத்த ஒரு பன்னிலை சேவா அலுவலகம் நிறுவப்பட்டு அது தகவல் சேகரிப்பு, ஆய்வு மற்றும் விளக்கம் அளித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும்.

(6) சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் மரபு இயல் பிரிவு ஒன்றும் நிறுவப்பெறும்.

முதலில் இத் திட்டத்திற்கான மொத்த செலவு 292.04 லட்சங்களாக இருந்தது. இத்திட்டத்தினை செயல்படுத்துவது தொடர்பாக டிசம்பர் 1977-ல் பிரிட்டிஷ் அரசினால் அனுப்பப்பட்ட ஒரு மதிப்பீட்டுக் குழு ஓசூர் பண்ணைக்கு வருகை புரிந்து இத்திட்ட செயல்பாடு குறித்து மேலும் சில பரிந்துரைகளைக் கொண்ட திருத்த மதிப்பீட்டு அறிக்கையை இந்திய அரசிடம் சமர்ப்பித்துள்ளது.

இத்திட்டத்தின் திருத்திய மதிப்பீட்டு அறிக்கையின் மீது மேலும் சில மாற்றங்கள் இந்திய பால்வள நிறுவனம் பரிந்துரைத்துள்ளது. இவற்றின்படி இத் திட்டத்திற்கான மொத்த செலவு ரூ. 464.61 இலட்சங்களாகும்.

**திரு. எஸ். ஜே. இராமசாமி:** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் விரிவாகவும், நல்ல விளக்கமாகவும் பதில் அளித்திருக்கிறார்கள். ஆனாலும் இந்தப் பண்ணையின் பராமரிப்புகளில் சில குறைகள் இருக்கின்றன. அங்கே மாடுகட்டி இருக்கும் கொட்டகைகள் மற்றும் கோழி அடைக்கப்பட்டிருக்கும் இடங்கள் சரியான நிலையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் நான்கூட சமீபத்தில் அங்கே சென்றிருந்தேன். அமைச்சரவர்கள் அதற்கு 4 கோடி ரூபாய் செலவழிப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். அதிலே அந்த 4 கோடி ரூபாயையும் கீழே வைத்துவிட்டு, 2 கோடி ரூபாயையாவது எடுத்து அதை நல்ல முறையில் பராமரிக்க ஏற்பாடுகள் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அண்மைக் காலத்தில் அந்தப் பண்ணைக்கு போய் இருக்க மாட்டார்கள் என்பது அவர்கள் கேட்கின்ற கேள்வியிலேயே தெரிகின்றது. ஆகவே சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவுற்றதும் தயவுசெய்து அந்தப் பண்ணைக்கு அவர்கள் விஜயம் செய்ய வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. நா. சுந்தரராஜ்:** தலைவரவர்களே, பல திட்டங்களை எல்லாம் சொன்னார்கள். அதற்காக அவர்களுக்கு நன்றி. ஆனால் அந்த திட்டங்களிலே செயல்படுகின்ற தொழிலாளிகள் பதினைந்து ஆண்டுக் காலம் ஆகியும் இதுவரை நிரந்தரம் செய்யப்படாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே அவர்களை நிரந்தரமாக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை



அறிய விரும்புகிறேன். மேலும் 4 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆறுமாத காலம் ஆகிவிட்டது, இன்னும் அவர்களை வேலையில் எடுத்துக்கொள்ளவில்லை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தத் தொழிலாளர்கள் ஓசூர் கால்நடைப் பண்ணையைச் சேர்ந்தவர்களா?

**திரு. நா. சுந்தரராஜ்:** தலைவரவர்களே, அவர்கள் புதுக்கோட்டைப் பண்ணையைச் சேர்ந்தவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஓசூர் கால்நடைப் பண்ணையைப் பற்றிய கேள்வியைத்தான் போட வேண்டும்.

**திரு. கே. பண்ணை சேதுராம்:** தலைவரவர்களே, ஓசூர் கால்நடைப் பண்ணையில் காணாமல் போன கோழிகள் 5,000 என்றும் அதன் மதிப்பு ரூ. 900 என்றும் சொல்லப்படுகிறதே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோழிப் பண்ணை பற்றிய கேள்விக்கு பதில் அமைச்சரவர்களிடம் இருக்காது.

**திரு. மு. அம்பிகாபதி:** சபாநாயகர் அவர்களே, அந்த கால்நடைப் பண்ணையில் ஆடுகள் 1977 ஆம் ஆண்டுக்கு முன்பு காணாமல் போனதாகச் சொல்லப்படுகிறதே. ஆகவே இப்போது அதுபோல் ஏதாவது நடக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:** பேரவைத் தலைவரவர்களே, அப்படி நடந்ததாகக் குறிப்பு எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### ஒன்றியங்களில் குழந்தைகள் கண்காட்சி.

*வினா எண் 60.—திரு. பெ. க. திருவேங்கடம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) ஒன்றியங்களில் மகளிர்-மழலை நலத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் குழந்தைகள் கண்காட்சிகள் நடத்தப் பெற்று வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாவை ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: (அ) ஆம்.

(ஆ) ஒரு கண்காட்சிக்கு ரூ. 40 வீதம் 5 குழந்தைகள் கண்காட்சிக்கு ரூ. 200 செலவில், எல்லா வட்டாரங்களிலும் இக்கண்காட்சி களப் பணியாளர்கள், ஊர்நலப் பணியாளர்கள், விரிவாக்கப் பணியாளர்கள் (சமூக நலம்) ஆகியோர் உதவியுடன் நடத்தப்பட்டு வருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவரவர்களே, ஒரு கண்காட்சிக்கு செலவு ரூபாய் 40 என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். கண்காட்சி நடத்துகின்றபோது ஒரு ஆண்டு குழந்தைகளுக்கென்றும் இரண்டு ஆண்டு குழந்தைகளுக்கென்றும் விதங்களில் நடத்தப்படுகின்றன. அப்படி நடத்தப்படுகின்ற போது இந்த 40 ரூபாய் என்பது மிகவும் குறைவான தொகையாக இருக்கின்றது. ஆகவே இதனை அதிகமாக்க அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு நிதியமைச்சரவர்களிடம் இது குறித்து கேட்பதே நலம் என்று கருதுகிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, நிதியமைச்சரவர்களும் இருக்கிறார்கள். நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் இது நடைமுறையிலே மிகவும் சிரமமானதொரு பணியாகும். இந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கு 3 ரூபாய் 4 ரூபாய் தான் சன்மானம் கொடுக்கப்படுகிறது. ஆகவே இந்தத் தொகையினை அதிகமாக்குவதில் சிரமம் ஒன்றும் இருக்காது. ஆகவே இதனை அதிகமாக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: தலைவரவர்களே, அது பற்றிய விவரங்களை எல்லாம் தெரிவித்தால் நடவடிக்கை எடுப்பதற்குச் சரியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)



(முற்பகல் 10-00)

## 2. அறிவிப்புகள்.

### (அ) பேரவைத் தலைவரை பதவியிலிருந்து நீக்கக் கோரும் தனித் தீர்மானம் குறித்து அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரை முருகன் அவர்கள் பேரவையின் 52-வது விதியின்கீழ் ஒரு அறிக்கை கொடுத்துள்ளார்கள். அது கீழ்க்கண்டவாறு:

That this house resolves to remove the Hon. Speaker,

இந்த அறிக்கை நேற்று, 1—9—1978 பிற்பகல் 1.50 மணிக்குக் கொடுக்கப்பட்டது. அந்த அறிக்கைமீது விதிமுறைகளின்படி மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, தாங்கள் ஆங்கிலத்தில் படித்தது என்னவென்று தெரியவில்லை என்று சிலர் சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவரை பதவியிலிருந்து விலக்குவது பற்றிய தீர்மானம்.

## 3. ஒழுங்குப் பிரச்சினை.

### உரிமை மீறல் பிரச்சினைகளை உடன் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைப் பற்றிய கவன ஈர்ப்பு. திரு அம்பிகாபதி.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, நான் காலை இரண்டு உரிமை மீறல் பிரச்னை குறித்து நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன். உரிமை மீறல் பிரச்னைக்குத்தான் முதல் இடம் கொடுக்கப்பட வேண்டும்.

[1978 செப்டம்பர் 2

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது என் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. க. சுப்பு: ரூல்ஸ்படி அப்படி இருக்கமுடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அன்றைக்கே எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற விதி இல்லை.

திரு. க. சுப்பு:

Rule 184 says that a member wishing to raise a matter of privilege shall before the commencement of the sitting of the day on which he proposes to raise the point......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுப்பு அவர்கள் இரண்டு உரிமை மீறல் பிரச்சினைகளைக் குறித்து அறிவிப்பு தந்திருக்கிறார்கள். அவை என் பரிசீலனையில் இருப்பதால் நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. க. சுப்பு: நீங்கள் அப்படிச் சொல்லமுடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எனக்குத் தெரியும், உட்காருங்கள்.

திரு. க. சுப்பு: பாயிண்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்லவேண்டியதைச் சொல்லியாகிவிட்டது. அதைப் பற்றி மீண்டும் கேட்கமுடியாது. என் பரிசீலனையில் இருக்கிறது என்று ஏற்கனவே சொல்லிவிட்டேன்.

Thiru K. SUPPU: We are guided by rules and not according to you whims and fancies.

Mr. SPEAKER: I know that. திரு. சுப்பு அவர்களின் அளவிற்கு ஆங்கிலம் தெரியாவிட்டாலும் எனக்கும் தெரியும். (குறுக்கீடு.) என் அனுமதி பெற்றுத் தான் பேசவேண்டும். இல்லாவிடில் நான் அதை அனுமதிக்க முடியாது.

(திரு. சுப்பு நின்று கொண்டிருந்தார்.)

நீங்கள், உட்காருங்கள்.



1978 செப்டம்பர் 2]

திரு. க. சுப்பு: 'நோ கான்பிடன்ஸ் மோஷன்' கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அதைப்பற்றி கேட்க உரிமை கிடையாது. அவசியமற்ற விஷயங்களை பேசக்கூடாது, முதலில் நீங்கள் உட்காருங்கள், பிறகு வேண்டுமானால் அனுமதி தருகிறேன். விதியைப் பார்த்துவிட்டு அனுமதி கொடுக்கலாம் என்றிருந்தால் அனுமதி தருகிறேன். அமருங்கள்.

திரு. க. சுப்பு: விதி 184 . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதியைப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன். உட்கார்ந்துகொண்டு காமெண்ட்ஸ் அடிக்கக் கூடாது. பேச வேண்டும் என்றால் என் அனுமதியோடு தான் பேச வேண்டும். இல்லாவிடில் அவற்றை நீக்க வேண்டி வரும்.

திரு. க. சுப்பு: உங்களுக்குத் தெரியாது. உங்களுக்குத் தெரியத்தான் இதைப் படிக்க விரும்புகிறேன்.

Mr. SPEAKER: Rules 184 (a) says "A member wishing to raise a matter of privilege shall before the commencement of the sitting of the day on which he proposes to raise the point, leave with the Speaker a written notice of the matter proposed to be raised;

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சுப்பு அவர்கள் உங்களுக்குத் தெரியாது ஆகவே நான் சொல்லுகிறேன் என்று ஏதோ சபாநாயகர் அவர்களுக்கு ஒன்றும் தெரியாதது போலவும். . .

திரு. க. அன்பழகன்: அவர் அப்படி சொல்லவில்லை, விதிகளை விளக்குவதற்குத் தான் பேசுவதற்கு முன் வந்தார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படி சொல்லவில்லை என்று எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்களே சொல்லிவிட்டால் நான் எதை நம்புவது?

திரு. துரை முருகன்: நாங்கள் சொல்வதைத்தான் நீங்கள் நம்புவதில்லை என்று நீங்கள் நம்புவதில்லை என்று நீங்கள் ஏற்கனவேயே சொல்லிவிட்டீர்களே.

(குறுக்கீடு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து உட்காருங்கள். உங்களுக்குள்ளேயே கட்டுப்பாடு இல்லையென்றால் என்ன செய்வது?

(எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசுவதற்கு எழுந்திருந்தார்.)

திரு. கூத்தக்குடி ச. சண்முகம்: * *

(திரு. கூத்தக்குடி ச. சண்முகம் அவர்கள் நின்றுகொண்டேயிருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சண்முகம் அவர்கள் தயவு செய்து உட்காருங்கள்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம்: தலைவர் அவர்களே, * *
(கூச்சல்குழப்பம்.)

* * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிலர் எதிர்பார்க்கின்ற காரியம் நடைபெறுவதற்கு தயவு செய்து நீங்கள் துணையாக இருக்காதீர்கள். தயவு செய்து அமருங்கள்.

(திரு. கூத்தக்குடி ச. சண்முகம் அவர்கள் நின்று கொண்டிருந்தார்).

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: திரு. கூத்தக்குடி சண்முகம் அவர்களை சற்று அமைதியாக இருக்குமாறு நான் மிகவும் கேட்டுக்கொள்கிறேன். தலைவர் அவர்களே, திரு. சுப்பு

* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



வார்கள், சைகை காட்டிப் பேசுவார்கள். இதையெல்லாம் தாங்கள் அடிக்கடி சுட்டிக்காட்டியிருக்கிறீர்கள். சில சந்தர்ப்பங்களில் மிக ஆத்திரமாக—அவர் துடிப்புள்ள இளைஞர். ஆகவே இப்படியெல்லாம் பல நேரங்களில் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அதை தாங்களும் அனுமதித்திருக்கிறீர்கள். இப்போது அவர்கள் பேசும்போது—எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அப்படி அவர் பேசவில்லை என்று சொல்லுகிறார்கள். உங்களுக்குத் தெரியாது. உங்களுக்குத் தெரிவதற்காகச் சொல்லுகிறேன் என்று உங்களைப்பார்த்து. உங்களுக்குத் தெரியாது, அவருக்குத் தெரியும் என்ற உணர்வில் பேசுகின்ற தோற்றத்தை ஏற்படுத்துகின்ற அளவுக்குப் பேசியிருக்கிறார். அவர் பேசினாரா இல்லையா என்பதை குறிப்பேட்டைப் பார்த்தால் தெரியும். சபையில் அப்பேர்ப்பட்ட பேச்சு அமையுமானால் இந்தச் சபையின் மரபு அளவுக்கு காக்கப்படும் என்பதை அவை உறுப்பினர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக திரு. கூத்தக்குடி சண்முகம் அவர்கள் பேசும்போது. * * * என்று சொல்லுவது எந்த அளவுக்கு இந்த அவையின் மரபுக்கு ஏற்றதாக அமையும் என்பதை தயவு செய்து அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் சொல்ல விரும்புவது, சுப்பு அவர்கள் ஒரு தவறு செய்கிறார்கள் என்றால்—தவறு செய்தார் என்று நான் வாதாடவில்லை—அந்தத் தவறுக்குப் பதில் நானும் தவறு செய்வேன் என்று கூத்தக்குடி சண்முகம் அவர்கள் வாதிடுவது நியாயமாக இருக்காது என்பதை நான் மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அமைதியான முறையில் சபை நடவடிக்கை நடப்பதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (திரு. கூத்தக்குடி ச. சண்முகம் அவர்கள் பேசுவதற்கு எழுந்திருந்தார்) மீண்டும் திரு. சண்முகம் அவர்கள் எழுந்து பேச முயற்சி செய்கிறார்கள். தயவு செய்து இந்தப் பிரச்சினையை இத்தோடு விட்டுவிடுமாறு அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1978 செப்டம்பர் 2

*திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, திரு. சுப்பு அவர்கள் ஒரு உரிமைப் பிரச்னை கொண்டு வந்து, அந்த உரிமைப் பிரச்னை எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்பதற்கு அவை விதிகளில் சிலவற்றை சுட்டிக்காட்டி விளக்கிப் பேச முயன்ற போது, தாங்கள் அதை நானே பார்த்துக்கொள்கிறேன் நீங்கள் உட்காருங்கள் என்று அவருக்கு ஆணையிட்டீர்கள். திரு. சுப்பு அவர்கள் விதிமுறைகளை விளக்கிக் கூறிக் கொண்டிருந்தார்கள். இப்படி சாதாரணமாக அவை உறுப்பினர்கள் தாங்கள் கொடுக்கின்ற உரிமைப் பிரச்னைகளுக்கு ஆதாரமாக இருக்கின்ற, அவை விதிமுறைகளை விளக்கிக் கூறுகின்ற வழக்கம் 1957 ஆம் ஆண்டிலிருந்து இங்கே கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கிறது. கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் இது போன்ற பல நேரங்களில் சபாநாயகர் அவர்களிடம் விளக்கிச் சொல்லியிருக்கிறார்கள். சபாநாயகர் அவர்களும் அப்படிப்பட்ட விளக்கங்களைக் கேட்டு, அதற்குப் பிறகு இன்னின்ன விதிமுறைகள் இன்னின்ன கருத்துக்களை கொடுக்கிறது என்று கூறி சபாநாயகர் வேறு விளக்கங்களைக் கொடுப்பார்கள். இப்படியெல்லாம் நடைபெற்றிருக்கின்ற இந்த அவையில், விதிமுறைகளை எடுத்துச் சொல்வதற்கே இடம் தராமல் இருப்பது சரியல்ல.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் இன்னும் பிரச்னையை முடிக்கவில்லை. நான் எழுந்து நிற்கும்போது, எழுந்து நிற்கக் கூடாது, அமருங்கள் என்றுதான் சொன்னேன். அவர் ஒரு பிரிவிலேஜ் மோஷன் கொடுத்திருக்கிறார். அதையொட்டி நான் 185-வது பிரிவைப் படிக்கப் போகிறேன். படித்த பிறகு அவர்கள் சொல்கிற விளக்கத்திற்கு கடைசியாக நான் என் முடிவைச் சொல்கிறேன். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இந்த அவையிலே 25 ஆண்டுகளாக இருப்பவர். பிரிவிலேஜ் மோஷனை மூவ் செய்த அன்றைக்கே எடுத்துக்கொண்டதாக



1978 செப்டம்பர் 2] [பேரவைத் தலைவர்]

நான் அறிந்ததில்லை. நானும் 20 ஆண்டுகளாக இந்த அவையிலே இருக்கிறேன். நான் இதற்கு ஆட்சேபணை தெரிவிக்கவில்லை. வந்திருக்கிறது, எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்கிறபோது, இவ்வாறு பல விஷயங்கள் ஏற்பட்டிருக்கிறது. நான் இந்த ரூலைப் படித்து முடித்து விடுகிறேன்.

Rule 185 "A member may, with the consent of the Speaker raise a question involving breach of privilege either of member or of the House or of a Committee there of"

இதற்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் என்ன சொல்லுகின்றார்களோ, அதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். விதி இப்படி இருக்கின்றது என்று நான் சொல்கிறேன். (திரு. க. சுப்பு எழுந்திருந்தார்) திரு. சுப்புவுக்கு பாதுகாப்பு கொடுப்பதற்கு தலைவர் இருக்கிறார். எதிர்க்கட்சித் தலைவருடன் நான் இப்போது வாதாடிக் கொண்டிருக்கிறேன். இதற்குமேல் அனுமதிக்க முடியாது என்று நான் வாதாடுகிறேன். 'பிரீச் ஆப் பிரிவிலேஜ்' நோட்டீஸ் திரு. சுப்பு கொடுத்திருக்கிறார்கள் என்று நான் அறிவித்துவிட்டேன். அதை இன்றைக்கே எடுத்துக் கொள்வதா, இல்லையா என்பதை முடிவு செய்வது என்னுடைய உரிமை. தயவுசெய்து உட்காரவேண்டும். இன்றைக்கே அவற்றை எடுத்துக்கொள்வதாக இல்லை.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தாங்கள் இந்த அவையிலே உரிமைப் பிரச்னை கொடுத்த அன்றே, உரிமைப் பிரச்னை என்ன என்பதைச் சொல்லியிருக்கிறீர்கள். முரசொலி பத்திரிகைமீது உரிமைப் பிரச்னை வந்தபோது, அலை ஓசை பத்திரிகைமீது உரிமைப் பிரச்னை வந்தபோது, அதேபோல் அண்ணா பத்திரிகையின் மீது வந்தபோதெல்லாம், இதை அவையிலே அந்த உரிமைப் பிரச்னை என்ன என்பதை தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், அதைக்கூட இன்றைக்குச் சொல்லவில்லை என்பதுதான் எனக்கு வருத்தமாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் முதலிலேயே இப்படிக் கேட்டிருந்தால் நல்லது. அவர் முதலிலே கூறியது வேறு. இருக்கட்டும் பரவாயில்லை. இப்போதாவது சொன்னதற்கு மெத்த சந்தோஷப்படுகிறேன். பிரச்சினையை அவையிலே எடுத்துச் சொல்லவேண்டுமென்று சொன்னால்கூட பரவாயில்லை. ஆனால், இன்றைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும், அப்படி எடுத்துக்கொள்ளாவிட்டால் திருப்பி எடுத்துச் செல்வேன் என்று சொல்வது நியாயமல்ல, சரியல்ல . . .

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு உரிமைப் பிரச்சினைபற்றி விதிகளில் இருக்கின்ற சிலவற்றைச் சுட்டிக்காட்டி, அதன்படி இந்த விதிகளின் மூலமாக பலவற்றைப் பேசலாம் என்ற நிலைமை நிச்சயமாகக் கூடாது. உரிமைப் பிரச்சினையைப் பற்றிய விதிகள் நம்முடைய விதிமுறைகளிலே தெளிவாக இருக்கின்றன. உரிமைப் பிரச்சினை எழுப்ப வேண்டுமானால், அவர்கள் அதுகுறித்து பேரவைத் தலைவருக்கு நோட்டீஸ் கொடுக்க வேண்டும். அதற்குப் பிறகு அந்தப் பிரச்சினையை இங்கே எழுப்ப வேண்டுமானால் பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியைப் பெறவேண்டும். இந்த விதிகள் நம்முடைய விதிமுறைகளிலே மிகத் தெளிவாக இருக்கின்றது. ஆகவே, இங்கே உங்களுடைய உரிமைப் பிரச்சினைக்கு நோட்டீஸ் கொடுத்துவிட்டு, பேரவைத் தலைவரின் அனுமதி இல்லாமல் எதை வேண்டுமானாலும் பேசுகின்ற மரபை உருவாக்கினால், அது நிச்சயமாக சரியாக இருக்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன கருத்தை, ஒரு மரபாக நாம் ஏற்றுக்கொள்வதென்றால், நாளை ஒருவர்மீது ஒருவர் உரிமைப் பிரச்சினைகளை எழுப்பிக் கொண்டே இருப்பார்கள், அதற்கு அனுமதி கொடுக்கும் நிலைமை வருமானால், இந்த அவையின் நேரம் முழுவதையும் ஒதுக்க வேண்டி வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

ஒரு உரிமைப் பிரச்சினை வரும்போது, பேரவைத் தலைவர் அது உரிமைப் பிரச்சினைதானா, இல்லையா என்று ஆராய்ந்து சொல்கின்ற வாய்ப்புக்கூட தராமல், காலையில் கொடுத்துவிட்டு





நான் உள்ளே நுழைகின்றபோது கொடுத்துவிட்டு, உடனடியாக அதற்குப் பதில் தேவை, பதில் இல்லை என்றால் திருப்பி எடுத்துச் சொல்வேன் என்ற வாதத்தை நான் கடந்த 20 ஆண்டுகளில் பார்த்ததில்லை. ஆனால், இப்படிப்பட்ட வழிமுறைகளை மேற்கொண்டு உற்சாகப்படுத்தினால், அதிகமாக உரிமை மீறல் பிரச்சினை இந்த அவையிலே வந்து, அதற்கே இந்த அவையின் முழு நேரத்தையும் ஒதுக்க வேண்டி வரும். ஆகவே, இதை ஆராயாமல் திரு. சுப்பு தந்திருக்கின்ற உரிமைப் பிரச்சினை என்ன என்பதைச் சொல்லிவிட்டால், விவரம் பத்திரிகைகளிலே வந்துவிடும். அப்படி வந்துவிட்டப் பின்னால், நான் அதைத் தள்ளி விடுகின்ற நிலைமை ஏற்பட்டால், அப்போது இந்தச் சபையிலே விவரத்தைச் சொல்லியது நியாயமாக இருக்காது. ஆகவே, இதிலே உரிமை மீறல் இருக்கின்றதா இல்லையா என்பதைப் பரிசீலித்து . . .

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** அப்படிச் சொல்ல வேண்டுமென்று விதியில்லை. ஒரு உறுப்பினர் உரிமை மீறல் பிரச்சினைக்கு நோட்டீஸ் கொடுத்த பிறகு, அந்தப் பிரச்சினை என்னிடம் இருக்கிறது, அதைப் பற்றி நான் நாளைக்குச் சொல்கிறேன் என்று பேரவைத் தலைவர் தெரிவித்த பிறகு, அந்தப் பிரச்சினையை அன்றைக்கு அத்தோடு முடித்துவிட வேண்டுமே தவிர, உரிமைப் பிரச்சினையைப் பற்றிய எல்லாவற்றையும் அன்றே சொல்லிவிட வேண்டுமென்று விதியில்லை.

**திரு. க. சுப்பு:** விதி இருக்கிறது. உங்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் சொல்லுகிறேன். விதி 187—

The right to raise a question of privilege shall be subject to he following restrictions, viz.,:—

(i) The alleged breach of privilege must refer to a matter of ecent occurrence

நேற்று நடந்தது; தேதி போட்டுக் கொடுத்திருக்கிறன்.

(ii) A *prima facie* case of a breach of privilege must be made out.

Rule 188 "when a member has with the consent of the Speaker aised a matter of privilege,........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'கன்சென்ட் ஆப் தி ஸ்பீக்கர்' என்றால் என்ன அர்த்தம்? உங்களுக்கு நிறைய ஆங்கிலம் தெரியும், எனக்கு அரைகுறையாகத்தான் தெரியும். 'கன்சென்ட்' என்பதில் டிஸ்க்ரிஷன் அடங்கியிருக்கிறது.

**திரு. க. சுப்பு:**

......"the Speaker shall read the matter to the House and decide whether a *prima facie* case of breach of privilege has been made out or not therein

நீங்கள் வாசித்துவிட்டு பிரைமா ஃபேசி கேஸ் இருக்கிறதா, இல்லையா என்று சொல்ல வேண்டும், ரூல்சில் தெளிவாகப் போடப்பட்டிருக்கிறது. இன்றைக்கு நடந்த விஷயம் என்றால் நிச்சயம் உடனே தான் எழுப்ப முடியும். ஆர்டினன்சை கவர்னர் ரத்து செய்ய வேண்டும், இவரே ரத்து செய்ததாகச் சொல்லுகிறார். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்பு அவர்கள் விதி முறைகளை எடுத்துச் சொல்வதோடு நிற்காமல் பிரச்சினைக் குள்ளே போவது சரியல்ல.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு சுப்பு அவர்கள் மீண்டும் பிரச்சினையைக் குழப்புகிறார்கள் என்று கருதுகிறேன். பிரிவிலேஜ் பற்றிய விதிமுறைகள் 187 வது விதியில் ஆரம்பமாகவில்லை. 184 வது விதியிலிருந்தே ஆரம்பமாகிறது. ஒரு உரிமை மீறல் பிரச்சினை எழுப்ப வேண்டுமென்றால் தங்களுக்கு நோட்டீஸ் கொடுத்து எழுப்ப வேண்டும்.

"184. A member wishing to raise a matter of privilege shall before the commencement of the sitting of the day on which he proposes to raise the point, leave with the speaker a written notice of the matter proposed to be raised.





ஆனால் அது சபையிலே நடந்துவிட்டால் என்ன செய்வது என்பதற்காக ஒரு ப்ரொவிசோ இருக்கிறது. எப்படி எழுப்ப முடியும் என்றால் 185வது விதி—

"A member may, with the consent of the Speaker raise a question involving a breach of privilege......

ஆகவே, முதலிலே நோட்டீஸ் கொடுக்க வேண்டும். உரிமை மீறல் பிரச்சினை இருக்கிறதா இல்லையா என்பது பற்றித் தாங்கள் முடிவு செய்ய வேண்டுமென்பது பற்றி 185-வது விதியில் மிகத் தெளிவாக இருக்கிறது.

"A member may, with the consent of the Speaker raise a question involving a breach of privilege either of a member or of the House or of a Committee thereof"

மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்களுக்கு இது தெரியாதது அல்ல. வேண்டுமென்றே 187வது விதியைப் படித்துக் காட்டி முன்பு அதற்கு இருக்கிற இலக்கணத்தை எல்லாம் ஒரு வேளை விட்டுவிடவேண்டும் அல்லது மறந்துவிட வேண்டுமென்று நினைக்கிறார் போல் தெரிகிறது.

* **திரு. க. அன்பழகன்:** இந்த விதியில் சொல்லப்பட்டிருக்கிற 'கன்சென்ட்' என்ற வார்த்தைக்கு அவைத் தலைவர் அனுமதியோடு என்று பொருளே தவிர, அனுமதிப்பதா, அல்லவா என்ற உரிமையை அவைத் தலைவர் எடுத்துக்கொள்வதற்காக அல்ல.

"with the consent of the Speaker

டிஸ்க்ரீஷன் என்பது பிரிவிலேஜ் இருக்கிறதா இல்லையா என்பதை முடிவு கட்ட வேண்டிய நேரத்தில் எடுத்துக் கொள்வது. பிரிவிலேஜ் என்று ஏதோ ஒரு உறுப்பினர் சொல்லுகிற காரணத்தால் அது உண்மையாகிவிடாது. பிரிவிலேஜ் இல்லையென்ற காரணத்தால் பிரிவிலேஜ் இல்லாமலும் போய்விடாது.

பிரிவிலேஜ் இருக்கிறதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு சபாநாயகருக்கு இருக்கிறது. சபாநாயகரே கூட கருத்தளவில் பிரிவிலேஜ் இல்லையென்று கருதினாலும் கூட,

இந்தச் சபை பிரிவிலேஜ் இருப்பதாக வலியுறுத்த சில நேரங்களில் வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கின்றன.

நான் சபாநாயகர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். 'கன்செண்ட்' என்று சொல்வது நேரத்திற்காக, காலத்திற்காகத் தங்களுக்குத் தரப்பட்டிருக்கிற உரிமையைக் கூறும் தொடரே தவிர வேறல்ல. பிரைமாஃபேசி கேஸ் இருக்கிறதா இல்லையா என்று பார்த்தவுடனே இல்லையென்று திட்டவட்டமாக சிலவற்றை ஒதுக்க முடியும். பிரிவிலேஜ் இருப்பதாக வாதிட்டால், வாதித்ததற்குப் பின்புதான் முடிவு எடுக்க முடியும். ஆகவே, 'கன்செண்ட்' என்ற வார்த்தையை வைத்துக் கொண்டு பிரிவிலேஜ் இல்லையென்று தள்ளி விட முடியாது.

'whether there is *prima facie* case or not"

என்பது தீர்மானிக்கப்பட வேண்டும்.

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு திரு. கெ. மனோகரன்:** தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இங்கே ஒரு விளக்கத்தைச் சொன்னார். அது அவருடைய விளக்கம். நானும் என் சார்பில் விளக்கத்தைத் தர முடியும். அது என்னுடைய கடமை. ஆனால் இரண்டு பேர்களும் தருகின்ற விளக்கங்கள் விதிகள் என்ற வட்டத்தைச் சுற்றித்தான் வலம் வரவேண்டுமே தவிர ஆளுக்கு ஆள் இழுக்கிற ரப்பர் துண்டுபோல் செல்வதற்கு இடம் தரக் கூடாது. 'கன்சண்ட்' என்று தரப்பட்டிருக்கிற வார்த்தை, சபாநாயகருக்கு ஏதோ இந்த சபை இரக்கப்பட்டுக் கொடுத்த கன்செஷனைப்போல் கருதிக்கொண்டு, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசுவது ஒரு வேடிக்கையாக இருக்கிறது.

It has its own significance

'வித் தி கன்சண்ட் ஆப் தி ஸ்பீக்கர்' என்று சொல்கிறபோது, உரிமைப் பிரச்சினையை சபாநாயகர் புறந்தள்ளிவிட்டார் என்ற அடிப்படையிலே அவர் பேசுகின்றார். ஆனால், சபாநாயகர் இங்கே தெளிவாகச் சொல்லியிருக்கிறார், இதை நான் பரிசீலிக்கிறேன், பரிசீலித்து நாளைக்குச் சொல்கிறேன் என்று அவர்





ஏற்கனவே சொல்லிவிட்டதற்குப்பிறகு 185, 186, 187 என்று விதிகளைக் கிளப்பிக் கொண்டிருப்பதிலே பிரயோஜனம் இருப்பதாகத் தெரியவில்லை. 'வித் தி கன்சண்ட் ஆப் தி ஸ்பீக்கர்' என்றால் நான் கருதிக் கொண்டிருப்பது, நான் மட்டுமல்ல, இந்தச் சபை ஏற்றுக்கொள்ளும் என்று நான் நம்பிக்கொண்டிருக்கிற பொருள், ஸ்பீக்கருக்கு அந்த உரிமை இருக்கிறது, சில நேரங்களிலே உரிமைப் பிரச்சினையிலேயே 'பிரைமா பேசி' இருக்கலாம், சில நேரங்களிலே உரிமைப் பிரச்னையைத் தள்ளுபடி செய்யக்கூடிய அந்த உரிமை சபாநாயகர் அவர்களுக்கு இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது, சில நேரங்களிலே சபாநாயகர் தீர்ப்பு வழங்கியதற்குப் பின்னாலே, அந்தத் தீர்ப்பு தவறாகக்கூட இருக்கக்கூடும்.

But the verdict of the Speaker can never be challenged

என்பதையும் மறந்துவிடக் கூடாது. இதையெல்லாம் உள்ளடக்கி எல்லோரும் கட்டுப்பட்டு நடந்தால்தான் இந்த அவையை நடத்திச் செல்ல முடியுமே தவிர வேண்டுமென்றே வம்படிக்காக விளக்கங்களைச் சொல்லிக் கொண்டிருந்தால் இந்தச் சபையை நடத்த முடியாது. திரு. கூத்தகுடி ச. சண்முகம் அவர்கள் தெரிவித்ததைப்போல் ஒவ்வொரு ஆளும் எழுந்து நின்று கொண்டு பேசி இந்தப் பிரச்சினைக்குப் பரிகாரம் காணமுடியாமல் சத்தம்போட்டுக் கொண்டே இருக்கின்ற நிலைமைகள் தான் ஏற்படும். அந்த நிலைமைகளை சபை ஏற்றுக் கொள்கிறது என்றால் தாராளமாகச் செய்யலாம், நான் சபாநாயகர் அவர்களைக் கேட்டுக்கொள்வது இது உங்கள் அதிகாரத்தில் பாற்பட்டது, உரிமை மீறல் பிரச்சினைகளைப் பார்த்துப் பரிசீலித்து முடிவு எடுக்கிற உரிமை உங்களுக்கு இருக்கிறது, அந்த உரிமையை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். அந்த உரிமையைப் பறிக்கிற அதிகாரம் இந்தச் சபைக்கு இல்லை, மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் இல்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்தப் பிரச்சினையை இத்தோடு விட்டு விடுவது நல்லது என்று எதிர்க்கட்சித் தலைவரையும் மற்ற அன்பர்களையும் நான் கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர் 'கன்செண்ட்' பற்றிச் சொன்னார், நான் சொல்ல விரும்புவது. . . . .

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்:** அதிலே 188-வது விதியையும் சேர்த்துப் படித்துவிடலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்கிறேன், உட்காருங்கள்

**திரு. துரை முருகன்:** தாங்கள் சொல்லும்போது அமைச்சர் எப்படி எழுந்து சொல்லலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவரையும் உட்காரச் சொன்னேன், அதற்குள் தாங்கள் இப்படி பேசுவது சரியல்ல.

**திரு. துரை முருகன்:** எப்படிப் பேசுவது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் எப்படி என்று இப்போது பார்க்கிறேன்.

In "Practice and procedure of Parliament" by Thiruvalargal M. N. Kaul and S. L. Shedher, it has been stated thus:— [Page 257]

'A question of Privilege may be raised in the House only after obtaining the consent of the Speaker; this has been made obligatory. So that the time of the House is not taken up by raising a matter which, on the face of it, is not admissible"

என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதே நேரத்திலே கடைசியிலே சொல்லப் பட்டிருக்கிறது,

"on receipt of the notice, the matter is considered by the Speaker who may either give or withhold his consent to the raising of the question of privilege in the House."

என்று இருக்கிறது. 'அப்டெய்னிங்' என்று வைத்திருப்பதன் பொருள் என்னிடம் அனுமதி பெற்றுத்தான் செய்ய வேண்டும் என்பது.

**திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, தங்களுடைய கருத்தை மறுப்பதற்காக நான் சொல்லவில்லை. ஒரு உரிமைப் பிரச்சினையை எழுப்பி வாதிடுவதற்காக வருகிறபோது தாங்கள் கொடுக்கிற அனுமதிக்குட்பட்டுத்தான் எழுப்ப வேண்டும்





என்பதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் உரிமைப் பிரச்சினை இன்னது என்று சொல்வதற்கோ அல்லது பிரைமா பேசி இருக்கிறதா அல்லது இல்லையா என்று சொல்வதற்கோ 'கன்சென்ட்' வேண்டும் என்பதல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்வது என்னவென்றால், கொடுத்ததைப் பார்த்து அதில் பிரைமாஃபேசி இருக்கிறதா இல்லையா என்பதை முடிவு செய்வதற்குப் பின் பேராசிரியர் சொல்வது பொருத்தமாக இருக்கலாம். முடிவெடுத்து அனுமதிக்கும் நேரத்தில் தாங்கள் அந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளலாம். ஆகவே, இந்தப் பிரச்னையை இதோடு விட்டு விட வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு:** பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நோ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று ஒவ்வொரு நேரத்திலும் எடுத்துக் கொள்ளலாம்; விதிகளை வைத்து நான் பார்க்க வேண்டுமென்றால் திரு. சுப்பு அவர்களுக்கு ஒன்றரை மணி வரையில் தரலாம். ஆனால் இப்பொழுது கால நேரம் கிடையாது. எனவே, பிரச்னை இத்துடன் முடிந்து விட்டது, அதைப்பற்றிப் பேசக்கூடாது.

**திரு. க. சுப்பு:** அந்தப் பிரச்சினை இல்லை.

Under Rule 83, "Any member may at any time submit a point of order for the decision of the Speaker but in doing so shall confine himself to stating the point."

உங்களுடைய டிசிஷன்தான் ஃபைனல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதில் யாருக்கும் சந்தேகமில்லை.

**திரு. க. சுப்பு:** பாயின்ட் ஆஃப் ஆர்டருக்கு அனுமதி கொடுக்கிறீர்கள்.

[திரு. க. சுப்பு] [1978 செப்டம்பர் 2

Rule 83 [3]: "A point of order shall relate to the interpretation or enforcement of those rules or such Articles of the Constitution as regulate the business of the House and shall raise a question which is within the cognisance of the Speaker."

அந்த ரூல்படி என்னுடைய ஒழுங்குப்பிரச்சினையை எழுப்ப விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தப் பிரச்னையைப்பற்றிப் பேசக் கூடாது. அது முடிந்துவிட்ட ஒன்று. அதில் நான் ரூலிங் கொடுத்தாகிவிட்டது. எனவே, பிரிவிலிஜ் பற்றிப் பேசக் கூடாது. அடுத்து 41-வது விதியின்கீழ்.

**திரு. துரை முத்துசாமி:** எங்கள் கட்சியின் சார்பில் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவு செய்து தாங்கள் அமருங்கள். முன்வரிசையிலே உங்கள் கட்சித் தலைவர் இருக்கிறார், வேண்டுமானால் அவர் சொல்லட்டும்.

**திரு. துரை முத்துசாமி:** பாயிண்ட் ஆப் ஆர்டர், சார் பேரவைத் தலைவரவர்களே, சற்று முன் நடந்த விவாதத்தில் நம்முடைய மாண்புமிகு முன்னவர் அவர்கள் பேசும்பொழுது சொன்னார்கள், கூத்தக்குடி சண்முகம் அவர்கள் * * *

என்று சொன்னதைப்போல் எல்லோரும் செய்ய வேண்டுமென்றாலும் ஆட்சேபனை இல்லை என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து அதை நீக்கி விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பிரச்சினை இதோடு முடிந்து விட்டது.

**திரு. துரை முத்துசாமி:** ஆட்சேபணை இல்லை என்று சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது மொத்தமாக அவர்கள் கொடுத்த அறிவுரைதான். அவை அனுமதித்தால் என்று தான் சொல்லியிருக்கிறார்கள்.

---

*பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



(4) கவன ஈர்ப்புகள்.

[(அ) கல்லணைக் கால்வாய் மூலம் சில பகுதிகள் பாசனம் பெறாதது குறித்து.]

**திரு. மு. அம்பிகாபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு வேளாண்மை மற்றும் பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

"தஞ்சை மாவட்டத்தில் கல்லணைக் கால்வாய் பாசனம் பெறும் மன்னார்குடி தாலுகாவில் திருமக்கோட்டை பகுதிகளும் மன்னார்குடி மேற்புறமுள்ள பகுதிகளும் இதுவரை பாசனம் பெறாததால் எழுந்துள்ள கொந்தளிப்பான நிலை குறித்து".

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவரவர்களே, திருமக்கோட்டை பகுதிகளுக்கும் மன்னார்குடி மேற்புறப் பகுதிகளுக்கும் 15—7—1978-லிருந்து பாசன நீர் வழங்கப்பட்டு வருகிறது. திருமக்கோட்டை பகுதிகளுக்குத் தேவையான நீர் தொடர்ந்து விடப்பட்டு வருகிறது. ஏறக்குறைய பாதிக்கு மேற்பட்ட பரப்பில் நாற்று நடவு வேலை முடிக்கப்பட்டு விட்டது. எஞ்சியுள்ள பகுதிகளில் நடவுவேலை தொடர்ந்து நடைபெறுகின்றது.

மன்னார்குடி மேற்புறப் பகுதிகளுக்குத் தொடக்கத்திலிருந்தே தேவையான அளவுக்கு மேலாகவே தொடர்ந்து தண்ணீர் விடப்பட்டு வருகின்றது. 90 சதவிகிதப் பரப்பில் நடவு முடிந்துவிட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மு. அம்பிகாபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குறிப்பாகத் தலைப்பில் அதிகமாகத் தண்ணீர் விடப்பட்டாலும் கூட அந்தப் பாசனப் பகுதி மிகவும் நீண்டிருப்பதால் குறிப்பாக உள்ளிக்கோட்டை, திருமக்கோட்டை போன்ற பகுதிகளில் கால்வாய் அதிக அகலம் இல்லாததன் விளைவாகத் தண்ணீர் அதிகமாகச் சென்று பாயாமல் விவசாயிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். இன்றைக்கு வேளாண்மைத் துறையும் பாசனத் துறையும் இணைக்கப்பட்டு ஒரே அமைச்சரிடத்தில் இருக்கிறது.

இது சரியானதுதான். ஏனென்றால் வேளாண்மைத் துறை அமைச்சர் விதை விடுங்கள் என்று சொல்வார், பாசனத்துறை அமைச்சர் தண்ணீர் விடுவதை நிறுத்துங்கள் என்று சொல்வார். அந்தமாதிரி நிலைமைகள் இல்லாமல் இரண்டு துறைகளும் ஒரே அமைச்சரிடத்தில் இருக்கின்றன. இது நல்ல முறை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. மு. அம்பிகாபதி:** இது தண்ணீர்ப் பிரச்னை. அமைச்சரவர்கள், இந்தக் கல்லணைக் கால்வாய், கல்லணை விரிவாக்கக் கால்வாய் ஆகிய இரண்டையும் பரிசீலித்துத் தேவையான அளவிற்குத் தண்ணீர் செல்லும் வகையில் அந்த வாய்க்கால்களை விரிவாக்கவோ அல்லது உயர்த்தவோ நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள பாசன திட்டப்படி 'டெயில் என்ட் அக்ரிகல்சுரிஸ்டஸ்', கடைக்கோடி பகுதியிலே இருக்கக்கூடிய பாசன வசதியைப் பெறுகின்ற விவசாயப் பெருங்குடி மக்களும் தண்ணீரைப் பெற வேண்டுமென்று நோக்கத்தோடு தண்ணீர் விடப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் சொல்வதைப் போல் கடைக்கோடி பகுதியிலே உள்ள விவசாயிகளுக்குத் தண்ணீர் வரவில்லை யென்ற நிலைமை கூடாது என்பதற்காகத்தான் சீரமைக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். அதோடு, சீரமைப்பது தவிர, தண்ணீரைக் கடைக்கோடி பகுதிகளுக்குக் கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[(ஆ) சேரன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர் மரண சம்பவம் குறித்து.]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திருவாளர்கள் கு. ரமணி, ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, ஓ. சுப்பிரமணியன், கே. கந்தசாமி, ஏ. ஆர். மாரிமுத்து, செ. சதாசிவம், மு. அம்பிகாபதி, பொ. உத்திராபதி, சின்ன





சேலம் மா. சுப்பிரமணியம், க. சுப்பு ஆகியோர், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு ஒன்றினை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். அனைவரின் சார்பாக, திரு. ரமணி, அந்தப் பொருள்பற்றி தெரிவிப்பார்கள்.

* **திரு. கு. ரமணி:** தலைவரவர்களே, "30—8—1978 அன்று; கோவை மாவட்டம் உடுமலைப்பேட்டை நகரில் சேரன் போக்குவரத்துக் கழகக் கிளையில் பணிபுரிந்த விசுவநாதன் என்ற டிரைவரை உயிரோடு பெட்ரோல் ஊற்றி எரிக்கப்பட்டது பற்றியும், அதன் காரணமாக தொழிலாளர்களிடையே ஏற்பட்டுள்ள பதட்டநிலை பற்றியும்" மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. யூ. எஸ். விசுவநாதன், சேரன் போக்குவரத்துக் கழகத்தில் 6—1—1973 அன்று தினக்கூலியில் வேலைக்கமர்ந்து பின்னர் 1—2—1975 முதல் மாதாந்திர சம்பளத்தில் பணிபுரிந்து வந்தார்.

30—8—1978 அன்று காலை 5-45 மணிக்கு திரு. விசுவநாதன் பலத்த தீக் காயங்களுடன் உடுமலைப்பேட்டை அரசு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட பொழுது அன்று காலை 5 மணியளவில் தானே தீ வைத்துக் கொண்டதாக அங்கிருந்த மருத்துவரிடம் திரு. விசுவநாதன் கூறியதாகவும் அதுபற்றிய குறிப்பினை மருத்துவமனை விபத்து அறிக்கையில் (Hospital Accident Report) அம்மருத்துவர் குறித்துள்ளதாகவும் கோவை மாவட்ட ஆட்சித் தலைவரும் மாநிலக் காவல் துறை தலைமை அதிகாரியும் அறிவித்துள்ளனர்.

பின்னர் காலை 6-35 மணிக்கு மேஜிஸ்டிரேட்டின் முன்னால் திரு. விசுவநாதன் கொடுத்த மரண வாக்கு மூலத்தில், சேரன் போக்குவரத்துக் கழக உடுமலைப்பேட்டை கிளையைச் சார்ந்த டிராபிக் கன்ட்ரோலர் திரு. குமாரவேலு என்பவர் அதே கிளையின்

மேலாளரான ( Branch Manager ) திரு. கன்னையன் என்பவரின் தூண்டுதலின் பேரில் தன் மீது பெட்ரோலை ஊற்றி தீ வைத்தாகக் கூறியுள்ளார் என்று கோவை மாவட்ட ஆட்சித் தலைவரும், கோவை மாவட்ட காவல் துறை அதிகாரி அவர்களும், மாநிலக் காவல் துறை தலைமை அதிகாரி அவர்களும் அறிவித்துள்ளனர். இந்நிலையில் வழக்கின் புலன் விசாரணை மிக்க எச்சரிக்கையுடனும் தீவிரமாகவும் நடத்தப்பட்டு வருகிறது.

இச்சம்பவம் 30—8—1978 அன்று காலை சுமார் 5-00 மணிக்கு நடந்தது. தீவிர சிகிச்சை அளித்தும் பலனளிக்காமல் அன்று இரவு 8-10 மணிக்கு திரு. விசுவநாதன் காலமானார்.

இ.பி.கோ. பிரிவு 307-ன் கீழ் காவல்துறையினர் ஒரு வழக்கைப் பதிவு செய்து பின்னர் திரு. விசுவநாதன் இறந்த பிறகு இ.பி.கோ. பிரிவு 302-க்கு அதனை மாற்றி தீவிர விசாரணை செய்து வருகின்றனர். திரு. குமாரவேலு சேரன் போக்குவரத்துக்கழகத்தால் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். தலைமறைவாகவுள்ள திரு. கன்னையனை காவல் துறை தேடி வருகிறது. மேற்கொண்டு புலன் விசாரணை கவனமாகவும் தீவிரமாகவும் காவல் துறையால் நடத்தப்பட்டு வருகிறது.

உடுமலைப்பேட்டையில் அமைதி நிலவச் செய்ய கோவை மாவட்ட ஆட்சித் தலைவரால் அனைத்துக் கட்சிக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இப்போது அங்கு அமைதி நிலவுகிறது.

திரு. விசுவநாதனின் குடும்பத்திற்கு ரூ. 10,000 நிதியுதவி அளிக்க ஆணையிடப்பட்டுள்ளது. புலன் விசாரணை முடிந்தப்பின், மேற்கொண்டு சட்டப்படி தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, டிரைவர் விசுவநாதன் பெட்ரோல் ஊற்றி எரிக்கப்பட்டார் என்று சொல்லப்பட்ட விஷயம் அந்த சேரன் போக்குவரத்து நிர்வாகத்தினுடைய மேனேஜிங் டைரக்டர் கீழ் இருக்கும்படியான பல உத்தியோகஸ்



தர்கள் சம்பந்தப்படாமல் அந்தக் கிளையில் இது நடந்திருக்க முடியாது. அந்தக் கிளை மேனேஜிங் டைரக்டரும், டிராபிக் கண்ட்ரோலரும் மட்டும் செய்திருக்க முடியாது. அதற்கான காரணம் இருக்கிறது. ஒன்று விஸ்வநாதன் அந்த சேரன் டிரான்ஸ்போர்ட்டில் உள்ள ஒரு கிளையின் சங்கத்தைச் சேர்ந்தவர். அந்த அதிகாரிகளே தொழிசங்கம் என்ற பேரால் ஒரு சங்கம் அமைத்து வைத்திருக்கிறார்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ரமணி, தயவு செய்து சுருக்கமாக கேட்க வேண்டும். அதை அவர்கள் மேலும் விளக்கத் தேவை இல்லை.

இரண்டாவது, காவல் துறையினர் அதைப் புலன் விசாரணை செய்து கொண்டிருக்கிறார்கள். வழக்குமன்றத்திலே போட இருக்கிறார்கள். ஆகவே அதிலே அதிகமாக நுழையாமல், கேள்வியைக் கேட்க வேண்டும்.

**திரு. கு. ரமணி :** நான் அதிகம் நுழையவில்லை. விசாரணையில் இருப்பதைக் கருத்தில் கொண்டுதான் பேசுகிறேன். அந்தப் பணிமனையில் ஒரே ஒரு தொழிற்சங்கம்தான் இருக்கிறது. அதிகாரிகளே அந்த தொழிற்சங்கத்திற்கு ஒரு பேனல் தயார் செய்து 29-ந் தேதி தேர்தல் நடத்தப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த விசுவநாதன் தான் போட்டியிடப் கூப்பிட்டு வாபஸ் வாங்கும்படி சொல்லியிருக்கிறார்கள். அவர் போவதாக நோட்டீஸ் போட்டிருக்கிறார். அதிகாரிகள் அவரைக் மறுக்கிறார். அவரை இட மாற்றம் செய்கிறார்கள். அந்த அதிகாரிகள் கொடுத்தபேனல் வெற்றி பெறுகிறது. அதை ஆட்சேபித்து விசுவநாதன் அவர்கள் கோவைக்குச் சென்று நிர்வாக மேனேஜரையும், ஜெனரல் மேனேஜரையும், மற்ற அதிகாரி அதற்குப் பிறகு அவர் திரும்ப வந்து விட்டார் . . .

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் :

The matter is *Sub Judice.*

**திரு. ரா. உமாநாத் :** இதிலே என்ன சப்ஜுடிஸ் இருக்கிறது. இன்வெஸ்டிகேஷனில்தான் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உமாநாத்துக்கும், ரமணிக்கும் நான் சொல்லவேண்டியதில்லை. இந்த கொலை செய்யப்பட்ட வழக்கு காவல் சிறையினரால் புலன் விசாரணை செய்து-நடவடிக்கை எடுக்கவிருக்கிறார்கள். ஆனால் அவர் மொத்த வரலாற்றையும் சொல்லுகிறார். தயவு செய்து அதை நான் அனுமதிக்க முடியாது. அவர் என்னென்ன காரணங்களுக்காக, எப்படி நடந்தது என்பதை வைத்துப் பேசினால் அதை நான் எப்படி அனுமதிப்பது?

**திரு. என். சங்கரய்யா :** திரு ரமணி அவர்கள், மேனேஜிங் டைரக்டரைப் பார்த்தார் என்று சொன்னது எப்படி விசாரணைக் குறுக்கே நிற்கும். வழக்கு கொலை வழக்கு அங்கே நடந்திருக்கக் கூடிய வேறு விஷயங்களைப் பற்றி சொல்லுகிறார்கள். ஆகவே அரசாங்கத்தினுடைய நிலையிலே இருந்து (குறுக்கீடு) அதற்கு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி விட்டால் பிரச்சினை தீர்ந்து விடும்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** தலைவர் அவர்களே, நடந்தது கொலையா அல்லது தற்கொலையா என்பதைப் பற்றி யாருக்கும் தெரியாது. ஆகையினாலேதான் தெரிவித்துக் கொள்கிறேன், இப்போதே முடிவெடுத்து அதைப்பற்றி பேசாமல் இருப்பது நல்லது, என்று கருதுகிறேன். அதற்குப் பிறகு ரமணி அவர்கள் பேசும்போது அதைப்பற்றிப் பேசவில்லை என்று சொல்லிக் கொண்டு சுற்றிச் சுற்றி உள்ளே நுழைந்தபிறகுதான் தாங்கள் குறுக்கிட்டீர்கள். ரமணி அவர்களுடைய பேச்சுரிமையைத் தடுப்பதற்கோ, அல்லது குறைப்பதற்கோ இங்கே சபாநாயகர் இல்லை, என்று தெரிவித்துக் கொண்டு அந்த அளவில் ரமணி அவர்கள் பேசுவார்களானால் வழக்குக்குச் சாதகமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இங்கே நடைபெறப் போவது பொதுவிவாதம். அந்தனைக் கட்சிக்காரர்களும் கேட்டுக் கொண்டதற்கிணங்கத்தான் நான் அனுமதித்திருக்கிறேன். அந்த விவாதத்தில் உங்கள் கட்சிக்காரர்கள் பேசுவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆனால் இதிலே ஓரிரு கேள்விகளை





கேட்கலாமே தவிர, ஓரிரு விவரங்களைக் கேட்கலாமே தவிர, மேற்கொண்டு புது விவரங்களைச் சொல்லக் கூடாது சுருக்கமாக இருக்கும்படி கேள்விகளைக் கேளுங்கள்.

**திரு. கு. ரமணி :** கோவையில் இருந்து விசுவநாதன் வந்த பிறகு டேட்டியில் இல்லை. ஆனால் டேட்டிக்கு வரவேண்டும் என்று பணிக்கப்படுகிறார் . . .

Hon. Thiru G. R. EDMUND : The Hon. Member s putting for in some facts.

Thiru R. UMANATH : It s not sub-judice.

(முற்பகல் 10-40)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. உமாநாத், நான் சப்-ஜுடிஸ் என்பதற்குக் கூட போகவில்லை. ஆனால் அவர் பேசுகின்ற பேச்சு சுருக்கமாக, மேலும் தகவலைக் கேட்பதாக இல்லை. அவர் வரலாற்றைச் சொல்லிக் கொண்டு போவது போல் போகிறார்கள். சுருக்கமாக மேற்கொண்டு விளக்கம் என்ன தேவை என்று மட்டும் கேளுங்கள். அவர் வேலையை விட்டுப் போனார், சங்கம் அமைத்தார் என்பது கேள்வி அல்ல. விளக்கம் மட்டும் கேளுங்கள்.

**திரு. கு. ரமணி :** இந்த நிலையில், அந்த நடவடிக்கைக்குப் பொறுப்பு ஏற்க வேண்டிய சேரன் நிர்வாகிகள், அதன் ஜெனரல் மேனேஜர், டைரக்டர் ஆகியோரை சஸ்பெண்டில் வைத்து. அந்த விசாரணையைச் சீரான முறையில் நடத்துவதற்கு, காவல் துறை சரியான வகையில் செயல்படுவதற்கு கண்டிப்பாக வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டும். அதை அரசு செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் கூறியது போல் திரு. விஸ்வநாதன் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அந்தத் தேர்தலில் போட்டியிட்டார். ஆனால் அதற்கும் இந்த நிகழ்ச்சிக்கும் சம்பந்தம் உண்டா என்பதை காவல் துறை புலன் ஆய்வு செய்து வருகின்றனர். ஆகவே, அதில் சம்பந்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ஓ. சுப்பிரமணியன் :** பேரவைத் தலைவரவர்களே, உடுமலைப்பேட்டையில் நடந்த நிகழ்ச்சி மிகவும் கொடுமை யானது. மரண வாக்குமூலத்தில் கூட இன்னின்னார் பெட்ரோல் ஊற்றி கொளுத்தினார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அன்றையதினம் அந்த இடத்திற்குச் சென்று இருந்த அமைச்சர் மாண்புமிகு வீரப்பன் அவர்களிடத்தில் கூட பொதுமக்கள் எல்லாம் சூழ்ந்து கொண்டு கேட்டு இருக்கிறார்கள். இப்படி ஒரு கொடுமையான சம்பவம் இங்கே நடந்து இருக்கிறது என்று. அப்போது அவரும் சொல்லியிருக்கிறார், உடுமலைப்பேட்டையில் நடந்த கொடுமையான சம்பவம் குறித்து விரைவில் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும், விசாரணையில் இருந்து யாரும் தப்ப முடியாது என்று. நேற்றைக்கு இது குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானம் ஒன்றைக்கொடுத்து இருந்தேன். அதை இன்றைக்கு கவன ஈர்ப்புத் தீர்மானமாக அனுமதித்து இருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் மேற்கொண்டு என்ன தகவல் பெற விரும்புகிறீர்கள் என்பதைப் பற்றி மட்டும் சொல்லுங்கள். உங்களுக்கு அதற்கு நான் சந்தர்ப்பம் கொடுத்து இருக்கிறேன்.

**திரு. ஓ. சுப்பிரமணியன் :** அமைச்சர் அவர்கள் நேரடியாக விசாரித்து இருக்கிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொல்கிறபோது அப்படி இறந்து போனவர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தவர் என்று சொல்லி ஏதோ அந்தக் கட்சியைச் சேர்ந்தவர் அவர், மற்றவர்களுக்கு உரிமை இல்லாத மாதிரி ஒரு தோற்றம் உண்டாக்கினால், இவ்வளவு அவசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னைகளை நாங்கள் எழுப்புகிறபோது, எந்த விஷயமாக இருந்தாலும் சட்டென்று என்று சொல்லி, நிறுத்திவிட்டு, கவன ஈர்ப்புத் தீர்மானமாக அனுமதித்து இருக்கிறீர்கள். (மணியடிக்கப்பட்டது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகச் சேர்ந்த நண்பருக்கு உண்மையிலேயே அனுதாபம் தெரிவித்த-





தற்கு மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் ஏற்கெனவே திரு. ரமணி அவர்கள் சொன்னபோது, தொழிற்சங்கத் தேர்தலில் அவர் போட்டி யிட்டார், கழகத்தின் சார்பில் போட்டியிட்டார் என்று சொன்னதன் காரணத்தால் தான் அவ்வாறு குறிப்பிட்டேன். சம்பந்தப்பட்டவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. அம்பிகாபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, திரு. விஸ்வநாதன், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சேர்ந்தவராக இருக்கட்டும். அவன் உழைக்கின்ற வர்க்கத்தைச் சேர்ந்தவன். அவன் ஓர்க்கிங் கிளாஸ் என்பதால் நான் மிகவும் வேகமாக இருக்கிறேன். பாயிண்ட் என்ன வென்றால் முக்கியமாக அந்த நிர்வாகம் தொழிலாளர்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது என்பது உண்மை. தோழர் ரமணி அவர்கள் சொன்னார்கள். தேர்தலில் விஸ்வநாதன் நின்றான், அங்கே தொழிற்சங்க உரிமைகள் மறுக்கப்பட்டு உள்ளன. விஸ்வநாதன் மரண வாக்குமூலத்திலேயே சொல்லியிருக்கிறான், அந்த நிர்வாகத்தின் தூண்டுதலின் பேரில் தான் ஒரு சிலர் என் மீது எண்ணெய் ஊற்றி கொளுத்தினார்கள் என்று சொல்லி இருக்கிறார். மரண வாக்குமூலம் தான் உலகத்திலே உயர்ந்த வாக்குமூலம் . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் சொன்னதை சொன்னதை எல்லோரும் சொல்லியாகிவிட்டது. புதிய தகவல் என்ன தேவை என்று சொல்லுங்கள். ஒவ்வொருவரும் அதையே சொல்லிக் கொண்டு இருக்கிறீர்கள்.

**திரு. மு. அம்பிகாபதி :** மரண வாக்குமூலம் தான் உலகத்தி லேயே உயர்ந்த வாக்குமூலம், ஆஸ்பிடல் ரிப்போர்ட் ஈஸ் நாட் மோஸ்ட் இம்பார்ட்டெண்ட். மேஜிஸ்டிரேட் முன்னால் கொடுக்கப் பட்ட மரண வாக்குமூலம் தான் மோஸ்ட் இம்பார்ட்டெண்ட். ஆகவே, இம்மீடியட்டாக அந்த மேனேஜிங் டைரக்டர், ப்ராஞ்ச் மேனேஜர் ஆகியோரை சஸ்பெண்ட் செய்து விசாரணை செய்யுங்கள். நோ புராஸ்பர் ஒரு சிறிய தவறு கன்டக்டர் செய்தால் உடனே சஸ்பெண்ட் செய்கிறீர்கள். ஆனால் . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சுருக்கமாகக் கேளுங்கள் நோ லெக்சர். தயவு செய்து கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. மு. அம்பிகாபதி :** அந்த நிர்வாகத்தைச் சேர்ந்த மேனேஜிங் டைரக்டர், ப்ராஞ்ச் மேனேஜர் ஆகியோரை உடனடியாக சஸ்பென்ட் செய்யவேண்டும். நீதி விசாரணைக்கு உத்தரவிடவேண்டும். உடனடியாக விசாரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தப்பிக்காத வகையில் பாத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** நான் ஏற்கனவே கூறினேன். தீவிர புலன் ஆய்வு நடந்து வருகிறது. புலன் ஆய்வுக்குப் பிறகு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் யாராக இருந்தாலும் தப்பிக்கமாட்டார்கள் என்று கூறினேன். அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

* **திரு. பொ. உத்திராபாதி:** தலைவரவர்களே, விஸ்வநாதன் என்ற தொழிலாளி உயிரொடு எரிக்கப்பட்டிருக்கிறாரா அல்லது அவரே மண்ணெண்ணெயை ஊற்றிக் கொளுத்திக்கொண்டாரா என்ற சந்தேகத்தை நேற்றையதினம் இந்த மன்றத்தல் தெரிவித்தார்கள். இதிலிருந்து பார்க்கும்போது இநத வழககு சம்பந்தமாக உறுதியான நடவடிக்கை எடுக்கப்படுமா என்ற சந்தேகம் இருக்கிறது. நாங்கள் கூறுவதெல்லாம எநத அளவுக்கு காவல் துறையினர் நடவடிககை எடுத்தாலும், சம்பந்தப்பட்ட மானேஜர் அவர்களை சஸ்பென்ட் செய்வதற்குப் பதிலாக பெரிய அதிகாரிகளை கைது செய்து சிறையில் தள்ளிவிட்டு விசாரணை நடத்தினால்தான் உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியும், உண்மையான குற்றவாளிக்குத் தண்டனை கிடைக்கும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எந்த அளவுக்கு அக்கரை இருக்கிறதோ அந்த அளவுக்கு அரசுக்கும் அக்கரை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, சேரன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த விஸ்வநாதன்



என்ற டிரைவர் பட்டப்பகலில் பெட்ரோல் ஊற்றி கொளுத்தப் பட்ட நிகழ்ச்சி கண்டிக்கத்தக்கது. அதற்கான காரணம் அவர் தேர்தல் நேரத்தில் ஒரு குறிப்பிட்ட சிலரை ஆதரிக்க மறுத்த தாலும் அவரே தேர்தலுக்கு நிற்க முயற்சி செய்து, அண்ணா தி.மு.க. வுக்கு ஆதரவு தேடியதாலும், அண்ணா தி.மு.க. தொழிற் சங்கத்திற்கு அவர் அதிகச் செல்வாக்கைத் தேடி தந்துகொண் டிருக்கிறார் என்பதாலும் அரசியல் காழ்ப்பு உணர்ச்சியின் காரணமாக * * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தப் பிரச்சனையில் வழக்கு மன்றத்தில் இருப்பதால் * * * என்று சொன்னதை தயவுசெய்து தாங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம்:** எனக்கு அப்படித் தகவல் வந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் திரும்பப் பெற்றுக் கொள்கிறீர்களா இல்லையா? அவர்களே திரும்பப் பெற்றுக் கொள்ளாததால், அவர்கள் * * * என்று கூறிய வாசகத்தை சபைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

**திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம்:** சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நோ பாயின்ட் ஆஃப் ஆர்டர். நீங்கள் தயவுசெய்து உட்காருங்கள். திரு. சுப்பு, நீங்கள் பேசுங்கள். (திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம் பாயின்ட் ஆஃப் ஆர்டர் கேட்டு, நின்றுகொண்டிருந்தார்).

**திரு. க. சுப்பு :** தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் நின்று கொண்டே இருக்கிறார்கள். பாயிண்ட் ஆஃப் ஆர்டர் கேட்பது உறுப்பினர்களின் உரிமை; கேட்க உரிமை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்பு அவர்களே, இது விளையாட்டு அல்ல. உங்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலை வேறு. உங்களுக்கு கட்டுப்பாடு இல்லாமல் இருந்து பழக்கம்போல் இருக்

* * * மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைப் படி அகற்றப்பெற்றது.

கிறது. திரு. சுப்பு அவர்களே, இந்த அவையை உங்களுக்குச் சொந்தமானதாகக் கருத வேண்டாம். உங்களுடைய செய்கை சரியல்ல. நான் மனம் புண்பட்டு, வேதனையோடு சொல்கிறேன். உங்களுக்கு ஏளனமாக இருக்கிறது, சிரிப்பாக இருக்கிறது. நீங்கள் அப்படியே இருந்து பழக்கப்பட்டவராக இருக்கலாம். ஆனால் இங்கே என்ன நடக்கிறது என்று மக்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். பேரவைத் தலைவரிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்ற பக்குவத்தை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். நீங்கள் கடைசி ஆயுத்தைப் பயன்படுத்துவதாக இருந்தால் நானும் கடைசி ஆயுதத்தைப் பயன்படுத்த முடியும்; பயன் படுத்தவும் தெரியும்.

**திரு. க. சுப்பு:** அங்கத்தினர்களின் உரிமையை நீங்கள்தான் பாதுகாக்க வேண்டும்.

**திரு. மு. கருணாநிதி:** கடைசி ஆயுதத்தை நீங்கள் பயன் படுத்துவதாக இருந்தால், எனக்கும் கடைசி ஆயுதத்தைப் பயன்படுத்தத் தெரியும் என்று பேரவைத் தலைவர் சொல்வது உறுப்பினர்களை மிரட்டுவது போல் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு எல்லாம் தெரியும். எதிர்க்கட்சித் தலைவர் ஒத்துழைக்கவில்லை என்றால் சபையை எப்படி நான் ஒழுங்காக நடத்திச் செல்வது. இந்தமாதிரி இந்தச் சபையில் எப்போதாவது நடந்திருக்கிறதா? நானும் இங்கே இருந்திருக்கிறேன்; நீங்களும் இருந்திருக்கிறீர்கள். இப்படி கேலியும் கிண்டலுமாக எப்போதாவது நடந்திருக்கிறதா? இங்கே நாடகமாடிக் கொண்டிருக்கிறார்கள்; நாடகம்தான் நடந்துகொண்டிருக்கிறது. சபையிலே கேலி செய்து, கிண்டல் செய்வது வேண்டுமென்றால் அவருக்கு விருப்பமாக இருக்கலாம். ஆனால் இந்த அவையில் அதையெல்லாம் ஏற்றுக்கொள்ள நான் தயாராக இல்லை. (திரு. மு. கருணாநிதி எழுந்தார்).

**திரு. துரை முருகன்:** அது என்ன கடைசி ஆயுதம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் தலைவர் நின்றுகொண்டிருக்கிறார். நீங்கள் எழுந்து பேசுகிறீர்கள். இது என்ன கட்டுப்பாடோ தெரியவில்லை. உங்களுக்குக் கட்டுப்பாடு வேண்டும்.





**திரு. மு. கருணாநிதி:** அவையின் மரபையும் அமைதியையும் காப்பாற்றி வருவதைப்போலவும் ஏதோ திராவிட முன்னேற்றக் கழகம்தான் கெடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைப் போலவும் . .

(முற்பகல் 10-50)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவருக்கு நானே சொல்கிறேன். அவரும் எனக்குத் தலைவராக இருந்தவர். நான் அவருக்குச் சொல்கிறேன். நான் என்னென்ன நடந்தது என்பதைப்பற்றி எடுத்துச் சொல்கிறேன். நீங்கள் முன்னால் இருக்கிறீர்கள். பின்னாலே நடப்பதை நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். பின்னால் அவ்வாறு நடப்பது அவைக்கு அழகல்ல.

**திரு. மு. கருணாநிதி:** தலைவரவர்களே, நானும் பின்னால் திரும்பிப் பார்த்துக்கொண்டுதான் இருந்தேன். இப்போது ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் பாய்ண்ட் ஆப் ஆர்டர், பாய்ண்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லிக் கொண்டிருந்தார்களே தவிர . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையில் இப்படிப் பேசுவது அழகல்ல. அவர் சொன்ன வார்த்தைகள் கலைஞருக்கே தெரியும். இப்படி எல்லாம் அவையிலே பேசுவது சரியா என்று கலைஞர் அவர்களே சொல்லட்டும். முன்னாலே இப்படி நடந்தது இல்லை.

**திரு. மு. கருணாநிதி:** பேரவைத் தலைவரவர்களே, இப்படி சபையிலே பேசப்பட்டதில்லை என்றும் இப்படி நடந்ததில்லை என்றும் சொன்னீர்கள். தாங்கள் உறுப்பினராக இருந்தபோது என்ன நடந்தது என்பதை நம்முடைய பழைய சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகளை எடுத்துப் பார்த்தால் நன்றாகத் தெரியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நான் குறுக்கிடுவதற்காகத் தயவுசெய்து மன்னிக்க வேண்டும். நான் எவ்வளவு தூரம் பேசியிருந்தாலும் வார்த்தைகள் தடம் புரண்டிருக்காது. இப்படி இங்கே நாடகம் நடிக்கின்ற வகையிலேயும் பாவம் காட்டுகின்ற வகையிலேயும் நான் நிச்சயமாகப் பேசி இருக்க மாட்டேன் என்பதைத் தெரிவித்துக்

கொள்கிறேன். சில நேரங்களில் நேராகச் சபைத் தலைவரிடம் சென்று ஏதேனும் தவறாகச் சொல்லப்பட்டு இருக்குமேயானால் வருத்தப்படுவதாகச் சொல்லி இருக்கிறேன். ஆனால் இதுபோல் நடந்துகொள்வது என்பது எங்கள் வரலாற்றிலேயே இல்லை. இந்த மாதிரி செயல்கள் அண்ணா அவர்கள், புரட்சித் தலைவரவர்கள் பரம்பரைக்கே கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. கருணாநிதி:** சபாநாயகர் கட்சிக்காரராகவே மாறி விட்டார் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த நாட்டின் நாலரைக் கோடி மக்களின் தலைவராக இருக்கின்ற புரட்சித் தலைவரைப் பின்பற்றுகிறவர்கள் யாருக்குமே இந்தக் குணம் கிடையாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. கருணாநிதி:** தலைவரவர்களே, புலவர் கோவிந்தன் அவர்கள் இங்கே தலைவராக இருந்தபொழுது . . . .

(கூச்சல் குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் பேசுகிற போது எல்லோரும் அமைதியாக இருக்க வேண்டும். எதிர்க் கட்சித் தலைவருடன் நான் பேசிக்கொண்டிருப்பது எதிர்காலத்திலே நல்லபடியாக அவை நிகழ்ச்சிகள் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். ஆகவே எல்லோரும் அமைதியாக இருக்க வேண்டும்.

**திரு. மு. கருணாநிதி:** புலவர் கோவிந்தன் அவர்கள் இங்கே தலைவராக இருந்தபோது எதிர்க்கட்சியிலே இருந்தவர்கள் அரை மணி நேரத்திற்கும் மேலாக என்னவெல்லாம் இந்த அவையில் கூறினார்கள். இருந்தாலும் சில நேரங்களில் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசிக்கொண்டு இருக்கும்போது நான் குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். நான் சில நேரங்களில் வேகமாக வாதிட்டு இருக்கலாம். ஆனால் பேரவைத் தலைவர் முன்னாலே வாதிப்பதும், தலைவரை எதிர்த்துப் பேசுவதுமான குணம் உடையவன் நான் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. துரை முருகன்:** தலைவரவர்களே, நீங்கள் என்னவெல்லாம் எப்படி எப்படி எல்லாம் பேசி இருக்கிறீர்கள் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் பேசிக் கொண்டிருக்கிறாரே, தலைவர் பேசும்போது எதுவும் பேசலாமா?

(அப்போது திரு. க. சுப்பு பேச எழுந்தார்)

குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நானும் உங்களோடு இருந்தவன்தான். பேரவைத் தலைவரைப் பார்த்து உட்கார்ந்துகொண்டு பேசுவது போன்ற நடவடிக்கைகளில் வேறு எந்தக் கட்சிக்காரர்களும் ஈடுபடவில்லை. இவ்வாறு இருப்பதை நான் உங்களிடம்தான் சொல்ல வேண்டும். எனக்கு ஒன்றும் இல்லை. அவையின் மரபு பாதுகாக்கப்பட வேண்டும். ஆகவே அவையின் மரபைக் காப்பதற்கு ஒத்துழையுங்கள். தயவுசெய்து இதை ஒரு கவுரவம் உள்ள இடமாக நீங்கள் நினைக்க வேண்டும். எனக்கு மரியாதை தராவிட்டாலும் நான் இருக்கின்ற பேரவைத் தலைவரின் இருக்கைக்கு மரியாதை கொடுத்து மரபைக் காப்பாற்றுங்கள், அது போதும்.

**திரு. மு. கருணாநிதி:** ஒத்துழையுங்கள், ஆதரவு கொடுங்கள், கௌரவத்தைக் காப்பாற்றுங்கள் என்று எங்களுக்கே சொல்லி ஏதோ நாங்கள்தான் ஒத்துழைக்க மறுப்பதைப்போலவும், கௌரவத்தைக் காப்பாற்ற மறுப்பது போலவும் வேண்டுமென்றே ஒரு பாரபட்சமான தீர்ப்பை தாங்கள் அளிப்பது உள்ளபடியே முறையல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொன்னது வேண்டுகோள். குறிப்பாக உங்களிடம் கேட்டுக்கொள்வதற்குக் காரணம் எனக்கு ஏற்படுகிற தொல்லைகள் என்று எடுத்துச் சொன்னேன். ஆனால் இன்னும் பாருங்கள். இப்போது வேண்டுமானால் விட்டு விடுகிறேன். இனிமேலாவது பாருங்கள். தாங்கள் பேசும் போதோ அல்லது பேராசிரியர் பேசும்போதோ அல்லது மற்றவர்கள் பேசும்போதோ எந்த உறுப்பினராக இருந்தாலும் தவறாக நடந்துகொண்டால் நான் கண்டிக்காமல் இல்லை. உட்கார்ந்து கொண்டு கிண்டல் செய்வது, சிரிப்பது, கேட்டால் எழுந்து நின்று பேசுவது இவை நல்லதல்ல.

திரு. க. சுப்பு: * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து பிரச்னைக்கு வருகிறீர்களா இல்லையா?

திரு. துரை முருகன்: * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுப்பு பேசும்போது திரு. துரைமுருகனுக்கு வேலை இல்லை. இதுதான் நியாயமான பேச்சா என்று கேட்கிறேன். திரு. சுப்பு சொன்னவற்றை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. க. சுப்பு: உடுமலைப்பேட்டை சம்பவத்திற்கு ஏதோ போட்டிதான் காரணம் என்று சொல்லப்பட்டது. டாக்டரின் ரிப்போர்ட் 'ஜூடிஷியல் கன்பஷனுக்கு' விரோதமாக இருக்கிறது. * *

* * ஒரு 'ஜூடிஷியல் விசாரணை தேவை. அதற்கு இந்த அரசாங்கம் தயாரா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: * * என்று அஞ்சுகிறேன்.

(திரு. க. சுப்பு எழுந்தார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோருக்கும் ஒரு கேள்விதான் உண்டு. நிறைய உறுப்பினர்கள் இருப்பதால் ஒவ்வொருவருக்கும் ஒரு கேள்விதான் அனுமதிக்க முடியும்.

திரு. க. சுப்பு: * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோருக்கும் ஒரு கேள்விதான், திரு. சுப்பு சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





(2) அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(ஆ) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

5. அரசினர் சட்ட முன்வடிவு.

தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகபடுத்தப் பெற்றிருக்கிறது.

(முற்பகல் 11-00)

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. மு. செல்வராஜ் தலைமை).

## (6) ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்: விவாதம்— தொடர்ச்சி

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே,

நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:—

இறுதியில் கீழ்க்காணும் திருத்தங்களைச் சேர்த்துக் கொள்ளவும்:—

(1) நியாயமான நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டு வந்து உழுபவர்களுக்கு நிலத்தைச் சொந்தமாக்க வேண்டும் என்பது பற்றியும்;

(2) தமிழ்நாட்டில் மூடியுள்ள தொழிற்சாலைகள் விரைந்து திறக்கப்படுவது அல்லது அரசே ஏற்று நடத்துவது பற்றியும்;

(3) வேலையில்லாத நபர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க தெளிவான கொள்கை அறிவிப்போ, நிவாரணமோ இல்லாத நிலை பற்றியும்;

(4) விவசாய விளைபொருள்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்க உத்திரவாதமான கொள்முதல் கொள்கை அறிவிப்பு பற்றியும்;

(5) 1385-1386 பசலிகளில் ஏற்பட்ட வறட்சிக்குத் தகுந்த நிவாரணம் வழங்காத நிலை பற்றியும்;

(6) 1387 ஆம் பசலியில் புயல் பாதிப்பு பகுதிகளில் கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்யவேண்டியது பற்றியும்;

(7) 1388 ஆம் பசலிக்குப் புதிய கூட்டுறவுக் கடன்கள் வழங்கப்பட தெளிவான உத்திரவாதம் அளிக்காத நிலைபற்றியும்.

(8) என்.ஜி.ஓ. பிரச்சினை குறித்த மூன்றாவது ஊதியக்குழு அறிக்கையை உடன் அறிவிக்க வேண்டியது பற்றியும்;

(9) கைத்தறி நெசவாளர்களுக்கு வேலை உத்திரவாதம் அளிப்பது பற்றியும்;

(10) ஆசிரியர்களின் வேலை பாதுகாப்பு பற்றியும்;

(11) மீனவர்களின் மேம்பாடு பற்றியும் ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத் தக்கது.

திருத்தம் வழிமொழியப்பெற்றது.



*திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரைமீது இந்த அவையில் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். ஆளுநர் அவர்கள் தமது உரையில் 'எழுத்துச் சுதந்திரம் பேச்சு சுதந்திரம் இவற்றைப் பெற்றிருக்கிறோம், இவற்றுக்கு ஊறு நேராவண்ணம் ஒவ்வொருவரும் செயல்பட வேண்டும் என்பதை நாம் மறந்து விடலாகாது' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இன்றையதினம் நாட்டில் என்ன நடைபெறுகிறது என்று பார்க்கிறபோது இந்த அவையில் இதற்கு முன்னால் பல தடவைகள் இவைகள் பற்றிச் சொல்லப்பட்டிருப்பதை நான் கேட்டிருக்கிறேன். சில செய்தித் தாள்கள் குறிப்பாக சென்னையிலிருந்து வருகின்ற செய்தித் தாள்கள் மாற்றுக் கட்சித் தலைவர்களை, மாற்றுக்கட்சித் தொண்டர்களை தாக்குவதற்காகவும், இழிவாகவும் நாராச நடையிலும் தங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்ற சுதந்திரத்தைப் பயன்படுத்தி சுதந்திரத்திற்காக பாடுபட்டவர்களை எல்லாம் மறந்துவிட்டு, தாக்குவதற்காகவும், நாராச நடையிலும் எழுதி வருவதை நாம் காண்கின்றோம்.

நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள்கூட என்னுடைய பேச்சின் போது குறுக்கிட்டு அன்றையதினம் எடுத்துச் சொன்னார்கள். தவறு செய்கின்றவர்கள் எந்தக் கட்சியில் இருந்தாலும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க எங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் தயாராக இருப்பார்கள் என்பதைச் சுட்டிக் காட்டினார்கள். ஆனால் நடைமுறையில் பார்க்கும்போது இப்படிப்பட்டவர்களின் மீது நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, முன்னால் இருந்ததை விட அதிகமாகிக் கொண்டு வருகிறது என்பதைத்தான் காணமுடிகிறது. இன்று காலையில்கூட ஒரு செய்தி வந்திருக்கிறது. மிகப் பெரிய பத்திரிகை. அதனுடைய பெயரைக்கூடச் சொல்வதற்கு நான் நிச்சயமாக அருகதை உள்ளவன் அல்ல என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எங்கள் கட்சித் தலைவரைப் பற்றிக் குறிப்பிட்டு 'சட்டசபையில் கருணாநிதி காலித்தனம்' என்று போட்டிருப்பதைப் பார்த்தேன். இப்படியெல்லாம் போடுவதை மதிப்பிற்குரிய புரட்சித் தலைவர் அவர்கள் அனுமதிக்கமாட்டார்கள் என்பதை அவரை ஓரளவுக்கு அறிந்திருக்கக்கூடியவன் என்ற முறையில் நான் நன்றாக அறிவேன்.

அதேபோன்று மேடைப் பேச்சு எந்த அளவுக்கு அமைந்திருக்கின்றது என்பதைப் பார்க்கும்போது, பெரிய பேச்சாளர் என்று சொல்லப்படுகின்ற ஒருவர் சென்னையிலிருந்து மாயூரத்திற்கு வருகிறார். என்னுடைய தொகுதியில் மாயூரத்தில் பேசும்போது சொல்லுகிறார், ஒரு சினிமா நடிகையின் பெயரைக் குறிப்பிட்டு, நான்தான் அவரைக் கொன்று விட்டதாகப் பேசுகிறார். இதை எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில் சென்னையில் நடைபெற்றதாகவும், இந்தக் கொலைக்கு நானே முழு முதற் காரணமாக இருந்ததாகவும், நானே கொலை செய்தவன் என்றும், நானே கொலை செய்து விட்டதாகவும் அந்தக் கூட்டத்தில் பேசுகிறார்கள். பேச்சு சுதந்திரம் என்ற அடிப்படையில் இப்படியெல்லாம் பேசுவதை பார்க்கின்ற நேரத்தில், இதையெல்லாம் கட்டுப்படுத்த முடியாத அளவுக்குப் போய்க்கொண்டிருக்கிறது. இதைக் கவனித்து இப்படியெல்லாம் பேசுகின்றவர்கள் தங்களுக்கு வேண்டியவர்களாக இருந்தாலும் அவர்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, கவர்னர் அவர்களது உரையில், "விவசாயப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கும், அவைகளுக்கு நியாயமான விலை கிடைப்பதற்கும், மத்திய சர்க்காரிடத்தில் நமது அரசாங்கம் தொடர்பு கொண்டிருப்பதாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். மேதகு ஆளுநர் அவர்கள் தனது உரையில் இதற்காக மத்திய அரசோடு தொடர்பு கொண்டிருக்கிறது என்று சொல்லியிருந்தாலும் நடைமுறை என்ன என்று பார்த்தால்—எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. சுப்பு அவர்கள் பேசும்போது, கேரளாவில் 125 ரூபாய் குவிண்டால் ஒன்றுக்குக் கொடுக்கப்படுகிறது. அதையே பின்பற்றி இங்குள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசும் ஏன் கொடுக்கக் கூடாது என்று ஒரு வினாவைக் கேட்டார்கள். நான் பணிவோடு ஒன்றை சொல்லிக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது அறிவித்தார்கள், கொடுக்கப்படுகின்ற விலை கட்டுபடியாகாது என்று சொல்லப்பட்ட நேரத்தில், கொள்முதல் விலையை நிர்ணயிப்பதில் தமிழக சர்க்காரே முன் வந்து தனது சொந்தப் பொறுப்பில்—மத்திய சர்க்கார் இதை ஏற்றுக்கொள்ளாத நிலை





இருந்த போதிலும், குவிண்டால் ஒன்றுக்கு 10 ரூபாய் போனசும் ஐந்து ரூபாய் வண்டிச் சத்தம் என்றும் கொடுத்து அது நடைமுறைப்படுத்தப்பட்டது. இங்கேகூட நமது முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, அதாவது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதிகமான விலை கொடுக்க வேண்டும் என்று கேட்டபோது, இந்த அவையிலேயே வெளிப்படையாகச் சொன்னார்கள், இந்த அரசும் அதிகமான விலை கொடுக்கும் என்று. எவ்வளவு அதிகமான விலை கொடுக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டபோது, நமது முதலமைச்சர் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் நெல்லுக்கு கிடைத்துவந்த விலையைவிட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அதிகமாகக் கொடுக்கும் என்று குறிப்பிட்டார்கள். விவசாயப் பகுதிகளிலிருந்து வருகின்ற நாங்களெல்லாம் அதைக் கேட்டு மிகவும் மகிழ்ந்தோம். ஆனால் அது நடைமுறைப்படுத்தப்பட்டதா என்றால், அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதை நான் சுட்டிக் காட்டுவேன். இப்போதுகூட ஒரு கமிஷன் அமைக்கப்பட்டு விவசாய . . . .

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கிட்டப்பா அவர்கள் நெல் கொள்முதல் விலை ஏதோ திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத்திலே அதிகமாகக் கொடுத்ததென்றும், இன்றைய அரசு அதைச் செயல்படுத்தவில்லை என்பதையும் எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு கிட்டப்பா அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று நான் நினைக்கிறேன். ஏனென்று சொன்னால், திராவிட முன்னேற்றக் கழகத்தினரும், மற்றவர்களும் நெல்லினுடைய விலை நிர்ணயத்தைப்பற்றிப் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். மேலும், அவர்கள் விவசாயிகளினுடைய ஒரு பேரணியை நடத்தி, அந்தப் பேரணியின் மூலமாக மகஜரை முதல்வர் அவர்களிடத்திலே கொடுத்த நேரத்தில், 77 ரூபாய் கொள்முதல் விலை என்று நிர்ணயிக்கப்பட்ட பின்னர், திராவிட முன்னேற்றக் கழக அரசு எவ்வளவு கொடுத்ததோ, அதற்கும் மேலே நான் கொடுப்பேன் என்று எங்கள் புரட்சித் தலைவர் அவர்கள் சொல்லி, அதை 95 ரூபாயாக ஆக்கியிருக்கிறார்கள். இதை திராவிட முன்னேற்றக் கழகம் பாராட்டியிருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[1978 செப்டம்பர் 2

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தபடி, அறிவித்தார்களே தவிர, அப்படி அறிவிப்பு இருக்கிறதே தவிர, கொள்முதல் நடைமுறைப் படுத்தப்படவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே, அறிவித்தது மட்டுமல்ல கொள்முதலும் செய்திருக்கிறோம் என்பதற்கு அரசாங்கத்திடத்திலே கணக்குகள் இருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

***திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, நான் இங்கே குறிப்பிட விரும்புவது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட விலைக்கு கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளபடி, எவ்வளவு நெல் அவ்வாறு கொள்முதல் செய்யப்பட்டிருக்கின்றது என்பதை அறிவிப்பார்களேயானால், அதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

விவசாயத் தொழிலாளர்களுடைய கூலி நிர்ணயத்திற்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வர் பொறுப்பை ஏற்றிருந்த காலத்திலே கணபதியா பிள்ளை கமிஷன் ஒன்றை நியமித்தார்கள். ஆனால், நாம் எதிர்பாராத வகையிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்தார்கள். அதற்குப் பிறகு முதல்வர் பொறுப்பை ஏற்ற டாக்டர் கலைஞர் அவர்கள் அந்த கணபதியா பிள்ளை கமிஷன் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்தினார்கள். அதற்குப் பின்னாலும் சீனுவாசன் கமிஷன் அமைக்கப்பட்டு, கூலி நிர்ணயம் செய்யப்பட்டது. இப்போதுகூட புதிய அரசு ஒரு கமிஷனை நியமித்திருக்கிறது. அந்தக் கமிஷன் தங்களுடைய பணியை மேற்கொண்டு வருகின்ற நேரத்தில், மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்கள் கூலியை உயர்த்திருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். ஆனால், விவசாயத் தொழிலாளர்களுக்கு கூலி உயர்வு தருவதைப் பொறுத்தவரையில் திராவிட முன்னேற்றக் கழகம் நிச்சயமாக மற்றவர்களுக்குச் சளைத்தவர்கள் அல்ல இளைத்த இயக்கமில்லை என்பதை நான் சுட்டிக்காட்டி, அதே நேரத்தில் சாதாரண விவசாயிகள், மிகவும் எளிய நிலையிலே உள்ளவர்கள், தங்களுடைய நெல்லுக்கு உரிய, போதுமான பணம் கிடைக்காத காரணத்தால், கிராமங்களிலே ஆங்காங்கே இருப்பவர்கள் இந்த கூலி நிர்ணய அடிப்படையிலே மிகவும் சங்கடப்படுகிறார்கள்



1978 செப்டம்பர் 2] [திரு. என். கிட்டப்பா]

என்பதை நான் இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அவர்கள் நிலைகளையெல்லாம் ஆராய்ந்து, அவர்கள் கோரிக்கைகளையெல்லாம் செயல்முறைக்கு நிறைவேற்றுவதற்கு நியாயமான விலையை அவர்களுக்கு அதிகரித்துத் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு பிரச்னை மிகவும் முக்கியமானதாகும். மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த நேரத்தில், 'உழுபவனுக்கே நிலம் சொந்தமாக வேண்டும்' என்ற சட்டத்தை இந்த அவையில் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் கொண்டு வந்தது. மத்திய சர்க்காரில் உள்ளவர்கள் மாறான கருத்து காரணமாக, அது நடைமுறைப்படுத்தப்படாமல் போய் விட்டது என்பதை இந்த மன்றத்திலே உள்ள உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். சோஷலிச கருத்து பேசக்கூடியவர்களாக இருந்தாலும் சரி, கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்தவர்களானாலும் சரி, இந்தக் கருத்திலே திராவிட முன்னேற்றக் கழக கருத்திற்கு மாறுபட்ட எண்ணம் உள்ளவர்கள் அல்ல. ஆகவே, இந்தக் கருத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு தீவிரமான இயக்கம் என்பதை நான் மீண்டும் ஒரு தடவை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அவையிலே வேறுபட்ட கருத்துக் கொண்ட உறுப்பினர்களும் இதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

ஒப்பற்றத் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் 'உழுபவனுக்கே நிலம் சொந்தமாக வேண்டும்' என்று சொன்னார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன அந்த கருத்தின் அடிப்படையில், நான் ஏற்கனவே பேசிய போதுகூட குறிப்பிட்டிருக்கிறேன். அதாவது குறிப்பாக ஆதீனங்கள், மடங்கள், கோயில்கள் ஆகியவைகளுக்கு அதிகமாக நிலம் இருக்கக் கூடாது என்பதை நான் இந்த அவையிலே பேசியபோது சுட்டிக்காட்டியிருக்கிறேன்.

[முற்பகல் 11-10]

ஆதீனங்களுக்கும், மடங்களுக்கும் ஒரு துளி அளவு கூட நிலம் சொந்தத்தில் இருக்கக் கூடாது, அவற்றை அரசாங்கமே எடுத்து உழுது பயிரிடுகிறவர்களுக்கு விநியோகம் செய்யும்

தன்மையை உருவாக்க வேண்டுமென்று அண்ணா அவர்கள் தன்னுடைய நல்லெண்ணத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். நிச்சயமாக, அண்ணா அவர்கள் வழியில் இருப்பவர்கள் அந்தத் திட்டத்தை நிறைவேற்றக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் ஆளுநர் பேச்சைப் பார்க்கும்போது அதைப் பற்றி ஒன்றும் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

நாட்டு மருத்துவ முறையை மேம்பாடு செய்யும், நகரிலுள்ள பெரிய மருத்துவ மனைகள் இயங்குவதிலுள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து களைவது பற்றி ஆலோசனை கூற சிறப்பான மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். ஒருபுறம் இதற்காக மருத்துவக் குழுக்களை அமைப்பதாகச் சொல்லுகிறார்கள். இன்னொருபுறம் பார்த்தால் மருத்துவம், குடும்ப நலத்துறை இயக்குநர் பதவி 11—9—77 முதல் காலியாக இருக்கிறது. துணை இயக்குநர் (மருத்துவம்) பதவி ஒன்றரை ஆண்டுக் காலமாக நிரப்பப்படாமல் காலியாக இருக்கிறது. இன்னொரு துணை இயக்குநர் பதவி ஒரு வருஷ காலமாக நிரப்பப்படாமல் காலியாக இருக்கிறது.

கை தேர்ந்த மருத்துவர்கள் நமது மாநிலத்தில் இருக்கிறார்கள். மற்ற மற்ற மாநிலங்களுக்குச் சென்று, வெளிநாடுகளுக்குச் சென்று மருத்துவம் பார்க்கக்கூடிய சிறந்த வைத்திய நிபுணர்கள், வல்லுநர்கள் இருக்கிறார்கள். இருந்தாலும் இந்தத் துறைக்குத் தலைவர்களை, பொறுப்பாளர்களை நியமிப்பதில் அரசு கவனம் செலுத்தாமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்று புரிந்துகொள்ள முடியவில்லை.

அடுத்தாற்போல், மொழிக் கொள்கையில் இரு மொழித் திட்டந்தான் செயல்படுத்தப்படும் என்று நமது மதிப்பிற்குரிய ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்தபோது இருமொழித் திட்டம் நிறைவேற்றப்பட்டது. இன்று ஆளுகின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அதைச் செயல்படுத்துவதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. அண்ணா அவர்கள் வழியைப் பின்பற்றுவதாகச் சொல்லுகிறவர்கள் இதைப் பின்பற்றுவதாகச் சொல்லுவதில் வியப்பு எதும் இருப்பதாகத் தெரியவில்லை. இன்னொரு காலத்தில் தப்பித் தவறி இந்தி



கொள்கைக்குப் புறம்பானவர்கள் இந்த ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தப்பட்டாலும் இரு மொழித் திட்டத்திற்கு மாறாக மும் மொழித் திட்டத்தைத் தமிழகத்தில் திணித்துவிடக்கூடிய தெம்பும், திராணியும் எவருக்கும் வந்துவிட முடியாது. அண்ணா அவர்களின் இருமொழிக் கொள்கையைப் பின்பற்றுவதாகச் சொல்லுகிறார்கள் ஆனால் அதே நேரத்தில் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்குக் கொடுத்த பென்ஷன் தொகை நெருக்கடி காலத்தில் நிறுத்தப் பட்டதை மீண்டும் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. கலைஞர் செய்தார்கள் என்ற நோக்கில் பார்க்க வேண்டிய தில்லை. இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகள் பல இயக்கங்களைச் சார்ந்தவர்கள் இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் இருக்கிறார்கள்; சில இடங்களில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் இருக்கக்கூடும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் இருக்கிறார்கள்; காங்கிரஸ் இயக்கத்தில் உள்ளவர்கள் கூட இருக்கிறார்கள். இவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த பென்ஷன் நெருக்கடி நிலை காலத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறது. இரு மொழித் திட்டத்தை நாங்கள் செயல்படுத்துகிறோம், மத்தியிலுள்ளவர்கள் இந்தியைத் திணிக்க முற்பட்டால் நாங்கள் அதற்கு இடம் கொடுக்கமாட்டோம் என்று பேசக்கூடியவர்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்ட தியாகிகளுக்கு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்ட பென்ஷன் தொகையை மீண்டும் வழங்க ஏன் முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை என்பதைக் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோது, தந்தை பெரியார் அவர்களின் நினைவாக—தந்தை பெரியார் அவர்களின் எண்ணங்களை நாம் எல்லாம் பெற்றிருக்கிறோம், அவர்களின் அடிச்சுவட்டில் நாம் நடக்கிறோம்—என்பதற்கு அடையாளமாக, நாம் அடிக்கடி வற்புறுத்திக் கொண்டு வந்ததும் அரசும்கூட, ராஜ்ய சபை. நாடாளுமன்றம் ஆகியவற்றில் வற்புறுத்திக்கொண்டுவந்ததுமான தந்தை பெரியார் அவர்கள் நினைவுத் தபால் தலைகள் வெளியிடவேண்டு மென்ற எண்ணத்தை மத்திய அரசு ஏற்றுக்கொண்டு இருப்பதற்காக நம்முடைய அரசு நன்றியை மேதகு ஆளுநர் அவர்களின் உரையின் மூலமாகத் தெரிவித்து இருக்கிறது. தந்தை

பெரியார் அவர்களின் சாதாரணத் தொண்டன் என்ற முறையிலே நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இங்கே மிகப் பெரிய தலைவர்களின், நம்முடைய நெஞ்சம் நிறைந்த பெரியவர்களுடைய படங்கள் எல்லாம் மாட்டப்பட்டிருக்கின்றன, தந்தை பெரியார் அவர்கள் தமிழகத்திலே பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்தவர்கள், தமிழகத்திலே பகுத்தறிவைப் பரப்ப வேண்டுமென்றே பாடுபட்ட, வேறு எந்தவிதமான பட்டம் பதவி பெறவேண்டுமென்ற எண்ணமில்லாமல் பாடுபட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் விடிவெள்ளி, பிற்படுத்தப்பட்ட மக்களின் கண்ணைத் திறந்துவிட்ட பகுத்தறிவுப் பகலவன், அவர்களுடைய படத்தை இங்கே திறந்துவைப்பதாக அறிவிப்பு வந்திருந்தால் நாங்கள் எல்லாம் மெத்த மகிழ்ச்சியோடு வரவேற்போம். மத்திய அரசு தபால் தலைகள் வெளியிட்டதற்காக நன்றியைத் தெரிவிக்கிற நேரத்தில் இங்கே தந்தை பெரியார்த் படத்தைத் திறந்து வைக்கப்போகிறோம் என்ற அறிவிப்பும் இருக்கும் என்று எதிர்பார்த்தேன், அது இல்லை, அப்படிப்பட்ட அறிவிப்பையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக ஒரு கருத்தை மட்டும் சொல்லிவிட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். லஞ்ச லாவண்யங்களை ஒழிப்பதிலே இந்த அரசு தீவிரமாக இருப்பதாகச் சொல்லிக் கொள்ளப்படுகிறது, அப்படி ஈடுபட்டு இருக்கவும் கூடும். எந்த மட்டத்தில் லஞ்ச ஊழல் நடைபெற்றாலும் அதிலே ஈடுபட்டவர் யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுப்போம் என்று சொல்கிற அமைச்சரவைக்கு நான் எடுத்துச் செல்ல விரும்புவது, மாநில அளவிலே, மாவட்ட அளவிலே, மட்டும் அல்ல, மாயூரம் நகராட்சியிலே—அதைச் சர்வ கட்சியினரும் ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியாகிய திராவிட முன்னேற்றக் கழகமும் மற்ற கட்சிகளும் சேர்ந்து கட்சி வித்தியாசம் இல்லாமல் எல்லாக் கட்சிகளும் ஒருமனதாக—நடக்கிற நிகழ்ச்சியைப்பற்றி இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறார்கள். அதைப்பற்றி அமைச்சரவைக்கும் தொடர்புள்ள அதிகாரிகளுக்கும் மகஜர்கள் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அங்கே டவுன் பிளானிங் ஆபீஸர் ஒருவர் இருக்கிறார். அவர் நெருக்கடிகால நிலையைப் பயன்படுத்திக் கொண்டு—நான் இதைச் சொல்கிற போது பொறுப்பு கொள்ள வேண்டிய நிலைமை வந்தால் பொறுப்பை





ஏற்றுக் கொள்கிறேன் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை தொடர்கிறேன்—எவ்வளவு அதிகமாக லஞ்சம் பெற முடியுமோ அவ்வளவு அதிகமாகப்பெற்று சம்பாதிக்கமுடியுமோ அவ்வளவு அதிகமாகச் சம்பாதித்துவிட்டார் தொடர்ந்து செய்து வருகிறார்.

இப்போது அதைப்பற்றிச் சட்டசபையிலே பேசுவதால் ஒரு வேளை நிறுத்திவிடமாட்டாரா என்று கேட்கலாம், நிச்சயமாகச் சொல்வேன், அவர் நிறுத்தமாட்டார், காரணம், அவர் நிறுத்தக் கூடியவர் அல்ல, எல்லாக் கட்சியினரும் சேர்ந்து மகஜர்களைக் கொடுத்துங்கூட இன்னும் செய்து கொண்டிருக்கிறார். மாற்றிக் கொள்ளக்கூடிய மனம் இல்லாதவர் அவர். நெருக்கடி நிலை காலத்தின்போது சாதாரண மக்களின் குடிசைகளை யெல்லாம் இடித்துத் தள்ளியவர், அவர் இன்னும் அவர்கள் பணம் கொடுக்காத காரணத்தினால் அந்தக் காரியத்தைச் செய்து கொண்டு தான் இருக்கிறார், அவர் எவ்வளவு பணம் யார், யாரிடத்திலே வாங்கியிருக்கிறார் என்பதை நான் நிரூபிக்கமுடியும் என்பதை எடுத்துச்சொல்லி, இத்தகைய குற்றச்சாட்டுகளை நாங்கள் தமிழகத்திலே நடைபெற்று வருகின்றவைகளை எடுத்துசொல்கிற போது நேற்றைய தினம் என்னுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் எடுத்துச்சொல்கிறபோது—பேச்சுரிமைக்கு நாம் இடம் தந்திருக்கிறோம், அப்படி இடந்தந்திருக்கிற மேதகு ஆளுநரை உள்ளடக்கியிருக்கிற அரசு—அதைத் தடுத்திருக்க வேண்டியதில்லை என்று தான் நான் கருதுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த போதுகூட இத்தகைய குற்றச்சாட்டுகள் புகார்கள் எதிர்க்கட்சியினரால் சொல்லப்பட்டிருக்கிறது, ஆனால் அப்போது திராவிட முன்னேற்றக் கழகம் அதைத் தடுத்ததா என்றால் இல்லை, சொல்லும்பொழுது தடுத்து நிறுத்தவில்லை. அன்றைய தினம் மாண்புமிகு முதல்வர், புரட்சித் தலைவர் அவர்களைக்கூட சபைக்கு வரவேண்டும், வந்து பேசவேண்டும், வராமல் சென்றுவிட்டது என்று சொல்லாதீர்கள், வந்து பேசுங்கள் என்று நான் எங்கள் தலைவர் அவர்கள் சொன்னார்கள். பேசுகின்றபோது தடுத்து நிறுத்துவது முறையா என்பதை தலைவர் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். அத்தகைய

என்னங்களை வெளியிடும்பொழுது இம்மாதிரி மணியடித்து நிறுத்தி விடாமல் பேசுவதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி! வணக்கம்.

(முற்பகல் 11-20)

திரு. ரா. க. சு. **தண்டபாணி** : மாண்புமிகு சட்டப் பேரவைத் தற்காலிகத் தலைவரவர்களே, இந்தச் சபைக்கு சென்ற மாதம் 30 ஆம் தேதியன்று மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தந்த அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு முன் நிற்கிறேன். அதற்கு வாய்ப்பு தந்த உங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நேற்றையதினம் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களும், அவர்களது நண்பர்களும் இந்த உரையின்மீது அவர்களது கருத்துக்களை வழங்குவதற்குக் கொடுத்த வாய்ப்புகளைச் சரியாகப் பயன்படுத்தாமல் சபைத் தொடக்கத்திலேயே வெளிநடப்புச் செய்தார்கள். * * * அதற்குப் பிறகு நடந்த நடவடிக்கைகளெல்லாம் சுவையற்றுப் போய்விட்டது என்று சொன்னால் மிகையாகாது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

திரு. **துரை முருகன்** : தலைவரவர்களே, அங்கத்தினர் அவர்கள் பேசும்பொழுது திராவிட முன்னேற்றக் கழகம் வெளிநடப்பு செய்தது என்று சொன்னார்கள், அது அவர்களுடைய கருத்து. அடுத்து அவர் * * என்று சொன்னார்கள். * * என்றால் என்ன என்று அவர்கள் விளக்குவார்களா? ஏனென்றால் குத்தல், நக்கல் என்று இப்படிப் பேசக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இங்கிருக்கின்ற உறுப்பினர்களையோ அல்லது தலைவர்களையோ கேலியாகப் பேசக்கூடாது. அதைத் திரும்பப் பெற்றுக்கொண்டு பேச ஆரம்பிக்கலாம்.

திரு. ரா. **உமாநாத்** : தலைவரவர்களே, நீங்கள் சொல்லக் கூடியதுதான் கரெக்ட் புரொசீஜர். அதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் நண்பர்கள் அதே ஆத்திரத்தோடு நேற்றைக்கு முதல் நாள், அருமை நண்பர் சுப்பு அவர்கள் பேசும்பொழுது

* * மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க இணங்க அகற்றப்பெற்றது.





எங்கள் தலைவர் சங்கரய்யாவைப் பற்றி ரெஃபர் செய்யும்பொழுது பாவம், பெரிய மனிதன், சங்கரய்யா என்று சொன்னபொழுது நாங்கள் அதைப்பற்றி ரெய்ஸ் பண்ணவில்லை. Let t g on record என்று விட்டுவிட்டோம். அப்படி எங்கள் தலைவரைப்பற்றிப் பேசும்பொழுதும் இந்த ஆத்திரம் வந்து இருக்க வேண்டுமா இல்லையா? எங்களுக்கு ஆத்திரம் வரவில்லை, இதைப்பற்றி திதானமாக டீல் பண்ணிக்கொள்ளலாம் என்று இருந்தோம். இதுபற்றி வி. கே. கே. அவர்கள் என்னிடத்தில் சொன்னார்கள், அதைத்தான் சொல்கிறேன்.

திரு. **துரை முருகன்** : தலைவரவர்களே, . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நீங்கள் உட்காருங்கள். உறுப்பினர் திரு. தண்டபாணி அவர்கள் கூறிய வார்த்தைகளைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள்.

திரு. ரா. க. சு. **தண்டபாணி**: தலைவரவர்களே. * * * என்று சொல்வார்களே அது மாதிரி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : தாங்கள் அதைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள்.

திரு. ரா. க. சு. தண்டபாணி : சரி, * * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : தயவு செய்து தாங்கள் அந்த வார்த்தைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுங்கள்.

திரு. ரா. க. சு. **தண்டபாணி** : அதை நான் திரும்ப வாங்கிக் கொள்கிறேன். அந்த வார்த்தைகளுக்கு வருத்தம் தெரிவித்துத் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தாற்போல் நான் தெரிவித்துக்கொள்கிறேன். நேற்றைக்கு முன்தினம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. சுந்தரராஜ் அவர்கள் பேசும்பொழுது சர்க்காரியா அறிக்கையில் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். * * * * *

திரு. **என். கிட்டப்பா** : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். தலைவரவர்களே, வழக்கே இன்னும் தொடங்கப்படவில்லை. அப்படித் தொடங்கப்படாத நிலையில், தொடங்கப்படாத வழக்கைப்பற்றிக் குறிப்பிடுகிறார்கள். * * *

* * மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு தண்டபாணி அவர்கள் இந்த விவாதத்தில் தம்முடைய கருத்துக்களைச் சொல்ல வேண்டும் குறிப்பிட்ட கட்சியைப்பற்றியோ, குறிப்பிட்டவர்களைப்பற்றியோ பேசுவதற்கு தங்களுக்கு வாய்ப்பில்லை. ஆகவே, இதையெல்லாம் விட்டுவிட்டு பிரச்னைகளுக்கு வாருங்கள்.

**திரு. ரா. க. சு. தண்டபாணி:** தலைவரவர்களே,* *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் மேலும் பேசுவதற்கான வாய்ப்பை பெறபோகிறீர்களா அல்லது அடுத்தவரை அழைக்கட்டுமா? தயவு செய்து இதையெல்லாம் பேசாமல் பிரச்னைக்கு வாருங்கள்.

**திரு. துரை முருகன்:** அவைகளெல்லாம் சபை நடவடிக்கைக் குறிப்பில் இருக்க வேண்டுமா என்பதை உங்கள் முடிவுக்கு விட்டுவிடுகிறேன்.

**திரு. ரா. க. சு. தண்டபாணி:** தலைவரவர்களே, அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறதைப்போல் நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், கரும்பு போன்ற பல்வேறு வேளாண்மை விளைபொருள்களின் உற்பத்தியில் நாம் அரிய பெரிய சாதனைகளைக் கண்டிருப்பது. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் தண்டபாணி அவர்கள் தற்பொழுது பேசிய அந்தப் பிரச்னைகளின்மீது கனம் உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்கள் எழுப்பிய பிரச்னை நியாயம் என்பது மட்டுமல்ல, திரு. தண்டபாணி அவர்கள் பேசிய வார்த்தைகள் அத்தனையையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விடும்படி உத்தரவிடுகிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் பி. எச். பாண்டியன் தலைமை]

**திரு. ரா. க. சு. தண்டபாணி:** வேளாண்மை உற்பத்திப் பொருள்களுக்கெல்லாம் நல்ல விலை கிடைக்கும்பொருட்டு, வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் என்ற அமைப்புகளை உருவாக்கி இருப்பது மகிழ்ச்சி தரக்கூடிய விஷயமாக இருக்கிறது. ஆனால், இது போன்ற ஒழுங்கு முறை

* * மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



விற்பனைக் கூடங்களில் பணியாற்றுபவர்களின் திறமையும், எண்ணிக்கையும், போதுமானதாக இல்லை என்பது எனனுடைய கருத்து. உதாரணமாக, சந்தைக்குச் சென்று, ஒழுங்குமுறை விற்பனைக் கூட விற்பனையாளர்கள் பொருள்களை விற்று வருகிறார்கள். சந்தைக்கு வருகின்ற வியாபாரிகளின் திறமைக்கு முன்னால், இதுபோன்ற ஒழுங்குமுறை விற்பனை கூட விற்பனையாளர்களின் திறமை உரை போடக் கூட காணாத அளவு இருக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்றால், ஒழுங்கு முறை விற்பனைக்கூட விற்பனையாளர்களுக்கு முறையான பயிற்சி இல்லை. இதைக் கருத்தில் கொண்டு, ஒழுங்குமுறை விற்பனைக்கூட விற்பனையாளர்களுக்கு, அதில் பணிபுரிபவர்களுக்கு, முறையான பயிற்சி அளிக்க வேண்டும், ஒழுங்குபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லுக்கு நியாயமான முறையில் கொள்முதல் விலை நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று மத்திய அரசிடமும் தென் மாநில முதலவர்கள் மாநாட்டிலும் வலியுறுத்தப்பட்டிருப்பது மிகவும் மகிழ்ச்சி அளிக்கக்கூடிய விஷயம். அதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெல் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் நெல் நடமாட்டக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியிருப்பதற்கு நன்றி. இது வருகின்ற குறுவை சீசன்போதும் தொடரும் என்று கூறியிருக்கின்றீர்கள். அதற்காகவும் நெல் உற்பத்தி விவசாயிகள் சார்பாக எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதிகப்படியான விளைச்சலைக் கருத்தில்கொண்டு, வருகின்ற குறுவை சீசன்போதாவது, கேரளாவிற்குக் கொண்டுசெல்ல இருக்கும் நெல்லுக்கான தடையை நீக்கினால் விவசாயிகள் ஓரளவுக்கு நல்ல விலை பெறுவர் என்பது உறுதி. இதனால், நம் மாநிலத்தில் விலை மிகவும் அதிகரிக்கும் என்பது அவ்வளவு சரியில்லையென்று நினைக்கிறேன். ஆகவே, இதுபற்றி அரசாங்கம் சிந்திக்க வேண்டுகிறேன்.

[திரு. ரா. க. சு. தண்டபாணி] 1978 செப்டம்பர் 2

கோவை மாவட்டத்தில் 2,000-க்கு மேற்பட்ட கூட்டுறவு கடைகளை நியாய விலைக் கடைகளாக, பல்பொருள் விற்கும் அங்காடிகளாக மாற்றியிருப்பதற்கு உள்ளபடியே என் மகிழ்ச்சியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். ஏனென்றால் அப்படி ஒரு கடை எனது ஊரிலே திறக்கப்பட்டு மக்கள் பயனடைவதை நேரடியாகவே பார்க்கும் வாய்ப்பைப் பெற்றவன் நான். அதற்காக மீண்டும் ஒருமுறை என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டாவது பால் பெருக்குத் திட்டத்தின் அடிப்படையில் 10 இலட்சம் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு, 4,600 சங்கங்கள் செயல்படும் என்பது பெரு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய விஷயம். அதில் பணியாற்றும் அதிகாரிகளைப்பற்றி ஒன்று சொல்லியாக வேண்டும். சென்னி மலைக்கு அருகிலே இருக்கும் 500 பேர் ஜனத்தொகை உள்ள காசிபில்லாம் பாளையத்திற்கு பால் வண்டி வருகிறது. ஆனால் அதற்கு அருகில் உள்ள 3,000 பேர் இருக்கும் ஈங்கூர் எனும் கிராமத்திற்கு, நான் பலமுறை கேட்டுக் கொண்டும் அந்த வண்டி வருவதில்லை. இதனால் அதிகாரிகள் எல்லாம் சரிவர பணி செய்கிறார்களா என்பதைக் கூறியமுறையில் கண்காணிக்க வேண்டுமென்றும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் 900 சிறு தொழில் கூடங்கள் அமைப்பதும் 25,000 பேர் கூடுதல் வேலை வாய்ப்பு பெறுவதும் பெரு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய விஷயமாகும். எங்கள் மாவட்டத்தில் உள்ள கோவை, ஈரோடு போன்ற நகரங்களுக்கே முன்னுரிமை கொடுக்கப்பட்டது. இதற்கு முந்தைய ஆட்சியிலே அந்த நகரங்களே பயன்பட்டு வந்தன என்று சொன்னால் மிகையாகாது. ஆனால், இன்றைக்கு எங்களது இதய தெய்வம் தலைவர், தாம் கிராமத்து நண்பன் என்று அடிப்படையிலே இந்தச் சிறு தொழில் கூடங்களை 50,000 மக்களுக்குக் குறைவான அளிக்கக்கூடிய விஷயமாகும். (மணியடிக்கப்பெற்றது).



1978 செப்டம்பர் 2] [திரு. ரா. க. சு. தண்டபாணி]

மின் கட்டணக் குறைப்பிற்கும் மீட்டர் கட்டணத்தைக் குறைத்ததற்கும் மின் இணைப்பு வழங்குவதில் உள்ள கட்டுப்பாட்டினை நீக்கியதற்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

மேலும் விவசாயிகள் எந்தவிதமான கலவரச் சூழ்நிலையையும் ஏற்படுத்தாது, அரசியல் கட்சிகள் அவர்களைத் தூண்டாமல் இருந்து, பசுமைப் புரட்சியை உண்டுபண்ணி காட்டுவார்களானால், உற்பத்தி செலவு போக மற்றபடி ஃப்ரீ எலக்டிரிசிட்டி கொடுக்கக்கூடிய அளவிற்குக் கூட புரட்சித் தலைவருக்கு மனமும் மகிழ்ச்சியும் இருக்கிறது என்பதை உணர்த்தியிருப்பது பாராட்டுதலுக்குரியதாகும்.

அடுத்து, பிரைமரி ஹெல்த் சென்டர்கள் பற்றிச் சொல்ல வேண்டுமானால், இதற்கு முன்பு ஒவ்வொரு பிரைமரி ஹெல்த் சென்டரிலும் ஒரு பெண் டாக்டரும் ஒரு ஆண் டாக்டரும்தான் இருந்தார்கள். இதனால், ஆண் டாக்டரிடம் ஆண்களும் பெண் டாக்டரிடம் பெண்களும் சிகிச்சை பெற்று வந்தனர். அதுதான் நமது நாகரிகமாகவும் மரபாகவும் இருந்துவருகிறது. இதற்கிடையிலே யாராவது ஒருவர் 'லீவ்' போட்டால், ஆண்களோ, பெண்களோ சிகிச்சை பெற முடியாத நிலைமை இருந்தது. ஆகவே, இப்பொழுது மேலும் ஒரு மருத்துவரை நியமித்திருப்பது பாராட்டுதலுக்குரியது. மக்கள் குழுவை ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் அமைத்திருப்பதைப் போல் எந்தெந்த ஊரிலே பி.எச்.சிக்கள் உள்ளனவோ, அங்கெல்லாம், மக்கள் குழுக்களை அமைத்தால், அந்த மருத்துவமனைகளைத் தக்க முறையிலே கண்காணிக்கிற சூழ்நிலை உருவாகும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் மிகவும் சிறப்போடு கண்காணித்து, சென்னிமலைப் பகுதியில் உள்ள மருத்துவ மனையைக் கண்காணித்து, மருத்துவமனைகளுக்கு டாக்டர்கள் ஒழுங்காக வருகிறார்களா, ஒழுங்கான நேரத்தில் வருகிறார்களா, என்றெல்லாம் மேற்பார்வையிட்டு, பாராட்டத்தக்க முறையில்

[திரு. ரா. க. சு. தண்டபாணி] [1978 செப்டம்பர் 2

சீர்திருத்தி இருக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொரு ஆஸ்பத்திரிக்கும் அதுபோன்ற மக்கள் குழுக்கள் வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

மொழிக் கொள்கையைப் பொறுத்தமட்டில் நமது கொள்கை இரு மொழிக் கொள்கைதான். அதையும் தெளிவுபட உரைத்தமைக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதை மட்டுமல்லாது எதிர்க்கட்சித் தலைவர்களும் மற்ற நண்பர்களும் மனப்பூர்வமாக ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மேடையிலே குறிப்பிட்டதுபோல், அவரால் தனியாக எதிர்க்க முடியாது. ஏனென்றால், அதற்கான தொண்டர்களும் கிடையாது. அதற்கேற்ற வசதிகளும் இல்லையென்பதை நான் கவனப்படுத்த விரும்புகிறேன்.

## 4. கவன ஈர்ப்புகள்.

### (ஆ) சேரன் போக்குவரத்துக்கழகத் தொழிலாளர் மரண சம்பவம் குறித்து (தொடர்ச்சி).

(முற்பகல் 11-30).

**திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இங்கே உடுமலைப் பேட்டையில் ஒரு தொழிலாளி கொல்லப்பட்ட பிரச்சினை வந்தபோது (குறுக்கிடு) கொல்லப்பட்ட, அல்லது தற்கொலை செய்து கொண்ட பிரச்சினை வந்தபோது * * *

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, * * * * *

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இது வழக்கு மன்றத்தில் வரவேண்டிய பிரச்சினை. எனவே * * * * அதைக் குறிப்பில் இருந்து எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1978 செப்டம்பர் 2]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** * * * * என்று சொன்ன அந்த வாசகத்தையும், பின்னாலே * * * * சொன்னதையும் நடவடிக்கைக் குறிப்பிலே இருந்து நீக்க வேண்டும் என்று உத்தரவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தற்போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியதையா அல்லது திரு. சுப்பு அவர்கள் சொன்னதையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே * * நீக்கிவிட வேண்டும் என்று உத்தரவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** இந்தக் கதை தொடர்கதையாகிக் கொண்டே இருக்கிறது. * * ஆகவே அதையும் இந்தக் குறிப்பேட்டிலே இருந்து நீக்குவது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** திரு. சுப்பு அவர்கள் கூறியதையும் சேர்த்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** * * * நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

**திரு. க. சுப்பு:** நான் பேசியது இல்லை. கேள்வி கேட்டிருக்கிறேன். அதை நீக்கிவிட்டால் எதை வைத்து விவாதத்தை நடத்துவது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசியதற்கும் கேள்வி கேட்டதற்கும் வித்தியாசம் அதிகம் இல்லை. * * என்று சொன்னீர்கள். அதைத்தான் அவைக்குறிப்பில் இருந்து நீக்கிவிட உத்தரவிட்டு இருக்கிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

**திரு. க. சுப்பு:** நான் பேசியதைக் குறித்து என்னைக் கேட்காமல் நீக்குவது சரியா? அவர் சொன்னார் என்று நீக்குவது எப்படிச் சரியாகும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் ஒப்புதல் பெற்றுத்தான் சொன்னேன். அதற்கு மேல் போக வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். திரு. தண்டபாணி, நீங்கள் பேசுங்கள்.

## 6. ஆளுநர் பேருரைக்கு நன்றிகூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி)

**திரு. ரா. க. சு. தண்டபாணி:** இறுதியாக நான் தெரிவித்துக் கொள்வது, ஆளுநர் உரை மீது பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, நான் பேசிய முழுப்பேச்சையும் நீக்கிவிட உத்தரவிட்டு இருக்கிறீர்கள் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசியது அத்தனையும் இருக்கிறது. சிலவற்றைத்தான் நீக்கிவிடச் சொல்லி உத்தரவிட்டு இருக்கிறேன். அடுத்து திரு. துரை முத்துசாமி பேசுவார்.

**திரு. துரை முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் சார்ந்து இருக்கும் காங்கிரஸ் கட்சியின் சார்பாக இங்கே இருக்கின்ற ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக, ஆளுநர் உரை என்று சொன்னால் ஆண்டுக்கு முதலில் குறிப்பாக பட்ஜெட் தாக்கல் செய்வதற்கு முன்பாக அரசாங்கத்தின் திட்டத்தையும், கொள்கையையும் இங்கே எடுத்து வைப்பது என்பது மரபாக, சம்பிரதாயமாக இருந்து வந்த போதிலும், இந்தத் தமிழக சட்டமன்றத்தில் புதிதாக பொறுப்பு





ஏற்று இருக்கக்கூடிய அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆகஸ்ட்டுக்கு ஆகஸ்ட் என்ற வகையில் புதிய மரபை உருவாக்கியிருக்கிறார்கள்.

(திரு. பி. எச். பாண்டியன் தலைமை)

இதிலே அரசாங்கத்தின் திட்டம் என்ன? கொள்கை என்ன என்று தெளிவாக்கப்படவில்லை. புதியதொரு நூதனமான வகையில் இந்தச் சட்டமன்றம் நடந்து கொண்டு இருக்கிறது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அரசு கவர்னர் உரையில் சொல்லியிருக்கும் தொழில் கொள்கையைப் பார்த்தால் மக்களுக்கு நன்மை உடையதாக இல்லை. அவர்கள் புதிதாக ஏதாவது தொழிற்சாலைகள் ஆரம்பிக்கத் திட்டம் போட்டு இருக்கிறார்களா என்றால் இல்லை. ஏற்கனவே இருந்த தொழிற்சாலைகள் மூடப்பட்டு, அல்லது லாக்-அவுட் செய்யப்பட்டு இருக்கும் தொழிற்சாலையில் உள்ள தொழிலாளர்கள் அவதிப்பட்டுக் கொண்டு இருக்கிறார்களே அவர்கள் பிரச்சினைகளைத் தீர்க்கப் பரிகாரம் கண்டு இருக்கிறார்களா என்றால் அதுவும் இல்லை. ஆனால், அதே நேரத்தில் தொழிலாளர்கள் சரண் அடைய வேண்டும் என்பதற்காக சில நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது வேதனையாக இருக்கிறது.

அதற்கும்மேலாக கிராமப்புறத்தில் இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். அது என்னென்ன வேலைகள், எத்தனை பேருக்கு, எப்படி கொடுக்கப் போகிறார்கள் என்பது திட்டவட்டமாக அறிவிக்கப்படாமல் இருக்கிறது. அந்த வேலைகள் நிரந்தரமானவையா என்பது தெரியவில்லை. ஒரு கொள்கையும் இல்லாத அரசாக, குறிப்பாக தொழிற்கொள்கை எதுவும் இல்லாத அரசாக இது இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

படித்து விட்டு வேலை இல்லாமல் இருப்பவர்களுக்கு என்ன வேலை வாய்ப்புத் தர இருக்கிறார்கள் என்று தெரியவில்லை.

கிராமப் புறங்களில் இருப்பவர்களுக்கு என்ன வேலை வாய்ப்பைத் தரப் போகிறார்கள் என்று தெரியவில்லை. இவற்றையெல்லாம் பார்க்கிறபோது மிகவும் வேதனையாக இருக்கிறது.

அதேபோன்று என்னுடைய மாவட்டத்தில் நிலக் கடலை ஏராளமாக விளைகிறது. அந்தப் பகுதியில் ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தருமபுரியில் பேச்சம்பள்ளி என்ற இடத்தில் ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஆரம்பித்து இருப்பதால் படித்து விட்டு வேலை இல்லாதவர்களுக்கு வேலை தருவதற்கு அது வாய்ப்பாக அமைந்து இருக்கிறது. அதேபோன்று என்னுடைய தொகுதியிலும் ஒன்று நிறுவப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. முசிரிபுத்தன் (அமைச்சரின் பேரவைத் செயலாளர்):** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுவது அவருடைய சொந்தக் கருத்தா அல்லது அவருடைய கட்சியின் கருத்தா என்று அறியவிரும்புகிறேன்.

**திரு. துரை முத்துசாமி:** எங்களுடைய கட்சியின் கருத்து தான். நீங்கள் தனித் தனியாக சொல்லிர்களோ என்னவோ எனக்குத் தெரியவில்லை.

**திரு. பி. முசிரிபுத்தன் அமைச்சரின் பேரவைச் செயலர்):** பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினர் என்னுடைய கருத்தும் கட்சியின் கருத்தும் அதுதான் என்று சொல்கிறார்கள். ஆனால் அவருடைய கட்சித் தலைவர்தான் பேசும்போது சொல்கிறேன் என்று சொல்கிறார்கள்.

**திரு. துரை முத்துசாமி:** அதேபோன்று விவசாயிகளுடைய பிரச்னையை எடுத்துக் கொண்டால், இங்கே நான் சொல்ல முடியாத அளவிற்கு அவர்கள் வேதனை அடைந்து இருக்கிறார்கள். இங்கே ஒரு நண்பர் குறிப்பிட்டுச் சொன்னார். அரசு பத்திரிகையில் செய்தி வெளியிட்டு விடுகிறது. அதே நேரத்தில் விவசாயிகளுக்கு உயர்மட்டக் குழுவில் கொடுத்த உறுதி மொழி காப்பாற்றப்படாமல் இருப்பதால் எத்தனையோ ஏழை எளியவர்கள் தங்கள் சொத்துக்களையும், விவசாயத்திற்கு பயன்படுத்தி வந்த காளை மாடுகளையும் ஜப்திக்கு உள்ளாக்கும் நிலை





இருப்பதால் விவசாயிகளின்பால் அவர்களுக்கு எத்தனை கருணை இருக்கிறது என்பதைக் கண்டு நான் மிகுந்த வேதனை அடைகிறேன்.

(முற்பகல் 11-40)

அதைப்போல விவசாயத்தைப் பொறுத்தவரையில் இந்த அரசு ஒரு நிலையில்லாத கொள்கையை வைத்திருக்கிறது. அது மட்டுமல்ல. விவசாயிகள் பிரச்னைகளைப் பற்றி அனைத்துக் கட்சித் தலைவர்கள் வலியுறுத்தியும் பிரச்னைகளுக்கு முடிவு காணாமல் இருக்கிறார்கள். பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்குப் பதிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வார்த்தைகளைப் பார்த்தால் விவசாயிகளை மிரட்டுவதாகத் தெரிகிறது. விவசாயிகள் கட்டை வண்டிப் போராட்டத்தை நடத்தினால் அதை உடைப்பேன்; கடுமையான நடவடிக்கை எடுப்பேன், தண்டனை வழங்குவேன் என்றெல்லாம் சொல்லி மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இந்த நாட்டு மக்களை எல்லாம் ஏமாளிகள் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்? விவசாயிகள் என்றால் அவர்களுக்குப் போராட உரிமை இல்லையா? விவசாயிகள் பிரச்னைகளைத் தீர்க்க என்ன திட்டத்தை வைத்திருக்கிறார்கள்? பிரச்னைகள் எழும்போதெல்லாம் உயர்மட்டக் குழு, உயர்மட்டக் குழு என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்களே; உயர்மட்டக் குழுவை கூட்டுகிறார்கள், பேசுகிறார்கள். ஆனால் முடிவு என்ன? விவசாயப் பெருங்குடி மக்களின் பிரச்னைகளுக்கு என்ன தீர்வு கண்டார்கள்?

அதைப்போல, எங்களுடைய தென்னாற்காடு மாவட்டத்தில் கல்வராயன் மலைப்பகுதி மக்கள் சமீபத்தில் கொத்தடிமையிலிருந்து மீட்கப்பட்டார்கள். அந்த மக்கள் நீண்ட நெடுங் காலமாக அங்கே இருந்த நிலத்தை உழவு காடாக மாற்றி, பயிர் செய்து கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு அங்கே வன இலாகாவினர் செக்ஷன் 66-ன்படி அவர்களுக்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அந்த மக்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள்; கையெழுத்துப் போடத் தெரியாதவர்கள். அவர்கள் எல்லாம் கைநாட்டுப் பேர்வழிகள். அவர்களை அந்த நிலத்தை விட்டு வெளியேற்றி, அந்த நிலங்களை எல்லாம் வன இலாகவினர்

எடுத்துக்கொள்ள ஆங்கிலத்திலே நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். எழுதப்படிக்கத் தெரியாதவர்களுக்கு ஆங்கிலத்திலே நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் அதை வாங்கி, அது என்ன என்று தெரியாமல் பேசாமல் வைத்துவிட்டார்கள். அதனால் அவர்கள் எக்ஸ்பார்ட்டி டிகிரி வாங்கி, அந்த மலைஜாதி மக்களை வெளியேற்ற முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

அதைப்போல, மலையனூரில் ஒரு மயானம். அதையும் வன இலாகாவில் எடுத்துக்கொள்வதற்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அரசம்பட்டில் இந்த அரசாங்கமே 17 லட்சம் ரூபாய் செலவிட்டு, ரோடு போட்டு, பஸ் ஓடிக் கொண்டிருக்கிறது. அந்த ரோட்டையும் வன இலாகாவினருக்கு உரியதாக்க செக்ஷன் 66-ன் கீழ் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள்.

அதைப்போல புதுப்பாலம், சுப்பிரமணிய கோவில்புரம் இருக்கிறது. அங்கே நீண்ட நெடுங்காலமாக 1,40,000 எக்கர் உழவுக் காடாக இருக்கிறது. அதில் 1,10,000 எக்கரை வன இலாகா எடுத்துக்கொள்ளத் திட்டமிட்டிருக்கிறது. நிலத்தை எடுத்துக் கொண்டால் அதற்கு மாற்று ஏற்பாடு ஏதாவது இருக்கிறதா என்றால் ஒன்றும் இல்லை. நீண்டகாலமாகவே அந்த நிலத்தை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களின் நிலைமை என்ன? யாராவது எண்ணிப் பார்த்ததுண்டா? அவர்களுக்கு 1978 ஜனவரியில் நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார்கள். அதுவும் கை ரேகைப் பேர்வழிகளுக்கு ஆங்கிலத்தில் நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார்கள். அதன் விவரம் தெரியாமல் இருந்துவிட்டதால் எக்ஸ்பார்ட்டி வாங்கியிருக்கிறார்கள். நிலத்தை வன இலாகாவினர் எடுத்துக்கொள்ள முற்பட்டிருக்கிறார்கள். அந்த மக்கள் எல்லாம் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். 5,000-க்கு மேற்பட்ட நோட்டீஸ் அவர்களிடமிருந்து எனக்கு வந்திருக்கிறது. (சிலவற்றை எடுத்துக் காண்பித்தார்) தலைவரின் அனுமதியோடு ஒன்றை அவைக்கு சமர்ப்பிக்கத் தயாராக இருக்கிறேன். அறையிலே வேண்டுமென்றால் 5,000 நோட்டீசையும் கொண்டுவந்து காட்டுகிறேன். அரசாங்கத்திற்கு இதெல்லாம் தெரியுமோ தெரியாதோ, எனக்குத் தெரியாது. ஆனால் வன இலாகாவினர் செய்திருப்பதைப்





பார்த்தால் அந்த மலையிலே இருக்கும் மக்களை எல்லாம் வெளியேற்றிவிட்டு அந்த மலையையே—மலை முழுவதையும்—வன இலாகாவில் சேர்த்துக் கொள்கின்ற ஒரு அபாயம் இருந்து கொண்டிருக்கிறது. அதனால் மக்கள் மிகவும் வேதனைப்படுகிறார்கள். அது எனது தொகுதியில் இருப்பதால் எனக்கு அதுபற்றிய விவரம் நன்றாகத் தெரியும். அதனால்தான் இவ்வளவு அழுத்தமாக நான் குறிப்பிடுகிறேன். அதற்கு ஒரு நல்ல முடிவு காண வேண்டும்.

படிப்பறிவு இல்லாத மக்களுக்கு கொடுத்த நோட்டீஸில் என்ன இருக்கிறது என்று தெரியாமல் போய் விட்டதால் அவர்கள் ஒன்றும் செய்யாமல் இருந்து விட்டார்கள். ஆகவே, அரசு அதை மறுபரிசீலனை செய்து அந்த மலைஜாதி மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சட்ட உதவி எல்லாம் ஏழை எளிய மக்களுக்குச் செய்வதாகச் சொல்கிறார்கள். அந்த மலைஜாதி மக்களுக்கும் சட்ட உதவி தேவைப்பட்டால் செய்துகொடுத்து அவர்களை அந்த நிலத்திலிருந்து வெளியேற்றாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் அங்கே பல இடங்களில் ரோடுகளைப் போட்டார்கள்; இன்னும் பஸ் ஓடவில்லை. அங்கே ஆஸ்பத்திரி இல்லை; மின்சார இணைப்பு இல்லை. அதையெல்லாம் இந்த அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு பிரச்சனை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்கள் மாவட்டத்திற்கு 29—6—1978 அன்று வந்து சுற்றுப் பயணம் செய்தார்கள். திருக்கோவிலூர் மோகனூர் ஏரியில் 3 லட்சம் ரூபாய் செலவில் ஒரு லெப்ரஸி சென்டர் கட்டப்பட்டு, அதைத் திறந்து வைப்பதற்காக வந்தார்கள். அதற்குப் பின்னால் வேறொரு கட்சிக் கூட்டத்திற்குச் சென்றார்கள். ஆனால் அந்தக் கட்சிக் கூட்டத்திற்கு அரசாங்க விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. மோகனூர் ஏரியில் நடைபெற்றது அரசாங்க விழா. அங்கே முதலமைச்சர் பேசுகிறார். ஆனால் அதே நேரத்தில், அண்ணா தி.மு.க. சார்பில் நடத்தப்பட்ட இன்னொரு கூட்டத்திற்கு முதலமைச்சர் போகிறார்; அங்கும் அரசாங்கத்தின் சார்பில் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த ஊரிலே நோட்டீஸ்,

போஸ்டர் எல்லாம் ஒட்டினுர்கள். லெப்ரஸி சென்டர் கட்டிடத்தைத் திறந்துவைத்துவிட்டு, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சிறுமதுரை மோகன் நினைவு திடலில் பேசுவார்கள் என்று அண்ணு தி.மு.க. சார்பில் போஸ்டர் ஒட்டினுர்கள். ஒலி பெருக்கியில் அறிவித்துக்கொண்டிருந்தார்கள், கார்களில் ஒலி பெருக்கி வைத்து, அறிவிப்புக் கொடுத்தார்கள். இப்படி கட்சியின் சார்பில் முதலமைச்சர் பேசுகின்ற கூட்டம் அரசின் செலவில் நடக்கிறது. அதிகாரத்தை எந்த அளவுக்குத் தவருகப் பயன்படுத்துகிருர்கள் என்பதற்கு இது ஒரு உதாரணம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே; தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பிரசுரத்தை ஒருமுறை படித்துக் காட்டிவிட்டு பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எச். பாண்டியன்): சரி படியுங்கள்.

திரு. துரை முத்துசாமி: தலைவரவர்களே, அனைத்திந்திய அண்ணு தி.மு.க. பொதுச் செயலாளர் புரட்சித் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் கலந்துகொள்ளும் தொழுநோய் ஆஸ்பத்திரி புதிய கட்டிடத் திறப்பு விழா பொதுக்கூட்டம். இடம்:— திருக்கோயிலூர் டவுன் ஏரி (சிறுமதுரை மோகன் நினைவுதிடல்) காலம்: 29—6—1978 புதன்கிழமை பகல் 11 மணியளவில். புரட்சித் தலைவர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் மற்றும் தமிழக மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் நாடாளுமன்ற, சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள், கழக அமைப்பாளர்கள் பேசுவார்கள், அனைவரும் கடல் அலையென திரண்டு வாரீர்.

இன்னணம்,

நகர அனைத்திந்திய அண்ணு தி.மு.க.
திருக்கோவிலூர்.

மேற்கண்டவாறு அந்தப் பிரசுரத்தில் கூறப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அந்தப் பிரசுரத்தில் அனைத்திந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழகம் நடத்துகின்ற பொதுக் கூட்டம் என்று எங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அரசின் அந்தப் பொதுக்கூட்டத்திற்கு





வாருங்கள் என்று மக்களை கட்சிக்காரர்கள் அழைப்பது தவறு என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிருரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. துரை முத்துசாமி: தலைவரவர்களே, நான் அதைத் தவறு என்று சொல்லவில்லை. ஆனல் அனைத்திந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இந்தப் பொதுக்கூட்டத்தைப் போட்டிருப்பார்களேயானுல் தவறல்ல. அந்தக் கூட்டம் அரசு தரப்பிலே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. . . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நான் குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். மீண்டும் சொல்கிறேன், அரசின் சார்பாக நடத்தப்படுகின்ற நிகழ்ச்சியாக இருந்தாலும் மக்கள் வரவேண்டும் என்று இந்தக் கட்சியிலே இருக்கின்ற நண்பர்கள், மக்களோடு தொடர்பு உள்ளவர்கள், அவர்கள் வேண்டுகோள் விடுவது தவறு என்றுதான் கேட்கிறேன்.

திரு. துரை முத்துசாமி: தலைவரவர்களே, திருக்கோயிலூர், டவுன் ஏரி சிறுமதுரை மோகன் நினைவுத் திடல் என்று அரசாங்கத்தின் செலவிலே நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னுல் . . . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நான் மீண்டும் சொல்கிறேன். அவர்கள் கொஞ்சம் சிந்தித்துப் பதில் சொல்லவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அந்தத் திடலுக்கு அப்படிப் பெயர் வைக்கப்பட்டிருக்கலாம். அந்தத் திடலுக்கு புதிதாகப் பெயர் வைக்கப்பட்டிருக்கிறதா அல்லது முன்னலே இருந்த பெயரா? இதற்கு முன்னலே இப்படிப்பல பொதுக்கூட்டங்கள் அந்தத் திடலிலே நடைபெற்று இருக்கிறதா, இல்லையா?

திரு. துரை முத்துசாமி: தலைவரவர்களே, இந்தத் திருக்கோயிலூரைப் பொறுத்தவரையில் நடந்தது ஒரே நிகழ்ச்சி. அந்தக் கூட்டத்திலே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கலந்து கொண்டார்கள். அரசு செலவிலே ஏற்பாடு செய்யப்பட்ட அந்தக் கூட்டத்திலே தான் . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மன்னிக்க வேண்டும். நான் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். பிரதம அமைச்சரவர்கள்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 செப்டம்பர் 2

டெல்லியிலே இருந்து இங்கே வரும்போது இங்கே இருக்கின்ற காங்கிரஸ் நண்பர்கள் பிரதம அமைச்சர் கலந்துகொள்கிறார், அனைவரும் வருக என்று அழைக்க மாட்டார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. துரை முத்துசாமி:** மாண்புமிகு மாற்றுத்தலைவரவர்களே, சிறுமதுரை. . . .

**மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்):** திரு. துரை முத்துசாமி அவர்களே, எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி முதலமைச்சர் வரும்போது மக்கள் அனைவரும் திரண்டு வாருங்கள் என்று சொல்வது தவறு கிடையாது. கட்சிக்காரர்கள் அழைப்பு விடுத்திருக்கிறார்கள். இதில் தவறு கிடையாது. ஆகவே இந்தப் பிரச்சினையை இத்தோடு விட்டு விடுங்கள். முதலமைச்சர் வருகிறார் என்றதும் பொதுமக்களோடு தொடர்பு உடையவர்கள் வருவது தவறு கிடையாது. ஆகவே அந்த மாதிரி போடுவது தவறு கிடையாது. இந்தப் பிரச்சினையை இத்தோடு விட்டுவிடுங்கள்.

**திரு. துரை முத்துசாமி:** தலைவரவர்களே, கழக அமைப்பாளர்களும் பேசுவார்கள், கலந்துகொள்வார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறதே. அவர்கள் அனைத்து இடங்களிலும் வெற்றி பெற்றதனால் ஆட்சிக்கு வந்து விடவில்லை. 126 இடங்களிலே தான் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்ற மெஜாரட்டியின் அடிப்படையிலேதான் அவர்கள் இந்த 4½ கோடி மக்களுக்கும் முதலமைச்சராக வந்து இந்த நாட்டு ஆட்சியினை அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11.50]

தமிழ்நாட்டின் முதல் அமைச்சர் அவர்கள் அங்கே செல்கிறார்கள் என்றால் நாலரைக் கோடி மக்களின் . . .

**திரு. பி. கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன்:** (அமைச்சரின் பேரவை செயலாளர்) அவர்கள் தலைவர் ஏதோ சொல்ல விரும்புகிறார். அதைக் கவனியாது உறுப்பினர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.



1978 செப்டம்பர் 2]

**திரு. மு. ஆறுமுகம்:** ஒரு ஒழுங்குப் பிரச்சினை. திருக்கோவிலூரில் அரசால் ஏற்படுத்தப்பட்ட ஒரு நிகழ்ச்சியில் முதல்வர் அவர்கள் கலந்து கொள்வார்கள் என்று விளம்பரப் படுத்தப்பட்டதாக உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அந்தக் கூட்டத்திற்கு மக்களை வரும்படி அழைக்க ஒவ்வொரு கட்சிக்கும் உரிமை இருக்கிறது. போடப்பட்ட நோட்டீஸ் அரசுச் செலவில் போடப்பட்டதா அல்லது அந்தக் கட்சியின் செலவில் போடப்பட்டதா என்பதுதான் பிரச்சினையே தவிர கட்சிக்காரர்கள் ஏற்கக்கூடிய செலவை, அவர்கள் செலவு செய்வதை கூடாது என்று சொல்ல முடியாது. ஜனநாயகத்தில் ஒரு முதல் அமைச்சர் ஒரு கட்சியைச் சேர்ந்தவராகத்தான் இருக்க முடியும். அது எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி. ஆகவே அப்படி வரவழைப்பது தவறு என்று சொல்ல வேண்டாம் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

**திரு. துரை முத்துசாமி:** அரசாங்கச் செலவில் ஏற்பாடு செய்யப்பட்டது அந்தக் கூட்டம். ஆனால் நோட்டீஸ் அடித்திருக்கிறார்கள் கழக அமைப்பைச் சேர்ந்தவர்கள். ஆனால் அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பெயர் இல்லை. போடாதது, பரவாயில்லை. (மணியடிக்கப்பட்டது.) அரசுச் செலவில் அ.தி.மு.க. பொதுக்கூட்டத்தை நடத்துகிறார்கள் என்று சொன்னால் அது சரியா, முறையா என்று கேட்கிறேன்.

அடுத்த படியாக சட்ட இலாகா உயர்நீதிமன்றத்தை அவமதித்திருக்கிறது. உதாரணம் வைத்திருக்கிறேன். அதை உங்களிடம் சமர்ப்பிக்க இருக்கிறேன். (மணியடிக்கப்பட்டது.) எங்கள் கட்சியைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் நேரத்தையும் எடுத்துக்கொண்டு அதையும் சேர்த்து பேச விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்:** (திரு. பி. எச். பாண்டியன்) 11.45 க்கு முடிக்கவேண்டியது 11.50 க்கு மேல் ஆகிவிட்டது. திரு. த. ராமசாமி.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** சிறிது நேரம் அதிகம் கொடுங்கள்.

**திரு. துரை முத்துசாமி:** சட்ட இலாகா உயர்நீதிமன்றத் தீர்ப்பை அவமதித்திருக்கிறது. எப்படியென்றால், 1971-ல் இந்த இலாகாவில் அஸிஸ்டெண்ட் ப்ரொபஸர்ஸ் தேர்ந்தெடுக்க வேண்டும்

என்று சொன்னால் பி. எல். படித்தவர்கள் (முதல் வகுப்பு) என்பதோடு ஐந்து ஆண்டுகள் பார் எக்ஸ்பீரியன்ஸ் இருக்க வேண்டும். எம்.எல். படித்தவர்கள் என்றால் மூன்று ஆண்டுகள் எக்ஸ்பீரியன்ஸ் இருக்கவேண்டும் என்ற நியதி இருக்கிறது. அப்படி விதிமுறை இருக்கிறது. அதை மீறிப் போட்டார்கள். அப்போது செல்வராஜ் என்பவர் ரிட் போட்டார். அதன் விளைவாக உயர்நீதிமன்றம் ஒரு தீர்ப்பு வழங்கியது, இது போன்ற காரியங்களைச் செய்யக் கூடாது என்று. அப்போதிருந்த அரசு இப்படி நடக்கக்கூடாது என்று சொல்லி அதற்குப் பிறகு விதி முறைகள் மீறப்படவில்லை. ஜனாதிபதி ஆட்சிக் காலத்தில்கூட அவ்விதி மீறப்பட வில்லை. ஆனால் 1977ர்-ல் நான்கு அஸிஸ்டன்ட் ப்ரொபஸர்ஸ்-ஐப் போட்டிருக்கிறார்கள். அபிஷியல் லாங்கு வேஜ் கமிஷனில் வேலை செய்து கொண்டிருந்த ஒருவரைப் போட்டிருக்கிறார்கள். 1976-ல் தான் பாஸ் செய்திருக்கிறார். எம். எல். பஸ்ட் க்ளாஸ், பார் எக்ஸ்பீரியன்ஸ் மூன்று ஆண்டுகள் வேண்டும் என்றிருக்கிறது. நாகபூஷணம் என் பவருக்கு, அபிஷியல் லாங்குவேஜ் கமிஷனில் வேலை பார்த்துக் கொண்டிருந்த அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அழகர்சாமி என்பவர்:

(மணியடிக்கப்பட்டு திரு. த. ராமசாமி பேச அழைக்கப்பட்டார்.)

**திரு. த. இராமசாமி:** சட்டமன்ற மாற்றுத் தலைவர் அவர்களே, கடந்த மாதம் 30-ம் தேதியன்று கவர்னர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது . . .

**திரு. துரை முத்துசாமி:** தலைவர் அவர்களே, நான் அரசாங்கத்தின் மீது ஒரு முக்கியமான குற்றச்சாட்டைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அதை முடிப்பது வரையிலும் என்னைப் பேச அனுமதிக்க வேண்டுகிறேன். எங்கள் கட்சிக்குக் கொடுக்கப் பட்ட நேரத்தை எடுத்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்):** அப்படிப் பேசிக் கொண்டேயிருக்க முடியாது. தயவுசெய்து உட்காருங்கள்.

(பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. துரை முத்துசாமி:** எங்கள் கட்சி உறுப்பினர் ஒரு ருக்குக் கொடுக்கப்பட்ட நேரத்தை எடுத்துக்கொண்டு என்னைப் பேச அனுமதிக்க வேண்டுகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படி இன்னொருவரின் நேரத்தை எடுத்துக் கொண்டு ஒரு கட்சியிலுள்ளவரே பேசிக் கொண்டிருந்தால், எப்படி மற்றவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும். இதை அனுமதித்துக் கொண்டிருந்தால் ஒவ்வொரு கட்சியிலும் ஒருவருக்குக் கூட பேசுவதற்கு வாய்ப்பில்லாமல் போய்விடும். இப்படி எல்லோருக்கும் இரண்டாவது முறை பேச சந்தர்ப்பம் கொடுத்துக்கொண்டு இருக்க முடியாது. இங்கு அதற்கு இடமில்லை . . . தயவுசெய்து உட்காருங்கள்.

(குறுக்கீடு)

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைவர் அவர்களே, நண்பர் துரை முத்துசாமி அவர்கள் இன்றைக்கு அதிகமாகப் பேசவேண்டும் என்பதற்காக நிறைய விஷயங்களைச் சேகரித்து தயாராக வந்திருக்கிறார்கள். ஆகவே இன்னொரு உறுப்பினருடைய நேரத்தை எடுத்துக்கொண்டு பேச விரும்புகிறார். இன்னொரு உறுப்பினரும் அதற்கு ஒத்துக் கொள்கிறார். ஆகவே துரை முத்துசாமி அவர்கள் இன்னும் கொஞ்ச நேரம் பேசுவதற்கு அனுமதிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் நீங்கள் சொல்வதை ஏற்றுக் கொள்வதாக இருந்தால், மற்றவர்களுடைய நிலைமை என்ன ஆகும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றைக்கு விவாதத்தை 11 மணிக்கு மேல்தான் ஆரம்பித்தோம். இப்படி இரண்டாவது முறையும் ஒவ்வொருவருக்கும் சந்தர்ப்பம் கொடுத்துக்கொண்டிருந்தால் மற்ற கட்சிகளுக்கு-சி.பி.எம். இருக்கிறது, சி.பி.ஐ. இருக்கிறது, ஜனதா இருக்கிறது. இதில் உள்ளவர்களுக்கு-முதல்வாய்ப்பே இல்லாமல் போய்விடும். ஆகவே இரண்டாவது முறையும் ஒருவருக்கே பேச சந்தர்ப்பம் அளிப்பதற்கு இடமில்லை.

**திரு. துரை முத்துசாமி:** தலைவர் அவர்களே, நான் முக்கியமான ஒரு குற்றச்சாட்டைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். . . அது . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து உட்காருங்கள், நான் நின்றுகொண்டிருக்கிறேன்.

திரு. துரை முத்துசாமி: நான் அரசின் மீது ஒரு குற்றச் சாட்டை சொல்லியிருக்கிறேன். அதை முழுவதும் சொல்லி முடிப்பது வரையிலும் நேரம் கொடுங்கள். . . .

(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து உட்காருங்கள், இந்த அவையின் மரபைக் காப்பாற்றுங்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. துரை முத்துசாமி அவர்கள் சற்று பதட்டத்துடன் இருக்கிறார்கள். ஏதோ ஒரு குற்றச்சாட்டை சொல்லிக்கொண்டிருக்கிறார். அதை முழுவதும் சொல்லி முடிப்பது வரையிலும் தயவுசெய்து இரண்டு நிமிட நேரம் கொடுக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விரைவில் முடித்துவிடுங்கள்.

திரு. துரை முத்துசாமி: தலைவர் அவர்களே, அந்த வகையில் ஒரு விஷயத்தைச் சொல்லிக்கொண்டு வந்தேன். அதை மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன். அதற்குப் பிறகு நேரம் தர வேண்டியதில்லை.

அதாவது 1977 நவம்பரில் நான்கு பேர்கள் அஸிஸ்டண்ட் புரொபஸர்களாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். நாகபூஷணம் என்பவர் அஃபிஷியல் லாங்குவேஜ் துறையில் வேலை பார்த்துக் கொண்டிருந்தவர், அவருக்கும் 3 வருடம் பார் அனுபவம் இல்லை. மூன்று வருடம் பார் அனுபவம் இருக்கவேண்டும் என்று விதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அழகர்சாமி என்பவர் மதுரை யூனிவர்சிடியில் வேலை பார்த்துக் கொண்டிருந்தவர். 1976, 1977 ஆம் ஆண்டுகளில் அங்கே தான் வேலை பார்த்துக் கொண்டு வருகிறார். அவருக்கு பார் எக்ஸ்பீரியன்ஸ் கிடையாது. மூன்று வருடம் பார் எக்ஸ்பீரியன்ஸ் இருக்கவேண்டும் என்ற உயர்நீதிமன்றத் தீர்ப்பையும் மீறி இப்படிப்பட்டவர்களைத் தேர்ந்தெடுத்துப் போட்டிருக்கிறார்கள். இரண்டு பேர்களுக்கு ப்ரமோஷன் கொடுத்திருக்கிறார்கள். இவர்கள் தமிழ் டெஸ்ட் பாஸ் செய்திருக்க வேண்டும் என்றிருக்கிறது. ஆனால் இவர்கள் தமிழ் டெஸ்ட் பாஸ் செய்யவில்லை. இவர்களுக்காக விதிகளை ரிலாக்ஸ் செய்து—ஜி.ஓ. போட்டிருக்கிறார்கள் இதனால் மற்ற வழக்கறிஞர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது.



பார் எக்ஸ்பீரியன்ஸ் வேண்டாம் என்று விதிகளை ரிலாக்ஸ் செய்வது உயர்நீதிமன்றத் தீர்ப்பை மீறுவதாகும். இப்படி விதிகளை மீறிப் போட்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் இப்படி ஏற்பட்டபோது உயர்நீதிமன்றம் சொன்னதை ஒத்துக்கொண்டு முறைப்படி சட்ட விதிமுறைப்படி செய்தார்கள். இப்போது அந்த விதிகளை எல்லாம் தளர்த்தி 1977 நவம்பரில் நான்கு பேர்களைப் போட்டிருக்கிறார்கள். இப்படி நீதிக்குள் புகுந்து விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கமே சட்டம் ஒழுங்கு இவற்றைக் கடைப்பிடிக்கவில்லை என்றால் சாதாரண மக்கள் எப்படிச் சட்டத்தையும் ஒழுங்கையும் கடைப்பிடிக்க முடியும்?

(நண்பகல் 12.00)

ஆகவே, நம் நாட்டிலே சட்டம், ஒழுங்கு கெட்டுவிட்டது என்பதை நான் மனமாரச் சொல்லுவேன். திருவையாறிலே எங்கள் இயக்கத்தைச் சேர்ந்த ஒருவரை சிறையிலே வைத்திருக்கிறார்கள். அதேபோல், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நன்னிலம் நடராசன் அவர்களை கடலூரிலே வைத்திருக்கிறார்கள். இப்படியெல்லாம் சட்டம், ஒழுங்கைக் காப்பாற்றாமல் சவால் விடுகிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் எங்கள் கட்சித் தலைவர் மூப்பனார் அவர்களைப் பார்த்து, ஏதாவது இருந்தால் சட்ட மன்றத்திலே சொல்லுங்கள் என்று சவால் விடுகிறார். அங்கே சொல்லுங்கள் பார்க்கலாம் என்று சொல்லுகிறார்கள். உண்மையிலேயே இந்த நாட்டில் சட்டம், ஒழுங்கு கெட்டுவிட்டது என்று நான் சொல்வேன் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரமாகி விட்டது. உட்காருங்கள் அடுத்து, ராமசாமி.

திரு. த. இராமசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் உரையின்மீது நன்றி தெரிவித்துப் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு முதலில் தங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு என் உரையை நிகழ்த்துகிறேன். கவர்னர் அவர்களுடைய உரையில் பக்கத்திற்குப் பக்கம் எடுத்துப் பார்ப்போமானால், இந்த ஆட்சியினுடைய சிறந்த அம்சங்களை எடுத்துக் காட்டுவதாக இந்த உரை நிகழ்ந்திருக்கிறது.

புரட்சித் தலைவர் அவர்கள் ஏதோ தமிழகத்திலே 20 ஆண்டுகள் இருந்தது போலவும் அல்லது 7 ஆண்டுகள் இருந்தது போலவும், ஏதோ பெரிய தவறுகள், கொடுமைகள் நாட்டிலே இருப்பது போலவும் எதிர்க் கட்சியிலே இருக்கக் கூடிய சட்டமன்ற உறுப்பினர்களும், தலைவர்களும் ஒரு குறைபாடாக எடுத்துச் சொன்னார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி பீடத்திற்கு வந்து ஓராண்டுக் காலம் ஆகின்றது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர், எங்கள் இதயத்தில் வீற்றிருக்கக்கூடிய ஒப்பற்ற புரட்சித் தலைவர் அவர்கள் தமிழகத்தினுடைய ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட ஓராண்டுக் காலத்தில் ஏழை எளிய மக்களின் நலன்களைப் பாதுகாக்கின்ற அளவிற்கும், விவசாயப் பெருங்குடி மக்களின் குறைகளைத் தீர்க்கின்ற அளவிற்கும், தொழில் நிறுவனங்களில் அமைதி ஏற்பட்டிருக்கின்ற நிலைமையும் இன்றைக்கு நாட்டிலே இருக்கக்கூடிய பொதுமக்களும், நல்ல உள்ளம் படைத்தவர்களும் நிச்சயமாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

மதுரை மாநகராட்சித் தேர்தல் சமீபத்திலே நடைபெற்றது, அங்கு சட்டம், ஒழுங்கு கெட்டுவிட்டது; இந்த அரசை ஆட்சிப் பொறுப்பிலே இருந்து நீக்க வேண்டுமென்று எதிர்க் கட்சியினர் மதுரை மாநகராட்சித் தேர்தலில் பிரசாரம் செய்தார்கள். ஆனால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அருமைச் சகோதரர்கள் எங்களுடைய ஒப்பற்றத் தலைவர் புரட்சித் தலைவர் பொறுப்பேற்றுக்கொண்ட ஓராண்டுக் காலத்தில் ஏழை எளிய மக்களுக்குப் பிடிக்காது இருக்குமானால், இந்த ஆட்சியில் லஞ்ச லாவண்யமோ, நிர்வாகத்திலே தலையீடோ இருந்தால், நிச்சயமாக நீங்கள் ஓட்டுப் போட வேண்டாம் என்றும், ஆட்சி முறை சிறப்பாக இருக்கின்றது என்று ஒத்துக் கொண்டால் ஓட்டுப் போடுங்கள் என்றும் கேட்டுக் கொண்டார்கள். அதற்கு தமிழகத்தினுடைய மக்களுடைய சிறப்பான ஓட்டுக்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மிகப் பெரும்பான்மையான வாக்குகள் கிடைக்கப் பெற்று, அதிகமான இடங்களைப் பெற்றுத் தந்து, மதுரை மாநகராட்சியின் ஆட்சிப் பொறுப்பினை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திடம் ஒப்படைத்திருக்கிறார்கள். இதிலி





ருந்து இந்த ஆட்சி நேர்மையான ஆட்சி, நீதியான ஆட்சி, என்பதை மக்கள் இன்றையதினம் அறிவித்திருக்கிறார்கள். அதற்குப் பிறகும்கூட, தேர்தலிலே தோற்றவர்கள் இன்றைய தினம் குழப்பத்தையும் சங்கடத்தையும் செய்துகொண்டு வருகிறார்கள்.

இன்றைய தினம் மொழிப் பிரச்னையை எடுத்துக்கொண்டால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ் மொழி வளர்ச்சிக்கு லாயக்கில்லாத இயக்கம் என்றும், ஏதோ இந்திக்காரர்களுக்குத் துணை போகிறவர்கள் என்றும் பேசிக் கொண்டு வருகிறார்கள். இன்னும், திராவிட முன்னேற்றக் கழகத்தினரும், இதர கட்சியினரும் சேர்ந்து போஸ்டர்கள் ஓட்டினார்கள். அதிலே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெயரை அச்சடிக்கவில்லை. ஆனால், எங்கள் ஒப்பற்ற புரட்சித் தலைவர் தென் மண்டல முதல்வர்களையெல்லாம் அழைத்து, இந்தி மொழிப் பிரச்னைக்கு ஒரு தீர்வு கண்டு, ஒரு தீர்மானத்தையே போட்டிருப்பதை இந்த நாட்டு மக்கள் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, புரட்சித் தலைவர் அவர்கள் ஆணையிட்டால் லட்சோப லட்ச இளஞ் சிங்கங்கள் உற்சாகத்தோடு போராட்டத்தில் ஈடுபடத் தயாராக இருக்கின்றனர். அப்படிப்பட்ட நிர்வாகத் தலைவரைப் பெற்றிருக்கின்ற காரணத்தால், இப் பிரச்னைக்கு முறையான, நியாயமான, நேர்மையான தீர்வு காண முடியும் என்பதில் ஐயமில்லை. ஆகவே, மொழிப் பிரச்சினையைப்பற்றி அண்ணா அவர்களின் இருமொழிக் கொள்கை திட்டத்தைச் செயலாக்க, அண்ணாவின் வழித்தோன்றலான புரட்சித் தலைவர் அவர்கள் முதல் அமைச்சராக இருக்கின்றார்கள். நிச்சயமாக இந்தி மொழி திணிக்கப்பட்டால், அந்தத் திணிப்பு நடைபெறாமல் இருக்க முதல் குரல் கொடுக்க எங்கள் ஒப்பற்ற புரட்சித் தலைவர் அவர்கள் இருக்கின்றார்கள் என்பதை இந்த நாட்டு மக்கள் உணர்வார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

விவசாயிகளுடைய பிரச்சினையைப் பற்றிச் சொன்னார்கள். விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய உணவுப் பொருள்களுக்கு அதிகமான விலை கொடுக்க வேண்டுமென்பதிலே நியாயமான விலை கொடுக்க வேண்டுமென்பதிலே இந்த அரசு மத்திய அரசோடு

[திரு. த. இராமசாமி] [1978 செப்டம்பர் 2

போராடிக் கொண்டிருக்கிறது, அந்தக் கருத்தை வலியுறுத்திக் கொண்டிருக்கிறது, தென் மாநில முதல்வர்கள் மாநாட்டில் கூட தீர்மான வடிவில் தெரிவித்திருக்கிறார்கள்.

உற்பத்தியாளருக்கு ஊக்கம் தருகிற வகையில் நெல் நடமாட்டத்திற்குத் தடை இருந்ததை நீக்கியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நல்ல காரியங்களை எல்லாம் புரட்சித் தலைவர் ஆட்சியில் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நாட்டு மக்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

கடலோரப் பகுதிகளில் காற்றுத் தடுப்புக்காக காடு வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட இருக்கிறது என்று கவர்னர் அவர்கள் உரையில் இருந்து காண முடிகிறது. இது வரவேற்கத்தக்க ஒன்று.

அரபு நாடுகளாக இருந்தாலும் சரி, மற்றைய நாடுகளாக இருந்தாலும் சரி, வேலை வாய்ப்பு இல்லாத அநேகம் பேர் வெளி நாடுகளுக்குச் சென்று வேலை பார்த்துக் குடும்பத்தைக் காப்பாற்ற நினைக்கிறார்கள். ஆனால் அவர்கள் பலவாறு ஏமாற்றப்படு கிறார்கள். இராமநாதபுரம் தொகுதியில் அங்கிருக்கக்கூடிய இஸ்லாமியப் பெருமக்கள் அரபு நாடுகளுக்குச் செல்ல விரும்பு கிறார்கள். அவர்களைத் தாங்கள் அழைத்துச் சென்று வேலை வாங்கித் தருவதாகக் கூட்டிச் சென்று பம்பாய் நகரத்தில் கொண்டு போய் விட்டு விடுகிறார்கள். இவ்வாறு அவர்கள் ஏமாற்றப்படுகிறார்கள். இப்படி ஏமாற்றப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் இந்த அரசு அயல் நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம் ஒன்றினை அமைக்க ஏற்பாடு செய்திருக்கிறது. இந்தத் திட்டத்தைக் கவர்னர் உரையில் அறிவித்தமைக்காக உள்ளபடியே பெருமைப்படுகிறேன்.

தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்திற்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயரை வைத்திருப்பது பெருமகிழ்ச்சியைத் தருகிறது. பெருந்தலைவர் காமராஜ் என்று வாயளவில் பேசுகிறார்கள்; பெருந்தலைவர் என்று பேசினால் மட்டும் போதாது என்று கருதி புரட்சித் தலைவர் நாட்டைக் காத்த உத்தமத் தலைவர் பெயர் நிலைக்க காமராஜ் பல்கலைக் கழகம் என்ற பெயரைச்



1978 செப்டம்பர் 2] [திரு. த. இராமசாமி]

சூட்டினார்கள். அதனை நாட்டு மக்கள் பாராட்டிக் கொண்டிருக் கிறார்கள் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக் கிறேன்.

ஏதோ இன்றைய தினம் கலவரங்கள் நடக்கின்றன, சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று கூப்பாடு போடுகிறார்கள். இராமநாதபுரத்தில் ஒரு கலவரம் நடந்தது. என்ன கலவரம் என்று அதற்குள்ளே நான் நுழையத் தயாராக இல்லை. சட்ட மன்ற உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் சொன்னதுபோல் கலெக்டர் அவர்கள் தாக்கப்பட்டார்கள், தீயணைப்பு நிலையங்கள் தங்கள் பணியைச் செய்யவொட்டாமல் தடுத்து நிறுத்தப் பட்டன, இதையெல்லாம் செய்பவர்கள் யார்? சட்ட மன்ற உறுப்பினர் வீடு என்று கூடப் பார்க்காமல் என்னுடைய வீட்டை அடித்து நொறுக்கினார்கள். இப்படி ஏராளமான அக்கிரமங்களைச் செய்தவர்கள் யார் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அன்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு எதிராகக் குழப்பங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அரசியல்வாதிகள் கலவரச் சூழ்நிலையை உருவாக்குகிறார்கள். அங்கே குழப்பத்தை உண்டாக்கி அமைதியை அழிக்கிறவர்கள் இங்கே வந்து சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது என்று கூப்பாடு போடுகிறார்கள். இதிலே எந்த அளவுக்கு நியாயம் இருக்கிறது என்பதை அன்புள்ளம் கொண்டவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

எங்களுடைய ஒப்பற்ற புரட்சித் தலைவர் அவர்களை, முதலமைச்சர் என்று கூடப் பார்க்காமல் தாறுமாறாக, கேவலமாகப் பேசுகிறார்கள். பெண் அமைச்சர்களை, தாய்க் குலத்தை மதிக்காத அளவுக்கு, சகோதரிகளுடன் பிறந்திருக் கிறோம் என்பதை எல்லாம் மறந்து கேவலமான முறையில் பேசுகிறார்கள். இப்படிப்பட்ட காரியங்களை எல்லாம் எதிர்க் கட்சி நண்பர்கள் செய்து வருகிறார்கள். அதை சட்டசபை நிகழ்ச்சியின்போதே பார்த்துக் கொண்டிருக்கிறோம். சபாநாயகரையே கிண்டல் செய்கிறார்கள். கேலி செய்கிறார்கள். தவறான வார்த்தைகளைப் பேசுகிறார்கள். நாங்கள் ஆளும் கட்சி என்ற முறையில் கட்டுப்பட்டு இருக்கிறோம். இந்த நிலையில் சபாநாயகர் அவர்கள் எதிர்க்கட்சியினருடைய இந்தப் போக்கைக் கட்டுப்படுத்தாது நடைமுறை விதிகளைத் தளர்த்திக்

கொண்டே போகக்கூடாது. அவர்களைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்த மன்றத் தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

(பிற்பகல் 12-10)

திரு. ரா. உமாநாத்: அன்பு மிருந்த அவைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரையைப்பற்றி என்னுடைய மார்க்சிஸ்ட் கட்சியின் பொதுப் பார்வையை பற்றித் தோழர் வரதராஜன் அவர்கள் பேசுகின்றபொழுது ஒட்டுமொத்தமாக ஒரு கண்ணோட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே நான் பேசுகின்றபோது கவர்னர் உரையில் எழுப்பப்பட்டிருக்கிற சில முக்கியமான 2, 3 விஷயங்களைப் பற்றிக் கூறலாம் என்று இருக்கிறேன்.

முதலிலே விலைவாசியைப் பொறுத்தவரைக்கும் கவர்னர் உரையிலே கூறப்பட்டிருப்பது, ஐ எம் கோட்டிங், ‘அரசு எடுத்து வந்துள்ள விழிப்பான நடவடிக்கைகளின் விளைவாகத் தேவையான பண்டங்களின் விலைகள் பொதுவாக கட்டுக்குள்ளேயே இருந்து வருகின்றன. ஒரு ஆண்டுக்குமுன் கடலை எண்ணெய் விலை பெரிதும் உயர்ந்திருந்தது; அது தற்போது கட்டுக்குள் இருந்து வருகிறது. நல்லெண்ணெய் விலை கடந்த சில மாதங்களாக வெகுவாகக் குறைந்துள்ளது’ என்று இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. தேங்காய் எண்ணெயை ஏன் காணோம் என்று பார்த்தேன். மற்ற இரண்டு எண்ணெய்களைப்பற்றியும் சொல்லியிருக்கிறார்கள், ஒரு பழமொழி சொல்வார்கள், ‘சோழியன் குடுமி சும்மா ஆடாது’ என்று சொல்வார்கள். ஆடுகிறது என்று சொன்னால் ஏதோ ஒரு விஷயம் இருக்கிறது என்று தான் அர்த்தம். கடலை எண்ணெயையும் நல்ல எண்ணெயையும் சொன்னவர்கள், அந்த எண்ணெயை ஏன் விட்டார்கள் என்று பார்த்தால் நான் மார்க்கட்டிலே விசாரித்துப் பார்த்ததில் ஜனவரியில் 13 ரூபாயாக இருந்தது ஜூன் மாதத்திலே 15 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. ஆகவே அந்தப் பொருளின் விலை ஏறியிருக்கிறது, ஏறியிருக்கிற பொருள் பற்றிக் குறிப்பிடவில்லை. அதை நைசாகக் கழற்றி விட்டு இருக்கிறார்களே என்றுதான் ஜனங்கள் நினைப்பார்கள், காரணம் அவர்கள்தான் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.





ஆகவே பிரைஸ் லைனைப் பொறுத்த வரையிலே கவர்னர் உரை யதாரத்த நிலைமைக்குப் புறம்பாக இருக்கிறது. துவரம்பருப்பு 4 ரூபாயாக இருநதது 5-20 ஆகியிருக்கிறது. ஜூனிலே, உளுத்தம்பருப்பு 3-20 ஆக இருந்தது 4-40 ஆகியிருக்கிறது, புளி 4 ரூபாயாக இருந்தது 7-50 ஆக உயர்ந்திருக்கிறது, கடுகு—இந்தக் கடுகுக்கு என்ன கொழுப்பு வந்தது, இத்துனூண்டு கடுகு, 4 ரூபாயாக இருந்தது 6 ரூபாயாக ஆகியிருக்கிறது ஜூனிலே தக்காளி 80 பைசாவாக இருந்தது இரண்டு ரூபாயாக ஆகியிருக்கிறது. வெங்காயம் 60 பைசாவாக இருந்தது 1-10 ஆக ஆகியிருக்கிறது. உருளைக்கிழங்கு 1-30 ஆக இருந்தது 2 ரூபாயாக ஆகியிருக்கிறது. இப்படி ஏறியிருக்கக் கூடிய பொருள்கள் சொல்லவில்லை. சுமாராக இருக்கக் கூடிய அரிசியை எடுத்துக்கொண்டால், பச்சை அரிசி ரூ. 2-20 ஆக இருந்தது 2-40 ஆக ஆகியிருக்கிறது, புழுங்கல் அரிசி ரூ. 2-00 ஆக இருந்தது, 2-20 ஆக ஆகியிருக்கிறது, இது தான் யதார்த்த நிலைமை. இவையெல்லாம் ஜனங்கள் அன்றாடம் பயன்படுத்திக்கொண்டிருக்கிற எஸென்ஷியல் கமாடட்டீஸ். இதிலே பொதுவாக குறிப்பிடவில்லை. அத்தியாவசியம் பண்டங்களைப் பற்றிய ஒட்டு மொத்தமான நிலைமைத்தான் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது யதார்த்த நிலைமைக்கு மாறாக இருக்கிறது.

அந்த உண்மையை அரசாங்கம் ஏன் மறைக்க நேர்ந்தது? விலைவாசி ஏற்றத்திற்கான பொறுப்பு அரசாங்கத்தினுடையது தான் இது எடுத்த தவறான நிலைதான் இதற்குக் காரணம். விலைவாசிக்கு மத்திய அரசாங்கத்தினுடைய பல்வேறு பைனான்சியல் பாலிசீஸ் தான் காரணம் என்பது எங்களுடைய கருத்து. கவர்னர் உரை என்ன சொல்கிறது என்றால் அத்தியாவசியப் பண்டங்களின் விலைவாசிகளைக் கட்டுக்கோப்புக்குள் கொண்டுவர அரசு எடுத்துக் கொண்டுள்ள விழிப்பான நடவடிக்கைகள்தான் காரணம் என்று சொன்னால், தட் மீன்ஸ், அத்தியாவசியப் பண்டங்களின் விலைகளைக் கட்டுப்படுத்தக்கூடிய அதிகாரம் எங்களுக்கு இருக்கிறது—அந்த பவர்ஸ் எங்களுக்கு இருக்கிறது என்று ஒப்புக்கொள்வதாக அர்த்தம் வருகிறது. It 's a very dangerous Premises இந்த மாதிரி நிலைமையிலே பின்னாலே அதுவே ‘பூமராங்’ ஆக மாறி ஒரு அஸ்திரதை விட்டால் அதுவே திரும்பி வந்து எப்படி

அடிக்குமோ அதுவே வந்து நம்மை அடிக்கும் நிலைமை தான் வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பின்னாலே மத்திய அரசாங்கத்தினுடைய பைனான்சியல் பாலிசியிலே 'பர்தர்' திருப்பம் வந்தால் விலைவாசிகள் ஏறிவிட்டால் அப்போது அரசாங்கம் உண்மையைச சொல்ல வேண்டிய நிலைமை வந்து விடும். டெல்லி அரசாங்கம்தான் காரணம் என்று சொல்ல வேண்டிய நிலைமை வரும். விலைவாசிகள் இறங்கும் போது நாங்கள் பொறுப்பு என்றும் ஏறுகிறபோது டெல்லி பொறுப்பு என்று சொன்னால் மக்கள் என்ன கேட்க மாட்டார்களா? ஆகவே இந்த விஷயத்திலே யதார்த்தமான நிலைமை அரசுக்கு இருக்க வேண்டும். விலைவாசிகள் ஏறியிருக்கக் கூடிய பல பொருட்களை விநியோகிப்பதற்கான கடைகளைத் திறக்க அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக மொழிப் பிரச்னை. இந்தி பற்றிக் கவர்னர் உரையிலே கூறுவது என்னவென்றால், "எனினும், பிரதமரின் வாக்குறுதிகளை மறுதலிக்கும் வகையில், மைய அரசின் சில அமைச்சரகங்கள் தொடர்ந்து இந்தியைத் திணிக்கும் முயற்சிகள் மேற்கொள்வது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது" என்பது. அந்தக் கண்டனம் கரெக்டான கண்டனம் தான். ஆனால் அதிலிருந்து சில அமைச்சரகங்கள்தான் இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று நிர்ணயிப்பதாக இருக்கிறது. உதாரணமாகக் கோப்புகளில் இந்தியில் குறிப்புகள் எழுதுவது சம்பந்தமாக நாம் இதுவரைக்கும் நினைத்து வந்தது, சமீபத்தில் சில அமைச்சரகங்கள் தான் செய்து கொண்டிருக்கிறார்கள் பிரதமர் உறுதியளித்தும்கூட என்று. ஆனால் அதுதான் இல்லை. மைய அரசு போட்டிருக்கின்ற ஒரு புரோகிராமின் அடிப்படையிலேதான் எல்லா அமைச்சரகங்களும் இந்த வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அது இப்பொழுது ஆரம்பிக்கப் பட்ட புரோகிராம் அல்ல. 1970-லேயே அந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. சமீபத்தில் லோக் சபாவில் ஒரு ரிப்போர்ட் சமர்ப்பிக்கப் பட்டிருக்கிறது. அந்த ரிப்போர்ட்டை Table of the House-ல் வைத்தார்கள். அந்த ரிப்போர்ட்டின் பேரில், "இந்திய யூனியனின் பல நிர்வாகத் தேவைக்காக இந்தியைப் படிப்படியாக உபயோகப்படுத்தவும், அதற்காக



இந்தியைப் பரவச் செய்யவும், வளரச் செய்யவும் திட்டம் பற்றியும், அதை அமலாக்குவது பற்றியும், 1973-74, 1974-75 ஆண்டுகளின் பரிசீலனை அறிக்கை" என்று வைக்கப்பட்டது. அந்த ரிப்போர்ட் என் கையிலே இருக்கிறது. அதில் 17, 18-ஆம் பக்கங்களில் என்ன சொல்கிறார்கள் என்றால், 1973-74, 1974-75 ஆண்டின் நிர்ணயிப்பு, "இருமொழிக் கொள்கையின்படி, ஒவ்வொரு மத்திய அரசு ஊழியரும், தனது நிர்வாகப்பணிக்கு இந்தியோ, ஆங்கிலமோ உபயோகப்படுத்தலாம் இருப்பினும், இந்தி தெரிந்த ஊழியர்கள், கோப்புகளில் இந்தியிலே குறிப்புகள் எழுத ஊக்குவிக்கப்பட வேண்டுமென்று எல்லா அமைச்சரகங்களும், இலாக்காக்களும் அவ்வப்பொழுது கேட்டுக்கொள்ளப் பட்டன. கீழே தரும் விவரங்கள் இந்தியில் குறிப்புகள் எழுதும் அமைச்சரகங்களின் இலாக்காக்களின் எண்ணிக்கை பெருகியுள்ளதை காணலாம். கோப்புகளில் இந்தியில் குறிப்புகள் எழுதும் கோப்புகளில் இந்தியில் குறிப்புகள் எழுதும் அலுவலகப் பிரிவுகளின் எண்ணிக்கை, 1960-ல் 176 ஆக இருந்தது. 1975-ல் 683 ஆக பெருகியது.

அந்த ரிப்போர்ட்டிலே கொடுக்கிறார்கள், 1969-இல் 176; 1970-இல் 250; 1971-இல் 359; 1972-இல் 448; 1973-இல் 515; 1974-இல் 534; 1975-இல் 683; இப்படி என்று சொல்லி அந்த ரிப்போர்ட்டிலே குறிப்பிடுகிறார்கள், From 1970 onwards it is regularly going on. இப்படி நடந்து கொண்டிருக்கிறது.

மேலும் அந்த ரிப்போர்ட் என்ன கூறுகிறது என்றால், "இந்தி தெரிந்த அதிகாரிகள், தங்களது நிர்வாகப் பணிகளில் இந்தியை உபயோகப்படுத்துவதன் மூலம், தங்களுக்குக்கீழ் உள்ள சிப்பந்திகளையும் அப்படிச் செய்விக்க ஊக்குவிக்கப்பட வேண்டுமென அவ்வப்பொழுது கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். இதன் விளைவாக இப்படி இந்தி உபயோகப்படுத்தும் அதிகாரிகளின் எண்ணிக்கை 1970-ல் 124 ஆக இருந்தது, 1975-ல் 465 ஆக உயர்ந்தது." இதிலிருந்து என்ன புலனாகிறது என்றால் 1970-லிருந்தே, அதாவது கனம் எதிர்க்கட்சித் தலைவர் முதலமைச்சராக இருந்த பொழுதிலிருந்தே, திருமதி காந்தி மத்திய அரசில் தங்கு தடையின்றி மறைமுகமாக Stealthity அமல் நடத்திக்கொண்டே வந்திருக்கிறார்கள் என்பது தெரிகிறது.

அவர்கள் செய்து வந்த அந்த வேலையை ஜனதா அரசு போட்டி போட்டுக்கொண்டு வேகமாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே இப்பொழுதைய தேவை என்னவென்றால், மத்திய அரசு போட்டிருக்கிறார்களே

Programme and implementation for accelerating the spread and development of Hindi, etc.

இந்த புரோகிராம் இருக்கிறதே, இந்த புரோகிராமையே ரத்து செய்ய வேண்டும்.

It is not just a question of Prime Minister's assurance. This is a total Programme.

அடிக்கடி அந்தக் கோரிக்கையை வைப்பதற்கு என்ன அவசியம்? அஃபிஷியல் லாங்குவேஜ் ஆக்ட் இருக்கிறதே என்று சொல்கிறார்கள். அரசியல் சட்டத்தில் நேருவின் வாக்குறுதியை, அஷ்யூரன்சைச் சேர்க்க வேண்டுமென்பது முக்கியமான பிரச்னையாக வருகிறது. ஆனால் மொழிப் பிரச்னைக்கு நான் கடைசியிலே சொல்லியிருக்கின்ற இரண்டு சொல்யூஷன்கள் மட்டும் தீர்வாகாது என்பது என்னுடைய கருத்து.

பிரதமர் கூறுகிறார், "இந்தியைத் திணிக்கமாட்டோம் ஆனால் தொடர்பு மொழி இந்தியாகத்தான் எதிர்காலத்தில் இருக்கும்." என்று. அப்படிச் சொல்வதன் அர்த்தம் என்ன? இந்தித் திணிப்பைச் சிறிது காலத்திற்கு ஒத்தி வைக்கிறார் என்று அர்த்தம். இப்பொழுது திணிக்கவில்லை, பிறகு He is postponing evil day என்பதுதான் அது. அது தீர்வாகாது.

(பிற்பகல் 12-20)

அதேபோல் இன்னொரு கோஷம். 'English ever' என்றென்றைக்கும் ஆங்கிலம் என்பது. எங்களுடைய கட்சிக் கருத்து, அப்படிப்பட்ட கோஷம் கொடுப்பதும், மொழிப் பிரச்னைக்கு நமது நாட்டில் தீர்வளிக்காது என்பது.

இன்னும் சிலர் என்ன சொல்கிறார்கள் என்றால், இந்தி மொழியையே எதிர்ப்போம் என்கிறார்கள். அப்படி ஒரு நிலை எடுப்பதும் சாதாரண இந்தி பேசும் மக்களை இந்தி வெறியர்களுக்கு அதரவாக நாமே 'மொபிலைஸ்' பண்ணிக் கொடுப்பதற்கு, அந்தக் கோஷம் அவர்களுக்குத்தான் பயன்படுமே தவிர, நமக்குப் பயன்படாது என்று நாங்கள் கருதுகிறோம். ஆகவே, உண்மையான தீர்வுக்கு முதலில் ஒரு உண்மையை அங்கீகரிக்க





வேண்டும். அது என்ன உண்மையென்றால், ஜனநாயக இந்தியாவில், பொது official language என்பது இருக்க முடியாது. we are clear about it. ஏனென்று சொன்னால், ஆயிரக்கணக்கான ஆண்டுகளில் இந்தியா ஒன்று என்று இருந்ததில்லை. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஒரு மைய அரசாங்கமும் இருந்ததில்லை. பிரிட்டிஷ் வந்தபிறகுதான், ஒரு 'நேஷன்' என்பது அவர்கள் உருவாக்கியது. பிரிட்டிஷ் வந்தபிறகுதான் மைய அரசு என்பது உருவானது. ஆகவே, மத்திய அரசு வந்தபிறகு அவர்களுடைய மொழியை அவர்கள் நிர்வாக மொழியாக ஆக்கிவிட்டார்கள். அப்படி ஒரு 'பாக்கிரவுன்ட்' இருக்கிறது.

ஆகவே, இந்திய நாட்டின் ஜனநாயகத் தன்மையைப் பாதுகாக்க வேண்டுமானால் மைய நிர்வாகத்தை மக்களின் எல்லா மொழிகளிலும் நடத்த வேண்டும். அதுதான் 'சொலூஷன்', 'ப்ராக்டிகல் ப்ராப்ளம்ஸ்', அது, இது என்று சொல்லலாம். ஆனால், மைய நிர்வாகத்தை மக்களின் எல்லா மொழிகளிலும் நடத்துவதுதான் தீர்வாக இருக்கும். அது 'பர்மனென்ட் சொலூஷன்'. செலவாகாதா என்று கேட்பார்கள். செலவாகும். ஆனால், செலவைப் பார்ப்போமானால், இதைச் செய்யத் தவறினால் வரக்கூடிய விளைவு என்னவென்றால், You will lose the nation itself. நாட்டையே இழப்பீர்கள். இரண்டு இடத்திலும் கலகம் நடக்கும், இந்தி பேசாத மக்கள் இருக்கிற பகுதியிலேயும் கலகம் நடக்கும். இந்தி பேசுகிற மக்கள் இருக்கிற பகுதியிலேயும், ஆங்கிலத்தை ஏன் திணிக்கிறீர்கள் என்று கலகம் நடக்கும். Ultimately there will be no nation. ஆகவே, நாடே இருக்காது.

ஆகவே, நாங்கள் சொல்கிறோம், செலவு பார்க்காமல், இந்த நாட்டினுடைய ஒற்றுமைக்காக, இந்த நாட்டினுடைய ஒருமைப்பாட்டுக்காக, இந்த நாட்டிலேயுள்ள சகல மக்கள் பேசும் மொழியையும், அவரவர்கள் மத்தியிலே பேசுவதற்கோ, எழுதுவதற்கோ, பதில் பெறுவதற்கோ பயன்படுத்தவேண்டும். The price that we have got to pay— இதிலே ரூபாய் கணக்குகளைப் பார்க்கக் கூடாது என்பது என் கருத்து. இந்த நிலை நடைமுறைக்கு வந்தபின் இதன் விளைவாக பல்வேறு மொழி பேசும் மக்கள் மத்தியில், சமூக, பொருளாதார, சிந்தனை இணைப்புகள் வளர, தங்களின் தேவைக்கேற்ப, மக்கள் தங்களுக்குள் ஒரு தொடர்பு மொழியை நடைமுறையில் வளர்ப்பார்கள், என்றுதான் நாங்கள் எதிர்பார்க்கிறோம். ஆகவே, அந்த நிலையில், இப்படி இன்றைக்குள்ள நிலையில், தொடர்பு மொழி வேண்டாமா, தொடர்பு மொழி வேண்டாபா என்று 'கொஸ்டியனை' 'போஸ்' பண்ணுவது, தொடர்பு மொழி என்ற பெயரிலே இந்தியைத் திணிப்பதற்குத்தான். அதோடு, நமக்கு வரக்கூடிய பிரச்னை என்னவென்றால், மற்ற மாநிலங்களில் இருக்கக்கூடிய மொழிகள், தாய்மொழி என்றால், எல்லா தாய்மொழிகளுக்கும் சமத்துவம் என்ற பிரச்னை வந்த பிறகு அந்தத் தாய்மொழிதான் கட்டாயமாக அந்தந்த மாநிலத்தில் இருக்கும். அதற்குமேலே யார், யார், என்ன, என்ன மொழி

வேண்டும், எந்த, எந்த மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறாரோ, அந்தந்த மொழியைக் கற்றுக்கொள்ள, அந்தந்த மாநிலத்திலே அவரவர்களுக்கு 'ஆப்ஷன்' வேண்டும், அந்த 'ஆப்ஷனுக்கு' சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த முறைதான் சரியாக இருக்கும் என்று கூறவிரும்புகிறேன்.

ஊழலை ஒழிப்பதுபற்றி இந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. எங்கள் நிலையைப் பற்றி, போன கூட்டங்களில், 'பேசிக் பொசிஷனை' விளக்கியிருக்கிறோம். ஆனால், நான் சொல்ல விரும்புவது, மக்கள் பல பகுதிகளில் ஊழலை எதிர்த்துப் போராடும்போது, 'வெஸ்டட் இன்டரஸ்ட்ஸ்', பயங்கரமான ஆயுதங்களோடு எதிர்க்கிற மக்களைத் தாக்கும்போது, அரசாங்கம் ஊழலை எதிர்க்கின்ற மக்களுக்குச் சரியான பாதுகாப்பும், சகல விதமான உதவிகளும் கொடுக்க வேண்டுமென்ற அம்சத்தை மட்டும்தான் நான் வலியுறுத்துகிறேன். ஏனென்றால், சமீபத்தில் என் அனுபவம். நாகைத் துறைமுகத்திலே ஏற்றுமதி, இறக்குமதி கம்பெனி ஒன்று இருக்கிறது. பல ஆண்டுகளாக, இறக்குமதி செய்யும்போது, அரசாங்கத்தினுடைய சொத்தைத் திருடினார்கள். 10,000 டன் யூரியா இறக்குமதி செய்யும்போது, 8,000 தான் ரெக்கார்ட் செய்வார்கள். அங்கேயிருந்து கரை ஏற்றும்போது விழுந்துவிட்டது, இங்கே வரும்போது விழுந்துவிட்டது, சேதம் ஆயிற்று என்றெல்லாம் சொல்லி, 2,000 டன்னை ஃப்ரீயாக கொள்ளை அடிப்பது அவர்கள் வழக்கம். ஒரு ஷிப் வரும்போது 2,000 டன் ஃப்ரீயாக கொள்ளை அடிப்பது அந்தக் கம்பெனி வழக்கம். எப்படி சம்பாதிக்கிறார்கள் பாருங்கள்?

ஆகவே இந்த நிலைமை நாட்டுக்கும் நஷ்டம், சர்க்கார் சொத்தும் நஷ்டம். அந்த 2,000 டன் இறக்கியதற்குத் தொழிலாளர்களுக்குக் கூலி கிடையாது. காரணம் அது ரெக்கார்டிலே இல்லை; ஆகவே தொழிலாளர்கள் எதிர்த்தார்கள், அதுதான் அவர்கள் செய்த குற்றம். ஆனால் அந்த கம்பெனியின் தந்திரம் என்ன தெரியுமா? போலீசைக் கைக்குள் போடுவது, தொழிலாளர்கள் மீது குண்டர்களை ஏவிவிடுவது, தொழிலாளர்கள் பேரில் கேஸ் போடுவது, அதன் மூலமாக அவர்களைப் பணிய வைப்பார்கள். அதன் பிறகு அவர்கள் தொடர்ந்து திருடுவார்கள். நாங்கள் எழுத்து மூலமாக நாளைக்குக் காலை கலவரம் நடக்கப்போகிறது" தொழிலாளர்களை எதிர்த்து என்று எழுத்து மூலமாகக் கொடுத்தும் எந்தவிதமான நடவடிக்கையும் காவல் துறையினரால் எடுக்கப்படவில்லை. ஆனால் நாங்கள் சொன்னதைப் போல கலவரம் நடந்தது. தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. கலவரம் நடந்த பிறகு அந்த இடத்திற்குப் போலீசார் சென்றார்கள். பிறகு யார் தாக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்கள் மீது கேஸ் போடப்படுகிறது. 8 தண்டல்களுக்கு வேலை





கொடுக்காமல் பழிவாங்கப்படுகிறார்கள். Except Superintendent of Police, all other Police officials-Circle Inspector, Sub-Inspectors and D.S.P. மற்ற அனைவரும் இந்தத் திருடர்கள் கூட்டத்தின் பக்கத்திலேயே இருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் இதை சீரியசாகக் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது நாகப்பட்டினத்தில் மட்டும் அல்ல, எல்லாப் பகுதிகளிலும் நடைபெறுகிறது.

அடுத்து போர்ட் ஆபிசரின் நடத்தையும் திருப்திகரம் என்று சொல்லமாட்டேன், That is how I put it. ஊழலை எதிர்க்கும்போது, அந்தத் தைரியம் மக்களுக்குத் வரும்போது மக்களுக்குத் தைரியம் கொடுக்கும்படியான நிலைமையை உருவாக்க வேண்டும். நிர்வாக இயந்திரத்தை ஸ்டிரீம் லைன் பண்ண வேண்டும். என்னுடைய கோரிக்கை இந்த கேஸ்கள் எல்லாம் வாபஸ் பெறப்பட வேண்டும். அதுமட்டுமல்ல; அந்த 8 தண்டல்களுக்கு மறுபடியும் வேலை வாங்கிக் கொடுக்க வேண்டும். அதுமட்டுமல்ல அந்தப் போர்ட்டிலே நடக்கின்ற பில்பரேஜ் விஷயமாக என்குயரி பண்ணினால், இதிலே யார் யார் சம்பந்தப் பட்டிருக்கிறார்கள் என்பது தெரியும்.

அடுத்து டி.வி.எஸ். பற்றி ஒரு வார்த்தை. பாடியிலே நடந்தது என்ன என்பதைப் பற்றி மறைந்த டி. எஸ். கிருஷ்ணா அவர்கள் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்கள். என்னமோ டி. வி. எஸ். ல் கோ ஸ்லோ, தொழிலாளர் ஒழுங்கீனம், தொழிலாளர் வன்முறை என்றெல்லாம் பத்திரிகைகளில் விளம்பரம் செய்தனர். ஆனால் இப்போது மறைந்த டி. எஸ். கிருஷ்ணா அவர்கள் எப்படித்தான் நடத்தினோம் என்று படம் பிடித்துக் காட்டியுள்ளார். 1948-ல் மதுரை டி.வி.எஸ். தொழிலாளிகளின் யூனியனை, தான் எப்படி உடைத்தேன் என்று மயூன் வேய்னர் என்ற ஆங்கில எழுத்தாளரிடம் கூறியது "Political behaviour of Groups' என்கிற கட்டுரையில் சொல்லியிருக்கிறார்.

"நான் வெளிநாட்டிற்கு சென்றபோது, கம்யூனிஸ்டுகள் எனது நிறுவனத்தில் ஒரு வேலை நிறுத்தத்தை துவக்கினர். நான் உடனே நாட்டிற்கு திரும்பி வந்து கம்யூனிஸ்டு சங்கத்தை உடைக்கும் பணியில் இறங்கினேன்;.... அரசு மூலம் வேலை நிறுத்தத்தை சட்ட விரோதமென பிரகடனப் படுத்திச் செய்தேன். அதைப் பயன்படுத்தி 1800 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்தேன்.... கம்யூனிஸ்டுகளை அடித்து நொறுக்குவதற்கு எங்களது சில தொழிலாளிகள் கையில் தடிகளை கொடுத்தோம், (லட்டிஸ் என்று ஆங்கிலத்தில் இருக்கிறது-ஸ்டிக்ஸ் என்று தமிழில் இருக்கிறது) எனது பாக்கியம்: எனக்குப் போலிசின் மகத்தான ஆதரவு இருந்தது. போலீஸ் எனக்கு நண்பர்களாக இருந்தனர்.... டி. வி. எஸ். சில் ஒரு ஐ. என். டி. யு. சி. யூனியன் அமைக்க ஏற்பாடு செய்தேன்...... எப்படியும் ஒரு யூனியன் அமையும் என்பதினால் அது எனக்கு

அனுதாபமாக இருக்கும் யூனியனாக இருப்பது நல்லது என்பதற்காக இப்படிச் செய்தேன். எனக்காக வேவு பார்ப்பதற்கு தொழிற்சாலையினுள்ளும், சங்கத்தினுள்ளும் நான எனது உளவாளிகளை அமர்த்தினேன் ...... கம்யூனிஸ்டுகளைக் கட்டுபடுத்த வேண்டுமானால் ஜபர்தஸ்து நடவடிக்கைகள் எடுக்கத்தான் வேண்டும்."

இது டி. எஸ். கிருஷ்ணா சொன்னது. இதுதான் பாடியில் நடந்தது. இதை அமைச்சர் புரிந்துதான் அவ்வப்போது தன் எண்ணங்களை வெளிப்படுத்தினார் (குறுக்கீடு) இது "Political behaviour of Groups" என்ற புத்தகம். வருஷம் தெரியவில்லை. வேண்டுமானால் நான் முதலமைச்சருக்கு இந்தப் புத்தகத்தை அனுப்பிவைக்கிறேன்.

(பிற்பகல் 12-30)

வன்முறைக்கு ஆளாக்கப்பட்ட அந்தத் தொழிலாளர்கள் மீது போடப்பட்ட கேஸ்களை வாபஸ் பெறவேண்டும். ஏன் என்றால் நிர்வாகமே அவர்களுக்கு தடி கொடுத்த காரணத்தால் தான் அங்கே அப்படி நடந்தது. அதைத்தான் முதலமைச்சர் அவர்களும் சொன்னார், குண்டர்கள் அங்கே வளர்க்கப்பட்டிருக்கிறார்கள், அதனால் வன்முறை இருந்தது என்று. ஆகவே, வன்முறையில் ஈடுபட்டார்கள் என்று சொல்லி போடப்பட்ட கேஸ்கள் வாபஸ் பெறப்பட வேண்டும். சங்கத்தை உடைக்க டிஸ்மிஸ் செய்யப்பட்டவர்கள் வேலைக்கு மறுபடியும் எடுத்துக்கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும். அரசிடம் நிர்வாகம் ஒப்புக் கொண்டு இருக்கிற ஒப்பந்தத்தை அமல் படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். வாயில் கூட்டம் போடுவதற்கு அரசாங்கத்தின் கையில் இருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி, அதற்கான உத்தரவைப் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சேரன் டிரான்ஸ்போர்ட் கழகத்தில் ஒரு துர்ப்பாக்கியமான சம்பவம் ஏற்பட்டு இருக்கிறது. இங்கே காலையில் கூட விவாதம் நடந்தது. எனக்கு அதில் வருத்தம் தான். என் வருத்தத்தைப் பற்றி மற்றவர்கள் வருத்தப்பட வேண்டாம். நானே வருத்தப்படுகிறேன். அதிலே இருக்கும் மற்ற விவரங்களின் உள்ளே நான் போக விரும்பவில்லை. இப்படி எரிக்கப்பட்டு ஒருவர் செத்து இருக்கிறார். அவர் செத்த பிறகாவது அவர்களுடைய ப்ராப்ளம் அட்லீஸ்ட் நியாயம் தானா என்று இந்தச் சபையில் விவாதிப்பதற்கு, பல்வேறு விவரங்களை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு இருக்க வேண்டும் It is a thing for us அதிலே ஒரு விஷயத்தை அரசாங்கத்தின். கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். காலையில் அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது சொன்னார்கள்—'டையிங் டிக்ளரேஷனில்' அவர் சொல்லி இருக்கிறார், இன்னின்னார் தூண்டிவிட்டு



இந்தக் காரியத்தைச் செய்து இருக்கிறார்கள் என்று. ஒருவர் இறக்கிற நேரத்தில் கொடுத்த அறிக்கை தான் It is an authoritative document ஆனால் அங்கேயிருக்கும் * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் சொல்வதை ஆதாரத்தோடு சொல்கிறீர்களா ? பொறுப்பேற்றுக்கொண்டு சொல்கிறீர்களா ? காவல் துறையினர் விசாரணை செய்கிறார்கள், இது வழக்கு மன்றத்திற்குச் செல்லும் சூழ்நிலை இருக்கிறது.

திரு. ரா. உமாநாத் : நான் ஆதாரம் வைத்திருக்கிறேன். பொறுப்பேற்றுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : சட்டப்பேரவை தலைவரவர்களே, பொறுப்பேற்றுக்கொண்டு சொல்கிறேன், ஆதாரத்தோடு சொல்கிறேன் என்று அவர்கள் சொன்னாலும் அந்தப் பிரச்னை நீதிமன்றத்திற்கு வந்து, அங்கு விசாரணை செய்வதற்கு முன்பே ஒரு எண்ணத்தை நீதிபதிக்கு ஏற்படுத்துகிற வகையில் இங்கே கருத்துச் சொல்வது சரியல்ல என்பது என்னுடைய கோரிக்கை. அவர் கருத்துக்களைச் சொல்லட்டும். அதை வெளியிட அனுமதிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. உமாநாத், காலையிலேயே அமைச்சர் அவர்கள் காவல் துறையால் தடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதற்கான புலன் விசாரணை நடைபெற்று வருகிறது என்று சொன்னார்கள். இந்தப் பிரச்னையில் நாம் தெரிவிக்கின்ற கருத்துக்கள் அந்த காவல் துறை நடவடிக்கைக்கு ஊறுவிளைவிக்கக் கூடியதாக இருக்கக்கூடிய நிலையில் அமைந்து விடக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். ஆகவே, அதைப்பற்றி தாங்கள் விரிவாகப் பேசவேண்டாம். சாட்சிகள், ஆதாரங்கள் இருந்தால் அதை முதலில் என்னிடத்தில் காட்டிவிட்டுப் பேசவேண்டும். இப்படிப்பட்ட நிலைமைகளை வளர்த்துக் கொண்டு போவது சரியல்ல அதைத் தாங்களே திரும்பப் பெற்றுக்கொள்வது நல்லது.

திரு. ரா. உமாநாத் : எதற்கு உட்பட்டு பேசவேண்டும் என்று விதி இருக்கிறது. சப்ஜூடிஸ் என்றால் பேசக் கூடாது. சப்ஜூடிஸ் என்றால் கோர்டில் டிரையல் நடக்கிறபோது அதைப்பற்றி பேசக் கூடாது. அது தான் டெசிஷனை பாதிக்கும். ஆனால் இது இன்வெஷ்டிகேஷன் ஸ்டேஜில் தான் இருக்கிறது.

* மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : விதிமுறை காட்டுங்கள் என்று சொல்கிறார்கள். விசாரணையில் இருப்பதில் எதைப்பேசலாம், எதைப்பேசக்கூடாது என்ற முறைகள் எல்லாம் மாண்புமிகு உமாநாத் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. இங்கே நாம் பேசுகின்ற செய்திகள் வெளியே வருகின்றபோது அங்கே விசாரணை நடத்துகின்றவர்கள் அந்த விசாரணையை நடத்துகிற போது எந்த நிலைக்கு அவர்கள் உள்ளம் ஆளாகிவிடும் என்பதை எண்ணிப் பேசவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உண்மையைக் குறைத்து பொதுமக்களுக்கு அவைகள் தெரியாமல் செய்து விட வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு இல்லை. தங்களுக்குத் தெரிந்தவைகளை வழக்கு மன்றத்தில் வைத்தால் விசாரணை நடக்கும்போது கொண்டு போய் கொடுத்தால், நீதிபதிகளுக்கு நிச்சயமாக அவை உதவியாக இருக்கும் என்பதைப் பணிவோடு நான் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : மேலும் இதைப்பற்றி நான் பேசினால் நேரம் வீணாகும். அதனால் இந்த பாயின்டை இதோடு நிறுத்திக் கொள்கிறேன். என்னுடைய கருத்து என்னவென்றால் முன்ஜாக்கிரதையாக இருந்திருந்தால் அந்த உயிரைக் காப்பாற்றியிருக்க முடியும்.

இதற்கு முன்னாலே இப்படி ஒரு சம்பவம் நடந்தது. சி. பி. ஐ. தோழர் ஒருவர் அடிக்கப்பட்டார். அது 8 மாதத்திற்கு முன்னால்; ஒர்க் ஷாப்பில். அடித்து அவருடைய வீட்டில் கொண்டுபோய் போட்டு விட்டார்கள். முன்னால் பிரைவேட் செக்டாரில்-டி.வி.எஸ்ஸில் வைத்திருப்பதுபோல 100,200 ஆட்களை வைத்திருப்பார்கள். அவர்கள்தான் எல்லாவற்றையும் கன்ட்ரோல் செய்வார்கள். கிராமப்புறத்தில் ஏதாவது டிக்கெட் தகராறு வந்து, விவசாயி யாராவது கண்டக்டரை அடித்துவிட்டால், அந்தக் கண்டக்டர் முதலாளியிடம் போய் சொல்லி, அவர்களுடைய ஆட்களை அந்த பஸ்ஸிலே அனுப்பி, அந்த கிராமத்தில் போய் விவசாயியை அடித்து விட்டு வருவார்கள். அது அப்போது அவர்களுடைய 'நாஷனலைசேஷன்'. இப்போது உங்களுடைய 'நாஷனலைசேஷனிலும்' அப்படித்தான் நடக்கிறது.

காலையிலே தொழிலாளர்கள் பாதுகாப்பு வேண்டுமென்று நிர்வாகத்தினருக்கு அப்பீல் செய்தார்கள் ஆனால் பாதுகாப்பு தரவேண்டுமென்று கேட்ட 16 தொழிலாளர்களை டிஸ்மிஸ் செய்து விட்டார்கள். பாதுகாப்பு வேண்டுமென்று கேட்டவர்களுக்கு டிஸ்மிஸ். ஆனால் அடித்தவர்களுக்கு ஒன்றுமில்லை; பாதுகாப்புக் கேட்டவனுக்குத் தண்டனை. இது என்ன நியாயம்? முதலமைச்சர் இதற்குத் தெளிவாக பதில் சொல்வார் என்று நினைக்கிறேன். அடித்ததாலும், இப்படிப் பாதுகாப்பு கேட்டவர்களை டிஸ்மிஸ் செய்ததாலும் ஏற்கெனவே ஒரு 'டக்ப்' வந்து, இந்த பரிதாபகரமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது.





அங்கே, சி. டி. சி.—யில் தொழிற்சங்கத்தின் உரிமை மதிக்கப்படுகிறதா இல்லையா? அது சம்பந்தமாக ஒரு விசேஷ என்குயரி நடத்த வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். ஸ்பெஷல் என்குயரி வைத்து, தொழிலாளர்கள் பிரச்னை என்ன என்பதை இந்த தியாகத்திற்குப் பிறகாவது கண்டறிந்து, வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்டர்-ஸ்டேட் ரிலேஷன் பற்றி சில வார்த்தைகள். தமிழ்நாட்டு பொருளாதாரத்தைப் பெருக்கக் கூடுதல் நிதி ஆதாரங்களைப் பெற மத்திய அரசு வற்புறுத்தப்பட்டிருக்கிறது. அது சரியானது என்பது மட்டுமல்ல, நிதி ஆதாரம் தேவை, அவசியமும் கூட. ஆனால் மத்திய மாநில உறவுப்பிரச்சனை வெறும் நிதி ஆதாரத்தோடு நிற்க முடியாது. கூடுதல் அரசியல் அதிகாரமும் தேவை என்பது முக்கியம். பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரம், போக்குவரத்து போன்றவைகளைத் தவிர அனைத்து அதிகாரங்களும் மாநிலங்களுக்கு வரவில்லை என்றால் பொருளாதாரத்தில் நிச்சயமாக முன்னேற முடியாது.

ஸ்டேட் லிஸ்டில் இருக்கக்கூடிய சப்ஜெக்டுக்குக்கூட நாம் சட்டம் இயற்றினால் மத்திய சர்க்கார் அனுமதி இருந்தால்தான் அது சட்டமாகும், இல்லை என்றால் முடியாது. இருக்கிற அதிகாரத்திற்கே மத்திய சர்க்காரின் அனுமதி தேவைப்படுகிறது என்றால் எக்னமிக் டெவலப்மென்ட் எப்படி முடியும்?

கவர்னர் போஸ்டுக்கு இங்கே என்ன வேலை இருக்கிறது? அரசாங்கம் தயார் செய்து கொடுக்கிற ஒரு அறிக்கையைப் படிப்பதற்கு கவர்னர் போஸ்ட் தேவையா? இங்கே இருக்கிற முதலமைச்சரே அதைப் படிக்கலாமே. யூனியன் டெரிட்டரிஸ் என்றால் கவர்னருக்குப் பிடிக்காத ஒரு ஆட்சி இருந்தால் அதைக் கவிழ்ப்பதற்குக் கூட அவருக்கு அதிகாரம் இருக்கிறது. மற்ற மாநிலங்களைப் பொறுத்தமட்டில் மாநில அரசின் முதுகுப்புறமாக மத்திய அரசுக்கு ரிப்போர்ட் செய்கின்ற அதிகாரம்தான் இருக்கிறது. அந்த ரிப்போர்ட்டை வைத்துக்கொண்டு அவர்கள் மாநில அரசை டிஸ்மிஸ் செய்யலாம். அதாவது கத்தி நம்முடைய தலைக்குமேலே தொங்கிக் கொண்டிருக்கிற மாதிரி அது.

இந்த அரசாங்கத்திற்கு உட்பட்ட ஒரு யூனிவர்சிட்டி துணை வேந்தரை நியமிக்கக்கூட மாநில சர்க்காருக்கு அதிகாரம் இல்லையா? இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இருந்தால், நான் சொல்ல விரும்புவது அதிக அதிகாரம் இல்லாமல், மாநில சுயாட்சி இல்லாமல் பொருளாதார முன்னேற்றம் இருக்க முடியாது. இந்த சர்க்கார் அதில் உறுதியாக இருக்க வேண்டும்.

[திரு. ரா. உமாநாத்] [1978 செப்டம்பர் 2

[பிற்பகல் 12-40]

தலைவரவர்களே, இன்னும் ஒரு சில பிரச்சினைகளை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். மாநில சுயாட்சியை திராவிட முன்னேற்றக்கழகம் வலியுறுத்தி வருகின்றது. இது ஒரு நியாயமான நிலை. இது ஒரு கரெக்ட் பொசிஷன். இதை நாங்கள் வரவேற்கிறோம். இதை இப்போதல்ல பல காலமாகவே நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் ஒரு விஷயத்தை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாடு மட்டும் மத்திய அரசிடம் இருக்கக் கூடிய கான்சன்ட்ரேஷன் ஆப் பவர்ஸை டீசென்ட்ரலைஸ் பண்ண வேண்டும் என்று கேட்டால் கிடைக்குமா. அனைத்து மாநிலங்களும் சேர்ந்து ஒன்று பட்டு மாநில சுயாட்சி தேவை என்று மத்திய அரசுக்கு பிரஷர் கொடுத்தால்தான் இதிலே வெற்றி அடைய முடியும். மற்ற மொழிகளைப் பேசுபவர்களையும் இதிலே ஈடுபடுத்தினால்தான், அதாவது அந்நிய மொழிகளைப் பேசுகின்றவர்களை எதிர்க்கின்ற போக்கினை விட்டு விட்டு அவர்களையும் சேர்த்துக்கொண்டால் தான் இது சாத்தியமாகும். அதை விட்டு விட்டு பிரித்துப் பேசுவது என்பது மாநில சுயாட்சி கிடைப்பதற்கே வேட்டு வைப்பது போலாகும். இதைத் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நாங்கள் மூன்று வருடங்களுக்கு முன்பே அதாவது எமர்ஜன்சி வருவதற்கு முன்பே எடுத்துச் சொன்னோம். நாங்கள் ஒரு சிறு கட்சியாக இருந்தாலும் இதை வலியுறுத்திச் சொன்னோம். ஆகவே எல்லோரையும் ஒன்று படுத்தி எல்லோரும் சேர்ந்து நடவடிக்கை எடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் பேசும்போது உடுமலைப்பேட்டை சம்பவத்தைப் பற்றி கொஞ்சம் விரிவாகப் பேசி இருக்கிறார்கள். அது எந்த அளவுக்கு விசாரணைக்கு குந்தகம் விளைவிக்கும் என்று நான் ஆய்ந்து பார்க்கிற வரை அதைப் பத்திரிகையிலே வெளியிட வேண்டாம் என்று உத்தரவிடுகிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, நீதி மன்றத்தின் விசாரணைக்கு வந்த பிறகு அதைப்பற்றி பேசுவது தவறு என்று சொல்லலாம். ஆனால் நண்பர் உமாநாத் அவர்கள் பேசும் போது போலீஸ் புலன் விசாரணையில் ஈடுபடுகின்ற அதிகாரிகளுக்கு உதவுகின்ற வகையிலே தான் சொல்லி இருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இப்படி போலீஸ் விசாரணைக் கட்டத்தில் கூட எதையுமே சொல்லக் கூடாது என்று சொன்னால் பல உண்மைகளை உறுப்பினர்களாகிய நாங்கள் அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லுகின்ற வாய்ப்பினை இழந்து விடுவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1978 செப்டம்பர் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போலீஸ் விசாரணையிலே இந்தக் கருத்துத்தான் சொல்லப்படுகிறது என்பதை இங்கேயுள்ள உறுப்பினர்கள் யூகித்துக்கொண்டு பேசுவது கூடாது. இங்கே இவர் இவ்வாறு சொல்வதால் அங்கேயுள்ள போலீஸ் விசாரணைக்கு இடையூறாக இருந்து அதற்குக் குந்தகத்தை விளைவிக்கிறதா என்பதைப் பரிசீலித்துப் பார்த்த பிறகு நான் தீர்ப்பு அறிவிக்கிறேன் என்றுதான் சொல்லி இருக்கிறேன்.

(திரு. க. சுப்பு அவர்கள் பேசுவதற்கு எழுந்தார்)

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, நீங்கள் பரிசீலித்துப் பார்த்து முடிவு சொல்கிற வரைக்கும் அந்த விவரத்தை பப்ளிஷ் பண்ணக் கூடாது என்று சொல்லி இருக்கிறீர்கள். நீங்கள் நாளைக்கு முடிவு சொன்னால் அதனை நாளைக்கு அவர்கள் பப்ளிஷ் பண்ண மாட்டார்கள். நீங்கள் மெம்பர்ஸுடைய டிஸ்அட்வான்டேஜையும் பார்க்க வேண்டும். நீங்கள் பொதுவாக இதை நல்லெண்ணத்தோடு சொன்னாலும், நீங்கள் பரிசீலித்துப் பார்த்து உத்தரவு போடுகிறேன் என்று சொல்வது ரூல்ஸ்-க்குட்பட்டு நான் பேசியதைக்கூட பாதிக்கும். ஆகவே இன்வெஸ்டிகேஷன் ஸ்டேஜிலே பேசுவதற்கு உறுப்பினர்களுக்கு உரிமை உண்டு; ஆகவே சப்ஜுடிஸ் என்று சொல்லி அந்த உரிமையை மறுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : சட்டப் பேரவைத்தலைவரவர்களே, நான் குறுக்கிட்டு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அதாவது ஆபத்துக்குட்பட்டவரைக் கொண்டு போகும்போது டாக்டர் அருகில் காத்து செயல்பட்டிருந்தார் என்று அவர் சொல்லியதை வெளியிட வேண்டாம் என்று நான் மறுக்கவில்லை. அப்படிக் கூறவும் இல்லை. ஆனால் எந்த நோக்கத்தோடு அவர் இறந்தார் என்பதைப் பற்றி அவர் கூறும் அந்த கருத்து வர வேண்டாம் என்பதுதான் என்னுடைய கோரிக்கை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, எது சம்பந்தமாக இருந்தாலும் குற்றம் என்ற ஒன்று நடைபெற்றுவிட்டால் உடனே கேஸ் பதிவாகிவிடும். ஆனால் சட்டப்படி அது நீதிமன்றத்திலே கொண்டு வரப்பட்டு வழக்கு விசாரணை நடந்து கொண்டிருக்கும் போது அது பற்றிப் பேசுவது தவறாகும். அது சப்ஜுடிஸ் என்று சொல்லலாம். ஆனால் நீதிமன்றத்திலே இன்னும் எடுத்துக் கொள்ளப்படாத நிலையில் இருக்கும் போது அதைப்பற்றிப் பேசுவது எப்படி சப்ஜுடிஸ் ஆகும்? நீங்களே தீர்ப்புச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தானே எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் சொன்னார்கள். நீங்களும் அதையே திரும்பவும் சொல்லி ஏன் நேரத்தை வீணாக்க வேண்டும்?

அதாவது சில பிரச்சினைகள் குற்றப் பத்திரிகை வெளியிடுவதற்கு இடையூறாக இருந்துவிடுமோ, அதன் பிறகு அது வேறு திசையில் திரும்பக் கூடுமோ என்பதை நான் ஆய்ந்து பார்த்தாக வேண்டும். ஆகவே என்னதான் நீங்கள் விதிகளின்படி பேசினாலும், அதை எல்லாம் குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்வதற்கு முன்பு பேசக் கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து. * * * என்றெல்லாம் பேசக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களிடம் ஒரு வேண்டுகோள். இந்தச் சட்டமன்றம் தமிழ்நாட்டினுடைய அனைத்து மக்களுடைய நல்வாழ்விற்கும், உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கும் உள்ள சட்டமன்றம். காவல் துறை சில நேரங்களில் வெவ்வேறுவிதமாக நடந்து விடுகிறது என்பது முதல் அமைச்சர் அவர்களுக்கும் தெரிந்த ஒன்று. எனவே, தெரிந்த உண்மைகளைச் சிலபேர் சொல்கிற காரணத்தால் அதுவே உண்மை என்றாகி விடாது. உண்மை இருந்தால் அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப் பயன்படும். உண்மை இருக்கிறதா என்று அறிய அது ஒரு வாய்ப்பாக இருக்குமே தவிர அதனால் பெரியகுறை ஏற்படாது என்பதைப் பணிவோடு தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னதை மீண்டும் ஒருமுறை சொல்லிவிடக் கருதுகிறேன். அந்த ஆபத்துக்கு உள்ளாக்கப் பட்டவரைக் கொண்டுபோகும்போது இப்போது கைதுசெய்யப் பட்ட குமாரவேலு அவர்கள் அந்த மருத்துவரோடு இருந்தார் என்று சொன்னால் யாரும் அதை ஆட்சேபிப்பதற்கில்லை. ஆனால் அவர்கள் * * * என்று சொன்னால் வேறு ஒரு கதை பிறக்கிறது. அதைத்தான் வேண்டாம் என்று சொல்கிறேன். அதைத்தான் பேராசிரியர் அவர்களும் சொல்கிறார்கள். அதைத் தான் குறிப்பேட்டிலிருந்து நீக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் பேசிய, * * * என்ற பிரச்னைகளை மட்டும் குறிப்பேட்டிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

*திரு. அ. க. அரங்கநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதலில் நன்றி தெரிவித்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



துக் கொள்கிறேன். அண்ணா அவர்கள் சமதர்ம சமுதாயத்தை ஏற்படுத்த, பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில் ஏற்றத் தாழ்வுகளைப் போக்கமுடியும் என்றார்கள்.

குறிப்பாக, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட கிராமப்பகுதி மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவும், சமுதாய வாழ்க்கையில் ஒழுக்கம், கட்டுப்பாடு, அமைதியான சூழ்நிலையில்ஒருவருக்கொருவர் இணைந்து வாழக்கூடிய வகையில், அந்தத் தத்துவத்தின் அடிப்படையில் ஆளுநர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டிருப்பதை, அண்ணா அவர்களின் கோட்பாடுகளை மிக அழகாகச் சேர்த்திருப்பதைக் கண்டு என் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, விவசாயத்தைப் பொறுத்து ஆளுநர் ஆட்சிக் காலத்தில் மின்சாரக் கட்டணம் 16 காசாக இருந்தது. ஆனால் இன்று அதே விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, 12 காசாகவும், 10 காசாகவும் இன்று இந்த அரசினால் கட்டணம் குறைக்கப் பட்டிருக்கிறது. விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உரம், பூச்சி மருந்து, நிலவரி தள்ளுபடி செய்தல், கடன் வசூல் ஒத்திவைப்பு, கடன்களுக்கான வட்டிக் குறைப்பு என்று பத்து கோடி ரூபாய் அளவிற்கு விவசாயப் பெருங்குடி மக்களுக்காக குறைத்துக் கொடுக் கப்பட்டிருக்கிறது. மேலும் விவசாயப் பெருங்குடி மக்களின் முன்னேற்றத்திற்கான பல திட்டங்களை ஆளுநர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டிருப்பது பாராட்டுக்குரியது.

குறிப்பாக தொழிலாளர் பிரச்னையில், போக்குவரத்துத் தொழிலாளர்களின் கோரிக்கைகள் 1973-ல் இருந்து 1975 வரை இதற்கு முன் இருந்த அரசால் கவனிக்கப்படாமல் அவர்கள் அடக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டு, பல தொழிலாளர்கள் பழி வாங்கப்பட்டு பலர் பாதிக்கப்பட்டார்கள். அவர்களில் 98 பேர் களுக்கு இந்த அரசு ஏற்பட்டபிறகு வேலைவாய்ப்பு அளிக்கப் பட்டிருக்கிறது. கவனிக்கப்படாமல் தேங்கிக் கிடந்தக் அரசாங்க அலுவலர்களின் கோரிக்கைகளைக் கவனித்து இன்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மூன்றாவது சம்பளக் கமிஷனை அமைத்து அவர்களின் அறிக்கை பெறப்பட்டு உத்தரவுகள் வழங்கப்பட இருக்கின்றன என்று ஆளுநர் அவர்களது உரையில் குறிப்பிட்டிருப்பதும் மிகவும் பாராட்டுக்குரியதாகும். உணவுத் துறையை எடுத்துக் கொண்டால் அதுபற்றி ஆளுநர் அவர்களது உரையில் குறிப்பிட்டிருப்பதும் பாராட்டுக்குரியதாகும். 1975-ம் ஆண்டுக்கு முன்னால் தமிழகத்தில் அத்தியாவசிய உணவுப்பொருள்கள் கட்டுக்கடங்காமல் விலைகள் எல்லாம் ஏறியிருந்ததை நாட்டு மக்கள் நன்கு உணருவார்கள். இன்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்ற பிறகு ஓராண்டுக் காலத்தில் உணவு உற்பத்தி பெருகியிருக்கிறது, தன்னிறைவு பெறுகிற அளவிற்கு உணவு உற்பத்தி பெருகியிருக்கிறது.

(பிற்பகல் 12.50)

ஆனால் அதற்கு முந்திய ஆண்டில் 53 லட்சம் டன் அரிசி தான் உற்பத்தியாகியிருக்கிறது. அப்போதிருந்ததை விட இப்போது 10 லட்சம் டன் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றது. இதன் காரணமாக உணவு நிலைமை சீரடைந்தது. சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டன, எங்கு வேண்டுமென்றாலும் கொண்டு போகலாம் என்று மக்களுக்கு உரிமை வழங்கப்பட்டது. கட்டுப்பாடுகள் ரத்து செய்யப்பட்டதின் காரணமாக விலை அதிகமாக வேகமாகக் குறைந்திருக்கிறது. சாதாரண மக்கள், நடுத்தர மக்கள், கிராமப்புற மக்கள் வாங்கக் கூடிய அளவுக்கு ஒரு கிலோ அரிசி 1 ரூபாய் 80 காசு என்றும், ஒரு ரூபாய் 90 காசு என்றும் சாதாரண மக்கள் வாங்கக்கூடிய அளவுக்கு இந்த ஓராண்டுக் காலத்தில் கொண்டு வந்து, மேலும் விலை ஏறாமல் பார்த்துக்கொண்டு அரிசி கொடுத்துக்கொண்டு வருகிறது என்பதை ஆளுநர் அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டிருப்பது மிக மிகப் பாராட்டுவதற்குரியதாகும். 1975-ல் ஒரு கிலோ அரிசி வாங்க வேண்டுமென்றால் அப்போது அரிசி 3 ரூபாய்க்கு விற்றது. ஏழை மக்கள் வாங்கும்படியான அளவுக்குக் கட்டுப்படியான விலை இல்லாமல், பொருட்களை எல்லாம் பதுக்கி வைத்துக்கொண்டு, சில அரசியல்வாதிகளின் ஒத்துழைப்போடு விலையை ஏற்றிக் கொண்டே இருந்தார்கள். இன்றைக்கு ஓராண்டு காலமாக, இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு விலையேற்றம் தடுத்து நிறுத்தப்பட்டது. எண்ணெய் விலைகளை எடுத்துக்கொண்டால், நல்லெண்ணெய் என்றிருந்தாலும் சரி, கடலை எண்ணெய் என்றிருந்தாலும் சரி, மிளகாயாக இருந்தாலும் சரி, பருப்பாக இருந்தாலும் சரி, தனியாவாக இருந்தாலும் சரி, இவைகளின் விலை சற்று ஏறியிருந்தாலும், சாதாரண மக்கள் வாங்க முடியாத அளவுக்கு இல்லாமல், சாதாரணமாக வாங்கக்கூடிய அளவுக்கு மக்கள் சக்தியுள்ளவர்களாக இருக்கக்கூடிய நிலை இந்த ஓராண்டு காலத்தில் ஏற்பட்டிருக்கிறது.

இந்த ஓராண்டுக் காலத்தில் மக்களுக்கு வாங்கும் சக்தியை உருவாக்கி இந்த அரசு அதற்குண்டான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. பதுக்கல்காரர்களையும், கொள்ளை லாபக்காரர்களையும், நடுத்தரகர்களையும் சமூக விரோதச் செயல்களையும் ஒடுக்கியதன் விளைவாக விலையேற்றத்தைத் தடுத்து நிறுத்தியிருப்பது எல்லோருக்கும் நன்கு தெரிந்த விஷயம். விலை உயராமல் இருப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக, ஏழை மக்கள், சாதாரண மக்கள், இன்றைக்கு நல்ல முறையில் உணவுப்பொருட்களை வாங்க முடிகிறது.





அதுமட்டுமல்ல, நாட்டில் பல்வேறு இடங்களில், 16 ஆயிரம் நியாயவிலைக் கடைகளைத் திறந்து, அதில் அத்யாவசியப் பொருட்களைக் கிராம மக்களுக்கு உணவுத் துறையின் மூலமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதைக் கவர்னர் உரையில் குறிப்பிட்டிருப்பது பாராட்டுதற்குரியதாகும்.

அதற்கடுத்தபடியாக மின்சாரத்தை எடுத்துக்கொண்டால் 1972-முதல் கோடை காலம் என்றால், பொதுமக்கள், விவசாயிகள், தொழில் அதிபர்கள் மின்சார வெட்டு வருமே என்று அஞ்சிக் கொண்டிருந்தார்கள். நமது புரட்சித் தலைவர் அவர்களின் கட்சி ஆட்சிப் பொறுப்பில் வந்ததற்குப் பின்னால், இந்த ஓராண்டுக் காலத்தில் மின்சார வெட்டு என்றாலே என்னவென்று மக்களுக்குத் தெரியவில்லை. சாதாரண மக்களானாலும் சரி, தொழிலதிபர்களாக இருந்தாலும் சரி இன்றைக்கு மின்சாரம் எல்லோருக்கும் கிடைக்கின்றது. மின்சார வெட்டு என்பது கடந்த ஓராண்டுக் காலத்தில் நடைபெறவில்லை. கடந்த 12 மாதங்களில் 936 கோடி யூனிட்டு மின்சாரத்தைப் பொது மக்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, கிணறுகளுக்கு மின்சார இணைப்புக் கொடுப்பதில் விவசாயப் பெருங்குடி மக்களின் துன்பத்தைக் கருத்திற்கொண்டு செயல்பட்டிருப்பதைக் கவர்னர் உரையில் குறிப்பிட்டிருப்பது மிகவும் பொருத்தமாகும், பாராட்டுதற்கும் உரியதாகும்.

குறிப்பாக, குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சுதந்திரம் அடைந்து 30 ஆண்டுகளுக்கு மேலாகியும், குடிக்கத் தண்ணீர் இல்லாத கிராமங்கள் பல இன்னும் இருக்கின்றன. 300 பேர், 400 பேர் என்று இருக்கக்கூடிய பல கிராமங்களில் குடிப்பதற்குத் தண்ணீரே இல்லாத நிலைமை. குடிப்பதற்குத் தண்ணீர் வேண்டுமென்றால், ஒரு மைல் தூரம் சென்றுதான் தண்ணீர் எடுத்து வரவேண்டும். நமது புரட்சித் தலைவர் அவர்கள், நாடாளுமன்றத் தேர்தலின் போதும், சட்டமன்றத் தேர்தலின் போதும், இப்படி ஒரு மைல் தூரம் நடந்து சென்று தண்ணீர் எடுத்து வருகின்ற சம்பவங்களைப் பார்த்த பிறகு குடிநீர் வாரியத்தின் மூலமாகப் பல்வேறு முன்னேற்றகரமான திட்டங்களைத் தீட்டி மக்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். குடிதண்ணீரே இல்லாத கிராமங்கள், குடிப்பதற்குத் தண்ணீர் இருந்தாலும், அந்தத் தண்ணீர் உப்புத் தண்ணீராக இருப்பதால் குடிக்கத் தண்ணீர் இல்லாமல் இருப்பது, இப்படி இருக்கின்ற கிராமங்களுக்கெல்லாம் தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்காக 24 கோடி ரூபாய் செலவு செய்து 1979-ம் ஆண்டுக்குள் இப்படிப்பட்ட எல்லா கிராமங்களுக்கும் அதாவது ஏறத்தாழ 5000 கிராமங்களுக்கும் இந்த வசதியைச் செய்து கொடுப்பதற்காக வேண்டிய நடவடிக்கைகளைச் செய்திருக்கின்றோம். இன்னும் உலக வங்கியின் மூலமாக 140

கோடி ரூபாய் பெற்று பாதாள சாக்கடைத் திட்டங்களும், பல் வேறு குடிநீர்த் திட்டங்களும் நடைபெற்று வருவதைக் கவர்னர் உரையில் குறிப்பிட்டிருப்பதை நான் மிகவும் பாராட்டக்கடமைப் பட்டிருக்கிறேன். மதுரை மக்களுக்குக் கல்லாற்றிலிருந்தும், கோவை நகரத்திற்குச் சிறுவாணி ஆற்றிலிருந்தும், ஆந்திராவி லிருந்து கிருஷ்ணா ஆற்றிலிருந்தும், அதேபோல் கேரளாவில் மேற்கே நோக்கி ஓடும் ஆற்றிலிருந்து, கேரளா அரசாங்கத் தோடு பேசி அங்குள்ள நீரைத் தமிழகத்திற்குக் கொண்டுவந்து, இராமநாதபுரம், நெல்லை, கோயம்பத்தூர் போன்ற மாவட் டங்களிலுள்ள வறட்சிப் பகுதிகளுக்குக் குடிநீர் வசதிசெய்து கொடுப்பதற்கும், விவசாயிகளுக்குப் பாசன வசதி செய்து கொடுப் பதற்கும் இன்றைக்குப் புரட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட் டிருப்பது உண்மையிலேயே பாராட்டத்தக்கதாகும்.

குறிப்பாக, இங்கே பேசிய நம்முடைய சட்டமன்ற உறுப் பினர், அருமை நண்பர் திருவேங்கடம் அவர்கள் வட ஆற்காடு மாவட்டத்திலே மிகவும் பயங்கரமான தண்ணீர்ப் பஞ்சம் வந்து விட்டதுபோலக் குறிப்பிட்டார்கள். வட ஆற்காடு மாவட்டத் திலே பாலாறு ஓடுகின்றது. அப்படிப் பாலாறு ஓடுகின்ற பகுதியிலே எங்கே தோண்டினாலும் தண்ணீர் வருகின்றது. இராணிப்பேட்டையில் தோண்டினாலும் தண்ணீர் வரும்; ஆம்பூரில் தோண்டினாலும் தண்ணீர் வரும்; வேலூரில் தோண்டி னாலும் வரும்; ஆற்காட்டில் தோண்டினாலும் தண்ணீர் வரும்; வாலாஜாவில் தோண்டினாலும் தண்ணீர் வரும். ஆகவே, வட ஆற்காடு மாவட்டத்தில் தண்ணீர்ப் பஞ்சம் என்று சொல்வது எவ்வாறு பொருந்தும் என்பது எனக்குத் தெரியவில்லை.

இன்றைக்கு வட ஆற்காடு மாவட்டத்தை எடுத்துக் கொண் டால், பவர் பம்புகள் 10,000 போடப்பட்டிருக்கின்றன. வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங் களிலே உள்ள பம்புகளையெல்லாம் நிர்வகிக்கும் பொறுப்பைக் குடிநீர் வடிகால்வாரியம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. இவைகளிலே 895 பம்புகளை இன்றைக்குக் குடிநீர் வடிகால் வாரியம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அவைகளிலே 208-ஐ ரிப்பேரோடு ஏற்றுக்கொண்டோம். ரிப்பேர் செய்து 169 பம்புகள் போடப் பட்டு விட்டன; மீதி இருக்கின்றது....

* திரு. பெ. சு. திருவேங்கடம்: குடிநீர் வாரியத்தின் தலைவர் அவர்கள் வட ஆற்காட்டில் பாலாறு ஓடுகின்றது என்று சொன்னார்கள். பாலாறு வட ஆற்காட்டின் வடக்குப் பகுதியிலே ஓடுகின்றது; எங்கள் பகுதிகளிலே ஓடுகின்றது என்று சொல்ல முடியாது. ஆளும் கட்சி உறுப்பினர்களே, அதிலும் குறிப்பாக சோளிங்கர் தொகுதியைச் சேர்ந்த திரு. எஸ். ஜே. இராமசாமி அவர்கள் வளர்ச்சி மன்றக் கூட்டத்தி லே தண்ணீர்ப் பஞ்சத்தைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். அது



பத்திரிகைகளிலேயும் வந்திருக்கிறது. தலைவர் அவர்களே, எங்களுடைய பகுதியிலே தண்ணீர்ப் பஞ்சம் இருக்கின்றது. இல்லாததைச் சொல்லவில்லை, இருப்பதைத்தான் சொல்லியிருக் கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. க. அரங்கநாதன்: இன்றைக்கு 208 பம்புகளிலே 169 ரிப்பேர் செய்து போடப்பட்டிருக்கிறது. மீதி 39 பம்புகள் ரிப்பேர் செய்யப்படவில்லை. ஏன் என்று சொன்னால், சில பஞ்சாயத்துக்களிலே மின்சார இணைப்பு வாங்குகிறோம் என்று அதற்கான பில் வாங்கியிருக்கிறார்கள், அப்படி பில்லை வாங்கி விட்டு, பணத்தை ஏப்பம் விட்டிருக்கிறார்கள். மின்சார இணைப்பு இல்லை. இன்னும் சில இடங்களில் பம்பு வாங்க வேண்டுமென்று அதற்கான பில்லை வாங்கியிருக்கிறார்கள். ஆனால், பம்பு இல்லை. சில இடங்களில் ஸ்டார்ட்டர் இல்லை. கிணறுகள் தோண்டப் படவில்லை. ஆகவே, அந்த 39 பம்புகள் நிறுத்தப்பட்டிருக் கின்றன. குறிப்பாக, திருவண்ணாமலை, கலசப்பாக்கம் போன்ற பகுதிகளில்தான் கிணறுகளில் மோட்டார்கள் இல்லாமல், அதனால் தண்ணீர் இல்லாமல் இருந்தது. ஆனால், குடிநீர் வடி கால் வாரியம் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, உடனடியாக அந்தப் பகுதிகளிலே தண்ணீர் கிடைக்கச் செய் திருப்பதை நான் இந்த நேரத்திலே பெருமையோடு தெரிவித் துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திருவேங்கடம் அவர்கள் எந்த இடத்தில் குறிப்பாகத் தண்ணீர் இல்லை என்பதைத் தெரி விப்பார்களானால், அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்து, அவருடைய பகுதிக்குத் தண்ணீர் கிடைப்பதற்கு வழிவகை செய்யத் தயாராக இருக்கிறேன் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்குப் பேரறிஞர் அண்ணா அவர்களின் இரு மொழிக் கொள்கையைப் புரட்சித் தலைவரவர்களுடைய ஆட்சி தொடங்கி தமிழ் மொழி புத்துயிர் பெற்று வருகின்றது. இந்தி எதிர்ப்புப் போராட்டம் விரைவில் வருமென்றும், அதற்கு ஒரு இளைஞர் பேரணியே போராடத் தயார் என்றும் குறிப்பிட்டிருப்பது பாராட்டுதற்குரியதாகும். நம்முடைய தந்தை பெரியார் சுய மரியாதை இயக்கத்தின் தலைவர், பகுத்தறிவுப் பாசறையின் சிங்கம், அவருடைய நினைவாக அஞ்சல் தலை வெளியிட தமிழக அரசின் சார்பாகப் புரட்சித் தலைவர் மத்திய அரசை அணுகியதன் விளைவாக, இன்றைக்கு மத்திய அரசு அஞ்சல் தலை வெளியிட ஒத்துக்கொண்டிருப்பது, பாராட்டுதற்குரிய ஒன்று என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மதுரைப் பல்கலைக்கழகத்திற்கு இந்தத் தமிழ் நாட்டினுடைய பெருந் தலைவராகிய காமராஜ் அவர்களுடைய பெயரை வைத் திருப்பது மிகவும் பொருத்தமாகும். தேசியவாதிகளும், இந்த

நாட்டின் சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்ட தமிழக மக்களும் இது ஒரு தூய்மையான சின்னம் என்பதை ஏற்றுக் கொள்வார்கள்.

அதேபோன்று, பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரால் தொழில்நுட்பப் பல்கலைக் கழகம் ஒன்றுக்குப் பெயரிட்டிருப்பதை மனமார வரவேற்கிறோம்.

[பிற்பகல் 1-00]

குறிப்பாக லஞ்ச ஒழிப்பைப் பற்றிக் கவர்னர் அவர்கள் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். தொழில் நுட்பக் கல்லூரியானாலும், தொழில் நுட்பப் பள்ளியானாலும், பட்டப் படிப்பானாலும், பொறி இயல் கல்லூரிகளானாலும், மருத்துவக் கல்லூரிகளானாலும் கடந்த ஓராண்டுக் காலத்தில் எங்கேயாவது லஞ்சம் தாண்டவமாடியிருக்கிறது என்று எதிர்க்கட்சி நண்பர்கள் சுட்டிக் காட்டுவார்களானால் குற்றம் செய்திருந்தால் உளமாரத் திருத்திக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். இந்த ஓராண்டுக் காலத்தில் கடந்த 30 ஆண்டு கால லஞ்சத்தை ஒழித்து தூய்மையான நிர்வாகத்திற்கு வழிவகுக்கப்பட்டிருக்கிறது என்பதை எதிர்க்கட்சி நண்பர்களுக்கு இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

புரட்சித் தலைவர் அரசு லஞ்ச லாவண்யம் இல்லாத ஊழலற்ற அரசு, நிர்வாகத்தில், நீதித் துறையில் தலையிடாத அரசு, ஆளும் கட்சியினரும், அரசியல்வாதிகளும் தலையிடாத அரசு, ஓராண்டு காலமாகத் தீவிர நடவடிக்கை எடுத்ததன் காரணமாக, திட்டமிட்ட செயலின் காரணமாக, லஞ்சத்தை மெல்ல மெல்ல ஒழிப்பதில் புரட்சித் தலைவர் அவர்கள் செயலாற்றி வந்திருக்கிறார்கள். பிற மாநிலங்கள் எல்லாம் பாராட்டுகிற அளவுக்கு, வரவேற்கிற அளவுக்குப் புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் லஞ்சத்தை ஒழித்து வருகிறது இந்த அரசு. ஆகவே, புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையை நீங்கள் ஒத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமைகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. பொ. விஜயராகவன் : பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரையின் மீது ஜனதாக் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு இந்த ஆளுநர் உரையில் ''நிர்வாக இயந்திரத்தைச் செம்மைப்படுத்தி, மக்களின் தேவைகளுக்கேற்ற வண்ணம் விரைந்து செயல்படுத்துவதற்கேற்ற வகையில் பல்வேறு நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து எடுத்து வருகின்றது'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.





ஆனால் எங்களைப் பொறுத்தவரை ஒட்டுமொத்தமான கணிப்பு என்னவென்றால், நிர்வாக இயந்திரத்தைப் பொறுத்தவரை இன்றைக்கு அது ஆமை வேகத்தில் சென்று கொண்டிருக்கிறது என்று எடுத்துச் சொல்லாமல் இருக்க முடியாது.

இன்றைக்குப் பார்த்தால் சென்னைப் பல்கலைக் கழகத்தில் துணை வேந்தர் பதவிக்குக்கூட இன்னும் நியமிக்கப்படாத நிலைமை இருக்கிறது; சட்டக்கல்வி இயக்குநர் என்ற அந்தப் பதவிகூடப் பல்லாண்டுகளாக நிரப்பப்படாமல் இருக்கிறது. டைரக்டர் ஆப் மெடிகல் செர்விசஸ்-மருத்துவத் துறை இயக்குநர் பதவியும் நிரப்பப்படவில்லை. எங்களுடைய மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் முதன்மைக் கல்வி அதிகாரி பதவிகூட நிரப்பப்படாமல் இருக்கிறது. நிர்வாகப் பொறியாளர் பதவி கூட மூன்று மாதங்கள் கழித்துத்தான் நிரப்பப்பட்டது. இவ்வளவும் அல்லாமல் பள்ளிக் கல்வி இயக்குனர் பொறுப்புக்கானவரைத் தேர்ந்தெடுப்பதிலும் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. நேற்றைய தினம் நம்முடைய சுகாதாரத் துறைச் செயலாளர் ஒரு கருத்தரங்கில் பேசும்போது 192 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 44 நிலையங்களில் டாக்டர்கள் இல்லையென்ற கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். இப்படி நிர்வாகத்தில் பொதுவான இடங்களில் தடங்கல் இருக்கின்றன அல்லவா. அதிகாரிகள் நியமிக்கப்படாத காரணத்தால் நிர்வாக இயந்திரம் சுறுசுறுப்பாகப் பணியாற்ற முடியாத நிலைமையில் இருக்கிறது. பார்லிமென்டரி செகரடரிஸ் - பாராளுமன்றச் செயலாளர்களை அறிவித்திருக்கிறார்கள். அமைச்சர்களைக் கூட பல்வேறு துறைகளுக்குப் போட்டிருக்கிறார்கள். இவர்கள் தங்கள் பொறுப்புகளை உணர்ந்து செயல்பட்டால் நிர்வாகத்தில் தடங்கல்கள் ஏற்பட வழி இல்லை. பார்லிமென்டரி செகரடரிஸ் பொறுப்புகள் என்ன என்று வரையறுக்கப்படவில்லை. ஆங்காங்கு அவர்கள் செல்லுகிறபோது துணை அமைச்சர்கள் என்று போடுகிறார்கள். எங்களுக்கு அவர்களைத் துணை அமைச்சர்கள் என்று போடுவதில் ஆட்சேபனை இல்லை. ஆனால் அவர்களுடைய பொறுப்பை வரையறுக்க வேண்டும். தமிழக நிர்வாக இயந்திரம் சீரும் சிறப்புமாக நடைபெறுமானால் அதை வரவேற்கத் தயாராக இருக்கிறோம். பல்வேறு நிலைமைகளை எடுத்துச் சொல்ல வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கிறது.

எங்களுடைய மாவட்டத்தில் கல்குளம் தாலுகாவில் தலைமை நகரமான தக்கலையில் ஒரு மருத்துவமனை இருக்கிறது. அரசு மருத்துவ மனை. தினமலர் என்ற நடுநிலைப் பத்திரிகையில் கூட செய்திகளை வெளியிடும்போது 'பூலோகத்தில் ஒரு நரகத்தைப் பார்க்க வேண்டுமென்றால் தக்கலை மருத்துவ மனையைப் பாருங்கள்' என்று செய்தி வெளியிடுகிறார்கள். போராட்டங்கள் கூட நடைபெற்று வருகின்றன. அதை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. பொ. விஜயராகவன்] [1978 செப்டம்பர் 2

இன்னொன்று, அங்கே ஊராட்சிகளுக்குத் தனி அதிகாரிகளை நியமித்து அவர்கள் வீட்டு வரியை உயர்த்துகின்ற அளவிற்கு நிலைமை இருக்கிறது. அதனால் ஏழை மக்கள் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். அவர்கள் கட்ட முடியாத அளவிற்கு நிலைமை வந்திருக்கிறது, போராட்டம்கூட வந்து விடுமோ என்ற அளவிற்கு எரிமலை வெடிப்பதற்கான சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதை அரசு கவனத்தில் கொண்டு மீண்டும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் வருகின்ற வரையில் தனி அதிகாரிகளை நியமிக்காமல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வர்கள் வந்தபிறகு செயலாற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்திலே 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பனையேறுகின்ற தொழிலாளர்கள் வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை, நாமெல்லாம் சொல் வோமே, வறுமைக்கோட்டுக்குக் கீழே என்று அந்த நிலையிலே இருந்து வருகிறது. அவர்கள் தொழிலை நடத்த முடியாத அளவிற்குத் துன்பப்படுகிறார்கள், காரணம் அவர்கள் உற்பத்தி செய்கிற கருப்புக்கட்டிக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை. அரசாங்கம் நியாயமான விலையை நிர்ணயிக்கவேண்டும். மேலும் அவர்களுக்குத் தேவையான விறகுகள் கூட அவர்களுக்குக் கிடைக்காத நிலை இருக்கிறது, காட்டு இலாகாவின் மூலமாக அவர்களுக்குத் தேவையான விறகுகளைக் குறைந்த விலையிலே கிடைக்கச் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அவர்களுக்காக 2,000 பேர்களுக்கு 300 ரூபாய் வீதமும், 6 ஆயிரம் பேர்களுக்கு 50 ரூபாய் வீதமும், கடன் அளிக்கப் போவதாகத் திட்டம் இருப்பதாகப் பத்திரிகைகளிலேயும் பேப் பரிலேதான் இருக்கிறதே தவிர செயல்படுத்தப்படவில்லை. ஆகவே அதையும் துரிதப்படுத்த வேண்டும்.

அடுத்து, நாகர்கோவிலிலே ஒரு தொழிற் பயிற்சிப் பள்ளி இயங்கி வருகிறது. அது மிகவும் பழமையானது. அங்கே 'டர்னிங்' போன்ற பல தொழில் பயிற்சிகள் விரிவாக்கப்படவில்லை. அங்கே ஒரு இடத்திற்கு 20 மாணவர்கள், 30 மாணவர்கள் விண்ணப்பங்கள் போட்டிருக்கிறார்கள். இடம் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. குமரி மாவட்டத்தில் காப்பிக்காடு என்ற இடத்திலே ஒரு தொழிற்பேட்டை இருந்து வருகிறது. அங்கே எந்தவிதமான தொழிலும் நடைபெறவில்லை. சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு கோடவுனாக அதைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே அங்கே ஒரு தொழிற் பயிற்சிப் பள்ளி ஏற்படுத்தி - கன்னியாகுமரி மாவட்டம் படித்தவர்கள் நிறைந்த பகுதியாக இருக்கிற காரணத்தால் தேவைகளை உணர்ந்து மேலும் ஒரு தொழிற் பயிற்சிப் பள்ளியை காப்பிக்காட்டில் உருவாக்கித் தரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.



1978 செப்டம்பர் 2] [திரு. பொ. விஜயராகவன்]

குமரி மாவட்டம் திருவிதாங்கூர்—கொச்சியில் இருந்த பொழுது போராடி தாய்த்தமிழகத்தோடு நாங்கள் இணைந்தோம். அப்போது பல்வேறு உயிர்களைப் பறிகொடுத்து, அதன் காரணமாகக் கஷ்டப்பட்ட இளைஞர்களுக்கும் பெரியவர்களுக்கும் அந்த தியாகிகளுக்கு எல்லாம், முன்னாலே இருந்த அரசு உதவி களையும் சலுகைகளையும் பென்ஷனும் கொடுத்து வந்தது. ஆனால் அவசர நிலை வந்தபோது அந்த உதவிகளும், சலுகைகளும் நிறுத்தப் பட்டு விட்டன. அவைகளை மீண்டும் மறுபரிசீலனை செய்து வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

நீர்ப்பாசனத்தைப் பொறுத்தவரையில், சிற்றாறு-பட்டணம் காலாக இருந்தாலும் சரி, மெய்யாறு இடதுகரையாக இருந்தாலும் சரி, கோதையாறு பாசனமாக இருந்தாலும் சரி, எல்லாம் தூர்ந்து போயிருக்கின்றன, அவைகளிலே தூர் எடுக்கப்பட்டு அவைகளை மாற்றியமைத்து அங்கே இருக்கக்கூடிய விவசாயி களுக்கு நல்ல பலன்களைத் தருவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். மெய்யாறு இடதுகரையைப் பொறுத்தவரையில் கேரள அரசுடன் செய்த ஒப்பந்தத்தின்படி தண்ணீர் விடப்பட வில்லை, அப்படித் தண்ணீர் விடப்படாத காரணத்தினால் அங்கே பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் பயிரிடாமலும், பயிரிட்டாலும் கூட அந்த நிலங்கள் எல்லாம் தீய்ந்தும் போகின்றன. எனவே அதுகுறித்து கேரள அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி தண்ணீர் விடுவதற்கான ஏற்பாடுகளை அரசு உடனடியாகச் செய்ய வேண்டும்.

புதுக்கடை பேரூராட்சி, கருங்கல் பேரூராட்சி ஆகியவைகளை மையமாகக் கொண்டு பல கிராமப் பஞ்சாயத்துக்களை இணைத்து குடிநீர்த் திட்டங்களைத் தீட்டியிருந்தும், அவைகள் எல்லாம் செயல் படுத்தப்படாமல் இருக்கின்றன; அவைகளையும் அரசு துரிதமாகக் கவனிக்க வேண்டும்.

கடந்த ஆளுநர் உரையிலே 3,000 தமிழாசிரியர்களுக்குக் கோயில்களிலே வேலையளிப்பதாகச் சொல்லப்பட்டது. இன்னும் அளிக்கப்படவில்லை. அதையும் செய்ய வேண்டும்.

எங்கள் மாவட்டத்திலே கிராமப் பஞ்சாயத்துக்களை நகரப் பஞ்சாயத்துக்களாகப் பிரித்தார்கள் என்றாலும்கூட அவைகளிலே இன்றைக்கு நிதிநிலை சரியாக இல்லாத காரணத்தால் அங்கே இருக்கிற ஊழியர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்குத்தான் நிலைமை இருக்கிறது.

(பிற்பகல் 1-10)

குடிநீர்த் திட்டம் என்றால் நகரப் பஞ்சாயத்துக்கு இல்லை போ என்ற அளவில் சொல்கிறார்கள். நகரப் பஞ்சாயத்து என்று சொல்லும் அளவிற்கே இல்லாமல் கிராமப் பஞ்சாயத்துக்

களாக இருப்பதற்கே தகுதி வாய்ந்த இடங்கள் நகரப் பஞ்சாயத்துக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. தேர்தல்கூட விரைவில் வருமென்றுதான் சொல்கிறார்கள். ஜனவரியில்தான் வரும் என்று சொல்கிறார்கள். ஆகவே, அந்தத் தேர்தலுக்கு முன்பாகவே மறுபடியும் வருவாயின் அடிப்படையில் அவைகளை உருவாக்கி நல்ல முறையில் செயலாற்றுவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அளவிற்கு எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றிகூறி விடைபெறுகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் தலைமை).

திரு. செ. சிவசாமி: தலைவரவர்களே, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என்னுடைய உரையை நிகழ்த்த ஆரம்பிக்கிறேன். இன்றைய நேரத்திலே நாட்டில் பொருளாதார, வேகத்தை அதிகப்படுத்துவதற்காக, குறிப்பாக ஏழை மக்கள் மேம்பாடு அடைய வேண்டுமென்பதற்காகப் பல திட்டங்கள் தீட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அதே நேரத்தில் இன்றைக்கு விலைவாசி ஓரளவிற்குக் கட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும் முக்கியமான பொருட்களின் விலை இன்றைக்கு ஏறியிருக்கிறது என்பதை நான் குறிப்பாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், இன்றைக்குப் பல விளைப்பொருட்களைப் பற்றிப் பலர் கூறினாலும், சிமெண்டைப் பற்றி நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு ஒரு மூட்டை சிமெண்டின் விலை கிட்டத்தட்ட 30 ரூபாயிலிருந்து 37 ரூபாய் வரையில் விற்கிறது, விற்றுக் கொண்டிருக்கிறது. அவ்வாறு 30 ரூபாயிலிருந்து 37 ரூபாய் வரையில் விற்கும் சிமெண்டாவது சுத்தமாக இருக்கிறதா என்றால் அதுவும் இல்லை. பற்றாக்குறையாகவும், கலப்படமாகவும் இருக்கிறது. உதாரணத்திற்காக நான் அந்த சிமெண்டைக்கூட இங்கே கொண்டு வந்திருக்கிறேன். தலைவரிடத்தில் சொல்லி தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன், சுத்தமான சிமெண்டாகக் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் பரமக்குடியில் ஒரு கடையில் சிமெண்ட் வாங்கினேன். அந்த சிமெண்டைக் கொண்டுபோய் கொத்தனாரிடத்தில் கொடுத்துப் பூசுங்கள் என்று சொன்னேன். அந்தக் கொத்தனார் அதைப் பூசுவதற்கு மறுத்துவிட்டார். என்ன காரணம் என்று கேட்டதற்கு, இது முழுவதும் களிமண்ணாக இருக்கிறது, எப்படிப் பூசுவது என்று சொல்லி மறுத்துவிட்டார்கள். உடனடியாக நான் சம்பந்தப்பட்ட ஆபிசர்களுக்குத் தகவல் கொடுத்தேன். தாலூகா ஆபிசுக்கும், போலீஸ் ஸ்டேஷனுக்கும் தகவல் கொடுத்து, இப்படியாக இருக்கிறது என்று சொல்லிய நேரத்தில் அவர்கள் என்னிடத்தில் பதில் சொன்னார்கள்.



ரிட்டர்னாக அந்தப் பதிலைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கம்பெனியிலே நல்ல சிமெண்ட் என்று சர்ட்டிபிகேட் கொடுத்திருக்கிறார்கள் என்று ரிப்ளை தந்திருக்கிறார்கள். உடனடியாக இந்த சிமெண்ட் உண்மையிலேயே களிமண்ணும், கல்லும், மண்ணும் கலந்த சிமெண்டா அல்லது உண்மையான சிமெண்டா என்று அனலைஸ் செய்து இந்தச் சட்டசபைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுச்கொள்கிறேன்.

அடுத்து, கிழக்கு இராமநாதபுரம் டி. டி. சி. கூட்டம் நடந்தது. அதிலே இன்றைக்கு கூட்டுறவு மூலமாக கிட்டத்தட்ட 20 சதவிகிதம்தான் மக்களுக்கு ரூபாய் சேர்ந்திருக்கிறது என்று சொல்லப்பட்டது. ஏன் வாங்க மாட்டேன் என்கிறார்கள், என்ன காரணத்தினால் 20 சதவிகிதம்தான் கொடுக்கபபட்டது என்று ஆராய்ச்சி செய்ய வேண்டிய அவசியத்தில் இன்றைக்கு நடந்து இருக்கிறது கடன் கொடுப்பதற்காக 120 கோடி ரூபாய், அதுவும் இன்றைக்கு 140 கோடி ரூபாய் என்று திட்டமிட்டிருக்கிறோம் என்று சொல்லப்படுகிறது. ஏன் அந்த ரூபாய் சாதாரண ஏழை எளிய ஜனங்களுக்குப் போய் சேரவில்லை என்று சிந்திக்க வேண்டும். கிட்டத்தட்ட 253 எல். டி. பேங்குகளில் மொத்தமாக வாங்கும் நிலைமையிருக்கிறது. ஒரு பகுதி முழுவதும் மூன்றாண்டுக் காலம் ஏற்பட்ட வறட்சியாலும், கடந்த ஆண்டு ஏற்பட்ட மழை, புயலாலும் தொடர்ந்து பஞ்ச நிலைமை ஏற்பட்டிருப்பதால் வாங்கும் சக்தி இழந்த மக்கள் இன்றைக்கு எப்படிப் பயிர் செய்வது என்று தவித்துக் கொண்டிருக்கிறார்கள். உண்மையிலேயே இராமநாதபுரம் மாவட்டத்தில், அதிலும் குறிப்பாகக் கிழக்குப் பகுதியில் கடன் வாங்க முடியாத நிலைமையிருக்கிறது. சொசைட்டிகளை எடுத்துக் கொண்டால் 100-க்கு 80 பேர்களுக்கு மேல் இன்றைக்கு வட்டி கட்ட முடியாமலிருக்கிறார்கள். அதைக் காரணம் காட்டி, கொடுக்கப்பட்ட தொகை முழுவதையும், நாங்கள் கொடுக்கும் ரூபாயை அவர்கள் வாங்கிக்கொள்ள முடியாத நிலையிலே இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். 140 கோடி ரூபாயை எப்படி அந்த மக்களுக்குக் கொடுக்கப் போகிறார்கள்? இதைப்பற்றி நாங்கள் மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டு வருகிறோம்.

கடந்த பட்ஜெட் கூட்டத் தொடரின் பொழுதேகூட நான் சொன்னேன். அன்றைக்கிருந்த கூட்டுறவுத்துறை அமைச்சரவர்கள் அதை ஒத்துக் கொண்டார்கள். ரிசர்வ் பேங்க் கமிட்டி ரிப்போர்ட் கையிலிருக்கிறது. அந்தக் கமிட்டி ரிப்போர்ட்டைப் பரிசீலனை செய்கிறோம், ஆனால் மற்ற மாநிலங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை, அதனால் நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னார்கள். அந்தக் கமிட்டி ரிப்போர்ட்டில், குறிப்பாக, ஏழை எளிய மக்களுக்கு இப்படிப்பட்ட நிலைமைகள் வரும் நேரத்தில், அதாவது 'நேச்சுரல் கலாமிட்டி' வரும் நேரத்தில் எப்படி நடந்துக் கொள்ள வேண்டுமென்று தெளிவாக, குறிப்பாக நல்லமுறையில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் சொல்லியிருப்பது என்னவென்றால், ஒரு வருஷத்தில் ஒரு பகுதி பஞ்சம்

ஆகிவிட்டால் அந்தப் பகுதியில் கொடுக்கப்பட்ட கடன்களை ஏழாண்டுக் காலக் கடனாக மாற்ற வேண்டுமென்று சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. தொடர்ந்து இரண்டு வருஷங்கள் பஞ்ச மாக ஆகி, நேச்சுரல் கலாமிட்டி ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டுமென்றால், முதல் வருஷம் கொடுத்த கடன் முழுவதையும் ரத்து செய்ய வேண்டும், இரண்டாவது வருஷம் கொடுத்த கடனை ஏழாண்டுக் காலக் கடனாக மாற்ற வேண்டுமென்று சொல்லப் பட்டிருக்கிறது. எப்படியாவது 3 வருஷம் தொடர்ச்சியாக பஞ்ச மாகப் போய் விட்டால், முதலிலே கொடுத்த 2 வருஷம் கடனை 'ரைட்ஆஃப்' செய்து விட்டு, 3-வது வருஷம் கொடுத்த கடனை, 7 வருஷக்கடனாக மாற்றவேண்டுமென்று மிகவும் துல்லியமாக, தெளி வாக அந்த கமிட்டி ரிப்போர்ட்டில் சொல்லியிருக்கிறது. அதைச் சபை முன்னால் விவாதத்திற்கு வைத்து, சபையின் கருத்தை அறிய வேண்டும். இன்றைக்கு மக்கள் கடன் வாங்கவில்லை, கடன் வாங்க முடியாத நிலையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள் என்று திருப்பி, திருப்பிச் சொல்லி, அந்த மக்களை மேலும் கஷ்டத்திற்குள்ளாக்கும் நிலையிலே, வாங்கும் ஸ்தானத்தை இழந்து கொடுக்கும் ஸ்தானத்தை இழந்து, மேன்மேலும் துன்பத்திற்குத் தள்ளிக் கொண்டிருக்கிற நிலை இருந்து கொண்டிருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

ஆடிப்பட்டம் தேடி விதை என்று சொல்கிற காலத்திலே, ஆடி போய் ஆவணி நடந்து கொண்டிருக்கிறது. ஆவணியிலே வசூல் செய்யுங்கள் என்று சொல்லக்கூடிய நிலையிலேயிருந்தால் அந்த மக்கள் எப்படி விவசாயம் செய்வார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகவே தான் சொல்கிறேன், அந்த கமிட்டி ரிப்போர்ட்டை எடுத்துக் கொண்டு, முழுவதுமாக, நமது மாநிலத்திற்கு நேச்சுரல் கலாமிட்டீஸ் மூலமாக எந்த அளவு பாதிக்கப்படுகிறதோ, எந்த அளவு நஷ்டம் ஏற்படுகிறதோ, அந்த அளவை மத்திய அரசாங்கத்திடமிருந்து கேட்டு வாங்கி, அவர்களைக் கைதூக்கிவிடுவதற்குப் பதிலாக மீண்டும் சாமான்களை ஜப்தி செய்ய நடவடிக்கை எடுத்தால், அது சரியல்ல. புரட்சித் தலைவர் தலைமையில் அமைந்திருக்கிற அரசில் அவ்வாறு நடக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாட்டுமக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், இந்த நிலையில் திட்டமிட்டு சாமான்களை எடுக்கிறார்கள். எங்கள் ஊர் பஞ்சாயத்துத் தலைவர் விசுவநாதன் என்பவர். அவருக்கு 2 ஏக்கருக்குக் கீழ் நிலம் உள்ளது. அவர் வீட்டில், சி. எஸ். ஆர். அத்தனை சாமான்களையும் ஜப்தி செய்தார். நாங்கள், ஏன் ஐயா இப்படி செய்கிறீர்கள், பெரிய விவசாயிகளைத்தான் கஷ்டப் படுத்துகிறீர்கள்! $2\frac{1}{2}$ ஏக்கருக்குக் குறைவாக வைத்திருக்கிற சிறு





விவசாயிகளிடத்திலும் ஜப்தி செய்கிறீர்களே என்று கேட்ட நேரத்திலே, கடன் நீண்ட நாட்களாக இருக்கிறது, ஆகவே, ஜப்தி செய்கிறோம் என்று சொல்கிறார்கள். அந்த நிலைமை மாற வேண்டும்.

அடுத்து, $2\frac{1}{2}$ ஏக்கர் என்றும் 5 ஏக்கர் என்றும் பாகுபாடு இந்த நேரத்திலே வரக்கூடாது என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், நாடு முழுவதும் 'நாச்சுரல் கலாமிட்டீஸ்' ஏற்பட்டிருக்கிறது. நாடு முழுவதும் பஞ்சம் இருக்கிறது, நாடு முழுவதும் தண்ணீர் கிடையாது, நாடு முழுவதும் தண்ணீர் வற்றியிருக்கிறது. அப்படி இருக்கும்போது, $2\frac{1}{2}$ ஏக்கர் வைத்திருக்கிறவன் கிணற்றில் தண்ணீர் ஊறவில்லையென்றால், 5 ஏக்கர் வைத்திருக்கிறவன் கிணற்றில் மட்டும் தண்ணீர் ஊறுமா? $2\frac{1}{2}$ ஏக்கர்காரன் கிணற்றில் தண்ணீர் வர வில்லையென்றால், 5 ஏக்கர்காரன் கிணற்றில் தண்ணீர் வருமா? ஆகவே, எப்படி ஜப்தி நடவடிக்கை எடுக்கலாம் என்று கேட்கிறேன். ஆகவே, 3 ஆண்டுகளாக நாச்சுரல் கலாமிட்டீஸ் ஏற்பட்டதன் காரணமாக, கடனைத் தள்ளுபடி செய்யவேண்டு மென்ற அந்தக் கண்ணோட்டத்துடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, சிறுதொழில்கள் சம்பந்தமாகச் சொல்லப் பட்டது. சிறு தொழில்கள் ஓரளவு எங்கள் பகுதியிலே கொண்டு வருகிறோம் என்று சொல்லப்பட்டது. குறிப்பாக, தீப்பெட்டி தொழிற்சாலை இராமநாதபுரம் பகுதி முழுவதும் கொண்டு வருகிறோம் என்று சொல்லப்பட்டது, வரவேற்கிறோம்.

மண்டபத்தில் மீன்தூள் தயாரிக்கும் தொழிற்சாலை 6,7 வருடங்களுக்கு முன்பு நார்வீஜியன் ஸ்கீம் மூலமாக ஒரு நாளைக்கு 50 டன் மீன் தூள் தயாரிக்கத் துவக்கப்பட்டது, இன்றைக்கு நிலைமை என்னவென்றால், 6,7 வருஷத்திற்குப் பிறகு ஒரு நாளைக்கு 5 டன் கூட தயாரிக்க முடியாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது என்பதை வருத்தத்தோடு, பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஏன் இந்த நிலைமை இருக்கிறது என்பதைச் சிந்தித்து, நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, அந்தத் தொழிற்சாலையை மூடிவிடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாற்றுத் தலைவர் அவர்களே, மண்டபத்தில் இருக்கிற மீன் தூள் தயாரிக்கின்ற தொழிற்சாலையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அது ஆரம்பகாலத்தில் 50 டன் உற்பத்தி செய்துகொண்டிருந்தது என்றும் இப்பொழுது உற்பத்தி குறைந்திருக்கிறது என்றும் சொன்னார்கள். மீன் தூள் தயாரிக்க, தனி மீன் 'சில்வர் பில்லி'—காரல் மீன்—என்று சொல்கின்ற

மீனை வைத்துத்தான் மீன்தூள் உற்பத்தி செய்ய முடியும். சில நேரங்களில் மீன் பிடி குறைவாக இருக்கிற நேரங்களில், உற்பத்தி குறையத்தான் செய்யும்.

திரு. செ. சிவசாமி: வரவேற்கிறோம். ஆனல், ஆரம்பத்திலே சர்வே பண்ணிய காலத்திலே மீன் எந்த அளவு கிடைக்கும் என்று சர்வே செய்த பிறகுதான் அத்தொழிற்சாலையை ஆரம்பித்திருக்க வேண்டும். ஆனல், திட்டம் போட்ட 6 வருஷத்திற்குப் பிறகு, 50 டன்னுக்குப் பதிலாக 5 டன்தான் உற்பத்தி என்று சொன்னல் அதைப் பரிசீலனை செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

ஐந்துநிமிடத்தில் முடித்துக்கொள்கிறேன். இளையான்குடியிலே மருத்துவமனை அமைக்கப்பட வேண்டுமென்பதைப் பற்றி ஏற்கனவே கடந்த பட்ஜெட் கூட்டத்திலே, மதிப்பிற்குரிய முதல்வரிடத்திலே சொல்லி இருக்கிறேன். ரூ. 1 இலட்சத்துக்கு டெபாசிட் கட்டப்பட்டு இன்று வரையிலும் மருத்துவமனை தொடங்கப்படவில்லை.

அது மட்டுமல்ல, குடிநீர் சம்பந்தமாக, ரூ. 140 கோடிக்குத் திட்டம் பற்றி சொல்லப்பட்டிருப்பதில், எந்தவித சிந்தனையும் இல்லாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. (மணியடிக்கப் பெற்றது).

(பிற்பகல் 1–20)

திரு. எஸ். நடராசன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நான் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்புக் கொடுத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆளுநர் உரையை, வழக்கம் போல நிதிநிலை அறிக்கைக்கு முன்பாக வைக்காத காரணத்தாலோ, என்னவோ வண்டிக்கு முன்னல் காளையைக் கட்டுவதற்குப் பதிலாக, நடந்தவைகளைச் சொல்லி எந்தவிதமான கொள்கைகளோ, கொள்கைகளை நிறைவேற்றுவதற்கான திட்டங்களோ இதில் இருப்பதாகத் தெரியவில்லை. ஆளுநர் உரையிலே, பேருந்து தேசிய உடைமையாக்கப்படுமா என்ற கொள்கை அறிவிப்பு இல்லை. தொழிற் கொள்கை என்ன? தனியார் உடைமையா, கூட்டுத் துறையா என்ற ஒன்றுமே இல்லை. அதைப்போலவே, பிணுமி நிலங்களைக் கைப்பற்ற என்ன வழி வகைகள் என்பதைப்பற்றியும் காணோம்.

பொதுவாக ஆராய்ந்து பார்த்தால், இந்த உரையிலே நடந்தவைகளைச் சொல்லி, அதை சாதனைகள் என்று சொல்லி இருக்கிறார்களே தவிர, என்ன திட்டங்கள் என்று குறிப்பிட்டுச்



சொல்வதற்கு இதிலே ஒன்றையும் காணோம். ஆனல், இந்த நேரத்திலே நான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மாவட்டத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன், காரணம், என்னுடைய தொகுதியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர், இந்த அரசிலே அமைச்சராகப் பொறுப்பேற்றிருப்பதற்கு நாங்கள் மிகவும் பெருமைப்படுகிறோம். ஆனல் அமைச்சராகப் பொறுப் பேற்றிருக்கிற எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. எஸ். டி. சோமசுந்தரம் மேலவை உறுப்பினராக முதலில் தேர்ந்தெடுக்கப் பட்டார். தேர்ந்தெடுக்கப்பட்ட உடனே, நாங்கள் அவர் அமைச்சராக ஆவார் என்று மிக ஆவலோடு எதிர்பார்த்த நேரத்தில் திடீரென அவர் அப்பதவியை ராஜினமா செய்து விட்டார். நம் மாவட்டத்திற்குக் கிடைத்த வாய்ப்பு, கிடைக்காமல் போகிறதே என்று சஞ்சலப்பட்ட நேரத்தில், திடீரென அறிவிப்பு வந்தது, அமைச்சராக. அமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் முதலிலே ராஜினமா செய்த இடம் காலியாகத்தானேயிருக்கிறது, அந்த இடத்திலே மீண்டும் அவர் மேலவை உறுப்பினராக நியமிக்கப்படுவார். அப்படி நியமிக்கப் பட்டால், தஞ்சையிலே நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும் என்று நாங்கள் ஏங்கியிருந்தோம். ஆனல், இன்றைக்கு அவர் பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் ராஜினமா செய்ய வில்லை, மேலவையிலே இன்னும் உறுப்பினராகப் பொறுப்பேற்றுக் கொள்ளவில்லை, பதவியை ஏற்கவில்லை.

எனக்குள்ள கவலை எல்லாம் சட்ட விதி அனுமதிக்கிற 6மாதம் வரையில் அவர் அமைச்சராக இருக்கலாம் என்றெல்லாம் சொல் வார்கள். அதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் மிக முக்கியமான பிரச்னை நெல் விலைப் பிரச்னை. நெல்லுக்கு விலை கூட்டித் தர வேண்டும் என்று பலரும் வற்புறுத்தி வருகிறார்கள், இப்படிப்பட்ட பிரச்னை இருக்கிறது. மேலும். பொதுவாக தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், இந்திப் பிரச்னை குறித்து மிக வேகமாகப் பேசப்பட்டு வருகிறது. அதைப் பற்றி எல்லாம் பாராளுமன்றத்தில் குரல் கொடுக்க நம்முடைய பாராளுமன்ற உறுப்பினர் இல்லையே என்ற கவலை இருக்கிறது. ஆகவே, அவர்கள் அதனை விரைவில் நிறை வேற்றித் தரவேண்டும் என்று தஞ்சை சட்டமன்ற உறுப்பினன் என்ற முறையில் நான் கேட்டுக் கொள்கிறேன். அதை என் கடமையாகக் கருதுகிறேன்.

நாடாளுமன்றத் தேர்தல் நடந்தால் எங்கள் கட்சிதான், நாங்கள் தான் வெற்றி பெறுவோம் என்று நான் சொல்லவில்லை; முறையாக செய்ய வேண்டியது என்னவென்றால், அண்ணு அவர்கள் வழியில் பின்பற்றி நடந்து செல்பவர்கள் செய்ய வேண்டியது என்னவென்றால், அண்ணு அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக ஆனார்கள், ஆனல் அவர்கள் முதலமைச்சராக

தேர்ந்தெடுக்கப்பட்ட உடனே பாராளுமன்ற உறுப்பினர் பொறுப்பை ராஜினாமா செய்துவிட்டு, இங்கே முதலமைச்சராக இருந்தார்கள். ஏறத்தாழ 3 மாதங்களுக்கு மேல் ஆகிறது. அவர் அமைச்சராகி இன்னும் எந்தவிதமான அறிவிப்பும் வரவில்லை, தகவலும் வரவில்லை, ராஜினாமாவும் செய்யவில்லை.

அடுத்தபடியாக, ஆளுநர் உரையில் நகராட்சித் தேர்தல், ஊராட்சித் தேர்தல்கள் பற்றி குறிப்பிடப்பட்டு இருக்கிறது. நகராட்சித் தேர்தல் விரைவில் வரும் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. விரைவில் என்றால் அரசின் அகராதியில் எவ்வளவு நாள் என்பது எங்களுக்குத் தெரியவில்லை. மதுரை நகராட்சிக்கு மட்டும் தேர்தல் நடத்தி இருக்கிறார்கள். மதுரை வாக்காளர்களின் தீர்ப்புக்கு தலை வணங்குகிறோம். அந்த மக்கள் மட்டும் கொடுத்து வைத்தது என்ன? எங்களைப் போன்று மற்ற நகராட்சியில் உள்ள மக்கள் என்ன பாவம் செய்தோம் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கினால் நல்லது. மற்ற நகராட்சிகளின் வாக்காளர் பட்டியல் தயாராக இருக்கிறது. நகராட்சித் தேர்தல் நடைபெற்று மக்கள் தலைவர்கள் வந்தால் தான் அந்த மக்களின் நலனைக் கவனிக்க முடியும். ஒரு உதாரணத்திற்குச் சொல்கிறேன், தஞ்சை நகரம் மிகவும் பழமையான நகரம். அந்த நகரத்தில் மன்னர் காலத்தில் கட்டப்பெற்ற சாக்கடைகள் இருக்கின்றன. அங்கேயுள்ள மக்கள் அந்த அசிங்கத்தையும், அசுத்தத்தையும் நாற்றத்தையும் மறைக்கும் வகையில் அந்தச் சாக்கடைகள் தெரியாமல் இருக்கும் வகையில் அருகில் இருக்கும் அந்த வீட்டில் உள்ளவர்கள் கல்லைப்போட்டு, மூடி வைத்து இருப்பார்கள். அவர்களிடமிருந்து என்க்ரோச்மென்ட் என்ற பெயரில் 3 ரூ. முதல் 12 ரூபாய் வரை அகல நீளத்திற்கு ஏற்ற வகையில் வரி வசூல் செய்து வந்தார்கள். ஆனால் இப்போது தனி அதிகாரிகள் வந்த பிறகு அந்த வரி ரூ. 3 ல் இருந்து 30 ரூ. 60 ரூ. என்ற அளவிற்கு உயர்ந்து விட்டது. வீட்டு வரி 25 ரூ. என்றால், இந்த வரி ரூ. 50 என்று இருக்கிறது. இது எப்படி இருக்கிறது என்றால் குதிரை 5 ரூ. அதற்கு லாடம் ரூ. 50 என்பதைப் போல் இருக்கிறது. தனி அதிகாரிகள் நகராட்சியை சரிவர நடத்தவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட இதனைத் தெரிவிக்கிறேன்.

எல்லா இடங்களிலும் இப்போது ஆலோசனைக் குழுக்கள் என்று போட்டு இருக்கிறார்கள். அந்த ஆலோசனைக் குழுவில் சட்ட மன்ற உறுப்பினர் என்ற வகையில் என்னையும் போட்டு இருக்கிறார்கள். ஆனால் அங்கே போய் பார்த்தால் என்னைப்போல் 3 கட்சிக்காரர்களைப் போட்டு இருக்கிறார்கள். மீதி 10 பேரை ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களைப் போட்டிருக்கிறார்கள். வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு 33 பேர் வந்து உட்கார்ந்தால் தலைவணங்குகிறோம். ஆனால் அதை விட்டு விட்டு இப்படி ஆளும்கட்சியைச் சேர்ந்தவர்களைப் போடுவானேன். ஓட்டு எடுக்கப



போகிறோமா? முன்னாள் நகராட்சித் தலைவர்கள், உறுப்பினர்கள் என்று அனுபவம் உள்ளவர்களைப்போட்டு இருந்தால் பரவாயில்லை. கட்சிக்காரர்களைத் திருப்திப்படுத்த இப்படி போட்டு இருக்கிறார்கள். ஆகவே, நகராட்சிகளுக்கு விரைவில் தேர்தல் நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த சட்டமன்றம் முடிந்து நாம் போகும்போது காலம் சென்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழாவையும், பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழாவையும் கொண்டாட இருக்கிறோம். காலம் எல்லாம் எந்தக் கொள்கையை தந்தை பெரியார் அவர்கள் பட்டி தொட்டிகளில் எல்லாம் பரப்பினார்களோ அந்த சுயமரியாதைக் கொள்கையை, சம தர்மக் கொள்கையை நாம் பின்பற்றி வருகிறோம் என்று சொல்கிறபோது, அந்தக் கொள்கைக்கு மாறாக இந்த நாட்டிலே என்ன நடக்கிறது என்றால் எங்கே பார்த்தாலும் ஜாதி சண்டைகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. பெரியார் அவர்களின் (மணியடிக்கப்பட்டது) 100-ஆண்டு விழாவைக் கொண்டாடுகிற இந்த நேரத்தில் அதைத் தடுக்க வேண்டும் என்று நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன். அந்தக் கலவரங்களுக்குக் காரணம் யார் என்பதைக் கண்டுபிடித்து, அவர்களுக்கு தண்டனை அளிக்கும் வகையில் விசாரணை நடத்தப்பட வேண்டும், பெரியாரின் வழியிலே வந்தோம் என்று சொல்லிவிட்டு அவர்களுடைய கொள்கைக்கு முரண்பாடாக நடப்பது, பெரியாரின் கொள்கையை மதிப்பதாக ஆகாது என்று கூறி என் உரையை முடிக்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர்</u> (திரு. பி. எச். பாண்டியன்) : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, 7-9-1978 அன்று காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1.30 மணிக்கு, ஒத்தி வைக்கப் பெற்றது.

## (7) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

83. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு, புயல்-வெள்ளத்தால் பாதிக்கப் பெற்ற பகுதிகளின் பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரணம்) விதிகளைச் செய்வது குறித்த, வருவாய்த் துறையின் 31-5-1978 ஆம் தேதியிடப்பெற்ற, 1297 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு, 1978-ஆம்

ஆண்டு, புயல்-வெள்ளத்தால் பாதிக்கப்பெற்ற பகுதிகளின் பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரணச்) சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 17/1978) 9 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள் எதுவுமில்லை.



## இணைப்பு

[475..ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 4க்கான விடையைக் காண்க.

தமிழ் ஆட்சி மொழிக்குழு செய்துள்ள பணிகள் பின் வருமாறு;

(1) 1957-ல் ஆட்சிசொல்லகராதி ஒன்றை வெளியிட்டது. அதன் திருத்தியமைத்த பதிப்புகள் 1962, 1971-ல் வெளியிடப் பட்டன.

(2) தரப்படுத்தப்பட்ட தமிழ் தட்டச்சுப் பொறியினை உருவாக்கியதோடு அதனை உற்பத்தி செய்து அரசு அலுவலகங்களுக்கு வழங்க ஆவன செய்தது.

(3) ஒவ்வொரு துறைக்குமுரிய சட்டங்கள், விதிகள், விதித் தொகுப்புகள், நடைமுறை நூல்கள், படிவங்கள் அகியவற்றை தமிழில் மொழி பெயர்த்து அச்சிட்டு வெளியிட ஆவன செய்துள்ளது.

(4) 46 துறைகளுக்குரிய சிறப்பு சொற்கள், துணையகராதிகளை வெளியிட்டது.

(5) துறைத் தலைமை அலுவலகங்களில் தமிழ்த் திட்டத்தை நான்கு நிலைகளில் நிறைவேற்ற ஆவன செய்துள்ளது,

(6) தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் ஒன்றை உருவாக்கி 1965-ல் வெளியிட்டது. அதன் இரண்டாம் பதிப்பு 1977-ல் வெளியிடப் பட்டது.

(7) மாவட்ட அலுவலக நடைமுறை நூலை தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டது.

(8) அரசு அலுவலகங்களிலுள்ள தமிழ் தட்டச்சர்களுக்கு தமிழ்த் தட்டச்சுப் பயிற்சி பெற வழி வகை செய்தது.

(9) தமிழில் போதிய தேர்ச்சியில்லாத அரசு பணியாளர்களுக்கு பயிற்சி அளித்து தேர்வு நடத்தவும் தமிழில் வரைவுகள் குறிப்புகள் எழுத பயிற்சியளிக்கவும் வழி வகுத்தது.

(10) தமிழ் தட்டச்சுக்களைப் பெருமளவில் உற்பத்திச் செய்து சிராகவழங்கி ஆங்கில தட்டச்சுக்களைத் திரும்பப் பெறுவதற்கு ஆவன செய்தது.

(11) தமிழில் சிறந்த வரைவுகள், குறிப்புகள் எழுதும் அரசுப் பணியாளர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்கும் திட்டத்தை உருவாக்கியது.

(12) இளநிலை ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ் அலுவலர்களுக்குத் தமிழ் திட்டப் பயிற்சியளிக்க வகை செய்துள்ளது.

(13) தமிழ் திட்டத்தின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கென ஆய்வுத் தனி அலுவலர்களை நியமிக்க ஆவன செய்தது.

(14) அரசு சார்புடைய நிறுவனங்கள் மற்றும் தன்னாட்சி நிறுவனங்களில் தமிழ்த் திட்டத்தை நிறைவேற்ற வழி செய்துள்ளது.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

---

### வியாழக்கிழமை, 1978 செப்டம்பர் 7

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### உருளைக்கிழங்கு விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள்

*வினா—திரு. க. அரங்கசாமி: திரு. கே. உச்சி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) நீலகிரி மாவட்டத்தில் அதிக மழை காரணமாக உருளைக் கிழங்கில் பொன்னிற கிருமி நோய் ஏற்பட்டு விளைச்சல் இல்லாததால் விவசாயிகள் அரசிற்குக் கட்ட வேண்டிய கடனை ரத்து செய்யும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் என்றால், நடப்பாண்டில் அமுல்படுத்தப் படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:

(அ) கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்தவரை ரத்து செய்யும் உத்தேசம் இல்லை. உருளைக்கிழங்கு பயிரிடுவதற்கு அரசு கடன் வழங்குவதில்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவரவர்களே, கோரம் இருக்கிறதா என்பதை முதலில் பார்த்துக் கொள்ள வேண்டும். வந்திருக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கோரம் இருக்கிறதா இல்லையா என்பதைப் பார்த்துவிட்டுத்தான் நான் இங்கே வந்திருக்கிறேன். கோரம் இருக்கிறது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவரவர்களே, திருவண்ணாமலையின் பகுதியிலே இருக்கின்ற மக்களுடைய நியாயமான கோரிக்கையை உத்தேசித்து அங்கே ஒரு அரிசி ஆலை திறப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருவண்ணாமலை கூட்டுறவு விற்பனை சங்கத்தினுடைய ஆதரவில் அரிசி ஆலை அமைக்கும் திட்டத்திற்கு அனுமதி கோரி கருத்துரு எதுவும் வரவில்லை என்றாலும்கூட கூட்டுறவுப் பதிவாளருக்கு அங்கே இருந்து வந்திருக்கின்றது. ஆனால், திருவண்ணாமலை கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் தனி அதிகாரிகள் ஒரு டன் கொள்ளளவு கொண்ட அரிசி ஆலைக்காக ரூ. 3 இலட்சம் செலவில் ஒரு டிக்கார்டிகேட்டர் அமைப்பதற்கான ஒரு கருத்துருவை கூட்டுறவுச் சங்கப் பதிவாளருக்கு அனுப்பி இருந்தார்கள். அதனைக் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் அவர்கள் கீழ்க்கண்ட காரணங்களுக்காகத் திருப்பி அனுப்பி இருக்கிறார்கள். அது திருவண்ணாமலை கூட்டுறவுச் சங்கத்திலே இருந்து கூட்டுறவுப் பதிவாளருக்கு வந்திருக்கிறது. அதிலே குறைபாடுகள் இருந்த காரணத்தினால் அது திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தக் குறைபாடுகளை எல்லாம் நீக்கி விட்டு முறைப்படி இணைப் பதிவாளர், அங்கே இருக்கின்ற டி. ஆர். போன்றவர்களுடைய பரிந்துரையோடு அரசாங்கத்திற்கு அனுப்ப ஏற்பாடு செய்திருக்கிறோம். அது வந்த பிறகு அதை ஆய்ந்து, அதிலே இடம் இருந்தால் நிச்சயமாக அந்த முயற்சி எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

## விளவங்கோடு, கல்குளம் வட்ட சோதனைச் சாவடியில் பணியாளர்கள்.

* வினா 63 திரு. தே. ஞானசிகாமணி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குமரி மாவட்டத்தில் விளவங்கோடு, கல்குளம் தாலுக்காக்களில் சோதனைச் சாவடிகள் நீக்கம் செய்யப்பட்டதன் காரணமாக வேலையிலிருந்து நீக்கம் செய்யப் பெற்ற 82 ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள், 57 கடைநிலை ஊழியர்கள், 33 சுமை தூக்குவோர் ஆகியோருக்கு மாற்று வேலை வழங்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?





மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: (அ) & (ஆ) உணவுக் கொள்கை மாற்றம் காரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் 91 இளநிலை உதவியாளர்கள் (Special Revenue Inspectors), 57 கடைநிலை ஊழியர்கள், 33 சுமைத் தூக்குவோர் பதவி இழந்தனர். இவர்களில் பதவி இழந்த இளநிலை உதவியாளர்கள் அனைவரையும் பல்வேறு துறைகளில் உள்ள காலியிடங்களில் அமர்த்தி வருவாய் வாரியம் ஆணைகள் பிறப்பித்துள்ளது.

கடைநிலை ஊழியர்களில் 5-7-1978 தேதி வரை 30 பணியாளர்களுக்கு மாற்றுப் பணி மாவட்ட ஆட்சித் தலைவர் அளித்துள்ளார். அரசு ஆணைப்படி பணியிழந்த தற்காலிக அலுவலர்களின் பட்டியல் ஒன்று மாவட்ட ஆட்சித் தலைவரால் தயாரிக்கப் பட்டுள்ளது. அதன்படி பல்வேறு துறைகளில் காலியாகும் பதவிகளில் அந்தப் பட்டியலில் உள்ள பணியாளர்களை, வரிசைப்படி பணியிலமர்த்த மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுத்து வருகிறார். இன்னும் மீதியுள்ள 27 கடைநிலை ஊழியர்களுள் (13 முறைப்படுத்தப்பட்ட பணியாளர், 14 தற்காலிக பணியாளர்கள்) பணியிடங்கள் காலியாகும்போதும் புதுப் பணியிடங்கள் அனுமதிக்கப்படும்போதும், பணியில் அமர்த்தப்படுவார்கள்.

33 சுமை தூக்குவோர் தற்காலிக ஊழியர்கள் ஆவார்கள். இவர்கள் வேலை வாய்ப்பு நிறுவனத்தின் மூலம் பணியில் அமர்த்தப் படவில்லை. மேலும் இவர்களில் ஐந்து பணியாளர்களைத் தவிர ஏனையோர், கல்வி மற்றும் வயது தகுதியில்லாதவர்கள், தகுதியுள்ள ஐந்து பேர்களும் வேலை வாய்ப்பு நிறுவனத்தில் பெயர் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுவார்கள்.

## தமிழ்நாடு நுகர்பொருள் வழங்கு கழகத்தின் கீழ் உள்ள சோதனைக் கூடம்.

*வினா 64—திரு. கோ. இளங்கோவன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழ்நாடு நுகர் பொருள் வழங்கு கழகத்திற்காக Regional laboratory ஒன்று தஞ்சையில் இயங்கி வருகிறதா?

(ஆ) ஆம் எனில் அதன் நிர்வாகப் பொறுப்பு யாருக்கு அளிக்கப் பட்டிருக்கிறது?

(இ) நாளொன்றுக்கு சராசரி அப்பரிசோதனைக் கூடத்திற்கு எத்தனை samples வருகிறது?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்:

(அ) ஆம்.

(ஆ) நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மேலாளர் (தரக்கட்டுப்பாடு) (Manager Quality Control) அவர்களது நிர்வாகப் பொறுப்பில் உள்ளது.

(இ) 41 (நாற்பத்தொன்று).

திரு. கோ. இளங்கோவன்: பேரவைத் தலைவரவர்களே, அந்த ஒரே ஒரு சோதனைக் கூடம் மட்டும் தஞ்சை மாவட்டம் முழுமைக்கும் போதுமானதா? ஆகவே அதனை விரிவு படுத்துகின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா? அல்லது அது போன்ற மற்றொரு சோதனைக் கூடத்தைக் கீழ்த் தஞ்சையில் உருவாக்குகின்ற திட்டம் அரசுக்கு உண்டா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு சோதனைக் கூடம் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் போதும் என்று இந்த அரசு இப்போதைக்குக் கருதுகிறது. இன்னும் அதிகமான சோதனைக் கூடங்கள் ஆரம்பிப்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். இப்போதைக்கு கட்டாயக் கொள்முதல் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாகவே அறிவார்கள். ஆகவே இப்போதைக்கு அது தேவையில்லை. வேறு எதுவும் ஆரம்பிப்பதற்குரிய ஆலோசனைகள் இப்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9.10]

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தமது பதிலில் நெல் கொள்முதல் இல்லை என்று கூறினார்கள்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: கொள்முதல் இல்லையென்று சொல்லவில்லை, கட்டாயக் கொள்முதல் இல்லையென்றுதான் சொன்னேன்.

திரு. மு. அம்பிகாபதி: கட்டாயக் கொள்முதல் இல்லை என்று கூறுகிறார்கள். அரசாங்கமே தஞ்சை மாவட்டத்தில் குறுவை நெல் முழுவதையும் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்குமா? அப்படி எடுக்கிறபோது அதைப் பரிசோதிக்க ஒரு நிலையம் போதுமா என்பதைப் பற்றி விளக்கக் கேட்டுக் கொள்கிறேன்.



மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: பொதுவாக குறுவை நெல்லை கொள்முதல் செய்வது அரசாங்கத்தில் வழக்கம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நல்லமுறையில் அறிவார்கள். இந்தக் குறுவை அறுவடையின்போது அப்படிப்பட்ட கொள்முதல் வேண்டுமா வேண்டாமா என்பதைப் பற்றி அரசு ஆலோசித்து முடிவு எடுக்கும்.

சின்கோனா துறைப் பணியாளர் ஊதியம்

*வினா—65 திரு. கு. ரமணி: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நீலகிரி மாவட்டத்தில் அரசு சின்கோனா துறையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு நடந்து முடிந்த சட்டப் பேரவை தேர்தல் அன்று (14-6-77) ஓட்டுப் போடப் போனதால் ஊதியம் அளிக்கப்படவில்லையா?

(ஆ) ஆம் எனில், ஊதியம் அளிக்க அரசு உடன் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:

(அ) ஊதியம் அளிக்கப்பட்டது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கு. ரமணி: அந்தத் தேர்தல் முடிந்து, அந்தத் தேர்தலில் ஓட்டுப் போட்டு வந்ததற்குப் பிறகு அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய ஊதியம் அந்த மாதத்தில் கிடைக்கவில்லை. அந்த மாதம் அவர்கள் வாங்குகிற சம்பளத்தோடு இந்த நாள் ஊதியமும் கிடைத்திருக்க வேண்டும், ஆனால், அந்த மாதிரிக் கிடைக்கவில்லை. கொடுத்ததாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். கொடுத்திருந்தால் வரவேற்கத் தக்கது. அது எப்போது கொடுக்கப்பட்டது? அந்த ஊதியம் எவ்வளவு காலதாமதமாகக் கொடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: 3-12-77 அன்று வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இது முக்கியமான நல்லதொரு எடுத்துக்காட்டு. தேர்தல் நடந்து ஓட்டுப் போடப் போனதற்கு அவர்களுக்குத் தண்டனை ஆறு மாத காலம் கழித்த பிற்பாடு இது கொடுக்கப்பட்டிருப்பது. இது சரிதானா? ஆறு மாதங்கள் கழிந்த பிற்பாடு இந்த ஒரு நாள் சம்பளம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அதிகாரிகள் ஏன் இப்படித் தாமதப்படுத்தினார்கள்? இனிமேலாவது இப்படி நடக்காமல் இருப்பதற்காக அந்த அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்வார்களா?

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:</u> ஊதியம் அளிக்கப் பட்டு விட்டது என்பதற்குத் தகவல் இருக்கிறது. ஏன் அப்படி தாமதம் ஏற்பட்டது என்பதற்குத் தகவல் இல்லை.' என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விருப்பத்திற்கிணங்க அதைப் பற்றிப் பரிசீலித்து இனிமேல் இதேபோல் தாமதம் ஏற்படாமல் இருப்பதற்கு அரசு பார்த்துக் கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஜெரேனியம் பயிரிடல்

* வினா 66—<u>திரு. கே. உச்சி:</u> மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

நீலகிரி மாவட்டத்தில் ஜெரேனியம் என்ற வாசனைத் 'தைல செடிகளை வளர்க்க அரசு தீவிர நடவடிக்கை ஏதேனும் எடுத்துள்ளதா?

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:</u> தமிழ்நாடு அரசு சின்கோனாத்துறை ஏறத்தாழ 15 வருடங்களாக நீலகிரியில் ஜெரேனியம் பயிரிட்டு வருகிறது. தற்போது 220 ஹெ. பரப்பளவில் ஜெரேனியம் பயிரிடப்பட்டுள்ளது. அடுத்து ஐந்து ஆண்டுகளில் மேலும் 106 ஹெ. பரப்பளவில் பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது. கொடைக்கானல் பகுதியில் சுமார் 1000 ஏக்கர் பரப்பளவில் பயிர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

<u>திரு. கே. உச்சி:</u> இந்த ஜெரேனியம் நல்ல லாபம் தரக்கூடிய ஒரு விவசாயம். அதனால் ஏராளமான வாசனைத் திரவியங்கள் தயாரிக்கப்பட்டு அதிக விலைக்கு விற்கப்படுகின்றன. ஆகவே, அதை அதிகமாக பரவலாகப் பயிர் செய்வதற்கு அந்த விவசாயிகளுக்கு அரசாங்கம் ஏதாவது மானியம் அளிக்க முன்வருமா?

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :</u> தலைவர் அவர்களே, அதைப்பற்றிய குறிப்புகள் இப்போது என்னிடம் இல்லை. இருந்தாலும், சின்கோனாத் துறை அரசு தரப்பில் நடத்தப்பட்டு வருகிற ஒரு துறையாகும். அதற்கு உதவியாக விவசாயிகள் பயிரிடுகிற—ஜெரேனியம் நல்ல முறையில் லாபத்தைத் தருகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். அது சம்பந்தமாகக் கவனித்து விவசாயிகளுக்கு தக்க ஊதியம் வழங்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. ப. பொன்னுரங்கம் :</u> இந்த சின்கோனாத் துறையில் பணியாற்றுகிற பலர் தற்காலிக ஊழியர்களாக ஆறு ஏழு ஆண்டுகளாக வேலை வாங்கப்படுவதாகத் தெரிய வருகிறது. அவர்களை நிரந்தரமாக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா? மழை காலங்களில்



அவர்களுக்கு உணவுப் பொருள்கள் கிடைப்பது மிக சிரமமாக இருப்பதால், அப்படியே கிடைத்தாலும் அதிக விலைக்கு வாங்க வேண்டிய அவல நிலை இருப்பதாகவும் தெரியவருகிறது. அதையும் போக்க இந்த அரசு ஆவன செய்யுமா?

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :</u> தலைவர் அவர்களே, கேள்வி ஜெரேனியம் அதிக அளவில் பயிரிடப்படுமா என்பது பற்றி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற விவரங்களுக்குத் தனிக்கேள்வி போட்டால் விவரம் சேகரித்துச் சொல்ல முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. கே. உச்சி :</u> தலைவர் அவர்களே, ஜெரேனியத்தை இப்போது சிங்கோனா டிப்பார்ட்மென்ட் பயிரிட்டு வருகின்றதாகச் சொன்னார்கள். இதை மாற்றி இந்தோ-ஜெர்மனித் திட்டத்தின் கீழ் உள்ள இலாகா மூலமாக இதைச் செய்வதற்கு அரசு பணிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :</u> இந்த யோசனையையும் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## உயர் இடைநிலைப் பள்ளிகள்

* வினா 67—<u>திரு கோ. இளங்கோவன், திரு. மு. அம்பிகாபதி, திரு. என். கிட்டப்பா.</u>— மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மாநிலம் முழுவதும் எத்தனை உயர்நிலைப் பள்ளிகளில் Higher Secondary Education-க்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது?

(ஆ) வசதி செய்யப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளில் அரசு உயர்நிலைப் பள்ளிகள் எத்தனை?

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:</u>

(அ) மாநிலம் முழுவதும் 874 உயர் நிலைப்பள்ளிகளில் மேல் நிலைப் பள்ளிக்கல்வி (ஹையர்செகண்டரி) தொடங்க இதுவரை அனுமதிக்கப்பட்டுள்ளது, இவைகள் தவிர 24 ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளிலும், 18 மெட்ரிக்குலேஷன் பள்ளிகளிலும் மேல்நிலைப் பள்ளிக் கல்வி தொடங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) மேல்நிலைப்பள்ளிக் கல்வி தொடங்க அனுமதிக்கப்பட்டுள்ள அரசுப் பள்ளிகளின் எண்ணிக்கை 413.

<u>திரு. கோ. இளங்கோவன் :</u> தலைவர் அவர்களே, தலைமை ஆசிரியர்கள் நியமனத்தில் தனியார் மேல்உயர்நிலைப்பள்ளிகளிலும் அரசு மேல் உயர்நிலைப் பள்ளிகளிலும் ஒரேவிதமான விதிமுறைகள் கையாளப்படுகின்றதா? 'ஏ' விங்க் பள்ளிகளில் தலைமை ஆசிரியர் பதவிகள் காலியாக இருந்தால் அதில் 'பி' விங்க் ஆசிரியர்களை நியமிக்காமல் இருப்பது அரசுக்கு தெரியுமா? தெரியுமென்றால் இதன்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

[1978 செப்டம்பர் 7

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள் நீடிக்கின்ற வகையில் அவர்களின் விருப்பத்திற்கேற்ப அனுமதி தந்திருக்கிறோம். 'எ' விங் என்றும் 'பி' விங் என்றும் வித்தியாசம் பாராமல் நியமனம் இருக்க வேண்டும் என்று உத்தரவு அளித்திருக்கிறோம்.

திரு. மு. அம்பிகாபதி: இப்படித் துவக்கப்பட்ட கல்வி முறைக்குத் தேவையான உபகரணங்கள் அந்த மாணவர்களுக்கு வழங்கப்படாததின் காரணமாகச் சரியாகக் கல்வி அளிக்கப்பட வில்லை என்கின்ற புகார் அரசுக்கு வந்திருக்கிறதா? அப்படியானல் இதை நல்ல முறையில் பரிசீலித்து அவர்களுக்குத் தேவைப்படுகின்ற உபகரணங்களை வழங்குவதற்கு அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, போதிய அளவில் உபகரணங்களை வழங்கி நல்லமுறையில் கல்வியைப் புகட்டுவதில் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாத வகையில் அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, உயர்நிலைப்பள்ளிகளை மேல்நிலை பள்ளிகளாக மாற்றுவதற்கு எந்தெந்த விதிமுறைகள் கையாளப்படுகின்றன? இதற்கான வசதியுள்ள பள்ளிகள் 413 என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தவிதமான வசதியுள்ள நகராண்மைக்கழகப் பள்ளிகள் எத்தனை என்பதை அறிய இயலுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, போதுமான அளவில் பள்ளிகள் திறக்கப்படவேண்டும் என்கின்ற அடிப்படையில் நிறைய பள்ளிகளைத் திறந்து இருக்கிறோம். மாநிலம் முழுவதும் பரவலாக இருக்கவேண்டும் என்ற அடிப்படையிலும் ஆங்காங்கு இருக்கின்ற பள்ளிகளில் ஓரளவு இருக்கின்ற வசதியைப் பார்த்தும், மாணவர்களின் எண்ணிக்கையைப் பார்த்தும் மேல் நிலைப் பள்ளிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. நகரசபை பள்ளிகளின் எண்ணிக்கையின் விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, மேல்நிலை உயர்நிலைப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டதன் விளைவாக கல்லூரி ஆசிரியர்கள் யாரும் வேலையிழக்க மாட்டார்கள் என்று மார்ச் மாதம் அரசு அறிவித்தது. ஆனால் இப்போது 220 ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதற்காக அவர்கள் தடையுத்தரவையும் மீறி உண்ணாவிரதம் இருக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே மேல்நிலைப் பள்ளிகள் ஏற்படுத்தியதின் காரணமாக ஆசிரியர்கள் பணிநீக்கம் செய்யப்பட மாட்டார்கள் என்கின்ற உத்தரவாதத்தை இனிமேலாவது கொடுக்க அரசு முன் வருமா?



1978 செப்டம்பர் 7]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளிகள் ஏற்பட்டதின் காரணமாகக் கல்லூரி ஆசிரியர் களுக்கு பாதிப்பு என்பது அடுத்த ஆண்டிலிருந்து தான் வரும். அந்த நிலைமை வருகின்ற போது, அந்த ஆசிரியர்களுக்கு எல்லாம் போதிய பாதுகாப்பு தருவதாக உறுதியைத் தந்திருக்கிறோம். இப்போது வேலையிழந்திருக்கின்ற ஆசிரியர்கள் பிரச்னையிலும் இப் போதுள்ள நிலைமைக்கு ஏற்ப சர்க்கார் ஒரு புதிய உத்தரவைப் போட இருக்கிறது. பள்ளிகளுக்கு எல்லாம் போடப்பட்டு விட்டது. மேலும் இதற்கான நடவடிக்கைகளை அரசு நிச்சயமாக எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9-20]

திரு. கே. சௌந்திரராசன் : தலைவர் அவர்களே, மேல்நிலைக் கல்வி பயிலுகின்ற பள்ளிக்கூடங்களில் ஏறக்குறைய 80 மாணவர்கள் வரையில் சேர்க்கப்படுகின்றதன் விளைவாக, மாணவர்களுக்குத் தரமான கல்வி போதிப்பதற்கு இயலாத வகையில் ஆசிரியர்கள் இல்லாமல் இருக்கின்றார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், பையாலஜி போன்ற பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லை என்று திருச்சியிலுள்ள ஒவ்வொரு பள்ளிக் கூடங்களிலும் சொல்லுகின்றார்கள். அதற்கும் உடனடியாக சீக்கிரத்தில் ஆசிரியர்களை அங்கே நியமிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இப்போதெல்லாம் 11-வது வகுப்பிலே மீதமுள்ள ஆசிரியர்களை நியமிக்க ஆங்காங்கே அனுமதித்திருக்கிறோம். புதிய தகவல்களின் படியும், ஆங்காங்கே ஆசிரியர்களைப் போட்டிருக்கிறோம். ஒவ்வொரு வகுப்பிலும் 80 மாணவர்களுக்கு மேல், படிக்கின்றார்கள் என்பது உண்மைக்கு முரணானது. அப்படியிருந்தால், அங்கே இரண்டு, மூன்று வகுப்புகள் இருக்கும். எனவே, அத்தகைய புகாருக்கு இடமில்லை என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. ஜான் வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, ஹையர் செகண்டரி ஆரம்பித்து 3 மாதங்கள் ஆகியும் நெல்லை மாவட்டத்திலே ஆங்கில, தமிழ் மீடியங்களுக்கு இதுவரையில் புத்தகங்கள் சரியாக வழங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அதற்கு என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, புத்தகங்கள் அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இன்னும் ஒரு வாரத்தில் முழுமையாக அனுப்பப்பட்டு விடும்.

[1978 செப்டம்பர்

* வினா 68—திரு. வ. துலுக்காணம் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) உளுந்தூர்பேட்டை தொகுதியில் உள்ள சேப்பாக்கம் கிராமத்தில் நடைபெறும் அரிசன நலத்துறை உயர்நிலைப்பள்ளியை ஹையர் செகண்டரி பள்ளியாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) இப்பள்ளி சிறிய பள்ளியாதலாலும், போதிய இட வசதி இல்லாததாலும், 9, 10, 11 வகுப்புகளில் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதாலும், இப்பள்ளி ஹையர் செகண்டரிப் பள்ளியாக உயர்த்தும் தகுதி பெறவில்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, முக்கியமான கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். அடுத்த கேள்வி என்று சொன்னதற்குப் பிறகு, எழுந்து நின்று கேட்கும் பழக்கம் கூடாது. தயவுசெய்து உட்காருங்கள்.

## Selection to part-time Bachelor of Engineering Course

* Q. 69 Thiru R. E. Chandran Jayapal—Will the Hon. the Minister for Education be pleased to state whether the period o- practical experience will be fixed at 10 years for selection from workf ing class Engineering Diploma folders ior part-time Bachelor of Engineering course in Tamil Nadu Engineering Colleges?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : சென்னை மற்றும் மதுரை பல்கலைக் கழகங்களைச் சார்ந்த பொறியியல் கல்லூரிகளில் பகுதி நேரப் பொறியியல் பட்டப் படிப்பு வகுப்பில் சேர, அப் பல்கலைக் கழகங்களின் விதிகளின்படி, பணியிலிருக்கும் பொறியாளர் டிப்ளோமாதாரர்கள் சம்பந்தப்பட்ட பொறியியல் துறையில் குறைந்தது 3 ஆண்டுகள் முன்னனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். இதை 10 ஆண்டுகளாக உயர்த்த அரசுக்கு உத்தேசம் இல்லை.

## ஊராட்சிகளில் மக்கள் குழுக்கள்

* வினா 70—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

ஊராட்சி மன்றங்களுக்குப் பதில் மக்கள் குழு அமைக்க அரசு அண்மையில் ஆணை பிறப்பித்துள்ளதா?



1978 செப்டம்பர் 7]

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : மக்கள் குழுக்கள் ஊராட்சி மன்றங்களுக்குப் பதிலாக அல்ல.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தற்போது ஊராட்சி ஒன்றியம் நகராட்சிகளிலெல்லாம் இத்தகைய மக்கள் குழு அமைக்கப்பட்டிருக்கின்றன. அத்தகைய குழுக்களில் உறுப்பினர்களை நியமிக்கும்போது, அரசு எந்தவிதமான விதிமுறையை அல்லது நடைமுறையைப் பின்பற்றி இந்தக் குழுக்களில் உறுப்பினர்களை நியமிக்கின்றார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்? மேலும், அத்தகைய குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிக்கின்ற போது, ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு மட்டும் அதாவது ஆளும் கட்சிக்கு மிக அதிகமான இடங்களை ஒதுக்கிவிட்டு, மற்ற கட்சிகளைப் புறக்கணிக்கின்ற நிலை இருப்பது அரசுக்குத் தெரியுமா? இதைத் தவிர்ப்பதற்கு ஏதாவது வழிவகைகளைக் காண அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இத்தகைய மக்கள் குழுவினை ஒன்றியங்களிலே அமைக்கின்ற பொறுப்பை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏற்றுக் கொண்டிருக்கிறார். ஊராட்சி ஒன்றியங்களிலே நல்ல யோசனைகளைத் தருபவர்களுக்கு சிறப்பான இடமளிக்க வேண்டுமென்கின்ற அடிப்படையிலே மக்கள் குழு அமைக்கப்படுகின்றது. எந்தக் கட்சிக்காவது அதிகமான வாய்ப்புகள் கொடுக்கப்படுகின்றது என்ற புகார் இருக்குமானால், அத்தகைய புகார் எந்த ஒன்றியத்திலே இருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால், அதற்குரிய நடவடிக்கை எடுக்கலாம்.

திரு செ. சதாசிவம் : தலைவர் அவர்களே, இப்படி அமைக்கப்படுகின்ற குழுக்கள் தேர்தல் நடந்த பிறகும் நீடிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தேர்தல் முடிந்த பிறகு அதைப் பற்றி யோசிக்கலாம்.

திரு. என். கிட்டப்பா : இத்தகைய குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிக்கும் போது கட்சி வித்தியாசம் பாராமல் நியமிக்கப்படுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பொதுவாக அனுபவம் வாய்ந்தவர்களை அத்தகைய குழுக்களில் நியமிக்க வேண்டுமென்ற அடிப்படையில் நான் எடுத்துக் காட்ட விரும்புவது — மாயூரம் போன்ற இடங்களில் முன்னாள் நகராட்சி உறுப்பினர்கள், நகராட்சி மன்றத் தலைவர் கூட அத்தகைய குழுக்களில் நியமிக்கப்படவில்லை. அதைப் பரிசீலித்து தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்பு வரையிலாவது அத்தகைய குழுக்களில் அனுபவம் வாய்ந்தவர்களை, நகராட்சி மன்ற உறுப்பினர்களாக இருந்தவர்களை, தலைவர்களாக இருந்தவர்களை நியமிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : முன்னாள் நகராட்சி மன்றத் தலைவர்களை நியமிக்க வேண்டுமென்ற விதிமுறை இல்லை. ஆனால் அனுபவம் வாய்ந்தவர்கள், புகார்களுக்கு இடம் இல்லாதவர்கள் யாராக இருந்தாலும் அப்படிப்பட்டவர்கள் பணி பயன்படுத்திக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : அனுபவம் உள்ளவர்கள், அப்படிப்பட்ட யோசனைகள் கூறத் தகுதி வாய்ந்தவர்கள் என்ற அடிப்படையில் போடப்படுகிறது என்று சொன்னார்கள். நாகை பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலில் எங்கள் கட்சிப் பிரதிநிதி யாருமே இல்லை. அப்படியென்றால் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு யோசனை கூறத் தகுதியுள்ளவர்கள் யாருமே இல்லையென்று அர்த்தமா? நாகை முனிசிபல் அட்வைசரி குழுவிலும் எங்கள் கட்சியின் சார்பில் யாரும் இல்லை. அங்கே 9 அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பிரதிநிதிகள் இருக்கிறார்கள் என்பதை ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். ஆகவே, பாகுபாடு என்ற நிலைமை ஏற்படுகிறது. எம். எல். ஏ. என்ற நிலைமையில் இருக்கிறவர்கள் திருச்சி கவுன்சிலில் ஏ. டி. எம். கே. சார்பில் பிரதிநிதியாக இருக்கிறார். இதிலே என்னதான் விவகாரம் என்பதை அமைச்சர் அவர்கள் ஒரு கிளாரிபிகேஷனாகக் கூறுவார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுபற்றி ஏற்கனவே தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் தெரிவித்த கருத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : பரவலாக அனைத்துக் கட்சிகளையும் கொண்ட குழு அமைப்பதாக முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபின்பு அது ஒழுங்காக நடைபெறவில்லை என்பதற்கு ஏராளமான சான்றுகள் இருக்கின்றன. உதாரணத்திற்கு இரண்டு—சிங்கம்புணரியில், நான் வெற்றி பெற்ற ஊரில் அதிலே கம்யூனிஸ்ட் ஆள் கிடையாது. திருப்பத்தூரில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மூன்றாவது ஸ்தானம் கிடைத்தது. ஆனால் ஒருவரும் கிடையாது. அனைத்துக் கட்சிகளிலிருந்தும் குறைந்த பட்சம் ஓர் ஆளாவது இடம் பெறும் வகையில் பரிசீலித்துப் போட வேண்டுமென்று மாவட்ட கலெக்டருக்கு உத்தரவு அனுப்பப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மக்கள் குழு என்ற முறையில் அமைக்கப்படுகிறதே தவிர, சர்வ கட்சிக் குழு என்ற அடிப்படையில் அமைக்கப்படவில்லை. இருந்தாலும் எந்தக் கட்சிக்கும் பிரதிநிதித்துவம் கிடைக்காமல் போய்விடக்கூடா என்ற வகையில் அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் பரிசீலித்து உரிய வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.



திரு. கா. வே. கந்தசாமி : பொள்ளாச்சி (நார்த்) ஒன்றியத்திலும், கிணத்துக் கடவு ஒன்றியத்திலும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மக்கள் குழுக்களில் ஒருவருமே போடப்படவில்லை. இதுபற்றி இரண்டு மூன்று தடவை கலெக்டரிடத்திலும், மற்ற அதிகாரிகளிடத்திலும் எடுத்துக் கூறியிருக்கிறோம். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களை ஏன் போடவில்லை என்று கேட்டதற்கு இதுவரை பதில் வரவில்லை. ஆனால் அங்குள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் ஏழு உறுப்பினர்களை இரண்டு ஒன்றியங்களிலும் போட்டிருக்கிறார்கள். இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் அறிந்து பதில் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இது போன்ற புகார்கள் அனைத்து கட்சிகளிடமிருந்தும் வந்திருக்கின்றன. அந்தந்த ஊர்களின் நிலைமையை யோசித்து உரிய நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும்.

திரு. க. சுப்பு : இப்படிப்பட்ட குழுக்கள் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்கனவே இருந்த ஊராட்சி ஒன்றியங்கள் கலைக்கப்பட்டதால் ஏற்பட்டது. கலைக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் ஓராண்டுக்கு என்று சொன்னார்கள். பிறகு ஒன்றரை ஆண்டு என்று மாற்றினார்கள். அவ்வாறு ஒன்றரையாண்டு என்று மாற்றியமைத்ததோடு கூட, சட்ட விரோதமாக மக்கள் குழு என்ற பெயரால் இவர்கள், கட்சியைச் சேர்ந்தவர்களைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் ஒருவர்தான் மக்கள் கட்சிக் காரர்கள். மற்றவர்கள் எல்லாம் மக்கள் கட்சிக்காரர்கள் அல்ல போலும். நான் அம்பத்தூர் டவுன்ஷிப் பகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறேன். நான் மக்களிடமிருந்து வேறுபட்டவனா? மக்கள் குழுக்களில் மற்றக் கட்சிக்காரர்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை என்று பரவலாக எல்லாரும் கூறினார்கள். சட்டத்தை மீறி, நியாயத்தை மீறி....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே இதுபற்றி உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதற்கு அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். ஒவ்வொருவரும் இப்படி கேட்டுக் கொண்டே இருந்தால் சரியில்லை. கேள்வியைச் சுருக்கமாகப் போடுங்கள்.

திரு. க. சுப்பு : அமைச்சர் அவர்கள் சொன்ன பதில் நழுவலாக இருக்கிறது. நியாயம் அப்படி இல்லை. மக்கள் குழுக்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து, பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலை ரி-கான்ஸ்டிடியூட் பண்ணி அட்வைசரி கமிட்டியில் ஆளும் கட்சியினரை மட்டும் போடாமல், அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்தவர்களைப் போடுவதற்கு முன்வருவார்களா?

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்களுடைய சொற்பொழிவிலே குறிப்பிட்டதைப் போல ஆக்கப்பூர்வமான கருத்துக்கள் அதிலே இருக்குமானால் அதை எடுத்துக் கொண்டு செயல்படுத்துவதிலே அரசுக்கு எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: தலைவர் அவர்களே ஆலோசனைக் குழுக்களில் எல்லா அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவேண்டும் என்ற அடிப்படையிலே மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை விஷயத்தில் சில கட்சிகளுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை. ஒவ்வொரு கட்சியினரும் யார் யாரைப் போடவேண்டும் என்ற விவரங்களைச் சுட்டிக்காட்டியும், எழுத்துப்பூர்வமாக விவரங்களை அளித்து இருந்தும்கூட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் குறிப்பாக என்னுடைய தொகுதியிலே போடப்படவில்லை, இதைப்பற்றி......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து உட்காருங்கள்.

திரு. ரா. உமாநாத்; அதற்கு அமைச்சர் பதில் சொல்லட்டுமே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் கேட்டதைத் தான் உறுப்பினர் அவர்களும் கேட்கிறார்கள்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : திரு. உமாநாத் அவர்கள் கேட்டது கட்சி அடிப்படையிலே நான் என்னுடைய தொகுதியிலே உள்ள நிலைமையைக் கேட்கிறேன்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. உமநாத் அவர்கள் கேட்ட கேள்வியையே தான் தாங்களும் கேட்கிறீர்கள், தயவு செய்து உட்காருங்கள். அதையே திருப்பிக் கேட்டு நேரத்தை வீணாக்க வேண்டாம்.

## ஆயக்குடி பேரூராட்சி.

* வினா 71—திரு. நா. பழனிவேல்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பழனி வட்டம் ஆயக்குடி பேரூராட்சியை இரண்டாக பிரிக்கும்படி அப்பேரூராட்சியிலிருந்து கோரிக்கை ஏதேனும் வந்ததா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.



## ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் உடனெழுத்தர்கள்

* வினா 72—திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் ஏற்படும் இளநிலை எழுத்தர் மற்றும் பொருளாளர் பதவிகளுக்கு ஊராட்சி ஒன்றியங்களில் பணி புரியும் தகுதிவாய்ந்த உடனெழுத்தர்களுக்கு பதவி உயர்வு கொடுத்து நியமனம்செய்யப்பட வேண்டுமென அரசுக்கு கோரிக்கை ஏதும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) ஆம்

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

## சேலம்—நாகை விரைவுப் பேருந்து வழித்தடம்.

* வினா 73—திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம்-நாகை வழித்தடத்தில் (ஆத்தூர்-கும்பகோணம் வழி) இயக்கப்பட்டு வந்த பல்லவன் விரைவுப் பேருந்துகள் நிறுத்தப்பட்டதன் காரணம் யாது ?

(ஆ) இதனை மீண்டும் துவங்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) சேலம்-நாகை (வழி ஆத்தூர், கும்பகோணம்) வழித்தடத்தில் இயங்கி வந்த விரைவுப் பேருந்துகள் இலாபகரமாக இல்லாததாலும், தொடர்ந்து நட்டத்திலேயே இயங்கி வந்ததாலும். 1-2-77 முதல் நிறுத்தப் பட்டுள்ளது.

(ஆ) இதனை மீண்டும் துவக்குவதற்கான சூழ்நிலை இல்லை.

திரு. சி. பழனிமுத்து : தலைவர் அவர்களே, பல்லவன் போக்கு வரத்துக் கழகம் சேலம்-நாகை வழித்தடங்களில் முதலிலே $6\frac{1}{4}$ மணிக்கு ஒரு வண்டியும் பிறகு $3\frac{1}{4}$ மணிக்கு ஒரு வண்டியையும் விட்டு வந்தது. ஆனால் இந்தக் கேள்வியைப் போட்டதற்குப் பிறகு இரண்டு மாதங்கள் காலையிலே விடப் பட்ட பேருந்து இப்போது நிறுத்தப்பட்டு விட்டது. வண்டிகள் சரியாக ஓடாததற்குக், காரணம் வருலாபமில்லை என்பது தான்.

குறிப்பிட்ட வழித்தடங்களில் குறித்த நேரத்திற்கு வண்டிகள் வராத காரணத்தினால்தான் பயணிகள் வராமல் இருந்துவிடுகிறார்கள். ஆகவே சேலம்-நாகை பேருந்துகளை உடனடியாக விடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(விடை இல்லை.)

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, சில முக்கியமான வழித்தடங்களில் ஓடுகிற வண்டிகளில் லாபமா நட்டமா என்று பார்க்கக்கூடாது. நட்டம் வருகிறது என்றால் அந்த வண்டியிலே இருக்கிற டிரைவர்கள் கண்டக்டர்கள் ஆகியவர்களைக் கலந்து எந்த முறையிலே ஓட்டினால் லாபம் கிடைக்கும் என்பதை பார்த்து ஓட்டவேண்டுமென்ற முறையிலே நாகையிலிருந்து ஆத்தூர், கும்பகோணம் வழியாக சேலம் சென்று வந்த வண்டிகளை மீண்டும் விடுவதற்கு அரசு துரித நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இது விரைவுப் பேருந்து சம்பந்தப்பட்டது என்ற காரணத்தால் மிகத் தீவிரமாக ஆய்ந்ததன் அடிப்படையிலே நட்டத்தில் ஓடுகிறது என்ற கணிப்புக்குப் போக்குவரத்துக் கழகம் வந்தது. 1-6-76-க்குப் பிறகு தஞ்சையிலிருந்து சேலத்திற்கு சோழன் போக்கு வரத்துக் கழகம் தினசரி 2 பேருந்துகளை இயக்கி வருகிறது. தஞ்சைக்கும் நாகப்பட்டிணத்திற்கும் இடையே சோழன் போக்குவரத்துக் கழகம் போதுமான பேருந்துகளை இயக்கி வருகிறது. மேலும் பல்லவன் போக்குவரத்து கழகப் பேருந்துகளும் தஞ்சை-நாகப்பட்டிணத்தை இணைக்கிறது 6 மாத காலத்திற்கு இந்த தடத்தில் பயணிகள் வருகிறவர்கள் எத்தனை பேர்கள் என்று கணித்ததில் 50 சதவிகிதம் பயணிகள் கூட வராத காரணத்தால் மிக நட்டமான நிலைமை ஏற்பட்டது. எனவே இந்த வழித்தடத்தை மீண்டும் துவக்குவதற்கான சூழ்நிலை இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, சேலத்திலிருந்து குடந்தை வழியாக நாகை சென்று வந்த வண்டிகள் மாயூரம் வந்து கொண்டிருந்தது. ஆனால் மாண்புமிகு புலியூரார் அவர்கள் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தபோது மாயூரத்திலிருந்த அந்த டெப்போவை, எவ்வளவோ கேட்டும்கூட, நீக்கிவிட்டார்கள். இப்போதுள்ள போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மாயூரத்திலே மீண்டும் டெப்போவை ஏற்படுத்துவதற்கு முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மூலக்கேள்விக்கு இது சம்பந்தமில்லை என்ற போதிலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.





திரு. பொ. உத்திராபதி :- பேரவைத் தலைவரவர்களே, வேதாரண்யம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இடம், உப்பு சத்தியாகிரகம் நடந்த இடம் அது. சென்னையிலிருந்து வேதாரண்யத்திற்கு 538-வது என் பேருந்து ஓடிக்கொண்டிருந்தது. அது இடையில் நிறுத்தப்பட்டது. அதுபற்றி அமைச்சர் அவர்களைச் சந்தித்து அதற்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டு அவர்கள் ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். அப்படி ஓடிக்கொண்டிருந்த பேருந்து இடையில் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மூலக் கேள்வியை ஒட்டிய கேள்வி அல்ல. ஏற்கனவே சொன்னதைப் போல் அமைச்சரவர்கள் இதற்குத் தகவல் கையில் இல்லை என்றுதான் சொல்வார்கள். இது சேலம்-நாகை விரைவு வண்டி பற்றிய பிரச்னை; எனவே, தயவு செய்து தாங்கள் அமருங்கள். அடுத்த வினா 74.

திரு. மு. அம்பிகாபதி : அமைச்சரவர்கள் இதற்குப் பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்று தெரிகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :- நான் தேவையில்லை என்று சொல்லலாம். மூலக்கேள்வியைப் பார்த்து துணைக் கேள்விக்கு அனுமதி கொடுப்பதோ கொடுக்காமல் இருப்பதோ என்னுடைய உரிமை.

## மேல்விஷாரத்தில் விரைவுப் பேருந்துகள் நின்று போதல்.

* வினா 74—திரு. துரை முருகன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) வடாற்காடு மாவட்டம், மேல்விஷாரத்தில் அரசுப் போக்குவரத்துத் துரித வண்டிகள் நிற்க வேண்டும் என்று விண்ணப்பங்கள் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) ஆம்.

(ஆ) 17-10-77-முதல் மேல்விஷாரம் வழியாகச் செல்லும் துரிதப்பேருந்துகள் வேண்டுகோளின் பேரில் அங்கு நிறுத்தப்படுகின்றன.

[1978 செப்டம்பர் 7

## போக்குவரத்துக் கழகங்களில் முகவர்கள் நியமனம்

*வினா 75— திரு. இரா. அமிர்தராஜ், திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரசு பஸ்களுக்குப் பேருந்து நிலையங்களில் ஏஜெண்டுகள் நியமிக்கப்பட்டிருக்கிறதா ?

(ஆ) மேலும் எத்தனைப் பேர் எத்தனை இடங்களுக்கு நியமிக்கப்பட இருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) சில போக்குவரத்துக் கழகங்கள் அவைகளின் பேருந்துகளுக்குப் பேருந்து நிலையங்களில் ஏஜெண்டுகளை நியமித்துள்ளன.

(ஆ) மதுரைப் பேருந்து நிலையத்தில் கூடுதலாக ஒரு ஏஜெண்ட் நியமனம் செய்வதுப் பற்றி நிர்வாகத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. இரா. அமிர்தராஜ் : தலைவரவர்களே, எவ்வளவு பேருந்து நிலையங்களுக்கு ஏஜெண்டுகள் நியமிக்கப்பட்டிருக் கிறார்கள்? இதனால் போக்குவரத்துக்கு சௌகரியமாக இருக்கிறது. பிரயாணிகள் தங்கள் பிரயாணச் சீட்டுக்களை வாங்கிக்கொள்ள வாய்ப்பு வசதியாக இது இருக்கிறது. இதனால் போக்குவரத்துக் கழகங்களுக்கு அதிகம் இலாபம் கிடைக்க வழிவகை ஏற்படும்: இதே மாதிரி நெல்லை மாவட்டத்தில் ஓடுகின்ற அரசுப் பேருந்து களில், எந்தெந்தப் பேருந்துகள் நிறைய செல்கின்றனவோ அந்தப் பேருந்து நிலையங்களில் ஏஜெண்டுகள் நியமிக்கப்படுவார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, அவர்கள் கூறுகின்ற கருத்தின் அடிப்படையில் ஏற்கனவே நெல்லை மாவட்டத்தில் 16 இடங்களில் 26 ஏஜெண்டுகள் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள்.

திரு. துரை கலியமூர்த்தி : தலைவரவர்களே, மாநில அரசுப் போக்குவரத்து நிலையங்கள், 'ஏ' கிளாஸ் முனிசிபாலிட்டி உள்ள இடங்களில் ஏஜெண்டுகள் இல்லாத காரணத்தால் பயணிகளுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. எனவே 'ஏ' கிளாஸ் முனிசி பாலிட்டிகளில், உதாரணமாக சிதம்பரத்திற்கு ஏஜெண்டு இல்லை என்பதை அரசு அறியுமா ? அதற்கு ஆவன செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர வர்களே, எந்த நகராட்சிப் பகுதியில் இது தேவை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டுவார்களேயானால் கண்டிப்பாக அதுப்பற்றி பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.



1978 செப்டம்பர் 7]

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, அரசு பஸ் ஏஜெண்டுகள் செயல்படாத அளவில் தனியார் பஸ் நிறுவனத்தினர் கையூட்டு கொடுத்து அவர்களைச் செயல்பட விடாமல் தடுப்பது அரசுக்குத் தெரியுமா ? சில இடங்களில் அரசு பஸ் ஏஜெண்டுகளை தனியார் பஸ் உரிமையாளர்களுடைய இச்சைக்கு, அதாவது அவர்களுடைய செய்கைக்கு அடிமையாக இருப்பவர்களைக்கொண்டு அடிக்கிறார்கள், துன்புறுத்துகிறார்கள், இராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூரில் அப்படி நடப்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் ; பேரவைத் தலைவ ரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் கூறியதன் அடிப்படையில் இதுப்பற்றி அரசுக்குத் தகவல் வந்து, அது பற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டது. உறுப்பினர் கூறுகின்ற அளவிற்குக் குறைபாடு இல்லை என்றாலும் ஆங்காங்குள்ள சில தனியார் முதலாளிகளின் தவறுகளுக்கு அரசுப் பேருந்தைச் சேர்ந்தவர்கள் உடந்தையாக இல்லாமல் இருக்கும் அளவிற்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. இரா. அமிர்தராஜ் : தலைவரவர்களே, நெல்லை மாவட்டத்தில் 16 இடங்களில் 26 ஏஜெண்டுகள் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறி னார்கள். திருச்செந்தூர் தாலுக்காவில் எத்தனை பேருந்து நிலை யங்களுக்கு எத்தனை ஏஜெண்டுகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி நியமிக்கப்படாத இடங்களில் எந்தக் கால கட்டத்தில் அவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, திருச்செந்தூர் வட்டத்தில் எத்தனை இடங்களில் என்ற தகவல் இப்பொழுது இல்லை. அப்படி அங்கு இல்லை என்றால் தேவைகளின் அடிப்படையை ஆய்ந்து அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : தலைவரவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் அதிகமான பஸ்கள் ஓடுகின்றன. அங்கு எந்தெந்த ஊர்களில் ஏஜெண்டுகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் ? எந்த அடிப்படை யில் ஏஜெண்டுகள் நியமிக்கப்படுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர வர்களே, தர்மபுரி மாவட்டத்தில் அண்ணா போக்கு வரத்துக் கழகத்தின் சார்பில் புதிதாக 52 வழித்தடங்களில் அடுத்த மாத வாக்கில் பேருந்துகள் விடப்பட இருக்கின்றன. அவைகள் விடப்பட்ட பின்பாக ஏஜெண்டுகள் நியமிக்கப்படுவது பற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

## "நீர் அளவு கருவி"கள் திருடு.

* வினு 76—திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) கோவை மாவட்டம், குரிச்சி என்ற ஊரில் மத்திய அரசின் நில நீர் ஆய்வு வாரியத்திற்குச் சொந்தமான 4 "Water level Recorders" திருடு போய்விட்டதாகச் சொல்லப் படுவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதைக் கண்டுபிடிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) நான்கு "வாட்டர் லெவல் ரிக்காடர்கள்" 23-9-77 முதல் காணுமற் போனது உண்மை.

(ஆ) இவைகள் கண்டு பிடிக்கப்பட்டுவிட்டன.

## தோட்டக்கலைத் துறை.

* வினு 77— திரு. துரை முருகன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விவசாயத் துறையில் இருந்து தோட்டக்கலையை (Horticulture) தனியாகப் பிரித்து ஒரு இலாக்காவாக ஆக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) கர்நாடக மாநிலத்தில் உள்ளதுபோல் இம்மாநிலத்திலும் தோட்டக்கலை வளர்ச்சிக்கென தனியாக ஒரு துறையை ஏற்படுத்தலாம் என்ற கருத்து ஆராயப்பட்டது.

2. இதனை வேளாண்மை இயக்குநருடன் அரசு கலந்து ஆலோசித்தது. 1979-80 ல் நிறைவேற்ற விரிவான திட்டத்தைச் சமர்ப்பிக்குமாறு வேளாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டார். திட்டம் அரசுக்குக் கிடைத்தவுடன் தோட்டக் கலைக்கென தனியாக ஒரு துறை அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

[முற்பகல் 9.40]

திரு. மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, விவசாயத் துறையிலிருந்து தோட்டக் கலையைத் தனியாகப் பிரித்து செயல்படுத்தப் போவதாக அமைச்சரவர்கள் கூறினர்கள். கர்நாடகத்தைச் சேர்ந்த பெங்களூருக்கு அருகில் தர்மபுரி



மாவட்டம் இருப்பதால், தோட்டக்கலை நன்ருக வளர்ச்சி அடையக் கூடிய சீதோஷ்ண, தட்பவெப்ப நிலை, அம்மாவட்டத்தில் இருப்பதால், தோட்டக் கலையை தர்மபுரியில் வளர்க்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லிய மேலான யோசனையின் பேரில்தான் தோட்டக்கலையின் பயிர்களை எந்தெந்த மாவட்டத்திலே சிறப்பாகக் கொண்டு வரமுடியும் என்கின்ற திட்டத்தினை ஆராய்ந்து வருகிறோம். மேலும் தர்மபுரி மாவட்டத்திலே, தோட்டக் கலைபயிர்கள், பழவகைகள், மலர் வகைகள் போன்றவைகளை வளர்ப்பதற்கான திட்டமும் ஆராயப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## சுற்றுப்புறச்சூழல் அசுத்தமாவதைத் தடுப்பது பற்றிய குழு.

* வினு 78.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சுற்றுப்புறச்சூழல் அசுத்தமாவதைத் தடுக்க உயர்மட்ட போர்டு அமைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் பணிகள் யாவை ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் ; (அ) ஆம்.

(ஆ) இக்கழகம் ஓர் ஆலோசனைக் கூடமாக செயல்பட்டு சுற்றுப்புற சூழ்நிலை பற்றி கொள்கைகளை உருவாக்க அரசுக்கு உதவி செய்து, எல்லாத் துறைகளுக்கும் ஓர் இணைப்பு அமைப்பாக இருந்து சுற்றுப்புறம் மாசுபடுவதை எல்லா விதத்திலும் கவனிக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, அக்குழு அரசுக்கு ஏதேனும் பரிந்துரைகள் வழங்கியுள்ளதா ? அப்படி வழங்கியிருந்தால் அந்தப் பரிந்துரைகளைப் பற்றி அறிவிக்க இயலுமா :

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, அக்குழு அரசுக்குப் பரிந்துரை செய்தது, ஒரு நீண்ட பட்டியலாக இருப்பதனுல், உறுப்பினர் விரும்புவாராளுல், தனியாக அதைத் தயாரித்து அனுப்புவதற்கு வழி செய்கிறேன்.

திரு. ஆர். மணிமாறன் : தலைவரவர்களே, இதைப் போலவே தண்ணீரைச் சுத்தப்படுத்துவதற்காக அரசாங்கத்தின் சார்பில் சட்டங்கள் ஏதாவது அமைக்கப்பட்டிருக்கிறதா ? அப்படி அமைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னுல் அதனுடைய வரையறைகள் என்ன என்பதைச் சொல்ல இயலுமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : நீர் மாசுபடும் சிக்கலைக் கருத்தில் கொண்டு மத்திய அரசு 1974ஆம் ஆண்டு நீர் மாசு தடுப்புச் சட்டம் ஒன்றை நிறைவேற்றி மத்திய நீர் மாசு தடுப்பு வாரியம் ஒன்றை அமைத்துள்ளது. அநேக மாநிலங்கள் இந்தச் சட்டத்திற்கான ஒப்புதல் அளித்து மாநில நீர் மாசுத்தடுப்பு வாரியங்களை அமைத்துள்ளன. தமிழ்நாட்டிலும் இந்தச் சட்டத்திற்கான ஒப்புதல் அளிக்கலாமா அல்லது ஒரு மாநில சட்டப்படி அமைந்த வாரியம் அமைக்கலாமா என்பது பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, இந்தச் சுற்றுச் சூழ் நிலைகளைக் கட்டுப்படுத்த, 'என்வைரன்மென்ட்டல் பொலுஷன், ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட போர்ட் நகரங்களில் இருக்கும் படியான புகை, இவற்றை மட்டும்தான் ஆராயுமா? அல்லது அதோடு தொழிற்சாலைகளிலிருந்து வெளி வருகின்ற புகையைப் பற்றியும் ஆராயுமா? உதாரணமாக, சிமெண்ட் தொழிற் சாலையிலிருந்து வெளிவருகின்ற புகையினுல், மரங்களும் கெட்டுப் போகின்றன, மக்களுக்கும் கெடுதல் ஏற்படுகிறது. அதையெல் லாம் இந்த போர்ட் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவ ரவர்களே, அனைத்துத் துறைகளாலும் பாதிக்கப்படுவதை ஆராய்வதற்காகத்தான் இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவரவர்களே, ஹார்பரி லிருந்து ரெட் ஆக்சைட் வெளி வருவதால்,' இராயபுரம் பகுதி பூராவும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று நீண்ட நாள் புகார் இருக்கிறது. அதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : அவர் களிடத்திலே தகுந்த ஆதாரங்கள் கேட்டு குறிப்பு அனுப்பப் பட்டிருக்கிறது.

திரு. ரா. உமாநாத் : இந்த என்வைரன்மென்ட்டல் பொலூஷன்பற்றி கமிட்டி போட்டிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னுர்கள். ஆனுல், திருச்சி போன்ற நகரங்களில் மொலாசஸ் வாடையை நிவர்த்திக்காததால் ஹோல் ஸ்டேஷனை அது பாதித்திருக்கிறது. இதற்கென அமைக்கப்பட்ட குழு ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருப்பதாகக் கூறப்பட்டது. நிலைமை மோசமாக இருப்பதாலே, ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கும்போதே இந்த நிலையைக் கட்டுப்படுத்த ஏதாவது நடவடிக்கை எடுக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவ அவர்களே, அதற்கான நடவடிக்கைகள் எடுக்க மாவட்ட ஆட்சி தலைவரிடத்திலே பரிந்துரைகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.





திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சிப் பகுதியில் பாதாள சாக்கடைகளை சுத்தப் படுத்து வதற்காக இறங்கக் கூடியவர்கள், அந்த சாக்கடைகளில் இருந்து வெளிப்படுகின்ற விஷப் புகையின் காரணமாக இறந்து விடுகின்ற நிலைமை இருக்கிறது. அண்மையிலே கூட இரண்டு பேர் இறந்து விட்டார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிந் திருப்பார்கள் என்று நம்புகிறேன். அப்படிப் பணிபுரியும் நபர்கள் எந்த வகையிலும் பாதிப்பு ஏற்படாத வகையில் பணிபுரிய அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்திட அரசு ஆவன செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல இயலும்.

* விஞ 79—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா :

[அ] காற்றுத் தூய்மை கெடுதல் தடுப்புக் குழு ஒன்றை அரசு அமைத்திருக்கிறதா?

[ஆ] ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : [அ] மற்றும் [ஆ] : 1971-ஆம் ஆண்டு ஜூன் மாதம் காற்று மாசு படுவது பற்றி ஆராய அரசு ஒரு குழுவை நியமித்தது. இக்குழு 1972-ஆம் ஆண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் அதிகாரச் சார்பற்றவர்களையும் உறுப்பினர்களாகக் கொண்டு புதிய தொழிற்சாலைக் கழிவு நீரை சுத்தப்படுத்தும் முறைகளைப் பரிந் துரை செய்வதிலும் அரசுக்கு ஆலோசனை வழங்கும் முறையில் தண்ணீர் மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்புக் குழுவாக மாற்றி யமைக்கப்பட்டது. மாற்றியமைக்கப்பட்ட இக்குழு மீண்டும் 1976-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் தமிழக ஆளுநரைத் தலைவராகக் கொண்ட தமிழ்நாடு சுற்றுப்புறத் தூய்மை வாரிய மாக (The Tamil Nadu Environmental Board) மாற்றியமைக்கப் பட்டு இப்போதும் இயங்கி வருகிறது. தற்போது காற்றுத் தூய்மைத் தடுப்புக்குழு எதுவும் இயங்கவில்லை.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, அந்தக் குழு இராணிப்பேட்டை போன்ற பகுதிகளில், பேர்ணும்பட்டு, ஆம்பூர் பகுதிகளில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் இருந்து வரு கின்ற அந்த துர்நாற்றம், அந்த வழியாக போகிறவர்களுக்குத் தான் தெரியும்—மூக்கைப் பிடித்துக் கொண்டுதான் போக வேண்டும். அந்த அளவுக்கு அது காற்றை அசுத்தப்படுத்தியிருக் கிறது. எனவே அந்தக் குழு அவற்றினைப் போக்க ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா? அல்லது பரிந்துரை செய்திருக் கிறதா? அல்லது பரிந்துரை செய்ய அரசு அந்தக் குழுவை வேண்டிக்கொள்ளுமா?

[1978 செப்டம்பர் 7

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : அந்தக் குழு தமிழகத்திலே ஆளுகின்ற அனைத்து மக்களின் நலனைக் குறித்து அமைக்கப்பட்ட வாரியம். இந்த வாரியம் கீழ்க்கண்டவைகளைப் பற்றி ஆராய்ந்து வருகிறது.

1. நீர் வளம் பற்றியது.
2. குடியிருப்பு, நகரமைப்பு மற்றும் போக்குவரத்துப் பற்றியது.
3. சுகாதாரம் மற்றும் விளம்பரம் பற்றியது.
4. தொழில் பற்றியது.
5. ஆய்வு மற்றும் வளர்ச்சி பற்றியது.

இவைகளைப் பற்றி ஆய்வு செய்து அரசுக்குத் தெரிவிப்பதற்காக அமைக்கப்பட்டிருக்கின்றன.

திரு. ப. பொன்னுரங்கம் ; தலைவர் அவர்களே, சென்னை துறைமுகத்தில் இரும்புக் கல் ஏற்றுமதியினால், அதனாலே வருகின்ற டஸ்டினால், ஆஸ்த்துமா, டி. பி. போன்ற வியாதிகள் வருவதாக இராயபுரத்திலே உள்ள மருத்துவர்கள் அபிப்பிராயம் சொல்லியிருக்கிறார்கள். அதைப்போன்று விசாகப்பட்டிணத்திலும் கண்டாலா துறைமுகத்திலும் இந்த இரும்பு கற்களை உரிய முறையில் பாதுகாப்பளிக்கப்பட்டு ஏற்றுமதி செய்வதாகத் தெரிய வருகிறது. ஆகவே அந்த முறையை, தண்டாலாவிலேயும் விசாகப்பட்டிணத்திலும் கடைபிடிக்கும் அந்த முறையைப் பற்றி அறிந்து அது பற்றி இந்தக் குழுவிற்கு ஆலோசனை கூற அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ;

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, இதுபற்றி ஏற்கனவே அரசுக்கு தெரிவிக்கப்பட்டு, துறைமுக அதிகாரிகளிடம் குறிப்பிட்டு, அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குழுவிற்கு ஆளுநரைத் தலைவராகப் போட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆளுநர் எப்படித் தலைவராக இருக்க முடியும், செல்லையாவும் தலைவர், ஆளுநரும் தலைவரா ? ஆளுநர் கான்ஸ்டிடுஷனல் ஹெட், எக்சிகூடிவ் ஹெட் அல்ல. எந்த விதியின் அடிப்படையில் ஆளுநரை இந்த அரசாங்கம் தலைவராக நியமித்தது என்பதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் விளக்குவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, 1971 ஆம் ஆண்டு இப்படி ஒரு குழு அமைக்கப்பட்டது. அதற்குப் பின்னாலே 1976 ஆம் ஆண்டு இங்கே நம்முடைய குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெற்றபோது ஆளுநர் அந்த வாரியத்திற்குத் தலைவராக நியமிக்கப்பட்டார்.........



1978 செப்டம்பர் 7]

திரு. க. சுப்பு : குடியரசுத் தலைவர் ஆட்சியின் போது அவர் எக்சிகூடிவ் ஹெட், அதனால் அவர் நியமிக்கப்பட்டார். ஆனால் இப்போது அவர் கான்ஸ்டுஷனல் ஹெட். அவரை மாற்றியிருக்க வேண்டாமா. இப்போது கவர்னர் இருக்க முடியாது. முதலமைச்சர்தான் இருக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : The Minister has not finished his reply.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, தற்போது ஆளுநர் அவர்கள் தலைவராகவும், முதலமைச்சர் அவர்கள் துணைத் தலைவராகவும் இருக்கிறார்கள்.

திரு. க. சுப்பு : சட்ட ரீதியான விளக்கத்தை நான் கேட்க விரும்புகிறேன். ஆளுநர் ஆட்சியின் போது அவர் தலைவராக இருந்திருக்கலாம். ஆட்சேபணை இல்லை. அப்போது அவர் நிர்வாகத் தலைவர். ஆனால் இப்போது முதலமைச்சர்தான் இருக்க வேண்டும். ஆளுநர் இருப்பது ஏன் ? குதிரைக்குக் குர்ரம் என்றால் ஆனைக்கு அர்ரம் என்று சொல்வதா ? எந்த விதியின் கீழ் ஆளுநர் நியமிக்கப்பட்டார் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இது பற்றி தனியாக கேள்வி போடுவார்களானால் விரிவான பதிலைத் தர தயாராக இருக்கிறேன்.

## பாலிஸ்டர்—கதர் துணி.

* வினா 80—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கைத்தறி—பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பாலிஸ்டரும் கதரையும் சேர்த்து பாலிஸ்டர் கதர் தயாரிக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?.

மாண்புமிகு திருமதி கப்புலட்சுமி செகதீசன் : (அ) மற்றும் (ஆ) : ஆம். பாலிஸ்டர் மற்றும் அதைப் போன்ற செயற்கை தும்புகளுடன் பஞ்சினையும் கலந்து, நூல் உற்பத்தி செய்து அதனை துணிகளாக பரீட்சார்த்த முறையில் நெய்து பார்த்ததில், இத்திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தமுடியும் என கருதப்படுகிறது. ஆனால் மேற்கொண்டு வேலை தொடருமுன், கதர் பற்றிய விளக்கத்தை தகுந்தவாறு மாற்றுவதற்காக சம்பந்தப்பட்ட மாநில மற்றும் மத்திய சட்டங்களைத் திருத்தவேண்டியிருக்கிறது. இது மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

[முற்பகல் 9-50]

திரு. மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, பாலிஸ்டர், கதர், செயற்கை பாலிஸ்டர் கதர் என்றும் மாற்றம் ஏற்படுகிறபோது, அதனால் விலையேற்றம் ஏற்பட்டு ஏழை எளிய மக்கள்

வாங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டால், மீண்டும் அதிகமாக பாலிஸ்டர் கதர் தேங்கக் கூடும். ஆகவே, பாலிஸ்டர் கதர் விலை எந்த அளவிற்கு அரசு நிர்ணயித்து இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : பேரவைத் தலைவரவர்களே, இவ்விதம் உற்பத்தி செய்யப்பட்ட துணிகள் பார்வைக்கு கதரைப் போன்றும் அதே நேரத்தில் பாலிஸ்டர் துணிகளுக்குள்ள அனைத்துச் சிறப்புகளும் கொண்டவையாக வனப்புடன் உள்ளன. இவைகளின் விலைகளும் (மீட்டருக்கு ரூ. 6.95 முதல் ரூ.22.90 வரை) பொதுச் சந்தையில் விற்கப்படும் மில்களில் தயாரிக்கப்படும் பாலிஸ்டர் துணிகளின் விலைகளை விட குறைவாகவும் இருக்கிறது. கதருக்கு வழங்கப்படும் தள்ளுபடிகள் இவற்றுக்கும் வழங்கப்படும்பொழுது வெற்றிகரமாக இவைகளை விற்பனை செய்திட முடியும் என்ற நம்பிக்கை அரசுக்கு இருக்கிறது.

திரு. ரா. உமாநாத் : பேரவைத் தலைவரவர்களே, கதர் இயக்கம் ஆரம்பித்த போது அதனுடைய பொதுவான நோக்கமே நாலும் கையாலே நூற்கப்படவேண்டும், அதைக்கொண்டு கிராம வாசிகள் வீவும் செய்யவேண்டும் என்பது பிரதானமாக இருந்தது. இப்படி பரவலாக மில்லால் தயாரிக்கப்படும் நூலை வைத்து துணிகள் லினன் உற்பத்தி செய்தால், அந்தக் கதரின் பிரதான லட்சியத்திற்கு வேட்டு வைக்கும் முறையில் இந்த பாலிஸ்டர் கதர் இருக்காதா, அது கதர் திட்டத்திற்கு மாறாக இருக்காதா ஏன் இதை அரசாங்கம் செயல்படுத்துகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : பேரவைத் தலைவரவர்களே, செயற்கைத் தும்புகளான பாலிஸ்டர், விஸ்கோஸ், அக்ரிலீக்பைபர் மற்றும் ஜெய்லன் ஆகியவைகளைத் தனித் தனியாகவும், கூட்டாகவும் பருத்தியுடன் பல விகிதாசாரங்களில் கலந்து கையினால் நூல் உற்பத்தி செய்து அந்நூலைக் கொண்டு கையினாலேயே செய்து கதர் பாலிஸ்டர் துணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. க. சு. தண்டபாணி : பேரவைத் தலைவரவர்களே, நான் வயதில் சிறியவன் என்ற காரணத்தால் பெரியவருக்கு நீங்கள் முதலில் வாய்ப்புக் கொடுத்து விட்டீர்கள். அவர் என் கேள்வியைக் கேட்டு விட்டார். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :- ஓர் உரையின் / தொடக்கத்தில் உடுக்குறி (* இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 2. தகவல் கோரல்

### உறுப்பினர்களுக்கு ரெயில்வே பாஸ் வழங்குவது குறித்து.

* திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாண்புமிகு பேரவை உறுப்பினர்களுக்கும், மேலவை உறுப்பினர்களுக்கும் ரெயிலில் பயணம் செய்வதற்கு பாஸ்கள் வழங்கப்பட்டது. நமது அவை முன்னவரின் ஆலோசனைக்கு இணங்க 3 - 4 மாதங்களுக்கு முன்பே அவைகளையெல்லாம் திரும்பப் பெற்றுக் கொண்டீர்கள், புதிதாகத் தருவதாகக் கூறி. அதோடு இன்னொரு புதிய சலுகையைக்கூட மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள், நீங்கள் மட்டும் தனியாகப் போக வேண்டியது இல்லை, உங்கள் மனைவிமாரையும் உடன் அழைத்துப் போகலாம் என்று தெரிவித்தார்கள். சலுகையையும் அறிவித்து விட்டு, மனைவிமார்களோடு வம்பையும் வளர ஏற்பாடு செய்து விட்டீர்கள். ஆகவே, விரைவில் இந்தக் கூட்டம் முடிவதற்குள்ளேயே அந்த பாஸ்களைக் கொடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, கனம் உறுப்பினர்களின் வேதனை எனக்கு புரியாமல் இல்லை. நான் இங்கே அறிவித்தது உண்மை. ஆனால் அவைகளைச் செயல்படுத்துவதற்கு சட்டத்திலே சில திருத்தங்கள் தேவை. அந்தத் திருத்தங்களை உருவாக்கி விரைவில் எனக்குத் தருமாறு நான் நமது அசெம்பிளி செக்ரடரி அவர்களைக் கேட்டு இருக்கிறேன். சட்ட அமைச்சர் அவர்களும் அதற்குத் துணையாக இருந்து ஒத்துழைக்க வேண்டிக் கேட்டு இருக்கிறேன். பெரும்பாலும் இந்தத் தொடரிலேயே அந்தத் திருத்தம் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டால் நீங்கள் எல்லாம் மகிழ்ச்சி அடைகிற அளவிற்கு நான் அதற்குத் துணை இருக்கத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருக்கிற உரிமைகளை பறிப்பது அரசின் நோக்கமல்ல. இல்லாத உரிமைகளைத் தர முயற்சிப்பது தான் அரசின் நோக்கம் என்பதையும் நான், தெளிவு படுத்த விரும்புகிறேன்.

திரு. மு. ஆறுமுகம் : தலைவரவர்களே, இந்த இரயில்வே பாஸ் வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதால் பல சிரமங்கள் ஏற்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பிரச்சனைக்கு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். தயவு செய்து உட்காருங்கள்.

திரு. மு. ஆறுமுகம் : ஆகவே, அரசுப் பேருந்துகளில் சட்டமன்ற உறுப்பினர்களுடைய துணைவிமார்களும் உறுப்பினர்களுடன் செல்ல வகை செய்யப் படுமா ?

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, நமது சட்ட மன்றத்தின் இடதுபுறத்தில் ஐஸ் வாட்டர் தொட்டி ஒன்று இருக்கிறது. இரண்டு, மூன்று நாட்களாக அங்கே தண்ணீர் குடிப்பதற்கு குவளை இல்லை. உடனடியாக குவளை வைக்கப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது கவனிக்கப்படும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : சார், நம்முடைய உயர்நிலைப் பள்ளிகளில் ஹையர் செகண்டரி கல்வி தொடங்கப்பட்டு 3 மாதங்களுக்கு மேலாகிவிட்டது. ஜூன் மாதத்தில் மாணவர்கள் சேர்க்கப்பட்டார்கள். அதற்குப் பின்னால், 3 மாதம் ஆன பிறகும் இன்னும் வகுப்பு நடத்த ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. அதனால் .......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. தாங்கள் குறிப்பிடுவது பொது விவாதத்தில் பேச வேண்டியது. ஆகவே உட்காருங்கள்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : நான் அதுபற்றி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன் ; அதைப்பற்றிக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப் பற்றி அறையிலே வந்து சேருங்கள் ; இப்போது தயவு செய்து உட்காருங்கள்.

## 3. உரிமைப் பிரச்சினைகள்.

### (அ) முதல் அமைச்சர் அவர்கள் மீது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 184-வது விதியின் கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்கள் கீழ்க்கண்ட அவை உரிமை மீறல் பிரச்சனையைக் கொடுத்திருக்கிறார்கள் :—

On 1-9-1978 the Hon. Chief Minister has announced in the Assembly intervening the Marxist member Hon. Govindarajan that the Ordinance No. 2 of 1978 namely, the Tamil Nadu Essential Services Maintenance Ordinance has been withdrawn and stands cancelled now. The announcement made by the Hon. Chief Minister is contrary to the facts and amounts to deliberately misleading the House. Moreover, the act of the Chief Minister in making such announcement will certainly amount to breach of privilege.

Therefore, the matter may be referred to the Privileges Committee.

இது எப்படி அவை உரிமையை மீறிய செயலாகும் என்பதைச் சுருக்கமாக விளக்கும்படி திரு. சுப்பு அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.



திரு. க. சுப்பு : தலைவரவர்களே, இந்த அத்தியாவசிய சர்வீஸ் ஒழுங்கு அவசரச் சட்டத்தை ஆளுநர் அவர்கள் 213-வது விதியின் கீழ் பிறப்பித்திருக்கிறார்கள். இந்த அவசரச் சட்டத்தைப் பிறப்பிக்கும்போது, Governor is satisfied that circumstances exist that render it necessary for him to take immediate action என்ற நிலை இருக்கும்போது பிறப்பித்திருக்கிறார்கள். இப்படிப் போடுகிற உத்தரவை அல்லது சட்டத்தைத் திரும்பப் பெறும் அதிகாரம் ஆளுநருக்குத்தான் உண்டு.

May be withdrawn at any time by the Governor. ஆளுநர் பிறப்பிக்கும் அவசர உத்தரவை திரும்பப் பெறுவதற்கு ஆளுநருக்குத்தான் அதிகாரம் இருக்கிறது. ஆனால் ஆளுநரால் திரும்பப்பெற்றதாகத் தெரியவில்லை. முதலமைச்சர் திரும்பப் பெறப்பட்டுவிட்டதாக அறிவித்திருக்கிறார்கள். அது பத்திரிகையிலும் வந்திருக்கிறது. ஆனால் இதுவரை திரும்பப் பெறப்படவில்லை. பெறப்பட்டதாக எந்தவிதமான தகவலும் இல்லை. அப்படி இருக்கும்போது திரு. கோவிந்தராசன் அவர்கள் பேசும்போது இருவரும் ஏதோ பேசினார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. என்ன பேசினார்கள் என்பதற்குக் குறிப்பு இல்லை. முதலமைச்சர் பேசும்போது, அந்தச் சட்டம் ரத்தாகிவிட்டது என்று தெரிவித்தார். அதற்காக கோவிந்தராசன் நன்றி தெரிவித்து, கூறினார் என்றும் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. எனவே, ஆளுநர் பிறப்பித்த உத்தரவை அவரே திரும்பப் பெறாதபோது, முதலமைச்சர் ரத்தாகி விட்டது என்று சொல்வது அரசியல் சட்டத்திற்கு விரோதமான ஒரு செயல். இந்த செய்தி 1-ந் தேதி பத்திரிகையில் வந்திருக்கிறது. இது வரையில் முதலமைச்சரிடமிருந்து, "நான் அப்படிச் சொல்லவில்லை என்றோ அல்லது அதற்கு அர்த்தம் வேறு என்றோ" மறுப்பு எதுவும் வரவில்லை. ஆகவே, அவர்கள் ஏதோ வார்த்தைகள் மூலம் அல்லது வேறுவிதமான செய்திகள் மூலம் ரத்து செய்து உத்தரவிட்டிருக்கிறேன் என்று அறிவித்திருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. இப்போது ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் நேரம். இந்த நேரத்தில் இதுபற்றி விளக்கம் தெரிந்து கொள்வது பொருத்தமாக இருக்கும். இந்திய அரசமைப்பு சட்டத்தின்படி இது ஒரு கொள்கை பிரச்சனை அல்ல; சட்டப் பிரச்சனை என்பதால் இது அவை உரிமையை மீறிய செயல். ஆகவே, அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவரவர்களே, திரு. சுப்பு அவர்கள் எழுப்பியிருக்கிற இந்த உரிமை மீறல் பிரச்சனைக்கு அடிப்படை துளிக் கூட இல்லை என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் இங்கே திரு. கோவிந்தராசன் அவர்கள் இதைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறபோது ஏற்பட்ட பேச்சை ஒட்டி பத்திரிகைகளில்

வந்த பிறகு அந்தச் செய்தியை அடிப்படையாக வைத்துக் கொண்டு, திரு. சுப்பு அவர்கள் இந்த உரிமை மீறல் பிரச்சனையைத் தந்திருக்கிறார்கள்.

அன்றைக்கு இந்த அவையிலே என்ன நடந்தது என்பதை நான் படித்துப் பார்த்தேன். படித்துப் பார்த்தபோது திரு. சுப்பு அவர்கள் சொல்லியதைப் போல மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நான் திரும்பப் பெற்றுவிட்டேன் என்றோ அல்லது அந்த வகையிலான வார்த்தைகளைப் போல இந்த மன்றத்தில் பேசவில்லை என்பதை முதலில் நான். தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 10-00]

நான் பத்திரிகைகளை நம்பாதவன் அல்ல. பத்திரிகைகளிலே வருகிற செய்திகள் அத்தனையும் உண்மையாக இருக்கும் என்று மற்றவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்றும் எனக்குத் தெரியும். ஆனால் எல்லாவற்றையும் விட நமக்கென்று நம்புவதற்கு குறிப்பேடு இருக்கும்போது அந்தக் குறிப்பேட்டை நம்பி நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். உறுப்பினர் திரு. கோவிந்தராசன் அவர்கள் பேசுகிறபோது பேசிய அந்தக் குறிப்பேடு பகுதியை மட்டும் நான் இங்கே படித்துக் காட்ட விரும்புகிறேன் அவைத் தலைவரின் அனுமதியோடு.

" அடுத்து வேலை நிறுத்த தடைச் சட்டம்— டிரான்ஸ்போட் ஊழியர்களின் வேலை நிறுத்தம் நடைபெற இருந்தபோது அதைத் தடை செய்யும் வகையில் கொண்டு வரப்பட்டது. அந்தச் சட்டம் தானாகவே காலாவதி ஆவதற்கான சூழ்நிலையை அரசு ஏற்பாடு செய்து இருக்கிறது. அது வரவேற்கத்தக்கதொன்றாகும். ஒரு சட்டம் தானாகவே காலாவதி ஆக வேண்டும் என்று சொன்னால் அதற்கு 6 மாதம் ஆக வேண்டும். இப்போது 3 மாதம் தான் ஆகியிருக்கிறது. இன்னும் 3 மாத காலம் காத்து இருக்க வேண்டுமா ? அந்தச் சட்டம் தேவையில்லை என்றால், அப்படி முடிவு செய்து விட்ட பிறகு, அதை ரத்து செய்ய அறிவிப்புக் கொடுக்க வேண்டாமா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு) முதலமைச்சர் அவர்கள் அந்தச் சட்டத்தை ரிப்பீல் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டிருக்கிறபோதே, அந்தச் சட்டம் ரத்து செய்ய ஆணை ஏற்கெனவே பிறப்பிக்கப் பட்டு விட்டது என்று சொன்னதற்கு மிக்க மகிழ்ச்சி, நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்." என்று அவர்கள் பேசி இருக்கிறார்கள்.

ஆனால் அன்றைக்கு முதலமைச்சரவர்கள் இது குறித்து திரு. கோவிந்தராசன் அவர்கள் பேசியதற்கு எந்தவிதமான கருத்தும் தெரிவிக்கவில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். திரு. கோவிந்தராசன் அவர்கள் அனுமானத்தின் அடிப்படையில் இந்தச் சட்டத்தை நிரந்தரமாக வைத்துக் கொள்கிற சர்க்காராக அது இருக்காது என்ற நல்லெண்ணத்தில், தொழிலாளர்களின் நலன் பேணுகின்ற அரசாக இது இருக்கிறது என்றால் இந்தச் சட்டத்தை நிச்சயம் அது ரத்தாகிற அளவுக்கோ அல்லது தானாகவே உயிர் இழந்து போகிற அளவுக்கோ ஒரு சூழ்நிலையை இந்த அரசு உருவாக்கக் கூடும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலே அந்தக் கருத்தை அவர் தெரிவித்திருக்கக்கூடும். ஆனால் சுப்பு அவர்கள் இது முதலமைச்சர் சொன்னார், ஆகவே இது உரிமை மீறல் பிரச்சினை என்று கூறுவதற்கு மட்டும் நான் பதில் தெரிவிக்க விரும்புகிறேன். அப்படி முதலமைச்சர் பேசவில்லை.



அடுத்து, இரண்டாவதாக திரு. கோவிந்தராசன் அவர்கள் பேசும்போது இது தானாக காலாவதி ஆவதற்கு 6 மாதங்கள் ஆகும், மூன்று மாதங்கள் தானே ஆகி இருக்கின்றன, இன்னும் மூன்று மாத காலம் காத்திருக்க வேண்டுமா என்று கேட்டார்கள். நான் அவரது கவனத்திற்கு அரசின் விதி முறைகளைப் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

Rule 142 - ' Within six weeks from the re-assembly of the Legislature, any member may, after giving three clear days' notice to the Secretary, move a motion disapproving the Ordinance and if such Motion is passed it shall be forwarded to the Council with a message for its agreement.'

ஆகவே 6 மாதம் அல்ல 6 வாரம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்தில் இந்தியத் துணைக் கண்டத்தின் அரசியல் சட்டத்தின் 2 3 (2) ஏ என்பதில்

'An Ordinance promulgated under this Article shall have the same force and effect as an Act of the Legislature of the State, assented to by the Governor, but every such Ordinance........

(a) shall be laid before the Legislative Assembly of the State. or where there is a Legislative Council in the State, before both the Houses, and shall cease to operate at the expiration of six weeks from the re-assembly of the Legislature, ........'

என்று சொல்லப்பட்டிருக்கிறது., ஆக 6 வாரத்திற்குள்ளாக அது தானாக காலாவதி ஆகிவிடும் என்பதை நான் அரசாங்கத்தின் சார்பிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த 6 வார காலத்திற்குள்ளாக அது தானாக காலாவதி ஆகின்ற முறையில் சட்டத்துறை பரிசீலித்து இருப்பதை இந்த அவைக்கு எடுத்துச் சொல்லி அதற்குப் பிறகு அது தானாக காலாவதி ஆகின்ற நல்ல

நாளை எல்லோரும் எதிர்பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முதலமைச்சரவர்கள் சொன்னார்கள் இந்த அவையிலே என்று திருப்பித் திருப்பி திரு. சுப்பு அவர்கள் வலியுறுத்திச் சொல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : நல்லவேளை நான் இல்லை—இந்த அவையில் அந்தச் சந்தர்ப்பத்தில் நான் இல்லை. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இருந்தார்கள், அவை முன்னவர் அவர்கள் இருந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தராசன் அவர்கள் 'ஸிக்ஸ் வீக்ஸ்' என்று சொல்லியிருக்க வேண்டும், 'ஸிக்ஸ் மன்த்ஸ்' என்று சொல்லிவிட்டார்கள். இப்போது அதைத் திருத்தியதற்காக நன்றி. அன்றேகூட அதைத் திருத்தியிருக்கலாம். பரவாயில்லை, இப்போதாவது திருத்தினீர்களே, குறுக்கீடு என்று போடப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் படித்தார்கள். என்ன குறுக்கீடு என்று எழுதியிருந்தால் வசதியாகயிருந்திருக்கும்.........

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : குறுக்கீடு என்று போடப்பட்டிருக்கிறது. திரு. சுப்பு அவர்கள் கொஞ்சகாலமாக இந்த அவையில் இருந்தவர்கள். இருந்து பலவற்றைக் கற்றதாக அவர்கள் நமக்கெல்லாம் சொல்லிக்கொண்டிருப்பவர். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். பாராளுமன்ற நடைமுறை, பாராளுமன்றத்தில் குறுக்கீடு என்றால் குறுக்கீடு முதல் இடம் பெற்றிருக்கும். ஆனால் இந்த மன்றத்தில் குறுக்கீடு என்று வருகிறதே தவிர யார் யார் எப்படிக் குறுக்கிட்டார்கள், என்னென்ன பேசினார்கள் என்பது வருவதில்லை. ஆகவே அவர்கள் அதை இன்று துழாவிச் செல்கிற, தேடிச் செல்கிற ஒரு கொலம்பஸ்-ஆக— நமது அருமை நண்பர் திரு. சுப்பு அவர்கள்— மாறாமல் சொன்ன விளக்கத்தை ஏற்றுக் கொண்டு அதை வாபஸ் வாங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : குறுக்கீடு என்ற இடத்தில் அது என்ன என்று போட்டிருந்தால் விளக்கமாக இருந்திருக்கும். என்ன என்பது இல்லை. இல்லை, என்றாலும் முதல் அமைச்சர் அவர்கள், நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை மறுக்கவில்லை. 1-ம் தேதி மக்கள் குரலில் செய்தி வந்திருக்கிறது. அதை மறுக்கவில்லை. ஆகவே இந்தப் பிரச்சினை வந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் ஏற்கனவே விளக்கியாகிவிட்டது. அமருங்கள். நானும் பார்க்கிறேன். அவர்கள் திரும்பத் திரும்ப சொன்னதையே சொல்கிறார்கள், எனக்கு விவரங்கள் புரிந்துவிட்டது.

(திரு. சுப்பு நின்றுகொண்டிருந்தார்.)





உட்காருங்கள். ஏற்கனவே சொன்னதைத்தான் சொல்கிறீர்கள். உட்காருங்கள். நான் ரூளிங் கொடுக்கப்போகிறேன். சொன்ன விளக்கம் போதும்.

1–9–1978 ஆம் நாளின் நடவடிக்கைக் குறிப்புகளை நான் பார்வையிட்டேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் குறிப்பிட்டது போல மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவையில் பேசவில்லை. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசாத ஒன்றைப் பேசியதாகக் கருதிக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் இந்த அவை உரிமை மீறல் குறித்தப் பிரச்சினையைக் கொண்டு வந்துள்ளார்.

பேரவை முன்னவர் அவர்களும் எல்லா விவரங்களையும், விளக்கங்களையும் தந்ததற்குப் பின்னால் அவை உரிமை மீறல் எதுவும் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### (ஆ) கல்வித் துறை அமைச்சர் மீது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, பேரவையின் 184-வது விதியின் கீழ், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. க. சுப்பு மற்றும் திரு ஆர். உமாநாத் ஆகியோர் அவை உரிமை மீறல் குறித்த ஒரு அறிவிப்பைக் கொடுத்துள்ளனர். அது பின்வருமாறு:

"In pursuance of the assurance given by the Government in the Legislature the Hon. Minister for Education has reportedly announced that the Government had passed orders empowering the Education Department to transfer or terminate teachers of a private aided school along with the post to another needy school. The salary to other teachers of that "erring school" would be paid directly by the Government.

The Minister has further stated that the order was intended to infuse a feeling of job security among the teachers. He has also stated that the order would be extended to college teachers later.

The Director of School Education, Dr. K. Venkatasubramaniam, has characterised the order as "revolutionary one", and perhaps the first of its kind to be implemented in the country.

The announcement was made by the Minister when he was speaking at the Teachers' Day Celebration at Valluvar Kottam, Madras.

The Minister has obviously chosen the public platform to make such an important statement involving the implementation of a policy decision taken by the Government in pursuance of the assurance given by them on the floor of the Assembly,

The Hon. Minister is fully aware of the fact that the Legislature is in session. It is the privilege of the Legislature to know such decisions of the Government in the first instance especially when the Legislature is in session. While so, the conduct of the Minister in by-passing the Legislature when he made the announcement on the public platform will certainly amount to breach of privilege. It must be construed that the Minister has insulted the House by showing disrespect and dishonour to the Legislature, Therefore he is liable to be proceeded against for breach of privilege of the House "

கொடுத்திருக்கும் அறிக்கையே மிக விளக்கமாக இருப்பதால் திரு. சுப்பு அவர்களும், திரு. உமாநாத் அவர்களும், தம் கருத்துக்களை மிகச் சுருக்கமாக அளிக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மீது இப்படிப்பட்ட ஒரு உரிமை பிரச்சனை கொடுக்கப்பட்டபோது பேரவைத் தலைவர் அவர்கள் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட முக்கியமான அறிவிப்புகளை சட்டமன்றம் நடந்துகொண்டிருக்கும்போது விளக்கங்களை இங்கே சொல்வதை விட்டுவிட்டு வேறு ஒரு இடத்தில் சொல்வது என்பது விரும்பத்தக்கதல்ல —— அதை சட்ட விரோதம் என்று சொல்லவில்லை, விரும்பத்தக்கதல்ல —— என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி விரும்பத்தகாத ஒன்றை வேறு ஒரு இடத்தில் சொல்லியிருப்பது இந்தச் சட்ட மன்றத்தின் உரிமையைப் பாதிப்பதாக இருக்கிறது. ஆசிரியர் தினவிழாவில் முக்கியமான அறிவிப்பு ஒன்றை —— புரட்சிகரமான அறிவிப்பு என்று திரு. வெங்கடசுப்பிரமண்யம் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் —— அப்படிப்பட்ட புரட்சிகரமான அறிவிப்பு ஒன்றை இந்த மன்றத்தில் சொல்லியிருப்பார்களேயானால் முதல் தகவல் நமக்குக் கிடைத்திருக்கிறது என்ற பெருமை ஏற்பட்டிருக்கும். இந்தப் பெருமையைக் காக்க வேண்டிய பொறுப்பு அமைச்சர்களைச் சார்ந்தது அமைச்சர் அவர்கள் அதை 'பைபாஸ்' பண்ணி வேறு ஒரு இடத்தில் அறிவிப்பதென்றால், இந்தச் சட்டமன்றம் கூடியிருக்கும்போது அப்படி வேறு இடத்தில் முதலில் அறிவிப்பது என்றால் அது இந்த அவையின் உரிமையைப் பாதிப்பதாகும். திரும்பத்திரும்ப இவ்விதம் நடப்பது, பேரவைத் தலைவர் அவர்களின் அறிவுரைக்கு இணங்காதிருக்கும் நிலை, வருந்தத்தக்கது.



[முற்பகல் 10-10]

இனிமேலாவது சட்டமன்றம் கூடுகின்ற நாட்களில் இப்படிப்பட்ட அறிவிப்புகளை—அதிலும் இது புரட்சிகரமான அறிவிப்பு என்று டைரக்டர் வெங்கடசுப்பிரமணியம் அவர்களே தெரிவித்திருக்கிறார்—இப்படிப்பட்ட புரட்சிகரமான அறிவிப்புகளை எல்லாம் வெளியில் சொல்லிவிட்டால், சட்டமன்றம் வறட்சியாகப் போய் விடும். ஆகவே இப்படி சட்டமன்றக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நேரத்தில் வெளியில் இப்படிப்பட்ட அறிவிப்பை செய்ததற்கு இதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பிரீச் ஆஃப் பிரிவிலேஜ்-ஜை பொறுத்தவரையில் — நான் சொல்ல விரும்புவது—இந்த உத்தரவு நல்ல உத்தரவுதான் வரவேற்கக் கூடியதுதான். மைனாரிட்டியாக இருக்கின்ற இந்த ஸ்கூல்ககள் நினைத்துக்கொண்டிருப்பது, தங்களுக்கு மேல் யாருமே கிடையாது, பிரைம் மினிஸ்டரே வந்தாலும் கூட எங்களைக் கட்டுப்படுத்த முடியாது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், இங்கு இதே சப்ஜெக்ட் பற்றி இங்கு கேள்வி வந்தது. 200-க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டு வெளியில் நிறுத்தப் பட்டிருக்கிறார்கள். அதாவது 'ராங்ஃபுல்லி டிஸ்மிஸ்டு' என்ற வகையில் வெளியில் இருக்கிறார்கள். கேள்விகள் மூலமாக இதே சபையில் இந்தப் பிரச்சனை வந்தது. நானும் உப கேள்விகள் மூலமாக இதே குறிப்பிட்ட சப்ஜெக்டைப் பற்றிக் கேட்டேன். கடந்த 5-ம் தேதி உத்தரவு போடப்பட்டிருக்கிறது. 5-ம் தேதி உத்தரவு போடப்பட்டிருப்பதாக பேப்பரில் பார்த்தேன். அப்படியானால் இரண்டு நாட்களுக்கு முன்பே இதைப்பற்றி கவர்ன்மென்ட் டிஸிஷன் எடுத்திருக்கவேண்டும். அப்படி குறிப்பிட்ட டிஸிஷன் கையில் இருந்திருக்கும்போது, அதைப்பற்றி இந்தக் கேள்வி வந்தபோது இந்த சபையிலேயே தெரிவித்திருக்கலாம். அப்படித் தெரிவிக்கவில்லை. அந்த முறையில் 'சப்ரஷன்' வருகிறது. இதற்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல்,

Culmination of the assurance made on the floor of the House

என்று வருகிறது. அதைத்தான் சொல்லியிருக்கிறார்கள். அந்த கல்மினேஷன் ஏற்பட்டிருப்பது ஒன்று, இரண்டாவது இந்த அவுஸுக்கு முதலாவது தெரிவித்திருக்கவேண்டும், மூன்றாவது, இதைப்பற்றி 'கால் அட்டன்ஷன்' கொடுக்கப்பட்டு அது பென்டிங்காக இருக்கிறது. அந்த கால் அட்டன்ஷன் பென்டிங்காக இருக்கும்போது வெளியில் இதைப்பற்றி அறிக்கை கொடுப்பது பிரீச் ஆஃப் பிரிவிலேஜ் ஆகாதா? இதைப் பற்றி தாங்கள் ஃபைனலாக ஒரு முடிவு எடுக்கவேண்டும், ஏனென்றால் இதுமாதிரி அடிக்கடி நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இதில் ஒரு டிஸிஷன் எடுப்பது நல்லது. மேலும் இதில் பிரீச் ஆஃப் பிரிவிலேஜ் மட்டும் அல்ல, இந்த அவுஸின் 'ப்ரொப்ரைட்டி' யும் அடங்கியிருக்கிறது. பிரிவிலேஜ்-ம் ப்ரொப்ரைட்டியும்

சேர்ந்திருப்பதால் தான் இப்படிப்பட்ட தகராறுகள் அடிக்கடி வருகின்றது. ஆகவே முக்கியமாக இந்த அவுஸ் செஷனில் இருக்கும்போது, அமைச்சர் அவர்கள் வெளியில் கருத்துக்களை—அதிலும் முக்கியமான கருத்துக்களை வெளியிடுவது—சரியல்ல—அந்த முறையில் இரு பிரிவிலேஜ்ஆக வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அடிப்படையில் இதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையினுடைய உரிமையை மீற வேண்டுமென்ற நோக்கத்தோடு நான் இந்தக் கருத்துக்களை தெரிவிக்கவில்லை. கடந்த ஓராண்டு காலத்தில் பல்வேறு அறிவிப்புக்களை இந்தப் பேரவையிலேயே சொல்லியிருக்கிறேன். இங்கே சொல்லுவதில் தான் பெருமையும் இருக்கும் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால், இந்த உத்தரவு என்பது புதிய உத்தரவு என்று சொல்வதற்கு மாறாக, கடந்த ஓராண்டு காலமாக அளிக்கப்பட்டு வந்த பல வாக்குறுதிகளின் அடிப்படையில் பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. அதைப்போலவே மேலவையிலும், பேரவையிலும் சொல்லப்பட்ட பல உறுதிமொழிகளை நிறைவேற்றுவதற்கும் அரசு பல முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறது.

அதை மீறி தனியார் துறையைச் சேர்ந்த ஆசிரியர்கள் வேலையிழக்கக் கூடிய நிலைமையும், பழி வாங்கும் நிலைமையும் ஏற்பட்டுக்கொண்டிருப்பதின் காரணமாக ஆசிரியர்கள் உண்ணாவிரதம் இருக்க வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது. கடந்த மாதம் 28-ம் தேதியிலிருந்து அவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்திக்கொண்டிருந்தார்கள். அவர்களுடைய பிரதிநிதிகள் என்னை வந்து சந்தித்தார்கள். நீங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கப் போவதாக விரைவில், அதிலும் 4-ம் தேதி அல்லது 5-ம் தேதிக்குள்—அதாவது ஆசிரியர் தினத்திற்குள் அறிவிப்பதாக இருந்தால் அந்த உண்ணாவிரதத்தை கைவிடுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று அவர்கள் என்னிடம் சொன்னதின் அடிப்படையில், இதுவரை அவ்வப்போது இருந்து வந்த நடைமுறைகள், உத்திரவாக பிறப்பிக்கப்படுவதாக அன்றையதினம் அறிவிக்கப்பட்டது. இதல்லாமல் பேரவையின் உரிமையை மீற வேண்டும் என்ற எண்ணத்தோடு செய்யவில்லை என்பதையும் மட்டுமல்ல, உண்ணாவிரதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அதை நிறுத்துவதற்கு வேண்டிய ஒரு உத்தியாக இப்படிப்பட்ட உத்தரவை போட்டு இருக்கிறோம் என்பதை அங்கே அறிவித்தேன். மைனாரிட்டிப் பள்ளிகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் தெரிவித்தார்கள். இதே போன்ற உத்தரவு மைனாரிட்டிப் பள்ளி நடத்துகின்றவர்களை எல்லாம் கட்டுப்படுத்துகின்ற அளவுக்கு இருக்கும் என்பதோடு இது போன்ற தவறுகள் ஏற்படுகின்ற நேரத்தில் நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதையும் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன். அரசு தருகின்ற மானியத்தைப் பெற்றுக்கொண்டு வெறும் முகவரைப் போன்று நடக்கவேண்டிய இந்த தனியார்த்



துறை நிறுவனங்கள் ஏதோ தாங்களே தான் சம்பளத்தை வழங்குபவர்கள் என்று நினைத்துக்கொண்டு ஆசிரியர்களை நிறுத்துவதும், வேலையிலிருந்து ஆசிரியர்களை நீக்குவதும்—இப்படி செய்யப்படுவதை எல்லாம் இந்த அரசால் பார்த்துக்கொண்டிருக்க முடியாது என்பதையும், நிச்சயமாக இதன் மீது நடவடிக்கை எடுக்கும் என்பதையும், ஆசிரியர்களுக்கு பணிப்பாதுகாப்பை தரும் என்பதையும், இப்படிப்பட்ட விஷயங்களில் நிச்சயமாக அரசு உறுதியான நடவடிக்கைகள் எடுக்கும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்,

இந்தப் பேரவையை மதியாது பேசுகின்ற அளவிற்கு எனக்கு எண்ணமில்லை என்பதைச் சொல்லிக்கொண்டு, இதனை மேலும் வலியுறுத்த வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பிரச்னை பேரவை கூடியிருக்கும்போது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அரசின் கொள்கை பற்றிய ஓர் அறிவிப்பைப் பேரவையில் செய்யாது, வெளியில் தெரிவித்தார் என்பது குறித்து எழுப்பப்பட்டுள்ளது. கொள்கை பற்றிய அறிவிப்புக்களை, பேரவை கூடியிருக்கும் சமயம் பேரவையில்தான் செய்ய வேண்டும் என்பது மரபு. இம்மரபை மீறிய செயல் அவை உரிமை மீறிய செயல் ஆகாது. இதில் உரிமை மீறல் எதுவும் இல்லை என்று இப்பேரவையில் பல தீர்ப்புகள் உள்ளன.

எனவே, இப்பிரச்சனையில் அவை உரிமை மீறல் எதுவும் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## (4) கவன ஈர்ப்புகள்.

### (அ) சிவகங்கை மன்னர் கல்லூரி மாணவர் குத்தப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து 41-வது விதியின்கீழ் அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. சுப்பிரமணியன் அவர்கள் இந்த அவையின் கவனத்தை ஈர்த்திருக்கிறார்கள். ஆனால், திரு. ஓ. சுப்பிரமணியன் அவர்கள் இருக்கையில் இல்லாமையால், கவன ஈர்ப்பு திரும்பப் பெற்றுக் கொண்டதாக அறிவிக்கிறேன்.

திரு க. சுப்பு: தலைவர் அவர்களே, இந்த விதியின்கீழ் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு பதிலைத் தெரிவித்தால், பொதுமக்களுக்கு அது உதவியாக இருக்கும்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: It can be placed.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மன்னர் கல்லூரிக்கு வெளியே 24-8-78 அன்று காலை 11 மணி அளவில் திரு. எம். கணேசன் என்னும் இக் கல்லூரியின் பழைய மாணவர் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டார். இதனைத் தொடர்ந்து கல்லூரி மாணவர்களிடையே உணர்ச்சிமிகு கொந்தளிப்பு நிலை காணப்பட்டதால், அக் கல்லூரி ஆசிரியர் குழு காலாண்டு விடுமுறையினை 25-8-78 அன்றிலிருந்து துவக்கி 31-8-78 வரை விடப்படலாம் என்று முடிவு செய்ததினால் மேற்படி தினங்களில் கல்லூரி மூடப்பட்டது. பெரும்பான்மையான விடுதியில் தங்கி இருக்கும் மாணவர்கள் விடுதியினை விட்டு 25-8-78 அன்றே தத்தம் ஊர்களுக்குச் சென்றனர்.

திரு. கணேசன் அபாயகரமான கட்டத்தைக் கடந்து உடல் நலம் தேறி வருகிறார், திரு. கணேசனைக் குத்தியது யார் என்று தெளிவாக இல்லை. மேலும், தன்னைக் குத்தியது யார் என்று திரு.கணேசன் சொல்ல இயலவில்லையென்பதால், காவல் துறையினர் வழக்கு ஏதும் பதிவு செய்யவில்லை என்று தெரிய வந்துள்ளது.

இக் கத்திக் குத்து சம்பவம் கல்லூரிக்கு வெளியே உள்ள சாலைப்புறத்தில் நடைப்பெற்றதால், இந் நிகழ்ச்சிக்கும் கல்லூரிக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை என்றும் 1-9-78 முதல் கல்லூரி மீண்டும் செயல்படுகிறது என்றும் கல்லூரிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

(ஆ) மாணவர்கள் படகு விபத்திற்குள்ளானது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டாவது கவன ஈர்ப்பு தீர்மானம். திருவாளர்கள் கோ. இளங்கோவன், ரா. மார்க்கபந்து ப. சந்திரன், என். வரதராஜன், அ. சுவாமிதாஸ், பொ. விஜய ராகவன், ஏ. ஆர். மாரிமுத்து, துரை முத்துசாமி, சின்னசேலம் மா. சுப்பிரமணியம், எம். ஏ. லத்தீப் ஆகியோர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார்கள்.

திரு. கோ. இளங்கோவன்: பேரவைத் தலைவர் அவர்களே, 'பழைய வண்ணாரப்பேட்டை, பழனிச்சாமி நாடார் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் எண்ணூர் அருகே 26-8-78 அன்று படகு விபத்துக்குள்ளாகி, 15 பேர் இறந்துபோனதும், அதனால் அப்பகுதியில் ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்தும்' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[முற்பகல் 10-20]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை வண்ணாரப்பேட்டை பி. ஏ. கே. பழனிச்சாமி நாடார் உயர்நிலைப்பள்ளி மாணவர்களில் சாரணர் பிரிவைச் சேர்ந்த 64 மாணவர்கள் திரு. சீனிவாசன் என்னும் தமிழாசிரியர் தலைமை





யில் (சாரணர் பிரிவுத் தலைவர்) 26-8-78 அன்று எண்ணூர் அருகே உள்ளே தாழங்குப்பம் என்னுமிடத்திற்கு சுற்றுலாச் சென்றனர். இவர்கள் சாலை வழியாக கத்தியவாக்கம் என்னுமிடத்தை 26-8-78 அன்று காலை 10-00 மணியளவில் சென்றடைந்தனர். அங்கிருந்து முத்துவாரிக்குப்பம் என்னும் தீவிற்குச் செல்லும் பொருட்டு சாரணர் பிரிவின் தலைவர் இரண்டு மீன் பிடிக்கும் படகுகளை போக்குவரத்துக் கூலி ரூ. 30-க்கு அமர்த்திக் கொண்டார். அப்படகுகள் ஆட்களை ஏற்றிச் செல்வதற்கு உரிமம் வழங்கப்பட்டவை அல்ல. படகொன்றிற்கு 32 மாணவர்கள் வீதம் ஏற்றிக் கொண்டு 11-00 மணியளவில் இரு படகுகளும் புறப்பட்டன. முதல் படகில் சாரணர் பிரிவுத் தலைவர் ஏறிக்கொண்டார், படகுகள் சென்றுக் கொண்டு இருக்கையில் சுமார் 11-30 மணியளவில் முத்துவாரிக்குப்பத்திற்கு அருகில் ஒரு படகு கவிழ்ந்து விட்டதாக சைதாப்பேட்டை கோட்ட ஆட்சியாளர் தெரிவித்துள்ளார். கவிழ்ந்த படகில் ஏற்கனவே ஓரளவு நீர் கசிந்து கொண்டிருந்ததால், அதிலிருந்து மாணவச் சாரணர்கள் குரல் எழுப்பினர் எனக் கூறப்படுகிறது. படகு கவிழ்ந்ததால் மூழ்கிய 32 மாணவர்களில், 7 மாணவர்கள் உடனே மீட்கப்பட்டு விட்டனர், 13 மாணவர்கள் பின் மீட்கப் பட்டு சென்னை ஸ்டேன்லி மருத்துவமனையில் சேர்க்கப் பட்டனர். அங்கு 3 பேர் இறந்துவிட்டனர்; மீதி 12 பேர் மூழ்கி இறந்து விட்டனர். மற்றொரு படகில் சென்ற 32 மாணவர்களும் அதிலிருந்த சாரணர் பிரிவுத் தலைவரும் உடனே நலமாக கத்தியவாக்கம் திரும்பி விட்டனர். விபத்து நடந்த இடம் முகத்துவாரத்திலிருந்து 2 பர்லாங் தூரத்திலுள்ளதாகவும் அங்கு நீரின் ஆழம் சுமார் 20 அடி உள்ளது எனவும் சைதாப்பேட்டை கோட்டாட்சியாளர் தெரிவித்துள்ளார்.

2. இத்துயரச் சம்பவம் குறித்து காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். விசாரணை முடிவுக்குப் பின்னர் குற்றவாளிகள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும், தற்பொழுது படகு விபத்து நடந்த பகுதியில் பதட்டநிலை ஏதுமில்லை.

3. பதினைந்து மாணவர்களின் உயிரிழப்புக்கு இவ்வரசு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டதோடு, அவர்கள் குடும்பத்தினருக்கு மனிதாபிமானத்தின் அடிப்படையில் மக்கள்பால் நல்லெண்ணமும் தூய்மை உணர்வும் கொண்டு, பேரிழப்புக்கு ஆளான ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ. 5,000 (ரூபாய் ஐயாயிரம் வீதம்) முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்கிட 30-8-78 அன்று ஆணை பிறப்பித்துள்ளது.

4. மாணவர்கள் எந்த ஒரு சுற்றுலாப் பயணத்தையும் மேற்கொள்ளுமுன், போதிய தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளைத் திட்டவட்டமாக செய்து முடித்த பின்னர் தான், அப்பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற நிலையான உத்திரவினை 12-6-1950 நாளன்று, கல்வி இயக்குநர் பிறப்பித்துள்ளார். அது இன்னும் அமுலில் இருந்து வருகிறது. அவ்வுத்திரவினை படகு விபத்துக்

குள்ளான சாரணப் பிரிவின் தலைவரும் பள்ளி நிர்வாகத்தினரும் கடைப்பிடித்தனரா என்பது விசாரணையில் கண்டறியப்பட்டு தவறிழைத்தவர்கள மீது கடுமையான துறை நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும். இது போன்ற துயரம் மிக்க விபத்துக்கள் இனிமேலும் நிகழாமல் தடுக்கும் வகையில் அரசு கல்வி இயக்குநரைக் கலந்தாலோசித்து தகுந்த உத்திரவினைப் பிறப்பிக்கும்.

திரு. கோ. இளங்கோவன் : பரிதாபத்திற்குரிய அந்தப் படகு விபத்தில் இறந்தவர்கள் குடும்பத்திற்கு முதலமைச்சர் அவர்கள் நிதியிலிருந்து தலா 5,000 ரூபாய் கொடுக்கப்படும் என்று அரசு அறிவித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நன்றி. அதோடு அவர்கள் சார்ந்திருக்கும் இயக்கத்தின் சார்பாக தலா குடும்பத்திற்கு 2,500 ரூபாய் தருவதாக அறிவித்ததாகச் சொல்லப்படுகிறது. ஆக இந்த 7,500 ரூபாயும் அந்தக் குடும்பங்களுக்கு உடனடியாகக் கிடைக்க அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும்.

திரு. ரா. மார்க்கபந்து: இதுபோன்ற மாணவர்கள் உல்லாசப் பயணத்திற்கு அழைத்துச் செல்லும்போது பொறுப்பில்லாத முறையில் அழைத்துச் செல்வதன் காரணமாக இதுபோன்ற விரும்பத்தகாத விபத்துகள் ஏற்பட்டு இந்த அரசுக்கும் களங்கம் ஏற்படுத்துகின்ற வகையில் சில சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. இந்த அவல நிலை ஏற்படாத வகையில் இந்த அரசு மேற்கொண்டு என்ன கடுமையான நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, விசாரணை நடைபெற்று வருகிறது. அதனுடைய முடிவில் பொறுப்பு இல்லாமல் நடந்து கொண்டிருப்பார்கள் என்று தெரிய வருமானால் அவர்கள் மீது கடுமையான உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேற்கொண்டு இதுபோன்ற நிலைமைகள் நடைபெறாமல் இருக்க பாதுகாப்பான செயல் திட்டங்களை ஏற்படுத்துமாறு கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

திரு. அ. சுவாமிதாஸ் : இறந்து போன மாணவர்களுக்கு நீச்சல் தெரியாத காரணத்தால் இறக்க நேரிட்டது என்று சொல்லுகிறார்கள். ஆகவே, நீச்சல் கட்டாயமாக மாணவர்களுக்கு தெரிந்திருக்க வேண்டுமென்ற முறையில், அதிலும் சாரண இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு நீச்சல் தெரிந்திருக்க வேண்டுமென்ற முறையில் பள்ளிக்கூடங்களில் அதனைப் பயிற்றுவிக்க அரசு முற்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாரணர் இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு சைக்கிள் ஓட்டுவது, நீச்சலடிப்பது போன்ற பயிற்சிகள் எல்லாம்



தரப்படவேண்டுமென்ற ஒரு முறை இருந்து வருகிறது. அப்படிப் பட்ட ஒரு முயற்சியைப் பரவலாக மாணவர்களிடையே தருவது நல்லதுதான். அதற்கான ஒரு முறையை இந்த அரசு மேற்கொள்ள விரும்புகிறது.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, 15 மாணவர்களுடைய உயிரைப் பலிகொண்ட இந்தக் கோரச் சம்பவம் அனைவருடைய உள்ளத்தையும் உருகச்செய்யும் சம்பவம் ஆகும். இந்தச் சம்பவத்தைப் பார்க்கும்போது உல்லாசப் பயணிகள் எடுத்துச்செல்கின்ற படகை எடுத்துச்செல்லாத காரணத்தால் தான் இப்படி ஏற்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. அதற்குக் காரணமானவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் உயிரிழந்த மாணவர்களின் குடும்பங்களுக்கு 5,000 ரூபாய் உதவித்தொகை அளிக்கப்படுமென்றும் அறிவித்திருப்பதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்திலே இந்த இறந்த மாணவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் எழுப்பினால் இனிமேல் இப்படி உல்லாச பயணம் செல்லும் மாணவர்களுக்கு முன் எச்சரிக்கையாக இருக்கும் என்ற அடிப்படையிலே அவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் எழுப்பப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நினைவுச் சின்னங்கள் எழுப்புவதற்கான உத்தேசம் அரசுக்கு இல்லை. ஆனால் இந்தப் படகு விபத்திலே சிக்கிக் கொண்ட பேர்களை தப்புவிக்கின்ற முயற்சியிலே அண்ணாமலை என்ற மாணவன் வெற்றிப்பெற்றிருக்கிறான், அவனது வீரமிக்க துணிச்சலான சேவையைப் பாராட்டுவதற்கு இந்த அரசுக்கு உத்தேசம் இருக்கிறது.

## (5) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

## (ஆ) 1978 ஆம் ஆண்டு, மதுரைப் பல்கலைக் கழக (திருத்த-சிறப்பு விதித்துறைகள்) சட்டமுன்வடிவு.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு, மதுரைப் பல்கலைக் கழக (திருத்த-சிறப்பு விதித் துறைகள்) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு. க. சுப்பு : ஐ அப்போஸ் தி இன்ட்ரொடக்ஷன் ஆப் தி பில். இதைப்பற்றி ஏற்கனவே நான் 'நான் டிஸ் அப்ரூவல்' நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன். அதைப்பற்றி அப்புறம் பேசிக்கொள்கிறேன். ஏற்கனவே ஆர்டினன்ஸ் ஆக போட்டதை இப்போது மசோதாவாகக் கொண்டுவருகிறார்கள். இது சம்பந்தமாக ஆளுநர் உரைமீது பேசிய உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். சிறந்த வரலாற்றுச் சிறப்பும் தொன்மையான பல சிறப்புகளையும் கொண்ட மதுரையின் பெயர் இருக்கவேண்டும் என்று சொன்னபோது அதற்கு முதலமைச்சர் அவர்கள் அதிலே மதுரையை இணைத்தால் சரியாக இருக்காதா என்று கேட்டு அதைச் சேர்க்கக்கூடிய இம்ப்ரஷனைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த நிலையிலே இப்போது அந்த அடிப்படையிலே இந்தச் சட்டத்தைத் திருத்தம் செய்யாமல் கொண்டுவந்திருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் ஒரு லீடிங் இம்ப்ரஷன் கொடுத்ததற்கு மாறாகவும் திரு. கந்தசாமி அவர்கள் சொன்ன கருத்தையொட்டி முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்துக்கு மாறாகவும் இந்த மசோதாவை கொண்டுவந்திருக்கிறார்கள் என்ற காரணத்தினால் இதை நான் எதிர்க்கிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : இந்த சட்டமுன்வடிவு சட்டமாக ஆவதற்கு முனபு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி : தலைவர் அவர்களே, நானும் இந்தத் தீர்மானத்தை எதிர்க்கிறேன். நானும் இதற்காக ஏற்கனவே நோட்டீஸ் கொடுத்திருந்தாலும் அதைப்பற்றி பிறகு பேசிக்கொள்ளலாம் என்றாலும் இப்போது இந்த மசோதாவை முழுமையாக இன்ட்ரட்யூஸ் பண்ணுவதை நான் எதிர்க்கிறேன். அதற்கு தாங்கள் தீர்ப்புக் கொடுக்கவேண்டும். நான் பேசியபோது முதலமைச்சர் அவர்கள் மதுரைப் பல்கலைக்கழகத்தோடு காமராஜ் என்று சேர்க்கலாம் என்ற முறையிலே பதில் சொன்னார்கள். இருந்தாலும் நான் இந்த மசோதா முழுவதையும் எதிர்க்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப் பெற்றிருக்கிறது.

[முற்பகல் 10.30]

## (6) ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்— (தொடர்ச்சி)

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற இந்தத் தீர்மானத்தின் மீது என்னுடைய கட்சியின் சார்பாக சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். இங்கே ஆளுநர் உரையை நான் மிகவும் கவனமாகப் படித்துப் பார்த்தேன். இந்த ஆளுநர் உரையில் கடந்த ஆண்டு என்ன கருத்துக்கள் சொல்லப்பட்டனவோ அதே கருத்துக்கள்தான் திரும்பவும் சொல்லப்பட்டிருக்கின்றன. இதிலே புதிய அம்சங்கள் இல்லை. சினிமாக்காரர்கள் பாணியில் சொல்ல வேண்டுமானால், இந்த ஆளுநர் உரை பழைய படம், ஆனால் புதிய காப்பி என்று சொல்வதைத் தவிர வேறொன்றும் இல்லை.

மதுரைப் பல்கலைக் கழகத்திற்குத் தியாக தீபம் காமராஜ் அவர்களுடைய பெயரைச் சூட்டியிருக்கிறார்கள். தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்திற்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரைச் சூட்டியிருக்கிறார்கள். இவைகளை நான் வரவேற்கிறேன். ஆனால் பெரியார் நூற்றாண்டு விழா கொண்டாடுகின்ற இந்தச் சூழ்நிலையில் தந்தை பெரியார் அவர்களின் பெயரை சென்னைப் பல்கலைக் கழகத்திற்குச் சூட்ட வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

இஸ்மாயில் கமிஷன் தீர்ப்பின்மீது நடவடிக்கை எடுக்கப் பட்டிருப்பதாக ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இஸ்மாயில் கமிஷன், குற்றவாளிகள் என்று தெளிவாகச் சொல்லியிருக்கும் பல அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை. குறிப்பாக திரு. கிருஷ்ணசாமி, அடிஷனல் ஐ. ஜி. அவர்களுக்கு பிரசிடெண்ட் அவார்ட் கிடைப்பதற்கு இந்தச் சர்க்காரே சிபாரிசு செய்திருப்பது எந்தவிதத்தில் நியாயமாக இருக்க முடியும் என்று கேட்க விரும்புகிறேன். கேரளாவில இராஜன் கொலைவழக்கில் சம்பந்தப்பட்ட எல்லா போலீஸ் அதிகாரிகளையும் கேரள அரசு வேலை நீக்கம் செய்து அவர்கள்மீது கிரிமினல் வழக்கு தொடர்ந்து, நீதிமன்றம் அவர்களில் பலரைக் குற்றவாளிகள் என்று அறிவித்தது. இங்கேயும், கேரள அரசைப் பின்பற்றி, இஸ்மாயில் கமிஷனால் கொடுக்கப்பட்டிருக்கின்ற உண்மையான குற்றவாளிகளின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. அ. ரகுமான்கான்] [1978 செப்டம்பர் 7

அடுத்து, ஆளுநர் உரையில், மாநிலங்களுக்கு அதிக நிதி ஆதாரங்கள் வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. இதை நான் வரவேற்கிறேன். ஆனால் மாநிலங்களுக்கு அதிக நிதி ஆதாரங்கள் மட்டும் கிடைத்தால் போதாது. முப்பதாண்டுக் காலத்திற்கு முன்பாக இந்திய அரசியல் நிர்ணய மன்றத்தில் ஒருவர் தெளிவாகச் சொன்னார், மாநிலங்கள் 'குலோரிபைட் முனிசிபாலிடிகளாக', ''அலங்கரிக்கப்பட்ட நகராட்சிகளாக'' இருக்கின்றன என்று. இப்பொழுதும் அப்படித்தான் இருக்கிறது. ஸ்ரீரங்கத்தைத் திருவரங்கம் என்றும், ஸ்ரீவில்லிப்புத்தூரை திருவில்லிப்புத்தூர் என்றும் மாற்றுகின்ற அதிகாரம்கூட மாநில அரசுக்கு இல்லை. எனவே, அண்ணாவின் மாநில சுயாட்சிக்காக இந்தச் சர்க்கார் போராட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆட்சியில் முதலமைச்சரை புரட்சித் தலைவர் என்று விமரிசிக்கப்படுகிறது. ஆகவே, இந்த ஆளுநர் உரையில் புரட்சித் திட்டங்கள் ஏதாவது இருக்குமா என்று பார்த்தேன். முதலமைச்சரவர்கள் பல திட்டங்களை அறிவித்தார்கள். விபச்சார ஒழிப்புத் தடைச் சட்டத்தைக் கொண்டு வருவோம் என்று சொன்னார்கள். விபச்சாரம் செய்வது இங்கே சிறப்பாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஆண்தான் பெண்ணுக்குப் பணம் கொடுக்கிறான், எந்தப் பெண்ணும் ஆணுக்குப் பணம் கொடுக்கிறார்களா என்று சொல்லி விட்டு, ஆண்களையும், தண்டிக்க வேண்டுமென்று சொன்னார்கள். முதல் தடவை பெண் விபச்சாரம் செய்தால் மன்னிப்பு என்றும், இரண்டாவது தடவை அவள் விபச்சாரம் செய்தால் அபராதம் என்றும், மூன்றாவது தடவை அவள் விபச்சாரம் செய்தால் சிறைச்சாலை என்றும், அதேபோல் ஆண் முதல் தடவை விபச்சாரம் செய்தால் சிறை என்றும் சட்டம் கொண்டு வரப் போகிறோம் என்று சொன்னார்கள். அந்தச் சட்டத்தைப் பற்றி ஆளுநர் உரையில் எந்தக் குறிப்பும் இல்லை.

அதேபோன்று, 'ரைட் டு ரீ-கால்' என்று முதலமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தவறு செய்தால் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கும் அதிகாரம் அந்த மக்களுக்கு இருக்க வேண்டுமென்றும், அது தான் மக்கள் சுயாட்சி என்றும் சொன்னார்கள். அதுபற்றி ஏதாவது இருக்கிறதா என்றால் இல்லை. இது வெறும் கண் சிமிட்டுகின்ற காகிதப் பூவாகத்தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அரிசி ஆலைகள் தேசிய மயமாக்கப்படும், விவசாயிகளுக்கு மாதச் சம்பளம் வழங்கப்படும், விவசாயிகளுக்கு போனஸ் வழங்கப்படும், பயிர் இன்ஷ்யூரன்ஸ் திட்டம் கொண்டு வரப்படும், 10,000 பேர் வேலையில் நியமிக்கப்படுவார்கள், ஒரு இலட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு தரப்படும், அரசு மருத்துவர்கள் தனியாகத் தொழில் நடத்துவதற்குத் தடைச் சட்டம் கொண்டு வரப்படும் என்றெல்லாம் சொன்னார்கள். அவைகளெல்லாம் என்னவாயின? இந்தத் திட்டங்களுக்கெல்லாம் மரணம் சம்பவித்துவிட்டதா?



1978 செப்டம்பர் 7] [திரு. அ. ரகுமான்கான்]

ஆனால், திரும்பத் திரும்ப ஆளுநர் உரையில் பட்டுப் புழு வளர்ப்பதைப் பற்றியும், பால் அதிகமாக உற்பத்தி செய்யப்படுவதைப் பற்றியும், காடு வளர்ப்பதைப்பற்றியும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதைப்பற்றியும், மின்னிணைப்பு தருவதில் தீவிரமாகப் போகப் போகிறோம் என்பதைப்பற்றியும், மருத்துவமனைகள் இல்லாத ஊர்களுக்கு மருத்துவமனைகள் அமைப்பது பற்றியும், மருத்துவக் குழுக்கள் அமைப்பது பற்றியும், டி. எல். லைசென்ஸ் தனியாருக்குத் தர மாட்டோம் என்பது பற்றியும் இப்படிப்பட்ட அதிகாரிகள் செய்யக்கூடிய நிர்வாக நடவடிக்கைகளைத்தான் சாதனை என்று சொல்கிறார்கள்.

அடுத்து ஒரே பாணி, ஒரே ராகம் என்று சொல்வதைப்போல், to root out corruption at all levels எல்லா மட்டத்திலும் இலஞ்சத்தை ஒழிப்போம் என்று சொல்கிறார்கள், ஆனால் இந்தப் புனித ஆட்சியில் இலஞ்சம் ஒழிக்கப்படவில்லை என்பதை நான் இங்கே ஆதாரத்தோடு சொல்லிக்கொள்ள முடியும்.

## (7) அறிவிப்பு.

## பிரஞ்சு நாஷனல் அசெம்பளி உறுப்பினர்கள் நிகழ்ச்சிகளைக் கண்ணுறுதல்

Mr. SPEAKER: I have to announce to the House that five Members from the French National Assembly are now witnessing the proceedings of this House from the Speaker's Gallery. I have great pleasure in extending to them the warm welcome of this House.

(மாண்புமிகு உறுப்பினர் கைதட்டி ஆரவாரம் செய்தனர்)

## 6. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்—(தொடர்ச்சி)

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு தலைவரவர்களே,

* * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த அவையிலே இருக்கிற மற்றொரு உறுப்பினரைப்பற்றித்தான் குற்றம் சாட்டுகிறீர்கள். நம்முடைய அவையிலே கடைபிடித்துவரும் மரபை கனம் உறுப்பினர் பின்பற்றத் தவறிவிட்டார் என்று கருதுகிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

என்னுடைய அனுமதியைப் பெற்று, எந்த உறுப்பினரும் அதற்குப் பதில் சொல்லி விளக்கும்படியான நிலைக்குக் கொண்டு வந்த பிறகுதான் அந்தக் குற்றச்சாட்டை எழுப்பவேண்டும். இது நான் சொல்வது அல்ல; கடந்த சட்ட பேரவையில், முன்னாள் பேரவைத் தலைவர் கொடுத்த தீர்ப்பை நான் ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

கோவை செழியன் பேசியபொழுது, புலவர் கோவிந்தன் அவர்கள்—அவர்கள் பேரவைத் தலைவராக இருந்தபொழுது —சொன்னது: "நான் திருப்பித் திருப்பி சொல்வதெல்லாம், இந்த மன்றத்தில் இருக்கும் எல்லாக் கட்சித் தலைவர்களும் ஏற்றுக்கொண்ட மரபு. குற்றம் சாட்ட விரும்பினால், எந்த உறுப்பினர் மீது குற்றம் சாட்ட விரும்புகிறார்களோ அந்த உறுப்பினருக்கு பதில் அளிக்க வாய்ப்பளிக்கக்கூடிய நிலையில் குற்றச் சாட்டை முதலிலேயே எழுதி பேரவைத் தலைவரிடம் கொடுக்கவேண்டும். பேரவைத் தலைவர் அதை உறுப்பினருக்கு அனுப்பி வைப்பார். பின்னர் அது அவையில் எழுப்புவதற்கு அனுமதி அளிக்கப்படும், ஆகவே, குற்றம் சாட்டப்படுகிற உறுப்பினருக்கு பதில் அளிக்கிற முறையில் அவைகள் அவையில் எழுப்பப்பட வேண்டும். அது எல்லாக்கட்சித் தலைவர்களும் ஏற்றுக் கொண்ட மரபு. ஆகவே, அந்த மரபை மீற வேண்டாம். நான் பேசுவேன், நீங்கள் விசாரணை நடத்துங்கள், நான் நிரூபிக்கிறேன், இல்லை என்று சொன்னால் எந்தத் தண்டனையும் ஏற்றுக்கொள்ளத் தயார் என்று சொல்வது முறை அல்ல.

பேர்வைத் தலைவர் அனுமதி இல்லாமல் சொல்லப்பட்ட அந்தக் குற்றச்சாட்டு பேரவைக் குறிப்பில் ஏறாது என்பதை மட்டும் சொல்லிக் கொள்கிறேன்."

அதே போன்று திரு. ரகுமான்கான் மற்றொரு உறுப்பினரைப் பற்றி பேசிய அத்தனையையும் நீக்க உத்தரவிடுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கலெக்டர் உத்தரவைத்தான் படிக்கிறேன், எந்தக் குற்றச்சாட்டையும் சொல்லவில்லை.

மாண்புமிகு போரவைத் தலைவர்: ஒரு உறுப்பினர் பெயரையே குறிப்பிட்டுப் பேசினீர்கள்.

THIRU A. RAHMAN KHAN: I am reading the order pass d by the Collector. There is an allegation. This is a specific ord r.

Mr. SPEAKER: Whatever records you may have. ஒரு உறுப்பினர் மற்றொரு உறுப்பினர் மீது குற்றம் சாட்டினால் என் அனுமதி பெற்றுத்தான் சொல்ல வேண்டும்.





THIRU A. RAHMAN KHAN: This allegation is made by the Collecotor........

MR. SPEAKER: Let it be, but you should not............

THIRU A. RAHMAN KHAN: There is no rule like that. Please tell me the concered rule. I am bound to obey. I am reading only the order of the Collector.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து திரு. ரகுமான்கான், நான் சொன்ன தீர்ப்பினை புரிந்துகொண்டு படியுங்கள். கலெக்டரே கொடுத்தாலும், ஹைகோர்ட் தீர்ப்பே கொடுத்தாலும், இன்னொரு உறுப்பினர் மீது குற்றம் சாட்டுவதை—கலெக்டர் வாயிலாகக் குற்றம் சாட்டினால்—இந்த அவை ஏற்றுக்கொள்ளாது. யார் மூலமாக வந்தாலும் நான் அதை ஏற்றுக்கொள்ள முடியாது.

*திரு. துரை முருகன்: ஒரு அங்கத்தினர் தவறு செய்திருக்கிறார் என்று ஒரு மாவட்டத்தினுடைய கலெக்டரே ஒரு ஆர்டர் பாஸ் செய்திருக்கிறார். அதை நம்முடைய திரு. ரகுமான்கான் படிக்கிறார். நீங்கள் அதைப் படிக்கக்கூடாது என்ற மரபைச் சொல்கிறீர்கள். சற்று முன்னால் தான் நீங்களே சொன்னீர்கள், மரபை மீறுவது என்பது உரிமை மீறல் ஆகாது என்று. (குறுக்கீடு) ஆகவே, நீங்கள் அளித்த தீர்ப்பை உங்களுக்குச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பொதுப்படையாகச் சொல்வதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. எனக்குள்ள நிலை, கலெக்டரோ, அல்லது வேறு அதிகாரியோ, அல்லது நீதி மன்றமோ கொடுத்திருந்தாலும் என்னுடைய அனுமதி பெற்று, குற்றம் சாட்டப்பட்ட உறுப்பினருக்கு நான் வாய்ப்பளித்து அவரும் இந்த அவையிலே. பதில் சொல்லக்கூடிய வாய்ப்பை நான் அளிக்கத் தயாராக இருக்கவேண்டும். ஆகவே, உறுப்பினர் என்னுடைய அனுமதி பெறாமல் இன்னொரு உறுப்பினர் மீது நிச்சயம் குற்றச்சாட்டு எழுப்பக் கூடாது.

[முற்பகல் 10-40]

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் திரு. காளிமுத்து இருக்கிறார்கள். அவர்களுடைய மாநகராட்சி குடிநீர் வழங்கு துறையில் ஊழல் நடைபெற்றிருக்கிறது. ஆதாரம் இருக்கிறது. அமைச்சர் அவர்களுக்குத் தெரியாமல் நடந்திருக்க முடியாது. விசாரணை வைத்தால் பொறுப்பேற்று நிரூபிக்க தயாராக இருக்கிறேன். அந்தக் குற்றச்சாட்டுக்களைத் சொல்கிறேன். அதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே,
பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் ஆதாரத்தோடு
நிரூபிக்கிறேன் என்று சொல்லுகிறார். அவர் ஏற்கனவே ஆதாரத்
தோடு நிரூபிப்பதாகச் சொன்ன பிரேமா கொலை வழக்குபற்றி
என்ன ஆயிற்று?

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, குடிநீர் வழங்கு
துறையில் 300 பேர்கள் ஒரு நாளைக்கு 4 ரூபாய் கூலியில் 8
ஆண்டுகளாக டெம்பரரியாக பணி புரிந்து கொண்டு வாழ்க்கை
யோடு போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நிரந்தரம்
ஆக்கப்படவேண்டும் என்று நானும் தொடர்ந்து போராடிக்
கொண்டு வருகிறேன். ஆனால் அவர்கள் இன்னும் நிரந்தர
மாக்கப்படவில்லை. ஆனால் இப்போது மாநகராட்சியில் 340
பேர்கள் புதிதாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதுவும் குறிப்
பாக இந்த குடிநீர் வழங்கு துறையில் 116 பேர்கள் புதிதாக
அப்பாயின்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். நான் அந்த ஆர்டரை
வைத்திருக்கிறேன். 27-8-1978 ஆம் தேதியிட்ட அந்த ஆர்டர்
கார்ப்பரேஷன் ஆப் மெட்ராஸ், டி. ஓ. (எஸ்) நெம்பர் சி, இ.
5/10622/78 என்று ஆர்டர் போட்டிருக்கிறார்கள். இந்த 340
பேர்கள் எப்படிப் போட்டார்கள். வேறு எந்தப் பணியிலேயும்
இல்லாதவர்கள் இந்தப் பணியில் எப்படி நியமிக்கப்பட்டார்கள்.
ஏற்கனவே டெம்பரரியாக இருக்கும் 300 பேர்கள் பர்மனென்ட்டு
செய்யப்படாமல் இந்த 340 பேர்களும் எப்படி போடப்
பட்டார்கள் என்று அறியவிரும்புகிறேன். இது அமைச்சர் அவர்
களுக்குத் தெரிந்தேதான் நடந்திருக்கிறது என்று நான் பகிரங்க
மாக குற்றம் சாட்டுகிறேன். சில மாவீரர்கள் பணம் வாங்கிக்
கொண்டு இந்த அப்பாயின்ட்மென்டுகளைப் போட்டிருக்கிறார்கள.
இதை என்னுடைய தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள
மூலம் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். விசாரணைக்கு இந்த
அரசு தயாரா என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்த குற்றச்சாட்டை நான் சொல்லுகிறேன். அமைச்சர்
பொன்னையன அவர்கள் இங்கே இருக்கிறார்கள். எனவே அந்தக்
குற்றச்சாட்டை சொல்வது முறை என்று கருதுகிறேன்.
டி. எம். எஸ். 8068 என்ற எண்ணுள்ள வண்டி எக்ஸ்பிரஸ்
வண்டி, பெங்களூரில் இருந்து சென்னைக்கு வந்து கொண்டிருந்த
போது, எப்பகோளி காவல் நிலையத்தில் பர்மிட் இல்லை என்றும்
வேறு சில குற்றச்சாட்டுக்களுக்காகவும் ஆர். டி. ஓ. அவர்களால்
நிறுத்தப்பட்டு பயணிகள் அனைவரும் காவல் நிலையத்திற்குக்
கொண்டு செல்லப்பட்டார்கள். அப்போது தொடர்ந்து மழை
பெய்துகொண்டிருந்தது. பின்னர் அந்த வண்டிக்கு அபராதம்
கட்டப்பட்டிருக்கிறது. ஒரு வண்டி அல்லது 5 வண்டிகளுக்கு இதைப்
போன்று அபராதம் கட்டப்பட்டிருக்கின்றன. இது 19-8-78 லே
நடைபெற்றிருக்கிறது. ஒரு சர்க்கார் எக்ஸ்பிரஸ் வண்டிகள்
இப்படிப்பட்ட ஒழுங்கீனங்கள் செய்து அங்கே போய் அபாரதம்
கட்டுகிறது என்று சொன்னால் அது யார் வீட்டுப் பணம்?



மக்களுடைய பணம். இந்த அளவுக்கு நடந்த தவறு பொறுப்பு
வாய்ந்த அமைச்சர் அவர்களுக்குத் தெரியவில்லையா அல்லது
அதிகாரிகளுக்குத் தெரியவில்லையா? அவர்கள் மீது என்ன நட
வடிக்கைகள் எடுத்தார்கள் என்று தெரிந்து கொள்ள விரும்பு
கிறேன்.

அதேபோன்று இன்னொரு குற்றச்சாட்டு ஆட்டோ பர்மிட்.
ஆட்டோ பர்மிட் சென்னை நகரிலே உள்ளவர்களுக்குத்தான்
கொடுக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. ஆனால் நான்
குற்றம் சாட்டுகிறேன். நங்கநல்லூரிலே உள்ள ஒருவருக்கு
கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆதாரம் இருக்கிறது. அவருடைய
பெயர் எஸ். குப்புசாமி, 8, 27-வது தெரு, நங்கநல்லூர் காலனி.
என்பவருக்கு பர்மிட் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே ஒரு
அமைச்சர் சம்பந்தப்பட்டிருக்கிறார். சம்பந்தப்பட்ட அதிகாரி
மறுத்து இருக்கிறார். ஆனால் நங்கநல்லூரில் இருக்கும் நபருக்குக்
கொடுக்க முடியாது என்று மறுத்திருக்கிறார். இதற்கு அமைச்சர்
அவர்கள் தன்னுடைய பேச்சின்போது பதில் சொல்ல வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல எம். பி. பி. எஸ். தேர்வு. முதல்வரை
பொறுத்த மட்டில் நான் மதிக்கிறேன். இதிலே விசேஷமான
சில சந்தேகங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்தச் சந்தேகங்களை
தீர்ப்பதற்கு மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் அருள்கூர்ந்து
அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆகஸ்டு மாதம் 25 ஆம் தேதி 1978 ஆம் ஆண்டு எம்.பி.பி.எஸ்.
படிப்பதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியல் வெளியிடப்
பட்டது. அந்தப் பட்டியல் மருத்துவக் கல்லூரி நோட்டிஸ்
போர்டிலும் ஒட்டப்பட்டிருக்கிறது. பத்திரிகையிலேயும் வெளி
வந்திருக்கிறது. இதிலே 3 நம்பர்கள். 5227 என்ற எண் 5827
என்றும், 5085 என்ற எண் 5785 என்றும் 3510 என்ற எண்
3320 என்றும் திருத்தப்பட்டிருந்தது. இவைகளை டைபோகிரா
பிகல் எர்ரர் இருந்த காரணத்தால் திருத்தப்பட்டது என்றும்
சொல்லப்பட்டது. 26-8-1978-லே இந்துப் பத்திரிகையிலேயும்
வந்திருக்கிறது.

அது மட்டுமல்லாமல், திருத்தப்பட்ட எண்களுக்குப் பக்கத்தில்
மெடிகல் காலேஜ் நோட்டீஸ் போர்டிலே ஒட்டப்பட்ட
நோட்டீசிலே சம்பந்தப்பட்ட அதிகாரி திருத்தத்திற்கு கையெழுத்
துப் போட்டு இருக்கிறார். அது எப்படி ஏற்பட்டது என்பது வேறு
கேள்வி.

அதைப்போல் வேறு பல டைப்போகிராபிகல் மிஸ்டேக்ஸ்
நடந்து இருக்கின்றன. அவைகளின் நம்பர்களை நான் ஆதாரத்
தோடு சொல்கிறேன். அந்த நம்பர்களைக் குறித்து வைத்துக்
கொள்ளுங்கள். நான் அவைகளை இங்கே சொல்லக் கடமைப்
பட்டு இருக்கிறேன். 1645 என்ற எண் அடிக்கப்பட்டு, 1646 என்று

திருத்தப்பட்டு இருக்கிறது. அதைப்போலவே, 411 என்ற எண் அடிக்கப்பட்டு 417 என்று புதிதாக சேர்க்கப்பட்டு இருக்கிறது. 5423 என்ற எண் அடிக்கப்பட்டு 5418 என்று புதிதாக சேர்க்கப் பட்டு இருக்கிறது. இதே போல் ஒரு நெம்பர் அடிக்கப்பட்டு 2373 என்று போடப்பட்டு இருக்கிறது. எனக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சொல்கிறேன், அந்த நெம்பருக்குச் சொந்தக்காரன் டைரக்டர் ஆப் மெடிக்கல் எடுகேஷன் அவர்களுடைய பேரன், பெயர் அறிவழகன், பூம்புகார் கல்லூரி மாணவர். இப்படி அடிக்கப்பட்ட இடத்தில் சேர்க்கப்பட்ட நெம்பர் ஒரு பெரிய பதவியில் உள்ளவருக்கு உறவினன் என்ற முறையில் இருப்பதால் "ஐ ஆம் என்டைடில்ட் டு ரீசனபிள் டவுட்" ஆகவே நான் கேட்டுக்கொள்கிறேன், எடுக்கப்பட்ட மாணவர்களின் மார்க் எவ்வளவு, சேர்க்கப்பட்ட மாணவர்களின் மார்க் எவ்வளவு என்பதை சபையில் வைத்தால் உண்மையான மார்க் என்னென்ன என்பதை நான் தெளிவாக அறியலாம். 3 நெம்பருக்கு கரெக்ஷன் கொடுத்து இருக்கிறீர்கள். இந்த ஒரு நெம்பருக்கு கரெக்ஷன் வரவில்லை. அதோடு மட்டுமல்லாமல், 3 நெம்பர்களுக்கு கையெழுத்துப்போட்டு இருக்கிறார்கள், இந்த டைப்போகிராபிகல் எர்ரருக்கு அந்த அதிகாரி கையெழுத்துப் போடவில்லை. எனவே, என்னுடைய சந்தேகம் நியாயமானது. "சீசர்ஸ் ஒய்ப் மஸ்ட பி அபோவ் சஸ்பிஷன்" ஆகவே, உங்கள் மீது சந்தேகம் இல்லாமல் இருக்கவேண்டும் என்றால் எந்த மார்க்குகளின் அடிப்படையில் அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள் என்பது இந்த அவையில் வைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நான் ஒன்றைச்சொல்ல விரும்புகிறேன். அதற்கு சபாநாயகர் அவர்கள் எனக்கு அனுமதி கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நீதித்துறையில் தலையீடு இருக்கிறது என்கிற குற்றச்சாட்டை நான் சொல்ல விரும்புகிறேன். அமைச்சர் ஒருவர் சம்பந்தப்பட்டுள்ள வழக்கு சீக்கிரம் முடிக்கச் சொல்லி, ஹோம் செகரடரி ஒரு கடிதம் எழுதி இருக்கிறார். கன்டம்ட் ஆப் கோர்ட் என்பதற்காக அந்த அதிகாரியை கைது செய்யவேண்டும். அவர் எழுதிய கடிதத்தின் தேதி 16-5-1978 அதை எழுதியவர், டெபுடி செகரட்ரி டு கவர்மென்ட். கடிதத்தின் நெம்பர் மேமோ 159244. இதே போல் எஸ்.டி.எம். கோர்ட், பூந்தமல்லியில் 758/77 என்று ஒரு கேஸ் இருக்கிறது. * *

** ** **

மருத்துவமனை கட்டுவதற்காக பொதுமக்களிடமிருந்து வசூலித்த பணத்தை கையாடல் செய்ததாக வழக்கு. அந்த வழக்கை எக்ஸ்படைட் செய்யுங்கள் என்று சொல்லவில்லை. அமைச்சர் சம்பந்தப்பட்டு இருக்கிறார் என்பதால் அந்த வழக்கை சீக்கிரம் முடியுங்கள் என்று சொல்லியிருக்கிறார். அந்த அமைச்சர் யார்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





என்று கேட்டால் நான் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன். (மணியடிக்கப்பட்டது). ஒன்றே ஒன்றைச்சொல்லி நான் முடித்துக்கொள்கிறேன். முதலமைச்சர் சம்பந்தப்பட்டது....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> தாங்கள் குறிப்பிட்டுச் சொன்ன நபர் மேலவையில் உறுப்பினராக இருக்கிறார்கள். வேறு ஒரு மன்றத்தின் உறுப்பினரைப் பற்றி இந்த அவையில் பேசுவது தவறு. அப்படிப் பேசுவதானால் கூட, அவருக்கு இங்கே வந்து பதில் அளிக்கும் வாய்ப்பு இல்லை.

THIRU A. RAHMAN KHAN: I am just passing the information.

MR. SPEAKER: You should not mention his name. அவருடைய பெயரை இங்கே சுட்டிக் காட்டிப் பேசக் கூடாது.

THIRU A. RAHMAN KHAN: Respected Sir, I am only passing on the exact information. I never mean anything more.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> நீங்கள் பேசுகிற பேச்சு மரபு தவறாமல் விதி தவறாமல் இருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டியதும் என்னுடைய கடமை. நீங்கள் மேலவை உறுப்பினர் ஒருவரைப் பற்றி சுட்டிக் காட்டினீர்கள். அந்த அவையின் உறுப்பினர்களைப் பற்றி இங்கே பேசுவது தவறு.

<u>திரு. அ. ரகுமான்கான்:</u> நான் ஆதாரத்தோடு தான் பேசுகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> தயவு செய்து நான் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் யாரைப் பற்றி பேசினாலும் என்னிடத்தில் அதற்கான ஆதாரத்தைக் காட்டி விட்டுத்தான் பேசவேண்டும். அதை விட்டு விட்டு எனக்குக் கிடைத்த இன்பர்மேஷனை பாஸ் செய்கிறேன் என்று சொல்வது தவறு.

<u>திரு. அ. ரகுமான்கான்:</u> என்னிடத்தில் ஆதாரம் இருக்கிறது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> இருக்கிற ஆதாரங்களை என்னிடம் காட்டவேண்டும். அந்த ஆதாரங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியவையா என்று நான் பார்த்த பிறகுதான் பேசவேண்டும். கிடைத்த இன்பர்மேஷனை பாஸ் செய்கிறேன் என்று பேசுவது சரியல்ல. மாண்புமிகு உறுப்பினர் * * * குறிப்பிட்டு சொன்னதை நீக்க வேண்டும் என்று உத்தரவிடுகிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1978 செப்டம்பர் 7

திரு. அ. ரகுமான்கான்: முதலமைச்சர் அவர்களைப் பற்றி ஒரு பிரச்னை. (மணியடிக்கப்பட்டது). ரெப்ரசென்டேஷன் ஆப் பீப்பிள்ஸ் ஆக்டின் விதியை முதலமைச்சர் மீறி இருக்கிறார் என்று அவருக்கு எதிராக ஒரு கம்ப்ளெயின்ட் கொடுத்து இருக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டு..... திரு. கருப்பசாமி பாண்டியன் அழைக்கப்பட்டார்) அது போலீசில் தலையீடு இல்லையா? (மீண்டும் மணியடிக்கப்பட்டு திரு. கருப்பசாமி பாண்டியன் அழைக்கப்பட்டார்). இத்துடன் என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-50]

திரு. வீ. கருப்பசாமி பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மன்றத்திலே ஆளுநர் அவர்கள் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து பேசும்போது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் இந்த ஆளுநர் உரை ஒரு பழைய படம் என்று குறிப்பிட்டார்கள். உறுப்பினர் அவர்களுக்கு இது பழைய படமாக இருந்தாலும், நல்ல படமாக இருந்தால் எத்தனை தடவை போட்டாலும் நாட்டுமக்கள் மத்தியிலே அதற்கு அமோக வரவேற்பு இருக்கும் என்பதை அவர்கள் அறிந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

இங்கே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேசும்போது இந்த ஆளுநர் உரைக்கு அவர்கள் நன்றி தெரிவிப்பார்கள் என்றோ அல்லது ஆதரவு தெரிவிப்பார்கள் என்றோ நாங்கள் என்றைக்கும் எதிர்பார்க்கவில்லை. கிராமப்புறத்திலே ஒரு பழமொழி சொல்லுவார்கள். "தூங்குகிறவனை எழுப்பலாம், ஆனால் தூங்குகிறவனைப்போல் பாவனை செய்கிறவனை எழுப்ப முடியாது" என்பது அந்த பழமொழி. அதைப்போல இந்த அரசு என்ன சாதனை செய்தாலும் அதை மறுத்திட வேண்டும் என்று எண்ணுகின்றவர்கள் நிச்சயமாக இந்த உரையை ஆதரிக்க மாட்டார்கள் என்பதை நாங்கள் எல்லாம் அறிந்த விஷயம். அந்த அளவிலே இன்றைக்கு ஆளுநர் உரையிலே கூறப்பட்டிருக்கிற பிரச்சனைகளுக்கு இந்த அவையிலே பொறுப்பேற்றிருக்கிற பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் பாராட்டுத் தெரிவித்தாலும் நம்முடைய பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் மிக ஆவேசமாக இந்த உரையை விமரிசனம் செய்து பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய ஆட்சி காலத்தில் எப்படி எல்லாம் தமிழகம் பல்வேறு பிரச்சனைகளில் திக்குமுக்காடிக் கொண்டிருந்தது, எப்படி ஒரு கீழ் நிலைக்கு தமிழகம் சென்று கொண்டிருந்தது என்பதை அவர்கள் உணராதவர்கள்போல் இருக்கிறார்கள்.





இந்த ஓராண்டு காலத்தில் தமிழகத்தில் எத்தகைய தூய்மையான ஒரு நிர்வாகம் நடந்துகொண்டிருக்கிறது என்பதை அவர்களாலேயே பாராட்டப் பெற்ற ஜெயபிரகாஷ் நாராயணன் அவர்களும், இந்திய ஜனாதிபதியாக இருந்தாலும் சரி அல்லது பிரதம அமைச்சராக இருந்தாலும் சரி அவர்கள் எல்லோரும் மனம் திறந்து பாராட்டக் கூடிய அளவுக்கு இன்றைக்கு சூழ்நிலை மாறிக்கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்திய திருநாட்டின் ஜனாதிபதி சஞ்சிவரெட்டி அவர்கள் ஒரு மாதத்திற்கு முன்னால் பேசும்போது இந்தியத் துணைக்கண்டத்திலே மூன்று மாநிலங்களிலே தான் நேர்மையான, தூய்மையான ஆட்சி நடைபெறுகிறது; அதில் ஒன்று தமிழ்நாடு என்று மனம் திறந்து சொல்லியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு இன்றைக்கு தூய்மையான நிர்வாகம் தமிழகத்தில் நடத்திக்கொண்டிருக்கிறது என்பதை அவர்கள் எல்லாம் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் தலைமை.)

ஆளுநர் உரையில் கூறப்பட்டிருக்கிறப் பிரச்சனைகளைப் பார்த்தால், இந்த அரசு ஆட்சிக் கட்டிலுக்கு வருவதற்கு முன்னால் மக்களுக்கு என்னென்ன வாக்குறுதிகளை உயிர் கொள்கையாக அறிவித்து, வெற்றிப்பெற்றதோ அந்தக் கொள்கையிலே இந்த அரசு வெற்றிபெற்றிருக்கிறது. நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஊழலை ஒழிப்போம், லஞ்சத்தை ஒழிப்போம் என்று அறிவித்தோம். அந்த வகையிலே இன்றைக்கு இந்த ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை மக்கள் அறிந்து பாராட்டுகிறார்கள்; இந்திய துணைகண்டத்து மக்கள் எல்லாம், பெரும் தலைவர்கள் எல்லாம் மனம் திறந்து பாராட்டுகிறார்கள்.

படி அரிசி 8 ரூபாய்க்கு விற்றுக்கொண்டிருந்த காலத்தில் இந்திர விழா நடத்திய நண்பர்கள் இந்த ஓராண்டு காலத்தில் அரிசி விலையில் பத்து பைசா கூட வித்தியாசம் இருக்கிறதா என்பதை தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். எந்த ஒரு இடத்திலும் 10 பைசா கூட ஏறவில்லை என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அளவுக்கு விலைவாசி கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

அதைப்போல பழைய ஆட்சி காலத்தில் மருத்துவ மனைகளில் நோயாளிக்கு மருந்து இல்லை என்ற நிலை இருந்தது. ஆனால் இன்றைக்கு கிராமப்புறங்களிலே நோயாளிகளைத் தேடி மருத்துவ மனைகள் சென்றுகொண்டிருக்கின்றன எங்கள் புரட்சித் தலைவர் ஆட்சியில் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். நடமாடும் மருத்துவ ஊர்திகள் ஒவ்வொரு ஊராட்சிக்கும், ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் வசதியை இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது.

அதைப்போல போக்குவரத்துத் துறையில் ஒரு மகத்தான சாதனையை இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது. அதிலும் குறிப்பாக நெல்லை மாவட்டத்தில் சுதந்திரம் அடைந்து 30 ஆண்டு காலத்தில் எட்ட முடியாத ஒரு முன்னேற்றத்தை புரட்சித் தலைவர் ஆட்சியில் எட்டியிருக்கிறது. இந்த ஓராண்டு காலத்தில் நெல்லை மாவட்டத்தில் மட்டும் கிட்டத்தட்ட 50, 60 புதிய வழித்தடங்களில் பேருந்து வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறது இந்த அரசு. அதனால் நெல்லை மாவட்டத்திலிருந்து இந்த சட்ட மன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மாற்றுக்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் எல்லாம் கூட இந்த அரசைப் பாராட்டக் கூடிய அளவுக்கு போக்குவரத்துத் துறையில் மக்களுக்கு வசதி செய்து கொடுப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் எந்தப் பிரச்சனையைத் தீர்த்தாலும், செய்தாலும் இந்த அரசு விளம்பரம் இல்லாமல் செய்துகொண்டிருக்கிறது. அதனால் தான் எதிர்க்கட்சியில் இருப்பவர்களுக்கு இந்த அரசின் சாதனைகள் தெரியவில்லை.

ஆனால் திட்டமே இடாமல் எந்தவிதமான குறிப்புகளும் கூட இல்லாமல் அடிக்கல்லை நாட்டுவதிலே மட்டும் பழக்கப்பட்டவர்கள் இன்றைக்குப் பல்வேறு ஆதாரங்கள் இருப்பதாக இங்கே பேசிக் கொண்டிருக்கிறார்கள். நெல்லை மாவட்டத்திலே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது ஒரு அணைக்கட்டுக்கு அடிக்கல் நாட்டினார்கள். 1969 ஆம் ஆண்டிலே அடிக்கல் நாட்டினார்கள். ஆனால அடிப்படை வேலை கூட அங்கே ஆரம்பிக்கப்படவில்லை.

அதைப்போல நாங்குநேரி தாலுக்காவில் பச்சையாறு திட்டத்திற்கு நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அடிக்கல் நாட்டினார்கள். அந்த அடிக்கல் நாட்டு விழாவின்போது அன்றைய ஆளும் கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் நண்பர்கள் இலட்சக்கணக்கான ரூபாயைப் பிரித்தார்கள்.....

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும்போது அன்றைய ஆளும் கட்சியினர் இலட்சக்கணக்கான பணத்தை வசூல் செய்தார்கள் என்று குறிப்பிடுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்கான ஆதாரத்தைக் காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

திரு. வீ. கருப்பசாமி பாண்டியன் : அன்றைக்கு முதலமைச்சராக இருந்த எதிர்க்கட்சித் தலைவரவர்களிடத்தில் அந்த அடிக்கல் நாட்டு விழாவின்போது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நண்பர்கள் தேர்தல் நிதியாக ரூபாய் பத்தாயிரம் அந்த இடத்திலேயே வழங்கினார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சுவர்களிலே சுவரொட்டிகளை ஒட்டினார்கள் 'கல்லணையிலே அணை கண்டான் கரிகாலச் சோழன், களாக்காட்டிலே அணை கண்டான் கருணாநிதிச் சோழன்' என்றெல்லாம் பல இடங்களிலே சுவரொட்டிகளை எழுதி ஒட்டினார்கள். ஆனால் இப்போது பச்சையாறு திட்டம் எந்த நிலையிலும் இல்லை, நான் பொதுப்பணித் துறையை தொடர்பு கொள்ளும்போது இந்த திட்டத்திற்காக எந்த குறிப்புகளுமே இல்லை என்று கை விரித்து விட்டார்கள்.





அடுத்து அன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்ட அமைச்சராக இருந்த திரு. மாதவன் அவர்கள் பஸ் ஸ்டாண்டிற்கு அடிக்கல் நாட்டினார்கள். அப்போது அங்கே மிகப் பெரிய விழா நடத்தினார்கள். மிகப் பெரிய அளவிலே விளம்பரம் செய்திருந்தார்கள். ஊரே அப்போது அல்லோல கல்லோலப் பட்டது. ஆனால் அங்கே இன்னும் அந்த பஸ் ஸ்டாண்ட் கட்டப்படவில்லை. ஆக அந்த அளவிற்கு எந்த காரியத்தையும் செய்யாது வெறுமனே அடிக்கல்லை மட்டும் நாட்டி பெரிய விழாக்களை நடத்தி மக்களை திசை திருப்புவதற்கான வேலைகள் தான் நடந்தன. ஆனால் விளம்பரம் எதுவுமே இல்லாமல் இந்த அரசு, இதுவரை 30 ஆண்டு காலமாக தீர்க்கப்படாமல் இருந்த பல பிரச்சினைகளை எல்லாம் தீர்த்து வைத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல மொழிப் பிரச்சினையைப் பொறுத்த வரை கழக ஆட்சி என்று சொல்லுகிற அந்த 9 ஆண்டு கால ஆட்சியிலே இல்லாத அளவிலே புரட்சித் தலைவருடைய ஆட்சியிலே தான் திட்டவட்டமான கருத்தை மிகத் துணிவோடு தெரிவித்திருக்கிறார்கள். அந்த அளவிலேதான் தமிழ்நாடு ஏற்றுக்கொண்டிருக்கின்ற கொள்கையை திட்டவட்டமாக ஆளுநர் உரையின் மூலமாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைக்குச் சொல்கிறார்கள். பேராட்டத்திற்கு தலைமை தாங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவருக்கு தகுதி உண்டா என்று கேட்கிறார்கள். அந்த எதிர்க்கட்சியைச் சேர்ந்த அதிலும் குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் நண்பர்களுக்கு ஒரே ஒரு வாதத்தை மட்டும் நான் இங்கே வைக்க விரும்புகிறேன்.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் சுகந்திரப் போராட்டத்திலே ஈடுபடாத திராவிட முன்னேற்றக் கழகத்தினரைப் பார்த்து போராட்டத்தை நடத்துவதற்கு தகுதி உண்டா என்று கேட்பார்களேயானால் அவர்களுடைய பதில் எப்படி இருக்கும் என்பதை என்னால் எண்ணிப் பார்க்க முடியவில்லை. அதைப்போல போராட்டத்திற்கு தலைமை தாங்குவதற்கு புரட்சித் தலைவருக்கு என்ன தகுதி உண்டு என்று கேட்கிற நண்பர்கள் யார் என்று பார்த்தால் 1967-லே இவர் குண்டடிபட்டு இரத்தம் சிந்திய அந்தக் கோலத்தை கொண்ட படங்களை ஒவ்வொரு இடத்திலேயும் ஒட்டிக்கொண்டு அதன் மூலம் வெற்றி பெற்றவர்கள்தான். அவர்கள் இன்றைக்கு புரட்சித் தலைவரைப் பார்த்து தலைமை தாங்குவதற்கு தகுதி உண்டா என்று கேட்கின்ற நிலை குறித்து தமிழகமே நகைத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்] [1978 செப்டம்பர் 7

அதைப்போலத்தான் இன்றைக்கு பல நல்ல காரியங்களை, நலிவுற்று இருக்கின்ற சமுதாயத்துக்குரிய பணிகளை விளம்பரம் எதுவுமே இல்லாமல் இந்த அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல்-11-00]

தமிழ் மொழி மேல் மிக்க அக்கறை உள்ளவர்கள்போல் தங்களைக் காட்டிக்கொள்கிறவர்கள் அவர்களது ஆட்சிக் காலத்தில் தமிழ் புலவர்களைப் பற்றி எண்ணிப் பார்த்தார்களா என்ருல் நிச்சயமாக இல்லை. ஆனுல் இந்த அரசுக் காலத்தில்தான் தமிழ் அறிஞர்களுக்கு, தமிழ்ப்புலவர்களுக்கு மாதம் ரூ. 100 உதவித் தொகை கொடுக்கிற திட்டத்தை இந்த அரசுதான் செயல்படுத்தி வருகிறது. அதேபோல் கிராமங்களில் உள்ள ஏழை விவசாயி களுக்கு மின் இணைப்பு கொடுப்பதிலும், 50,000 கிணறுகளுக்கு இந்த ஆண்டில் மின் இணைப்பு கொடுப்பதாக முடிவு எடுத்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இவ்வளவு ஆயிரம் கிணறுகள் என்று இன்று குறிப்புகள் அனுப்பப் பட்டிருக்கின்றன. அதில் கூட, ஊழல் நடந்து விடக்கூடாது முறைகேடுகள் நடந்துவிடக்கூடாது என்று முதல் அமைச்சர் அவர்களும், மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் எச்சரிக்கையாக இருந்து யார் யார் விண்ணப்பங்கள் கொடுத்திருக்கிருர்களோ அவர்களுக்கு அந்த சீனியாரிட்டிபடி முன் உரிமை கொடுப்பது என்ற திட்டத்தின்கீழ், எந்தவித ஒழுங்கீனங் களும் நடைபெற்று விடாதபடி திட்டங்கள் செயல்படவேண்டும், ஏழை மக்களின் கைகளுக்கு அந்தப் பலன்கள் கிடைக்கவேண்டும் என்ற அடிப்படையில், ஏழை மக்களின் மீது அக்கறை கொண்டு செயல்பட்டு வருகிறது இந்த அரசு. (மணியடிக்கப்பட்டது.) அதேபோல் ஆளுநர் அவர்கள் உரையில், எஞ்சியிருக்கிற கிராமங் கள், பல்வேறு நகரங்களில் இந்த ஆண்டு உலக வங்கியிடம் கடன் பெற்று பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்ற திட்டம் பொறுத்தும், அதேபோல் வேலையில்லாத் திண்டாட் டத்தை ஒழிக்க வேண்டும் என்ற பிரச்னையிலும் இந்த அரசு அக்கறை கொண்டிருப்பதை பாராட்டாதவர்கள் நிச்சயமாக யாரும் இருக்கமுடியாது. இந்நேரத்தில் நான் ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது.)

நமது அண்டை மாநிலமான கேரளாவில் இப்போதிருக்கிற அரசு வேலைவாய்ப்பு அலுவலகங்களில் வயதுவரம்பு 30 என்று கூட்டியிருக்கிறது. ஆனுல் நம் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை யில் 26 என்று அரசு நிர்ணயித்திருக்கிறது. ஆனுல் அங்கு தம் பெயர்களை பதிந்து வைத்திருக்கிற நண்பர்களுக்கு அந்த வயது வரம்பிற்குள் வேலைவாய்ப்பு கிடைக்காத ஒரு சூழ்நிலை இருப்பதன் காரணமாக கேரளாவில் இருப்பதைப்போல் தமிழ்நாட்டிலும் அந்த வயது வரம்பை 30 ஆக உயர்த்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதைபோல் நெல்லை மாவட்டத்தில் உள்ள குற்ருலத்தை — நமது சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் தமிழ் நாட்டில் இரண்டு இடங்களை



1978 செப்டம்பர் 7] [திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்]

அகில இந்திய சுற்றுலா நகரமாக உருவாக்க இந்த ஆண்டு முயற்சிகள் செய்யப்படும் என்று தெரிவித்தார்கள். அதில் குற்ருலம் நிச்சயமாக இடம் பெறவேண்டும் என்று இந்த நேரத்தில் பணி வன்புடன் கோட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.) சமதர்ம சமுதாயத்தைப் பற்றி சொல்லிக்கொண்டு வருகிருேம். ஆகவே, பணக்காரர்கள், ஏழை எளியவர்கள் என்ற பாகுபாடில லாமல் உல்லாசப் பயணிகள் அங்குவந்து மகிழ்கிற வகையில் குற்ருலத்தை அகில இந்திய சுற்றுலா நகரமாக ஆக்கவேண்டு மென்று கேட்டு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி காலத்தில் வருங்காலத்தில் தமிழ்நாடு நல்லவளம் கண்டு, அவர்களது ஆட்சிக்காலம் ஒரு பொற்காலமாக திகழப்போகிறது, குறை பாடுகள் எல்லாம் நீங்கி வளம் நிறைந்த நாடாகப் போகிறது என்று கூறி ஆளுநர் அவர்களது உரைக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

*THIRU N. RAMACHANDRA REDDY: Hon. Temporary Chairman, Sir, I wish to speak a few words on the Governor's Address on behalf of my Congress (I) party.

In the first paragraph of the Governor's Address, it has been stated that "it is our cardinal credo that the pace of economic development should be speeded up, with greater benefits of such development flowing largely to the weaker sections of the society resulting in the eradication of poverty and reduction of inequalities." But in the Governor's Address, it has not been clearly stated what are the means or steps the Government propose to take to improve the economic conditions of the economically backward people. For instance, I would like to point out that in some Government functions pattas for government lands are given to the landless and economically backward people. But in many parts we see that those who receive the pattas are not in a position to cultivate such lands. They have no means to cultivate such lands. I would like to point out that mere possession of lands will not result in any benefit to those poor and economically backward people. I humbly, therefore, request the Government to provide long-term interest free loans to the ryots because they are economically backward and they cannot cultivate lands because of their economic position. Now private loans are also not forthcoming because of Debt Relief and other Acts. If such long-term interest free loans are given to the economically backward people, they will be benefited by such loans. They can also increase the products from such lands.

It is the responsibility of the Government to see that law and order is maintained. With regard to that, I would like to say that any reasonable man taking into consideration of the

recent occurrences in many parts of the State would absolutely realise that there is no law and order prevailing in our State. Various incidents that had taken place throughout the State would definitely show that there is no law and order in our State. It is because in the recent days, the Police Department people are not taking precautionary measures in spite of the fact that there will be a law and order problem. If a report was given at the Police Station stating that there will be a law and order problem or breach of peace in a particular place, the Police Department people are not taking preventive measures. If the Police Department had taken some reasonably precautionary measures, definitely seriousness of the recent occurrences could have been avoided to a great extent. I humbly request the Government to issue necessary instructions to the Police Department to take precautionary measures in such places.

As regards food position, there is nothing much to say. If there is drought, they will blame the failure of monsoon and if there is floods, they will blame the heavy rains. We have enough food and we are in a good position. At the same time, the Government should think of the position of the producers and how much they are getting for their products. When compared to the wages and other inputs and expenditure the ryots had to incur in raising such crops, what they are getting is very low. I therefore, humbly request the Government to raise the procurement price. Now the agriculture has become a gamble. If there is no monsoon, there will be drought and if there is heavey rains, there will be floods. In both the cases, the poor ryots are going to be affected due to failure of the crops. During the Election propaganda mettings, the Hon. Chief Minister had stated that the Government would bring forward Crop Insurance Scheme but I understand the Hon. Chief Minister had not taken any steps to bring forth this Crop Insurance Scheme. If that scheme was implemented, then only the ryots will be benefited.

In the Governor's Address, it has been stated that in order to ensure income to the economically backward people the Government is going to open many Milk Supply Societies and Silk Farms. Now the Government had opened many Milk Societies, and they are not working well. By merely opening Milk Societies, nothing is going to happen. In my Taluk, many centres have been opend, but none of them is working satisfactorily. When I visited some of the Societies, the people are finding it difficult to get money. They say, 'Where can we go for money? Instead of opening many Milk Societies, the existing societies should be given loans. In my opnion none of them is working properly. I therefore, request the Government to lend interest free loans to the ryots to purchase cows and thereby enable them to get the full benefit. They will also be in a position to supply milk to the Societies.



With regard to Forests, it has been stated in the Governor's Address that the Government is keen to take steps to protect and expand the State's Forest potential. In this connection, I would like to submit that it should also be the concern of the Government to insist on the upkeeping of the coming forests. They will only plant trees but they will not take care to bring them up. There is a lot of illicit felling of trees in forests. The Forest people are conniving with the people who are indulging in that and daily we are seeing thousands of bundles of fire-wood are coming to the Cities. Whenever we question them, they say that they are getting it from the private forests by paying mamools to the forest authorities. There is also theft of sandalwood in almost all forests. Precautionary measures should be taken whenever forests are auctioned for felling of trees. Whenever contract is taken for 50 acres of forest lands to fell trees, 500 acres of lands are ultilised for felling of trees with the connivance of the forest people. I therefore request the Government to take proper and active measures against those erring officials.

With regard to opening of mini-health centres, in the last Governor's Address it was stated that 50 mini-health Centres with the assistance of service minded private organisations would be opened. The Government is yet to open a Health Centre at Hosur. Last time, the Hon. Minister promised to open such A centre in Hosur but the Government has not taken any steps to open any such Centre neither at Hosur nor at any other place.

(The Temporary chairman sounded the gong)

One more minute, Sir, In regard to electricity supply, it has been stated in the Governor's Address that it has now been decided that future connections will be given in the order of seniority of the date of applications. Every rule has got exception. Considering the backwardness of my area, I would request the Government to supply power to all the pumpsets because we are having a very limited number of pumpsets.

With regard to prohibition, I would like to say that it is not working satisfactorlly. In this connection, the Governor in his address had congratulated the Police Officers, who are discharging their duties in implementing Government's cherished policy of prohibition with a sense of great social responsibility, unmindful or dangers even to their lives. It is not at all truth. It is far away from truth, because prohibition in our State is utter failure. I request the Government to reconsider the matter.

[1978 செப்டம்பர் 7

[முற்பகல் 11.10]

திரு. வி. கொ. சின்னசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் இணைந்த கூட்டத்தில் மாண்புமிகு கவர்னர் அவர்கள் நிகழ்த்திய உரையின்மீது என்னுடைய நன்றியை, வரவேற்பை நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய நாட்டின் பொருளாதார வளர்ச்சி, மற்றும் வேலை வாய்ப்பு உரிமைகள் போன்றவை அடிமட்டத்திலே உள்ள ஏழை எளிய மக்களுக்கு, குறிப்பாக கிராமப்புற மக்களுக்கு எட்ட வேண்டுமென்றும், கொடுக்க வேண்டுமென்றும் மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள் தம் எண்ணத்தை வெளிப்படுத்துகின்ற வகையில் இந்த உரை அமைந்திருக்கின்றது என்பதை நான் உண்மையிலேயே பாராட்டக் கடமைப்பட்ட வனாக இருக்கின்றேன்.

பொதுவாக, விவசாயத் துறையைப் பொறுத்த மட்டில் எதிர்க் கட்சித் தலைவர், மற்றும் ஒரு சிலர் குறிப்பிட்டார்கள். ஆனால், விவசாயத் துறையிலே விளைபொருள்களினுடைய வெள்ளாமையை எண்ணிப் பார்க்கின்றபோது, நாட்டிலுள்ள நிலைமையைப் பற்றி யாரும் பெருமைப்பட முடியாமல் இருக்க முடியாது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அடிமட்டத்திலே உள்ளவர்கள் விளைபொருள்களை வாங்கிச் சாப்பிடுகின்ற அளவிற்கு, ஏழைஎளிய மக்களுக்கு, குறிப்பாக அரிசன மக்களுக்கு பயன்படுகின்ற அளவிலே இன்றைக்கு இந்த நாட்டிலே நிலைமைகள் இருக்கின்றன என்பதை நாம் ஒவ்வொரு வரும் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கின்றோம். ஒரு சில பெரிய விவசாயிகளைப் பொறுத்த மட்டில், நிலைமை ஒருவாறாக இருந்தாலும், அன்றாடம் காய்ச்சிகளுடைய நிலைமையை எண்ணிப் பார்க்கின்றபோது, இந்த அரசு அவர்களுக்காக செயல் பட்டுக் கொண்டு வருகின்ற முறையை, அந்த வகையில் அமைந்து செயல்பட்டுக் கொண்டு வருகின்றது என்பதை யாரும் பாராட் டாமல் இருக்க முடியாது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் பேசுகின்றபோது தேங்காய் எண்ணெயினுடைய விலை குறைய வில்லை என்று குறிப்பிட்டார்கள். ஆனால், அவர் கூறுகின்றதைப் பார்க்கும்போது அவர் எந்த அளவிற்கு இந்த உரையை ஆழ்ந்து படித்து, புரிந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை எண்ணி நான் பெருமைப்படுகின்றேன். உண்மையிலேயே தேங்காய் எண்ணெ யினுடைய விலை கொஞ்சம் அதிகமாகத் தான் இருக்கிறது. இதைக் குறித்து எங்கள் சர்க்கார் கவனம் செலுத்தி, அதைக் குறைப்பதற்கு வேண்டிய தகுந்த நடவடிக்கைகளை எடுக்கும், அந்த வகையில் செயல்படும் என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





அதைப்போல, 16,000 நியாய விலைக் கடைகள் திறக்கப் போவதாகச் சொன்னீர்களே என்பது குறித்தும் கோரிக்கை எழுப்பினார்கள். நான் அவர்களுக்கு ஒன்றைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆங்காங்கே உள்ள நியாய விலைக் கடைகளிலும், மற்றுமுள்ள கடைகளிலும் மக்களுக்கு வேண்டிய பொருள்கள் யாவும் நியாயமான விலையிலே தான் கிடைக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஏழை எளிய மக்கள் வாங்கக்கூடிய அளவிலேதான் பொருள்களின் விலைகள் ஆங்காங்கே விற்கப்படுகின்றதே தவிர, நியாயமற்ற வகையிலே எந்தக் கடையிலும் பொருள்கள் விற்கப்படவில்லை. இந்த ஆட்சியிலே என்பதை நான் கூறிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நியாயமான விலையில் பொருள்கள் விற்கப்படாத சூழ்நிலை தமிழகத்தில் வருமானால் 16,000 நியாயவிலைக் கடைகள் மட்டு மல்ல, நாடெங்கிலும் நியாய விலைக்கடைகள் திறக்கப்படும் என்று கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மோட்டார் பம்ப் செட்டுகளுக்கு கிரவுண்ட் வாட்டர் கிளீ ரன்ஸ் சர்டிபிகேட் கொடுத்தால்தான் மின் இணைப்புக் கொடுக்கப் படும் என்ற நிலை தமிழகத்தில் இருந்தது. இந்த அரசு அந்த விதிமுறைகளைத் தளர்த்தி முதல் விண்ணப்பத்திற்கு முதலிலேயும், பின்னாலே வந்த விண்ணப்பங்களுக்குப் பின்னாலேயும் என்ற வரிசைப்படி மின்இணைப்புக் கொடுக்க முன்வந்துள்ளதை எண்ணிப் பெருமைப்படாமல் இருக்க முடியாது.

கிராமப் பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைத்து மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்பது தமிழக முதல்வருடைய எண்ணம். அவர்களுடைய எண்ணம் நிறைவேறுகிற வகையில் கிராமப்புறத்திலுள்ள ஏழை எளிய மக்களுக்கு மருத்துவ உதவி உண்மையான வகையில் கிடைக்கிறது என்பதைப் பார்க்கும்போது அதைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

மதுவிலக்கைப் பற்றி ஒன்று சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன். காவல் துறை அதிகாரிகள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவை மாவட்ட அளவில் அமைத்து அது மாதம் ஒரு முறையோ இரண்டு முறையோ கூடுகின்ற வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தால் மதுவிலக்கை நல்ல முறை யில் அமுல் நடத்த வழிமுறைகள் ஏற்படும் என்று கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணி அடிக்கப்பட்டது)

திரு. என். சங்கரய்யா ; சட்டப் பேரவைத் தற்காலிகத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது ஏற்கனவே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தோழர் கள் வரதராஜன், கோவிந்தராஜன், ஆர். உமாநாத் ஆகியவர்கள்

எங்களுடைய கொள்கைகளை விரிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.
இன்று மேற்கொண்டு ஆளுநர் உரை பற்றிப் பின்வரும் கருத்துக்
களை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் தெரிவிக்க
விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்களுடைய உரையிலே ஒரு பகுதியிலே 19 வது
பாராவிலே குறிப்பிடப்பட்டிருந்தது—மத்தியிலிருக்கக்கூடிய அரசு
கல்வியை மாநிலங்களுடைய அதிகாரங்களுக்கு உட்பட்ட பிரச்
சினையாக மீண்டும் கொண்டு வரவேண்டுமென்று அரசியல்
சட்டத்தைத் திருத்துவதற்காக முன்வந்திருக்கிறது என்று 45-வது
சட்டத் திருத்தத்தைப் பற்றிக் குறிப்பிட்டு வரவேற்றிருந்தார்கள்.
ஆனால் அதற்கு என்ன நிலைமை ஏற்பட்டது என்பதை நான் இங்கே
குறிப்பிட விரும்புகிறேன்.

ஜனதா அரசைப் பொறுத்தவரை கல்வியை மாநிலங்களுக்கே
மீண்டும் ஒதுக்க வேண்டுமென்று 45-வது திருத்தச் சட்டத்தைக்
கொண்டு வந்திருந்தாலும் டில்லி மாநகரில் மேலவையில் பிர
தான எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய இந்திரா காங்கிரஸ் கட்சி
யும், திரு. சுவரண்சிங் தலைமை காங்கிரஸ் கட்சியும் சேர்ந்து
அந்தத் திருத்தத்தை எதிர்த்து அவர்கள் வாக்களித்த காரணத்
தால் நாம் அனைவரும் விரும்பியவாறு கல்வி என்பது மாநிலங்
களுடைய அதிகாரத்திற்கே உட்பட்ட பிரச்சினையாக ஆகமுடி
யாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்பு
கிறேன்.

எனவே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மாண்பு
மிகு கருணாநிதி அவர்கள் மூன்று தினங்களுக்கு முன்னால் பேசுகை
யில் இந்திரா காங்கிரஸ் கட்சியோடு தங்கள் கட்சியின் உறவுகள்
இன்னும் அரும்பக் கூட இல்லை என்று குறிப்பிட்டார்கள்.
இன்றைக்கு நான் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர
விரும்புகிறேன்—மாநிலங்களுக்கு அதிக அதிகாரம், மாநில
சுயாட்சி என்றெல்லாம் மிகவும் வற்புறுத்தக் கூடிய திராவிட
முன்னேற்றக் கழகம் இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய சூழ்
நிலையைக் கணக்கில் வைத்துக் கொள்வார்களா என்று அறிய
விரும்புகிறேன்.

[முற்பகல் 11-20]

அதாவது, கல்வி என்ற ஒரு முக்கியமான விஷயத்தை
மீண்டும் கடந்த காலத்திலே மத்திய சர்க்காருக்கும் மாநில சர்க்
காருக்கும் பொதுவாக இருக்கின்ற விஷயமாக மாற்றியதை—
மறுபடியும் மாநில சர்க்காருக்கே கொடுக்கக்கூடிய முயற்சியை
மத்திய சர்க்காரிலே உள்ள ஆளுங் கட்சி செய்தாலும் அதை
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி,
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட
முன்னேற்றக் கழகம் ஆகிய கட்சிகள் அந்தத் திருத்தத்தை
ஆதரித்தாலும் ராஜ்ய சபையிலே தனக்குள்ள நிலையைக்கொண்டு





இந்திரா காங்கிரஸ் கட்சியும், சுவரண்சிங் தலைமையில் உள்ள
காங்கிரஸ் கட்சியும் அதை நிராகரிக்கக்கூடிய நிலைமை இருப்பதை
இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் புரிந்து
கொண்டால் இந்திரா காங்கிரஸ் கட்சியுடன் ஆன உறவை
அவர்கள் மேலும் வளர்த்துக் கொள்வதில் அக்கறை காட்டுவார்
களா என்று கேட்க விரும்புகிறேன். எது எப்படியிருந்தாலும்
கல்வியை மாநில சர்க்காருக்குக் கொண்டுவரக்கூடிய முயற்சிகளை
நாம் தொடர்ந்து செய்ய வேண்டுமென்பதை நான் இந்த
நேரத்திலே ஞாபகப்படுத்த விரும்புகிறேன். மாநிலங்களுக்கு
அதிக அதிகாரங்கள் தரப்படவேண்டும், கல்வி மாநில சர்க்
காருக்குக் கொண்டுவரப்படவேண்டும், இவைகளையெல்லாம்
தடுக்கக்கூடிய சக்தியாகத்தான், அந்தச் சக்தி யார் என்றால் அந்தச்
சக்தியை அடையாளம் கண்டுகொள்ள தமிழகத்திலே உள்ள
அரசியல் கட்சிகள் முன்வரவேண்டும். இந்திரா காங்கிரஸ் கட்சி
அந்த திருத்தத்தை மட்டுமல்ல, அரசியல் அமைப்புச் சட்டத்திலே
அடிப்படை அம்சங்களை மாற்ற வேண்டுமென்றால் அதற்கு
இந்தியாவிலுள்ள மக்கள் அனைவரும் சேர்ந்து வாக்களித்து,
அந்த மாற்றம் செய்யலாமா வேண்டாமா என்பதை அறிந்து
கொள்ள, பொதுஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்ற
முறையிலே கொண்டுவரப்பட்ட திருத்தம்—பல்வேறு அரசியல்
கட்சிகளும் அதை ஆதரித்தாலும்—இன்றைக்கு இந்திரா
காங்கிரஸ் கட்சியும் சுவரண்சிங் தலைமையில் உள்ள காங்கிரஸ்
கட்சியும் எதிர்ப்பதால் கொண்டுவரமுடியாத நிலைமை இருக்கிறது.
இந்திய அரசியல் சட்டத்திற்கு என்ன மாற்றங்களைச் செய்யலாம்
என்று பொதுஜன வாக்கெடுப்பு நடத்தி, அவர்களுக்குக் கொடுக்
கக்கூடிய உரிமையை அளிக்கின்ற திருத்தத்தை இந்திரா காங்கி
ரஸ் கட்சி எதிர்த்து இருப்பது வருந்தத் தக்கது. அவர்களுடைய
போக்கை தமிழகத்திலே உள்ள ஜனநாயகத்திலே நம்பிக்கை
கொண்ட கட்சிகள் கருத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும் என்
பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் உரையிலே பால் உற்பத்தி, விவசாய உற்பத்தி,
போக்குவரத்துத் துறையிலே அபிவிருத்திகள் மற்றும் மக்களுக்குச்
சாதகமான பல காரியங்களுக்கும் குறிப்பிடப்பட்டிருப்பது
அனைத்தையும், நாங்கள் வரவேற்கிறோம் என்று ஏற்கனவே குறிப்
பிட்டிருக்கிறோம். ஆனால் எங்களுடைய பார்வை தமிழகத்திலே
உள்ள பெரும்பான்மையான மக்களைப் பாதிக்கக்கூடிய கிராமப்
புறங்களிலுள்ள விவசாயப் பிரச்சினை. தமிழகத்தினுடைய பொருளா
தார வாழ்வுக்கு அடிப்படையானதும் அச்சாணி போன்றதுமான
பிரச்சினை அது என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.
அப்படிப் பார்க்கும்போது அவர்களுக்கு எல்லாம் தமிழகத்திலே
தொழில்களிலே வேலைவாய்ப்புக் கொடுத்துவிட முடியாது.
எத்தனை தொழில்களை, கனரகத் தொழில்களை ஏற்படுத்தினாலும்
வேலை வாய்ப்பு கம்மி தான். பொருளாதாரத்தில் முன்னேறிய
நாடுகள் அனைத்தும் கிராமப்புறங்களிலே உள்ள மக்களுக்கு
வேலைவாய்ப்பு, நிலச்சீர்திருத்தத்தின் மூலமாகத்தான் நிறை

வேற்றியிருக்கிறார்கள் என்ற வரலாறு நமக்கு அளிக்கக்கூடிய படிப்பினையாகும். தமிழகத்திலே நிலவுடைமைக்கு வரம்பு கட்டக் கூடிய சட்டம் அதாவது 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் வைத்துக் கொள்ளலாம் என்ற சட்டம்—அந்தச் சட்டத்தின்படி நிலப் பிரபுக்கள் நடந்துகொள்ளவில்லை என்பது தெளிவான உண்மை. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்கூட பல இடங்களிலே அதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பினாமியாக நிலம் வைத்திருக்கின்றவர்கள் அதை வெளிப்படுத்தாவிட்டால் அரசாங்கம் நட்ட ஈடு வழங்காமல் அவைகளை எடுத்துக்கொள்ளும் என்று கூறியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட இந்தப் பிரச்சினை பற்றி ஆளுநர் உரையிலே அரசாங்கத்தின் கொள்கை விளக்கத் திலே ஒன்றும் காணப்படவில்லை என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆழ்ந்த கவலையுடன் பார்க்கிறது. பினாமி நிலங்களையெல்லாம் விவசாயிகளுடைய ஒத்துழைப்போடு புதிதாக சட்டம் கொண்டு வரலாம்—ஆனால் இன்றைக்கு இருக்கிற சட்டப் படி 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் கணக்குப்படியே அதற்கு மேலே உள்ள பினாமி நிலங்களை எடுத்து லட்சக்கணக்கான விவசாயி களுக்கு அளித்தால் அவர்களுக்கு வாழ்வு அளிக்க முடியும், அப்போதுதான் கிராமப்புறங்களிலே உள்ள வறுமையைத் தீர்ப்ப தற்கும் முக்கியமான நடவடிக்கையாக அது அமையும். நம்முடைய நிலச்சீர்த்திருத்தச் சட்டத்திலே பல ஓட்டைகள் இருக்கின்றன என்பது அனைவரும் அறிந்த உண்மை. கோயில் நிலங்கள், மடங்கள், பொது டிரஸ்ட்டுகள், தனியார் டிரஸ்டுகள் ஆகியவற்றிற்கெல்லாம் விதிவிலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவைகளை விதிவிலக்காகத் தொடர்ந்து வைத்துக்கொண்டிருப் பதற்கு எந்தவிதமான நியாயமும் இல்லை. யாராயினும் ரத்தத்தை நிலத்திலே வியர்வையாகக் கொட்டகூடிய விவசாயிகளுக்குத் ான் நிலத்திலே உரிமையிருக்கிறதே தவிர மற்றவர்களுக்கு இல்லை. ஆகவே, இன்று கோயில்கள் அல்லது அறக்கட்டளைகள் என்பது பற்றி மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சரவர்கள் பேசியதாக நான் பார்த்தேன். இன்றைக்கு கேரளாவில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியக் கமயூனிஸ்ட் கட்சியின் அரசாங்கம் இருந்த நேரத்தில் கோவில்களுக்கு பாதுகாப்பு என்று அரசாங்கமே ஏற்பாடு செய்து கொண்டு, கோயில் நிலங்களில் உழுது கொண்டிருந்த விவசாயிகளுக்குப் பட்டாவாக்கிப் பல வருடங்கள் ஆகிவிட்டன. அதேபோல வேறு பல முற்போக்கான இடங்களில், தஸ்திக் அலவன்ஸ் என்று ஏற்படுத்தி, கோயில் களுக்கு எவ்வளவு நிலங்கள் வைத்திருந்தார்களோ அதற்கான கிரயத்தைக் கணக்கிட்டு ஆண்டுதோறும் கொடுப்பதற்கு பொறுப் பெடுத்துக்கொண்டு, அதேநேரத்தில் நிலத்தைப் பொறுத்த வரையில் உழுது சாகுபடி செய்கின்ற விவசாயிகளுக்கு அளித் திருக்கிறார்கள் என்பதை இந்த அரசாங்கம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





கடந்த காலத்தில் கொண்டுவரப்பட்ட நிலச் சீர்த்திருத்தச் சட்டத்தில் இருக்கும் இப்படிப்பட்ட விதிவிலக்குகளை ரத்து செய்ய வேண்டும். பிரைவேட் டிரஸ்ட் என்று ஏராளமான நிலங்களை ஒதுக்கியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட விதிவிலக்குகளை ரத்து செய்து பினாமி நிலங்களைக் கைப்பற்றினால் கணிசமான அளவிற்குக் கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பைப் பெருக்க முடியும், விவசாய உற்பத்தியும் பெருகும்.

விவசாயக் கூலிச் சட்டம் என்று குறைந்த பட்சம் தினக் கூலி 8 ரூபாய் என்று நாம்தான் அமலுக்குக் கொண்டு வர வேண்டும். காரணம் என்னவென்றால், மத்திய அரசாங்கத்தினு டைய பல அறிக்கைகளிலே சொல்லியிருக்கிறார்கள், இன்றைக்கு சட்டம் கொண்டு வந்தாலும் பலஹீனப் பகுதியாக இருப்பவர் களுடைய கோரிக்கைகள் முழுவதையும் அவர்களால் நிறைவேற்ற முடியவில்லை. ஆகவே, அரசாங்க இயந்திரம், குறைந்த பட்ச தினக்கூலி 8 ரூபாய் என்று அமலுக்குக் கொண்டுவந்து மாநிலத் திலே இருக்கின்ற கோடிக்கணக்கான விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வாழ்வளிக்க வேண்டும். அந்த நடவடிக்கை மிகவும் அவசரமாகக் கவனிக்கப்பட வேண்டுமென்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

உழவர்களுக்கு வேலை கொடுப்பது என்ற திட்டம் சில மாநிலங்களில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், மேற்கு வங்கத்தில், சென்ற ஆண்டு வேலையில்லாத விவசாயிகளுக்கு, மத்திய அரசாங்கத்திலேயிருந்து பெற்ற கோதுமையில் 2 கிலோவும், ஒரு ரூபாயும் கொடுத்தார் கள். இவ்வாறு விவசாயத் தொழிலாளர்களுக்கும், ஏழைத் தொழிலாளர்களுக்கும் அவர்கள் வேலையில்லாத நேரத்தில் அவர்களைப் பயன்படுத்தி சமூகத்திற்குத் தேவையான மற்றக் காரியங்களில் ஈடுபடுத்திக் கொள்கிறார்கள். இந்த ஆண்டு 3 கிலோ கோதுமையும், ரொக்கமாக மாநில அரசு கொடுத்து வந்த ஒரு ரூபாய்க்குப் பதிலாக இரண்டு ரூபாயும் கொடுத்து, மேற்கு வங்க அரசு விவசாயிகளுக்கு வேலையில்லாத காலங்களில் இலட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பை அளித்து, அதே நேரத்தில் சமுதாயத்திற்குத் தேவை யான குளம், குட்டைகள் மராமத்து, கட்டிடங்கள் கட்டுதல், ரோடுகளைப் போடுதல் போன்ற நாட்டுப்பணிகளில் ஈடுபடுத்தி அவர்களுக்கும் வேலைவாய்ப்பை அளிக்கிறது. இதன்காரணமாக, விவசாய வேலைகள் ஆரம்பமாகும்பொழுது, நான் நீ என்று போட்டி போட்டுக்கொண்டு நிலப்பிரபு[illegible]ளிடம் தங்கள் உழைப்பை மிகவும் கேவலமான அளவில் வி[illegible]ய தேவை அவர்களுக்கு ஏற்படுவதில்லை, அதற்கு அவ[illegible]க வேண்டி[illegible] இல்லை. ஏனென்றால், அவர்களுக்கு வாங்கும் [illegible]கள் தயாராக [illegible] அரசாங்கம் கொடுத்திருப்பதால் தங்களுடைய உ[illegible]சக்தியை [illegible] ஊதியம் பெற, விவசாயக் காலத்திலே அவர்கள் [illegible]ப்புக்கேற்ற [illegible] பத்தை இது அளிக்கிறது என்பதை [illegible] பேரம் பேசும் ச[illegible]ர்ப் திற்கு கொண்டு வர விரும்புகிறேன். [illegible] அரசாங்கத்தின் கவனத்

ஆகவே குத்தகைக்காரர்கள் பாதுகாப்புச் சட்டத்திலே நாம்
நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த நேரத்தில் மாண்புமிகு
உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டதைப்
பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நாராயணசாமி நாயுடு
தலைமையில் அமைந்த விவசாயிகள் சங்கத்தோடு சேர்ந்து
மார்க்சிஸ்ட்/கம்யூனிஸ்ட் கட்சி 1972 ஆம் ஆண்டு நடைபெற்ற
போராட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக்
கவிழ்ப்பதற்காகப் பங்கு எடுத்துக்கொண்டது என்று சொன்னார்
கள். நான் மீண்டும் சொல்கிறேன், 1972 ஆம் ஆண்டு அந்தப்
போராட்டத்தைப் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் தலைமையில்
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், சுதந்திராக் கட்சியும் நடத்தின.
அதில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சேரவில்லை. 'அதற்குக்
காரணம், அந்தப் போராட்டம் கிராமப்புறங்களில் இருக்கும்
வசதிபடைத்த பெரும் விவசாயிகள் என்று சொல்லப்படும்
நிலப்பிரபுக்களுக்கும் அவர்கள் சலுகைகள் கோரிய காரணத்தால்
அப்படிப்பட்டபோராட்ட இயக்கத்தோடு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்
கட்சி சம்பந்தப்படுத்திக்கொள்ள விரும்பவில்லை. நாங்கள் தனியாக
1972 ஆம் ஆண்டு ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் சிறு விவசாயி
களுக்கு மட்டும் நிவாரணம் அளிக்கும் இயக்கத்தைத் தனியாக
நடத்தினோம். என்னுடைய தலைமையில் மதுரையில் நடை
பெற்றது, அதேபோல் தமிழ்நாடு முழுவதும் நடந்தது. அன்றி
லிருந்து நாங்கள் ஒரே கொள்கையைத்தான் கொண்டிருக்கிறோம்.
மின்சாரச் சலுகை, இன்னும் மற்ற அரசாங்கச் சலுகைகள்
என்றால் அவைகள் பாடுபடும் விவசாயிகளுக்குச் சென்று சேர
வேண்டும் என்று மத்திய அரசாங்கத்தின் அறிக்கையை நேற்று
கூட நான் பார்த்தேன். திட்டக் கமிஷன் உறுப்பினர்கூட
குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசாங்கம் கொடுத்த சலுகைகள்
கிராமப்புறங்களிலே உள்ள பெரும்பணக்காரர்களுக்குப் போய்ச்
சேர்ந்திருக்கின்றனவே தவிர யாருக்குப் போய்ச்சேர வேண்டுமோ
அவர்களுக்குச் சென்று சேரவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.
ஆகவே, அந்தக் காரணத்தால், சமீபத்தில நடந்த நாராயணசாமி
நாயுடு அவர்களின் இயக்கத்தில் நாங்கள் சேரவில்லை. அவர்கள்,
மையக் கூட்டுறவுக் கடனை அனைவருக்கும் ரத்து செய்ய வேண்டு
மென்று கூறினார்கள்.





கடன் வாங்கியவர்கள், புயலாலும், மழையாலும் பாதிக்கப்
பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களைத்தான் அரசாங்கம்
பாதுகாக்க வேண்டுமே தவிர, அவர்கள் கோரிக்கைகளைப் பரிசீலிக்க
வேண்டுமே தவிர,' திருப்பிக் கொடுக்க வாய்ப்புள்ள
வர்கள், டிராக்டர்கள் வாங்கியவர்கள், இலட்சக்கணக்கான
ரூபாய்களுக்குச் சொந்தக்காரர்கள், விவசாயிகள் என்ற பெய
ரிலே போராட்டத்தில் ஈடுபடுவது சரியல்ல என்பதால்தான்
நாங்கள் அதை எதிர்த்தோம். ஆகவே, நான் திரு. சுப்பு
அவர்களுக்கு மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன், ஒட்டப்
பிடாரத்தில் எங்கள் கட்சி உறுப்பினர், அவர்கள் கூட்டத்தில்
கலந்துகொண்டதாக அத்தொகுதி உறுப்பினர் பேசியதை
வைத்துத்தான் திரு. சுப்பு அவ்வாறு பேசியிருக்கிறார் என்று
கருதுகிறேன். அதிலே ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை.
நண்பர் சுப்பு அவர்கள்கூட மதுரை தேர்தலுக்கு முன்னால்,
கைத்தறி மாநாட்டில் என்னோடு சேர்ந்து பேசியிருக்கிறார்கள்.
அது அல்ல பிரச்சினை. ஒவ்வொரு பிரச்சினையினுடைய தன்
மையைப் பொறுத்து, அவ்வப்பொழுது கூட்டுக் கூட்டங்கள்
நடக்கின்றன. 1975-ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக்
கழகத்தைக் கவிழ்க்க நடத்திய போராட்டத்தில் மார்க்சிஸ்ட்
கம்யூனிஸ்ட் கட்சி பங்கெடுத்துக்கொள்ளவில்லை. அதைத்தான்
தெளிவாக சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மொழிப் பிரச்சினை பற்றியும், மாநிலங்
களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்பது பற்றியும் தோழர்
உமாநாத் அவர்கள் தெளிவாகப் பேசியிருக்கிறார்கள். ஆகவே
தொழில் கொள்கை என்று சொல்லும்போது, சமீபத்திலே
நடந்த இரண்டு சம்பவங்களை அரசாங்கத்தின் கவனத்திற்குக்
கொண்டுவர விரும்புகிறேன். ஒன்று இந்துஸ்தான் டெலிபிரிண்
டர்ஸ் தொழிற்சாலை. அது மத்திய சர்க்கார் தொழிற்சாலை.
அங்கு தொழில் தகராறு வந்தபொழுது, மாநில சர்க்கார்
தலையிட்டு, அத்தொழில் தகராறிலே உடன்பாட்டைக் கொண்டு
வந்தார்கள். தொழிற்சங்கச் சட்டம் 12 (3) என்ற பிரிவின்கீழ்
உடன்பாடு ஏற்பட்டது. தொழிற்சங்கமும் மேனேஜ்மென்டும்
அதில் கையெழுத்திட்டாயிற்று. அதிகாரபூர்வமாக அமுலுக்கு வந்த
உடன்பாட்டை—இப்பொழுது என்ன கேள்விப்படுகிறேன் என்றால்
மத்திய அரசிலே இருந்து ஒரு தாக்கீது வந்து, 'நான் கையெ
ழுத்திட்ட அந்த ஒப்பந்தத்தை இப்பொழுது நிறைவேற்ற
முடியாது' என்று மானேஜ்மென்ட் பதில் கொடுத்திருக்கிறது
என்று தெரியவருகிறது. ஆகவே, இதனால் தொழில் தகராறு
களை உண்டு பண்ணுபவர்கள் யார் என்பதைத்தான் குறிப்பிட
விரும்புகிறேன். அதனால் ஒரு வேலை நிறுத்தம் ஏற்பட்டிருக்
கிறது. எனவே, மாநில சர்க்கார் மீண்டும் தலையிட்டு சட்டப்
படியான நிலையை ஏற்றுக்கொண்டு, ஏற்கெனவே கையெழுத்
தாகிய உடன்பாட்டை அமுலுக்குக் கொண்டுவர தக்க நட
வடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போல், குரோம்பேட்டையிலே இருக்கிற குரோம் லெதர் தொழிற்சாலையிலே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் தினசரி, அத்தொழிற்சாலைக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள். ஆனால் வேலை இல்லை. காரணம், அந்தத் தொழிலுக்குத் தேவையான மூலப்பொருள் இல்லை. அவர்களுக்கு மத்தியபாங்கிலிருந்தும் சென்ட்ரல் பாங்கில் இருந்தும் பணம் கிடைத்து வந்தது. ஆனால், இப்பொழுது மத்திய சர்க்கார் உத்தரவாதம் கொடுத்தால்தான் மேற்கொண்டு கடன் கொடுப்போம் என்று கூறப்பட்டதால், அங்கே தொழில் முடக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஆசியாவிலேயே மிகப் பெரிய தொழிற்சாலை அது. ஒரு ஷிஃப்டில் 3,000 பேர் வேலை செய்யக்கூடிய அளவு பெரிய தொழிற்சாலை அது. லெதர் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செவ்வதில் முக்கிய பங்கு வகிக்கும் அத்தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 2 மாதமாகச் சம்பளம் கிடைக்கவில்லை. அத்தொழிற்சாலையை எடுத்துக் கொண்ட திரு. நாக்கப்ப செட்டியார் என்பவர் மத்திய அரசாங்கத்திடம் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்காததாலே இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று தொழிலாளர்கள் கூறுகிறார்கள். இன்றைக்கு வேலையில்லாத் திண்டாட்டத்தை வளர்க்காமலிருக்க வேண்டுமானால், ஏற்கெனவே வேலையிலிருக்கும் தொழிலாளர்களைப் பாதுகாக்க வேண்டியிருக்கிறது.

மத்திய தோல் தொழில் நுட்பக் கழகம், சென்ட்ரல் லெதர் ரிசர்ச் இன்ஸ்டிட்யூட், அங்கே இருக்கக் கூடிய இயந்திரங்கள் நல்ல இயந்திரங்களாக இருக்கின்றன, அங்கே இருக்கக்கூடிய தொழிலாளர்கள் சிறந்த தொழிலாளர்களாக இருக்கிறார்கள். ஆகவே, அத்தொழிற்சாலை, 'வயபில் யூனிட்' என்று எழுதியிருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலையில் மாநில அரசாங்கம் தலையிட்டு அந்தத் தொழிற்சாலை நல்ல முறையில் நடக்கவும், மேற்கொண்டு அத்தொழிற்சாலை தோல் பதனிடும் தொழிலை மேற்கொண்டு, வெளிநாடுகளுக்குப் பொருள்களை ஏற்றுமதி செய்ய வழிவகை காணவேண்டும். ஏற்றுமதியிலே நல்ல முன்னேற்றம் காண்பதோடு, அந்தத் தொழிலாளர்கள் நலனை இந்த நேரத்திலே பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொரு பிரச்சனை, நான் கேள்விப்பட்டு, மிகவும் வேதனைப் பட்டேன். அதாவது, இந்த மாநில அரசுப் பணியாளர்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்கான நிலையம் ஒன்று பவானிசாகரிலே இருக்கிறது. அங்கு நூற்றுக்கணக்கான பணியாளர்கள் பயிற்சிக்காகச் செல்கிறார்கள். அப்படிப் பயிற்சிக்குச் சென்ற நேரத்தில், அங்கே முதல்வராக இருந்த ஒருவர், பயிற்சிக்கு வந்த ஊழியர்களிடத்திலே, வெளி இடங்களுக்கு அவர்கள் சுற்றுப்பயணம் செல்லும்போது, தனக்கு வேண்டிய பொருள்களை வாங்கிக் கொண்டு வரவேண்டுமென்று கேட்ட காரணத்தால், பல பிரச்சனைகள் ஏற்பட்டு, வேலை நிறுத்தமே ஏற்பட்டது. பிறகு, அந்தப் பெண் ஊழியர் கோவையிலே, மாண்புமிகு முதலமைச்சர்



அவர்களைச் சந்தித்து, நேரிலே புகார் கூறி இருக்கிறார்கள். முதல்வர் அவர்கள் தலையிட்டு, இன்றைக்கு அந்தப் பயிற்சிக் கூடத்தின் பிரின்சிபால்' மாற்றப்பட்டிருக்கிறார் என்று அறிகிறேன். அதுமட்டும் போதுமா? அவர்மீது பல புகார்கள் இருக்கின்றன. இந்த மாதிரி பயிற்சி நிலையத்திற்கு எவ்வளவு பொறுப்பானவர்கள், எவ்வளவு பண்பானவர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்பதை மாநில சர்க்கார் தீவிரமாகப் பரிசீலனை செய்து, இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் அந்த பவானிசாகர் பயிற்சி முகாமிலே ஏற்படாதவாறு செய்யவேண்டும்.

அந்தப் பிரின்சிபால் மீது கொடுக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் தக்க முறையில் விசாரிக்கப்பட்டு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். அதுமட்டுமல்ல அந்த கமிஷனர் ஃபார் டிரெயினிங் அவர்கள் அந்த வேலை நிறுத்தத்தில் வேறு வழியில்லாமல் ஈடுபட்ட அந்த அலுவலர்களுடைய சம்பளத்தை 5 நாட்களுக்குப் பிடித்துவிடுமாறு உத்தரவு போட்டிருக்கிறார்.

அது மட்டுமல்ல. 2 வருட காலத்திற்கு அரசாங்க ஊழியர்கள் பணியாற்றினால் புரொபேஷன் டிக்ளேர் செய்யவெண்டும் என்று இருக்கிறது. ஆனால் இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட அனைவருடைய புரொபேஷனையும் டிக்ளேர் செய்யக்கூடாது என்று உத்தரவு போட்டு அனுப்பி உள்ளார். இது மிகவும் சரியல்ல என்று கூற விரும்புகிறேன். அவர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படவேண்டும். புரொபேஷன் டிக்ளேர் செய்யப்பட வேண்டும். அப்படி செய்யவேண்டாம் என்று டிரெயினிங் கமிஷனர் போட்ட உத்தரவை ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் இன்றைக்கு மாநில அரசு ஊழியர்களுடைய சம்பளக் கமிஷன் தீர்ப்புகளை அரசாங்கம் அனுதாபத்தோடு பரிசீலித்து தங்களுடைய அறிவிப்பை சீக்கிரத்திலே வெளியிட்டு அரசு, ஊழியர்கள் இயக்கத்தோடு பேசி சுமுகமான நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து மிக முக்கியமான பிரச்சினை பற்றி சொல்ல விரும்புகிறேன். அதாவது மதுவிலக்கு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்த வரையில் சட்டத்தின் மூலமாக மதுவிலக்கை அமல் நடத்த முடியும் என்று நினைக்கவில்லை. இது தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மத்திய கமிட்டியினுடைய அபிப்பிராயம். இது பல நாடுகளிலே தோற்றிருக்கிறது என்பதைப் பார்த்துத்தான் இன்றைக்கு இந்த முடிவிற்கு வந்திருக்கிறது. நீண்ட நெடுங்காலமாக மதுவிலக்கு அமலில் இருந்து கொண்டிருந்தது. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் நாம் அதைப்பற்றி நேரடியாக விமரிசிக்காமல், நடப்பதைப் பொறுத்தவரைக்கும் சாதகமான நிலைமை ஏற்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. சமீபத்தில் என்ன ஏற்பட்டிருக்கிறது என்றால்

மிகவும் கவலை அளிக்கக்கூடிய சில தகவல்கள் நமக்கு வந்திருக்கின்றன. செப்டம்பர் 3. இந்து நாளேட்டில் பக்கம் 7 ல கூறியிருக்கிறார்கள்.

"The City Police took into custcday 1,300 persons fcr various prchibitien offences during last week and seized 2,528 litres of arrack and destroyed 6000 litres of fermented wash".

ஒரு நகரத்திலே மட்டும் செப்டம்பர் மாதம் 2-ந் தேதி மட்டும் ஒரு வாரத்திலே மட்டும் 1300 பேர்கள் கைது செய்யவேண்டிம நிலைமை—மதுவிலக்கு குற்றத்திற்காக கைது செய்யவேண்டிய நிலைமை இருக்கிறது என்றால், இந்த மாநிலம் முழுவதும் எத்தனை ஆயிரம் பேர்களைக் கைது செய்யவேண்டியிருக்கும் என்று பரிசீலனை செய்து அந்தப் பிரச்சினையைப் பொறுத்த மட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆழ்ந்து பரிசீலிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். மதுவை விலக்கி மக்கள் அதற்கு அடிமையாகாமல் இருப்பதற்கு இன்றைக்கு பரிசீலிப்பதன் மூலமாக வேறு நடவடிக்கைகளின் மூலமாக ஒத்துழைக்க மார்க்சிஸ்ட்டு கம்யூனிஸ்டு கட்சி பரிபூரணமாக தயாராக இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அமுல்படுத்துகிற நிலைமையிலே அப்படிப்பட்ட பிரச்சினை வந்தால் சாதாரண் மக்களிடத்திலே வெறுப்பு மனோபாவம் வளர்கிற நேரத்தில், மற்றப்பிரச்சினைகளில் எதிர்க்கட்சித்தலைவர்களைக் கலந்து கொண்டு பேசுவதைப்போல இந்தப்பிரச்சினையிலும் எதிர்க்கட்சித் தலைவர்களோடு கலந்துரையாடல் நடத்தினால் பயன் உள்ளதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

போலீஸ் நிர்வாகத்தைப் பொறுத்தவரையிலும் இன்றைக்கு நம்முடைய அரசாங்கம் கடந்த கால அரசாங்கத்தின் கொள்கைகளைப் பின்பற்றி வருகிறோம் என்று சொல்கிறார்களே தவிர, நடைமுறையில் அது மாறவில்லை. டால்மியாபுரத்திலே நடந்த துப்பாக்கிப் பிரயோகம் குறித்து அந்த வட்டார ஆர். டி. ஓ. விசாரணை நடத்துகிறார். அந்த வட்டார ஆர். டி. ஓ. விசாரணை நடத்துவது சரியான முறையில் அமையாது, அதற்கான சூழ்நிலை இருக்காது என்ற காரணத்தால் அதைத்தக்க முறையிலே விசாரணை செய்யவேண்டும்.

[முற்பகல் 11.40]

கம்பத்திலே ஜுலை மாதம் 27-ம் தேதி மணி என்ற லாரி தொழிலாளி திருட்டுக்குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டார் என்பது உண்மை. ஆகஸ்ட் மாதம் 19-ம் தேதி வரையில் அவர் போலீஸ் லாக்கப்பில் வைக்கப்பட்டு இருந்தார். இப்படி வைத்து இருப்பது சட்டப்படி குற்றம். சட்டப்படி கைது செய்யப்பட்ட 24 மணி நேரத்திற்குள் மாஜிஸ்டிரேட் முன் நிறுத்தப்படவேண்டும். ஆனால் நடைமுறையில் அது பின்பற்றப்படுவது இல்லை. மீண்டும் மீண்டும் நாங்கள் கோருகிறோம், இந்த மாநிலத்திலே உள்ள போலீஸ் நிலையங்களில் என்ன செய்கிறார்கள் என்றால் அந்தக் கைது பற்றி ரிகார்ட்





செய்வது இல்லை. ரிகார்ட் செய்தால்தான் லாக்கப் ரிஜிஸ்டரில் இருக்கும். அவன் கைது செய்யப்பட்டு இருக்கிறான் என்று கம்பத்தில் போய்க் கேட்டால் அவனை உத்தமபாளையத்திற்கு அழைத்துச்சென்றுஇருப்பதாகச்சொன்னார்கள். அவன் குற்றத்தை ஒப்புக் கொள்கிற வரையில் அடித்து இருக்கிறார்கள். அவன் இடுப்பு முறிகிற அளவிற்கு அடித்து இருக்கிறார்கள். அவனை பின்னர் மதுரை அரசினர் ஆஸ்பிடலில் சேர்த்து இருக்கிறார்கள். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. வரதராசன் அவர்கள் கம்பத்திற்குச் சென்று இந்த அறிக்கையை வெளியிட்டு இருக்கிறார்கள். ஆகவே, நான் கேட்டுக்கொள்கிறேன், இதற்கு அரசு ஒரு இறுதியான முடிவை எடுக்கவேண்டும். இதனைத் தடுக்க அனைத்துக்கட்சிகளும், அரசாங்கமும் ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டும். எக்காரணத்தைக்கொண்டும் குற்றவாளி புலனாய்வு செய்யப்படுகிறபோது சித்திரவதைக் கொடுமைக்கு ஆளாக்கப்படக்கூடாது என்ற உத்தரவைப் பிறப்பிக்கவேண்டும். அதற்கு என்ன வழி என்பதைப் பார்க்க வேண்டும். இதை நாம் சொன்னால் போலீஸ் அதிகாரிகள் என்ன சொல்கிறார்கள் என்றால், நாங்கள் எதையும் செய்வோம், எங்கள் ரத்தத்தில் ஊறிவிட்ட ஒரு போக்கு என்று சொல்கிறார்கள். இது ஒரு கொடுமையான பிரச்னை. இதற்கு ஒரு தீர்வு காண வேண்டும். அப்படி தீர்வுகாணப்பட்டால்தான் பழனியில் ஏற்பட்டது போன்ற நிலைமையைத் தவிர்க்க முடியும். அவர்களை விசாரணை செய்வது நவீன முறையில் விசாரணை செய்வது என்று கொண்டு வந்து அதற்குத் தக்கவற்றை நாம் செய்து தரவேண்டும். அதையும் மீறி சித்தரவதை இருக்குமானால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தண்டிக்கப்படவேண்டும். அதைத் தவிர வேறு வழியில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ஒவ்வொரு மாதக் கடைசியிலும், வழக்குகளை எப்படியாவது போடவேண்டும், புள்ளி விவரம் காட்டவேண்டும், என்று போடுகிறார்கள். அந்த நிலையம் இருக்க நியாயம் இருக்கிறதா என்று எடுத்துக்காட்ட புள்ளி விவரங்கள் தேவை என்று இருக்கலாம். ஆகவே, அதை நீக்க அரசாங்கம் ஒரு உத்தரவைப் போடவேண்டும். நாங்கள் அதைப் பல தடவை கூறியிருக்கிறோம். ஒரு போலீஸ் ஸ்டேஷனில் எத்தனை வழக்குகள் போடப்படுகின்றன என்ற புள்ளி விவரத்தை வைத்து அந்தப் போலீஸ் ஸ்டேஷன் தேவையா இல்லையா என்று சொல்லக்கூடாது. எவ்வளவுக்கு எவ்வளவு வழக்குகள் பதிவு செய்யப்படுவது, குற்றங்கள் குறைக இருப்பது என்று எந்த நிலையத்தில் இருக்கிறதோ அதுதா திறமையுள்ள போலீஸ் ஸ்டேஷன், என்று மாநில சர்க்கார் ஏற்றுக் கொள்ளும், அதிகமான வழக்குகள் இருந்தால் தைத் திறமையான போலீஸ் ஸ்டேஷன் என்று ஏற்றுக்கொள்ளாது என்று அறிவித்து விட்டால் நிச்சயமாக அதற்கான ட்டி எற்படாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கையிலே விலங்கு போடுவதைப் பற்றி பாரதப் பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்கள் பஞ்சாபில் ஏற்பட்ட நிகழ்ச்சியைக் கேள்விப்பட்டு அப்படி விலங்கிடக்கூடாது என்றி தெரிவித்து இருக்கிருர்கள். நான் சமீபத்தில்கூட பார்த்தேன். இரண்டு கைதிகளுக்கு விலங்கிட்டு இருந்தார்கள். ஒருவனுக்கு வலது கையில் சங்கிலியும், இன்னொருவனுக்கு இடது கையில் சங்கலியும் போட்டு இருவரையும் அழைத்துச்சென்ருர்கள். இதில் ஒருவனுக்கு இன்னொரு கையாவது இருக்கிறது. ஆனல் ஒரு தனிக் கைதியை அழைத்துச்செல்கிறபோது அவனுக்கு இரண்டு கைகளையும் சேர்த்து விலங்கு மாட்டிவிடுகிருர்கள். அவனல் இப்படித்தான் இருக்கமுடியும். அவன் அப்படி கையை வைத்துக் கொண்டு காலில் செருப்பு இல்லாமல் - போலீஸ்காரர்கள் மட்டும் பூட்ஸ் அணிந்து கொண்டு இருப்பார்கள்—அவன் செல்லவேண்டும். இது எத்தகைய மனிதத் தன்மையற்ற முறையில் நடக்கிற செயல் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இதற்குப் பரிகாரம் காண வேண்டும். குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலும், சமூக விரோதிகளை தண்டிக்கவும் அவர்கள் மீது தக்க நடவடிக்கையும் எடுக்கவேண்டும். இந்த விலங்கிடும் பிரச்னையில் அரசாங்கம் மனிதாபிமானத்தோடு பரிசீலிக்கவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மக்கள் உரிமைகளைப் பற்றி போலீஸ் ஸ்டேஷனில் எழுதி வைத்திருக்கிருர்கள். பல ஸ்டேஷன்களில் எழுதி வைத்து இருக்கிருர்கள், அரசாங்கமும் பத்திரிக்கையில் அவற்றையெல்லாம் விளம்பரம் செய்தது. ஆனல் பல போலீஸ் ஸ்டேஷன்களில் அவற்றை சிறிய எழுத்தில் எழுதி 15 அடி உயரத்தில் மக்கள் பார்த்து படித்து புரிந்துக் கொள்ளமுடியாத நிலையில் வைத்து இருக்கிருர்கள். எனவே அந்த போர்டுகளை பெரிய எழுத்தில் எழுதி மக்கள் பார்த்து படித்து புரிந்து கொள்ளும் வகையிலும் இருக்கவேண்டும். அந்த உரிமைகளை போலீஸ் நிலையங்களில் காக்கப்பட கடைபிடிக்கப்பட வேண்டியது மிகவும் அவசியம் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொ[...]ள்கிறேன்.

கோட்டை முன்பு கல்லூரி ஆசிரியர்கள் உண்ணுவிரதம் என்று நாங்கள் அற[...]தாம். ஏற்கனவே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் [...]ஞர்கள். மதுரை, சென்னை பல்கலைக் கழகங்கள், அரசாங்க [...]லூரி ஆசிரியர்கள் எல்லோருக்கும் ஒரு சில உறுதிமொழிகள் அளிக்கப்பட்டன. அவர்களுடைய கோரிக்கை 200 வேலை [...]கம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு மீண்டும் பணி கொடுக்கப்[...] வேண்டும். அரசாங்கம் நேரடியாக சம்பளம் கொடுக்கவேண்டு[...] பல்கலைக்கழக நிதி ஆணைக் குழுவின் சிபார்சுகளை அமல் நட[...]வேண்டும், என்ற கோரிக்கைகளை வைத்து இருக்கிருர்கள். [...]ண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொடுத்த அறிவிப்பு வர[...]கத்தக்கது. வெளியேற்றப்பட்டவர்கள் மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள். தனிப்பட்ட நிர்வாகம் அதை மீறினல் அந்த ஆசிரியரையும் வேறு பள்ளிக்கு மாற்றி, அவருக்கு அளிக்கப்படும் கிராண்டையும் அந்தப் பள்ளிக்கு மாற்றப்படும். அதைப்போல் அவர்களுக்கு தனியார் நிர்வாகத்தில் இருந்தால் நேரடியாக சம்பளம் கொடுக்கப்படும். இதே அடிப்படையில் இந்த 200 கல்லூரி ஆசிரியர்களின் பிரச்னை குறித்தும் அவர்களை அழைத்துப் பேசி அந்த வேலை நீக்கங்களை ரத்து செய்ய, அரசாங்கம் ஏற்கனவே கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.





அதைப்போலதான் 18-7-1978 ல் டி. ஐ. சைக்கிள் தொழிற்சாலையை மீண்டும் திறக்க வேண்டுமென்று சென்னையில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். அப்போது மாநில சர்க்கார் அந்த நாளை பொது விடுமுறையாக அறிவித்தது. அதன் நோக்கம் சம்பளத்தோடு கூடிய பொது விடுமுறை என்பதுதான். அனல் அந்த உத்தரவை சென்னை நகரில் இருக்கின்ற தனியார் நிறுவனங்கள் மதிக்காமல், அந்த விடுமுறை நாளுக்கு சம்பளம் கொடுக்க மறுக்கிருர்கள்; சம்பளம் கொடுக்கவில்லை. அதனல் இதில் மாநில சர்க்காரே தலையிட்டு, பொது விடுமுறை என்று அறிவிக்கப்பட்ட அந்த நாளைக்கு தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

இன்னொன்று, எங்களுடைய கட்சியின் சார்பில் ஏற்கனவே சொல்லப்பட்ட பல்வேறு பிரச்சனைகளில் ஜனநாயக சக்திகள் தங்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தி, ஒரு இடதுசாரி திசையில் நாட்டை அழைத்துச்சென்ருல்தான் இந்த நாட்டின் பிரச்சனைகளைத் தீர்க்க முடியும் என்பது ஒன்று. பிரஜா உரிமை என்பது மிகப்பரந்த, ஆழமான ஒன்று. ஜனநாயக சக்திகள் ஒன்றுபட்டால்தான் அந்த பிரஜா உரிமையை பாதுகாக்க முடியும்; கடந்த கால சர்வாதிகார சக்திகள் மீண்டும் தலைதூக்காமல் பார்த்துக்கொள்ள முடியும். ஆக, பிரஜா உரிமையைப் பாதுகாப்பது, மாநில சர்க்காருக்[...]திக அதிகாரங்களைப் பெறுவது, கல்வி போன்ற முக்கியமான பொறுப்புகளை மாநில சர்க்காரின் கீழ் கொண்டுவருவது போன்றவைகளுக்கு நம்முடைய ஜனநாயக சக்திகள் ஒன்றுபட வேண்டிய அவசியம் இருக்கிறது.

இன்னொரு முக்கியமான விஷயம். இந்திய நாட்டில் ஏகபோக முதலாளிகள் ஆதிக்கம் இருக்கும் வரையில், அயல்நாட்டு சர்வாதிகாரம் இந்திய நாட்டில் இருக்கும் வரையில் இந்திய நாட்டின் வறுமையை நீக்க முடியாது. இந்திய நாட்டின் வறுமையை நீக்க முடியவில்லை என்ருல் தமிழ்நாட்டின் வறுமையையும் நீக்க முடியாது. இந்த ஏகபோக முதலாளிகள்

ஆதிக்கத்தையும் அயல்நாட்டு சர்வாதிகாரத்தையும் போக்க வேண்டுமானால் அதற்கு ஒரு மாற்றுக்கட்சி தேவை. அயல் நாட்டு சுரண்டலை எதிர்த்துதான் பாரதியும், வ. உ. சி. யும் போராட்டம் நடத்தினார்கள்.

இன்றைக்கு இந்திய நாட்டில் 2,000 கோடி ரூபாய்க்கு அயல்நாட்டு மூலதனம் இருக்கிறது. அவர்களுக்கு பாதுகாப்பு கொடுத்து, அவர்களை சுரண்ட விட்டுக்கொண்டிருந்தால் இந்திய நாட்டின் பொருளாதாரம் எப்படி வளரும்? 2,000 கோடி மூலதனத்திற்கான பட்டியல் தயாராக இருக்கிறது. அவர்களுடைய ஆதிக்கம்தான் மேலோங்கி இருக்கிறது. இந்த அயல் நாட்டு ஆதிக்கம், அயல்நாட்டு சுரண்டல் ஒழிக்கப்பட்டாக வேண்டும். அவர்களுடைய மூலதனத்தை நாட்டுடைமையாக்க வேண்டும். அப்படியானால்தான் இந்திய நாட்டின் பொருளாதாரம் வளரும்; வறுமை போகும்.

கிராமப்புறத்திலே இருக்கின்ற வறுமையைப் போக்க வேண்டுமென்றால் நிலச்சீர்திருத்தத்தை தீவிரமாகச் செயல்படுத்த வேண்டும்; அது தான் ஒரே வழி. இதைச் செய்வதற்கு எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் ஒரு இடதுசாரி ஜனநாயக முன்னணியை அமைக்க வேண்டுமென்று கூறியிருக்கிறோம். அதில் ஆளும் கட்சியான அண்ணா தி. மு. க., சோசலிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மற்றுமுள்ள கட்சிகளையெல்லாம் நாங்கள் குறிப்பிட்டிருக்கிறோம். இது எங்கள் கொள்கையை தெளிவாகக் காட்டுகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில், அந்தக் கட்சியின் அடிப்படையிலே இருக்கின்ற அம்சங்களை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால் சமீப காலத்தில் அவர்கள் கையாளும் ஒரு கொள்கை எங்களுக்கு ஒத்ததாகத் தெரியவில்லை. அதாவது மலையாளிகள் எதிர்ப்பு என்ற வகையிலே அவர்கள் போக்கு இருப்பதால் இன்றைக்கு அவர்களுடைய நடவடிக்கை சீரழிந்துக்கொண்டிருக்கிறது என்பதை நாங்கள் எடுத்துக்காட்டுகிறோம்.

இறுதியாக, இந்த மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டுமென்றாலும், மொழி பாதுகாப்பு வேண்டுமென்றாலும், இந்தி மொழி திணிப்பை தடுக்க வேண்டுமென்றாலும் இந்திய நாட்டிலே சாதாரண மக்களின் மூலம்தான் அது சாத்தியமாகும். அதற்கு, சாதாரண மக்களின் ஆதரவைத் திரட்டுவதற்கு, ஒரு இடதுசாரி ஜனநாயக முன்னணியை உருவாக்க வேண்டும்; அதற்கு இந்த மாநில சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தென்னிந்திய மாநில முதலமைச்சர்கள் மாநாட்டை நடத்தியிருக்கிறார்கள். ஆளுநரே அதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. மற்றொரு மாநாடும் நடைபெற இருக்கிறது என்பதும் சூசகமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதை நாங்கள் வரவேற்கிறோம். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும், இந்தி திணிப்பு கூடாது, கல்வி போன்ற முக்கியமான பொறுப்புகள் மாநில பட்டியலுக்கு வரவேண்டும் என்பன போன்றவைகளுக்கு அனைத்து முதலமைச்சர்கள் மாநாட்டைக் கூட்டி, புதிய சூழ்நிலையை ஏற்படுத்தி, ஒரு இடதுசாரி ஜனநாயக முன்னணியை உருவாக்க மாநில சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.





மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசும் போது சென்னை மாநகராட்சியில் வேலைக்கு ஆள் எடுப்பது குறித்து 27-7-78 ல் பிறப்பிக்கப்பட்ட ஆணையைச் சுட்டிக்காட்டினார்கள். நிர்வாகப் பொறியாளரால் பிறப்பிக்கப்பட்ட அந்த ஆணை 4-9-78 அன்று ரத்து செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 11.50]

திரு. எம். ஏ. லத்தீப்: பேரவைத் தலைவரவர்களே, கவர்னர் பெருமான் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் முன் மொழிந்திருக்கிறார்கள். ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிப்பதா இல்லையா என்ற பிரச்சினையை விட நான் திரு. மணிமாறன் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். காரணம் என்னவென்றால் அவர்கள் மிக வெளிப்படையாக ஒரு உண்மையை ஒத்துக்கொண்டு பேசினார்கள். இங்கே பேசுகின்ற எதிர்க்கட்சிகள் எல்லாம் எல்லாவற்றையும் எதிர்க்கவேண்டும் என்ற சம்பிரதாயத்தைக் கடைப்பிடித்து ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கின்றவற்றை எதிர்ப்பார்கள், ஆளும் கட்சியிலே இருப்பவர்கள் எல்லாம் ஆளுநர் உரையை ஆதரித்துத்தான் தீரவேண்டும் என்ற சம்பிரதாயத்திற்கு உட்பட்டு ஆதரிப்பார்கள் என்று வெளிப்படையாக ஒரு உண்மையை ஒத்துக்கொண்டு பேசினார்கள். சம்பிரதாயமான அவருடைய முன்மொழிதலை அவர்களே ஒத்துக்கொண்டு சம்பிரதாயத்துக்காக பாராட்டுவதாகவும் உண்மையிலே ஆளுநர் உரையில் பாராட்டுவதற்கு எதுவும் இல்லை என்று சம்பிரதாயமாகப் பேசியதற்கு நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஆளுநர் உரையிலே பல விஷயங்களை அவர்கள் எந்த விஷயங்களைச் சொல்ல வேண்டுமோ அந்த விஷயங்களைச் சொல்லாமல் நாட்டிலே சென்ற ஆண்டு நடந்த திட்டங்கள் யாவை என்பதற்கான விளக்கங்களைப்பற்றி ஏதோ ஒரு ஆண்டு அறிக்கையைப் போல - ஃபெர்ஃபாமென்ஸ் பட்ஜெட்டிலே சொல்வார்களே அந்த மாதிரி சொல்லப்பட்டிருக்கிறதே தவிர நாட்டிலே

இருக்கின்ற நலிந்த ஏழை எளிய மக்களுக்கு சமுதாய மேம்பாட்டை அளிப்பதற்கும் பொருளாதார ஆக்கத்தை அளிப்பதற்கும் எந்தெந்த வகையிலே இந்த அரசு வருங்காலத்தில் செயல்படப் போகிறது என்பதற்கான திட்டவட்டமான, தெளிவான, அறுதியான, உறுதியான திட்டங்கள் பற்றி சொல்லவில்லை என்பதை மிகுந்த வருத்தத்தோடு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நான் மாண்புமிகு முதலமைச்சரவர்களின் கவனத்திற்கு ஒரு விஷயத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அது என்னுடைய உணர்ச்சி மட்டுமல்ல. இன்றைக்கு நாட்டு மக்கள் அனைவரின் உணர்ச்சியாகவும் அது மாறி இருக்கின்றது. நெருக்கடி காலத்திலே தமிழ்நாட்டிலே ஜனாதிபதி ஆட்சி இருந்தது. தேர்தல் நடந்த பிறகு இன்றைக்கு மக்களாட்சி மலர்ந்திருக்கிறது என்று நாம் எல்லாம் நினைத்துக்கொண்டிருக்கின்ற நேரத்தில் மக்களுடைய பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு ஆட்சியாக இங்கே நடைபெறவில்லை. நெருக்கடி காலத்திலே, ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்திலே அதிகாரிகளுடைய ஆட்சி எப்படி நடந்ததோ அதே போக்கிலேதான் இன்றைக்கும் ஆட்சி நடந்துகொண்டிருக்கிறதே தவிர மக்கள் பிரதிநிதிகளின் உண்மையான எண்ணங்களைப் பிரதிபலிக்கின்ற வகையில் இன்றைக்கு ஆட்சி நெறி முறை, செயல்முறை இல்லை என்று நாட்டிலே இருக்கின்ற மக்கள் மட்டுமல்ல, நிர்வாகத்திலே பங்கு கொண்டவர்கள் கூட இன்றைக்கு சொல்லக்கூடிய நிலைமை உருவாகி இருக்கிறது. அது மக்கள் ஆட்சி தத்துவத்திற்கு ஒரு அறைகூவலாக அமைந்திருக்கிறது. ஆகவே அதை முதலமைச்சரவர்கள் நினைவில் கொண்டு எந்த வகையில் மக்கள் ஆட்சி தத்துவத்தை உண்மையாக நாட்டிலே நிலைநாட்ட முடியுமோ அந்த வகையில் செயல்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். உங்களுடைய கான்டிரிபுஷன் அதாவது நீங்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு எந்த வகையிலே இந்த நாட்டினுடைய நிர்வாகத்திற்கு உதவி இருக்கிறீர்கள் என்று சரித்திரத்திலே சில அடிச்சுவடுகளை நீங்கள் அளித்துச் செல்ல வேண்டும். அது நாட்டு மக்களுக்கு பயன் தருவதாக இருக்க வேண்டும். வருங்கால நிர்வாகத்திற்கு அது ஆக்கபூர்வமான உதவியாக அமைந்திட வேண்டும். ஆனால் அதற்கு மாறாக இன்றைக்கு ஆட்சியினுடைய எண்ணங்கள் எல்லாம் யார் யார் ஊழல் செய்திருக்கிறார்கள், யார் யார் ஊழல் செய்யக்கூடியவர்கள், யார் யார் மேரிலே எந்த வகையிலே நடவடிக்கை எடுக்க முடியும் என்பதில் மட்டும் கவனத்தினைச் செலுத்திக்கொண்டு இருக்கிறதே தவிர நாட்டுப் பொது பிரச்னைகளைத் தீர்க்க கவனம் செலுத்தவில்லை. மக்கள் பிரதிநிதிகளை எல்லாம் நம்பிக்கைக்கு உரியவர்களல்லாமல்





ஆக்குகின்ற வகையிலே நம்முடைய பேச்சுக்கள் அமைந்திருந்தால் அது வருங்காலத்தில் மிகவும் பாதகமானதாக இருக்கும் என்றும் இனிமேல் நல்லவர்கள் பொது வாழ்க்கைக்கு வருவதற்கு தயங்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். மக்கள் பிரதிநிதிகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டமன்ற உறுப்பினர்களாக வருகின்றனர். அவர்கள் அதிகாரிகளால் துச்சமாக மதிக்கப்படுவார்களேயானால் அது நீங்கள் முதலமைச்சராக இருந்தபோது இந்த நாட்டினுடைய பொது வாழ்வுக்கு எந்தவகையில் உதவி இருக்கிறீர்கள் என்று வருங்கால வரலாற்றிலே வரக்கூடும். ஆகவே அந்த வகையிலே நீங்கள் நடந்துகொள்ளக்கூடாது. மக்களுடைய பிரதிநிதிகளாகிய சட்டமன்ற உறுப்பினர்களை அதிகாரிகள் மதிக்கின்ற வகையிலே முதலமைச்சராகிய உங்களது பேச்சும் உங்களுடைய நடவடிக்கைகளும் அமைய வேண்டும் என்ற அந்த என்னுடைய உள்ள உணர்ச்சியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே அதிகாரிகளால் நல்ல வகையில் கருதப்படுகின்ற அளவிலே நாம் நடந்துகொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று இந்த நாட்டில் என்ன பெரிய அவலநிலை. யாரை எடுத்தாலும் லஞ்சம். மேலேயிருக்கிற பிரதம அமைச்சர் அவர்கள் மீது குற்றச்சாட்டு, லஞ்சக் குற்றச்சாட்டு. சரண்சிங் மேல் குற்றச்சாட்டு. ராஜ்நாராயணன்மீது குற்றச்சாட்டு. அமைச்சர்கள்மீது குற்றச்சாட்டு. மக்கள் பிரதிநிதிகள்மீது குற்றச்சாட்டு. எதிர்க்கட்சித் தலைவர்கள்மீது குற்றச்சாட்டு. மக்கள் கேட்கிறார்கள், பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பவர்கள் யாராவது யோக்கியர்களாக இருக்கிறார்களா என்று கேட்கக் கூடிய அளவிற்கு நமது பேச்சுக்கள் அமைந்து விடக்கூடாது. அந்த அளவிற்கு உங்கள் சிந்தனையைச் செலுத்தக்கூடாது. அதிகாரிகளை உங்கள் கட்டுக்கோப்பிற்குள் வைத்திருக்கவேண்டும். யாராக இருந்தாலும்சரி, எந்த அதிகாரியாக இருந்தாலும்சரி மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற ஒரு பிரதிநிதியை விட அவர்கள் மேலானவர்கள் அல்ல என்ற உணர்வை அவர்களிடத்தில் நீங்கள் ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சில விஷயங்களைச் சொல்லவேண்டும், சில விஷயங்களைச் சொல்லக் கூடாது, அதைத்தான் பப்ளிக் பாலிஸி என்று சொல்கிறார்கள். நான் ஏதோ தவறு செய்துவிட்டேன் என்று வந்தாலும் என்னைப் பின்பற்றுகிறவர்கள் என்ன சொல்லுவார்கள், லத்தீபே தவறு செய்துவிட்டார், பின் நமக்கென்ன என்று நினைத்துக் கொள்வார்கள். நம்மால் மதிக்கப்படுகிறவர் ஒருவர், பெரியவர், சங்கராச்சாரியார் அவர்கள் ஏதாவது ஒரு தவறு செய்தார் என்று வெளியே வந்துவிட்டால் இந்த நாட்டு மக்களின் ஒழுக்கம் எவ்வளவு சீர்கெடும் என்பதை நாம் நல்லமுறையில் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகவே, இப்படிப்பட்ட விஷயங்களை நாம்

அடிக்கடி பேசிக்கொண்டிருப்பதன்வாயிலாக நாட்டு மக்களின் ஒழுக்கத்தைக் கெடுக்கக்கூடாது. தயவுசெய்து ஆக்கபூர்வமான விஷயங்களில் உங்கள் சிந்தனையைச் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். பொது வாழ்க்கையில் நான் குறைந்தபட்சம் இருபத்தைந்து ஆண்டு களாக இருக்கிறேன். காய்தே மில்லத் அவர்களைப் பற்றி நீங்கள் மிகப் பெருமையாகப் பேசுகிறீர்கள். ஆனால் எடுத்துத் தெளித் தாற்போல் திருச்சியில் ஒரு விஷயத்தைச் சொன்னீர்கள். முஸ்லிம் லீக் ஏன் எங்களிடமிருந்து, எங்கள் தோழமையிலிருந்து விடுபட்டது என்று நீங்கள் ஒட்டுமொத்தமாகச் சொன்னீர்கள். முஸ்லிம் லீக் எங்களை கேடயமாக வைத்துக்கொண்டு சில தவறான காரியங்களைச் செய்ய முயற்சி செய்தார்கள் என்று. யார் அப்படிச் செய்தார்கள்....

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்</u> : தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் சொன்னது எந்தப் பத்திரிக்கையில் அப்படி வெளிப் படுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னால் நான் நடவடிக்கை எடுக்கத் தயாராயிருக்கிறேன்.

<u>திரு. எம். ஏ. லத்தீப்</u> : எல்லா பத்திரிக்கைகளிலும், குறிப்பாக தினத்தந்தி பத்திரிகை, மாலை முரசு பத்திரிகை, உங்கள் செய்திப் பத்திரிகைகள்—உங்கள் பத்திரிகைகள் என்று சொல்ல நான் தயாராக இல்லை, உங்கள் சார்புடைய பத்திரிகை களாக இருக்கிற அண்ணா பத்திரிகை, தென்னகம் பத்திரிகை இவற்றில் வந்திருக்கலாம், ஆனால் நான் பார்த்தது தினத்தந்தி பத்திரிகையில் பார்த்தேன். ஆனால், முதல்வர் அவர்கள் அப்படிச் சொல்லவில்லை என்று சொன்னால் அதை நான் விட்டு விடுகிறேன். ஏனெனில் பத்திரிகைகளில் வருவதையெல்லாம் எடுத்து வைத்துக்கொண்டு உங்கள்மீது குற்றச்சாட்டு சொல்ல நான் முன்வரவில்லை. முதல்வர் அவர்கள் இப்போது அப்படி சொல்லவில்லை என்றார்கள், மகிழ்ச்சி. அதற்காக உங்களுக்கு என் நன்றி. நான் 25 ஆண்டுகளாக பொதுவாழ்க்கையில் ஈடுபட்டிருக்கின்றேன். தேவிகுளம் - பீர்மேடு போராட்டக் காலத்திலிருந்து, நான் சிறு வயதிலிருந்தே பொதுவாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிறேன். இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறேன். பொது வாழ்க்கையில் ஈடுபட்ட பிறகு, எங்களுக்கிருந்த வசதிவாய்ப்புகளை குறைத்துக்கொண்டுதான் பொதுவாழ்க்கையில் பணியாற்றி வருகிறோமே தவிர, ஒரு சவாலாகச் சொல்லிக்கொள்கிறேன். நீங்கள் குறிப்பிடுங்கள், கணக்குகளை எடுங்கள், நாங்கள் பொதுவாழ்க்கைக்கு வந்தபிறகு ஒரு சல்லிக்காசு கூட பொதுவாழ்க்கையில் ஈடுபட்டதன்மூலம் நாங்கள் அதிகமாக சம்பாதித்திருப்போம் என்று நீங்கள் நிரூபிப்பீர்களேயானால் பொதுவாழ்க்கையில் எந்தத் தண்டனை யையும் ஏற்றுக்கொள்ள நான் தயார்....



<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்</u> : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்களைப் பற்றி நான் இப்படி எங்கேயாவது குறிப்பிட்டிருக்கிறேன் என்று சொல்வார்களா ? ஒட்டுமொத்தமாக நாங்கள் நாங்கள் என்று சொல்லும்போது யாரையெல்லாம் அந்தப் பட்டியலில் சேர்த்துக் கொள்கிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. ஆகவே, இன்னார் இன்னார் என்று குறிப்பிட்டு சொன்னால் எனக்கு பதில் சொல்ல உதவியாக இருக்கும்.

<u>திரு. எம். ஏ. லத்தீப்</u> : முஸ்லிம் லீக் பற்றி மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கருத்து பத்திரிகைகளில் வந்தது. அந்த முஸ்லிம் லீக் கட்சியின் பொதுச் செயலாளர் நான். ஆகவே, முஸ்லிம் லீக் பற்றி ஒட்டுமொத்தமாகச் சொல்லும் போது முதலில் நான்தான் பாதிக்கப்படுகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்</u> : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் ஒன்று புரிந்துக்கொள்ளவேண்டும். வக்ப் போர்ட் பற்றி பேசும் போது சொல்லியிருக்கிறேன். அதைப்பற்றி அவர்கள் ஏதாவது குறிப்பிட விரும்பினால் சொல்லலாம்.

[நண்பகல் 12.00]

<u>திரு. எம். ஏ. லத்தீப்</u> ; வக் போர்டுக்கும் முஸ்லிம் லீக்-கும் என்ன சம்பந்தம் என்று தெரியவில்லை....

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்</u> ; அதிலே யூனியன் முஸ்லீம் லீகைச் சேர்ந்தவர்கள் உறுப்பினர்களாக இருந்தார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறுக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

<u>திரு. எம் ஏ. லத்தீப்</u> ; அந்த வக்போர்டில் 11 பேர்களில் இருவர் மட்டும் முஸ்லீம் லீகைச் சேர்ந்தவர்கள் இருந்தார்கள். அந்த இருவரும் என்னென்ன குற்றம் செய்தார்கள் ? யார் யார் லஞ்சம் வாங்கினார்கள் ? தயவு செய்து இனம் காட்டுங்கள். யார் யார் லஞ்சம் வாங்கினார்கள் என்பதை தெளிவாக, உங்களுக்கு அரசியல் தெளிவு இருக்குமானால், நியாயம் இருக்கு மானால் சொல்லுங்கள்....

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்</u> ; சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, வக் போர்டு சம்பந்தப்பட்ட பதிவேடுகளை எல்லாம் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். யார் யாருக்கு அனுப்பி அதை பரிசீலனை செய்யவேண்டுமோ அவர்களுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. தவறுகள் ஏற்படு கின்றன என்று சொல்லும்போது, அதற்கு யார் யார் பொறுப்பு என்பதை தெரிந்து கொள்ளவேண்டியிருக்கிறது. அதற்காகத்தான் பரிசீலனை நடந்து கொண்டிருக்கிறது. பரிசீலனை நடந்து முடிந்த

பின்னால் இதற்கு யார் யார் பொறுப்பு என்பது தெளிவாகிவிடும். அப்போது லத்தீப் அவர்களுக்கு இருக்கின்ற சந்தேகம் நீங்கும். எங்களுக்கும் இருக்கின்ற சந்தேகம் நீங்கும். நான் குறிப்பிட்டது ஒட்டுமொத்தமாக தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன. இதற்கு யார் யார் பொறுப்பு என்பதை கண்டறிந்து அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தான் சொல்லியிருக்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : நன்றி, இதை விசாரணை முடிந்த பின்னால் சொல்லியிருப்பார்களேயானால் பொதுவாழ்க்கையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு நன்மை சேர்த்ததாக இருக்கும். விசாரணையில்லாமலேயே தவறுகள் இருக்கின்றன என்று...

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : விசாரணை என்பது எங்கே உருவாகிறது என்பதை தயவு செய்து மாண்புமிகு லத்தீப் அவர்கள் ஆராய்ச்சி செய்து பார்க்கவேண்டும். சந்தேகம் ஏற்படுகிறது. சந்தேகத்திற்கு காரணங்கள் சொல்லப்படுகின்றன. ஆகவே அதில் உண்மை என்ன என்பதை பரிசீலனை செய்து பார்க்க வேண்டியிருக்கிறது. சந்தேகம் இருக்கின்றது என்று சொல்லும்போது அதற்கு காரணம் இருப்பதாக சொல்லப்படுகிறது. உண்மையில் அவ்விதம் இருக்கிறதா என்பதை கண்டறிவதற்கு எங்கே அனுப்பவேண்டுமோ அங்கே அனுப்பப்படுகிறது. அதன் பின்னால் தெளிவாக யார் குற்றவாளிகள், யார் குற்றவாளிகள் அல்ல என்பதும், சொல்லப்படுகின்ற தவறு உண்மை தானா அல்லவா என்பதும் தெளிவாகிடும்.

திரு. எம். ஏ., லத்தீப் : இது சந்தேகத்திற்குரியது என்று ஒத்துக்கொண்டதற்கு நன்றி. சந்தேகத்திற்கே இடமில்லாமல் தான் இருக்கிறது....

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : என்னுடைய பொறுப்பு அப்படி. நான் முழுமையாக தெரிந்து கொண்டு முடிவு சொல்லவேண்டும் என்பதற்காகச் சொன்ன வார்த்தையைப் பயன்படுத்திக்கொண்டு பேசவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : சந்தேகம் பற்றி முழுமையாக தெரிந்து கொள்வதற்கு முன்னால் முதலமைச்சர் இப்படி பேசக் கூடாது அப்படி பேசவே கூடாது ...

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நான் உறுதியாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். குற்றவாளி என்று நிச்சயமாக சொல்வதற்கு ஆதாரம் இருப்பதாக சொல்லப்படுகிறது.





திரு. எம். ஏ. லத்தீப்: அதை நாடும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது, நானும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். இதைப்பற்றி முழுவதும் பேசவேண்டிய நேரத்தில் பேசிக்கொள்கிறேன்....

அடுத்தபடியாக அதிகாரிகள் எப்படியெல்லாம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். விக்கிரவாண்டியில் ஒரு பி. டி. ஓ. இருக்கிறார். அவரிடம் கட்டிட லைசன்ஸ் கேட்கிறார்கள். மில்லுக்கு கட்டிடம் கட்டுவதற்காக லைசன்ஸ் கேட்கிறார்கள். அதுவும் புதிதாக கட்டுவதற்கல்ல. ஏற்கனவேயுள்ள கட்டிடத்தில் விரிவுபடுத்துவதற்கு கேட்கிறார்கள். லைசன்ஸ வழங்குவதற்கு 500 ரூபாய் லஞ்சம் கேட்கிறார்கள். லஞ்சம் கொடுக்க முன்வராததால் உரிமம் பெறுவதற்கு செலுத்த வேண்டிய கட்டணத்தை வாங்க மறுக்கிறார்கள். பின்னால் அந்த லைசன்ஸ் கட்டணத்தை மணியாடர் செய்கிறார். அதுவும் மறுக்கப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் குறிப்பிட்டு ஒரு பெரிய பெட்டிஷன் எழுதி முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதற்கு எடுத்த நடவடிக்கை என்ன என்று தெரியவில்லை. இதற்கான ப்ளூ பிரிண்டை என்ன செய்திருக்கிறார்கள் தெரியுமா? 500 ரூபாய் லஞ்சம் கொடுக்க முன்வராத காரணத்தால் அதை இப்படி கிழித்து (கிழித்த ப்ளூ பிரிண்டை சபையில் காண்பித்தார்) திருப்பி அனுப்பியிருக்கிறார். இந்த நிலைமை நாட்டில் இருக்குமானால்—இதற்கெல்லாம் முதலமைச்சர் அவர்கள் அல்லது மற்ற அமைச்சர்கள்—இதற்கு டைரக்டீவ் ரெஸ்பான்ஸிபிலிட்டி இல்லையென்றாலும் கானஸ்ட்டிட்யூஷனல் ரெஸ்பான்ஸிபிலிட்டி இருக்கிறது—என்ற அளவில் ஏன் இப்படிப்பட்ட நிலைமை போய்க் கொண்டிருக்கிறது என்பதை கண்காணிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர் எழுதிய பெட்டிஷன் காப்பி இந்த பிளானுடைய காப்பி இவற்றையெல்லாம் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களிடம் சமர்ப்பித்துக்கொள்கிறேன். இவற்றை விரிவாக பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வேலூரில் நடைபெற்ற சம்பவம் வசூல் கூடாது என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் சொல்வதை எங்களால் புரிந்து கொள்ள முடிகிறது. அதிகாரிகளால் புரிந்து கொள்ள முடியவில்லை, அல்லது அதிகாரிகள் ஒருவேளை புரிந்துகொண்டும் தன் விருப்பப்படி நடந்து கொண்டிருக்கிறார்களோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. நாடு முழுவதும் பல்வேறு வகையில் வசூல்கள் நடந்து கொண்டிருக்கின்றன. வேலூரில்-வடஆற்காடு மாவட்டத்தில் —'ப்யூட்டிஃபிக்கேஷன் ஸ்கீம்' என்று சொல்லிக் கொண்டு வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள அத்தனை வியாபாரிகளையும் கட்டாயப்படுத்திக் கொண்டு வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த ப்யூட்டிபிக்கேஷன் ஸ்கீம் என்றுசொல்வது யாருடைய ஆணையின் பேரில்

[திரு. ஏ. லத்தீப்]      [1978 செப்டம்பர் 7

எந்த அடிப்படையில் வசூல் செய்யப்படுகிறது என்று தெரியவில்லை, ஆனால் வரையறை செய்து சொண்டு வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். யார் யார் இப்படிப்பட்ட அதிகாரிகள், என்புதை கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சில விஷயங்களைச் சொல்லும்போது, தீவிர கவனம் செலுத்தி முடிவு செய்யவேண்டும். மன்னிக்க வேண்டும். தோழர்கள் எதிரிலே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். நான்கு பேர்களை அமைச்சர்களாகப் போட்டீர்கள். அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லுவதற்கில்லை, அது உங்கள் விஷயம். உங்களுக்குத் தேவைப்பட்டது. போட்டீர்கள். அதேபோல், 8 பேர்களை பார்லிமெண்ட் செகரட்டரிகளாக அறிவித்தீர்கள். அப்படி ஏன் அறிவித்தீர்கள் என்ற உள் விஷயத்தில் நான் போக விரும்பவில்லை. ஆனால், அப்படி அறிவிப்பு தந்த பிறகு, அவர்களுக்கு எத்தனை நாளைக்குப் பிறகு நீங்கள் பதவிப் பிரமாணம் செய்து வைக்கிறீர்கள்....

திரு. துரைமுருகன் : பாயின்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே, பாரிலிமெண்ட் செகரட்டரிகள் 8 பேர்களை போட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனால், அவையின் முன்னவர் அவர்கள் மேலவையிலே சொன்னதாகப் பத்திரிகையிலே பார்த்தேன். இன்னும் அந்த 8 பேர்களுக்கு என்ன பெயர், என்ன டிசிக்னேஷன் வைப்பது என்பது முடிவு செய்யவில்லை என்றும், இன்னும் ஓரிரு வாரங்களில் பெயரிடப்படலாம் என்றும் அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, இன்னும் ஓரிரு வாரங்கள் கழித்து அவர்களுக்குப் பெயரிடப்படுமே தவிர, தற்போது [ * ] தான் இருக்கிறார்கள்....

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, மேலவையில் இதுகுறித்து பிரச்னை கிளப்பப்பட்டபோது, பாராளுமன்ற செயலாளர்கள் என்பதற்கு துணை அமைச்சர்கள் என்று போட்டுக் கொண்டிருக்கின்றார்களே, உண்மையிலேயே அவர்கள் துணை அமைச்சர்களா என்று கேட்டதற்கு, அவர்கள் துணை அமைச்சர்கள் அல்ல. பாராளுமன்றச் செயலாளர்கள் என்பதற்கு என்ன தமிழ் வார்த்தை போடுவது என்பது குறித்து ஆராய்ந்து, அதற்கு விரைவிலே அதிகாரபூர்வமான அறிவிப்புத் தருவதாகச் சொன்னேனே தவிர, அது தெரியாமல் தவிக்கிறோம் என்றோ, அல்லது அதுகூட புரியாமல் இருக்கிறோம் என்றோ சொல்லி, இதனை பெரிது படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) : உறுப்பினர் திரு துரைமுருகன் அவர்கள் பேசும்போது, [ * ] என்று கூறிய வார்த்தையை குறிப்பிலே இருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

---

* மாண்புமிகு மாற்றுத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1978 செப்டம்பர் 7]

திரு. எம்.ஏ. லத்தீப் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். அதற்கு நன்றி. ஆனால் ஒன்று. உங்களுடைய அதிகாரபூர்வமான அறிவிப்பு இல்லாமலேயே, பாராளுமன்ற செகரட்டரிகளாக இருக்கக் கூடியவர்களுடைய பொறுப்பு என்ன என்பதை அரசாங்கம் இதுவரை விளக்கவில்லை. அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதுகூட இதுவரையிலே விளக்கவில்லை என்பது ஒன்று. இவர்களெல்லாம்......

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள்தான் கோப்புகளைப் பார்த்து முடிவு செய்கிறார்கள் என்றோ, அதற்காகத்தான் அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்றோ கேட்டால், நான் கடைசியிலே அதற்குப் பதில் சொல்வதற்கு உதவியாக இருக்கும்

திரு. எம். ஏ. லத்தீப் : கோப்புகளை பார்ப்பது என்பது பெரிய காரியமல்ல. ஒருகாலத்தில் கோப்புகளை நானும் பார்க்கலாம். அதற்கும் காலம் வரும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆசைக்கு நான் குறுக்கே நிற்கவில்லை. ஒவ்வொருவருக்கும் அந்த ஆசை ஏற்படுவதுண்டு. அதிலே குறுக்கே நிற்க நான் தயாராக இல்லை. ஆனால், கோப்புகளைப் பார்ப்பதில்லை என்றால், 15,000 கோப்புகள் பார்க்காமல் இருக்கின்றன என்று புரியாமல் பேசுவது என்றால், அதைப்பற்றி சிந்திக்க வேண்டாமா ?

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆப் ஆர்டர், முதல்வர் அவர்கள் ஒவ்வொரு முறையும் சொல்லும்போது, சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே என்று உங்களை அழைக்கிறார்கள். அது தவறு. மன்றத் தலைவர் அவர்களே என்றுதான் அழைக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தை 'சட்டமன்றப் பேரவை' என்பதை ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். அப்படியானால், 'சட்டமன்றப் பேரவைத் தலைவர்' என்பதையும். ஒப்புக்கொள்ள வேண்டும்.

திரு. எம். ஏ. லத்தீப்: நிதி அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். உங்களுடைய அறிவிப்பு இல்லாமலேயே, வடஆற்காடு மாவட்டக் கலெக்டர் அவர்கள் ஒன்றை பிரசுரித்திருக்கிறார்கள். பார்லிமெண்டரி செகரட்டரி என்று சொல்லும்போது, முதல் அமைச்சர் அவர்கள் அவர்களுக்குப் பதவிப் பிரமாணம் செய்யலாம். அமைச்சர் அந்தஸ்திலே உள்ளவர்களுக்கு கவர்னர்தான் பதவிப் பிரமாணம் செய்து வைக்க வேண்டும்.

[பிற்பகல் 12-10]

இந்த அடிப்படையான விஷயம் கூடத் தெரியாமல் மாவட்ட கலெக்டர் மூலமாக வெளியிடப்படுகின்ற அழைப்பிதழ்களில் எல்லாம்-என்றைக்கு நியமிக்கப் போகிறோம் என்று அறிவிப்புத் தந்தீர்களோ அப்போதிருந்தே, விஸ்வாசப் பிரமாணம் செய்யப்படுவதற்கு முன்பே மாவட்ட கலெக்டர் மூலம் எப்படி அறிவிப்பு தருகிறார்கள் என்று சொன்னால் 'மாண்புமிகு எம். ஏ. ஜெயவேலு, பி. எஸ். சி. பி. எல்., சட்டத் துறை துணை அமைச்சர், என்று வட ஆற்காடு மாவட்ட கலெக்டர் அவர்கள் மூலம் வெளியிடப்படுகிற அதிகாரிகளால் அறிவிக்கப்படுவதை ஏற்றுக் கொள்வதா அல்லது நிதியமைச்சர் அவர்கள் மேலவையில் சொல்லியிருக்கிறார்களே அதற்குப் பிறகு குழப்பம் இல்லை என்று ஏற்றுக் கொள்வதா என்பதுதான் பிரச்சினையாக இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டி........

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: நமது உறுப்பினர் லத்தீப் அவர்கள் படித்துக் கொண்டிருக்கிற கலெக்டரின் மூலம் விடுத்த அந்த அழைப்பு எந்தத் தேதி என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: அந்தத் தேதி 28-6-78, அதிலே 'சட்டத் துறை துணை அமைச்சர்' என்று போட்டிருக்கிறார்கள். நீங்கள் எப்போது அறிவிப்புத் தந்திருக்கிறீர்கள்?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மன்னிக்க வேண்டும். நானே அறிவித்ததாகப் பத்திரிகையில் படித்துப் பேசிய லத்தீப் அவர்கள் நீங்கள் எப்போது பேசினீர்கள் என்று கேட்பது வேடிக்கையாக இருக்கிறது. எனது நினைவு சரியாக இருக்குமானால் நான் பேசியது நான்கு நாட்களுக்கு முன்னால், நீங்கள் இப்போது சொல்லிக் கொண்டிருப்பது ஒரு மாதத்திற்கு முந்தியது,





திரு. எம். ஏ. லத்தீப்: கொஞ்ச நேரத்திற்கு வேடிக்கைகளும் தேவைப்படுகிறது....

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தயவு செய்து பொறுப்புள்ள உறுப்பினர் வேடிக்கைக்கு உரிய பொருளாக மாறக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. துரை முருகன்: இது பற்றி விளக்கம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். என்ன பெயர் சொல்லுவது என்று முடிவு செய்யுங்கள். மதிப்பிற்குரிய லத்தீப் அவர்கள் சொல்வது போல் நடந்து வருகிறது. மதிப்பிற்குரிய கல்வியமைச்சர் அவர்கள் காட்பாடி தொகுதிக்கு வந்திருந்தார்கள். அந்த இன்விடேஷனிலே சட்டத் துணை அமைச்சர் ஜெயவேலு என்று போட்டிருந்தார்கள். ஜெயவேலுவைத் துணை அமைச்சர் அல்லது அமைச்சர் என்று வேண்டுமானாலும் போடட்டும். அவர் மீது காழ்ப்புணர்ச்சி இல்லை. அவர் என்னுடைய நண்பர்தான். டெபுடி மினிஸ்டர் என்று நீங்கள் ரெகக்னிஷன் கொடுத்திருக்கிறீர்களா? அப்படியானால் அவர்கள் பதவிப் பிரமாணம் அவ்வாறு செய்திருக்க வேண்டும். கலெக்டர்கள், சி.ஓ. க்கள் எல்லாம் அவர்களை துணை அமைச்சர் என்று போடுகிறார்கள். நீங்கள் பார்லிமெண்டரி செயலர் என்று சொல்லுகிறீர்கள். இந்த இரண்டுக்கும் இடையில் அவர்கள் திரிசங்கு சொர்க்கத்தில் இருக்கிறார்கள். அதைப் பற்றி ஒரு முடிவு எடுங்கள். இன்னும் பத்துப் பேரை வேண்டுமானாலும் அப்படிப் போடுங்கள், எல்லோரையும் போடுங்கள்' வேண்டாமென்று சொல்லவில்லை. அதிலே ஒரு முடிவு எடுத்துச் செய்ய வேண்டாமா?

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்தது—நான்கு நாட்களுக்கு முன்பு இன்னும் முடிவாகவில்லை என்று நிதியமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். அது சரி. அதற்கு ஒரு மாதத்திற்கு முன்பே அவ்வாறு போடப்பட்டிருக்கிறதே, அதற்கு என்ன பதில் என்று நான் கேட்கிறேன். வேறு அல்ல. இந்த மாதிரி நிர்வாகத்தில் தூர நோக்குடன் வருங்காலத்தில் எந்தெந்த நேரத்தில் எப்படி எப்படிச் செயல்பட வேண்டுமென்று நீங்கள் முடிவு செய்ய வேண்டிய உரிமையை வைத்துக் கொண்டிருக்கிறீர்களா? நீங்கள் முடிவு எடுப்பதற்கு முன்பே அதிகாரிகள் இப்படிப் போகிறார்களே, நான்கு கால் பாய்ச்சலில் செல்லுகிறார்களே, எங்களை எல்லாம் குழப்புகிறார்களே, இதற்கு என்ன பதில்? பார்லிமெண்டரி செயலாளர்கள் நிர்வாகத்திற்குத் தேவை என்று போட்டிருக்கிறீர்களா அல்லது அதற்கு வேறு என்ன காரணம் என்று மக்கள் பேசிக் கொள்கிறார்கள் என்று It is a legalised corruption என் குற்றச்சாட்டாக....

திரு. ர. ஜெபமணி: தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் பேசும்போது 'நாலு கால் பாய்ச்சல்' என்று சொன்னதைப் போடக் கூடாது, அதை எடுத்துவிட வேண்டும்.

திரு. க. சுப்பு: அவை முன்னவரவர்கள் லத்தீப் அவர்களை 'வேடிக்கைக்கு உரிய பொருளாக மாறக்கூடாது' என்று சொன்னார்கள். அதையும் நீக்கவேண்டும். இல்லையென்றால் உரிமைப் பிரச்சினை வரும். நானேகூடக் கொண்டுவர வேண்டியிருக்கும்..

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே, மற்றவர்களைப் பார்த்து, தலைவர் அவர்களைப் பார்த்து, நானே உரிமைப் பிரச்சினை கொண்டு வருவேன் என்று பயமுறுத்துவது, சரியாக இருக்காது. திரு. சுப்பு அவர்கள் நல்லவர்கள். ஏதாவது பேச வேண்டுமென்பதற்காகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நண்பர் லத்தீப் அவர்கள்தான் சொன்னார்கள்' வேடிக்கைக்காகச் சொன்னேன்' என்ற முறையில் சொன்னார். முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும்போது வேடிக்கைக்கு உரிய பொருளாக ஆகக் கூடாது என்ற கருத்தைச் சொன்னேன். அதை திரு. லத்தீப் அவர்கள் ஏற்றுக்கொண்ட பிறகு திரு. சுப்பு அவர்கள் அமைதியாக இருப்பது நல்லது.

திரு. எம். ஏ. லத்தீப்: நான் 'ஏற்றுக்கொண்டிருப்பது வேடிக்கைப் பொருள் அல்ல, வேடிக்கை பார்த்துக்கொண்டு ரசித்திருக்கிறேன் என்ற அளவிலேதான் ஏற்றுக்கொண்டேன். இம்மாதிரி நிர்வாகத்திற்குத் தேவையில்லாமல் வேறு காரணங்களுக்காக பார்லிமெண்டரி செக்கரட்டரிகள் போடுவது இந்தத் தமிழ்நாட்டின் சரித்திரத்திலேயே இல்லாத வகையில் 1938 ஆம் ஆண்டிலே திரு. பக்தவச்சலம் அவர்களும், பிறகு திரு. ராஜாராம் நாயுடு அவர்களும் இருந்திருக்கிறார்கள்-இன்றைக்கு 126 உறுப்பினர்களை வைத்துக்கொண்டு, ஆமாம், 127 உறுப்பினர்கள் ஐ ஸ்டாண்ட் கரக்ட், இவர்களை வைத்துக்கொண்டு 8 பார்லிமெண்டரி செக்கரட்டரிகள் போடுகின்ற நிலைமை வருமானால் அது வேறுகாரணங்களால்தான்.

I charge the Government that this is a legalised corruption-a corruption which has been made lawful. அவ்வளவுதான். வேறு ஒன்றும் இல்லை. இது தெளிவான ஊழல். இது சட்டப் பூர்வமாகச் செய்யப்பட்டிருக்கிற ஊழல். நாட்டு நடப்புகளை புரிந்து கொண்டு இருக்கிற மக்களுக்கு இது புரியும், இது லீகலைஸ்டு கரப்ஷன் என்ற குற்றச்சாட்டை நான் சாட்ட விரும்புகிறேன். இதுவரையிலும் பார்லிமெண்டரி செகரட்டரிகளுக்கு என்ன வேலைகள் என்று கூட அசைன் செய்யப்படவில்லை. (மணியடிக்கப்பட்டது)

இன்னும் 5 நிமிடங்கள் கொடுக்க வேண்டும்.





MR. CHAIRMAN (THIRU P. H. PANDIAN): You have taken 20 minutes.

THIRU M.A. LATHEEF: There was a lot of interruption when I was speaking. You must give due consideration to the single Member representig the Muslim League in this House.

MR. CHAIRMAN (THIRU P. H. PANDIAN):- You have started at 11.50.

THIRU M. A. LATHEEF: Whatever it may be.

MR. CHAIRMAN: (THIRU P. H. PANDIAN): Now you have taken half an hour.

THIRU M. A. LATHEEF: They have taken much of my time.

இந்த கல்லூரிகள் விஷயமாக தயவுசெய்து நம்முடைய கல்வியமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பாஸ் கொடுப்பதற்கு முன்பு சிந்தித்து இருக்க வேண்டாமா? நாங்கள் வெளிப்படையாகச் சொல்லி இருக்கிறோம்.

Do not go to the college premises. Whoever it is, whether he is a Member or belongs to a political party, he has no business to enter into the Colleges and educational institutions. என்பது எங்களுடைய நிலை. இன்றைக்கு கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் அரசியல் கட்சிகள் சென்று வருங்காலத்தைப் பாழாக்குகிறோம். பாஸ் கொடுத்தால் ஊர் சுற்றுகிறார்கள் என்றால் எதற்காகக் கொடுத்தீர்கள்? முன்பே தெரியவில்லையா? தலைவலி வந்தால் தலையையே வெட்டி விடுவதா? இன்றைக்கு கல்லூரிகளில் செப்டம்பர் எக்ஸாமினேஷன் நடக்கக்கூடிய இந்த சூழ்நிலையில் இரண்டொரு வாரத்திற்கு முன்புதான் திறக்கப்படுகின்றன என்று சொன்னால் கல்விக்காக நாலில் ஒரு பங்கை செலவழிக்கிறோம், மக்கள் கொடுக்கிற வரிப் பணத்தை எடுத்துச் செலவழிக்கிறோம், இந்த நிலையில் தலைவலி வந்தால் தலையை வெட்டிவிடுங்கள் என்று சொல்வது பிரச்சினையைத் தீர்ப்பதாக இருந்தால் அது நிர்வாகத்திற்கு நன்றாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து உடுமலைப்பேட்டை விஷயத்தைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அது கொலையா, தற்கொலையா? என்ன என்று நீங்கள் நினைக்கிறீர்கள். This is not sub-judice. சப்ஜுடிஸ் என்றெல்லாம் அந்த கான்சப்டை சொல்லிக்கொண்டிருப்பதில் பிரயோஜனம் இல்லை.

It is under investigation. It can be commented upon. It is a right and it cannot be restricted under the guise of sub-Judice. அது முடியவே முடியாது. அந்த மாதிரி ப்ரசீடன்ஸ் இல்லை. நான் கேட்கிறேன். தற்கொலை என்று நினைத்துக்கொண்டிருக்

கிறீர்களா அல்லது கொலையென்று நினைத்துக்கொண்டிருக்கிறீர்களா? 10 ஆயிரம் ரூபாய் அந்தக் குடும்பத்திற்குத் தருகிறேன் என்று அறிவிப்பு வந்தால் அது கொலை என்றுதான் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள், அதுதானே பொருள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே பேரவைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் இது பற்றி எடுத்துக்கூறிய போது பார்லிமெண்டரி பிராக்டிஸ்லே "இன்வெஸ்டிகேஷன் ஸ்டேஜிலே" இருக்கிற ஒன்றைப்பற்றிப் பேசக்கூடாது என்ற தீர்ப்பை வழங்கி இருக்கிறார்கள். சேரன் போக்குவரத்துக் கழகத்திலே ஒரு தொழிலாளி இறந்துவிட்டால் அவர் குடும்பத்திற்கு 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பது நடைமுறையில் இருக்கிற ஒன்று, அந்த அடிப்படையிலேதான் கொடுக்கப்பட்டது.

திரு. எம். ஏ. லத்தீப் : இன்வெஸ்டிகேஷன் ஸ்டேஜிலே செய்யக்கூடாது என்று சொன்னார்கள். I differ from that. I have got every right to differ as a Lawyer and as a Parliamentarian. This House has got every right to echo the voice and grievances of the people and I can never be restricted under the guise that the matter is sub-Judice. அது என்னுடைய ஸ்டாண்ட். நான் அதற்குள்ளே போக வில்லை. நீங்கள் அதைத் தற்கொலை என்றால் அரசாங்கம் 10,000 ரூபாய் கொடுப்பார்களா ? It is opposed to the public policy.

[பிற்பகல் 12-20]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, நான் ஏற்கனவே கூறிவிட்டேன். எந்தவொரு தொழிலாளர், எந்த வொரு சூழலிலும் பணியாற்றும் நேரத்தில் இறந்து விட்டால் 10,000 ரூபாய் கொடுப்பது என்பது நடைமுறையில் இருந்து வருகிறது. அதன் அடிப்படையில்தான் கொடுக்கப்பட்டது.

திரு. எம். ஏ. லத்தீப் : தற்கொலையாக இருந்தாலும் நாங்கள் பத்தாயிரம் ரூபாய் கொடுப்போம் என்றால் அது பொது நலனுக்கு எவ்வளவு உகந்தது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். It is opposed to public policy. பத்தாயிரம் ரூபாய் தற்கொலைக்கும் கொடுப்போம் என்றால் நிலைமை என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர் களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பத்தாயிரம் ரூபாய்க் காகத் தற்கொலை செய்து கொள்வார்கள் என்று எண்ணுகிறார் களா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : நான் இப்பொழுது பப்ளிக் பாலிசியைப் பற்றிப் பேசுகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் ஜெயவேலு அவர்கள் சொல்கிறார்கள், அவர்கள் லா அமைச்சர்





அல்லவா? லா கோட் கொடுக்கச் சொல்கிறார்கள். எனக்குத் தெரியும். (மணியடிக்கப்பட்டது) மக்களுக்குத் தேவையான, நாட்டிற்குத் தேவையான சமுதாய மேம்பாட்டிற்குத் தேவையான, பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான, உருப்படியான எந்தத் திட்டமும் இல்லை. இதிலே பாவனைகள் அதிகமாக இருக்கின்றன. பாவனைகள் அதிகமாக இருக்கின்றனவே தவிர, சாதனைகள் ஒன்றும் இல்லை. மக்களுடைய வேதனையையும் சோதனையையும் தீர்த்து வைக்கக்கூடிய எந்தவிதமான திட்டமும் இல்லை.

இன்றைக்கு நாட்டிலே இனக்கலவரம் நடந்து, சிறுபன்மை மக்கள் கொல்லப்படுகிறார்கள். பேரணாம்பட்டின் சம்பவத்தில் ஒன்றரைக் கோடி ரூபாய்க்கான சொத்து நஷ்டமும், மக்களுக்கு உயிர் நஷ்டமும் ஏற்பட்டிருக்கின்றன. அதைப் பற்றி நான் பேசக் கூடாது என்று கட்டுப்படுத்திக் கொண்டு வந்தேன். இம்மாதிரி விஷயங்களையெல்லாம் பேசக்கூடாது. ஏனென்றால் நாம் இருக்கும் இந்த நாட்டில் ஏழை சிறுபான்மை மக்கள் அடக்கப்பட்டால் அதைப்பற்றி....(மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) : நேரமாகி விட்டது,. உட்காருங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : ஆளுநர் உரைக்கு என்னுடைய எதிர்ப் பைத் தெரிவித்துக் கொண்டு, இது பாராட்டப்படக்கூடிய ஒன்றல்ல என்பதை மட்டும் சுட்டிக்காட்டி, அமர்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர் களே, நான் அவையில் இல்லாதபொழுது மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அது குறித்து என்னுடைய தன்னிலை விளக்கத்தைக் கூறக் கடமைப்பட்டிருக் கிறேன். நான் எழுப்பிய குற்றச்சாட்டுப்பற்றி உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மாநகராட்சியில் நடைபெற்றிருக்கின்ற ஒரு ஊழல் பற்றிய குற்றச்சாட்டை நான் சொன்னேன். அமைச்சரவர்கள் அப்படி ஆர்டர் போட்டது தவறு தான் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் நான் கேட்ப தெல்லாம், அந்த ஆர்டர் போட்டதற்கு யார் துணையாக இருந் தார்கள், யாரால் அது போடப்பட்டது, அதில் ஊழல் நடந்திருக் கிறது. அதற்கு நீதி விசாரணை வைக்கத் தயாராக இருக்கிறீர்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அந்த ஆணை எந்த உள்நோக்கத்தோடும் போடப்படவில்லை. நிர்வாகப் பொறியாளர் அப்படி ஆணை இட்டிருக்கிறார்கள். அதன் மூலம் பல தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று தொழிற்சங்கங் களிடமிருந்து வேண்டுகோள் வந்திருக்கிறது. அந்த வேண்டுகோளை ஏற்று மாநகராட்சி ஆணையாளர் அந்த ஆணையை ரத்து செய்திருக்

[திரு. கா. காளிமுத்து] [1 '78 செப்டம்பர் 7

கிறார். மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் கூறிய குற்றச் சாட்டு, காலாவதியான ஆணையை வைத்துக்கொண்டு சொல்லப் பட்ட ஒரு குற்றச்சாட்டு.

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, உள்நோக்கத்தோடு போடப் படவில்லை என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். பரவாயில்லை. உள்நோக்கம் என்று சொல்லவில்லை. ஆனால் ஏற்கனவே தற்காலிக மாக வேலை பார்க்கின்றவர்களை இரண்டாண்டுகள் ஆகியிருந்தால் நிரந்தரமாக்குவதற்குச் சட்டம் வரும் என்ற நிலை இருப்பதால் இரண்டாண்டுகளுக்கு முன்னாலேயே வெளியே அனுப்புகிறார்கள் மற்றத் தொழிற்சாலைகளில்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்-தலைமை)

ஏற்கனவே வேலையிலிருப்பவர்களை வெளியே அனுப்பிவிட்டு புதிதாகப் போடுவதிலே காரணம் இருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரமாகிவிட்டது' உட்காருங்கள்.

திரு. துரை முருகன் : அமைச்சர் பதில் சொல்லட்டும்.

MR. SPEAKER: I cannot comp l.

திரு. அ. ரகுமான்கான் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர்......

(மணியடிக்கப்பட்டது).

திரு. துரைமுருகன் : நான் ஒன்று சொல்கிறேன்.

* * *

திரு. அ. ரகுமான்கான் : பாய்ன்ட் ஆஃப் ஆர்டர்.

திரு. மு. அம்பிகாபதி : பாய்ன்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து அமைதி காத்தால் நல்லது என்று கருதுகிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : சட்டப் பேரவைத் தலைவ ர்களே, நம்முடைய நண்பர் துரை முருகன் அவர்கள் தங்களை ர்த்து, *** என்று சொன்ன வார்த்தைகள் குறித்து, நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன் என்று சொல்லி, இந்தப் பிரச்சினைக்கு இத்துடன் முடிவு கட்டி இந்தப் பிரச்சினையைமேலும் தொடராமல் பேசுவதற்கு வாய்ப்பளித்த சட்ட மன்றத் தலைவருக்கு முதலாவ தாக நன்றியைத் தெரிவித்துக் கொண்டு எனது பேச்சை ஆரம்பிக்கிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1978 செப்டம்பர் 7]

[பிற்பகல் 12-30.]

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர் களே, நமது மதிப்பிற்குரிய உறுப்பினர் சாதிக்பாட்சா அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் அவர்கள் சொன்ன வார்த்தைகளைப் பற்றி குறிப்பிட்டு வருத்தப்பட்டுவிட்டு, நான் பேச்சை ஆரம்பிக்கிறேன் என்று தொடங்கி இருக்கிறார். நீங்கள் வேண்டுமானால் [**] என்று சபாநாயகரைப் பார்த்து திரு. துரை முருகன் போன்ற பொறுப்புள்ள சட்டமன்றத்தில் பலகாலம் இருந்து பழக்கப்பட்ட ஒருவர் பேசுவது எந்த வகையில் நியாயம் என்பதை, இப்போதைக்கு திரு. துரை முருகன் அவர்கள் சிந்தித்துப் பார்க்காவிட்டாலும், வீட்டிற்கு சென்று ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல அருமை உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் நல்ல இளைஞர் களாக இருக்கிற அந்த நண்பர்கள் தங்களுடைய ஆற்றலை பயனுள்ள காரியத்திற்குப் பயன்படுத்துவதற்குப் பதிலாக இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடாமல் இருக்கவேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு-இன்னும் சொல்லப் போனால் அவர்களைவிட வயது முதிர்ந்தவன் என்ற முறையிலேயும், அவர்களுக்கு அறிவுரை வழங்குகிற ஆற்றல் எனக்கு இல்லாவிட்டாலும், கருத்துக்களை வழங்குகின்ற அளவுக்கு உரிமை படைத்தவன் என்ற முறையில் நான் தெரிவித்துக் கொண்டு, மேற்கொண்டு சபை ஒழுங்காகவும், அமைதியாகவும் நடக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிற அதே நேரத்தில், நான் சாதிக்பாட்சா அவர் களைக் கேட்டுக் கொள்வது, சபாநாயகரைப் பார்த்து [*] என்று சொன்னதற்கு வருத்தம் தெரிவித்ததோடு மட்டும் நில்லாமல் அந்த வார்த்தைகளை சபைக் குறிப்பிலே இருந்து நீக்க வேண்டும் என்று அருமை சாதிக்பாட்சா அவர்களே கேட்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு முன்னவர் மொழிந்ததை நான் மனமார வழிமொழிந்து, சபாநாயகரின் பேரில் சொன்ன வார்த்தைகளை நீக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னவரும் எதிர்கட்சியிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர் சாதிக்பாட்சா அவர்கள் இருவரும் கேட்டுக் கொண்டதற்கிணங்க குறிப்பிலே இருந்து நீக்க வேண்டும் என்று ஆணை இடுகிறேன். இதற்கு மேல் நான் ஒன்றும் சொல்வதற்கில்லை.

திரு. மு. அம்பிகாபதி : பாயின்ட் ஆப் ஆர்டர்.

[** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அம்பிகாபதி உங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்பது எனக்குத் தெரியும் திரு. சாதிக் பாட்சா என்று அழைப்பதற்கு முன் என் பெயரை ஏன் அழைக்கவில்லை என்று கேட்பீர்கள். அடுத்து உங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும். அமருங்கள். திரு. சாதிக்பாட்சா.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சட்டப் பேரவையின் தலைவர் அவர்களே, கவர்னர் உரையின் பேரிலே சில கருத்துக்களை சொல்ல வாய்ப்பளித்ததற்காக உங்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனல் கவர்னருடைய உரையின் பேரில் கவர்னருக்கு நன்றி சொல்ல முடியாத நிலை இருக்கிறது, என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கவர்னர் உரை என்பது அரசாங்கத்தின் கொள்கைகளைப் பிரதிபலிக்கிற உரையாக இருப்பதை நாம் பல ஆண்டுகளாகப் பார்த்து வருகிறோம். கவர்னர் உரை ஆண்டின் தொடக்கத்திலேயே ஆற்றப்பட்டு அரசாங்கத்தினுடைய வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப் படும்போது அரசியல் நிலைமையைப் பார்த்து விமர்சனம் செய்கிற வாய்ப்பாக நமக்குக் கிடைத்து வந்திருக்கிறது. இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் இந்த கவர்னர் உரை காலங்கடந்த உரையாக, அதுவும் அரசியல் சட்டம் நிர்பந்தப் படுத்தப்பட்ட காரணத்தினலே இங்கே வைத்திருக்கிருர்கள். இந்த கவர்னர் உரையைப்பற்றி இங்கே நான் அதிகமாக இப்போது சொல்ல விரும்பவில்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய கட்சியின் சார்பிலே பிரச்சினைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் மாநில சுயாட்சி கோரிக்கைகளுக்கான விளக்கங்களை எடுத்துச் சொல்லி, அதே நேரத்தில் மத்திய அரசாங்கத்தில் கல்வி என்ற பிரச்சினை பற்றியும் மற்றும் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றியும் தங்களுடைய அதிகாரத்தில் கொண்டு வரும் நடவடிக்கைகளைப் பற்றிக் கூறினர்கள். எங்களைப் பொறுத்த வரையில் மாநில அரசுக்கு அதிகமான அதிகாரம் வேண்டும் என்பதில் எந்த விதமான கருத்து வேறுபாடும் கிடையாது. மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி கொண்டிருக்கிற அந்த உணர்வு அந்த எண்ணம், திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் பரிபூரணமாக ஒப்புக்கொள்ளப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இங்கே இந்த கவர்னர் உரையிலே கொள்கை விளக்கங்களை எங்களாலே காண முடியவில்லை. உதாரணமாக இந்த கவர்னர் உரையில் 11-வது பக்கத்திலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. "உள்ளாட்சி நிறுவனங்களுக்கு தேர்தல் நடத்தும் பணியினை, மதுரை மாநகராட்சித் தேர்தலை நடத்தியதன் மூலம் அரசு, துவங்கியுள்ளது. ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி மன்றங்கள், சென்னை மாநகராட்சி ஆகியவற்றிற்கான தேர்தல்களும் விரைவில் நடத்தி முடிக்கப்படும்" என்று குறிப்பிட்டு இருக்கிருர்கள், எனக்கு இருக்கும் சந்தேகம். இதிலே ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி மன்றங்கள் குறிப்பிடப்பட்டு இருக்கின்றன. ஊராட்சி மன்றங்கள் குறிப்பிடப்படவில்லை. என் சந்தேகம் என்னவென்ருல் அரசாங்கத்தின் கொள்கை, ஊராட்சி மன்றங்களுக்கு எப்போது வேண்டுமானுலும் தேர்தல் நடத்தலாம் என்ற எண்ணம் கொண்டு இருக்கிறதா என்பதுதான். அதாவது முன் காலத்தில் சினிமா காட்சி காட்டுவது மேனேஜர் இஷ்டம் போல் ப்ரொக்கிராம் மாற்றப்படும் என்று சொல்வார்கள். அதைப்போல் உங்கள் இஷ்டம்போல் நடத்தலாம் என்று இருக்கிறீர்களா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, ஊராட்சி மன்றங்களுக்கும் ஒன்றியத்தேர்தலோடு நடத்தப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நன்றி. பஞ்சாயத்து ராஜ் என்பதைப் பற்றி பரிசீலிக்க அசோக் மேத்தா தலைமையில் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. அந்த அசோக் மேத்தா கமிட்டியில் நம்முடைய முதலமைச்சரும் ஒரு உறுப்பினர். அந்த கமிட்டி ஒரு அறிக்கை கொடுத்து இருக்கிறது. அந்தக் கமிட்டியில் உறுப்பினராக இருக்கும் திரு. இ. எம். எஸ். நம்பூதிரிபாஊ அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிருர்கள். அது பத்திரிக்கையில வந்து இருக்கிறது.

The C.P.M. Leader Mr. E.M.S. Namboodripad, a member of the panel, feels that these recommendations would remain on paper unless the whole question of Centre State relation is fully considered leading to radical amendments to the Constitution. In a note appended to the report Mr. E.M.S. Namboodripad while agreeing with the main conclusion, has said that the report omitted, what according to him, is a crucial factor, lack of political will on the part of the former and the present ruling parties at the Centre with regard to de-centralisation of powers.

என்று திரு. நம்பூத்ரிபாட் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிருர்கள். நம்முடைய அரசாங்கத்தின் கொள்கை என்ன என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஏனெனில் இது ஒரு முக்கியமான பிரச்னை. அசோக் மேத்தா கமிட்டியின் ரிப்போர்ட் அடிப்படையில் கூட மத்திய மாநில அரசாங்ககங்களுக்கு இடையே அதிகாரங்கள் பரவலாக்கப்படவேண்டும் என்பது தான். ஆகவே நான் இந்த அரசாங்கத்தின் கொள்கை என்ன என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஏனெனில் பத்திரிக்கையில் வந்த செய்தி இருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்களைப்பொறுத்த வரையில் இப்போது இருக்கும் அமைப்பு முறை இருக்கலாம் என்று கருத்து தெரிவித்து இருப்பதாகவும், ஆனல் அப்பிளியல், நான்-

அப்பிஷியல் என்ற வகையில் எக்ஸிஸ்டிங் ஸ்ட்ரக்சர் மாறலாம் என்றும் கருத்து தெரிவித்ததாகவும், அவைகளைப் பற்றி விளக்கங்களை நாங்கள் தெரிந்து கொள்ளவேண்டும் என்று விரும்புகிறேன்.

வியாபாரிகள் பிரச்சினையைப் பொறுத்தவரையில், அரசாங்கத்திலே விற்பனை வரி மாற்றியமைப்பதற்காக ஒரு குழு போடப்பட்டது. அந்தக் குழு என்ன ஆயிற்று, ஏதாவது அறிக்கை கொடுத்தார்களா என்ற விவரம் தெரியவில்லை. வியாபாரிகளைப் பொறுத்தவரையில் சிங்கிள் பாயிண்ட் டாக்ஸ் வேண்டும் என்று கோரி வருகிறார்கள். பல முறைகளில் அந்தப் பிரச்னை பேசப்பட்டு இருக்கிறது. ஆனால் அதற்கான கொள்கை விளக்கம் எதுவும் இங்கே காணப்படவில்லை. இந்த நேரத்தில் நான் அரசாங்கத்தின் கவனத்திற்கு ஒரு விஷயத்தைக்கொண்டு வர விரும்புகிறேன். இங்கே சட்டமன்றத்தில் நாம் பேசுவது பிரச்னைகளுக்குப் பரிகாரம் காண்பதற்காக. ஆனால் நாங்கள் பேசிய பிறகு, நாங்கள் என்ன பேசினோமோ அந்தப்பிரச்னைகளுக்குப் பரிகாரம் காண நடவடிக்கை எடுக்காமல், அதற்குச் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இது சட்டமன்ற உறுப்பினர்களின் நடவடிக்கைக்குக் குந்தகமாக விளையாதா என்று கேட்டுக்கொள்கிறேன்.

உதாரணமாக, சென்ற கூட்டத்தில் கலர்ட் ஹைட்ஸ் அன்ட் ஸ்கின்ஸ்ஸுக்கு சிங்கிள் பாயின்ட் டாக்ஸ் வேண்டும் என்று பேசினேன். அதை நிதி அமைச்சர் பரிசீலனை செய்வதாகச் சொன்னார்கள். ஆனால் என்ன நடந்தது என்றால் அந்தக் கூட்டம் முடிந்த உடனே அதிகாரிகள் அவசர அவசரமாகச் சென்று பழைய கணக்கை ரீ ஓபன் செய்து 6 ஆண்டுகளுக்கு சிங்கிள் பாயின்ட் என்று இருந்ததை மல்டி பாயின்ட் என்று ஆக்கி நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள். இது நியாயம் தானா அப்படி நடைபெறலாமா என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து விவசாயிகளின் பிரச்னை. விவசாய சங்கத்தின் போராட்டம் பற்றிப் பேசினார்கள். அவர்கள் கொள்கையில் எங்களுக்கு வேறுபாடு உண்டு. ஆனால் விவசாய சங்கத்தைச் சேர்ந்த நாராயணசாமி நாயுடு அவர்களைப் பற்றி தரம் தாழ்த்திப் பேசுவது முறைதானா என்று கேட்க விரும்புகிறேன். அவர்களுடைய வயதான காலத்தில் உடல் நலம் இல்லாத நேரத்தில் கூட ஒரு கொள்கை அவருக்கு சரி என்று பட்டதை வைத்துக்கொண்டு போராடி வருகிறார்கள். அவர்களுடைய கோரிக்கை எதுவாக இருந்தாலும் அவரைப் பற்றி தரக்குறைவாகப் பேசுவது சரியல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன். நான் இந்த நேரத்தில் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, விவசாய சங்கப் போராட்ட காலத்தில் கைது செய்யப்பட்ட பல பேர் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை. அவர்கள் சார்பாக ஜனாதிபதியை சந்தித்து மனுக் கூடக் கொடுத்து இருக்கிறார்கள். ஆகவே, கைது செய்யப்பட்டு, வழக்கு தொடரப்பட்டுள்ள விவசாயிகள் அனைவரையும் வழக்கு இல்லாமல் விடுதலை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



[பிற்பகல் 12.40]

அதைப்போல தொழிலாளர்கள்மீது, மாணவர்கள்மீது தொடரப்பட்ட சில வழக்குகள் இன்றும் நடந்து கொண்டிருக்கின்றன. அந்த வழக்குகளை எல்லாம் வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகள் பிரச்சனை பற்றி பேசும்போது ஒரு முக்கியமான பிரச்சனையைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். அதுதான் இன்றைக்கு இருக்கிற காவேரி நீர் பிரச்சனை. காவேரி பிரச்சனைப் பற்றி அதிகமாக பேசக்கூடாது என்றாலும் பத்திரிகைச் செய்திகளைப் பார்க்கும்போது மக்களிடையே ஒரு குழப்பம் ஏற்படுகிறது. கேரள அரசினுடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் வரும்போது ஒன்றைச் சொன்னார்கள். 'வெஸ்ட ஃப்ளோயிங் ரிவர்ஸையும் காவேரி பிரச்சனையையும் சம்பந்தப்படுத்திப் பேசினால் நாங்கள் ஒத்துக்கொள்ள மாட்டோம்; தமிழ்நாட்டு முதலமைச்சரிடத்திலே அப்படி ஒரு ப்ரொப்போசல் வந்திருக்கிறது என்று சொன்னார். அது நாங்கள் கொடுத்த ப்ரொப்போசல் அல்ல. ஆனால் மக்களுக்கு என்ன சந்தேகம் என்றால் இந்த எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாம் சேர்ந்து காவேரி பிரச்னையில் காலம் தாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறார்கள். அப்படிப்பட்ட சந்தேகத்திற்கு இடமில்லாமல் இந்த காவேரி பிரச்சனையில் அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டு, ஒரு நல்ல முடிவு காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. 3-ந்தேதி இந்து பத்திரிகையில் 12-ம் பக்கத்தில் ஒரு செய்தி வந்திருக்கிறது.

Diversion of Kerala west flowing rivers. As far as the Pandiar Punnampuzha scheme is concerned the Government of Kerala had given its green signal for its implementation. Large areas in Avinashi and Palladam taluks of Coimbatore district and in the Kangayam areas of this district would soon be assured of irrigation facilities.

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது உண்மையா? கேரள அரசு அனுமதித்திருந்தால் பாராட்டுகிறேன். ஆனால் இது உண்மையா? கேரள அரசு இப்படி ஒரு திட்டத்திற்கு அனுமதி கொடுத்திருக்கிறதா? மக்கள் மத்தியிலே தவறான எண்ணம் உண்டாகக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன்.

அடுத்து, நிர்வாகத்தில் தலையீடுபற்றி நண்பர்கள் கூறி இருக்கிறார்கள். நான் ஒன்றிரண்டைப்பற்றி மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். ஆயிரம்விளக்கு தொகுதி- அது என்னுடைய சொந்தத் தொகுதி. அங்கே திருவள்ளுவர் சாலையில் ஆளும் கட்சி நண்பர்கள் தங்கராசு, குணசேகரன் தலையீட்டினால் தாக்கப்பட்ட ஆண்டாள் அம்மாள் துரதிர்ஷ்டவசமாக இறந்துபோனார்கள். காவல் துறையினர் அதில் சரியான முறையில் நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறார்கள். மேற்கொண்டு தீவிர நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து 101-வது வட்டத்தில் புஸ்பராஜ் புகார்பற்றி 1971ஆம் ஆண்டு ஸ்லம் :க்ளீயரன்ஸ் போர்டு' மூலம் மாடி வீடு கட்டினார்கள். ஒரு பகுதியில் அப்போது கட்ட முடியவில்லை. அதில் சேர்மேன் தீவிரமாகச் செயலாற்றி வருகிறார்கள்; அதற்காக பாராட்டுகிறேன். அப்படிச் செயலாற்றி வந்தாலும் சில தவ களும் நடக்கின்றன. வீடு கிடைக்காதவர்கள், வேண்டுமென்று கேட்கிற போது போட்டோ வேண்டும்; போட்டோ இருக்கிறதா என்று கேட்கிறார்கள். போட்டோ கொடுக்கும் திட்டம் இருக் கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அடுத்து நாட்டில் இருக்கிற சட்டம், ஒழுங்குப் பிரச்னை. நண்பர் லத்தீப் அவர்கள் வேகமாகப் பேசினார்கள். விழுப் புரத்தில் நடைபெற்ற கோர சம்பவம், பேரணும்பட்டு விவகாரம் இவைகளைப் பார்க்கும்போது நாடு முழுவதும் ஒரு கொந்தளிப் பான நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. விழுப்புரம் சம்பவத் திற்கு ஒரு கமிஷன் போட்டு, விசாரணை நடத்திக் கொண்டிருக் கிறார்கள், அந்த கமிஷன் அறிக்கை வருவதற்கு முன்னால் 32 பேர்களை கைதுசெய்து, அவர்கள்மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு பக்கம் உண்மையைக் கண்டுபிடிப்ப தற்காக கமிஷன் விசாரணை நடத்திக்கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் இன்னொரு பக்கம் குற்றவாளிகள் என்று சொல்லி 32 பேர்களை கைதுசெய்து, நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக் கிறார்கள். இதற்கு என்ன அர்த்தம்? கமிஷன் ஒரு கண் துடைப்பு வேலை என்று அர்த்தமா அல்லது கமிஷனுக்கு நீங்கள் கொடுக்கின்ற மதிப்பு இவ்வளவுதானா? யார், யார் குற்றவாளி என்பதைக் கண்டுபிடிக்க ஒரு கமிஷன் விசாரணை நடத்திக்கொண்டிருக்கும் போது, கமிஷனின் அறிக்கை வருவதற்கு முன்னால் சிலர்மீது குற்றஞ்சாட்டி, நடவடிக்கை எடுப்பது ஒரு சரியான நடவடிக்கை அல்ல; அது பொருத்தமானதும் அல்ல. இதில் சட்டப் பிரச்னை இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் 'மாரல் ரெஸ்பான்ஸிபிலிடி' இருக்கிறது, அரசு ஒரு கமிஷனை நியமித்த பின்னால் அதன் அறிக்கை எப்படி இருக்கிறது என்பதைப் பார்த்துதான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, ஆளும் கட்சி நண்பர்கள் எல்லாம் தேர்தல் நிதி வசூல் செய்கிறார்கள். வசூல் செய்யட்டும்; கூடாது என்று நான் சொல்லவில்லை. ஆனால் யாரையும் வற்புறுத்தக் கூடாது, சாதாரண மக்கள் கஷ்டப்படக் கூடாது என்பது என்னுடைய வேண்டுகோள். வசதி படைத்தவர்களிடம் எவ்வளவு வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளட்டும்; கவலை இல்லை. சாதாரண மக்களிடம் வற்புறுத்தி வசூல் செய்யக் கூடாது என்பதில் முதலமைச்சருக்கும் கருத்து வேறுபாடு இருக்காது என்று நினைக்கிறேன்.

உடுமலைப்பேட்டையில் ஒரு டீ கடை. ஓட்டல் கங்கா என்பது அந்த டீ கடையின் பெயர். ஓட்டல் கங்கா உரிமையாளர் கோபிநாதன். 19-7-78 அன்று அவரிடம் வசூல் செய்ய போயிருக்





கிறார்கள். 50 ரூபாய் கேட்டார்கள். அவர் முடியாது என்று சொல்லி 15 ரூபாய் கொடுத்தார். அதை வாங்காமல் போய் விட்டார்கள். 50 ரூபாய் கொடுக்க முடியாது என்று சொன்ன பிறகு, வெளியே போய் சிலரை அழைத்துவந்து, சுமார் 25 ரூபாய்க்கு மேல் சாப்பிட்டுவிட்டு, அதற்குப் பணம் கொடுக்காமல், 50 ரூபாயில் சாப்பிட்டது போக மீதியைக் கொடு என்று கேட் டார்கள். பணம் தரமாட்டேன் என்று சொல்லும்போது தகராறு வந்து, வேறு வழியில்லாமல் கேட்ட தொகையைக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அவர் கொடுத்த புகாரின் நகல் ஒன்று என்னிடம் இருக்கிறது. அதன் நகல் ஒன்றை தலைவரின் மூலமாக மாண்புமிகு முதலமைச்சரிடம் தருகிறேன். அதன்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரிலே கூட நான் பேசி இருக்கிறேன். திரு. தியாகராஜன் என்ற போலீஸ் போட்டோ கிராபரைப்பற்றிப் பேசி இருக்கிறேன். அவர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர். அவர் மீது குற்றச் சாட்டு நிரூபிக்கப்பட்டதோ இல்லையோ அது வேறு பிரச்னை. அது பற்றி விசாரணை செய்ய வேண்டும் என்று பேசினேன். ஆனால் உடனடியாக இல்லீகல் ஆர்டர் அனுப்பினார்கள் அவரை டிஸ்மிஸ் செய்வதாக. அது நியாயம் அல்ல. அதனைக் கவனமாக பரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் ஜியோடர்பாளையத்தில் மராமத்து வேலைகளில் ஊழல் நடந்திருப்பதாக சொல்லப்பட்டது. நான் அது குறித்து மாண்புமிகு திரு. எஸ். ராமச்சந்திரன் அவர்களுக்குக் கூட ஒரு கடிதம் எழுதி அனுப்பி வைத்தேன். அங்கே பல லட்சம் ரூபாய்க்கு ஊழல் நடந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த விஷயம் குறித்து நான் அவர்களுக்கு கான்பிடென்சியலாக கடிதம் அனுப்பி வைத்தேன். ஏனென்றால் இந்த விஷயம் வெளியே தெரிந்தால் அதற்கான தடயங்கள் கிடைக்காமல் போய்விடக்கூடும் என்று கருதி அவ்வாறு கான்பிடென்சியலாகக் கடிதம் அனுப்பி வைத்தேன். ஆனால் குற்றவாளியின் மீது சரியான நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக புகார் கொடுப்பவர்கள்மீது நட வடிக்கை எடுக்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே அரசாங்கம் இதனை நன்றாகப் பரிசீலிக்கவேண்டும் என்றும் அதற்கான தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் நான் கேட்டுகொள்ள விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:</u> பேரவைத் தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அனுப்பிய கடிதம் கிடைக்கப்பெற்று அதில் கண்டுள்ள விபரம் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே தயவு செய்து உறுப்பினர் அவர்கள் மீண்டும் அந்த விஷயத்தின் உள்ளே போய் பேசாமல் இருப்பது நல்லது என்று நான் நினைக்கிறேன்.

[1978 செப்டம்பர் 7

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, நான் உள்ளே போகவும் இல்லை. போகவும் மாட்டேன். என்னுடைய கடிதத்துக்கு பதில் வரவில்லை. பதில் வராமல் அவரை டிஸ்மிஸ் பண்ணுவதாக ஆர்டர் போட்டிருக்கிறீர்கள்.

அடுத்து இந்தக் கவர்னர் உரையைப் பார்க்கும்போது இதிலே கொள்கை விளக்கம் எதுவும் இல்லை. குறிப்பாக தாழ்த்தப்பட்ட சிறுபான்மையோரான பொதுமக்களுக்கு பாதுகாப்பான நிலைமை இல்லை. அவர்கள் பாதிக்கக்கூடிய நிலை உருவாகி இருக்கிறது. ஒரு வீட்டுக்கு ஒருவர் வந்து கதவைத் தட்டுகிறார் : அந்த வீட்டிலிருந்து ஒரு அம்மா வந்து திறந்த உடனே நான்கைந்து பேர் அவர் மீது பாய்ந்து கொள்ளை அடித்துச் சென்றுவிடுகிறார்கள். அத்தகைய ஆபத்தான நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இது போன்ற சம்பவங்கள் எல்லாம் நாட்டிலே நடந்துகொண்டு இருக்கின்றன. உதாரணமாக விழுப்புரம், பேரணம்பட்டு, ராணிப் பேட்டை, பழனி போன்ற இடங்களிலே இத்தகைய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஒரு பத்திரிகையிலே டெல்லியை வைத்து கொண்டு ஒரு தலையங்கம் "லாலெஸ் டெல்லி" என்ற தலைப்பிலே வந்தது. அதைப்போலவே "லாலெஸ் தமிழ்நாடு" என்று சொல்லி,

Lawless Tamil Nadu: A deep sense of shock, anger, disgust and insecurity has enveloped the Tamil Nadu following the brutal murders in Villupuram, violent disturbances in Ranipet, Peranampet, Palani and in several other places.

In houses, offices, at street corners and public places people, are wondering whether action will be taken to maintain law and order and protect the life and property.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அது எந்தப் பத்திரிகையில் வந்தது ?

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இன்டியன் எக்ஸ்ப்ரஸில் "லாலெஸ் டெல்லி" என்று வந்தது.

THE HON. THIRU K. A. KRISHNASWAMY: It is his additions. it is not found in the editorial.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: டெல்லியிலே உள்ள நிலைமை பற்றி அதில் வந்தது. நான் தமிழ் நாட்டிலேயும் அத்தகைய நிலைமை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன். ஆகவே இங்கே பாதுகாப்பற்ற சூழ்நிலை இருக்கின்றது. இந்தக் கவர்னர் உரையிலே எந்தவிதமான கொள்கை விளக்கமும் இல்லை என்று சொல்லி வாய்ப்புத் தந்த தலைவருக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.



1978 செப்டம்பர் 7]

[பிற்பகல் 12-50]

*திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் உரையின்மீது இந்திய கம்யூனிஸ்ட்கட்சி சார்பில் சில முக்கியமான விஷயங்களை நான் கூறிக் கொள்ள விழைகிறேன். குறிப்பாக ஆளுநர் உரை என்பது அரசாங்கத்தின் கொள்கையைப் பிரகடனப்படுத்துவதுதான். பட்ஜெட்டுக்கு முன்னால், ஆண்டு துவக்கத்தில் இந்தவிதமான உரையினை அறிவிப்பது என்பதுதான் சரியானதாக இருந்திருக்கும். ஆண்டு முடியப்போகிற இந்த நேரத்தில் இந்த உரை அறிவிக்கப் பட்டிருக்கிறது. ஆளுநர் அவர்களது உரையில் எந்தவிதமான தெளிவான கொள்கைக்கான அறிவிப்பும் இல்லை என்பதைப் பார்க்க முடிகிறது. பட்ஜெட்டுக்குப் பிறகு, நீண்ட இடைவெளிக்குப் பிறகு சட்டமன்றம் கூடுகிற காலத்தில் பல சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. நான்கு மாதங்கள், 120 நாட்களுக்குப் பிறகு சட்ட மன்றம் கூடியிருக்கிறது. இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கூடி ஜனநாயக மரபினைக் காக்கின்ற முறையில் கூடி சில விஷயங்களைப் பகிர்ந்து கொள்வது என்பது சரியாக இருக்கமுடியும் என்பதை எங்கள் கட்சியின் சார்பில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக ஆளுநர் அவர்களது உரையில் உணவுக் கொள்கை பற்றி தெளிவாக எதுவும் கிடையாது. கேரளாவில் குவிண்டாலுக்கு ரூ. 125 கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் அப்படிக் கொடுப்பதற்கான முறையில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை விளக்குகிற எதையும் காணோம். குறிப்பிட்ட காலத்திற்குள் நியாயவிலைக் கடைகள் திறப்பது என்பதற்கான அறிவிப்பு எதுவும் இல்லை. 16,000 நியாயவிலைக் கடைகள் திறக்கப்போகிறோம், இராமநாதபுரம் மாவட்டத்தில் திறந்திருக்கிறோம், மதுரையில் திறந்திருக்கிறோம், தஞ்சையில் திறக்கப் போகிறோம் என்ற அளவிற்குத்தான் இந்த உரையில் தரப்பட்டிருக்கிறது. தெளிவாக கொள்முதல் பற்றிய அறிக்கையை தமிழக அரசு அறிவிக்க வேண்டும். குவிண்டாலுக்கு ரூ. 125 என்பதை அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் தொழில் துறையைப் பொறுத்த மட்டில், கடந்த பத்து மாத காலமாக டி. ஐ. சைக்கிள் பாக்டரி பற்றி பேசிக் கொண்டிருக்கிறார்கள். இரண்டாயிரம் குடும்பங்கள் பட்டினி கிடக்கிறார்கள். பேச்சுகள் நடக்கின்றன. துரிதமாக முடிக்க வேண்டும். தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் நடந்தால் ஒரு வருடம் சிறை தண்டனை, ஆயிரம் ரூபாய் அபராதம் என்று அவசரச் சட்டம் பிறப்பித்திருக்கும் இந்த அரசாங்கம் முதலாளிகள் மூடினால், சாத்திவிட்டு ஓடினால் ஒரு ஆண்டு சிறை தண்டனை என்று ஒரு அவசரச் சட்டம் பிறப்பிக்க முன்வரத் தயாரா என்று கேட்கிறேன். உதாரணமாக மதுரையில் அழகுசுந்தரம் செட்டியார் தமது பஞ்சாலையை மூடியபோது ராஜாஜி அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது டிபன்ஸ் ஆப் இந்தியா ரூல்ஸ் என்று நினைக்கிறேன், அந்த ரூல்ஸை மில் முதலாளிமீது பிரயோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்தார் என்பதை நான் இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

டி.ஐ. சைக்கிள்ஸ், சக்தி பைப்ஸ், சதர்ன் ஸ்விச்கியர் மற்றும் அம்பத்தூரில் சில பாக்டரிகள் மூடப்பட்டிருக்கின்றன. முதலாளி மீது நடவடிக்கை எடுக்கப்படுமானல் முதலாளிகள் கதவடைப்பு செய்வதைத் தடுத்து நிறுத்த முடியும்.

தமிழகத்தில் லட்சக்கணக்கான மது மரம் ஏறும் தொழிலாளர்கள் இருக்கிருர்கள். அவர்களுக்கு வேலைக்கான உத்தரவாதம் கிடையாது. தென்னைமரத்தில் பதனீர் இறக்கலாம் என்று அறிவிப்பதோடு கள்ளுக்கு மதுவிலக்குச்சட்டத்தி லிருந்து விதிவிலக்கு அளிப்பதுபற்றி அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விஸ்கி, ஜின், பீர், வைன் இவற்றிற்கெல்லாம் பர்மிட் கொடுத்து சாப்பிடும்போது, ஒருவருக்கு வியாதி இருக்கிறது, கள் குடிக்கவேண்டும் என்ருல் அதைச் சாப்பிடுவதில் என்ன தவறு என்று பரிசீலிக்கலாம். இன்று மதுவிலக்கு எந்நிலையில் இருக்கிறது ? சிறு தொழில் செய்யுங்கள் குடிசைத் தொழில் செய்யுங்கள் என்று சொல்கிருர்கள் மத்திய அமைச்சர்கள். இன்று குடிசை குடிசையாக காய்ச்ச ஆரம்பித்து விட்டார்கள். சிறுதொழில் என்ருல் குடிசை களில் காய்ச்சுவதுதான் என்று ஆகிவிட்டது. அப்படி காய்ச்சுகிருர்கள் என்று சிறையில் பிடித்துப்போட்டால், தண்டனையைக் கடுமையாக்கி அவர்களை சிறையில் அடைத்துப் போட்டால் சிறையிலேயே காய்ச்சுகிருர்கள். சிறைச்சாலைகளில் காய்ச்சுவதில் அனுபவம் பெற்றவர்கள் இருக்கிருர்கள். சிறைச் சாலையிலேயே சாராயம் காய்ச்சுகிருர்கள். , கள்ள நோட்டு அடித்தார்கள் என்று பிடித்து, தண்டிக்கப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்கள். கோவையில் சிறையிலேயே நோட்டு அடித்த அனுபவம் தி. மு. க. ஆட்சியில் நடந்தது. எனவே சிறைச்சாலை இவற்றைத் திருத்தும் என்று நம்ப முடியாது. ஆகவே மதுவிலக்கு கொள்கைபற்றி ஒரு தெளிவான பரிசீலனையை நாம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக கடற்கரையில் இன்றைக்கு 4 லட்சத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள், 25 லட்சத்திற்கும் மேற்பட்ட மீனவ மக்கள் இந்தத் தொழிலை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிருர்கள். 2,000-க்கு மேற் பட்ட விசைப் படகுகள் கடலில் புகுந்து மீன் சினைகளை எல்லாம் கலைத்து குழப்பி மீன்களை பிடித்துக்கொண்டு வருகிருர்கள்: மீனவர்கள் ஒப்பந்தம் நெல்லை, தஞ்சை, முகவை மாவட்டங்களில் மீறப்படுகிறது, வலைகள் கிழிக்கப்படுகின்றன. மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் இதற்கென்று சட்டம் வரபோகிறது, வரப்போகிறது என்று சொல்லிக்கொண்டேயிருக்கிருர்கள். இந்த கட்டுமரங்கள் எல்லாம் உடைந்து போன பின்னுல் தான் இந்தச் சட்டம் வருமா ? வலைகள் எல்லாம் கிழிந்துபோன பின்னுல் தான் வருமா ? கொந்தளிப்பான நிலைமையில் இன்றைக்கு மீனவக் குடும்பங்கள் அல்லல் பட்டுக்கொண்டிருக்கிருர்கள். அப்படிப் பட்ட மீனவ மக்களை, அவர்களுக்குப் பாதுகாப்பான நிலைமை ஏற்படுவதற்கு சட்டம் கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



விவசாயத் தொழிளாலர்களை எடுத்துக்கொண்டால், 16-8-78ம் நாளான்று தஞ்சை மாவட்டம் முழுவதும் மார்க்கிஸிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியும் சேர்ந்து பெரிய தொரு வேலை நிறுத்தப் போராட்டம் செய்ததின் பின்னுல் விவசாயக் கூலி 50 காசு உயர்த்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப் பட்டது. அவர்கள் வாழ்வதற்கு விவசாயத் தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம் செய்து அறிவிக்கவேண்டும். அவர்களை பாதுகாக்க கொசுக்கடியிலிருந்து பாதுகாக்க இலவசமாக அவர்களுக்கு கொசு வலை வழங்க வேண்டும். இன்றைக்கு அவர்களுடைய நிலை என்ன? பகல் முழுவதும் வெயில், மழை, இரவில் குடிசைக்குப் பக்கத்தில் சாரைப் பாம்பு, தவளைச் சத்தம், இந்த நிலை மயில் இரவு முழுவதும் கீழே, பாட்டன் டாங்க் போல மூட்டைப்பூச்சி, மேலே ஜாபர்ஜெட் விமானம் போல கொசு இந்த நிலைமையில்தான் வாழ்ந்து கொண்டிருக்கிருன். இதையெல்லாம் அரசாங்கம் பரி சீலனை செய்யவேண்டும். அவர்கள் இந்த நாட்டில் வாழ்வதற்கு வழிவகை காணவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விவசாய தொழிலாளர்கள் மீது பொய் வழக்குகள் போடுவது அதிகமாக நடைப்பெற்றுக் கொண்டிருக்கிறது. பாபஞசம் பகுதியில், கருப்பூர் தட்டிமால் படுகை, கபிஸ்தலம் மக்கள் மீது பல பொய் வழக்குகள், அங்கே சுல்தான் என்பவர் பக்கத்திலுள்ள 400 ஏக்கர் புறம்போக்கு நிலத்தை கையில் வைத்துக் கொண்டு—விவசாயத் தொழிலாளர்கள் மீது, பல வழக்குகள் கொலை வழக்கு உட்பட 147, 148, 307 போன்ற பல செக்ஷன் களில்—வழக்கு போடப்பட்டுள்ளது—நீடாமங்கலம் போலீஸ் விட்டு வழக்குகளைப் போட்டுள்ளார்கள் என்று சொல்லு கிருர்கள். அதைப்போலவே கூத்தாநல்லூர், வேளூர் கோட்டையில் விவசாயத் தொழிலாளிமீது பல வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. பரவக்கோட்டையில் போலீஸில் ஒரு வழக்கு, ஏழை அம்பலக்காரர்-ராமகிருஷ்ணன் என்பவர் மனைவியின் நகையை விற்றுவிட்டு இரவு 9 மணிக்கு ஊருக்கு வரும் போது ரூபாய் பறிக்கப்பட்டு விட்டது. சற்று தூரத்திலுள்ள பரவக்கோட்டை போலீஸ் ஸ்டேஷனில் கொண்டு போய் புகார் கொடுக்கிருர், எந்த நடவடிக்கையும் இல்லை. இதையடுத்து அந்த ஸ்டேஷனில் உள்ள சப்-இன்ஸ்பெக்டரின் அட்டகாசம் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டேயிருக்கிறது. இப்படி அனுதையான மீனவர்கள் மீது, மாணவர்கள் மீது விவசாயத் தொழிளார்கள் மீது, விவசாயிகள் மீது போடப்படுகின்ற வழக்குகளை எல்லாம் வாபஸ் வாங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு கூட்டுறவு இணையத்தைப் பொறுத்தவரையில், பாமினி உரத்தொழிற்சாலையில் 16-8-78, 17-8-78 வேலை நிறுத்தம். பாமினி உரமணி ஆலை நிர்வாகங்களின் நடவடிக்கை மீது எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. அதேபோல் 14-8-78ல் அதே தொழிற்சாலையில்—தொழிலாளர்கள் சார்பில்—மூட்டைகளை எடுத்து மாற்றுவதற்கு அரிசன இளைஞர் ஒருவர் டெண்டர் போடு

கின்றார். இதைப்பார்த்து விட்டுஅங்குள்ள மானேஜர் கூறுகிறார்.. மூட்டை தூக்குகின்ற (*) டென்டர் போட்டிருக்கிறான். இப்படி மிக மட்டமாக அவர் பேசப்படுகிறார்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இப்போது தாங்கள் சொன்ன அந்த வார்த்தை நடவடிக்கைக் குறிப்பில் இருப்பது சரியல்ல என்று நினைக்கிறேன்....

<u>திரு. மு. அம்பிகாபதி :</u> அங்குள்ள மானேஜர் கூறியதைத் தான் சொன்னேன்....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> யார் கூறியிருந்தாலும் இங்கு அந்த வார்த்தையைச் சொல்லக்கூடாது. உறுப்பினர் அவர்கள் சொன்ன (*) என்ற வார்த்தையை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி உத்தரவிடுகின்றேன்....

<u>திரு. மு. அம்பிகாபதி :</u> இப்படி மட்டமான வார்த்தைகளால் ஜாதிப் பெயரைப் பயன்படுத்தி பொறுப்பாளர் பேசியிருக்கிறார். இதுபற்றிய முழு விவரங்களையும் வைத்து இருக்கிறேன். கூட்டுறவு அமைச்சர் அவர்கள் விரும்பினால் இதைப் படித்துக் காட்டத் தயாராக இருக்கிறேன். இப்படி நிர்வாக அதிகாரியினுடைய போக்கினால் அங்கு வேலைநிறுத்தமும் குழப்பமும் உருவாகிக்கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல்தான் தமிழ்நாடு கூட்டுறவு கடன் வழங்கும் சங்கத்தில் 5, 6, 7 ஆண்டுகளாக வேலை பார்த்து வந்த இளைஞர்கள் 2,000 பேர் இன்னும் தஞ்சை மாவட்டம் முழுவதும் நிரந்தரமாக்கப்படவில்லை. இவர்களை நிரந்தரமாக்குவதற்கும், ஊதிய நிர்ணயம் செய்யவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தி கூடாது, நாட்டைவிட்டுப்போகப் வேண்டும், இந்திநுழையக் கூடாது என்றும், நமது தமிழ் நாடு ஆண்ட தமிழ், பாராண்ட தமிழ் என்றும், கல் கொண்டான் என்றும், கடல் கொண்டான் என்றும் நாம் தமிழின், தமிழனின் பெருமையைச் சொல்லிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் இன்றைக்கு நாட்டில் 7,000 தமிழாசிரியர்கள் வேலையில்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

[முற்பகல் 1-00]

1330 குறளையும் எடுத்துப் பகர்கின்றவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்போம் என்றெல்லாம் கூறினார்கள், இதற்கான விவரங்களையெல்லாம் சேகரித்து, ஆராய்ச்சியெல்லாம் செய்தார்கள். ஆனால், இதுவரையில் அந்தத் தமிழ் ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பிற்கான உத்தரவாதம் இல்லை. எனவே, அவர்களைப் பற்றிச் சிந்தித்து முடிவெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





1-8-78 அன்று படித்த இளைஞர்கள் ஆர்பாட்டம் செய்தார்கள்; மறியல் நடத்தினார்கள். அப்படி மறியல் செய்தபோது, 10 இலட்சம் படித்த இளைஞர்களுக்கு, பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புகள் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். அருமை நண்பர் திரு. கருப்பசாமி பாண்டியன் அவர்கள் சொன்னதுபோல், அவர்களுக்கான வயது வரம்பு தளர்த்த வேண்டும். 30 வயது வரையில் வேலைக்கு அமர்த்தலாம் என்று வேலை தேடித் தரும் நிலையங்களுக்கு அறிவித்து, அனைவருக்கும் வேலை கிடைக்கக் கூடிய வகையிலே உத்தரவாதம் செய்யவேண்டும்.

நகர சுத்தித் தொழிலாளர்கள் 18-9-78 ஆம் தேதியன்று ஆர்ப்பாட்டம் நடத்த இருக்கிறார்கள். அவர்கள் கோரிக்கை இன்னும் பேசித் தீர்க்கப்படாமல் இருக்கின்றது. நகர சுத்தி செய்பவர்கள், கொசுக்களை அழித்து, நகரத்திலே உள்ள மக்களை நிம்மதியாக வாழ வைக்கக் கூடியவர்கள். அப்படிப்பட்ட அந்தப் பட்டாளத்தின் கோரிக்கைகளை கவனத்தோடு, துரிதமாகப் பரிசீலிக்க முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நிலச் சீர்திருத்தத்தைப் பற்றிப் பேசுகிறோம். கோயில்களிலே உள்ள நிலங்களை எடுப்பதிலே தெளிவு கிடையாது. கோயில்களில், மடங்களில் உள்ள நிலங்களை 'உழுபவனுக்கே உரிமை' என்ற அறிவிப்பை செய்ய வேண்டும். அரிசன மக்கள் பாதுகாப்பு, விவசாயிகளுடைய பிரச்சனை, படித்த இளைஞர்களுக்கு வேலை கொடுக்கும் பிரச்சனை, பெண்கள் பாதுகாப்பு, விவசாய விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கவேண்டும் என்ற பிரச்சனைகள் குறித்து இந்தியா முழுவதும் லட்சக்கணக்கான இந்திய கம்யூனிஸ்டு கட்சித் தொண்டர்கள், மறியலில் ஈடுபட்டிருக்கிறார்கள். தமிழகத்திலேயும் இன்றைய தினம் நடைபெறுகிறது. கோயில்களில், மடங்களில் உள்ள நிலங்களையெல்லாம் உடனடியாக எடுக்கவேண்டும். 1975-ல் உபரி நிலங்களை எடுக்கப் போவதாக அறிவிப்பு செய்யப்பட்டது ஆனாலும், நிலங்கள் இன்னமும் எடுக்கப்படாத நிலையிலே இருக்கின்றது. இதையெல்லாம், அரசாங்கம் கருத்தில் கொண்டு, தீவிர நிலச் சீர்திருத்தத்திலே கவனம் செலுத்த வேண்டும். அதேபோல், மக்களுக்குத் தேவையான பல்வேறு பிரச்சனைகளில் நெல்லுக்குக், கட்டுப்படியான விலை, மீனவர்களுடைய பிரச்சனை, என். ஜி. ஓக்களுடைய பிரச்சனை போன்றவைகளையெல்லாம் கவனிக்க வேண்டும். போலீஸ் அதிகாரிகள், ஆசிரியர்கள், இன்னும் அரசு ஊழியர்கள் அனைவரும் அபாயின்ட்மெண்டு ஆர்டர் கிடைக்கிறபோது, 30 வருஷங்களாக வாங்குகின்ற சம்பளத்தோடு, 200, 300 ரூபாய் என்ற அளவோடு வாங்கிக்கொண்டு, சாவோம் என்று வேலை செய்து வருகிறார்கள். வியாபாரம் செய்தாலாவது எவ்வளவோ சம்பாதிக்க முடியும். என்.ஜி.ஓக்கள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் என்று சொன்னால், அவர்களுக்கு அந்த அபாயின்ட்மெண்டு ஆர்டரோடு சரி. இன்னும் அவர்களுக்கு சர்வீஸ் கான்டெக்ட் ரூல் ஒன்று இருக்கிறது. இது வெள்ளைக்

காரன் காலத்தில் போட்ட சட்டமாகும். அதன்படி அவர்களுக்கு பல கட்டுப்பாடு உள்ளது. இப்படி அரசு ஊழியர்களுக்கு இருக் கின்ற இந்த சர்வீஸ் கான்டெக்ட் ரூல் ரத்து செய்யப்பட வேண்டும். ஜனநாயக நாட்டிலே இருக்கக்கூடிய முறையில், இதைத் திருத்தியமைக்க வேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக் கிறார்கள். அவர்கள் தொகுதியில் உள்ள போலீஸ் ஸ்டேஷனிலே பொய் வழக்கு போடப்படுகின்றது. ஆளுங் கட்சி உறுப்பினர் மாண்புமிகு டாக்டர் சமரசம் அவர்கள்கூட தன்னுடைய தொகுதியிலே போடப்பட்ட வழக்கைப் பற்றி வருத்தத்தோடு சொன்னார்கள். ஒரு சட்ட மன்ற உறுப்பினர் விரும்பினால், தொகுதியிலே ஒரு பிரச்னைப் பற்றி பேச, எத்தகைய அதிகாரியும் சட்ட மன்ற உறுப்பினரை சந்திக்க வேண்டுமென்றும், எத்தகைய அதிகாரிகளும் சட்டமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துப் பேச வேண்டுமென்று ஒரு நெறிமுறையை வகுக்க வேண்டும். ஏதோ சட்டமன்றத்திற்கு வருகிறோம், பட்ஜெட் டிலே கை தூக்குகிறோம், பின்னர் ஊர் போகிறோம் என்றிருக்கிற நிலை மாறவேண்டும், இப்படிப்பட்ட போலீஸ் வழக்கைப் பற்றி உறுப்பினர்கள் எழுதினால் நடவடிக்கை எடுக்கவேண்டும். அமைச்சர்களுக்கு எழுதினால் துரிதமாக நடவடிக்கை எடுத்து, வேகமாய்ச் செயல்படுகிற நிலை இல்லை.

இன்றைக்கு எழை எளிய மக்கள்தான் சுலபமாக வழக்குகள் போடப்படவும், பிடிக்கவும், அடிக்கவும் படுகின்றார்கள். ஏதோ சுதந்திரம் வந்து 32 ஆண்டுகள் ஆன பின்னரும், ஏழை எளிய மக்கள் தலையிலே எண்ணெ இல்லை. அழுக்குச் சட்டையோடு அவன் பஸ் ஸ்டான்டிலே நிற்கக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. அப்படி நிற்கக்கூடிய ஒருவனை போலீஸ்காரன் கூப்பிட்டுக் கொண்டு போகிறார். லட்டுமாதிரி மாட்டிக்கொண்டாய் என்று அவன்மீது சந்தேகக் கேஸ் போடப்படுகின்றது. அவன் தலையிலே எண்ணெ இல்லை; கிழிந்த சட்டையைப் போட்டுக் கொண்டிருக்கிறான். அவன் மீது என்ன சந்தேகம்? அதே சமயத்தில், இம்பாலா காரிலும் சவரலே காரிலும் போகக்கூடிய 7, 8, அடுக்கு மாளிகை கட்டிக் கொண்டு வாழ்கின்றவர்கள்மீது இவர்களுக்குச் சந்தேகம் இல்லை, இவன் தலையிலோ எண்ணெ இல்லை, கிழிந்த சட்டை போட்டுக் கொண்டிருக்கிறான். இப்படிப்பட்டவர்கள் மீது இப்படி சந்தேகக் கேஸ், வழக்குப் போடுவதை உடனடியாக இந்த அரசாங்கம் கைவிட வேண்டும், அதைக் தடுக்க முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தீவிரமான நிலச் சீர்திருத்தம், படித்த இளைஞர்களுக்கு வேலை, மீனவர்களுக்குப் பாதுகாப்பான சட்டம், கூட்டுறவு நிலையத்தில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பான நிலை இவற்றை ஏற்படுத் துவதற்கு எந்தவித தெளிவான முடிவும் இந்த உரையில் இல்லை.



சமுதாய மாற்றத்திற்கான வழி காட்டுதல் இதிலே இல்லை. இருந் ததை அப்படியே வைத்துப் பூசி மெழுகியிருக்கிறது என்பதைக் குறிப்பிட்டு தீவிரமான மாற்றத்திற்கான முறையில் நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவேண்டுமென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம். நன்றி.

* திரு. ர. ஜெபமணி : சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் உரையிலே ஜனதா கட்சியின் சார்பாக என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்ல வாய்ப்பளித்ததற்காக நன்றி கூறி என்னுடைய சில அபிப்பிராயங்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

சம்பிரதாயமாக ஆளும் கட்சியில் இருப்பவர்கள் ஆதரிப்பதும், மாற்றுக் கட்சியில் இருப்பவர்கள் எதிர்ப்பதும் என்ற நிலை இருக் கிறது என்று சொன்னார்கள். மாற்றுக் கட்சியில் இருப்பவர்கள் எதிர்த்துக்கொண்டே இருக்கவேண்டும், ஆளுங்கட்சியில் இருப்பவர் கள் ஆதரித்துக் கொண்டே இருக்கவேண்டு என்ற பொருள் அல்ல. நாட்டினுடைய பிரச்சினை நாம் எவ்வளவு நன்றாகப் பேசுகிறோம் என்பதல்ல. நாட்டு மக்களுடைய பிரச்சனைகள் தீர்க்கப்படு கின்றனவா என்றுதான் பார்க்கவேண்டும், அரசாங்கத்திற்கு வருவதற்கு முன்னால் நாம் எதையெல்லாமோ செய்துவிட முடியும் என்று கனவு காண்கிறோம். அரசாங்கத்திற்கு வந்து அந்த நாற்காலியில் அமர்ந்த பிறகுதான் பயங்கரமான சூழ்நிலைகள் நம்மைத் தாக்க ஆரம்பிக்கின்றன. இதை அரசாங்கத்தில் இருப் பவர்களும் நன்றாக அறிவார்கள். ஒரு பிரச்சனையை எடுக்கும் போது அதிலே பல பிரச்சினைகள் வரும். நாம் செய்யும் காரியங் களால் நாட்டில் என்னென்ன விளைவுகள் ஏற்படும் என்பதை நன்கு ஆலோசித்து பிறகு அந்தப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண வேண்டும்.

இந்த நாட்டில் அமைதியின்மை நம் எல்லோரையும் பயமுறுத்திக் கொண்டிருக்கிறது. அமைதியின்மைக்கு ஏதோ ஒரு காரணம் இருக்க வேண்டுமென்பதை எல்லோரும் உணருவோம். ஆனால் அந்தக் காரணத்தைக் கண்டு பிடிப்பதற்கு முயற்சிக் கிறோமா என்றால் அந்த இடத்திற்கு நாம் போகும்போது நம் கட்சிக்கு இதிலே லாபம் என்ன என்று பார்க்கிறோம், நாட்டு மக்களுக்கு என்ன நன்மை ஏற்படும் என்று சிந்திக்கப் பயப்படு கிறோம். அந்த பயம் எப்போதெல்லாம் வருகிறதோ அப்போது நாட்டுக்குப் பல சங்கடங்கள் வரும் என்பதை உணரவேண்டும்.

இந்த நாட்டில் யார்தான் ஆட்சிக்கு வந்தாலும் ஏழைகளைக் காப்பதாகச் சொல்வார்களே தவிர, பணக்காரர்களைக் காக்கப் போகிறோம் என்று யாரும் சொல்லியதாக இதுவரை படித்ததும் இல்லை, கேட்டதும் இல்லை. அந்த ஏழைகளை நாம் ஏமாற்றப் போகிறோமா அல்லது ஏழைகளுக்கு உண்மையாகவே காரியங்கள் செய்யப் போகிறோமா என்பதைப் பற்றி நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

[திரு. ர. ஜெபமணி] [1978 செப்டம்பர் 7

விவசாயிகளைப் பற்றி நாம் எல்லோரும் பேசுகிறோம். காரணம்,
அவர்களுக்கு மத்தியில் நாம் மாட்டிக் கொண்டிருப்பதால்
அவர்களைப் பற்றிப் பேசாவிட்டால் ஊருக்குள் போக முடியாது.
எங்களைப் பற்றிப் பேசாமல் நீ என்ன வேலை செய்கிறாய் என்று
கேட்பார்கள். ஆகையால் எப்படியாவது அவர்களுக்கு அதைச்
செய்யவேண்டும். இதைச் செய்யவேண்டும், என்று நம்முடைய
அபிலாஷைகளைச் சொல்கிறோம். நாம் ஒன்றைச் செய்ய ஆரம்பிக்கும்
போது பல கேடுகள் பின்னாலே விளைந்து விடுகின்றன என்பதை
மனதில் கொள்வோமானால் பிரத்தியட்சமாக உட்கார்ந்து, எல்லாக்
கட்சித் தலைவர்களையும் கூப்பிட்டு, ஒவ்வொரு பிரச்சினையைப்
பற்றியும் தீர்மானிக்க ஐந்தாறு நாட்கள் அவகாசம் எடுத்துக்
கொண்டு தீர்க்கமாக ஆலோசித்தா: பொதுவான ஒரு முடிவுக்கு
வரமுடியும்.

இப்போது கிராமப் புறங்களில் துவேஷங்கள் வளர்ந்து வரு
கின்றன. சாதி என்ற மமதை போய்விட்டாலும் கூட மீண்டும் அது
உயிர்பெற்று விடுமோ என்று பயமாக இருக்கிறது. நான் பிறப்
பதற்கு முன்னால் பாரதியார் அவர்கள் பாடினார்கள் 'ஜாதிகள்
இல்லையடி பாப்பா' என்று குழந்தைகளுக்கே சொன்னார்கள்.
அவர்கள் ஜாதியைச் சாடினார்கள், ஜாதியால் அகங்காரம்
கொண்டவர்களையும் சாடினார்கள். அந்நிலையிலே நாம் தேசியத்தை
வளர்த்து வந்தோம். இப்போது ஏன் அந்தப் பூசல் ஆரம்பித்
திருக்கிறது என்றால், அரசாங்கத்தின் செய்முறையில் ஏதோ
ஒரு கோளாறு இருக்கிறது. ஏழைகளுக்குக் கடன் வசதி கிடைக்க
வில்லை. கடன் பெற அவர்கள் தவறான முறையைப் பயன்படுத்து
கிறார்கள். கடனை வசூலிக்கப் போகும்போது தகராறு வருகிறது.
நாம் நிலத்தைப் பற்றி அதிகமாகப் பேசுகிறோம், ஆனால் நிலைமை
எவ்வாறு இருக்கிறது என்றால் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் கூட
வைத்துக் கொள்ள முடியாமல் சிறு விவசாயிகள் வேதனைப்படு
கிறார்கள். அந்த நிலத்தை விற்கவோ அந்த நிலத்தின் மேல்
கடன் வாங்கவோ கூட முடியாமல் கஷ்டப்படும்போது அதற்கு
அங்கு எதிர்ப்பு கிளம்புகிறது.

[பிற்பகல் 1-10]

அந்த எதிர்ப்பு நமக்கு மேலெழுந்தவாரியாகத்தான் தெரிகிறதே
தவிர உள்ளூரப்பார்த்தால் துவேஷமாகத்தான் மாறிக்கொண்டிருக்
கிறது. இப்படிப்பட்ட வினைகள் அங்கே விதைக்கப்பட்டு
வளர்க்கப்படுகின்றன. கிராம மக்கள் எல்லாம் கூடி வாழ்வதற்கும்,
ஒவ்வொருவரின் குறையையும் புரிந்து கொள்வதற்கும் அரசாங்
கம் உதவிகளைச் செய்யவேண்டும். என் கட்சிக்கு என்ன லாபம்
என்று நினைப்பதைவிட நாட்டு மக்களுக்கு எவ்வளவு லாபம்
என்பதைக் கூர்ந்து கவனித்து அரசு நல்ல முடிவுக்கு வர வேண்டும்.

கிராமங்களுக்கு வளர்ச்சிக் குழு என்று போடுகிறோம். ஆளுங்
கட்சியினரை நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். உங்கள்
கட்சியினரை மட்டும் நீங்கள் நியமித்து விடாதீர்கள், அப்படி
நியமித்து விட்டால், இப்போது அது உங்களுக்கு நல்லதாகத்
தான் தெரியும், ஆனால் படிப்படியாக அதுவே உங்களுக்கு ஆபத்



1978 செப்டம்பர் 7] [திரு. ர. ஜெபமணி]

தாக முடியும். அங்கே நடக்கும் நல்லவைகளுக்கு எல்லாம் நீங்கள்
ஆளாகலாம், அதிலே ஒன்றும் ஆபத்து இல்லை, ஆனால் அங்கங்கே
நடக்கும் தவறுகளுக்கும் நீங்கள்தான் ஆளாக வேண்டிய நிலைமை
வரும், ஆகவே, கட்சிக்கு அப்பாற்பட்டவர்களை நியமியுங்கள்.
ஆட்சி உங்கள் கையில் இருக்கிறது, நேர்மையான ஆட்சி நடக்
கிறது என்று நினைக்க வேண்டுமானால் நாட்டுமக்களின் குறைகளைக்
கண்டறிந்து தீர்க்க வேண்டும், அடிமட்டத்திலே அவைகளைப்பற்றி
ஆராயவேண்டும், அப்படிச் செய்தால்தான் பிரச்சினைகளைச்
சுமுகமாகத் தீர்க்க முடியும். கட்சியினரையே நியமிக்க வேண்டும்
என்ற நிலைமை மிகவும் வருந்தத்தக்கது என்ற செய்தியை நான்
வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய கிராம மக்கள் வேகமாக வெளியே வர
வேண்டுமென்றால், நம்முடைய போக்குவரத்து நன்றாக இருக்க
வேண்டும். போக்குவரத்து என்று சொன்னாலே எல்லோரும்
வேகமாகப் போகவேண்டுமென்றுதான் நினைக்கிறார்கள். நான்
முற்காலத்திலே நடந்த ஒன்றைப்பற்றி ஞாபகப்படுத்த விரும்பு
கிறேன். பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் அமைச்சராக
இருந்த வெங்கட்ராமனைக் கூப்பிட்டு நாடு பூராவும் தார் ரோடு
போட்டாகிவிட்டது, நீங்கள் அதிக தூரத்திற்கு பஸ் விடலாம்,
அந்த பஸ்கள் எப்படி இருக்கவேண்டுமென்றால் மக்கள் அந்த
பஸ்ஸிலே பிரயாணம் செய்யும்போது தூங்கிக்கொண்டு போவதற்கு
வசதியாக இருக்கவேண்டும் என்று சொன்னார்கள். அப்போது
விடப்பட்ட பஸ் இப்போது ஏன் வரவில்லை என்று நான் நினைத்துப்
பார்த்தபோது வரியைக் குறைத்து வசதிகளைப் பெருக்குவோம்
என்று சொன்னவர்கள் இப்போது வசதியைப் பெருக்கவில்லையே;
இப்போது பார்த்தால் ஒரு பஸ்ஸிலே 59 பேர்களை ஏற்றிக்கொண்டு
போகிறார்கள். விவரம்தெரியாமல் நான் ஏறிவிட்டேன், காலை
கீழே வைத்துக்கொள்ளமுடியவில்லை, கையை வைக்க முடியவில்லை.
கையையும் காலையும் மடக்கிவைத்துக்கொண்டு போனேன்,
கடைசியிலே இறங்கும்போது காலைப் பிடித்துவிட ஆள் தேவை
போல் இருந்தது. நாங்கள் எங்கள் காலத்தில் விட்ட பஸ்ஸைப்
போல் இப்போது ஏன் நீங்கள் விடவில்லை? நீங்கள் விட முடியாது,
காரணம் நாங்கள் மக்களுக்காக பஸ்கள் விட்டோம், நீங்கள்
வியாபாரத்திற்காக பஸ்ஸை விட்டுக்கொண்டிருக்கிறீர்கள்.....

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன்</u>: பேரவைத் தலைவர்
அவர்களே, பெரியவர் அவர்களுக்கு மிக வசதியாக ஏர்கண்டிஷன்
பஸ்கள் அவர் பகுதியிலே விடப்பட இருக்கின்றன என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. ர. ஜெபமணி</u>: ஏர்கண்டிஷன் பஸ்ஸிலே போகக்கூடிய
அளவிற்கு என் உடல்நிலை கெட்டுவிடவில்லை. ஒரு ஏர்கண்டிஷன்
பஸ் விட்டால் அதிலே எத்தனை பேர் போகலாம். மக்களின் நலனைக்
கவனிக்க வேண்டும். பொன்னையன் என்ற பெயர் மிக அருமையான
பெயர், அவர் செய்கிற செயல்கள் எல்லாம் பொன்னாக இருக்க

[திரு. ர. ஜெபமணி] [1978 செப்டம்பர் 7

வேண்டும், பொன்னுன நன்மைகள் மக்களுக்குக் கிடைக்கவேண்டும். இப்போது ஆம்னிபஸ்கள் என்று ஓட்டுகிறுர்கள், ரேடியோக்களை மாட்டிவிடுகிறுர்கள், அவர்கள் ரூட் பஸ்களைப்போல் போகிறுர்கள். மக்களை ஆடுமாடுகளைப்போல் ஏற்றி அடைத்துக்கொண்டு போகிறுர்கள், கையை நீட்டின இடத்திலே ஏற்றிக்கொள்கிறுர்கள், இறக்கிவிடுகிறுர்கள். நான் நினைத்துப் பார்த்தேன், அரசாங்கம் என்று இருக்கிறதா? நான் அரசாங்கத்திற்கு பணிவோடு ஒரு யோசனை தெரிவித்துக்கொள்கிறேன். நல்ல பெயர்களை போக்கு வரத்துகளுக்கு வைத்திருக்கிறுர்கள். கடந்த காலத்து மன்னர்கள் பெயர்களை வைத்திருக்கிறுர்கள், இக்கால மன்னர்களாக இருந் தவர்கள் பெயர்களை வைத்திருக்கிறுர்கள், இன்னும் என்ன என்ன பெயர்களை வைக்கப்போகிறுர்களோ தெரியவில்லை. பல்லவன் ஒருவன் தான் தமிழகம் முழுவதும் போகிறுன், மற்றவர்கள் எல்லாம் ஆங்காங்கே நின்று விடுகிறுர்கள். ஆம்னிபஸ்கள் பெர் மிட்டுகளை ரத்து செய்து நெல்லை, கன்னியாகுமரி மட்டும் அல்லாமல் எல்லா இடங்களுக்கும் கட்டபொம்மன் போகட்டும், கட்டபொம்மன் இங்கே வரட்டும்.

இரவிலே பெங்களூருக்குப் போவதாக இருந்தாலும், கோயம்புத்தூருக்குப் போவதாக இருந்தாலும் அந்த பஸ்களிலே போகட்டும், சோழனும் வரட்டும், சேரனும் வரட்டும், அண்ணுவும் வரட்டும், பெரியாரும் அதுவரைக்கும் போகட்டும். அவர்கள் எல்லாம் மக்கள் மனத்தில் பசுமையாக இருக்கட்டும். சிவசாமி அவர்கள் வந்த பஸ் சாய்ந்து விட்டதாம், நான் சென்ற பஸ் சாய்ந்து என்னுடைய கால் போனது, கோர்ட்டிலே வழக்கு போட்டிருந்தேன். ஜெயிலிலே இருந்தபொழுது அது வி சாரணைக்கு வந்தது. ஆனல் என்னை அதற்கு விட மறுத்து விட்டார்கள். அதனல் கேசை டிஸ்மிஸ் செய்து விட்டார்கள். இல்லையென்றல் அதில் எனக்கு நஷ்டயீடு கிடைத்திருக்கும். அதையும் போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டும். பல்லவன் மிகவும் வல்லவன்; என்னைத் தள்ளிவிட்டு என் காலை முறித்தான். நான் 3,4 வருடங்களாக நடக்க முடியாமல் உட்கார்ந்து கொண்டேதான் பேசினேன். என்னுடைய சொந்தச் செலவுப் பணத்தையாவது தந்திருக்கலாம். என்மீது குற்றமில்லை, மிசாவின்பொழுது நான் உள்ளேயிருந்தேன், சம்மன் வந்தது, அனுப்புங்கள் என்று கேட்டேன், அதற்கு நீங்கள் பயங்கரவாதிகள். போகும்போது ஏதாவது தவறு செய்து விடுவீர்கள் என்று என்னை உள்ளேயே வைத்து விட்டார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நான் வராமலேயே அந்தக் கேசை முடித்த உங்களுக்கும் நன்றி. அதைப் பெற்றுத் தருவதற்கு நீங்கள் முயற்சிப்பீர்கள் என்று நினைக்கிறேன்.



1978 செப்டம்பர் 7] [திரு. ர. ஜெபமணி]

களுக்குத் தெரிய வேண்டும். அரசாங்கத்திற்கு உட்பட்டுத்தான் இந்த நாட்டில் நடக்க வேண்டும். அதுதான் மக்கள் அரசு. சர்வாதிகார அரசாக இருந்தால் அவர்களுக்குத் தெரியாமல் நடந்திருக்கலாம். ஆனல் சர்வாதிகார அரசாக இல்லாமல் மக்கள் அரசு நடக்கும்பொழுது இப்படிப்பட்ட பஸ் போக்குவரத்தில் மிகவும் ஜாக்கிரத்தையாகக் கண்காணிக்க வேண்டும்.

அதற்கடுத்தபடியாக, பஸ் போக்குவரத்து வசதிகளை எல்லாக் கிராமங்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று உங்களுக்கு அக்கறை யிருக்கிறது. டவுன் பஸ் என்று சொல்லும்பொழுது பட்டணத்தில் இருப்பவர்கள் சௌகரியமாக 20 பைசாவைக் கொடுத்து விட்டு ஏறிக்கொண்டு சென்று விடுகிறுர்கள். ஆனல் கிராமத்திலுள்ள வர்கள் 50 பைசா கொடுத்துத்தான் ஆகவேண்டும். அது என்னமோ கிராமத்தை வாழ வைக்கிறேம் என்று சொல்கிறுர்களே தவிர, அவர்கள் 50 பைசா கொடுத்துத்தான் செல்ல வேண்டி யிருக்கிறது. டவுன் பஸ் என்பதை டவுனிலேதான் விட வேண்டும் என்பதை மாற்றி ஒவ்வொரு யூனியனுக்கும் விடலாம். அதில் தவறு இல்லை. டவுனுக்குத்தான் விட்டாக வேண்டுமென்பது அல்ல. யூனியனுக்குள்ளேயே சிறு பஸ்களை விட்டால் அந்தக் கிராமத் திலிருந்து படிக்கப்போகும் பிள்ளைகள் இருபது காசு கொடுத்துச் செல்வார்கள். அந்த நல்லெண்ணம் உங்களுக்கு இருக்கிறது. அதை நிறைவேற்றுங்கள். அப்படிச் செய்தால் போக்குவரத்திற்குத் தடங்கல் இல்லாமல் நாட்டு மக்கள் வசதியாக பயணம் செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாகத் தொழிலை எடுத்துக்கொண்டால், சிறு தொழில்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் நமக்கு வந்திருக்கிறது. அதற்காக நான் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனல் இதை எப்படிச் செய்யப்போகிறேம் என்பதைப் பார்க்க வேண்டும். அங்கேயுள்ள அதிகார வர்க்கம் அதற்கு எப்படி உதவப் போகிறது? மக்களை அலைய வைப்பார்களா? துன்பப்படுத்துவார்களா? ஒழுங்காகக் கொடுப்பார்களா? இதை யெல்லாம் பற்றிக் கண்காணிப்பதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு போர்டு அமைக்க வேண்டும். அந்த போர்டில் எல்லாக் கட்சியினரும் சேர்ந்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் எவ்வளவு தொழில்களை நாம் ஆரம்பிக்கப் போகிறேம், எப்படி நடத்தப் போகிறேம் என்பதைப்பற்றியும், விறுவிறுப்பாக அது செயல் படுவதற்கு உதவியாகவும் சொல்வதற்கு உதவியாக இரு...றேன். அதையும் நாம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்

அடுத்தபடியாகக் கல்வி. உபாத்தியாயர்கள் ...யில்லாமல் இருக்கிறுர்கள். கல்வியமைச்சரவர்களை நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். 1974-ஆம் ஆண்டுக்கு முன்னல் பாஸ் செய்த ஆசிரியர்களுக்கு வேலை, அதற்குப்பின்னலே பாஸ் செய்தவர்களுக்கு என்ன நிலை? அவர்கள் பாஸ் செய்து விட்டு வீட்டிலே என்ன செய்ய

வேண்டும்? அதைக் கொஞ்சம் தெளிவுபடுத்த வேண்டும்.
இதைப்பற்றி யோசிக்க வேண்டும். பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளைக்
குறைத்துவிட்டாவது ஆசிரியர்களை அதிகப்படுத்துங்கள். அப்
பொழுது பள்ளிகளின் தரமும் உயரும். அதற்காக மத்திய
அரசாங்கத்தோடு சண்டை போடுங்கள். அதை விட்டு விட்டு
பெயர் மாற்றம் போன்றவைகளில் மத்திய அரசோடு சண்டை
போட வேண்டிய தேவையில்லை. இன்றைக்கு நண்பர்கள் மூட்டி
விடலாம் என்று பார்க்கிறார்கள், மத்தியத்திற்கும் மாநிலத்திற்கும்
சுமுகம் ஏற்பட்டால் போச்சு, உடனே ஆபத்து ஆபத்து என்று
சொல்ல ஆரம்பித்து விடுவார்கள். மத்திய அரசோடு சுமுகமான
உறவு இருந்தால்தான் காரியங்கள் நடக்கும், இல்லாவிட்டால்
காரியம் நடக்காது, வீரியம்தான் நடக்கும். நமக்குக் காரியம்
வேண்டுமா, வீரியம் வேண்டுமா? பெயர் மாற்றுவதுதான் பெரிதா?
ஐயோ, பெயர் வைக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்களே அவர்
களுடைய வாழ்க்கைக்கு என்ன செய்யப்போகிறோம் என்று பார்க்க
வேண்டாமா? உடனே, இந்தித் திணிப்பை எதிர்க்க வேண்டும்,
நாங்கள் இந்தியை எதிர்க்கவில்லை, இந்தித் திணிப்பைத்தான்
எதிர்க்கிறோம் என்று சொல்கிறார்கள். இந்தித் திணிப்பு முறையில்
எது வந்தாலும் எதிர்க்கிறேன். ஏனென்றால் என்மீது யாரும்
எதையும் திணிப்பதைவிரும்பாமல்தானே ஜெயிலுக்குப் போனேன்.
ஜனநாயகத்தில் யாரும் எதையும் திணிக்க மாட்டார்கள். திணிக்க
மாட்டோம் என்று அவர் சொன்னால் சொன்னதுதான். அப்படித்
திணித்திருந்தால் காட்டுங்கள், அதற்காக நீங்கள் போராட
வேண்டாம். அதை எங்களிடத்தில் விட்டு விடுங்கள். அதை
நாங்கள் பார்த்துக்கொள்கிறோம். ஆனால் இந்தியையே படிக்கக்
கூடாது என்று சொல்வது வருங்காலச் சந்ததியினருக்குச் செய்யக்
கூடிய மகாப் பெரிய பாவம் என்பதை தான் தெரிவித்துக்கொள்ள
விரும்புகிறேன். கேரளாவிலே எல்லோரும் இந்தியைக் கற்றுக்
கொள்கிறார்கள். அந்தக் காலத்தில் இலங்கைக்குப் போனார்கள்,
மலேசியாவிற்குப் போனார்கள். பர்மாவிற்குப் போனார்கள்,
இந்தோநேசியாவிற்குப் போனார்கள். பிஜித் தீவுகளுக்குப் போனார்
கள், பிழைக்க வழியின்றிப் போனார்கள்.

[பிற்பகல் 1-20]

அங்கே மொழியைக் கற்றுக்கொண்டவர்கள் சம்பாதித்தார்
கள். மொழியைக் கற்றுக்கொள்ளாதவர்கள் இங்கே மாடு
மேய்த்தார்கள் என்பதை நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ள
வேண்[டு]ம். எனது தொகுதியைப் பார்த்தோமானால், அமைச்சர்
திரு. எட்மண்டு அவர்களுக்குத் தெரியும். எங்கள் பகுதியிலே
இருந்து, இலங்கை சென்று அகதிகளாக வந்தவர்கள் எல்லாம்,
இன்றைக்கு வட இந்தியா போய், இலட்சம், இலட்சமாகச் சம்பா
திப்பது அ[வ]ருக்குத் தெரியும். இந்தியைக் கற்று கொள்வது தப்பு
இல்லை.. கட்டாயப் பாடமாக வேண்டாம்.....





மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: இலங்கையிலிருந்து அகதிகளாக வந்தவர்கள், வடஇந்தியாவிலே போய், இலட்சம், இலட்சமாக சம்பாதிப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள், நான் ஏற்றுக்கொள்கிறேன். அவர்கள் வட இந்தியாவிற்குப் போவதற்கு முன்னாலே, இந்தியைப் படித்து, கறை கண்டு விட்ட பிறகு போனார்களா? அல்லது அங்கே ''போனபிறகு, சூழ்நிலை உருவானதன் காரணமாக, பழக்கவழக்கங்களை யொட்டி'', இந்தியைக் கற்று, வியாபாரத்தை அபிவிருத்தி செய்து அதிகமாகச் சம்பாதிக்கிறார்களா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னால் நலமாக இருக்கும்.

திரு. ர. ஜெபமணி: அவர்கள் இலங்கையிலிருக்கும் போதே எல்லா மொழிகளையும் தெரிந்தவர்களாக இருந்தார்கள்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு மாற்று தலைவர் அவர்களே, நானும் இலங்கைக்குப் போயிருக்கிறேன், கல்லூரியிலே படித்த காலத்திலே. அங்கு மூன்று மொழிகள் தானிருக்கின்றன. ஒன்று ஆங்கிலம். மற்றொன்று சிங்களம். மற்றொன்று தமிழ். அங்கே இந்தி கிடையாது.

திரு. ர. ஜெபமணி: அவர்கள் கல்வி நிலையத்தில் கற்றார்கள் என்று சொல்லவில்லை. பேசும் மொழியாகக் கற்றதாலே, கற்றுக் கொண்டவர்கள் வடக்கே சென்றார்கள், கற்காதவர்கள் இங்கேயே இருந்தார்கள்.

திரு. துரைமுருகன்: பாயிண்ட் ஆஃப் கிளாரிஃபிகேஷன். இந்தி தெரிந்தால் வட இந்தியாவிலே போய் சம்பாதிக்கலாம் என்று அவர் சொல்கிறார். ஆங்கிலம் தெரிந்தால் அகில உலகத்திலே போய் சம்பாதிக்கலாம் அல்லவா? தென்னிந்தியாவிலே மட்டுமல்ல, வட இந்தியாவிலேயிருக்கிற சகோதரர்களும் ஆங்கிலத்தைக் கற்றுக் கொண்டால் வெளி உலகத்திற்குப் போய் சம்பாதிக்கலாம் அல்லவா? அதற்கு என்ன சொல்கிறார்கள்?

திரு. ர. ஜெபமணி: ஆங்கிலம் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், ஒன்று சொல்வேன். தமிழகத்தைச் சேர்ந்த ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் ஜப்பானுக்குப் போனார்கள். அங்கு போன உடன் மொழி பெயர்ப்பாளர் வேண்டுமென்று விளம்பரம் பண்ணினார்கள். 3 தினங்களுக்குப் பிறகு அரைகுறை ஆங்கிலம் தெரிந்தவர் விண்ணப்பம் கொடுத்தார். உடனே, சண்முகம் செட்டியார், அவரைப் பார்த்து, இவ்வளவு வளர்ந்திருக்கிறீர்கள், உலகத்தையே 5 நிமிடத்தில் அழிக்கக்கூடிய ஆற்றலைப் பெற்றிருக்கிறீர்கள். ஆனால் உங்கள் நாட்டிலே ஆங்கிலம் படித்தவன் கிடைப்பதே அரிதாக இருக்கிறதே என்று கேட்டார். அதற்கு, அவர் எங்களை ஆங்கிலேயர்கள் எப்பொழுது ஆண்டார்கள் என்று கேட்டவுடனே, சண்முகம் செட்டியார் எழுதுகிறார், 'என் எண்சாண் உடம்பும் ஒரு சாண் ஆனது' என்று.

நீங்கள் இங்கே எல்லாவற்றையும் ஆங்கிலத்திலேதான் வைத்திருக்கிறீர்கள். தமிழன், தமிழன் என்று சொல்கிறீர்கள், 4 வரி தமிழ்: மற்றவை பூராவும் ஆங்கிலம். உங்களுக்குத் தமிழ் மேலே பக்தி கிடையாது. ஆங்கிலத்தின் பேரில் தான் பக்தி. அன்னியன் வெளியே போக வேண்டும் என்று சொன்னபோது, அன்னியன், ஆங்கிலேயன் போகக் கூடாது என்று கட்சி ஆரம்பித்தவர்களாயிற்றே, நீங்கள். அப்படிப்பட்டவர்கள் ஆயிற்றே நீங்கள்; உங்களுக்கு எப்படி ஆங்கில பக்தி போகும்?

நாடுமுழுவதும் எப்படி கேரளக்காரர்கள், கன்னடத்துக்காரர்கள் மற்ற தெலுங்குகாரர்கள் எல்லோரும் வியாபாரம்பண்ணுகிறார்கள் இன்றைக்கு சேலத்தில், ஈரோட்டில் உற்பத்தியாகும் பல பொருட்கள் அங்கேயே விற்கப்படுகின்றன. எங்களுடைய இஷ்ட பாடமாக இந்தி இருந்தால், இந்தப் பொருட்களை நாங்கள் வியாபாரம் பண்ண முடியும். இப்பொழுது நார்த் இந்தியாவிலே இருக்கிற சேட்கள் அவற்றை வாங்கிப்போய், வடக்கே விற்றுக் கொள்ளை அடிக்கிறார்கள். நாங்கள் இந்தி மொழியைத் தெரிந்திருந்தால், எங்களுக்கு நல்ல பணம் கிடைக்கும் என்று சொல்கிறார்கள். சேலத்திலிருந்து வெற்றிலை போகிறது, துணிகள் போகின்றன. அங்கிருந்து எல்லா பொருட்களும் வடஇந்தியா போகின்றன. அவர்கள் குண்டு சட்டிக்குள்ளேயே குதிரை ஓட்ட வேண்டுமா? ஆகவே, உங்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன், நீங்கள் இந்தியைப் புகுத்தினால் எங்களிடத்திலே விடுங்கள். ஆனால், இந்தி படிப்பதைத் தடுக்காதீர்கள். தேசியத்தைப் புகுத்துகிறோம் என்று நீங்கள் நினைக்காதீர்கள். தேசியம் வந்துதான் ஆகவேண்டும். இப்பொழுது நாம் எதைச் செய்வதானாலும் மத்தியிலே கேள், மத்தியிலே கேள் என்று சொல்கிறோம். பாரதநாடு தெய்வீகமான நாடு; தெய்வம் நிறைந்த நாடு, சிந்தனை சீர் குலையா வண்ணம் சிறந்து வளரவேண்டும். காசியென்றால், விசுவநாதரைப்பற்றிச் சொல்கிறோம். இமயமலை என்று சொல்கிறவன் இறைவனைப் போற்றுகிறான். வள்ளுவனைப் பாராட்டுகிறார்கள், ஔவையைப் பாராட்டுகிறார்கள். அவர்களது நல்ல எண்ணங்களை நாம் சிதைய விடக் கூடாது. ஆகவே, உங்களை நான் பணிவோடு கேட்டுக் கொள்வது, மொழிப்பிரச்னையிலே நீங்கள் தீவிரமாகச் சிந்தித்துப் பாருங்கள். நாட்டு மக்களுக்கு நல்லது செய்வதென்றால், இந்தியை நீங்கள் இஷ்டபாடமாக உடனடியாக வைக்க வேண்டுமென்று உங்கள் எல்லோரையும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதுவிலக்கு—என்னுடைய அருமை நண்பர் அம்பிகாபதி ஒருவர்தான் தெளிவாக அவர் கட்சிக் கொள்கையை ஒழுங்காகச் சொன்னார். ஏன் என்றால், அவருக்கே குழப்பம். மற்றவரைக் குழப்புவது அவருக்குக் கைகண்ட கலை. கைத்தறி வேண்டாம் என்பார். ஆனால், விசைப்படகு வேண்டும் என்பார். எப்படியாவது குழப்பவேண்டும். அதிலே அவர் தேர்ந்தவர். மிகவும் நல்லவர். என்கூட கொஞ்ச நாள் இருந்தவர். வெளிநாடு



களுக்கெல்லாம் சென்று வந்தவர். மதுவிலக்கு என்பது ரொம்ப சிந்திக்க வேண்டிய பிரச்சினை. போலீசாரால் மட்டும் கட்டுப்படுத்திவிட முடியாது. 20 ஆண்டுகளாக மது மறந்து விட்ட ஒன்று. மாணவர்களுக்கு எரிசாராயம் தான் தெரியும், சாராயம் தெரியாது. நீங்கள் எல்லோரும் உத்தமர் என்று சொல்லுகிறீர்களே அந்த உத்தமர் அண்ணா அவர்கள் என்ன சொன்னார் தெரியுமா, கஜானா காலியானாலும் சரி, தமிழகம் கடலிலே மூழ்கிவிட்டாலும் சரி, 20 ஆண்டுகாலமாக மறந்துவிட்ட மதுவை ஒருக்காலமும் மீண்டும் கொண்டு வரமாட்டேன் என்று சொன்னார். அவரை தென்னாட்டு காந்தி என்று எல்லோரும் அழைத்தீர்கள். ஒரு காலத்தில் மதுவிலக்குப் பிரச்சாரத்தை எதிர்த்துப் பேசியவர் அவர்! பிறகு ஆயிரம் சான்றுகள் சொன்னவர். அவர் பொறுப்புக்கு வந்த உடனே, கஜானா காலியானாலும் ஒருக்காலும் மதுவை மீண்டும் கொண்டு வரவே மாட்டேன் என்று சொன்னார். மறந்துவிட்டீர்களே அவரை,

<u>திரு. மு. அரங்கநாதன்</u>: பேரவைத்தலைவர் அவர்களே, அவர் சார்ந்துள்ள ஒரு மாநிலத்தினுடைய பிரச்சினையைச் சொல்லுகிறார்கள். ஆனால் அகிலஇந்தியக் கட்சிதான் மத்தியில் ஆளும் கட்சியாக இருக்கிறது. தமிழகத்திற்கு மட்டுமல்ல, அகில இந்தியாவிலும் மதுவிலக்கை ரத்து செய்கின்ற திராணி உண்டா அவர்களுக்கு என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத்தலைவர் திரு. பி. எச். பாண்டியன்—தலைமை

<u>மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்</u>: தலைவர் அவர்களே, அண்ணா அவர்கள் மதுவிலக்கை எதிர்த்ததாக அவர்கள் சொல்லுகிறார்கள். நான் அரசியலிலே ஈடுபட்ட காலம் தொட்டு, அண்ணா வழியைப் பின்பற்றுபவன், அண்ணாவின் தொண்டனாக இருக்கிறேன். எந்தக் கட்டத்திலேயும் அவர் மதுவிலக்கை எதிர்த்துப் பேசியதாக நான் படித்ததும் இல்லை, கேட்டதும் இல்லை. அவர் அப்படி எப்போது எதிர்த்தார் என்று உறுப்பினர் அவர்கள் சொன்னால் நலமாக இருக்கும்.

<u>மாண்புமிகு பேரவை மாற்றுத்தலைவர்</u> (திரு. பி. எச். பாண்டியன்) : இன்னும் இரண்டு நிமிடத்தில் முடித்துக் கொள்ளுங்கள்.

<u>திரு. ர. ஜெபமணி</u>: நான் தவறாகக் கூட இங்கே பொய்யை சொல்லவிரும்பவில்லை. அண்ணா எழுதினார்கள். காந்தியார் மதுவை வேகமாக எதிர்க்கிறார். மதுவினால் ஆபத்து என்று சொல்லுகிறார். நான் மேல் நாடுகளுக்குச் சென்றதில்லை. ஆனால் படித்திருக்கிறேன். காந்தியார் வெளிநாட்டில் பணியாற்றியிருக்கிறார்கள் அங்கே மதுவை அருந்திகொண்டே பணியாற்றுகிறார்கள். அவர்கள் பணியிலே பழுது கண்டது கிடையாது. அப்படி இருக்கும் போது மது ஒன்றும் மயக்கத்தைக் கொடுக்கவில்லை என்று எழுதினார். அப்போது எட்மண்ட் அவர்கள் குழந்தையாக இருந்திருப்பார்கள்.

மாண்புமிகு பேரவைமாற்றுத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் உங்களுக்கு 25 நிமிடங்கள் கொடுத்தாகிவிட்டது. சீக்கிரம் முடியுங்கள்

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரறிஞர் அண்ணாவை தமிழகத்தில் இருக்கிற 4½ கோடி மக்கள் மாத்திரம் அல்ல, உலகத்திலே எங்கெங்கெல்லாம் தமிழர்கள் இருக்கிறார்களோ இன்னும் சொல்லப்போனால் எங்கெல்லாம் திராவிட இனம் இருக்கிறதோ அவர்கள் எல்லாம் தெய்வமாகப் போற்றுகிறார்கள். மதுவை அண்ணா அவர்கள் தீவிரமாக எதிர்த்தார்கள் என்று கருத்துத்தான் நாட்டிலே நிலவி வருகிறது. ஆனால் உறுப்பினர் அவர்கள் புதிதாக ஒரு கருத்தை, எங்களுக்கெல்லாம் தெரியாத ஒரு கருத்தை அண்ணா அவர்கள் எழுதி இருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆகவே, தயவு செய்து அதை இந்த அவையிலே கொண்டு வந்து காட்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அரசாங்கச் செய்தித் துறை வாயிலாக அண்ணா அவர்கள் எழுதிய நல்லதம்பி படத்தை நம்முடைய ஜனதா கட்சி உறுப்பினருக்குப் போட்டுக் காட்டினால் அண்ணா அவர்களின் மதுவைப் பற்றிய கொள்கை என்ன என்பதை மாண்புமிகு உறுப்பினர் ஜெபமணி அவர்கள் புரிந்து கொள்ள முடியும். ஆகவே, செய்தித் துறை இதற்கு ஏற்பாடு செய்து நல்ல தம்பி படத்தைப் போட்டுக் காட்டினால் நன்றாக இருக்கும்.

திரு. ர. ஜெபமணி: விளக்கம் சொன்னதற்கு நன்றி. அண்ணாதுரை அவர்களுடைய கடந்த கால அரசியல் வாழ்க்கையைப்பற்றி நான் சொல்லத் தேவையில்லை. ஏனென்றால் அவர்கள் காந்தியடிகளைப் பற்றிக்கூட எழுதினார்கள். அதை எல்லாம் நீங்கள் மறந்திருக்கிறீர்கள். நீங்கள் திராவிட இனம் என்று சொல்லுகிறீர்களே அது அவ்வளவாக நன்றாக இல்லை, நீங்கள் அடித்துக் கொண்டதை எல்லாம் நான் கண்டிருக்கிறேன்.

(மணி அடிக்கப்பட்டது)

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்): அவையின் அனுமதியோடு இரண்டு நிமிடம் அவையின் நேரத்தை நீட்டிக்கிறேன்.

திரு. ர. ஜெபமணி: எனக்கு யார் மீதும் காழ்ப்புணர்ச்சி எதுவும் என்றுமே கிடையாது. என்னை மதிப்பவர்களாக இருந்தாலும், மதிக்காதவர்களாக இருந்தாலும் நான் அவர்களை மதிக்கிறேன். நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால் அவர்கள் இந்த சபையில் கூறினார்கள், மதுவை இந்த மாநிலத்தில் எந்தக் காரணத்தைக் கொண்டும் கொண்டு வரமாட்டேன். என்று ஆனால் என்ன நடந்தது





கோவையில் ஒரு மாநாடு நடந்தது. தமிழர்களைப் பார்த்து, உடன் பிறப்பே என்று பேசினார்கள். உடன் பிறப்பு வாழவேண்டும் என்று பேசினார்கள். கள்ளுக்கடை, சாராயக்கடை திறக்கிறோம், மது விலக்குக் கொள்கையை நாங்கள் கொஞ்சகாலம் ஒத்தி வைக்கிறோம் என்று சொன்னார்கள். பலன், புகாத இடத்தில் எல்லாம் மது புகுந்துவிட்டது. இளைஞர்களின் பசுமையான மனதில் அது பதிந்து விட்டது. தாய்மார்கள் குடிக்க ஆரம்பித்து விட்டார்கள். தமிழர்கள் பல லட்சம் பேர் வீட்டில் இருக்கும் பண்டம் பாத்திரங்களை விற்றுகுடிக்கிறார்கள். அதனால் அவர்கள் எல்லாவற்றையும் இழந்து விட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு தற்போது வாழ வழி இல்லை. இந்த நிலையைப் போக்க நாம் என்ன செய்வது, என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டும். கொண்டு வந்தவர்களைப் பற்றி நான் குறை சொல்லவில்லை. நடந்ததைச் சொல்லிவிட்டு மட்டும் நான் நிறுத்தக் கூடாது. அதற்கு வழியும் பரிகாரமும் சொல்ல வேண்டும். போலீஸ் நிர்வாகத்தை நம்பி மட்டும் நாம் இருக்கக்கூடாது. அவர்கள் என்ன செய்வார்கள். பிடித்தாலும் சம்பளம், பிடிக்கா விட்டாலும் சம்பளம். எவன் குடித்தால் நமக்கு என்ன என்று இருப்பார்கள்.

(மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்): பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளை—8-9-1978 காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-32 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## (8) பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

84. தருமபுரி மாவட்டம், ஆன்செட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு டி. என் நாகேந்திரமூர்த்தி என்பவருக்குச் சொந்தமான MYV 7690 ஆம் எண்ணுள்ள சிறிய பயணிப் பேருந்தைப் பொறுத்த வரையில் செலுத்தத்தக்க சலுகைவீத வரியினைத்திருத்தியமைப்பது குறித்த, உள்துறையின் (போக்குவரத்து-I) 27-6-1978 ஆம் தேதியிடப்பெற்ற, 1475 ஆம் எண் அரசு ஆணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

20. சென்னை மாநகராட்சி நிர்வாகத்தின் மீதான உயர் மட்டக் குழுவின் அறிக்கை (இரு தொகுப்புகள்).

## தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

---

### வெள்ளிக்கிழமை, 1978 செப்டம்பர் 8

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### அ. உடுக்குறியிட்ட வினாக்கள்.

### மின் கட்டண நிலுவைகள்

*வினா எண். 81—திரு ஏஸ். ஜே, சாதிக்பாட்சா, திரு.வீ.கே. கோதண்டராமன்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு மின்வாரியத்திற்கு 31-3-76 31-3-77, 30-6-77 தேதிகளில் வர வேண்டியிருந்த மின் கட்டண பாக்கித் தொகைகள் (Current consumption charges outstanding) எவ்வளவு?

(ஆ) ரூ. 10,000-த்திற்கு மேல் மின் கட்டண பாக்கி (arrears) செலுத்த வேண்டிய தொழில் நிறுவனங்கள் உண்டா? ஆம் எனில், அவைகள் எவை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மற்றும் (ஆ): பேரவையின்முன் ஒரு விவர அறிக்கை* வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், 1977 மார்ச் 31-ந் தேதி வரையில் 20 கோடி ரூபாய்க்கு நிலுவை உள்ளது. அது 10,000 ரூபாய்க்கு மேல் நிலுவை உள்ள நிறுவனங்களிடமிருந்து வர வேண்டியது என்றும் விபரம் கொடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக சென்னை அலுமினியம் தொழிற்சாலையில் 8,93,38,000 ரூபாய் பாக்கி இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கம்பெனி மீது கோர்ட்டிலே வழக்குத் தொடர்ந்ததில் அரசுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வந்த பிறகும் இந்த பாக்கித் தொகையை இது வரையில் வசூல் செய்யாமல் இருப்பதற்குக் காரணம் என்ன? மற்ற கம்பெனிகள் எல்லாம் நஷ்டத்தில் ஓடுவதால் பாக்கியை கட்ட முடியவில்லையா? அவர்களிடம் பாக்கியை வசூல் செய்ய கால தாமதம் ஆவதற்குக் காரணம் என்ன.

---

[*887-893 ம் பக்கங்களில் இணைப்பு 1 ஆக அச்சிடப் பெற்றுள்ளது.]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, சென்னை அலுமினியம் கம்பெனியைப் பொறுத்தமட்டில் இவ்வாண்டு பிப்ரவரி மாதத்திலிருந்து மாதந்தோறும் செலுத்த வேண்டிய மின் கட்டணத்தை செலுத்தச் வேண்டுமென்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. அதன்படி அவர்கள் செலுத்தி வருகிறார்கள். ஏற்கெனவே உள்ள நிலுவையைப் பொறுத்த மட்டில் இன்னும் அது நீதிமன்றத்தில்தான் இருக்கிறது. இந்த அளவுக்கு நிலுவைகள் தேங்கி இருப்பதற்குக் காரணம் சிக் மில்ஸ்—நேஷனல் டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன் நடத்தும் நலிந்துபோன ஆலைகளிலிருந்து வரவேண்டிய நிலுவை 46.89 லட்சம் ரூபாய் சில நலிந்துபோன ஆலைகளை 'ரிலீஃப் அண்டர் டேக்கிங்ஸ்' என்ற முறையில் எடுத்துக் கொண்ட வகையில் 26.55 லட்சம் பாக்கி; பி. அண்டு சி.—அதுவும் நலிந்துபோன ஆலை—அதிலிருந்து வர வேண்டிய பாக்கி 21.34 லட்சம் ரூபாய்; சக்தி பைப்ஸ் நிலுவை 14.31 லட்சம் ரூபாய்; அப்படித்தான் நிலுவைகள் இருக்கின்றன. தொழிலாளர்களின் நலனைக் கருதி நாமே சில நலிந்துபோன ஆலைகளின் நிர்வாகத்தை எடுத்து நடத்துவதன் காரணமாகவும் மால்கோ நிறுவனத்தின் காரணமாகவும் இந்த அளவுக்கு நிலுவைகள் இருக்கின்றன.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, நலிந்துபோன ஆலைகளிலிருந்து அதிகமான அளவுக்கு நிலுவை வர வேண்டியிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஸ்பிக் நிறுவனத்தில் 102 லட்சம் வரை பாக்கி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதுவும் நலிந்து போன ஆலையா? இல்லை. அதோடு, ஏற்கெனவே நிலுவைகளை வசூல் செய்ய சட்டம் இயற்றப்பட்ட பிறகும் நிலுவைகளை வசூல் செய்வதில் ஆர்வம் காட்டி, நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, ஏற்கெனவே இங்கே நிறைவேற்றப்பட்ட சட்டத்திற்கு விதி முறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அந்தச் சட்டத்தின் அடிப்படையில் நிலுவைகளை வசூல் செய்வதற்கான நடவடிக்கைகள் நிச்சயமாக மேற்கொள்ளப்படும். ஸ்பிக் நிறுவனத்தைப் பொறுத்த வரையில் தற்போது நிலுவை இல்லை என்பது என்னுடைய ஞாபகம்.

திரு. ஆர். உமாநாத்: தலைவரவர்களே, இந்த நிலுவைகளின் கணக்கைப் பார்த்தால் மார்ச் 76—ல் $10\frac{1}{2}$ கோடி ரூபாய், மார்ச் 77—ல் $18\frac{1}{2}$ கோடி ரூபாய், ஜூன் 77-ல் 20 கோடி ரூபாய் என்று இருக்கிறது. இங்கே சொல்லப்பட்டிருக்கிற இந்த பீரியட் அவசர காலச் சட்டம் அமலில் இருந்த நேரம். நெருக்கடி காலத்தில் இருந்தவர்கள் நிலுவைகளை வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லையா? அதோடு சாதாரண மக்கள் ஒரு மாதம் அரியர்ஸ் கட்டவில்லை என்றால் 'ஃப்யூஸை' பிடுங்கிவிடுகிறார்களே. அப்படிச் செய்யாமல் இந்தப் பெரிய நிறுவனங்களுக்குக் காட்டும் சலுகை சாதாரண மக்களுக்கும் காட்டப்படுமா?





மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, தொழிற்சாலைகளில் மின்சாரக் கட்டணத்தைக் கட்டத் தவறினால் நாம் மின் இணைப்பைத் துண்டிக்கலாம். ஆனால் அப்படித் துண்டிக்கும்போது அந்தத் தொழிற்சாலையை மூட வேண்டி வருகிறது; தொழிலாளர்களும் வேலை இழக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. அதைக் கருத்திற் கொண்டு, தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் உடனடியாகத் துண்டிக்க இயலவில்லை. ஆனால் சில தொழிற்சாலைகள் பொருளாதார நெருக்கடி காரணமாகவோ அல்லது தங்களுடைய நிர்வாகத் திறமையின்மை காரணமாகவோ நலிந்து போய்விடுகின்றன. அதனால் உடனடியாகக் கட்டணத்தை வசூல் செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது. அவ்வப்போது இந்த நிலுவைகளை வசூல் செய்ய நடவடிக்கை எடுத்தால் அந்த ஆலைகளை மூடிவிடுகிற நிலைமை ஏற்பட்டுவிடும். ஆகையால் ஆலைகளைப் பொறுத்தவரை நாம் நிதானம் காட்ட வேண்டியதாயிருக்கிறது. ஆனால் வீடு அல்லது விவசாயம் போன்ற காரியங்களுக்குப் பயன்படுத்துகின்ற மின்சாரத்திற்குக் கட்டணம் வசூல் செய்ய நடவடிக்கை எடுப்பதைப்போல ஆலைகளின்பேரிலும் நடவடிக்கை எடுத்தால் நிச்சயமாக மின்சார வாரியத்திற்கும் வருமானம் வராது. தொழிலாளர்களுக்கும் வேலை இழப்பு ஏற்படும். நெருக்கடி காலத்தில் இந்த நிலுவை வசூலிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படவில்லையா, அப்போது நிலுவை அதிகமாயிற்று என்ற முறையில் கேட்டார்கள். ரிலீஃப் அண்டர் டேக்கிங்ஸ் என்ற முறையில் பல தொழிற்சாலைகளின் நிர்வாகத்தை அரசு ஏற்று நடத்துவது என்ற முறையில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது நெருக்கடி நேரத்தில்தான் என்பதையும், அப்படி எடுக்கப்பட்ட நலிந்துபோன ஆலைகளில் நிலுவை அதிகமாக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி: தலைவரவர்களே, மால்கோ கம்பெனி மின்சாரக் கட்டணம் அரியர்ஸ் சம்பந்தமாகக் கோர்ட்டிலே கேஸ் இருப்பதாகவும் இன்னும் இதர கம்பெனிகள் சம்பந்தமாகவும் கோர்ட்டிலே கேஸ் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அவர்கள் கோர்ட்டிலே ஸ்டே வாங்கி வைத்திருப்பதாகவும் சொல்லப்படுகிறதே, அப்படிப்பட்ட ஸ்டேகளை கேன்சல் செய்வதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அந்த வழக்குகள் குறித்து அரசு விரைவாக நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கட்சித் தலைவர் கேள்வி கேட்டுவிட்டதனால் நீங்கள் கேட்கமாட்டீர்கள் என்று நினைத்தேன். நீங்களும் கேட்க விரும்பினால் கேளுங்கள்.

[1978 செப்டம்பர் 8

திரு. வி. கே. கோதண்டராமன்: ஐயா, இதிலே சன் பேப்பர் கம்பெனி என்ற ஒன்றிலிருந்து 3.83 இலட்சம் நிலுவையாக இருப்பதாகத் தெரிகிறது. அதாவது 1977ஆம் ஆண்டு மார்ச் 31-ந் தேதி வரைக்கும் எனக்குத் தெரிந்த அப்-டு-டேட்-ஆக இதுவரை 15 இலட்ச ரூபாய் வரையில் நிலுவை இருப்பதாகவும் அவர்கள் ஹைகோர்ட்டிலே ரிட் போட்டு ஸ்டே ஆர்டர் வாங்கி இப்போது உபயோகப்படுத்தக் கூடிய மின்சாரத்திற்குக் கூட கட்டணம் செலுத்துவதில்லை என்றும் சொல்லப்படுகிறது. இது உண்மையா? அப்படியானால் இது போன்ற ஒரு போக்கு சரியானதா? இதை இந்த அரசு அனுமதிக்கின்றதா? அதற்கான நடவடிக்கை என்ன? அந்த பேப்பர் கம்பெனியோ லாபம் சம்பாதிக்கக்கூடிய ஒரு பேப்பர் மில். இது முன்னாள் அமைச்சருக்குச் சொந்தமான ஒரு மில் என்பதற்காகச் சலுகை காட்டக் கூடிய அளவுக்கு விட்டு வைக்கப்படுகிறதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோதண்டராமன் அவர்கள், தயவு செய்து ஒன்றிரண்டு கேள்வியாகக் கேட்க வேண்டுமே தவிர அதிலே 12 கேள்விகளை ஓர் நேரத்தில் போடுவது கூடாது. ஏனென்றால் அதிலே அமைச்சர் கவனமாக இருந்து அவ்வளவுக்கும் பதில் சொல்ல இயலாது.

மாண்புமிகு ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நான் கொடுத்த விவரப்பட்டியலில் பல்வேறு ஆலைகள் பற்றிய பட்டியல்களும் இருக்கின்றன. ஆகையினால் ஏதோ ஒரு ஆலைக்குத்தான் இந்தச் சர்க்கார் சர்தகமாக இருக்கிறது என்கின்ற குற்றச்சாட்டு பொருந்தாது. இன்னும் சொல்லப் போனால் இந்த நிலுவைகள் எல்லாம் ஏற்பட்டது இந்த ஆட்சி வந்த பிறகல்ல. அதற்கு முன்பு. அவர்கள் குறிப்பிட்ட சன் பேப்பர் ஆலையைப் பொறுத்த மட்டில் அவர்கள் உயர்நீதி மன்றத்திற்குச் சென்று அங்கே ஸ்டே உத்தரவு வாங்கி வைத்திருக்கிறார்கள். அது உண்மை. அதோடு மட்டுமல்ல. இந்த நிலுவைகளை எல்லாம் வசூலிக்க வேண்டும் என்பதில் அரசு தனி அக்கறை எடுத்து ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் யார் யார் பாக்கி வைத்திருக்கிறார்களோ அவர்களைப் பற்றி மறுபரிசீலனை செய்து உடனடியாக அதை வசூலிக்க மாதந்தோறும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கின்ற வகையில் நாங்கள் மாதந்தோறும் கூடி முடிவு எடுப்பதாகவும் அது சம்பந்தமாக வசூலை தீவிரப்படுத்துவதாகவும் இருக்கிறோம். 30-6-1978, அதாவது இந்த ஆண்டு ஜூன் மாதம் வரையிலுள்ள எச். டி. சர்வீஸைப் பார்க்கிறபோது 13.68 கோடி ரூபாய் தான் நிலுவையாக இருக்கிறது, இதிலே கிட்டத்தட்ட ரூபாய் 10 கோடி மால்கோ நிறுவனத்தை மட்டும் சார்ந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1978 செப்டம்பர் 8]

மால்கோ நிறுவனத்திற்கு மின் கட்டணம்

*வினா எண். 82—திரு. சி. மாணிக்கம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1975-ம் ஆண்டு ஜூலை மாதம் அப்போதைய மத்திய அரசின் இரும்பு, கனிவள அமைச்சர் அவர்களிடமிருந்து தமிழக அரசாங்கத்திற்கு 'மால்கோ' அலுமினிய நிறுவனத்திற்கு எவ்வளவு மின் கட்டணம் விதிக்க வேண்டுமென கடிதம் ஏதேனும் வந்ததா?

(ஆ) ஆம் எனில், அக் கடிதத்தின் பேரில் என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) மத்திய அரசின் யோசனையை கருத்திற்கொண்டு அனைத்து சாத்தியக்கூறுகளையும் அரசு பரிசீலித்து ''மால்கோ'' வுக்கான மின்கட்டணத்தைத் திருத்தி அமைத்துள்ளது.

திரு. சி. மாணிக்கம்: தலைவரவர்களே, தமிழகத்திலே மால்கோ போன்ற பெரிய தொழிற்சாலைகளிலிருந்து பல கோடிக் கணக்கான ரூபாய்க்குமேல் மின் கட்டண பாக்கி இருப்பதாகச் சொல்லப்படுகிறதே. எந்தெந்த கம்பெனிகள் எவ்வளவு எவ்வளவு பாக்கி என்கிற விவரத்தை அளிக்க அரசு முன்வருமா? அந்த நிலுவைகளை வசூலிக்க எந்தெந்தவகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, 10,000 ரூபாய்க்கு மேல் நிலுவை வைத்திருக்கின்ற கம்பெனிகளின் பட்டியல் இதற்கு முன்னதாகக் கேட்கப்பட்ட கேள்விக்குரிய விவர அறிக்கையில் தரப்பட்டிருக்கிறது. இப்படி எல்லாம் நிலுவைகள் இருப்பதை வசூலிக்க வேண்டுமென்று இந்த அரசு அக்கறை கொண்ட காரணத்தினாலேதான் இந்த நிலுவைகளை வசூலிப்பதற்கு என்று தனியாக ஒரு சட்டத்தை இந்த மன்றத்தில் நிறைவேற்றி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[(முற்பகல் 9.10)]

திரு. மு. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, சிறு தொழில் வளர்ச்சிக்காக வழங்கப்பட்டுள்ள மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு எவ்வளவு கட்டணம் வசூலிக்கப்படுகிறது? மத்திய அரசினுடைய பரிந்துரையின்படி திருத்தியமைக்கப்பட்டதில் மால்கோவிற்கு மின்சாரக் கட்டணம் யூனிட் ஒன்றுக்கு எவ்வளவு என்பதையும் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மத்திய அரசினுடைய அந்த உத்தரவு, தனிவகையில் அமைந்திருக்கிறது. ஒவ்வொரு ப்ளாக்காக அவர்கள் பிரித்து பர்ஸ்ட் ப்ளாக்கிற்கு 25%, 7.75 காசு

செகன்ட் ப்ளாக் 25%-50%, 8.5 காசு, தேர்ட் ப்ளாக் 50%-75%, 9.5 காசு, போர்த் ப்ளாக் 10.25 காசு என்று அவர்கள் பரிந்துரைத்தார்கள். ஆனால் அதை அன்றிருந்த அரசு ஏற்றுக் கொள்ளாமல் அதையும் பரிசீலனை செய்து 23-8-75 அன்று ஒரு உத்தரவு பிறப்பிமது. அந்த உத்தரவின்படி டிமான்ட் ரேட் ஒரு கே.வி.ஏ.க்கு ரூ. 15, யூனிட் ரேட், யூனிட் ஒன்றுக்கு 3½ பைசா, அதோடு சர்சார்ஜ் 50%, டாக்ஸ் 4¾%, ஸ்பெஷல் சர்சார்ஜ் 1 பைசா, ஆக For the above, the rate of tariff will be about 9.4 paise per unit. ஒரு யூனிட்க்கு 9.4 பைசாவாகும்.

திரு. ரா. உமாநாத்: மத்திய அரசாங்கத்திலிருந்து இப்படி ஒரு பரிந்துரை வருவதற்கு முக்கிய காரணம் என்ன, அப்படி காரணம் அதில் குறிப்பிடப்பட்டிருந்தால் அல்லது அமைச்சருக்குத் தெரிந்திருந்தால் அதை அவைக்குத் தெரிவிக்க வேண்டும் என்பதோடு மத்திய அரசு பரிந்துரைத்திருக்கக்கூடிய ரேட்டை விட ஏற்கெனவே இருந்த ரேட் கூடுதலா அல்லது குறைச்சலா, பிறகு மாநில அரசாங்கம் மறுபரிசீலனை செய்து போட்ட பைனல் ரேட் மத்திய அரசாங்கம் பரிந்துரைத்ததை விடக் கூடுதலா அல்லது குறைச்சலா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.ச. இராமச்சந்திரன்: மத்திய அரசின் பரிந்துரை வருவதற்கு முன்னால் ஐந்து பைசாபெர் யூனிட் that existed previously. மத்திய அரசு 7¾லில் இருந்து படிப்படியாக உயர்த்திக் கொண்டு வருகிறார்கள். அதன்படி எபெக்டீவ் ரேட் 9 பைசா ஆகிறது. ஆனால் போடப்பட்டது 9.4 பைசா.

திரு. இரா. தாமரைக்கனி: மால்கோ நிறுவனம் எந்தெந்த ஆண்டு எவ்வளவு பாக்கி வைத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 1973-74-ல் 7 லட்சம் ரூபாய், 74-75-ல் ரூ. 721.64 லட்சம், 75-76-ல் ரூ. 39.33 லட்சம், 76-77-ல் ரூ. 134.53 லட்சம், ஆக ரூ. 902.5 லட்சம்.

திரு. மு. ஆறுமுகம்: தமிழ்நாட்டில் சிறு தொழில்களுக்கு வழங்கப்படக் கூடிய மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு எவ்வளவு கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்று அதை முன்பே வைத்து இணைத்துக் கேட்டிருந்தேன். அதற்குப் பதில் அளிக்கவில்லை. அதற்கான பதிலை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தனிக் கேள்வி போடவும்.



## புதிய அனல் மின் நிலையங்கள்

*வினா எண். 83 திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழ்நாட்டில் மின் பற்றுக்குறையைப் போக்க புதிதாக 5 இடங்களில் பெரிய அனல் மின் நிலையங்களை நிறுவிடும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

(இ) எங்கெங்கே அமைக்கப்படவிருக்கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ), (ஆ) மற்றும் (இ) கீழ்க்காணும் 5 இடங்களில் அனல் மின் திட்டங்களை நிறுவும் செயற்குறிப்பு உள்ளது:—

| | | |
|---|---|---|
| 1. தூத்துக்குடியில் மூன்றாவது பிரிவு | .. | 1×210 மெ.வா. |
| 2. நெய்வேலி இரண்டாவது சுரங்க மின் திட்டம் | .. .. .. | 3×210 மெ.வா. |
| 3. மேட்டூர் அனல் மின் திட்டம்.. | .. | 2×210 மெ.வா. |
| 4. வட சென்னையில் அனல் மின் திட்டம் | .. .. .. .. | 3×210 மெ.வா. |
| 5. எண்ணூரில் விஸ்தரிப்பு | .. .. | 1×210 மெ.வா. |

மேற்கூறிய அனல் மின் திட்டங்களில் தூத்துக்குடி 3-ம் பிரிவுக்கும், நெய்வேலி அனல் மின் திட்டத்திற்கும், மத்திய அரசு அண்மையில் அனுமதியளித்துள்ளது.

திரு. என். கிட்டப்பா: மின் பற்றுக் குறையைப் போக்குவதற்காகப் புதிதாக எந்தெந்த இடங்களில் அனல் மின் நிலையங்கள் நிறுவப்படவிருக்கின்றன? ஒவ்வொரு அனல் மின் நிலையத்திற்கும் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என்று கணக்கிடப்பட்டிருக்கிறது? அந்த அனல் மின் நிலையங்களில் ஒன்றை தொழில் வளர்ச்சி அதிகமாக இல்லாத தஞ்சை மாவட்டத்தில் நிறுவ அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாயவரத்திலேயே....

திரு. என். கிட்டப்பா: தஞ்சை மாவட்டத்திலே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் ஆலோசனைக்கிணங்க மாயவரத்திலேயே நிறுவ முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தூத்துக்குடியில் மூன்றாவது பிரிவு 71.21 கோடி ரூபாயில் அனுமதிக்கப்பட்டுள்ளது. நெய்வேலியில் மத்திய அரசினால் 358.45 கோடி ரூபாய்க்கு அனுமதிக்கப்பட்டு திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேட்டூரில் அனல் மின் திட்டத்திற்கு 147·28 கோடி ரூபாயில் திட்டம்

தயாரித்து மத்திய சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறோம். வட சென்னையில் அனல் மின் திட்டம் ஒன்றுக்கும் எண்ணூரில் விஸ்தரிப்புத் திட்டம் ஒன்றுக்கும் மதிப்பீடு தயாரித்துக் கொண்டிருக்கிறோம். இந்த வேலை முடிந்தவுடன் எவ்வளவு செலவாகும் என்பது தெரியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொழில் வளர்ச்சி இல்லாத தஞ்சை மாவட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். மின் உற்பத்தித் திட்டங்களை தொழில் வளர்ச்சி இல்லாத இடங்களில் ஆரம்பிப்பது கிடையாது. எங்கு தொழில் வளர்ச்சி அதிகமாக இருக்கிறதோ அங்குதான் மின் உற்பத்தித்திட்டங்கள் அமைக்க முடியும். அப்படியில்லாமல் தஞ்சாவூர் மாவட்டத்தில் மாயவரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் ஆரம்பிக்க இயலாது. இது தொழில் நுட்ப அடிப்படையில் ஆரம்பிக்கப்பட வேண்டியதொன்று.

<u>திரு. கே. பண்ணை சேதுராம்:</u> தலைவர் அவர்களே. தமிழ் நாட்டில் மின் உற்பத்தியைத் துவக்க இருப்பதாகச் சொல்லி அதற்காக ஐந்து இடங்களையும் கூறி, இந்த இடங்களில் மின் திட்டங்களை ஆரம்பிக்க அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தனது விடையில் கூறினார்கள். இப்படியிருக்கும்போது, ஏற்கெனவே சமயநல்லூரில் இருந்த மின் நிலையத்தை அழிக்க வேண்டிய அவசியமென்ன? எரிகிற வீட்டில் பிடுங்குவது ஆதாயம் என்ற முறையில் பிடுங்கிக்கொண்டார்களா? அப்படிப் பிடுங்கிக் கொண்டவர்கள் யார்? இதனால் அரசுக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது? இதை அழிப்பதற்குக் காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:</u> தலைவர் அவர்களே..

<u>திரு. மா. மணிமாறன்:</u> பாயின்ட் ஆப் ஆர்டர்..

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> கேள்வி நேரத்தில் பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பக் கூடாது, உட்காருங்கஸ்.

<u>திரு. மா. மணிமாறன்:</u> சமயநல்லூர் பற்றிச் சொன்னார்கள், அதன் பேரில்தான்....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுவார்கள். நீங்கள் உட்காருங்கள்.

<u>திரு. க. சுப்பு:</u> பேரவைத் தலைவர் அவர்களே,...

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:-</u> நீங்கள் எதன் கீழ் பேசுகிறீர்கள்?

<u>திரு. க. சுப்பு:</u> சம்பந்தப்பட்ட கேள்வியையொட்டி பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்புகிறேன்.



<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> அமைச்சர் இன்னும் பதில் சொல்லவில்லை. அதைப் பொறுத்திருந்து பார்த்துவிட்டு அதற்குப் பிறகு சொல்லுங்கள்....

<u>திரு. க. சுப்பு:</u> கேள்வி நேரத்தில் 'எலுஸிடேட்' செய்து இன்பர்மேஷன்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி நேரத்தில் 'காஸ்டிங் அஸ்பெர்ஷன்' என்பது கூடாது ஒன்று, அதோடு குற்றச்சாட்டு சொல்லக் கூடாது என்பது இன்னொன்று. இந்தக் கேள்வியை நீங்கள் அனுமதித்திருக்காவிட்டால் இது வந்திருக்காது. இப்போது நீங்கள் அனுமதித்து விட்டதால்தான் இந்தப் பிரச்னை வருகிறது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> அமைச்சர் அவர்கள் பதில் சொன்ன பின்னால்தான் இதைப்பற்றி நீங்கள் இதைச் சொல்ல முடியும். உறுப்பினர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள், அதற்கு ஏன் தாங்கள் பொறுப்பாளி என்று எடுத்துக் கொள்ள வேண்டும்? திரு. சுப்பு அவர்கள் சொல்வதைப்போன்று இதில் குற்றச் சாட்டு இருப்பதாக அவைத்தலைவர் கருதவில்லை.

<u>திரு. க. சுப்பு:</u> கேள்வி நேரத்தில் அதையொட்டி பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாம். ரூல்ஸ் இருக்கிறது. ரூல்ஸ் உங்களிடத்தில் இருக்கிறது. 'காஸ்டிங் அஸ்பர்ஷன்' என்பது கூடாது, குற்றச்சாட்டு சுமத்துவதும் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னால் அதை நீங்கள் ஏன் குற்றச்சாட்டாக எடுத்துக் கொள்ள வேண்டும்?

<u>திரு. க. சுப்பு:</u> அவர்கள் என்ன சொன்னார்கள். எரிகிற வீட்டில் பிடுங்கிக் கொண்டார்கள் என்று பிடுங்குகிற விவரத்தைச் சொன்னார்கள். அது சரிதானா?..

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> இதில் குற்றச்சாட்டு இல்லை. அமைச்சரவர்கள் பதில் சொல்லட்டும்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:</u> இருக்கிற அனல் திட்டங்கள் போதாது. இனியும் அனல் திட்டங்கள் உருவாக வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தினுடைய கொள்கை. ஏற்கெனவே சமயநல்லூர் நிலையத்தை ஏலம் போட்டதை நாம் ஏற்றுக்கொள்வதற்கில்லை. அதுபோன்ற அனல் நிலையங்கள் இருந்திருந்தால் அவற்றைப் புதுப்பித்து மதுரை போன்ற தென் மாவட்டங்களுக்குப் பயன்படுத்தியிருக்க முடியும். மற்ற விவரங்களைப்பற்றியெல்லாம் குறிப்பிட்டிருக்கிற சர்க்காரியா அறிக்கை மன்றத்தில் தரப்பட்டிருக்கிறது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, அதிகப்படியான மின்சார உற்பத்திக்காக சில திட்டங்களை உருவாக்குவதற்காக பெயர்களை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முக்கியமாக காடாம்பாறை திட்டம் என்ற ஒரு திட்டத்தை உருவாக்குவதற்காக மத்திய சர்க்காரிடம் அனுமதி பெற்று, பின்னால் அனுமதி மறுக்கப்பட்டு, பின்னால் மீண்டும் அனுமதிக்கப்பட்டு வேலை துவக்கப்படக்கூடிய நிலையில் இருப்பதாகத் தெரிகிறது. அதைப்பற்றி இப்போது ஒன்றுமே சொல்லவில்லை. இந்தத் திட்டம் இருக்கிறதா இல்லையா? இருக்கிறது என்றால் எப்போது ஆரம்பிக்கப்படவிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9.20.]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இது அனல் மின் திட்டத்தைப் பற்றிய கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது அனல் மின் திட்டம்; அதாவது நீர் மின் திட்டம் பற்றியது. காடாம்பாறைத் திட்டத்தைப் பொறுத்த வரையில், அதை நிறைவேற்றுவதா அல்லது வேண்டாமா என்று நீண்டகாலமாகக் காலதாமதம் செய்து வந்தார்கள். இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர், அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, இப்போது அந்தத் திட்டம் துவக்கப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வெங்கிடு.

திரு. கே. சுப்பு ; என்னைக் கூப்பிடாமல், ஒரே கட்சியில் இரண்டு பேர்களைக் கூப்பிடுகிறீர்களே?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படி உட்கார்ந்துகொண்டு பேசினால், எப்போதுமே கூப்பிடப் போவதில்லை.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: தலைவர் அவர்களே; தொழில் நிறுவனங்கள் நிறைய இருக்கின்ற பகுதிகளுக்கு அனல் மின்சார நிலையங்கள் துவக்க இருப்பதாக அரசு உத்தேசித்து இருக்கின்றது என்று அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். இந்த அடிப்படையிலே தமிழ் நாட்டில் மிகப் பெரிய தொழில் நிறுவனங்கள் இருக்கக்கூடிய கோவையிலேயே அனல் மின்சார நிலையம் ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கோவையைப் பொறுத்த வரையில் அதைச் சுற்றி நீர் மின்சாரம் நிரம்ப இருக்கின்ற காரணத்தினால், தற்போது தேவையில்லை என்று கருதப்படுகிறது. வேண்டுமானால், எதிர்காலத்திலே தொழில்கள் அதிகரித்தால், நிச்சயமாக அது குறித்துச் சிந்திக்கலாம்.



திரு. க. சுப்பு. பேரவைத் தலைவர் அவர்களே, சமயநல்லூர் அனல் மின்சாரத் திட்டத்தைப் பற்றி, அதை ஏற்றுக் கொள்ளுவதற்கு இல்லை என்று அமைச்சர் அவர்கள் இப்போது சொன்னார்கள். இப்போது இருக்கின்ற அமைச்சர் அவர்கள், அப்போதிருந்த அமைச்சரவையில் இருந்திருக்கிறார்கள். அந்தக் கட்சியிலேயும் இருந்திருக்கிறார்கள். அப்போது அதைத் தவறு என்று ஏன் எதிர்க்கவில்லை? இப்போது என்ன நடவடிக்கைகள் அதைத் தொடர்ந்து எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அப்போது இப்பிரச்னை அமைச்சர் அவைக்கு வரவில்லை.

ஆலய ஊழியர்களுக்குக் குடும்ப நல நிதித் திட்டம்.

வினா எண் 84—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அரசு ஊழியர் குடும்ப நலத் திட்டத்தின் கீழ் கோவில் அர்ச்சகர்கள் ஊழியர்கள் பயனடைய அரசிடம் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இல்லை; ஆனால், ஆலய ஊழியர்களுக்குப் பொருந்தும் வகையில் குடும்ப நல நிதித் திட்டம் ஒன்றை, உயிர் ஒப்பந்த நிதிக் குழுவத்தின் (எல்.ஐ.சி.) உதவியுடன் உருவாக்குவதற்கான இந்து சமய அறநிலையத்துறை ஆணையாளரின் செயற் குறிப்புகள் அரசின் ஆய்வில் உள்ளன.

திரு. மா. மணிமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, 1976 ஜனவரி வரை கோவில் ஊழியர்களுக்குக் குடும்ப நலத் திட்டம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னர் இந்தத் திட்டம் நிறுத்தப்பட்டிருக்கிறது. அப்படி நிறுத்தப்பட்டதற்கான காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன். மேற்கொண்டு அந்தத் திட்டத்தைத் துவக்கி, தொய்வு இல்லாமல் 1976-லிருந்து ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுத்து செயல் படுத்த இந்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, எப்போதுமே அந்தத் திட்டம் முறையாக அமுல்படுத்தப்படவில்லை. 1975-ம் ஆண்டிலே அப்படி ஒரு திட்டம் கொண்டு வருவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு அந்தத் திட்டத்திலே ஈடுபடும்படி, ஊழியர்களைக் கேட்டுக்கொண்டபோது எல்லோரும் அதிலே ஈடுபடவில்லை. மேலும் வயதானவர்கள் ஒரு சிலர் அந்தத் திட்டத்திலே தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்

கிறார்கள். சரியான பலனளிக்காத திட்டம் என்ற காரணத்தினுலே, பிறகு அதற்கான ஆய்வு ஒன்று நடத்தப்பட்டு, ஆணையாளர் குறிப்பைப் பெற்று, புதிய திட்டம் உருவாகிக் கொண்டிருக்கிறது.

திரு. க. மருதாசலம்: தலைவர் அவர்களே, தமிழகத்திலே பல்வேறு ஆலயங்களிலே பணியாற்றிக் கொண்டிருக்கின்ற ஊழியர்கள் இன்னும் தினக்கூலி வாங்கிக் கொண்டிருப்பது அரசுக்குத் தெரியுமா? அவர்களை எதிர்காலத்தில் அரசு ஊழியர்களாக ஆக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இது ஓய்வு பெறும் ஊழியர்களைப் பற்றிய கேள்வி. தனிக் கேள்வி போட்டால், அதற்கான விவரங்கள் சேகரிக்கப்பட்டு, அரசின் கருத்தைத் தெரிவிக்க இயலும்.

திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற இந்து அறநிலைய கோடிலே செக்ஷன் 12-லே கோவில் ஊழியர்களை அரசு ஊழியர்களாக ஏற்றுக் கொள்வதாகச் சட்டம் சொல்லுகிறது. இதை அமுலுக்கு இந்த அரசாங்கம் கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: அரசு அலுவலர்களாக ஆக்கினுல் அதற்கான விதிகளின்படி மிகப் பெரிய நிதிப் பொறுப்பு அரசுக்கு ஏற்படும். இப்போதுள்ள நிதி நிலைமையில், அறநிலையங்கள் தாங்க முடியாமல், சம்பளம் கொடுக்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கின்றன. இதற்கான வழிவகைகளைக் கண்டு பிடித்த பிறகுதான், இந்தக் கருத்து பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள முடியும்,

## கடன் நிவாரணச் சட்டத்திலிருந்து விலக்கு

*வினு எண். 85—திரு. மு. செல்வராஜ்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா:—

கோயில்களுக்குச் சேர வேண்டிய குத்தகை பாக்கியை வசூலிக்க சிவில் கோர்ட் மூலம் நடவடிக்கை எடுக்க தற்பொழுது உள்ள கடன் நிவாரணச் சட்டத்திலிருந்து விதி விலக்கு அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: 1978-ம் ஆண்டு கடன் நிவாரண அவசரச் சட்டத்தில் குத்தகை அல்லது வாடகையானது 'கடன்' என்பதன் பொருள் விளக்கத்திலிருந்து தெளிவான முறையில் விலக்கப்பட்டிருக்கிறது. எனவே, கோவில்கள், தமது குத்தகை பாக்கியை வசூலிப்பதற்காக வழக்குகள் தாக்கல் செய்வதற்கு, கடன் நிவாரணச் சட்டத்தினுல் தடை ஏதுவுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி எண் 86..



திரு. மு. அம்பிகாபதி: முக்கியமான கேள்வி, ஒரு துணைக் கேள்வி கேட்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மணியைப் பாருங்கள். இது வரை எத்தனை கேள்விகள் முடிந்திருக்கின்றன என்றும் பாருங்கள். ஒரு மணி நேரத்திற்குள் கேள்விகளை முடிக்க வேண்டும். அடுத்த கேள்வி என்று சொல்லிய பிறகு திரு. அம்பிகாபதி அவர்கள் தயவு செய்து அமர வேண்டும்.

## மணப்பாடு கிராமத்தில் பழங்காலச் சுரங்கம்.

*வினு எண். 86 — திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா: —

(அ) திருச்செந்தூர் அருகில் உள்ள மணப்பாடு என்னும் கிராமத்தில் அவ்வூர் மக்களால் பழங்காலச் சுரங்கம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றி மேற்கொண்டு தகவல்களை அறிய தொல் பொருள் துறை என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) சுரங்கம் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை.

(ஆ) இவ் வினுவிற்கு இடமில்லை.

## வேலஞ்சேரியில் எடுக்கப்பட்ட பழங்கால விக்கிரகங்கள்

*வினு எண் 87—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கிழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) இந்த ஆண்டு (1977) செப்டம்பர், அக்டோபர் மாதத்தில் செங்கல்பட்டு மாவட்டம் திருத்தணிகைக்கு அருகேயுள்ள வேலஞ்சேரி கிராமத்தில் செப்பு பட்டயம் விக்கிரகங்கள் ஆகியவை பூமியின் கீழிருந்து தோண்டி எடுக்கப்பட்டது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அது எந்தக் காலத்தில் செய்யப்பட்டது?

(இ) அதனை அரசு கைப்பற்றியதா அல்லது அங்குள்ள கோயிலில் வைத்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(ஆ) அவைகள் எந்தக் காலத்தவை என்பது தெரியவில்லை. ஆனுல் சுமார் 300 ஆண்டுகளாக மண்ணில் புதைபட்டு இருப்பதாக அறியப்படுகிறது.

(இ) தற்போது சிலைகள் அவ்வூர் மக்கள் நிறுவியுள்ள திருப்பணிக் குழுவின் வசம் இருந்து வருகிறது.

திரு. எஸ். ஜே. இராமசாமி: இந்தச் சிலைகளை எல்லாம் பாதுகாத்து மியூசியத்தில் வைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா? அதை மியூசியத்தில் வைக்காமல் ஏன் அங்கேயே வைத்திருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இதை அரசுடைமையாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## வடக்கனந்தல் பேரூராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

*வினா எண். 88—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

வடக்கனந்தல் பேரூராட்சியில் கோமுகி ஆற்றிலிருந்து குடிநீர் வழங்குவதற்கென மேல்நிலை தொட்டி ஒன்று கட்ட அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இல்லை.

## உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் வாக்காளர் வயது.

வினா எண். 89—திரு. நா. பழனிவேல், திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

வரும் நகராட்சி, ஊராட்சித் தேர்தல்களில் கேரளாவில் இருப்பதைப் போல் வாக்களிக்கும் வயது வரம்பை 21-லிருந்து 18 ஆகக் குறைக்கும் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இல்லை.

திரு. என். பழனிவேல்: வரும் நகராட்சித் தேர்தல்களிலும், ஊராட்சித் தேர்தல்களிலும் வாக்காளர்களின் வயது வரம்பை 21-ல் இருந்து 18 ஆக கேரளத்திலும் மேற்கு வங்கத்திலும் குறைத்திருப்பது போல் குறைக்க அரசு முன்வருமா? குறிப்பாக 18 வயதில் தாய்மார்கள் எல்லாம் இரண்டு மூன்று குழந்தைகளுக்குத் தாயாகிவிட்டாலும் அவர்கள் வாக்களிக்க உரிமை இல்லாமல் இருக்கிறது. ஆகவே, உடனடியாக வரும் நகராட்சி, ஊராட்சித் தேர்தலுக்கு இந்த வயது வரம்பை 21-ல் இருந்து 18 ஆகக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?





மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: 18 வயதில் தாய்மார்கள் இரண்டு மூன்று குழந்தைகளுக்குத் தாயாவதைத் தடுக்க ஒன்றும் செய்ய முடியாது. கேரளத்திலும், மேற்கு வங்கத்திலும் குறைத்திருப்பதாகச் சொன்னார்கள். தமிழ்நாட்டில் குறைக்க உத்தேசம் இல்லை.

திரு. என். கிட்டப்பா: கேரளத்திலும், மேற்கு வங்கத்திலும் 18 வயது இருப்பவர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டிருக்கிறது அது இங்கு இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இங்கு அதைக் கொண்டு வர முடியாததற்கான காரணத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? இனியேனும் புனராலோசனை செய்து 18 வயது திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: நகராட்சி, ஊராட்சி வாக்காளர் பட்டியல் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு விட்டது. 1-1-1978-ல் 21 வயது அடைந்தவர்கள் வாக்காளர்களாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அதை மீண்டும் மாற்றியமைக்க இப்போது இயலாது.

திரு. யா. சை. மு. யூசுப்: தமிழர்கள் உலகத்திலேயே அதி புத்திசாலிகளாக விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். மேற்கு வங்கம் கேரளம் ஆகிய மாநிலங்களில் 18 வயது என்று குறைத்திருக்கும் போது தமிழர்களின் புத்திசாலித்தனத்தை மனதில் வைத்து 21 வயதை 18 ஆகக் குறைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இப்போது உத்தேசம் இல்லை.

திரு. மு. அம்பிகாபதி: 18 வயது அடைந்த இளைஞர்களுக்கு வாக்குரிமை கொடுக்க அரசு பயப்படுகிற காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: வாக்காளர் பட்டியல் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு விட்டது. ஆகக் கூடிய செலவைப் பொறுத்துத்தான் பயம்.

திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடைபெற இருக்கிற தேர்தல்களுக்கு வாக்காளர் பட்டியல் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு விட்டதால் தற்போது அதை மாற்ற இயலாது என்று சொன்னார்கள். அடுத்து வரும் ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களிலாவது அந்த முறையைக் கையாண்டு 18 வயது திட்டத்தை மேற்கொள்ள அரசு ஆவன செய்ய முன்வருமா?

[1978 செப்டம்பர் 9

[முற்பகல் 9.30]

மாண்புமிகு திரு. கா, காளிமுத்து: தலைவர் அவர்களே, சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களிலே வாக்காளர்களுக்கான வயது 21 என்று தான் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது, அதிலே மாறுதல் ஏற்பட்டால் இதிலே மாறுதல் ஏற்படுத்துவதைப்பற்றிச் சிந்திக்கலாம்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: தலைவர் அவர்களே, ஏற்கனவே வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு விட்டதால் இப்போது மாற்ற முடியாது என்று சொன்னார்கள். இரண்டாவதாக அவர்கள் சொன்னபோது சட்டமன்ற நாடாளுமன்றத் தேர்தல்களுக்கு இப்போது 21 என்று இருப்பதால் இதை மாற்ற சாத்தியம் இல்லை என்று சொன்னார்கள். சட்டமன்ற பாராளுமன்றத் தேர்தலுக்கு 21 வயது என்று இருந்தபோதுதான் கேரளத்திலேயும் மேற்கு வங்கத்திலேயும் இந்த மாறுதல் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இப்போது இல்லாவிட்டாலும் அடுத்து வரும் தேர்தலின் போதாவது அநுமாதிரிக் கொண்டு வருவதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இது ஒரு கொள்கைப் பிரச்சினை.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, 21 வயதை 18 வயதாகக் குறைக்க வேண்டுமென்று கோரி சமீபத்திலே சோஷலிஸ்ட் வாலிபர் முன்னணியினர் அரசுக்கு மனுக் கொடுத்தார்களா? அப்படியென்றால அவர்களுக்கு என்ன பதில் கொடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து: அப்படி எந்த மனுவும் இங்கே வரவில்லை.

திரு. மு. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, தேர்தல்களில் அடிக்கடி ஆள் மாறாட்டம் செய்து கள்ள ஓட்டுப் போடக்கூடிய பழக்கவழக்கத்தைத் தடுப்பதற்காக வாக்காளர்களின் புகைப் படத்துடன் கூடிய அடையாள அட்டைகளை வழங்குவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து; இல்லை.

திரு வி. கே. கோதண்டராமன்: தலைவர் அவர்களே, ஜனநாயக வாலிபர்கள் முன்னணியின் சார்பில் அப்படி ஒன்றும் வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், சென்ற மாதத்திலே கன்னியாகுமரி, கோவையிலிருந்து அவர்கள் சைக்கிள் ஜாதாவாக வந்து அந்த மகஜர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் வரவில்லை என்று அவர்கள் சொல்வது சரியில்லை என்பதை அமைச்சர் அவர்கள் உணர்வார்களா? ஜனநாயகம் என்று நாம்



1978 செப்டம்பர் 8]

பேசுகிறோம். ஆனால் உண்மையான ஜனநாயகம் என்ற அடிப்படையிலே தேர்தல் நடத்துவது என்றால் 50 சதவீதத்திற்கும் மேலான ஓட்டுகளை வாங்கி ஜெயித்து வருவது தான் பரிபூரண ஜனநாயகம் ஆகும், அந்த அடிப்படையிலே விகிதாச்சார அடிப்படையில் தேர்தல்களை நடத்த இந்த அமைச்சரவை முன்வருமா? எங்களுக்கு அதிகாரம் இல்லை என்று சொன்னாலும்கூட மத்திய சர்க்காரையாவது வலியுறுத்துவார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோதண்டராமன் அவர்களின் சிறு சொற்பொழிவில் உள்ள கருத்துக்களை அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

திரு ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொன்னபோது வாலிபர்கள் சைக்கிள் ஜாதாவாக வந்து கொடுக்கவில்லை என்று சொன்னார்கள், அது சரியல்ல, அவர்கள் சார்பாக நிதியமைச்சர் அவர்கள் அதைப் பெற்றுக் கொண்டார்கள், அப்போது நானும் இருந்தேன் அது இந்த அமைச்சருக்குச் சம்பந்தம் உடையது என்றால் நிதியமைச்சர் அவர்கள் அதை அனுப்பவில்லையா? என்ன சமாச்சாரம் என்று அதை ஸ்ட்ரய்ட்டன் அவுட் பண்ணவேண்டுமென்று நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களை தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே, கேட்கப்பட்ட கேள்விக்கு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன பதில் சரியானது. அவருக்கு அந்தத் தகவல் இல்லை, நண்பர் உமாநாத் அவர்கள் அந்த சோஷலிஸ்ட் வாலிப நண்பர்களை என்னிடம் அழைத்து வந்தது உண்மை. அவர்கள் கோரிக்கைகளை என்னிடம் தந்தார்கள் என்பதும் உண்மை. அதைப் பரிசீலனைக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் அனுப்பி வைத்திருக்கிறேன் என்பதும் உண்மை.

## கைத்தறித் தொழிலாளர் பற்றிய ஆய்வுக்குழு

*வினா எண். 90—[திரு. ஆ. நடராசன், திரு. கு. ரமணி திரு. வீ. கே. கோதண்டராமன், திரு. மு. அம்பிகாபதி திரு. என். கிட்டப்பா]: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

அ) திரு. ராஜா சுப்பிரமணியம் தலைமையில் அமைக்கப்பட்ட கைத்தறி நெசவாளர் பாதுகாப்புக் கமிட்டியின் பரிந்துரை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) இக் குழுவின் பரிந்துரைகள் அரசின் ஆய்வில் உள்ளன.

திரு ஆ. நடராசன்: தலைவர் அவர்களே, இந்தக் குழுவினுடைய அறிக்கை கிடைத்து நீண்டகாலம் ஆகிறது. அதன்மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து நெசவாளர்களைப் பாதுகாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(விடை இல்லை)

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, அந்தக்கமிஷனருடைய பரிந்துரைகள் வந்திருக்கின்றன என்று சொல்கிறார்கள் அமைச்சர் அவர்கள். அந்தப் பரிந்துரைகளில் கைத்தறி நெசவாளர்களைப் பாதுகாப்பதற்காக என்ன என்ன அம்சங்களைக் கொடுத்து இருக்கிறார்கள் என்பதைத் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பரிந்துரைகள் 26 அம்சங்களைக் கொண்டது. மசோதா தாக்கல் செய்யப்படும்போது விரிவான எல்லா தகவல்களும் எல்லா உறுப்பினர்களுக்கும் கிடைக்கும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், மில்லிலே துணி உற்பத்தி செய்யப்படுகிறது. அந்தத் துணிக்குத் தேவையான நூலும் அதே மில்லிலே உற்பத்தி செய்யப்படுகிறது. 35 சதவீதம் போடக்கூடிய எக்சைஸ் டியூட்டி முதலிய பலவிதமான வரிகளும் அதற்கு விதிவிலக்கு இருப்பதால் 35 சதவிகிதம் குறைவாக அமைகிறது, அந்த மில்லிலே உற்பத்தி செய்யக்கூடிய ஜவுளிக்கு. ஆனால் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைப் போடுங்கள், இப்பொழுது நீங்கள் கேட்பது கேள்வியாக இல்லை. தாங்கள் எடுத்துக் கொள்ளும் நேரமும், சொல்லக்கூடிய விளக்கமும் உரை போன்று இருக்கிறது. சுருக்கமாகக் கேள்விப் போடுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சுருக்கமாகத்தான் போடுகிறேன். நம்மால் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் நூல் எல்லாவிதமான வரிகளையும் போட்ட நூல்தான் கொடுக்கப்படுகிறது. மில் து ணிக்கு எப்படி 35 சதவீதம் வரியில்லாத நூல் இன்றைக்குப் பயன்படுத்தப்படுகிறதோ அதே போன்று கூட்டுறவு மில்லிலே இன்றைக்கு உற்பத்தியாகும் அந்த நூலை வரியில்லாத நிலைமையிலே கொடுத்து உதவி செய்தால்தான் அந்த நெசவுத் தொழிலாளர்களினுடைய வாழ்க்கைத் தரம் உயரும் என்பதை அமைச்சரவர்கள் உணர்வார்களா?



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, கேள்வி, திரு. ராஜா சுப்பிரமணியம் தலைமையில் அமைக்கப்பட்ட கைத்தறி நெசவாளர் பாதுகாப்புக் கமிட்டியின் பரிந்துரை அரசுக்கு வந்துள்ளதா என்பது மாண்புமிகு உறுப்பினர் கேட்கும் தகவல் பற்றித் தனியாக ஒரு கேள்வி போட்டால் விரிவான பதில் கொடுக்கப்படும்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திரு. ராஜா சுப்பிரமணியம் தலைமையில் கமிட்டி அமைக்கப்பட்டது எப்பொழுது? அது பரிந்துரை வழங்கியது எந்தத் தேதியில்? அதன்மீது அரசாங்கம் துரிதமாக எப்பொழுது நடவடிக்கை எடுக்கும்? பரிந்துரை வழங்கியிருக்கும் விவரங்களை இந்த அவையிலே, இப்பொழுதே அமைச்சரவர்கள் அறிவிப்பதற்குந் தயவு செய்து முன் வருவார்களா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, வேலை வாய்ப்புத்துறை 21—5—76 நாளிட்ட அரசு ஆணை எண். 1-108-இன் மூலம் இந்தக்குழு அமைக்கப்பட்டது. குழுவின் பரிந்துரை அரசிடம் கொடுக்கப்பட்டது மார்ச் 77-இல் 12.10.77 அன்று அதிகாரிகள் கூட்டம் நடைபெற்றது. அதில் விரிவாக மசோதாவின் அம்சங்களை செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தொழில்துறை, மற்றும் தொழிலாளர் நல ஆணையாளர், கைத்தறி நெசவகம், இயக்குநர் ஆகியோர் விவாதிக்கத் தீர்மானிக்கப் பட்டது. அந்த விவாதம் முடிந்த பிறகு அரசுக்கு அந்த மசோதா கொடுக்கப்படும்: அரசு அதைப் பரிசிலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலில் விரிவாக அதைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள் ஆயினும் மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் கேட்டுக்கொண்டதைப் போல மசோதா வருவதற்கு முன்பாக அந்தக் குழுவின் பரிந்துரைகளை இந்த அரசு இந்த அவையின் முன்னால் வைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, இதைப்பற்றி அதிகாரிகளைக் கலந்து ஆலோசிக்கிறேன்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, நெசவாளர் பாதுகாப்புக் கமிட்டியின் பரிந்துரை என்று இதற்குப் பெயர். ஆகவே, நெசவாளர்களுக்குச் சில பாதுகாப்புகளைப் பற்றி அரசுக்கு ரிப்போர்ட் செய்வதற்காகப் பரிந்துரையாக இந்தக் கமிட்டி வழங்கியிருப்பதாகத் தெரிகிறது. அதன் முக்கிய அம்சங்களையாவது இங்கே ஏன் சொல்லக் கூடாது? மசோதா, சட்டம் வரும் வரையில்

அதைச் சொல்லக்கூடாது என்று தடை ஏதாவது இருக்கிறதா? சுருக்கமாக, குறைந்தபட்சம் முக்கிய அம்சங்களையாவது அமைச்சரவர்கள் இங்கே அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, கைத்தறி நெசவாளர்களின் வேலை நிலைமை, அவர்களின் ஊதியம், வேலைப் பாதுகாப்பு ஆகியவை பற்றியும், கைத்தறி நெசவாளர்களின் நலன்களைப் பாதுகாக்க ஓர் தனிச் சட்டம் இயற்றுதல் பற்றியும் ஆராய்வதற்காகக் குழு அமைக்கப் பட்டது; தனிச் சட்டம் இயற்ற, அந்தக் குழுவின் பரிந்துரையை ஒட்டித் தனிச்சட்டம் கொண்டுவர இருக்கிறோம், அப்பொழுது விரிவாகப் பேசலாம், ஒரு முடிவுக்கு நாம் வரலாம். ஆக, இந்தக் குழு அமைக்கப்பட்டதே, தனியாக ஒரு சட்டம் கொண்டுவர அரசுக்குப் பரிந்துரை வழங்க, அவர்கள் பரிந்துரை வழங்கி விட்டார்கள். நாங்களும் சட்டம் கொண்டுவரப்போகிறோம், இப்பொழுது அதைப்பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டுமென்றால் அதில் என்ன இலாபம் இருக்கிறது என்று புரியவில்லை. அரசுக்குப் பரிந்துரை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட குழு இது, அரசுக்குப் பரிந்துரையையும் கொடுத்துவிட்டது, அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது, மசோதா கொண்டு வரப்போகிறோம், அப் பொழுது விரிவாக விவாதிக்கலாம். இதைப்பற்றி உறுப்பினர் களுக்குக் கொடுக்க வேண்டுமா, அதில் சட்டச் சிக்கல் இருக்கிறதா என்று பரிசீலனை செய்கிறேன்,

[முற்பகல் 9·40]

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, இந்த ராஜா சுப்பிரமணியம் குழு இந்த அரசாங்கம் போட்டதில்லை; அது பரவாயில்லை, ஆனால், இந்தக் குழுவின் சிபாரிசுகள், சூழ்நிலை, டர்ம்ஸ் ஆஃப் ரெஃபரன்ஸ் இன்றைக்கு மாறிப் போயிருக்கின்றன, கைத்தறிக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்று போடப்பட்ட குழு இது, ஆனால், இப் பொழுது விசைத்தறிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று மத்திய சர்க்கார் அறிவித்திருக்கிற நிலையில் தற்போதுள்ள சூழ் நிலையைக் கருத்தில் கொண்டு, ராஜா சுப்பிரமணியம் குழுவை மறுபடி போட்டு, அதன் சிபாரிசுகளை அறிய அரசாங்கம் வேறு முயற்சிகளைச் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, இந்தக் குழு போட்டது குடியரசுத் தலைவர் ஆட்சியின் பொழுது. மசோதா கொண்டு வரும்போது மாண்புமிகு உறுப்பினர் தன்னுடைய கருத்துக்களை எல்லாம் வழங்கலாம். விரைவிலே சட்டம் கொண்டு வரவேண்டுமென்பது எல்லா உறுப்பினர்களுடைய ஆசை. நீங்கள் (குறுக்கீடு) உட்பட, எங்களுடைய ஆசையும் அதுதான். எனவே சட்டத்தைக் கொண்டு வருவோம். அதற்குப் பிறகு திருத்தங்கள் கொண்டு





வருவோம், தேவைகளைப் பொறுத்து, சட்டத்தின் செயல் முறையைப் பார்த்து, மறுபடியும் திருத்தங்கள் கொண்டு வருவோம். (திரு. க. சுப்பு உட்கார்ந்து கொண்டே குறுக்கீடு)

We are in the evolution stage, மாற்றங்கள் செய்து கொண்டே போகிறோமே தவிர static ஆக நின்று விடப் போவதில்லை.

திரு. க. சுப்பு: மறுபடியும் கேட்டு......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து உட்காருங்கள். அழைத்த பிறகு பேசுவது என்ற மரபுக்கு தாங்கள் உட்படப் போகிறீர்களா? அல்லது தாங்கள் எழுந்தபொழுதெல்லாம் பேசுவேன் என்று சொல்கிறீர்களா? தானாகவே எழுந்து நின்று, தானாகவே பேசுகின்ற முறை இந்த அவையிலே இப்பொழுது கிடையாது. ஆகவே உங்களுக்கு அனுமதி கிடையாது.

திரு. மு. அம்பிகாபதி: தலைவரவர்களே, இந்த ராஜா சுப்பிரமணியம் குழு 25—5—1976 அன்று அமைக்கப்பெற்றதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது 2 வருஷம் 8 மாதங்கள் கடந்திருக்கின்றன. இருந்தும் குழுவினுடைய அறிக்கை சிதம்பர இரகசியமாக இருப்பதன் நோக்கம் என்ன? (திரு. க. சுப்பு உட்கார்ந்து கொண்டே குறுக்கீடு.)......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுப்பு உட்கார்ந்து கொண்டே பேசுகிறார். அவர் முடிக்கட்டும், நீங்கள் உட்காருங்கள்.

திரு. க. சுப்பு: தலைவரவர்களே.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுப்பு, இந்த அவையை அவையாகக் கருதுகிறீர்களா? தாங்கள் நினைத்தபொழுது உட்கார்ந்து கொண்டே பேசுவது, தங்களுக்கு அதுதான் இலக்கணம் என்றால் அதுபற்றி நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. இனிமேல் இப்படி நடப்பதை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை. நான் உங்கள் தலைவரிடம் சொல்லலாம் என்றாலும் தலைவர் இல்லை. கொறடாதான் இருக்கிறார். கொறடா திரு. கிட்டப்பா அவர்களைத் தான் நான் கேட்க வேண்டும். உங்களை நான் கேட்பதாக இல்லை. கட்சியிலே பொறுப்பிலே உள்ளவரைத்தான் நான் கேட்கிறேன். காரணம், திரு. சுப்புவைக் கேட்டு கேட்டு, எனக்கு சலித்தாகி விட்டது. நீங்கள் அதிகாரமாக கையைத் தூக்கிக்கொண்டு எழுந்து நிற்கிறீர்கள். அனுமதியில்லாமல் எழுந்து நிற்கிறீர்கள். உட்கார்ந்துகொண்டே தலைவர் அவர்களே, தலைவர் அவர்களே என்று சத்தம் போடுகிறீர்கள். அப்படியும் நான் எப்பொழும் தாராளமாக இருக்கிறேன். இதைப் பற்றிய முடிவு ஏற்பட்ட பிறகுதான் நான் அடுத்த கேள்விக்குப் போகப் போகிறேன். எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களும் இதற்கு ஒரு முடிவு கட்டித்தான் பேச வேண்டும்.......

திரு. க. சுப்பு: நீங்கள் கூட உட்கார்ந்து கொண்டேதான் பேசுகிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் உட்கார்ந்து பேசலாம். நான் ரூலிங் கொடுக்கும்போதுதான் நின்று கொண்டு பேச வேண்டும். மற்றவைகளைப் பேசும்பொழுது உட்கார்ந்து பேசலாம். நான் உட்கார்ந்து பேசுவதைப் பற்றிக் கேட்பது தவறான விவகாரம்.

திரு. க. சுப்பு: நீங்கள் உட்கார்ந்து பேசலாம் என்று எந்த விதியில் இருக்கிறது? காட்டுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து தாங்கள் இந்த அவையிலே இருக்கிற மரபைக் காப்பாற்ற விதிகளுக்கு உட்பட்டுப் பேசத் தயாராக இருக்கிறீர்களா? அல்லது, 'நான் என் இஷ்டத்திற்குத்தான் பேசுவேன்' என்று சொல்கிறீர்களா? நான் அவையை ½ மணிநேரம் அமைதியாக இருக்க வைக்கிறேன், நீங்கள் பேசுங்கள். (திரு. சுப்பு: குறுக்கீடு) நீங்கள் உட்கார்ந்து கொண்டே தலைவர் அவர்களே என்று சொல்வது, என் அனுமதியில்லாமல் பேசுவது, ஆக எனக்குள்ள சங்கடத்தை நான் அவைக்குச் சொல்கிறேன், நீங்கள் ஏன் குறுக்கிடுகிறீர்கள்? தாங்கள் இப்படி ஒரு வழி முறையைக் கடைப்பிடிப்பது என்றால் நான் உங்கள் கட்சிக் கொறடாவைத்தான் நம்பியிருக்கிறேன். உங்கள் தலைவர் இல்லை. எனக்கு வேறு வழியில்லை. உங்கள் கட்சியைப் பொறுத்த வரை உறுப்பினர்களிடம் சொல்லி எதுவும் நடைபெறவில்லை. தலைவர்களை வைத்துத்தான் உறுப்பினர்களிடம் சொல்ல வேண்டியிருக்கிறது.

திரு. கோ. இளங்கோவன்: பாய்ன்ட் ஆஃப் ஆர்டர்.

திரு. கே. கந்தசாமி: பாயின்ட் ஆஃப் ஆர்டர்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தின்பொழுது ஒழுங்குப் பிரச்னை இல்லை.

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவரவர்களே, தாங்கள் சொன்னதற்கு தொடர்புடையது......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, ஒழுங்குப் பிரச்னையை அனுமதிக்க முடியாது.

திரு. கோ. இளங்கோவன்: * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பேசியதை எல்லாம் நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



திரு. கோ. இளங்கோவன்: அப்படி இருக்கும்போது எங்கள் தலைவரைப்பற்றி அவ்வாறு சொல்லியதற்கு நான் மெத்த வருத்தப் படுகிறேன். (கூச்சல் குழப்பம்.)

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் பேசும்பொழுது எதிர்க் கட்சித் தலைவர் இல்லை, துணைத் தலைவர் இல்லை, ஆகவே தலைவர்களையாவது கேட்கலாம், ஆனால் அவர்கள் இல்லை, கொறடா தான் இருக்கிறார், அவரிடம்தான் சொல்லவேண்டும் என்று சொன்னீர்கள். நமது மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது முதல் அமைச்சர் இல்லை என்று சுட்டிக் காட்டினார். லீடர் ஆப் தி அவுஸ் என்ற முறையில் நான் இருக்கும் போது அந்த பிரச்சினை எழவில்லை.

திரு. கோ. இளங்கோவன் : பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். நான் சொன்னதை நன்றாகப் புரிந்து கொண்டு பேசுங்கள். நான் குறிப்பிட்ட உறுப்பினர் உட்கார்ந்து கொண்டு, குரல் கொடுத்துக் கொண்டு பேசுகிறார் என்று சொன்னேன். இதிலே திரு. இளங்கோவனுக்கு என்ன வந்தது? எதிர்க் கட்சித் தலைவர்களுடன் அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு ஒன்றை எடுத்தோம். அதை இப்போது சொல்லுகிறேன். உறுப்பினர்கள் இந்த அவையிலே ஓரளவுக்கு விதிகளுக்கு உட்படாமல் போனால் அந்தந்தக் கட்சித் தலைவர்கள் கட்டுப்படுத்த வேண்டும் என்று நாங்கள் முடிவெடுத்திருக்கிறோம். அதன் அடிப்படையில் உறுப்பினர்கள் எனக்கும் மீறிப் போகிறபோது அந்தத் தலைவர்களை கூப்பிட்டுக் கட்டுப்படுத்த வேண்டும் என்று அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவெடுத்தோம். அதை ஒட்டித்தான் சொன்னேன். யாரையும் பழித்தோ, இழித்தோ சொல்லவேண்டும் என்ற நோக்கத்திலே அல்ல. ஆகவே எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்ற நோக்கத்திலே கேட்டேனே தவிர, வேறல்ல. உட்கார்ந்து பேசுவதும், குரல் கொடுத்து என்னுடைய கவனத்தை ஈர்ப்பதும் போன்ற வழக்கம் எப்போதும் இந்த மன்றத்திலே ஏற்பட்டது இல்லை. அந்த வழக்கத்தை மறுபடியும் உண்டாக்காதீர்கள் என்று தான் நான் பணிவோடு கேட்டேனே தவிர, யாரையும் குறை கூற வேண்டும் என்ற நோக்கத்திலே அல்ல. (குறுக்கீடு) திரு. இளங்கோவன், நான் சொன்ன விளக்கத்திற்குப் பிறகு ஒன்றும் தேவையில்லை.

திரு. மு. அம்பிகாபதி : கேள்வி நான் கேட்டுக் கொண்டிருந்தேன்......

திரு. கோ. இளங்கோவன் : எங்கள் தலைவர் முதலமைச்சராக இருந்தபோது........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சர் இல்லை என்றாலும், அவை முன்னவர் இருககிறார்.

திரு. கோ. இளங்கோவன்: எதிர்க் கட்சித் தலைவர், முதலமைச்சராக இருந்தபோது 9 மணிக்கே அவைக்கு வந்துவிடுவார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இளங்கோவன், தாங்கள் அவையின் மரபைத் தெரிந்துகொண்டு பேசவேண்டும்.

திரு. கோ. இளங்கோவன் : நான் இன்றுதான் முதன் முறையாகப் பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதன் முறையாகப் பேசுகிறவர் தெரிந்துகொண்டு பேசுங்கள்.

திரு. கோ. இளங்கோவன் : நான் இரண்டாவது முறையாக இந்த மன்றத்திற்கு வந்திருக்கிறேன். எனக்கும் மரபுகள் தெரியும்.

(திரு. மு. அம்பிகாபதி எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அம்பிகாபதி, நீங்கள் உட்காருங்கள்.

திரு. மு. அம்பிகாபதி : ஏன், நான் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தேன், திரு. சுப்பு தலையிட்டார். ஏன் நான் உட்காரவேண்டும், உட்கார முடியாது.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே . . . . . . .

(திரு. அம்பிகாபதி நின்றுகொண்டிருந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். நான் அழைக்கிறேனா இல்லையா என்று பாருங்கள்.

திரு. க. சுப்பு : அவர் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கும் போது நான தலையிட்டதாகச் சொல்கிறார். இது முறைதானா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் தலையீடு செய்ததாக ஏன் நினைக்கிறீர்கள்? அவர் அறிவுரை சொன்னதாக ஏற்றுக் கொள்ளுங்கள், எதையும், நல்லபடியாக ஏற்றுக் கொண்டால் தவறு தெரியாது.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ராஜா சுப்பிரமணியம் அவர்களுடைய குழு 21-5-76.லே அமைக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அறிக்கை வந்து இப்போது 2 வருடம் 8 மாதமாகின்றன. இன்னும் அது சிதம்பர இரகசியமாக இருப்பதன் மர்மம் என்ன? கைத்தறித் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக உடனடியாக இந்த அவையில் அந்தக் குழுவின் பரிந்துரை அறிவிக்கப்படுமா என்பதை மீண்டும் கேட்க விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இதற்கு முன்னதாகவே நான் சொல்லிவிட்டேன். கலந்து ஆலோசித்து முடிவெடுக்கிறேன் என்று.

## அணைக்கட்டு கிராமத்தில் குடிநீர் வழங்கல்.

* வினா எண் 91—திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அணைக்கட்டுத் தொகுதி அணைக்கட்டு கிராமத்தில் குடிநீர் பற்றாக் குறை இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) அந்தப் பற்றாக்குறையைப் போக்க (T.W.A.D.) மூலம் கந்தநேரியில் வெட்டப்பட்டுள்ள கிணற்றிலிருந்து குழாய் மூலம் குடிநீர் கொண்டுவந்து வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) அரசு கவனத்துக்குக்கொண்டு வரப்படவில்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

[முற்பகல் 9-50]

திரு. ரா. மார்க்கபந்து : தலைவரவர்களே, மேற்படி அணைக் கட்டு கிராமம் அணைக்கட்டு என்ற பெயரைத் தாங்கி இருந்தாலும் குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லாது இருக்கிறது. அருகாமையில் உள்ள கந்தநேரி கிராமத்தில் அரசு செலவில் கிணறு வெட்டி, பம்ப் செட் டுவாட் மூலம் போடப்பட்டு இருக்கிறது. அந்தக் கிணற்றுத் தண்ணீரைப் பயன்படுத்தி அந்த கிராமத்திற்கும் அந்தக் குடிநீர்த் திட்டத்தை எக்ஸ்டென்ட் செய்யவேண்டும் என்று அந்த வாரியத்திடமும் தெரியப்படுத்தி இருக்கிறோம். அதை அரசாங்கமும் பரிசீலித்து, அந்தப் பகுதி மக்களின் குடிநீர் பிரச்னைக்குத் தீர்வு காணவேண்டும் என்று தயவோடு கேட்டுக் கொள்கிறேன், வினா வாகக் கேட்கவில்லை.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, அணைக்கட்டு, சின்ன அணைக்கட்டு, வீரப்பன்பட்டி, அணைக்கட்டுக் காலனி, ஒட்டர் காலனி என்ற 5 குடியிருப்புகளும் 6, 4, 6, 3, 3 என்ற பிரிவில் வருகிறது. இந்த அரசு 1, 2 பிரிவில் உள்ள கிராமங்களுக்கு 31-3-79-க்குள்ளாக குடி தண்ணீர் கொடுத்து விடுவதாக முடிவு எடுத்துள்ளது. அதற்குப் பின்னால் 3-வது பிரிவு, 4-வது பிரிவு என்று எடுத்துக் கொள்ளப்படும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். மேலும் அணைக்கட்டு தொகுதியில் உள்ள பிரிவு 2-ஐச் சேர்ந்த, அதாவது 1 கிலோ மீட்டருக்குள் தண்ணீர் இருந்தாலும்-நாட் பாட்டபிள்-உப்புத் தண்ணீராக இருக்கின்றவை-வல்லாண்டரமும், மற்றும், அரிசன காலனி, கந்தநேரிக்கு அருகாமையில் உள்ள

பாலாற்றின் கரையோடு ஒரு வடி கிணறு தோண்டி அதன் மூலம் மேற்படி கிராமத்திற்குக்குடி தண்ணீர்த் திட்டம் அமைத்து குடிநீர் வழங்க முடிவு செய்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா அணைக்கட்டு கிராமம் பற்றியது. திரு. மு. ஆறுமுகம்.

திரு. மு. ஆறுமுகம் : தலைவரவர்களே, அணைக்கட்டுத் தொகுதியில் மட்டும் அப்படி இல்லை. பொதுவாகத் தமிழ்நாட்டிலே தண்ணீர்த் தட்டுப்பாடு இருந்து வருகிறது. (மணியடிக்கப்பட்டது)

## அரசு வாகனங்களுக்கு டீசல் இயந்திரங்கள்

* வினா எண் 92—திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரசு அலுவலகங்களில் உபயோகப்படுத்தும் ஜீப், அம்பாஸிடர் வாகனங்களுக்குச் சிக்கன நடவடிக்கையாக டீசல் இயந்திரங்கள் அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆம். 10. பெட்ரோல் ஜீப்களை, டீசல் வாகனங்களாகச் சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு மாற்றுவதற்கான முன்னோடித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான உத்தரவை அரசு 9-8-78-ல் பிறப்பித்துள்ளது.

திரு. துரை முத்துசாமி ; பேரவைத் தலைவரவர்களே, அந்தத் திட்டத்தை ஊராட்சி ஒன்றியங்களுக்கும், தாலுகா அலுவலகங்களுக்கும் விரிவுபடுத்தும் உத்தேசம் உண்டா? அதேபோல், பெட்ரோல் டார்கட் இன்டர்டியூஸ் செய்து இருக்கிறார்கள். அதை இன்கிரீஸ் செய்ய அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, பெட்ரோலின் விலை உயர்வு காரணமாக டீசல் பயன்படுத்த ஜீப்புகள், அம்பாசிடர் போன்ற அரசு வாகனங்களைக் கொண்டு வருவதால் அதிகச் சிக்கனச் செலவு ஏற்படும் என்ற அடிப்படையில்தான் முதல் படியாக ஆய்வின் அடிப்படையில் 10 ஜீப்புகளை டீசலுக்கு மாற்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அதனுடைய செயல்முறையைப் பார்த்துப் பின்னர் மற்ற ஜீப்புகளையும் டீசலாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 10 மணிக்குள் முடிக்க வேண்டும். இல்லையென்றால், நான் மீதியுள்ளவற்றை நடவடிக்கைக் குறிப்பில் அச்சிட்டச் சொல்லும் நிலைமை ஏற்படும்.



திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு அந்தத் திட்டம் கொண்டு வரப்படும் என்று சொன்னார்கள். அது என்ன கட்டுப்பாடு?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, குறைந்தது அந்த பெட்ரோலில் இருந்து டீசலாக மாற்றப்படுவதற்கு எடுத்துக்கொள்ளப்படுகிற ஜீப்புகள் எல்லாம் மேற்கொண்டு 6 ஆண்டுக் காலத்திற்கு ப்பயன் அளிக்கக்கூடிய தரத்தில் இருக்க வேண்டும் என்பது முக்கியமான கட்டுப்பாடு ஆகும்.

திரு. மு. ஜான் வின்சென்ட் ; தலைவரவர்களே, பஞ்சாயத்து யூனியன்களிலுள்ள ஜீப்கள் அடிக்கடி ரிப்பேர் ஆகி, பழுது பார்ப்பதற்காக ஒர்க்ஷாப்புக்கு அனுப்பப்படுகின்றபோது மாதக்கணக்கில் அங்கேயே நிற்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. அதனால் யூனியன் பகுதிகளில் செய்யப்பட வேண்டிய வேலைகளைக் கவனிப்பதற்குக் காலதாமதம் ஏற்படுகிறது. இந்தத் தாமதத்தைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, அரசு பராமரிப்புத் தொழில் பேட்டைகள் மிகக்குறைவாக இருந்ததால் காலதாமதம் இதுவரை இருந்தது. மேற்கொண்டு 5 இடங்களில் பராமரிப்புத் தொழில் பேட்டைகளை அரசு அமைத்திருக்கிறது. அவை எல்லாம் நடைமுறைக்கு வந்தவுடன் இந்தக் காலதாமதம் தவிர்க்கப்பட்டு விடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : தலைவரவர்களே, டீசல் எஞ்சினாக மாற்றினால் அந்த எஞ்சின் சீக்கிரம் பழுதாகிவிடுகிறது என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அப்படிப்பட்ட ஜீப்களுக்கு 'மெட்டடோ ஃபோர் சிலிண்டர் எஞ்சின்களை' போட்டால் அத்தகைய சிக்கல் இல்லை என்று கூறப்படுகிறது.

திரு. வி. கொ. சின்னசாமி : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஜீப்கள் ரிப்பேர் ஆகி அல்லது 'கண்டம்டு' நிலையில் பல்லாண்டுகளாக ஏலம் விடப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டு, மிக மோசமான நிலையில் இருக்கின்றன. அப்படிப்பட்ட ஜீப்களை உடனடியாக ஏலம் விட நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்கு அப்படிப் பல்லாண்டுக் காலமாக ஏலம் விடாமல் ஜீப்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன என்று சுட்டிக் காட்டினால் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, பெட்ரோலில் ஓடக்கூடிய ஜீப் ஒன்றை டீசலில் ஓடக்கூடிய ஜீப்பாக மாற்றுவதற்கு எவ்வளவு செலவாகிறது? டீசலில் ஓடக்கூடிய எஞ்சின் உள்ள ஜீப்பை விலைக்கு வாங்கினால் எவ்வளவு கூடுதல் தொகை ஆகும் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : குறைந்தபட்சம் 18,000 ரூபாயிலிருந்து 23,000 ரூபாய் வரை ஆகும். அதைவிட எவ்வளவு சிக்கனமான முறையில் செயல்படுத்த முடியும் என்பது பற்றிய ஆய்வு நடந்து வருகிறது.

## ஆரணி—பெங்களூர் விரைவுப் பேருந்துப் பணி

* வினா எண் 93—திரு. வீ. அர்ச்சுனன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆரணிக்கும் பெங்களூருக்கும் இடையே விரைவுப் பேருந்துப் பணியினைத் தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இல்லை.

## கெலமங்கலம், தளி பகுதிகளுக்குச் சிறப்புத் திட்டம்

* வினா எண் 94—டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் தருமபுரி மாவட்டம், கெலமங்கலம், தளி ஆகிய பகுதியைத் தேர்ந்தெடுத்து அபிவிருத்தி செய்ய மத்திய அரசு ரூபாய் ஒரு கோடித் திட்டம் தீட்டியுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) எப்போது முதல் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ), (ஆ) கெலமங்கலம் தளி ஆகிய பகுதிகள் உள்ளிட்ட தர்மபுரி மாவட்டத்தில் (முழுவதும்) ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தினை ரூ. 103.19 லட்சம் செலவில் செயல்படுத்த தமிழ்நாடு அரசு சிபாரிசு செய்தது. மேற்படித் திட்டத்தை ரூ. 69.665 லட்சம் செலவில் செயல்படுத்த 23-3-1978-ல் இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத் திட்டம் தர்மபுரி மாவட்ட மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் இவ்வாண்டு ஏப்ரல் திங்களிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.





டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் கீழ் என்னென்ன தொழில்கள் அல்லது என்னென்ன வாய்ப்புகள் உருவாக்கப்பட இருக்கின்றன ? அங்கே செயற்கைக் கருத்தரிப்பு நிலையம் ஏற்படுத்த அதிலிருந்து எவ்வளவு தொகை ஒதுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இத் திட்டத்தின் மூலம் பல்வேறு திட்டங்கள் உருவாக்கப்பட உள்ளன. அந்தத் திட்டங்களை எல்லாம் படித்தால் நேரம் போதாது. ஆனாலும் செயற்கைக் கருத்தரிப்பு மூலம் கலப்பு இனத்தை உருவாக்க 19,93,500 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

## ஒழுங்குமுறை விற்பனைக் கூடத் தலைவர்கள் மாநாடு

* வினா எண் 95—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னையில் உள்ள கிரீன்வேஸ் ரோட் அலுவலகத்தில் 1977 ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 12, 13, 14 ஆகிய தேதிகளில் நடைபெற்ற ஒழுங்குமுறை விற்பனைக்குழுத் தலைவர்கள், செயலாளர்கள் கூட்டத்தில் ஒழுங்குமுறை விற்பனை சம்பந்தமாக என்ன முடிவுகள் எடுக்கப்பட்டன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : விவர அறிக்கை* அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவரவர்களே, இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் விற்பனை செய்வதன் காரணமாக விவசாயிகளுக்கு நல்ல பலன் கிடைக்கிறது. ஆகவே, கமிஷன் மண்டிக்கடைக்காரர்கள் மூலம் விற்பனை செய்வதை நிறுத்திவிட்டு, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலமாகவே விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, மூலக் கேள்வி 12, 13, 14 தேதிகளில்-டிசம்பர் மாதத்தில்-நடைபெற்ற ஒழுங்குமுறை விற்பனைக்குழுத் தலைவர்கள், செயலாளர்கள் கூட்டத்தில் ஒழுங்குமுறை விற்பனை சம்பந்தமாக என்ன முடிவுகள் எடுக்கப்பட்டன என்பது. ஆனால் உறுப்பினர் அவர்கள் வேறு ஒரு கேள்வியைக் கேட்கிறார்கள். நாளை இந்த அவையில் ஒழுங்குமுறை விற்பனைக்கூட சட்டம் வர இருக்கிறது. அதன்மீது பேசும்போது உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொன்னால் தகுந்த பதில் சொல்கிறேன்.

---

[* 894ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.]

[1978 செப்டம்பர் 8

## ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்

* வினா எண் 96—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தையும் தனித்தனி நிர்வாக அமைப்பாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(ஆ) இந்த வினாவிற்கு இடமில்லை.

[முற்பகல் 10-00]

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவரவர்களே, மாவட்ட அளவிற்கு இப்போது ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் நிர்வாக அமைப்புகளின்கீழ் வருகின்றன. வட மாநிலங்களில் இருக்கின்ற ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் தனித் தனி நிர்வாக அமைப்பாகச் செயல்பட்டு வருகின்றன என்று கேள்விப்படுகிறோம். அந்தக் கொள்கையினை ஏற்று இந்த அரசும் ஒவ்வொரு ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தையும் தனித்தனியான நிர்வாக அமைப்பின்கீழ் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, பஞ்சாப் போன்ற மாநிலங்களிலே ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் தனித்தனியாக உள்ள நிர்வாக அமைப்புகளின்கீழ் செயல்பட்டு வருகின்றன. ஆனால் இன்று இருக்கக்கூடிய சட்டம் அதாவது 1959-வது ஆண்டின் சட்டப்பிரிவின் கீழே எந்த உட்பிரிவுகளையும் அமைப்பதற்குரிய அதிகாரம் இல்லை. ஆகவே 1959-வது ஆண்டின் சட்டத்தை மீண்டும் திருத்தம் செய்து அதற்குப் பின்னாலே இது பற்றி யோசிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## கேரள மாநிலத்திலிருந்து தேக்கு மரங்கள் வாங்கல்

* வினா எண் 97—திரு. கே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பொள்ளாச்சி மரம் அறுக்கும் தொழிற்சாலைக்கு கேரள மாநிலத்திலிருந்து மரங்கள் வரவழைக்கப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு ரூபாய் மதிப்புள்ள மரங்கள் வரவழைக்கப்படுகின்றன?



1978 செப்டம்பர் 8]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:

(அ) ஆம்.

(ஆ) கடந்த சில ஆண்டுகளில் வாங்கப்பட்ட தேக்கு மரங்களின் சுமாரான மதிப்பு—

| | |
|---|---|
| 1974—75ல் | ரூ. 6,42,000 |
| 1975—76ல் | ரூ. 3,69,000 |
| 1976—77ல் | ரூ. 31,000 |
| 1977—78ல் | ரூ. 6,89,000 |
| 1978—79ல் (15. 6. 78 முடிய) | ரூ. 9,67,000 |

திரு. கே. பண்ணை சேதுராம்: பேரவைத் தலைவரவர்களே, தேக்கு மரங்களின் ஃபினிஷ்ட் குட்ஸ்-கள் வேறு மாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்றனவா? அப்படி அனுப்பப்படுவதால் லாபம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, மூலக் கேள்வி தேக்கு மரங்கள் வாங்கப்படுகின்றனவா என்பது, வாங்கப்படுகிறது என்பது அதற்குப் பதில் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, நமது மாநிலத்தில் தேக்கு மரங்கள் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தினால் தேக்கு மரங்களை அதிகமாக உற்பத்தி செய்வதற்கு அரசாங்கம் தீவிர திட்டங்கள் ஏதாவது வைத்திருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, தேக்கு மரங்கள் வளர்ப்பதற்கு நீர் வளம், மலை வளம் ஆகியன இருக்க வேண்டும். எனவே தமிழகத்திலே தேக்கு மரங்களை அதிக அளவில் வளர்ப்பதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்கின்ற வனத் துறையைப் பற்றிய கேள்வியை தொடர்புடைய அமைச்சரிடம் கேட்டு விடை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பொ. சிகாமணி: பேரவைத் தலைவரவர்களே, கேரளாவில் தேக்கு மரங்களின் ரேட் எந்த முறையில் நிர்ணயிக்கப்படுகின்றன என்பது பற்றி விவரம் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, பொது ஏல முறையின் மூலமாக இவைகளுக்கான விலைகள் நிர்ணயம் செய்யப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1978 செப்டம்பர் 8

## தருமபுரி மாவட்டத்தில் பால் சேகரிப்புச் சங்கங்கள்

* வினா 98—டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் பால்வள வளர்ச்சி நிறுவனத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள பால் சேகரிப்பு சங்கங்கள் எத்தனை?

(ஆ) இன்னும் எத்தனை சங்கங்கள் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :

(அ) தர்மபுரி மாவட்டத்தில் தற்பொழுது 150 கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

(ஆ) 31-3-1979 வரையிலான நடப்பு ஆண்டில், மேலும் 100 முதல் 150 வரை கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, உருவாக்கப்பட்ட பல சங்கங்கள் இன்னும் பதிவு செய்யப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அதோடு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சீஃப் ப்ரொமோட்டர் என்ற பதவி ஏற்படுத்தப்படுமா, அந்த வகையில் தர்மபுரி மாவட்டத்திற்கும் நியமிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட 150 சங்கங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மேலும் 100 முதல் 150 சங்கங்களை 1979 ஆம் ஆண்டுக்கு முன்னதாகவே அமைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அதன்படி இந்தச் சங்கங்கள் அமைக்கப்பட இருக்கின்ற காரணத்தால் தாமதம் ஏற்படுவது என்பது அரசினுடைய கவனத்திற்கு வரவில்லை. மேலும் இந்த சீஃப் ப்ரொமோட்டர்கள் அமைப்பது பற்றிய விஷயத்தை அரசு பரிசீலித்து வருகின்றது. பரிசீலித்த பின் விரைவிலே தர்மபுரி மாவட்டத்திலேயும் ஒரு சீஃப் ப்ரொமோட்டர் அமைப்பதற்கான ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## சித்த வைத்தியம் பற்றிய சுவடிகள் முதலியன.

* வினா 99—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் சித்த மருத்துவம் பற்றிய கிடைப்பதற்கரிய கையெழுத்துப் பிரதிகளையும் ஓலைச் சுவடிகளையும் அச்சுப் பிரதிகளையும் சேகரிப்பதற்கென அரசு ஒரு குழுவை அமைத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இதுவரை அக்குழு கண்டுபிடித்தவைகளின் விபரம் என்ன ?



1978 செப்டம்பர் 8]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் ;

(அ) ஆம்.

(ஆ) இக் குழு இதுகாறும் கீழ்க்கண்டவைகளைத் திரட்டியுள்ளது:—

(1) சித்த மருத்துவ அரிய அச்சிட்ட நூற்கள்—561

(2) சித்த மருத்துவ ஓலைச்சுவடிகள் (பாளையங்கோட்டை இந்திய மருத்துவக் கல்லூரியி —360 லிருந்து வரப்பெற்றவையும் சேர்த்து)

(3) சித்த மருத்துவ கையேட்டுப் பிரதிகள் — 84

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, அரசுக்கு இது வரை கிடைத்த ஓலைச்சுவடிகள் போன்றவற்றை அரசு அந்தக் குழுவின் மூலம் பரிசீலனை செய்ததா ? அவ்வாறு பரிசீலனை செய்து அவற்றை எந்தெந்த வகையிலே பயன்படுத்தி இருக்கிறது. பயன் படுத்த இருக்கிறது என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே அவற்றைப் பரிசீலனை செய்த பின் அவற்றை அச்சிட்டு வெளியிட வேண்டும் என்ற முறையில் இன்றைக்கு அந்த குழு பணியாற்றிக் கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் ; தலைவரவர்களே, இப்போது அமைச்சரவர்கள் தெரிவித்த அந்த ஏடுகள் ஏதாவது 1975-வது ஆண்டு டிசம்பர் மாதத்திற்கு பின்னாலே அந்தக் குழுவினாலே பெறப்பட்டிருக்கின்றனவா ? அந்தக்குழு 1976-வது ஆண்டு ஜனவரி மாதத்திற்குப் பின்னாலே பணியாற்றி இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : அதைப் பற்றிய விளக்கம் இங்கே தரப்படவில்லை, ஆகவே தனிக் கேள்வி போட்டால் சொல்கிறேன்.

## ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள்.

* வினா 100 திரு. க. வேணுகோபால் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கிராமப்புறங்களில் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் நாள் முழுவதும் மருத்துவர்கள் இருந்து பணியாற்றுகிறார்களா ?

(ஆ) முழு நேரமும் மருத்துவர்கள் இருந்து பணியாற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ) ஆம்.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. த. வேணுகோபால் : கிராமப் புறங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பகுதிநேர மருத்துவர்களாக பணி புரிகிற மருத்துவர்களை நிரந்தரமாக்கி அவர்கள் பணி புரிய ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : ஆரம்ப சுகாதார நிலையங்களில் பகுதிநேர மருத்துவர்கள் இல்லை. முழுநேர மருத்துவர்களாக இரண்டு மருத்துவர்கள் பணியாற்றுகிறார்கள். ஒருவர் கிராமங்களுக்குச் சென்று விட்டால் இன்னொருவர் மருத்துவமனையில் இருந்து கொண்டு காலையிலும் மாலையிலும் நோயாளிகளைக் கவனித்து வருகிறார். இதுதான் ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடை பெறுகிற வழிமுறை. தற்போது அப்படி இருக்கிற இரண்டு மருத்துவர்கள் போதவில்லை என்பதால் மூன்றாவது மருத்துவர் இன்றைக்குப் போடப்பட்டிருக்கிறார். அவரும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணியாற்றிக் கொண்டு வருகிறார்.

திரு. பொ. விஜயராகவன் : இன்றைக்கு நமது சுகாதாரத் துறை செயலாளர் அவர்கள் 192 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 44 நிலையங்களில் மருத்துவர்கள் இல்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். அதற்கான காரணம் என்ன? அதை நிவர்த்திப்பதற்கு இந்த அரசு என்ன முடிவு எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : போடப்பட்ட மருத்துவர்கள் பலபேர்கள் அங்கு போய்ச் சேரவில்லை என்ற கணக்கு வந்திருக்கிறது. அவர்கள் மேல் நடவடிக்கைகள் எடுப்பதோடு அங்கே டாக்டர்களைப் போடுவதற்கான வழிமுறைகளும் கையாளப்படுகின்றன.

திரு. சி. ஆறுமுகம் : ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு டாக்டர் கிராமப் பகுதிகளுக்குச் செல்வதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள், அந்த டாக்டர் எந்த வசதிகளைக் கொண்டு கிராமங்களுக்குச் செல்கிறார்கள்? ஏற்கனவே அவர்களுக்கு அளிக்கப் பட்டிருந்த வாகன வசதி நிறுத்தப் பட்டிருக்கிறது. அப்படி நிறுத்தப் பட்டிருக்கிற வகையில் எப்படி அவர்கள் போகிறார்கள் என்பதை அரசு அறியுமா? அப்படி அறிந்திருந்தால் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படயிருக்கின்றன?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் குடும்ப நலத் திட்டத்தின் சார்பாக ஒரு வண்டி தரப்பட்டிருக்கிறது. மருத்துவத்துறை



சார்பாக ஒரு வண்டி தரப்பட்டிருக்கிறது, அந்த வண்டிக்குத் தேவையான பெட்ரோல் போட்டுக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே அவர்கள் சென்று கொண்டிருக்கிறார்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : டாக்டர்கள் எல்லா நேரங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் இருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். பல ஆரம்ப சுகாதார நிலையங்களில் டாக்டர்களுக்கு குடியிருப்பு இல்லாததால் பக்கத்திலுள்ள நகரங்களில் வசித்துக் கொண்டு வருகிறார்கள், ஆகவே காலை நேரத்தில் நான்கு மணி நேரம் தான் டாக்டர்கள் இருக்கிறார்களே தவிர பாக்கியுள்ள நேரங்களில் டாக்டர்கள் இருப்பதில்லை. ஆகவே அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்து அங்கேயே அவர்கள் தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : இதற்கு முன்னால் மருத்துவமனைகள் கட்டப்பட்ட நேரத்தில் குடியிருப்பிற்கான கட்டடங்கள் பல இடங்களில் கட்டப்படவில்லை. ஆகவே அவற்றையெல்லாம் கணக்கெடுத்து மருத்துவர்களுக்கு அங்கே குடியிருப்புகள் கட்டித் தருவதற்கான வழி முறைகளுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அதற்கான செயல்முறைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

திரு. ரா. மார்க்கபந்து : ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றுகிற டாக்டர்களுக்குப் பொதுவாக வாகன வசதிகளை வைத்துக் கொண்டு ஆங்காங்குள்ள கிராமங்களுக்குச் சென்று வைத்தியம் செய்ய வேண்டும் என்ற முறை இருக்கிறது. ஆனால் அவர்கள் தனியாக ப்ரைவேட் ப்ராக்டீஸ் செய்ய அனுமதித்திருக்கிற காரணத்தால் எந்த ஒரு நல்ல காரியத்திற்காக இந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறக்கப்பட்டனவோ அந்த நோக்கம் நிறைவேறாதபடி தனிப்பட்ட முறையில் டாக்டர்கள் வைத்தியம் செய்து சம்பாதிப்பதற்கு வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே அதைத் தடுப்பதற்கு இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : உறுப்பினர் அவர்கள் கூறிய ஆலோசனை மீது இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. எம். எம். ஏ. ரசாக் : ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருந்துகள் பாதுகாப்பு வசதியோடு வைக்கப்படக்கூடிய வகையில் குளிர்சாதனப் பெட்டிகள் பல ஆரம்ப சுகாதார நிலையங்களில் காணப்படவில்லை. ஆகவே அப்படிப்பட்ட குளிர்சாதனப் பெட்டிகள் உடனடியாக வைப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

[1978 செப்டம்பர் 8

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : எங்கெங்கு இல்லை என்பதை உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பார்களேயானால் அங்காங்கு வைப்பதற்கு ஆவன செய்யப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஏற்கனவே ஜீப் வண்டி இல்லாத காலத்தில் கூட மருத்துவர்கள் சைக்கிளில் சப் செண்டர்களுக்குத் தவறாமல் சென்றார்கள். ஆனால் தற்சமயம் ஜீப் வண்டிகளுக்கு பெட்ரோல் குறைத்ததன் காரணமாக அறவே சப் சென்டர்களுக்கு மருத்துவ அதிகாரிகள் செல்வதை நிறுத்திவிட்டார்கள். ஆகவே அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து சப்-சென்டர்கள் நடைபெறுவதற்கு ஆவன செய்யப்படுமா ?

[முற்பகல் 10-10]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆண்டிப்பட்டி தொகுதியில் ஒரேவுரு ஆரம்ப சுகாதார நிலையம் தான் இருக்கிறது. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இதைப்பார்த்துவிட்டு இன்னொரு சுகாதார நிலையம் ஆரம்பிக்க வேண்டும் என்று முதல்வர் அவர்களுக்கு குறிப்பும் எழுதியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் தொகுதி ஒரே யூனியனுக்குள் அடங்கியதாக இருக்கும்.

திரு. கே. கந்தசாமி : எனது தொகுதி இருக்கும் யூனியன் பெரிய யூனியன், இதை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்ற ஆலோசனையும் அரசாங்கத்தினிடத்தில் இருக்கிறது. இப்போது இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் டாக்டர்களிடத்தில் மருந்து கேட்டால் கொடுப்பதில்லை. மருந்து இல்லை என்று சொல்லுகிறார்கள். கஷ்டப்பட்டு வேலை செய்து கொண்டிருக்கும் மக்கள் நிறைந்த பகுதி இந்த இடம். ஆகவே இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை அபிவிருத்தி செய்து, அங்கு முழு நேர டாக்டர்களையும் போட்டு, படுக்கை வசதி போன்றவைகளையும் செய்து கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கனிவோடு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை ஏற்று அதற்கு ஆவன செய்யப்படும்.



978 செப்டம்பர் 8]

திரு. கே. உச்சி : நீலகிரி மாவட்டத்தில் என்னுடைய கூடலூர் தொகுதியில் தூனேரி என்ற இடத்தில் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையம் பழையக் கட்டிடத்தில் நடைபெற்றுக் கொண்டுருக்கிறது. இதை மாற்றி புதிய கட்டிடத்தில் நடத்துவதற்காகப் புதிய கட்டிடம் கட்டப்பட்டு கடந்த ஜூன் மாதம் 9—ம் தேதியன்று முதல் அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த நாளது வரை திறக்கப்படவில்லை. எப்போது அந்தப் புதிய கட்டிடம் திறந்து வைக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான ஏற்பாடு செய்யப்படும்.

திரு. த. இராமசாமி ; சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, இராமனுதபுரம் தொகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றியத்திலுள்ள குறிப்பாக உச்சப்புள்ளி என்ற இடத்திலுள்ள சுகாதார நிலையத்திலும் சுமார் 20 நாட்களாக மருந்துகள் இல்லை என்ற விவரம் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. தேவிபட்டினத்தில் உள்ள ஆரம்பசுகாதார நிலையத்தில் பல நாட்களாக மருந்துகள் இல்லை என்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இதை கவனித்து அருள் கூர்ந்து உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மருந்துகள் இல்லை என்று தகவல் வந்திருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு எல்லாம் உடனடியாக மருந்துகள் அனுப்பப்படுவதற்கு உத்தரவு இடப்பட்டிருக்கிறது.

திரு. சி. ஆறுமுகம் ; ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் என்னென்ன மருந்துகள் இருக்கின்றன? பெரும்பாலும் இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சென்றால், தலைமை மருத்துவமனைக்குத் தான் அனுப்புகிறார்கள். இதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் ; பேரவைத் தலைவர் அவர்களே, அத்தியாவசியமான மருந்துகள் எல்லாம் ஆரம்ப சுகாதார நிலையங்களில் இருக்கின்றன. மருந்துகள் தரவில்லை, கொடுக்கவில்லை என்ற புகார் வருகின்ற இடங்களில் எல்லாம் மருந்துகளை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுமட்டுமல்லாமல், தவறு நடைபெறுகின்ற இடங்களைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இப்போது மருந்துகள் அதிகமாக இல்லை என்ற குற்றச்சாட்டு அதிகமாக வருவதில்லை. காரணம் தேவைப்படும் இடங்களுக்கெல்லாம் அவ்வப்போது மருந்துகள் அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

### மின் விளக்கு வசதியில்லாத அரிசனக் குடியிருப்புகள்.

வினா 201—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்சார விளக்குகள் அமைக்கப்பெறாத அரிசன காலனிகள் எத்தனை, மாவட்டவாரியாக ?

(ஆ) அவைகளுக்கு மின்விளக்கு வசதி செய்து கொடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

விடை— (அ) மின்சார விளக்குகள் அமைக்கப் பெறாத அரிசன குடியிருப்புகளின் மாவட்ட வாரியாக புள்ளி விவரம் கீழ்வருமாறு :

| | மாவட்டத்தின் பெயர். | மின்வசதி பெறாத அரிசன குடியிருப்புகள். |
|---|---|---|
| 1. | சென்னை .. .. .. .. | 12 |
| 2. | செங்கல்பட்டு .. .. .. | 25 |
| 3. | வட ஆற்காடு .. .. .. | 43 |
| 4. | தென் ஆற்காடு .. .. .. | 17 |
| 5. | சேலம் .. .. .. | 247 |
| 6. | கோயம்புத்தூர் .. .. .. | 70 |
| 7. | தர்மபுரி .. .. .. | 8 |
| 8. | நீலகிரி .. .. .. | 16 |
| 9. | தஞ்சாவூர் .. .. .. | 877 |
| 10. | திருச்சிராப்பள்ளி .. .. .. | 15 |
| 11. | புதுக்கோட்டை .. .. .. | 132 |
| 12. | மதுரை .. .. .. | 20 |
| 13. | இராமநாதபுரம் .. .. .. | 8 |
| 14. | திருநெல்வேலி .. .. .. | 12 |
| 15. | கன்னியாகுமரி .. .. .. | 57 |
| | மொத்தம் .. | 1,560 |



(ஆ) மின்சார விளக்குகள் அமைப்பதற்குத் தேவையான மூலதனத்திற்கு உரிய வருவாய் அரிசன குடியிருப்புப் பகுதிகளில், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கிடைப்பதில்லை. ஆனால் இப்பகுதிகளுக்கு தெரு விளக்குகள் அமைப்பதின் அவசியத்தைக் கருதி, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்படும் வருவாய் இழப்பீட்டை ஈடுகட்ட மூலதன மானியம் (Capital Subsidy) அரிசன நல நிதியிலிருந்து 1957-58ம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் தரப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 1977-78-ம் ஆண்டு முடிய 2,78,63,688 தமிழ்நாடு மின்வாரியத்திற்கு மூலதன மானியமாக வழங்கப்பட்டு, இதுவரை 21,008 குடியிருப்புகளுக்கு மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே, மின்வசதி அளிக்கப்படாத சுமார் 1,560 அரிசன குடியிருப்புகளுக்கு நாளடைவில் மின்வசதி அளிப்பதற்கான திட்டமொன்றைத் தயாரிக்க தமிழ்நாடு மின்வாரியம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

### திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணியசாமி கோவிலில் புதிய பயணிகள் விடுதி

வினா 202—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணியசாமி கோவிலில் புதிதாக கட்டப்பட்டுள்ள பயணிகள் விடுதிகள் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

(ஆ) இப்பணிக்கென ஏற்பட்ட செலவு எவ்வளவு ?

விடை—(அ) ரூ. 8,08,000.

(ஆ) ரூ. 7,36,616.11.

### Harijans and Backward Classes Hostels in Dharmapuri District.

*203— Dr. K. Samarasam : Will the Honourable the Minister for Harijan Welfare be pleased to state :—

(a) the names of Hostels in Dharmapuri District for Harijans and Backward Community Students and

(b) whether there is any proposal to construct more such hotels?

*Ans.—ஓர் அறிக்கை அவைமுன் வைக்கப்படுகிறது.

*895–896ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[1978 செப்டம்பர் 8

வினா 204—டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தருமபுரி மாவட்டத்தில் எத்தனை பிற்பட்டோர் நல மாணவ மாணவியர் விடுதிகள் உள்ளன ?

(ஆ) காவேரிப் பட்டணத்தில் இத்தகைய விடுதி உள்ளதா ?

விடை—

(அ) தருமபுரி மாவட்டத்தில் கீழ்க்கண்ட இடங்களில் 16 பிற்பட்டோர் நல மாணவ மாணவியர் விடுதிகள் உள்ளன :—

| விடுதிகள். | மாணவ மாணவியர் எண்ணிக்கை. |
|---|---|
| 1. கல்லூரி மாணவர் விடுதி, தருமபுரி .. | 277 |
| 2. கல்லூரி மாணவர் விடுதி, கிருஷ்ணகிரி | 150 |
| 3. மாணவர் விடுதி, ஒசூர் .. | 50 |
| 4. மாணவர் விடுதி, சிங்காரப்பேட்டை .. | 50 |
| 5. மாணவர் விடுதி, பாலக்கோடு .. | 60 |
| 6. மாணவர் விடுதி, போச்சம்பள்ளி .. | 50 |
| 7. மாணவர் விடுதி, அரூர் .. | 50 |
| 8. மாணவர் விடுதி, தோகரப்பள்ளி .. | 40 |
| 9. மாணவர் விடுதி, காரிமங்கலம் .. | 40 |
| 10. மாணவர் விடுதி, அஞ்செட்டி | 50 |
| 11. மாணவர் விடுதி, பெண்ணுகரம் .. | 50 |
| 12. மாணவர் விடுதி, மாரண்டஹள்ளி .. | 50 |
| 13. மாணவர் விடுதி, கோணங்கிநாயக்கன் ஹள்ளி | 50 |
| 14. மாணவர் விடுதி, கோட்டப்பட்டி .. | 50 |
| 15. மாணவியர் விடுதி, பாப்பாரப்பட்டி .. | 50 |
| 16. மாணவியர் விடுதி, காவேரிப்பட்டிணம் | 50 |

(ஆ) காவேரிப்பட்டிணத்தில் 50 மாணவியர் தங்கிப் பயில ஒரு மாணவியர் விடுதி உள்ளது.



1978 செப்டம்பர் 8]

சட்டம் சார்ந்த இயல் படிப்பிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள்.

வினா 205—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1976-77ம் ஆண்டு சட்டம் சார்ந்த இயல் படிப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) அதில் தாழ்த்தப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

விடை :—

| | 1976 (ஏப்ரல்). | 1977. |
|---|---|---|
| (அ) | பணியிலிருக்கும் மாணவர்—1<br>பணியில் அல்லாத மாணவர்—1. | பணியில் இருக்கும் மாணவர்கள்—2, |
| (ஆ) | 1 (பணியிலிருப்பவர்). | 1 |

சீர்திருத்தப் பள்ளிகள்

வினா 206—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் தயவு செய்து வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் உள்ள சீர்திருத்தப் பள்ளிகளின் எண்ணிக்கை என்ன?

(ஆ) அதில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உள்ள விகிதாச்சாரம் என்ன?

விடை (அ) அரசினர் சீர்திருத்தப் பள்ளிகள். 8

அரசு உதவி பெறும் தனியார் சீர்திருத்தப் பள்ளிகள். 15

மொத்தம் .. 23

(ஆ) பேரவை முன் ஒரு விபர அறிக்கை* வைக்கப்பட்டுள்ளது.

*897–899ம் பக்கங்களில் இணைப்பு IVஆக அச்சிடப் பெற்றுள்ளது.

## திருவண்ணுமலே ரமண மகரிஷி அசிரம அறங்காவலர்கள்

வினு 207—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு செய்தி-அறநிலேயத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணுமலே ரமண மகரிஷி ஆசிரமத்துக்கு அரசின் சார்பில் அறங்காவலர்கள் நியமனம் செய்யப்பட்டு வருகிறதா?

(ஆ) ஆம் எனில், எத்தனே பேர்?

(இ) தற்சமயம், அறங்காவலர்கள் யார், யார்?

விடை — (அ), (ஆ) & (இ). திருவண்ணுமலே திரு. ரமணுசிரமத்திற்கு தற்போது நடைமுறையிலுள்ள 'திட்டத்தினே' மாற்றும் 'திட்டமாற்றுதல்' மனு திருவண்ணுமலே துணே நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இடைக்கால ஏற்பாடாக 15-12-77-ல் திருவண்ணுமலே துணே நீதிமன்றம் கீழே குறிப்பிட்டுள்ளவர்களே ரமணுசிரமத்தின் அறங்காவலர்களாக நியமனம் செய்துள்ளது:—

அரசு தரப்பு அறங்காவலர்கள்—

1. தாசில்தார், திருவண்ணுமலே.
2. திரு. பி. தாண்டவராயன், வழக்கறிஞர்.

பரம்பரை முறை அறங்காவலர் தரப்பு—

1. திரு. டி. என் வெங்கட்ராமன், நிர்வாக பரம்பரை முறை அறங்காவலர்
2. திரு. எஸ். எஸ். வி. எஸ். முத்தையா செட்டியார்.
3. திரு. பி. எஸ். வைகுண்டவாச கவுண்டர்.

## புதுக்கோட்டை மாவட்டத்தில் கருணே இல்லம்

வினு 208—திரு. த. புஷ்பராஜு: மாண்புமிகு செய்தி அறநிலேயத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் கருணே இல்லம் அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை— (அ) இல்லே.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லே.



## புதுக்கோட்டை முருகன் கோவில் திருப்பணி

வினு 209—திரு. த. புஷ்பராஜு: மாண்புமிகு செய்தி அறநிலேயத்துறை அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், நகரம் கிராமத்திலுள்ள முருகன் கோவில் மிகவும் பழுதடைந்திருப்பதால் திருப்பணி வேலேகள் ஏதும் மேற்கொள்ளப்பட உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—(அ) இல்லே.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லே.

## திருப்புவனம் அரசினர் பள்ளிகளுக்குப் புதிய கட்டிடங்கள்

வினு 210—திரு. வ. மு. சுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் அரசினர் ஆண்கள் பள்ளி, அரசினர் பெண்கள் பள்ளி இரண்டுக்கும் புதிய கட்டிடங்கள் கட்டும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனேயில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) இல்லே.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லே.

## கண்கொடை வழங்கியவர்கள்

வினு 211—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78-ம் ஆண்டில் இதுவரை கண் கொடை வழங்க முன் வந்தோர் எத்தனே பேர்?

(ஆ) ஏற்றுக்கொள்ளப்பட்டது எத்தனே?

விடை— (அ) 1977–78-ம் ஆண்டில் இதுவரை 337 நபர்கள் கண்தானம் வழங்க முன் வந்துள்ளனர்.

(ஆ) இதில் அனேவரும் உயிருடன் இருப்பதால் அவர்களின் கண்கள் உபயோகப்படுத்த முடியவில்லே.

[1978 செப்டம்பர் 8

## ஐவ்வரிசி தொழிலாளர்களுக்குப் புதிய ஊதிய விகிதம்.

வினா 212—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஐவ்வரிசி தொழிலாளர்களுக்கு புதிய ஊதிய விகிதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை— (அ) ஆம்.

(ஆ) திருத்தியமைக்கப் பெற்ற குறைந்த அளவு ஊதிய வீதங்கள் பின்வருமாறு:—

| தொழிலாளர்களின் வகை. | அனைத்துப் படிகள் உட்பட குறைந்த அளவு ஊதிய விகிதம். |
|---|---|
| (1) | (2) |
| 1. உரிப்பவர்கள் (Peelers) (பணி அளவுப்படி). | 25 கிலோகிராமிற்கு ரூ. 0.30. |
| 2. நொறுக்குதல், அளவுபடுத்துதல், பொடி ஆக்குதல், வறுத்தல் மற்றும் பல்வகைப் பணியில் ஈடுபடுகின்றவர்கள்: | |
| தரம் 1 .. .. | நாளொன்றுக்கு ரூ. 5.50. |
| தரம் 2 .. .. | நாளொன்றுக்கு ரூ. 5.00. |
| 3. ஓட்டுநர் .. .. | மாதம் ஒன்றுக்கு ரூ. 180.00. |
| 4. எழுத்தர் .. .. | மாதம் ஒன்றுக்கு ரூ. 150.00. |

மேற்கண்ட குறைந்த அளவு ஊதிய வீதங்கள் 1978-ம் ஆண்டு ஜனவரி மாதம் 10-ந் தேதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளன.



1978 செப்டம்பர் 8]

## புதுக்கோட்டை துயிர்கூடம் சிறைச்சாலையிலிருந்து விடுதலை பெற்ற பார்ஸ்டல் பள்ளி மாணவர்கள்.

வினா 213—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977-78 ஆம் ஆண்டில் புதுக்கோட்டையிலுள்ள துயிர்கூடம் சிறைச்சாலையிலிருந்து விடுதலை பெற்ற பார்ஸ்டல் பள்ளி மாணவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) அவர்களில் எத்தனை பேருக்கு மறுவாழ்வுக்குப் பண உதவி அளிக்கப்பட்டது?

விடை—(அ) 508.

(ஆ) ஒருவருக்கும் மறுவாழ்விற்கென பண உதவி கொடுக்கப்படவில்லை.

## வேலூர், மாநில மகளிர் சிறையில் மறுவாழ்வுக்கான பயிற்சிகள்

வினா 214—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேலூரில் உள்ள மாநில மகளிர் சிறையில் அவர்களது பிற்கால மறுவாழ்வுக்கு அளிக்கப்படும் பயிற்சிகள் யாவை?

விடை—சிறைவாசிகளின் பிற்கால மறுவாழ்வுக்கென வேலூர் மாநில மகளிர் சிறையில் தையல், நெசவு மற்றும் நாடா தயாரித்தல் ஆகிய தொழில்களில் தேர்ச்சி பெற்றவர்களால் பயிற்சி அளிக்கப்படுகிறது.

## வீட்டு வசதி வாரியம் மேற்கொண்ட பணிகள்

வினா 215—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நமது மாநிலத்தில் 1977 ஆம் ஆண்டு எந்தெந்த இடங்களில் வீட்டு வசதி வாரியம் புதிய குடியிருப்புகளை உருவாக்கியுள்ளது?

விடை—விவர அறிக்கை அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

*990–911ம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

## வளவன் ஆற்றின் குறுக்கே பாலம்

வினா 216—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தாலுகா, குன்னலூரில் இருந்து மேல மருதூர் எக்கல் வழியாகச் செல்லும் சாலையில் உள்ள வளவன் ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசிடம் ஏதேனும் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—இல்லை.

## கோட்டூர் ஒன்றியத்தில் புதிய பாலங்கள்

வினா 217—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோட்டூரிலிருந்து கோமளாப்பேட்டை வழியாக பாலையூர் செல்லும் சாலையில் உள்ள ஐயனாற்றின் குறுக்கே பாலம் அமைக்க அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—இல்லை.

வினா 218—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கோட்டூரிலிருந்து கோமளப்பேட்டை செல்லும் சாலையில் முள்ளியாற்றின் குறுக்கே பாலம் அமைக்க அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—இல்லை.

வினா 219—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோட்டூர் ஒன்றியத்திலுள்ள ஆலத்தூரில் இருந்து பாலை கிராமத்திற்குச் செல்ல அரிச்சந்திரா நதியின் குறுக்கே பாலம் அமைக்க அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—இல்லை.



வினா 220—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோட்டூர் ஒன்றியத்தில் உள்ள கருப்புக் கிளாரில் இருந்து களப்பால் செல்லும் சாலையில் உள்ள பொன்னு சொண்டான் ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க அரசிடம் ஏதேனும் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—இல்லை.

வினா 221—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோட்டூர் ஒன்றியத்தில் உள்ள ஆதிச்சபுரத்தில் இருந்து நெம்மேலி கிராமத்திற்குச் செல்லும் சாலையில் உள்ள முள்ளியாறின் குறுக்கே பாலம் அமைக்க அரசிடம் ஏதேனும் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—இல்லை.

## ராமாவரம் கிராமத்திற்குக் குடிநீர் வழங்கல்.

வினா 222—திரு. துரை முருகன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், காவேரிப்பாக்கம் குடிநீர்த் திட்டத்தில் கடப்பேரி பஞ்சாயத்தைச் சார்ந்த ராமாவரம் கிராமம் இணைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், ராமாவரம் கிராமத்திற்குக் குடிநீர் வழங்கப்படுகிறதா?

விடை—(அ) காவேரிப்பாக்கம் குடிநீர்த் திட்டத்தில் ராமாவரம் கிராமம் வழியிடைக் கிராமமாக எதிர்காலத்தில் குடிநீர் வழங்க வழிவகைகள் செய்யப்பட்டுள்ளது. தற்சமயம் திட்டம் எதுவும் அமுலில் இல்லை.

(ஆ) இல்லை.

## சுமைதாங்கி பஞ்சாயத்தில் துணை விவசாயக் கிடங்கு.

வினா 223—திரு. துரை முருகன் : மாண்புமிகு வேளாண்மை-பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாலாசா வட்டம் சுமைதாங்கி பஞ்சாயத்தில் துணை விவசாயக் கிடங்கு ஒன்று உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை ஆண்டுகளாக உள்ளது?

(இ) அதற்குச் சொந்தக் கட்டிடம் உண்டா?

(ஈ) இல்லையெனில் அந்த அலுவலகம் தற்போது நடைபெறும் கட்டிடத்திற்கு வாடகை எவ்வளவு?

விடை—(அ) இல்லை.

(ஆ), (இ) மற்றும் (ஈ) : கேள்வி எழவில்லை.

## சாத்தான்குளம் குஷ்டரோக மருத்துவமனைக்கு மானியம்.

வினா 224—திரு. மு. ஜான் வின்சென்ட் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், சாத்தான்குளம் தொகுதியில் நடைபெறும் குஷ்டரோக ஆஸ்பத்திரியில் நோயாளிகளுக்கு உணவுக்குக் Foreign aid கொடுக்கும் தொகை போதாமல் உள்ளதால் அரசு மானியத் தொகை கொடுக்கும் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல்?

விடை—(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## நத்தத்தில் முன்சீப் கோர்ட், சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகள்.

வினா 225—மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, நத்தத்தில் முன்சீப் கோர்ட் ஒன்றும், சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட் ஒன்றும் ஏற்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா?

விடை—இல்லை.



## மேட்டுப்பாளையம் துணை வட்டம்.

வினா 226—திரு. சு. பழனிசாமி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையத்தை சப்-தாலூக்கா ஆக்குவதற்கு உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில் எப்போது அமுல்படுத்தப்படும்?

விடை—(அ) அண்ட் (ஆ) மேட்டுப்பாளையம் துணை வட்டம் தற்பொழுது துணை வட்டமாக (சப்-தாலூகா) இருக்கிறது.

## தொழிலாளர், அரசு ஈட்டுறுதி மருத்துவ மனைகள்.

வினா 227— திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்சமயம் தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் உள்ளிருப்பு சிகிச்சைக்காக உள்ள மருத்துவ மனைகள் எத்தனை?

(ஆ) அவற்றில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை எவ்வளவு?

விடை—(அ) தமிழ்நாட்டில் உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ மனைகளின் எண்ணிக்கை நான்கு.

(ஆ) அவற்றில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை பின்வருமாறு ;—

(1) தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவமனை, சென்னை—625 படுக்கைகள்.

(2) தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவமனை, மதுரை 202 படுக்கைகள்.

(3) தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவமனை, கோவை—500 படுக்கைகள்.

(4) தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவமனை, கலைஞர் கருணாநிதி நகர், சென்னை—206 படுக்கைகள்.

## ஆயுள் தண்டனைக் கைதிகள்.

**வினா 228— திரு. சின்னசேலம் மா. சுப்ரமணியன் :** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் உள்ள ஆயுள் தண்டனைக் கைதிகள் தற்சமயம் எவ்வளவு பேர்கள்?

விடை—30-6-1978-ல் தமிழ்நாட்டில் ஆயுள் தண்டனைக் கைதிகள் மொத்தம் 2,705 பேர்கள் இருந்தனர்.

## கைதிகளுக்குக் கட்டாயக் கல்வி.

**வினா 229—திரு. சின்னசேலம் மா. சுப்ரமணியன் :** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் கைதிகளுக்குக் கட்டாயக் கல்வி அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—இல்லை.

## வனவிலங்குகள் உய்விடம்.

**வினா 230—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் :** மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வனவிலங்குகள் உய்விடம் எத்தனை? எங்கெங்கு உள்ளன?

(ஆ) புதிதாக வனவிலங்குகள் உய்விடம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—(அ) தமிழ்நாட்டில் உள்ள வனவிலங்கு உய்விடங்களின் சரணாலயங்கள் பெயர்களும், அவைகள் இருக்கும் மாவட்டங்களின் பெயர்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

1. முதுமலை வனவிலங்கு சரணாலயம், நீலகிரி மாவட்டம்.

2. ஆனைமலை வனவிலங்கு சரணாலயம், கோவை மாவட்டம்.

3. முண்டன்துறை வனவிலங்கு சரணாலயம், நெல்லை மாவட்டம்.

4. களக்காடு வனவிலங்கு சரணாலயம், நெல்லை மாவட்டம்.





5. கோடிக்கரை வனவிலங்கு சரணாலயம், தஞ்சை மாவட்டம்.

6. வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம், செங்கற்பட்டு மாவட்டம்.

7. கிண்டி மான் பூங்கா, சென்னை.

8. வேட்டங்குடி பறவைகள் சரணாலயம், இராமநாதபுரம் மாவட்டம்.

(ஆ) ஆம். மதுரை மாவட்டம் மஞ்சம்பட்டி காட்டுப் பகுதிகள், கோவை மாவட்டம் தலமலைப் பகுதி, தென்னாற்காடு மாவட்டம் பிச்சாவரம், தர்மபுரி மாவட்டம் ஒகேனக்கல், கன்னியாகுமரி மாவட்டம் கோதையார் பகுதி, தஞ்சை மாவட்டம் முத்துப்பேட்டைப் பகுதி மற்றும் திருநெல்வேலி மாவட்டம் குற்றாலம் பகுதியில் சரணாலயங்கள் அமைக்கும் வாய்ப்புகள் ஆராயப்பட்டு வருகின்றன.

## கலசப்பாக்கத்தில் முறைசாராக் கல்வி நிலையங்கள்.

**வினா 231—திரு. பெ. சு. திருவேங்கடம் :** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதியில் எத்தனை இடங்களில் முறைசாராக் கல்வி நிலையங்கள் உள்ளன?

(ஆ) அந்த ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் மாத ஊதியம் எவ்வளவு?

விடை : (அ) 22 இடங்களில் (15 வயது முதல் 25 வயது வரை உள்ளோருக்கு 18 மையங்கள். 6 முதல் 14 வயது வரை உள்ளோருக்கு 4 மையங்கள்).

(ஆ) அவர்களுக்கு வழங்கப்படும் மாத ஊதியம் பின்வருமாறு:—

(1) 15 முதல் 25 வயது முடிய உள்ளோருக்கான மையங்களின் ஆசிரியர் ஒவ்வொருவருக்கும் ரூ. 50 மாத ஊதியம் வழங்கப்படுகிறது.

(2) 6–14 வயது முடிய உள்ளோருக்கான மையங்களில் ஆசிரியர் ஒவ்வொருவருக்கும் ரூ. 60 ஊதியம் ரூ. 50 மற்றும் சில்லரைச் செலவிற்கு ரூ. 10 மாதம் ஊதியம் வழங்கப்படுகிறது.

[1978 செப்டம்பர்

## வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள டிராக்டர்கள்.

வினா 232—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆற்காடு மாவட்டத்திலுள்ள ஒன்றியங்களில் எத்தனை டிராக்டர்கள் உள்ளன?

(ஆ) அவைகளுள் நல்ல நிலையில் உள்ளவை எத்தனை ?

(இ) பழுதாகி உள்ளவை எத்தனை ? எந்தெந்த ஒன்றியங்களில் ?

விடை :

(அ) 36 டிராக்டர்கள் உள்ளன.

(ஆ) அவைகளில் 17 நல்ல நிலையில் உள்ளன.

(இ) 19 டிராக்டர்கள் கீழ்க்காணும் ஒன்றியங்களில் பழுதாகி உள்ளன. —

1. கண்டிலி.
2. ஆலங்காயம்.
3. கே.வி. குப்பம்.
4. காட்பாடி.
5. கணியம்பாடி.
6. மந்தனூர்.
7. ஆற்காடு.
8. அரக்கோணம்.
9. நெமிலி.
10. செய்யார்,
11. அனக்காவூர்.
12. வெம்பாக்கம்.
13. வந்தவாசி.
14. தெள்ளார்.
15. பெரணமல்லூர்.
16. கீழ்பெண்ணத்தூர்.
17. கலசபாக்கம்.
18. போளூர்.
19. சேத்துப்பட்டு.

## வட ஆற்காடு மாவட்டத்தில் வேளாண்மை ஆராய்ச்சிப் பண்ணை.

வினா 233—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் வேளாண்மை ஆராய்ச்சிப் பண்ணை ஆரம்பிக்கும் குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா?

(ஆ) ஆமெனில், எந்த இடத்தில் ஆரம்பிக்கப்படும் ?



1978 செப்டம்பர் 8]

விடை—: (அ) மற்றும் (ஆ) வட ஆற்காடு மாவட்டத்தில் தற்போது விரிஞ்சிபுரத்தில் வாழையைப்பற்றிய பரிசோதனை நிலையமும், மேலாலத்தூரில் ஒரு கரும்பு உப பரிசோதனை நிலையமும் இயங்கி வருகின்றன. ஆறுவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு ஆராய்ச்சி நிலையம் அமைக்க வேண்டும் என்ற செயற்குறிப்பு, திட்டங்களை வகுக்கும் குழுவிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

## முகையூர் ஒன்றியத்தில் புதிய விவசாயக் கிடங்குகள்.

வினா 234—திரு. கோ. ரகோத்தமன் : மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) தென்னாற்காடு மாவட்டம் முகையூர் ஊராட்சி ஒன்றியம், கண்டாட்சிபுரம் ஊராட்சியிலும், காணை ஊராட்சியிலும், சங்கீதமங்களம் ஊராட்சியிலும் துணை விவசாயக் கிடங்குகள் திறக்கும் திட்டம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திறக்கப்படும் ?

விடை—:

(அ) காணையில் வேளாண்மைக் கிடங்கு ஒன்று ஏற்கெனவே உள்ளது. கண்டாட்சிபுரம், சங்கீதமங்களம் ஆகிய இடங்களில் துணை வேளாண்மைக் கிடங்குகள் திறப்பதற்கான திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

## சவரத் தொழிலாளர்களுக்கு இலவச வீடுகள்.

வினா 235—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவு செய்து கிழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா. —

(அ) சவரத் தொழிலாளர்களுக்கு அரசு இலவசமாக வீடு கட்டித்தரும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

விடை—: (அ) மற்றும் (ஆ) சவரத் தொழிலாளர்களுக்கு அரசு இலவசமாக வீடு கட்டித்தரும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

## சலவைத் தொழிலாளர்களுக்கு வீடுகள்

வினா 236—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா/—

(அ) சலவைத் தொழிலாளர்களுக்கு அரசு வீடு கட்டித் தரும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் யாது ?

விடை (அ) மற்றும் (ஆ) சலவைத் தொழிலாளர்களுக்கு அரசு வீடு கட்டித்தரும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

## கோவை மாவட்டத்தில் புதிய சுற்றுலா மாளிகைகள்.

வினா 237— திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு செய்தி-அற நிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் மருதமலையில் சுற்றுலா மாளிகை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா ?

(ஆ) ஆம் எனில் அதன் மதிப்பீடு என்ன ?

(இ) எப்போது நிறைவு பெறும் ?

விடை:— (அ), (ஆ) மற்றும் (இ) இல்லை.

வினா 238—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு செய்தி-அற நிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாவட்டம் பேரூரில் சுற்றுலா வாரியத்தின் மூலம் சுற்றுலா மாளிகை கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு என்ன ?

(இ) எப்போது பணிகள் துவங்கப்படும் ?

விடை: (அ), (ஆ) மற்றும் (இ) கோவை மாவட்டம் பேரூரில் சுற்றுலா விடுதி கட்டும் திட்டம் தற்பொழுது இல்லை.



## கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஆலோசனைக் குழுக்கள்.

வினா 239—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது விசேஷ அதிகாரிகளின் நேரடி நிர்வாகத்தின்கீழ் இயங்கிவரும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஆலோசனை கூற ஆலோசனைக் குழுக்கள் அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை:—

(அ) ஆம்.

(ஆ) அது பற்றிய விபரம் அரசின்தீவிர பரிசீலனையில் உள்ளது.

## விவசாயிகளுக்குச் சான்றிதழ் பெற்ற விதைகள் வழங்கல்.

வினா 240—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்கு சான்றிதழ் பெற்ற விதைகளைத் தாராளமாக வழங்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

விடை — நெல் பயிராகும் பரப்பளவில் 7 விழுக்காடு பரப்பிற்கும், சிறு தானியங்கள் பயிரிடும் மொத்தப் பரப்பளவில் 7 விழுக்காடு பரப்பிற்கும், கேழ்வரகு பயிரிடும் மொத்தப் பரப்பளவில் 15 விழுக்காடு பரப்பிற்கும் பயிரிட நல்ல தரமான சான்றிட்ட விதைகளை வழங்குவதுதான் வேளாண்மைத் துறையின் கொள்கையாகும். மேலே குறிப்பிட்ட திட்டப்படி கீழ்க்கண்ட அளவு ஆண்டுதோறும் சான்றிட்ட விதைகள் வேளாண்மைத் துறையால் வழங்கப்படுகின்றன :—

| | டன். |
|---|---|
| நெல் .. .. .. | 9,500 |
| கேழ்வரகு .. .. | 175 |
| சோளம் .. .. | 130 |
| வீரிய சோளம் .. .. | 340 |
| வீரிய கம்பு .. .. | 150 |
| வீரிய மக்காச்சோளம் .. | 315 |

வேளாண்மைத் துறை வல்லுநர்களின் மேற்பார்வையில் முற்போக்கு உழவர்களால் நடத்தப்படும் விதைப் பண்ணைகளிலும், மாநில விதைப் பண்ணைகளிலும் விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட

விதைகளை வேளாண்மைத் துறை வாங்கி, சான்றிட்டு மாநிலம் முழுவதும் உள்ள விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்கின்றது.

தமிழ்நாட்டில் நெல் பயிரிடப்படும் மொத்தப் பரப்பளவான 66 இலட்சம் ஏக்கருக்குத் தேவையான விதை 1,32,000 டன்களாகும். ஆனுல் வேளாண்மைத் துறையால் வழங்கப்படும் 9,500 டன் சான்றிட்ட விதையை ஒரு ஆண்டில் 4,75,000 டன்களாகப் பெருக்கலாம். நெல் விதையை மூன்று வருடத்திற்கு ஒரு முறை மாற்றம் செய்தால் போதுமானது. ஆனுல் வேளாண்மைத் துறை ஒவ்வொரு ஆண்டும் 9,500 டன் சான்றிட்ட நெல் விதைகளை வழங்கி வருகிறது. ஆகவே உழவர்களுக்கு நல்ல தரமான நெல் விதையினைப் பெறுவதில் எவ்வித இடர்ப்பாடும் இல்லை.

மேலே குறிப்பிட்டவாறு கேழ்வரகு, நாட்டு சிறுதானிய விதைகளும் உற்பத்தி செய்து விநியோகிக்கப்படுகின்றன.

வீரிய ஒட்டு சிறுதானிய விதைகளை ஒவ்வொரு ஆண்டும் உற்பத்தி செய்து விநியோகம் செய்ய வேண்டும், இதில் 30 விழுக்காடு அளவிற்கு வேளாண்மைத் துறையாலும், 70 விழுக்காடு அளவிற்குத் தனியார்களாலும் உற்பத்தி செய்து விநியோகிக்கப்படுகிறது. இவையெல்லாம் சான்றிட்ட விதைகள்தான். சான்றிதழ் அளிக்கும் நிறுவனம் தனியார் உற்பத்தி செய்யும் விதைகளையும் பரிசோதித்து அவற்றின் தரம் சரியாக இருந்தால் அவற்றிற்கும் சான்றிதழ் அளிக்கிறது, இம்மாதிரி சான்றிதழ் பெறும் உற்பத்தியாளர்களும் சான்றிதழ் பெற்ற தரமான விதைகளை விற்று வருகின்றனர். இவற்றின் தரத்தை அவ்வப்பொழுது விதை பரிசோதகர்கள் கண்காணித்து வருவதால் இவையும் அரசினர் டிப்போக்களில் விற்கப்படும் விதைகளைப் போலவே தரமானவையாகவே இருக்கும். இம்மாநிலத்தில் தேவையான அளவுக்கு சான்றிட்ட விதைகள் கிடைக்கப் போதுமான ஏற்பாடுகள் உள்ளன.

## பிரான்மலை செல்லும் பயணிகளுக்குத் தங்கும் வசதி.

விஞ 241—திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு செய்தி-அற நிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், வார்பட்டு ஊராட்சியைச் சேர்ந்த பிச்சைகாலன்பட்டியில் பிரான்மலைக்கு செல்லும் சுற்றுலா பயணிகளுக்காக ஒரு சுற்றுலா விடுதி கட்டும் திட்டம் தற்பொழுது எந்த நிலையில் உள்ளது?

விடை—பிச்சைகாலன்பட்டியில் சுற்றுலா விடுதி கட்டும் திட்டம் தற்பொழுது இல்லை.



## கடையநல்லூர் மருத்துவமனை.

விஞ 242—திரு. எம். எம். ஏ. ரசாக்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் கடந்த ஆறுமாத காலமாகப் பெண் மருத்துவர் இல்லாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் என்ருல் பெண் மருத்துவர் எப்பொழுது நியமிக்கப்படுவார்?

விடை—(அ) மற்றும் (ஆ) இம்மருத்துவமனைக்கு இரண்டு பெண் மருத்துவர் பதவி அனுமதிக்கப்பட்டுள்ளது. அதில் ஒன்று மட்டும் 1977-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 1-ம் நாள் முதல் 1978-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21-ம் நாள் வரை காலியாக இருந்தது. தற்சமயம் இரண்டு பெண் மருத்துவர்கள் பணி புரிந்து வருகிருர்கள்.

## கிருஷ்ணகிரியில் குடிசை மாற்று வாரியப் பணிகள்.

விஞ 243— க. இரா. சின்னராசு: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி நகரில் உள்ள ரயில்வே காலனியில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் விடு கட்டிக் கொடுக்கும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—(அ) மற்றும் (ஆ) இல்லை.

## பெத்தநாயக்கன் பாளையத்தில் குடிநீர் வழங்கும் திட்டம்.

விஞ 244—திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெத்தநாயக்கன்பாளையம் பேரூராட்சிக்குக் குடிநீர் வழங்க குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக ஆய்வு நடத்தட்பட்டு பல ஆண்டுகளாகியும் இதுவரை வேலை துவங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

விடை—(அ) அரசு அறியும்.

(ஆ) நடத்தப்பட்ட ஆய்வுப் பணிகளினின்று பெத்த நாயக்கன் பாளையத்தின் அருகில் அமைந்துள்ள வசிஷ்டா நதியிலிருந்துகூட இப்பேரூராட்சியின் குடிநீர்த் திட்டத்திற்கான தலைமையிடத்தை அமைத்துத் தேவையான குடிநீரைப் பெற சாத்தியக்கூறு இல்லை என்று அறியப்பட்டது. சமீபத்தில், ஊராட்சி ஒன்றியத்தால் அமைக்கப்பட்ட ஒரு கிணற்றை இத் திட்டத்திற்கான குடிநீரைப் பெறுவதற்கான ஆதாரமாக விரிவு படுத்தலாம் என்கிற உத்தேசம் இருந்தது. ஆனல் இக் கிணற்றிலுள்ள நீர் அதிகப்படியான புளோரினும் ( Flourine ) இரும்பு சத்தும் (Iron) உடையதாக உள்ளது. எனவே, இக்கிணற்றிலுள்ள நீரைத் தேவையான சுத்திகரிப்பு முறைகள் மூலம் பயனுள்ளதாகவும் அதிக நீரைப் பெற பணிகள் மற்றுமொரு கிணறு அமைப்பதற்காகவும் ஏற்க வேண்டிய பணிகள் குறித்து மேலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இக் கூடுதல் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

சீர்காழியிலுள்ள அரசினர் மாணவ, மாணவியர் விடுதிகள்.

வினு 245—திரு. கா. சுப்ரவேலு : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சீர்காழி அரசினர் மாணவ, மாணவியர் விடுதிகளில் சென்ற ஆண்டு (1977–78) சேர்வதற்கு மனுச் செய்து கொண்டவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

விடை—(அ) சீர்காழி அரசு மாணவ, மாணவிகள் விடுதிகளில் சென்ற ஆண்டு (1977–78) சேர்வதற்கு மனுச் செய்து கொண்டவர்கள்—

| | | |
|---|---|---|
| மாணவர் விடுதியில் | .. | 85 பேர் |
| மாணவியர் விடுதியில் | .. | 43 பேர். |

(ஆ) ஏற்கனவே விடுதிகளில் தங்கியிருந்த மாணவ, மாணவிகளைத் தவிர சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் —

| | | |
|---|---|---|
| மாணவர் விடுதியில் | .. | 33 பேர். |
| மாணவியர் விடுதியில் | .. | 40 பேர். |





கூட்டுறவு முறையில் சங்கீதக் கருவிகள் தயாரிப்பு.

வினு 246—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையில் சங்கீதக் கருவிகள் செய்யும் தொழிற்சாலை எங்கெங்கு இயங்கி வருகிறது?

(ஆ) அங்கு என்னென்ன இசைக்கருவிகள் செய்யப்படுகின்றன ?

(இ) அதற்கு மானியம் அல்லது கடன் அரசு வழங்குகிறதா?

விடை —(அ) தமிழ்நாட்டில் கூட்டுறவு முறையில் சங்கீதக் கருவிகள் தயாரிக்கும் தொழில் கூட்டுறவு சங்கம் தஞ்சாவூரில் உள்ள '' வாத்தியக் கருவிகள் தயாரிப்போர் கூட்டுறவு சங்கம் '' ஒன்றுதான் இயங்கி வருகிறது.

(ஆ) அச்சங்கத்தில் வீணை, தம்பூரா, மிருதங்கம், கஞ்சிரா போன்ற இசைக் கருவிகள் தயாரிக்கப்படுகின்றன.

(இ) அரசாங்கம் அச்சங்கத்திற்கு ரூ. 35,600 மூலதனக் கடனுகவும், வாத்தியக் கருவிகள் தயாரிக்கும் பயிற்சித் திட்டத்திற்கு ரூ. 40,000-ஐ மான்யமாகவும் வழங்கியது. மூலதனக் கடனை சங்கம் திருப்பிச் செலுத்திவிட்டது.

புதிய ஆரம்பப் பள்ளிகளுக்கு அனுமதி.

வினு 247—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிய ஆரம்பப்பள்ளிகள் திறப்பதற்கு ஆரம்பக்கல்வி இயக்குநரிடமிருந்து அனுமதி பெற வேண்டுமென்று கூறப்படுவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை —(அ) & (ஆ): உதவி பெறும் ஆரம்பப் பள்ளிகள் திறப்பதற்கு, தமிழ்நாடு அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகள் (ஒழுங்குபடுத்தும்) சட்டம், 1973 மற்றும் விதிகள் 74-ன்படி மாவட்டத்தின் முதன்மைக் கல்வி அலுவலருக்குக் குறிப்பிட்ட படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும். அந்த விதிகளின்படி நான்கு மாதங்களுக்குள் விண்ணப்பதாரருக்கு முடிவை முதன்மைக் கல்வி அலுவலர் தெரிவிக்க வேண்டும். அரசு சார்பாகத் திறக்கப்படும் ஆரம்பப் பள்ளிகளுக்கோ அல்லது ஊராட்சி ஒன்றியம், நகராட்சிகள் ஆகியவற்ருல் திறக்கப்படும் பள்ளிகளுக்கோ பள்ளிக் கல்வி இயக்குநரால் அனுமதி வழங்கப்படுகிறது.

## தேசூர் நகரத்தில் சார்பதிவாளர் அலுவலகம்.

வினா 248—திரு. ப. சந்திரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டம் தேசூர் நகரத்தில் சார்பதிவாளர் அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு எந்த நிலையில் உள்ளது?

விடை—இக்கோரிக்கை பதிவுத்துறையின் தலைவரின் பரிசீலனையில் உள்ளது.

## தென்னாற்காடு மாவட்டத்திற்கான நிலத்தடி நீர் காட்டும் வரைபடம்.

வினா 249—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு வேளாண்மை-பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தின் நிலத்தடி நீர் காட்டும் வரைபடம் தயார் செய்யப்பட்டதா?

(ஆ) எந்தெந்த இடத்தில் நீர் ஊற்றுகள் அதிகமாக உள்ளன?

விடை—(அ) இதுவரை இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

## பரங்கிப் பேட்டையில் பின்தங்கிய மாணவர்களுக்கு விடுதி.

வினா 250—துரை கலியமூர்த்தி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டம், பரங்கிப்பேட்டையில் பின்தங்கிய பள்ளி மாணவர்களுக்கு என ஒரு விடுதி உள்ளதா?

(ஆ) தற்போது எத்தனை மாணவர்கள் அங்கு தங்கி கல்வி பயிலுகிறார்கள்?

விடை—(அ) & (ஆ) சிதம்பரம் வட்டம், பரங்கிப்பேட்டையில் பின்தங்கிய பள்ளி மாணவர்களுக்கென விடுதி எதுவும் இல்லை.

ஆனால் மாணவியருக்கென ஒரு விடுதி உள்ளது. இந்த விடுதியில் 40 பள்ளி மாணவிகள் தங்கிப் படிக்கலாம்.



## கரூரில் மோட்டார் வாகன வழக்குகளுக்கு தனி நீதி மன்றம்.

வினா 251—திரு. கு. வடிவேல்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்ண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் தாலூகாவில் மோட்டார் வாகனங்களால் ஏற்படும் விபத்து சம்பந்தமான வழக்குகளை விசாரிக்க கரூரில் அதற்கென தனி நீதிமன்றம் அமைக்க அரசிடம் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை— (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## சென்னை உயர் நீதிமன்ற பணிகளில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு இடம்.

வினா 252— திரு. வ. மு. சுப்பிரமணியன்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை உயர் நீதிமன்ற அலுவலங்களிலும் பதினெட்டு விழுக்காடு ஒதுக்கீடு முறை பின்பற்றப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், தற்போது எத்தனை விழுக்காடு தாழ்த்தப்பட்டோர் உள்ளனர்?

விடை— (அ) ஆம்.

(ஆ) சென்னை உயர்நீதி மன்ற அலுவலகத்தில் தற்பொழுது ஆறு விழுக்காடு தாழ்த்தப்பட்டோர் உள்ளனர்.

## திருத்தணி பேரூராட்சியில் குடிநீர் வழங்கல்.

வினா 253— திரு. ஆர். சண்முகம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) திருத்தணி பேரூராட்சியில் குடிதண்ணீர் பற்றாக் குறையை நீக்க குசஸ்தலை ஆற்றில் மற்றும் ஒரு குழாய் கிணறு போடுவதற்கான திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை? எப்போது முடிவடையும்?

விடை : (அ) இல்லை. ஆனாலும் குடிதண்ணீர் பற்றாக் குறையை நீக்கும்பொருட்டு குசஸ்தலை ஆறு அருங்குளம் தலைமை நீரேற்று நிலையத்தில் கூடுதலாக ரூ. 3 இலட்சம் செலவில் ஒரு நீர் உறிஞ்சும் கிணறு ஏற்படுத்த திட்டம் உள்ளது.

(ஆ) இவ்வினா எழவில்லை.

## இரவில் சைக்கிள்களில் விளக்கு இன்றி சென்றவர்கள் பற்றிய வழக்குகள்.

வினா 254— திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1976–77-ம் ஆண்டு தமிழ்நாட்டில் சைக்கிளில் விளக்கு இன்றி சென்றதற்காக (இரவு வேளையில்) வழக்குத் தொடரப் பட்டவர்கள் எண்ணிக்கை என்ன?

விடை : (அ) 1976-ம் ஆண்டு 2,015.

(ஆ) 1977-ம் ஆண்டு 1,303.

## நிலக்கோட்டையில் முன்சீப் கோர்ட், தீயணைக்கும் நிலையம் ஏற்படுத்துதல்.

வினா 255—: திரு. அ. பாலுச்சாமி : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

நிலக்கோட்டையில் முன்சீப் கோர்ட் அமைக்கும் திட்டம் உண்டா?

விடை— ஆம். நிலக்கோட்டையில் ஒரு மாவட்ட முன்சீப் நீதி மன்றம் அமைப்பது இரண்டாவது கட்டத்தில் பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.



வினா 256—திரு. அ. பாலுச்சாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நிலக்கோட்டையில் ஓர் தீயணைக்கும் நிலையம் ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

விடை—இல்லை.

## கடலூர்—திருப்பதி விரைவுப் பேருந்துப் பணி.

வினா 257— திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூரிலிருந்து திருக்கோவிலூர், திருவண்ணாமலை, போளூர், வேலூர் வழியாக திருப்பதிக்கு போய் வந்த பல்லவன் துரித வண்டி தற்சமயம் நிறுத்தப்பட்டு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இந்த மார்க்கத்தில் வண்டி விட அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—(அ) ஆம்.

(ஆ) தற்காலிக உரிமம் பெற்ற இத்தடத்தில் பேருந்து இயக்கப்பட்டு வந்தது. இத்தடத்தில் பயணம் செய்வோர் மிகவும் குறைவாக இருந்து வந்ததால் துரித வண்டி இத்தடத்தில் நிறுத்தப் பட்டுள்ளது.

## கிருஷ்ணகிரியில் மாவட்டச் சிறைச்சாலை அமைத்தல்.

வினா 258—திரு. க. இரா. சின்னராசு : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்ட மத்திய சிறைச்சாலையை கிருஷ்ண கிரியில் அமைக்கும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது கட்டப்படும்?

விடை—(அ) தர்மபுரி மாவட்டத்தில் மத்திய சிறைச்சாலை ஒன்றும் இல்லை. கிருஷ்ணகிரியில் மத்திய சிறைச்சாலை அமைப்பதற் கான செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

## பரோல் வழங்கப்பெற்றவர்கள்.

வினா 259—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டனைப் பெற்று சிறைச்சாலைகளில் உள்ளவர்களிடமிருந்து பரோல் கேட்டு 1976-77, 1977-78 ஆண்டுகளில் எத்தனை மனுக்கள் வந்தன?

(ஆ) அவற்றுள், அனுமதி வழங்கப்பட்ட மனுக்கள் எத்தனை

விடை :

| | 1976-77 | 1977-78 |
|---|---|---|
| (அ) .. .. | 652 | 1,169 |
| (ஆ) .. .. | 262 | 609 |

வினா 260—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977-ம் ஆண்டில் பரோல் கோரி பெறப்பட்ட விண்ணப்பம் எத்தனை?

(ஆ) பரோல் அளிக்கப்பட்ட விண்ணப்பங்கள் எத்தனை?

விடை—(அ) 1,251.

(ஆ) 717.

## சிவந்திபுரத்திலுள்ள இனாம் நிலங்கள்.

வினா 261—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள சிவந்திபுரத்தில் உள்ள இனாம் நிலங்கள் இனாம் ஒழிப்புச் சட்டப்படி ரயத்துவாரி நிலங்களாக மாற்றப்பட்டு விவசாயிகளுக்கு பட்டா வழங்கப்பட்டுவிட்டதா ?

விடை—இல்லை.





## அம்பாசமுத்திரம் பெண்கள் உயர்நிலைப்பள்ளி.

வினா 262—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு காம்பவுண்ட் சுவர் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

## புதிய காவல் நிலையங்கள்.

வினா 263—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்த்தஞ்சை காவல் மாவட்டம், வேதாரண்யம் துணை தாலுக்காவில் புதிதாக காவல் நிலையம் நிறுவும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எங்கு நிறுவப்படும் ?

விடை—(அ) தற்சமயம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

வினா 264—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) முகவை மாவட்டம், திருவில்லிப்புத்தூர் தொகுதியைச் சேர்ந்த மம்சாபுரத்தில் காவல் நிலையம் நிறுவ அரசுக்கு உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த அளவில் உள்ளது, எப்பொழுது நிறுவப்படும் ?

விடை—(அ) தற்சமயம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## அனந்தபுரத்தில் துணைப்பதிவாளர் அலுவலகம்.

வினா 265— திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், செஞ்சி வட்டம், அனந்தபுரத்தில் ஒரு துணைப்பதிவாளர் அலுவலகம் திறக்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திறக்கப்படும் ?

விடை—(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

## பரங்கிப்பேட்டை மீனவர் பகுதிக்கு சாலை வசதி.

வினா 266—திரு. வி. ரகுராமன் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் வட்டம் பரங்கிப்பேட்டையிலிருந்து சாமியார் பேட்டை வழியாக பெரியபட்டு வரை உள்ள மீனவர் பகுதியில் ரோடு வசதி செய்து கொடுக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

விடை – தற்போது இல்லை.

## திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள இனாம் கிராமங்கள்.

வினா 267—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் எத்தனை இனாம் கிராமங்கள் இருந்தன ?

(ஆ) இவைகளில் மேஜர் இனாம் கிராமங்கள், மைனர் இனாம் கிராமங்கள் முறையே யாவை ?

(இ) இவைகள் அனைத்தும் அயன் கிராமங்களாக மாற்றப் பட்டனவா ?

விடை —(அ) 880

(ஆ) 188 இனாம்கள், 692 மைனர் இனாம்கள்.

(இ) ஆறு இனாம்களைத் தவிர மற்றவைகள் ரயத்துவாரியாக மாற்றப்பட்டுவிட்டன.



## புயல், வெள்ளத் துயர்தணிப்பு நிதி.

வினா 268—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முதலமைச்சர் புயல், வெள்ளத் துயர்தணிப்பு நிதிக்கு 1978 ஜனவரி 31-ஆம் தேதி முடிய வசூலாகியுள்ள மொத்தத் தொகை எவ்வளவு ?

விடை—1978 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் தேதி வரை புயல் வெள்ள நிவாரணத்திற்காக பெறப்பட்ட நன்கொடை மொத்தம் ரூ. 4,52,43,110·32. 1978 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் தேதி வரை பெறப்பட்ட நன்கொடை மொத்தம் ரூ. 7,90,42,238·16 ஆகும்.

## நாகை துறைமுகத்தை விரிவுபடுத்துதல்

வினா—269 திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை துறைமுகத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—(அ) இல்லை,

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

## அரிசன நலத்துறைப் பள்ளிகள்.

வினா 270—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் சட்டப் பேரவைத் தொகுதியில் எந்தெந்த இடங்களில் அரிசன நலத்துறைப் பள்ளிகள் இயங்கி வருகின்றன?

(ஆ) அவைகளில் எந்தெந்தப் பள்ளிகள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன ?

விடை—(அ) மாயூரம் சட்டப் பேரவைத் தொகுதியில் கீழ்க்கண்ட பத்து இடங்களில் அரிசன நலப் பள்ளிகள் இயங்கி வருகின்றன :—

(1) நடுத்திட்டு,
(2) மேலசித்தர்க்காடு,
(3) மூவலூர்,
(4) சேத்தூர்,
(5) நெடுமருதூர்,
(6) கீழ்ப்பட்ட மங்கலம்,
(7) மணக்குடி,
(8) மகாதானபுரம்,
(9) முடிகண்ட நல்லூர்,
(10) கிளாய்.

(ஆ) மேல சித்தர்க்காடு என்ற இடத்திலுள்ள அரிசன நலப் பள்ளியைத் தவிர, மற்ற இடங்களிலுள்ள பள்ளிகள் சொந்தக் கட்டிடத்தில் இயங்கி வருகின்றன.

## அரிசனக் குடியிருப்புகளுக்கு மின் வசதி.

வினா 271 திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரிசனக் குடியிருப்புகளுக்கு மின் வசதியளிக்கும் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்படும் இழப்பீட்டைச் சரிப்படுத்த 1977-78 ஆம் ஆண்டில் அரசு வழங்கிய தொகை எவ்வளவு ?

விடை : குறைந்த வருவாய் அளிக்கக்கூடிய அரிசன குடியிருப்புகளில் (Unremunerative Harijan Colonies) தெருவிளக்குகள் அமைப்பதால் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்படும் வருவாய் இழப்பீட்டை சரிசெய்ய 1977-78 ஆம்ஆண்டில் மட்டும் ரூ. 56 இலட்சங்கள் (ரூபாய் ஐம்பத்து ஆறு இலட்சங்கள் மட்டும்) மூலதன மானியமாக அவ்வாரியத்திற்கு அரிசன நலத் துறையால் அளிக்கப்பட்டது.

## பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் புதுவகைப் பேருந்துகள்.

வினா 272—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லவன் போக்குவரத்துக் கழகம் அண்மையில் சென்னை நகரில் புதுவகைப் பேருந்துகளை அறிமுகப்படுத்தி உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அவ்வகைப் பேருந்துகள் எத்தனை இப்பொழுது ஓடிக்கொண்டிருக்கின்றன ?

விடை—(அ) ஆம்.

(ஆ) உலக வங்கியின் கடனுதவித் திட்டத்தின்கீழ் வாங்கப்பட்ட "டாட்டா"வின் புதிய பேருந்துகள், 1978ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10 ஆம் நாளைய நிலவரப்படி 110 ஓடிக்கொண்டிருக்கின்றன.





## திருச்சி மத்திய சிறைக் காவலர்களுக்கு குடியிருப்புகள்

வினா 273—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மத்திய சிறையில் பணிபுரியும் வார்டர்கள் எத்தனை பேர்களுக்கு அரசு குடியிருப்புகள் கட்டித் தந்துள்ளது ?

விடை :—திருச்சி மத்திய சிறை சாலை காவலர் தொகுதியில் 3 முதல் தலைமைக் காவலர்கள், 12 முதல் நிலைக் காவலர்கள், மற்றும் 140 இரண்டாம் நிலைக் காவலர்களும் பணிபுரிகின்றனர். இவர்களில் 3 முதல் தலைமைக் காவலர்களுக்கும், 12 முதல் நிலைக் காவலர்களுக்கும், 86 இரண்டாம் நிலைக் காவலர்களுக்கும் குடியிருப்பு வசதி அளிக்கப்பட்டு இருக்கிறது. மீதமுள்ள இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு குடியிருப்பு வசதி செய்ய வேண்டியுள்ளது. அரசின் நிதி நிலைமைக்குத் தக்கபடி மீதமுள்ள காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டப்படும்.

## திறந்த வெளிச் சிறைச்சாலைகளில் வைக்கப்படும் கைதிகள்.

வினா 274 : திரு. என், கிட்டப்பா : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

எந்தெந்த வகையான கைதிகள் திறந்த வெளிச் சிறைச்சாலைகளில் அடைக்கப்படுகின்றனர் ?

விடை—கீழ்க்காணும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் சிறைவாசிகளை திறந்த வெளிச் சிறைச்சாலைகளுக்கு அனுப்பப்படுகின்றனர்:—

1. இ.பி.கோ. 302, 303, 307, 323, 325, 326 பிரிவுகளின்படி தண்டனை அடைந்தவர்களாய் இருக்க வேண்டும்.
2. விடுதலையாவதற்கு இரண்டு வருடங்களுக்குக் குறையாமல் இருக்க வேண்டும்.
3. விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டவர்களாக இருக்க வேண்டும்.
4. திறந்த வெளிச் சிறையில் விவசாயம் செய்ய விருப்பம் உள்ளவர்களாக இருக்க வேண்டும்,

[1978 செப்டம்பர் 8

5. நன்னடத்தை உள்ளவர்களாக இருக்க வேண்டும்.
6. ஆயுள் தண்டனை பெற்றவர்களாயின், சிறையில் (குறைந்தபட்சம் 5 ஆண்டு (தண்டனைக் கழிவு நீங்கலாக) முடித்திருத்தல் வேண்டும்.
7. நீண்ட கால தண்டனை பெற்றவராயின், சிறையில் குறைந்த பட்சம் 2 ஆண்டு தண்டனை (தண்டனை கழிவு நீங்கலாக) முடித்திருத்தல் வேண்டும்.

## ராதாபுரத்தில் நீதிமன்றம்.

வினா 275—திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரத்தில் ஒரு எஸ். எம். II (S. M. II) நீதிமன்றம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை— இல்லை.

## ஜவ்வாது மலையில் குழந்தைகள் காப்பகம்

வினா 276—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் ஜவ்வாது மலையில் குழந்தைகள் காப்பகம் அமைக்கப்பட்டு நடைபெற்று வருகிறதா ?

(ஆ) ஆம் எனில் எத்தனை காப்பகங்கள் நடத்தப்படுகின்றன?

(இ) எத்தனை குழந்தைகள் பலன் பெற்று வருகிறார்கள் ?

விடை—(அ) 1976–77ம் ஆண்டு முதல், வட ஆற்காடு மாவட்டம் ஜவ்வாது மலைப் பகுதியில் மலைவாழ் மக்களின் குழந்தைகளுக்காக, குழந்தைகள் காப்பகங்கள் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டுவருகின்றன.

(ஆ) 1976–77ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 10 குழந்தைகள் காப்பகங்கள் இவ்வாண்டும் தொடர்ந்து நடத்தப்படுகின்றன.

(இ) ஒவ்வொரு குழந்தைகள் காப்பகத்திலும், 40 குழந்தைகள் வீதம் (2½ வயது முதல் 5 வயது வரை) மொத்தம் 400 குழந்தைகள் இதனால் பயன் அடைகிறார்கள். இக்குழந்தைகள் காப்பகங்களில் இவர்களுக்கு கல்வியும் போதிக்கப்படுகிறது. பாலஹார் என்ற சத்துணவும் தினமும் வழங்கப்படுகிறது.



1978 செப்டம்பர் 8]

## ஜவ்வாது மலைப்பகுதியில் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம்

வினா 277—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் ஜவ்வாது மலைப் பகுதி மக்களுக்கு சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் விசேஷ சலுகை ஏதேனும் காட்டப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—(அ) & (ஆ) சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஜவ்வாது மலைவ பகுதி மக்களுக்கு விசேஷ சலுகைகள் ஏதும் காட்டப்படுவதில்லை. திட்டத்தின் இதர பகுதி சிறு விவசாயிகள் மற்றும் குறு விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் சலுகைகளே இவர்களுக்கும் அளிக்கப்படுகின்றன.

## கட்டாய ஓய்வுத் திட்டத்தின் கீழ் ஓய்வு அளிக்கப் பட்டவர்கள்

வினா 278 திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கட்டாய ஓய்வுத் திட்டத்தின் கீழ் அவசர நிலை காலத்தில் ஓய்வு அளிக்கப்பட்டவர்களில் பொதுப் பணித் துறையைச் சார்ந்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களில் திரும்பவும் வேலைக்கு அமர்த்தப்பட்டவர்கள் எத்தனை பேர்?

விடை—(அ) பதிமூன்று பேர்.

(ஆ) மூன்று பேர்.

## மாவட்டச் செய்திக் களஞ்சியங்கள்

வினா 279— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டச் செய்திக் களஞ்சியங்களை அரசு தயாரித்து வருகின்றதா ?

(ஆ) ஆம் எனில், இதுவரை எந்தெந்த மாவட்டங்களுக்கு அவை தயாரிக்கப்பட்டுள்ளன?

விடை— (அ) ஆம்.

(ஆ) இதுவரை (1) தஞ்சாவூர், (2) மதுரை, (3) தென் ஆற்காடு, (4) கோயம்புத்தூர், (5) சேலம் மற்றும் (6) இராமநாதபுரம் ஆகிய ஆறு மாவட்டங்களுக்கு செய்திக் களஞ்சியங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

## வாழைப்பழங்கள் ஏற்றுமதி

வினா 280— திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வாழைப்பழங்கள் தமிழ்நாட்டிலிருந்து வெளி நாட்டிற்கு அனுப்பப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், எந்த எந்த இடங்களில் இருந்து அனுப்பப்படுகிறது?

விடை—(அ) & (ஆ) இல்லை. மத்திய அரசின் கொள்கைப்படி தற்போது வாழைப்பழ ஏற்றுமதி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

## கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்தபோது இறந்த மீனவர்கள்.

வினா 281—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1975–76, 1976–77, 1977–78ம் ஆண்டுகளில், கடலில் தொழில் செய்யும்போது இறந்த மீனவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) அவர்களுக்கு அரசு கொடுத்த உதவித் தொகை எவ்வளவு ?

விடை (அ) கடலில் தொழில் செய்யும்பொழுது இறந்த மீனவர்களின் விபரம்—

| ஆண்டு. | எண்ணிக்கை. |
|---|---|
| 1975-76 .. .. .. | 48 |
| 1976-77 .. .. .. | 63 |
| 1977-78 .. .. .. | 35 |





(ஆ) இறந்த மீனவர் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகை—

| ஆண்டு. | தொகை. |
|---|---|
| 1975-76 .. .. .. | ரூ. 47,000. |
| 1976-77 .. .. .. | ரூ. 65,000. |
| 1977-78 .. .. .. | ரூ. 55,000. |

## நீலகிரி மாவட்டத்தில் மண் பரிசோதனை நிலையம்.

வினா 282— திரு. போ. கோபாலன் : மாண்புமிகு வேளாண்மைப் பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் மண் பரிசோதனை நிலையம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அங்கு மேற்கொள்ளப்படும் பணிகள் யாவை?

விடை— (அ) ஆம்.

(ஆ) மண் மற்றும் தண்ணீர் பரிசோதனை செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு உரமிடுதல் குறித்து தக்க ஆலோசனை சொல்லப்படுகிறது. மண், தண்ணீர் பரிசோதனைகள் தவிர மண்ணில் நுண் உயிர் ஊட்டச் சத்துக்களின் அளவுகளும் அறியப்பட்டு அதற்கேற்ப சிபாரிசுகள் வழங்கப்படுகின்றன.

## சென்னையில் குளிர்பதன வசதியுள்ள பால் விற்பனை நிலையங்கள்

வினா 283—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் பால்வள நிறுவனத்தினால் குளிர்பதன வசதியோடு பொது மக்களுக்கு பால் வழங்க எத்தனை பங்குகள் அமைக்கப்பட்டுள்ளன ?

(ஆ) அதன் மூலம் தினமும் பொது மக்களுக்கு வழங்கப்படும் பாலின் மொத்த அளவு என்ன ?

விடை—(அ) : சென்னை நகரில் 9 தானியங்கி பால் விற்பனை நிலையங்கள் குளிர்பதன வசதியுடன் அமைக்கப்பட்டுள்ளன. அதோடு 109 பால் விற்பனை நிலையங்கள் குளிர்பதன வசதியோடு அமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) 9 தானியங்கி பால் விற்பனை இயந்திரங்கள் மூலம் தினசரி சுமார் 7,200 லிட்டர் அளவுள்ள பால் விற்பனையாகிறது. மற்ற 109 பால் விற்பனை நிலையங்கள் மூலம் தினசரி 24,000 லிட்டர் அளவுள்ள பால் விற்பனை ஆகிறது.

[1978 செப்டம்பர் 8

## கூட்டுறவுக் கணக்கு ஆண்டினை மாற்றி அமைத்தல்.

வினு—284 திரு. க. அன்பழகன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு கணக்குகளுக்கான ஆண்டினை மாற்றி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—இல்லை.

## ஜவ்வாது மலைப் பகுதியில் துணைப்பதிவாளர் அலுவலகம்.

வினு 285—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

வடஆற்காடு மாவட்டம் ஜவ்வாது மலைப்பகுதியில் துணைப் பதிவாளர் அலுவலகம் அமைக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

விடை—இல்லை.

## ஐ. ஆர். 8. நெல் விதை உற்பத்தி.

வினு 286—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஐ. ஆர். 8. நெல்லுக்கான விதைகள் விதைப்பண்ணைகளில் உற்பத்தி செய்வது நிறுத்திவைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) அதன் காரணம் என்ன?

விடை—(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## அவினுசி தொகுதியில் நிலவள வங்கிகள் மூலம் ஆழ் கிணறுகளுக்கான கடன்கள்.

வினு 287—திரு. சொ. ந. பழனிசாமி: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினுசி தொகுதியில் 50 அடிக்கும் அதிகமான ஆழத்திலுள்ள கிணறுகளுக்கு அடி வெட்டு வெட்ட நிலவளவங்கிகள் மூலம் கடன் கொடுக்கப்படுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?



1978 செப்டம்பர் 8]

விடை (அ) மற்றும் (ஆ) அவினுசி பகுதியில் தற்பொழுது நிலநீர் அனுமதி (Ground Water Clearance) இல்லாததால் சிறுபாசன காரியங்களுக்காக நிலவள வங்கி மூலம் கடன் வழங்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

## ஆடு வளர்ப்புத் திட்டத்திற்கு ஆஸ்திரேலிய நாட்டு உதவி.

வினு 288—திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் சின்னக்கல்ராயன் பகுதியில் ஆஸ்திரேலிய நாட்டு உதவியுடன் பெரும் அளவில் ஆடு வளர்ப்பு திட்டம் தொடங்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கும்?

விடை (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## விளாகம் கிராமக் கூட்டுறவு கடன் வழங்கு சங்கம்.

வினு 289—திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னுற்காடு மாவட்டம் சிதம்பரம் வட்டத்திலுள்ள விளாகம் கிராம கூட்டுறவு கடன் வழங்கும் சங்கம் எத்தனை கிராமங்களிலுள்ள விவசாயிகளுக்கு கடன் கொடுத்துள்ளது?

(ஆ) அண்மையில் இச்சங்கத்தில் கிராம மக்களுக்கு கடன் வழங்கும் முறையில் ஏதாவது மாற்றம் செய்யப்பட்டுள்ளதா?

விடை—(அ) 1 விளாகம், (2) புதுவிளாகம், (3) சேதியூர், (4) நாரத்தாங்குடி, (5) தேவங்குடி, (6) மனக்குடியான் இருப்பு, (7) புதுப்பேட்டை, (8) அய்யனூர், (9) சிறுகாளூர், (10) அக்காரமங்கலம், (11) புளவாசல் ஆகிய பதினெரு கிராமங்களிலுள்ள விவசாயிகளுக்குக் கடன் கொடுத்துள்ளது.

(ஆ) ஆம். இதுகாறும் அங்கத்தினர்களுக்கு ரொக்கப்பகுதியானது சங்கத்திலிருந்து நேரிடையாக கொடுக்கப்பட்டு வந்தது. கடன் வழங்குவதில் பினுமிக் கடன்களைத் தவிர்க்கவும் முறையற்ற பிடித்தங்களைத் தவிர்க்கவும் அங்கத்தினர்களுக்கு சேமிப்பு மனப்பான்மையை ஏற்படுத்தவும் செயல்படுத்தப்படும் திட்டத்தின்

கீழ் இச்சங்கத்தின் அண்மையிலுள்ள தென் ஆற்காடு கூட்டுறவு மைய வங்கியின் சிதம்பரம் கிளையில் அங்கத்தினர்களுக்கு சேமிப்பு கணக்கு ஏற்படுத்தி கடனில் ரொக்கப் பகுதியை சேமிப்புக் கணக்கிற்கு முஜரா செய்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அங்கத்தினர்கள் தங்கள் கடன் தொகையை சேமிப்புக் கணக்கிலிருந்து தேவைக்கேற்ப காசோலைமூலம் பெற்றுக்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

## சென்னையில் மகளிருக்கென்று தனிப் பேருந்துகள்.

வினா 290— திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் அலுவலகங்களுக்கு செல்லும் நேரங்களில் (Peak hours) நெரிசலைக் குறைப்பதற்காக மகளிருக்கென்று தனியாக பேருந்துகள் விடப்படுகின்றனவா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை ?

விடை — (அ) ஆம்.

(ஆ) முக்கியமான தடங்களில் காலையில் 54 பேருந்துகளும் மாலையில் 44 பேருந்துகளும் தனியாக மகளிருக்கென்று விடப்படுகின்றன.

## சென்னையில் தொழிற்கல்வி பயிலும் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு விடுதிகள்.

வினா 291— திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிற்கல்வி பயிலும் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு சென்னையில் மேலும் விடுதிகள் ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை ?

விடை — (அ) மற்றும் (ஆ) : தற்சமயம் தொழிற் கல்வி பயிலும் மாணவர்களுக்காக சென்னையில் ஒரு விடுதி உள்ளது. அவர்களுக்கு மேலும் விடுதிகள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.



## அம்பர் சர்க்கா நூற்பு நிலையங்கள்.

வினா 292— திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பர் சர்க்கா நூற்பு நிலையங்கள் தமிழ்நாட்டில் எவ்வளவு உள்ளது ?

(ஆ) 1978–79-ம் ஆண்டில் எவ்வளவு துவங்க அரசு பரிசீலிக்கிறது?

விடை— (அ) தற்சமயம் தமிழ்நாட்டில் கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் 306 அம்பர் சர்க்கா நூற்பு நிலையங்கள் உள்ளன.

(ஆ) 1978–79-ம் ஆண்டின் தனது ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டத்தின் கீழ், கதர்-கிராமத் தொழில் ஆணைக்குழு மேலும் 150 ஆறு கதிர் இராட்டை செட்டுகள் வாரியத்திற்கு ஒதுக்கியுள்ளது. இவ்விராட்டை செட்டுகள் இவ்வாண்டில் சிறுகச் சிறுகத்தான் பெறப்படும். எனவே, 1978–79-ம் ஆண்டில் கதர் கிராமத் தொழில் குழுவினரிடமிருந்து பெறப்படும் இராட்டைகளின் எண்ணிக்கையைப் பொறுத்து, மேலும் 150 கிராமிய நூற்பு நிலையங்கள் வரை துவங்கப்படும்.

## பூதலூர் ஒன்றியத்தில் ' CARE ' நிறுவனத்தால் கட்டப்பட்ட வீடுகள்.

வினா 293— திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பூதலூர் ஒன்றியம் (தஞ்சாவூர் மாவட்டம்), பாலயப்பட்டி தெற்கு ஊராட்சி எல்லைக்குள் வெள்ள நிவாரணப் பணியாக ' CARE ' நிறுவனத்தால் கட்டி தரப்பட்ட வீடுகள் எத்தனை ?

விடை— 51.

## தஞ்சை மாவட்டத்தில் ஆவி இன பசு பெருக்கம்.

வினா 294— திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் ஆவி இன பசு பெருக்கத்திற்கு அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது ?

**விடை**— தமிழகத்தில் உள்ள கால்நடைகளின் தரத்தை உயர்த்தும் பணியில் ஒரு பகுதியாக, தமிழக அரசு, தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஈச்சங்கோட்டையில் உயர் இன கால்நடை வளர்ப்புப் பண்ணை ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. இதன்மூலம் தமிழகம் முழுவதும் பயன் அடையும். இத் திட்டத்தின்படி இந்தப் பண்ணைக்கு 240 ஜெர்சி இன கிடேரிகளும், 10 ஜெர்சி இன இளங் காளைகளும், டேனிஷ் அரசாங்கத்தால் (நன்கொடையாக, போக்கு வரவு செலவுகள் உட்பட) தரப்படவிருந்தது. ஆனால், மத்திய அரசு, முதல் தடவையாக, 50 ஜெர்சி கிடேரிகளும், 2 ஜெர்சி இளங்காளைகளும் ஆஸ்திரேலியாவிலிருந்து, கொழும்பு திட்டத்தின் கீழ், வழங்குவதற்கு ஏற்பாடு செய்து மேற்படி ஜெர்சி இன கால்நடைகள் 1978-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 8-ம் நாள் அன்று பெறப்பட்டு அவைகள் ஈச்சங்கோட்டை உயர் இன கால் நடைப் பண்ணையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

2. ஆஸ்திரேலியாவிலிருந்து பெறப்பட்ட ஜெர்சி உயர் இனக் காளைகளிடமிருந்து விந்து சேகரித்து, அதனைப் பாதுகாத்து அவ்வப்போது நாட்டு கால்நடைகளுக்கு செயற்கை முறை கருத் தரிப்பு மூலம் உயர் இன பெருக்கத்தை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் ஈச்சங்கோட்டையிலேயே ஒரு உறை விந்து வங்கி நிறுவப் பட இருக்கின்றது.

<u>வேலூரில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம்.</u>

வினா 295— திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆற்காடு மாவட்டம், வேலூரில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் ஏற்று நடத்தும் உத்தேசமுண்டா?

(ஆ) இதற்கு ஆன மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

விடை— (அ) ஆம்.

(ஆ) தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆய்வு வேலைகள் முடிந்த பின்னர் உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்படும்.

<u>மின்வாரியம் ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷனிடமிருந்து பெற்றுள்ள கடன்.</u>

வினா 296— திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு மின் சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாடு மின்வாரியம் ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷனிடம் இருந்து இதுவரை பெற்றுள்ள கடன் எவ்வளவு?

(ஆ) இந்தத் தொகையால் எந்தெந்த திட்டங்கள் செயல் படுத்தப்படுகின்றன?



**விடை** —(அ) ரூ. 54.26 கோடி.

(ஆ) இக்கடன் தொகை பொதுவாக மின்சார அபிவிருத்தித் திட்டங்களுக்காகச் செலவிடப்பட்டுள்ளது. 1974–75 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் தூத்துக்குடி அனல் மின்திட்டம், குந்தா நான்காவது நிலை, காடம்பாறை, சுருளியாறு, மின் அனுப்புதல் போன்ற குறிப்பிட்ட திட்டங்களுக்கு மட்டும் ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் கடன் வழங்கி வருகிறது.

<u>மேலப்புதுக்குடியில் சுற்றுலா விடுதி</u>

வினா 297—திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தாலூக்கா, மேலப்புதுக்குடி அருஞ்சுனை சாஸ்தா ஆலயம் அமைந்திருக்கும் இடத்தில் சுற்றுலா பயணி விடுதி கட்டும் குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அந்தத் திட்டம் துவங்கப் படும்?

**விடை**—(அ) மற்றும் (ஆ) : இல்லை.

<u>Sale of milk at Koratur Depot.</u>

QUESTION 298.—<u>THIRU N. KITTAPPA</u>

Will the honourable Minister for Rural Industries be pleased to state—

(*a*) Whether the milk distributing assistants at Korattur Madras-50 have been reported to be sel ing the milk packets and bottles for a premium.

(*b*) if so, whether any investigation has been made in thi regard; and

(*c*) the details of the steps taken to ch^ck such mal practice.

A.—

(அ) ஆம்.

(ஆ) ஆம்.

(இ) காசுக்கு விற்கவேண்டிய பால் பைகளை உண்மையான வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே வழங்கும்படி மேற்படி டிப்போவில் பணிபுரியும் விற்பனையாளர்களுக்கு அறிவுரை வழங்கப் பட்டது, தவிர மேற்கூறிய விற்பனையாளர் இடமாற்றம் செய்யப்பட்டு பிறகு அன்னார் வேலையை ராஜினாமா செய்து விட்டார்.

மேலும் டெப்போ எண். 323-ன் பால் விற்பனையை அந்த வட்ட அலுவலரைக் குறிப்பாகக் கண்காணிக்கும்படி அறிவுறுத்தப் பட்டது. தற்போது மேற்படி டெப்போவைப் பற்றி (டெப்போ எண் 323) புகார் ஒன்றும் இல்லை.

## Discussion on noise pollution

QUESTION 299—THIRU N. KITTAPPA :

Will the Honourable the Chief Minister be pleased to state—

(c) Whether any meeting of Government Officials and others took place at the office of the Commissioner of Police, Madras to Examine the question of noise pollution in Madras City about 19th April 1978; and

(b) if so, the details thereof.

விடை : (அ) ஆம்.

(ஆ) சென்னை அடையாறு புற்றுநோய் சிகிச்சை நிலைய டைரக்டர் டாக்டர் எஸ். கிருஷ்ணமூர்த்தியின் வேண்டுகோளுக்கிணங்க, காவல் துறைத் தலைவர், சென்னை நகர காவல் துறை அலுவலக மாநாட்டு கூட்டத்தில் 17—4—1978 அன்று ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார். அக்கூட்டத்தில் கீழ்க்கண்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்: —

1. திரு. இ. எல். ஸ்டிரேசி, மாநில காவல் துறைத் தலைவர்.
2. திரு. பொன். பரமகுரு, நகர காவல் துறை ஆணையர்.
3. டாக்டர் எஸ். கிருஷ்ணமூர்த்தி, டைரக்டர், புற்றுநோய் சிகிச்சை நிலையம், சென்னை.
4. திரு. எம். முரா ஷெட்டி, டைரக்டர், மண்டல தொழில் கழகம், சென்னை.
5. திரு. ஆர். தில்லைநாயகம், டைரக்டர், சாலைப் போக்குவரத்துக் கழகம், சென்னை.
6. டாக்டர் ஆர். பிச்சை, பொது சுகாதாரப் பொறியியல் பேராசிரியர், கிண்டி பொறியியல் கல்லூரி, சென்னை.
7. திரு. ஏ. துரைராஜ், தலைமைப் பொறியாளர் & தனி அலுவலர், சுற்றுப்புற சுகாதாரத் துறை, சென்னை-5.
8. டாக்டர் எஸ். காமேஸ்வரன், பேராசிரியர் & டைரக்டர், காது, மூக்கு, தொண்டை சிகிச்சைக் கூடம், அரசு பொது மருத்துவ மனை, சென்னை.



9. திரு. டபிள்யூ. ஐ. தேவாரம், துணைக் காவல் ஆணையாளர், சட்டமும் ஒழுங்கும் (தெற்கு)
10. திரு. ஜீ. வீரராகவன், துணை காவல் ஆணையாளர், (போக்குவரத்து), சென்னை.
11. திரு. பி. எல். விஸ்வநாதன், துணைக் காவல் ஆணையர், சட்டமும் ஒழுங்கும்( வடக்கு).

அதிகாரிகள் அல்லாதவர் எவரும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

ஒலிப்பெருக்கிகளின் அலறல் மற்றும் தொழிற்பட்டறைகளால் உண்டாக்கும் இரைச்சலைக் கட்டுப் படுத்துவதில் காவல் துறை எவ்வாறு துணைபுரிய முடியும் என்பது இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. டாக்டர் எஸ். கிருஷ்ணமூர்த்தி இரைச்சல்களினால் உண்டாகும் தீமையை கட்டுப்படுத்த ஒரு சங்கத்தினை ஏற்படுத்தலாமென விருப்பம் தெரிவித்தார். இதற்கான திட்டம் ஒன்றை அவர் வகுத்துக் கொண்டிருப்பதாகச் சொல்கிறார்.

## *Levy of entertainment taxes on circus companies*

Q. 300—THIRU M. ARUMUGAM : Will the Honourable the Minister for Revenue be pleased to state;

(a) Whether the Central Government have directed the State Government to exempt the circus companies from the entertainment tax in recent times and

A. —

(b) If so, the details thereof?

(a) No.

(b) Does not arise.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### அவசரச் சட்டம் நிராகரிக்கப்பட வேண்டுமென்ற தனி தீர்மானம் குறித்து.

திரு. துரை முருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர். நான் தங்களுக்கும் செயலாளர் அவர்களுக்கும் தமிழ்நாடு Ordinance No. 2 of 1978 என்கின்ற சட்டத்தை டிஸ் அப்ரூவ். செய்து நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன். நான் நோட்டீஸ் கொடுத்திருப்பது under Article 213 (2) of the constitution. எங்கள் தீர்மானம் என்னவென்றால்..

"This House disapproves Tamil Nadu ordinance No. 2 of 1978 as the said ordinance is completely anti . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் தங்களுடைய ஒழுங்குப் பிரச்னையை மட்டும் சொல்லுங்கள். தயவுசெய்து தாங்கள் கடமையுணர்வோடு பேசுங்கள். நான் கொடுத்திருந்த நோட்டீஸ் என்ன ஆயிற்று என்று மட்டும் கேளுங்கள். அப்படி கேட்பதற்குப் பதிலாக விவரங்களை எல்லாம் இங்கு எடுத்துச் சொல்ல வேண்டாம். அந்தத் தீர்மானத்தை எல்லாம் படிக்க வேண்டாம். . . .

திரு. துரை முருகன் : சரி, படிக்கவில்லை. கருத்தை மட்டும் சொல்லி விடுகிறேன்.

This House disapproves the Tamil Nadu Ordinance No .2 of 1978 as the said Ordinance is anti-labour and against the universly legitimate and recognised right of the workers என்று ஒரு தீர்மானத்தை கொடுத்திருக்கிறேன்.

நான் ஒரு ரெசலூஷன் கொடுத்திருந்தேன். அதை அஜண்டாவிலே சேர்க்க வேண்டுமென்று தங்களுக்குத் தனியாகக் கடிதம் எழுதியிருக்கிறேன். நேற்றைய தினம் நிதி அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது, அச்சட்டம் ஆறு மாதங்களுக்குள்ளாக தானாக காலாவதியாகி விடும் என்றார்கள். அசெம்பிளி இருந்தால் ஆறு வாரம், இல்லாவிட்டால் ஆறு மாதம். அதற்கு 'பில்' கொண்டுவரப் போவதில்லை; தானாகச் செத்துப் போகும் என்றார்கள். நான் கொடுத்திருப்பது, எங்களுடைய கன்டென்ஷன், இந்த ஆர்டர் போட்டதே தவறு அதை டிஸ் அப்ரூவ் செய்ய நடவடிக்கை எடுக்க இந்த அவைக்கு உரிமையுண்டு என்று தெரிவித்து ஒரு ரெசலூஷன் கொடுத்திருக்கிறேன், அது குறித்து தங்களுக்கு ஒரு மடல் எழுதியிருக்கிறேன். அதை எப்போது எடுத்துக் கொள்ளப் போகிறீர்கள் ?



மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் இப்படி எழுதிக் கொடுத்து விட்டு, இப்போது இங்கே இப்படிக் கேட்பது முறை தானா? என்ன ஆயிற்று என்று எங்கே வந்து கேட்பது என்பது உறுப்பினருக்குத் தெரியாதா? அதை விட்டுவிட்டு, இங்கே இப்படிப் பேசி நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்க வேண்டாம். இதைப்பற்றி என்னுடைய அறையிலே வந்து கேட்டால் பதில் சொல்கிறேன். இங்கே பதில் இல்லை.

திரு. அ. ரகுமான்கான் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதைக் குறித்துதான் படிக்க எழுந்தேன். எனவே, தாங்கள் தயவுசெய்து அமருங்கள். அவர் பேசியது அத்தனையையும் அவைக் குறிப்பேட்டிலே இருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

## 3. அறிக்கை அளித்தல்

### (அ) விதி 82-ன் கீழ் கல்வி அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் விதி 82—ன் கீழ் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மதுரை மற்றும் சென்னைப் பல்கலைக்கழகங்களில் பணிபுரியும் கல்லூரி ஆசிரியர்களின் சங்கத்தைச் சார்ந்த கூட்டு செயல் குழு கீழ்க்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றி உள்ளது. இப்பொருளில் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. பல்கலைக் கழக மானியக் குழுவின் ஊதிய விகிதங்களை 1-10-78 தேதிக்குள் வழங்க தனியார் கல்லூரி நிர்வாகங்களுக்கு அரசு உத்திரவிட வேண்டும்.

2. பல்கலைகழக மானியக் குழுவின் ஊதிய விகிதங்களை வழங்குவதில் ஆசிரியர் நியமனம் குறித்த தனியார் கல்லூரி நிர்வாகங்களில் மறுப்பை காரணம் காட்டி நிறுத்தி வைத்தல் கூடாது.

கல்லூரிகளில் ஆசிரியர்கள் நியமிப்பது குறித்து மத்திய அரசினால் விதிக்கப்பட்டு இவ்வரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகள் தனியார் கல்லூரி நிர்வாகங்களால் ஏற்றுக்கொள்ளப் படவில்லை. ஆதலால் இக்கல்லூரிகளில் திருத்திய ஊதிய விகிதங்களை

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

அமுல்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. எனினும் இதில் உள்ள சட்ட சிக்கல்களை ஆராய்ந்து திருத்திய விகிதங்களை தனியார் கல்லூரிகளில் அமுல் படுத்த தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. ஏற்கனவே பத்துக் கல்லூரிகளில் உள்ள ஆசிரியர்களுக் கான ஊதிய விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டு விட்டன. எஞ்சிய தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கான ஊதிய விகிதங்கள் 31–12–78 தேதிக்குள் நிர்ணயிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

3. ஆசிரியர்களுக்கு நேரடியாக அரசு ஊதியம் வழங்க வேண்டும். தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கும் முறையை தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கும் விரிவாக்குவது டற்றி அரசு ஆராய்ந்து வருகிறது. இதற்கு பிராந்திய அலுவல கங்கள் திறக்க வேண்டியது அவசியம் என்ற கருத்தும் பரிசீலுக்கப் டடுகிறது. விரைவிலேயே இதுபற்றி ஒரு முடிவை அரசு எடுக்கும்.

4. ஒவ்வொரு வகுப்புக்கும் 20 மாணவர்களாவது இருக்க வேண்டும் என்று கல்லூரிக் கல்வி இயக்குநர் அனுப்பிய சுற்றறிக்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

31–3–77-ல் பணியிலிருந்த ஆசிரியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட மாட்டார்கள் என்று ஏற்கனவே அரசு அறிவித் துள்ளது. ஆகையால் மேற்சொன்ன விதி 31.3.77-ல் பணி யிலிருந்த ஆசிரியர்களைப் பாதிக்காது.

5. தனியார் கல்லூரிகளிலிருந்து வேலை நீக்கம் செய்யப் பட்ட ஆசிரியர்கள் அனைவரையும் திரும்ப வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

தனியார் கல்லூரி ஆசிரியர்கள் பணிநீக்கம் குறித்து அரசு அனுதாபத்தோடு ஆராயும். இத்தகைய பணி நீக்கங்களில் ஏதேனும் முறைகேடுகள் இருப்பின் பரிசீலனை செய்து தகுந்த ஆணைகளை அரசு பிறப்பிக்கும்.

6. விதி10 (எ)(1)-ன்கீழ் தற்காலிகமாக நியமனம் செய்யப் பட்ட ஆசிரியர்களுடைய பணிக்காலத்தை வரன்முறைப் படுத்த ஒரு சிறப்புக் குழுவை கல்லூரிக் கல்வி இயக்குநர் அமைக்க வேண்டும்.

10 (எ) (1) விதி மூலம் தற்காலிகமாகப் பணிபுரியும் ஆசிரியர்கள் பிரச்சனையைக் கருணையுடன் பரிசீலிக்கும் என்று ஏற்கனவே அரசு அறிவித்து உள்ளது. ஆனால் அரசு கல்லூரிகளில் முறையான நியமனம் பெற தமிழ்நாடு அரசு தேர்வாணைக் குழுவின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். மேலும் 10 (எ) (1) விதி பல திறன்களில் பணிபுரியும் அரசு அலுவலர்களுக்கும் பொருந்தும். இவ்விதியின் கீழ் பணிபுரியும் ஆசிரியர்களை முறையாக நியமிப்ப தற்கு ஒரு சிறப்புக்குழு அமைப்பதென்பது அரசின் பிற துறைகளில் உள்ள ஊழியர்களும் இத்தகைய கோரிக்கையை எழுப்ப வழி செய்யும். ஆகையால் இதை ஏற்பது கடினம்.



7. பல்கலைக்கழகம் குறிப்பிட்டுள்ள வேலைப் பளுவை பின் பற்றுமாறு தனியார், மற்றும் அரசு கல்லூரிகளுக்கு உத்திரவிட வேண்டும்.

ஏற்கெனவே பல்கலைக் கழகங்கள் குறிப்பிட்டுள்ள வேலைப் பளு தான் மானியத்திற்காகக் கணக்கில் கொள்ளப்படுகிறது.

8. குடும்ப க்ஷேமநல திட்டத்தைத் தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு விரிவுபடுத்த வேண்டும்.

தனியார் கல்லூரிகளில் பணிபுரியும் ஊழியர்களில் எண்ணிக்கை அவர்களின் வயது, ஆயுள் ஈட்டு கார்ப்பரேஷன் களுக்கு அரசு செலுத்த வேண்டிய பிரிமியத் தொகை போன்ற விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. எல்லா விவரங்களும் பெற்ற வுடன் தேவையான ஆணை பிறப்பிக்கப்படும்.

9. அரசு கல்லூரிகளில் உள்ள ஆசிரியர்கள் அனைவரையும் நிரந்தரமாக்க வேண்டும்.

இதற்குள்ள விதிமுறைகளைப் பொறுத்து ஊழியர்களை நிரந்தர மாக்கத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

10. சிவகங்கை இராஜா துரைசிங்க கல்லூரியை 31-12-78-க்கும் பிறகும் அரசு தொடர்ந்து ஏற்று நடத்த வேண்டும். அதே போன்று நாகர்கோவில் பயோனியர் கல்லூரியை அரசு ஏற்று நடத்த வேண்டும். தவிர புது கல்லூரி நிர்வாகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு ஒழுங்கீனங்களைச் சரிசெய்ய ஒரு விசாரணைக் குழு அமைக்க வேண்டும்.

சிவகங்கை இராஜா துரைசிங்கம் கல்லூரியை தனியார் கல்லூரி ஒழுங்காற்ற சட்டத்தின் கீழ் 1–1–77 முதல் இரண்டு வருட காலத்திற்கு அரசு ஏற்று நடத்தி வருகிறது. இதை எதிர்த்து நிர்வாகம் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து விசாரணையில் உள்ளது. பயோனியர் குமாரசாமி கல்லூரி நிர்வாகத்தினர் அரசு அக்கல்லூரியை ஏற்று நடத்த நீதி மன்றத்தில் தடை வாங்கி யுள்ளனர். இதில் சட்ட பிரச்னை உள்ளது. இருப்பினும் அரசு ஆசிரியர்கள் கோரிக்கையை அனுதாபத்துடன் பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கும். புது கல்லூரியைப் பொறுத்தவரை இப் பிரச்சினைகள் குறித்து ஓர் உடன்பாடு ஏற்பட்டு விட்டதாகத் தெரிகிறது. இக்கல்லூரியின் கணக்குகளில் ஏதாவது முறைகேடு இருக்குமாயின் தேவையான நடவடிக்கை அரசு எடுக்கத் தயங்காது.

11. தனியார் கல்லூரிகளைப் போன்று அரசு கல்லூரி களில் உள்ள பட்ட மேற்படிப்பு பயிற்றுநர்கள், மற்றும் விளக்குநர் அனைவரும் மூன்று ஆண்டு பணி நிறைவேறியவுடன் உதவி பேராசிரியர்களாக நியமிக்கப்படல் வேண்டும்.

அரசுக் கல்லூரிகளில் பட்டமேல்படிப்பு தகுதி பெற்ற பயிற்றுநர் மற்றும் விளக்குநர்கள் மூன்றாண்டு பணி நிறைவேறும் பொழுது உதவிப் பேராசிரியராக நியமிக்கப்படுவர். இம்மூன்றாண்டு பணிக்காலத்தை கணக்கிடுவதில் இடையே ஏற்பட்டிருக்கும் 90 நாட்கள் வரையான இடைவெளி கருத்தில் கொள்ளப்பட மாட்டாது.

12. உடற்பயிற்சி இயக்குநர் மற்றும் நூலகர்களுக்கு உதவிப் பேராசிரியர்களுக்கு அளிக்கப்பட்ட ரூபாய் 700-1,600 ஊதிய விகிதம் அளிக்கப்படுதல் வேண்டும்.

உதவிப் பேராசிரியர்களைப் போன்று கல்லூரிகளில் உள்ள உடற்பயிற்சி இயக்குநர்கள் மற்றும் நூலகர்கள் ஏற்கனவே பல்கலைக் கழக மானியக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட ஊதியங்கள் அளிக்கப்பட்டுள்ளன. எனினும் உதவி பேராசிரியர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள ஊதிய விகிதம் ரூ. 700-1,600 இவர்களுக்கு அளிப்பது குறித்து கல்லூரி கல்வி இயக்குநருடன் கலந்து ஆலோசிக்கப்படுகின்றது.

கல்லூரி ஆசிரியர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி கோட்டை முன் உண்ணாவிரதம் இருக்கத் தடையை மீறியபோது காவல்துறையினரால் கைது செய்யப்பட்டனர். அரசு அவர்களுடைய பிரச்சினைகளை ஏற்கனவே அனுதாபத்துடன் பரிசீலித்து வருவதால் ஆசிரியர்கள் தங்கள் கிளர்ச்சிகளை கைவிடுவார்களென அரசு நம்புகின்றது. (திரு. க. சுப்பு எழுந்தார்)

[முற்பகல் 10.20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி 82ன் கீழ் அமைச்சர் அளித்த அறிக்கையின் மீது விவாதம் கூடாது.

திரு. க. சுப்பு : அதிலே அல்ல, வேறு பிரச்சினை....... (திரு. ரகுமான்கான் குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் திரு சுப்பு அவர்களிடம் விளக்கம் கேட்டுக் கொண்டிருக்கும்போது திரு. ரகுமான்கான் நடுவிலே எழுந்திருந்து குறுக்கிடுவது எந்த வகையிலே நியாயமானது ?



## 4. ஒழுங்குப் பிரச்சினைகள்

(அ) விதி 82-ன் கீழ் கல்வி அமைச்சர் அறிக்கையளித்த பிறகு அதே பொருள் குறித்து விதி 41, 42ன் கீழ் அறிவிப்புக் கொடுத்திருந்தவர்களின் பெயர்களைக் குறிப்பிட வேண்டிய என்பது குறித்து.

திரு. க. சுப்பு: பாயிண்ட் ஆப் ஆர்டர் ரூல் 82-ன் கீழ் அமைச்சர் அவர்கள் அறிக்கை அளித்திருக்கிறார்கள், அதிலே விளக்கங்கள் கேட்க முடியாது. ஆனால் இதே பொருள் குறித்து 42-வது விதியின் கீழும் 41-வது விதியின் கீழும் நோட்டீஸ் கொடுத்திருக்கிறோம். அவ்வாறு கொடுத்திருக்கும் உறுப்பினர்களின் பெயர்களையாவது வாசித்தால் நல்லது. இன்னின்னார் விதி 41, 42-ன் கீழ் அரசாங்கத்தின் கவனத்திற்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள் என்பதையாவது சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : ரூல் 82-ல் அமைச்சர் அவர்கள் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அமைச்சர் அறிக்கை கொடுத்த பிறகு அதன் மீது எந்த விதமான விவாதமும் இருக்கக் கூடாது என்ற விதி இருக்கிறது.

திரு. ரா. உமாநாத் : ரூல் 82—ன் கீழ் அமைச்சர் அவர்கள் அறிக்கை விட்டிருக்கிறார்கள் என்பது உண்மை. கனம் அமைச்சர் எட்மண்ட் அவர்கள் அதிலே விவாதம் கூடாது என்று விதி இருக்கிறது என்று சொன்னார்கள். என்னுடைய பிரச்சினை என்னவென்றால், ஒரு கால் அட்டென்ஷன் நோட்டீஸ், அட்ஜார்ன்மெண்ட் மோஷன் இல்லாத நிலையில் தானாகவே அமைச்சர் அவர்கள் ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுத்திருந்ததால் சரி.

This is an entire'y di'ferent situation.

கால் அட்டென்ஷன் கொடுத்திருந்ததையும், அட்ஜார்ன்மெண்ட் மோஷன்களையும் அனுமதித்திருந்தால் அதைக் கொடுத்த உறுப்பினர்கள் கேள்விகள் கேட்க 'ரைட்' உண்டு. அந்த 'ரைட்' இப்போது இல்லை.... ஆனால் அதே சப்ஜெக்ட்டின் பேரிலே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி ஒரு விதி எங்கே இருக்கிறது என்று சுட்டிக்காட்டினால் நல்லது.

திரு. ரா. உமாநாத் : கால் அட்டென்ஷனுக்கு கேள்விகள் கேட்கலாம் என்று விதி இருக்கிறது. ஆனால் 82-வது விதியின் கீழ் கேள்விகள் கேட்பதற்கு நான் உரிமை கேட்கவில்லை. ஆனால் சபாநாயகர் அவர்களிடம் உறுப்பினர்கள் அதே சப்ஜெக்ட்டின் பேரிலே கால் அட்டென்ஷன் கொடுத்திருக்கிறபோது அதை தாங்கள் அனுமதித்து இருந்தால் அதன்மீது கேள்விகள் கேட்பதற்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு உமாநாத் அவர்கள் சொன்னதை நான் புரிந்துகொண்டேன். அவர்கள் பாராளுமன்ற முறைகளை நன்றாகத் தெரிந்தவர்கள். நான் அறையிலே உங்க

ளுடைய கோரிக்கைகளை நிராகரித்ததற்குப் பின்னாலே அதே பிரச்சினையைப்பற்றி இங்கே எழுப்புவதற்கு நியாயமில்லை. ஆனால், விதி 82-ன் கீழே அமைச்சர் அவர்கள் இங்கே அறிக்கை வைத்ததற்குப் பின்னாலே அந்த அறிக்கையின்மீது அதிலே தவறு இருக்கிறது என்று தங்களுக்குத் தெரிந்தால், மறு அறிக்கை கொடுக்க வேண்டுமென்று நீங்கள் விரும்பினால் அதற்காக தனியாக அனுமதி கேட்கலாம், அப்படியில்லாமல் 41, 42 விதிகளின்கீழ் கொடுக்கப்பட்டவற்றைத் தள்ளுபடி செய்திருந்தால் அதைச் சுட்டிக்காட்டுவதற்காக சுட்டிக்காட்டி அவையின் குறிப்பேட்டிலே ஏறுவதற்காக எழுப்புவது சரியல்ல.

*__திரு. க. அன்பழகன் :__ இந்த அவையிலே தாங்கள் வீற்றிருந்தாலும் அறையிலே இருந்தாலும் தாங்கள் சபாநாயகர் தான். அவையிலே இருந்தால் சபாநாயகர் அறையிலே இருந்தால் இல்லையென்ற நிலைமை எதுவும் கிடையாது. எங்கேயிருந்தாலும் சபாநாயகர் தான். அதைப் பிரிக்க முடியாது. ஒரு பிரச்சினையை சபாநாயகரிடம் தருகிறபோது அதை நிராகரிக்கிற உரிமை சபாநாயகருக்கு இருக்கிறது. ஆனால் ஒரு பிரச்சினையைப்பற்றி அரசாங்கமே 82-வது விதியின்கீழ் அறிக்கை தர வேண்டிய அவசியம் இருக்கிறபோது 41, 42-வது விதிகளின்கீழ் கொடுக்கப்பட்டவை நிராகரிக்கப்பட்டன என்று சொன்னாலும்கூட சட்டமன்றத்திலே அதுகுறித்து ஒரு கருத்துத் தெரிவிக்கப்படக்கூடிய ஒன்றாக இருக்கிறது என்ற உண்மை சபாநாயகர் அவர்களுக்கு விளங்கும். ஆனால், விதி 82-ன்கீழ் அமைச்சர் அறிக்கை அளிக்க அனுமதியளித்திருக்கிறீர்கள். ஆனால், விதி 41, 42-ன்கீழ் எழுப்புவதற்கு அனுமதியில்லையென்றாலும்கூட அந்த அறிவிப்புக் கொடுத்தவர்கள் இன்னின்னார் என்றோ யார் யார் எழுப்ப விரும்பினார்கள் என்றோ அறிவிப்புச் செய்தீர்களானால் அது இந்த அவையினுடைய அடிப்படை உரிமையைப் பாதுகாப்பதற்குத் துணையாக இருக்கும். அதனை மறுப்பதாக இருந்தால் அது தங்களுடைய விருப்பம்.

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ பேராசிரியர் அவர்கள்....

__திரு. கே. கந்தசாமி :__ நானும் விதி 42—ன்கீழ்....

__மாண்புமிகு பேரவைத் தலைவர்:__ தயவுசெய்து உட்காருங்கள். அதே பிரச்சினையைப்பற்றித் தான் சொல்கிறீர்கள்.

__திரு. கே. கந்தசாமி :__ கொஞ்சம் கேட்டுவிட்டுச் சொல்லுங்கள்.**

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ தயவு செய்து உட்காருங்கள். திரு கந்தசாமி இரண்டாவதாக எழுப்பிய பிரச்சினையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி ஆணையிடுகிறேன்.

__திரு. கே. கந்தசாமி :__ நான் சொல்வதைக் கேட்டுவிட்டுச் சொல்லுங்கள். கேட்காமல் சொல்லக் கூடாது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



__மாண்புமிகு பேரவைத் தலைவர்:__ தாங்கள் இன்னொரு பிரச்சினையை எழுப்புவது எந்த முறை?

__திரு. கே. கந்தசாமி:__ எந்த முறை என்று சொல்கிறேன். கேட்டுவிட்டுச் சொல்லுங்கள்.

__திரு. கோ. இளங்கோவன் :__ பாயின்ட் ஆப் ஆர்டர்....

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ தயவுசெய்து உட்காருங்கள். நான் பேராசிரியர் சொன்னதற்குப் பதில் சொல்ல வேண்டும்,

__திரு. கே. கந்தசாமி :__ நீங்கள் சொல்வதைக் கேட்க வேண்டும என்று சொல்வதைப்போல் நாங்கள் சொல்வதை நீங்கள் கேட்க வேண்டும். கேட்காமல் சொல்லக்கூடாது....

[முற்பகல் 10.30]

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ தாங்கள் பேசுவதற்கு வாய்ப்பளித்த பிறகு நீங்கள் பேசுங்கள், இப்பொழுது உட்காருங்கள்.

__திரு. கே. கந்தசாமி :__ நீங்கள் வாய்ப்பு தராமல் இருந்தால் இப்படித்தான் பேச வேண்டிய நிலை ஏற்படும், நீங்கள்தான் சிக்கலை உண்டு பண்ணுகிறீர்கள்.

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ தயவுசெய்து தாங்கள் உட்காருங்கள். நீங்கள் நீண்ட காலம் இந்த அவையில் அனுபவப்பட்டவர்கள். முறையாக நடந்து கொள்ளுங்கள்.

__திரு. கே. கந்தசாமி :__ முறைப்படிதான் நடந்து கொண்டிருக்கிறோம். நீங்கள் முறையோடு கொடுப்பதாகத் தெரியவில்லையே.

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ உட்காருங்கள்.

__திரு. கோ. இளங்கோவன் :__ தலைவரவர்களே,....

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ நீங்களும் உட்காருங்கள்

__திரு. கோ. இளங்கோவன் :__ எதையும் சொல்லவிட மாட்டேன் என்கிறீர்கள், நீங்கள் நின்று கொண்டேயிருந்தால் நாங்கள் எப்படிச் சொல்வது?

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ நீங்கள் உட்காருங்கள். உங்கள் துணைத் தலைவருக்குக் கட்டுப்படுங்கள், அல்லது விதிகளுக்குக் கட்டுப்படுங்கள். துணைத் தலைவருக்கும் கட்டுபடுவதில்லை, விதிகளுக்கும் கட்டுப்படுவதில்லை என்றால் நீங்கள் பேசுங்கள்.

[பேரவைத் தலைவர்] [1978 செப்டம்பர் 8

திரு. கந்தசாமி அவர்கள் எழுப்பிய பிரச்சினை வேறு, ஆனால் பேசியது வேறு. தாங்கள் என்னைப்பற்றி அவதூறாகப் பேசியது பதிவேட்டில் இருக்கட்டும், பரவாயில்லை.

எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு நான் பதில் சொல்லியாக வேண்டும். அவர் சொல்வது 41 அல்லது 42-வது விதியின் கீழ் கொடுப்பதைப்பற்றிச் சொல்கிறார்கள். திரு. உமாநாத் கேட்டதற்குக்கூட (நான் வருகிற பொழுதே) 82-வது விதியின்கீழ் அமைச்சரவர்கள் அறிக்கை தரப் போகிறார்கள் என்று சொல்லிவிட்டுத்தான் அதைப்பற்றி அனுமதி மறுத்திருக்கிறேன். ஒரு உறுப்பினர் தருகிறபொழுது 82-வது விதியின் கீழ் அமைச்சர் அறிக்கை தருகிறார் என்ற காரணம் காட்டி தள்ளுபடி செய்திருக்கிறேன். இதற்குமேல் இது அவையிலே எழுப்பக்கூடிய பிரச்சினையாக எப்படி அமையும் என்று தெரியவில்லை.

திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, 41 அல்லது 42-வது விதியின் கீழ் அவர்கள் தங்களுடைய உரிமையாக தங்களிடத்தில் எடுத்து வைக்கும் பொழுது, 82-வது விதியின்கீழ் அமைச்சர் அறிக்கை தருவதாகத் தங்களுக்குத் தெரிந்திருப்பதால் மறுத்ததாகச் சொல்கிறீர்கள். 82-வது விதியின்கீழ் வருகிற அதே நேரத்தில், 41 அல்லது 42-வது விதியின்கீழ் கொடுத்தவர்களுக்கு அது முதலில் தெரியாது, ஆகவே, அவர்கள் அந்த வேண்டுகோளை முதலில் வைக்கிறார்கள். ஆனால் 82-வது விதியின் அறிக்கை வருவது தெரியாத நேரத்தில் உறுப்பினருடைய......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்லியிருக்கிறேன், பெற்றுக்கொள்கிறபொழுதே சொல்லியிருக்கிறேன்.

திரு. க. அன்பழகன்: நான் தங்களுக்கு உதவி செய்யக்கூடும் என்ற நம்பிக்கையில் பேசுகிறேனே தவிர இடையூறு செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில் அல்ல. 41 அல்லது 42-வது விதியின்கீழ் உறுப்பினர்கள் ஒரு பிரச்சினையை எழுப்ப இருக்கின்ற அடிப்படை உரிமையை மதிப்பதற்காக, அதைத் தாங்கள் மறுக்க வேண்டுமென்று தோன்றுகின்றபொழுது 82-வது விதியின் கீழ் அறிக்கை அளிக்கப்பட இருக்கிறது. நீங்கள் 41-இலே அல்லது 42-இலே எழுப்பியிருக்கிறீர்கள், அப்படி எழுப்ப வேண்டிய அவசியமில்லை என்று சொல்லி இன்னின்னார் 42-வது விதியின்கீழ் எழுப்பினார்கள் என்று சொல்லிவிடுவது இந்த அவைக்குச் சிறப்பாக இருக்கும், உறுப்பினர்களின் அடிப்படை உரிமையையும் பாதுகாத்ததாக அது அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்கள் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அறையிலே தள்ளி விட்டதைப்பற்றி அவையிலே



1978 செப்டம்பர் 8] [பேரவைத் தலைவர்]

சொல்லவேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்களா? மறுபடியும் அவையிலே எழுப்பி பதிவேட்டிலே அது பதியப்பட வேண்டுமா? அப்படிப்பட்ட மரபு அவையிலே இருக்கிறதா? அறையில் தள்ளிவிட்ட பிரச்சினையைப்பற்றி இங்கே சொல்ல வேண்டுமா?

திரு. எம். ஏ. லத்தீப்: May I make my submission? இந்தமாதிரி சூழ்நிலை வரும்பொழுது நாங்கள் சொல்ல விரும்புவது என்னவென்றால், 82-வது விதியின் அடிப்படையில் அமைச்சரவர்கள் அறிக்கை கொடுக்கப் போகிறார்கள் என்று தங்களுக்குத் தெரிந்த காரணத்தினால் 41, 42-வது விதிகளின் அடிப்படையிலே கொடுக்கப்பட்டவைகளை அறையிலே தள்ளிவிடுகிறீர்கள், எனவே, எங்களது அடிப்படையான உரிமை பாதிக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் எந்த அடிப்படையிலே எழுந்து பேசுகிறீர்கள்? பேராசிரியர் சொன்னதையே மீண்டும் சொல்லி நேரத்தை வீணாக்குவதற்கு நான் அனுமதிக்க வில்லை. எந்த விதியின்கீழ் நீங்கள் பேசுகிறீர்கள்?

திரு. எம். ஏ. லத்தீப்: உதாரணங்கள் இருக்கின்றன.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்த உதாரணம், காட்டுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: எங்களுடைய உரிமை பாதிக்கப்பட்டிருக்கிறது....

மாண்புமிகு பேரவைத் தலைவர்:- ப்ரீசிடென்ட் எங்கே இருக்கிறது, காட்டுங்கள்.

மாண்புமிகு திரு சி. மனோகரன்: பேரவைத் தலைவரவர்களே, இங்கே 82-வது விதியின்கீழ் நமது மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் ஒரு அறிக்கையைப் படிப்பார் என்று சொன்னவுடன், 41, 42 விதியின்கீழ் தங்களது கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்ற அடிப்படையில் உங்களிடம் அவர்கள் தந்தபொழுது இப்படி 82-வது விதியின்கீழ் அமைச்சரவர்கள் அறிக்கையினை வெளியிட இருக்கிறார்கள் என்று சொல்லி, ஆகையினாலே இதை நீங்கள் வலியுறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொண்டதற்குப் பிறகு, அந்த உறுப்பினர்கள் அதை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகுதான் நீங்கள் இந்த 82-வது விதியின்கீழ் அனுமதித்திருக்கிறீர்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள்.

உங்களைப் புரிந்து கொண்டது சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆகையினாலே, நான் கேட்டுக்கொள்வது 41 அல்லது 42 விதியின்கீழ் அனுமதிக்கப்பட்டிருக்குமானால் கேள்வி கேட்கின்ற வாய்ப்புகள் உறுப்பினர்களுக்குக் கிடைக்கும் என்பதை நான்

மறுக்கவில்லை. 82-வது விதியின்கீழ் அமைச்சரவர்கள் அறிக்கைதந்த தற்குப் பிறகு அதன்மேல் கேள்விகள் கேட்கின்ற உரிமை இல்லை என்பதையும் யாரும் மறுக்கமாட்டார்கள். ஆக, 41, 42 விதிகளின் கீழ் தீர்மானத்தைக் கொடுத்தவர்கள், அவர்களுக்குத் தெரியாமல் சபாநாயகர்/ 82-வது விதியின்கீழ் அமைச்சர் ஒரு அறிக்கையைக் கொடுக்கட்டும் என்று சொல்லி 41,42 விதிகளின்கீழ் பிறகு எடுத்துக்கொள்கிறேன் . என்று சொல்லி, ஏமாற்றிவிட்டார் என்ற எண்ணத்தில் யாரும் தயவுசெய்வு பேச வேண்டாமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், நான், சபாநாயகர் பேசியதை, தெரிந்தவரை, புரிந்தவரை தெரிவிக்க விரும்புவது, கொடுத்தவரே, அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க 82-வது விதியின்கீழ், அமைச்சரவர்கள் அறிக்கை கொடுக்க இருக்கிறார்கள் என்று தெரிவித்ததற்குப் பிறகு, அதை உறுப்பினர்கள் ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு அந்த அடிப்படையில் சபாநாயகர் அவர் களால் 41,42 விதிகளின்கீழ் கொடுக்கப்பட்டவைகள் தள்ளப்பட்ட தற்குப் பிறகு, இந்தப் பிரச்னை இங்கே எடுக்கப்பட்டதற்குப் பின்னால், இந்தப் பிரச்னைகளைத் திருப்பி எழுப்புவது அவையின் நேரத்தை வீணடிக்க உதவுமே தவிர, உபயோகமாக இருக்காது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொண்டு, அடுத்து சில பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றை எடுத்துக்கொள்ளவேண்டு மென்று சபாநாயகர் அவர்களிடம் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு அவை முன்னவர் ஒரு தீர்மானம் கொண்டு வருவார்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : பெயர்களைச் சொல்லாதது, எங்களுடைய உரிமையைப் பாதிக்கிறது.... (கூச்சல். குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் என்னை நிர்ப் பந்திக்க முடியாது.

திரு. எம். ஏ. லத்தீப் : 82-வது விதியின்கீழ் என்று சொல்லும் போது பெயரை ஏன் நீங்கள் அனுமதிக்கக் கூடாது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் பதில் சொல்கிறேன். அப்படி ஒரு பிரச்சினை எழுமானால், 41, 42-வது விதியின்கீழ் கொடுப்பவைகளை இப்பொழுது பேரவைத் தலைவர் அறையிலேயே தள்ளுகின்ற அந்த உரிமை பேரவைத் தலைவருக்கு இல்லாமல் போகும். 41, 42 விதிகளின்கீழ் கொடுப்பவைகளை அறையிலே தள்ளுகின்ற பேரவைத் தலைவர், அவற்றை அவையிலே நிச்சயம் சொல்லித்தானாக வேண்டுமென்று விதிகளை மாற்றுங்கள். நான் கடைபிடிக்கத் தயார். ஆனால், இந்த 41, 42 விதிகளின்கீழ் கொடுப்பவைகளை அங்கு அறையிலே. தள்ள உரிமை இருக்கிற பொழுது, அதை அங்கேயே தள்ளியதற்குப் பின்னால், இங்கு





சொல்லித் தானாகவேண்டுமென்று நிர்பந்திப்பதை நான் கடந்த 16 ஆண்டுகளாகக் காணவில்லை. திரு. லத்தீப் சொன்னார், ஏற்கெனவே நடந்திருக்கிறது 'பிரிசீடென்ட்' இருக்கிறது என்று. ஆனால், ஆதாரம் காட்டவில்லை. ஒட்டுமொத்தமாகச் சொன்னதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

திரு. க. சுப்பு : தாங்கள் 42-வது விதியின்கீழ் கொடுத்ததைத் தள்ளிவிட்டதாகச் சொன்னீர்கள். எனக்குக் கடிதம் வரவில்லை.

திரு. அ. ரகுமான்கான் : எனக்கும் அறிவிப்பு இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் கைது செய்யப்பட்ட பிரச்சினை குறித்து நான் அட்ஜர்ன்மென்ட் மோஷன் கொடுத்தேன், அதை எடுத்திருக்கிறார்களா, அல்லது..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுப்பு அவர்களே, என்னிடம் 42-வது விதியின்கீழ் அறிவிப்பு கொடுத்தபொழுது, அமைச்சர் 82-வது விதியின்கீழ் கொடுத்தாலும் பரவாயில்லை, 42-வது விதியின்கீழ் எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற அவசிய மில்லையென்று சொன்னார். நான் இப்பொழுதுதான் அதைச் சொல் கிறேன், ஆகவே, இங்கே கிளப்புவது சரியல்ல. அமைச்சரேகூட விதி 82-வது விதியின்கீழ் அறிக்கை விட்டாலும் எனக்கு ஆட்சேபனை இல்லையென்று திரு. சுப்பு சொன்னார். பிறகு அமைச்சரைக் கேட்டேன். அமைச்சர், நான் 82-வது விதியின்கீழ் அறிக்கை தருவதாக இருக்கிறேன் என்று சொன்னபிறகு, 41, 42-விதியின்கீழ் கொடுத்திருப்பவை அனுமதிக்கப்படாது என்ற பிறகுதான்....

THIRU. M. A. LATHEEF : Let me make my submission....

[முற்பகல் 10-40]

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இறுதியில் எழுந்த ஒரே ஒரு பிரச்சினை திரு. லத்தீப் அவர்கள் குறிப்பிட்ட பிரச்சினை. அவர்களது பேரை அவையில் சொல்லக் கூடாதா என்பது. பெயர்களைச் சொல்லவில்லையே தவிர, சபாநாயகர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது திரு. சுப்புதான், திரு. ரகுமான்கான்தான் என்று வெளிப் படுத்தியதற்குப்பிறகு பேசவேண்டிய அவசியம் இல்லை. தயவு செய்து பிரச்சினைக்கு இத்தோடு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு (குறுக்கீடு) புதிய மரபை தயவு செய்து உருவாக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. லத்தீப் நின்று கொண்டு இருந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் இந்த விதியின்கீழ் தரவில்லை. தாங்கள் எவ்வளவு நேரம்தான் எடுத்துக் கொள்வீர்கள். நான் நேரம் கொடுக்கிறேனா இல்லையா என்பது

பிரச்சினை அல்ல. இந்த அவையின் உரிமை என்று மணிக் கணக்கில் எடுத்துக் கொள்ள முடியாது. உரிமை உள்ளவர்கள் கேட்கிறார்கள். தாங்கள் ஒரு கட்சியின் கருத்தைச் சொல்லுகிறீர்களே தவிர, அதை வைத்துக் கொண்டு வாதாட முடியாது. கருத்தைச் சொல்லிவிட்டு உட்கார வேண்டும்.

திரு. எம். ஏ. லத்தீப்: நான் என்ன சொல்லப் போகிறேன் என்று சொல்லிவிடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முஸ்லீம் லீக் கட்சித் தலைவர் அவர்களே, ஒரு பிரச்சினை எழுப்பப்பட்டபோது ஒரு கருத்தைச் சொல்லி, உட்கார வேண்டுமே தவிர அதற்காக கடைசிவரையில் இங்கே வாதிட்டு நேரத்தை வீணாக்க இந்த அவைத்தலைவர் தயாராக இல்லை. (திரு. லத்தீப் எழுந்தார்) தாங்கள் ஏற்கனவே சொல்லிவிட்டீர்கள்.

திரு. க. சுப்பு: பாயிண்ட் ஆப் ஆர்டர். தாங்கள் சொன்னதை முழுக்க முழுக்க ஏற்றுக் கொள்கிறேன். 42-வது விதியின்கீழ் எடுத்துக்கொள்ளுங்கள் என்று கேட்டுக்கொண்ட போது தாங்கள் 82-வது விதியின்கீழ் அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை அளிக்கவிருப்பதாகச் சொன்னீர்கள். ஆட்சேபணை இல்லை என்று சொன்னேன். எனக்கு வேண்டியதெல்லாம் பிரச்சினையை அரசாங்கத்தின் கவனத்திற்கு ஈர்ப்பதுதான். எனவே காலத்தின் அருமையைக் கருதி ஏற்றுக்கொண்டேன். ஆனால் தாங்கள், நாங்கள் கொடுத்ததை சொல்லக் கூடாது என்று சொல்வீர்களானால் எங்களுடைய உரிமை மறுக்கப்படுகிறது. அந்த உரிமையின் அடிப்படையில்தான் திரு. லத்தீப் அவர்கள் பேசுகிறார். திரு. லத்தீப் அவர்களைப் பேசக் கூடாது என்று சொல்ல முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் இந்த அவையை நடத்துவதற்கு என்னோடு ஒத்துழைப்புத் தரப்போகிறீர்களா? எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்கூட இதைப் பார்த்து ரசித்துக் கொண்டு இருக்கிறார். அவருக்கு இவர். இவருக்கு அவர் என்று இது கட்சிக்கு உள்ளே (குறுக்கீடு) ......

(திரு. சி. கோவிந்தராஜன், திரு. லத்தீப் எழுந்து நின்று கொண்டிருந்தார்கள்.)

திரு. துரை முருகன்: தலைவர் அவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமல்ல எதிர்க்கட்சி. இங்கே முஸ்லீம் லீக் இருக்கிறது. சி.பி.எம். இருக்கிறது. அவர்களுக்கு எல்லாம் வாய்ப்புத் தரவேண்டும். அவர்களுக்கு வாய்ப்புத் தரவில்லை என்றால் தவறாகக் கருதிக் கொள்வார்கள்.



திரு. சி. கோவிந்தராசன்: இந்தப் பிரச்சினையில் பேராசிரியர் அவர்களுடைய கோரிக்கை (குறுக்கீடு)....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். அரசினர் தீர்மானம். மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே.....

திரு. சி. கோவிந்தராசன்: நான் சொல்வதற்குத் தாங்கள் அனுமதித்தீர்கள். (கூச்சல் குழப்பம்)

திரு. எம். ஏ. லத்தீப்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்.

திரு. ரா. உமாநாத்: நான் சபாநாயகரிடத்திலே கேட்டுக் கொள்வது, நீங்கள் கூப்பிட்டு அவர்கள் பேச ஆரம்பித்ததிற்குப் பிறகு ......

திரு. எம். ஏ. லத்தீப்: My point of order was not allowed, Mr. Speaker, Sir.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: உங்களை விட சத்தம் போட்டுப் பேசத் தெரியும் (குறுக்கீடு) Mr. Speaker has invited me to speak.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. உமாநாத். உட்காருங்கள். அவர் எந்தப் பிரச்சினையைச் சொல்லி நேரத்தை வீணாக்கப் போகிறார் என்பதைத் தெரிந்துதான் உட்காரச் சொன்னேன்.

திரு. ரா. உமாநாத்: சேம்பரில் நடந்த இன்சிடன்சைப் பற்றி நீங்கள் சொன்னதிலே அவர் ஃபேக்சுவல் கரெக்ஷன் சொல்லப் போகிறார். அனுமதியுங்கள்.

திரு. சி. கோவிந்தராசன்: தலைவர் அவர்களே, 42-வது விதியின் கீழ் நானும், தோழர்கள் ரமணி, வி. கே. கோதண்டராமன் அவர்களும் கொண்டு வந்து கொடுத்தபோது நீங்கள் என்ன சொன்னீர்கள் என்றால், அமைச்சர் அவர்கள் 82-வது விதியின்கீழ் அறிக்கை தர இருக்கிறார் என்று சொன்னீர்கள். அந்த சமயத்திலே நான் சொன்னேன். இந்தப் பிரச்சினை முக்கியமான பிரச்சினை, அதை அறையிலேயே நிராகரிக்காமல் அமைச்சரை அந்த அறிக்கையைப் படிக்கவிட்டுவிட்டு, அமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையைப் படித்துவிட்ட காரணத்தினாலே இந்தந்தக் கட்சியைச் சேர்ந்த இன்னின்ன உறுப்பினர்கள் கொடுத்ததை அனுமதிக்கவில்லை என்று தாங்கள் சொல்வதானால் ஏற்றுக் கொள்வேன் என்று சொன்னேனே தவிர,—அதைத்தான் நான் என் சம்பந்தப்பட்ட வரையில் ஏற்றுக்கொண்டேனே தவிர, அறையிலே நிராகரிக்கப்பட்டதை நான் ஏற்றுக் கொள்ளவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து திரு. கோவிந்தராஜன் அவர்கள் விளக்கமாகச் சொன்னார்கள். 82—வது விதியின்கீழ் அமைச்சர் அறிக்கை தருகிறார் என்று நான் சொல்லி இருப்பதை ஏற்றுக்கொண்டார்கள். நன்றி. இங்கே வந்து தள்ளுகிறேன் என்று சொன்ன வாதம் சரியல்ல. நான் அங்கேயே அந்தக் காரணத்தை வைத்துத் தள்ளி விட்டேன். இப்போது வேண்டுமானாலும் போய்ப் பாருங்கள். நான் கையெழுத்துப் போட்டு இருக்கிறேன். அந்தப் பிரச்னை வேண்டாம். நீங்கள் சொன்னதற்கு நான் விளக்கம் சொல்லி இருக்கிறேன். அறிக்கை கொடுத்ததற்குப் பின்னால் அந்தப் பிரச்சினை வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான்: தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, உட்காருங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: * * * * * * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லத்தீப் பேசிய எல்லாவற்றையும் நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: நீங்கள் நீக்குவதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து கேட்டுக் கொள்கிறேன். அளவுக்கு மீறிச்செல்லாதீர்கள், நீங்கள் சொல்லி விட்டீர்கள், உட்காருங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: என்னைப் பேச அனுமதியுங்கள் ......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஒரு மணி நேரம் பேசிக்கொண்டே இருப்பீர்கள். நான் விட்டுக்கொண்டு இருக்க வேண்டுமா? உட்காருங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: பாயிண்ட் ஆப் ஆர்டர், ......

Mr. SPEAKER: I won't allow you.

THIRU M. A. LATHEEF: I should be allowed once.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அப்படி சொல்லிக் கொண்டேதான் இருக்கிறீர்கள், உட்காருங்கள்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





(திரு. எம். ஏ. லத்தீப் நின்று கொண்டே இருந்தார்)

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவரவர்களே, தயவு செய்து நான் கேட்டுக்கொள்கிறேன், திரு. லத்தீப் அவர்கள் நான் பேசுவதைக் கேட்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மன்னிக்க வேண்டும், திரு. லத்தீப் பேசிக் கொண்டே இருக்கிறபோது கொஞ்சம் ஆத்திரப்பட்டு * * * என்று தலைவரைப் பார்த்து சொல்லிவிட்டார்கள். எந்தக் காரணத்தைக்கொண்டும், பொறுப்புள்ள ஒரு உறுப்பினர் உணர்ச்சி வயப்படுகிறபோது கூட வார்த்தைகள் தடம் புரளாமல் பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திரு. லத்தீப் அவர்கள் ஆங்கிலத்தில் பேசிய காரணத்தால் சபைக்கு அவர் பேசியது என்ன என்று தெரியாது என்று கருதக் கூடாது? சபாநாயகரைப் பார்த்து அப்படிப் பேசுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: சார், பாயின்ட் ஆப் ஆர்டர், என்னை பேச அனுமதியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லத்தீப், நீங்கள் விதி தெரிந்தவர்கள், தலைவர் எழுந்து நிற்கும்போது நீங்கள் உட்கார வேண்டும்.

திரு. க. சுப்பு: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், பேரவை முன்னவர் பேசிக் கொண்டு இருக்கிறார்கள்.

திரு. ஏ. ரகுமான்கான்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார்....

திரு. துரை முருகன்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்....

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: சபாநாயகர் அவர்களே, குறிப்பேட்டில் பார்த்தால் தெரியும். நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் பேசும்போது, ஆங்கிலத்திலே பேசினார்கள். எனக்கும் கொஞ்சம் ஆங்கிலம் புரியும் என்ற காரணத்தால் நான் தங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். உங்களைப் பார்த்து, * * * * * * * * என்று இப்படிப்பட்ட கொஞ்சம் கடுமையான வார்த்தைகளை அவர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள். நான் அருள்கூர்ந்து திரு. லத்தீப் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், எவ்வளவுதான்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[திரு. கி. மனோகரன்] [1978 செப்டம்பர் 8

ஆவேசங்கள் வந்தாலும், நீங்கள் வார்த்தைகளை அளந்து இந்த அவையில் பேசுவது இந்த அவையின் மரபைக் காப்பாற்ற பயன் படுவதாக இருக்கும். என்னைப் போன்றவர்கள் உங்களுக்கு யோசனை சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இந்த அவைக்கு நான் புதியவன். நீங்கள் நீண்ட நெடுங்காலம் இந்த அவையில் இருந்தவர்கள். ஆகவே, அப்படிப்பட்ட வார்த்தைகள் சபைக் குறிப்பில் இருக்குமானால் அது நல்லதல்ல. அதை நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கனவே அவைகளை நீக்கி விட உத்தரவிட்டு இருக்கிறேன்.

## (5) அரசினர் தீர்மானங்கள்.

### (அ) விதி 41 (3)ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. விதி 41 (3)–ன் கீழ் இரண்டிற்கு மேற்பட்ட பொருள்கள் எடுத்துக் கொள்ளக் கூடாது என்ற விதியை இன்று தளர்த்த வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

## (6) கவன ஈர்ப்புகள்.

### (அ) மாணவர்களுக்குப் பாடப்புத்தகங்கள் வழங்காமல் இருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து விதி 41-ன்கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றை திருவாளர்கள், ரா. உமாநாத், ஆர். கிருஷ்ணன், திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர் கொண்டு வருவார்கள்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே' மேல்நிலைப் பள்ளிகள் உள்பட, அனைத்துப் பள்ளி மாணவர் களுக்கும், தமிழகத்திலுள்ள பல இடங்களில் இன்னும் புத்தகங்கள் வழங்காமல் இருப்பதால், பள்ளி மாணவர்க ளிடையே எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து. கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



1978 செப்டம்பர் 8]

[முற்பகல் 10-50]

திரு. எம். ஏ. லத்தீப்: சார், பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நோ பாயின்ட் ஆப் ஆர்டர். நீங்கள் தயவுசெய்து உட்காருங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: நான் என்ன சொல்கிறேன் என்பதை ஒரு நிமிடம் கேட்டுவிட்டு உங்களுடைய தீர்ப்பைச் சொல்லுங்கள். தயவுசெய்து முதலில் அனுமதியுங்கள். தாங்கள் அறிவித்துள்ள பட்டியல்லில் எல்லாப் பெயர்களும் சேர்க்கப்படாததினாலும், இந்த அவையின் உரிமை மீறப்படுவதினாலும், என்னுடைய உரிமை இங்கே பாதுகாக்கப்படாததினாலும், இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நான் வெளியேறுகிறேன்.

(திரு. எம். ஏ. லத்தீப் அவர்கள் வெளிநடப்புச் செய்தார்கள்)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள மேல் நிலைப் பள்ளிகளுக்கு 41 தலைப்பு களிலான பாடநூல்களுடன் 1 முதல் 10 வகுப்புகளுக்கான எல்லாப் பாடநூல்களையும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிடு கின்றது.

1 முதல் 10 வகுப்புகளைப் பொறுத்தவரை மே மாதத்தில் புத்தகங்கள் பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டன. சில தலைப்புகளில் பாடநூல்கள் ஜூன் மாதத்தில் அனுப்பி வைக்கப்பட்டன. இந்தத் தவக்கத்திற்கு முக்கிய காரணம் இந்திய அரசு அனுமதிக்கும் பாடநூல்கள் அச்சிடும் மலிவு தாள் மிகக் குறைந்த அளவில் கிடைத்ததாலும், பகிரங்க சந்தை மூலம் காகிதம் வாங்கி அச்சிட வேண்டியிருந்ததுமே ஆகும். மேலும் பழைய நூல்களில் வேண்டாதவற்றை நீக்கி, வேண்டியவற்றைச் சேர்த்து, புதிய நூலாக அவைகளை விற்பனைக்குக் கொண்டு வருவதில் சற்று தாமதம் ஏற்பட்டது, பிரிமெட்ரிக் உதவித் தொகைக்குப் பதிலாக அரிசன, பழங்குடி, பிற்பட்டோர் மாணவர்களுக்கு பாடநூல்கள் வழங்கப்படுகின்றன. இதற்காக மாணவர்களின் எண்ணிக்கையை விட 3 விழுக்காடு அதிகமாக அளித்து, மீதியை தாலுகா வியாபாரி களுக்கு அனுப்ப வேண்டுமென்பது அரசின் ஆணை. ஆனால் சில சமயங்களில் தலைமையாசிரியர்கள் 100 விழுக்காடுகளுக்கும் அதிகமாக நூல்களைப் பெற்றுச்சென்று மீதியை தாலுகா மொத்த வியாபாரிகளுக்கு உரியகாலத்தில் திரும்ப அனுப்பாததும் தாமதத்திற்கானதொரு காரணமாகும். ஏழை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்ட நூல்கள் மாவட்டக் கல்வி அதிகாரி மூலம் பள்ளித் தணிக்கையாளர்களுக்குச் சென்று அங்கிருந்து புத்தகங்கள் மாணவர்களை அடைவதிலும் சற்று தாமதமேற்பட வாய்ப்பு ஆயிற்று.

மேல் உயர்நிலைப் பள்ளிகளுக்கான நூல்களில் 41-ஐத் தவிர 79 தலைப்புகளில் தனியார் நிறுவனங்கள் நூல்களை வெளியிடுகின்றன. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் அநேகமாக எல்லா பாடநூல்களையும் தற்போது தாலுக்கா விற்பனையாளர்களுக்கு அனுப்பி வைத்துவிட்டது.

திருச்சி, திருநெல்வேலி கூட்டுறவுச் சிறப்பங்காடிகளில் ஊழியர்கள் வேலை நிறுத்தம் காரணமாக அனுப்பப்பட்ட நூல்கள் இப்பகுதிகளில் பொதுமக்களுக்குக் கிடைப்பதில் சற்று தாமதம் மேற்பட்டது. புகார்கள் மீது அவ்வப்போது தனிக்கவனம் செலுத்தப்படுகிறது.

எல்லா பள்ளிப் புத்தகங்களும் எல்லா இடங்களிலும் தடங்கலின்றி கிடைக்க துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, 25—8—78 தேதிவரை இந்தப் புத்தகங்கள் தஞ்சை மாவட்டத்தில் பல கல்லூரிகளில் கிடைக்காததன் காரணமாக மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடக்கிறது என்று அன்றையதேதியிட்ட அந்தக் கடிதத்தில் எனக்குத் தகவல் வந்திருக்கிறது. காலதாமதம் ஏற்பட்டதன் விளைவு ரொம்ப சீரியசாக இருக்கிறது. அந்தப் புத்தகங்கள் தாமதமாகக் கிடைப்பதால் ஆசிரியர்கள் விஷயங்களை கிரகிக்க நேரம் கிடைக்காமல், அவர்களுடைய போதனையின் தரம் குறைகிறது. காலாண்டு பரீட்சை நெருங்கிவிட்டது; இன்னும் புத்தகம் கிடைக்கவில்லை. ஆகவே, அவர்கள் இரண்டு மாதம் கற்றுக்கொள்ள வேண்டியவைகளை இரண்டு வாரத்திற்குள் 'ஜாம்' பண்ணி படிக்க வேண்டிய விதி ஏற்படுகிறது. இந்த காலாண்டுத் தேர்வுக்கான பாடங்களைக் குறைத்துக் கொண்டாலும் ஆண்டு இறுதியில் எல்லாவற்றையும் சேர்த்துதான் படித்தாக வேண்டும். ஆகவே, இந்தக் காலதாமதத்தினால ஏற்பட்டிருக்கிற நெருக்கடியைத் தீர்ப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறீர்கள்? பேப்பர் வேலுவேஷனை லிபரலைஸ் செய்யப்போகிறீர்களா? அல்லது இந்தப் பாடங்களைக் கற்றுக்கொடுக்க தனியாக ஏதாவது 'டிவிஷன்' எடுக்க ஏற்பாடு செய்யப் போகிறீர்களா? என்ன ஏற்பாடு செய்யப் போகிறீர்கள் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இந்த ஆண்டு பொதுப் பரீட்சை கிடையாது; அந்தந்தப் பள்ளிகளில்தான் பரீட்சை நடக்கும்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, சூப்பர் மார்க்கெட்டில் அரசின் சார்பாக வழங்கப்பட்ட புத்தகங்கள் கிடைக்கவில்லை. ஊழியர்கள் வேலை நிறுத்தம் காரணமாக சரியாக விற்பனை செய்யப்படவில்லை என்று சொல்லப்பட்டது. வேலை



நிறுத்தம் கடந்த மாதம் 10-ந் தேதி முதல் 25-ந் தேதி வரையில் தான். அதற்கு முன்பே நெல்லை சூப்பர் மார்க்கெட்டில் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு மட்டும்தான் புத்தகங்கள் வழங்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. அப்பேர்ப்பட்ட குறைபாடுகளை நீக்குவதோடு, காலாண்டு பரீட்சை நெருங்கிக் கொண்டிருக்கிறது; புத்தகங்கள் இன்னும் சரியாக கிடைக்கவில்லை; அதனால் தேர்வு நேரத்தில் பரீட்சைத் தாள்களை திருத்தும் போது விசேஷ சலுகை அளிக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, தேர்வுகள் சம்பந்தப்பட்ட பள்ளிகளில்தான் நடத்தப்படுகின்றன. ஆகவே அவர்கள் நிலைமைக்கேற்றவாறு நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள். சிறப்பங்காடியில் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தபோது, புத்தகங்கள் சரியாக வழங்கப்படவில்லை என்று ஒரு காரணம் சொல்லப்பட்டது. மற்றபடி தாமதம் இல்லாமல் புத்தகங்கள் போய்ச் சேர நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவரவர்களே, இப்போது புத்தகங்கள் வழங்கப்படுவதில் கால தாமதம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் இப்போது பரீட்சைகளுக்கான கேள்வித்தாள்கள் தயாராகிவிட்டன. ஆகவே இந்தப் பரீட்சையைப் பொறுத்தமட்டில் கொஞ்சம் லீனியன்ட்டாக ஆசிரியர்கள் நடந்து கொள்ளவேண்டும் என்று அவர்களுக்கு ஆலோசனை கூறப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, கேள்வித்தாள் போன்றவைகளை பள்ளிகளிலேயே தயாரிக்கிறார்கள். அத்தோடு இந்தத் தடவை 11-வது வகுப்பிற்கு பொதுத் தேர்வு இல்லாததால் மாணவர்கள் பாதிக்கப்படமாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கால தாமதம் எதனால் ஏற்பட்டது என்பதைக் குறிப்பிட்டு விட்டார்கள். ஆகவே காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்பது உண்மை. அந்த புத்தகங்கள் காலதாமதம் ஆகாமல் கிடைப்பதற்கு என்ன நடவடிக்கை ஜாக்கிரதையாக எடுக்க அரசு இப்போது ஏற்பாடு செய்துள்ளது? இந்த புத்தகங்களையே அந்த மாணவர்கள் பெறாத நிலையில் கேள்வித்தாள் யார் தயார் செய்தாலும் அவற்றுக்கு பதில் எழுதுவது என்பது சுலபமான விஷயம் அல்ல. ஆகவே அந்த பரீட்சையில் அந்த மாணவர்களுக்கு மாடரேஷன் மார்க் கொடுத்து அதன் மூலம் அவர்கள் பாஸ் செய்வதற்கு ஒரு திட்டத்தை அரசு. பள்ளிகளுக்குப் பரிந்துரை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

__மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:__ தலைவரவர்களே நான் சொன்ன காரணங்களினாலேயே தாமதம் ஏற்பட்டிருக்கின்றது என்பதைத் தெளிவாகச் சொன்னேன். அவற்றை ஆராய்ந்து அதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும். பள்ளிகளில் பாடங்களை நடத்துகின்ற ஆசிரியர்களே கேள்வித்தாள்களைத் தயார் செய்கிறார்கள். அவர்களே அதைத் திருத்தவும் செய்கிறார்கள். ஆகவே அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை, இப்போது 8-வது, 9-வது வகுப்புகளைப் போல் அவர்கள் நிச்சயம் செய்வார்கள், மேலும் அந்தப் பள்ளிகளிலேயே தேர்வு எழுதுவதற்கான வாய்ப்பு இருக்கின்றது. அவர்களே திருத்தக்கூடிய வாய்ப்பும் இருக்கின்றது. வேறு பள்ளிகளுக்கு அனுப்புவதில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே மாணவர்கள் பாதிக்கப்படமாட்டார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

__திரு. ரா. உமாநாத்:__ தலைவரவர்களே, இந்த புத்தகங்கள் கிடைப்பதற்கு தாமதம் போன ஆண்டும் ஏற்பட்டிருக்கிறது. அது அரசாங்கத்திற்குத் தெரியும். ஆகவே போன ஆண்டு கிடைத்திருக்கக்கூடிய அனுபவத்திலிருந்து அந்த தாமதம் இந்த ஆண்டு வராமல் இருப்பதற்கு முன் எச்சரிக்கையாக ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்த நடவடிக்கை தோல்வியுற்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

__மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:__ தலைவரவர்களே, தாமதத்திற்கு மிகவும் முக்கியமான காரணம் மத்திய அரசு தர வேண்டிய தாளை தராதது ஒன்றாகும். ஆகவே நாம், அவர்கள் தராத நிலையில் அதற்காகக் காத்திருந்து பிறகு கிடைக்காது என்று உறுதியாகத் தெரிந்த பின்னரே அதனை வெளிச்சந்தையிலிருந்து அதிக விலை கொடுத்து வாங்கி புத்தகங்களைத் தயார் செய்து வினியோகிக்கின்ற நிலைமை எதிர்பாராத வகையில் ஏற்பட்டுவிட்டது. அதன் பின்னர் அரிசன பழங்குடியைச் சேர்ந்த மாணவர்களுக்குத் தருகின்ற உதவியினை புத்தகமாக வழங்குவது என்ற முடிவு எடுக்கப்பட்டு 200 புத்தகங்கள் வாங்கி புத்தகங்கள் வழங்குகின்ற நிலையிலேயும் இப்படிப்பட்ட தாமதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே இந்தத் தாமதத்தைப் போக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை இந்த அரசு இந்த ஆண்டு எடுக்கலாம் என்று அதைப்பற்றி பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம் (குறுக்கீடு) . . . . . .

*[பார்வையாளர் மாடத்திலேயிருந்து மதுரைப் பல்கலைக் கழகத்தின் பெயரை மாற்றாதே, மாற்றாதே என்ற குரல் ஒலித்ததோடு கீழே துண்டு அறிக்கையும் வீசப்பெற்றது.]

---

* 116....ம் பக்கத்தில் பார்க்க.



அந்தத் திட்டத்தை உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அடுத்து அச்சடித்து வெளியிடுகின்ற அந்த வினியோகம் சம்பந்தப்பட்ட வரையில் அது பொதுத் துறையிலே இருந்து கொண்டிருக்கிறது. அதனால் பாதிக்கப்பட்ட தனியார் துறையினர் இதைச் சீர் குலைவு செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்களோ என்ற சந்தேகம் எங்களைப் போன்றவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இதை நல்ல முறையிலே சரி செய்வதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல யோசனைகள் ஏதாவது கூறுவார்களேயானால் அதை ஏற்று நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (ஆ) தஞ்சை மாவட்டம் குத்தாலம் தொகுதியில் பாடபுத்தகங்கள் கிடைக்காமை குறித்து.

__திரு. இரெ. இராசமாணிக்கம்:__ தலைவரவர்களே, ''தஞ்சை மாவட்டம் குத்தாலம் தொகுதியில் பள்ளிக்கூடங்கள் திறந்து மூன்று மாதங்கள் ஆகியும் இதுநாள் வரையில் பாட புத்தகங்கள் சரிவர கிடைக்கவில்லை. குறிப்பாக இடைநிலை உயர் கல்விக்குத் தேவையான புத்தகங்கள் எதுவும் கிடைக்கவில்லை. இதனால் பள்ளி மாணவர்களின் கல்வித்தரம் குறைவதோடு அவர்களின் வருங்காலம் பாதிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு அதனால் மாணவர்கள்; பெற்றோர்களிடம் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[முற்பகல் 11.00]

__மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:__ தலைவரவர்களே, தஞ்சை மாவட்டம் குற்றாலம் தொகுதியிலுள்ள பள்ளிகளுக்கு விநியோகம் செய்வதற்காக கும்பகோணத்திலுள்ள சந்திரசேகரபுரம் கூட்டுறவு நிறுவனத்துக்குத் தொடக்க நிலை, உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கான எல்லாப் பாட நூல்களும் போதிய அளவில் உரிய நேரத்தில் அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றன.

மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கான பாடநூல்கள் மேற்படி கூட்டுறவு நிறுவனத்தின் விற்பனைக்காக பாடநூல் நிறுவனம் இதுவரை சுமார் 10,250 எண்ணிக்கையுள்ள பாடநூல்களை அனுப்பிவைத்துள்ளது.

மீதியுள்ள சில நூல்களும் அச்சகங்களிலிருந்து கிடைக்கப் பெற்று அவைகளும் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன. இன்னும் இரண்டொரு தினங்களில் மேல்நிலைப் பள்ளிகளுக்கு எந்தத் தலைப்பிலும் நூல்கள் கிடைப்பதில் தட்டுப்பாடு இருக்காது எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: பள்ளிக்கூடங்கள் திறந்து மூன்று மாதங்களாகியும் இன்னும் புத்தகங்கள் கிடைக்கவில்லை என்பதோடு உயர்நிலைக் கல்விக்குத் தேவையான ஆசிரியர்கள் ஒருவர்கூட குத்தாலத்தில் திறந்திருக்கிற உயர்நிலைப் பள்ளியில் 3—9—78 வரையில் நியமனம் செய்யவில்லை. இதுவரையில் ஆசிரியர் ஒருவர்கூட அங்கு நியமனம் செய்யப்படாத நிலையில் பள்ளி மாணவர்களின் கல்வித்தரம் குறைவதோடு அவர்கள் வருங்காலம் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருப்பதையும் நான் கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அங்கு ஆசிரியர்கள் எப்போது நியமிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அதோடு, பாடப் புத்தகங்களோடு மாணவர்களுக்குத் தேவையான நோட்டுகள் கிடைக்கவில்லை. அந்த நோட்டுகளில் ரூ. 1-25 என்று விலையை அதில் பதிவு செய்திருக்கிறார்கள். ஆனால் ரூ. 1.45, ரூ. 1.50 என்று அதிகமான விலைக்கு விற்கிறார்கள். ஆகவே மாணவர்களுக்குத் தேவையான நோட்டுகள், புத்தகங்கள் நியாயமான விலையில் தடங்கல் இல்லாமல் கிடைப்பதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யுமா? ஆசிரியர்கள் எப்போது நியமனம் செய்யப்படுவார்கள் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டு வருகிறார்கள். நோட்டுகள், பாடப் புத்தகங்களைப் பொறுத்தவரையில் காலதாமதத்திற்கு மிக முக்கிய காரணம் மத்திய அரசு நமக்குத் தந்த அந்த மலிவுத்தாள் கோட்டாவை தாள் தயாரிக்கிறவர்கள் தராதது, நமக்கு வந்து சேராதது மிக முக்கிய காரணமாகும் என்பதை நான் உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

## (இ) குளத்துப்பாளையம் ஊராட்சி ஒன்றிய பள்ளிக்கட்டடம் இடிந்து விழுந்தது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திருவாளர்கள் ஆர். உமாநாத், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ஆர். கிருஷ்ணன், சேலம் மு. ஆறுமுகம், கோ. இளங்கோவன், கூ. ச. முருகேசன் ஆகியோர் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, "11—8—1978 அன்று, திருச்சி மாவட்டம் கரூர் பக்கத்திலுள்ள, குளத்துப் பாளையம் என்ற ஊரிலுள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடத்தில், கட்டடம் இடிந்து விழுந்ததன் விளைவாக 3 மாணவர்கள் இறந்தது குறித்தும், ஆசிரியர் உட்பட இன்னும் பல மாணவர்கள் காயமடைந்தது குறித்தும் "உள்ள அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள கரூர் ஊராட்சி ஒன்றியம், இனும் கரூர் ஊராட்சியின் எல்லைக்குட்பட்ட வெங்கமேடு கிராமத்தில் ஒரு இளநிலைப் பள்ளி ஒன்றினை நடத்தி வருகிறது. இந்தப் பள்ளியைச் சார்ந்த வகுப்புகள் குளத்துப்பாளையம் சாலையின் வடபுறமும் தென்புறமுமாக இயங்கி வருகின்றன. வடபுறத்தி லுள்ள மூன்று கட்டடங்களில் இரண்டு கட்டடங்கள், சிமெண்டு ஓடுகள் கொண்ட கூரை போட்ட நல்ல கட்டடங்களாகும். மற்ற ஒரு கட்டடம் தற்காலிக ஓலை கூரை வேய்ந்த கட்டடமாகும். இந்த தற்காலிக கட்டடம் ரூபாய் 3,000 மதிப்பீட்டில் 1978-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கரூர் ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து பள்ளியில் படிக்கும் மாணவர்களின் இட நெருக்கடியை தவிர்க்கும் பொருட்டு கட்டப்பட்டதாகும். மேற்கூரை ஓலைகளால் வேயப்பட்டதாகும். இந்தக் கட்டடத்தின் கிழக்கு மற்றும் மேற்குப் பக்கங்களில் தடுப்புச் சுவர்கள் எதுவும் கிடையாது. ஆனால் வடபுறமும், தென்புறமும் தென்னை ஓலைகளால் வேய்ந்த தடுப்புச் சுவர்கள் கட்டப்பட்டுள்ளன. மற்றும் இந்த தற்காலிக கட்டடத்தில் 322 மாணவ மாணவிகளைக் கொண்ட 6 இளநிலை பள்ளி வகுப்புகள் இயங்கி வந்துள்ளன.

11-8-1978 அன்று மாலையில், இந்தத் தற்காலிக கட்டடத்தில் உள்ள 6 வகுப்புகளிலும் 279 மாணவ மாணவிகள் ஆஜராகி இருந்தனர். இவர்களுக்கு 4 ஆசிரியர்கள் அச்சமயத்தில் பாடம் கற்பித்து வந்துள்ளனர். அன்று மதிய இடைவேளைக்குப் பிறகு சுமார் மாலை 2.45 மணிக்கு மிக வேகமான சூறாவளிக் காற்று ஒன்று அங்கு வீசியது. இந்தக் காற்றின் வேகத்தை தாளமுடியாமல் தற்காலிக கட்டடத்தின் கூரை, 16 தூண்களுடன் எதிர்பாராத விதமாக கீழே சரிந்து விழுந்துவிட்டது. இந்த எதிர்பாராமல் ஏற்பட்ட இந்த விபத்தினால் 35 பேர்களுக்கு காயங்கள் ஏற்பட்டதோடு, 3 பெண் பிள்ளைகள் அந்த இடத்திலேயே இறந்து விட்டனர். மற்றவர்கள் காயங்கள் எதுவுமின்றி தப்பி வெளியில் வந்து விட்டனர்.

இந்த விபத்து ஏற்பட்ட செய்தியை அறிந்தவுடன் அந்த ஊரில் இருந்த மற்ற அதிகாரிகள், தீ அணைப்புப் படையினரின் உதவியுடன் காயமுற்ற எல்லோரையும் உடனடியாக தலைமை மருத்துவ மனையில் சேர்த்தனர். விபத்தில் இறந்த மூன்று மாணவிகளின் சடலங்களையும், மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று, மரணப் பரிசோதனைக்கு பிறகு, சடலங்களைப் பெற்றோர்களிடம் ஒப்படைத்தனர். காயமுற்ற 35 பேர்களில் 13 பேர்களுக்கு சிறு காயங்கள் ஏற்பட்டதால், அவர்களுக்கு சிகிச்சை அளித்து வீட்டுக்கு அன்றே அனுப்பிவிட்டனர். மீதமுள்ள 22 பேர்களுக்கு காயங்களை குணப்படுத்த மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப் பட்டு குணமடைந்து வருகின்றனர். திருச்சிராப்பள்ளி மாவட்ட மருத்துவ அதிகாரி, மருத்துவமனைக்கு உடனடியாக வந்து காய

முற்றோரை பரிசோதித்தார். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த பிள்ளைகளில், ஒரு பிள்ளைக்கு தண்டுவடத்தில் காயமேற்பட்டிருந்ததால், அப்பிள்ளையை மதுரை நகரில் உள்ள தலைமை மருத்துவமனையில் சேர்த்து நரம்பியல் மருத்துவ நிபுணரின் மேற்பார்வையில் சிகிச்சை அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் 11-8-78 அன்று சம்பவம் நடந்த அன்றே இடத்தை பார்வையிட்டு, காயமுற்றோருக்கு தகுந்த சிகிச்சை அளிக்க ஏற்பாடுகள் செய்தார். மாவட்ட ஆட்சியர், புதுக்கோட்டை கோட்டப் பொறியாளரிடம் இந்த விபத்து நடந்த காரணத்தைக் கண்டறிந்து ஒரு அறிக்கையை அனுப்புமாறு உத்திரவிட்டுள்ளார். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும், 12-8-78 அன்று சம்பவம் நடந்த இடத்திற்கு வந்து பார்வையிட்டு, இறந்த பிள்ளைகளின் பெற்றோருக்கு தலா ரூபாய் 2,000 வீதம் கொடுக்கும்படி உத்திரவிட்டுள்ளார். அந்த உத்திரவிற்கிணங்க ரூபாய் 2,000 ஒவ்வொரு இறந்த குழந்தையின் பெற்றோருக்கும் ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து கொடுக்கப்பட்டுள்ளது.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, தற்காலிகமான கூரைக் கட்டடமாக கட்டப்பட்டுள்ளது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சூறாவளி காற்றினால் இது விழுந்துவிட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கு இருந்த பல கட்டிடங்கள் விழாத போது இந்தக் கட்டடம் மட்டும் தானா இடிந்து விழ வேண்டும்? ஆகவே இதில் ஏதோ ஒரு கோளாறு இருக்கிறது என்பதை மட்டும் நாம் தெரிந்து கொள்ள முடிகிறது. நான் இதில் சொல்ல விரும்புவது, இப்படிப்பட்ட கட்டடங்கள் கட்டும்போது, அதில் சிறு பிள்ளைகளின் பாதுகாப்பும் அடங்கியிருக்கிறது. இந்தக் கட்டிடம் கட்டும்போது, இதில் சம்பந்தப்பட்ட என்சினியர்கள், மற்ற இடங்களில் கட்டப்படுவது போல் இதுவும் கட்டப்பட்டதா, நல்ல முறையில் மேற்பார்வை செய்தார்களா—சாதாரணமாக என்ன நடக்கிறது. ஒன்றுக்கு ஆறு சிமிண்ட் சேர்க்க வேண்டுமென்றால், ஒன்றுக்கு 10 என்ற அளவில் சேர்த்து கொள்ளை அடித்துக் கொண்டிருப்பதை எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே இந்தக் கட்டடத்தை பொறுத்த அளவில் கட்டும்போது செக் அப் செய்யப்பட்டதா, இல்லையென்றால் இப்படிப்பட்ட கட்டடம் கட்டும்போது, செக்கப் செய்வதற்கு ஏதாவது வழிமுறைகள் இருக்கின்றனவா, இருக்கின்றது என்றால் செக்கப் செய்து கொடுத்த ரிப்போர்ட் எப்படியிருக்கிறது, அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்கிற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மர்ண்புமிகு திரு. கா. காளிமுத்து: நெடுஞ்சாலைத்துறை அதிகாரி ஒருவரை அனுப்பி, இதன் வலிவு எந்த அளவுக்கு இருந்தது, இதில் தவறு எப்படி நடந்திருக்கிறது என்பதைக் கண்டறிந்து ஓர் அறிக்கை அனுப்புமாறு அரசு ஏற்பாடு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள், இந்தக் கட்டடம் தற்காலிகமான கட்டடம் என்று சொன்னார்கள். ஒவ்வொரு ஆண்டு ஆரம்பத்திலும் இப்படிப்பட்ட பள்ளிக்கட்டடங்கள் உறுதியாக இருக்கின்றது என்று யூனியன் என்சினியர் வெரிபிகேஷன் செய்து சான்றிதழ் கொடுக்க வேண்டும் என்பதற்கு ஏதாவது வழிமுறைகள் வகுக்கப்படுமா? அத்துடன் உயிரிழந்த குழந்தைகளின் குடும்பத்திற்கு வழங்கப்பட்ட 2,000 ரூபாயை 5,000 என்று உயர்த்திக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை அரசு பரிசிலிக்கும். மேலும் கொடுக்கப்பட்ட உதவித் தொகையை உயர்த்துவதற்கும் உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பல இடங்களில் உள்ள பள்ளிக்கட்டடங்கள் பழுதடைந்த நிலையில் இருக்கிறது. ஏற்கனவே லைனின் அருகே பள்ளிக்கட்டடம் இருந்து, ரயில்வே அதிர்ச்சியின் காரணமாக ஏற்பட்ட சம்பவங்களின் காரணமாக பப்ளிக் பில்டிங் சட்டத்தைக் கொண்டு வந்தோம். அந்தச் சட்டப்படி பொதுக்கட்டடங்கள் மேற்பார்வை செய்து அதில் பொது அலுவலகங்களோ அல்லது பள்ளிக்கூடமோ நடத்துவதற்கு தகுதிதானா என்று சான்றிதழ்களை பெறவேண்டும் என்று சட்டம் இருக்கும்போது இம்மாதிரி சாதாரண ஒரு காற்றினால் கட்டடம் விழக்கூடிய சந்தர்ப்பம் இருக்குமானால், எப்படி பாதுகாப்பு இருக்க முடியும்? இதனால்தான் அடிக்கடி நாங்கள் கான்டிராக்ட் முறை இருக்கக்கூடாது, கான்டிராக்ட் முறையை அடியோடு ஒழிக்க வேண்டும் என்று வற்புறுத்தி வந்தோம். பொதுப் பணித்துறையைச் சேர்ந்த அதிகாரிகள் மூலமாக கட்டப்பட்டிருக்குமானால் இப்போது இதற்கான முழுப் பொறுப்பையும் பொதுப்பணித் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் மீது சுமத்தியிருக்க முடியும். ஆகவே நாட்டில் சிமிண்ட் தட்டுப்பாடு அதிகமாக இருக்கின்ற இந்த நேரத்தில், இப்படிப்பட்ட கட்டடங்கள் அனைத்தும் நல்லமுறையில் கட்ட வேண்டும் என்பதோடு, எதிர்காலத்தில் இப்படிப்பட்ட எந்தவிதமான விபத்தும் ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ளவேண்டும் என்பதோடு, நாட்டில் தற்போது இருக்கக்கூடிய ஆரம்பப் பள்ளிக்கூடக் கட்டடங்கள், நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி இவைகள் நடக்கக்கூடிய கட்டடங்கள் உறுதிதானா என்பதற்குத் தகுந்த சான்றிதழ்கள் பெற வேண்டும் என்று வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, ஏற்கனவே படகு விபத்தில் மாண்டு போன மாணவர்

களின் குடும்பத்திற்கு அளிக்கப்பட்டது போல், இந்த மாணவர்களின் குடும்பங்களுக்கும் 5,000 ரூபாய் உதவி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையில் அந்த கொட்டகையில் ஆறு வகுப்புகள் நடைபெற்றதாகச் சொன்னார்கள். 6 வகுப்புகள் நடைபெறக்கூடிய கொட்டகை 3,000 ரூபாயில் கட்டுமாறு சொல்லப்பட்டிருக்கிறது. இதிலிருந்து ஒப்பந்தக்காரர் என்ன செய்திருப்பார் என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம். யார் வைத்த கொள்ளியோ வீடு எரிந்தது என்று சொல்வது போல், இந்தக் கட்டடம் இடிந்து விழுந்ததின் காரணமாக 3 குழந்தைகள் மாண்டன. பல ஆசிரியர்களும், பல குழந்தைகளும் காயங்களும் அடைந்திருக்கின்றனர். இந்த அவல நிலை இங்கு மட்டுமல்ல, பல்வேறு இடங்களிலும் இருந்து வருகிறது. உதாரணமாக, எங்கள் பூதலூர் ஒன்றியத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய பள்ளிக் கட்டடத்தைப் பற்றி பல புகார்கள் வந்திருக்கின்றன. அரசு அதையும் கவனிக்குமா என்று கேட்டுக்கொள்வதோடு, ஈடு செய்ய முடியாத இன்னுயிரை இழந்த இந்தக் குழந்தைகளின் குடும்பத்திற்கு அளிக்கப்பட்ட ஈட்டுத் தொகையை கூட்டித் தருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இடிந்து விழுந்த கட்டடம் தற்காலிகமாக கட்டப்பட்ட கட்டடம். அதனால்தான் தென்னம் ஓலையினால்—3,000 ரூபாய் அளவுக்கு மதிப்பீடு செய்து கட்டப்பட்டிருக்கிறது. இதில் தவறு நடந்திருக்கிறதா என்பதை கண்டறிய முயற்சிகள் அரசினால் எடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு இளங்கோவன் அவர்கள் சொன்ன ஒன்றியத்தில் என்ன தவறுகள் இருக்கின்றன என்பதை எடுத்துச் சொல்வார்களேயானால் அதன் மீது அரசு நடவடிக்கை எடுக்கும்.

[முற்பகல் 11-10]

(4) ஒழுங்குப் பிரச்சினைகள் (தொடர்ச்சி).

(ஆ) பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசப்பெற்றது குறித்து—

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், காலரியிலிருந்து, மதுரைப் பல்கலைக்கழகத்தின் பெயரை மாற்றியமைக்க வேண்டுமென்று நோட்டீஸ் வீசி எறியப்பட்டது. அது குறித்து....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.



(7) அறிக்கை அளித்தல்.

பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை.

திரு. என். கிட்டப்பா : 1973-74 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (வருவாய் இனங்கள்) குறித்த மேற்படி குழுவின் ஐந்தாவது அறிக்கையை அவை முன் வைக்கிறேன்.

(8) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்த சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

9. அறிவிப்பு.

தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு கூட்டுறவு சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கூட்டுறவு சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கு மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

8. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி).

(ஆ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு கூட்டுறவு சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

## (10) 1978-79ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதி அறிக்கை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, இந்த ஆண்டின் முதலாவது கூடுதல் மதிப்பீடுகளை அவையில் வைக்க முன் வந்துள்ளேன். மானியக் கோரிக்கைகளை விளக்கும் விரிவான அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

2. வருவாய்க் கணக்குகளில் 15·89 கோடி ரூபாய்க்கும், மூலதனக் கடன் கணக்குகளில் 6.63 கோடி ரூபாய்க்குமாக, மொத்தம் 22·52 கோடி ரூபாய்க்கு கூடுதல் மதிப்பீடுகள் அவையின் முன் வைக்கப்பட்டுள்ளன. பொதுவாக, இவற்றின் மூலம், நிதி ஒதுக்க மசோதா அங்கீகரிக்கப்பட்ட பின்னர், இந்த ஆண்டில் அரசால் ஏற்பளிக்கப்பட்ட, வரவு-செலவுத் திட்டத்தில் மதிப்பிடப்படாத செலவினங்களுக்கு நிதி ஒதுக்கம் கேட்கப்பட்டுள்ளது.

3. நீர்த் தேக்கங்களில் மீன் வளர்ப்புப் பணிகளை முடுக்கிவிடும் மும்முரப்படுத்துவதற்காக, மதுரை, திருச்சிராப்பள்ளி, தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் மீனவர் மேம்பாட்டு நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சிதம்பரம் தாலூக்கா, கிள்ளையில், 50 ஹெக்டேர் பரப்பில், 13 இலட்சம் ரூபாய் செலவில் உப்பு நீர் மீன் பண்ணை ஏற்படுத்தும் திட்டம் ஒன்று புதிதாக செயல்படுத்தப்படும். நீலகிரி மாவட்டத்தில் டயஸ்கோரியா (Dioscorea) வளர்த்து அதிலிருந்து மருந்துச் சத்தைத் (Diosgenin) தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று நிறுவப்பட இருக்கிறது. இதற்காக இவ்வாண்டிற்கு வருவாய்க் கணக்கிலும் மூலதனக் கணக்கிலும் மொத்தமாக 10 இலட்சம் ரூபாய் மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

4. வரவு-செலவுத் திட்ட உரையில் அறிவிக்கப்பட்டதற்கேற்ப, 8 மாவட்டங்களில் மாவட்டத் தொழில் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன; இவைகளுக்காக 78·62 இலட்சம் ரூபாய் செலவிற்கு அவையின் அனுமதி கோரப்படுகிறது. ஐம்பதாயிரத்திற்கும் குறைந்த மக்கள் தொகையுள்ள பகுதிகளில் தொடக்க





மூலதன உதவி (Margin money) அளிப்பதற்கான திட்டத்தை தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் மேற்கொண்டுள்ளது. அரசு, இந்த நிறுவனத்திற்கு இதற்காக 20 இலட்சம் ரூபாய் கடனாக அளிக்க அவையின் ஒப்புதல் கோரப்படுகிறது. தமிழ்நாடு சர்க்கரை நிறுவனத்தின் கீழ் இயங்கும் தஞ்சையிலுள்ள அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலைக்கும், பெரம்பலூரிலுள்ள ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலைக்கும் 50 இலட்சம் ரூபாய் திருப்பிப் பெறும் முன்னுரிமை மூலதனமாகக் (Redeemable preference shares) கொடுப்பதற்கும் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

5. நீலகிரி மாவட்டத்தில், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், சாலைகளைச் சீரமைப்பது, ஒன்பது வட்ட மருத்துவ மனைகளில் குடும்ப நல அறுவைச் சிகிச்சைக்குப் பின் தங்குவதற்கான வார்டு (Wards) களும், அறுவை சிகிச்சைக் கூடங்களும் ஏற்படுத்துவது, கிராமக் குழந்தைகளுக்கு வழங்கும் படிப்பு உதவித் தொகைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது, நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தைப் பலப்படுத்துவது போன்ற கிராமப்புற மக்களுக்கு பலனளிக்கும் திட்டங்கள் இம் மதிப்பீட்டினுள் அடங்கியுள்ளன. இம்மாநிலத்தில், பேருந்து விபத்துகளில் பாதிக்கப்பட்டோருக்கு நிதி உதவி அளிப்பதற்காக, முதலமைச்சரின் விபத்து நிவாரண நிதிக்கு 50 இலட்சம் ரூபாயை மாற்றவும் அவையின் அனுமதி வேண்டப்படுகிறது. கூடுதலாக ஐயாயிரம் விதவைகளுக்கு நிதி உதவி அளிப்பது, அரிசன மக்களுக்கு ஈமக் கடன்களுக்காக நிதி உதவி அளிப்பது போன்ற திட்டங்கள் சென்ற அவைத் தொடரில் அறிவிக்கப்பட்டன. இத்தகைய திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடும் இந்த மதிப்பீட்டில் செய்யப்பட்டுள்ளது.

6. சென்ற ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தினால் சேதமடைந்த பாசன ஆதாரங்கள், சாலைகள் இவற்றைச் சீர் செய்வதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இவற்றுக்காக இந்த மதிப்பீட்டில் 8·5 கோடி ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது, தமிழ்நாடு மின்சார வாரியத்துக்கு ஏற்பட்ட வெள்ளச் சேதத்தை சரி செய்வதற்காக இந்த நிதி ஒதுக்கீட்டில், கடனாகவும், மானியமாகவும் ஒரு கோடி ரூபாய் கொடுக்க வகை செய்யப்பட்டுள்ளது.

7. இத்துணை மானியக் கோரிக்கைகளில் அடங்கியுள்ள சில முக்கிய திட்டங்களைப் பற்றி மட்டும் நான் குறிப்பிட்டுள்ளேன். இவற்றைப் பற்றிய விவரங்களும், மற்றுமுள்ள திட்டங்களைப் பற்றிய விவரங்களும், அவைமுன் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெளிவாக்கப்பட்டுள்ளன. இந்த மதிப்பீடுகளுக்கு ஏற்பளிக்கும்படி அவையினரை வேண்டி அமருகிறேன்.

## (11) ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி).

*திரு. கே. உச்சி: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றது முதற்கொண்டு, கடந்த சட்டமன்ற ஆரம்பக் கூட்டம் முதற்கொண்டு ஏழை எளிய மக்களை எல்லாம் வாழ வைக்க நல்ல பல திட்டங்கள் இருக்கின்றன என்றும், கிராம மக்கள் எல்லாம் நன்றாக வாழ வழிவகை செய்யப்படும் என்றும் ஏழை எளியவர்கள் யாருமே இருக்க மாட்டார்கள் என்ற அளவுக்கு விளம்பரம் செய்யப்பட்டது. ஆனால் ராம ராஜ்யம் என்று சொன்ன மகாத்மா காந்தி முதற்கொண்டு இந்நாள் வரை கிராமங்கள் அடியோடு நிராகரிக்கப்பட்டு வருகின்றன. கிராம மக்கள் தங்கள் வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ள முடியவில்லை என்பதுதான் கண்கூடாகப பார்க்கக்கூடிய ஒன்றாக இருக்கிறது.

நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரை அங்குள்ள மக்கள் அதிகமாக தேயிலையையும், உருளைக் கிழங்கையும் நம்பித்தான் தங்கள் அன்றாட ஜீவனத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். சென்ற வருஷம் தேயிலை விலை ஒரு கிலோவுக்கு ரூ. 4-50 என்று சொல்லப்பட்டாலும் நடைமுறை ஆண்டில் ஒரு கிலோ தேயிலை ஒரு ரூபாய்க்குள்தான் விற்றுக் கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் உருளைக் கிழங்கு கடந்த வருஷம் 45 கிலோ மூட்டை ரூ. 60-ல் இருந்து ரூ. 70 வரை விற்றது. நடைமுறை ஆண்டில் ரூ. 30-ல் இருந்து 35 ரூபாய் வரைதான் விற்றுக் கொண்டிருக்கிறது.

[முற்பகல் 11-20]

அப்படி தேயிலை, உருளைக்கிழங்கு ஆகியவற்றின் விலைவீழ்ச்சி ஏற்பட்டும்கூட மக்களுக்கு, குறைந்த விலைகளில் அவைகள் கிடைக்கிறதா என்றால் அதுவும் இல்லை. உருளைக்கிழங்கு ஒரு கிலோ ஒருரூபாய் என்ற அளவிற்கு மொத்தமாக விற்கப்படுகிறது. ஆனால் நுகர்வோர்களுக்கு ஒரு கிலோ 2 ரூபாய் அளவிற்குத்தான் விற்கப்படுகிறது. அதே மாதிரி தேயிலை ஒரு கிலோ 5 ரூபாயிலிருந்து 7 ரூபாய்க்குத்தான் விற்கப்படுகிறது. சர்க்கரை விலையும் குறைந்திருக்கிறது. அப்படியிருந்தாலும்கூட நாம் குடிக்கிற பானங்களின் விலைகள் குறைந்திருக்கிறதா என்று பார்த்தால் இறங்காத நிலைமைதான் இருக்கிறது. இப்படி அவைகளை உற்பத்தி செய்கிறவர்களுக்கும் நுகர்வோர்களுக்கும் சரியான விலை கிடைக்கவில்லை. இடையிலே உள்ள கொள்ளையை, தரகர்களை ஒழிக்க அரசு முன்வரவேண்டுமென்றும் நுகர்வோர்களுக்கு குறைந்த விலையிலும், உற்பத்தியாளர்களுக்கு நல்ல நியாய விலையும் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, அரசுத் துறையில் ஊழலை ஒழிப்பதாகச் சொல்லப்படுகிறது. எங்கள் மாவட்டத்திலே தேயிலைத் தோட்டங்களிலும் 11 தேயிலைத் தொழிற்சாலைகளிலும் வேலை செய்கின்றவர்களுக்கும் சரியாக பணம் கிடைப்பதில்லை. ஒரு சில அதிகாரிகளின் தவறான செயல்களின் காரணமாக அந்த வருவாய் அவர்களுக்குக் கிடைக்காமல் அதிகாரிகள் ஊழல் செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. இதை அரசு கவனித்து அந்தத் தொழிலை விருத்தியடையச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கேரள மாநிலத்தில் ரப்பரின் விலை கணிசமாக இறங்கிக் கொண்டு இருந்த நேரத்திலே வெளிநாடுகளிலிருந்து ரப்பர் இறக்குமதி மத்திய சர்க்கார் செய்த போது கேரள மாநில முதலமைச்சர் அந்தோணி அவர்கள் அதை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யக்கூடாது என்று சொல்லி மத்திய அரசும் அதை ஏற்றுக்கொண்டு விலை வீழ்ச்சியை கட்டுப்படுத்தியுள்ளார்கள். அதே மாதிரி உருளைக் கிழங்கையும் தேயிலையையும் வெளி தேசங்களுக்கும் ஏற்றுமதி செய்யக்கூடிய அளவிற்கு மத்திய அரசை இந்த அரசு தன்னுடைய பலத்தால் மோத வேண்டுமென்று சொல்லவில்லை, வற்புறுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் காலத்திலே சேரன் கோலன்கோட்டிலே 15 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் தேயிலைத் தோட்டக் கார்ப்பரேஷன் ஒன்று அமைக்கப்பட்டது. அங்கே சாலைகள் அமைப்பது, டெம்பரரி ஷெட்கள் அமைப்பது ஆகியவைகளில் பல்வேறு மட்டங்களிலே ஊழல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அங்கே உள்ள ரேஞ்சர்கள் பொய்க்கணக்குகள் எழுதி தவறான மஸ்டர் ரோல்களை எழுதி வாரம் ஒன்றிற்கு 20 ஆயிரம் ரூபாய் முதல் 40 ஆயிரம் ரூபாய் வரையில் பணம் சம்பாதிக்கிறார்கள். அதைக்களைய வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களிடமும், மற்ற அமைச்சர்களிடமும் பொது மக்களும், சங்கங்களும் வேண்டுகோள் விடுத்தார்கள். அதன்மீது இந்த அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அந்தத் தேயிலை கார்ப்பரேஷனில் நடக்கும் ஊழலைக் களைவதற்கு இந்த அரசு ஒரு நீதி விசாரணை நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சில அதிகாரிகள் மாதம் 225 ரூபாய் சம்பளம் வாங்குகிறவர்கள் தவறான முறையிலே பணம் சம்பாதித்து அந்தப் பகுதிகளிலே பல ஆயிரக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை வாங்கியிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான் சாட்ட விரும்புகிறேன். இந்த அரசு அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோத்தகிரியிலே மதுவிலக்கை தீவிரமாக அமல்படுத்தவேண்டுமென்ற முறையிலே மக்கள் புரட்சி நடந்தது. மக்கள் அந்தப் பகுதியிலே மதுவிலக்கை தீவிரமாக அமல் நடத்தவேண்டுமென்பதற்காக போலீஸ் நிலையங்களுக்குச் சென்று வாதிட்டுள்ளனர்.

தங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்லியுள்ளனர். அந்த போலீஸ் நிலையத்திலுள்ள இரண்டு போலீஸ்காரர்கள் அடிக்கடி, மதுவிலக்குத் துரோகம் செய்யும் நோக்கத்தில் அந்தப் பகுதியில் ரைட் செய்யும்பொழுது பிடிக்கும் சாராயத்தை ஒரு பெண்மணியின் உதவியுடன் வியாபாரம் செய்துள்ளார்கள். சாராயத்தை ஒழிப்பதற்குப் பதிலாக, நாட்டுச் சாராயம் நீராக அந்தப் பகுதியில் இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

ஆரம்பகாலத்தில் இங்கே சட்டமன்ற நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கும்பொழுது ஆளுங்கட்சியைச் சார்ந்த உறுப்பினர் ஒருவர் எங்களைப் பார்த்து நீங்கள் சாராய சாம்ராஜ்யத்தில் வந்தவர்கள் எனறு சொன்னார். நான் இன்றைக்கு இப்பொழுது சாராய சாம்ராஜ்யத்தில் ஆளுங்கட்சி உறுப்பினர் நீந்திக் கொண்டிருக்கிறார்களா என்று வினா எழுப்பவில்லை, இதை யோசித்துப் பார்க்க வேண்டும், சாராய சாம்ராஜ்யம் எந்த அளவிற்கு நடக்கிறது என்று தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக இதைச் சொல்கிறேன்.

கூடலூர் பகுதியிலே ஜென்மி ஆக்ட் என்று ஒரு ஆக்ட் இருந்தது. அந்தப் பூமியை அந்தப் பகுதி மக்கள் வெகு காலமாகத் தங்கள் கைவசம் வைத்திருந்தார்கள். ஆனால் 1969 ஆம் ஆண்டு 'லேன்ட் அபாலிஷன் ஆக்ட்' ஒழிக்கப்பட்டு, பட்டா செய்து கொடுக்கப்பட வேண்டுமென்று மக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க பட்டா செய்து கொடுக்கப்பட்டது. ஆனால் நாளதுவரையில் எல்லாப் பகுதிகளிலும் பட்டா செய்து கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. அப்படி பட்டா செய்ய வேண்டுமென்று கோரி ஆயிரக்கணக்கான மனுக்கள் வந்துள்ளன. சிலபல தேயிலை, காப்பி பகுதிகளுக்கு மட்டும் பட்டா கொடுத்திருக்கிறார்கள். ஆனால் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை எடுக்கும் இஞ்சி, வாழை போன்ற அன்றாடப் பயிர்கள், நெல் போன்ற பயிர்களைச் சாகுபடி செய்யும் தோட்டங்களுக்கு இன்னும் பட்டா கொடுக்கப்படவில்லை. அவைகளுக்குப் பட்டா கொடுக்க அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தேயிலைத் தோட்டங்களைப் பொறுத்த வரையில் பல ஆயிரக்கணக்கான தோட்டங்களை வைத்திருப்பவர்கள். ஆறாயிரம் ஏக்கர் உள்ள தேயிலைத் தோட்டத்தையும், 12,000 ஏக்கர் நிலத்தை வெறும் காடாகவும் வைத்துக்கொண்டு பெரிய தோட்டச் சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தோட்டம் செய்த பகுதி போக மீதியுள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் பூமியை அரசு தன் கைவசம் எடுத்துக்கொண்டு ஏழை எளிய மக்களுக்குப் பட்டா செய்து கொடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





மேலும் கூடலூர் பகுதியில், மதுரை, முதுமலை பஞ்சாயத்துக்களைச் சேர்ந்த மக்கள் வன இலாக்காவைச் சேர்ந்த காடுகளின் மத்தியில் இருக்கிறார்கள். அந்த மக்கள் யானைகளாலும், வன விலங்குகளினாலும் விவசாயம் செய்ய முடியாமல் எப்பொழுதும் அல்லற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த அரசு அவர்களுடைய சொந்த பூமிக்குக் காம்பன்சேஷன் கொடுக்க வேண்டும் அல்லது அதற்குத்தகுந்த ஈடு உள்ள வேறு பூமியைக் கொடுக்க வேண்டும். அவர்கள் அங்கு வாழ முடியாமலும், விவசாயம் செய்ய முடியாமலும் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது விஷயமாக அரசுக்கு, முதலமைச்சருக்கு நாங்கள் சொல்லியிருக்கிறோம்.

அடுத்து, மசினக்குடி, வாழைத்தோட்டம், ஆனைகட்டி போன்ற இடங்களில் சிறு விவசாயிகள் விவசாயம் செய்வதிலும், மாடுகளை வளர்ப்பதிலும் தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அங்குள்ள வன இலாக்கா அதிகாரிகள் மாடுகள் மேய்ப்பதற்கு, மேய்ச்சல் கட்டணம் வாங்குகிறார்கள். மாடுகளை அடைப்பதற்கு பட்டிக் கட்டணம் வாங்கப்படுகிறது. அப்படியிருந்தும் அங்கே மாடுகள் இடும் சாணத்தை விவசாயிகள் தங்கள் விவசாய பூமிக்கு எடுத்துக்கொள்ளும் உரிமை அவர்களுக்கு வழங்கப்படவில்லை. அரசே சாணத்தை எடுத்து ஒரு லாரி லோடுக்கு கிட்டத்தட்ட 30 ரூபாய் வாங்குவதாக இருக்கிறது. எப்படி மாடுகளை மேய்ச்சலுக்கு விடுகின்ற விவசாயிகளுக்கு அந்த மாடுகளின் பாலைக் கறந்து கொள்வதற்கு உரிமை உண்டோ அதைப்போல மாட்டுச் சாணத்தை எடுத்துக்கொள்ளும் உரிமையையும் விவசாயிகளுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதே பிரச்னையை நீலகிரி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் நான் மாவட்ட ஆட்சித் தலைவருடன் பேசிக் கொண்டிருந்த நேரத்தில் கேட்டபொழுது வன இலாக்கா அதிகாரிகள், இது மாவட்டப் பிரச்னை மட்டுமல்ல, இது நம்முடைய மாநிலப் பிரச்னை, ஆகவே சர்க்கார்தான் அதற்கு முடிவெடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆகவே, அரசு இதிலே முக்கிய கவனம் செலுத்தி அந்த விவசாயிகளின் குறைகளைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-30]

இறுதியாக திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத்தில் அநேக பேர்களுக்கு வீட்டு மனைப் பட்டா விவசாய நிலப்பட்டா கொடுக்கப்பட்டுள்ளது. இப்பொழுது அப்படி பட்டா கொடுக்கப்பட்டதை காலி செய்யவேண்டுமென்று நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளது. அதையும் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

## (5) அரசினர் தீர்மானங்கள்.

### (ஆ) பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசியது குறித்து நடவடிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று காலை 11 மணி அளவில் பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டுப் பிரசுரம் வீசிய திரு. திருமறவனின் செயல் கண்டிக்கத் தக்கதும், அவையை அவமதிக்கும் செயலும் ஆகும். எனவே இதுகுறித்த தீர்மானத்தை முன்மொழியும்படி மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :

இன்று முற்பகல் 11 மணி அளவில் சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டறிக்கைகளைப் பேரவைக்குள்ளே வீசி எறிந்து குரல் எழுப்பியதன் காரணமாக காவலில் வைக்கப்பட்டுள்ள சிவகங்கை திரு. இராமசாமி சேர்வை மகன் திருமறவன் என்று கூறிக்கொள்ளும் நபர் பெரும் குற்றம் புரிந்துள்ளார். அவருடைய இச்செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.

அவர் இன்று மாலை ஐந்து மணி வரை வெறும் காவல் தண்டனை (simple imprisonment) அளிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டுமென்று இப்பேரவை தீர்மானிக்கிறது.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பெற்றது.

## (11) ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி)

திரு. க. மருதாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் உரையின்மீது பேச கிடைத்த வாய்ப்புக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இயற்கையின் கோர சீற்றத்தையும் எதிர்ப்பட்ட பல்வேறு எதிர்ப்புகளையும் வேண்டுமென்றே தூண்டிவிடப்பட்ட பல்வேறு போராட்டங்களையும் மிக எளிதாகச் சமாளித்து ஓராண்டு ஆட்சியை உலகமே பாராட்டும் அளவுக்கு நிறைவு பெறச் செய்த பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவரின் ஆட்சிக்கு மேலும் புகழ் சேர்க்கும் வண்ணம் சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைப் போக்கி முழு அமைதிப் பணி புரட்சிக்கு வித்திடுவதாய் அமைந்துள்ள மேதகு ஆளுநரின் உரையை மீண்டும் வரவேற்று திரு. மணி மாறன் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை ஆதரித்து நானும் வரவேற்றுப் பேச விழைகிறேன்.





வேளாண்மை விளை பொருள்களின் உற்பத்தியைப் பெருக்கி அவைகளுக்கு நியாயமான விலை கிடைக்க இந்த அரசு செய்து வரும் முயற்சியைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். உணவில் தன்னிறைவு பெற்றுள்ள தற்போதைய நிலை இதுவரையில் இல்லாத ஒரு புதிய சாதனையாகும்.

விலைவாசிகள் உயராமல் தனியார் கொள்ளை இலாபம் அடிக்காமல் தடுக்க நியாய விலைக் கடைகள் திறக்க மேற்கொண்டிருக்கும் முயற்சி பாராட்டத்தக்கதாகும்.

தென்னக முதல்வர்கள் மாநாட்டைத் தமிழ்நாட்டில் கூட்டி, பல்வேறு பிரச்னைகளைப் பேசி அண்டை மாநிலங்களிடையே நல்லுறவை வளர்க்க முயற்சி மேற்கொண்டிருப்பது இந்திய வரலாற்றில் பொன் எழுத்துக்களில் பொறிக்கப்பட வேண்டிய நிகழ்ச்சி மட்டுமல்ல, இதன்மூலம் இந்தி ஆதிக்கத்தை ஒருமித்த கருத்தோடு எதிர்க்கவும் கிருஷ்ணா ஆற்று நீரை எளிதாகப் பெறவும் காவிரி நீர்ப் பிரச்னை சுமுகமாக தீர்க்கப்படவும், மேற்கு நோக்கி ஓடும் கேரள நதி நீரைத் தமிழகத்திற்குத் திருப்பி விடவும் இச்சிறப்புமிக்க மாநாடு வழி வகுத்திருக்கிறது.

பல்வேறு திட்டங்கள் மூலமாக வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும் ஒரு முயற்சியாக 1-3/4 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தியிருப்பது பாராட்டத்தக்க ஒன்றாகும்.

அயல்நாடுகளில் வேலைவாய்ப்பு பெற இவ்வரசு மேற்கொண்டிருக்கும் திட்டம் ஒரு புதிய சிறப்பான முயற்சியாகும்.

ஊழலை ஒழிக்க வேண்டும் என்பதில் இவ்வரசு அக்கறை எடுத்து அதில் வெற்றியும் பெற்றுள்ளதை இந்நாடு அறியும். "தமிழகத்தில் முதலமைச்சராக பொறுப்பேற்றிருக்கும் எம். ஜி. ஆர். ஊழலற்ற லஞ்ச லாவண்யத்திற்கு இடமளிக்காத ஒரு நிர்வாகத்தை அமைக்கப் பாடுபட்டு வருகிறார். இதில் ஓரளவிற்கு வெற்றியும் பெற்றிருக்கிறார். அதற்காக அவரை நான் மனதாரப் பாராட்டுகிறேன் என்று தமிழக முதல்வருக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் உதிர்த்துள்ள பாராட்டு வரிகள் இந்த ஆட்சி ஊழலை ஒழித்துவரும் ஆட்சி என்பதற்கு நற்சான்றாகும். இந்த ஆட்சி நிர்வாகத் திறமை கொண்டது, ஊழலை ஒழித்து வரும் ஆட்சி என்பதற்கு மருத்துவக் கல்லூரி மாணவர் தேர்வு முறை ஒன்று மட்டுமே போதுமானதாகும். இந்தச் சந்தர்ப்பத்தில் எதிர் கட்சியான தி.மு.க வினருக்கு ஒன்று கூறிக்கொள்வேன். எதிர்க் கட்சி என்றால் சட்டப் பேரவையின் நடவடிக்கைகளை ஸ்தம்பிக்கச் செய்யவே வந்திருக்கிறோம் என்ற உணர்வை விட்டு, இம்மன்றத்தின் மரபைக் காப்பாற்றி தமிழக மக்களை வாழ வைக்கும் நல்ல கருத்துக்களை எடுத்துக் கூறுமாறு அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக மக்களின் நல்வாழ்வுக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் அயராது பாடுபட்ட பகுத்தறிவுத் தந்தை பெரியார், தாழ்ந்து கிடந்த தமிழகத்தை தலைநிமிர வைத்த பேரறிஞர் அண்ணா, மூதறிஞர் ராஜாஜி போன்ற பெரியோர்களின் நினைவு நாளை அரசே மேற்கொண்டு நடத்த முற்பட்டிருப்பது தமிழக மக்களுக்கு இனிக்கும் செய்தியாகும். நகைச்சுவை மூலம் இந்நாட்டு மக்களை சிந்திக்க வைத்த ,கலைவாணர் என். எஸ். கே. அவர்களுக்கும் விழா எடுத்திருப்பது போற்றற்கரிய ஒன்றாகும். இருண்ட தமிழகத்திற்கு கல்விக் கண் கொடுத்த காமராசரின் நினைவாக மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு ''காமராசர் பல்கலைக் கழகம்'' என்று பெயர் சூட்டியிருப்பது மிகப் பொருத்தமும் சிறப்புமாகும்.

அறிவு நுட்பமிக்க அண்ணாவின் பெயரால் தொழில் நுட்ப பல்கலைக் கழகம் தோற்றுவித்திருப்பது இவ்வரசுக்குத் தொழில் கல்வியில் உள்ள ஆர்வத்தையும், உற்பத்திப் பெருக்கில் உள்ள ஆவலையும் தெளிவாக விளக்குகிறது. சிறு தொழில்களுக்கு முக்கியத்துவம் அளித்து கிராமத் தொழில்களுக்கான தனி அமைச்சரையும் நியமித்து கிராமப்புறங்களில் தொழில் வளம் பெருகிட இவ்வரசு முனைந்திருப்பதை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

குடிநீருக்கு முக்கியத்துவம் அளித்து, உலக வங்கியிடம் கடன் பெற்று இந்நாட்டின் குடிநீர்ப் பிரச்னையைத் தீர்க்க இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சி ஏழை, எளிய மக்கள்பால் கொண்டுள்ள பொறுப்பினை வெகுவாக வெளிப்படுத்துகிறது. பகுத்தறிவுத் தந்தை பெரியார் ஈ. வெ. ரா.-வுக்கு அஞ்சல் தலை வெளியிடும் அனுமதி பெற்றதற்காக இந்த அரசை எவ்வளவு பாராட்டினாலும் தகும். இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து இது நாள் வரையில் எந்த ஒரு தொழிலாளர் பிரச்சினை ஆனாலும் அதை அரசியலாக்காமல் நடுநிலை நின்று அனுதாப ரீதியில் அணுகி தீர்வு கண்டிருப்பது பாராட்டத்தக்க ஒன்றாகும்.

(மாண்புமிகு மாற்றுத்தலைவர் திரு. பி. எச். பாண்டியன்
—தலைமை)

இவ்வரசின் தன்னலமற்ற சேவையையும், ஊழலற்ற நிர்வாகத்தையும் சிறந்த அணுகுமுறைகளையும் இந்த அரசுக்கு மக்கள் அளிக்கும் ஆதரவிலிருந்து தெரிந்து கொள்ளலாம். இந்த அரசின் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை மதுரை மாநகராட்சி தேர்தல் ஒன்றினைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம். அதே நேரத்தில் நேற்று மாண்புமிகு உறுப்பினர்,மதிப்பிற்குரிய சாதிக் பாட்சா அவர்கள் எங்களுடைய கோவை மாவட்டத்தைப் பற்றி பேசிய நேரத்தில் சமீபத்தில் நிதி திரட்டுகின்றபோது ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் அங்கே சென்று ஏதோ கடைக்காரர்களை மிரட்டியதாக இந்த அவையிலே எடுத்துச் சொன்னார்கள். இந்த சந்தர்ப்பத்தில் ஒன்றை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். 7 ஆண்டு காலமாக இந்த நாட்டில் தி. மு. க. ஆட்சி நடந்து கொண்டிருந்த நேரத்தில் இந்த தமிழகத்திலே பல ஊழல்களைச் செய்திருக்கிறார்கள். அதே நேரத்தில் கோவையிலே மாநாடு





என்ற பெயரால் எல்லா பகுதியினரையும் மிரட்டி பணம் வாங்கி இருக்கிறார்கள். அவைகளை எல்லாம் மறந்து இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மீது இல்லாத குற்றச்சாட்டைக் கூறிவருகிறார்கள், எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் யார் பேசினாலும். இன்றைக்கு ஓராண்டிற்கு மேல் ஆட்சி நடத்திக்கொண்டு இருக்கிற நம்முடைய புரட்சித் தலைவரின் ஆட்சியை தமிழக மக்கள் பாராட்டுகின்றார்கள். நிர்வாகத்திலே தலையீடு இல்லாமல், அதிகாரத்திலே தலையீடு இல்லாமல் நல்லமுறையில் ஆட்சி நடந்து வருகிறது என்பதைப் பார்த்துத் தான் மதுரையிலே சிறப்பான தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, எதிர்காலத்திலே தமிழகத்திலே நடைபெறவிருக்கிற கோவை மாநகராட்சி தேர்தலானாலும் சரி, சென்னை மாநகராட்சி தேர்தலானாலும் சரி, தமிழகத்திலே நடைபெற இருக்கிற எந்தத் தேர்தலானாலும் சரி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தான் வெற்றி பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-40]

திரு. ஆ. நடராசன் : தலைவரவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர், கோவை எப்போது மாநகராட்சி ஆக்கப்பட்டது என்பதை உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்): அதை உறுப்பினர்கள் சொல்ல முடியாது. உட்காருங்கள்.

(திரு. ஏ. ஆர். மாரிமுத்து எழுந்தார்.)

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, ஒரு நிமிடம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) : அடுத்த உறுப்பினரை பேச அழைத்து, அவரும் எழுந்துவிட்டார். நீங்கள் உட்காருங்கள்.

திரு. க. மருதாசலம் : நான் ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். கொஞ்சம் நேரம் கொடுங்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) : சரி, சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

திரு. க. மருதாசலம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான கவனத்திற்கு நான் தெரிவிக்க விரும்புவது, என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்தேன். விரைவில் கோவை மாநகராட்சியாக மாறும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தந்தை பெரியாரின் பெயரிலேயும், அறிஞர் அண்ணா அவர்களின் பெயரி

லேயும், மறைந்த மற்ற பெரியவர்களின் பெயரிலேயும் பேருந்து நிலையங்களுக்கு பெயர் வைத்து இருக்கிறார்கள். கோவையில் சிறப்புமிக்க ஒரு மிகப்பெரிய பேருந்து நிலையம் இருக்கிறது. பெரியார் அவர்களின் 100-வது ஆண்டு விழாவை ஒட்டி, தந்தை பெரியார் பேருந்து நிலையம் என்று அதற்குப் பெயர் வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அதேபோல் கோவை மாவட்டத்தை, ஈரோடு மாவட்டம், கோவை மாவட்டம் என்று இரண்டாகப் பிரிக்கிற நேரத்தில் ஈரோடு மாவட்டத்திற்கு தந்தை பெரியார் மாவட்டம் என்று பெயர் வைக்க வேண்டும் என்று' என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்து, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய தலைவரவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரையின் பேரிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன் வந்துள்ளேன். எப்போதுமே ஆளுநர் உரை நிதிநிலை அறிக்கை கொடுப்பதற்கு முன்னாலேயே நடத்தப்பட வேண்டிய ஒரு நிகழ்ச்சியாகும். ஆனால், இந்த ஆண்டிலே அரசு நிதி நிலை அறிக்கையைக் கொடுத்துவிட்டு, அந்தக் கூட்டத் தொடருக்குப் பின்னால் இந்த ஆளுநர் உரையை வைத்து இருப்பது அவ்வளவு சரியானதல்ல என்பதை உணர்ந்து அடுத்த ஆண்டிலாவது பட்ஜெட் கூட்டத் தொடருக்கு முன்னாலேயே ஆளுநர் உரையை அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஆளுநர் உரை என்பது நிதிநிலை அறிக்கையிலே என்னென்ன கொள்கைகளை பின்பற்றப் போகிறோம் என்பதைப் பற்றி அறிவிக்கும் ஒரு அறிவிப்பாகும். ஆகவே, ஆளுநர் உரை நிதி நிலை அறிக்கை அளிக்கப்படுவதற்கு முன்னால் அமையவேண்டிய ஒன்றாகும். இந்த ஆண்டைப்போல் இனி வரும் ஆண்டுகளில் இந்த நிலைமை இருக்கக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்ற கூட்டத் தொடருக்குப் பின்னாலே இந்த அரசால் ஏற்படுத்தப்பட்டு இருக்கிற முக்கிய செயல்பாடு, அமைச்சரவை விஸ்தரிப்பு ஆகும். அந்த விஷயத்திற்குள் நான் சென்று கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை. அமைச்சரவை முன்பு எப்போதும் இல்லாததைவிட அதிகமான அளவிற்கு அமைச்சர்களைக் கொண்டதாக இருக்கிறது. ஆகவே, இந்த அமைச்சர்கள் அதிகரிப்பு செய்ததற்குப் பின்னாலாவது இந்த அரசு நடவடிக்கைகளைத் துரிதமாக எடுக்கவேண்டும். முடிவுகள் துரிதமாக எடுக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மாநகராட்சித் தேர்தல் இடைக்காலத்தில் நடத்தப்பட்டு ஆளும் கட்சி வெற்றி அடைந்து இருக்கிறது. அந்த வெற்றி முகத்தோடு இந்த ஆளுநர் உரையை இங்கே சபையில்





சமர்ப்பித்து இருக்கிறார்கள். இந்த நிலையிலே இன்றைக்கு இருக்கின்ற அரசியல் நிலைமையை நாம் உன்னிப்பாக கவனித்துப் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. டெல்லியிலே ஆட்சியில் இருக்கின்ற ஜனதா கட்சியில் ஏற்பட்டு இருக்கும் உட்கட்சி சண்டை தேசத்திலே ஒரு நிர்வாக ஸ்தம்பிப்பை ஏற்படுத்தி, சட்டம் ஒழுங்குநிலை கெட்டு, இந்த ஆட்சி எவ்வளவு நாளைக்கு இருக்க முடியும் என்று சந்தேகிக்கப்படும் அளவிற்கு மோசமாக போய்க்கொண்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களுக்கு அந்தச் சந்தேகம் தேவையில்லை. ஜனதா அரசு மத்தியில் ஐந்தாண்டு நிச்சயமாக இருக்கும் என்பதை தங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவையில் இருக்கிற ஜனதா கட்சித் தலைவரைக் கேட்டுக்கொண்டு அங்கு ஒன்றும் நடக்கவில்லை. அது பாட்டுக்கு அங்கே நடந்து கொண்டிருக்கிறது (சிரிப்பு). அவர்கள் அவரையும் கேட்கவில்லை; நம்மையும் கேட்கவில்லை; யாரையும் கேட்கவில்லை. அவரவர் இஷ்டத்திற்கு அங்கே ஜனநாயகம் தீவிரமாக தழைத்துக் கொண்டிருக்கிறது.

*திரு. ஜே. ஜேம்ஸ் : நெருக்கடி நிலை நாட்டில் இருந்த போது திருமதி இந்திரா காந்தி அம்மையார்தான் ஆட்சியில் இருந்தார்கள். அப்போதுதான் திருமதி இந்திராகாந்தி விருப்பம் போல் ஆட்சி நடந்து கொண்டிருந்தது. இப்போது அப்படியல்ல. ஜனதா கட்சியில் அனைத்து அங்கத்தினர்களையும் கலந்து, ஆலோசனை நடத்தித்தான் காரியங்களைச் செய்கிறார்கள். அந்த முறையில்தான் ஜனதா அரசு நடைபெறுகிறது என்பதை மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : யாரைக் கேட்டும் நடக்கவில்லை. தனித்தனியாக அவரவர் இஷடத்திற்கு நடக்கிறது. அதுதான் இன்றைக்கு அங்கே இருக்கிற நிலை. இப்போது அங்கே இருக்கின்ற நிலைமை என்ன என்று சொல்ல முடியாத அளவுக்கு, 'ஃப்ளுயிட் ஸ்டேஜ்' என்பார்களே, அதைப்போல இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதனால் இன்றைக்கு மக்களிடையே ஒரு புதிய சிந்தனை ஏற்பட்டிருக்கிறது, ஒரு புதிய எண்ணம் தோன்றியிருக்கிறது; ஒரு புதிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம் மக்களிடையே உருவாகியிருக்கிறது என்பதை யாரும் மறுக்க

முடியாது. அந்த மாற்றம் எங்கே கொண்டுவந்து விடப் போகிறது என்றால், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. சங்கரய்யா, திரு. உமாநாத் போன்றவர்கள் எல்லாம் காங்கிரஸ் கட்சி சர்வாதிகார கட்சி, அந்தக் கட்சி திரும்ப வந்தால் எல்லாம் போய்விடும், போய்விடும் என்று என்னதான் சத்தம் போட்டாலும், என்னதான் பேசினாலும், என்னதான் எதிர்த்தாலும் கூட மக்கள் காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வரவேண்டு மென்ற புதிய சிந்தனைக்கு வந்துவிட்டார்கள். அந்த புதிய சிந்தனையின்படி காங்கிரஸ் கட்சிதான் ஆட்சிக்கு வரும். இந்திரா காங்கிரஸ் கட்சியால்தான் ஒரு நல்ல ஆட்சியை ஏற்படுத்த முடியும் என்ற முடிவுக்கு மக்கள் வந்துவிட்டார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

இனி, தமிழ்நாட்டில் இருக்கிற அரசியல் நிலைமையைப் பார்ப் போம். பாராளுமன்றத் தேர்தலிலே அகில இந்திய அண்ணா தி.மு.க.-வும் காங்கிரஸ் கட்சியும் சேர்ந்து போட்டியிட்டன. அதன் பிறகு கூட்டு இல்லை. ஆனால், இன்றைக்கு இருக்கின்ற நிலைமையில் தமிழ்நாட்டில் மூன்று அணிகள்தான் பிரதானமாக இருக்கின்றன. சட்டப் பேரவைத் தேர்தலிலும், இப்போது நடந்து முடிந்த மதுரை மாநகராட்சித் தேர்தலிலும் மூன்று அணிகளாக அரசியல் கட்சிகள் பிரிந்து இருந்ததை நாம் எல்லாம் பார்த்தோம். அகில இந்திய அண்ணா தி.மு.க. அணி, காங்கிரஸ், தி.மு.க.—இந்த மூன்று அணிகள்தான் பலமான அணிகளாக தமிழ்நாட்டில் இருக்கின்றன.

காங்கிரஸ் கட்சி அண்ணா தி.மு.க.-வுடன் முன்னால் தேர்தல் உறவு வைத்திருந்தாலும் கூட, தேர்தல் உறவு இல்லாமல் தனித்து இயங்கும் ஒரு கட்சியாக இன்றைக்கு இருக்கிறது. இருந்தாலும் பகைமை உணர்வு காட்டவில்லை. அண்ணா தி.மு.க.-வுக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் இதுவரையில் பகைமை உணர்வு இல்லை. ஏனென்றால், நெருக்கடி நிலை காலத்தில், அவசரச் சட்டம் அமலில் இருந்தபோது, அதை ஆதரித்தார்கள்; 20 அம்சத் திட்டத்தை ஆதரித்தார்கள். வெகுவாக அவர்கள் அப்போது காட்டிய ஆதரவினால் ஏற்பட்ட பாச உணர்வு காரண மாக இதுவரை பகைமை உணர்வு ஏற்படவில்லை. 'செஞ்சோற்றுக் கடன்' என்பார்களே, அதைப்போல இதுநாள் வரையிலும் பாச உணர்வோடு இருந்தோம்.

அண்ணா தி.மு.க. பாராளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி யுடன் இணைந்து போட்டியிட்டது. அதன் பிறகு சட்டமன்றத் தேர்தலில் எதிர்த்து போட்டியிட்டது. பின்னால் வர வர ஜனதா கட்சியில் நெருங்கிய உறவு வைத்துக்கொள்ளும் நிலை அண்ணா தி.மு.க.-வுக்கு ஏற்பட்டது வருந்தத்தக்க ஒன்று என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.





இன்றைய நிலையில் பாராளுமன்றத்தில் காங்கிரஸ் கட்சிக்கு எதிராக அண்ணா தி.மு.க. செயல்படுகிறது; ஜனதா கட்சிக்கு ஆதரவாக இருக்கிறது. ஊழல் குற்றம் யார் செய்தாலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்ன வர்கள், பாராளுமன்றத்தில் ஜனதா கட்சியினர்மீது அவர்களாலேயே குற்றம் சாட்டப்பட்டு, காங்கிரஸ் கட்சியால் விசாரணைக் கமிஷன் போடவேண்டும் என்று தீர்மானம் வந்தபோது அதை எதிர்க்கிறார்கள். இங்கே யாரும் சொல்லவில்லை. அங்கே இருக் கிறவர்கள் அந்தத் தீர்மானத்தை எதிர்த்தார்கள். இராஜ்ய சபையில் காங்கிரஸ் கட்சி ஒரு கமிஷன் அல்லது ஒரு கமிட்டி போட்டு, ஜனதா கட்சிக்காரர்கள்மீது சொல்லப்படுகின்ற ஊழல் குற்றச்சாட்டை விசாரிக்க வேண்டுமென்று தீர்மானம் கொடுக் கிறது. அதை அண்ணா தி.மு.க. எதிர்க்கிறது. ஆக, அண்ணா தி. மு, க.வினர் இன்றைக்கு ஜனதா கட்சியைத் தீவிரமாக ஆதரிக்கின்ற ஒரு நிலைமைக்கு வந்திருக்கிறார்கள். இருந்த போதிலும் இதுநாள் வரையில் நாங்கள் அதைப்பற்றிக் குறை சொல்லாமல் இருந்தது பழைய பாச உணர்வுதான்.

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) :</u> பாராளுமன்ற நடைமுறைகளைப் பற்றி இங்கே விமரிசனம் செய்வது நல்லது அல்ல என்று தெரிவித்து, நீங்கள் மேலும் தொடர்ந்து பேசலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-50]

<u>திரு. ஏ. ஆர். மாரிமுத்து :</u> தலைவரவர்களே, நான் அரசியல் ரீதியாகச் சொல்கிறேனே தவிர அங்கே பாராளுமன்றத்திலே நடந்ததை விமர்சிக்கவில்லை. நான் சாதாரணமாக பத்திரிகையிலே வருகின்ற செய்தியைத்தான் சொல்கிறேன்.

ஆக இந்தப் பாச உணர்வு அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் காங்கிரஸ் கட்சிக்கும் இல்லை என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. அவர்கள் பாராளுமன்றத்திலே எடுத்து வருகின்ற நடைமுறை முடிவுகளின் காரணமாகத்தான் இந்த பாச உணர்வு குறைந்து வருகின்ற நிலை ஏற்பட்டு வருகிறது.

அடுத்து தமிழகத்திலே மதுரை மாநகராட்சித் தேர்தல் நடந்தபோது எல்லாக் கட்சிகளும் நாங்கள்தான் வெற்றி பெறுவோம் என்று சொன்னார்கள். அப்படிச் சொல்வது இயல்பு. நாங்கள் தோற்றுப் போவோம் என்று யாருமே சொல்ல மாட்டார்கள். அப்படிச் சொன்னால் மக்கள் ஓட்டுப்போட மாட்டார்கள் என்பது தெரிந்து அவர்கள் அனைவரும் நாங்கள் தான் ஜெயிப்போம் என்று சொல்வது இயல்பு, அது இயற்கை. எந்த உறுப்பினராக இருந்தாலும் எந்தக் கட்சியாக இருந்தாலும் அப்படித்தான் சொல்வார்கள். அந்த அடிப்படையிலேயே தமிழ் நாட்டிலே காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்து வருகிற

திரு. மூப்பனார் அவர்கள் ஒரு பொதுக்கூட்டத்திலே பேசி இருக்கிறார்கள். இந்தப் பேச்சினை, முதலமைச்சர் அவர்களால் தாங்க முடியவில்லை. எப்படி காங்கிரஸ் கட்சி தாங்கள் வெற்றி பெறுவோம் என்று சொல்வது என்று அவர்கள் நினைக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. ஆகவே காங்கிரஸ் கட்சியைப் பற்றிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் போக்கு மாறாக இருக்கிறது. அவர்களுடைய கருத்து மாறாக இருக்கின்றது. ..ஆகவே நாங்கள் அவர்களை எதிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற முறையிலே அவர்களை எதிர்க்கின்ற கொள்கையினைக் கடைப்பிடித்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். "ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே கெட்டான் எனப்படுதல் நன்று." எதிர் நடவடிக்கைகள் எடுக்கின்றவர்களின் பின்னால் வர முடியாது. ஆகவே இத்தகைய நிலையினை நாங்கள் எடுப்பதற்கு வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இந்த நிலையினை எடுத்த உடனேயே நாங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்துடன் சேர்ந்துவிடப் போகிறோம் என்று பத்திரிகைகளிலே எழுத ஆரம்பித்துவிட்டார்கள். இவர்களை எதிர்ப்பதானது ப்ரோ டி.எம்.கே. என்று எப்படிச் சொல்ல முடியும்? ஆகவே தி.மு.க.வோடு இணைந்து விட்டோம், அவர்களோடு உறவு கொண்டு விட்டோம் என்று சொல்வது முற்றிலும் தவறாகும். அந்தமாதிரி முடிவினை காங்கிரஸ் கட்சி எடுக்கவில்லை. அவ்வளவு அவசரப்பட்டு எந்த முடிவினையும் நாங்கள் எடுத்துவிட மாட்டோம். ஏனென்றால் காங்கிரஸ் கட்சியிலே இருப்பவர்கள் மிகுந்த அனுபவம் பெற்றவர்கள். நீண்டகாலமாகவே அரசியலிலே பழக்கப்பட்டவர்கள். தீர ஆலோசிக்காமல் எந்த முடிவினையும் நாங்கள் எடுத்துவிட மாட்டோம். மேலும் திராவிட முன்னேற்றக் கழகத்தோடு சேரவேண்டிய நிலையிலே காங்கிரஸ் கட்சி இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே அதுதான் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழகத்திலே மூன்றுவிதமான அணிகள் இருக்கின்றன என்று நான் ஏற்கனவே சொன்னேன். மதிப்பிற்குரிய மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரவர்கள் பேசும்போது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு புத்திமதி சொல்கிறார்கள். காங்கிரஸோடு நீங்கள் சேர்ந்துவிடாதீர்கள், அது சர்வாதிகாரக் கட்சி என்று சொல்கிறார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்த்து, நீங்கள் அவர்களோடு கூட்டு வைக்காத காரணத்தால்தான் நாங்கள் உங்களோடு இருக்கிறோம். அப்படி இல்லை என்றால் நாங்கள் போய்விடுவோம் என்று புத்திமதி சொல்கிறார்கள். ஒன்றை நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இப்போது தமிழகத்திலே இன்றைய அரசியலை நிர்ணயிக்கக்கூடிய நிலையிலே காங்கிரஸ் கட்சிதான் இருக்கின்றது. மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இல்லை. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இல்லை. திராவிட முன்னேற்றக் கழகம் இல்லை. காங்கிரஸ்தான் [illegible]மை இடங் கேட்டார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுதான் உண்மை. இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் நினைக்கலாம் காங்கிரஸ் நம்மோடு சேர்ந்துவிடாதா என்று. அதேபோல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நாம் காங்கிரஸ் கட்சியோடு சேர்ந்தால் நல்லது என்று நினைக்கலாம். ஆகவே முடிவு எடுக்க வேண்டியது நாங்கள். இப்போது இருக்கின்ற இந்த மூன்று அணி என்பது இரண்டு அணியாக மாறிவிடும் சூழ்நிலை ஏற்படாமல் இருக்கின்ற காங்கிரஸ் அணிதான் பலமான அணியாக இருக்கும் என்பதை யாரும் மறுக்க முடியாது. இதுதான் இன்றைக்கு இருக்கின்ற நிலை.





திரு. மு. ஆறுமுகம் : தலைவரவர்களே, ஆளுநர் உரையின் மைய கருத்துக்கும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது இங்கே பேசிய அரசியல் விளக்கத்திற்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா என்பதை நான் அறிய விரும்புகிறேன். ஒருவேளை பொதுக்கூட்டத்திலே பேசவேண்டிய கருத்துக்களை ஆளுநர் உரையிலே சேர்க்கவில்லை என்ற எண்ணத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : அரசியல் இல்லாமல் கொள்கை கிடையாது என்பதை தயவு செய்து உறுப்பினர் அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். அடுத்து, மதுரை மாநகராட்சி தேர்தலில் மூன்று அணியாகப் போட்டியிட்டாலும்கூட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சட்ட பூர்வமாக ஒரு பெரும் வெற்றியை அடைந்திருக்கிறது. அதில் யாருக்கும் மறுப்பு கிடையாது. மேயர் பதவி அவர்களுக்கு சென்றுவிட்டது. பெரிய அளவில் வெற்றி பெற்றுள்ளார்கள். ஆனால் இந்த ஓட்டுக்கள் எப்படிக் கிடைத்தன என்பதைப் பார்க்க வேண்டும். நான் அங்கமாக அதைப் பற்றிச் சொல்ல விரும்பவில்லை, ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். என்றைக்குமே இல்லாத அளவிற்கு மதுரை மாநகராட்சித் தேர்தலில் அதிகாரம் தவறாகப் பயன்படுத்தப்பட்டது. அமைச்சர்கள் வீடு வீடாகச் சென்று ஓட்டு கேட்டார்கள். என்னைப் பொறுத்தவரையில் சொல்கிறேன். யோசனை செய்து பார்த்தேன். அமைச்சர்கள் என்றால், அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் இந்த நாட்டிலுள்ள எல்லோருக்கும் பொதுவானவர்கள். இந்த அரசை நடத்தகூடிய அதிகாரங்கள் அமைச்சர்கள் கையில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தேர்தல்கள் நடக்கும்போது பொதுக் கூட்டங்களில் பேசுவார்கள், கொள்கை ரீதியாகப் பேசுவார்கள், இன்னின்ன காரியங்களை நாங்கள் சாதித்திருக்கிறோம், ஆகவே இந்தக் கட்சிக்கு ஓட்டு போடுங்கள் என்று கேட்பது வழக்கம்.

ஆனால் வீடு வீடாகச் சென்று அமைச்சர்கள் ஓட்டு கேட்பது என்பதை இந்தத் தடவைதான் நான் பார்த்திருக்கிறேன். வேறு எப்போதும் நான் கேள்விப்பட்டதேயில்லை.

திரு. பி. முசிறிபுத்தன்: (அமைச்சரின் பேரவை செயலர்) திண்டுக்கல் தேர்தலில் திரு. மோகன் குமாரமங்கலம் அவர்கள் வீடு வீடாகச் சென்று ஓட்டு கேட்டார்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: அது தவறு. பாராளுமன்றத் தேர்தலில் வீடு வீடாகச் சென்று ஓட்டு கேட்டிருக்க முடியாது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: அங்கே வேலை செய்த மாண்புமிகு உறுப்பினர் திரு. முசிறிபுத்தன் அவர்கள் சொல்கிறார்கள் எங்களைப் போன்றவர்களும் நேரில் பார்த்தார்கள். தயவுசெய்து அதை நம்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: எப்படியோ. நீங்கள் இப்படிச் சொல்கிறபோது நான் என்ன கண்டேன். ஒரு பாராளுமன்றத் தேர்தலில் வீடு வீடாக ஓட்டு கேட்கப் போவது என்றால் நடக்கக் கூடிய காரியமா?

திரு. பி. முசிறிபுத்தன்: (அமைச்சரின் பேரவை செயலர்) அப்படிக் கேட்டதற்கு சான்றுகள் உள்ளன.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: சின்னாளப்பட்டி போன்ற பகுதிகளில் மறைந்த என் மாண்புமிகு சகோதரர் திரு. மோகன் குமாரமங்கலம் அவர்கள் அந்தப் பணியில் ஈடுபட்டிருந்தார்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: நமது அமைச்சர்கள் ஒவ்வொரு வீட்டு வாசலுக்கும் முன்னால் போய் நின்றுகொண்டு—முன்னால் நான்கு பேர்கள் அமைச்சர்கள் வருகிறார்கள் என்று சொல்ல வீட்டில் இருப்பவர்கள் வெளியே வந்து நிற்க, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஓட்டு போடுங்கள் என்று வீடு வீடாகச் சென்று கேட்டார்கள் மதுரையில். சட்டமன்ற உறுப்பினர்கள் போவது வேறு. பாக்கி கட்சிக்காரர்கள் போவது வேறு. ஆனால், அமைச்சர்கள் போவது என்றால், அமைச்சர்கள் கையில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி அதிகாரங்கள் அமைச்சர்கள் கையில் கொடுக்கப்பட்டிருக்கும்போது அவர்கள் 'வீடு வீடாகச் சென்று ஓட்டு கேட்பது என்பது சரியல்ல, தவறு என்பது என் கருத்து.

அடுத்தபடியாக, சட்டம் ஒழுங்கு இல்லை, பாதுகாப்பு இல்லை என்ற பேச்சு பேசப்படுகிறது. முதல் அமைச்சர் அவர்கள் சட்டம், ஒழுங்கு எங்கே கெட்டுவிட்டது என்று கேட்கிறார்கள்.



சட்டம், ஒழுங்கு கெடுவது என்றால் தெரு பூராவும் சண்டை போட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. இந்த நாட்டிலுள்ள எல்லா குடிமகனுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டியது, எல்லோரது உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு அளிக்கவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். அப்படி பாதுகாப்பு இல்லை என்றால் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது. சட்டப் பாதுகாப்பு இல்லை என்று சொல்வது தவறு இல்லை. போலீஸ் பாதுகாப்பு ஏழை எளிய மக்களுக்குக் கிடைக்கவேண்டும், ஆனால் கிடைக்கவில்லை. அவர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள். காலாகாலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. ஆகவே, சட்டம், ஒழுங்கு இல்லை என்பதுதான் அதற்குப் பொருள் என்று எடுத்துக்கொள்ள வேண்டும்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், விழுப்புரத்தில் நடந்த கலவரங்களை எடுத்துக் கொள்ளுங்கள். அதன் உள்ளே நான் போகவில்லை. விழுப்புரத்தில் காலத்தோடு பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்குமேயானால் ஹரிஜனங்கள் 12 பேர்கள் இறந்திருக்க வேண்டிய அவசியம் கிடையாது. நூற்றுக்கணக்கான வீடுகள் தீப்பற்றி எரிந்து சேதமடைந்திருக்க வேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது. பெரிய குளம் பகுதியில் ஹரிஜனங்கள், ஹரிஜனங்கள் அல்லாதார் இடையே கலகம் ஏற்பட்டு, அறுபது வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டிருக்கின்றன. ஜாதி இந்துக்கள் பாதுகாப்புக் கழகம் என்று வைத்துக்கொண்டு மைக்கில் பிரசாரம் செய்யப்பட்டதாகச் சொல்கிறார்கள், அப்போது ஏன் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கவில்லை? பிரசாரம் செய்வதற்காக மைக்கை கட்டிக் கொண்டு தெருவில் செல்லும்போது, அப்போதே போதிய நடவடிக்கைகள் எடுக்காத காரணத்தால்தான் இம்மாதிரியான பாதுகாப்பற்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இவற்றை உடனடியாக முளையிலேயே கிள்ளியெறிந்திருக்க வேண்டும். அப்படி ஆரம்பத்திலேயே நடவடிக்கை எடுத்திருந்தால் இப்பெரும் கலவரம், நிகழ்ச்சி, இந்தமாதிரி நிலைமைகள் ஏற்பட்டிருக்காது. பழனியில் நடந்திருக்கிறது. இப்ராகின் கொலை நடந்திருக்கிறது. ராணிப்பேட்டை கலகம். தமிழ்நாட்டின் பல பகுதிகளில் எச்சரிக்கை நடவடிக்கைகள் ஒழுங்காக எடுக்கப்பட்டிருந்தால் இம்மாதிரிக் கலவரங்கள் எல்லாம் நடைபெற்றிருக்காது என்பதை நான் வருத்தத்தோடு குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[நண்பகல் 12-00]

ஓட்டேரியில் சாராயம் காய்ச்சுபவர்களுக்குள் சண்டை நடந்தது. இவர்களுக்குள் சண்டை மூண்டு மூன்று நாட்களாக நடந்துகொண்டிருந்தது. சாராயம் காய்ச்சியவர்களை போலீசுக்குத் தெரியாமல் இராது. நன்றாகத் தெரியும். இந்த சண்டை நடந்த மூன்று நாட்களில் சாதாரண ஆட்கள் யாரும் வெளியில் வர முடியாது. சகஜமாக எந்த காரியங்களையும் கவனிக்க முடியாத நிலைமைதான் இருந்து கொண்டிருந்தது. இப்படி இரண்டு

கோஷ்டிகளுக்குள்ளேயே கொரில்லாக்களைப் போல் சண்டைப் போட்டுக் கொள்கின்ற நிலைமை ஏன் உருவானது? காரணம் எது வேண்டுமானாலும் சொல்லலாம், போலீஸ் நடவடிக்கை எடுக்காது என்கின்ற நிலை வருமானால் சட்டம் ஒழுங்கை எப்படி இந்த அரசு காபந்து செய்ய முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு சம்பவம், பத்திரிகையில் செய்தி வந்தது. ஆவடி போலீஸ் ஸ்டேஷனில்......

திரு. பி. முசிரிபுத்தன் : (அமைச்சரின் பேரவை செயலர்) தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கட்சி ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற ஆந்திராவில் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதையும் சொன்னால் சிறப்பாக இருக்கும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : இங்கு இருக்கின்ற ஆட்சியைப் பற்றித்தான் இங்கே சொல்ல முடியும், ஆந்திராவில் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதைப் பற்றி ஆந்திரா சட்ட சபையில் உறுப்பினராக இருந்தால் அங்கே பேசலாம். இங்கே பேச முடியாது.... (குறுக்கீடு).... ஆகவே இதையெல்லாம் தவிர்த்திருக்கலாம் என்பதற்காகத்தான் இதைச் சொல்லுகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பேர்ப்பட்ட சில குழப்பங்கள் நாட்டில் சில நேரங்களில் நடக்கத்தான் செய்கின்றன. காவல்துறையும் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் இருக்கிறது. இருந்தும் தவிர்க்க முடியாத சில நேரங்களில் இப்படிப்பட்ட அவல நிலைகள் ஏற்படுகின்றன. ஆந்திர மாநிலத்தில். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற கட்சி ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறது. அங்கு அதிலும் ஆந்திர மாநிலத்தில் தலைநகரான ஐதராபாத்தில் குழப்பங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. காவல் துறை அதிகமாக ஈடுபட்டுள்ள ஐதராபாத்தில் தான் இப்படிப்பட்ட குழப்பங்கள் நடக்கின்றன. இதை தடுப்பதற்கு ஊரடங்குச் சட்டம் போடக்கூடிய நிலையில் குழப்பங்கள் நடந்திருக்கின்றன. இதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்வதற்காகத்தான் இதை கேட்டார்கள்.

திரு. துரை முத்துசாமி: பாயிண்ட் ஆப் ஆர்டர், வேறு மாநிலத்தைப் பற்றி இங்கே பேசலாமா? இதற்குத் தீர்ப்பு அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) : இதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒன்றுமில்லை.



திரு. ஏ. ஆர். மாரிமுத்து : நான் சொல்ல வந்தது, கள்ளச் சாராயத்தைத் தடுக்கவேண்டும் என்று சட்டங்களைக் கொண்டு வந்து அமல் நடத்தவேண்டும் என்று அரசு முயற்சி செய்தாலும் அதையும் மீறிக் கொண்டு காரியங்கள் நடைபெறுகின்றன. ஆவடியில் போலீஸ் ஸ்டேஷனுக்கு 500 பேர்கள் சேர்ந்து கொண்டு போய் அங்குள்ளவர்களை தாக்கியிருக்கிறார்கள். இப்படி இந்தத் சமூக விரோதிகளுக்கு எப்படி தைரியம் வந்தது. போலீசையும் அடிக்கலாம், தாக்கலாம் என்ற தைரியம் எப்படி உருவானது என்பதை தயவுசெய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கள்ளச் சாராயத்தை ஒழிக்கப் போகின்றேன் என்றும், கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களின் பெயர்களை வெளியிடப் போகிறேன் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதாக பத்திரிகையில் செய்தி வந்தது. அப்படி அந்த அறிக்கையை வெளியிட்டாவது, அவர்களை உள்ளே பிடித்து போட முடியும். அதையும் காணோம். அறிக்கை வரும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர அறிக்கை ஒன்றையும் காணோம், இது மட்டுமல்ல.

செங்கோட்டையில் காந்தி மகானின் சிலை உடைக்கப்பட்டது. இதன் மீது போலீஸ் நடவடிக்கை எடுக்காததால், அங்கே புள்ளவர்கள் உண்ணாவிரதம் இருந்து, நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரினார்கள். இன்னும் அதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. செங்கற்பட்டு மாவட்டத்தில் அரிசனங்களுக்கும் அங்குள்ள நிலச்சுவான்தார்களுக்கு இடையில் சிக்களும்குப்பம் என்ற கிராமத்தில் போராட்டம் நடைபெற்றது. அரிசனங்கள் தாக்கப்பட்டார்கள். இதைப்பற்றி போலீசுக்கு ரிப்போர்ட் கொடுத்தும் நடவடிக்கை எடுக்கவில்லை. முதலமைச்சர் அவர்களுக்கும் மனு கொடுத்தார்கள், அதிகாரிகளுக்குக் கொடுத்தார்கள், கடைசியில் எந்தவிதமான பலனும் இல்லாததால், ஆயிரம் பேர்கள் சேர்ந்து இங்கே கால்நடையாக வந்தார்கள், முதலமைச்சர் அவர்களிடத்தில் தங்கள் சிரமங்களை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். இவ்விதம் நடந்து இரண்டு மாதங்கள் ஆகியும் எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. இதை எதிர்த்து போலீஸ் ஸ்டேஷனில் 400 பேர்கள் சேர்ந்து கொண்டு கேரோ பண்ணினார்கள். இவ்விதம் கேரோ நடைபெற்றதின் பின்னால் மூன்று நாட்களுக்குப் பின்னால் இப்போதுதான் நடவடிக்கை எடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள். கேரோ செய்த பின்னால்தான் நடவடிக்கை எடுக்கக்கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது? ஏன் இப்படிப்பட்ட நிலைமை உருவாகிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சைதாப்பேட்டை அருகில் திரிசூலம் என்கின்ற கிராமத்தில், கல் உடைக்கும் லேபர் கான்ட்ராக்ட் சங்கம் இருந்தது. அதே நேரத்தில் அரிசனங்கள் சேர்ந்து நடத்தக்கூடிய ஒரு சங்கமும் இருந்தது. பின்னால் அன்று திராவிட முன்னேற்றக் கழக அரசு

பதவிக்கு வந்ததற்குப் பிறகு, இரண்டு சங்கங்களும் ஒன்றாக இணைக்கப்பட்டு, இரண்டு சங்கங்களிலுள்ள உறுப்பினர்களும் சேர்ந்து ஒன்றாக செயல்படுங்கள் என்று சொன்னார்கள். இரண்டு சங்கங்களும் ஒன்றாகச் சேர்த்து இணைக்கப்பட்டது. ரெஜிஸ்டரும் செய்யப்பட்டது. ஆனால் அரிஜன் கூட்டுறவு சங்கத்தில் உள்ளவர்களை இதில் சேர்க்கவே இல்லை.

சுத்தமாக 1500 பேர்களை அதாவது 900 குடும்பங்கள் வெளியேற்றி வைக்கப்பட்டிருக்கிறார்கள், அந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்களை சேர்க்கவில்லை என்று சொல்லப்படுகிறது. அந்தச் சங்கத்தை அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், அவர்கள் முயற்சியிலே நடத்தப் படுகின்றது என்று சொல்லப்படுகின்றது அந்த 900 குடும்பங் களின் கதி என்ன? அவர்கள் வெளியேற்றப்பட்டு. பட்டினி கிடந்து சாகிறார்கள். எத்தனைத் தடவை அவர்கள் அதிகாரி களைப் பார்த்தாலும், இதுவரையிலும் அவர்களை உறுப்பினர் களாகச் சேர்த்து, கல் உடைக்கும் வேலை கொடுக்கப்பட வில்லை. அதன் விளைவாக கிளர்ச்சி ஏற்படலாம். ஒரு கிளர்ச்சி ஏற்படுவதற்கு ஆதாரமாக இருக்கின்ற குற்றச் சாட்டுக்களை, உடனுக்குடன் கவனிக்க வேண்டும்.

அடுத்து, விவசாயிகளுடைய போராட்டம். இந்த விவசாய போராட்டத்திலே உயிர்ச் சேதம் எல்லாம் ஏற்பட்டது. விவசா யப் போராட்டத்திலே இருக்கின்ற முக்கியமான பிரச்னை, கடன் சுமையை ரத்து செய்ய வேண்டுமென்பதுதான். விவசாயி களுடைய நிலைமையை சற்று நன்கு கவனித்து, யோசித்துப் பார்க்க வேண்டும். பல்வேறு இடங்களில் வறட்சியாலும், வெள்ளத்தாலும் கடன் ஒத்திவைக்கப்பட்டது. அவைகளைத் திருப்பிச் செலுத்த முடியாத சங்கடத்திலே விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ரீ-பேயிங் காபாசிடி குறைந்து போய்விட்டது. எனவே, அவர்கள் அந்தக் கடனை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்கின்றார்கள். மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டு மென்பது நியாயமாகத் தோன்றும். வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாததால், மூன்று முறை கடன் ஒத்தி வைக்கப் பெற்றிருக்கிறது ஒரு ஏக்கருக்கு 400 ரூபாய் வீதம், மூன்று முறைக்கு 1200 ரூபாயும், அதற்கான வட்டியும் சேர்த்து அவர்கள் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய நிலைமையிலே இன்றைக்கு விவசாயிகள் இல்லை. அரசாங்கம் எப்படி நினைத் தாலும், விவசாயிகளின் கடனை ரத்து பண்ணித்தான் ஆக வேண்டும்; வேறு வழியில்லை.

ரிசர்வ் பாங்கு ஸ்டடி டீம் ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார் கள். அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள், இரண்டு கடன்கள் சைமல்டேனியஸாக ஒத்திவைக்கப்பட்டு, அடுத்த ஆண்டும் வறட்சியால் பாதிப்பு ஏற்படுமானால், ஒரு கடனை ரத்து செய்ய வேண்டும். இன்னொரு கடனை நீண்டகால கடனாக மாற்றம் செய்யவேண்டும் என்று அந்த அறிக்கையில் சிபார்சு செய்யப் பட்டிருக்கிறது. ஆகவே, இந்த நேரத்தில் நான் அரசைக் கேட்டுக் கொள்வதெல்லாம், ரிசர்வ் வங்கியோடு சேர்ந்து நாமும் போராடவேண்டும். மத்திய சர்க்கார்தான் முடிவெடுக்க வேண்டுமென்றாலும், நாமும் இதிலே போராடித்தான் வாங்க வேண்டும். இந்த நிலைமை எல்லா ஸ்டேட்டுகளிலும் இருக்கிறது. விவசாயிகளுக்கு கடனை ரத்து செய்யவேண்டும் என்பதைப் பரிசீலனை செய்து, அவர்களுக்கு இருக்கின்ற நிலையை, சங்கடங்களை கருத்தில் கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்து ஒருநாள் நான் பத்திரிகையிலே பார்த்தேன். ரைஸ் மில்கள் தேசிய மயமாக்கப்படும் என்ற ஒரு அறிக்கை வந்தது. அது முதல் அமைச்சர் அவர்களின் அறிவிப்பு. எனக்கு அதைப் பார்த்ததும் ஆச்சரியமாக இருந்தது. ரைஸ் மில்களை ஏன் தேசிய மயமாக்க வேண்டும். அரசாங்கத்திற்கு ரைஸ் மில்கள் வேண்டுமென்றால், ஒன்றிரண்டை வாங்கிக் கொள்ளலாம். உணவு தானியங்களின் வர்த்தகத்தை அரசு ஏற்றுக் கொள்ளும் என்று சொன்னால், அதிலே பொருள் இருக்கிறது. ரைஸ் மில் களை ஏற்றுக் கொள்வதால் பயனில்லை. எப்படி இந்த அறிவிப்பை அவர்கள் செய்தார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. உணவு தானிய விற்பனையை சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக அரசு ஏற்று நடத்துவது என்பது என்றால் அது ஒப்புக்கொள்ளக் கூடியது. அதை ஏற்று நடத்துவதிலே சிரமங்கள். சங்கடங்கள் இருக்கின்றன. இந்த உணவுப் பொருள்கள் வியாபாரத்தை அரசு ஏற்று நடத்தினால், என்ன லாபம் என்று சொன்னால், விவசாயிகளுக்கு நியாயமான விலை கொடுக்க முடியும். கன்சியமர்ஸுகளுக்கு அதிக விலை வராது. விலை வீழ்ச்சி ஏற்பட்டால் விலை குறைந்து போனாலும் அரசு விவசாயிகளுக்கு நியாயமான விலை கொடுக்க முடியும். ஆனால், அரசு இந்த ரைஸ் மில்களை தேசிய மயமாக்குவதினால் மட்டும் பயன் கிடையாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, அரிசி ஆலைகளை தேசிய மயமாக்குவதால் பயனில்லை என்று சொல்லுகின்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அதற்கான காரணங்களையும் சொல்ல வேண்டும். தமிழகத்தின் முதல் அமைச்சர் அவர்கள் இந்த அறிவிப்பை செய்திருக்கிறார்கள். அதன்படி அரிசி ஆலைகள் தேசிய மயமாக்கப்படும். அதை செயல்படுத்துவதற்கு அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. ஒரு பொறுப்புள்ள எதிர்க் கட்சி உறுப்பினர், நீண்டகால அனுபவம் உள்ளவர், இந்த அரிசி ஆலைகளை தேசிய மயமாக்கு

வதால் எந்தவிதமான பயனும் இல்லை என்று சொல்லுவதற்கான காரணங்களையும் கொஞ்சம் விளக்கினால், அதையும் வைத்து ஆலோசிக்க முடியும். அதைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12.10]

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : நான் கூறுவது—மில்லை மட்டும் எடுத்துக் கொண்டால் பயன் இல்லை; கொள்முதலையும் சேர்த்துச் செய்ய வேண்டுமென்றுதான் கூறுகிறேன். முழு கொள்முதலையும் அரசே ஏற்றுக் கொண்டால்தான் விலை குறைகிற நேரத்தில் விவசாயிகளுக்கு அதிகப்படியாக விலை கொடுக்கவும், விலை ஏறுகிறபோது கன்ஸ்யூமர்சுக்கு நியாயமான விலையில் கொடுக்கவும் நிலைமை ஏற்பட்டு மிகுந்த பயனாக இருக்கும்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: விவசாயிகளுக்கு அதிக விலை கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். அதிலே, ஆளும் கட்சித் தரப்பிலும் விவசாயிகள் நிலையைப் பரிவோடு பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். அதற்கான தென் மாநில முதலமைச்சர்களை எல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கூட்டி வைத்து ஒரு தீர்மானத்தைக் கூட போட்டு மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்பது அனைவருக்கும் நன்றாகத் தெரியும். கொள்முதல் விலையை நிர்ணயம் செய்யும் பூரண அதிகாரம் மத்திய அரசிடம் இருக்கிறது. இந்த ஆண்டு அவர்கள் ஒரு விலையை நிர்ணயித்து அதற்கு மேல் ஒரு பைசா கூடக் கொடுக்கக் கூடாது என்ற முறையில் மத்திய அரசு உத்தரவு போட்டிருக்கிறது. இப்போது அங்கு வேறு கட்சி ஆண்டு கொண்டிருக்கிறது. இதற்கு முன்னால் தொடர்ச்சியாக காங்கிரஸ் கட்சிதான் ஆண்டு கொண்டிருந்தது. அன்றைக்கு இங்கிருந்த அமைச்சர்கள் நெல்லுக்கு அதிக விலை கொடுக்க வேண்டுமென்று கேட்டபோது அன்றைக்கு மறுக்கக் காரணம் என்ன? அன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை வலியுறுத்தியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : அன்றைய தினம் கூட நெல்லுக்கு அதிக விலை கொடுக்க வேண்டுமென்று தூதுக் குழுவாகச் சென்று மத்திய அரசிடம் சொன்னோம். அன்றும் சொன்னோம், இன்றும் சொல்லுகிறோம். இன்று கேரளாவில் அதிக விலை நிர்ணயித்திருக்கிறார்கள். அவர்கள் எப்படி நிர்ணயித்தார்கள்?

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அன்று உங்கள் கட்சி ஆட்சி இருந்தபோது நீங்கள் என்ன செய்தீர்கள் என்று காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களைப் பார்த்துக் கேட்கிறார்கள். இன்று அமைச்சரவை அதிக விலை நெல்லுக்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறது. அப்படி இருக்கும்





போது மத்திய அரசு நியாயமான விலையைத் தமிழக விவசாயிகளுக்குக் கொடுக்க முன்வரவில்லை. கோதுமைக்கு ஒரு டன்னுக்கு 26 ரூபாய் அதிகமாக வழங்கும் மத்திய அரசு நெல்லுக்கு கட்டுபடியாகக் கூடிய விலையை நிர்ணயிக்க மறுக்கிறது. டன்னுக்கு 150 ரூபாய் கொடுக்க வேண்டியிருக்க இன்று 116 ரூபாய் தான் கொடுக்கிறார்கள். நியாயமான விலை நெல்லுக்கு, தமிழக விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்பதற்காக இந்த அரசு போராடத் தயாரா? நாங்கள் தயார்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : அடுத்து, நிலச் சீர்திருத்தச் சட்டம் இன்னும் முழுமையாக்கப்படவில்லை. அதைப் பற்றி ஒரு வார்த்தை கூட இந்த உரையில் குறிப்பிடப்படவில்லை. பினாமி நிலங்களை எல்லாம் எடுக்கப் போகிறோம் என்று புதிதாகப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன். அதைத் தீவிரமாகக் கண்டு பிடித்து நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதில் அபிப்ராய பேதம் எதுவும் இல்லை. எல்லோரும் அதை ஒத்துக் கொள்கிறோம். அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குத்தகைதாரர், நிலச் சொந்தக்காரர் என்று இரண்டு வகுப்பை இன்னும் நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். அதற்கு எப்போது முடிவு கட்டப் போகிறார்கள்? முன்னாலே கொண்டு வந்த சட்டம் காலாவதியாகிவிட்டது. அதைப் பற்றிய புதிய சிந்தனை என்னவென்று பார்த்தால் ஒன்றும் இல்லை. நேற்றைய தினம் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கோயில் நிலங்கள் குத்தகைதாரர்களுக்குச் சொந்தமாக்கப்படமாட்டாது என்று திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்கள். அது கோவிலுக்கும் நல்லதல்ல. குத்தகைதாரர்களுக்கும் நல்லதல்ல, தேசத்திற்கும் நல்லதல்ல. ஏன் அப்படிச் சொன்னார்? கோயில்களைக் காபந்து பண்ணும் பொறுப்பு தமக்கு இருக்கும் காரணத்தால் அப்படிச் சொல்லியிருப்பார் என்று கருதுகிறேன். லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் குத்தகைதாரர்களும் அக்கறை கொள்ளாமல், கோயில் நிர்வாகத்தினரும் அக்கறை கொள்ளாமல் உற்பத்திப் பெருக்கம் ஆகாமலே கிடக்கின்றன, சீர்காழியில் திருஞானசம்பந்தர் பிறந்த ஊரிலுள்ள கோயிலைப் போய்ப் பார்த்தேன். ஆயிரம் வேலி நிலம் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். கிட்டத்தட்ட 7,000 ஏக்கர் நிலம் இருக்கிறது என்று சொன்னாலும் 'பூஜைக்கு, நெய்வேத்தியத்திற்கு போதிய நெல் கிடையாது: எங்களுக்கும் சம்பளம் கிடையாது, என்று அந்தக் கோயிலில் பணி செய்கிறவர்கள் சொல்லுகிறார்கள். அதைப்போன்று வைத்தீஸ்வரன் கோயில் போன்ற பெரிய கோயில்களுக்கு எல்லாம் நிறைய நிலம் இருக்கிறது, கோயில் காரியங்களை நடத்த முடியாத நிலை இருக்கிறது. ஆகவே அந்த நிலங்களையெல்லாம் குத்தகைதாரர்களுக்குச் சொந்தமாகச் செய்வது சாலச்சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. ஏ. ஆர், மாரிமுத்து] [1978 செப்டம்பர் 8

விவசாயத்திற்கு அடுத்தபடியாக அதிகமான மக்கள் தொகை ஈடுபட்டிருக்கக்கூடிய தொழில் நெசவுத் தொழில்தான். நெசவாளர்கள் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரவேண்டுமென்ற முறையிலே ராஜா சுப்பிரமணியம் செட்டியார் கமிட்டி போடப்பட்டு, அது இரண்டு ஆண்டுகளாக பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. 25 சதவீதம் ஊதிய உயர்வு என்று சொல்லப்படுகிறதே தவிர அதை அவர்கள் பெறமுடியவில்லை. மாஸ்டர் வீவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால் அவர்களுக்கு நூல் கொடுத்ததாக ஒரு பில்லையும் அவர்களிடமிருந்து துணியை வாங்கியதாக ஒரு பில்லையும் வாங்கிக் கொண்டு இந்தச் சட்டத்தால் அவர்களுக்கு எந்தவிதமான பலனும் கிடைக்காத முறையிலே செயல்பட்டு வருகிறார்கள். ஆகவே நெசவாளர்கள் பாதுகாப்புச் சட்டத்தை உடனடியாகக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு செய்தியைப் பத்திரிகையிலே பார்த்தேன். தமிழ் நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்வதற்கு போதிய கோட்டா ஒதுக்கப்படவில்லை என்று ஒரு தீர்மானத்தைப் போட்டு நிறைவேற்றியிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலிருந்து அதிகமாக ஏற்றுமதி செய்யப்பட வேண்டும். அப்போது தான் இங்கே தேக்கம் இருக்காது. ஆகவே தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்வதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எதையுமே அரசு முன்கூட்டியே யோசித்து செயல்படாவிட்டால் என்ன என்ன விளைவுகள் வரும் என்டதற்கு எடுத்துக்காட்டு தான் எம்.பி.பி.எஸ், எஞ்சினியரிங் காலேஜ் செலக்ஷன் லிஸ்ட் வெளியாவதில் தாமதம் ஏற்பட்டதற்குக் காரணம். நேர்முகத் தேர்வு எல்லாம் முடித்தும்கூட 1 மாதம் கழித்துத்தான் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பட்டியல் வெளிவருகிறது. காரணம் என்ன? அவர்களுக்கு இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் சரியாகக் கொடுக்கப்படவில்லை, சிலர் ஹைகோர்ட்டுக்குப் போய்விட்டார்கள், ஏன் கோர்ட்டிற்குப் போனார்கள்? இம்ப்ரூவ்மென்ட் டெஸ்ட்லே உள்ள மார்க்கையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று எம்.பி.பி.எஸ். செலக்ஷன் தேர்வைப் பொறுத்த வரையில் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது, ஆனால் எஞ்சினியரிங் செலக்ஷனுக்குப் கொடுக்கப்படவில்லை, அதைப் போன்று அங்கேயும் கொடுத்து இருந்தால் இப்படிப்பட்ட தாமதம் ஏற்பட்டிருக்காது. இரண்டு இடங்களுக்கும் ஒரே மாதிரியான பொதுவான இன்ஸ்ட்ரக்ஷனை கொடுத்திருந்தால் இவ்வளவு காலதாமதம் ஏற்பட்டிருக்குமா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

அடுத்து, தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது, இருந்தாலும் 170 பேர்கள் தனியார் பள்ளி ஆசிரியர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டு இருக்கிறார்கள், அவர்களுக்கு எங்கே பாதுகாப்பு



1978 செப்டம்பர் 8] [திரு. ஏ ஆர். மாரிமுத்து]

இருக்கிறது? அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அரசு சொல்கிறது, ஆனால் யாரும் அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளவில்லை, அவர்களுக்கும் அரசாங்கம் தானே பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். ஏன் கொடுக்கவில்லை? 10, 15 ஆண்டுக் காலம் வேலை செய்தவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டு, அவர்கள் இன்றைக்கு உண்ணாவிரதப் போராட்டம் எல்லாம் நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அப்பளம் உற்பத்தியாளர்களிடமிருந்து ரெப்ரசன்டேஷன் அமைச்சரவைக்கு வந்திருக்கும் என்று நினைக்கிறேன், அது ஒரு காட்டேஜ் இன்டஸ்ட்ரி மாதிரி இருக்கிறது. ஓய்வு நேரங்களிலே பெண்கள் அந்தத் தொழிலிலே ஈடுபட்டுச் செய்து வருகிறார்கள், அவர்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கார்ப்பரேஷனிலே வீட்டுவரி அதிகரிப்புச் செய்திருக்கிறார்கள். ஒரு பகுதியிலே உள்ளவர்களுக்கு பழைய வரியும், இன்னொரு பகுதியிலே இருக்கிறவர்களுக்கு புதிய வரியும் போட்டிருக்கிறார்கள். ஒரே சீரான வரியை, பழைய வரியையே வாங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

[பிற்பகல் 12.20]

அடுத்து ஒரு தீர்மானம் போட்டிருக்கிறார்கள். ஊராட்சி மன்றங்களோடு சேர்ந்த மக்கள் கமிட்டி அமைக்கவேண்டுமென்று ஒரு தீர்மானம் போட்டிருக்கிறார்கள். தயவு செய்து யோசித்துப் பார்க்க வேண்டும். பஞ்சாயத்து போர்டுகளில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அமைப்பை உருவாக்குகிறோம். ஆனால் சிறிய கிராமத்தில் ஐந்து பேர் கொண்ட மக்கள் கமிட்டி என்று போட்டால் நிலைமை என்னவாகும்? இப்பொழுது ஜெயித்தவர்களும், எதிர்த்தவர்களும் அடித்துக் கொள்கிறார்கள், வேலையே நடக்கவில்லை. அவர்கள் நினைக்கின்ற வேலை நடக்க வேண்டுமென்று அவர்களும், இவர்கள் நினைக்கின்ற வேலை நடக்க வேண்டுமென்று இவர்களும் முயற்சிக்கிறார்கள். பல பஞ்சாயத்துக்களிலே சரியாக நடக்கிறது, சில இடங்களில் பஞ்சாயத்து வேலையே நடக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, மக்கள் கமிட்டி என்று போட்டால் மீதிக் காரியங்கள் நடக்குமா, சங்கடமான விளைவுகளை ஏற்படுத்தாதா என்பதை நிர்வாகத்திலுள்ளவர்கள் தயவு செய்து சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டம் பாபநாசத்தில், நாகலூர் என்ற இடத்தில் நான்கு அரிசனங்கள் சுமார் 15 வருடங்களாக இருந்து வந்தார்கள், அதாவது 1949ஆம் வருடத்திலிருந்து என்று சொல்கிறார்கள், அவர்கள் அனுபவித்து வருகிறார்கள். அந்த இடத்தில், நத்தம் புறம்போக்கு என்று சொல்லப்படும் இடத்தில் கலியபெருமாள், சின்னையன், வாசுதேவன் போன்றவர்கள் குடியிருந்தார்கள். அங்கே வேறு சிலர் புகுந்து அவர்களை வெளியேற்றிவிட்டு இவர்கள் புகுந்து விட்டார்கள். அங்கே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கொடியை ஊன்றி வைத்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இதை வேண்டுமென்றேகூடச் செய்வார்கள். எனவே அதற்கு நான் கலர் கொடுக்க விரும்பவில்லை. ஆனால் போலீசுக்கு ரிப்போர்ட் கொடுத்து நடவடிக்கை எடுக்கப்படவில்லை. சர்க்கார் எவிக்ஷன் நோட்டீஸ் கொடுத்து அவர்கள் ஸ்டே வாங்கியிருக்கிறார்கள். ஜெயராமன், துரைக்கண்ணு, காத்தையன் போன்றவர்கள் உள்ளே புகுந்து வீட்டை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) அவர்கள் அரிசனங்களாகத்தான் இருக்கும் என்று நினைக்கிறேன், விவரமாகத் தெரியவில்லை. ஆனால் அங்கே இருந்தவர்கள் அரிசனங்கள், உள்ளே புகுந்தவர்கள் அரிசனங்களா இல்லையா என்று இனிமேல்தான் தெரிய வேண்டும். சுமார் 15 ஆண்டுகளாகக் குடியிருந்தவர்களை எவிக்ஷன் செய்யாமல், சட்டத்திற்குப் புறம்பாக வெளியேற்றுவதோ, மற்றவர்கள் உள்ளே புகுந்து கொள்வதோ கூடாது. அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தாரமங்கலம் தொகுதி பற்றி கோர்ட்டில் ஒரு தீர்ப்புக் கொடுத்தார்கள். நாராயணன் அவர்களின் தேர்தல் செல்லாது என்று சொன்னார்கள். சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்று ஸ்டே வாங்கி, சில கட்டுப்பாடுகளோடு திரு. நாராயணன், எம்.எல்.ஏ. ஆக நீடிக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் தாரமங்கலம் தொகுதியில் எஸ். செம்மலை, பி.எஸ்ஸி., எம்.எல்.ஏ., என்று போட்டுக் கொள்கிறார்கள், அரசு நிகழ்ச்சிகளிலும் அப்படியே நடக்கிறது, செம்மலை, எம்.எல்.ஏ., என்று மேய்ச்சேரியில் நடந்த கூட்டத்தில் சொல்கிறார்கள். இம்மாதிரி தவறுகள் நடக்கக் கூடாது.

வீரபாண்டிய கட்டபொம்மன் சந்ததியினர் 200 குடும்பங்களுக்கு நிலங்கள் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த நிலங்கள் கரம்பாக இருக்கின்றன. சீர் செய்யப்படவில்லை. அதற்காக ஒரு சொசைட்டி வைத்து, அதன் மூலமாக சீர் செய்து, சாகுபடிக்குக் கொடுப்பதற்காக ஏற்பாடு செய்து, அந்தச் சங்கம் ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கிறது ஆனால் இதுவரையில் ஒன்றும் செய்யப்படவில்லை. அவற்றை வெகு விரைவில் சீர் திருத்தம் செய்து அவர்கள் சாகுபடி செய்வதற்குண்டான காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





ஆதிவாசி குருவிக்கார ரெட்டியார்கள் என்று அதிராம்பட்டினத்திலும், முத்துப்பேட்டையிலும் இருக்கிறார்கள். அவர்கள் குருவிகளைப் பிடிக்கக் கூடாது என்று சொல்லப்பட்டிருப்பதால் அவர்களுடைய பிழைப்பிற்கு வழியில்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் குருவிகளைப் பிடித்து வாழ்க்கை நடத்தக் கூடியவர்கள். அவர்கள் சுமார் 100 குடும்பங்கள்தான் இருப்பார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பலருக்குப் பாதுகாப்பு கொடுக்கிறோம். தமிழ்நாடு கட்டிடத் தொழிலாளர் சங்கம் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். அவர்கள் மேலே சென்று வேலை செய்யும்பொழுது கீழே விழுந்தால் செத்து விடுகிறார்கள், அவர்களுக்கு நிதி உதவி இல்லை. எனவே இதரர்களுக்குக் கொடுப்பதைப்போல அவர்களுக்கும் ஆபத்து நேரத்தில் நிதி உதவி கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியைப்பற்றி—பட்டுக்கோட்டை தொகுதியைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். பட்டுக்கோட்டையில் சப்—கோர்ட் வேண்டுமென்று நீண்ட நாள் கோரிக்கை இருக்கிறது. எனவே, உடனடியாக அங்கே சப்-கோர்ட் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்டுக்கோட்டையில் கல்லூரி அமைக்க வேண்டுமென்பதற்காக கமிட்டி போட்டு வசூலும் செய்தார்கள், ஆனால் வேலை ஒன்றும் நடைபெறவில்லை. அரசாங்கத்தின் கொள்கை மாறாக இருந்தால், அங்கே பாலிடெக்னிக்காவது ஏற்படுத்த வேண்டும்.

அதிராம்பட்டினத்திற்கு குடிநீர்த்திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அது இன்னும் அனுமதிக்கப்படவில்லை. அது அனுமதிக்கப்பட்டு விரைவில் குடிநீர் கிடைக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, மன்னார்குடி சப்-கோர்ட்டைப் பட்டுக்கோட்டைக்கு மாற்ற வேண்டுமென்று அவர்கள் கேட்கவில்லை அல்லவா?

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு தலைவரவர்களே, பட்டுக்கோட்டைக்கு சப்-கோர்ட் வரட்டும். சப்—டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் வேண்டுமானாலும் வரட்டும். ஆனால் மன்னார்குடியில் இருக்கும் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டைத் தயவு செய்து மாற்றக் கூடாது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: பெருமதிப்பிற்குரிய தலைவரவர்களே, கடற்கரைப் பகுதியான அதிராம்பட்டினத்தில் இரண்டு மைல் தூரத்திற்கு நல்ல நீரே கிடைக்காது. எனவே, தம்பிக்கோட்டை, சந்தரநாயகபுரம், நரசிம்மபுரம் போன்ற இடங்களையெல்லாம் சேர்த்து ஒருங்கிணைந்த குடிநீர்த் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, காமராஜ் அவர்களின் பெயரை மதுரைப் பல்கலைக் கழகத்திற்குச் சூட்டுவதற்கான மசோதா வரவிருக்கிறது. அதற்குப் பெருந்தலைவர் காமராஜ பல்கலைக் கழகம் என்று பெயரை வைக்க வேண்டும். அதிற்கு நானே திருத்தம் கொடுக்கிறேன், அல்லது அரசுத்தரப்பிலே கொடுத்தாலும் நான் வரவேற்கிறேன். எனவே, 'பெருந்தலைவர் காமராஜ் பல்கலைக கழகம்' என்று வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*<u>திரு. தி. அன்பழகன்:</u> மாண்புமிகு பேரவைத் தற்காலிகத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது மாண்புமிகு உறுப்பினர் மணிமாறன் அவர்கள் கொடுத்திருக்கின்ற நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஏழை எளிய மக்களின் தேவைகளை, விருப்பங்களை நிறைவேற்றவும் அவர்கள் நிலையை ஏற்றமிகு வாழ்க்கையாக மாற்றுவதுதான் அரசின் நோக்கம் என்பதைத் தெளிவாக்குகின்ற வகையிலும் அரசின் செயல் திட்டங்களை விளக்குகின்ற வகையிலும் செயல் படுத்துகின்ற வகையிலும் எவ்வளவு நல்ல காரியங்களை எல்லாம் செய்திருக்கிறது என்பதைப்பற்றியும், செய்ய இருக்கிறது என்பதைப் பற்றியும் மிகத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்.

கல்வித்துறை, மின்சாரத் துறை, வேளாண்மைத் துறை, சிறு தொழில் வளர்ச்சி, மருத்துவத் துறை, குடிநீர் வழங்குத் துறை ஆகியவற்றில் அரசு கண்டுள்ள முன்னேற்றங்களை மேதகு ஆளுநர் உரை விவரமாகக் கூறுகிறது.

கல்வித்துறையில் கழக அரசு தனிக் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது. தமிழகத்திலே அனைத்து கிராமங்களுக்கும் நல்வழி ஏற்படுகிற வகையில், கிராமப்புற மக்களின் நலனில் பெரும் அக்கறை கொண்டுள்ள இவ்வரசு மேல்நிலைப் பள்ளிகளை 400-லிருந்து 916 ஆக உயர்த்தி மேற்படிப்புக்கான வசதிகளைத் தமிழகம் முழுவதும் பரவலாக்கியிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

ஒரு நாட்டினுடைய வளர்ச்சி, அந்நாட்டினுடைய பொருளாதார முன்னேற்றத்தில்தான் இருந்து கொண்டிருக்கிறது. பொருளாதார முன்னேற்றம் அந்த நாட்டு மக்களுடைய, அடித்தள மக்களுடைய வளர்ச்சியிலேதான் இருக்கிறது. ஆகவே, நாட்டுமக்களுடைய அடித்தள வளர்ச்சி என்று சொல்லும்போது கிராமப்புற மக்களுடைய வளர்ச்சியைப் பெருக்குவதில் மிகவும் அக்கறை கொண்டுள்ள இந்த அரசு நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் உள்ள வேறுபாடுகளைப் போக்குகின்ற வகையில் தீவிர கவனம் செலுத்தி வருகிறது.





எல்லா ரெவின்யூ கிராமங்களுக்கும் நியாய விலைக் கடைகளைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பதும், பால்வள நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் 10 இலட்சம் உறுப்பினர்களைக் கொண்ட 4,600 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கவும் அவற்றின் மூலமாக, வேலை வாய்ப்பைப் பெருக்கவும் வசதிகளை அதிகரிக்கவும் அரசு முயற்சி செய்கிறது. கிராமத் தொழில்களை ஊக்குவிக்கின்ற வகையில் கதர்-கிராமத் தொழில் வாரியம் 30,000 பேருக்குக் கூடுதல் வேலை வாய்ப்புத் தரும் என எதிர்பார்க்கப் படுகிறது. இது போல் சிறுதொழில் வளர்ச்சி நிறுவனமும் இந்த ஆண்டிற்குள் 900 சிறுதொழிற் கூடங்களை அமைக்க வழிவகை செய்திருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

கிராமப் பகுதிகளில் மருத்துவ வசதிகளைப் பெருக்கும் வகையில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மேலும் ஒரு மருத்துவரை நியமித்திருப்பதும், 100 நடமாடும் குழுக்களைப் புதிதாக நியமித்திருப்பதும் வரவேற்கத்தக்கதாகும்.

வேளாண்மைத் துறையில் அரசு மிகத் தீவிரமாக கவனம் செலுத்தியதன் காரணமாகத்தான் இன்று உணவு உற்பத்தியில் நாம் தன்னிறைவு பெற்றிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள், இதற்கு முன்பு வைக்கப்பட்டிருந்த பெயரை மாற்றியதைத் தவிர வேறு எந்த முயற்சியையும் எடுக்கவில்லை என்று சொன்னார்கள். முந்தைய ஆண்டைவிட இந்த ஆண்டு 10 இலட்சம் டன் அதிகமாக உணவு உற்பத்தி செய்யப் பட்டிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழில் வளம் பெருக அரசு நல்ல திட்டங்களைக் கையாண்டு வருகிறது. இதன் வாயிலாக வேலை வாய்ப்புகள் பெருக வசதியாக கதர்—கிராமத் தொழில் வாரியமும் சிறு தொழில் வளர்ச்சி நிறுவனமும் பாடுபட்டு வருகிறது. இந்த நேரத்தில் நான் அரசைக் கேட்டுக்கொள்வது, எங்கள் வட ஆர்க்காடு மாவட்டத்தில் திருப்பத்தூர், நாட்ராம்பள்ளி போன்ற பகுதிகள் மிகவும் பின்தங்கிய தொழிற் பகுதிகளாக இருக்கின்றன. அரசு வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஒரு சந்தனத் தொழிற்சாலையை ஏற்படுத்த இருக்கிறது. அத் தொழிற்சாலையை பின் தங்கிய பகுதியான திருப்பத்தூர் பகுதியிலே ஏற்படுத்த வேண்டுமென்று விரும்பி, வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். சந்தனத் தொழிற்சாலை அமைப்பதற்கு வேண்டிய அனைத்தும் ஒருங்கிணைந்து அங்கே கிடைக்கிறது. சந்தனக் கிடங்கு, போக்குவரத்து வசதி, இட வசதி, தண்ணீர் வசதி எல்லாம் ஒருசேர அங்கு அமைந்திருக்கிற காரணத்தால் சந்தனத் தொழிற்சாலையை திருப்பத்தூர் பகுதியிலே அமைக்க வேண்டுமென்று முதல்வர் புரட்சித் தலைவரையும், தமிழக அரசையும் நான் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஆளுநர் உரையில் எந்தக் கொள்கையும் இல்லை என்று எதிர்கட்சி உறுப்பினர்கள் எடுத்துக் கூறினார்கள். பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகளான இரு மொழிக் கொள்கை, மதுவிலக்கு போன்ற உயர்கொள்கைகளும் அண்ணாவின் பல இலட்சியங்களும் ஆளுநர் உரையில் கூறப்பட்டிருக்கின்றன. உயிர் தமிழுக்கு, உடல் மண்ணுக்கு என தாய் தமிழுக்காக இன்னுயிரை ஈந்த தியாகச் செம்மல்களின் கனவு நனவாகின்ற வகையில் மொழிக் கொள்கையில் பேரறிஞர் அண்ணாவின் கொள்கையை உறுதிப்படுத்துகிறது. மொழித்திணிப்பு எந்த வழியில் வந்தாலும் அதன் பலன் விபரீத விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை எடுத்துரைத்து, இந்த அரசு அதை ஏற்றுக் கொள்ளாது என்பதைத் தெள்ளத் தெளிவாக்கி தென் மாநில முதல்வர்களின் கூட்டத்தில் மொழித் திணிப்புக்கு கண்டனத்தை தெரிவித்திருக்கிறது.

[பிற்பகல் 12·30]

தியாகத்திற்கும் உழைப்பிற்கும் மதிப்பளிக்கின்ற வகையில் மறைந்த தலைவர் காமராசர் பெயரை மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு வைத்தது பெருமைப்படுகிற நிகழ்ச்சியாகும். தமிழ்ச் சமுதாயத்திற்கும், தமிழுக்கும் மறுமலர்ச்சி ஏற்படுத்திய பேரறிஞர் அண்ணாவின் பெயரால் 'அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம்' தொடங்கி இருப்பது,' மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கும் அறிவு வளர்ச்சிக்கும் அதன் பயனாக பொருளாதார வளர்ச்சிக்கும் பெருந்துணையாக இருக்கும் என்பதை மனமாரப் பாராட்டுகிறேன்.

இந்த அரசு செயல்படுகின்ற முறை சரியில்லை என்று பல உறுப்பினர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். தமிழக அரசைப் பொறுத்தவரையில் இயற்கையினால் ஏற்பட்ட பல புயல்களை சந்தித்துக் கொண்டு இருக்கக்கூடிய நேரத்தில், அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக ஏற்படுகின்ற செயற்கைப் புயலையும் புரட்சித் தலைவர் அவர்கள், தென்றலாக மாற்றி ஒரு சிறந்த தூய்மையான நிர்வாகத்தை—நேர்மையான நிர்வாகத்தை தமிழகத்திலே நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

விவசாயிகளுக்கு இந்த அரசு ஒன்றும் செய்யவில்லை என்று குறை சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். தமிழக அரசைப் பொறுத்த வரையில், புரட்சித் தலைவர் பொறுப்பேற்றதற்குப் பின்னால் இந்த அரசு விவசாயிகளுக்கு எந்தவிதமான பாதகமும் செய்யவில்லை. இதற்கு முன்பு இருந்த அரசு செய்த காரியங்களையும் இந்த அரசு பாதிக்கும் வகையில் ஒன்றும் செய்யவில்லை. இதற்கு முன்பு இருந்த அரசு மின்சாரக் கட்டணத்தை 12 காசிலிருந்து 16 காசாக உயர்த்தியது. ஆனால் அண்ணா தி.மு.க. அரசு பொறுப்பேற்ற பிறகு 16 காசுகளை 14 காசாகவும் சிறு விவசாயிகளுக்கு





12 காசுகளாகவும் குறைத்திருக்கிறோம். இதனால் அரசுக்கு ஆண்டுக்கு 6 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டாலும் அதைப் பொருட்படுத்தவில்லை. விவசாயிகளுக்கு பம்ப்செட்டுகளுக்கு 5 ரூபாய் மீட்டர் வாடகை இருந்ததை மாற்றி 4 ரூபாயாகக் குறைத்திருக்கிறது. அதன் வாயிலாக அரசுக்கு ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. ஆனால் அதையும் பொருட்படுத்தவில்லை. சென்ற 1978-79 ஆம் ஆண்டு தமிழகத்தில் விவசாயிகளுக்கு ஒதுக்கப்பட்ட குறுகிய காலக் கடன் 121 கோடி ரூபாய், அதில் 12 கோடி ரூபாய் நீண்ட காலக் கடனாக மாற்றப்பட்டிருக்கிறது. மேலும் 16 கோடி ரூபாயை நீண்ட காலக் கடனாக மாற்றுவதற்கு ரிசர்வ் வங்கிக்கு பரிந்துரை செய்துள்ளது. விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு பயிர்க்கடன் வட்டிவிகிதம் 12.6 சதவிகிதத்தில் இருந்து 10.5 சதவிகிதமாகக் குறைத்து இருக்கிறது. குறுகிய காலக் கடன் என்று சொல்லும்போது நீண்ட காலக் கடனாக மாற்றி நன்மை பயக்கின்ற நேரத்தில் நீண்டகாலக்கடன் கொடுக்கும் கால அளவு 3 ஆண்டுகளாக இருப்பதை 5 ஆண்டுகளாக மாற்றவும் அரசு வழி வகை செய்திருக்கிறது. 1971 ஆம் ஆண்டிற்குப் பிறகு நிலவள வங்கியின் மூலமாக வாங்கிய கடன்களில் வெட்டிய கிணறுகள் பொய்த்துப் போனால், பெரு விவசாயிகளுக்கு 75% மும், சிறு விவசாயிகளுக்கு 90% மும் தள்ளுபடி செய்ய அரசு ஆலோசனை செய்திருக்கிறது. ஆகவே, தமிழக அரசு விவசாயிகளுக்கு என்னென்ன தேவைகளை எப்படி எப்படி நிறைவேற்றி நன்மைகளை முறையாகச் செய்திருக்கிறது எனத்தெரிகிறது. அதுமட்டுமல்ல. இந்த ஆளுநர் உரையில் பல நல்ல அம்சங்கள் அரசின் நல்ல திட்டங்கள், செயல்முறைகள் விளக்கப்பட்டிருக்கின்றன என்பதை பெருமையோடு எடுத்துச் சொல்லி, வரவேற்று, பாராட்டி முடிக்கிறேன். வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் உரையின் மீது நான் சார்ந்து இருக்கின்ற, உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களை இங்கே வைக்க விரும்புகிறேன்.

ஆளுநர் உரையிலே காணப்படும் சங்கதிகள் அன்றாடம் நடைமுறையிலே அரசாங்கம் கொடுத்து வரும் நடைமுறைகள், அவை குறித்துத்தான் இங்கே தந்து இருக்கிறார்கள். தொலைதூர நோக்கத்தோடு சில கருத்துக்களை இங்கே சொல்லியிருக்கலாம். ஆனால் அவைகள் விடப்பட்டு இருக்கின்றன என்பதை குறிப்பிட்டு, இந்த ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு எனது திருத்தத்தையும் தந்து இருக்கிறேன். அதனுடைய அடிப்படையிலேயே ஒரு சில கருத்துக்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

நான் சேர்ந்து இருப்பது வடாற்காடு மாவட்டம் என்பதை அனைவரும் அறிவார்கள். வடாற்காடு மாவட்டத்தில்தான் தமிழகத்தில் உற்பத்தியாகும் உணவுப் பொருளில் 25% உற்பத்தியாகிறது என்று சொல்கிறார்கள். அப்படி இருந்தும் அந்த வடாற்காடு மாவட்டத்திற்கு வேண்டிய முக்கியத்துவம் தரப்பட்டு இருக்கிறதா என்று பார்க்கிற நேரத்தில் இல்லை என்கிற கருத்து எங்களுக்கு ஏற்படுகிறது. காரணம், எதுவாக இருக்கும் என்றால் ஏறக்குறைய சென்ற கவர்னர் உரையின் போதே பாலாறு பகுதியில் செண்பகத் தோப்பு அணைத் திட்டம் உருவாக்கப்படும் என்று தெரிவித்தார்கள். பின்னாலே யாரோ ஒருவரின் தூண்டுதலின் பேரிலோ ஒருவரின் இடையூறின் காரணமாகவோ அந்த செண்பகத் தோப்பு அணைக்கட்டுத் திட்டம் கைவிடப்பட்டு இருக்கிறது.

நான் சொல்வது எல்லாம், எங்களுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில் நான் பல முறை சொல்லியிருக்கிறேன். மேலரசம்பட்டில் ஒரு அணை கட்ட வேண்டும் என்று. அதற்குக் காரணம், அந்தப் பகுதியில் குடிநீர்ப் பஞ்சம் இருக்கிறது. இங்கே, அதிகமாகப் பேசப்பட்டது. கிணறு வெட்ட கடன்கள் தருகிறோம், மாடுகள் வாங்க கடன் தருகிறோம் அதற்கு அதிகமாகச் செலவு செய்கிறோம் என்று சொன்னார்கள். நான் கேட்டுக் கொள்வது எல்லாம் மின்சாரத்திற்காகவும், பம்ப் செட்டுக்கள் இணைப்புகள் தருவதற்காகவும் வழங்குகிற கடன்களையெல்லாம் அதிகமாகத் தந்து இருக்கிறார்கள். அவைகளை நிறுத்தி அதற்கு மாற்றாக பல வகையில் அந்தப் பணத்தைச் செலவு செய்ய வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட முறையில் திட்டமிட்டு செலவு செய்யப்படுமானால், குறிப்பாக அணைக்கட்டுகள் கட்டுதல், ரிசர்வாயர் அமைத்தல் போன்ற திட்டங்களை நாம் சொல்லிக் கொண்டு வருகிறோம். அவற்றையெல்லாம் ஆங்காங்கு அமைத்துத் தந்தால் அந்தத் தண்ணீர் தங்குவதன் மூலம் அந்தந்தப் பகுதியில் உள்ள குடிநீர் பிரச்னை தீரும். கிணறுகளும் தண்ணீர் பெறும். விவசாயிகளுக்கு வேண்டிய தண்ணீரும் கிடைக்கும். ஆகவே, அந்த வகையில் அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். என்னுடைய பகுதியில் ஒரு அணைக்கட்டு ஏறக்குறைய 2½ கோடி ரூபாய் செலவில் கட்டினால் 15,000 ஏக்கர் நிலம் விளை நிலமாக, நஞ்சை நிலமாக மாற வாய்ப்பு இருக்கிறது. அதனால் அந்தப் பகுதியில் உள்ள குடிநீர்ப் பற்றாக்குறையும் தீரும். 30—40 சதுர மைல் விஸ்தீரணத்தில் உள்ள பல பிரச்சினைகள் அதனால் தீரும். அது போன்ற திட்டங்கள் இந்த கவர்னர் உரையில் அறிவிக்கப்படாதது குறித்து நான் மெத்த வருத்தப்படுகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





இதனுடைய அடிப்படையில்தான் விவசாயப் போராட்டத்தை அவர்கள் நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். குறிப்பாக என்னுடைய தொகுதியில் அந்த விவசாயப் போராட்டத்தில் ஒருவன் சுட்டுக் கொல்லப்பட்டான். அங்கே நடைபெற்ற விவசாயப் போராட்டத்திற்கும் அவனுக்கும் சம்பந்தம் கிடையாது. அங்கேயுள்ள பெரும் நிலச் சுவான்தார்கள் சிறிய சிறிய விவசாயிகளைத் தூண்டிவிட்டு, அந்த விவசாயப் போராட்டத்தில் ஈடுபடுத்தி, அதனால் அவர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அதன்காரணமாக எங்கள் மாவட்டத்திற்கு அந்த அவப்பெயர் வந்து இருக்கிறது. அந்த விவசாயப் போராட்டத்தில் நேரடியாக ஈடுபட்டு இருப்பவர்கள் யார் என்பதைப் பற்றி அரசாங்கம் தெளிவுபடுத்தவில்லை. அதை இந்த ஆளுநர் உரையில் தெரிவித்து இருக்கலாம். அவற்றைத் தெரிவிக்காத காரணத்தால் விவசாய மக்களுக்கு பாதுகாப்பாக இல்லை, எதிர்ப்பானதாக இருக்கிறதோ என்ற ஒரு பிரமை ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே அந்த விவசாய மக்களுக்கு ஏழை எளிய மக்களுக்கு நாங்கள் பாதுகாப்பாக இருக்கிறோம் என்பதை இந்த அரசாங்கம் தெரிவித்து இருக்கலாம். அப்படித் தெரிவித்து இருந்தால் அந்த பிரமை ஏற்பட்டு இருக்காது.

அதே நேரத்தில் நான் ஒன்றைச் சொல்கிறேன். ஏமாறாதே, ஏமாறாதே, ஏமாற்றாதே, ஏமாற்றாதே என்ற வாசகமும் நாம் தினமும் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறோம். ஆனால் ஏமாறுகிற சமுதாயமாக விவசாய சமுதாயம் இருக்கிறது. ஆனால், ஏமாற்றப்படுகின்ற சமுதாயமாக வணிக சமுதாயம் இருக்கிறது என்பதை இந்த அவையில் நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

அதாவது வணிகத் துறையோடு சம்பந்தப்பட்ட சுங்கச் சாவடிகள் இருக்கின்றன. லாரிகள் மூலம் ஏராளமான பொருட்களை சுங்கச் சாவடிகள் வழியாக கடத்திச் செல்கிறார்கள், அங்கு இருக்கக்கூடிய அதிகாரிகள் சரியாகக் கண்காணிக்காமல் வரி இல்லாமல், வரி ஏய்ப்புச் செய்து, பொருட்களை எடுத்துச் செல்ல உடந்தையாக இருக்கிறார்கள். லாரிகளில் பொருட்களை வரி ஏய்ப்புச் செய்து எடுத்துச் செல்லக்கூடியவர்கள் பெரும் வணிகர்தான். அவர்களுக்கு சுங்கச்சாவடிகளில் இருக்கின்ற ஏ.சி.டி.ஓ. போன்ற அதிகாரிகள் துணை செய்கிறார்கள்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:</u> மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வரியில் ஏய்ப்பு அதிகமாக நடக்கிறது என்று சொன்னார்கள். பல இடங்களில் இருக்கிற தணிக்கைத்துறை

அதிகாரிகள் தவறு செய்து கொண்டிருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். தமிழக அரசைப் பொறுத்த வரையில் இன்றைக்கு அரசுக்கு வருகின்ற வருவாயில் பெரும்பகுதி தணிக்கைத் துறை மூலமாகத்தான் வருகிறது என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு இருக்கிற சங்கடம் எல்லாம் எப்படி தணிக்கைத் துறையினரை ஏமாற்றுகிறார்கள் என்பதுதான்.

தணிக்கைத் துறையினரை எப்படி ஏமாற்றுகிறார்கள் என்றால், அங்கே போகிற லாரிகளில் அவர்கள் சாமான்களை ஏற்றும்போது உள்ளே ஒரு சாமான் இருக்கிறது. வெளியே அல்லது மேலே ஒரு சாமானைப்போடுகிறார்கள். கீழே எவர்சில்வரைப் போடுகிறார்கள் என்றால் மேலே பருத்தி மூட்டையைப் போடுகிறார்கள். சில இடங்களில் ஆதாரமற்ற போலி பில்களை வைத்துக் கொண்டு லாரிகள் மூலமாக சாமான்களைக் கடத்திச் செல்கிறார்கள். பஸ், லாரிகள் மூலமாக மட்டுமல்ல; சில இடங்களில் ஆம்னிபஸ்கள் மூலமாகக்கூடக் கடத்திச் செல்கிறார்கள். அது மட்டுமல்ல இரயில் மூலமாகக்கூடத் தவறு நடக்கிறது. ஆகாய விமானங்கள் மூலமாகவும் தவறு நடக்கிறது. இவைகளைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற முறையில் அரசு இந்தத் துறையிலே சீர்த்திருத்தம் செய்ய பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. எந்தெந்த இடங்கள் முக்கியமான இடங்கள், எந்தெந்த இடங்களில் எப்படிப்பட்ட அதிகாரிகள் இருக்கிறார்கள், அவர்கள் எப்படி எப்படி நடந்து கொள்கிறார்கள் என்று பார்க்கிறோம். நான் மாவட்டந்தோறும் சென்று ஆங்காங்கே இருக்கின்ற நடைமுறைகளைப் பார்த்து வருகிறேன். எந்த இடத்தில் எப்படிப்பட்ட தவறு நடக்கிறது, எந்த இடத்தில் எந்த அதிகாரி நேர்மையாக நடந்து கொள்கிறார், அல்லது எந்த இடத்தில் எந்த அதிகாரி தவறு செயகிறார். எந்த இடத்தில் எந்த அதிகாரியைப் போட்டால் திறமையாகச் சமாளிப்பார் என்பதை எல்லாம் பார்த்து, சில நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். குறைகளைத் தவிர்க்க களை எடுப்பு நடவடிக்கையை மேற்கொள்கிறோம். பேரறிஞர் அண்ணா அவர்கள் ''களை எடுக்கும்போது பயிர் கெடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்'' என்று சொல்வார்கள். அதைக் கருத்திற் கொண்டு நடவடிக்கை எடுக்கிறோம்.

திரு, சுப்பு அவர்கள் இப்போது இங்கே இல்லை. நான் பேசிக் கொண்டிருக்கும்போது அவர் இங்கே வரவேண்டுமென்று நினைக்கிறேன். திரு. சுப்பு அவர்கள் இந்த வருவாய்த் துறையில் அதிகாரிகளை மாற்றுவதில் அமைச்சர் நேரடியாக தலையிடுகிறார் என்று, ஒரு குற்றச்சாட்டை சொல்லியிருக்கிறார்கள். வருவாய்த் துறையை நம்பித்தான் இன்றைக்கு இந்த அரசு நடந்து கொண்டிருக்கிறது என்பதை அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வருவாயை ஒழுங்காகப் பெற உரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.



தணிக்கைத் துறையிலிருந்துதான் பெருமளவுக்கு வருமானம் வரும் என்பதால் எந்த எந்த இடத்தில் எப்படிப்பட்ட அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் யார், யாரோடு தொடர்பு வைத்திருக்கிறார்கள், யார் யார் நேர்மையானவர். யார், யார் தவறு செய்கிறவர் என்பதைப் பார்த்து, அதற்கேற்ற வகையில் சிலரை மாற்றும் நடவடிக்கையில் அதிகாரிகள் ஈடுபட்டிருக்கிறார்கள். அதற்கு நாங்கள் அனுமதிக்கிறோம். எந்த அதிகாரி தவறு செய்தாலும் அவர் மீது தேவையான நேரத்தில் தேவையான நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயங்காது என்பதை நான் இந்த அவையில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. சுப்பு அவர்கள் பேசும் போது விஸ்வநாதன் அவர்களை மாற்றும்போது அவர் 3 ஆண்டுகள் ஒரே இடத்தில் இருந்தார், அதனால் மாற்றினார்கள் என்றார். அவர் 3 ஆண்டுகள் அல்ல 6 மாதம்தான் அங்கே இருந்தார். அது மட்டுமல்ல, சி.டி.ஓ. அங்கே இருக்கிற டி. சி, டி. ஓ-க்கு டி. ஓ. லெட்டர் எழுதியிருக்கிறார். அவரைப் போடவேண்டும்; அவரைப் போட்டால்தான் வேலை நடக்கும் என்று டி.ஓ. லெட்டர் எழுதியிருக்கிறார். மற்றொருவர் இராஜமாணிக்கம். அவரை அங்கே போடவேண்டுமென்று சி.டி.ஓ அவர்கள் டி. சி. டி. ஓ-க்குஒரு டி. ஓ. லெட்டர் எழுதியிருக்கிறார்கள். டி. ஓ. லெட்டர் எழுதிய பிறகு என்னிடம் காட்டினார்கள். இப்போது, திரு. சுப்பு அவர்கள் பேசிய பிறகு அவர்களிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டேன். ஏன் 6 மாதத்தில் அவரை மாற்ற வேண்டுமென்று தொலைபேசியில் கேட்டேன். அவர் திறமையாக வேலை செய்கிறவர் என்று சி. டி.ஓ. கடிதம் எழுதியிருக்கிறார்கள்; அப்படிப்பட்டவர்களைத்தான் அங்கே போடவேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள்.

அதேபோல் நான் இங்கே சொல்வதற்குக் காரணம் (திரு. சுப்பு பேச எழுந்தார்) மன்னிக்கவேண்டும், நான் இப்போது ஒரு சிறு விளக்கம்கொடுத்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் பிறகு வேண்டுமானால் பேசலாம்.

அடுத்து திருச்சியிலே இப்படிப்பட்ட நல்ல திறமைசாலிகளை எல்லாம் போட்டு அங்கு வேலைகள் நடந்து வருகின்றன என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். கடந்த இரண்டு மாத காலத்தில் மட்டும் உங்களுக்குச் சொல்ல வேண்டுமானால் ஒன்றைச் சொல்கிறேன். டெம்பரரி செக் போஸ்ட் என்று ஒன்றுண்டு. செக் போஸ்ட் என்பது பெர்மனென்ட்டாக இருக்கும். பல இடங்களில் இந்த மாதிரி வேறு ரோடுகள் இருக்கின்றன. ஆகவே அவர்கள் செக் போஸ்ட் இருக்கின்ற வழியாகச் செல்லாமல் வேறு பாதை வழியாகப் போகக்கூடிய நிலை இருக்கிறது. அதைத் தவிர்ப்பதற்கு டெம்பரரி செக் போஸ்ட் போடப்பட்டிருக்கிறது. அப்படிப் போடப்பட்டு இன்றைக்கு இந்த இரண்டு மாத காலத்திலே நிறைய பிடிக்கப்பட்டிருக்கின்றன. உங்களுக்குச் சொல்ல வேண்டு

மானால் ஒரு தரம் திருச்சியிலே மட்டும் 21 பேர்களை அதிகாரிகள் பிடித்து பரிசோதனை செய்த பிறகு அவர்களிடமிருந்து வசூல் செய்தது கிட்டத்தட்ட 2 லட்ச ரூபாயாகும். கேரளத்திற்கு லாரி போகின்றது. அந்த லாரியின் பெயர் கே. எல். எல். டி....

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, அங்கத்தினர்கள் பசுகிறபோது குறுக்கிட்டு தவறாகச்சொன்னாலோ அல்லது வேறு ஏதாவது சொன்னாலோ விளக்கம் தருவதற்கு அமைச்சரவர்களுக்கு அதிகாரம் உண்டு. நண்பர் மார்க்கபந்து அவர்கள் பேசகிறபோது வருமானவரித்துறை அதிகாரிகள் பற்றிச் சொல்கின்ற நேரத்தில் விளக்கம் தருவதற்காக எழுந்த மாண்புமிகு அமைச்சரவர்கள் அவ்வாறு இல்லை என்று சொல்லி இருக்கலாம். அதை விட்டு ஒரு மானியக் கோரிக்கைக்கு பதில் அளிக்கின்ற மாதிரி அரை மணி நேரம்எடுத்துக் கொண்டு பேசுவது என்பது எப்படி சரியானதாக இருக்கும்.....

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது என்பதை நான் எடுத்துச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். அதனை இந்த அவையின் மூலமாக பொது மக்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அன்றைக்கு 55 கிலோ செப்புத் தகட்டை கொண்டு சென்ற அவர்கள் மீது 2 ஆயிரம் 3 ஆயிரம் என்ற அளவுக்கு வரி போடப்பட்டிருக்கின்றது. இப்படி யார் எதைச். செய்தாலும் நாங்கள் தகுந்த அதிகாரிகளை அந்தந்த இடங்களுக்குப் போட்டு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் திரு. சுப்பு சொல்லியது போல் மூன்று வருடங்கள் கழித்து மாற்றப்படவில்லை. 6 மாதங்கள் கழித்துத்தான் திரு. ஜெயராமன் என்பவர் மாற்றப்பட்டிருக்கிறார். 6 மாதங்களில் ஏன் மாற்றினீர்கள் என்பதற்கான டி. ஓ. லெட்டர் எல்லாம் கூட எழுதப்பட்டிருக்கிறது. திரு. சுப்பு அவர்களுக்கு தவறான தகவல் கிடைத்திருக்கிறது, திரு. ஜெயராமன் என்பவருக்கான உயர் பதவிக்குரிய அந்தக் கோப்பு கூட நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. நான் தான் கையெழுத்துப் போட்டிருக்கிறேன். அது மட்டுமல்ல. ராஜா மாரிச்சாமி என்பவர் சம்பந்தப் பட்ட பைல்கள்கூட நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

அடுத்து இன்னொன்றை நான் சொன்னால் நீங்கள் தவறாகக் கருத மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். * * * * * * * * * * * * * * * * * * ஆனால் இங்கே இவர்கள் திரு. ஜெயராமன் என்பவருக்கு நான் உதவி செய்வதாகக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆகவே அவ்வாறு இல்லை என்றும் யார் தகவல் கொடுத்தாலும்

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





சரியான வகையில் நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறோம் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே திரு. சுப்பு அவர்கள் சரியான தகவலைச் சொல்லவில்லை என்றும் அவர்கள் சரியான தகவல்களைத் தந்தால் அவற்றின் மீது நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறோம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அடுத்து திரு. கந்தசாமி என்பவர் சம்பந்தப்பட்ட......

[பிற்பகல் 12. 50]

திரு. துரை முருகன் ;

** ** *

** ** **

திரு. மு. கருணாநிதி:

** ** **

இந்த அவையில் நேற்றே நீங்கள் ஒரு தீர்ப்பைக் கூறியிருக்கிறீர்கள். ஒரு உறுப்பினர் மீது குற்றச்சாட்டு கூறுவது என்றால் அதை உங்களிடம் எழுதிக் கொடுத்த பிறகு அந்த உறுப்பினருடைய கருத்தை அறிந்து, அதற்குப் பிறகு அந்தப் பிரச்னை இங்கே எழுப்பப்படவேண்டுமென்று தாங்கள் சொல்லியிருக்கிறீர்கள். எனவே, இப்போது தங்களுடைய தீர்ப்பு அதைப் பற்றி என்ன என்று அறிந்துகொள்ள நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * * * ஆகவே அமைச்சர் அவர்கள் பேசிய போது குறிப்பிட்ட பெயர்கள், பிரச்னை சம்பந்தப்பட்டவைகள் எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, நான் அன்றைக்கு குறிப்பிட்டது, கமர்ஷியல் டிப்பார்ட்மென்ட் அதிகாரிகள் மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஒரே இடத்தில் இருக்கக் கூடாது என்று அரசாங்கம் போட்டிருக்கின்ற சுற்றறிக்கையின் அடிப்படையில் தான் ராஜமாணிக்கம் என்பவரும் விசுவநாதன் என்பவரும் மாற்றப்பட்டிருக்கிறார்கள். ஆனால் மந்திரியின் தலையீட்டினால் மீண்டும் அவர்கள் முன்னால் இருந்த இடத்திற்கே மாற்றப்பட்டிருக்கிறார்கள். அதிலும் திரும்பவும் அதே அஸ்ஸெஸ்மென்ட் பிரிவுக்கே மாற்றப் பட்டிருக்கிறார்கள். இவ்விதம் செய்திருப்பது அரசாங்கத்தின் சுற்றறிக்கைக்கு புறம்பானது என்று குறிப்பிட்டு திருச்சியிலுள்ள டெப்டி கமிஷனர் போர்டு ஆஃப் ரெவின்யூவுக்கு ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறார். அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல் டி. பி.க்கு வரச் சொன்னது, இதுபற்றி பேசப்பட்டது என்பதும் உண்மைதான். பி. ஏ. இது பற்றி தொலைபேசியில் கூப்பிட்டுச் சொன்னார்கள். முக்கி

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

யமாக அரசாங்கம் போட்டிருக்கின்ற ''கைட் லைன்' மீறப்பட்டிருக்கிறது; இதையும் மீறித்தான் டி. சி. டி. ஓ. ராஜமாணிக்கம் மாற்றப்பட்டிருக்கிறார். இவைஅனைத்தும் பைலில் எழுதப்பட்டிருக்கிறது. இதே ராஜமாணிக்கம் அமைச்சர் அவர்களுடைய உறவினர் என்பதால்தான் இது நடந்திருக்கிறது...(குறுக்கீடு) நான் ஒரு விஷயத்தை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன். இது சம்பந்தப்பட்ட அத்தனை விவரங்களும் எஸ். ஈ.95/78—12-7-78, என்ற நம்பர் உள்ள 'ஸ்ட்ரிக்லி கான்ஸ்பிடன்ஷியல்' பைலில் இருக்கிறது. இதே பைலை சட்ட மன்றத்தில் வைத்தாலே போதும், அத்தனை விவரங்களும் தெரிந்து விடும். வேண்டுமென்றால் சட்டமன்ற உறுப்பினர்களை கொண்டே ஒரு விசாரணை வைத்தால் கூட போதும். விவரங்கள் எல்லாம் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும். அது மட்டுமல்ல, ஜெயராமன் என்பவர் சம்பந்தப்பட்ட விஷயத்திலும் அமைச்சர் அவர்கள் தலையிட்டிருக்கிறார் என்பதையும் என்னால் சொல்ல முடியும்.

[பிற்பகல் 1-00]

மாண்புமிகு திரு, எஸ். டி. சோமசுந்தரம் : தவறான தகவல்களைத் தங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். நான் முதலிலேயே தவறு செய்தவர்கள்மீது கண்காணிக்க வேண்டியிருக்கிறது என்று சொன்னேன். ஆனால், நான் ஒன்று சொல்வேன். நீங்கள் எங்கெங்கே என் உறவினர்கள் இருக்கிறார்கள் என்று கண்டுபிடிப்பதிலே முயற்சி எடுத்துக் 'கொண்டிருப்பதற்கு, உங்களுக்கு என் மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்கிறேன். என்னைப் பொறுத்தவரையில் தெளிவாகச் சொல்லுகிறேன். நீங்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் இங்கே உள்ள மற்றவர்கள் ஏற்றுக் கொள்வார்கள். இந்த திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த அத்தனை பேர்களுமே என்னுடைய உறவினர்கள் சொந்தக்காரர்கள். ஆனால் அதே நேரத்தில் அவர்களை அழைத்து கூப்பிட்டு வைத்து, இதை அப்படிச் செய்யுங்கள், அதை அப்படிச் செய்யுங்கள் என்று நான் சொல்லவில்லை. நான் முதலிலேயே குறிப்பிட்டிருக்கிறேன். எந்தெந்த அதிகாரி, எப்படிப்பட்ட அதிகாரி என்று பார்த்து, நான் இந்த துறைக்கு வந்ததற்குப் பிறகு பல அதிகாரிகளை மாற்றியிருக்கிறேன். பல அதிகாரிகளை இப்படியெல்லாம் போடவேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். ஏனென்றால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிறபடி எந்தெந்த அதிகாரிகளை இந்தத் துறைக்குப் போட்டால் அதிகமான வருவாய் வருமோ, அதைக் கருத்தில் கொண்டு நேர்மையான, திறமையான அதிகாரிகளைப் போட்டிருக்கிறேன். இந்த விசுவாசம் என்பவரை ஆறு மாதங்களிலேயே மாற்றியிருக்கிறார்கள். ஏன் ஆறு மாதங்களில் மாற்றியிருக்கிறீர்கள் என்று கேட்டபோது, அப்படி டிரான்ஸ்பர் ஆகியிருக்கிறது என்று சொன்னார்கள். நல்ல அதிகாரியாக இருந்தால், அங்கேயே போடுங்கள் என்றேன். காரணம் திருச்சியை மையமாக வைத்துச் சோதனைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல, சென்னையிலேகூட பல நல்ல அதிகாரிகளை





போட்டிருக்கிறேன். அப்படித்தான் போட்டுக்கொண்டு வருகிறோம். இன்னமும் தெளிவாகச் சொல்லுகிறேன், நல்ல அதிகாரிகளை, திறமையான அதிகாரிகளைப் போட்டால், அதை எப்படி அமைச்சர் தலையீடு என்று நீங்கள் கருத முடியும் ?

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நடைபெற்ற இந்த விவாத நேரத்தையெல்லாம் கழித்து, எனக்கு நேரத்தை நீட்டித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விழைகிறேன்.

அமைச்சர் அவர்கள் சொல்லுகின்றபோது, அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். அத்துடன் அரசாங்கத்திற்கு வருவாய் வருகின்ற வழிவகைகளின்மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதன் மூலம், அரசாங்கத்தின் வருமானம் அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், ஏழை விவசாயிகளுக்குப் பாதுகாப்பும் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக கவர்னர் அவர்கள் உரையிலே பெரியார் அவர்களுடைய உருவத்தை போஸ்டல் ஸ்டாம்பாக வெளியிடயிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அது உண்மையிலேயே தமிழ்ச் சமுதாயம் வரவேற்கக்கூடிய ஒன்றாகும். அதற்கு தமிழக மக்கள் நன்றிக் கடன் பட்டவர்களாவார்கள். அதே நேரத்தில், நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்வது, தமிழகத்திலே பெரியார் அவர்கள் வகுப்புவாதப் பிரதிநிதித்துவ கோரிக்கையை அப்போது வைத்தார்கள். அந்தக் கோரிக்கையின் அடிப்படையிலே இப்போது நடைமுறைகள் அமுல்படுத்தப்பட வேண்டுமென்று நான் இந்த அரசாங்கத்தை விரும்பி, வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்றுகூட, காலரியிலிருந்து ஒருவர் ஒரு கோரிக்கையை வைத்து துண்டுப் பிரசுரம் வீசினார்கள். அவருக்கு ஒருநாள் தண்டனை கொடுக்கப்பட்டது. தேவர் சமுதாயம், வன்னிய சமுதாயம் பரவலாக இருக்கக்கூடிய இந்த சமுதாய மக்களுக்கு இந்த நாட்டிலே கிடைக்கக்கூடிய உரிமைகள், வேலை வாய்ப்புகள் பறிக்கப்படுகின்ற நிலைமை இருக்கின்றது. இந்த நிலைமையில் அவர் அப்படி நோட்டீஸ் வீசியதற்காக ஒரு நாள் சிறைத் தண்டனை தந்திருக்கிறோம். ஆனால், அதிலே உள்ளடங்கி இருக்கின்ற உணர்ச்சிகளை இந்தத் தமிழக அரசாங்கம் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று இருக்கின்ற நலிந்த சமுதாயங்கள் பின்தங்கியவர்கள் பட்டியலிலே சேர்க்க வேண்டுமென்பதற்காக, முன்னாலே இருந்த முதல்வர் அவர்கள் அன்றைக்கு அப்படிச் சேர்க்கும்போது, பொருளாதாரத்திலே மிகுந்த செல்வாக்கு படைத்த சமுதாயத்தினரையும் இந்த பின்தங்கியவர்கள் பட்டியலிலே சேர்த்த காரணத்தினாலே இப்போது அந்த பின்தங்கிய சமுதாய மக்கள் 31 சதவிகித உரிமையையும், பயனையும் பெற முடியாத, கிடைக்காத நிலைமை இந்த நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது. இப்படியெல்லாம் சேர்த்து விட்டோம் என்று பெருமை

யாக வேண்டுமானால் பேசிக் கொள்ளலாம். எம்.பி.பி.எஸ். அல்லது என்ஜினியரிங் கல்லூரியிலே அட்மிஷன் செய்ய வேண்டுமென்று சொன்னால் 95 சதவிகித மார்க்கு வாங்கிய பின்தங்கியவர்களுக்குத்தான் இடம் கிடைத்திருக்கின்றது. இந்த நிலைமையைப் பார்க்கும்போது, நகர்ப்புறத்திலே வலுவாக, விரிவாக வளர்ந்திருக்கின்ற பின்தங்கிய மக்களுக்குத்தான் இடம் கிடைத்திருக்கிறதே தவிர, தாழ்ந்திருக்கின்ற பின் தங்கிய சமுதாய மக்களுக்கு இடம் கிடைக்கவில்லை. இப்படி இணைக்கப்பட்டதன் விளைவாக, வளர்ந்த பின்தங்கிய சமுதாய மக்கள்தான் பயன் பெற்று இருக்கிறார்கள்.

கிராமப் பகுதிகளிலுள்ள பிற்பட்ட மக்களுக்கு வரிசை வாரியாகத்தான் தரவேண்டும் ; சமூக வாரியாகத் தர வேண்டும். தேவர் சமுதாய மக்களின் எண்ணிக்கையைக் கணக்கில் வைத்துக் கொண்டு, வன்னிய சமுதாய மக்களின் எண்ணிக்கையைக் கணக்கில் வைத்துக் கொண்டு அந்த சமுதாய மக்களில் எவ்வளவு பேருக்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப் புறங்களில் கல்லூரிகளை ஏற்படுத்துகிறார்கள். அங்கு படிப்பவர்கள் யார் ? அந்தப் பகுதியில் வாழ்கிற யாதவர்கள், மீனவர்கள், வன்னியர்கள், தேவர்கள் போன்ற பின்தங்கிய சமூகத்தைச் சேர்ந்த ஏழை எளியவர்கள், புழுக்களாய், பூச்சிகளாய் நெளிந்து கொண்டிருக்கும் மக்கள் 95 சதவிகித மதிப்பெண்கள் பெற்று அவர்களுக்கு இடம் கிடைக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறதா என்று இப்போது நடைபெற்ற அட்மிஷன்களை நீங்கள் எடுத்துப் பார்க்க வேண்டும். அதன் காரணமாக, ஒட்டு மொத்தமாக 9 சதவிகிதம் ஒதுக்கிவிடுவதால் எந்த குறிப்பிட்ட மக்களுக்கு இடம் கிடைக்க வேண்டுமென்று கருதுகிறோமோ அந்த் மக்களுக்குக் கிடைக்காத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. 1972 ஆம் ஆண்டில் மிகப் பிற்பட்டோர் பட்டியலை அங்கீகரிக்க வேண்டுமென்று முன்னால் இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது கேட்டுக் கொள்ளப் பெற்றது. 39 சமுதாயத்தைச் சேர்ந்த மக்களை மிகப் பின் தங்கியோர் என்ற பட்டியலில் சேர்த்து மிகத் தாழ்வான நிலையில் சமூகத்தில் இருப்பவர்களை அங்கீகரிக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. துரைமுருகன்: ஆன் எ பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன். மதிப்பிற்குரிய அங்கத்தினர் மார்க்கபந்து அவர்கள் தற்போது நடந்த எம். பி. பி. எஸ்., எஞ்சினியரிங் கல்லூரிக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் போது பிற்பட்ட சமுதாயத்தினருக்கு அதிக வாய்ப்புகள் அளிக்கப்படவில்லை என்று கூறுகிறார்கள். ஆகவே, அவ்வாறு வாய்ப்புகள் அளிக்கப்படாமல் இருப்பதை எதிர்த்து அவர்களுடைய இயக்கம் போர்க்குரல் எழுப்பச் சித்தமாக இருக்கிறதா?





திரு. ரா. மார்க்கபந்து: கோரிக்கை போராகக் கூட மாற வாய்ப்புகள் ஏற்படக்கூடும். எந்த ஒரு மக்களுக்குக் கிடைக்க வேண்டுமென்று கருதுகிறோமோ அந்த மக்களுக்குக் கிடைக்கவில்லை என்று சொன்னால் -- in proportion to the population -- என்னுடைய உணர்வுகளை வெளிக்காட்டிக் கொள்வதில் தவறு இருக்க முடியாது. மற்றும் அந்த மக்களுக்கு குறிப்பாக குறைந்த பட்சம் 15 சதவிகிதமாவது ஒதுக்கி வைக்கவேண்டும். மிகப் பிற்பட்டோர் பட்டியலை ஏற்கனவே சட்டநாதன் குழுவில் தந்திருக்கிறார்கள். அதைஅங்கீகரித்து அவர்களுக்காக 15 விழுக்காடு ஒதுக்கி வைப்பதன் மூலம் தாழ்ந்த சமுதாய மக்களுக்கு ஒரு வாய்ப்புக் கிடைக்கும், வழி ஏற்படக்கூடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, குடியாத்தம் பகுதியில் ஒரு போராட்டம். போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அங்கு ஒரு போராட்டக் குழுவை அமைத்து டவுன் பஸ் விடவேண்டுமென்று போராட்டத்தை நடத்தினார்கள். அதற்கு தலைமை தாங்கியவர்களை அடித்து நொறுக்கியிருக்கிறார்கள்.

யார் என்று சொன்னால் 80 பஸ்களுக்குச் சொந்தக்காரர்களாக இருக்கிறவர்கள், அந்தப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கியவர்களை அடித்து காலை ஒடித்திருக்கிறார்கள். அதைக் கண்டித்து சர்வ கட்சி சார்பாகக் கண்டனக் கூட்டம் நடைபெற்றது. பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பவர்கள் பொதுவான பிரச்னையை எடுத்துச் சொன்னார்கள் என்பதற்காக அடித்திருக்கிறார்கள் என்றால்,போலீஸ் நிர்வாகம் உடனடியாகஅந்தக் குற்றவாளிகளைக் கண்டுபிடித்திருக்க வேண்டும். ஆனால் 15 நாள் ஆகி இன்று வரை கண்டுபிடிக்கப்படவில்லை என்று சொன்னால்,பணக்காரர்கள் ஆதிக்கம் நாட்டில் எந்த அளவுக்கு இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். 80 பஸ்களுக்குச் சொந்தக்காரர்கள் - பஸ் ஒன்றுக்கு ஒரு நாளைக்கு 500 ரூபாய் வரும்; மொத்தம் ஒரு நாளைக்கு 40,000 ரூபாய் வருமானம். ஆனால் அதே நேரத்தில் சாதாரண மக்கள் ஒரு பஸ் ரூட் வேண்டுமென்று கேட்கும்போது இல்லையென்று மறுக்கப்படுகிறது. குறிப்பாக ஜவ்வாது மலைக்கு பஸ் ரூட் விட வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டது ....

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் பகுதியில் நகரப் பேருந்து விடவேண்டுமென்ற கோரிக்கை சில ஆண்டுகளாக இருந்து வந்த கோரிக்கை. மக்களின் விருப்பத்திற்கேற்ப அதை நிறைவேற்றும் வகையில் வருகிற 10ஆம் தேதி முதற்கொண்டு தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் நகரப் பேருந்துகள் விடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து: அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அடிக்கப்பட்டு கால் உடைக்கப்பட்டிருக்கிறார்கள். 15 நாட்கள் ஆகியும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று சொன்னால் அங்கே யாருடைய ஆதிக்கம் செலுத்தப்படுகிறது? 80 பஸ்களுக்கு அதிபராக இருக்கக்கூடியவர்கள் நடவடிக்கை எடுக்க முடியாத அளவுக்கு நிலைமைகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இதை அனுமதித்துத்தான் ஆக வேண்டுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1.10]

இங்கே விழுப்புரம் சம்பவத்தைப்பற்றிக் தந்திருக்கிறார்கள். நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அங்கே போய்ப் பார்வையிட்ட அனைத்து அரசியல் கட்சிகளும் அதை வகுப்புக கலவரமாகக் கருதவில்லை, அங்கே இருக்கின்ற சில சமூக விரோத சக்திகள் சுயநலத்திற்காக அங்கே இருக்கின்ற சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு தமிழகத்திலே சாபக்கேடான நிலையை ஏற்படுத்தி விட்டார்கள். அங்கே தனிப்பட்ட ஜாதிப் பிரச்சினை எதுவும் இல்லை, தனிப்பட்ட சமூக விரோத சக்திகள் தான் அந்தப் பிரச்சினையைக் கிளப்பிவிட்டிருக்கிறார்கள். கிளப்பிவிட்டு ஏதோ பூதாகாரமான பிரச்சினையிருப்பதாக நாட்டுமக்கள் எண்ணக்கூடிய அளவிற்கு பிரச்சினையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். மாங்காடு, இராணிப்பேட்டை, விழுப்புரம், பேரணம்பட்டு போன்ற இடங்களிலே நடந்த கலவரங்களுக்கு சொல்லப்படுகிற காரணங்களை நம்பவேண்டாம். அவைகளை உன்னிப்பாகக் கவனித்துப் பரிசீலிக்க வேண்டும், அதற்குக் காரணம் யார்? அதை முடுக்கி விடக்கூடியவர்கள் யார்? எந்தச் சக்திகள் அவைகளைச் செய்து கொண்டிருக்கின்றன என்பதைக் கண்டுபிடித்து கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பாலிடெக்னிக்குகள், ஐ. டி. ஐ. வகுப்புகள் இருக்கின்றன, நான் தயவுசெய்து அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன், ஐ. டி. ஐ.யிலே சாதாரணமாக எஸ். எஸ். எல். சி. படித்தவர்கள் 9 ஆம் வகுப்புப் படித்தவர்கள் ஆகியவர்களுக்கு இடம் கிடைக்கவேண்டும், ஆனால் எஸ். எஸ் எல். சி. யிலே 450 மார்க் வாங்கியவருக்கு இடம் கிடைக்கவில்லை. 450 மார்க்குகள் வாங்கிய மாணவர் அங்கே போகிறார், அவருக்கு ஆப்டிட்யூட் டெஸ்ட் வைக்கிறார்கள், அதிலே அவர் ஜீரோ மார்க் வாங்குகிறார். அவருக்கு இடம் கிடைக்கவில்லை. வேலூரில் உள்ள பாலிடெக்னிக்கில் இன்றைக்குஅட்மிஷன் கொடுக்கப்பட்டிருக்கிறவர்கள் யார் என்று பார்த்தால் எந்தச் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் அதிகமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். திறமை, தகுதி அடிப்படையிலே எடுத்துக்கொள்வது





நல்லது தான், அரசாங்கம் தூய்மையாக நடப்பதற்கும், லஞ்சம், ஊழல் இல்லாத நிர்வாகத்திற்கும் அது நல்லதாக இருக்கும். ஆனால் எந்த சமூகத்திற்கு இடம் கொடுக்கவேண்டுமென்று நினைக்கிறார்களோ அந்த மாதிரி கிடைப்பதில்லை. முன்னேறிய சமுதாயத்தினருக்கு அதிகமாகக் கிடைக்கிறது. 30 ஆண்டுகளுக்கு மேலாக முன்னேற முடியாத நிலைமையில் உள்ளவர்களுக்கு இடம் கிடைக்காத நிலைமை ஏற்பட்டால், அதற்கு அரசாங்கம் இடம் கொடுக்கக் கூடாது, மார்க் விகிதத்திலே பின்தங்கியவர்களுக்கு மாடரேஷன் கொடுக்க வேண்டும். பின்தங்கியவர்களுக்கு நியாயமான இடம் கிடைக்கச் செய்ய வேண்டும், There should be uplift for these people also. என்ற முறையிலே செயலாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து லேன்ட் அக்குவிசேஷன் ஆக்டின் மூலமாக நிலங்களை எடுக்கிறார்கள், அவைகளை எடுத்து தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கும் பின்தங்கிய மக்களுக்கும் இடம் தருகிறார்கள். இப்போது உள்ள சட்டத்திலே கோர்ட்டிற்குப் போவதற்கு இடம் இருக்கிறது. அதன் காரணமாக காம்பன்சேஷனை உயர்த்தித் தருகிறார்கள், யாருக்கு மனைகளைக் கொடுக்க வேண்டுமென்று நிலத்தை எடுக்கிறார்களோ, அந்த நிலத்திற்கு அதிகமான கிரையம் போடப்படுகிறது, இதனால் அந்த இடத்தை விலைக்கு வாங்கமுடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே இந்த அளவிற்குத்தான் எடுத்துக் கொள்ளவேண்டும், அதற்கு மேலே கோர்ட்டிற்குச் சென்றாலும் கூட வழக்கு செல்லுபடியாகாது என்று ரெட்ராஸ்பெக்டிவ் எபக்டிலே ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தால் நல்லது சாதாரணமாக 1 ஏக்கர், அரை ஏக்கர் நிலத்தை வைத்துக்கொண்டிருக்கின்றவர்களின் நிலங்கள் தான்முதலிலேபறிமுதல் செய்யப்படுகிறது.

நஞ்சை நிலமாக இருந்தால் அந்த நிலம் பறிமுதல் செய்யப்படுகிறது. ஆகையால் சிறு விவசாயிகள், ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர்களுக்குச் சொந்தக்காரர்கள், செல்வாக்கு இல்லாத வாயில்லாப் பூச்சிகளாக இருக்கின்ற காரணத்தினால் அவர்கள் நில ஆர்ஜிதச் சட்டத்தினால் பாதிக்கப்படுகிறார்கள் இங்கே வருவாய்த்துறை அமைச்சரவர்கள் இருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, வருவாய்த்துறை மூலமாக எல்லா மாவட்டத் தலைவர்களுக்கும் தெரிவித்திருப்பதெல்லாம், ஒரு ஏக்கர், அரை ஏக்கர் இருப்பவர்களிடம் ஆர்ஜிதம் செய்வதில் யோசித்துச் செய்ய வேண்டும், அதிகமாக யாரிடத்தில் இருக்கிறது என்று பார்த்துத்தான் எடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி ஆணை அனுப்பப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து: தலைவரவர்களே, அமைச்சரவர்களுடைய பதிலுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது)

கடைசியாக ஒன்றை மட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மதுவிலக்குப் பிரச்னையில் இந்த அரசாங்கம் மிகவும் தீவிரமாக ஈடுபாடு கொண்டிருக்கிறது. ஆனால் அரசாங்கம் காட்டுகின்ற தீவிரத்திற்கு இங்கே இருக்கின்ற போலீஸ் நிர்வாகம் ஈடுகொடுக்க முடியாமலிருக்கிறது. சாதாரண போலீஸ்காரருக்கு ஐ. ஏ. எஸ். பதவி கொடுத்தால்கூடப் போக மாட்டேன் என்று சொல்லும் அளவிற்கு வருமானம் மிஞ்சிய நிலை போலீஸ் டிபார்ட்மெண்டில் இருக்கிறது. அந்தந்தப் பகுதியில் கள்ளச் சாராயத்திற்கு வழி வகுக்கும் வகையிலே 'They are like monarchs is such places' என்று கூறக்கூடிய நிலைமையிருக்கிறது. ஆகையினாலே, அந்த போலீஸ் டிபார்ட்மெண்டின் கடுமையான கண்காணிப்பு இல்லாத வரையிலும் நாம் எத்தனைவிதமான சட்டங்களைப் போட்டாலும், எவ்வளவு 'ரிகரஸ் புரொவிஷன்'களை சட்டத்தில் ஏற்படுத்தினாலும் சமுதாயத்திற்குப் பாதுகாப்பு இல்லை, நீங்கள் போடும் சட்டங்களைக் குப்பையிலே போடும் நிலைமை போலீஸ் நிர்வாகத்தாலே இருந்து கொண்டிருக்கிறது. ஆகையினாலே, மதுவிலக்குச் சட்டத்தில் தீவிரமாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோர்ட்டுக்குச் செல்கிறார்கள், வழக்குகளிலே தீர்ப்புகளை வாங்குகிறார்கள். கோர்ட்டுக்குப் போகின்றவர்கள் யார்? வலிவு இல்லாதவர்கள், அடிதடிக்குப் போக விரும்பாதவர்கள் ஆகியவர்கள் வழக்கு மன்றங்களுக்குப் போகிறார்கள். கோர்ட்டிலே தீர்ப்பும் வாங்குகிறார்கள். அப்படித் தீர்ப்பை வாங்கியவர்கள், தங்களுடைய நிலத்தில் நுழைய முடியவில்லை, நுழைந்தால் அடிக்கிறார்கள், உதைக்கிறார்கள். கோர்ட்டில் தீர்ப்பு வாங்கியிருக்கிறேன், எனக்கு பாதுகாப்பு தா என்று போலீஸ் நிர்வாகத்திடம் சொல்லும் பொழுதும் அவர்கள் இது சிவில் வழக்கு நாங்கள் தலையிட முடியாது என்று சொல்கிறார்கள். அப்படியென்றால் கோர்ட்டின் தீர்ப்புக்கு மதிப்பு இருக்காது, தீர்ப்புகளுக்காகக் கோர்ட்டுகளுக்குச் செல்ல வேண்டியதில்லை. தடி எடுத்தவனெல்லாம் தண்டல்காரன் என்று ஆகிவிடும். அத்தகைய நிலைமைகளை உருவாக்கக்கூடாது. ஆகவே, சிவில் வழக்குகளிலே எந்தவொரு தீர்ப்பு வந்தாலும் அதை அமல்படுத்தும் முறையிலே அந்தக் கோர்ட் தீர்ப்புகளுக்குப் போலீசின் உதவி இருந்தாக வேண்டும், அந்த முறையில் செயலாற்ற வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புத் தந்தவர்களுக்கு நன்றிகூறி முடிக்கிறேன்.

திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையில், எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும், கிராமங்கள் வளர்ச்சி அடைய வேண்டுமென்று இருக்கிறது. ஆனால் உரையிலே மட்டும் தான் இருக்கிறதே தவிர, செயல் வடிவிலே அது இல்லை என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இலஞ்ச ஊழலற்ற மாநிலமாக உருவக்க அரசு மேற்கொண்டு நடவடிக்





கைகளை எடுக்கும் என்று அந்த உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் என்னுடைய பகுதியிலே, ஆங்காங்கே இருக்கும் தொகுதி அமைப்பாளர்கள் அல்லது ஆளுங்கட்சியைச் சார்ந்த முக்கியஸ்தர்கள் எல்லாம் ஊராட்சி ஒன்றியம், நெடுஞ்சாலை, கிராமப் பணித்துறை, பொதுப்பணித்துறை ஆகிய துறைகளுக்குச் சென்று ஆங்காங்கே தரப்படும் வேலைகளை டெண்டர் ஒப்பந்தம் இல்லாமல் நாமினேஷன் மூலம் பெற்று அவைகளெல்லாம் சப்-காண்ட்ராக்டுக்கு விடப்பட்டு, அந்தந்த வேலைகளும் பாதியிலே நிறுத்தப்பட்டிருக்கின்றன. அதோடு, சாத்தனூர் அணையிலே ஆளுங்கட்சியினரால் மாணவர்களுக்குக் கருத்தரங்குகள் நான்கு நாட்கள் நடத்தப்பட்டன.

[பிற்பகல் 1.20]

இந்தக் கருத்தரங்கு நடைபெறும் நேரத்தில் பணிபுரியும் பொதுப்பணித் துறை இலாகாவைச் சேர்ந்த லாரிகள், ஜீப்புகள், அந்தத் துறையிலே பணியாற்றும் அதிகாரிகள் எல்லோரும் இந்தக் கருத்தரங்குக்கு ஆட்களாக்கப்பட்டு, அதிகாரத்திற்குட்படுத்தப்பட்டு, அங்கே கருத்தரங்குகள் நடைபெற்றுள்ளன. அது ஊழல் இல்லையா?

அடுத்து, என்னுடைய தொகுதியிலே ஆகஸ்ட் மாதத்திலே கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தண்டராம்பட்டு-தானிப்பாடி பகுதிகளில் ஏற்பாடு செய்யப்பட்ட சிறப்புக் கூட்டங்களில் உரையாற்றினார்கள். அப்பொழுது தானிப்பாடி கிராமத்திலே உள்ள ஆண்களும் பெண்களும் எங்கள் கழகத் தலைவர் கலைஞர் அவர்களிடத்திலே, அங்கிருக்கும் குடிநீர் பற்றாக்குறையை நேரிலே எடுத்துக் கூறி, நீங்களாவது இந்தப் பிரச்னையைத் தீர்க்க வேண்டும், சட்டமன்றத்தில் எடுத்துக் கூறவேண்டுமென்று கூறினார்கள். அவ்வளவு பெரிய பிரச்னையாக இருக்கிறது. அங்கு குடிநீர் பற்றாக்குறை இருந்து கொண்டிருக்கிறது. அதிலும் முக்கியமாக தானிப்பாடி கிராமத்திலே தண்ணீர் இல்லாமல் இருப்பதால் கிட்டத்தட்ட 10,000 ஜனத்தொகை கொண்ட கிராமங்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கிராமங்களிலுள்ள ஒரு கிணற்றில் தண்ணீர் எடுப்பதற்காக, ஏறி, இறங்கிய 2பேர் விழுந்து கால், கைகளை உடைத்துக் கொண்டனர். அப்படிப்பட்ட சூழ்நிலையிலே என்னுடைய தொகுதியிலே கிராமங்களிருக்கின்றன. நானும் நேரிலே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இருந்தாலும், அதைப்பற்றி எந்த அக்கறையையும் இந்த அரசாங்கம் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. குடிநீர் பற்றாக்குறை ஒருபக்கம் இருக்கின்ற சூழ்நிலையில் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

இந்த அரசு ஆட்சிக்கு வருவதற்கு முன்னர், தேர்தல் நேரத்திலே, டயர்களுக்குப் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் அளிக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால், இந்த ஆளுநர் உரையில்

அதைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. தற்பொழுது என்னுடைய பகுதியில் தகுந்த அதிகாரிகளை அனுப்பி பார்வையிட்டு விவசாயிகளுக்குப் பயிர் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்கிறேன்.

மக்களின் கண்ணொளி பழுதுபடாமல் பாதுகாக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. வடஆற்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலையிலே, கலைஞர் அவர்கள் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்ட கண்ணொளி வழங்கு திட்டத்தின்கீழ் 6 மாதங்களுக்கு முன்பு நடந்த கண்ணொளி வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களுக்கு கண்ணாடிகள் இன்னும் வழங்கப்படவில்லை. ஆப்பரேஷன் செய்த போது கட்டிய துணியுடனேயே கண்ணை மூடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதிலும், இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருப்பதை முக்கிய கருத்தாகக் கொண்டு, கண்ணொளி கண்ணாடி வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறு விவசாயிகளுக்கு மின் கட்டணம் குறைத்திருப்பதாக செய்தித்தாளிலே வந்திருக்கிறது, எல்லோரும் படித்திருக்கிறார்கள். ஆனால் இன்று வரையில் சிறு விவசாயிகளுக்கு மின் கட்டணம் குறைக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. 1977-78-ல் 30,000 பம்ப் செட்டுகளுக்கு மின்இணைப்பு கொடுப்பதாகக் கூறுகிறார்கள். 1978 79-ல் 35,000 பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால், எந்தக் கிராமும் மின்இணைப்பு பெற்றதாகத் தெரியவில்லை. தற்பொழுது வரிசைப்படியாக மின் இணைப்பு கொடுப்பதாகவும் ஆளுநர் உரையிலே கூறி இருக்கிறார்கள். ஏற்கனவே நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டவர்களுக்கே மின் இணைப்பு தரப்படவில்லை. இந்த ஆளுநர் உரையிலே வரிசைக்கிரமமாக தரப்படும் என்று கூறியிருக்கிறார்கள். ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்களுக்கு வரிசைக்கிரமமாகவா என்று கேட்கிறேன்.

சாத்தனூர் அணைப்பகுதியில் தண்ணீர் பாயும் நிலங்களுக்கு அபிவிருத்தி வரி பாக்கி உள்ளவர்களுக்குத் தற்பொழுது வட்டி வசூலிக்கிறார்கள் ஏற்கனவே, எங்களுடைய டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்திலே அப்படி வரி பாக்கி இருந்தாலும், வரிக்கான வட்டி வசூலிப்பதில்லை. தற்பொழுது வட்டி வசூலிக்கிறார்கள். அந்த வசூலைத் தள்ளுபடி செய்து கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய பகுதியிலே மோத்தக்கல், மேட்டூர், தாழை ஓடை ஆகிய கிராமங்களுக்கு மின்சாரம் வேண்டுமென்று அக்ரிமென்ட் செய்து 3 ஆண்டுகள் ஆகியும் இன்றுவரை எந்த விதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. அப்பகுதிகளுக்கு உடனடியாக மின் இணைப்புக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





உள்ளாட்சி நிறுவனங்களுக்கு தேர்தல் நடத்த வாக்காளர் பட்டியல் இதோடு இரண்டுமுறை திருத்தப்பட்டிருக்கிறது. தேர்தல் நடப்பதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே வாக்குச்சீட்டு தயாரித்து, அதைப் பாதுகாப்பாக வைப்பதற்கு, காவல்துறை அதிகாரிகள் நியமிக்கப்படுவதை, நான் இதுவரை பார்த்ததில்லை. நம்முடைய புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலே, 2 ஆண்டுக் காலத்திற்கு முன்பு வாக்குச்சீட்டுகள் கொண்டு வந்து வைக்கப்பட்டு, அதைப் பாதுகாக்க பாதுகாவலர்கள் போடப்பட்டிருக்கிறார்கள். அந்த வாக்குச்சீட்டுகள் மழையிலே நனைந்திருக்கின்றன என்று பல புகார்கள் கூறப்பட்டிருக்கின்றன. இப்படி தவறாக நடந்து கொண்டிருக்கிற அரசு மற்ற அரசுகளைக் குறை கூறுவது நியாயமல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சாத்தனூர் அணைக்கட்டில் மழைகாலங்களில் மேல் தண்ணீர் நிறைந்து, ஒவ்வொரு ஆண்டும் அதனுடை கொள்ளவுக்கு மேல் தண்ணீர் வெளியேசெல்லுகிறது. அதற்கு வலதுபுறத்திலே மேல்மட்டக் கால்வாய் ஒன்று அமைப்பது குறித்து தி.மு.க ஆட்சியிலே ஆய்வு செய்யப்பட்டு, அதுவும் பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சென்ற கூட்டத் தொடரின்போது கேள்வி நேரத்தில் சொன்னார்கள். அந்த மேல்மட்டக் கால்வாய் கட்டி முடிக்கப்பட்டால் வறட்சியால் வாடும் பல கிராமங்களுக்குத் தண்ணீர் கிடைக்கும். அதைத் தற்போதைய அரசாங்கம் உலக வங்கியிடம் இருந்து நிதி உதவி பெற்று வேலை துவக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக் கொள்கிறேன்.

அடுத்து விவசாயிகளுக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கூட்டுறவு முறையிலே வழங்கப்படும் உரம், மூட்டை ஒன்றுக்கு ரூ. 86 தருகிறார்கள். ஆனால் வெளியே விற்கப்படும் தனியார் கடைகளில் அதே மெட்ராஸ் பெர்டிலைசர்ஸ் ரூ.75, ரூ 76-க்கு கிடைக்கிறது. ஆகவே வெளியே தனியார் கடைகளில் விற்கும் விலையை விட அரசாங்கம் விற்கும் விலை குறைவாக இருந்தால் தான் விவசாயிகள் வாங்கி பயனடைய முடியும் என்பதை இந்த சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி வட-ஆற்காடு மாவட்டத்திலே மிகவும் பின் தங்கியதாக இருப்பதால் நெல், மணிலா, கரும்பு போன்றவைகள்தான் சாகுபடி செய்கிறார்கள். அதற்குக் கூடுதல் விலை நிர்ணயம் செய்தால்தான் விவசாயிகள் வளர்ச்சி அடைய முடியும். விவசாயிகள் தங்களுடைய நெல் விலையைக் குறைத்து வாங்கும் மூலப்பொருட்கள் விலை அதிகமாக இருப்பதால் அவர்கள் பெருத்த நஷ்டம் அடைகிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் எல்லோருக்கும் விலையைக் கூட்டிக் கொடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்,

அடுத்து என்னுடைய பகுதியிலே மதுவிலக்கை ஒழிக்கும் திட்டம் என்ற பெயரிலே மிகவும் தீவிரமாகக் கூறிக் கொண்டிருக்கிறார்கள். அது செய்தியிலே தான் இருக்கிறது. நடைமுறையிலே இல்லே. ஆங்காங்குள்ள காவல்துறையில் இருப்பவர்கள் எல்லாரும் கடைகளை ஏலம் விட்டு வாரம், மாதம் இவ்வளவு என்று லஞ்சம் வாங்கி இந்தத் தொழிலை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த இடத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டுமென்று கூறிக் கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.28 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.



## 12. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

86. சேலம் மாவட்டத்திலுள்ள பெரியகல்ராயன் மேலநாடு -பெரியகல்ராயன் கீழநாடு இனும் எஸ்டேட்டுகள் நிலவரி ஏற்பாடு செய்வது குறித்த, வணிகவரிகள்-அறக்கட்டளைகள் துறையின் 21-6-1978 ஆம் தேதியிடபெற்ற, 806ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1963ஆம் ஆண்டு, தமிழ்நாடு இனும் எஸ்டேட்டுகள் (நீக்குதல், ரயத்து வாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/1963) 73 (5) பிரிவின்கீழ் பேரவையின் முன் வைக்கப்பெற்றது.]

87. தமிழ்நாடு, 1970ஆம் ஆண்டு கூட்டுறவு நிலவள வங்கிகள் (பல்வகை விதித்துறைகள்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்த, கூட்டுறவுத்துறையின் 1-7-1978ஆம் தேதியிடப்பெற்ற 397ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1934ஆம் ஆண்டு கூட்டுறவு நில வளவங்கிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1934) 38-ஏ 2பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

* 22. தமிழ்நாடு: 1978 ஆம் ஆண்டு, தனியார் காடுகள் பாது காப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1978).

*23 தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, நாடக நிகழ்ச்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/1978).

* 24 தமிழ்நாடு, 1978ஆம் ஆண்டு, வேளாண்மை விளை பொருள் விற்பனை (திருத்தம், தனி விதித்துறைகள்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்டமுன்வடிவு எண் 27/ 1978).

*25. 1978ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (மூன்றாவது திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/1978).

*26. 1978 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/1978).

27. உடுக்குறியிடாத வினா பட்டியல் (201 முதல்300 வரை).

இணைப்பு 1.

1978 செப்டம்பர் 8]

[1-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 81-க்கான விடையைக் காண்க.]

(அ) தமிழ்நாடு மின் வாரியத்திற்கு வரவேண்டியிருந்த நிலுவைத் தொகைகள்.

| | | | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|---|---|
| 31—3—1976-ல் | .. | .. | 1,042.17 |
| 31—3—1977-ல் | .. | .. | 1,864.44 |
| 30—6—1977-ல் | .. | .. | 2,002.29 |

(ஆ) 30—6—1977-ந் தேதியில் ரூ. 10,000 மேல் கட்டண பாக்கி செலுத்த வேண்டிய நிறுவனங்கள் பின் வருமாறு:—

| வரிசை எண். | நிறுவனத்தின் பெயர். | தொகை. (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | சி.எஸ். அன்ட் டபிள்யூ மில்ஸ், கோயம்புத்தூர் | 5.80 |
| 2 | கம்போடியா மில்ஸ், கோயம்புத்தூர் .. | 5.45 |
| 3 | சோமசுந்தரம் மில்ஸ், கோயம்புத்தூர் .. | 4.57 |
| 4 | காலீஸ்வரர்மில்ஸ், கோயம்புத்தூர் .. .. | 5.10 |
| 5 | ரங்காவிலாஸ் மில்ஸ், கோயம்புத்தூர் .. | 1.28 |
| 6 | பங்கஜா மில்ஸ், கோயம்புத்தூர் .. .. | 4.83 |
| 7 | சாரதா மில்ஸ், கோயம்புத்தூர் .. .. | 8.18 |
| 8 | கோயம்புத்தூர் முருகன் மில்ஸ், கோயம்புத்தூர். | 2.57 |
| 9 | பயனீர்ஸ்பின்னர் மில்ஸ் .. .. .. | 6.83 |
| 10 | ஓம் பராசக்தி மில்ஸ் .. .. .. | 0.71 |
| 11 | கிருஷ்ணவேணி டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ், கோயம்புத்தூர். | 0.87 |
| 12 | காலீஸ்வரர் மில்ஸ், காளயார்கோயில் .. .. | 0.70 |
| 13 | லோடஸ் மில்ஸ், கோயம்புத்தூர் .. .. | 2.00 |
| 14 | பிரகாஷ் மில்ஸ், கோயம்புத்தூர் .. .. | 3.32 |

| வரிசை எண். | நிறுவனத்தின் பெயர். | | தொகை. (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|---|---|
| (1) | (2) | | (3) |
| 15 | சாத்தப்பா டெக்ஸ்டெயில்ஸ், கோயம்புத்தூர் | .. | 1.25 |
| 16 | ஸ்ரீ பழமலை ரங்கநாதர் மில்ஸ், கோயம்புத்தூர். | | 1.42 |
| 17 | ராதிகா மில்ஸ், கோயம்புத்தூர் | .. .. | 1.28 |
| 18 | சீதை மில்ஸ் | .. .. .. .. | 0.14 |
| 19 | ஆர்.சி.சி.சிலாஸ், தேனி | .. .. .. | 0.71 |
| 20 | பத்மா மில்ஸ் | .. .. .. | 0.46 |
| 21 | தமிழ் நாடு ஸ்பின்னிங் மில்ஸ் | .. .. | 0.26 |
| 22 | ராஜரத்தின இன்டஸ்டிரீஸ், உடுமலைப்பேட்டை | .. | 0.30 |
| 23 | வாசுதேவ இன்டஸ்டிரீஸ் | .. .. | 0.29 |
| 24 | ராஜா மில்ஸ் | .. .. .. | 0.92 |
| 25 | ஜனர்தன மில்ஸ், கோயம்புத்தூர் | .. | |
| 26 | பவானி மில்ஸ், கோயம்புத்தூர் | .. | 3.08 |
| 27 | மது ஸ்பின்னிங் மில்ஸ், கோயம்புத்தூர் | .. | 1.25 |
| 28 | மீனாட்சி மில்ஸ், சமயநல்லூர் | .. | 5.53 |
| 29 | காவேரி ஸ்பின்னிங் மில்ஸ், திருச்சி | .. | 4.69 |
| 30 | மீனாட்சி ஸ்பின்னிங் மில்ஸ் | .. .. | 8.70 |
| 31 | ரவீந்திரா மில்ஸ் | .. .. .. | 0.25 |
| 32 | பின்னி அண்ட் கம்பெனி. சென்னை .. | .. | 21.34 |
| 33 | நாடியம்மாள் டெக்ஸ்டைல்ஸ், அளியமலை | .. | 3.14 |
| 34 | மகாலட்சுமி டெக்ஸ்டைல்ஸ், மதுரை | .. | 3.32 |
| 35 | மீனாட்சி மில்ஸ், மணப்பாறை, திருநெல்வேலி | | 3.32 |
| 36 | லோயல் டெக்ஸ்டைல்ஸ், கோவில்பட்டி, திருநெல்வேலி./ | | 0.88 |
| 37 | நாகம்மாள் டெக்ஸ்டைல்ஸ், நாகர்கோவில் | .. | 1.16 |
| 38 | சக்தி டெக்ஸ்டைல்ஸ், பொள்ளாச்சி | .. | 2.39 |
| 39 | வி.ஆர்.டெக்ஸ்டைல்ஸ், புளியம்பட்டி, ஈரோடு | | 1.17 |
| 40 | சரோஜா மில்ஸ், கோயம்புத்தூர் | .. .. | 0.76 |
| 41 | ராதாகிருஷ்ண மில்ஸ், கோயம்புத்தூர் | .. | 3.40 |
| 42 | ஞானம்பிகா மில்ஸ், கோயம்புத்தூர் | .. | 4.29 |
| 43 | கோயம்புத்தூர் மகலா மில்ஸ், கோயம்புத்தூர். | .. | 3.71 |



| வரிசை எண். | நிறுவனத்தின் பெயர். | | தொகை. (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|---|---|
| (1) | (2) | | (3) |
| 44 | விஜயலட்சுமி மில்ஸ், கோயம்புத்தூர் | .. | 3.14 |
| 45 | ஜெயலட்சுமி மில்ஸ், கோயம்புத்தூர் | .. | 3.38 |
| 46 | காட்ரி மில்ஸ், கோயம்புத்தூர் | .. .. | 4.34 |
| 47 | அம்பாள் காட்டன் பிரஸ், கோயம்புத்தூர் | .. | 1.29* |
| 48 | ஜோதி மில்ஸ், கோயம்புத்தூர் | .. .. | 3.48 |
| 49 | நரசிம்மா ‘பி’ மில்ஸ். கோயம்புத்தூர் | .. | 1.70 |
| 50 | எஸ்.ஆர்.சி.மில்ஸ், திருப்பூர் | .. | 3.56 |
| 51 | அழகப்பா காட்டன் மில்ஸ், ராஜபாளையம் | .. | 2.03 |
| 52 | சுந்தரம் ஸ்பின்னிங் மில்ஸ், குமாரபாளையம் மேட்டூர். | .. | 0.22 |
| 53 | சேலம் கூட்டுறவு ஸ்பின்னிங் மில்ஸ் | .. | 0.44 |
| 54 | சற்குண டெக்ஸ்டைல்ஸ், கோயம்புத்தூர் | .. | 0.41 |
| 55 | சோமசுந்தரம் மில்ஸ், ராமநாதபுரம் | .. | 0.93 |
| 56 | கோதண்டராமன் ஸ்பின்னிங் மில்ஸ் | .. | 2.10 |
| 57 | சக்தி பைப்ஸ், சென்னை | .. .. .. | 14.31 |
| 58 | ஓரியண்ட் மெரைன் பிராடக்ட், சென்னை | .. | 1.37 |
| 59 | யூனைட்டட் இந்தியா ரோலர் பிளவர் மில்ஸ் | .. | 2.46 |
| 60 | சென்னை ரிபைன்ஸரிஸ், சென்னை | .. .. | 11.77 |
| 61 | சென்ரி பிளவர் மில்ஸ், சென்னை | .. .. | 2.24 |
| 62 | டன்லப் இந்தியா லிமிடெட் | .. .. | 2.63 |
| 63 | டி.பலராம ரெட்டி | .. .. | 0.15<br>0.10 |
| 64 | மெசர்ஸ் பிளாஸ்டிக் எம்போரியம் | .. | 0.43 |
| 65 | மெசர்ஸ் ரோமலா என்டர்பிரைசஸ் | .. | 0.61 |
| 66 | சி.வி.எஸ்.செளட்ரி | .. | 0.50 |
| 67 | மீனாட்சி ஸ்டீல் ரோலிங் மில்ஸ் | .. | 0.18 |
| 68 | கே.செல்வராஜ் | .. .. | 0.37 |
| 69 | ஏசியன் கோல்டு ஸ்டோரேஜ் அண்ட் ஐஸ்பாக்டரி. | | 0.16 |
| 70 | இந்தியன் மெட்டல்ஸ் | .. .. .. | 0.33 |
| 71 | இ. லட்சுமிபதி | .. .. .. | 0.10 |
| 72 | சிட்டிபாபு இண்டஸ்ட்ரீஸ் எஸ்டேட் .. | .. | 0.20 |

| வரிசை எண். (1) | நிறுவனத்தின் பெயர். (2) | தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) (3) |
|---|---|---|
| 73 | எஸ். ஆர். சி. இன்டஸ்ட்ரீஸ் | 0.11 |
| 74 | பென் குரோம் கெமிகல்ஸ் (பிரைவேட்) லிமி | 0.14 |
| 75 | மெசர்ஸ் ஜெஜூர் (இன்டஸ்டரீஸ்) எஸ்டேட் | 0.10 |
| 76 | சாருவாலா பிளவர் மில்ஸ் | 0.19 |
| 77 | என்பீல்டு இந்தியா லிமிடெட் (வடக்கு) | 0.43 |
| 78 | மார்ச் மெரைன் அண்ட் பிளாஸ்டிக் | 0.45 |
| 79 | ஸ்ரீ ராமா மெசினரி | 0.16 |
| 80 | சென்னை பிளவர் மில்ஸ் | 0.35 |
| 81 | கில்லா பிரதர்ஸ் | 0.88 |
| 82 | அம்பத்தூர் பிரைட் ஸ்டீல் | 0.29 |
| 83 | ராமகிருஷ்ண கல்வன்ட் ராய் | 0.40 |
| 84 | கோரமெண்டல் ஸ்டீல் லிமிடெட் | 0.11 |
| 85 | மோடி ஸ்டீல்ஸ் ஒயர் லேம்ப்ஸ் கம்பெனி | 0.52 |
| 86 | யுனைட்டட் இந்தியா பிளவர் மில்ஸ் | 0.52 |
| 87 | தமிழ்நாடு பிளவர் மில்ஸ் | 0.31 |
| 88 | கோல்டன் பிரிக்ஸ் அண்ட் டைல்ஸ் கம்பெனி | 0.38 |
| 89 | கணேஷ் ஸ்டீல் ரோலிங் மில்ஸ் | 0.39 |
| 90 | ஜே. பி. ஸ்டீல்ஸ் | 0.40 |
| 91 | தமிழ்நாடு பிளவர் மில்ஸ் | 0.39 |
| 92 | ஸ்ரீ ராம் ஆயில் மில்ஸ் | 0.22 |
| 93 | நவ்டான் ஸ்டியோஸ் | 0.81 |
| 94 | தில்லை சால்ட் பேக்டரி | 0.39 |
| 95 | காசிமணி சிராமிக் | 0.85 |
| 96 | அலைடு இன்டஸ்ரிஸ் | 0.47 |
| 97 | மடாபிக்ஸ் | 0.63 |
| 98 | துர்கா ஸ்டீல் ஒர்க்ஸ் | 0.32 |
| 99 | கெட் சிராமிக் டைல்ஸ் | 0.18 |
| 100 | டீசியம் சேப்டி கிளாஸ் ஒர்க்ஸ் | 0.83 |
| 101 | சிவசங்கரன் ரோலர் மில்ஸ் | 0.87 |
| 102 | சினியத் எலக்டிரிகல்ஸ் | 0.85 |
| 103 | அலைடு பிளாஸ்டிக் | 0.13 |



| வரிசை எண். (1) | நிறுவனத்தின் பெயர். (2) | தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) (3) |
|---|---|---|
| 104 | எம். பெருமாள் | 0.77 |
| 105 | தினமாடிக் பிராடக்ட் | 0.21 |
| 106 | அம்பிகா மெட்டல் | 0.38 |
| 107 | விஸ்வா கார்ப்பரேசன் | 0.10 |
| 108 | மதுரா மோட்டார் | 0.16 |
| 109 | கே. ஆர். எஸ். எஸ்டேட் (சாம்பசிவ ஐயர்) | 0.15 |
| 110 | கே. ஆர். எஸ். எஸ்டேட் (கே. ஏ. சுப்பிரமணி) | 0.14 |
| 111 | தேவி ஆக்சிஜன் | 0.16 |
| 112 | சைபல் கோல்டன் ஜூப்லி மில்ஸ் | 0.37 |
| 113 | என்டிராக்ட் பார்மாசூடிகல்ஸ் | 0.15 |
| 114 | விக்ரம் பிராடக்சன் | 0.20 |
| 115 | ரிசர்வ் பேங் ஆப் இந்தியா | 0.90 |
| 116 | ஆட்டோ லைனர்ஸ் பிரைவேட் லிமிடெட் | 0.86 |
| 117 | ஆமக் இன்டஸ்ரிஸ் | 1.00 |
| 118 | ஆன்கோ இன்டஸ்ரிஸ் லிமிடெட் | 0.91 |
| 119 | ஜான்சி அண்ட் கம்பெனி | 0.14 |
| 120 | பி. வி. சி. இன்டஸ்ரிஸ். | 0.25 |
| 121 | உஷா அண்ட் அதர்ஸ் | 0.11 |
| 122 | டெலப்ஸ் (பிரைவேட்) லிமிடெட் | 0.10 |
| 123 | சுபி ஸ்டீல் ரோலிங் மில்ஸ் | 0.20 |
| 124 | சவுத் இந்தியா ஸ்டீல் ரோலிங் மில்ஸ் | 1.13 |
| 125 | கோல்டன் சினி ஸ்டியோஸ் | 0.39 |
| 126 | கருமாரியம்மா ஐஸ் பேக்டரி | 0.36 |
| 127 | மாடர்ன் பேக்கரி | 0.11 |
| 128 | பாலாஜி இன்டஸ்ரீஸ் கார்ப்பரேசன் | 0.10 |
| 129 | பாலாஜி இன்டஸ்ரீஸ் கார்ப்பரேசன் | 0.15 |
| 130 | பெராக்ஸ் பிராசஸ் | 0.16 |
| 131 | இம்பீரியல் பிளாஸ்டிக் | 0.38 |
| 132 | ரோமாட் அண்ட் பிக்மெண்ட்ஸ் | 0.12 |
| 133 | தமிழ்நாடு ஸ்டீல் ரோலிங் மில்ஸ் | 0.11 |
| 134 | இந்தியா ஸ்டீல் ரோலிங் மில்ஸ் | [illegible] |

[1978 செப்டம்பர் 8

| வரிசை எண். | நிறுவனத்தின் பெயர். | தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 135 | இந்தியன் ஸ்டீல் ரோலிங் மில்ஸ் .. .. | 0.12 |
| 136 | காஸ்டில் மெக்கானிஸ்டு பிரிக்ஸ் ஒர்க்ஸ் .. | 0.76 |
| 137 | ராஜேஸ்வரி சுகர்ஸ் .. | 0.16 |
| 138 | கோவளம் பீச் ஓட்டல் .. | 0.11 |
| 139 | எஸ்சி. 194/1—அச்சரபாக்கம் .. | 0.18 |
| 140 | எஸ்சி 81 பட்டிக்காடு .. | 0.12 |
| 141 | இன்டஸ்டிரியல் எஸ்டேட், அரக்கோணம் .. | 0.17 |
| 142 | மைக்ரோ டூல்ஸ் .. | 0.89 |
| 143 | டாசல் சிராமிக் பேக்டரி .. | 0.84 |
| 144 | சத்தியநாராயண பிரதர்ஸ் .. | 0.29 |
| 145 | மல்லிகா பிரதர்ஸ் .. | 0.14 |
| 146 | வாணியம்பாடி சுகர்ஸ் .. | 0.22 |
| 147 | கள்ளக்குறிச்சி கூட்டுறவு சுகர்ஸ் .. | 0.66 |
| 148 | நடராஜா சுகர் மில்ஸ், டி.இலே .. | 0.29 |
| 149 | கிருஷ்ணசுவாமி ஐயர், வடபுளித்தியூர் எஸ்சி. எண். 82. .. | 0.12 |
| 150 | அரோரன் சுகர்ஸ். வி.பி. மங்களம் .. | 1.26 |
| 151 | சென்னை அலுமினியம் கம்பெனி .. | 893.38 |
| 152 | இந்தியா சிமெண்ட், சங்கரி .. | 6.71 |
| 153 | பி.எஸ்.என்./கிருஷ்ணசாமி .. | 0.86 |
| 154 | ஏ.எஸ்.எஸ். கந்தசாமி .. | 0.10 |
| 155 | சின்னத்தம்பி உடையார் .. | 0.12 |
| 156 | பி.என்.விஸ்வநாதன் செட்டியார் .. | 0.99 |
| 157 | எஸ். துரைசாமி, மேட்டூர் .. | 0.17 |
| 158 | கருணா ஸ்டீல் மில்ஸ் .. | 0.15 |
| 159 | சென்னை சிமெண்ட், இராமநாதபுரம் .. | 1.72 |
| 160 | பாம்பன் ஐஸ் அண்ட் அகர் இன்டஸ்ட்ரீஸ் .. | 0.14 |
| 161 | திருப்பரமானந்த ஜன்டல் .. | 0.17 |
| 162 | சென்னை சிமெண்ட் (கொரி) மட்டும் .. | 0.11 |
| 163 | விருதுநகர் ஸ்டீல் அலாய் | 0.77 |
| 164 | உச்ன்டா காட்டன் பிரஸ் .. | 0.1[illegible] |



1978 செப்டம்பர் 8]

| வரிசை எண். | நிறுவனத்தின் பெயர். | தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 165 | எஸ்பிஐசி தூத்துக்குடி .. | 102.45 |
| 166 | சன் பேப்பர் மில்ஸ், திருநெல்வேலி | 3.83 |
| 167 | பிளாஸ்டிக் அண்ட் ரிசைன் | 16.48 |
| 168 | புஷ்பான்சலி இன்டஸ்டிரிஸ் .. | 2.43 |
| 169 | பக்கோட் டிஸ்ரிபியூசன் .. | 0.46 |
| 170 | டால்மியா சிமெண்ட் .. | 1.34 |
| 171 | ரிஜிஸ்ட்டிரர், புகாம் ரிவர் பம்ஸ் | 0.41 |
| 172 | ராமச்சந்திரா சந்திரா கெமிகல்ஸ் .. | 0.24 |
| 173 | இந்தியா ரீரோலிங் மில்ஸ் .. | 1.15 |
| 174 | இன்டோ ஸ்வீஸ் சின்தெடிக் கம் .. | 0.19 |
| 175 | பி. கே. இன்டஸ்ட்ரீஸ் .. | 0.46 |
| 176 | ஈஸ்டர்ன் எலெக்டிரிகல்ஸ் .. | 0.22 |
| 177 | நாங்கோ ரப்பர் .. .. .. | 1.15 |
| 178 | பெல் அலாய் .. .. .. .. | 0.45 |
| 179 | தமிழ்நாடு கார்டு போர்டு அண்ட் பேப்பர் .. | 0.73 |
| 180 | தனலட்சுமி ரைஸ் மில்ஸ் .. | 0.30 |
| 181 | டி.எம்.பூந்துறை எஸ்சி 78 .. | 0.10 |
| 182 | வடபழனி ஐஸ் பாக்டரி எம்.இஎஸ்/என். .. | 0.28 |
| 183 | டி.ஜே.எஸ்.ஸ்டீல் ரோலிங் மில்ஸ் எம்.இ எஸ்./என்.. .. | 0.24 |
| 184 | டேப்லெட்ஸ் லிமிடெட், எம்.இஎஸ்/என். .. | 0.59 |
| 185 | துங்கா ஸ்டீல் ஒர்க்ஸ் எம்.இ.எஸ்./நார்த் .. | 0.12 |
| 186 | ஜே.எஸ்.தாமஸ் அண்ட் கம்பெனி/எம்.இ. எஸ்./என். .. | 0.19 |
| 187 | வீனஸ் ஆயில் மில்ஸ், எம்இஎஸ்;/என் | 0.11 |
| 188 | கோல்டு ஸ்டோரேஜ் ஐஸ் பிளான்ட், தமிழ்நாடு கூட்டுறவு மார்க்கட்டிங் பெடரேசன். | 1.73 |
| 189 | நார்டன் அண்ட் கம்பெனி .. .. | 1.22 |
| | | 1,275.08 |

[1978 செப்டம்பர் 8

## இணைப்பு II.

[755-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 95-க்கான விடையைக் காண்க.]

1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12, 13, 14 ஆகிய தேதிகளில் நடப்பு ஆண்டுக்குரிய திட்டப் பணிகளை ஆய்வு செய்ய வேண்டி ஒழுங்கு முறை விற்பனைக் குழு தலைவர்கள் செயலாளர்கள் கொண்ட ஓர் கூட்டம் நடை பெற்றது. அக்கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன :—

(i) நிதி ஆண்டு முடிவதற்குள் ஒதுக்கப்பட்ட நிதியைச் செலவிட கட்டிட நிர்மாணப் பணிகளை விரைவு படுத்தும்படி அனைத்து விற்பனைக் குழு செயலாளர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

(ii) ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களுக்குத் தேவையான நிலங்களைப் பேச்சு வார்த்தைகள் மூலமாவது ஆர்ஜிதச் சட்டப்படியாவது விரைந்து மேற்கொள்ளக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

(iii) வேலைகளின் ஆய்வு, 1978-79 ஆம் ஆண்டிற்கான வேலை திட்டம் விற்பனை நடவடிக்கைகள் பற்றி ஒரு கருத்தரங்கு, வேளாண்மை விற்பனை ஆலோசகர் நாகபுரி, அவர்களது சுற்றுப் பயணம் குறித்து முன் நடவடிக்கைகள், வெள்ள நிவாரண நிதி ஆகிய பொருள்கள் விவாதிக்கப்பட்டன.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் மேல் நடவடிக்கை வேளாண்மை விற்பனை இயக்குநர் அலுவலகத்தில் தொடரப் பட்டு வருகிறது.



978 செப்டம்பர் 8]

## இணைப்பு III.

765-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 203-க்கான விடையைக் காண்க]

| வரிசை எண். | தர்மபுரி மாவட்டத்தில் இயங்கிவரும் அரசினர் அரிசன மாணவ மாணவியர் விடுதிகள். |
|---|---|
| 1. | அரசினர் மாணவர் விடுதி, கிருஷ்ணகிரி. |
| 2. | அரசினர் மாணவர் விடுதி, தர்மபுரி. |
| 3. | அரசினர் மாணவர் விடுதி, ஹரூர். |
| 4. | அரசினர் மாணவர் விடுதி, ஹொசூர். |
| 5. | அரசினர் மாணவர் விடுதி, கடாத்தூர். |
| 6. | அரசினர் மாணவர் விடுதி, பாப்பிரெட்டிபட்டி. |
| 7. | அரசினர் மாணவர் விடுதி, கல்லாவி. |
| 8. | அரசினர் மாணவர் விடுதி, பாப்பாரப்பட்டி. |
| 9. | அரசினர் மாணவ விடுதி, கம்பைநல்லூர். |
| 0. | அரசினர் மாணவர் விடுதி, ஊத்தங்கரை. |
| 1. | அரசினர் மாணவர் விடுதி, பென்னாகரம். |
| 2. | அரசினர் மாணவர் விடுதி, தீர்த்தமலை. |
| 3. | அரசினர் மாணவர் விடுதி, சீகர்லபள்ளி. |
| 4. | அரசினர் மாணவர் விடுதி, தள்ளி. |
| 5. | அரசினர் மாணவர் விடுதி. பி. மல்லபுரம். |
| 6. | அரசினர் மாணவர் விடுதி, நாகரசம்பட்டி. |
| 7. | அரசினர் மாணவர் விடுதி, ரோயக்கோட்டை. |
| 8. | அரசினர் மாணவர் விடுதி, புத்திரெட்டிபட்டி. |
| 9. | அரசினர் மாணவியர் விடுதி, கிருஷ்ணகிரி |
| 20. | அரசினர் மாணவியர் விடுதி, ஹரூர். |
| 21. | அரசினர் மாணவியர் விடுதி, தர்மபுரி. |
| 22. | அரசினர் மாணவியர் விடுதி, கரியமங்கலம். |
| 23. | அரசினர் கல்லூரி மாணவர் விடுதி, தர்மபுரி. |
| 24. | அரசினர் கல்லூரி மாணவர் விடுதி, கிருஷ்ணகிரி. |

| வரிசை எண். | தர்மபுரி மாவட்டத்தில் இயங்கிவரும் அரசினர் பிற்பட்டோர் நல விடுதிகள். |
|---|---|
| 1. | அரசினர் மாணவர் விடுதி, ஹோசூர். |
| 2. | அரசினர் மாணவர் விடுதி, சிங்காரம்பட்டி. |
| 3. | அரசினர் மாணவர் விடுதி, பாலகோடு. |
| 4. | அரசினர் மாணவர் விடுதி, ஹரூர். |
| 5. | அரசினர் மாணவர் விடுதி, பூச்சம்பள்ளி. |
| 6. | அரசினர் மாணவர் விடுதி, தோகரப்பள்ளி. |
| 7. | அரசினர் மாணவர் விடுதி, கரியமங்கலம். |
| 8. | அரசினர் மாணவர் விடுதி, அஞ்செட்டி. |
| 9. | அரசினர் மாணவர் விடுதி, பெண்ணுகரம். |
| 10. | அரசினர் மாணவர் விடுதி, மரந்தஹள்ளி. |
| 11. | அரசினர் மாணவர் விடுதி, கோனங்கிநாய்க்கன்பள்ளி. |
| 12. | அரசினர் மாணவர் விடுதி, கோட்டப்பட்டி. |
| 13. | அரசினர் மாவியர் விடுதி, பாப்பாரப்பட்டி. |
| 14. | அரசினர் மாணவியர் விடுதி, காவேரிப்பட்டினம். |
| 15. | அரசினர் கல்லூரி மாணவர் விடுதி, தர்மபுரி. |
| 16. | அரசினர் கல்லூரி மாணவர் விடுதி, கிருஷ்ணகிரி. |

ஆ. கீழ்க்காணும் விடுதிகளுக்குக் கட்டிடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது :—

(i) கிருஷ்ணகிரி பிற்பட்ட வகுப்பினர் கல்லூரி மாணவர் விடுதி.

(ii) தர்மபுரி பிற்பட்ட வகுப்பினர் மற்றும் தாழ்த்தப் பட்ட வகுப்பினர் கல்லூரி மாணவர் விடுதிகள். மேலும் இம்மாதிரி விடுதிக் கட்டிடங்கள் கட்டு வதற்கு செயற்குறிப்பு ஏதும் இல்லை.



## இணைப்பு IV.

[767-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 206-க்கான விடையைக் காண்க.]

### விவரப் பட்டியல்.

#### அரசினர் சீர்திருத்தப் பள்ளிகள்.

| வரிசை எண். | சீர்திருத்தப்பள்ளியின் பெயர். | மாணவர்களின் எண்ணிக்கை. | ஆசிரியர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| 1 | அரசினர் முதுநிலை சீர்திருத்தப் பள்ளி, செங்கல்பட்டு. | 754 | 17 |
| 2 | அரசினர் முதுநிலை சீர்திருத்தப் பள்ளி, தட்டப்பாறை. | 370 | 8 |
| 3 | அரசினர் இளநிலை சீர்திருத்தப் பள்ளி, தஞ்சாவூர். | 518 | 11 |
| 4 | அரசினர் இளநிலை சீர்திருத்தப்பள்ளி, இராணிப்பேட்டை. | 666 | 10 |
| 5 | அரசினர் இளநிலை சீர்திருத்தப்பள்ளி, கடலூர். | 187 | 3 |
| 6 | அரசினர் இளநிலை சீர்திருத்தப் பள்ளி, மல்லிபுதூர். | 92 | 3 |
| 7 | அரசினர் இளநிலை சீர்திருத்தப் பள்ளி, இராயபுரம், சென்னை. | 215 | 5 |
| 8 | அரசினர் மாணவியர் சீர்திருத்தப் பள்ளி, சென்னை. | 335 | 8 |

## தனியார் சீர்திருத்தப் பள்ளிகள்.

| வரிசை எண். | சீர்திருத்தப் பள்ளியின் பெயர். | மாணவ, மாணவியர் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1 | சென்னை குழந்தைகள் பாது காப்புச் சங்கத்தின் கீழ் இயங்கும் மாணவர் இளநிலை சீர்திருத்தப்பள்ளி, சென்னை-21. | 343 |
| 2 | சேவா சமாஜம் மாணவர் இல்லத்தின் கீழ் இயங்கும் இளநிலை சீர்திருத்தப்பள்ளி, சென்னை-20. | 147 |
| 3 | சேவா சமாஜம் பெண்கள் இல்லத்தின் கீழ் இயங்கும் இள நிலை சீர்திருத்தப் பள்ளி, சென்னை-8. | 125 |
| 4 | சேவா சமாஜம் மாணவர் இல்லத்தின் கீழ் இயங்கும் இளநிலை சீர்திருத்தப் பள்ளி, சாலிகிராமம், சென்னை-93. | 86 |
| 5 | மன வளர்ச்சிகுன்றிய சிறுமியர்களுக் கென்று நடத்தப்படும் பால விகார், சென்னை-10. | 96 |
| 6 | மனவளர்ச்சி குன்றிய சிறுவர்களுக் கென்று நடத்தப்படும் பால விகார் சென்னை-10. | 79 |
| 7 | பாலமந்திரத்தின் கீழ் இயங்கும் சிறுமியர் மற்றும் சிறுவர்களுக்கான சீர்திருத்தப் பள்ளி, சென்னை. | 123 |
| 8 | வள்ளுவர் கல்விச் சங்கத்தின் கீழ் இயங்கும் இளநிலை சீர்திருத்தப்பள்ளி, சித்திரகுடி, தஞ்சாவூர் மாவட்டம். | 212 |
| 9 | காந்தி கிராமத்தின் கீழ் இயங்கும் இளநிலை சீர்திருத்தப் பள்ளி, மதுரை-1. | 166 |
| 10 | கோயம்புத்தூர் சேவா நிலையத்தின் கீழ் இயங்கும் இளநிலை சீர்திருத்தப் பள்ளி, கோயம்புத்தூர். | 16 |



## தனியார் சீர்திருத்தப் பள்ளிகள்—தொடர்ச்சி.

| வரிசை எண். | சீர்திருத்தப் பள்ளியின் பெயர். | மாணவ, மாணவியர் எண்ணிக்கை. |
|---|---|---|
| 11 | சித்த சக்தி அருட்ஜோதி வள்ளலார் கல்வி நிலையத்தின் கீழ் இயங்கும் இளநிலை சீர்திருத்தப் பள்ளி, லிங்கத்தடிமேடு, திருச்சிராப்பள்ளி மாவட்டம். | 33 |
| 12 | தயாசாதன் குழந்தைகள் இல்லத்தின் கீழ் இயங்கும் இளநிலை சீர்திருத்தப் பள்ளி, நெற்குன்றம், செங்கற்பட்டு மாவட்டம். | 60 |
| 13 | திருச்சி சேவா சங்கத்தின் கீழ் இயங்கும் இளநிலை சீர்திருத்தப் பள்ளி, திருச்சி. | 16 |
| 14 | மகாபோதி நிறுவனத்தின் கீழ் இயங்கும் இளநிலை சீர்திருத்தப் பள்ளி, சென்னை-8. | 14 |
| 15 | ஆதிரி கலா நிலையம், சிவசைலம், திருநெல்வேலி மாவட்டம். | 13 |

தனியார் சீர்திருத்தப் பள்ளி நிர்வாகத்திலுள்ள சீர்திருத்தப் பள்ளிகளுடன் அனாதை விடுதிகள், உயர்நிலைப்பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், முதலியனவற்றையும் சேர்த்து நடத்தி வருகின்றனர். இந்த உயர்நிலைப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள் முதலியன கல்வித் துறையினரால் அங்கிகரிக்கப்பட்டுள்ளன. அதில் ஆசிரியர் நியமனம் கல்வித்துறையின் ஒப்புதல் பெற்று நடக்கின்றன. தனியார் சீர்திருத்தப்பள்ளி மாணவர்கள் மேற்குறித்த உயர்நிலைப் பள்ளி, நடுநிலைப்பள்ளி முதலிய வகுப்புகளில் சேர்த்துக் கொள்ளப் படுகின்றனர். இந்தச் சூழ்நிலையில் சீர்திருத்தப் பள்ளி மாணவர் களுக்கென தனியாக ஆசிரியர்கள் நியமிக்கப்படாததால் தனியார் சீர்திருத்தப்பள்ளிகளில் மாணவர் ஆசிரியர் விகிதாச்சாரம் கூற இயலாது.

## இணைப்பு V.

[77-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 215-க்கான விடையைக் காண்க.]

[திரு. எஸ். கணேசன், எம். எல். ஏ., விடுத்த 5626 எண்ணுள்ள உடுக்குறியிடாத வினாவுக்குரிய பதிலைக் காண்க.]

பதில்

(தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் தமிழ்நாட்டில் 1—4—77-லிருந்து 31—3—78 முடிய கட்டி முடிக்கப்பட்டும், கட்டுமானத்தின் கீழும் இருக்கின்ற குடியிருப்புகளின் விவரப் பட்டியல்.)

| மாவட்டம். | குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கான வீட்டு வசதித் திட்டம். | | நடுத்தர வருவாய் உள்ளவர்களுக்கான வீட்டு வசதித் திட்டம். | | தமிழ்நாடு அரசு பணியாளர் வாடகை வீட்டு வசதித் திட்டம். | | பொருளாதாரத்தில் பிற்பட்ட மக்களுக்கான வீட்டு வசதித் திட்டம். | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்பின் எண்ணிக்கை. | கட்டுமானத்தின் கீழ் இருக்கும் குடியிருப்பின் எண்ணிக்கை. | கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்பின் எண்ணிக்கை. | கட்டுமானத்தின் கீழ் இருக்கும் குடியிருப்பின் எண்ணிக்கை. | கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்பின் எண்ணிக்கை. | கட்டுமானத்தின் கீழ் இருக்கும் குடியிருப்பின் எண்ணிக்கை. | கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்பின் எண்ணிக்கை. | கட்டுமானத்தின் கீழ் இருக்கும் குடியிருப்பின் எண்ணிக்கை. |
| 1. சென்னை .. | 783 | 2,787 | 1,131 | 1,259 | 58 | .. | 1,244 | 447 |
| 2. கோயம்புத்தூர் .. | 9 | 415 | 6 | 77 | 187 | 360 | .. | .. |
| 3. தென் ஆற்காடு .. | 40 | .. | 4 | .. | .. | 13 | .. | .. |
| 4. வட ஆற்காடு .. | 19 | 10 | 1 | .. | .. | 102 | 159 | 10 |
| 5. திருச்சிராப்பள்ளி | 43 | 3 | 5 | .. | 84 | 122 | .. | .. |
| 6. புதுக்கோட்டை .. | .. | 100 | .. | .. | .. | .. | .. | .. |
| 7. சேலம் .. | 184 | 121 | 1 | .. | 36 | 48 | 10 | 123 |
| 8. தர்மபுரி .. | 127 | 37 | 26 | .. | 30 | 6 | 14 | 19 |
| 9. மதுரை .. | 148 | 228 | 64 | 30 | 30 | 48 | 91 | .. |
| 10. திருநெல்வேலி .. | 15 | 35 | .. | .. | .. | 6 | .. | .. |
| 11. தஞ்சாவூர் .. | .. | .. | .. | .. | 204 | 30 | .. | .. |
| 12. செங்கல்பட்டு .. | .. | .. | .. | .. | .. | 66 | 348 | .. |
| 13. நீலகிரி .. | .. | .. | .. | .. | 7 | 54 | .. | .. |
| மொத்தம் .. | 1,368 | 3,736 | 1,238 | 1,366 | 636 | 855 | 1,866 | 599 |

கட்டு மானம் பற்றிய விபரம்.

| எண். | இடத்தின் பெயர். | கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்புகளின் எண்ணிக்கை. | கட்டுமானத்தின் கீழ் இருக்கின்ற குடியிருப்புகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | **குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கான வீட்டு வசதித் திட்டம்.** | | |
| 1. | சென்னை நகரம்— | | |
| | (1) நந்தனம் .. .. .. | 8 | .. |
| | (2) இந்திரா நகர் .. | 6 | 180 |
| | (3) கலைஞர் கருணாநிதி நகர் .. | 249 | 444 |
| | (4) அசோக் நகர் .. .. | 312 | |
| | (5) ஜாபர்கான்பேட்டை .. | 10 | .. |
| | (6) அறிஞர் அண்ணா நகர்(மேற்கு) | 60 | 360 |
| | (7) அறிஞர் அண்ணா நகர் .. | .. | 560 |
| | (8) திருவான்மியூர் .. | 125 | .. |
| | (9) மணலி .. | .. | 543 |
| | (10) சென்னியம்மன் கோவில் .. | .. | 616 |
| | (11) கொரட்டூர் .. .. | 13 | 84 |
| | | 783 | 2,787 |
| 2. | கோவை மாவட்டம்— | | |
| | (1) கோவை புதூர் .. | 9 | .. |
| | (2) ஈரோடு .. | .. | 415 |
| | | 9 | 415 |



| எண். | இடத்தின் பெயர். | கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்புகளின் எண்ணிக்கை. | கட்டுமானத்தின் கீழ் இருக்கின்ற குடியிருப்புகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | **குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கான வீட்டு வசதித் திட்டம்—தொடர்ச்சி.** | | |
| 3. | தென்னாற்காடு மாவட்டம்— | | |
| | (1) சிதம்பரம் .. | 40 | .. |
| 4. | வட ஆற்காடு மாவட்டம்— | | |
| | (1) திருப்பத்தூர் .. | 3 | .. |
| | (2) குடியாத்தம் .. | 2 | .. |
| | (3) வேலூர் .. | 3 | .. |
| | (4) சி. எம்.சி. காலனி, வேலூர் .. | 11 | 10 |
| | | 19 | 10 |
| 5. | திருச்சிராப்பள்ளி மாவட்டம்— | | |
| | (1) அரியலூர் .. | 41 | .. |
| | (2) கலைஞர் கருணாநிதி நகர், திருச்சி .. .. | 2 | 3 |
| | | 43 | 3 |
| 6. | புதுக்கோட்டை மாவட்டம்— | | |
| | (1) புதுக்கோட்டை .. | 100 | |

| எண். | இடத்தின் பெயர். | கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்புகளின் எண்ணிக்கை. | கட்டுமானத்தின் கீழ் இருக்கின்ற குடியிருப்புகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | **குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கான வீட்டு வசதித் திட்டம்—தொடர்ச்சி.** | | |
| 7. | சேலம் மாவட்டம்— | | |
| | (1) ராஜாஜி நகர் .. | 6 | .. |
| | (2) அம்பேத்கார் நகர் .. | 41 | .. |
| | (3) திருச்செங்கோடு .. | 137 | 121 |
| | | 184 | 121 |
| 8. | திருநெல்வேலி மாவட்டம்— | | |
| | (1) பாளையங்கோட்டை .. | 15 | 35 |
| 9. | மதுரை மாவட்டம்— | | |
| | (1) அறிஞர் அண்ணா நகர், மதுரை .. | 124 | .. |
| | (2) கலைஞர் கருணாநிதி நகர், மதுரை. .. .. | .. | 228 |
| | (3) மதுரை மில் ஒர்க்கர்ஸ் .. | 24 | |
| | | 148 | 228 |
| 10. | தர்மபுரி மாவட்டம் | | |
| | (1) ஓசூர் .. | 92 | 5 |
| | (2) ராயக்கோட்டை .. | 35 | 32 |
| | | 127 | 37 |



| எண். | இடத்தின் பெயர். | கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்புகளின் எண்ணிக்கை. | கட்டுமானத்தின் கீழ் இருக்கின்ற குடியிருப்புகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | **நடுத்தர வருவாய் உள்ளவர்களுக்கான வீட்டு வசதித் திட்டம்.** | | |
| 1. | சென்னை நகரம் | | |
| | (1) பெசண்ட் நகர் .. .. | 325 | 12 |
| | (2) இந்திரா நகர் ... .. | .. | 182 |
| | (3) கலைஞர் கருணாநிதி நகர் .. | 97 | 361 |
| | (4) அசோக் நகர் .. .. | 36 | 120 |
| | (5) ராஜாராம் காலனி, கோடம்பாக்கம் .. | 88 | .. |
| | (6) கோட்டூர்புரம் .. .. | 22 | ... |
| | (7) நந்தனம் .. ... .. | .. | 184 |
| | (8) ராஜா அண்ணாமலைபுரம் .. | .. | 136 |
| | (9) அறிஞர் அண்ணா நகர் .. | 246 | 67 |
| | (10) திருவான்மியூர் .. .. | 252 | 114 |
| | (11) வியாசர்பாடி .. .. | .. | 7 |
| | (12) சென்னியம்மன்கோவில்—தண்டையார்பேட்டை .. | .. | 30 |
| | (13) கொரட்டூர் .. .. .. | 65 | 126 |
| | | 1,131 | 1,259 |
| 2. | கோவை மாவட்டம்— | | |
| | (1) கோவை புதூர் .. | 6 | .. |
| | (2) ஈரோடு ... | .. | 77 |
| | | 6 | 77 |

| எண். | இடத்தின் பெயர். | கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்புகளின் எண்ணிக்கை. | கட்டுமானத்தின் கீழ் இருக்கின்ற குடியிருப்புகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | நடுத்தர வருவாய் உள்ளவர்களுக்கான வீட்டு வசதித் திட்டம்—தொடர்ச்சி. | | |
| 3. | தென் ஆற்காடு மாவட்டம்— | | |
| | (1) சிதம்பரம் .. | 4 | .. |
| 4. | வட ஆற்காடு மாவட்டம்— | | |
| | (1) வேலூர் .. | 1 | .. |
| 5. | திருச்சிராப்பள்ளி மாவட்டம்— | | |
| | (1) கலைஞர் கருணாநிதி நகர், திருச்சி. .. | 5 | .. |
| 6. | சேலம் மாவட்டம்— | | |
| | (1) சேலம் .. | 1 | .. |
| 7. | தர்மபுரி மாவட்டம்— | | |
| | (1) ஓசூர் .. | 26 | .. |
| 8. | மதுரை மாவட்டம்— | | |
| | (1) மதுரை .. | 64 | 30 |
| | தமிழ்நாடு அரசு பணியாளர் வாடகை வீட்டு வசதித் திட்டம். | | |
| 1. | சென்னை நகரம்— | | |
| | (1) கலைஞர் கருணாநிதி நகர் .. | 24 | .. |
| | (2) அறிஞர் அண்ணா நகர் .. | 34 | .. |
| | | 58 | .. |



| எண். | இடத்தின் பெயர். | கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்புகளின் எண்ணிக்கை. | கட்டுமானத்தின் கீழ் இருக்கின்ற குடியிருப்புகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | நடுத்தர வருவாய் உள்ளவர்களுக்கான வீட்டு வசதித் திட்டம்—தொடர்ச்சி. | | |
| | தமிழ்நாடு அரசு பணியாளர் வாடகை வீட்டு வசதித்திட்டம்—தொடர்ச்சி | | |
| 3. | வட ஆற்காடு மாவட்டம்— | | |
| | (1) திருவண்ணாமலை .. | .. | 42 |
| | (2) ராணிப்பேட்டை .. | .. | 60 |
| | | .. | 102 |
| 4. | கோவை மாவட்டம்— | | |
| | (1) கவுண்டம்பாளையம் .. | 24 | .. |
| | (2) டி. எப். ஓ. காம்பவுண்டு கோயம்புத்தூர் (Phase I and II) .. .. | 144 | .. |
| | (3) சி. எப். ஓ. காம்பவுண்டு கோயம்புத்தூர் .. .. | 12 | .. |
| | (4) கலெக்டர்ஸ் காம்பவுண்டு, கோயம்புத்தூர் .. .. | 6 | .. |
| | (5) எஸ். இ. எஸ். பி. பங்களா காம்பவுண்டு, கோயம்புத்தூர். | .. | 360 |
| | (6) எல். ஓ. குவார்டர்ஸ், வால்பாறை .. .. .. | 1 | .. |
| | | 187 | 360 |

| (1) | இடத்தின் பெயர். (2) | கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்புகளின் எண்ணிக்கை. (3) | கட்டுமானத்தின் கீழ் இருக்கின்ற குடியிருப்புகளின் எண்ணிக்கை. (4) |
|---|---|---|---|
| | **நடுத்தர வருவாய் உள்ளவர்களுக்கான வீட்டு வசதித் திட்டம்—தொடர்ச்சி.** | | |
| | தமிழ்நாடு அரசு பணியாளர் வாடகை வீட்டு வசதித்திட்டம்—தொடர்ச்சி. | | |
| 12. | திருநெல்வேலி மாவட்டம்— | | |
| | (1) பாளையங்கோட்டை .. .. | .. | 6 |
| | பொருளாதாரத்தில் பிற்பட்ட பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டம். | | |
| 1. | சென்னை நகரம்— | | |
| | (1) கலைஞர் கருணாநிதி நகர் .. | 25 | 96 |
| | (2) மாம்பலம் டேங் பன்ட் .. | 448 | 96 |
| | (3) ஜாபர்கான்பேட்டை .. | 11 | .. |
| | (4) அறிஞர் அண்ணா நகர் (மேற்கு) .. .. .. | 402 | 13 |
| | (5) அறிஞர் அண்ணா நகர் .. | 144 | 18 |
| | (6) திருவான்மியூர் .. .. | 158 | .. |
| | (7) வியாசர்பாடி (கைத்தறி நெசவாளர்களுக்காக) .. | 156 | .. |
| | (8) வியாசர்பாடி (கனரக தொழிலாளர்களுக்காக) .. | .. | 224 |
| | | 1,244 | 447 |



| (1) | இடத்தின் பெயர். (2) | கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்புகளின் எண்ணிக்கை. (3) | கட்டுமானத்தின் கீழ் இருக்கின்ற குடியிருப்புகளின் எண்ணிக்கை. (4) |
|---|---|---|---|
| | **நடுத்தர வருவாய் உள்ளவர்களுக்கான வீட்டு வசதித் திட்டம்—தொடர்ச்சி.** | | |
| | தமிழ்நாடு அரசு பணியாளர் வாடகை வீட்டு வசதித்திட்டம்—தொடர்ச்சி. | | |
| | பொருளாதாரத்தில் பிற்பட்ட பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டம்—தொடர்ச்சி | | |
| 2. | வட ஆற்காடு மாவட்டம்— | | |
| | (1) ராணிப்பேட்டை (இலங்கை அகதிகளுக்காக) .. .. | 159 | 10 |
| 3. | சேலம் மாவட்டம்— | | |
| | (1) திருச்செங்கோடு .. .. | 10 | 123 |
| 4. | தர்மபுரி மாவட்டம்— | | |
| | (1) ஓசூர் .. .. .. | 14 | 19 |
| 5. | செங்கை மாவட்டம்— | | |
| | (1) பல்லாவரம் (For Union Carbide Employees) .. | 145 | .. |
| | (2) திருவள்ளூர் .. .. | 120 | .. |
| | (3) ஸ்ரீபெரும்புதூர் .. .. | 43 | .. |
| | (4) திருத்தணி .. .. | 40 | .. |
| | | 348 | .. |
| | மதுரை மாவட்டம்— | | |
| | (1) தன்னகான் குளம், மதுரை .. | 91 | .. |